வ.உ.சி.யின்

படைப்பும் பதிப்பும்

பதிப்பு

இரா.சேதுராமன்

மு.பவானி

வ. உ. சி. யின்
படைப்பும் பதிப்பும்

பதிப்பாசிரியர்
இரா. சேதுராமன்

இணைப் பதிப்பாசிரியர்
மு. பவானி

தமிழ்த்துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரி
நாகம்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்

ஆய்வு நிதி நல்கை
தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரகம், வெளியீட்டுப் பிரிவு

பிப்ரவரி 2026

நூலின் பெயர்	:	வ.உ.சி.யின் படைப்பும் பதிப்பும்
முதற் பதிப்பு	:	பிப்ரவரி 2026
ISBN Number	:	978-93-5619-548-6
நூலின் தன்மை	:	ஆய்வுக் கட்டுரைகள்
மொழி	:	தமிழ்
உரிமை	:	தமிழ்த்துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரி, நாகம்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்.
ஆய்வு நிதி நல்கை	:	தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரகம், வெளியீட்டுப் பிரிவு.
பதிப்பாசிரியர்	:	முனைவர் இரா. சேதுராமன்
இணைப் பதிப்பாசிரியர்	:	முனைவர் மு. பவானி
தாள்	:	80 gsm N.S. மேப் லித்தோ
அளவு	:	6.5 x 9.5 inch
பக்கங்கள்	:	600
நூல் வடிவமைப்பு	:	மாரீஸ், கோவில்பட்டி
அட்டை வடிவமைப்பு	:	க. தருண் ராம்
அச்சிட்டோர்	:	அருண் ஆப்செட் கோவில்பட்டி – 628 501 தூத்துக்குடி மாவட்டம் செல்பேசி : 866 751 8195 :

கனிமொழி கருணாநிதி
Kanimozhi Karunanidhi
Member of Parliament
Lok Sabha
Thoothukkudi Constituency - Tamil Nadu

सत्यमेव जयते

26, Dr. Rajendra Prasad Road,
New Delhi-110001
Telefax: 011-23782887
E-mail: kanimozhimds@gmail.com

46/1, Prashanthi Apartments,
2nd Cross Street,
C.I.T. Colony, Mylapore,
Chennai-600 004 (T.N.)
Tel: 044-24670606
Fax: 044-24670001

22.01.2026
சென்னை

வாழ்த்துரை

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழகத்தின் பங்களிப்பை உலகறியச் செய்தவர். 'கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களின் பன்முகத் தன்மையை விளக்கும் வகையில், ‘வ.உ.சி.யின் படைப்பும் பதிப்பும்’ என்னும் நூல் வெளிவருவதை அறிந்து மகிழ்ச்சியடைந்தேன். வ.உ.சி. அவர்களை ஒரு புரட்சி யாளராகவும், கப்பல் நிறுவனத்தைத் தொடங்கிய துணிச்சல்காரராக வும் மட்டுமே பலரும் அறிந்துள்ள சூழலில் அவர் ஒரு மிகச்சிறந்த தமிழறிஞர், உரையாசிரியர் மற்றும் பதிப்பாளர் என்பது பலரும் அறிந் திராதவை. சிறைச்சாலையில் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்த காலத்திலும் மெய்யறம், ‘மனம் போல வாழ்வு’ போன்ற உயரிய படைப்புகளைத் தந்தவர்.

தொல்காப்பியம் - இளம்பூரணர் எழுதிய உரையை அவர் பதிப்பித்த முறையும் திருக்குறளுக்கு அவர் எழுதிய உரைகளும், அவரது ஆழ்ந்த புலமைக்குச் சான்று. அவரது எழுத்துக்களையும், அவர் மேற்கொண்ட பதிப்புப் பணிகளையும் ஆய்வு செய்து ஒரு நூலாகக் கொண்டு வருவது ஒரு முக்கியமான பணி. நமது மண்ணின் மாவீரர்களைப் பற்றிய வரலாற்று உண்மைகள் இது போன்ற ஆய்வு நூல்களாக ஆவணப் படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் முழுமையான வரலாறு அடுத்த தலைமுறையைச் சென்றடையும்.

வ.உ.சி.யின் அறிவுசார்ப் பங்களிப்பை ஆவணப்படுத்தும் இந்த முயற்சி பாராட்டுதலுக்குரியது. ஒரு மாபெரும் தியாகியின் எழுத்துப் பணிகளையும் மொழிபெயர்ப்புகளையும், பதிப்புகளையும் ஆய்வு செய்ய வாய்ப்பை ஏற்படுத்தியுள்ள தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்திற்கும், ‘வ.உ.சி. யின் படைப்பும் பதிப்பும்’ என்னும் ஆய்வுக்கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடும் தொகுப்பாசிரியர்களுக்கும் கட்டுரைகள் வழங்கிய மாணவர் களுக்கும் ஆசிரியர்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்



கனிமொழி கருணாநிதி

மாண்புமிகு அமைச்சர்
திருமிகு பி. கீதா ஜீவன்

சமூக நலன் மற்றும்
மகளிர் உரிமைத்துறை அமைச்சர்
தலைமைச் செயலகம், சென்னை.

வாழ்த்து மடல்

தூத்துக்குடி மாவட்ட நிர்வாகமும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியின் தமிழ்த்துறையும் இணைந்து வ.உ.சிதம் பரனார் அவர்களின் 154 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு ‘வ.உ.சியின் படைப்பும் பதிப்பும்’ என்ற தலைப்பில் நடைபெறும் பன்னாட்டுக் கருத்தரங்கம் மற்றும் ஆய்வுக்கட்டுரை நூல் வெளியீட்டு நிகழ்ச்சிக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

வ.உ.சி. அவர்கள் சிந்திய வியர்வையும் ரத்தமும் தேச விடுதலைக் காக மட்டுமல்ல, தமிழின் செவ்வியல் இலக்கியங்களைச் சீரமைப்படுத்து வதற்காகவும் தான் என்பதை வரலாறு சொல்லும். திருக்குறளுக்கு அவர் எழுதிய உரையும், அவர் பதிப்பித்த தொல்காப்பியமும் இன்றும் ஆய்வாளர் களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றன.

இன்றைய இளைய தலைமுறை ஆய்வாளர்களுக்கு ஏற்ப வ.உ.சி. யின் படைப்புகளையும், பதிப்புகளையும் தொகுத்து நூலாக்கம் செய்துள்ள மாவட்ட நிர்வாகத்திற்கும், கல்லூரியின் தமிழ்த்துறைக்கும், இந்நூலில் இடம் பெற்ற கட்டுரையாளர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் காலத்தை வென்று நிலைக்க வாழ்த்துகிறேன்.

08.01.2026

(பி.கீதா ஜீவன்)

க. இளம்பகவத், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்

தூத்துக்குடி மாவட்டம்
தூத்துக்குடி.

அணிந்துரை

தமிழக வரலாற்றில் வ.உ.சிதம்பரனார் என்ற ஆளுமை, அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராகக் ‘கப்பலோட்டிய தமிழர்’ என்று போற்றப்படும் விடுதலைப் போராட்ட வீரராக அறியப்படுகிறார். ஆனால், அவர் ஒரு விவேகமான தமிழறிஞரும், நுட்பமான பதிப்பாசிரியரும் ஆவார். அவரின் பன்முகத்தன்மையை வெளிப்படுத்தும் பெரும் முயற்சி இந்த 'வ.உ.சி.யின் படைப்பும் பதிப்பும்' என்னும் ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு.

வ.உ.சி. அவர்கள் சிறைவாசம் அனுபவித்த காலத்தில், உடல் வருந்தச் செக்கிழுத்த போதும் அவரது சிந்தனை தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களைச் செழுமைப்படுத்துவதிலேயே இருந்தது. "கை வருந்த மெய் வருந்தச் செய்த பணிகளெல்லாம் என் தாய்மொழித் தமிழுக்காக" என்ற உயரிய நோக்கம் அவரிடம் இருந்தது. இந்நூல் வ.உ.சி.யின் ஆளுமையை, வாழ்வும் வரலாறும், இலக்கிய ஆக்கம், படைப்பாளுமை, உரைவளம், பதிப்பு, மொழிபெயர்ப்பு, சமூகப் பணிகள், தத்துவத்தேடல் ஆகிய எட்டு முக்கியத் தளங்களில் விரிவாகப் பேசுகிறது.

தொல்காப்பியப் பதிப்பு வரலாற்றில் வ.உ.சி.யின் பங்கு மகத்தானது. இளம்பூரணரின் உரைக்கு அவர் வழங்கிய செம்மையான வடிவம், பாட வேறுபாடுகளை அவர் கையாண்ட விதம் ஆகியவை ஒரு தேர்ந்த ஆய்வாளரின் கண்ணோட்டத்தில் இங்கு விவாதிக்கப்பட்டுள்ளன.

ஜேம்ஸ் ஆலனின் தத்துவங்களைச் சுதேசத் தன்மையோடு மொழிபெயர்த்த ‘மனம்போல வாழ்வு’, ‘அகமே புறம்’ போன்ற நூல்கள் வழி வ.உ.சி. முன்வைத்த வாழ்வியல் நெறிகளை இக்கட்டுரைகள் ஆழமாகப் பகுப்பாய்வு செய்கின்றன. அவரது கவிதைகளில் பொதிந்துள்ள நாட்டுப்பற்று, மெய்யியல் ஆகியவை தற்காலச் சூழலோடு ஒப்பிடப்பட்டுள்ளன. மேலும், அவரின் வாழ்க்கை, சமூகச்செயல்பாடுகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

பதிப்புத் துறை என்பது வெறும் அச்சுப் பணி அல்ல; அது ஒரு சிதைந்த வரலாற்றை மீட்டெடுக்கும் அறப்பணி. வ.உ.சி. அவர்கள் ஒரு சுவடியைப் பதிப்பிக்கும்போது காட்டிய நேர்மையும், மூலபாடச் சிதைவுகளைக் களைந்த திறனும் இன்றைய இளம் பதிப்பாசிரியர்களுக்குப் பாடம் சொல்லித்தரக் கூடியவை. அத்தகைய அரிய செய்திகளைத் திரட்டி ஒரு நூலாகத் தந்துள்ள தொகுப்பாசிரியர்களின் உழைப்பு போற்றத்தக்கது.

இந்த ஆய்வு நூல் தமிழ்நாட்டின் பல்வேறு கல்லூரிகளில் பயிலும் நூற்றுக்கும் மேற்பட்ட இளம் ஆய்வு மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களின் ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பாக வெளியிடப் படுகிறது. தனித்தனி ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுக்கும் பணி மிகச் சவாலானது. இந்த நூலை நாகம்பட்டி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரி பேராசிரியர்கள் முனைவர் இரா. சேதுராமன், முனைவர் மு.பவானி ஆகியோர் சிறப்பாக உருவாக்கியுள்ளனர். இந்த இரு பேராசிரியர்களின் முழு வீச்சிலான முயற்சியின் காரணமாகவே இந்த நூல் உருப்பெற்றுள்ளது. இவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கிய மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு நன்றிகள். இந்த ஆய்வு முயற்சிக்கு ஆதரவு வழங்குவதில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியராகப் பெருமை கொள்கிறேன்.

வ.உ.சி.யின் அரசியல் போராட்டங்களுக்குக் கொடுத்த முக்கியத் துவத்தை, அவரது அறிவுசார் பணிகளுக்கும் கொடுக்க வேண்டியது நம் கடமையாகும். அந்த வகையில், இந்நூல் வ.உ.சி. ஆய்வுகளில் ஒரு மைல்கல்லாக அமையும் என்று நம்புகிறேன். தரமான கட்டுரைகளைத் தாங்கி வரும் இந்த ஆய்வு நூல், ஆய்வாளர்களின் கைகளிலும், வாசகர்களின் நெஞ்சங்களிலும் இடம்பிடிக்கும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. வாழ்த்தி மகிழ்கிறேன்.

க. இளம்பகவத்

24.01.2026

முனைவர் அ. வெளியப்பன்
இயக்குநர்

மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழகக் கல்லூரிகள்
திருநெல்வேலி.

வாழ்த்துரை

'வ.உ.சி.யின் படைப்பும் பதிப்பும்' என்னும் இந்நூல் ஒரு மாமனிதனின் ஆளுமையை முழுமையாகத் தரிசிக்க நமக்குக் கிடைத்த ஒரு நல்வாய்ப்பு. சிறைச்சாலையின் இருண்ட அறைகளில் அவர் வடித்த 'மெய்யறிவு' மற்றும் 'மெய்யறம்' ஆகிய நூல்கள், இன்றைய காலத்திற்கும் பொருந்தக்கூடிய அறநெறிக் கருவூலங்கள்.

வ.உ.சி.யைப் பற்றி நாம் பேசும்போது, அவர் ஒரு வழக்கறிஞராக, ஒரு தொழிற்சங்கத் தலைவராக மட்டுமே பார்க்கப்படுகிறார். ஆனால், அவர் ஒரு சிறந்த இதழாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் என்பதையும் இந்த 'படைப்பும் பதிப்பும்' சார்ந்த ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. அரசியல் களத்தில் அவர் காட்டிய உறுதி, இலக்கியக் களத்தில் அவர் காட்டிய நிதானம் - இவை இரண்டும் இணையும் புள்ளியை இந்தத் தொகுப்பு அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

பல்கலைக்கழகக் கல்லூரிகளிலேயே, நாகம்பட்டி கல்லூரி தமிழ்த் துறை தனித்துவம் மிக்கதாக விளங்குகிறது. பல்கலைக்கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள் செய்ய வேண்டிய செயல்பாடுகளை இக்கல்லூரியின் தமிழ்த்துறை செய்து வருகின்றது. பல்வேறு செயல்பாடுகளைச் செய்து வரும் தமிழ்த்துறையையும், இந்நூலிற்கு ஆய்வுக் கட்டுரைகள் வழங்கிய மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் அனைவரையும் மனமாரப் பாராட்டுகிறேன்.

(முனைவர் அ. வெளியப்பன்)

முனைவர் மா. முருகானந்தம்
முதல்வர்

மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழகக் கல்லூரி
நாகம்பட்டி.

வாழ்த்துரை

"சுதந்திரம் எனது பிறப்புரிமை" என்ற முழக்கத்தைத் தமிழகத்தில் அலைகளாக மாற்றியவர் நம் வ.உ.சி. வெள்ளையர்களின் கடல் ஆதிக்கத்தை முறியடிக்க, சுதேசிக் கப்பல் விட்ட அந்தப் பெருமகனாரின் படைப்புகள் மற்றும் பதிப்புகளை மையப்பொருளாகக் கொண்டு தமிழகம், சிங்கப்பூர் மற்றும் இலங்கையில் உள்ள மாணவர்கள், ஆசிரியர்கள் ஆய்வுக்கட்டுரை வழங்க, அதைச் செம்மைப்படுத்தி நூலாக வெளியிடுவதில் நாம் அனைவரும் பெருமை கொள்ள வேண்டும்.

நாகம்பட்டி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரி யின் தமிழ்த்துறை மாணவச் சமூகத்திற்காகப் பல்வேறு நிகழ்வுகளை நடத்தி வருவது மிகவும் பாராட்டுக்குரியது. குறிப்பாக, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமிகு க. இளம்பகவத் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் சிறுகதை வாசிப்பும் படைப்பும், கவிதை வாசித்தலும் புனைதலும் ஆறு நாட்கள் தங்கிப் பங்கேற்கும் பயிற்சிப்பட்டறைகளைத் தமிழ்த்துறை நடத்தி உள்ளது. அந்த வரிசையில் 'வ.உ.சி.யின் படைப்பும் பதிப்பும்' என்னும் பொருண்மையில் நடைபெறும் பன்னாட்டுக் கருத்தரங்கமும் நூல் வெளியிடுதலும் ஒரு மைல்கல்லாகும்.

இந்தக் கருத்தரங்கை முன்னெடுத்த ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரா. சேதுராமன், இணை ஒருங்கிணைப்பாளர் மு. பவானி, பங்கேற்று ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பிக்கும் மாணவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மா. முருகானந்தம்)

முனைவர் இரா. சேதுராமன்
துறைத்தலைவர், தமிழ்த்துறை

மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழகக் கல்லூரி
நாகம்பட்டி.

பதிப்புரை

தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் மற்றும் கல்லூரியின் தமிழ்த்துறை இணைந்து வ.உ.சி.யின் 154 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு 'வ.உ.சி. யின் படைப்பும் பதிப்பும்' என்னும் இந்நூல் நாகம்பட்டி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் வாசிக்கப்பெற்ற ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாகும்.

வ.உ.சி. சுதந்திரப் போராட்ட வீரர், காலனியாதிக்கக் காலத்தில் இந்தியக் கப்பல் போக்குவரத்தை முன்னிறுத்த சுதேசிக் கப்பல் நிறுவனத்தை நிறுவியவர் மட்டுமல்ல, மிகச் சிறந்த படைப்பாளியும், பதிப்பாசிரியரும், மொழிபெயர்ப்பாளரும் ஆவார்.

"செக்கிழுத்த செம்மல்" என்றும், "கப்பலோட்டிய தமிழன்" என்றும் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் தடம் பதித்த வ. உ. சிதம்பரனார் அவர்கள், ஒரு சிறந்த அரசியல் தலைவர் என்பதைத் தாண்டி, ஒரு மாபெரும் தமிழறிஞராகவும், ஆய்வாளராகவும் திகழ்ந்தவர் என்பது இன்றைய தலைமுறை ஆழ்ந்து நோக்க வேண்டிய செய்தியாகும். சிறைச்சாலையின் கடுமையான சூழலிலும், வறுமையிலும் வாடிய காலத்திலும் வ.உ.சி. அவர்களின் கைகள் தமிழ்ப் பணிகளிலிருந்து ஓய்வெடுத்ததில்லை.

வ.உ.சி.யின் படைப்புகள், அவரது கவிதைகள், மொழிபெயர்ப்புகள், உரைநடை நூல்கள் வழி அவர் முன்வைத்த அறம் சார்ந்த சிந்தனைகளையும் சமூகப் பார்வையையும், பழந்தமிழ் நூல்களை அவர் பதிப்பித்தபோது கையாண்ட நெறிமுறைகள், மூலப் பிரதிகளை அவர் ஒப்பிட்டுச் சரிபார்த்த விதம் ஒரு பதிப்பாசிரியராக அவரது நுட்பமான அணுகுமுறை ஆகிய வற்றை இக்கட்டுரைகள் ஆவணப்படுத்துகின்றன. வ.உ.சி.யின் பன்முகத்

தன்மையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் முயற்சியாகவே இந்த ஆய்வுநூல் அமைந்துள்ளது.

'வ.உ.சி.யின் படைப்பும் பதிப்பும்' என்னும் நூலிற்கு வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும், 'வ.உ.சி.யின் படைப்பும் பதிப்பும்' என்னும் நூலினை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமிகு பி. கீதா ஜீவன் அவர்களுக்கும், 'வ.உ.சி.யின் படைப்பும் பதிப்பும்' என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் மற்றும் நூல் வெளியிடுதலுக்கு நிதி உதவி அளித்ததுடன், ஆதரவும் ஊக்கமும் அளித்து வரும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமிகு க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்களுக்கும், கல்லூரியின் அனைத்து நிகழ்வுகளிலும் பங்கேற்று வரும் விளாத்திகுளம் சட்ட மன்ற உறுப்பினர் திருமிகு ஜி.வி.மார்க்கண்டேயன் அவர்களுக்கும், தமிழ்த்துறையின் எல்லா நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு சிறப்பு செய்து வரும் பல்கலைக் கழகக் கல்லூரிகளின் இயக்குநர் முனைவர் அ. வெளியப்பன் அவர்களுக் கும், எங்களோடு துணை நின்று ஒவ்வொரு நிகழ்வும் சிறப்புற அமைய உறுதுணையாக இருக்கும் கல்லூரி முதல்வர் முனைவர் மா.முருகானந்தம் அவர்களுக்கும், இரவு பகல் பாராமல் துணைநிற்கும் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், நிகழ்வின் இணை ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணைப் பதிப்பாசிரியர் முனைவர் மு.பவானி அவர்களுக்கும், இந்நிகழ் விற்குத் துணைநின்ற தூத்துக்குடி மாவட்ட நிர்வாக அலுவலர்களுக்கும், கல்லூரி பேராசிரியர்களுக்கும், கல்லூரி அலுவலக பணியாளர்களுக்கும், மற்றும் நண்பர்களுக்கும் நூலினை அழகுற அச்சிட்ட அருண் அச்சகத்தாருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரா. சேதுராமன்

C. Kandiah Raju
கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரம்பிள்ளை
தோற்றம்
05-09-1872
மறைவு
18-11-1936

பொறுப்பு துறப்பு

இந்த ஆய்வுக் கட்டுரை நூல் "வ.உ.சி.யின் படைப்பும் பதிப்பும்" என்பது இலக்கிய, வரலாற்று மற்றும் ஆய்வுக் கோணங்களில் தொகுக்கப்பட்ட ஒரு கல்வி நோக்கமுள்ள வெளியீடாகும். இந்நூலில் இடம்பெறும் கருத்துகள், விளக்கங்கள், பகுப்பாய்வுகள் மற்றும் மேற்கோள்கள் அனைத்தும் கட்டுரை ஆசிரியரின் ஆய்வு, கிடைத்த ஆதாரங்கள் மற்றும் அந்நேரத்தில் அணுகக்கூடிய தகவல்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவையாகும்.

இந்த நூலில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துகள் ஆய்வாளர்களின் கல்வி மற்றும் ஆய்வுக் கருத்துக்களே அன்றி, எந்த அரசுத் துறை, கல்வி நிறுவனம், அமைப்பு அல்லது பதிப்பாசிரியர் கருத்து அல்ல.

மேற்கோள் காட்டப்பட்ட நூல்கள், ஆவணங்கள், கட்டுரைகள் மற்றும் பிற ஆதாரங்களின் துல்லியத்திற்கான முழுப் பொறுப்பு ஆய்வுக்கட்டுரை ஆசிரியர்களையே சாரும்.

இந்நூல் முழுவதும் கல்வி, ஆய்வு மற்றும் இலக்கிய ஆர்வத்திற்காக மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளது.

உள்ளே...

1. வ.உ.சி. யின் வாழ்வும் வரலாறும்

2. இலக்கிய ஆக்கம்

3. உரை வளம்

4. பதிப்புத் திறன்

5. மொழிபெயர்ப்புத் திறன்

6. இயக்கச் செயல்பாடுகளும் சமூகப் பணிகளும்

7. படைப்பாளுமை

8. தத்துவத் தேடல்

பொருளடக்கம்

பகுதி ஒன்று: வ.உ.சி.யின் வாழ்வும் வரலாறும்

1. **வ.உ.சி. கண்ட சிறை வாழ்க்கை** 23
பெ. சிவக்குமார்

2. **வ.உ. சிதம்பரனார் வரலாற்றுப் பாதை** 28
முனைவர் தெ. ரேவதி

3. **பன்முகப் பார்வையில் வ.உ.சி. யின் நற்செயல்கள்** 32
மு. நாகலட்சுமி

4. **தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒரு பொருளாதாரப் புரட்சியாளரின் பங்களிப்பு** 36
ந. மகாநட்டார்

5. **ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளி வ.உ.சி** 39
தெ. ஜெயகுமார்

6. **'கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம்' நூல் சித்தரிக்கும் சிதம்பரனாரின் சிறப்புகள்** 44
முனைவர் சு. முருகவேல்

7. **சிறைவாசிகளின் உரிமைகளுக்காகக் குரல் எழுப்பிய முதல் இந்தியர் வ.உ.சி.** 49
சி. மாணிக்கவல்லி

8. **செக்கிழுத்த செம்மலின் சிறைச்சாலைப் பதிவுகள்** 54
வெ. மாரிச்செல்வி

9. **வ.உ.சி.யின் வாழ்வும் பணியும்** 58
முனைவர் ந. ஜெயவசந்தி

10. **இந்திய விடுதலைப் போராட்டத்தில் வ.உ.சி.யின் பன்முகப் பங்களிப்பு** 63
தா. தரண்யா

11. **வ.உ.சி.யின் பன்முக ஆளுமை** 68
அ. ஜெயபிரீத்தி

12. **வ. உ. சிதம்பரனாரின் தலைமைப்பண்பு** 72
முனைவர் ப. கணேஷ் வடிவேல்

13. ஓட்டப்பிடார ஒளிர் மறவன் – தேவநேயப்பாவாணரின் சீரிய கொள்கைச் சிதம்பரப்பதிகம் 78
முனைவர் சி. ராமலெட்சுமி

14. வ.உ.சி. யின் சுதேசிய உணர்வு 82
முனைவர் வ. ஹரிஹரன்

15. வணிகவியல் பார்வையில் வ.உ.சி.: திருக்குறளை முன்வைத்து... 87
முனைவர் ர. ராஜசேகரன்

பகுதி இரண்டு: இலக்கிய ஆக்கம்

16. வ.உ.சி.யின் மெய்யறம் – தத்துவங்களின் பிணைப்புச் சரடு 91
இரா. கு. திவ்யா

17. வ.உ.சி.யின் மெய்யறம் காட்டும் மெய்யியல் தத்துவம் 97
மு. முவின்

18. வ.உ.சி.யின் மெய்யறத்தில் பிற நூல்களின் தாக்கங்கள் 103
ம. கதிரவன்

19. வ.உ.சிதம்பரனாரின் படைப்புகளில் நாடும் மொழியும் 108
முனைவர் ம. ஏ. கிருட்டினகுமார்

20. வ.உ.சி. யின் 'மெய்யறம்' புலப்படுத்தும் 'அரசியல் அறம்' 115
திருமதி இரா. சுகுணாதேவி

21. மெய்யறம் காட்டும் அரசியல் 122
பா. சுரேகா

22. வ.உ.சி.யின் மெய்யறம் 127
து. சுபா

23. திருவள்ளுவரின் திருக்குறளும் வ.உ.சி. யின் மெய்யறமும் 131
சு. விஷால்

24. மெய்யறம் கண்ட மேன்மையர் 135
முனைவர் சு. சிவகாமசுந்தரி

25. வெற்றிப் பயணத்திற்கான ஒரு தேடல் – வ.உ.சி. யின் மெய்யறம் 138
முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா

26. வ.உ.சி. யின் மெய்யறம், மெய்யறிவு 145
செ. தனுசு ஈஸ்வரி

27. **வ.உ.சிதம்பரத்தின் படைப்புகளில் மொழி வகைகள்** 149
சீதா லட்சுமி

28. **மாணவரியலில் வ.உ.சி.யின் புதிய சிந்தனைகள்** 165
முனைவர் ஆ. விக்டர் பாபு

பகுதி மூன்று: உரை வளம்

29. **வ.உ.சிதம்பரனார் சிவஞானபோத உரை** 171
வி. அர்ஜுன்

30. **திருக்குறள் 'அறப்பால்' விருத்தியுரையில்
வ.உ.சி.யின் உரைவிளக்க நெறிகள்** 177
முனைவர் ப. சு. மூவேந்தன்

31. **வ.உ.சி.தம்பரனாரின் இன்னிலை உரைத்திறன்** 186
முனைவர் மு. சங்கர்

32. **வ.உ.சி. யின் திருக்குறள் உரைச் சிறப்புகள்** 193
வெ. சந்துரு

33. **சிவஞானபோதம்: வ.உ.சி.யின் உரையும் இலக்கணக் குறிப்பும்** 198
ச. விக்னேஷ்

34. **திருக்குறள் இன்பத்துப்பால் உரை: 'வ.உ.சி. யும் பரிமேலழகரும்'** 202
ரா. லஷ்மன்

35. **வ.உ.சி.யின் சிவஞான போதம் உரைவளமும் பதிப்புப் பணியும்** 208
ச. திவ்யா

36. **வ.உ.சி.யின் திருக்குறள் உரையில் பாயிரவியல்** 211
கணேஷ் சுப்ரமணி

37. **திருக்குறள் உரையாசிரியராக சிதம்பரனார்** 219
மா. சுபலட்சுமி

38. **வ.உ.சி. உரை எழுதிய சிவஞானபோதம்** 222
முனைவர் இராம. வே. சிவஹரிபிரம்மசங்கர்

39. **வ.உ.சி.யின் உரைத்திறம்** 227
ரா. விசாலாட்சி

40. **தமிழ் உரை மரபில் வ.உ.சி.: மரபும் புதுமையும்** 231
முதுமுனைவர் ப. திருஞானசம்பந்தம்

41. **பரிமேலழகா – வ. உ. சி.யின் திருக்குறள் (அறத்துப்பால்) உரை** 240
முனைவர் செ. சாந்தி

42. **வ. உ. சி.யின் உரையும் பதிப்பும்** 245
முனைவர் ப. ராஜசேகர்

பகுதி நான்கு: பதிப்புத் திறன்

43. **வ.உ.சி பதிப்பித்த தொல்காப்பியம் – அகத்திணையியலில் இளம்பூரணரின் வாழ்வியலுக்கான உரைச் சிறப்பு** 251
மு. கோகுலசாமி

44. **வ.உ.சி.யின் பதிப்புப் பணி** 256
முனைவர் இரா. அன்சல்யா

45. **வ.உ.சி. யின் தொல். பொருள். இளம். அகத். புறத். பதிப்பு – பதிப்பாண்டுத் தொடக்கம் குறித்த புதிய ஆவணம்** 262
முனைவர் ஆ. மணி

46. **வ.உ.சி.யின் தொல்காப்பியப் பதிப்புப் பணிகள்** 267
முனைவர் ரா. கோடீஸ்வரி

47. **வ.உ.சி.யின் தொல்காப்பியப் பதிப்பு** 273
சி. செரஞ்சன்

48. **வ.உ.சிதம்பரனாரின் தொல்காப்பியப் பதிப்பும் தொல்காப்பிய உரை முயற்சியும்** 278
க. சதீஸ்குமார்

பகுதி ஐந்து: மொழிபெயர்ப்புத் திறன்

49. **வ.உ.சி.யின் அகமே புறம் நூல் காட்டும் மெய்ப்பொருளை அடையும் வழி** 283
க. சுமித்ரா

50. **வ.உ.சி.யின் மொழிபெயர்ப்புச் சூழலும் திறனும்** 287
முனைவர் பா. வைடூரியம்மாள்

51. **'அகமே புறம்' வ.உ.சி.யின் மொழியாக்கத்தில் தமிழ் உரைநடையின் எளிமையும் செறிவும்** 293
சே. அருண்செல்வகுமார்

52. **வ.உ.சி.யின் மொழிபெயர்ப்புகள்** 300
ஈஸ்டர் ஜெப கீதா

53. வ.உ.சி.யின் மொழிபெயர்ப்புத் திறத்தைக் காட்டும் 'அகமே புறம்' 304
முனைவர் ப. அலிஸ் ராணி

54. வ.உ.சி.யின் மொழிபெயர்ப்பு முறையும் உத்திகளும் 309
முனைவர் தி. சிவக்குமார், இ.த.ப.,

55. மனம் போல வாழ்வு 318
முனைவர் நா. அமுதா தேவி

56. வ.உ.சி.யின் 'அகமே புறம்' நூலில் மொழிபெயர்ப்பு நுட்பங்களும் எளிமையாக்கமும் 325
முனைவர் க. பழனிவேல்

பகுதி ஆறு: இயக்கச் செயல்பாடுகளும் சமூகப் பணிகளும்

57. வ.உ.சி.யின் போராட்டத்தில் சமூகச் சிக்கலும் அதற்கான தீர்வும் 331
நா. யாதவ் குமார்

58. கப்பலோட்டிய தமிழனின் சாதிய எதிர்ப்பும் பெண் உரிமையும் 334
ச. இராதாகிருஷ்ணன்

59. தென் பிராந்தியத்தில் இந்திய தேசிய இயக்கத்திற்கு வ.உ.சி.யின் பங்களிப்புகள் 340
முனைவர் சி. சிலுவை சாந்தா பிரின்ஸி

60. திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் 347
நா. தரணிப்பிரியா

61. பொருளாதாரப் பார்வையில் வ.உ.சிதம்பரனாரின் சுதேசியக் கப்பல் 361
முனைவர் பூ. சின்னத்துரை

62. வ.உ.சி.யின் சுதேசிக் கப்பல் நிறுவனம்: வரலாற்று ஆய்வு 358
க. சுஹாசினி

63. வ.உ.சிதம்பரனாரின் எழுத்துலகத்தில் தமிழ் – தமிழர் – தமிழ்நாடு 365
முனைவர் சா. ஜோக்கிம் பெலிக்ஸ்

64. சமூக நீதி: தேசிய விடுதலையின் அடித்தளம் வ.உ.சிதம்பரனாரின் சிந்தனைகளும் எழுத்துகளும் 370
முனைவர் லிப்டன் ரா. கெ. ராஜதுரை

65 **வ.உ.சி.யின் பார்வையில் பாரதி** 374
உ. அசின்

66 **சிறைச்சாலையிலும் சிந்தனைச் சுதந்திரம் – வ.உ.சிதம்பரனார்** 378
முனைவர் கோ. தமிழரசி

67 **வ.உ.சி.யின் பாரதி உறவுநிலைகள்: இணைவும் இன்மையும்** 381
முனைவர் ஆ. பூமிச்செல்வம்

68 **வ.உ.சி. முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி** 388
ர. ச. யுவன்சேகர்

69 **வ.உ.சி. யின் சமூக சிந்தனை** 392
அ. அகஷியா

70 **வ.உ.சி.யும் திருநெல்வேலி எழுச்சிக்கான பின்னணியும் அவலங்களும்** 397
வா. நிதிஷா

71 **வ.உ.சி.யின் எழுத்துகளும் சமூகமும்** 401
கு. தரணி ரெக்சியா

72 **வ.உ.சிதம்பரனாரும் திருநெல்வேலி ம.தி.தா. இந்துக்கல்லூரியும்** 406
முனைவர் இரா. இலக்குவன்

73. **ஆங்கிலேயருக்கு எதிராக வ.உ.சி.யும் அவரது போராட்டமும்** 413
அ. முத்து அஸ்வந்த்

74. **வ.உ.சி.யும் கோரல் மில் தொழிலாளர் வேலை நிறுத்தமும்** 416
முனைவர் சு. பேச்சிமுத்து

75. **வ.உ.சிதம்பரனாரின் சமுதாயப் பணி** 422
சி. சக்திவேல்

76. **வ.உ.சி.யின் அரசியல் பங்களிப்பு** 429
முனைவர் மு. பவானி

77. **கப்பலோட்டிய திறமும் வீழ்ச்சியும்** 435
முனைவர் ம. தனலட்சுமி

பகுதி ஏழு: படைப்பாளுமை

78. **வ.உ.சி.யின் தமிழ்ப்பணி** 443
முனைவர் மெ. சிவசங்கரி

79. **வ.உ.சி.யின் வாழ்வும் இலக்கியப் பணியும்** 448
முனைவர் இரா. வனிதாமணி

80. **தமிழ் இலக்கிய உலகில் வ.உ.சி.யின் பங்களிப்பு** 456
நி. அமிருதீன் (ஹசனி), முனைவர் மு. முஹம்மது ரஃபீக்

81. **வ.உ.சி.யின் பன்முக ஆளுமைத்திறன்** 461
சு. தெய்வரத்தினா

82. **வ.உ.சி.யைப் போற்றிய தமிழறிஞர்கள்** 467
முனைவர் சே. முனியசாமி

83. **வ.உ.சி.யின் இலக்கியப் பணி** 472
முனைவர் ஜா. ஜூலி பிரதிபா

84. **வ. உ. சிதம்பரனாரின் இலக்கியப் பணிகள்** 481
முனைவர் இரா. இந்துபாலா

85. **பன்முக நோக்கில் வ. உ. சிதம்பரனார்** 487
முனைவர் சு. சத்தியா

86. **தேச வளர்ச்சியில் வ.உ.சி. யின் பன்முகச்சிந்தனை** 492
முனைவர் வெ. அர. தாரணி

87. **வ.உ.சி.யின் தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப்புப் பணி** 496
முனைவர் ச. அனிதா சோபியா மார்கிரேட்

88. **வ.உ.சி.யின் நண்பர் மு.ரா.கந்தசாமிக் கவிராயர்** 500
க. கந்தசாமி பாண்டியன்

89. **வ.உ.சி.யின் மேடைச் சொற்பொழிவு** 505
முனைவர் க. குமரகுருபரன்

90. **தமிழ் இலக்கியத்திற்கு வ.உ.சி.யின் பங்களிப்பு** 510
முனைவர் நா. தனலட்சுமி

91. **தமிழ்க் கவிதைகளில் வ. உ. சிதம்பரனார்** 518
த. சுடலைமுத்து

92. **வ.உ.சி.யின் படைப்பாக்கம்** 523
ச. கங்காதரன்

பகுதி எட்டு: தத்துவத் தேடல்

93. **வ.உ.சிதம்பரனாரின் இளைஞர்களுக்கான மெய்யியல் முகம்** 528
இரா. நரசிம்மன்

94. **வள்ளலார் நெறியில் மெய்யறம்** 533
சொ. தங்கத்துரை

95. **அரண் குறித்த வ.உ.சி.யின் சிந்தனைகள்** 540
கோ. பத்மாவதி

96. **திருக்குறளும், மெய்யறமும் உணர்த்தும் வாழ்வியல் அறங்கள்** 545
சு. கோபாலகிருஷ்ணன்

97. **தமிழர் அறவியலும் வ.உ.சிதம்பரனார் மெய்யறிவும்** 552
சி. விஜய்

98. **வ.உ.சி.யின் படைப்புகளில் அறம்** 557
முனைவர் இரா. மூர்த்தி

99. **வ.உ.சி.யும் வள்ளுவரும் போற்றிய அன்புடைமை** 564
முனைவர் க. உமாராணி

100. **வ.உ.சி. கட்டுரைகளில் ஆத்திகச் சிந்தனைகளும் முற்போக்குக் கருத்தியல்களும்** 570
முனைவர் ரா. சுபா

101. **வ.உ.சிதம்பரனாரின் வாழ்வில் திருக்குறளின் தாக்கம்** 575
முனைவர் மு. மணிமேகலா

102. **வ.உ.சிதம்பரனாரும் திருக்குறளும்** 581
முனைவர் தாமரை

103. **வ.உ.சி. படைப்புலகும் கருத்துலகும்: அகாலனிய நோக்குநிலையை முன்வைத்து...** 589
முனைவர் ம. கருணாநிதி

104. **வ.உ.சி.யின் 'மெய்யறம்' மற்றும் ஜேம்ஸ் ஆலனின் தத்துவங்கள்** 596
ந. கோபாலகிருஷ்ணன்

வ.உ.சி. தன் முதல் மனைவி வள்ளியம்மையாருடன்

பகுதி ஒன்று: வ.உ.சி.யின் வாழ்வும் வரலாறும்

1

வ.உ.சி. கண்ட சிறை வாழ்க்கை

பெ. சிவக்குமார்
தமிழ்த்துறை, கே.ஆர்.பி.கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
காக்கிவாடன்பட்டி, சிவகாசி.

இ. மாரியப்பன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, கே.ஆர்.பி கலை & அறிவியல் கல்லூரி.

ஆய்வுச்சுருக்கம்:

இந்தியா சுதந்திரம் அடைவதற்குப் பலர் போராடினார்கள். அவர்களுள் ஒரு சிலர் மட்டுமே நமது நெஞ்சில் இன்று வரை நிலைத்து நிற்கின்றனர். அவர்களில் முக்கியமானவர் செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார்.

ஆங்கிலேயர் அவருடைய வாழ்க்கையைப் பாதி நாட்களைச் சிறையிலேயே வைத்துச் சீரழித்தனர். சிறையில் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டு இந்திய நாட்டு மக்களுக்காகத் தன்னுடைய இன்னுயிரையும் தியாகம் செய்து தியாகச்சுடரானார். அவர் கண்ட சிறை வாழ்க்கையைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் தலையாய நோக்கமாகும்.

திறவுச்சொற்கள்: இந்தியச் சுதந்திரம், தியாகச்சுடர், இன்னல்கள், போராட்டம், சிறை வாழ்க்கை, ஆங்கிலேயர்.

முன்னுரை:

சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட நமது தேசத் தலைவர்கள் வாழ்க்கையை நமக்காக அர்ப்பணித்ததால் நாம் இன்று சுதந்திரத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதில் எந்தவித ஐயமில்லை. சுதந்திரத்திற்காகப் போராடிய தலைவர்களுள் வ.உ.சிதம்பரனார் எல்லோர் மனதிலும் இன்றுவரை ‘பசுமரத்தாணி போல’ பதிந்து இருக்கிறார். மக்களுக்காகப் பல போராட்டங்களைச் செய்து தன்னுடைய வாழ்க்கையைச் சிறையிலேயே கழித்தவர். வ.உ.சிதம்பரனார் கண்ட சிறை வாழ்க்கையைப் பற்றி இக்கட்டுரையில் இனி விரிவாய் ஆராய்வோம்.

பாளையங்கோட்டை சிறை:

தாமிரபரணி ஆற்றங்கரையில் தைப்பூச மண்டபத்தில் விபின் சந்திர பாலர் விடுதலை நாள் விழா கொண்டாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதில் வ .உ .சி, சுப்பிரமணிய சிவா, பத்மநாப ஐயங்கார் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். அப்பொழுது அவர்கள் ஆற்றிய

உரையில் தேச விரோத கருத்துகள் இருந்ததாக காரணம் காட்டி மூன்று பேரையும் 1908 ஆம் ஆண்டு மார்ச் 12ஆம் நாள் கைது செய்யப்பட்டு மாலை 3 மணிக்கு பாளையங்கோட்டை சிறையில் விசாரணைக் கைதி யாக அடைத்தார்கள். வ.உ.சிதம்பரனார் விசாரணைக் கைதியாக இருந்த போதிலும் தங்களின் உணவை வரவழைத்து உண்பதற்கு மிகுந்த சிரமத்திற்குப் பின்னர் அனுமதி வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களின் கைதுக்கு பின்னர் திருநெல்வேலியிலும், தூத்துக்குடியிலும் பல எழுச்சிப் போராட்டங்கள் நடைபெற்று மக்கள் எல்லோரும் பாளையங்கோட்டை சிறைக்கு கைதிகளாக வந்தார்கள். பிறகு வாலேஸ் நீதிமன்றத்திலும், பின்ஹே நீதிமன்றத்திலும் நடை பெற்ற வழக்கில் வ.உ.சிதம்பரம்பிள்ளை நாடு கடத்தல் மற்றும் இரட்டை ஆயுள் தண்டனை அதாவது 40 ஆண்டுகளும், சுப்பிரமணிய சிவாவிற்கு 10 ஆண்டுகளும் அந்தமான் சிறையில் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று 1908 ஆம் ஆண்டு ஜூலை 7 ஆம் நாள் தீர்ப்பளிக்கப்பட்டது. ‘அந்தமான் சிறையில் கைதிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் கைதிகளை இங்கே அனுப்ப வேண்டாம்’ [1] என்று அந்தமான் அரசு அறிவிப்பு செய்திருந்தது. ஆகையால் வ.உ.சிதம்பரனார் கோவை சிறைக்கும், சுப்பிரமணிய சிவா திருச்சி சிறைக்கும் அழைத்துச் செல்லப்பட்டார்கள். (ப. 56 - 70)

கோவை சிறை:

விசாரணைக் கைதியாக இருந்த வ.உ.சிதம்பரனார் நீதி மன்றத் தீர்ப்பிற்குப் பிறகு தண்டனைக் கைதியாக கோவை சிறையில் காற்றோட்டம் இல்லாத, சுகாதாரமற்ற அடிப்படை வசதிகள் இல்லாத அறையில் அடைக்கப்படுகிறார். இவரை ஆங்கிலேய அரசு ஒரு ராஜத்துரோகி போலவே நடத்தினது.

சிறையில் வழங்கப்பட்ட உணவு தரம் குறைந்து இருந்ததால் அவருடைய உடல் சத்துக் குறைந்து காணப்பட்டது. மருத்துவர்கள் சிறை அதிகாரிகளை எச்சரித்ததால் அவருக்கு அரிசி உணவு கொடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. கால்களில் பெரு விலங்கை மாட்டி முரட்டுத் துணியால் ஆன ஆடைகளை அணிய வைத்து விடுதலை நாளை குறிக்கும் கட்டைத் தாலியையும் அவருக்குக் கழுத்தில் அணிய வைத்தார்கள்.

சிறையில் ஜெயிலர் மிஞ்சின் நடத்திய அக்கிரமங்கள் அதிகமாக இருந்தன. சணல் பிரிக்கும் எந்திரத்தைச் சுழற்றியதில் வ.உ.சி.யின் கைத்தோல் உரிந்து ரத்தம் வடிந்து கண்ணீர் சிந்தியுள்ளார்.

சுட்டெரிக்கும் வெயிலிலும் எருதுகளுக்குப் பதிலாக இவரைச் செக்கிழுக்க வைத்தார்கள். மற்ற கைதிகளும் அவருக்கு உதவி செய்து தொடர்ந்து செக்கிழுப்பதிலிருந்து அவரைக் காப்பாற்றினார்கள்.

'செக்கினை என்னோடு சேர்ந்து தள்ளியோர்
நாங்களே தள்ளுவோம். நமன்கள் போன்ற
சுப்பிரண் டெண்டு காட்ஸனும் ஜெயிலரும்
வருங்கால் எம்முடன் வந்திது தள்ளுமின்
போய்நிழல் இருந்து புசிமின் எள்ளும்
வெல்லமும் என்றே விளம்பினர் அன்பொடு' [2]

இவ்வாறு சிலர் அவருக்கு உதவி செய்ததால் மட்டுமே அவர் சில காலம் சிறையில் வாழ முடிந்தது என்பது நிதர்சனமான உண்மையாகும்.

சிறையில் குருவிக் குஞ்சுகளின் வாழ்க்கை!

வ.உ.சிதம்பரனார் அடைக்கப்பட்டிருந்த அந்தச் சிறைக்குள் குருவிக்குஞ்சுகள் கூட்டில் இருந்து சிறகடித்துப் பறந்து வெளியே செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தார். மனைவி மக்களும் வீட்டிலே! நான் இந்தச் சிறை கொட்டடியிலே! என்று ஆதங்கப்பட்டார். இந்நிகழ்வு வ.உ.சி. க்கு ஒரு கவிதையாக மலர்ந்தது.

'கூட்டினை விட்ட குரீஇக் குஞ்சே நீ
வீட்டினை விட்ட மிகையால் இக் - காட்டினில்
துன்பமுரு கின்றேன்போல் துன்பமுரு கின்றனையோ
இன்பமுறும் சுற்றம் இழந்து' [3]

இவ்வாறு அவருடைய மனவருத்தத்தைக் கவிதை வரிகள் மூலம் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறையில் கலவரம்:

சிவகாசி கலகத்தில் தண்டனை அடைந்த சீனியர் கான்விக்ட் வார்டர் வடுகுராமன் வ.உ.சிதம்பரனாரைக் கையெடுத்து வணங்கி நின்றான். இதனைப் பார்த்து ஜெயிலர் அவர்கள் 'வ.உ.சிதம்பரனாரை வணங்கினால் உன்னைச் செருப்பால் அடிப்பேன்' [4] என்று எச்சரித்தார். ஜெயிலர் கூறிய வார்த்தைகளுக்கு எந்த ஒரு மறுமொழியும் பேசாமல் அவர்மீது உள்ள கோபத்தைத் தேக்கி வைத்திருந்தார். பின்னர் நடந்த நிகழ்வைக் கொலைக் குற்றவாளிகளிடம் சென்று கூறி மறுநாள் காலையில் ஜெயிலர், கண்காணிப்பாளர், மருத்துவர் ஆகிய மூவரையும் கொலை செய்ய வேண்டும் என்று முடிவு செய்தார் வடுகுராமன். இதனை வ. உ.சி.யிடம் சென்று கூறினார். அதற்கு வ.உ.சி. 'கண்காணிப்பாளர், மருத்துவர் ஆகிய இருவரும் எந்த இடையூறும் செய்யவில்லை. ஜெயிலர் மட்டுமே இடையூறு செய்து கொண்டிருக்கிறார். அவர் வேலையில் இருந்து போகும்படி செய்தால் போதும்! உயிர் கொலை வேண்டாம்!' [4] என்று கூறினார். ஆனால், அவர் பேச்சைக் கேட்காமல் மறுநாள் காலையில் ஜெயிலரை கொலை செய்துவிட்டு மூன்று குற்றவாளிகளில் ஒருவன் தப்பித்து விட்டான். இருவர் சிறைக்குள் சிக்கிக் கொண்டார்கள். இந்தச் சிறைக் கலவரத்தை விசாரிக்க விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. நீதிமன்றத்தில் கைதிகளுக்கு இணையாகச் சாட்சி சொன்னதாலும்

சிறைக்குள் நடக்கும் கொடுமைகளைப் பற்றி நீதிமன்றத்தில் வெளிப்படையாகக் கூறியதால் கோவை சிறையில் இருந்து கண்ணனூர் சிறைக்கு வ.உ.சிதம்பரனார் அழைத்துச் செல்லப்பட்டார். (ப. 62 – 63)

கண்ணனூர் சிறை:

1910 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் வாரத்திலேயே கோவைச் சிறையில் இருந்து கண்ணனூர் சிறைக்கு மாற்றப்பட்டார். கண்ணனூர்ச் சிறையில் கைதிகளுக்கு வழங்கப்படும் தண்டனைகளுள் கம்பளியடி என்பது முக்கியமான ஒரு தண்டனையாகும். இதில் ஒரு கம்பளியைப் புதிதாக வரும் கைதியின் மேல் போர்த்தி மற்ற கைதிகள் எல்லோரும் அவர்களை ஜெயிலரின் கட்டளைப்படி அடித்து உதைப்பார்கள். இந்நிகழ்வில் அந்தக் கைதி இறந்தாலும் கூட அவருக்கு யாரும் சாட்சி சொல்ல முன்வர மாட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு நாள் வ.உ.சி. தன்னுடைய சிறைக்குள் இறை வழிபாட்டில் ஆழ்ந்திருந்தார். அதனைச் சிறைக் கம்பிகளின் வழியே பார்த்த கண்காணிப்பாளர், “என்ன செய்கிறாய்?” “இறைவனை வேண்டிக் கொண்டிருக்கிறேன்” “வேலை நேரத்தில் இறைவழிபாடு ஏன் செய்கிறாய்?” “நான் ஏதேனும் தவறு செய்திருந்தால் நீங்கள் பொறுத்துக் கொள்ளுங்கள்!” [5]

என்று பணிவுடன் சொன்னார். சிறை கண்காணிப்பாளருக்குச் சரியான மரியாதை கொடுக்காததாலும், பணி நேரத்தில் இறை வழிபாடு செய்து கொண்டிருந்ததாலும், அவருக்கு கேழ்வரகு உணவினை மட்டுமே கொடுத்தார்கள். இது ஒரு வகையான தண்டனையாகும். இந்த கேழ்வரகு உணவினை வ.உ.சிதம்பரனார் அவர்கள் சாப்பிடாமல் இருந்ததால் உடல் எடை குறைந்து மெலிந்தும் காணப்பட்டார் பின்பு மருத்துவ பரிசோதனையில் அவருக்கு கேழ்வரகு உணவு தருமாறுக் கூறினர். பின்னர் மருத்துவரின் ஆலோசனைப்படி அவருக்கு அரிசி உணவு மீண்டும் வழங்கப்பட்டது. (ப.65 - 67)

முடிவுரை:

வ.உ.சிக்கு எதிராக அளிக்கப்பட்ட அந்தத் தீர்ப்பில் நீதிபதி பின்ஹே இப்படி எழுதினார். ‘பாரதியின் பாட்டையும், சிதம்பரம் பிள்ளையின் பிரசங்கத்தையும் கேட்டால் போதும், செத்த பிணம் கூட உயிர் பெற்று எழும்’[6] வ.உ.சி. 24.12.1912 அன்று விடுதலையடைந்தார். சிறைக்குள் நுழையும்போது அவரை வழியனுப்ப நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டிருந்தார்கள். ஆனால், சிறையிலிருந்து அவர் விடுதலை யாகும்போது அவரை வரவேற்க நான்கு பேர் மட்டுமே காத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. 1936 ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் 18ஆம் நாள் வ.உ.சிதம்பரனார் இந்த வையகத்தை விட்டு வானுலகம் சென்றார். வ.உ.சி.யின் சிறை வாழ்க்கை என்பது ‘ஒவ்வொரு நாளும் சாவதை விட ஒரே நாளில் சாவது சிறந்தது’ என்பதைப் போலத் தான் இருந்தது. ஆங்கிலேயர்கள் எத்தனை இன்னல்களைக் கொடுத்தாலும் அவர் களுக்கு அடிபணியாமல் வாழ்க்கையைக் கழித்தவர்தான் வ.உ.சி.

அவருடைய சிறை வாழ்க்கையைப் படித்தால் நம் கண்கள் கண்ணீர் குளங்களாகி நிற்கும் என்பது நிதர்சனமான உண்மையாகும். இப்படிப்பட்ட ஒரு உன்னதமான மனிதரான வ.உ.சிதம்பரனார் புகழை வருங்காலச் சந்ததியினர் அறிந்து ஆராய வேண்டும்.

அடிக்குறிப்புகள்:

1. என். திரவியம் - இந்திய விடுதலைப் போரில் வ.உ.சி. (ப.59)
2. வ.உ.சி. சுப்பிரமணியம் - சுயசரிதை வ.உ.சி. (ப.117)
3. பாவலர் ஆ. முத்துராமலிங்கம் - வரலாற்று நாயகர் வ.உ.சிதம்பரனார் (ப.76)
4. சிபிசக்கரவர்த்தி - விடுதலை வீரர் வ.உ.சிதம்பரனார் (ப.63)
5. மா.ரா. அரசு - இந்திய இலக்கியச் சிற்பிகள் வ.உ.சிதம்பரனார் (ப.68)
6. அருணன் – வ.உ.சி. கடைசி காலத்தில் தடம் மாறினாரா? (ப.58)

துணைநூற் பட்டியல்:

1. என். திரவியம்- ‘இந்திய விடுதலைப் போரில் வ. உ. சி’, முதல் பதிப்பு- ஜூன் 2005 மணிவாசகர் பதிப்பகம், 31 சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை.
2. பாவலர் ஆ. முத்துராமலிங்கம் - ‘வரலாற்று நாயகர் வ. உ.சிதம்பரனார்’ முதல் பதிப்பு - ஜூன் 2005 முத்துலக்குமி பதிப்பகம், 6, மூன்றாம் தெரு, பாலாஜி நிழற்சாலை (அவினியூ) தச்சநல்லூர்- 627 358, திருநெல்வேலி மாவட்டம்.
3. சிபி சக்கரவர்த்தி- ‘விடுதலை வீரர் வ. உ. சிதம்பரனார்’ முதல் பதிப்பு- 12 டிசம்பர் 2004 வெளியீடு எண்- 4 ,மலையரசி பதிப்பகம், சென்னை.
4. மா. ரா. அரசு - ‘இந்திய இலக்கியச் சிற்பிகள் வ. உ. சிதம்பரனார்’முதல் பதிப்பு- 2005 சாகித்திய அகாதெமி, இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,புது தில்லி.
5. அருணன் - ‘ வ.உ.சி. கடைசி காலத்தில் தடம் மாறினாரா?’ முதல் பதிப்பு- நவம்பர் 2006 வசந்தம் வெளியீட்டகம், 69 / 24 ஏ. அனுமார் கோவில் படித்துறை, சிம்மக்கல் மதுரை.
6. வ.உ.சி. சுப்பிரமணியம் - ‘சுயசரிதை வ. உ .சி’, முதல் பதிப்பு - 1946 முல்லைப் பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை.

2

வ.உ.சிதம்பரனார் வரலாற்றுப் பாதை

முனைவர் தெ. ரேவதி
தமிழ்த்துறை, உதவிப் பேராசிரியர்,
ஸ்ரீ கிருஷ்ணாசாமி மகளிர் கல்லூரி, சென்னை.

ஆய்வுச்சுருக்கம்:

‘கப்பலோட்டிய தமிழன்’ என்று அழைக்கப்படும் வ.உ. சிதம்பரனார் (1872–1936) ஒரு தனித்துவமான ஆளுமை. இந்த ஆய்வு, அவர் ஒரு வழக்கறிஞராகத் தொடங்கி, ஆங்கிலேயப் பொருளாதாரச் சுரண்டலைத் தகர்க்க சுதேசிக் கப்பலை இயக்கிய ஒரு புரட்சியாளரின் வாழ்வியலை மையமாகக் கொள்கிறது.

முன்னுரை:

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், இந்திய விடுதலைப் போராட்டம் ஒரு புதிய எழுச்சியைக் கண்டது. குறிப்பாக, தமிழகத்தில் தூத்துக்குடி துறைமுகத்தை மையமாகக் கொண்டு ஆங்கிலேயரின் ஏகபோக வர்த்தகத்தை முறியடிக்கத் தோன்றிய ஒரு மாபெரும் சக்தியாக வ.உ.சி. திகழ்ந்தார். அவரது வழக்கறிஞர் பணி அவருக்குச் சட்ட நுணுக்கங்களைக் கற்பித்தது, அதுவே பிற்காலத்தில் ஆங்கிலேய அரசைச் சட்டரீதியாக எதிர்க்க உதவியது.

வ.உ.சி.யின் சிறு வயது விளையாட்டுகள்:

பெரிய பெரிய மரங்களில் ஏறி மரக்குரங்காடுதல், கவண் கொண்டு நெடுந்தொலைவிலிருக்கும் பொருள்கள் மேல் குறிவைத்துக் கல்லெறிதல், தலைகீழ் நடத்தல், குத்துச் சண்டை முதலியன இவர் ஆடிய விளையாட்டுகள். சலால்கான் என்பவரிடம் சிலம்பம் பயின்றுள்ளார்.

படிப்பும் ஆசிரியரும்:

திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியரின் பெயர் – வீரப்பெருமாள் அண்ணாவியார் (பள்ளிக்கூட ஆசிரியர் அண்ணாவியார் என்று அழைக்கப் பெறுவர்). இரவு நேரங்களில் கிருஷ்ணன் என்பவரிடம் ஆங்கிலம் கற்றுக் கொண்டார். வ.உ.சி. ஓட்டப்பிடாரப் புதிய பள்ளியின் ஆசிரியர் – அறம்வளர்த்தநாத பிள்ளை. வ.உ.சி. தனது பதினான்காம் வயதில் தூத்துக்குடியில் உள்ள ரோமன் கத்தோலிக்க புனித ஜேவியர் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். பின்னர் கால்டுவெல் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து மெட்ரிகுலேஷன் தேர்வில் வெற்றி பெற்றார். கஸ்தூரி ஐயங்கார், அண்ணாத் துரைஐயர்ஆகியோரிடம்ஆங்கிலத்தையும்,தமிழறிஞர்சவரிராயபிள்ளை யிடம் தமிழையும் கற்றுக்கொண்டார்.

தமிழ் மற்றும் சமுதாயப் பணி:

வ.உ.சி. அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்தார். வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர், சுதந்திரப் போராட்ட வீரர் எனும் பன்முகத்தன்மை பெற்றிருந்தார். இவரது அரசியல் வாழ்க்கை உயர்ந்த ஒழுக்கமும், நேர்மையும், ஆற்றலும் நிறைந்ததாக இருந்தது. அவர் அன்பு, தைரியம், வெளிப்படையான குணம் இவற்றை உடையவராக இருந்தார்.

தமிழ் மொழியில் உள்ள அநேக இலக்கியங்களைப் படித்து அவற்றைப் பற்றிக் கட்டுரைகளையும், செய்யுள்களையும் எழுதியுள்ளார். ஆங்கில நூல்களை மொழிபெயர்த்துள்ளார். விடுதலைப் போராட்டம் குறித்தும் தமிழ் இலக்கியங்கள் குறித்தும் நண்பர்களுடன் விவாதிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

வ.உ.சி. 1892ஆம் ஆண்டு பால கங்காதர திலகர் அவர்களின் ஆற்றல் மிகுந்த, வீரம் செறிந்த எழுத்தால் கவரப்பட்டு திலகரின் சீடரானார். இவர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்டதோடு மற்றவர்களையும் பங்குகொள்ளச் செய்தார். ஆங்கிலேயர்களின் அடக்குமுறையை எதிர்த்துப் போராடினார். அவர்களின் கொடூரமான சட்டங்களைப் பற்றி மக்களிடையே வீர உரையாற்றினார்.

சுதேசி நாவாய்ச் சங்கம்:

1906-ம் ஆண்டு அக்டோபர் 16-ல் ‘சுதேசி நாவாய்ச் சங்கம்’ பதிவு செய்யப்பட்டது. பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனிக்கு (BISNC) போட்டியாக ‘எஸ்.எஸ். காலியா’ (S.S. Galia) மற்றும் ‘எஸ்.எஸ். லாவோ’ (S.S. Lavo) என்ற இரு கப்பல்களைத் தூத்துக்குடி - கொழும்பு இடையே இயக்கினார். இது வெறும் வணிகமல்ல, இந்தியர்களாலும் கடல் வணிகத்தை ஆள முடியும் என்ற தன்னம்பிக்கையை விதைத்த செயல்.

தொழிலாளர் நலன் மற்றும் அரசியல்:

கோரல் மில் போராட்டம்: 1908-ல் தூத்துக்குடி கோரல் நூற்பாலைத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு மற்றும் பணி நிலைமைகளுக்காகப் போராடி வெற்றி கண்டார். இது இந்தியாவில் நடந்த ஆரம்பகால வெற்றிகரமான வேலைநிறுத்தங்களில் ஒன்றாகும்.

திலகரின் தாக்கம்:

மிதவாத அரசியலைத் தாண்டி, தீவிரவாத (Extremist) அரசியல் பாதையைத் தேர்வு செய்து, சுதேசி இயக்கத்தைத் தமிழகத்தில் வேரூன்றச் செய்தார்.

சிறைவாசம் மற்றும் தியாகம்:

இரட்டை ஆயுள் தண்டனை: ஆங்கிலேய அரசு அவருக்கு 40 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது (பின்னர் குறைக்கப்பட்டது).

கோவைச் சிறை:

அவருக்குத் தாள முடியாத உடல் உழைப்பு வழங்கப்பட்டது. மாடுகள் இழுக்கும் செக்கை, ஒரு வழக்கறிஞரான வ.உ.சி. இழுத்தார். இதனால் அவரது உள்ளங்கைகள் கொப்புளித்து இரத்தம் வடிந்தன.

கடுங்காவல் தண்டனை:

அவரது வழக்கறிஞர் பட்டத்தை ஆங்கிலேய அரசு பறித்தது. சிறையில் அவருக்கு வழங்கப்பட்ட உணவு மிகவும் தரம் குறைந்ததாக இருந்தது. ஆனாலும், ‘என் உடல் தான் சிறையில் இருக்கிறது, என் ஆன்மா மக்களுடன் இருக்கிறது’ என்று மன உறுதியுடன் இருந்தார்.

செக்கிழுத்தல்:

கோவை மற்றும் கண்ணனூர் சிறைகளில் மாடுகளுக்குப் பதிலாகச் செக்கிழுத்து கடும் சித்ரவதைகளை அனுபவித்தார். ஒரு வழக்கறிஞராக இருந்தும், தேசத்திற்காக உடல் உழைப்பைத் தந்து அவர் செய்த தியாகம் ஆய்வுக்குரியது.

இலக்கியப் பங்களிப்பு:

அரசியல் களத்தைத் தாண்டி, சிறையில் அவர் செய்த இலக்கியப் பணிகள் காலத்தால் அழியாதவை. உரை நூல்கள்: தொல்காப்பியம் (எழுத்து), இளம்பூரணார் உரை போன்றவற்றை ஆராய்ந்து பதிப் பித்தார். ஜேம்ஸ் ஆலனின் தத்துவ நூல்களை ‘மனம்போல வாழ்வு’ என்ற பெயரில் மொழிபெயர்த்தார்.

இறுதி காலம்:

சிறையில் இருந்து விடுதலையான பிறகு, வ.உ.சி மிகுந்த வறுமையில் வாடினார். தூத்துக்குடியில் மண்ணெண்ணெய் வியாபாரம் செய்தும், அரிசி வியாபாரம் செய்தும் குடும்பத்தை நடத்தினார். 1936ஆம் ஆண்டு நவம்பர் 18-ம் நாள் தனது 64-வது வயதில் காலமானார்.

வ.உ.சி.யின் முக்கிய பொன்மொழிகள்:

‘சுதந்திரம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்’ என்ற திலகரின் கருத்தைத் தமிழகத்தில் உரக்கச் சொன்னவர் வ.உ.சி. ஆவார். ‘ஆங்கிலேயரின் வணிகத்தை அழிப்பதே அவர்களை இந்தியாவிலிருந்து வெளியேற்றுவதற்கான எளிய வழி.’

முடிவுரை:

வ.உ.சி.யின் வாழ்க்கை என்பது ஒரு தனிமனிதனின் போராட்ட மல்ல; அது ஒரு இனத்தின் விழிப்புணர்வு. வர்த்தகம், அரசியல்,

இலக்கியம் மற்றும் சமுதாய நீதி ஆகிய நான்கு தளங்களிலும் அவர் ஆற்றிய தொண்டு, அவரை நவீன இந்தியாவின் முன்னோடிகளில் ஒருவராக நிலைநிறுத்துகிறது.

துணைநூல் பட்டியல்:

1. சுய சரிதை - சிதம்பரம் பிள்ளை, வ.உ., முல்லைப் பதிப்பகம், சென்னை. 1946.
2. மெய்யறம் அரும்பதவுரையுடன் - சிதம்பரம் பிள்ளை, வ.உ., ஷண்முகவிலாசம் பிரஸ், அம்பாசமுத்திரம், 1930.
3. வ.உ.சிதம்பரனாரின் கடிதங்கள் - சிதம்பரம் பிள்ளை, வ.உ., https://tamildigitallibrary.in/Articles/
4. மனம் போல வாழ்வு - சிதம்பரம் பிள்ளை, வ.உ., இந்தியா பிரிண்டிங் வொர்க்ஸ் அச்சகம், சென்னை, 1916.
5. திருவள்ளுவர் திருக்குறள் மணக்குடவருரை: அறத்துப்பால் - சிதம்பரம் பிள்ளை, வ. உ., பிரம்பூர், சென்னை, 1917.
6. தொல்காப்பியம் இளம்பூரணம் : பொருளதிகாரம் மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் - சிதம்பரம் பிள்ளை, வ. உ., சென்னை, 1935.

3

பன்முகப் பார்வையில் வ.உ.சி.யின் நற்செயல்கள்

மு. நாகலட்சுமி
ஆய்வாளர், கவிஞர் மற்றும் தமிழ்ப் பற்றாளர், மதுரை.

ஆய்வுச்சுருக்கம்:

வ.உ.சி. இந்தியாவின் மூன்றெழுத்து மந்திரம் எனலாம். வ.உ.சி அவர்கள் பன்முகப் பார்வை கொண்டவர். சமூகம், அரசியல், விடுதலை எனக் கொடிகட்டிப் பறந்த கப்பலோட்டிய தமிழன் படைப்புலகில் ஆக்கங்கள் என்றால் தமிழரின் படைப்பின் நாயகனாய் வாழ்ந்தவர். அவரின் சமூகச் சிந்தனைகள், அவரால் தொடங்கப்பட்ட தேசிய நிறுவனங்கள், கப்பல் நிறுவனம் சுதேசிய நாவாய் சங்கம் (1906) என்ற பல பன்முகங்களை வெளிப்படுத்திய வ.உ.சி.யின் வரலாற்றை ஆராய்கிறது.

முன்னுரை:

வ.உ.சி. அவர்கள் பன்முகப் பரிமாணங்களைக் கொண்டவர். கப்பல் நிறுவனம், விடுதலைப் போராட்டம், இலக்கியப் பங்களிப்பு, தமிழ் வளர்ச்சி, ஆன்மிகம் எனப் பல ஆளுமைகளை கொண்டுள்ளார். தமிழ், ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் புலமை பெற்றவர். திருச்சியில் சட்டம் பயின்று வழக்கறிஞர் ஆனார். இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கிய பங்காற்றி தமிழர்களின் தேசிய உணர்வை வளர்த்தெடுத்த, தன்னலமற்ற தியாகி நவம்பர் 18, 1936 இல் மறைந்தார். அவரின் நற்செயல்களை பின்வருமாறு காண்போம்.

வ.உ.சி.யும் சுதேசிக் கப்பலும்:

வ.உ.சி. எனக்கு நாட்டு நலமே முக்கியம். பம்பாய் சென்று கப்பலோடு வருவேன் என சூளுரைத்துச் சென்றார். திலகருடைய உதவியால் பிரான்சு நாட்டில் இருந்து இரண்டு கப்பல்களைத் தூத்துக்குடிக்கு அனுப்ப ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வந்து பாரதிக்குக் கடிதம் எழுதினார். பாரதியோ சுதேசமித்ரன் நாளிதழ் வெளியிட்ட சுதேசி ஸ்டீம் நாவிகேஷனல் கம்பெனிக்குப் பலரும் உதவ முன் வந்ததாகத் தெரிகிறது.

தேசபக்தர்கள் செல்வந்தர்கள், வர்த்தகர்கள் ஆதரவு பெற்று 1906 ஆம் ஆண்டு 10 லட்சம் ரூபாய் மூலதனத்துடன் சுதேசிக் கப்பல் கம்பெனியை நிறுவினார்.

வ.உ.சி. கண்ட நன்னெஞ்சினார்:

நன்றி பாராட்டும் குணத்தைத் திருவள்ளுவர் பலவிதங்களில் எடுத்துரைத்தவர். அதற்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர். வ.உ.சி. சிறை மற்றும் அதன் பின்னரும் தென்னாப்பிரிக்க செல்வரான தில்லையடி வேதியப் பிள்ளை. வ.உ.சி. கோயம்புத்தூரில் சிறையில் இருந்த

பொழுது பெரிய கலவரம் ஏற்பட்டது. அதற்குக் காரணம், வ.உ.சி. என்று வெள்ளையர்கள் குற்றம் சாட்டினார்கள். வ.உ.சி.க்காக சைவக்கிழார் திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் வாதாடி, குற்றமற்றவர் என நிரூபித்தார்.

இதனால் வ.உ.சி. அவர்கள் நன்றி பாராட்டும் விதமாக அவரின் நூல்கள் குறிப்பிடுகின்றன. அறம் வளர்த்த சுந்தரம் பிள்ளை என்பவரை தன்னுடைய பெற்றோரைக் காட்டிலும் மிகவும் மதிப்பிற்குரியவராக போற்றினார்.

‘குலதெய்வமாவைத்துகும்பிட்டுவாழ்வேன்
பலநாளும் அன்பால் பணிந்து’ - *பாடல் திரட்டு பக்கம் 33*

குலதெய்வம் போல கருதுகிறார். வ.உ.சி. சிறையில் இருந்த போது அவருடைய குடும்பத்தினரை பாதுகாத்தவர் வள்ளிநாயக சுவாமிகள். சிறு மன வருத்தத்துடன் வீட்டை விட்டு வெளியேறுகிறார். மீண்டும் இல்லத்திற்கு வரவழைக்க நன்மை செய்தாரின் நட்பு மறத்தல் பழியாகும் என்பது நல்லியல்பினை விளக்குகிறது.

‘என்னுயிர் மக்கள் இருவரும் என்றும்
நின்னடி தொழுது நிலைத்து இவன் வாழ்தலே
என் உள்ளம் கொண்டுள்ளேன்’ - *பாடல் திரட்டு பக்கம் 5*

வ.உ.சி.யின் நற்பண்புகள்:

பாரதியார் *‘சாதிகள் இல்லையடி பாப்பா’* எனக் கூறியது போல வ.உ.சி. அவர்கள் சாதிகள் என்ற இருளை நீக்கியவர்.

‘மதகுல வேற்றுமை மனத்திலும் கொள்ளேன்’ – சுயசரிதைப் பக்கம் 134

சில காலம் சென்னையில் வாழ்ந்த வ.உ.சி. ரிப்பன் அச்சுக்கூடத்தில் சகஜானந்தரை சந்தித்தபோது இவர் வ.உ.சி. யும் தாம் தீண்டத்தகாதவர் எனக் கூறினார். வ. உ.சி அவரை வீட்டிற்கு அழைத்துச் சென்று உணவு அளித்தார். வ.உ.சி அவர்கள் சென்ற இடமெல்லாம் சகஜானந்தரை அழைத்துச் சென்றார்.

‘ஒரு தந்தை தன் மகனிடம் காட்டும் பாசத்துக்கும் மேலாக அவர் மீது இவர் அன்பு செலுத்தினார்’ - வீரத்தியாகி வ.உ.சி. பக்கம் 23-24

அந்தணர் சமூகத்தில் பிறந்த பாரதியை ‘மாமா’ என்று அன்புடன் உரிமை கொண்டாடுவார். 1933 இல் காரைக்குடியில் காந்தியை வரவேற்க நடந்த கூட்டத்திற்குத் தலைமை தாங்குகிறார். இறைவன் படைப்பில் ஏற்றத்தாழ்வு பார்ப்பது அறிவீனம் என்ற உயரிய கொள்கையைக் கடைப்பிடித்தவர் வ.உ.சி.

இலக்கியவாதி வ.உ.சி:

தாய்மொழியின் மீது பற்று கொண்ட குடும்பம். இவர் தமிழ் மொழி மீது பற்று கொண்டு சிறையில் இருந்த போதிலும் நூல்கள் பல மொழிபெயர்ப்பு அறநூல்கள் எழுதப்பட்டன. அகமே புறம், வலிமைக்கு மார்க்கம், மனம்

போல வாழ்வு, மெய்யறிவு, மெய்யறம் என பல நூல்கள் எழுதினார். சிறையில் துன்பகரமான சூழ்நிலை ஏற்பட்டது. கல்லுடைத்தல், ஆட்டுத்தோலை சுத்தம் செய்தல், செக்கிழுத்தல் போன்ற கொடுஞ் செயலுக்கு ஆளாகினார். நீதிமன்றம் சில சலுகைகளை வழங்கியது. அவரிடம் புத்தகங்களைக் கொடுக்க பரலி. சூ. நெல்லையப்பரிடம் நன்னூல், தொல்காப்பியம், திருக்குறள், அகராதி, நிகண்டு ஆகியவற்றை கொடுக்க வேண்டுகிறார்.

சிறைக்கைதிகளுக்கு நன்னூலைப் போதனை செய்தார். மெய்ப்பொருளையும் கற்றுத் தந்தார். சுயசரிதை தவிர தனிப்பாடல் திரட்டு என்னும் கவிதைத்தொகுப்பும் அவரால் எழுதப்பட்டது.

1915-இல் தனிப்பாடல் வெளியிடப்பட்டது. இவரின் இறைவழிப் பாடல்களிலும் நாட்டு நலன் முதன்மைபெறும்.

'மன்னுயிர்கள்
இன்பமுறக் காத்தளிக்கும்என்சிவமே
என்நாட்டின்
துன்பமுரநல்காயோதுப்பு
என்னுடையதேயம்எனக்கு' - வ.உ.சி. வரலாறும் பணிகளும் -பக்கம் 164

இன்னிலை என்னும் சிறந்த அறநூலைத் தமிழ் உலகிற்கு அறிமுகம் செய்துள்ளார்.

இவர் சிறந்த ஆய்வாளர் என்பது வெளிப்படுகிறது. மீண்டும் தொடர்கிறது இலக்கியப் பணி.

திருக்குறள் அதிகாரங்களில் உள்ள வரிசையை மாற்றி அமைத்தார்.

சான்று: *'வாய்மையில் மூன்றாவது குறள் தன்னெஞ்சறிவது பொய்யற்க'* என்ற குறள்.

முதலாவதாகவும், மற்ற இரண்டு குறள்களை அடுத்தடுத்து மாற்றினார். சிறையில் இருந்த போது ஆய்வுப் பணிக்காக வெளியே இருந்து சான்றோர்களிடம் துணை நிற்க வேண்டுகிறார்.

தமிழ் தாத்தா உ.வே.சா. அவர்களுக்கு கடிதம் எழுதினார். திருக்குறள் மொழிபெயர்ப்புக்காக. அவரும் அயராது இவருக்கு விடைகளை எழுதி அனுப்பினார். இவர் இலக்கியப் பணிகளை சான்றோர் பெருமக்களின் உதவியுடன் செய்தார்.

ஒவ்வொரு இலக்கியத் தொண்டர்களுக்கும் அடைமொழி உண்டு. அதுபோல தனக்கென ஒரு அடையாளமாக திருக்குறள் அன்பன் என கருதினார். வ.உ.சி. அவர்கள் உ.வே.சாமிநாத ஐயர் அவர்களின் எண்பதாவது வயது கொண்டாட்டத்தின் போது கவிதை ஒன்றை வாழ்த்து மடலாக அனுப்பினார். அதில்

'தூத்துக்குடி வாழ் ஓட்டப்பிடாரம்
சிதம்பரம் என்னும் திருக்குறள் அன்பனே'

என்று தன்னை ‘திருக்குறள் அன்பன்’ என்ற பெருமிதத்துடன் வெளிப்படுத்தினார். இலக்கியப் பணியைப் பொறுத்தவரை அவருடைய கனவு அவர் மறைந்த பின்பு தான் நிறைவேறியது.

முடிவுரை:

மேற்கூறிய அனைத்தும் அவரின் பன்முகப் பார்வையாக அமைகின்றன. திருக்குறளை முதல்நூல் என்னும் திருக்குறளின் வழிநூல் மெய்யறம் என்றும் வ.உ.சி. குறிப்பிடுவார்.

சான்றாக,

‘இல்லிற்கு ஈராயிரம் அடி சதுரமாம்
வளி ஒளி அளவினுள் வரச் செலவழி செயல்’

என்ற குறளில் மனையடி சாத்திரக் கலை அறிவினையும் பெற்றவர் என அறியலாம். ஆய்வின் மூலம் முன்னுரையில் பிறப்பு பற்றிய தகவல்களும், அவரின் சுதேசி கப்பல், அவரின் சிறை வாழ்க்கை, நற்பண்புகள், அவரின் நன்நெஞ்சம் என பல வகையான தலைப்புகள் இக்கட்டுரையில் பன்முகப் பார்வையில் வ.உ.சி.யின் நற்செயல்கள் மூலம் அறியப்பட்டன.

துணைநூற்பட்டியல்:

1. முனைவர் எஸ். கண்ணன் - வ.உ.சி. ஒரு பன்முகப் பார்வை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியீடு : 2005.
2. சுயசரிதை, வ. உ. சிதம்பரம் பிள்ளை, முல்லைப் பதிப்பகம், 1946.
3. பாடற்றிரட்டு, வ. உ. சிதம்பரம் பிள்ளை, இந்தியா பிரிண்டிங் வொர்க்ஸ், 1915.
4. மெய்யறம், வ. உ. சிதம்பரம் பிள்ளை, கலாரத்நாகர அச்சியந்திரசாலை, சென்னை, 1917.
5. திருவள்ளுவர் திருக்குறள் மணக்குடவருரை – அறத்துப்பால், வ. உ. சிதம்பரம் பிள்ளை, சென்னை, 1917.

4

தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒரு பொருளாதாரப் புரட்சியாளரின் பங்களிப்பு

ந. மகாநட்டார்
தகவல் தொழில்நுட்பத்துறை, ஸ்ரீ சங்கர பகவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கொம்மடிக்கோட்டை.

ஆய்வுச் சுருக்கம்:

வ.உ.சி. ஓர் அரசியல் போராளி மட்டுமல்ல; பிரிட்டிஷ் பொருளாதார ஆதிக்கத்தை நேரடியாக எதிர்த்த சிந்தனையாளராக விளங்கினார். சுதேசி கப்பல் இயக்கம் மற்றும் தொழிலாளர் உரிமை விழிப்புணர்வு மூலம் தேசிய சுயமரியாதை மற்றும் சுயநிறைவு சிந்தனைகளை மக்கள் மத்தியில் விதைத்தார். இன்றைய காலகட்டத்திலும் அவரது சிந்தனைகள் பொருத்தமானவையாக உள்ளன.

திறவுச்சொற்கள்: வ.உ.சி., சுதேசிக் கப்பல் இயக்கம், பொருளாதார சுதந்திரம், தொழிலாளர் இயக்கம், தேசிய உணர்வு.

அறிமுகம்:

வரலாறு சிலரை மனிதர்களாக மட்டுமல்ல; காலத்தைத் தாண்டி நிற்கும் சிந்தனைகளாகவும் பதிவு செய்கிறது. அந்த வகையில் வ.உ. சி. ஒரு காலத்தைக் கடந்த சிந்தனையாளராக விளங்குகிறார். அவர் சட்டவாதி, சமூக விமர்சகர், பொருளாதார சிந்தனையாளர் எனப் பல பரிமாணங்களில் செயல்பட்டவர். இந்திய விடுதலைப் போராட்டம் அரசியல் கோஷங்களால் மட்டும் முன்னேறிய காலத்தில், பிரிட்டிஷ் ஆட்சியின் உண்மையான பலம் அரசியல் அல்ல; பொருளாதாரமே என்பதை தெளிவாக உணர்ந்து அதனை எதிர்த்தவர் வ.உ.சி. அவரது சிந்தனைகள் தமிழக அரசியல் வரலாற்றில் மட்டுமல்ல; இந்திய தேசிய வரலாற்றிலும் தனித்த இடம் பெற்றவை.

அரசியலைக் கடந்த அடிமைத்தனம்:

பிரிட்டிஷ் ஆட்சிக்கெதிரான போராட்டங்கள் பெரும்பாலும் அரசியல் உரிமைகள், சுயாட்சி, சட்ட மாற்றங்கள் என்ற தளத்தில் மட்டுமே நடைபெற்ற காலகட்டத்தில், பொருளாதார சார்பும் அடிமைத்தனத்தின் ஒரு ஆழமான வடிவம் என்பதை வ.உ.சி. உணர்ந்தார். இந்திய மக்கள் வெளிநாட்டு நிறுவனங்களில் வேலை செய்து, வெளிநாட்டுப் பொருள்களைப் பயன்படுத்தி, வெளிநாட்டு கப்பல்களில் பயணம் செய்வதன் மூலம் தங்களுக்கே தெரியாமல் அடிமைத்தனத்தைப் பேணிக் கொண்டிருந்தனர். இந்த பொருளாதாரச் சங்கிலி முறியடிக்கப்படாமல் அரசியல் விடுதலை முழுமையடையாது என்பதை அவர் வலியுறுத்தினார்.

அதனால் உணர்ச்சியூட்டுவதோடு மட்டுமல்ல; நடைமுறை மாற்று வழிகளையும் மக்களுக்குக் காட்ட வேண்டும் என்பது அவரது நிலைப்பாடாக இருந்தது.

சட்டமும் சமத்துவமும்:

சட்டம் கற்றவர் என்ற அடையாளத்தை வ.உ.சி. சமூக நீதிக்கான ஒரு வலுவான ஆயுதமாக மாற்றினார். சட்டத்தின் எல்லைக்குள் இருந்து அநியாயங்களை எதிர்த்ததோடு, தேவைப்பட்டால் சட்டத்தின் எல்லையைத் தாண்டியும் மனித உரிமைகளைப் பேசத் தயங்காதவர் அவர். தொழிலாளர்களை இயந்திரங்களாகப் பார்க்கும் மனப்பான்மைக்கு எதிராக, அவர்களை மனிதர்களாக மதிக்க வேண்டும் என்ற அவரது பேச்சுகள் அந்தக் காலகட்டத்தில் மிகுந்த துணிச்சலானவை. ‘உழைப்பவன் மனிதன்; அவன் கருவி அல்ல’ என்ற அவரது சிந்தனை இன்றைய தொழிலாளர் உரிமை மற்றும் மனித மரியாதை குறித்த கருத்துகளுக்கு அடித்தளமாக அமைந்தது.

தேசிய உணர்வு – வாழ்க்கை நடைமுறை:

வ.உ.சி.யின் தேசிய உணர்வு மேடைகளில் முழங்கிய கோஷங்களாக மட்டுமல்ல; அவர் எடுத்த ஒவ்வொரு வாழ்க்கை முடிவிலும் பிரதிபலித்தது. தனிப்பட்ட வசதி, தொழில் முன்னேற்றம், சமூக மதிப்பு ஆகியவற்றை விட நாட்டின் நலனையே அவர் முதன்மைப்படுத்தினார். இதன் காரணமாக அவரது வாழ்க்கை வசதியானதாக இல்லாமல் போனாலும், அவரது தியாகம் வரலாற்றில் உயர்ந்த இடத்தைப் பெற்றது. அவரது தேசியம் ஒரு அரசியல் நிலைப்பாடு அல்ல; ஒரு வாழ்வியல் நெறியாகவே இருந்தது.

சுதேசிக் கப்பல் இயக்கம் – பொருளாதார சவால்:

சுதேசிக் கப்பல் இயக்கம் ஒரு சாதாரண வணிக முயற்சி அல்ல; அது பிரிட்டிஷ் பொருளாதார ஆதிக்கத்திற்கு நேரடியாக விடுக்கப்பட்ட துணிச்சலான சவாலாகும். இந்திய கடல் வர்த்தகம் முழுவதும் வெளிநாட்டுக் கப்பல் நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில், இந்தியர்களே தங்களுடைய கப்பல்களில் இந்தியக் கடல்களில் பயணம் செய்ய வேண்டும் என்ற சிந்தனை புரட்சிகரமானதாக இருந்தது. இந்த இயக்கம் தேசிய பொருளாதார சுயமரியாதையை மக்களிடையே வலுப்படுத்திய ஒரு முக்கிய முயற்சியாக விளங்கியது.

மக்கள் பங்கேற்பும் அடக்குமுறையும்:

சுதேசிக் கப்பல் இயக்கத்தின் முக்கிய பலம் மக்களின் நேரடி பங்கேற்பிலேயே இருந்தது. பொதுமக்கள் பங்குகள் வாங்கி ஆதரவு தந்ததும், வணிகர்கள் பொருளாதார உதவி செய்ததும் இந்த இயக்கத்தை ஒரு கூட்டு முயற்சியாக மாற்றின. அதே நேரத்தில், பிரிட்டிஷ் ஆட்சி இதனை ஒரு பொருளாதார அச்சுறுத்தலாகக் கருதி கட்டணக் குறைப்பு, சட்டத் தடைகள், அரசியல் அழுத்தங்கள் போன்ற பல அடக்குமுறைகளை

மேற்கொண்டது. இதனால், இந்த இயக்கம் ஒரு பொருளாதார யுத்தமாகவே மாறியது.

சிறை வாழ்க்கையும் சமூக சிந்தனையும்:

சிறை வாழ்க்கை வ.உ.சி.யின் உடலை மட்டுமே கட்டியது; அவரது சிந்தனையை அல்ல. சிறையின் கடுமையான சூழல்கள் அவரது சமூக சிந்தனைகளை மேலும் கூர்மையாக்கின. அரசியல் விடுதலையோடு சமூக விடுதலையும் அவ்வளவே முக்கியம் என்பதை அவர் இந்த காலத்தில் ஆழமாக உணர்ந்தார். சாதி, வறுமை, அறியாமை போன்றவை சமூகத்தை அடிமைப்படுத்தும் சங்கிலிகள் என்பதை அவர் தெளிவாக எடுத்துரைத்தார்.

முடிவுரை:

இந்த ஆய்வுக் கட்டுரை வ.உ.சி.யை ஒரு சிந்தனையாளராக புரிந்துகொள்ள முயன்றுள்ளது. அரசியல் விடுதலை, பொருளாதார சுதந்திரம், சமூக சமத்துவம் ஆகியவை ஒன்றோடொன்று பிரிக்க முடியாதவை என்பதை அவரது வாழ்க்கை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. அவர் தொடங்கிய இயக்கங்கள் காலப்போக்கில் முடிந் திருக்கலாம்; ஆனால் அவர் விதைத்த தேசிய பொருளாதார மற்றும் சமூகச் சிந்தனை இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

துணைநூல் பட்டியல்:

1. விடுதலைக்கு வித்திட்ட வீரர்கள் - நாஞ்சில் ஸ்ரீ விஷ்ணு, செல்வமணி வெளியீடுகள், செஞ்சி மெயின் ரோடு, கொள்ளார் அஞ்சல், திண்டிவனம் தாலுகா பதிப்பு: 2009.
2. இந்திய இலக்கியச் சிற்பிகள் - மா.ரா. அரசு, சாகித்திய அகாதெமி, முதல் பதிப்பு 2005, இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை, புதுதில்லி.

5

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளி வ.உ.சி

தெ. ஜெயகுமார்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

முனைவர் து. அசோகன்,
இணைப் பேராசிரியர், தமிழியல் துறை.

ஆய்வுச் சுருக்கம்:

இந்திய நாட்டில் வெள்ளையர்களின் ஆட்சியை எதிர்த்து பல தலைவர்களும் இளைஞர்களும் போராடியுள்ளனர். அவ்வகையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய மாபெரும் போராளி வ.உ.சி. ஆவார். இந்திய போராட்ட வரலாற்றில் இரத்தம் சிந்தாத புரட்சி இல்லை. விடுதலைப் போராளிகள் இரத்தம் சிந்திய தியாக வேள்வி இந்திய விடுதலைப் போராட்டத்தில் எவரோடும் ஒப்பிட இயலாது. தன்னிகரில்லாத தலைவர் வ.உ.சிதம்பரனார் ஆவார். சிறு வயதில் விளையாட்டுப் பிள்ளையாகவும், குறும்புக்காரராகவும் இருந்த இவர் இப்போராட்டக் களத்தில் ஈடுபடுவதற்கான காரணம் என்ன என்பதை நாம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏனென்றால் நாமும் நம் நாட்டின் மீது பற்றுள்ளவராகவும் அனைவரின் மீது அன்பு கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதை மட்டுமல்லாமல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எவ்வாறு எதிர்த்தார்கள் என்பதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

திறவுச்சொற்கள்: பிரிட்டிஷ், கப்பல் பயணம், பொருளாதார நெருக்கடி, தொழிலாளர்கள், ஏகாதிபத்தியம்.

முன்னுரை:

வ.உ.சி. பிரிட்டிஷ் அரசின் காலனியாதிக்கத்தை தன் வாழ்நாள் முழுவதும் எதிர்த்தவர். இலக்கியவாதியாகவும், எழுத்தாளராகவும், வழக்கறிஞராகவும் இருந்த இவர், பல தமிழ் நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார். வ.உ.சி. அவர்கள் சிறைப்பட்டபோது உ.வே.சா.விற்கு கடிதம் ஒன்று எழுதுகிறார். அக்கடிதத்தில் நான் திருக்குறள் படிக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார். உ. வே. ச. அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறார். ஆனால் உ.வே.ச. உடன் இருந்தவர்கள் எதிர்த்தபோதும், வ.உ.சி.யின் தமிழ்ப் பற்றுக்கு மரியாதை கொடுத்து புத்தகம் அனுப்பு கிறார். திருக்குறளுக்கு உரையும் எழுதுகின்றார். வ.உ.சி. இப்படித் தமிழ் ஆர்வமும் நாட்டின் விடுதலையும் உயிர் மூச்சாக கொண்டவர்தான் வ.உ.சி. இவர் எவ்வாறு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்தார் என்பதும், அவர் கண்ட இன்னல்கள் பற்றியும், மனச்சோர்வடையாத

புரட்சியின் வடிவமான வ.உ.சி.யைப் பற்றி எடுத்து இயம்புவதே இக்கட்டுரையாகும்.

ஆரம்பகால வாழ்க்கை:

வ.உ.சி. என்று போற்றப்படும் வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம். இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகவும் முக்கியமான ஒரு நபர். ஏகாதிபத்திய வெள்ளை அரசுக்கு எதிராக கப்பலோட்டி அந்நாட்டவரை கலங்கச் செய்தவர்.

தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரத்தில் 1870-ல் வ.உ.சி. பிறந்தார். தந்தை உலகநாதன் வழக்கறிஞர். திருநெல்வேலியில் பள்ளிப்படிப்பை முடித்த வ.உ.சி. பிறகு சட்டப்படிப்பைப் படித்து முடித்தார். பிறகு வ.உ.சி. ஏழை, எளிய மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகப் போராடி வழக்குகளில் வென்றார். இதனால் இவர் மக்களின் வழக்கறிஞரானார்.

வ.உ.சி. தம் தந்தை வழியைப் பின்பற்றி வழக்கறிஞர் தொழில் நடத்த முற்பட்டார். வழக்கறிஞராக இருந்த போதிலும் வ.உ.சி. தமிழ் இலக்கிய, இலக்கண ஆராய்ச்சிகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டு திகழ்ந்தார். தமிழ்ப் பற்றுடன் விளங்கிய வ.உ.சி. இந்திய தேசிய உணர்வையும் தாங்கிக்கொண்டார்.

தமிழ் மக்கள் மனதில் தூங்கிக்கொண்டிருந்த ஒற்றுமை உணர்ச்சியையும், தேசப்பற்றையும் உயிர்ப்பிக்கச் செய்தவர் வ.உ.சி. என்று நாவலர் சோமசுந்தர பாரதி கூறியுள்ளார்.

இளமைப் பருவம்:

பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்து 18-ஆம் நூற்றாண்டில் தென்தமிழ் நாட்டில் மாபெரும் போராட்டங்கள் நடைபெற்றன. வெள்ளையரசை எதிர்த்து வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்.

தமிழ் மொழியில் உள்ள இலக்கிய நூல்களைப் படித்து அவற்றைப் பற்றிக் கட்டுரைகளையும் செய்யுள்களையும் எழுதியுள்ளார். ஆங்கில நூல்களை மொழிபெயர்த்துள்ளார். விடுதலைப் போராட்ட உணர்வு அவரது ஆழ்மனதில் பசுமரத்தாணி போல் பதிந்தது. 1892-ஆம் ஆண்டு திலகரின் வீரம் செறிந்த எழுத்தால் கவரப்பட்டு திலகரின் மாணவரானார். இவர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதோடு மற்றவர்களையும் பங்கு கொள்ள வழிவகுத்தார். ஆங்கிலேயர்களின் அடக்குமுறையை எதிர்த்துப் போராடினார். அவர்களின் மோசமான சட்டங்களைப் பற்றி மக்களிடம் எழுச்சிமிகு உரையாற்றினார். வ.உ.சி. தனது இளமைக் காலத்தில் அனைத்து வகையான விளையாட்டுகளிலும் ஆர்வம் உடையவராகவும், திறமை மிக்கவராகவும் திகழ்ந்தார். சில காலம் தாலுக்கா அலுவலகத்தில் பணிபுரிந்த வ.உ.சி. பின்னர் அவரது தந்தை சட்டம் படிக்க திருச்சிக்கு அனுப்பிவைத்தார். சட்டத்தேர்வை 1894-ம் ஆண்டு எழுதி தேர்ச்சி பெற்றார். 1895-இல் ஓட்டப்பிடாரத்தில் வழக்கறிஞராக தனது தொழிலைத் தொடங்கினார். குற்றவியல்

வழக்குகளில் திறம்பட வாதாடி வெற்றி பெறும் இவர் ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக வாதாடி வெற்றி கண்டார். இவர் வழக்காடும் விதமும் இவரது நேர்மையின் மதிப்பால் நீதிபதிகள் மத்தியில் பெரும் மதிப்பிற்குரியவராக மாற்றியது.

சமூகநீதி:

சைவவேளாளர் சமூகத்தைச் சேர்ந்திருந்தாலும் பார்ப்பன சாதி ஆதிக்கத்தைக் கடுமையாக எதிர்த்தார். தாழ்த்தப்பட்ட மக்களை தனது வீட்டில் தங்கவைத்தார். சாதி ஒழிப்பை தனது வீட்டிலும் செயலிலும் காட்டியவர். வ.உ.சி. ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் எனப் போராடினார். திலகரின் சாதிப்பற்றை ஏற்க மறுத்து அனைத்து மக்களுக்கான உரிமைக்காகப் போராடியவர் வ.உ.சி. அவர்கள்.

நமக்கு பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் கூட வ.உ.சி. யைப் பற்றி என்ன கற்றுக்கொடுக்கிறார்கள்? கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் என்ற குறுகிய கண்ணோட்டத்தில் மட்டுமே கற்றுக்கொடுத்துள்ளனர். அவர் ஒரு சமூகச் சீர்திருத்தவாதி, பொதுவுடைமைவாதி, சாதி வேற்றுமைகளைக் கலைக்கப் போராடியவர் வ.உ.சி. என்பதை நாம் உணரவேண்டும்.

இவர் கூறிய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் மூலம் மட்டும் நாட்டின் சாதிக் கொடுமைகளுக்கு முடிவுகட்ட முடியும் என்று வ.உ.சி. தெளிவாகக் கூறியுள்ளார்.

‘அகமே புறமே அனைத்துமே யாகி
அகமே விளங்கும் அளிவே – அகமே
புறமெனச் சொல்லப் புகுந்த இந்நூலைத்
திரிமனச் சொல்லச் செய்யும்’ [1]

என்ற வரிகளை வ.உ.சி.யின் அகமே, புறம் என்ற நூல் குறிப்பிடுகிறது.

வ.உ.சி. எதிர்த்த ஏகாதிபத்தியம்:

மனிதனாகப் பிறந்தவன் பயனின்றி அழியக்கூடாது என்ற மாமேதை மார்க்சின் பொன்மொழி நோக்கம், நமது நாட்டைப் பீடித்திருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஒழிப்பதற்குத்தான் 64 ஆண்டுக் கால வாழ்நாளில் பல்வேறு தியாகங்களைப் புரிந்துள்ள வ.உ.சி. அவர்களின் நெஞ்சுருக்கமிக்க போராட்ட குணத்தையும், வ.உ.சி. என்றவுடன் நம் எண்ணத்தில் எழுவது கப்பலோட்டிய தமிழன் செக்கிழுத்த செம்மல் என்பதையும் தாண்டி ஏகாதிபத்திய எதிர்ப்பாளர், பார்ப்பன எதிர்ப்புப் போராளி, பெண்ணுரிமையை நிலைநாட்டியவர் என இந்த மாபெரும் மக்கள் தலைவர் என்பதனை நாம் அறியமுடிகிறது.

வ.உ.சி. அவர்களின் களப்பணி இந்தச் சமூகத்தில் புரட்டிப்போட்டது. உழைக்கும் மக்களின் இரத்தத்தைக் குடித்த இந்திய ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தை அணிதிரட்டி ஆளும் பிரிட்டிஷ் கும்பலை

நடுங்கச் செய்தார். இந்தியா விடுதலை பெறும் நோக்கத்தோடு ஆங்கிலேய அரசின் அரசியலை அழிப்பதற்குப் பகத்சிங் போன்ற புரட்சியாளர்கள் முயற்சித்துக் கொண்டிருந்த நேரத்தில் ஏகாதிபத்தியத்தை வீழ்த்த ஆங்கிலேயரின் பொருளாதார அடிக்கட்டுமானத்தைத் தகர்க்க வேண்டும் என ஒரு புரட்சிப் புயல் வீசத்தொடங்கியது. அதில் சிக்கித் தவித்த ஆங்கிலேயர்கள் அந்தப் புரட்சிப் புயலை ஒடுக்க கொடூர தண்டனைகள் கொடுத்தனர். இந்நிலைகளில் இருந்து தனது அடுத்த கட்டப் போராட்டங்களைத் தொடர்ந்தார் வ.உ.சி. 'நிலைமைகளோடு போராடுதல் மனிதன் காரணத்தை மனம்போல் தனது அகத்துள் வைத்துக்கொண்டு காரியத்தோடு தலை வாழ்வு புறத்தில் போராடுகின்றதென்பதே அதன் பொருள்' [2] உயிர் துறந்தால் மட்டுமல்ல, உரிமைக்குரல் எழுப்பி இறுதிவரை ஆங்கிலேயரை ஏகாதிபத்தியத்தைத் துளிர்க்கவிடாமல் விரட்டியடிக்க எண்ணி தனது செல்வம் அனைத்தும் இழந்து உறுதியுடன் நின்றதால் தான் அவர் மாபெரும் ஒப்பற்ற தலைவன் ஆனார்.

'தூற்றுக்குடிகைத் தொழில்வளர் சங்கப்
சாற்றுதற் கரிய தரும சங்கம்
எனவிண் பிலைக் கொண்ட பெருந்தவ வித்து
திமைச் செடியினை சிந்தை கொடு நோக்கி,
'வந்தே மாதரம்' 'வாழ்க சுதேசியம்'
சொந்தத் தேசம் சுகம்பெற் என்றும்' 3

கப்பல் நிறுவன நெருக்கடி:

1906-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11-ம் தேதியன்று சிதம்பரனாரின் சுதேசிக் கப்பல் கம்பெனி பதிவு செய்யப்பட்டது. கப்பல் கம்பெனித் தலைவர் பொறுப்பை மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவர் பாண்டித்துரை தேவர் ஆவார். இந்நிறுவனத்தின் செயலாளர் வ.உ.சி. ஆனார். சுதேசிக் கப்பல் நிறுவனம் தமிழர்களுக்கு மட்டுமே உழைக்கும் நிறுவனமன்று. ஆசிய கண்டத்தில் உள்ள அனைத்து உழைக்கும் மக்களுக்கான நிறுவனமாக இருந்தது. ஆங்கிலேயர்களுடைய கம்பெனியை எதிர்த்து, போட்டி வியாபாரமாக சுதேசிக் கப்பல் உருவாகக் கண்ட பிரிட்டிஷ் நிறுவனத்தாருக்கும் போட்டியும் பொறாமையும் ஏற்பட்டது. ஆனால் இந்திய கப்பல் நிறுவனத்தை இயக்கவிடாமல் செய்வதற்குரிய முட்டுக்கட்டைகள் என்னென்னவோ அவற்றையெல்லாம் வெள்ளை ஏகாதிபத்திய அரசு செய்துவந்தது. சூறாவளிப் புயலில் மாட்டிக்கொண்ட கப்பலைப் போல சுதேசிக் கப்பல் நிறுவனம் வணிகர்களிடையே பெரும் பாதிப்பு ஏற்படுத்தப்பட்டது. சுதேசி நிறுவனத்தை நம்பி வெள்ளை நிறுவனத்தைப் பகைத்துக்கொண்ட வணிகர் கிடைத்தனர். இத்தனை இன்னல்களிலும் வ.உ.சி. மன உறுதியுடன் இருந்தார். உடனே அவர் இலங்கை தலைநகர் கொழும்பு நகருக்குச் சென்று அங்கே கப்பல் கம்பெனியில் கப்பலைப் பேசி வாங்கி தூத்துக்குடி துறைமுகத்துக்குக் கொண்டு வந்தார். இதனைப் பார்த்த தமிழ்நாட்டு

வணிகர்கள் சிதம்பரனாரைப் பாராட்டினர். வெள்ளையர்களை எதிர்க்கச் சொந்தமாக புதிய கப்பல்களை வாங்கப் பணத்தை தூத்துக்குடி மக்களிடமும், வணிகர்களிடமும் திரட்டினார். பம்பாய், கல்கத்தா போன்ற பெருநகரங்களுக்குச் சென்று பணம் திரட்டினார். வ.உ.சி. கண்ணும் கருத்துமாக செயல்பட்டு ஒரு கப்பலுடன் தூத்துக்குடி துறைமுகத்திற்கு திரும்பி வந்தார். அந்த கப்பலின் பெயர் 'காலிமா' என்பதாகும். இந்நிகழ்வைக் கண்ட மக்கள் பெருமகிழ்ச்சியில் ஆழ்ந்தனர்.

ஆங்கிலேய அரசின் பல்வேறு நெருக்கடிகளால் வணிகர்கள் சுதேசி கப்பலில் இருந்து பின்வாங்கினர். வ.உ.சி. சிறையில் இருந்த போது சுதேசிக்கப்பல் நிர்வாகிகள் வெள்ளையரசுக்கு பயந்து போட்டியை சமாளிக்க முடியாமல் சிலர் பதவியை இராஜிநாமா செய்து விட்டு ஓடினர். அதோடு மட்டுமில்லாமல் சிதம்பரனார் வாங்கிய இரண்டு கப்பல்களையும் ஆங்கிலேய அரசுக்கு விற்றுவிட்டனர். இதனை அறிந்த வ.உ.சி. சிறையில் மனமுடைந்து போனார். தன் மகன் இறந்த போதும், மனைவி கவலைக்கிடமாக இருந்தபோதும் நாட்டின் விடுதலைக்காக வாங்கிய கப்பலை வெள்ளையனிடமே விற்றதை எண்ணி உள்ளம் நொறுங்கிப் போனார் வ.உ.சி.

முடிவுரை:

வ.உ.சி.யின் வாழ்நாளின் கொடூரமான பக்கங்களை வரலாறு எழுதியது. விடுதலைப் போராட்ட வரலாற்றில் புதிய அத்தியாயத்தைப் படைத்த அந்த மாவீரன் மகத்தான அர்ப்பணிப்பு, இணையற்ற தியாகம், எதற்கும் அஞ்சாத வீரம், இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் பதியப்பட வேண்டிய ஒன்று. மக்களுக்கான உரிமைக் குரலாகவும், ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை தூங்கவிடாமல் செய்தவர் வ.உ.சி. ஆவார். தனது செல்வம் அனைத்தையும் இழந்தபோதிலும் உறுதியுடன் போராடியதால் இந்நாட்டின் ஒப்பற்ற தலைவரானார் வ.உ.சி.

சான்றெண் விளக்கம்:

1. வ.உ.சி. அகமே புறம், ப.28.,
2. மேலது., ப.32.,
3. வ.உ.சி. சுயசரிதை, ப.39.

துணைநின்ற நூல்கள்

1. ம.பொ.சிவஞானம், கப்பலோட்டிய தமிழன், சர்வோதயம் அச்சகம், சென்னை.
2. வ.உ.சிதம்பரம் பிள்ளை, அரசியல் பெருஞ்சொல்,
   வ.உ.சி. நூலகம், ஜி-1, லாயிட்ஸ் காலனி, இராயப்பேட்டை, சென்னை.
3. நா.வானமாமலை, மக்கள் வெளியீடு, சென்னை, 1999.
4. ஆலன் ஜேம்ஸ், அகமே புறம், புரோகிரஸிவ் பிரஸ், சென்னை, 1916.

6

'கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம்' நூல் சித்தரிக்கும் சிதம்பரனாரின் சிறப்புகள்

முனைவர் சு. முருகவேல்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
திருநெல்வேலி தெக்ஷணமாற நாடார் சங்கம் கல்லூரி, தெ.கள்ளிகுளம்.

ஆய்வுச்சுருக்கம்:

பிரித்தானியக் கப்பல்களுக்குப் போட்டியாக முதல் உள்நாட்டு இந்தியக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர். தமிழிலும் ஆங்கிலத் திலும் புலமைபெற்றவர். வ.உ.சிதம்பரனாரைப் பற்றி பற்பல நூல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் 'கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி' என்னும் படைப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள சிதம்பரனாரின் தொண்டினையும், சிறப்புகளையும், சுதந்திரப் போராட்டக் குணத்தையும் ஆராய்வது இக்கட்டுரையாகும்.

திறவுச்சொற்கள்: அரசியல் அறப்போர், வழக்குரைஞர், அஞ்சாமை, நல்லரசு, சுதந்திரப் புரட்சி

முன்னுரை:

வீரம் விளைந்த பாண்டிய நாட்டின் வித்தகர்களில் ஒருவராக விளங்கியவர் வ.உ.சிதம்பரனார். வடநாட்டுத் தேசியச் செருக்களத்துப் போர்முனைக்கு ஒரு திலகர் வாய்த்தாரென்றால், தென்னாட்டுத் தேசியத்துக்குசுதந்திரஉணர்ச்சியைஊட்டிவளர்த்ததந்தையாகநடமாடிய தன்மான வீரர் வ.உ.சி. அவரின் சிறப்புகளை 'கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம்' நூல் சித்தரிக்கிறது.

கல்வி:

அக்காலத்திலே, ஆங்கிலம் கற்பிக்கும் கல்விக்கூடம் இல்லை என்பதால், ஆங்கிலம் போதிக்கும் பள்ளியை உலகநாத பிள்ளை தனது சொந்தச் செலவிலேயே ஆரம்பித்தார். தனது மகன் சிதம்பரத்துக்காகத் தொடங்கப்பட்ட அப்பள்ளியில் அவர் மகன் ஒருவன் மட்டுமே படித்தார். பிறகு நாளடைவில் அவ்வூர்ப் பிள்ளைகளும் ஆங்கில மொழியைக் கற்க ஆரம்பித்தார்கள். அந்தப் பள்ளிப் படிப்பை முடித்தவுடன் சிதம்பரம், தூத்துக்குடி செயிண்ட் பிரான்சிஸ் சேவியர் பள்ளியில் சேர்ந்து படித்த பின்பு, கால்டுவெல் கல்லூரியில் மெட்ரிகுலேஷன் கல்வியை முடித்தார். இவ்வாறு சிதம்பரனார் ஆங்கிலத்திலும் தமிழறிவிலும் சிறந்து விளங்கினார். [1]

வ.உ.சி.யின் எண்ணங்கள்:

புறநானூறு வீரம் போற்றும் வீரச் சிங்கமாய்ப் பிறந்தவர் வ.உ.சிதம்பரனார். ‘என் கடன் பணி செய்து கிடப்பதே’ என்ற தொண்டு ஞானத்துக்குத் தொண்டராகத் தோன்றியவர் மாவீரர் வ.உ.சி.

‘அரசியல் அறப்போரோ, அல்லது மறப்போரோ, அவை எது வானாலும் சரி, சாம, பேத, தான, தண்டம் என நான்கு யூகங்களையும் சமயத்துக்கேற்றவாறு வியூகங்களாகப் பயன்படுத்திக் கொள்ள வேண் டுமே தவிர, சத்தியம், சாந்தம் என்கின்ற வைதீக மனப்பான்மைகள், விடுதலைப் போர்க்களத்திலே நல்ல, அமைதியான வெற்றிகளைத் தேடிக் கொடுக்காது, என்ற மராட்டியச் சிங்கமான திலகரின் கொள்கைகளுக்குத் தமிழ்நாட்டின் வாரிசாக வாய்த்தவர் வ.உ.சிதம்பரனார்.’ [2]

யாராக இருந்தாலும் சரி, தனது கொள்கைகளுக்கு உடன்படா தவர்களது உண்மைத்தன்மைகளை, வ.உ.சியார் உளமார உவந்து அவர்களை வரவேற்று, ‘நம்பியவர்களுக்குத் துரோகம் செய்யாதே’ என்ற உயர்வான நோக்கத்தை அவரவர்களுக்குப் போதித்தார் என்பதை நோக்கும்போது அவரது பண்பாடு பாராட்டக்கூடியதாக உள்ளது.

வழக்குரைஞரான வ.உ.சி.:

சிதம்பரத்தை அவரது தந்தை, திருச்சியிலே அவரது சட்டத்துறை நண்பர்களான கணபதி ஐயர், ஹரிஹர ஐயர் என்பவர்களது கண் காணிப்பிலே சட்டப்படிப்பைக் கற்க வைத்தார். கி.பி.1895-ஆம் ஆண்டில் சிதம்பரனார் சட்டப்படிப்பில் தேர்வாகி, வக்கீல் பட்டம் பெற்று, வழக்குரைஞரானார். மீண்டும் அவர் தனது சொந்த ஊரான ஓட்டப்பிடாரத்துக்கு வழக்குரைஞராகத் திரும்பி வந்தார். இவர், சிவில், கிரிமினல் ஆகிய இரண்டு வழக்குகளையும் ஏற்று நீதிமன்றத்திலே புகழ்பெற்றார். ஆனால், அவருக்கு கிரிமினல் துறையிலேதான் அதிக வழக்குகள் வாதாட வந்து கொண்டிருந்ததால், அவரது முழு கவன மெல்லாம் கிரிமினல் துறையிலேயே பதிந்தது. நாளடைவில் புகழ்பெற்ற கிரிமினல் வக்கீலாகப் பெயரெடுத்தார்.

வழக்குக்காக வரும் கட்சிக்காரர்களிடம் ஏற்றத்தாழ்வு காட்டாமல், எல்லாரிடமும் அன்புடன் பேசி, எடுத்துக்கொண்ட வழக்குகள் தோல்வியுறாமல் வழக்குகளை நடத்தும் அவரது திறமைகளை உணர்ந்த அப்பகுதி மக்கள், அவரிடம் தனியொரு மதிப்பும் மரியாதையும் காட்டி மகிழ்ச்சியடைந்தார்கள். ஏழை மக்கள் மீது போலீசார் பொய் வழக்குகளைத் தொடுத்துள்ளார்கள் என்பதை அவர் நெஞ்சார உணர்ந்தால் அந்த ஏழைகளிடம் பணமே பெறாமல் வழக்குகளை அவர் ஏற்று வாதாடி வெற்றி தேடித்தருவார். இதனால், காவல்துறை அவருக்கு விரோதமாகி விடுமே என்று அவர் அஞ்சியதே இல்லை. இந்தப் பழக்கம்தான் அவருக்கு எதிர்காலத்திலே வெள்ளையர் ஆட்சியை வேரறுக்கும் அஞ்சாமை உணர்வை உருவாக்கியது.

தியாகம்:

நாட்டு விடுதலைக்கு இந்திய மண்ணிலே, தியாகத்தை விதைகளாகத் தெளித்துப் பயிரிட்ட அறிவியல் வித்தகர் வ.உ.சி. இவரைப் போல வேறு யாராவது, நாற்பது ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்ற – அதாவது இரண்டு ஆயுள் தண்டனைகளைப் பெற்ற வீர நாயகன் யாருமே இந்திய வரலாற்றிலே இல்லை. இன்று வரை உலக சுதந்திர வரலாற்றிலே நெல்சன் மண்டேலா ஒருவரைத் தவிர வ.உ.சி.யுடன் ஒப்பிட வேறு எவருமில்லை.

கப்பலோட்டிய வ.உ.சி.'

வெள்ளைக்காரன் தமிழர்களுடைய செல்வத்தைச் சுரண்டுவது கண்டு நெஞ்சு பொறுக்காத சிதம்பரம் வெள்ளைக் கொள்ளையனை எதிர்த்துக் கப்பலோட்டினார். அவர் கப்பலோட்டியதற்கு அது மட்டுமே காரணமன்று. தமிழர்களது முன்னோர்களாகிய பண்டைத் தமிழர்கள் கப்பலோட்டிச் செல்வத்தைப் பெருக்கிக் கலைகளை வளர்த்து நல்லரசு நடத்தி வல்லரசுகளாக வாழ்ந்தார்கள் என்ற வரலாற்றை மீண்டும், நமக்கெல்லாம் நினைவுபடுத்திக் காட்டவும் கப்பலோட்டினார்.

சுதந்திரப் புரட்சியில் வ.உ.சி.:

பழமையும் பெருமையும் வாய்ந்த நம் நாடு, முந்நூறு ஆண்டுகளாக ஆங்கிலேயரின் அடிமைத்தனத்திலே சிக்கிச் சீரழிந்து கொண்டிருந்த அவலத்தை சிதம்பரனார் சிந்தித்தார். ஒவ்வொரு துறையிலும் வெள்ளையர்களது பொருளாதாரச் சுரண்டல்களினால் இந்தியா அல்லல்படுவதையும், அந்தத் தொல்லை மிகு அல்லல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையும் சிதம்பரம் கண்டார். இந்திய மக்கள் எல்லாத் துறைகளிலும் பின் தங்கி வாழ்வது மட்டுமன்று, பஞ்சமும், வறுமையும், அவர்களைப் பாழ்படுத்தி, தமது முன்னோர்களின் பெருமைகளையும் புகழையும் மறந்தவராய் நலிந்து கிடப்பதைக் கண்ட சிதம்பரனார், இந்த அடிமைத்தளைகளை உடைத்தெறிய வீறிட்டெழுந்த அரசியல்வாதியாய், அரசியல் துறையிலே ஈடுபடக் கொதித்தெழுந்தார்.

இந்தியா சுதந்திரம் பெற வேண்டும், அந்நிய ஆட்சி அறுத்தெறியப் பட வேண்டும், பல்துறைகளிலும் பாரதம் முன்னேற வேண்டும், மக்கள் வாழ்க்கைத் தரம் வளம் பெற வேண்டும் என்று போராடிக் கொண்டிருக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் மகா சபையிலே சேர்ந்தார் சிதம்பரனார்.

இந்திய விடுதலைக்காக தனது உடல், பொருள், ஆவி அனைத்தை யும் நாட்டுக்கும், நாட்டு மக்களது வாழ்வுக்கும் தியாகம் செய்வது ஒன்றே தனது பிறப்பின் கடமை என்ற வாதப் பிரதிவாதத் தேச பக்தர் போர்க் கோலத்தோடு திருநெல்வேலி மாவட்ட முழுவதுமாக வலம்

வந்தார். ஒவ்வொரு மேடையிலும் முழக்கமிட்டார். ஆங்கிலேயரின் ஆணவ ஆர்ப்பாட்ட ஆட்சி நமக்குத் தேவையா? என்று கேட்டார். மக்கள் சொற்படி நடக்கும் ஒரு மக்களாட்சிதான் நமக்குத் தேவை என்பதற்கான காரண காரியங்களை மக்களிடையே விளக்கிப் பேசினார்.

அகில இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையிலே சேர்ந்த அவர், ஆண்டுதோறும் வடநாட்டில் நடைபெறும் மகாசபை மாநாடுகளுக்குச் சென்று, வடநாட்டில் என்ன நடக்கிறது? தென்னாட்டில் எப்படி அவை நடக்க வேண்டும்? என்ற திட்டங்களோடு அவர் திரும்பி ஊர் வருவார். ஆங்கிலேயர் ஆட்சியினால் இந்திய மக்கள் அனுபவிக்கும் தீமைகளைப் பொதுக் கூட்டங்களைக் கூட்டி விளக்கினார். அதனால், தமிழ் மக்கள் சுதந்திரப் போருக்குத் தயாராக வேண்டும் என்று உரையாற்றினார். சிதம்பரம் பிள்ளையின் பேச்சும், தேசிய ஊழியமும் மக்கள் மனதில் நாட்டுப்பற்றைப் பொங்கச் செய்தது. இதைக் கண்டு ஆங்கிலேய அதிகாரிகள் பயந்தார்கள்.

ஆங்கிலேயரின் ஆட்சியை எதிர்த்து, 'ஆளப் பிறந்த நம்மை ஆறாயிரம் மைலுக்கப்பாலிருந்து வந்த ஆங்கிலேயன் ஆள்வதா?' என்று கேட்டார். இதுவே, பின்னாளில் திருநெல்வேலிப் புரட்சிக்குக் காரண மானது. சிதம்பரனார் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் படை திரட்டினார். மக்களும் அவரைப் பின்பற்றினார்கள்.[3]

பெருமைகள்:

'தென்னாட்டுத் திலகர்' எனப் புகழ்ப் பேர் பூண்ட காலஞ்சென்ற திரு. வ.உ.சிதம்பரனாரைப் புதிய இந்தியாவே முழுவதும் அறியும். குடிமையறமும் உரிமையும் துறந்து, மக்கள் அடிமை மோகத்தில் ஆழ்ந்து மடிந்து இருந்த காலத்தில், தாய்நாடு முற்றுரிமை பெற்றுயர முதலில் முயன்ற பெருந்தலைவருள் ஒருவர் இவர். தமிழகத்தில் தனக்கென வாழாமல் பிறர்க்கு உரியாளராய், பொதுநலம் பேணப் பிறந்தவர். ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி ஊர்களில் குற்ற நீதி மன்றங்களில் திறம்பட வாதுபுரிந்து பொருளும் புகழும் செல்வாக்கும் பெருக வாழ்ந்த தமிழ்வாணர்.

தமிழ்மொழியில் உள்ள அநேக இலக்கியங்களைப் படித்து அவற்றைப் பற்றிய கட்டுரைகளையும் செய்யுள்களையும் எழுதியுள்ளார். ஆங்கில நூல்களை மொழிபெயர்த்துள்ளார். விடுதலைப் போராட்டம் குறித்தும் தமிழ் இலக்கியங்கள் குறித்தும் நண்பர்களுடன் விவாதிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். 1892-ஆம் ஆண்டு பால கங்காதர திலகர் அவர்களின் ஆற்றல் மிகுந்த வீரம் செறிந்த எழுத்தால் கவரப்பட்டு திலகரின் சீடரானவர்.[4]

கூர்த்தமதியும் சீர்த்த நடுநிலை உணர்வும் மிகுந்த வழக்கறிஞர். வள்ளுவர் குறளும் கைவல்ய நூலும் பல்காற் பயின்று, சொல் வன்மையும், நல்லியல்பும் நிரம்பி, கற்றோர் களிக்க மற்றோரும் மகிழச் சல்லாபிக்க வல்லவர். நேர்மை நிறைந்த அதிகாரிகளை நட்டு, அறம் திறம்புபவர்.

எளியாரை ஆதரிப்பவர். சமுதாயச் சீர்திருத்தங்களில் முனைந்து நின்றவர். தென்னாட்டுத் தேசத்தொண்டர் முன்னணியில் முதலிடம் கொள்ளும் பெருமை பெற்றவர். சூரத்துக் காங்கிரஸ் திலகரோடு சேர்ந்து தேர்தலுரிமையைப் பேராது காத்த வீரர்.

இந்திய நாட்டில், பெருங்கடலோடும் கப்பல்களை அந்நியர் ஆதிக்கமின்றி நம்மவர் முதலால் ஓட்ட நினைத்து, முதன்முதலில் பொருள் திரட்டி, 'சுதேசி நீராவிக் கப்பல்' கம்பெனி கூட்டிய தனிப்பெருமை இவருடையது. வாணிப யாத்திரை மரக்கலக் கம்பெனிகளிலெல்லாம், உலகத்திலேயே பெரிய பிரிட்டிஷ் இந்தியன் நீராவிக் கப்பல் கம்பெனியாரோடு போட்டி செய்து, தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே, ஆங்கிலேயர் கலங்களில் ஆளும் சரக்கும் ஏறாதபடி வெற்றி கண்டார்.[5]

முடிவுரை:

ஆரம்பத்தில் சீரும் சிறப்புமாய் வாழ்ந்து, பிறகு நாட்டிற்காகச் சிறை புகுந்து பல இன்னல்களை அனுபவித்த இவர், மரணத் தருவாயில் தம் மக்களையும், மனைவியையும் வறுமையில் வாட விட்டு விட்டு 1936-ஆம் ஆண்டு நவம்பர் 18-ஆம் நாள் இயற்கை எய்தினார். வாழ்க்கை இவருக்குச் சூறாவளியாக இருந்தாலும், அச்சூறாவளி கொண்ட கொள்கையும் நிறைவேறிற்று. அவர் கொண்ட லட்சியத்தை அவர் வழிவந்த நாம், வெற்றிகரமாக முடித்து வைத்து, வாழ வழிகோலுவோமாக.

குறிப்புகள்:

1. என்.வி.கலைமணி, கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம், பக்.10-11
2. மேலது, ப.6
3. மேலது, பக்.40-41
4. ta.wikipedia.org
5. வ. உ.சிதம்பரம் பிள்ளை மலர், வ. உ. சிதம்பரம் பிள்ளை (கட்டுரைகள் தொகுதி), பக்.46-47

துணைநூற்பட்டியல்:

1. என்.வி.கலைமணி, கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம், சாந்தி நிலையம், தியாகராய நகர், சென்னை, டிசம்பர் 2001.
2. வ. உ. சிதம்பரம் பிள்ளை மலர், வ. உ. சிதம்பரம் பிள்ளை (கட்டுரைகள் தொகுதி), பம்பாய்த் தமிழ்ச் சங்கம், மாதுங்கா, 1951.
3. விடுதலைக்கு வித்திட்ட வீரர்கள் - நாஞ்சில் ஸ்ரீ விஷ்ணு, செல்வமணி வெளியீடுகள், செஞ்சி மெயின் ரோடு, கொள்ளார் அஞ்சல், திண்டிவனம் தாலுகா பதிப்பு: 2009.

7

சிறைவாசிகளின் உரிமைகளுக்காகக் குரல் எழுப்பிய முதல் இந்தியர் வ.உ.சி.

சி. மாணிக்கவல்லி
தமிழ் ஆர்வலர், பென்னர் காலனி, விராட்டிபத்து, மதுரை.

முன்னுரை:

இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் நாட்டின் அரசியல் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட எண்ணற்ற தியாகிகளில் ஒருவர் கப்பலோட்டிய தமிழர் என்று தமிழர்களால் கொண்டாடப்படுகின்ற வ.உ.சிதம்பரனார் ஆவார். அதே நேரத்தில் பிரிட்டிஷ் இந்தியாவில் சிறைவாசிகளின் சட்டப்பூர்வமான உரிமைகளுக்காக முதன்முதலில் குரல் கொடுத்தவரும் வ.உ.சிதம்பரனார்தான் என்பதை இக்கட்டுரை விளக்குகின்றது.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் சிறைச்சாலைகள் மனித உரிமைகளை நசுக்குகின்ற கொடுந்தண்டனைக்கூடங்களாக விளங்கின. கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டனர். இச்சூழ்நிலையில் இரட்டை ஆயுள் தண்டனை மற்றும் நாடு கடத்தல் தண்டனை வழங்கப்பட்ட வ.உ.சிதம்பரனார் அவரது சிறை வாச காலத்தில் கோயம்முத்தூர்ச் சிறையில் வசித்தபோது அங்குள்ள சிறைக் கைதிகளுக்கு இழைக்கப் பட்ட கொடுமைகளை பிரிட்டிஷ் சிறை நீதிமன்றத்திலேயே வெளிச்சம் போட்டுக் காட்டி அதற்கு எதிராகத் துணிச்சலுடன் குரல் கொடுத்தார். மனித உரிமைக்குக் குரல் எழுப்பிய முதல் இந்தியராக வ.உ.சிதம்பரனார் வரலாற்றில் இடம் பெற்றுள்ளார்.

இந்த ஆய்வுக்கட்டுரையில், வ.உ.சி.யின் சிறை வாழ்க்கை, அவர் சிறையில் கண்ட மனித உரிமை மீறல்கள், அதிகாரிகளின் சட்டவிரோதமான செயல்கள், இவைகளுக்கு எதிராக அவர் செயல்பட்ட நிகழ்ச்சிகள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

வ.உ.சி.: ஒரு சுருக்கமான வரலாற்றுப் பின்னணி:

1872, செப்டம்பர் மாதம் 5ஆம் தேதி இன்றைய தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் எனும் ஊரில் வழக்கறிஞர் வ. உலகநாதன் பிள்ளை மற்றும் பரமாயி அம்மாள் தம்பதியினருக்கு மூத்த மகனாகப் பிறந்தார். 1895ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியில் சட்டக் கல்வியான இரண்டாம் நிலைப் பிளீடர்ஷிப் படிப்பை முடித்துத் தேர்ச்சியடைந்து ஓட்டப்பிடாரம் மற்றும் தூத்துக்குடியில் வழக்குரைஞராகப் பணியாற்றி வந்தார்.

பாலகங்காதரத் திலகரது அரசியல் கருத்துக்களினால் கவரப்பட்ட அவர், பொது மக்களிடம் விடுதலைக்கான கருத்துகளைப் பிரச்சாரம்

செய்து வந்தார். மகாகவி சுப்பிரமணிய பாரதி மற்றும் வீரமுரசு சுப்பிரமணிய சிவா ஆகியோரது நெருங்கிய நண்பராக விளங்கினார்.

அவர் ஒரு சிறந்த வழக்கறிஞர். புலவர். எழுத்தாளர். பதிப்பாளர். மொழிபெயர்ப்பாளர். தொழிலாளர் உரிமைப் போராளி. சிறந்த அரசியல் களச் செயல்பாட்டாளர் மற்றும் மிகச்சிறந்த தேசபக்தர் ஆவார்.

1905 இல் சுதேச இயக்கத்தினைத் தொடங்கினார். அவர் ஏற்றிருந்த சுதேசியக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காகச் சில அமைப்புகளை உருவாக்கினார்.

கப்பல் கம்பெனி:

1906 ஆம் ஆண்டில் கப்பல் தொழிலில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த பிரிட்டிஷ் ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனிக்கு எதிராக சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியைத் தொடங்கினார். பொதுமக்கள் பங்கேற்கும் வகையில் கூட்டுக் கம்பெனியாகத் தொடங்கி நாடெங்கும் பல்வேறு இடங்களுக்குச் சென்று பங்குகளைத் திரட்டினார்.

1907 ஆம் ஆண்டு ஏப்ரலில் முதல் சுதேசிக் கப்பலான ‘காலியா’வைக் கொண்டு வந்து தூத்துக்குடிக் கடலில் நிறுத்தினார். ஜூனில் இரண்டாவது கப்பலான ‘லாவோ’வை வரவழைத்தார். 1908 இல் சுயராஜ்யம் கோருகின்ற சென்னை ஜனசங்கத்தின் கிளையைத் தூத்துக்குடியில் தொடங்கினார்.

தூத்துக்குடிக் கோரல் மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டபோது அப்போராட்டத்தைப் பாதுகாத்து வெற்றிகரமாக நடத்தினார். தனது எழுச்சிமிக்க பேச்சால் விடுதலை குறித்த சிந்தனைகளையும் சுதேசியம் குறித்த உணர்வினையும் மக்களிடையே அவர் ஏற்படுத்தினார். அதனால் உணர்ச்சியடைந்த பொதுமக்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக எதிர்ப்புகளைக் காட்டத் தொடங்கினர். மக்களிடையே விடுதலை வேட்கை கொழுந்துவிட்டு எரிந்தது. நிலைமை தீவிரமடைந்த நிலையில் வ. உ. சியைக் கைது செய்வதைத் தவிர வேறு வழியில்லை எனும் முடிவிற்கு திருநெல்வேலி மாவட்டக் கலெக்டர் முடிவு செய்தார்.

வ.உ.சி. கைது

தேசத்துரோகப் பேச்சுக்களைப் பேசினார் என வ.உ.சி. மீது பிரிட்டிஷ் போலீஸ் குற்றம் சுமத்தி அவரையும் சுப்பிரமணிய சிவாவையும் 1908 மார்ச் 12 ஆம் தேதி கைது செய்தது. விசாரணைக் கைதிகளாக அவர்களைப் பாளையங்கோட்டைச் சிறையில் அடைத்தது.

திருநெல்வேலி எழுச்சி:

நீதிபதி பின்ஹேயின் உத்தரவிற்கு எதிராகத் திருநெல்வேலி மக்கள் கொதித்து எழுந்தனர். இந்திய வரலாற்றிலேயே முதன்முறையாக ஒரு தலைவர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்துப் பொதுமக்கள் கலகத்தில் இறங்கினார்கள்.

தீர்ப்பு:

1908 ஜூன் 7 ஆம் தேதியன்று மாவட்ட நீதிபதி ஏ.எஃப்.பின்ஹே தீர்ப்பு வழங்கினார். சுப்பிரமணிய சிவாவிற்கு பத்தாண்டுகாலச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. வ.உ.சி.யின் மீதான இரண்டு வழக்குகளில் சுப்பிரமணிய சிவாவிற்கு அடைக்கலம் கொடுத்தார் என்பதற்காக நாடுகடத்தல் ஆயுள் தண்டனையும் தேசத்துரோகப் பேச்சுக்களைப்பேசினார்என்பதற்காகநாடுகடத்தல்ஆயுள்தண்டனையும் சேர்த்து இரட்டை ஆயுள் நாடு கடத்தல் தண்டனை விதிக்கப்பட்டது. இதற்குப் பின்னர் பம்பாயில் கைது செய்யப்பட்ட வ.உ.சி.யின் அரசியல் குருவான திலகருக்கு பத்து ஆண்டு சிறைத்தண்டனைதான் வழங்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நாடெங்கிலும் உள்ள பல மொழிப் பத்திரிகைகளும் பின்ஹேயைக் கண்டித்தன. ஆங்கிலேயப் பத்திரிகையான ஸ்டாண்டர்ட் எனும் பத்திரிகையானது வ.உ.சிதம்பரனாருக்கு வழங்கப்பட்ட தண்டனை யானது சட்டத்திற்கும் நியாயத்திற்கும் புறம்பானது என்று சாடியது. சுதேசமித்திரன் பத்திரிகை, இது பிரிட்டிஷ் நீதித்துறைக்கே அவமானம் என்று காரி உமிழ்ந்தது.

கோவைச் சிறையில் உரிமைப் போராட்டம்:

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தின்போது அரசியல் கைதிகளும் குற்றவாளிகளாகவே நடத்தப்பட்டனர். கைதிகளுக்குக் கடுமை யான உடலுழைப்பு வேலைகளைச் செய்யச் சொல்லிக் கட்டாயப்படுத்தப் பட்டனர். அசுத்தமான உணவுகள் வழங்கப்பட்டன. மண் கலந்த கஞ்சி யும் இலை தழைகளைப் போட்டு வைக்கப்பட்ட குழம்பும் கொடுத்தனர். சிறைத்துறையின் ஒழுங்கு விதிகள் கடைப் பிடிக்கப்படவில்லை.

ஜெயிலர் மிட்சேல், சூப்பரிண்டெண்டன்ட் காட்ஸ்டன் மற்றும் மருத்துவர் மூவரும் கைதிகளிடம் கடுமையாக நடந்துகொண்டனர். ஜெயிலர் மிஞ்ச்சேல் கைதிகளை அடித்துத் துன்புறுத்தியும் அவமானப் படுத்தியும் மிருகத்தனமாக நடந்துகொண்டிருந்தார். கட்டைகள், கம்புகள், கற்கள், செருப்பு மற்றும் கைகளால் கைதிகளைத் தாக்கி வந்தனர்.

சில சமயங்களில் கைதிகளை மனித மலத்தைத் தின்ன வைக்கும் கொடுமையையும் நடத்தினர். சைவ உணவு மட்டும் சாப்பிடுபவர்களுக்குத் தனியான சமையல் செய்யப்பட வேண்டும் என்ற சிறைவிதி கடைப்பிடிக்கப்படவில்லை.

சிறைக்குள் இருந்த வ. உ. சியையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை. அவரைக் கல்லுடைக்க வைத்தார்கள். எண்ணெய்ச் செக்கினை இழுக்க வைத்தார்கள். கம்பளி நூல் திரிக்க வைத்தார்கள். போதிய ஓய்வு கொடுக்கப்படவில்லை. சுகாதாரமான உணவும் கொடுக்கப்படவில்லை.

உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையிலும் அவரை வெயிலில் நிறுத்தி வேலை வாங்கினார்கள். ஒவ்வொரு முறை அவர்கள் கடுந்தண்டனை

கொடுத்தபோதும் அவரைத் தங்களது ஆணைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்குமாறு வற்புறுத்தி வந்தனர்.

அரசியல் கைதி எனும் நிலை மறுக்கப்பட்டு கடுந்தண்டனைக் குற்றவாளிபோல நடத்தப்பட்டார். இச்செயல்கள் வ.உ.சி.யின் உடல் மற்றும் மனநலத்தைக் கடுமையாகப் பாதித்தன. ஆயினும் அவர் அதைச் சகித்துக்கொண்டார். அதே சமயம் சட்டவிரோத உத்தரவுகளை அவர் எதிர்த்து நின்றார். சக சிறைவாசிகள் அவரிடம் ஜெயிலரின் அட்டகாசத்தைப் பற்றி முறையிட்டனர். ஆதிக்கத்தை எதிர்க்கின்ற குணத்தை இயல்பாகப் பெற்றிருந்த அவர் தனக்கு மட்டுமல்லாமல் சக கைதிகளின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்கத் துணிந்தார்.

கைதிகளின் எழுச்சி:

ஜெயிலரையும் சூப்பிரண்ட்டையும் மருத்துவரையும் கொன்று விடுவது எனக் கைதிகள் திட்டமிட்டனர். ஆனால் வ.உ.சி. அதைக் கைவிடச் சொன்னார்.

1908 ஆகஸ்ட் 2 ஆம் தேதி ஜெயிலர் மிட்சேல் கைதிகளால் கடுமை யாகத் தாக்கப்பட்டார். கலவரம் மூண்டது. போலீசார் கைதிகள்மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். அதில் குண்டடிபட்டு ஒரு கைதி பலியானார்.

இக்கலவரம் குறித்து வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணைக்குப் பின்னர் மூன்று கைதிகளுக்குக் கூடுதல் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இத்தீர்ப்பினை மேல்முறையீட்டிற்கு அனுப்ப தனது சொந்தச் செலவில் வ.உ.சிதம்பரனார் ரகசியமான முயற்சிகளை மேற்கொண்டார். அத்துடன் அந்த வழக்கில் தன்னையும் ஒரு சாட்சியாக இணைத்துக்கொண்டார். இந்த ரகசிய முயற்சிகளுக்காக எழுதப்பட்ட கடிதங்களை ரகசியமாகக் கொடுத்தனுப்பிக் கொண்டிருந்த ராமையாக் கவுண்டர் எனும் கன்விக்ட் வார்டர் ஒரு நாள் பிடிபட்டு தண்டனைக்கு ஆளானார். பின்னர் அவர் விடுதலையானபோது அவருக்கு சிறுதொகை கொடுத்து உதவினார் வ.உ.சி.

1908 நவம்பர் மாதம் கோயமுத்தூர் செஷன்ஸ் கோர்ட்டில் நடைபெற்ற மேல் முறையீட்டு குறுக்கு விசாரணையில் அரசாங்க வக்கீல் கேட்ட குதர்க்கமான கேள்விகளுக்குத் துணிச்சலுடன் பதிலடி கொடுத்தார். சிறையில் நடைபெறுகின்ற சட்டமீறல்களையும் கொடுமை களையும் விளக்கமாக எடுத்துரைத்தார். சிறை அதிகாரிகளின் அட்டூழியங்களை அம்பலப்படுத்தினார். மொத்தத்தில் சிறைக்கைதிகளின் உரிமைகளுக்காகத் தனது உரத்த குரலை பிரிட்டிஷ் நீதிமன்றத்திலேயே எழுப்பினார்.

இக்காலத்திலேயே சிறைவாசிகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்ப தென்பது குற்றமாகக் கருதப்படுகின்றது. அக்காலத்தில் இது மிகவும் குற்றச்செயலாகக் கருதப்பட்டு வந்த நிலை. ஆனாலும், பிரிட்டிஷ் இந்தியாவின் சிறைத்துறை வரலாற்றிலேயே நாடு கடத்தல் மற்றும் இரட்டை ஆயுள் தண்டனை பெற்றுக் கைதியாகச் சிறையில் இருந்த

பெரியவர் வ.உ.சி. தான் சிறைக்கைதிகளின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த முதல் இந்தியர் ஆவார்.

இதன்மூலம் சட்டப்பூர்வமான மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த முதல் இந்தியர் எனும் பெருமையினையும் வ.உ.சி.பெறுகிறார். இது அக்கால அரசியல் சூழலில் ஒரு புரட்சிகர சிந்தனையாகும்.

1942இல் நடைபெற்ற புகழ்பெற்ற வெள்ளையனே வெளியேறு இயக்கத்தினை முன்வைத்து அந்நாளை இந்திய மனித உரிமை நாளாக நினைவுகூர்ந்து வருகிறோம். ஆனால் அதற்கும் 34 ஆண்டுகளுக்கு முன்பாக, இன்றைக்குச் சரியாக 117 ஆண்டுகளுக்கு முன்பாக சிறை வாசிகளின் உரிமைகளுக்காகக் குரல் எழுப்பியதன் மூலமாக இந்தியா வில் முதல் மனித உரிமைக் குரலை எழுப்பியவர் வ.உ.சி. எனும் தமிழர்தான் என்பதை இனிமேலாவது நினைவுகூர்வோம்.

முடிவுரை:

கடுமையான செக்கிழுக்கும் பணி, கல்லுடைத்தல் போன்ற சித்ரவதைகளை அனுபவித்தபோதும், சக கைதிகளின் நலனுக்காகவும் அவர்களின் அடிப்படை உரிமைகளுக்காகவும் அவர் அதிகாரிகளை எதிர்த்து நின்றார். ஒரு வழக்கறிஞராகத் தனது சட்ட அறிவைச் சிறைவாசிகளின்நீதிக்காகப்பயன்படுத்தியஅவரதுசெயல்,பிற்காலத்தில் இந்திய சிறைச் சீர்திருத்தங்களுக்கு ஒரு பெரும் உந்துதலாக அமைந்தது. வ.உ.சி போன்ற மாமனிதர்கள் விதைத்த அந்த உரிமைக் குரலே, இன்று சிறைவாசிகள் மனிதநேயத்துடன் நடத்தப்பட வேண்டும் என்ற சட்டப் பாதுகாப்பிற்கு அடிப்படையாகத் திகழ்கிறது. அவரது தியாகம் வெறும் சுதந்திரத்திற்காக மட்டுமல்ல, மனித மாண்பைக் காப்பதற்காகவும் அமைந்தது என்பது போற்றுதலுக்குரியது.

ஆதாரங்கள்:

1. Tinnevelly Riots Conspiracy and Ashe Murder, PART - I & II, RECORDS OF FORT S.GEORGE, SELECT DOCUMENT SERIES, 1900 – 1947, Issued by COMMISSIONER OF AND HISTORICAL RESEARCH, TAMILNADU ARCHIVES, MADRAS, GTN 1982.
2. பாரதியின் கால வரிசைப்படுத்தப்பட்ட படைப்புகள், தொகுதி 3, சீனி.விசுவநாதன் (தொ. ஆ) 2002.
3. வ.உ.சிதம்பரம் பிள்ளை, என்.சம்பத், பெ.சு.மணி, பப்ளிகேஷன்ஸ் டிவிஷன், செய்தி ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய அரசு பாட்டியாலா, புது தில்லி. 1955
4. கேளாத கதை, குருசாமி மயில்வாகனன், நீந்தும் மீன்கள் வெளியீட்டகம், தொண்டி, இராமநாதபுரம் மாவட்டம். 2025.

8

செக்கிழுத்த செம்மலின் சிறைச்சாலைப் பதிவுகள்

வெ. மாரிச்செல்வி
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி.

முனைவர் அ. விஜயலட்சுமி,
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி.

ஆய்வுச்சுருக்கம்:

வ.உ.சிதம்பரனார் தனது செயல்களின் மூலம் ஆங்கிலேய அரசுக்கு அறைகூவல் விடுத்தவர். சுதேசி என்னும் இயக்கத்திற்கான மிகப் பெரும் முன்னெடுப்பான கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர். சிறைச்சாலைக்குச் சென்று செக்கிழுத்துத் துன்பப்பட்டு 'செக்கிழுத்த செம்மல்' என்ற பட்டத்தை ஏற்றவர். அவரது வாழ்வில் சிறைச்சாலை யில் நடந்த நிகழ்வுகளைப் பதிவு செய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

திறவுச் சொற்கள் : வ.உ.சி, சுதேசிக் கப்பல், சிறைச்சாலை,விடுதலைப் போராட்டம்

முன்னுரை :

வ.உ.சிதம்பரனார் தமிழக விடுதலைப் போராட்ட வீரர்களுள் முதன்மையாக எண்ணத்தக்கவர். விடுதலைப் போராட்ட காலத்தில் இவரது முன்னெடுப்புகள் பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தும் விதமாகவும் அமைந்தது. சிறையில் அவர் பட்ட இன்னல்களையும் அங்கு அவர் செய்த செயல்களையும் இலக்கிய முயற்சிகளையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

வ.உ.சி.யின் பிறப்பும் இளமையும் :

திண்ணைப் பள்ளிக்கூடத்தில் வீரப்பெருமாள் அண்ணாவியார் என்பாரிடம் தனது தொடக்கக் கல்வியினைப் பயின்றுள்ளார். சலால்கான் என்பவரிடம் சிலம்பம் பயின்றுள்ளார். ஆத்திசூடி, உலக நீதி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, நீதிவெண்பா, மூதுரை போன்ற நீதி நூல்களையும் எண்சுவடி, குழிப்பெருக்கம் ஆகிய கணக்கு நூல்களையும் மனமொன்றிக் கற்றுள்ளார்.

இரவு நேரங்களில் கிருஷ்ணன் என்பவரிடம் ஆங்கிலம் கற்றுக்கொண்டார். வ.உ.சி. தனது பதினான்காம் வயதில் தூத்துக்குடியில் உள்ள ரோமன் கத்தோலிக்க புனித சேவியர் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து பயின்றுள்ளார். பின்னர் கால்டுவெல் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து மெட்ரிகுலேஷன் தேர்வில் வெற்றி பெற்றுள்ளார்.

விடுதலைக் களத்தில் வ.உ.சி.:

வங்காளத்தில் வங்காளப் பிரிவினை நிகழ்ந்தது. அங்கு உருவான சுதேசி இயக்கம் வ.உ.சி அவர்களின் உள்ளத்தைக் கவர்ந்தது. இராமகிருஷ்ண பரமஹம்ஸர் திருக்கூட்டத்தைச் சேர்ந்த அபே தானந்தர், இராமகிருஷ்ணாந்தர் போன்ற பெரியோர்களுடனான தொடர்பு சிதம்பரனாரின் உள்ளத்தில் இருந்த சுதேசி எண்ணத்தை ஊக்குவித்தது. அதன் விளைவாக தூத்துக்குடியில் தருமசங்கம் என்ற நெசவுச் சாலையையும் சுதேசிப் பண்டசாலை ஒன்றையும் நிறுவினார். காங்கிரஸ் இயக்கத்திலும் ஆர்வம் கொண்டு உழைக்கத் தொடங்கினார். தனது சொற்பொழிவுகளின் மூலமாகச் சுதேசிப் பிரச்சாரமும் செய்தார்.

சுதேசிக் கப்பல் :

தூத்துக்குடி, தமிழ்நாட்டின் தென்கோடியில் உள்ள ஒரு துறை முகப்பட்டினம். எனவே பெரிய வியாபார மையமாகவும் விளங்கியது. தமிழகத்தின் விற்பனைப் பொருட்களை ஏற்றுமதி செய்தனுப்பும் வியாபாரிகள் தூத்துக்குடியில் மிகுதியாக இருந்தனர். ஆங்கிலேயக் கப்பல் கம்பெனிகள் இங்குள்ள வியாபாரிகளின் நலன்களைக் கருத்தில் கொள்ளாமல் செயல்பட்டனர். அவர்களின் அநியாயங்களையும், சுதேசி வியாபாரிகளின் குறைகளையும் கண்டவர் தூத்துக்குடி சுதேசிக் கப்பல் கம்பெனி ஒன்றைத் தொடங்குவதென்று முடிவு செய்தார். தென்னக வியாபாரிகள், செல்வந்தர்கள், தேச பக்தர்களின் ஆதரவு பெற்றார். சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தொடங்கினார். பங்கு ஒன்றுக்குப் பத்து ரூபாய் வீதம் பத்து இலட்ச ரூபாய் எனும் ஆரம்ப முதலீட்டுடன் சுதேசிக் கப்பல் கம்பெனி 1905 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. 1906 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் தேதி கம்பெனி பதிவு செய்யப்பட்டது. இதனால் ஏற்பட்ட விளைவுகள் வ.உ.சிதம்பரனாரின் சிறைவாசத் திற்கு ஆரம்பமாக அமைந்தது.

சிறைவாசம் :

வ.உ.சி.யின் சிறைவாசம் முதலில் கோயமுத்தூர் சென்ட்ரல் சிறையில் தொடங்கியது. இங்கு இரண்டரை ஆண்டுகாலமும், கண்ணனூர் சிறைக்கு மாற்றப்பட்டு அங்கு இரண்டு ஆண்டு காலமும் பலவித காரணங்களுக்காக வழங்கப்பெற்ற சிறைத் தண்டனைக் கைதியாக இருந்தார். சிறைச்சாலை காலத்தள்ளுபடியாக வ.உ.சி. க்கு ஒன்றரை ஆண்டு கழிக்கப்பட்டது. வ.உ.சி. தமது சிறை வாழ்க்கையைப் பற்றி சுயசரிதையில் எடுத்துரைத்துள்ளார். இவரது சிறை வாழ்க்கையினைக் கண்டு நொந்த பாரதியார்,

‘மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து
நூலோர்கள் செக்கடியில் நோவதும்
கிடப்பதுவும் காண்கிலையோ?’ – *பாரதியாரின் சுதந்திரப்பயிர்,*

என்ற பாடலின் அதனை எடுத்துரைத்துள்ளார். சிதம்பரனாரைச் சணல் உரிக்கும் இயந்திரத்தைச் சுற்றச் சொல்லியும் செக்கிழுக்கச் சொல்லியும்

தண்டனை விதித்தனர். கைத்தோல் உரிந்து இரத்தம் கசியும் அளவிற்குத் தண்டனைகளை அனுபவித்தார். விடுதலைப் போராட்டக் களத்தில் சிறையில் எண்ணெய் ஆட்டும் செக்கினை வ.உ.சி. இழுத்தது பேசு பொருளாக மாறியது. கைகளிலும், கால்களிலும் விலங்கிடப்பட்ட நிலையில் வ.உ.சி. செக்கிழுத்தார் என்ற செய்தியைப் பாரதியார், 'இந்தியா' இதழில் (28.11.1908) வெளியிட்டார். வ.உ.சி.யும் தமது சுயசரிதையில் செக்கிழுத்ததைக் குறிப்பிட்டுள்ளார்.

சிறையிலும் தொடர்ந்த போராட்டம் :

சிறையில் கைதிகள் மிகவும் கேவலமான முறையிலும் கொடூரமான முறையிலும் நடத்தப்பட்டனர். இதனை வ.உ.சி. நேரில் கண்டார். ஒரு முறை சிறை அதிகாரியின் அடக்கு முறைகளைத் தாங்க முடியாத நிலையில் கைதிகளில் சிலர் போராட்டத்தில் இறங்கினர். சிறை அதிகாரியினைத் தாக்கினர். இதன் விளைவாக 34 கைதிகள் மீது வழக்குத் தொடரப்பட்டது. இந்நிகழ்வினைக் குறித்து சிதம்பரனார் 'கைதிகளை மேற்படி ஜெயிலில் மிகவும் கொடூரமாகவும், மிருகங்களொப்ப அற்பத் தனமாக நடத்தப்படுகிறதென்றும், அவர்களுடைய சாப்பாடு மிகவும் மோசமாக உண்ணத்தகாதபடி கல்லும், மண்ணும் கலந்துள்ளதென்றும், அவர்களிடம் அதிகமான வேலை வாங்கப்படுகிறதென்றும், ஓய்வு கொடுப்பதிலும் மற்றும் ஸ்நானம் தூக்கம் முதலிய அவர்களுக்கு இளைப்பாற சௌகரியங்களைக்க் கவனிப்பதிலும் ஜெயிலதிகாரிகள் மிகவும் அசிரத்தையாயிருக்கிறார்கள் என்றும், இவற்றை முறையிட்டால் ஜெயிலர் காதில் போட்டுக் கொள்கிறதேயில்லையென்றும், இதனால் தான் மனம் வருந்தி கைதிகள் இவ்வாறு ஜெயிலரை அடித்திருக்கக்கூடும்' என்று தான் நினைக்க வேண்டியிருக்கிறதென்றும் வ.உ.சி. அவர்கள் மிக உறுதியாகச் சாட்சி கூறியுள்ளார்.

சிறையில் வ.உ.சி. படிப்பதற்காக கல்கத்தா 'அமிர்த பஜார்' பத்திரிகை, இந்து, சுதேசமித்திரன் பத்திரிகைகள் ஆகியனவற்றை சிறையதிகாரிகள் அறியா வண்ணம் மறைவாகக் கொண்டு வந்து கொடுத்த 'வார்டன்' ஒரு நாள் பிடிபட்டார். வழக்கு தொடரப்பட்டது. வார்டனுக்கு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. தம் பொருட்டு தண்டனை பெற்ற வார்டனுக்கு பணவுதவி அளித்து ஆறுதல் கூறினார். அந்தப் பணத்தைக் கொண்டு அந்த வார்டன் விடுதலை பெற்றதும் கடை வைத்துப் பிழைத்தார் என்று வ.உ.சி. தமது சுய சரிதையில் கூறியுள்ளார்.

சிறை வாழ்வில் பிறந்த இலக்கியங்கள் :

சிதம்பரனார் சிறையில் இருந்தபோது அவர் தொடங்கிய சுதேசிக் கப்பல் நிறுவனத்தை ஆங்கிலேயருக்கே விற்கும்படியான சூழல் உருவாகியிருந்தது. இது அவரது மனநிலையினை மேலும் அதிக பாதிப்புக்கு உள்ளாக்கியது. எனினும் இலக்கியங்கள் மீது அவர் கொண்டிருந்த ஆர்வம் காரணமாகத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டார் எனலாம். அவர் கோவை சிறைச்சாலையில் இருந்த போது

ஜேம்ஸ் ஆலன் எனும் ஆங்கிலேய அறிஞர் ‘As a Man Thinketh’ எனும் வாழ்வியல் நூலை தமிழில் ‘மனம் போல் வாழ்வு’ என்னும் தலைப்பில் மொழிபெயர்த்தார்.

கோயமுத்தூர் சிறையில் இருந்து, கண்ணனூர் சிறைக்கு டிசம்பர் 1, 1910-இல் மாற்றப்பட்டார். கோயமுத்தூர் சிறைவாசத்தின் போது அனுபவித்த கொடுமைகள் போல கண்ணனூர் சிறைவாசத்தில் நடக்க வில்லை. இங்கு சிறையதிகாரிகள் வ.உ.சி.யின் தகுதியை அறிந்து மரியாதையுடன் நடத்தினர் என்று சுயசரிதையில் அவர் குறிப் பிட்டுள்ளார். கோயமுத்தூர் சிறையில் இலக்கியப் பணி செய்தது போன்று, கண்ணனூர் சிறையிலும் இலக்கியப் பணியினைத் தொடர்ந்து வந்தார். முன்பு போல் மொழிபெயர்ப்பாக இல்லாமல், ‘மெய்யறிவு’, ‘மெய்யறம்’ போன்ற நூல்களைப் படைத்தார்.

முடிவுரை :

வ.உ.சிதம்பரனார் அவர்கள் வளமை மிக்க குடும்பத்தில் பிறந் திருந்தாலும் தனது தாய்நாட்டின் விடுதலைக்கெனப் போராடிப் பல இன்னல்களை அனுபவித்துள்ளார். தனது சொத்துகள் அனைத்தையும் விற்று சுதேசி நிறுவனம் தொடங்கியுள்ளார். சிறைவாசத்திலும் தனது விடாத இலக்கியப் பணிகளை மேற்கொண்டுள்ளார். இந்திய விடுதலைக்கு மட்டுமன்றி தாய்த் தமிழுக்கும் சிறந்த தொண்டாற்றிய தகைமையாளர் வ.உ.சிதம்பரனார் என்பதை இக்கட்டுரை வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

துணைநூற் பட்டியல்:

1. பாரதியாரின் தேசிய கீதங்கள், சுதந்திரப்பயிர்,பாரதியார் புத்தகாலயம், சென்னை -1938.
2. வ.உ.சியின் சுயசரிதை,சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி,1990.
3. இந்திய இலக்கியச் சிற்பிகள்,வ. உ. சிதம்பரம் பிள்ளை, ம. ரா. அரசு, சாகித்திய அகாடமி வெளியீடு, 2005.

9

வ.உ.சி.யின் வாழ்வும் பணியும்

முனைவர் ந. ஜெயவசந்தி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்,
கீதாஜீவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குறுக்குச்சாலை, தூத்துக்குடி.

ஆய்வுச் சுருக்கம்:

இந்திய விடுதலை வீர வரலாற்றில் தியாகத்தால் தொண்டால் தம்புகழ் நிறுவிய பெரியார் பலர். அவருள் தமிழினத்தின் புகழ் விளங்கக் கப்பலோட்டி, சிறை சென்று, செக்கிழுத்துத் தம் சாதனைகளால் தமிழர் நெஞ்சங்களில் நிலையாக வாழ்ந்து வரும் தியாகச் செம்மல் வ.உ.சி. அம்மாமனிதரின் தியாக வாழ்வும், செந்தமிழ் நலங்கணிந்த அவரது மொழித் தொண்டும் என்றும் வியக்கத்தக்கது. போற்றிப் பரவுதற்குரியது. தமிழ்நாட்டின் விடுதலை வீரர்களுள் தனக்கென ஒரு தனித்துவம் கொண்டவர். பன்முகத்தன்மை கொண்ட தலைவரைப் பற்றி இவ்வாய்வுக் கட்டுரையில் எடுத்தியம்பப்படுகிறது.

திறவுச்சொற்கள்: விருந்தோம்பல், முகமலர்ந்து, உளன், அறிவறிந்த, சொற்பொழிவு

தொழிலும் இல்லற வாழ்வும்:

உயர்நிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்ற வ.உ.சி. ஓட்டப்பிடாரத்தில் உள்ள தாலூகா அலுவலகத்தில் எழுத்தராகப் பொறுப்பேற்றார். பின்னர் திருச்சிராப்பள்ளியில் சட்டக்கல்வி பயின்று, அதில் 1895 ஆம் ஆண்டில் தேர்ச்சி பெற்றார். சட்டக் கல்லூரியிலும் சட்ட அறிஞர்களான திரு. கணபதி ஐயரிடமும், திரு. அரிகர ஐயரிடமும் பாடம் கேட்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

ஓட்டப்பிடாரத்தில் வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கிய அவர், பின்னர் தூத்துக்குடியில் வழக்கறிஞர் தொழிலை நடத்தி வந்தார். ‘பொருளையே பெரிதும் ஈட்ட வேண்டும்’ என்று எண்ணாமல் நன்னெறியில் அத்தொழிலை நடத்தி வந்தார். வீர வழக்கறிஞராகப் பணியாற்றி வந்ததோடு, காவலர் பொய் வழக்குப் போட்ட திரு.ஆறுமுகம் பிள்ளைக்காகவும், கீழ்குலத்தைச் சார்ந்த திரு. வேதநாயகத்திற்காகவும் வாதாடிப் புகழ் சேர்த்தார்.

தம் 23 வது வயதில் திருச்செந்தூர் சுப்பிரமணிய பிள்ளையின் மகள் வள்ளியம்மையாரை மணமுடித்தார். அன்னார் திருக்குறளை நன்கு ஓதி வந்தவர். அவரது பண்பு நலன்களை வ.உ.சி. தமது சுய சரிதையில்,

எண்ணிலா நண்பரை இடித்துக் கொண்டுயான்
உண்ணச் செல்லுவேன் உரையாது முன்னர்
அறுசுவை அடிசில் அன்பொடு படைப்பாள்,
சிறிதும் தாமதம் தெரிந்திலேன் என்றும்

பாடுவள் இன்புறப் பாதம் வருபவள்,
கூடுவள் கூடெனக் கூறிய பொழுதே
உடையோ நகையோ ஒன்றும் என்றும்
படை எனக் கேட்டிலள் பண்பெலாஞ் செய்தனன்' - (சுய சரிதை, ப.34)

என வியந்து பாராட்டியுள்ளார். இத்தகைய சிறப்புடைய வாழ்க்கைத் துணையாரை இழந்த வ.உ.சி. பின்னர், பெற்றோர் வற்புறுத்தலின் பேரில் மீனாட்சி அம்மையாரை இரண்டாம் மனைவியாகத் திருமணம் செய்து கொண்டார்.

நாட்டுப்பணி:

தூத்துக்குடியில் கைத்தொழில் சங்கம் 'தரும சங்கம்' என இரு சங்கங்களை நிறுவி அவற்றின் வழி மக்களிடையே நாட்டுப்பற்றை வளர்க்கத் தொடங்கினார். 1906 இல் தூத்துக்குடியில் 'சுதேசி நாவாய்ச் சங்கம்' ஏற்படுத்தினார். இதற்குப் பல இடுக்கண்கள் வந்தன. அவரே வடநாடு சென்று 'காலியா' என்ற கப்பல் வாங்கி வந்து, வெள்ளையரை எதிர்த்துக் கப்பல் ஓட்டினார். இவ்வாண்டிலேயே தூத்துக்குடி ஹார்வி மில் தொழிலாளர் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு வ.உ.சி. ஆதரவு தந்து அவர்களின் தேவைகள் நிறைவேறத் துணைபுரிந்தார். பின்பு சுப்பிரமணியசிவாவுடன் இணைந்து, விடுதலை வேட்கையைச் சொற்பொழிவுகள் மூலம் மக்கள் மத்தியில் மலரச் செய்தார். அவை மக்கள் மத்தியில் எழுச்சியை உருவாக்கின.

சிறை வாழ்க்கை:

வ.உ.சி. அனுபவித்த கொடுமைகள் ஏராளம். அவ்வேதனைகள் கல் மனத்தையும் கரையச் செய்யும். சிறையாடையாக அவருக்குக் கால் சட்டையும், கைச்சட்டையும், தலைக்கல்லாவும் கொடுத்தனர். உண்பதற்கு மண்சட்டியும் காய்ச்சிய கேழ்வரகுக் கூழையும் கொடுத்தனர். கோயம்புத்தூர் சிறையில் முதலில் அவருக்கு இயந்திரம் சுற்றும் வேலை கொடுத்தனர். பின்பு எண்ணெய் ஆட்டும் செக்கினில் மாட்டிற்குப் பதிலாக மனிதர் இழுக்கும் கொடிய வேலையில் இவரை அமர்த்தினர். இக்கொடிய மாபாதக நிலையைக் கண்டு பலரும் வருந்தினர். நெஞ்சு துடித்தனர், சிறையில் செக்கிழுத்துச் செந்நீர் சிந்திய அவரின் தியாக வாழ்வைக் கண்ட பாரதி,

'மேலோர்கள் வெஞ்சிறையில்
வீழ்ந்து கிடப்பதுவும்
நூலார்கள் செக்கடியில்
நோவதுவும் காண்கிலையோ, (பாரதியார் கவிதைகள் – 49)

என மனங்கொதித்துப் பாடினார்.

கண்ணனூர்ச் சிறையில் வ.உ.சி. அனுபவித்த துயரங்களை,

நடுக்கங் கொண்டு நண்ணிலேன் உறக்கம்
கம்பளம் போர்த்துக் கைதிகளாலே
கம்படி கொடுப்பனோ, கால்மதி கொடுப்பனோ

குத்திக் கொல்வனோ, கொடுந்துன் பிழைப்பனோ,
எத்தைச் செய்வனோ என்றுள்ளம் கலங்கினேன் *(சுயசரிதை ப. 148)*

என்று அவரே சுயசரிதையின்கண் சுட்டியுள்ளார்.

தமிழ்ப்பணி:

வ.உ.சி.யின் படைப்புகளாக நான்கு நூல்கள் வெளிவந்துள்ளன. அவையாவன,

1. சுயசரிதை 2. மெய்யறிவு 3. மெய்யறம் 4. பாடல் திரட்டு.

வ.உ.சி.யின் சுயசரிதை பரலி சு.நெல்லையப்பரின் வேண்டுகோளினை ஏற்று, அதன் முதல் பகுதியையும் தெ.ச.சொக்கலிங்கம் வேண்டிட அதன் இரண்டாம் பகுதியையும் எழுதியதாகக் குறிப்பிடுவர். அவரது சுயசரிதை சுய விளக்கப் புராணமாக அமையாமல் பொறுப் புணர்வுடன் அவரது வாழ்க்கை நிகழ்வுகளை, சிறையில் அனுபவித்த கொடுமைகளை அப்பட்டமாகவும், சுதந்திர வரலாறு நிகழ்வுகளைத் தெளிவுற விளக்குவதாகவும் அமைகிறது.

தாம் பட்ட இன்னல்களை வேதனைப்படாமல் நகைச்சுவையுடன் சுட்டுகிற நாகரிகம் அவருக்கே உரிய பண்பாக அமைகிறது.

திங்கட்கிழமை ஜெயிலர் என் கைத்தோல்
உரிந்ததைப் பார்த்தான் உடன் அவன் எண்ணெய்
ஆட்டும் செக்கினை மாட்டிற்குப் பதிலாகப்
பகலெல்லாம் வெளியில் நடந்து தள்ளிட
அனுப்பினேன். அவனுடை அன்புதான் என்னே *- (சுயசரிதை, ப.118)*

என்பதைக் கொள்ளலாம். நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் அரசு வழக்கறிஞருடன் நடந்த உரையாடலை,

‘பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் சிறை நமக்
கெப்படி யிருக்கிற தென்று வினவினன்
சில நாள் நீயவண் சென்றமாந் திருந்தால்
நலமெல்லாம் காண்பாய் தன்றோ’ என்றான்
கோர்ட்டில் இருந்தவர் குலுங்கச் சிரித்தனர். *(சுயசரிதை, ப.128)*

என்று மிகவும் நகைச்சுவை உணர்வுடன் குறிப்பிட்டுள்ளார்.

மொழிபெயர்ப்புப் பணி:

‘பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்’

என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க வாழ்ந்தார் வ.உ.சி. ஜேம்ஸ் ஆலனின் தத்துவச் சிந்தனைகள் வாழ்க்கையை மேம்படுத்தும் என்ற நல்ல நோக்கில் அவரது ஆங்கில நூலான ‘As a man Thinketh’ என்பதனை ‘மனம் போல வாழ்வு’ என்ற தலைப்பிலும், Out from the Heart என்ற தலைப்பிலும் ‘From Poverty to power’ என்றும் ஆங்கில நூலின் முதல் பாகமாகிய ‘The path of prosperity’ என்பதனை ‘வலிமைக்கு மார்க்கம்’ என்ற தலைப்பிலும்

இரண்டாம் பாகமாகிய 'The way of peace' 'சாந்திக்கு மார்க்கம்' என்ற தலைப்பிலும் நூல்களாக மொழி பெயர்த்துள்ளார். ஆங்கிலப் பழமொழிகளை இவர் தமிழ் மரபிற்கு ஏற்ப மொழி பெயர்த்தலையும் கண்டு மகிழலாம். எடுத்துக்காட்டாக,

'Ask and receive' என்பதனை, 'அழுதபிள்ளை பால் குடிக்கும்' (மனம் போல் வாழ்வு. ப.30) எனச் சிறப்புற மொழி பெயர்த்துள்ளார்.

உரைப்பணி:

தமிழ்மொழியின் பழைய இலக்கியங்களுக்கு எளிய உரையின் தேவையை நன்குணர்ந்த வ.உ. சி இன்னிலை, திருக்குறள் அறத்துப்பால் சிவஞான போதம் ஆகிய மூன்றனுக்கும் எளிய உரையை எழுதி வெளியிட்டுள்ளார். இந்நூல்கள் வ.உ.சி.யின் புலமைத்திறன், தருக்க நெறி, பன்னூற்புலமை போன்றவற்றைப் பறைசாற்றுகின்றன.

மேற்கொள் எடுத்தாளுதல்:

'விருந்தோம்பல்' அதிகாரத்தில், விருந்தினரை முகந்திரிந்து நோக்காது மகிழ்வுடன் ஏற்க வேண்டும் என்பதை விளக்க விவேகசிந்தாமணிப் பாடலை எடுத்தாண்டுள்ளார்.

'ஒப்புடன் முகமலர்ந்தே உபசரித் துண்மை பேசி
யுப்பிலாக் கையிட்டாலு முண்பதே யமிர்த மாகு
முப்பழ மொடுபாலன்ன முகங்கடுத் திடுவாராயின்
கப்பிய பசியினோடும் கடும்பசி யாகுந்தானே' *(விவேகசிந்தாமணி)*

சொற்பொருள் தருதல்: 'முதற் கடவுள்' என்ற சொல்லிற்கு ஒரு பெயரோ, ஓர் உருவோ பெறாது நிற்கும் மெய்ப்பொருள் என அறத்துப்பால் விருத்தியுரையிலும் (ப.101) தீதி என்பதற்கு நிலைபேறு என சிவஞான போத உரையிலும் (ப.8) விளக்கம் தந்துள்ளார்.

இலக்கணக் குறிப்பு சுட்டல்:

'நெருநல் உளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திங் வுலகு *- (குறள் எண் 336)*

என்ற குறளில் வரும் 'உளன்' என்ற சொல்லைக் குறிப்பு வினை எனவும் அது மூன்று காலத்திற்கும் வரும் எனவும் சுட்டியுள்ளார்.

உரை மறுத்தல்:

பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த

மக்கட்பே றல்ல பிற (குறள் எண் 61)

என்ற குறளில் வரும் 'அறிவறிந்த' என்ற தொடருக்குப் பரிமேலழகர் தரும் அறிவறிந்த என்றதனால், மக்கள் என்பது பெண் ஒழித்து நின்றது என்ற உரையை அவ்வுரை பொருந்தாது, கல்வியறிவு இருபாலருக்கும் பொதுவாகலான், எனச் சுட்டி மறுப்பர் (ப.137)

பதிப்புப் பணி:

தொல்காப்பிய எழுத்ததிகாரம், பொருளதிகாரம் ஆகியவற்றின் இளம்பூரணர் உரையையும், திருக்குறள் அறத்துப்பால் மணக்குடவர் உரையையும் இவரே பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இவரது தொல்காப்பியப் பதிப்பு வேறுபாடுகள் தருதல், பதவுரை தருதல், விளக்கமில்லா இடங்கட்கு விளக்கம் தருதல், உரை வேறுபாடுகள் சுட்டல் போன்ற பல சிறப்புக் கூறுகளைக் கொண்டு அமைவதாக அறிஞர்கள் குறிப்பிடுவர்.

எடுத்துக்காட்டாக,

அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐயெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும் - *(தொல். மொழிமரபு சூ.24)*

இதனை,

அகரத் திம்பர் யவகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்

எனப் பதிப்பித்துள்ளார். இப்பாட வேறுபாடு கவனிக்கதக்க வகையில் அமைந்துள்ளது.

முடிவுரை:

வ.உ.சி.யின் தியாக வாழ்க்கை அவரது நாட்டுப்பற்றையும் மொழிப் பற்றையும் விளக்கி, நம்மை வியப்படையச் செய்கின்றன. மேலும், அவரது வீர வாழ்க்கை, நமக்கு வாழ்க்கைப் பாடமாக அமைந்துள்ளது. பகைவனுக்கு அஞ்சா நெஞ்சமும், வறியவர்க்கு இரங்கும் அருள் உள்ளமும் தத்துவங்களில் உள்ளார்ந்த ஈடுபாடும் விட்டுக் கொடுக்காத இலட்சியப் பிடிப்புமே தலைமையின் இலக்கணம் என்பதை உலகிற்கு உணர்த்தி நிற்கின்றது.

துணை நூற்பட்டியல்

1. ஆ.சிவசுப்பிரமணியன் வ.உ.சி. வாழ்வும் பணியும், சுதர்சன் புக்ஸ், முதற்பதிப்பு – 2001 மக்கள் வெளியீடு, சென்னை – 600 002.
2. வ. உ. சிதம்பரனார் சுயசரிதை, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், வெளியீடு 1990 சென்னை – 600 006.
1. மா.ரா. அரசு (தொ. ஆ) வ.உ.சி. கட்டுரைகள், பாரி நிலையம், முதற்பதிப்பு 1989 சென்னை – 600 026.
2. வேங்கடசாமி. இரா திருநெல்வேலி எழுச்சியும் பாரதியும், காலச்சுவடு பதிப்பகம், முதற்பதிப்பு – 2008 சென்னை – 600 021.
3. மரகத மீனாட்சி ராஜா கப்பலோட்டிய இந்தியர் வ.உ.சிதம்பரம் பிள்ளை, பாரி நிலையம், முதற்பதிப்பு 2004 சென்னை – 600 018.

10

இந்திய விடுதலைப் போராட்டத்தில் வ.உ.சி.யின் பன்முகப் பங்களிப்பு

தா. தரண்யா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை.

ஆய்வுச் சுருக்கம்:

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் வ.உ.சிதம்பரனார் (1872–1936) ஆற்றிய புரட்சிகரமான பங்களிப்பினை விரிவாக ஆராய்கிறது. ம.பொ.சிவஞானம் அவர்களின் ‘இந்திய விடுதலைப் போரில் வ.உ.சி.’ என்ற நூலை முதன்மை ஆதாரமாகக் கொண்டு, வ.உ.சி.யின் பொருளாதாரச் சுதந்திர வேட்கை, சுதேசி கப்பல் நிறுவனத்தின் தோற்றம், தொழிலாளர் போராட்டங்கள் மற்றும் சிறைவாசம் ஆகியவற்றை வரலாற்றுத் தரவுகளுடன் இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

திறவுச்சொற்கள்: வ.உ.சிதம்பரனார், சுதேசி நாவாய்ச் சங்கம், செக்கிழுத்த செம்மல், கோரல் நூற்பாலைப் போராட்டம், இந்திய விடுதலைப் போராட்டம்.

முன்னுரை:

‘சுதேசிப் பேரியக்கம்’ இந்திய மண்ணில் வேரூன்றிய காலத்தில், தென்னகத்தில் அதன் முகமாகத் திகழ்ந்தவர் வ. உ. சிதம்பரம் பிள்ளை. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஏகபோக வணிக ஆதிக்கத்தை முறியடிக்க, வெறும் முழக்கங்களை மட்டும் நம்பாமல், ‘சுதேசி நாவாய்ச் சங்கம்’ தொடங்கிக் கடலில் கப்பல் விட்ட தீரம் இவருடையது. அரசியல் களத்தில் தீவிரவாதப் போக்கைக் கொண்டிருந்த திலகரின் சீடராகத் திகழ்ந்த இவர், தொழிலாளர் நலனுக்காக முதன்முதலில் குரல் கொடுத்த முன்னோடிகளில் ஒருவர். வழக்கறிஞர், நாவலாசிரியர், தொழிற்சங்கத் தலைவர் மற்றும் சிறந்த சொற்பொழிவாளர் எனப் பன்முகத் திறமை கொண்ட வ.உ.சி., நாட்டின் சுதந்திரத்திற்காகத் தன் செல்வத்தையும், உடல் நலத்தையும் தியாகம் செய்து சிறையில் செக்கிழுத்த ஒப்பற்ற தியாகி ஆவார். இவருடைய வாழ்வும் போராட்டமும் தமிழர்களின் வீரத்திற்கும், தற்சார்புப் பொருளாதாரச் சிந்தனைக்கும் மிகச்சிறந்த சான்றாகும்.

காலத்தின் கட்டாயம்:

19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவைத் தனது வணிகக் கூடமாக மாற்றியிருந்தது. தமிழகத்தில் மிதவாதிகள் சட்ட ரீதியான போராட்டங்களை முன்னெடுத்தபோது, ‘சுயராஜ்யம் எனது பிறப்புரிமை’ என்ற திலகரின் முழக்கம் வ.உ.சி.யிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. ம.பொ.சி.யின் கூற்றுப்படி, வ.உ.சி.

வெறும் பேச்சாளர் அல்ல; அவர் ஒரு செயல் வீரர். அவரது வருகை தமிழக அரசியலில் ஒரு புதிய உத்வேகத்தைப் பாய்ச்சியது.

சுதேசி நாவாய்ச் சங்கம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு விடுக்கப்பட்ட சவால்:

ஆங்கிலேயர்களின் வலிமை அவர்களின் கடற்படை மற்றும் கடல் வணிகத்தில் இருப்பதை வ.உ.சி. உணர்ந்தார். 1906, அக்டோபர் 16 அன்று அவர் நிறுவிய 'சுதேசி நாவாய்ச் சங்கம்' ஒரு வரலாற்றுப் புரட்சியாகும். 10 லட்சம் ரூபாய் திரட்டுவது அக்காலத்தில் எளிய காரியம் அல்ல. வ.உ.சி. இந்தியா முழுவதும் பயணம் செய்து பங்குகளை விற்றார். பாண்டித்துரைத் தேவர் போன்ற ஜமீன்தார்கள் முதல் சாமானிய மக்கள் வரை இதில் முதலீடு செய்தனர். 1907-இல் 'எஸ். எஸ். காலியா' மற்றும் 'லாவோ' ஆகிய இரு கப்பல்கள் தூத்துக்குடித் துறைமுகத்தில் நுழைந்தபோது, இந்தியர்களின் பெருமிதம் வானைத் தொட்டது. பிரிட்டிஷ் நிறுவனம் பயணக் கட்டணத்தைக் குறைத்து வ.உ.சி.யை வீழ்த்த முயன்றது. வ.உ.சி.யோ அதற்குப் போட்டியாகக் கட்டணத்தைக் குறைத்ததோடு, பயணிகளுக்கு இலவசக் குடைகளை வழங்கி மக்களிடையே தேசப்பற்றைத் தூண்டினார்.

கோரல் நூற்பாலைப் போராட்டம் (1908): தொழிலாளர் வர்க்கத்தின் எழுச்சி

வ.உ.சி.யின் போராட்டம் வெறும் மேல்தட்டு மக்களுக்கானது அல்ல என்பதற்கு கோரல் மில் வேலைநிறுத்தமே சாட்சி. தொழிலாளர்கள் தகுந்த இடைவெளியின்றி 12 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டனர். 1908 பிப்ரவரி 27 அன்று வேலைநிறுத்தம் தொடங்கியது. ம.பொ.சி குறிப்பிடுவது போல, வ.உ.சி மற்றும் சுப்பிரமணிய சிவாவின் அனல் பறக்கும் உரைகள் தொழிலாளர்களைப் போராட்டக் களத்தில் உறுதியாக நிற்க வைத்தன. ஒன்பது நாட்கள் நடந்த போராட்டத்தின் இறுதியில், நிர்வாகம் பணிந்து ஊதிய உயர்வு மற்றும் வேலைநேரக் குறைப்பை அறிவித்தது. இது இந்தியத் தொழிலாளர் இயக்கத்தின் முதல் மகத்தான வெற்றியாகக் கருதப்படுகிறது.

சிறைவாசம் மற்றும் செக்கிழுத்த செம்மல்:

வ.உ.சி.யின் வளர்ச்சியைத் தடுக்க விரும்பிய ஆங்கில அரசு, 1908 மார்ச் 12 அன்று அவரைக் கைது செய்தது. நீதிபதி பின்ஹே, வ.உ.சி.க்கு 40 ஆண்டுகள் நாடு கடத்தல் தண்டனை விதித்தார்.

இந்தியாவிலேயே ஒரு சுதந்திரப் போராட்ட வீரருக்கு வழங்கப்பட்ட மிகக் கொடூரமான தீர்ப்பு இதுவாகும். கோவை மத்திய சிறையில் அவர் கடும் சித்திரவதைக்கு உள்ளானார்.

வழக்கறிஞரான வ.உ.சி.யை மாடுகளைப் போல எண்ணெய் செக்கிழுக்கச் செய்தனர். அவர் உடல் மெலிந்து, கைகளில் ரத்தம் வழிந்த நிலையிலும், 'என் நாட்டின் விடுதலைக்காக இதைச் செய்கிறேன்' என்று மன உறுதியுடன் இருந்தார். ம.பொ.சி.யின் நூலில் இந்தப் பகுதி வாசகர்களைக் கண்ணீர் சிந்த வைக்கும் வகையில் விவரிக்கப்பட்டுள்ளது.

இலக்கியப் பணிகளும் மொழிப்பற்றும்:

சிறையில் இருந்தபோது அவரது அறிவாற்றல் மங்கிவிடவில்லை. தமிழ் இலக்கியத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பு ஈடு இணையற்றது. மணக்குடவர் உரையைத் தழுவி, அறத்துப்பாலுக்கு அவர் எழுதிய எளிய உரை திருக்குறளை மக்களிடம் கொண்டு சேர்த்தது. மறைந்து கிடந்த தொல்காப்பிய இளம்பூரணார் உரையைத் தேடி எடுத்துப் பதிப்பித்தார். ஜேம்ஸ் ஆலனின் தத்துவ நூல்களை 'மனம் போல் வாழ்வு' போன்ற தலைப்புகளில் மொழிபெயர்த்து, தமிழர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டினார்.

வ.உ.சி. மற்றும் பாரதியார்: இரு பெரும் துருவங்களின் நட்பு:

வ.உ.சி. மற்றும் பாரதியார் ஆகிய இருவருமே பால கங்காதர திலகரின் தீவிரப் பற்றாளர்கள். காங்கிரஸில் 'மிதவாதிகள்' மற்றும் 'தீவிரவாதிகள்' என இரு பிரிவுகள் உருவானபோது, இருவரும் திலகரின் தலைமையிலான தீவிரவாதப் பிரிவை (Extremists) ஆதரித்தனர். 1907-ல் நடந்த சூரத் காங்கிரஸ் மாநாட்டிற்கு வ.உ.சி.யுடன் பாரதியாரும் சென்றிருந்தார். வ.உ.சி. 'சுதேசி நாவாய்ச் சங்கம்' தொடங்கி ஆங்கிலேயருக்கு எதிராகக் கப்பல் விட்டபோது, அதற்குத் தனது 'இந்தியா' இதழ் மூலம் பெரும் ஆதரவைத் திரட்டினார் பாரதியார். 'வ.உ.சி.யின் கப்பல் ஓட்டுவது என்பது வெறும் வணிகமல்ல, அது அடிமைத்தனத்திற்கு எதிரான ஒரு பெரும் புரட்சி' என்று பாரதி மக்களிடம் கொண்டு சென்றார். வ.உ.சி.யைப் பாரதியார் தனது அரசியல் குருவாகவும், அதேசமயம் உற்ற நண்பராகவும் கருதினார். பாரதியார் எழுதிய பல தேசபக்திப் பாடல்களைத் தனது மேடைப் பேச்சுகளுக்கு முன்னால் வ.உ.சி. பாடச் சொல்வார். குறிப்பாக, 'வாழ்க நிருபதிக் கொள்கை' மற்றும் 'வந்தே மாதரம்' பாடல்கள் வ.உ.சி.க்கு மிகவும் பிடித்தமானவை. வ.உ.சி. சிறை சென்றபோது பாரதியார் மிகவும் மனவருத்தம் அடைந்தார். வ.உ.சி.யின் தியாகத்தைப் போற்றிப் பாரதியார் எழுதிய வரிகள் இன்றும் பிரபலம்:

'சிறைச்சாலை எதற்கடா? - செந்தமிழ் நாட்டைச் சேர்ந்ததுவோ?'

என்று தொடங்கும் பாடலில், வ.உ.சி.யின் துணிச்சலையும் நாட்டுப் பற்றையும் மிக அழகாகப் பாரதி விவரித்திருப்பார். வ.உ.சி. சிறையில் இருந்து வெளிவந்த பிறகு வறுமையில் வாடியபோது, பாண்டிச்சேரியில் இருந்த பாரதியார் அவருக்குத் துணையாக இருந்தார். இருவரும் அடிக்கடி சந்தித்து நாட்டின் எதிர்காலம் குறித்தும், தமிழ் இலக்கியம் குறித்தும் விவாதிப்பார்கள். 1921 இல் பாரதியார் மறைந்தபோது, வ.உ.சி. நிலைகுலைந்து போனார். தனது நண்பனின் இழப்பைத் தாங்க முடியாமல் கண்ணீர் மல்க இரங்கல் தெரிவித்தார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் இரு கண்களாகத் திகழ்ந்தவர்கள் வ.உ.சிதம்பரனாரும், மகாகவி பாரதியாரும் ஆவர். இவர்களது நட்பு வெறும் அரசியல் சார்ந்தது மட்டுமல்ல, அது கொள்கை மற்றும் இலக்கியம் சார்ந்த ஒரு பிணைப்பு.

கடிதப் போக்குவரத்து: ஒரு வரலாற்று ஆவணம்

வ.உ.சி. சிறையில் இருந்தபோதும், வெளியிலிருந்த பாரதியார் அவருக்குத் தொடர்ந்து கடிதங்கள் எழுதி உற்சாகப்படுத்தினார். ம.பொ.சி.யின் நூலில் இவர்களது கடிதத் தொடர்பு பற்றிக் குறிப்பிடும்போது, பாரதியார் வ.உ.சி.யைத் தனது 'அண்ணன்' என்றே கருதினார் என்று கூறுகிறார். 1912 இல் வ.உ.சி. சிறையிலிருந்து விடுதலையான போது, அவருக்குக் கடுமையான நிதி நெருக்கடி இருந்தது. அப்போது பாரதியார் வ.உ.சி.யைச் சந்தித்து ஆறுதல் கூறியதுடன், தனது கவிதைகள் மூலமும் அவருக்கு வலிமை சேர்த்தார்.

ம.பொ.சி.யின் பார்வையில் வ.உ.சி-யின் ஆளுமை:

ம.பொ.சிவஞானம் தனது நூலில் வ.உ.சி.யின் ஆளுமையை நான்கு முக்கியப் பண்புகளாகப் பிரிக்கிறார்:

துணிச்சல்: ஒரு வல்லரசு நாட்டுக்கு எதிராகச் சொந்தமாகக் கப்பல் விட்ட துணிவு.

சமூக நீதி: சாதி கடந்து தொழிலாளர்களை ஒருங்கிணைத்த விவேகம்.

தமிழ்ப் பற்று: சிறையில் மாடுகளைப் போலச் செக்கிழுத்த போதும், தொல்காப்பியத்தையும் திருக்குறளையும் போற்றிய மொழிப்பற்று.

வறுமையிலும் நேர்மை: இறுதி காலத்தில் மிகவும் வறிய நிலையில் இருந்தபோதும், ஆங்கிலேயர்களிடம் மன்னிப்புக் கேட்கவோ அல்லது தனது கொள்கையை விட்டுக்கொடுக்கவோ மறுத்த மாண்பு.

ம.பொ.சி.யின் 'இந்திய விடுதலைப் போரில் வ.உ.சி' நூலின் தாக்கம்:

இந்த நூல் வ.உ.சி.யின் வரலாற்றை வெறும் ஒரு நபரின் கதையாகச் சொல்லாமல், தமிழகத்தின் விடுதலை வரலாற்றைப் பதிவு செய்கிறது. ஒரு நாடு அடிமைத்தனத்திலிருந்து விடுபட வேண்டுமானால், அதன் சொந்த உற்பத்தி மற்றும் வணிகம் வலுவாக இருக்க வேண்டும் என்ற வ. உ. சி-யின் கருத்தை ம.பொ.சி இந்நூலில் அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார். தன் சொத்துகள், வழக்கறிஞர் உரிமம், உடல்நலம் என அனைத்தையும் நாட்டிற்காக இழந்த வ.உ.சி.யின் தியாகமே இன்றும் பல இளைஞர்களுக்கு வழிகாட்டியாக உள்ளது.

திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் (1908):

வ.உ.சிதம்பரனார் மற்றும் சுப்பிரமணிய சிவா ஆகியோரின் கைது நடவடிக்கையைத் தொடர்ந்து திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் வெடித்த மக்கள் புரட்சியே 'திருநெல்வேலி எழுச்சி' என அழைக்கப்படுகிறது. இது தென்னிந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதியது.

1908 ஆம் ஆண்டு மார்ச் மாதம், வங்காளத் தலைவர் விபின் சந்திர பால் சிறையிலிருந்து விடுதலையான நாளை 'சுயராஜ்ய தினமாகக்' கொண்டாட வ.உ.சி திட்டமிட்டார். இதற்குத் தடை விதித்த ஆங்கிலேய அரசு, வ.உ.சி மற்றும் அவரது தோழர்களை மார்ச் 12 அன்று கைது

செய்தது. தலைவர்களின் கைது செய்தியை அறிந்த மக்கள் ஆவேசமடைந்தனர். மார்ச் 13, 1908 அன்று திருநெல்வேலியில் கடைகள் அடைக்கப்பட்டன; பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் இயங்கவில்லை. ஆத்திரமடைந்த மக்கள் நகராட்சி அலுவலகம், தபால் நிலையம் மற்றும் காவல் நிலையங்களைத் தாக்கினர். சாதி, மத வேறுபாடின்றி மக்கள் வீதியில் திரண்டு 'வந்தே மாதரம்' என்று முழக்கமிட்டனர். இது வெறும் கலகம் அல்ல, இது ஒரு திட்டமிட்ட மக்கள் புரட்சி என்பதை ஆ. சிவசுப்பிரமணியன் தனது வரலாற்று ஆய்வுகளில் உறுதிப்படுத்துகிறார்.

துப்பாக்கிச் சூடு:

நிலைமையைக் கட்டுப்படுத்த மாவட்ட ஆட்சியர் விஞ்ச் துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்டார். இதில் நான்கு பேர் உயிரிழந்தனர். இச்சம்பவம் இந்தியாவையே அதிர வைத்தது. வ.உ.சி மீதான இரட்டை ஆயுள் தண்டனைக்கு இந்தத் திருநெல்வேலி எழுச்சியும் ஒரு முக்கிய காரணமாக அமைந்தது, ஏனெனில் மக்கள் கிளர்ச்சிக்கு வ.உ.சி.யின் உரைகளே காரணம் என அரசு வாதிட்டது.

முடிவுரை:

வ.உ.சிதம்பரனார் ஒரு பன்முக ஆளுமை. அவர் ஒரு வழக்கறிஞர், கப்பல் நிறுவனத் தலைவர், தொழிலாளர் தோழன் மற்றும் இலக்கியவாதி. 'திருநெல்வேலி எழுச்சி' மூலம் அவர் சாதாரண மக்களிடமும் சுதந்திர வேட்கையைத் தூண்டினார். வறுமையில் வாடினாலும், தன் கொள்கைக்காக இறுதி வரை உறுதியாக நின்ற அந்தப் பெருந்தகை, இந்திய வரலாற்றில் என்றும் 'கப்பலோட்டிய தமிழனாக' வாழ்வார். ம.பொ.சி.யின் வரிகளில் சொல்வதானால், 'வ.உ.சி. ஒரு தனிமனிதர் அல்ல; அவர் ஒரு சகாப்தத்தின் தொடக்கம்.'

துணைநூல் பட்டியல்:

1. இரா.இளங்குமரன், வ.உ.சி வாழ்வும் பணியும், மணிவாசகர் பதிப்பகம், 1998.
2. ஆ.சிவசுப்பிரமணியன், வ.உ.சியும் தொழிலாளர் இயக்கமும், பாரி நிலையம், 2012.
3: ம.பொ.சிவஞானம், கப்பலோட்டிய தமிழன், பூங்கொடி பதிப்பகம், 1970, பக். 240.
4. சிவஞானம். ம.பொ., இந்திய விடுதலைப் போரில் வ.உ.சி., பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1970.
5. இளங்குமரன். இரா., வ.உ.சிதம்பரனார் வாழ்க்கை வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1998.
6. வேங்கடாசலபதி. ஆ. இரா., வ.உ.சி.கடிதங்கள், காலச்சுவடு பதிப்பகம், சென்னை, 2012.
7. வேங்கடாசலபதி. ஆ. இரா., திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சியும் 1908, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில், 2022.

11

வ.உ.சி.யின் பன்முக ஆளுமை

அ. ஜெயபிரீத்தி
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்.

ம. செந்தில்குமார்,
பேராசிரியர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம்.

ஆய்வுச்சுருக்கம்:

சுதேசி கப்பல் நிறுவனம், சுதேசி நாவாய் சங்கம், தர்ம சங்க நெசவு சாலை, பண்டகசாலை ஆகிய தேசிய நிறுவனங்களை உருவாக்கியவர். சமூக சீர்திருத்தவாதியாக மூடநம்பிக்கைகள் மற்றும் பார்ப்பனியத்தை எதிர்த்தும் இட ஒதுக்கீட்டிற்காகவும் குரல் கொடுத்தவர். தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியத்தை மேன்மேலும் உயர்த்த வேண்டும் என்ற கருத்துடையவர். மக்கள் சுயராஜ்ஜியத்தை நாடுவது முக்கியம், விடுதலை இயக்கம் மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும், தமிழ்மொழி மூலம் மக்களை ஒருங்கிணைக்க வேண்டும் என்று முழங்கியவர். தேசிய விடுதலை, சமூக நீதி, மொழி, தமிழர்களின் பண்பாடு போன்ற அனைத்து துறைகளிலும் தன் பங்களிப்பை வழங்கியவர்.

முன்னுரை:

வ.உ.சி. தமிழ் இலக்கியத்திற்கும், பதிப்பு வரலாற்றிற்கும் பெரும் பணிகள் செய்தவர். அவரது படைப்புகள், பதிப்புகள், மொழிபெயர்ப்புகள் மற்றும் அவரைப் பற்றிய பல்வேறு நூல்கள் தமிழில் உள்ளன. வ.உ.சி. அவர்கள் கவிதைகள் மூலம் தன் கருத்துகளை வெளிப்படுத்தினார். தமிழ் இலக்கியத்தில் அவரது முக்கிய படைப்புகளாக, 1. மெய்யறம் 2. மெய்யறிவு 3. பாடல் திரட்டு 4. சுயசரிதை இவை அனைத்தும் சமூக மற்றும் அரசியல் சிந்தனைகளை வெளிப்படுத்துவதாக இருக்கின்றன. மெய்யறம், மெய்யறிவு வ.உ.சி, சிறையில் இருந்தபோது எழுதிய தத்துவ நூல்கள் ஆகும். தமிழின் பழம்பெரும் இலக்கியங்களை பதிப்பிட்டுப் பாதுகாத்தார். 1. திருக்குறள் (மணக்குடைவர் உரையுடன், 1917) 2. தொல்காப்பியம் (இளம்பூரணர் எழுத்ததிகாரம், பொருளதிகாரம் உரையுடன்,1928) 3. தொல்காப்பியம் (இளம்பூரணர் உரையின் மறுபதிப்பு, 1928) இவைகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன.

இலக்கியப் பங்களிப்பு:

திருக்குறள், சிவஞானபோதம், இன்னிலை போன்றவற்றுக்கான உரைகள் அவரது ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்துவதாக பாராட்டப் பட்டுள்ளன. மாலைமலர் கட்டுரை அவரை ‘மிகச் சிறந்த தமிழறிஞர்’

என புகழ்ந்து, பொருள் தருதல், இலக்கணக்குறிப்பு அவர் வழங்குதல் போன்றவற்றைச் சுட்டிக்காட்டுகிறது. வ.உ.சி. அவர்கள் ஜேம்ஸ் ஆலன் எழுதிய நூல்களைத் தமிழுக்கு மொழிபெயர்த்தார். மொழி பெயர்ப்பு நூல்களில், மனம் போல் வாழ்வு, அகமே புறம், மனிதர் களின் எண்ணங்களே வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றன என்ற நூல்கள் அவரது தமிழின் அருமை, மொழிபெயர்ப்புத் திறமைகளை வெளிப்படுத்துகின்றன. மேலும், வ.உ.சி. அவர்கள் தமிழின் சிறப்புகள் கருதி பிறமொழி எழுத்துகளைத் தவிர்த்து தமிழ் மொழியில் நூல்களை வெளியிட்டார். சிறைவாசத்திலும் அவர் மொழிபெயர்ப்பு மற்றும் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

தொழிற்சங்கப் பங்களிப்பு:

தூத்துக்குடி கோரல் மில் போராட்டத்தின் மூலம் தொழிலாளர்களுக்கு அரை மடங்கு ஊதிய உயர்வு, வார விடுமுறை, உணவு இடைவேளை, அவசர காலத்தில் ஊதியம் இன்றி விடுப்பு போன்ற உரிமைகளை வென்றெடுத்தார். இந்தப் போராட்டம் இந்தியாவின் முதல் தொழிலாளர் போராட்டமாகவும், தொழிற்சங்க இயக்கத்தின் அடித்தளமாகவும் கருதப்படுகிறது. கோரல் மில் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் ஒன்பது நாள்கள் நடந்தது. தொழிலாளர்களுக்கு பொதுமக்கள் ஆதரவும் வழங்கினர். வ.உ.சி. அவர்கள் தொழிற்சங்க அமைப்பு முயற்சிகளாக தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் யூனியன் சார்பில் தமிழகம் முழுவதும் தொழிற்சங்கங்களை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். தொழிலாளர்களின் நிலையை உணர்த்த, பொதுமக்கள் மத்தியில் தொழிலாளர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினார். வ.உ.சி தலைமையில் நடந்த போராட்டங்கள் தொழிலாளர்களின் கொடூர நடத்தைகள் குறைந்ததுடன் ஊதியமும் உயர்ந்தது. இந்தப் போராட்டம் இந்திய வரலாற்றில் முதல் தொழிற்சங்க போராட்டமாக இடம் பெற்றது. போராட்டத்தின் விளைவாக தொழிலாளர்களுக்கு உரிமைகள் பல கிடைத்தன. பொது மக்கள் மத்தியில் தொழிலாளர்கள் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வும் ஏற்பட்டது. போராட்டம் தூத்துக்குடி மட்டுமல்லாமல் திருநெல்வேலி, பாளையங்கோட்டை போன்ற பகுதிகளுக்கும் பரவியது. தொழிலாளர் இயக்கம் தமிழகத்தில் வலுவாக வளர்ந்தது.

‘செயல்களே விதியைத் தீர்மானிக்கின்றன,
செயல்களை செய்பவனே அவனது விதியை உருவாக்குகிறான்’

என வ.உ.சி. வலியுறுத்துகிறார் . இந்தப் போராட்டம் தொழிலாளர்கள் உரிமைகளுக்கான வரலாற்றுப் புரட்சியாகவும் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டமாகவும் கருதப்படுகிறது.

சுதந்திரப் போராட்டத்தின் பங்களிப்பு:

‘என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்’ என்று அவரது கவிதைப் பங்களிப்பானது சுதந்திரப் போராட்ட உணர்ச்சியைத் தூண்டும் ‘வ.உ.சி.

யும் சிவாவும் பேசியஇக்கூட்டத்துக்கு 3000 பேர் கூடி இருந்தனர்' என்று ஆங்கிலேய உளவுத்துறை அறிக்கையில் காணப்படுகிறது என்று சிவசுப்பிரமணியம் எழுதிய தொழிலாளர்களின் முதல் வேலைநிறுத்தம் என்னும் நூலில் காணப்படுகிறது.

'சிவா, பத்மநாப ஐயங்கார் ஆகிய இருவருக்கும் ஜாமீன் கொடுத் தால்தான் நான் வெளியே வருவேன்' என்று அவரது உறுதியை தேசிய உணர்வு நிறைந்த சுதேசமித்திரன் பத்திரிகை சிதம்பரம் பிள்ளையின் பெருங்குணத்தை பாராட்டியது.

சுத்தானந்த பாரதி, 'பேச்சுக்கு சிதம்பரம்' என அவரது சொற் பொழிவுத் திறனைப் புகழ்ந்தார். விடுதலை இயக்கத்தில் தமிழைப் பயன்படுத்தி மக்களை ஒருங்கிணைத்தவராக, 'வறுமையிலும் வியாதி யிலும் கொடியது அடிமைத்தனமே' என்னும் கருத்தால் தேசப்பற்றை ஊட்டியவர் என நூலாசிரியர்கள் கூறுகின்றனர். அவரது பங்களிப் பானது பொதுமக்களிடம் தேசிய உணர்வை ஏற்படுத்துதல், மேடைப் பேச்சு, வழக்கறிஞர் திறன்கள் மற்றும் சுதேசி இயக்கத்தில் தலைமை ஆகியவற்றில் வெளிப்படுகிறது.

'கப்பல் ஓட்டிய தமிழன்' என்று சிவசுப்பிரமணியன் தனது நூல் களிலும் உரைகளிலும் வ.உ.சி.யைப் புகழ்கிறார்.

வ.உ.சி.யின் சுயசரிதை:

வ.உ.சி. தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு செய்தவர். அவரது எழுத்துநடையானது, பேச்சுவழக்கை அடிப்படையாகக் கொண்டு பொதுமக்கள் புரிந்துகொள்ளும் வகையில் அமைந்திருக்கிறது. அவரது சிந்தனைகள், தனிமனித ஒழுக்கம், சமூக மாற்றம் போன்ற கருத்துகள் நூலில் தெளிவாக விளக்குகின்றன. இந்த நூல் தமிழ் சுயசரிதை இலக்கியத்தின் தரத்தை உயர்த்தியதாக கருதப்படுகிறது. இது மக்களின் வாழ்க்கை முறைகள், பொதுமக்களின் கருத்துகள், சமூக மாற்றங்கள் போன்றவற்றுக்கு ஒரு சான்றாகவும் விளங்குகிறது.

'சிந்தாமணி', 'சுதேசிமித்திரன்' இதழ்களில் வ.உ.சிதம்பரனாரின் பங்களிப்பு மற்றும் தேசியவாத கருத்துகள்:

வ.உ.சி. 'சிந்தாமணி' மற்றும் 'சுதேசிமித்திரன்' போன்ற இதழ் களில் முக்கிய பங்களிப்பினை செய்துள்ளார். அவர் தமிழ், இதழியல் துறையில் தேசிய உணர்வுகளை ஊக்குவிக்கும் வகையில் பல கட்டுரைகளை எழுதியிருக்கின்றார். வ.உ.சி. அவர்கள் 'சிந்தாமணி' இதழில் தேசிய உணர்வுகளையும், தேசியவாதக் கருத்துகளை, தமிழ் பண்பாடு, இலக்கியம், சமூகம், உளவியல் சார்ந்த கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். அவர் எழுதிய கட்டுரைகள் தமிழர்களின் தொல் பெருமையையும், சுதேசியம், விடுதலை இயக்கம் போன்ற தலைப்புகளை மையமாகக் கொண்டிருந்தன. தேசியவாதக் கருத்துகளாக வ.உ.சி. தமிழர்களின் சுதேசி உணர்வுகளை வலியுறுத்தியவர்.

‘சிறைவாசத்தையும் தன் நூல்களை படிக்கவும் மொழிபெயர்க்கவும் பயன்படுத்தியவர்’ என்று ரா. அ. பத்மநாபன் சுட்டிக்காட்டிகிறார். அவர் 1906-ல் ‘சுதேசாபிமானம்’ என்ற தலைப்பில் கட்டுரை எழுதி சாதி, மதம் போன்றவை தேசிய ஒற்றுமைக்குத் தடையாக இருப்பதை சுட்டிக்காட்டினார். அவர் பொருளாதாரம் சுதேசிய மற்றும் தமிழர்களின் பங்கை வலியுறுத்தியவர். அவரது எழுத்துகள் தமிழ்ச் சமூக உணர்வுகளை ஊக்குவித்தன. சுதேசிக் கப்பல் இயக்கம், விடுதலை இயக்கம் போன்றவற்றிலும் முக்கிய பங்காற்றியவராக திகழ்ந்தார்.

முடிவுரை:

வ.உ.சி. அவர்கள் தொழிலாளர்கள் நலன் குறித்து மிகவும் முன்னோக்குப் பார்வை கொண்டவராக திகழ்ந்தார். அவரது பார்வையில் தொழிலாளர்களின் உரிமைகள், நலன்கள் மற்றும் வாழ்க்கை மேம்பட வேண்டும் என்பதே அவரின் முக்கிய கருத்தாகும். தொழிலாளர்களுக்காக மேற்கொண்ட செயல்களும் தமிழகத்தில் தொழிலாளர் இயக்கத்திற்கு முக்கிய திருப்புமுனையாக அமைந்தன.

தமிழர்கள் தம் பண்பாட்டைப் பாதுகாத்து பொருளாதார விடுதலை பெற்றால் மட்டுமே உண்மையான தேசியவாதம் சாத்தியம் என்றும் சாதி, மதம் போன்ற பிரிவுகள் தேசிய ஒற்றுமைக்குத் தடையாக இருக்கும் என்றும் தமிழர் தன்மானம், பொருளாதார வளர்ச்சி, அரசியல் விடுதலை ஆகியவற்றை ஒருங்கே அடைய வேண்டும் என்பதே வ.உ.சிதம்பரனாரின் கருத்தாக அமைந்துள்ளது. வ.உ.சிதம்பரனார் தொழிற்சங்கத் தலைவராக தொழிலாளர்களின் உரிமைக்காக முன்னெடுத்த போராட்டங்கள் இந்திய தொழிலாளர் இயக்கத்தின் அடித்தளத்தை உருவாக்கியதுடன் பல உரிமைகளை வென்றெடுத்தது. வ.உ.சி. தமிழ் மக்களுடைய தேசியவாத உணர்வு களை வலுப்படுத்தியதோடு சமூக மாற்றங்களுக்கும் தூண்டுகோலாக இருந்தவர்.

துணைநூற் பட்டியல்:

1. சிவசுப்பிரமணியன். ஆ., வ.உ.சி.யும் தொழிலாளர்களின் முதல் வேலை நிறுத்தமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2012.
2. கண்ணன். எஸ்., வ.உ.சி ஒரு பன்முகப் பார்வை, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தஞ்சாவூர், 2005.
3. வானமாமலை, வ.உ.சி. முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி, ஆருத் புக்ஸ், 2002.

12

வ.உ.சிதம்பரனாரின் தலைமைப்பண்பு

முனைவர் ப. கணேஷ் வடிவேல்
உதவிப் பேராசிரியர் – தமிழ்த்துறை,
ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (த) திருவானைக்கோவில், திருச்சி.

ஆய்வுச் சுருக்கம்:

வ.உ.சி. தமிழ்ச் சமூகத்திற்குக் கிடைத்தற்கரிய பொக்கிஷமாகும். இவர் விடுதலைப் போராட்ட வீரர் மட்டுமின்றி மிகச்சிறந்த இலக்கண, இலக்கியங்களில் புலமை பெற்றவராகவும், மொழிபெயர்ப்பாளராக வும், சைவ சித்தாந்தத்தில் ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கி யுள்ளார். மேலும் தனது புரட்சிகரப் பேச்சால் மக்கள் மனதை ஆளுமை செய்வதோடு மட்டுமன்றி தலைமைப் பண்பு நிறைந்த மனிதனாக உருவெடுக்கச் செய்ததைப் பற்றி ஆராய்கிறது.

திறவுச் சொற்கள்: தலைமைத்துவம் – ஆளுமை – வள்ளியம்மை – சமூகம் – மனவலிமை - புரட்சி – வீரத்தில் தலைமை - நட்பு

முன்னுரை:

வ.உ.சி.சிறுவயது முதலே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியுள்ளார். அதன் விளைவாக சட்டம் பயின்று, வழக்கறிஞர் தொழிலுக்கான தேர்வில் வெற்றி பெற்று மிகச்சிறந்த கிரிமினல் வழக்கறிஞராக தூத்துக்குடியில் பணியாற்றி வந்துள்ளார். பிள்ளைவர்களுக்கு வழக்கறிஞர் தொழிலில் வரும் வருமானத்தைவிட, வாழும் நாட்டில் அந்நியர்களின் சுரண்டலால் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகும் மக்கள் துன்பமே பெரிதாகக் காணப்பட்டது. இதனால், சாமானியர்களின் ஜனநாயகவாதியாகவும், மக்களின் மனங்களை ஆளும் மாமனிதனாகவும் போற்றப்பட்டார். அம்மாமனிதன் தனது ஆளுமையால் எவ்வாறு தலைமைத்துவம் நிறைந்த வீரராகத் திகழ்ந்தார் என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

தலைமைத்துவத்திற்கான விளக்கம்:

தலைவனானவன் தனக்குரிய அதிகாரத்தையோ, பதவியையோ, மரபுரிமை அடிப்படையிலோ அல்லது சூழ்நிலையாலோ பெற்று விடுகிறார். அவ்வாறு பெறக்கூடிய அதிகாரம் கலந்த பதவிக்கு தலைமை என்று பெயர்.

'யார் ஒருவர் பிறருக்கு வழிகாட்டியாக இருந்து இயக்குவிக்கின் றாரோ, அவரே தலைவர் ஆவார்' என்று ஆலன் என்னும் அறிஞர் குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியத்தில் அகத்திணை மாந்தர்களின் தலைமைப் பண்பை ஏற்கக் கூடியவர்களாக ‘நற்றாய், செவிலித்தாய், தோழி, தலைவர் ஆகிய நால்வரையும் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர்களுக்குரிய அடிப்படைப் பண்புகளாக உயிர்ப்பும், நாணும், மடனும் பற்றியும் எடுத்துக்கூறியுள்ளார்’.(தொல்காப்பியம்- பொருளதிகாரம்-நூ-58)

திருவள்ளுவரும் திருக்குறளில் அரசனுக்குரிய தலைமைக் குணங்களை சுட்டும் பொழுது,

‘அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு’ *(குறள்-382)*

என்ற குறளில், அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை, ஊக்கமுடைமை, காலம் தாழ்த்தாத தன்மை, கல்வியுடைமை, துணிவுடைமை, குறை கூறுவோரின் சொற்களை செவி கேட்கும் நிலையை கடத்தல் போன்ற தலைவனுக்கான அடிப்படைக் குணங்களை நான்முகனார் குறிப்பிட்டுள்ளார்.

இல்லாளின் தலைமைத்துவம்:

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பது முதுமொழி. அம்முதுமொழிக்கு ஏற்ப நம்பிள்ளையவர்கள் தனது 23-ஆம் வயதில் வள்ளியம்மை என்ற பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். அப்பெண் வள்ளுவரின் குறளான,

‘மனைத்தக்க மாண்புஉடையவள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை’ *(திருக்குறள் -51)*

என்ற நிலையில் வாழ்ந்துள்ளார். தனது கணவரின் வரவு அறிந்து வாழ்க்கையைச் செம்மையாக நடத்தியுள்ளார். இதனை வ.உ.சி. குறிப்பிடும்பொழுது,

‘இல்லமதில் ஒன்றுமே யில்லை யென்னாள், எக்காலு
நல்லுணவு தான் சமைத்து நல்குவாள் – அல்லலொழி
இன்புறவே செய்திடுவாள், எப் பணியுமுள்ள
அன்புமிகு நல்லாள் அமைந்து’ *(கப்பலோட்டிய தமிழன் –ப-19)*

என்ற பாடலில் மனைவியின் செயல் தன்னுடைய மனதில் முதன்மையான இடத்தைப் பெற்றதாகக் குறிப்பிடுகிறார்.

இல்லறத்தில் பெறும் தலைமை:

பிள்ளையவர்களின் இல்லத்தரசி வள்ளியம்மை. தன் கணவனின் குறிப்பறிந்து நடக்கக்கூடிய குலவிளக்காகத் திகழ்ந்துள்ளார். இதனை,

‘என்னுடைய நேயர்களும் ஏழைப் பரதேசிகளும்
என்னுடைய வீடுவந்தால் ஏந்திழைதான் – தன்னுடைய
பெற்றோர் வந்தார்களெனப் பேணி உபசரிப்பாள்
கற்றோரும் உள்ளுவக்கக் கண்டு’ *(கப்பலோட்டிய தமிழன் –ப-19)*

என்ற பாடலில் என்னுடைய வீட்டிற்கு வரும் நண்பர்களையும், ஏழை களையும், தன்னுடைய பெற்றோர்கள் வந்தது போன்று உபசரிக்கக்கூடிய உள்ளம் படைத்தவராக வள்ளியம்மை இருந்துள்ளதை குறிப்பிடுகிறார். வேற்றுமை பாராட்டாத நற்பண்பே மற்றவர்களின் மனங்களில் முதன்மையான இடத்தைப் பிடிப்பதற்குக் காரணமாக அமைகின்றது.

சாதியைப் பொசுக்கும் சரித்திர நாயகி. வ.உ.சி. தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த கண்ணில்லாத ஞானியொருவரை தன் வீட்டில் வைத்து காப்பாற்றி வந்துள்ளார். அவருக்கு வள்ளியம்மை உணவு கொடுப்பதைப் பலர் இழிவாகப் பேசியதைத் தனது மனைவியிடம் கூறியுள்ளார். அதற்கு வள்ளியம்மை

'எல்லாம் உணா ் ந்த என்னுயிர் நாத!
எல்லாம் கடவுளா யிருக்கக் கண்டும்
உருவம் முதலிய ஒன்றிலும் பேதம்
மருவுதல் இலாமை மலைபோல் கண்டும்
கற்பனையாகக் காணும் குலத்தின்
பழமை பாராட்டிப் பகுத்துப் பிரித்தல்
நன்றோ சொல்லாய்! நவிலுவார் நவிலுக
என்றும் போற்பணி இயற்றுவோம் ' *(கப்பலோட்டிய தமிழன் –ப-18)*

என்றார். துறவிகளுக்கு குலம் ஏதும் உண்டோ?. உயிர்கள் அனைத்தும் ஒன்றாக இருக்கும் பொழுது அவற்றைப் பிரித்துப் பார்ப்பது அறியாமையாகும். நம் மனசாட்சி வழி நடப்போம் என்று கூறியுள்ளார். வள்ளியம்மை பிள்ளைக்கு மனத்தெளிவை உண்டாக்கி விவேகத்தோடும், மற்ற பெண்களுக்கு முன்னுதாரணமாகவும் வாழ்ந்துள்ளதை நம்மால் அறியமுடிகிறது.

மக்களின் மனதை ஆண்டவர்:

வ.உ.சி. சுதேசி என்ற வில்லை வளைத்து விடுதலையென்னும் அம்பை எய்த ஆரம்பித்தார். அது மக்களின் மனங்களைத் தைத்து உணர்வு நரம்புகளில் புரட்சிக்குருதியை பீறிட்டு எழச் செய்தது. இதனைக் கண்டு அச்சமடைந்த ஆங்கில அரசாங்கம் பொதுக்கூட்டத்தில் பிள்ளையவர்கள் பேசக்கூடாது என்று எச்சரிக்கை செய்தது. ஆனால் அந்த எச்சரிக்கையை அவர் கண்டுகொள்ளவில்லை.

'அஞ்சுவது யாதொன்றுமில்லை இனிஅஞ்ச வருவதுமில்லை' (கப்பலோட்டிய தமிழன் –ப-12) என்று நெஞ்சுறுதியுடன் தொடர்ந்து பேசி வந்தார்.

1908-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 13-ஆம் நாள் திருநெல்வேலியில் வ.உ.சி. கைது செய்யப்பட்டார் என்ற செய்தி காட்டுத்தீ போல் பரவியது. அதனைத் தொடர்ந்து தூத்துக்குடியில் வியாபாரிகள் கடைகளை அடைத்தனர். தெருவிலிருந்த விளக்குகளைக் கீழே சாய்த்தனர். முனிசிபல் மண்ணெண்ணெய்க் கிடங்கிற்குத் தீ வைக்கப்பட்டது. முனிசிபல் அலுவலகம் சூரையாடப்பட்டது. சர்ச் மிஷன் கல்லூரியிலுள்ள

பொருட்களை உடைத்து எறிந்தனர். காவல்நிலைய துப்பாக்கிகளைச் சேதப்படுத்தி, கட்டிடத்திற்குத் தீ வைத்தனர். இவையெல்லாம் பிள்ளை யவர்கள் தன்னுடைய தனித்துவப் பேச்சால் மக்கள் மனதில் தலைமை யானதொரு இடத்தைப் பிடித்ததால் நிகழ்ந்தது.

வ.உ.சி. அடைந்த அரசியல் தலைமைத்துவம்:

காங்கிரஸ் கட்சியின் தென்னாட்டுத் தலைவராக வ.உ.சி.யைத் திலகர் நியமித்தார். 'தென்னாடு முழுவதிலும் சிதம்பரம்பிள்ளை ஒருவர் தான் வீரர் என்பது திலகரின் கருத்தாக இருந்துள்ளது' என்று ராஜாஜி சென்னைப் பொதுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளார். (கப்பலோட்டிய தமிழன் –ப-32)

சூரத் காங்கிரஸ் கூட்டத்தில் மகான் அரவிந்தர், லாலா லஜபதிராய் போன்றோர் அமர்ந்திருந்தனர். அப்பொழுது அரவிந்தர் அங்கிருந்தவர்களைப் பார்த்து Where is my Pillai? என்று கேட்டுள்ளார். அனைவரும் திகைத்த பொழுது, 'அவர் தான் புகழ் பெற்ற தேசபக்தர் தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளை' என்று வாயாரப் புகழ்ந்துள்ளார். இதைக் கேட்ட அனைவரும் ஆச்சரியத்தில் உறைந்து போயினர்.

வ.உ.சி. நோயுற்று இருப்பதை அறிந்த காங்கிரஸ் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத் சிதம்பரனாரின் இல்லம் சென்று நலம் விசாரித்தார். அன்று மாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் 'சிதம்பரம்பிள்ளை வாழும் தூத்துக்குடிக்கு வரும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவர் சிறை சென்றதாகப் பத்திரிகைகளில் பார்த்துத் தேசாபிமான ஆர்வங் கொண்டவர்களில் யானும் ஒருவன்' என்று ராஜேந்திர பிரசாத் புகழ்ந்து பேசியுள்ளார். (கப்பலோட்டிய தமிழன் –ப-79) இவ்வாறு வடநாட்டிலுள்ள தலைவர்களின் மனங்களில் தலைமைப்பண்பு நிறைந்த மாமனிதராக வ.உ.சி. இருந்துள்ளதை வரலாறு நமக்கு எடுத்துரைக்கிறது.

வீரமே தலைமையின் வெளிச்சம்:

வீரம் என்பது உடலில் தோன்றுவது அல்ல. மனத்திலிருந்து உணர்வின் மூலம் வெளிப்படுவதாகும். இதனை பிள்ளைக்கு தண்டனை வழங்கிய நீதிபதி பின்ஹே கூறும்பொழுது,

'பிள்ளையின் பிரசங்கத்தையும், பாரதியாரின் பாட்டையும் கேட்டால், செத்த பிணம் உயிர்த்தெழும், அடிமைப்பட்ட தேசம், ஐந்து நிமிடங்களில் விடுதலை பெறும், புரட்சி ஓங்கி எழும்' (கப்பலோட்டிய தமிழன் –ப-69) என்று கூறியுள்ளார்.

மேலும் தூத்துக்குடி கலெக்டர் விஞ்சு வ.உ.சி. மீது குற்றம் சுமத்தும் பொழுது

'நாட்டில் எங்குஞ் சுதந்திர வாஞ்சையை
நாட்டினாய், கனல் மூட்டினாய் *(கப்பலோட்டிய தமிழன் –ப-36)*
ஓட்டம் நாங்கள் எடுக்க வென்றே கப்பல்
ஓட்டினாய் பொருள் ஈட்டினாய்'

என்று கூறியுள்ளார். அதற்கு வ.உ.சி. எவ்வித அச்சமும் இன்றி வீரத்தோடு பதில் கூறும்பொழுது,

'பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு
போகவோ நாங்கள் சாகவோ
அழுது கொண்டிருப்போமோ, ஆண் பிள்ளைகள் நாங்கள்
அல்லமோ உயிர் வெல்லமோ' *(கப்பலோட்டிய தமிழன் –ப-36)*

என்று ஆவேசத்துடன் கூறியதாக பாரதியார் தனது பாடலில் கூறியுள்ளார். இவற்றிலிருந்து வ.உ.சி.யின் வீரத்தின் உச்சத்தை உணர முடிகிறது.

துன்பத்திலும் துவளாத மன ஆளுமை:

1908-ஆம் ஆண்டு பிபின் சந்திரபாலர் சிறையிலிருந்து விடுதலை யாவதைக் கொண்டாடக் காங்கிரஸ் முடிவு செய்தது.

அதற்கு ஆங்கில அரசாங்கம் அனுமதி தர மறுத்து, பிள்ளையைக் கைது செய்து கோயம்புத்தூர் கண்ணனூர் சிறையில் அடைத்தது.

சிறையிலிருக்கும் பொழுது தனது மனைவிக்கு எழுதிய கடிதத்தில்

'என்மனமும் என்னுடம்பும் என்சுகமும் என்அறமும்
என்மனைவியும் என்மகவும் என்பொருளும் – என்மனமுங்
குன்றிடினும் யான்குன்றேன், கூற்றுவனே வந்தாலும்
வென்றிடுவேன் காலால் மிதித்து' *(கப்பலோட்டிய தமிழன் –ப-57)*

என்று துன்பத்திலும் தன்னுடைய மனவலிமையை இழக்காமல் உறுதி யுடன் இருப்பதை அவருடைய பாடல் வரிகள் நமக்கு மெய்ப்பிக்கின்றன.

நட்பின் செயலால் முதன்மைபெறும் வ. உ. சி:

வ.உ.சி. இந்திய பத்திரிகையின் அதிபரைச் சந்திக்கச் செல்லும் பொழுது அதனுடைய ஆசிரியரான பாரதியைச் சந்தித்து நட்புக் கொண்டார். அதிலிருந்து பாரதியை மாமா என்று அன்புடன் அழைத்து நட்போடும் உறவோடும் வாழ்ந்து வந்துள்ளார்.

'எழுமை எழுபிறப்பும் உள்ளுவா ் தங்கண்
விழுமம் துடைத்தவா ் நட்பு' *(குறள்- 107)*

என்ற குறளுக்கு இணங்க சுதேசிக் கப்பல் கம்பெனியின் வளர்ச்சிக்கு உதவிய தூத்துக்குடி ஆறுமுகம் பிள்ளையின் பெயரைத் தமது பிள்ளைகளில் ஒருவருக்கு வைத்துள்ளார். அரசாங்கக் குற்றத்திற்காக தனது வழக்கறிஞர் தொழில் செய்வதற்கான அனுமதியை மீண்டும் வாங்கித் தந்த நீதிபதி வாலஸ்துறையின் பெயரை மறவாது தனது மகனுக்கு வாலீஸ்வரன் என்று பெயர் சூட்டினார். தமக்கு அவ்வப்பொழுது பொருளுதவி செய்த வேதியப்பிள்ளையின் நன்றியை நினைத்து தனது மகளுக்கு வேதவல்லி என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

நிறைவுரை:

வ.உ.சி. தனக்காகவும், தன் குடும்பத்திற்காகவும் வாழவில்லை. தமிழ்நாட்டு மக்களுக்காகவும், இந்திய விடுதலைக்காகவும் சிறை சென்று செக்கிழுத்துள்ளார். சுதேசி கப்பல் கம்பெனியைத் தொடங்கியதற்கான காரணம் பொருளுக்கோ, புகழுக்கோ அல்ல. மாறாக இந்திய செல்வத்தைச் சுரண்டிக் கொண்டிருக்கும் கிழக்கிந்திய கம்பெனியை, வணிக ரீதியில் ஆட்டம் காணும் வகையில் தனது ஆளுமையால் அடிபணியச் செய்துள்ளார்.

பிள்ளையவர்கள் மிகுந்த இரக்கமும், பணிவும், அன்பும் கொண்டு விளங்கியதோடு மட்டுமின்றி மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளார். வ.உ.சி.யின் தியாகங்களையும், அர்ப்பணிப்புகளையும் ஆளுமையால் உண்டான தலைமைத்துவத்தை வருங்கால சந்ததியினர் அறியும் வண்ணம் பாடத்திட்டத்தில் கொண்டு வரவேண்டும். இதுவே தமிழ்ச்சமூகம் அவருக்கு செலுத்தும் நன்றிக்கடனாகும்.

துணை நூற்பட்டியல்:

1. அரசியல் பெருஞ்சொல் – வ. உ. சிதம்பரம்பிள்ளை – வ.உ.சி.நூலகம், சென்னை-14.
2. கப்பலோட்டிய தமிழன் – ம.பொ.சிவஞானம் – இன்ப நிலையம் - சென்னை
3. திருக்குறள் – மு.வரதராசனார்- கழக வெளியீடு- சென்னை -18.
4. தொல்காப்பியம் –இளம்பூரணர் உரை, - கழக வெளியீடு – சென்னை-1.

13

ஓட்டப்பிடார ஒளிர் மறவன் - தேவநேயப்பாவாணரின் சீரிய கொள்கைச் சிதம்பரப்பதிகம்

முனைவர் சி. ராமலெட்சுமி
உதவிப் பேராசிரியர், வெ. ப. சு. தமிழியல் ஆய்வு மையம்.
ம.தி.தா.இந்துக்கல்லூரி, திருநெல்வேலி.

ஆய்வுச்சுருக்கம்:

வ.உ.சி.யின் அரசியல் வாழ்வு, இல்லற வாழ்வு, பொது வாழ்வு மற்றும் தமிழ் இலக்கிய இலக்கணப் பதிப்புப் பணிகள், உரையாசிரியர் பணி, அவரது தியாக வாழ்வு ஆகிய அனைத்தையும் பத்துப்பாக்களால் தேவநேயப்பாவாணர் மிகச் சிறப்பாக எழுதியுள்ளார். அப்பதிகத்தில் சிதம்பரனாரின் பெருமைகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதைப் பற்றி கட்டுரை ஆய்வு செய்கிறது.

திறவுச்சொற்கள்: வ.உ.சிதம்பரம், தேவநேயப்பாவாணர், சீரிய கொள்கைச் சிதம்பரப் பதிகம், பதிகம் அமைப்பு, வ.உ.சி. பட்ட துன்பங்கள், இல்லறம், ஆலைத் தொழிலாளர், கூலி உயர்வு, கப்பல் வணிகம், இலக்கியப்பணி, உரை, பதிப்பு.

முன்னுரை:

இந்திய நாட்டை அடிமையாக்கி ஆண்டு வந்த வெள்ளையர்களை எதிர்த்து பல்வேறு தலைவர்கள் பல்வேறு முறைகளில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து போராடி வந்த போது, முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும் என்று வணிகத்தைத் தேர்ந்தெடுத்தார் வ.உ.சி. ஏனென்றால், வணிகம் செய்வதற்காகவும் பொருளீட்டுவதற்காகவும் இந்திய நாட்டை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் வெள்ளையர்களிடமிருந்து வணிக ஆதிக்கத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கம் அவரிடம் இருந்தது.

அவருடைய சுதேசி போராட்டமும் அதற்குப் பின்னால் திரண்ட மக்கள் கூட்டமும் அதனால் அவர் பட்ட துன்பங்களும் அவரது தியாகங்களும் அவரது அறிவும் ஆற்றலும் தமிழகத்தில் பல்வேறு அரசியல் தலைவர்களால் கவிஞர்களாலும் அறிஞர்களாலும் புகழப்பட்டு உள்ளது.

அவ்வாறு அவரது புகழை நெல்லை சீமையைச் சார்ந்த மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் பதிகமாகப் பாடிச் சிறப்பு செய்துள்ளார். அது சீரிய கொள்கைச் சிதம்பரப்பதிகம் என்ற தலைப்பில் பாடப்பட்டுள்ளது.

தேவநேயப் பாவாணர்:

தேவநேயப் பாவாணர் (பிப்ரவரி 7, 1902 - ஜனவரி 15, 1981) பன்மொழி அறிஞர். தமிழ் மொழியின் வேர்ச்சொற்கள் மற்றும் சொற்களின்

வளர்ச்சி மாற்றம் குறித்த ஆய்வுகளைச் சிறப்பாகச் செய்தவர். பல்வேறு இந்திய மொழிகளில் பயிற்சி கொண்டவர். தனித்தமிழ் இயக்கத்திற்குப் பங்காற்றியவர். ‘தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி (Etymological Dictionary) இவரால் உருவாக்கப்பட்டது. மொழிஞாயிறு என்னும் பட்டத்துடன் அறியப்படுகிறார். தமிழியம் என அறியப்படும் பண்பாட்டு இயக்கத்தின் முதல்வர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். (1989: இரா. இளங்குமரன்)

பதிகம் அமைப்பு:

பதிகம் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் என்னும் வகைகளுள் ஒன்று. பத்துப் பாடல்களின் தொகுப்பு. ஆழ்வார் பாடல்களில் பத்து (முதல் பத்து, இரண்டாம் பத்து....) என்றே குறிப்பிடப்படுகிறது. தேவாரத்தில் வரும் 10 பாடல்களின் தொகுப்புகள் பதிகம் என்றே அழைக்கப்படுகின்றன. பிற்காலத்தில் பதிகம் என்னும் பெயரில் பல நூல்கள் தோன்றின.

கோதிலோர் பொருளைக் குறித்த இரண்டைப்
பாவெடுத்துரைப்பது பதிகமாகும் - (முத்துவீரியம்- 1116)

என்று பதிகங்கள் பத்துப்பாக்களால் பாடப்படும் என முத்துவீரியம் என்ற இலக்கண நூல் கூறுகிறது. பெரும்பாலும் பதிகங்கள், அபிராமியம்மைப் பதிகம், திருநீற்றுப் பதிகம், அச்சோப் பதிகம், திருநீற்றுப் பதிகம், கோளறு பதிகம், முனாஜத்துப் பதிகம், கிறிஸ்து வருகைப் பதிகம் என தெய்வங்கள் பற்றிய பாடல்களாக இருக்கின்றன. எனவே தேவநேயப் பாவாணர் வ. உ. சிதம்பரனாரைப் புகழப் பதிகத்தைத் தேர்வு செய்கிறார். இதன் மூலம் வ.உ.சி. என்ற ஒப்பற்ற பெருந்தலைவரைத் தெய்வநிலைக்கு உயர்த்துகிறார்.

தேவநேய பாவாணர் அவர்கள் சீரிய கொள்கைச் சிதம்பரப் பதிகம் என்ற தலைப்பில் செந்தமிழ்ச்செல்வி இதழில் அவரது நூற்றாண்டு விழா நினைவாக பதிகம் (செந்தமிழ்ச்செல்வி: 1972) எழுதியுள்ளார்.

ஓட்டப்பிடார ஒளிர் மறவன்:

தமிழ் மொழி ஞாயிறு தேவநேய பாவாணர் வ.உ.சி. யினுடைய நாட்டுப்பற்றின் சிறப்பை முதலில் எடுத்துக்கூறி அவரை இந்த நாடு அவர் வாழும் போது கொண்டாடாமல் அவர் இறந்த பிறகு, நூற்றாண்டு கழித்து அவருக்குச் சிறப்புச் செய்வதை வேதனையோடு பதிவு செய்கிறார் நாட்டுப்பற்றால்,

நாட்டுப்பற்றால் முன்னே நாய்படா பாடுபட்ட
ஓட்டப் பிடார ஒளிர் மறவன் - மாட்டன்று
நன்றி பாராட்டாத நாடு ஒரு நூற்றாண்டு
சென்றபின் செய்யும் சிறப்பு’

என்ற வெண்பாவில் இந்தியத் திருநாட்டிற்காக வ.உ.சி. பட்ட துன்பங்களை ‘நாய்ப் படாத பாடு’ என்று திருநெல்வேலி மக்கள் பேச்சு வழக்கில் மிகக் கொடுமையான துன்பங்கள் என்பதைக் குறிக்கிறார்.

ஆனால் இந்திய நாடு அவரது தேசப்பற்றுக்கு நன்றி பாராட்டவில்லை என்பதை தன் பதிகத்தில் கடுமையான விமர்சனமாக முன்வைக்கிறார்

ஆலைத் தொழிலாளர் போராட்டமும் கப்பலோட்டிய திறமும்:

வ.உ.சிதம்பரனார் பிரிட்டிஷாருக்குச் சொந்தமான கோரல் ஆலையில் தொழிலாளர் போராட்டத்துக்குத் தலைமை வகித்து, தொழிலாளர்களின் கோரிக்கைகளை வென்றார். வ.உ.சி., 1906-ஆம் ஆண்டு அக்டோபர் 16-ஆம் நாள் 'சுதேசி நாவாய்ச் சங்கம்' என்ற கப்பல் நிறுவனத்தைப் பதிவு செய்தார். பிறகு, 'எஸ். எஸ் கார்னியோ' 'எஸ். எஸ். காவோ' என்ற இரு கப்பல்களை வாங்கி ஆங்கிலேயர்களுக்கு எதிராக இந்தியர்களின் எதிர்ப்பைக் காட்டினார். இவரின் செயலைக் கண்டு கோபமடைந்த ஆங்கில அரசு இவர் மீது தேச துரோக குற்றஞ்சுமத்தி இவரைச் சிறையில் அடைத்தது. வ.உ.சி. ஆலைத் தொழிலாளர்களின் கூலி உயர்வுக்காகப் போராடியதையும் ஆங்கிலேயர்களின் கப்பல்களுக்குப் போட்டியாக சுதேசி கப்பல் கம்பெனியைத் தொடங்கியதையும் தேவநேய பாவாணர் எடுத்துரைத்து அவரது கொள்கை உறுதியினைப் பாராட்டுகிறார்

'மானக் குடிமை சிதம்பரத்தின் கோள்'
'கொள்கை விடாத குடிமாண் சிதம்பரம்'

என்று சிதம்பரத்தின் கொள்கைப் பிடிப்பினைப் புகழ்கிறார்

இல்லறத்தில் நல்லறம் கண்ட தலைவன்:

வ.உ.சி. தான் கல்வி கற்றதோடு அல்லாமல் தன் மனைவிக்கும் கல்வி கற்பித்து அவரது அறிவையும் வளர்ப்பதற்கு உறுதுணையாக இருந்தார் என்பது வரலாறு. இதை பாவாணர் அவர்கள் பதிவு செய்கிறார்

தனக்குச் சமமாக தன் மனைவி வாழ்ந்து
மணக்கினிய மந்திரியை மானம் - கணக்காக
இல்லறம் ஆற்றினான் ஈகை சிதம்பரம்

என்று வ.உ.சி.யின் இல்லற வாழ்வைப் புகழ்கிறார் மேலும் வ.உ.சி. தமிழர் திருமுறையாம் திருக்குறளின் படி சாதி வேறுபாடுகளைக் களைந்து சிறந்த தலைவராக விளங்கினார் என்பதையும் பாவாணர் பதிவு செய்கிறார். பிறப்பினால் சிறப்பில்லை என்னும் குறளின் வழியில் அவர் நடந்தார் என்று கூறுகிறார்

சிறையில் பட்ட துன்பம்:

வ.உ.சி. சிறையில் பட்ட துன்பங்களா செக்கிழுத்தல் கல்லுடைத்தல் பற்றி பல கவிஞர்கள் நெஞ்சுருகப் பாடியுள்ளனர். அவ்வகையில் பாவாணர் அவர்களும்,

மாடு போல் செக்கிழுத்து மட்டி போல் கல்லுடைத்து
வேடு போல் கேடாய் உடை உடுத்து பாடுபட்டான்
கேழ்வரகு கூழ் உண்டு கீழ்விலங்கிற் '

என்று நெஞ்சுருகப் பாடுகிறார்

செய்நன்றிச் சிதம்பரம்:

வ.உ.சி. அவர்கள் சிறைத் தண்டனையால் இழந்து போன வக்கீல் பணியைத் திரும்பப் பெறுவதற்கு உதவி செய்தவர் வாலீஸ் எனும் ஆங்கிலேய நீதிபதி. தேசியம் சிதம்பரத்தின் கொள்கையாக இருந்தாலும் தனக்கு வழக்கறிஞர் தொழில் நடத்துவதற்கு உதவி செய்த வாலீஸ் என்ற வெள்ளையர் நினைவாக தன் மகனுக்கு வாலேஸ்வரன் என்று பெயரிட்டார் அவரது செய்நன்றியைப் பாவாணர் அவர்கள் குறிக்கிறார்.

உரையாசிரியர் வ.உ.சி.:

தொல்காப்பியப் பகுதித்தொல்லுரையும்
ஒண்குறளின் மல்காவுரையொன்றும்
மாண்டமிழ்க்கே - அல்காத இன்னிலைப்
புத்துரையும் ஏனைப் பதிப்புகளும் துன்னிய
வ.உ.சி. தொண்டு

என்று வ.உ.சி.யின் தமிழ்த்தொண்டினைப் பாடுகிறார். வ.உ.சி. அவர்கள் திருக்குறளுக்கும் இன்னிலைக்கும் சிவஞானபோதத்திற்கும் உரை எழுதியுள்ளார்.

தம் இறுதிக் காலத்தில், தொல்காப்பிய இளம்பூரணர் உரையையும், திருக்குறளுக்குத் தாம் எழுதிய உரையையும் அச்சிடும் பணிகளில் ஈடுபட்டார்.

1935-இல் திருக்குறள் அறத்துப்பால் மட்டும் வெளிவந்தது. அவரது முழு உரை 2008-இல் அச்சிடப்பட்டது. தொல்காப்பியம் இளம்பூரணம் முழுமையும் வ.உ.சி.யின் அயராத உழைப்பால் வெளிவந்தது.

முடிவுரை:

வ.உ.சிதம்பரனாரின் இந்திய விடுதலைப் போராட்ட உணர்வு, ஆங்கிலேய அரசால் அவர் அடைந்த துயரங்கள், சிறையடைப்பு, செக்கிழுப்பு, கல்லுடைப்பு போன்ற துன்பங்களிலும் மன உறுதி, வ.உ.சி.யின் கொள்கைப்பிடிப்பு, இல்லற வாழ்வில் நல்லறம் பேணும் பெருமை, பெண்களைச் சமமாக நடத்துதல், தமிழ் இலக்கியப்பணிகள் ஆகியவற்றைப் பத்துப் பாடல்களில் மிகக் காத்திரமாக தேவநேயப்பாவாணர் பதிவு செய்துள்ளார்.

துணைநூற்பட்டியல்

1. இளங்குமரன்,இரா., பாவாணர், பாவாணர் பதிப்பகம், பெங்களூர், 1989.
2. சுப்பையா,வ. செந்தமிழ் : கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் நூற்றாண்டு விழா மலர், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை,1972.
3. அரசு,மா.ரா., வ.உ.சிதம்பரனார், சாகித்ய அகாதெமி, புதுதில்லி, 2005.
4. முத்துவீர உபாத்தியாயர், முத்துவீரியம், சென்னை, 1889.

14

வ.உ.சி.யின் சுதேசிய உணர்வு

முனைவர் வ. ஹரிஹரன்
தமிழ்த்துறைத் தலைவர், (பணி நிறைவு)
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி, மேலநீலிதநல்லூர்.

ஆய்வுச் சுருக்கம்:

ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துப் பொருளாதாரத் தன்னிறைவையும் தேசிய ஒற்றுமையையும் வளர்ப்பதற்குத் 'தென்னாட்டுத் திலகர்' என்று அழைக்கப்பட்ட கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. சுதேசிய உணர்வுடன் கூடிய போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். நம் நாட்டு உற்பத்திப் பொருட்களை நாம் வாங்க வேண்டும் சுதேசி உணர்வு மக்கள் மனதில் வேரூன்ற வேண்டும் என்று தன் செயல் திட்டங்களை வகுத்துக் கொண்டார். தமிழ்த் தேசிய உணர்வு இந்திய தேசிய உணர்வாக மக்கள் மனதில் வேரூன்றுவதற்கு அவர் நிறுவிய 'சுதேசி நாவாய்ச் சங்கம்' உறுதுணையாக இருந்தது. ஆங்கிலேயரை எதிர்த்து வாணிபத்துறையில் அவர் செய்த புரட்சி இந்திய விடுதலைக்கு வித்திட்டது.

முன்னுரை:

சுதந்திரப் போராட்ட வீரர்களில் அதிக ஆண்டு காலம் சிறைத் தண்டனை பெற்றவர் தியாகி வ.உ.சி. ஒருவரே. பாலகங்காதரத் திலகர் வழியில் தமிழகம் மட்டுமல்லாமல் இந்திய தேச அளவில் ஆங்கிலேயனை எதிர்த்துக் கப்பல் ஓட்டிய தமிழனாக உலகெங்கும் அறியப்பட்டவர். அவர் கொண்ட கொள்கையில் தலையாய ஒன்று 'சுதேசிய இயக்கம்' அவருடைய போராட்ட உத்திகளில் இதுவும் ஒன்று. எத்தகைய அளவில் சுதேசிய உணர்வை மக்கள் மத்தியில் விதைத்தார்? அதன் விளைவுகள் என்ன? என்று எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச் சொற்கள்: சுதேசியம், சுயராஜ்ஜியம், சுதேசிக்குடி, சுதேசி கம்பெனி.

சுதேசிய உணர்வு:

வ.உ.சி. உருவாக்கிய 'சுதேசிய நாவாய்ச் சங்கம்' 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே பல்வேறு குறிக்கோள்களைக் கொண்டிருந்தது; அவரது தொலைநோக்குப் பார்வைக்கு இது ஒரு சான்றாகும்.

'சுதேசிய உணர்வு' என்பது தன்னாட்டுப் பொருட்கள், சேவைகள், கலாச்சாரம் ஆகியவற்றின் மீது பற்று வைத்து அந்நியப் பொருட்களைப் புறக்கணிப்பது; உள்நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கு ஆதரவளிப்பது என்பதாகும். இது ஒருவித தேசப்பற்று என்றும் சொல்லலாம். குறிப்பாக இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துப் பொருளாதாரத் தன்னிறைவையும் தேசிய ஒற்றுமையையும்

வளர்க்க உருவான ஒரு இயக்கம்தான் சுதேசி இயக்கம். இது சுயசார்பு, தன்னம்பிக்கை, தேசப்பற்று ஆகியவற்றை மக்களிடத்தில் அதிகரிக்க வலியுறுத்த உதவும் ஒரு கொள்கையாகும்

தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் தந்தையாக வ.உ.சி.யைக் குறிப்பிடுவர். அவர் தொடங்கிய ‘சுதேசி நாவாய்ச் சங்கம்’ தமிழ்நாட்டில் இருந்து இந்திய அளவில் ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டத்திற்கு ஒரு உபாயமாகத் திகழ்ந்தது

சுயராஜ்ஜியம்:

சுதேசியம், தேசியக் கல்வி, அந்நியப் பொருட்கள் புறக்கணிப்பு போன்ற தீர்மானங்கள் 1906 இல் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. மகாத்மா காந்தி நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் ஒன்றுதான் சுதேசி இயக்கம். இந்தியா விடுதலை பெற்ற பின்னர் உள்நாட்டு உற்பத்திகளுக்கு முன்னுரிமை அளித்து வெளிநாட்டு இறக்குமதிப் பண்டங்களைப் புறக்கணிக்க வேண்டும் என்ற கொள்கையை வலதுசாரி சங்கப் பரிவார் அமைப்பின் சார்பில் ‘சுதேசி விழிப்புணர்வு இயக்கம்’ வலியுறுத்தி வருகிறது[1]

> *‘இக்காலத்தில் அறுபதாயிரம் பேர் ஜெயிலுக்குப் போவதும் சரி*
> *அக்காலத்தில் ஒரு சிதம்பரம்பிள்ளை ஜெயிலுக்குப் போவதும் சரி*
> *தென்னாட்டுச் சரித்திரம்’ எழுதப்படுமானால் சுயராஜ்ஜியத்திற்கு*
> *விதை விதைத்தவர் வ.உ.சி. என்று எழுதப்படலாம்’* [2]

என்று தமிழ்த் தென்றல் திரு.வி.க. (21.11.1936) குறிப்பிடுவார். கடலா திக்கத்தில் வெள்ளையரின் ஏகாதிபத்தியத்தை முறியடிக்க கப்பல் ஓட்டியது போல தொழில் துறையில் வாணிபத்துறையில் நம்மவர் உயர நெசவுச் சாலையையும் சுதேசிப் பண்டகச் சாலையையும் நிறுவினார் வ.உ.சி.

சுதேசிப்பிள்ளை

என் பாட்டி சிதம்பரம் பிள்ளையை ‘வந்தே மாதரம் பிள்ளை’ அல்லது ‘சுதேசிப் பிள்ளை’ என்றுதான் குறிப்பிடுவாள். காரணம் எனது தந்தை யார் பெயரும் சிதம்பரம் பிள்ளைதான். மருமகன் பெயரை மாமியார் சொல்வது வழக்கம் அல்ல அது போல பெரியவர்கள் பெயரைச் சாதாரண மக்கள் சொல்வதும் வழக்கமல்ல. வ.உ.சி.யை மரியாதையின் காரணமாகவும் அன்பின் காரணமாகவும் ‘வந்தே மாதரம் பிள்ளை’ என்றும் ‘சுதேசிப் பிள்ளை’ என்றும் பொதுவாக அழைத்தார்கள்’[3] என்று மு.கி. வீரபாகு ‘நானறிந்த சிதம்பரனார்’ என்ற கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

வெள்ளையன் இந்த நாட்டை விட்டு விரட்டப்பட வேண்டுமானால் அவனுடைய ஆணிவேரான வியாபாரத் துறையை முதலில் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் வ.உ.சிதம்பரனார் சிறந்த திட்டத்தை வகுத்தார். 1905 இல் ஆரம்பிக்கப்பட்ட சுதேசிக் கப்பல் கம்பெனி இந்த

நோக்கத்தோடு தொடங்கப்பட்டதுதான். கப்பலோட்ட முயற்சித்த ஒரு தமிழன் கடல் நடுவே கப்பல் போல் மிதந்து கொண்டிருக்கும் ஒரு தீவில் சிறை வைக்கப்பட்டான் என்பது உண்மை.

சுதேசிக் கம்பெனி:

சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி லிமிடெட் என்ற நிறுவனத்தைப் பாண்டித்துரைத் தேவரைத் தலைவராகக் கொண்டு நிறுவினார். இது குறித்த விவரங்களை 'விவேகபானு' என்ற பத்திரிகையில் 1906 ஆம் ஆண்டு வ.உ.சி. 'சுதேசி ஸ்டீமர் விக்ஞாபனம்' என்ற தலைப்பில் கட்டுரையாக எழுதியுள்ளார். 1906 அக்டோபர் 24 அன்று சுதேசமித்திரன் நாளிதழில் 'திருநெல்வேலியில் உத்தம தேசாபிமானியாகிய சிதம்பரம் பிள்ளை தூத்துக்குடிக்கும் சிலோனுக்கும் சுதேசிக் கப்பல் போக்குவரத்து ஸ்தாபித்திருப்பது சுதேசியத்திற்கு அவர் செய்திருக்கும் பெரும் பணிவிடையாகும்'[4] என்று பாலகங்காதரத் திலகர் கூறிய செய்தி வெளிவந்துள்ளது.

சுதேசிக்குடி:

தூத்துக்குடி கடல் வழியாக வணிகம் செய்வதற்குப் பல்வேறு கப்பல் கம்பெனிகள் தொடங்கப்பட்டன. ஆனால், பிரிட்டிஷாரால் அவை யாவும் முறியடிக்கப்பட்டன என்றாலும் தூத்துக்குடி துறைமுகத்தை வளர்ச்சி அடையச் செய்யும் முயற்சியில் வணிகர்கள் எழுப்பிய குரல் அரசாங்கத்தின் காதுகளில் நெருப்பாக எதிரொலித்தது. எனவே, தூத்துக்குடி என்ற ஊர் 'சுதேசிக்குடி' என்று மாறியதாக'[5] குருசாமி மயில்வாகனன் 'கப்பலோட்டிய கதை' என்ற தன் நூலில் குறிப்பிட்டு உள்ளார்

சுதேசிப் பொருள்:

தூத்துக்குடியில் 'சுதேசிப் பண்டகசாலை' என்ற பெயரில் சுதேசிப் பொருள்களை வாங்கி விற்பனை செய்யும் நிறுவனத்தை அமைத்தார். ஏழைகள் நலன் கருதி ஒரு நூற்பாலையைக் கட்டத் தொடங்கினார். அது நிறைவு பெறவில்லை. 'சென்னை விவசாய சங்கம்' என்ற அமைப்பை நிறுவினார். இவை யாவற்றின் நோக்கம் சுதேசி இயக்கத்தை வலுவாக வளர்ப்பதே ஆகும். தொழிலாளர்கள், விவசாயிகள், நடுத்தர வர்க்கத்தினர் ஆகியோரிடையே நம்பிக்கையை வளர்த்து தேசிய இயக்கம் என்ற பிரதான நோக்கத்தோடு இந்திய அளவில் அனைவரையும் சங்கமிக்கச் செய்வதே ஆகும். சுதந்திரப் போராட்ட வரலாற்றை நோக்கும்போது அரசாங்கத்தின் எதிர்ப்பை மீறி கப்பல் நிறுவனத்தை நடத்த வேண்டி இருந்தது. இலாப நோக்கத்தோடு செயல்படும் சுதேசி நிறுவனத்தின் பங்குதாரர்கள் வ.உ.சி.யை அரசியல் வாழ்க்கையிலிருந்து விலகிக்கொள்ளும்படி வற்புறுத்தினார்கள். ஆனால் சுதேசி உணர்வைப் பயன்படுத்தி லாபம் சம்பாதிக்கக் கூடாது என்று

கருதிய வ.உ.சி. சுதேசியமும் சுயராஜ்ஜியத்திற்கு ஒரு பாதை தானே என்று முடிவெடுத்தார். அதன் வழி நடந்தார்.

சுப்பிரமணிய சிவா சன்னியாசி உடையிலிருந்து அரசியல் தலைவர் ஆனார். பிரிட்டிஷ் கம்பெனியில் தான் பார்த்து வந்த வேலையை உதறிவிட்டு தேச பக்தர்களைச் சந்தித்து விடுதலை வேட்கையை ஊட்டுவதில் தன் பங்களிப்பைச் செய்து வந்தார். இவரோடு வ.உ.சி. யும் இணைந்து சுதேசி இயக்கத்தை வளர்த்தெடுத்தார். நாட்டு மக்களின் மத்தியில் சுதேசிய உணர்வை ஏற்படுத்துவதற்காக மகாகவி பாரதியார் தன் கவிதைகள் வழியில் தன் பங்களிப்பைச் செய்தார்.

தூத்துக்குடியில் நடைபெற்ற கோரல் மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் வெற்றி பெறுவதற்கு வ.உ.சி.யின் பங்கு அதிகம். மில் தொழிலாளர்களை 'சுதேசி இயக்கம்' என்ற அரசியல் இயக்கத்துடன் இணையும்படிச் செய்து 'வந்தே மாதரம்' என்று முழக்கமிட வைத்துள்ளார்.

'பொருளாதாரக் கோரிக்கைகளை முன்வைத்துத் தொடங்கிய வேலை நிறுத்தம் அரசியல் வேலை நிறுத்தமாக மாற்றப்பட்டது. அன்றைய சூழலில் இது மிகவும் அவசியமான ஒன்றாகும்' [6] என்று 'வ.உ.சி. ஓர் அறிமுகம்' என்ற நூலில் ஆ. சிவசுப்பிரமணியன் குறிப்பிடுகிறார்.

இந்திய விடுதலை இயக்கத்தில் அரசியல் விடுதலையையும் பொருளாதார விடுதலையையும் பலர் வலியுறுத்தினர். இந்திய தேசியம் என்பது மதம், மொழி, பண்பாடு அனைத்தும் சார்ந்தது. வ.உ.சி. தமிழ்த் தேசியத்தில் காலூன்றிக் கொண்டு இந்திய தேசியத்தைப் பார்த்தார். தனது 35 ஆவது வயதில் வளமான வாழ்க்கையைத் துறந்து கடினமான சிறைச்சாலை வாழ்க்கையை மேற்கொண்ட வ.உ.சி. உள்ளம் தளர்ந்து பொது வாழ்க்கையில் இருந்து விலகிப் போய் விடவில்லை. அவர் விடுதலையான பிறகு 24 ஆண்டுகள் உயிர் வாழ்ந்துள்ளார். அந்தக் காலகட்டத்தில் பல்வேறு சமூக, அரசியல் பணிகளை மேற்கொண்டுள்ளார்.

முடிவுரை:

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. கொண்டிருந்த தலையாய கொள்கை சுதேசியம் என்பதாகும். சுதேசியக் கொள்கையை அவருடைய போராட்டக் களங்களில் விடுதலைப் போராட்டக் காலகட்டத்தில் எவ்வாறு பின்பற்றிச் செயல்பட்டார் என்பதை அறிய முடிகிறது. சுதேசிய உணர்வு, சுயராஜ்யம் காண்பதற்கு உறுதுணையாக இருந்தார் என்பதை அவருடைய சுதேசிக் கம்பெனியை நிறுவிய செயல்பாடுகள் மூலம் அறிந்து கொள்ளலாம். தூத்துக்குடி என்ற ஊர் இவருடைய ஒருங்கிணைந்த செயல்பாட்டால் 'சுதேசிக்குடி' என்று அழைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. மொத்தத்தில் சுதந்திரப் போராட்டக் காலங்களில் வ.உ.சிதம்பரனாரின் செயல்பாடுகளில் சுதேசிய உணர்வு மேலோங்கி இருந்ததை இக்கட்டுரை சுட்டிக்காட்ட முயன்றுள்ளது.

சான்றெண் விளக்கம்

1. விக்கிபீடியா. org/விக்கி
2. 'கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார்', நல்லாசிரியர் சு.குப்புசாமி, ப.81
3. மேலது ப.97
4. கப்பலோட்டிய கதை, குருசாமி மயில்வாகனன் ப.75
5. மேலது ப.66
6. வ.உ.சி. ஓர் அறிமுகம், ஆ. சிவசுப்பிரமணியன்,ப.9

துணை நின்ற நூல்கள்

1. குருசாமி மயில்வாகனன், ' கப்பலோட்டிய கதை', மீன்கள் நீந்தும் வெளியீட்டகம், சென்னை, ஆகஸ்ட் 2021.
2. குப்புசாமி சு., 'கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார்', குமரன் பதிப்பகம், தி.நகர், சென்னை., ஆகஸ்ட் 2017.
3. சிவசுப்பிரமணியன், ஆ., 'வ.உ.சி. ஓர் அறிமுகம்', மக்கள் வெளியீடு, சென்னை ஆகஸ்ட் 2001
4. வானமாமலை நா., 'வ.உ.சி. முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி', மக்கள் வெளியீடு, சென்னை., ஏப்ரல் 1999.

15

வணிகவியல் பார்வையில் வ.உ.சி. திருக்குறளை முன்வைத்து...

முனைவர் ர. ராஜசேகரன்
உதவிப் பேராசிரியர், வணிகவியல் துறை
நிப்ட்-டி பின்னலாடை வடிவமைப்புக் கல்லூரி திருப்பூர்.

ஆய்வுச் சுருக்கம்:

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முக்கியத் தலைவரும் முன்னோடித் தொழில்முனைவோருமான வ.உ.சி. அவர்களின் வணிகச் சிந்தனைகள் மற்றும் செயல்பாடுகளை நவீன வணிகவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் விரிவாக ஆராய்கிறது. குறிப்பாக, சுதேசி கப்பல் இயக்கம், தொழிலாளர் நலன், நெறிமுறை வணிகம், சமூகப் பொறுப்பு மற்றும் மேலாண்மைத் தோல்வி ஆகியவை திருக்குறளில் கூறப்பட்ட அறம் மற்றும் பொருள் சார்ந்த கருத்துகளுடன் ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இவ்வாய்வு, திருக்குறள் ஒரு இலக்கிய நூல் மட்டுமல்ல; வணிக மேலாண்மை மற்றும் பொருளாதார சிந்தனைகளுக்கான காலமற்ற வழிகாட்டி என்பதையும், வ.உ.சி. அதன் நடைமுறை வடிவம் என்பதையும் விளக்குகிறது.

திறவுச்சொற்கள்: வ.உ.சி., தொழில்முனைவோர், சுதேசி, திருக்குறள்.

முன்னுரை:

வணிகவியல் என்பது லாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்ட செயல்பாடு அல்ல. அது மனித வள மேலாண்மை, சமூகப் பொறுப்பு, நெறிமுறை, நீடித்த வளர்ச்சி மற்றும் பொருளாதார சமநிலை போன்ற பல பரிமாணங்களை உள்ளடக்கிய ஒரு சமூக அறிவியல் ஆகும். இன்றைய நவீன வணிகவியல் கோட்பாடுகள் மேற்கத்திய சிந்தனைகளில் இருந்து உருவானவை என்றாலும், இந்திய மரபில் அதற்கான அடிப்படை கருத்துகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வலியுறுத்தப்பட்டுள்ளன.

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் பொருளாதாரம், ஆட்சி, வணிகம் மற்றும் மேலாண்மை குறித்த ஆழமான கருத்துகளை முன்வைக்கிறது (Valluvar, Trans. 2000).

இந்தக் கருத்துகளை வாழ்க்கையில் நடைமுறையாக செயல்படுத்தியவர்களில் வ.உ.சி. குறிப்பிடத்தக்கவர்.

1. வ.உ.சி. அவர்களின் வணிகச் சிந்தனைகளை வரலாற்று மற்றும் வணிகவியல் பார்வையில் ஆய்வு செய்தல்
2. வ.உ.சி. செயல்பாடுகளை நவீன வணிக மேலாண்மை கோட்பாடுகளுடன் ஒப்பிடுதல்.

3. திருக்குறளில் உள்ள பொருளாதார, நெறிமுறை மற்றும் மேலாண்மை கருத்துகளை அடையாளம் காணுதல்.

4. இன்றைய வணிக உலகிற்கு வ.உ.சி. வழங்கும் மேலாண்மை பாடங்களை விளக்குதல்

வ.உ.சி. முன்னோடித் தொழில்முனைவோர்:

1906 ஆம் ஆண்டு வ.உ.சி. தொடங்கிய சுதேசி கப்பல் இயக்கம் இந்திய வணிக வரலாற்றில் ஒரு புரட்சிகர முயற்சியாகும். அக்காலத்தில் கடல் வர்த்தகம் முழுவதும் பிரிட்டிஷ் கப்பல் நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. குறைந்த கட்டணத்தில் பயணம் செய்யும் சேவையை வழங்கி, வெளிநாட்டு ஏகபோகத்திற்கு எதிராக அவர் போட்டியிட்டார் *(Sivagnanam,2012*).

இது:

- தொழில்முனைவோர் அபாயத்தை எடுத்துக்கொள்வது
- உள்நாட்டு மூலதன உருவாக்கம்
- மூலோபாயப் போட்டி

என்ற வணிகவியல் கருத்துகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

திருக்குறள்: 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை'
(Valluvar, Trans. 2000, Kural 247)

பொருளாதார சுயநிலையே சமூக மற்றும் அரசியல் விடுதலையின் அடிப்படை என்பதை வ.உ.சி. உணர்ந்திருந்தார்.

தொழிலாளர் நலன் – மனிதவள மேலாண்மை:

வ.உ.சி. தூத்துக்குடி துறைமுகத் தொழிலாளர்களின் உரிமைகளுக் காகப் போராடினார். குறைந்த ஊதியம், நீண்ட வேலை நேரம் மற்றும் மனித மரியாதை இல்லாத சூழல் ஆகியவற்றுக்கு எதிராக அவர் குரல் கொடுத்தார். இது இன்றைய நியாயமான ஊதியக் கொள்கை, பணியாளர் நலன், தொழில்துறை உறவுகள் என்ற *Human Resource Management* கோட் பாடுகளின் முன்னோடி வடிவமாகும் *(Subramanian, 2015)*.

திருக்குறள்: 'உழைப்பார் உழைப்பினால் உலகம் இயங்கும்'
(Valluvar, Trans. 2000)

நெறிமுறை வணிகமும் சமூகப் பொறுப்பும்:

வ.உ.சி. அவர்களின் வணிக நோக்கம் தனிப்பட்ட லாபத்தைவிட தேசநலனை முன்னிலைப்படுத்தியது. இது இன்றைய *Corporate Social Responsibility (CSR*) கொள்கையின் அடிப்படை தத்துவமாகும் *(Carroll, 1999*).

திருக்குறள்: 'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை'
(Valluvar, Trans. 2000, Kural 45)

அறம் சார்ந்த வணிகமே நீடித்த வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதை வ.உ.சி. நிரூபித்தார்.

தோல்வி – மேலாண்மைப் பாடம்:

சுதேசி கப்பல் நிறுவனம் பொருளாதார ரீதியில் தோல்வியடைந் தாலும், அது;தேசிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது, சுதேசி இயக்கத்திற்கு வலுசேர்த்தது, எதிர்கால தொழில்முனைவோருக்கு ஊக்கமளித்தது

திருக்குறள்: 'இடுக்கண் வருங்கால் நகுக' (*Valluvar, Trans. 2000, Kural 621*)

தோல்வியை எதிர்கொள்ளும் மன உறுதியே உண்மையான தலைமைத்துவம் என்பதை வ.உ.சி. வாழ்க்கை எடுத்துக்காட்டுகிறது.

இன்றைய வணிகவியலுக்கு வ.உ.சி.

இன்றைய வணிக சூழலில் வ.உ.சி. வழங்கும் பாடங்கள்: நெறி முறைகள் சார்ந்த தலைமைத்துவம், தொழிலாளர் மையப்படுத்தப் பட்ட மேலாண்மை, தேசத்தை முதன்மைப்படுத்தும் வணிக அணுகு முறை, நிலையான தொழில்முனைவு ஆகும்.

முடிவுரை:

வ.உ.சி. அவர்கள் ஒரு சுதந்திரப் போராட்ட வீரர் மட்டுமல்ல; இந்திய நெறிமுறை வணிகவியலின் முன்னோடி. திருக்குறளில் கூறப்பட்ட அறம் மற்றும் பொருள் சார்ந்த கருத்துகள் அவரது வாழ்க்கையில் நடைமுறையாக வெளிப்பட்டுள்ளன.

திருக்குறள் ஒரு காலமற்ற வணிக மேலாண்மை வழிகாட்டி என்பதையும், வ.உ.சி. அதன் சிறந்த செயல்பாட்டு மாதிரி என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

துணைநூற்பட்டியல்

1. கரோல், ஏ. பி. (1999). நிறுவன சமூகப் பொறுப்பு: ஒரு வரையறை கட்டமைப்பின் பரிணாமம். வணிகம் & சமூகம், 38(3), 268–295.
2. சிவஞானம், எம். (2012). வி.ஓ.சிதம்பரம் பிள்ளை: ஒரு வாழ்க்கை வரலாறு. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
3. சுப்பிரமணியன், என். (2015). இந்திய வணிக நெறிமுறைகள் மற்றும் மதிப்புகள். புது தில்லி: ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகம்.
4. வள்ளுவர். (2000). திருக்குறள் (ஜி.யு.போப், திரு.). புது தில்லி: ஆசிய கல்வி சேவைகள். (கிமு 1 ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட அசல் படைப்பு)

வ.உ.சி. தன் இரண்டாம் மனைவி மீனாட்சி அம்மையாருடன்

பகுதி இரண்டு: இலக்கிய ஆக்கம்

16

வ.உ.சி.யின் மெய்யறம் – தத்துவங்களின் பிணைப்புச் சரடு

இரா. கு. திவ்யா
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த் துறை, இராணி மேரி கல்லூரி (தன்னாட்சி), சென்னை.

ஆய்வுச் சுருக்கம்:

வாழ்வியலின் உயரிய விழுமியமான ‘அறம்’ மற்றும் பிரபஞ்ச உண்மைகளைத் தேடும் ‘மெய்மை’ ஆகிய இரண்டிற்கும் இடையிலான ஆழமான தொடர்பை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பல்வேறு தத்துவப் பிரிவுகள் எவ்வாறு ஒரு புள்ளியில் இணைந்து மனித வாழ்விற்கு வழிகாட்டுகின்றன என்பதை இது விளக்குகிறது.

திறவுச்சொற்கள்: தத்துவம், ஆன்மீகம், முற்போக்குச் சிந்தனை.

முன்னுரை

மனித வாழ்விற்கு இருளிலும் ஒளியிலும் வழியமைக்கும் மெய் யுணர்வின் மௌனத் தீபமே மெய்யறம். வ.உ.சி.யின் சிந்தையில் பிறந்த ஒவ்வொரு சொல்லும் போராட்டத்தின் புண்ணையும், தன்னிலை உணர்ந்த மனத்தின் அசைவற்ற அமைதியையும் தாங்கி நிற்கிறது. தனிமனிதனில் தொடங்கி, சமூகத்தின் பரந்த அமைப்பிற்குப் போகும் வழியில், இந்நூல் ‘மனிதன் எப்படி இருக்க வேண்டும்?’ என்ற நித்தியக் கேள்விக்கு உள்நெறியின் பதிலைத் தருகிறது.

தத்துவம்

புரட்சிப் போராளியாக வ.உ.சி.யின் புற வாழ்க்கை அமைத் திருந்தாலும் அவரது அகவாழ்வானது மெய்யியலையே மையநீரோட்ட மாகக் கொண்டிருந்தது. எல்லாவற்றினும் தலையாய கடமையாக தன்னலம் பேணலைக் குறிக்கின்றார் வ.உ.சி. தன்னைப் பாதுகாத்து நல்லறத்தில் சென்று வாழ்பவரே வாழ்வில் ஏற்றம் எய்துவர்; அன்றி, கீழ்மையே அடைவார் என்கின்றார்.

‘தன்னைப்பேணார் தாழ்வே அடைவர்’ *[ப. எண்: 28; மெய்யறம்]*

‘தன்னைப் பேணுவார் தலைமை எய்துவர்’ *[ப. எண்: 28; மெய்யறம்]*

கி.மு. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சீன தத்துவ ஞானி குவான் ஜாங், தனது குவான்சி நூலில், வாழ்க்கையைப் பேணிச் சிறந்த வழியில் செலுத்துகையில், மனத்தின் வேட்கையைப் புரிந்துணர இயலும் என்கிறார். இக்கருத்தை எழுத்தாளர் பால் பிஷ்ஷர் தம் நூலில் மேற்கோளிடுகிறார்.

'(நான் என்னைப்) பாதுகாக்க விரும்பினால், முதலில் (நான், என்) இயல்புகளையும் விருப்பங்களையும் அறிய வேண்டும். அதற்காக, ஆறு திசைகளிலும் உள்ளனவற்றைக் கவனித்து, (என்னுள் உள்ளதை) ஆராய வேண்டும். இவ்வாறு (பொருட்களின்) தோற்றங்களை ஆராய்ந்தால், (என்) மனப்பாங்குகளை எவ்வாறு வெளிப்படுத்த முடியும் என்பதை உணர முடியும். (என்) மனப்பாங்குகளை வெளிப்படுத்தும் முறையை அறிந்த பின், (என்) வாழ்க்கையைப் பேணும் நெறியையும் உணர முடியும்.' *[ப.எண்:95; செல்ஃப் கல்டிவேஷன் இன் எர்லி சைனா].*

தன்னை உணர்ந்து தன்னலம் பேணி வாழ்பவரே வாழ்வின் இலக்கை அடைவர் எனும் பொது முனையை இருவரின் கூற்றும் முடிவாய்க் கொண்டுள்ளன என்பதை இவ்வழியே உணர்தல் இயல்பு. கூட்டு வாழ்வியலை அடிப்படையாய்க் கொண்டவன் மனிதன். அதனால்தான் காட்டாண்டி, விலங்காண்டி, நாகரிகம் என்று பல படிநிலைகளில் பரிணாம வளர்ச்சிகளை எட்டிய போதும் அவன் குழு வாழ்க்கை முறையைச் சார்ந்தே வாழ்ந்து வந்தான். மனிதன் இயல்பிலேயே ஒரு சமூக விலங்கு என்பார் அரிஸ்டாட்டில். தனிநபர் ஆனவர் தன்னைப் பேணுதல் எவ்வளவு முக்கியமோ, அதே போல் தம்மைச் சார்ந்தோரையும் பாதுகாத்துப் போற்றி வாழ்தல் இன்றியமையாதது என்கிறார் வ.உ.சி.

'தன்னுயிர் துணையைதனைப்போ லாக்கல்' *[மெய்யறம்; ப. எண்:28]*

'தாயுந் தந்தையுந் தான்றொழுந் தகையர்
அவரைப் பேணுத லரும்பெரும் கடன்' *[மெய்யறம்; ப. எண்:28]*

'விருந்தினர்ப் பேணுவார் பெருந்தகை யோரே' *[மெய்யறம்; ப. எண்:29]*

இவ்வடிகளின் வழி பெற்றோரையும் உற்ற துணையையும் விருந்தினர் களையும் பேணுபவர்கள் ஈடில்லாத பெரும் சால்புடையவர்கள் என்கிறார் வ.உ.சி. தத்துவப் பொருண்மையில் மேற்கண்ட அடிகள் அமைந்திருந்தாலும் மானிடவியல் பார்வையில் நுணுகி ஆராயப் படும்போது, சமூக அமைப்பைப் பேணுதலைக் குறித்து வ.உ.சி. வலியுறுத்துவது தெளிவுறும். குடும்ப அமைப்பே சமூக அமைப்பின் அடிநாதமாக இயங்குகிறது. குடும்பம் எனும் கட்டமைப்பு இன்றித் தனிச்சிறப்புற்றுச் சமூகம் சிறக்காது.

'மனித சமூகத்தின் மிகத் தொன்மையான நிறுவனமாகத் திகழ்வது குடும்பம்'

[பக். எண்: 97; மானிடவியல் கோட்பாடுகள்]

குடும்பக் கட்டமைப்பு இல்லாத சமூகம் சீர்குலையும்; சமூகத்தின் சரீரம் அங்கஹீனத்தை அடையும். தன்னையும் குடும்பத்தையும் தம்மைச் சார்ந்த சுற்றத்தையும் சரிவரக் கொண்டு செல்லும் போது சமூகம் உறுதியான அடித்தளம் பெற்று நிமிர்கிறது என்று வ.உ.சி. குறிப்பிடுகிறார்.

'மனிதர் சமூகமே மண்ணுயி ரனைத்துமே' *[மெய்யறம்; ப. எண்:30]*

மனிதன் பரிணாம வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையிலும் ஒரு புதிய கண்டுபிடிப்பைக் கண்டான். அவ்வழியே தாம் கண்ட ஒவ்வொரு

பருப்பொருளுக்குள்ளும் தங்கி இருக்கும் நுண்பொருளை ஆராய மனிதன் முன்னேறிய போது தாம் உணர்ந்த மெய்ம்மையை உலகுக்கு உணர்த்த எண்ணம் கொண்டான். இச்சிந்தனையே தத்துவம் என்ற பொதுச்சமநிலைக் கோட்பாடு பிரசவிக்க ஊற்றாய் அமைந்தது.

ஆன்மிகம்:

சமூக விழுமியங்களை உற்றுணரும்போது அவை தனிநிலை பொதுநிலை எனப் பிரிந்து நிலைபெறுதலைக் காண இயலும். பெரியவர் வ.உ.சி. சேலத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் தான் ஆற்றிய உரையில் இது பற்றிக் குறிப்பிடுகிறார்.

‘கல்வி, ஒழுக்கம், கடவுள் வழிபாடு, ஆற்றுநீர், ஏரிநீர், பெரும் பாட்டை, பொதுக்கூட்டுறவு, காட்டில் வாழும் உயிர்கள், இராஜாங்க உத்தியோகங்கள் முதலியன பொது உடமைகள்’.

(ப. எண்:13; அரசியல் பெருஞ்சொல், வ.உ.சி. கண்ட பாரதி, சிவஞான போதம்)

அறிவு, பல்லுயிரி, நீர்நிலை, உத்தியோகம் முதலியவற்றோடு கடவுள் வழிபாட்டையும் நிகரிட்டுக் காட்டுகிறார் வ.உ.சி. இறையை உலக வாழ்வியலின் அங்கமாக வ.உ.சி. பாவித்தும், வாழ்க்கையை நெறிபட நடத்த உதவும் ஆற்றலாக அதைச் சித்தரித்து தரிசித்ததும் புலப்படுகிறது. சிவஞானபோதம், திருமந்திரம், உண்மை விளக்கம் உள்ளிட்ட சைவ சித்தாந்த நூல்கள் இறையையும் இறை உணர்வையும் ‘மெய்’ என்று குறிப்பிடுவதைப் போலவே கடவுளைப் பொதுமைத்துவம் அடைந்தவராய்க் காட்டும் வ.உ.சி.யும் இறையை ‘மெய்’ என்றே இந்நூலில் குறிப்பிடுகிறார். பொதுவுடமை, தனித்த உடைமை என உடைமைகளை வேற்றுமைப்படுத்திக் காட்டியது போலவே அறிவின் நிலையையும் அடக்கநிலை, விளக்கநிலை என இருவகைப்படுத்திக் காட்டுகிறார் வ.உ.சி. நல்லறம் செய்தலின் பயனால் விளக்க நிலை எனும் இறையை உணர்ந்த அறிவு நிலையை மனிதர்கள் எய்துவர் என்றும் குற்றச்செயல்களைப் புரிவதால் அடக்க நிலை எனும் அறிவு குன்றிய நிலையை அடைவர் எனும் கருத்து, வேண்டிப்பெற்ற இவ்வாழ்வு, இழிச்செயல்களில் ஈடுபட, தரையில் விழுந்துடைந்த மட்கலம் போல் பாழ்படும் என்ற கடுவெளி சித்தர் பாடலின் கருத்தோடு இணைத்துப் பார்க்க இரு கருத்துகளும் பொருத்தமெய்தும். திருமந்திரத்தின் மூன்றாம் தந்திரமான பிராணாயாமத்தில் உள்ள பாடலும் வ.உ.சி. கூறும் கருத்திற்கு வலு சேர்க்கிறது.

‘கூடம் எடுத்துக் குடிபுக்க மங்கையர்
ஓடுவர் மீளுவர் பன்னிரண்டு அங்குலம்
நீடுவர் எண்விரல் கண்டிப்பர் நால்விரல்
கூடிக் கொளிற்கோல அஞ்செழுத்து ஆமே’

[ப.எண்:300; திருமந்திரம் விளக்கவுரை].

உடலுக்குள் உறைந்து கிடக்கும் நுண்பொருளான ஆன்மாவே கடவுள் எனக் கூறும் வ.உ.சி., ஒழுக்கத்தைக் கடவுளை அடைய உதவும்

கருவியாக அடையாளப்படுத்துகிறார். ஆன்மாவையும் இறைவனையும் வேறுபடுத்திக் காட்டும் சமய நூல்களில் இருந்து பெரியவர்வ.உ.சி. யின் இக்கருத்து, முற்றிலும் இவ்விடத்தில் வேறுபட்டு நிற்கிறது. இறைவனுக்குச் சமயச்சாயம் பூசாத இவரின் நடை, இறைச்சக்தியை வலிமை பொருந்திய ஆற்றலாக மட்டுமே அவர் அணுகியதைக் காட்டுகிறது.

மும்மலங்களான ஆணவம் கன்மம் மாயையில் ஆணவத்தைக் குறிப்பிடும்போது 'ஆன்மாமெய்யொன்றாணவம்வேற்றுமை' (ப.எண்:64; மெய்யறம்) என்கிறார். இறைவனிடமிருந்து மனிதனைப் பிரித்திழுப்பது ஆணவம் என்ற வ.உ.சி.யின் குறிப்பு மணவாசகங்கடந்தாரின் கூற்றுடன் பொருந்தி நிற்கிறது.

'மாறா மலம் இரண்டும் வாசொல்லக் - கூறில் அறியாமை ஆணவம் நீயானசுக துக்கம்' [ப. எண்:106; உண்மை விளக்கம் உரை நூல்; ஆ. ஆனந்தராசன்; நர்மதா பதிப்பகம்; மே, 2010]. அறியாமையின் மூலவூற்று, ஆணவம். நிலையற்ற பருப்பொருட்கள் மீது பற்று கொள்ள, ஆணவம் மனிதனுக்குள் அவா எழுப்பி, மனிதனை அறிவொளியை எய்துவதிலிருந்து விலக்கும். அதன்வழி, மனிதன், இறையுணர்விலிருந்து விலகிச் செல்வான் என்பது திண்ணம்.

முற்போக்கு:

அறவொழுக்கம் மெய்ம்மை முதலிய கருத்துகளுள் பல முற்போக்குச் சித்தாந்தங்களையும் வ.உ.சி. இந்நூலில் புதைத்து வைத்துள்ளார்.வ.உ.சி. யின் சமகாலத்துச் சுதந்திரப் போராட்ட சகாக்களான சுப்பிரமணிய பாரதியும் சுப்பிரமணிய சிவாவும் அடுத்தடுத்துக் காலமான பின்பு, சுதந்திரப் போராட்டம், தமிழ் மறுமலர்ச்சி இயக்கம் போன்ற பல்களங்களில் இறங்கிப் போராடும் முழுப் பொறுப்பும் வ.உ.சி.யின் தோள்களைப் பற்றி கொண்டது. '1925இல் காலமாகும் வரை ஓயாமல் உழைத்தாலும் அரசியல் உலகில் சிவாவின் தாக்கம் வரையறுத்ததாகவே இருந்தது. இந்தப் போக்கில் இருந்து விடுபட்டுத் தொழிலாளர் இயக்கம், தமிழ் மறுமலர்ச்சி இயக்கம், பார்ப்பனரல்லாதார் இயக்கம் எனப் பல்வேறு இயக்கங்களில் வ.உ.சி. மட்டுமே பங்கு கொண்டார்' [திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி. யும் 1908; ஆ. இரா. வெங்கடாசலபதி; காலச்சுவடு பதிப்பகம்; 4ம் பதிப்பு: 2022; பக். எண்:189].

ஆதிச் சமூகமான தாய்வழிச் சமுகம் தந்தை வழிச்சமூகமாக மடை மாற்றம் செய்யப்பட்டபோது, ஒழுக்கம், கற்பு, அறம், குணநலன்கள் போன்ற எண்ணற்ற கோட்பாடுகள் பெண்களை மட்டுமே இறுக்கத் தொடங்கியது. தினைப்புலம் காத்துச் சமூகத்தை முன்னெடுத்துச் சென்றவள் எதிர்பாலினத்தைச் சார்ந்து வாழும் சார்பெழுத்தாய் ஆக்கப்படுகிறாள். இந்திய இலக்கியங்களும் காப்பியங்களும் கூட, பலருடன் உறவாடும் பரத்தையரைப் பழிக்கூறுகிறதே அன்றி அதுபோல் செய்யும் எதிர்ப்பாலினத்தவரைக் குறிக்கத் தவறிற்று. மெய்யறத்தின்

38ஆம் அதிகாரம் பரத்தையும் அவன் குணாதிசயத்தையும் விளக்கி, அதன்வழி அத்தன்மையோனை விலக்கல் குறித்துப் பயில்கிறது. மனைவியைத் தவிர பிற பெண்களை நுகர்பவன் பரத்தன் என வரையறுக்கிறார் வ.உ.சி. பரத்தையைக் காட்டிலும் கொடியவன் என்றும் இவன் போன்றோராலே சமூகத்தில் கொடுமைகள் நிகழ்கின்றன என்றும் காட்டமாகக் கூறுகிறார். 'மறனெலா நிகழ்வதம் மாபாவி யாலே' [பக். எண்:21; மெய்யறம்]

பெண்களை மட்டுமே கைகாட்டிக் குறை கூறும் புரையோடிப்போன சமூகத்தின் மேல் விழும் சவுக்கடி இவ்வதிகாரம். இது இலக்கியங்களும் இதிகாசங்களும் காலங்காலமாக போற்றிக் காத்த கதாநாயகர்களின் குணசீலங்களை மறுபரிசீலனை செய்யத் தூண்டுவதாய் அமைகிறது. மாணவரியல்அதிகாரத்தில்'ஆணும்பெண்ணுமதுசெயவுரியர்.'(ப.எண்:3; மெய்யறம்) என்ற அடி வழியாக, பெண்கல்வியைப் போற்றும் வ.உ.சி., மெய்ப்பொருள் நெறியாளராய்த் தம் நிஜ வாழ்விலும் பெண்கல்வியைப் போற்றினார். வ.உ.சி., தம் முதல் மனைவி வள்ளியம்மை திருக்குறளையும் வள்ளி நாயகத்தையும் பிறமறைகளையும் பிறர் புரிந்து கொள்ளும் வகையில் எடுத்து இயம்பும் ஆற்றல் பெற்றவர் என்றும் வள்ளியம்மை தெய்வத்திற்கு நிகரானவர் என்றும் தம் சுயசரிதையில் குறிப்பிடுகிறார்.

'செயிரிலா மனத்தள்; தெய்வமே யனையள்
வள்ளுவர் குரலை வளனுறப் படித்துக்
கொள்ளும் விதத்தில் கூறுவள் உரையுடன்' *[ப. எண்:36; சுயசரிதை].*

ஆண் பெண் சமத்துவக் கருத்துகளை 34ஆம் அதிகாரத்தில் காண இயலும். ஆண் சமூகக் கரங்கள் ஓங்கி இருந்த அந்நாட்களில் ஆண்களே உயர்ந்தவர்கள் என்பது வெற்றுப் பெருமையே அன்றி அதிலொரு சிறப்புமில்லை என்கிறார் வ.உ.சி.

'ஆண்பா லுயர்வெனில் வீண்பேச் சென்க' *[பக். எண்:19; மெய்யறம்].*

தனிமன் அறிந்துணர்ந்த அனைத்து நல்லறங்களையும் தன் துணைக்கும் கற்பிப்பது அவசியம் என வ.உ.சி. இந்நூலில் குறிப்பிட்ட வாறே, தன் அக வாழ்வையும் அமைத்து வாழ்ந்தார் என்பது வ.உ.சி. யின் மனைவி மீனாட்சி அம்மாள் திருநெல்வேலி எழுச்சியில் வ.உ.சி.க்குத் துணை நின்ற குருநாதய்யர் சிறையில் அடைக்கப் பட்டபோது, அவருக்கு எழுதிய கடிதங்களின் வழி அறிய இயலும். 'தங்களின் சரீர சௌக்கியத்தையும், தாங்கள் வீடு வந்து சேரக் கூடிய காலத்தையும், தாங்கள் வரும் வரை நாங்கள் செய்ய வேண்டிய காரியத்தையும் தெரியத் தங்கள் சகோதரர் அவர்களும் நாங்களும் மிக மிக ஆவலுள்ளவர்களாயிருக்கிறோம்' [பக். எண்: 231; திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் 1908] வ.உ.சி.யின் சகோதரராக குருநாதரையும் அவரது மனைவி மீனாட்சியம்மாளைத் தம் சகோதரியாகவும் போற்றிய மீனாட்சி வ.உ.சி.யின் மாண்பு, மலையை ஒத்தது. வ.உ.சி. யும் மீனாட்சி அம்மாளும் ஒருமித்த சிந்தனையுடன் நல்லறத்தைப் பேணி வாழ்ந்தனர் என்பது இக்கண் வெளிப்பாடு.

முடிவுரை:

தமிழ்ச் சிந்தனை உலகில் ஒருவிதத் தனிச்சிறப்பிற்குரிய ஆவணமாகும். அது, சமூக மாற்றத்திற்கான அரசியல் போராளியின் குரலாக மட்டுமின்றி, மனிதனின் உள்ளார்ந்த மெய் உணர்வை உலகறத்திற்கு வழிநடத்தும் அறவோனின் சிந்தனையாகவும் திகழ்கிறது. இந்நூல் உருவாக்கிய மதிப்பீடுகள், இன்றைய சமுதாயத்திற்கும் பொருந்தக்கூடிய நெறிமுறைகளைக் கொண்டுள்ளதால், சமகால ஆய்வுகளுக்கு எதிர்கால வழிகாட்டியாக அமையும் என்பதும் உறுதியாகிறது.

மேற்பார்வை நூல்கள்:

1. மெய்யறம்; வ.உ.சிதம்பரம் பிள்ளை; கலாரத்நாகர அச்சுயந்திர சாலை; இரண்டாம் பதிப்பு; 1917.
2. மானிடவியல் கோட்பாடுகள்; பக்தவத்சல பாரதி; அடையாளம்; 2ம் பதிப்பு: 2012.
3. அரசியல் பெருஞ்சொல், வ.உ.சி. கண்ட பாரதி, சிவஞான போதம்; சிதம்பரம் பிள்ளை. வ.உ.; வ.உ.சி. நூலகம்; முதல் பதிப்பு; 2004.
4. திருமந்திரம் விளக்கவுரை (தொகுதி ஒன்று); ஜி. வரதராஜன்; ஏழாம் பதிப்பு: 2006; பழனியப்பா பிரதர்ஸ்.
5. உண்மை விளக்கம் உரை நூல்; ஆ. ஆனந்தராசன் (உ.ஆ.); நர்மதா பதிப்பகம்; மே, 2010.
6. திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் 1908; ஆ.இரா. வெங்கடாசலபதி; காலச்சுவடு பதிப்பகம்; 4ம் பதிப்பு: 2022.
7. சுயசரிதை; வ.உ.சி.; முல்லை பதிப்பகம்; முதற்பதிப்பு: நவம்பர், 2021.

17

வ.உ.சி.யின் மெய்யறம் காட்டும் மெய்யியல் தத்துவம்

மு. முவின்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
கே.பி.ஆர். கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரி, கோவை.

ஆய்வுச்சுருக்கம்:

மனிதன் தான் காண்பனவற்றுள், கேட்பனவற்றுள் பரவிக் கிடக்கும் இன்பம், பற்று, பாசம், பொருள் போன்ற பொய்ம்மைகளை அறிந்து விலக்கி, தனக்குள் உறையும் இறையாற்றலைத் தான் உணர்தலே மெய்யியல் எனப்படுகிறது.

புத்தி என்பது புத்தகம் போன்ற அறிவுத்தளத்திலிருந்தும், சான்றோரிடம் இருந்தும் கற்றுக்கொள்ள வருவது. அறிவு என்பது முழுக்க முழுக்க பிறர் துணையின்றி தன் அனுபவத்தினால் மட்டுமே கிடைப்பது.

ஞானம் என்பது தனக்குள் ஏதுமற்றுக் காலியாக இருக்கும் பாத்திரத்திற்குள் பரந்த வானம் மழை பொழிவது போன்றது. தன்னை மறந்த ஒருவன், தனக்கு எல்லாம் எங்கிருந்தோ வருவதாய் உணர்வது ஆகும். ஏற்கனவே நீர் நிரம்பியுள்ள பாத்திரம் எப்படி வானம் தரும் மழை நீரைப் பெறும் தகுதியை இழக்குமோ அதுபோல தனக்குள் நான், பதவி, பட்டம், பணம், பொறாமை போன்ற தேவையற்ற எண்ணங்களைச் சேர்த்து வைத்திருக்கும் மனிதனுக்குள் ஞானமாய் வானம் பெருமழை பெய்யினும், ஒரு துளியும் நில்லாது நிலத்தினில் வீழ்ந்து வீணாகும்.

உலக வாழ்க்கை எல்லாம் மாயை (பொய்) என்பதை உயிர் எனும் மெய்ப்பொருள் உணர்தலே மெய்யறிவு எனப்படுகிறது. அந்த மெய்யறிவு கிட்டினால் மெய்யறங்களைப் பின்பற்றிடத் தோன்றும்.

உடல் என்னும் பொய்ப்பொருளில் உறைந்திருக்கும் உயிர் என்னும் மெய்ப்பொருள், தன்னை அறியும் மெய்யறிவு கொண்டு, மெய்யறங்களை மேற்கொண்டால் அவ்வுயிர் மெய்நிலை அடையும் என்பது மெய்யியல் தத்துவமாகும்.

இத்தகைய மெய்யியல் தத்துவம், வ.உ.சி. அவர்கள் இயற்றிய மெய்யறம் என்ற நூலில் எவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

திறவுச்சொற்கள்: அறம், உயிர், உணர்வு, மெய்யறம், கடவுள், ஆன்மா

முன்னுரை:

மெய்யறம் என்ற அறம் உரைக்கும் நூல் வ.உ.சி. அவர்களால் இயற்றப்பட்டது. திருவள்ளுவர் திருக்குறளை இரண்டு அடிகளில் அமைத்து வாழ்வியல் நெறிகளை உலகிற்கு வகுத்தளித்தார். ஆனால்

வ.உ.சி. அவர்களோ ஓரடியில் 1150 அறங்களை உரைத்து, சோம்பேறியும் படிக்கும்படி எளிதாக்கித் தந்துள்ளார் என்று மெய்யறம் நூலின் சிறப்புப்பாயிரம் குறிப்பிடுகிறது. இந்நூல் இயற்றப்பட்டதன் முதன்மை நோக்கம் யாவரும் அறவழி வாழ்ந்து வீடுபேறு அடைதல் ஆகும். மேலும், வ.உ.சி. இந்நூலில், உலகில் அறம் என்று ஆயிரம் அறங்கள் இருப்பினும், உண்மையான உயிருக்கு உறுதியைத் தரும் அறங்கள் இன்னின்ன என்று பல மெய்யறங்களைக் குறிப்பிட்டு இறவா நிலையினை ஓர் உயிர் அடைய வேண்டுமென விழைந்துள்ளார். இதனை, 'மெய்யறஞ் செய்துயிர் மெய்ப்பொருளாகுக 'என்ற மெய்யறம் நூலின் பாயிரத்தின் வரியிலிருந்து உணரலாம். மெய்யறங்களை மேற்கொள்ளும் ஓர் உயிர் அழியாத்தன்மை பெற்று மெய்ப்பொருளாகும் என்று உரைக்கும் மெய்யியல் தத்துவத்தை மெய்யறம் நூலின்வழி தெள்ளிதின் இக்கட்டுரை ஆராய்கிறது.

மெய்யின் தொடக்கநிலை:

வ.உ.சி. யின் மெய்யியலின் தொடக்கம், உயர்ந்த சுருதியும், உத்தியும் என்பதுமாக அமைந்துள்ளது. சுருதி என்பதை ஞானியர் பலரும் உலகிற்குப் பகர்ந்த மெய்யுரை என்றும், உத்தி என்பதை ஞானமொழி பகர்ந்திடக் கையாளும் முறைகள் என்றும் வ.உ.சி. குறிப்பிடுகிறார். மேலும், ஆதல், இருத்தல், அழிதல் ஆகிய மூன்றையும் மேற்கொள்ள கர்த்தா எனும் கடவுள் அவசியம் என்கிறார். கடவுளை அறிந்து உள்ளுணர்தலை அனுபவம் என்று உரைக்கிறார். ஏழையாயினும், செல்வந்தனாயினும் வாழ்வில் இடர்களைச் சந்திக்க நேரும், அதன் மூலம் யாவரும் இறையனுபவத்தைப் பெறுவர் என்று மெய்யுண்மையை விளக்குவதை,

'ஆத னிலவ லழித லிவனுள்
அவைசெயக் கர்த்தா அவசிய மென்க
அறிந்துள் உணர்தலை அனுபவ மென்க
இடருறும் போழ்துமெய் யெண்ணுகின் றனர் பலர்'

(வ.உ.சிதம்பரம் பிள்ளை, மெய்யறம்,ப.49)

இவ்வரிகளில் இருந்து உணரலாம். இதற்கு வலுச்சேர்க்கும் விதமாய் அமையும் திருமூலர் இயற்றிய உயிருக்குள் உறையும் இறைவனை உணர்தல் பற்றிய பாடல் பின்வருமாறு,

'காலினுள் ஊறும் கரும்பினில் கட்டியும்
பாலின்உள் நெய்யும் பழத்துள் இரசமும்
பூவின் உள் நாற்றமும் போல்உளன் எம்இறைக்
காவலன் எங்கும் கலந்து நின்றானே'

(ஞா.மாணிக்கவாசகன், திருமூலர் திருமந்திரம், பா.2639, ப. 1176)

எங்கும் உள்ள இறைவன் எம்முள்ளும் இருக்கின்றான் என்பதை அறிந்து உள்ளுணர்தலின் அனுபவம் அளப்பரியது என்று வ.உ.சி. உரைப்பது திருமூலர் பாடலின் கருத்துடன் ஒத்துச் செல்வதை உணர முடிகிறது.

மெய்யின் அடக்கநிலை:

வ.உ.சி. அவர்கள் வழிகாட்டும் மெய்யியல் தத்துவத்தின்படி, அடக்கநிலை என்பது உண்மை அடங்கிய அறிவு ஆகும். அதாவது கடவுள் புலப்படா நிலையாகும். மெய்யின் அடக்கநிலையை விறகுக்குள் அடங்கிய தீ என்று உவமித்துக் கூறுவதனை,

'அடக்கமெய் விறகுள் அடங்கிய தீப்போன்ம்'

(வ.உ.சிதம்பரம் பிள்ளை, மெய்யறம்,ப.50)

என்ற வரியில் உணரலாம். அண்டத்தில் உள்ள பொருளெல்லாம் அணுக்களின் சேர்க்கையாகும். வலிமையின்றி அணுக்கள் சேர்ந்திருத்தல் சாத்தியமில்லை. ஆகவே, எங்கெல்லாம் பொருளுள்ளதோ அங்கெல்லாம் வலிமை நிறைந்திருக்கும். அகிலத்தை இயக்குவதும் அணுக்களின் வலிமையாகும். எவற்றின் இயக்கத்திற்கும், வலிமையும், அறிவும் தேவை. அந்த வலிமையும், அறிவும் இருபொருள்கள் அல்ல ஒரே பொருள் என்று அறிவின் நிலையை விளக்குவதனை,

'நிறைபொரு ளிரண்டு நிலவா வென்ப
ஆதலால் வலியும் அறிவும் ஒரேபொருள்'

(வ.உ.சிதம்பரம் பிள்ளை, மெய்யறம்,ப.49)

என்ற வரிகளில் அறிய முடிகிறது.

மெய்யின் விளக்கநிலை:

வ.உ.சி. யின் மெய்யின் விளக்கநிலையானது, உண்மை புலப்படும் அறிவு ஆகும். அதாவது பொய்மைத் திரைகளைக் கிழித்து உண்மை ஒளியாகக் கடவுளைக் காணும் நிலையாகும். மெய்யின் விளக்கநிலையை, எரியும் விறகுகளைக் கடைந்தால் எழும் தீயுடன் ஒப்பிடுகிறார் வ.உ.சி. ஐந்தறிவு படைத்த உயிர்களுக்குள் மெய்யொளி வெளிப்படாது என்றும், உயிர்கள் பிறர் வலி உணராது வீரச் செயல்களில் ஈடுபடுவது, மெய்யொளியைக் குறைக்கும் என்றும், ஐந்தறிவு உயிர்களின் ஒழுக்கம், குடத்துள் எரியும் விளக்காய் பயனின்றியும், ஆறறிவு உயிர்களிடம் மட்டுமே மெய்யொளி வெளிப்படத் தோன்றும் என்று உரைக்கின்றார். ஆறறிவு படைத்த மனிதன் அறச்செயல்கள் பல புரிய மெய்யொளி பெருகிடும். மனிதர் பின்பற்றும் மெய்யொழுக்கம் மலை மீது எரியும் விளக்காய்ப் யாவர்க்கும் பயன்படும். ஒழுக்கமில்லாத வெற்று ஞானம் அவ்விளக்கை அணைக்கும் காற்றாய் மாறும் என்று ஞானநிலைக்கு ஒழுக்கம் முதன்மைப் பண்பு என்பதை வலியுறுத்தும் மெய்யறம் நூலின் வரிகள் பின்வருமாறு,

'ஐயறிவு உயிர்களின் மெய்யொளி அடங்கும்
ஆறறிவினருள் அவ்வொளி விளங்கும்
அவர்மறஞ் செயச்செய அதனொளி குன்றும்
அவரறஞ் செயச்செய அதனொளி பெருகும்
அவரொழுக்கம் அறிந்தபோழ் தஃதக விளக்காம்

அவரொழுக்கம் அடைந்தபோழ் அதுமலை விளக்காம்
ஒழுக்கில்வாய் ஞானம் அஃதொழிக்குங் காற்றாம்'

(வ.உ.சிதம்பரம் பிள்ளை, மெய்யறம்,ப.50)

மேற்குறிப்பிட்ட வரிகளில் வ.உ.சி., ஏனைய உயிர்களுக்கும், மனித உயிர்களுக்கும் இருக்கும் அறிவின் நிலைகளையும், ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தையும் பற்றிக் குறிப்பிடுவதை அறியலாம்.

மெய்யுணர்தல்:

அறிவுடைய எல்லோரும் ஞானம் அடையக்கூடும். ஆனால் ஒழுக்கமற்ற வெற்று அறிவு கொண்டு ஞானமடைய இயலாது என்பதை வ.உ.சி.

'ஒழுக்கம் உடையார் உணர்வார் மெய்யை'

(வ.உ.சிதம்பரம் பிள்ளை, மெய்யறம்,ப.50)

என்ற வரியில் உணர்த்துகிறார். ஞானிகள் உரைத்த பல அறநூல்கள் ஒழுக்கத்தின் மேன்மையைப் பற்றிக் கூறுகின்றன. ஒழுக்கத்தைக் கைவிட்டு ஞானமடைதல் என்பது ஏணியின் முதற்படியில் கால் வைக்காமல் கடைசிப் படியில் ஏறலாம் என்பது போன்ற மடமை. ஒழுக்கத்தின் வழி அறநூல்களைக் கற்ற பின்னர், தன்னை அறியும் ஆன்ம நூல்களை ஆராய்தல் வேண்டும் என்று வலியுறுத்துகிறார். மேலும், ஆன்மா என்பதற்கு வ.உ.சி. தரும் விளக்கம் பின்வருமாறு,

'ஒருடல் அளவில் உறும்அறிவு ஆன்மா'

(வ.உ.சிதம்பரம் பிள்ளை, மெய்யறம்,ப.50)

இவ்வரி, ஓர் உடலில் தங்கும் அறிவுதான் ஆன்மா என்ற பொருளைத் தருகிறது. மேலும், ஆன்மாவை, அணையுள் சேமிக்கப்பட்டிருக்கும் குளத்துநீர் என்கிறார். இதில் அணையைக் கடவுளுடனும், அதில் உள்ள நீரை ஆன்மாவுடனும் ஒப்பிடுதல் சிறப்பாகப் பொருந்தும். இதனை,

'அணையுள குளநீர்க்கு ஆன்மா இணையாம்'

(வ.உ.சிதம்பரம் பிள்ளை, மெய்யறம்,ப.50)

என்ற வரியின் மூலம் அறியலாம். இறைவனும், உடலுள் இருக்கும் ஆன்மாவும், வெவ்வேறல்ல என்ற கருத்தினை திருமூலரும் வலியுறுத்தியுள்ளார். இதனை, 'எல்லா உடம்புக்குள்ளும் உறைவது இறையென்று நம்பப்படுவதன் இன்னொரு துண்டு என்ற கோட்பாடுதான் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற உலகப் பெருங்கருத்து. உடலை இறையோடு பொருத்திய இந்த உயிர்க்கொள்கைதான், இழித்துச் சொல்லப்பட்ட உடலென்ற பொருளை மதித்துப்பேசும் மாண்பு கொடுத்தது' (வைரமுத்து, தமிழாற்றுப்படை, ப. 147) என்ற திருமூலர் பற்றிய தனது கருத்தை வைரமுத்து அவர்கள் தமிழாற்றுப்படை நூலில் பதிவு செய்துள்ளார்.

ஆன்மா மெய்யறிவு பெறாமல் இருக்கும்வரை, ஆணவம், கன்மம், மாயை என்ற பொய்மைப் பொருள்களை மெய்யெனப் பற்றியிருக்கும்.

இவை ஆன்மாவுடன் சேர்ந்தே இருப்பதால் ஆன்மாவும்,ஆணவமும் ஒன்றென்று ஆகாது. அவை வேறு. அறம் சேர்க்கும் ஒழுக்கங்களைப் பின்பற்றினால், ஆணவம் களைவதை ஆன்மா உணரும். மேலும், ஆன்மாவும், மெய்யும் ஒன்றென உணர வேண்டும் அவ்வாறு ஆன்மா மெய்யை உணரும் தருணம் ஆன்மாவில் கடவுள் தன்மை அதாவது மெய்த்தன்மை தோன்றும் என்பதை,

'ஆன்மா மெய்யொன்று ஆணவம் வேற்றுமை
அறஞ்சேர் ஒழுக்கால் ஆணவம் களைக
இலகுமெய் உண்மை உலகுமெய்த் தோற்றம்'
(வ.உ.சிதம்பரம் பிள்ளை, மெய்யறம்,ப.50)

இவ்வரிகளில் குறிப்பிடுகிறார்.

மெய்ந்நிலை அடைதல்

ஞானிகள் யாவரும் தான் பெற்ற இன்பத்தை உலகத்து மக்கள் பெற வேண்டும் என்றே விரும்புவர். அவ்வாறு ஞானநிலை அடைதலே மெய்யறம் என்ற நூலின் முதன்மையான நோக்கமாக இருக்கிறது. அதன்வழி நோக்கின், உயிரியல் பற்றை நீக்கினால், மெய்யியல் புலப்படத் தொடங்கும். மெய்யறம் செய்து, எல்லாப் பற்றும் விட்டுவிடுதலே பேரின்பமென்னும் வீடுபேறு என்கிறார் வ.உ.சி. வாழ்வின் மீதான மிகையான பற்றை விடுதலும், பிறர் பற்று விட உதவுதலும், ஒழுக்கத்துடன் உயிர் மெய்யை உணர்தலும், பிறர் உணர்ந்திட உதவுதலும், அரசர்க்கு மட்டுமல்ல, இல்லறம் ஆற்றும் யாவர்க்கும் பொருந்தும் என்றும், யாவரும் கருணை பொழியும் மெய்யறச் செயல்கள் புரிந்து, மெய்ந்நிலை அடைய வேண்டும் என்று கூறுவதனை,

'உயிரியல் விடமெய் யியலும் உடனே.
விடலே வீடது மெய்யறஞ் செயினாம்.
....
அறந்தில் வாழ்ந்துல காண்டறஞ் செய்க
அருள்கொடு மெய்யறம் ஆற்றி மெய்யடைக'
(வ.உ.சிதம்பரம் பிள்ளை, மெய்யறம்,ப.50)

என்ற வரிகள் உணர்த்துகின்றன. இதே கருத்தினை அதாவது, உயிர்கள் ஒன்றென்று உணர்ந்து அன்பு கொண்டு ஆன்மநேயம் என்ற அறத்தைப் பின்பற்றுதலே சரியான பாதை என்று இராமலிங்க அடிகளும் வலியுறுத்துகிறார். அவரது கூற்று பின்வருமாறு,

'மனிதன் சாவாமலிருக்க அவன் முதலில் செய்ய வேண்டியது,
சமய மதங்களிலிருந்து விடுபட்டு ஆன்மநேய
ஒருமைப்பாட்டுணர்வைப் பெறுவதாகும்'
(ம.பொ.சிவஞானம், வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, ப.231)

என்று பிறவியற்ற நிலை அடைய அறத்துடன் கூடிய அன்பும் அவசியம் என்பதை வள்ளலார் வலியுறுத்துவதாக சிலம்புச்செல்வர் ம.பொ.சி. தனது வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

முடிவுரை:

வ.உ.சி. அவர்களின் மெய்யியல் தத்துவமானது, மெய்ந்நிலையை அடைய வழிகாட்டும் மெய்யறங்களாகப் பின்வருவனவற்றைக் கொள்ளலாம். மனிதன் தனக்குள் உறையும் இறையை உணர்தல் வேண்டும். அறிவின் வலிமை கொண்டு அனைத்தையும் அறியலாம். ஏனெனில் அறிவும், வலிமையும் ஒரே பொருள். ஐந்தறிவு உயிர்களுக்கு இல்லாத மெய்யறிவு ஆறறிவு கொண்ட மனிதர்களுக்கு மட்டுமே உள்ளது. ஒழுக்கத்துடன் அறஞ்செய்து மனிதன் மெய்யொளி பெருக்கலாம். ஒழுக்கமே மெய்யுணர்தலின் அடிப்படையாகும். உடலில் உறையும் அறிவே ஆன்மா. ஆன்மாவும், மெய்யும் ஒன்றே. மனிதன் தன் உயிரியல் பற்றுகளை விட்டுவிட்டால், மெய்யியல் பயணத்திற்கான பாதை தென்படும். கருணை பொழியும் மெய்யறங்களை ஆற்றி, மெய்யாம் பிறவியற்ற பெருநிலை அடைதலே மெய்யியல் தத்துவம்.

துணைநூற்பட்டியல்:

1. கவிஞர் முகிலை பாஹீ, பரம்பொருள் ரகசியம், கவிஞன் பதிப்பகம், கன்னியாகுமரி, 2024
2. ஞா.மாணிக்கவாசகன், திருமூலர் திருமந்திரம், உமா பதிப்பகம், சென்னை, 2021
3. வ.உ.சிதம்பரம் பிள்ளை, மெய்யறம், வ.உ.சி. நூலகம், சென்னை, 2004
4. வைரமுத்து, தமிழாற்றுப்படை, சூர்யா லிட்ரேச்சர், சென்னை, 2019

18

வ.உ.சி.யின் மெய்யறத்தில் பிற நூல்களின் தாக்கங்கள்

ம. கதிரவன்
தமிழ்த்துறை, உதவிப் பேராசிரியர்,
எஸ்.ஆர்.எம். கலை அறிவியல் கல்லூரி, காட்டங்குளத்தூர்.

ஆய்வுச்சுருக்கம்:

வ.உ.சி. அவர்கள் எழுதிய நூல் ஆகும். இந்நூல் திருக்குறளின் வழிநூல் என்பர். மக்கள் தீமைகளைந்து நல்வாழ்வு பெற உதவும் நிலையில் குறளின் அடிப்படையில் வ.உ.சி. இயற்றிய 'மெய்யறம்' என்ற அறநூல் முக்கிய பங்கு வகிக்கிறது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களை அடைதலே இந்நூல் கூறும் பயன் ஆகும். தொல்காப்பியம், கலித்தொகை, திருக்குறள்,ஆத்திசூடி,கொன்றைவே ந்தன் ஆகிய நூல்களில் காணலாகும் மெய்யறம் சார்ந்த கருத்துகளைத் தொகுத்துக் கூறுவதாக ஆய்வுச்சுருக்கம் அமைகின்றது.

திறவுச்சொற்கள்: மெய்யறம், தொல்காப்பியம்,கலித்தொகை, திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன். அறம், பொருள், இன்பம், வீடு, வ.உ.சி., மெய்ந்நிலை, அறநெறி.

முன்னுரை:

வள்ளுவர் வழங்கிய அறநூல் பயிற்சி மக்களிடத்து மலிந்து காணப்படும் கொடுமைகளைக் களையப் பெரிதும் துணை நிற்கும் என்பதில் வ.உ.சி. அழுத்தமான நம்பிக்கையுடையவர். எனவே மக்கள் தீமைகளைந்து நல்வாழ்வு பெற உதவும் நிலையில் குறளின் அடிப்படையில் வ.உ.சி. இயற்றிய 'மெய்யறம்' என்ற அறநூல் முக்கிய பங்கு வகிக்கிறது. மெய்யறம் என்பது வ.உ.சிதம்பரனார் கண்ணனூர் சிறையில் இருந்தபோது எழுதிய ஒரு நூல் ஆகும். இந்நூல், வாழ்க்கையின் பல்வேறு அறநெறிப் பாடங்களை விளக்குகிறது, மேலும் இது வ.உ.சி. அவர்களின் தியாக வாழ்க்கையின் ஒரு பகுதியாகவும் கருதப்படுகிறது. வ.உ.சி. இயற்றிய மெய்யறம் நூலில் திருக்குறளின் கருத்துகள் பல்வேறு பாடல்களில் வெளிப்படையாக அமைந்துள்ளது. அத்தகைய பாடல்களின் கருத்துகளைத் தொகுத்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

மெய்யறம்:

'மெய்யறம் என்னும் இந்நூலினைத் திருக்குறளின் வழிநூல் என வ.உ.சி. குறிப்பிடுகின்றார். அவர் இதனைத் தஞ்சை இராவ்பகதூர் சீனிவாசப்பிள்ளை அவர்களுக்குக் காணிக்கையாக்கியுள்ளார்' 1.அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களை அடைதலே இந்நூல் கூறும் பயன் ஆகும். முயற்சி இல்லாரும்

கற்கும் நெறியில் பாக்கள் ஓரடியில் இயற்றப்பட்டுள்ளன. மெய்யறம் மாணவரியல், இல்வாழ்வியல், அரசியல், அந்தணவியல், மெய்யியல் என்னும் ஐந்து இயல்களையும் நூற்று இருபத்தைந்து அதிகாரங்களையும் கொண்டது. மானுடப் பிறப்பை அடைந்த ஒவ்வொருவரும் முறையே 'மாணவர், இல்வாழ்வார்,அரசர், அந்தணர் எனப் படிப்படியாய் வாழ்க்கை முறையில் வளர்ந்து இறுதியில் மெய்ந்நிலையை அடையலாமென்ற தம் கோட்பாடும் அவர்கள் அவ்வாறு அந்நிலைகளை அடைய வேண்டுமென்ற தம் விருப்பமுமே இந்நூலினை ஐந்தியல்களாகப் பகுக்கத் தம்மைத் தூண்டினதாக வ.உ.சி. காட்டுகின்றார்'.2

தொல்காப்பியம் - மெய்யறம்:

இலக்கணம் கூறும் தொல்காப்பியத்தின் கருத்துகளையும் வ.உ.சி. அவர்கள் தனது மெய்யறம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

'முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே' *(தொல்.950)*

ஐந்திணை நிலங்களான முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகியவற்றை அவற்றின் கடவுள்கள் மற்றும் நில அமைப்பின் அடிப்படையில் வரிசைப்படி கூறும் தொல்காப்பிய நூற்பாவின் கருத்தினை,

'மலைகாடு வயல்கடல் மருவிய நானிலம்
அவை குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல்' *(நாடு.2, 3)*

என்ற பாடல் வரிகளின் வாயிலாக வ.உ.சி. அவர்கள் எடுத்துரைப்பது அவரது இலக்கணப் பற்றை வெளிக்காட்டுகிறது.

கலித்தொகை - மெய்யறம்:

நீதி நூல்களின் கருத்துகளை மட்டுமின்றி சங்க இலக்கியத்தின் சில கருத்துகளையும் மெய்யறம் நூல் எடுத்துரைக்கிறது. அவற்றுள் கலித்தொகையின் பாடல் வரி,

'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' *(கலித்தொகை.133.3)*

உலக நடைமுறையையும், சமூகத்தின் நெறிகளையும் அறிந்து, அதற்கேற்ப நடந்துகொள்வதே உயர்ந்த பண்பாடு என்ற கருத்தினை முன்வைக்கிறது. அதே போன்று,

'பாடறிந் தொழுகலே பண்பென மொழிப' *(பண்பு செய்தல். 1)*

என்ற வரியின் வாயிலாக எடுத்துரைக்கிறார். இவ்வாறு கலித்தொகை பாடல் வரியின் கருத்துகளை எடுத்துரைப்பது போல வ.உ.சி. அவர்கள் தன் கருத்தை முன்வைக்கின்றார்.

மெய்யறமும் வள்ளுவமும்:

வள்ளுவரின் திருக்குறள் பாடல்களை வ.உ.சி. தமது நூலில் பயன்படுத்தப் பின்பற்றியுள்ள முறைகள் பலவாகும். குறட் சொல் லினையும் குறட் சொற்றொடரையும் வ.உ.சி. இந்நூலில் பல பாக்களில்

பயன்படுத்தியுள்ளார். குறட் பாடல்களின் கருத்தளவில் ஒத்துப்போகும் பாக்களும் இந்நூலில் உண்டு. ஒரு குறளின் கருத்திற்கு விளக்கமாக அமையும் நிலையில் அக்குறள்களின் கருத்தினை வ.உ.சி. பல அடிகளில் கூறியுள்ளார். குறளினைவிடக் குறுகிய அளவினதான ஓரடியிலேயே வ.உ.சி. கூறியிருப்பதும் சிறப்புக்குரியதாக அமைகின்றது. வள்ளுவர் தந் கருத்துகளைக் கையாண்ட எடுத்துக்காட்டுகளில் சிலவற்றை வ.உ.சி.யும் தமது கருத்துகளை விளக்கப் பயன்படுத்தியுள்ளார்.

குறள் கருத்துகள்:

இரண்டு அடிகளில் வள்ளுவர் எடுத்துரைக்கும் கருத்துகளை வ.உ.சி. ஓரடியில் எடுத்துரைப்பது சிறப்புக்குரியதாகும். அதுமட்டுமின்றி இம்முறை வ.உ.சி.யின் நுட்பமான இலக்கியப் புலமைக்குச் சான்றாக விளங்குகிறது.

‘ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்’ *(குறள் 69)*

தன் மகனை நற்பண்பு நிறைந்தவன் என பிறர் சொல்லக் கேள்வியுற்ற தாய், தான் அவனைப் பெற்ற காலத்தில் உற்ற மகிழ்ச்சியை விடப் பெரிதும் மகிழ்வாள், என்ற குறளின் கருத்திற்கு ஏற்பவும்,

‘மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்’. *(குறள்.70)*

மகன் தன் தந்தைக்குச் செய்யத் தக்க கைம்மாறு, இவன் தந்தை இவனை மகனாகப் பெற என்ன தவம் செய்தானோ என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லாகும், என்ற குறளின் கருத்திற்கு ஏற்பவும், மெய்யறம் என்னும் நூலில் தாய் தந்தையரைப் பேணுதல் என்னும் அதிகாரத்தில்,

‘அவர் பெயர் விளங்கிட வறிந்தமைந் தொழுகுக’
(தாய் தந்தையரைப் பேணுதல்.9)

என்ற பாடல் வரியின் வழியாக வள்ளுவரின் கருத்தினை எடுத்துரைக்கிறார்.

மேலும்,

‘கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லாது உயிருண்ணுங் கூற்று’. *(குறள்.326)*

கொல்லாத அறத்தை மேற்கொண்டு நடக்கின்றவனுடைய வாழ் நாளின் மேல், உயிரைக்கொண்டு செல்லும் கூற்றுவனும் செல்லமாட் டான் என்னும் கருத்திற்கு ஏற்ப,

‘கொலையினை விலக்கினார்க்குக் கூற்றமும் விலக்கும்’
(கொலை விலக்கல்.10)

என்ற பாடல் வரியில் வள்ளுவரின் கருத்தினை வ.உ.சி. எடுத்துரைக்கிறார்.

‘இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்’ *(குறள்.623)*

என்ற குறளுக்கு,

'இடுக்கணி லழியா ரிடுக்க ணழியும்' (இடுக்கண் அழியாமை, 7)

என்ற பாடல் வரியிலும்,

'அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு' (குறள்.73)

என்ற குறளுக்கு,

'ஆருயிர் பெற்றதிங் கன்புசெய் தற்கே' (அன்பு வளர்த்தல், 4)

என்ற பாடல் வரியிலும், வள்ளுவரின் கருத்தினை வ.உ.சி. தனது நூலில் எடுத்துரைக்கின்றார். இவ்வாறு வள்ளுவர் இரண்டு அடிகளில் எடுத்துரைத்த கருத்துகளை வ.உ.சி. மெய்யறம் நூலில் ஒரு வரியின் மூலமாக எடுத்துரைக்கிறார். இதன் மூலமாக வ.உ.சி.யின் நுட்பமான இலக்கிய அறிவினை அறிந்து கொள்ள முடிகின்றது.

ஆத்திசூடியும் - மெய்யறமும்:

வள்ளுவரின் கருத்தினை மெய்யறத்தில் எடுத்துரைப்பது போல இதர சில நூல்களின் கருத்துகளையும் வ.உ.சி. தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் ஆத்திசூடி நூலும் ஒன்றாகும்.

'இளமையில் கல்' (ஆத்திசூடி.29)

இளமையில் கல்வியினைக் கற்க வேண்டும் என்ற கருத்தினை,

'இளமைப் பருவ மியைந்த ததற்கே' (மாணவர் கடமை.3)

என்ற பாடல் வரியிலும்,

'சேரிடம் அறிந்து சேர்' (ஆத்திசூடி.50)

நல்ல நண்பர்களையும், நன்மை தரும் இடங்களையும், நல்லோர்களையும் ஆராய்ந்து அறிந்து அவர்களுடன் சேர வேண்டும் என்ற கருத்தினை,

'தினமு நல்லினம் தெரிந்து சேர்ந்திடுக' (நல்லினஞ் சேர்தல். 10)

என்ற பாடல் வரியில் எடுத்துரைக்கிறார். இவ்வாறு ஆத்திசூடியின் கருத்தினை வ.உ.சி. தனது மெய்யறம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கொன்றைவேந்தனும் - மெய்யறமும்:

திருக்குறள், ஆத்திசூடி போன்று கொன்றைவேந்தன் நூலின் கருத்துகளையும் வ.உ.சி. தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். அறக் கருத்துக்களை எடுத்துக்கூறும் கொன்றைவேந்தன் நூலின் சில பாடல் கருத்துக்களை மெய்யறம் நூல் எடுத்துரைக்கிறது.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' (கொன்றைவேந்தன்.1)

நம்மைப் பெற்றெடுத்த அன்னையும் தந்தையும் நமக்கு முதல் தெய்வம் என்று பொருள் விளக்கம் தரும் கொன்றைவேந்தன் பாடல் கருத்தினை எடுத்துரைப்பது போல,

'தாயுந் தந்தையுந் தம்முதற் தெய்வம் '(தாய் தந்தையரைத் தொழுதல். 1)

வ.உ.சி. யின் மெய்யறப் பாடல் வரிகள் அமைகின்றன. மேலும்,

'இல்லற மல்லது நல்லற மன்று' *(கொன்றைவேந்தன்.3)*

அறம் சார்ந்த நல்ல குடும்ப வாழ்க்கை இல்லையெனில் வேறு நல்ல அறங்கள் இல்லை என்று பொருள் தரும் கொன்றைவேந்தன் பாடல் போன்று,

'இன்னிலை எவற்றினு நன்னிலை யென்ப' *(இல்வாழ்வு உயர்வு.6)*

மெய்யறம் நூலும் எடுத்துரைக்கிறது. இவ்வாறு கொன்றைவேந்தன் பாடல் கருத்துகளை எடுத்துரைப்பது போன்று வ.உ.சி.யின் மெய்யறம் பாடல் வரிகள் அமைகின்றன.

முடிவுரை:

மெய்யறம் என்பது வ.உ.சிதம்பரனார் கண்ணனூர் சிறையில் இருந்தபோது எழுதிய ஒரு நூல் ஆகும். இந்நூல், வாழ்க்கையின் பல்வேறு அறநெறிப் பாடங்களை விளக்குகிறது, மேலும் இது வ.உ.சி. அவர்களின் தியாக வாழ்க்கையின் ஒரு பகுதியாகவும் கருதப்படுகிறது. மக்கள் தீமைகளைந்து நல்வாழ்வு பெற உதவும் நிலையில் குறளின் அடிப்படையில் வ.உ.சி. இயற்றிய 'மெய்யறம்' என்ற அறநூல் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை அறியமுடிகிறது. மெய்யறம் என்னும் இந்நூலினைத் திருக்குறளின் வழிநூல் என வ.உ.சி. குறிப்பிடுவதும், இதனைத் தஞ்சை இராவ்பகதூர் சீனிவாசப்பிள்ளை அவர்கட்குக் காணிக்கையாக்கியுள்ளார் என்பதையும் காணமுடிகிறது. திருக்குறள் மட்டுமல்லாமல் தொல்காப்பியம், கலித்தொகை, ஆத்திசூடி, கொன்றை வேந்தன் என பல்வேறு நூல்களின் கருத்துகளையும் வ.உ.சி. எடுத்துக் கூறியிருப்பது அவரின் இலக்கியப் புலமையையும், இலக்கணப்பற்றை யும் காட்டுவதாக உள்ளது. இரண்டு அடிகளில் வள்ளுவர் எடுத்துரைக் கும் கருத்துகளை வ.உ.சி. ஓரடியில் எடுத்துரைப்பது சிறப்புக்குரிய தாகும். அதுமட்டுமின்றி இம்முறைவ.உ.சி.யின் நுட்பமான இலக்கியப் புலமைக்குச் சான்றாக விளங்குவதையும் அறியமுடிகிறது.

பயன்படுத்திய நூல்கள்:

1. சிதம்பரம் பிள்ளை, வ. உ,மெய்யறம்., வ.உ.சி. நூலகம்,முதல் பதிப்பு, சென்னை – 2004.
   2. திருக்குறள், வர்த்தமானார் பதிப்பகம், தியாகராய நகர் சென்னை -17, 2006
2. முனுசாமி. வி, உலகப் பொதுமறை திருக்குறள் உரை விளக்கம், திருமகள் நிலையம், 13, எர்ரபாலு தெரு, சென்னை, 1982.
3. இளம்பூரணர், (உ. ஆ) தொல்காப்பியம், கரந்தைப் புலவர்கள், தஞ்சாவூர்-2,1969
4. ஔவையார், ஆத்திச் சூடி மூலம், கௌரா பதிப்பகம், திருச்சி - 2021
5. ஔவையார் கொன்றை வேந்தன் மூலம், கௌரா பதிப்பகம், திருச்சி – 2021
6. சங்க இலக்கியம் மூலமும் உரையும் எட்டுத்தொகை பத்துப்பாட்டு, கோவிலூர், மடாலயப் பதிப்பு, வர்த்தமானன் பதிப்பகம்,சென்னை.2003.

19

வ.உ.சிதம்பரனாரின் படைப்புகளில் நாடும் மொழியும்

முனைவர் ம. ஏ. கிருட்டினகுமார்
தமிழ்த்துறைத் தலைவர், காஞ்சிமாமுனிவர் அரசினர்
பட்டமேற்படிப்பு & ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி.

முன்னுரை:

நாட்டின் விடுதலைக்குப் பொருளாதார விடுதலையே வழிவகுக்கும் என்பதனை உணர்ந்து பொருளாதார விடுதலையின்வழி விடுதலைப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தியவர் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. கப்பலோட்டுவதென்பது ஆங்கிலேயனை நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கான செயல் என உணர்ந்தார். அவருடைய கல்விப்புலமை, செல்வ வளம், குடும்ப உறவுகள் என அனைத்தையும் இழந்து 'நாடு ஒன்றே உயிர்' என வாழ்ந்த தமிழகத் தலைவர்களுள் மூன்று பேருக்குள் வருபவர் வ.உ.சி. மகாகவி பாரதியார், வ.உ.சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா, என்னும் பெயர்களே முதலில் நினைவுக்கு வருகின்றன. அதன் பின்னர் திருப்பூர் குமரன், வாஞ்சிநாதன், வீரபாண்டிய கட்டபொம்மன் என்னும் பெயர்களை எண்ணமுடிகிறது. இவ்வாறு வரலாற்றில் இடம்பெற்ற தமிழ்ப்பெயர்கள் மிகக் குறைவாக இருப்பதனைக் காணமுடிகிறது. எனவே, எழுத்தாளர்களின் பங்கு நாட்டின் வளர்ச்சிக்கும் வரலாற்றுக்கும் பெருந்துணை செய்கிறது என்பதனை உணரமுடிகிறது. அவருடைய நூல்களில் நாடும் மொழியும் எவ்வாறெல்லாம் போற்றப்பட்டது என்பதனை ஆய்வு செய்ய விழைந்ததன் விளைவாகவே இக்கட்டுரை அமைகிறது.

வ.உ.சி. கவிதைகள்:

வ.உ.சி.தம்பரனாரையும் சுப்பிரமணிய சிவாவையும் கைது செய்ய வேண்டும் என எண்ணியது ஆங்கிலேய அரசு. உணர்வற்றவர் களாய் இருந்த தமிழர்களுக்கு தம் பேச்சாலும் எழுத்தாலும் உரமூட்டி விடுதலைப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை உணரச்செய்தவர் வ.உ.சி. ஆட்சி செய்வோர் எவராயினும் அவர்களைப் பற்றிய எண்ணமே இல்லாது தமிழர்கள் வாழ்ந்துவந்தனர். அதனால்தான் ஒவ்வொரு நாட்டிலிருந்தும் அந்நியர்கள் மிக எளிதாக வந்து ஆட்சியைப் பிடித்துவிட்டனர். மண்ணின் மைந்தர்களையே அடிமையாக்கினர். இவ்வுண்மையைக் கற்றோர் மட்டுமே அறிந்திருந்தனர். கற்றவர்கள் எளிய மக்களுக்கு அடிமை நிலையின் இழிவினை உணர்த்தினர். தங்களின் அருமையினை உணராது வாழ்ந்த மக்களுக்கு அறிவை ஊட்டியது ஆங்கிலேயனுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது. உடனே அவர்கள்மேல் பொய் வழக்கினை இட்டுக் கைது செய்தான். அவ்வாறே வ.உ.சி. யும் கைது செய்யப்பட்டார். மக்கள் கொதித்தெழுந்தனர். ஆங்கிலேயருக்கு சவரமும் சவாரியும்,

துணிவெளுக்கும் தொழிலையும் செய்வதில்லை என உறுதிகொண்டனர். அந்த அளவிற்கு மக்கள் வ.உ.சி.யிடம் அன்பு கொண்டிருந்தனர். அவருடைய சொல்லும் எழுத்தும் வலிமையுடையனவாகச் சிறந்திருந்ததனை உணரமுடிகிறது.

மனம்போல் வாழ்வு – நூன் முகம் (1909):

வ.உ.சி. தம்முடைய நூல்களில் தமிழ் வளர்ப்பதற்குரிய வழிமுறைகளை அவருடைய 'மனம் போல் வாழ்வு' நூலின் நூன்முகத்திலேயே எடுத்துக்கூறியுள்ளதனைக் காணமுடிகிறது. 'சமஸ்கிருதச் சொற்களை உபயோகிக்க நேரும் இடங்களில், அவற்றின் தமிழ் மொழிபெயர்ப்புச் சொற்களையும் அவற்றின் பக்கங்களில் அவற்றிற்குரிய சமஸ்கிருதச் சொற்களையும் உபயோகித்துத் தற்காலம் நம் தமிழ்நாட்டில் வழங்கிவரும் சமஸ்கிருதச் சொற்களுக்கெல்லாம் சரியான தமிழ்ச்சொற்களை நம் தமிழ் மக்களுக்குக் கற்பித்து நாளடைவில் சமஸ்கிருதச் சொற்களைத் தமிழிலிருந்து வேரோடு களைந்துவிடலாம்1 என்கிறார் வ.உ.சி. தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தும் முறைகளை அறிவுறுத்தியுள்ளதனை எடுத்துக்காட்டுகிறார் மா.ரா.அரசு. 'விவேகபானு' இதழை நடத்துவதிலும் ஆர்வம் கொண்டிருந்தார் வ.உ.சி. எந்நிலையிலும் இதழ்கள் வெளிவருவது தடைபடக்கூடாது என உணர்ந்திருந்தார். 'வ.உ.சி.யும் அவர் நண்பர்களும் சேர்ந்து தொடங்கியதே அவ்விதழ் என்பதும் இவ்வாய்வின் முடிவுகளாக அமையவல்லன'2 என மா.ரா. அரசு குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது.

சிறையன்று சித்திரவதைக் கூடம்:

வ.உ.சி. கவிதைகளை எழுதி விடுதலை வீரர்களின் தியாகத்தை உணர்த்தியுள்ளார். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவது தங்கள் கடமை என எண்ணிய தேசபக்தர்கள் அனுபவித்த, கொடுந்துன்பத்தை

அந்தோ ! பாவம் ! அவர் என் செய்வார் !
எந்தச் செய்தியும் இயம்பினால் அடிவிழும்
அடியும் வெற்றடி அன்று ; கம்பம் போர்த்தி
அடியும் மிதியும் அநேகர் தருவர்

கம்பளம் போர்த்துமெய் வெம்பிட அடிப்பது
இச்சிறை அன்றிவேறு எச்சிறையிலும் இலை
அடிப்பவர் கைதிகள்; அடிக்கச் சொல்லுவோர்
ஜெயிலினை ஆளும் ஜெயிலர் ஆகியோர்
எவன் தான் அஞ்சான் இக்கம்பள அடி 3

என மிகவும் வருத்தத்துடன் இப்பாடலை எழுதியுள்ளார். பிறருடைய துன்பத்தைக் கண்டு வருந்தினாரே அன்றி தனக்கு ஏற்பட்ட துன்பத்தை பெரிதாக எண்ணாமல் தேச விடுதலைக்காகப் பாடுபட்டார். எந்நிலையிலும் தன்னுடைய தேசப்பற்று மாறாதென்பதனை,

என் மனமும் என் உடம்பும் என் சுகமும் என் அறமும்
என் மனையும் என் மகவும் என் பொருளும் – என மனமும்
குன்றிடினும் யான் குன்றேன் ; கூற்றுவனே வந்தாலும்
வென்றிடுவேன் காலால் மிதித்து' 4

என்னும் அடிகளில் உணர்த்திவிடுகிறார் வ.உ.சி.

செந்தமிழின் அருமை:

தமிழ்மொழியில் இல்லாத சொல் இல்லை. இதனை உணராமல் பிறமொழிக் கலப்பை ஏற்பது நன்றன்று எனக் கருதினார். தாய்மொழி அறிவினை வளர்க்கும் வகையில் 'குறித்த பொருளைச் சரியானபடி குறிப்பிட நம் பாஷையில் பதங்களில்லையென்று தமிழ் பாஷை இலக்கண இலக்கியங்களைக் கற்றவர் எவரும் கூறார்' 5 எனத் 'தமிழ்' என்னும் கட்டுரையில் வ.உ.சி. எழுதியுள்ளார். 'யுத்த சம்பந்தமான பதங்களுக்கும் விஞ்ஞான சம்பந்தமான சொற்களுக்கும் சரியான தமிழ்மொழிகளை நாம் சிருஷ்டித்துக் கொள்ளலாமாதாலால் அவற்றிற்கும் நாம் ஆங்கிலமொழிகளை உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை' 6 எனச் சுதேசமித்திரனில் வெளியான கூற்றை எடுத்துக்காட்டிவ.உ.சி.யின் தமிழ்ப் பற்றினை வெளிப்படுத்துகிறார்.

மொழியின் சிறப்பும் மொழிபெயர்ப்பும்:

உலகிலுள்ள இலக்கியங்களை அறிந்துகொள்ளவும் நம் இலக்கியச் செல்வங்களைப் பிறமொழிக்கு எடுத்துச்செல்லவும் மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது. 'இன்றியமையாத அளவு' வடசொற்களைக் கலந்து எழுதுவதில் பிழையில்லை என எண்ணியவர் வ.உ.சி. இன்றைய நடைமுறையில் அது உண்மையாகி விட்டது. இன்றைய மாணாக்கர்கள் ஆங்கிலத்திலேயே நிறத்தையும் நாட்களையும் கூறுவதன்வழி இவ் வுண்மையினை உணர்ந்துகொள்ளமுடிகிறது.

ஆங்கிலமொழிப்புலமை:

தமிழில் மட்டுமின்றி ஆங்கில மொழியிலும் தேர்ச்சி பெற்று விளங்கியவர் வ.உ.சி. எனவே, ஜேம்ஸ் ஆலன் எழுதிய நூல்களில் தம் மக்களுக்குத் தேவையான அருங்கருத்துகளைத் தமிழில் மொழிபெயர்த்து நூல்களாக வெளியிட்டார். எண்ணங்களே சொல்லாகவும் சொற்களே செயலாகவும் செயலே பழக்கமாகவும் பழக்கமே வழக்கமாகவும் மாறிவிடுகிறது. அதுவே நடத்தையாகி ஒழுக்கத்தை வெளிப்படுத்துகிறது. எனவே ஒருவருடைய ஆளுமையை வளர்க்கும் வகையில் ஜேம்ஸ் ஆலன் எழுதிய 'அஸ் அ மேன் திங்கெத்' என்னும் ஆங்கில உரைநடையை 'மனம் போல் வாழ்வு' என மொழிபெயர்த்துள்ளார். மேலும் ஜேம்ஸ் ஆலனின் 'தி பாத் ஆஃப் ப்ராஸ்பரட்டி' என்னும் தலைப்பை மிகவும் அழகாக 'வலிமைக்கு மார்க்கம்' என 1916 ஆம் ஆண்டு மொழிபெயர்த்துள்ளார். எச்சூழலையும் எதிர்கொள்ளும் துணிவும்; துன்பத்தையும் இன்பத்தையும் ஒன்றாகக் காணும் பண்பும்; தன்னைத்தானே கட்டுப்படுத்தும் உறுதிப்பாடும் இருந்தால் எந்நிலையிலிருந்தும் விடுபட்டு வெற்றி

இலக்கினை அடைய முடியும் எனக் கூறுகிறார் வ.உ.சி. ஜேம்ஸ் ஆலன் எழுதிய 'அமைதிக்கு வழி' என்னும் கட்டுரையை மிகவும் அழகாக 'சாந்திக்கு மார்க்கம்' என மொழிபெயர்த்துள்ளார். அன்பே வடிவாக விளங்கும் கடவுளை அடைய விரும்பினால் அன்பு வழியினையே பின்பற்றவேண்டும் என அறிவுறுத்தும் வகையில் இருப்பதனை 1934 ஆம் ஆண்டு மொழிபெயர்த்து நூலாக வெளியிட்டார்.

மெய்யறமும் மெய்யறிவும்:

திருக்குறளைப் போலவே அதிகாரங்களைக் கொண்டு பாடல்கள் எழுதினார் வ.உ.சி. 125 அதிகாரங்களில் 1250 பாடல்கள் இடம்பெற்றன. மெய்யறமானது மாணவர்களுக்கென 30, இல்லறத்தார்க்கென 30, அரசனுக்கென 50, நன்னெறிக்கென 10, உண்மை நெறிக்கென 5 என அதிகாரங்கள் வகுத்துப் பாடினார். 1914 ஆம் ஆண்டு இதனை எழுதினார். வ.உ.சி. சிறையில் இருந்தபொழுது உடனிருந்த கைதிகள் அறவுரைகளைப் பாடலாக வடித்துக்கொடுக்க வேண்டினர். அப்படி மிக எளிமையாக எழுதிக்கொடுத்தார். அளவடியால் ஆன பத்துப் பாடல்கள் பத்து அதிகாரங்களில் எழுதினார். பிறரை உணரும் அறிவு பொய்யறிவு. தன்னை உணரும் அறிவே மெய்யறிவு என்பதனை இந்நூலின் வழி உணர்த்தினார் வ.உ.சி. இந்நூலையும் அவர் எழுதிய கவிதைகளின் தொகுப்பினையும் 1915 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

தன் வரலாறு:

முள்ளை முள்ளால் எடுப்பதைப்போல ஆங்கிலேயரை வணிகத் தாலேயே விரட்டியடிக்கவேண்டும் என எண்ணிப் பலருடைய உதவியை நாடி கப்பல் போக்குவரத்தை ஏற்படுத்தினார் வ.உ.சி. வணிகம் செய்யவந்த பரங்கியன் வணிகம் செய்வதை விட்டுவிட்டு நாடாளும் ஆசையில் மக்களை அடிமையாக்கினான். தான் வைத்ததே சட்டம் என உணவுப் பயிர்கள் விதைப்பதைத் தடுத்தான். செயற்கைப் பஞ்சத்தை உருவாக்கினான். அவனை இந்நாட்டைவிட்டுத் துரத்த 'சரியான பரிகாரம் தேடினார் வ.உ.சி. அதன் பலனாக 'தரும சங்க நெசவுச் சாலை', 'சுதேசிய நாவாய்ச் சங்கம்', 'சுதேசியப் பண்டக சாலை'7 என வ.உ.சி. நிறுவியதனை பிச்சமூர்த்தி குறிப்பிட்டுள்ளார். நம் நாட்டுப் பொருள்களை மட்டுமே வாங்கினாலே நம் நாடு முன்னேறிவிடும் என்னும் கருத்தினைத் தம்முடைய நூல்களில் பதிவுசெய்துள்ளார்.

முத்தான பணிகள்:

வ.உ.சி. வழக்கறிஞர், தொழிற்சங்கத் தலைவர், விடுதலைப் போராட்ட வீரர், எழுத்தாளர், பேச்சாளர், எனப் பல முகங்களைக் கொண்டு நூல்களை எழுதி அத்தனையையும் எழுத்துகளாகப் பதிவுசெய்து நாட்டிற்காகவும் மொழிக்காகவும் பாடுபட்டார். தாய்நாட்டுக்குக் கேடுசெய்து வாழ்வதைவிட மக்களுக்காக வாழ்ந்து உயிர் விடுவது மேல் என எண்ணினார். பாலகங்காதரத் திலகரைத் தலைவராகக் கொண்டதால் இவ்வெண்ணம் அவருக்குத் தலையாயது. வ.உ.சி.

வீட்டில் தங்க நகைகளையே மரக்கால் அளவில்தான் அளப்பார்கள் என அவருடைய செல்வச்செழிப்பைக் குறிப்பிடுவார்கள். அத்தகைய செல்வந்தர் பின்னாளில் வறுமையில் வாழ்ந்தார்.

தலைமுறையை வாழவைத்த தலைவர்:

வறுமையைக் கொடுத்து விடுதலை வேள்வியை அணைத்தனர். அடிவருடிகள் மட்டும் பட்டத்தைப் பெற்று பொருளாதாரத்தில் உயர்ந்து அதிகாரத் தோரணையுடன் வாழ்ந்தனர். உண்மையாக நாட்டுக்காகப் போராடியவர்கள் வறுமையிலும் பசியிலும் சிக்கி நாடொன்றே வாழ்வெனக் கருதினர் ; ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடினர் ; இறப்பதொன்றே உறுதி என்னும் பொழுதிலும் தளராது போராடினர். அவர்களுடைய ரத்தம் சிந்தியதால்தான் அடுத்த தலைமுறை சுதந்திரக் காற்றை சுவாசித்தது என்பதனையும் உணர்ந்துகொள்ள முடிகிறது.

தண்டனையும் வேலை நிறுத்தமும்:

வ.உ.சி. அவர்களின் விடுதலை உணர்வு அவருடைய பேச்சில் வெளிப்பட்டது. அவருடன் சுப்பிரமணிய சிவாவும் பேசியதைக் கேட்ட மக்கள் தம் அடிமை நிலையினை உணர்ந்தனர். ஆங்கிலத் தளையிலிருந்து விடுபட ஒன்று கூடினர். இவர்கள் இருவரும் பேசினால் சவம் கூட ஊக்கம் பெற்றுவிடும் என எண்ணி ஆங்கில அரசு இருவரையும் கைது செய்தது. வ.உ.சி. அவர்களுக்கு 40 ஆண்டு காலச் சிறைத்தண்டனை வழங்கியது. எங்கிருந்தோ வந்த ஆங்கிலேயன் மண்ணின் மைந்தனுக்குச் சிறைத்தண்டனைவழங்கினான். தொழிலாளர்கள்எதிர்த்துப்போராடினர். 14.03.1908 முதல் 19.03.1908 வரை நடைபெற்ற வேலை நிறுத்தமே முதல் வேலை நிறுத்தமாகவும் கருதப்படுகிறது. அக்கைது நடவடிக்கையே விடுதலை வரலாற்றில் நீண்ட ஆண்டு சிறைத்தண்டனையாகவும் இருந்ததனைக் காணமுடிகிறது.

உரையாசிரியராக...:

தமிழ் இலக்கியங்களின் பெருமையினை உலகறியச் செய்யும் பணியில் நூலாசிரியர்கள் ஈடுபட்டனர். வ.உ.சி. இளமையிலேயே தமிழறிஞர்களிடம் தமிழ் கற்று தமிழ்ப்பற்றுக் கொண்டார். எனவே மெய்யியலிலும் அறத்திலும் அவருடைய நாட்டம் தோய்ந்திருந்தது. எனவே, இன்னிலை (1917), சிவஞானபோதம் (1935), திருக்குறளுக்கு உரை (1935) எழுதினார்.

தொல்காப்பியமும் திருக்குறளும்:

தமிழில் கிடைத்த முதல் இலக்கண நூலான தொல்காப்பிய நூலிலுள்ள அனைத்து அதிகாரங்களுக்கும் உரை எழுதியவரும் உரையாசிரியர் எனப் போற்றப்படுபவருமான இளம்பூரணர் உரையை 1928 ஆம் ஆண்டு பதிப்பித்துள்ளார் வ.உ.சி. அவ்வாறே அறநூல்களில் முதன்மையானதாகக் குறிப்பிடப்பெறும் திருக்குறள் மணக்குடவர் உரையையும் 1917 ஆம் ஆண்டில் பதிப்பித்தார்.

வீர சிதம்பரனாரின் துணிவு:

வ.உ.சி. பிறமொழிக்கலப்பை எதிர்த்தார். மொழிபெயர்ப்பிலும் தமிழ்மொழி வளர்வதற்கான வழிமுறைகளைக் கூறினார். அத்தகைய வீரம் கொண்ட வ.உ.சி.யைக் கண்டு ஆங்கிலேயர் அஞ்சினர். அந்த அச்சத்தின் விளைவாகவே அவரைக் கைது செய்தனர்.

வெள்ளித்தட்டில் உண்டவருக்கு மண்சட்டியைக் கொடுத்து உண்ணச் செய்த பொழுதும் வீணாய்ப் போன உணவளித்தபொழுதும், சிறை அதிகாரியாக்குகிறோம் விடுதலையாகிவிடலாம் எனக் கூறியபொழுதும் இம்மியளவும் தளராமல் அத்தனை துன்பங்களையும் பாரத அன்னையின் மேல் கொண்ட அன்பினால் பொறுத்துக்கொண்டார்.

எனவே இவரை வீர சிதம்பரனார் என்றே அவர்காலத்தில் வாழ்ந்த பலரும் குறிப்பிட்டுள்ளனர். ‘*உச்சி மீது வானிடிந்து வீழினும் அச்சமில்லை அச்சமில்லை* என்று பாரதியார் கர்ஜித்தார். அதற்கு வீர சிதம்பரனாரின் வாழ்க்கையே ஓர் இலக்கியம்’ 8 என சுப்பிரமணிய ஐயர் குறிப்பிட்டுள்ளதே சான்றாகிறது.

தமிழ்த்தாயின் ஆறுதல்:

வ.உ.சி. சிறையிலிருந்தவர்க்குத் துணையாகப் பாரத அன்னை நின்றதைப்போல சிறையிலிருந்து வெளிவந்தபிறகு தமிழன்னைத் துணையாக நின்றதனைக் காணமுடிகிறது. இதனை, வ.உ.சி.யின் மொழிகளாக ரா.பி. சேதுப்பிள்ளை

சிறைச்சாலையில் செக்கிழுத்த
துயரத்தை மாற்றியது என் செந்தமிழன்றோ?
கைத்தோல் உரியக் கடும்பணி புரிந்தபோது
என் கண்ணீரை மாற்றியது கன்னித் தமிழன்றோ ?
தொல்காப்பியத்தைப் படித்துப் படித்து
என் தொல்லையெல்லாம் மறந்தேன்.
இன்னிலையைக் கற்று என் இன்னல்களையெல்லாம் வென்றேன்.

என்னும் கவிதையில் புலப்படுத்துகிறார். வ.உ.சி. வரலாற்றைப் படிக்கும் ஒவ்வொருவரும் வ.உ.சி. யாகவே மாறிவிடுவதனையும் இப்பாடலின்வழி உணரமுடிகிறது.

தமிழறிஞர்களுக்கு உதவி:

நூலினை எழுதுவதோடு நூலினை ஆய்வு செய்வதிலும் வல்லவராகத் திகழ்ந்தவர் வ.உ.சி. தமிழாசிரியர்களுக்குக் கொடுக்கும் ஊக்கமானது எக்காலத்திலும் குறையவே கூடாது என உணர்ந்திருந்தார் வ.உ.சி. வள்ளல் பரம்பையில் வந்தவராதலால் பண்பாட்டினை வளர்க்கும் தமிழாசிரியர்களுக்குக் கொடையளித்து மகிழ்ந்தார். ‘தூத்துக்குடி வக்கீலும் தமிழ் வித்துவான்கட்குத் தாய்போன்ற பரோபகாரியும் நூல் ஆராய்ச்சியிலேயே நெடுநேரம் போக்கி மகிழ்பவரும் ஆகிய ஸ்ரீமாந் வ.உ.சிதம்பரனார் வருஷந்தோறும் ரூ.12 நன்கொடையளித்து

வருவதாகவும் தெரிவித்துள்ளார்கள்’[9] என விவேகபானு இதழில் கந்தசாமிக் கவிராயர் குறிப்பிட்டுள்ளது வ.உ.சிதம்பரனாரின் தமிழ்ப் பற்றினைப் புலப்படுத்தும்.

நிறைவாக...

1872 முதல் 1936 வரை அறுபத்து நான்கு ஆண்டுகள் வாழ்ந்து நாட்டிற்காகவும் மொழிக்காகவும் தம்மைக் கரைத்துக்கொண்டிருக்கிறார் வ.உ.சி. எனத் தெளியமுடிகிறது. மக்கள் அவருடைய தொண்டினையும் தியாகத்தையும், வீரம் செறிந்த பேச்சினையும் அறம் நிறைந்த எழுத்துகளையும் மறந்துவிடவேண்டும் என்பதற்காகவே ஆங்கிலேயன் பல ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தான். அவர் சிறையிலிருந்து வெளியே வந்தபொழுது ஒருவரும் வரவில்லை. வ.உ.சி.யிடம் நெருங்கிய நட்புடன் இருந்த சுப்பிரமணிய சிவா மட்டுமே வரவேற்றார். அவர் பற்ற வைத்த விடுதலை வேள்வித்தீ ஆங்கிலேயரால் அணைக்கப்பட்டது. எனினும் மக்கள் அடுப்பைப் பற்றவைக்கும் மண்ணெண்ணையை விற்றுத் தம் கடைவாழ்வை நடத்தியதனையும் காணமுடிகிறது. அவருடைய மொழிப்பற்று ஒன்றே அவருக்கு இறுதிநாள் வரை ஆறுதல் அளித்துள்ளது என்பதனை அவருடைய படைப்புகள்வழித் தெளிவாக உணரமுடிகிறது..

அடிக்குறிப்புகள்:

1. தமிழ், குமரிமலர், சூலை, 1968, பக்,28.29,
2. வ.உ.சி. வளர்த்த தமிழ், ப. 32,
3. வீர சிதம்பரனார். ப. 68,
4. வீர சிதம்பரனார், ப. 68,
5. சுதேசமித்திரன், 29.10.1915,
6. மா .ரா. அரசு, வ.உ.சி. வளர்த்த தமிழ், ப. 21,
7. பிச்சமூர்த்தி.கி., வ.உ.சி.யின் வீரகர்ஜனை, ப.15,
8. முகவுரை, வீரசிதம்பரனார்,வ.உ.சி. வளர்த்த தமிழ், ப.40.

துணைநூற்பட்டியல்:

1. சுதேசமித்திரன், 29.10.1915, மறுவெளியீடு – குமரிமலர், சூலை, 1968.
2. வ.உ.சி.யின் வீரகர்ஜனை, சமதர்ம நிலையம், குளித்தலை, முதற்பதிப்பு, 1947.
3. வீரசிதம்பரனார், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதற்பதிப்பு, 1952.

20

வ.உ.சி.யின் 'மெய்யறம்' புலப்படுத்தும் 'அரசியல் அறம்'

திருமதி இரா. சுகுணாதேவி
திருப்பூர் வழக்குரைஞர்/நோட்டரி பப்ளிக், முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்),
தமிழ் முதுகலை & உயராய்வுத்துறை,
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, மதுரை.

ஆய்வுச் சுருக்கம்:

சங்ககாலத்து இலக்கியங்கள் யாவும் அறம், அகம், புறம் என மூன்றாகப் பிரித்து வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் தமிழறிஞரும், எழுத்தாளரும், வழக்கறிஞரும், இந்திய விடுதலைப் போராட்ட வீரருமான திரு. வ.உ.சிதம்பரனார் அவர்கள், கேரளம், கண்ணனூர் சிறையில் (01.12.1910 முதல் 24.12.1912) இருந்த காலத்தில் எழுதிய 'மெய்யறம்' என்னும் நூல், ஏனைய அற, அக, புற நூல்கள் கொண்டிருக்கும் நெறிகள் அனைத்தையும் ஒருங்கே உள்ளடக்கிக் கொண்டிருக்கும் ஒரு முழுமையான நூல் எனக்கொள்ளலாம்.

இந்நூல் இளைஞர்களுக்கு நன்னடத்தை கற்பிக்கும் நோக்கில் எழுதப்பட்ட திருக்குறளின் வழிநூலாகும். அவருடைய காலத்திலேயே மூன்று பதிப்புகள் கண்டுள்ள இந்நூல், தெளிந்த சிந்தனை, வாழ்க்கையைப் பற்றிய அறிவு, ஞானம், ஒழுக்கம், பண்பாடு, வாழும் முறை ஆகியவற்றைக் கொண்டுள்ளது. அவ்வாறு மொத்தம் 125 அதிகாரங்கள் கொண்டும், ஒவ்வொரு அதிகாரமும், முறையே 10 வரிகள் கொண்டு, 1250 வரிகளில், மொத்தம் ஐந்து இயல்களாகக் கொண்டுள்ளது. அதில் மூன்றாவது இயலான 'அரசியல்' எனும் பகுதியில், 50 அதிகாரங்களை உள்ளடக்கி, அரசு சார்ந்த கருத்துகள் எண்ணற்ற அளவில் பொதிந்து கிடக்கின்றன.

மேலும், 'அரசு நலம்' முதல் 'அறம் புரிதல்' வரையான அதிகாரங்களில், சிறந்த அரசாளுகை மற்றும் மக்கள் நலன் குறித்த வழிகாட்டுதல்கள், சுற்றத்தை விரிவுபடுத்துதல், சூழ்ச்சிகளைப் புரிந்துகொள்ளுதல், சரியான நேரத்தில் முடிவெடுத்தல், சமுதாயத்தில் அறத்தை நிலைநிறுத்தும் முறைகள், தலைமைப் பண்பு, நீதி வழங்கும் முறை போன்ற பல்வேறு நெறிகள் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. மேலும், வ.உ.சி.யின் பார்வையில், ஒரு நாடு முன்னேற வேண்டுமெனில், ஒரு நல்ல அரசின் அமைப்பு, அதற்கு இருக்க வேண்டிய இயல்புகள், ஒற்றர்கள், அமைச்சர்கள் ஆகியோரின் இன்றியமையாமை, நாட்டின் சிறப்புகள், அதன் பாதுகாப்பு, நாட்டின் தொழில், படை, போர், வெற்றி, ஓர் அரசன் மக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகள் என அவர் குறிப்பிட்டவற்றைத் துல்லியமாக ஆராய்ந்து இவ்வாய்வுக் கட்டுரை விளக்குகிறது.

திறவுச்சொற்கள்: மெய்யறம், அரசியல் அறம்,வ.உ.சி.யின் படைப்பு, திருக்குறளின் வழிநூல்.

முன்னுரை:

மெய்யறம் நூல், திருக்குறளின் ஈரடி நீதிக்கருத்துகளை மையமாக வைத்து, அதன் வழிநூலாக, ஓரடியிலேயே எழுதப்பட்டு முறையே, மாணவரியல், இல்வாழ்வியல், அரசியல், அந்தணரியல் மற்றும் மெய்யியல் என ஐந்து பகுதிகளாகக் கொண்டுள்ளது. மெய்யறம் பற்றி, 'முப்பாலில் அறமும் பொருளும் தழுவி காலவேறுபாட்டிற்கு வேண்டிய விகற்பம் கூறலால் இந்நூல் திருவள்ளுவர் பயின்றாருக்கு வழி நூலாக விளங்குகிறது.' [1] என்கிறார் தமிழறிஞர். இக்கட்டுரை, வ.உ.சி. யின் அரசியல் சிந்தனைகள், அக்கால அரசியல் சூழலுக்கு எவ்வாறு பொருந்திவந்தது மற்றும் அவரது தனித்துவமான அரசியல் பார்வை என்ன என்பதை ஆய்வு செய்கிறது. மேலும் அரசாங்கம், நீதி, ஆட்சிசார்ந்த பொருளாதாரம் போன்றவற்றில் அவர் முன்வைத்த கருத்துகளையும் ஆராய்கிறது.

இன்று உலகம் முழுவதும் அரசியல் முன்னேற்றம் பல்வேறு படிநிலைகளில் வளர்ந்திருந்தாலும் அது சார்ந்த அரிய ஆய்வுகள் ஒரு நூற்றாண்டுக்கு முன்பே 'மெய்யறம்' எனும் செவ்வியல் நூலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்பதையும், அதில் காணப்படும் அரசியல் கூறுகள், இந்த நூற்றாண்டின் அரசியல் ஆராய்ச்சிக்கும், மனித சமுதாயத்தின் மனவளத்திற்கும், நாட்டு முன்னேற்றத்திற்கும் பெரு மளவில் ஒத்து வந்து, அவையாவும் இக்கால ஆய்வுக்கும் பொருந்தி வருகின்றன என்பதையும் விளக்குவதை இவ்வாய்வுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அரசு நலம்:

ஒரு நல்ல அரசு என்பது அனைத்து உயிர்களுக்கும் சிரசாக விளங்க வேண்டும் என்றும், முறையான அறம் கொண்ட ஆட்சி புரிந்து இறைவன் வழி நிற்கவேண்டுமென்றும் மிக எளிய சொற்களில் 'அரசு நலம்' எனும் அதிகாரத்தில் பின்வருமாறு ஆசிரியர் வ.உ.சி. கூறுகிறார்.

'அரசுயிர் கட்குச் சிரசென நிற்பது .... முறைசெய்
தறம்புரிந் திறையென நிற்றல்' - (மெய்யறம் 601-610)

இதே கருத்தாக, சமுதாயத்திலுள்ள குடிமக்கள் வாழ்க்கை நன்னிலை பெறச் செம்மையான நெறிகளை வகுத்து ஆட்சிபுரிதல், மக்களின் தேவைகளை உணர்ந்து, செங்கோன்மையாக அறந்தவறாது, அல்லவை நீக்கிச் சமுதாயத்தினை மேன்மையுறச் செய்தல் அரசின் கடமை என்று,

'அறனிழுக்கா தல்லவை நீக்கி மறன்இழுக்கா
மானம் உடையது அரசு'- (குறள்.384)

எனும் குறளில் கூறப்பட்டுள்ளது.

அரசின் செங்கோன்மைப் பாங்கு:

'கண்ணோட்டம்' எனும் அதிகாரத்தில்,

'கண்ணோட்டஞ் சுற்றமேற் கண்ணோடி வீழ்தல்

முறை செய்யும் பொழுததை முற்றுமே விடுக ' *(621-630)*

என்பதில் நல்லோர் தீயோர் என்று இனங்கண்டு, குற்றங்களை நன்கு ஆராய்ந்து உண்மை கண்டு செயல்பட வேண்டுமென்கிறார். இதே கருத்தாக, குற்றங்களை ஆராய்ந்து எவரிடத்திலும் பாகுபாடு காட்டாமல், வேண்டியவர் வேண்டாதவர் எனப் பாராது நடுநிலையோடு குற்றத்தினை அறிந்து தண்டனை வழங்கச் சொல்லும் மன்னனின் செங்கோன்மையை வள்ளுவர் பின்வருமாறு உணர்த்துகிறார். 'ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்

தேர்ந்துசெய் வஃதே முறை'- *(குறள்.541)*

இக்கருத்தினை அடியொற்றி, நான்மணிக்கடிகையின் பாட லொன்று, மன்னன் என்பவன் எத்தகையவரிடமும் ஒருசார்பின்றி ஆட்சி புரிவதே நீதிமுறை எனவும், நடுநிலையோடு இருந்து ஆராய்ந்து நடப்பவனே அரசாளும் இயல்புடையவனாவான் எனவும் அரசாளும் தகைமையினைச் செப்புகிறது. 'கண்ணோட்டம் இன்மை முறைமை தெரிந்து ஆள்வான்

உண்ணோட்டம் இன்மையும் இல்' (நான்மணிக்கடிகை.96)

அரசின் கட்டமைப்பு:

ஓர் அரசின் கட்டமைப்பு பற்றி, 'ஒற்றாளுதல்' எனும் அதிகாரத்தின் கீழ், ஒரு அரசுக்கு ஒற்றர்களும் அவர்களின் பணிகளும் எவ்வளவு இன்றியமையாதவை என்றும், ஒற்றரில்லா அரசு வெற்றிகளை இழப்பது பற்றியும் கீழ்க்காணும் வரிகளில் குறிப்பிடுகிறார்.

'ஒற்றுவினைஞர்பகை சுற்றமறைந் தறிவது.... .... ஒற்றிற் கயலா
ருணர்ந்திடா தீக' - (மெய்யறம் 661-670)

மேலும் 'அமைச்சாளுதல்' எனும் அதிகாரத்தில், ஒரு அரசுக்கு இனிதே அமைவது அமைச்சரவை என்றும், அரசின் செயலுக்கும் குடிமக்களுக்கும் அன்னையைப் போல அரவணைத்திருந்து நுண்ணறிவுடன் அரசை இயக்குவதும் அமைச்சின் கடமை என்றும் நவில்கிறார். அதனை, 'அமைச்சர சிற்கினி தமைவன சொல்வது.... .... அரசுவிக் கிரமனி னன்புகொண் டாள்க' (மெய்யறம் 681-690) எனும் வரிகளில் கூறுகிறார்.

நாட்டை ஆளும் அரசுக்குத் துணைநிற்பவர்கள் அமைச்சர்கள். இம்மரபு அக்காலம் முதலே ஆட்சிமரபாக இருக்கின்றமையைக் காணமுடிகிறது. இவ்வமைச்சர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறையை அமைச்சு அதிகாரத்தின்வழி வள்ளுவர், 'அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றுந் திறனறிந்தான் தேர்ச்சித் துணை' (குறள்.635) என்கிறார். அறநெறியினை நன்கு உணர்ந்தவராகவும், சொற்திறன் கொண்டவராகவும், செயல்திறன் உடையவராகவும் இருப்பவரே ஆலோசனைகள் கூறக்கூடிய துணையாக அரசுக்கு விளங்கமுடியும் என்கிறது மேற்காணும் குறள்.

அரசின் பாதுகாப்பு:

மேலும் 'அரண்' எனும் அதிகாரத்தில்,' 'அரணுயிர் பொருள்களை யளிக்குமோர் காப்பு….. நாட்டில் தமையுமிந் நான்கு மகவரண்'(மெய்யறம் 771-780) என்கிறார். இயற்கையும் செயற்கையும் சேர்ந்து இயைந்து வரும் அரண் என்றும், அரசின் உயிரையும் பொருள்களையும் காப்பதே நற்றன்மை பெற்ற அரண் என்றும், அவை புறவரண், அகவரண் என இருவகைப்படும் என்றும் கூறுகிறார்.

தொடர்ந்து கண்டத்தைச் சூழ்ந்துள்ள கடல்நீர் புற அரண் என்றும், அதனையடுத்து பகைவரைக் கொல்லும் கருவிகள் முதலியவற்றைக் கொண்டுள்ள நிலமும் (அருநிலம்) புற அரண் என்றும், அதனை யடுத்துள்ள மலைத்தொடரும் புறவரண் என்றும், மலையை அடுத்துள்ள மரக்காடும் புறவரண் என்றும் இவையாவும் ஒரு நாட்டுக்கு அமையும் இயற்கையரண் என்கிறார். புறநாடுகளால் தீமை பயக்காமல் காப்பது புறவரண்களாகும். ஒரு நாட்டுக்கு இவை நான்கும் தன்னகத்தே அதாவது தன் நாட்டுக்குள் அமைந்து, உயிர்க்குடிகளையும் அரும்பொருள்களையும் காத்தால் அதுவே நாட்டைக் காக்கும் அகவரணும் ஆகும் என்கிறார்.

'அரணமைத்தல்' எனும் அதிகாரத்தில், அரண் அமைத்தல் என்பது ஒரு அரும்பெருஞ்செயல் என்றும், அது அமைக்காவிடில் அரசே இல்லை, தகுந்த நெறியுள்ள இடமெல்லாம் கொல்கருவிகளை நிரப்பவேண்டுமென்றும் பொருள்பட,

> *'அரணிலார்க் கரசிலை யாசிலார்க் காணிலை…..*
> *நெறியுள விடனெலாம் பொறிகளை நிரப்புக' - (மெய்யறம் 781-790)*

எனும்வரிகளில் பாடுகிறார்.

'அரணளித்தல்' (மெய் 711-780) எனும் அதிகாரத்தில், நீர்நிலை, நிலம், மலை, மதில், காடு போன்ற இடங்களில் வலிமையுடைய படைகளை நிறுத்தவேண்டும் என்றும், திறன்மிகு அரண் அமைத்த அரசு வாழ்க என்றும் வாழ்த்துகிறார்.

'படை' (மெ 851-860) எனும் அதிகாரத்தில், பகைவர்களின் உயிரைப் பட்டுப்போகச்செய்து படுத்தலால் படை எனப்படுகிறது என்றும், கப்பல் படை முதல் வானூர்திப்படைவரை படைக்கலன் வைத்திருந்து, தாம் பெறும் வெற்றியால் அரசுக்குப் புகழும் இன்பமும் ஈவது படையே என்றும், படையற்ற அரசு மாபெரும் பொருளை இழப்பரென்றும் தோல்வியால் அடிமையாகச் சென்று சிறை புகுந்து உழல்வர் என்றும், பிணி பசியால் நரகமும் பழியுமாகக் கிடப்பர் என்றும் மொழிகிறார். மேலும், படைவகை நான்கு என்றும், பகைவரின் திறம் எண்ணி அதற்கீடாகப் படைக்கலம் அமைக்க வேண்டுமென்றும், பகைவரை அழிக்க கூர்மையான ஆயுதங்கள் வேண்டுமெனவும் காலாட்படை முதல் கருவிகள் வரை அதன் இன்றியமையாமையைக் கூறுகிறார். மேலும் 'படையமைத்தல்' அதிகாரத்தில் தேர்ப்படை, யானைப்படை குதிரைப்படை, நாட்டுக்காக உயிர் நீங்கும் இனிதான் வீரர்கள்

கொண்டபடை என்று அமைத்து, உரிய வலிய தலைவர்களை உரிய இடத்தில் அமர்த்தவேண்டுமெனவும் குறிப்பிடுகிறார். ‘படையளித்தல்’ எனும் அதிகாரத்தில் படையே தன்னுயிர் எனப்போற்றுபவரைத் திறனறிந்து அமர்த்தவும், படைகளை இன்புறச்செய்ய அவ்வப்போது அவரைப் போற்றிப் பரிசில் வழங்குமாறும் கோருகிறார். ‘பகைமை’ எனும் அதிகாரத்தில், ‘பகைமை யென்ப திகலது முதிர்வு.... ... ...தம்பா ருயிரைத் தாமழித் தொழிவதோ?’ (941-950) வரிகளில் பகைமை என்றால் என்ன என்றும், முதிர்வை இகல்வது பகைமை என்றும், பழமையை மறுப்பதைப் பகைமை என அறிக என்றும் விளக்குகிறார். பகைமையில் கொடியது உட்பகைமையென்றும், அதை விடாதவர்பால் யாது இவர் செய்வது, அன்பு பாராட்டி வளர்ப்பதோ, ஈகையென்று எண்ணி அவர் கரத்தில் இன்னுயிர் விடுப்பதோ, அறமென்றெண்ணித் துறவினை மேற்கொள்வதோ, தமது ஆருயிரைத் தாமே அழித்து ஒழிவதோ என வினவுகிறார். அதற்கடுத்து, ‘பகையடுநெறி’ எனும் அதிகாரத்தில் பகைமையை விடாது பாராட்டுவோரை அடக்குவதற்குப் பலநெறிகள் உண்டென்றும், அதற்கான பொருளறிந்து உட்பகையினரை உட்பகையாலேயே வென்றும், ஒட்டிமேய்வாரை ஒட்டிமேய்ந்தும் வெற்றி கொளல் நன்றென்கிறார். அமர்வகை எனும் அதிகாரத்தில் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை போன்ற போர் வகைகளைக் குறிக்கிறார். மேலும் அமர்த்திட்பம் எனும் அதிகாரத்தில், போர்நுட்பம் பற்றிக் குறிக்கிறார். வீரருடன் போர் புரிந்தாரை அனைவரும் துதிப்பரென்றும், துணிந்தபின் உறங்காது போர் புரிய வேண்டுமென்றும் பெரும்பயன் தருமெனில் அயராது வருந்தியும் செய்க என்றும் நவில்கிறார்.

மேலும், வலியறிதல் எனும் அதிகாரத்தில், போரிடுமுன் தம் படை வலிமை, பகைவரது படை வலிமை, பொருள் வலிமை, இரு படைகளின் ஏற்றத்தாழ்வு போன்ற அனைத்தையும் அறிந்து பின்னர் போரிடுமாறு அறிவுறுத்துகிறார். காலமறிதல் எனும் அதிகாரத்தில், பகல் போதில், வலிமைமிக்க கூகையைக் காகம் வெல்வதுபோல் காலமறிந்து போரிடல் வேண்டும் என்றும், தக்க காலம் வரும்வரை மீனுக்காகக் காத்திருக்கும் கொக்குபோலக் காத்திருந்து போர் புரிதல் மிகச்சிறப்புடைத்து என்கிறார்.

அரசின் கடமை:

‘குடி புரத்தல்’ - எனும் அதிகாரத்தில், ‘குடியெலா மகவெனக் கொண்டு மன் னோம்புக.... ......குடிபசித் துழலன்மன் குற்றமென்றறிக’ - (மெய்-1061-1070) எனும் வரிகள் மூலம், அரசு தம் குடிமக்களைக் குழந்தைகளைப் போல அரவணைத்துக் காக்கவேண்டும் என்றும், அறிவுள்ள சமுதாயமாக மாற்றி அரிய தொழில்நுட்பங்களை அறிந்திடச் செய்தும், அவர்களுக்குப் படைக்கலப் பயிற்சி தந்து வீரம் மிக்கவர்களாக மாற்றியும், அனைத்துப் பொருள்களும் அனைவருக்கும் கிடைக்க வேண்டிய நெருக்கடியும், மக்கள் பசியில் உழன்றால் அது அரசின் குற்றமென்று உணரவேண்டு என்கிறார். அரசின்கீழ் இயங்கும் நாடானது, பசியில்லாமலும், பிணியில்லாமலும், அயல்நாட்டின் பகையில்லாமலும் இருத்தலே

நலமாக அமையும். நாட்டினது அரசு நாட்டுப்பொருளால் பாரபட்சமின்றி அனைவருக்கும் பசிதீர்க்கும் அரசாகவும், பற்பல திட்டங்களின் வழி நாட்டு மக்களின் சுகாதாரத்தைப் பேணும் அரசாகவும், மற்றைய நாடுகளுடன் பகைகொள்ளாது அமைதியை விரும்பும் நாடாகவும் இருப்பதையே சிறந்த நாடென திருக்குறளானது நாடு இருக்கவேண்டிய இயல்பினை எடுத்துரைக்கிறது. இதே கருத்து குறளில், *'உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேரா தியல்வது நாடு' (குறள் 734)* என்று கூறப்பட்டுள்ளது.

மேலும், குடிமக்களை வருந்தவிடாமலும் தானும் வருந்தாமலும் மக்களைக்காத்து மக்களுக்குத் துன்பம் விளைவிப்பவரை அடை யாளங்கண்டு அவர்க்குத் தண்டனையளித்துத் தன் பணியைச் செவ்வனே செய்பவரே நல்ல ஆட்சியாளர் எனவும், குற்றத்தைக் கடிந்துரைத்தல் ஆள்பவருக்கு வடுவாகாது, மாற்றாக அது ஆள்பவரின் தொழிலே ஆகும் என்கிறது இக்குறள்:

'குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல
வடுவன்று வேந்தன் தொழில்' *(குறள் 549)*

மேலும், உழவு, வாணிகம், கைத்தொழில் போன்றவை பற்றியும் மெய்யறம் மொழிகிறது.

பிற ஆய்வாளர்களின் பார்வையும் ஒப்பீடும்:

மெய்யறம் நூலைத் திருக்குறள் பாடல்களின் பிழிவு என்று கூடக் கூறலாம்.[3] என்று அரங்க. இராமலிங்கம் கூறுகிறார். மேலும், திருக்குறள் மாமணி, மருத்துவர் க.கோபால் அவர்கள் எழுதிய 'திருக்குறளில் அறிவியல் கலைச் சொல்லாக்கம்' எனும் நூலில், அறிவின் வகைப்பாடுகளாக, உலகியலறிவு, பகுத்தறிவு, புல்லறிவு, முதிரா அறிவு, காரறிவு, பேரறிவு, வாலறிவு எனக் காண்பதாகக் குறிப்பிடுகிறார். அதுபோல்வ.உ.சி.யின் மெய்யறத்தில் அரசியல் எனும் இயலில் ஒரு நல்லரசுக்கு உண்டான பண்பாக அமைச்சியல், அரசியல், பகையியல், படையியல், நட்பியல் போன்ற அனைத்தும் காணக்கிடைக்கின்றன எனலாம்.

தொகுப்புரை:

வ.உ.சி. அவர்களின் மெய்யறம், உலகப் பொதுமறையான திருக்குறள் போல், அரசு, நாட்டு நலன், மக்கள் நலன் என சமூகச் சிந்தனைகளின் ஊற்றிடமாக உள்ளதை உணரலாம். மேலும், பழந்தமிழர் வாழ்வில் பலதுறைகளும் மேன்மையுடன்தான் இருந்திருக்கின்றன என்பதைத் திருக்குறள்வழி அறிவதைப்போல், மெய்யறமும், அரசும் சமுதாயமும் மேன்மையடையக் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுகலாறுகளை வரையறுப்பதைக் காணலாம். பல ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அவர், எவ்வகைச் சார்பையும் கடந்து, எதிர்மறைச் சிந்தனையை விடுத்து, எல்லோருக்கும் பொதுவான ஒரு நூலைப் படைத்துத் தந்திருப்பது தெளிவு. இவ்வாறு, 'அரசியல்' எனும் பகுதியின் அறநெறிக்கருத்துகளானது, பண்டைத்தமிழரின், தமிழ்மரபின் விளக்க

மாகவே கொள்ளலாம். ஓரடியிலுள்ள எளிமையான சொற்கள் தரும் வலிமையான கருத்து வளங்களைப் பல்லாயிரம் பக்கங்களாக விவரிக்க லாம். ஆதலால் இது காலத்தால் அழிக்கவியலா அற இலக்கியப் பெட்டகமாகப் போற்றப்படுகின்றது.இவ்வாறு நம் கப்பலோட்டிய செம்மல், செம்மொழியாம் பைந்தமிழில் படைத்துள்ள இந்நூல், உலக வாழ்வியலுக்கு மூலக்கருவாகவும், அறவழி மாண்புக்கு எடுத்துக் காட்டாகவும் விளங்குகின்றது. இவ்வாறு உலக அறநூல்களின் கருவூலமாகத் திகழும் 'மெய்யறம்' என்னும் அறநூல் எக்காலத்தும் போற்றிப் பேணவேண்டிய ஒரு தலையாய நூல் என்பதில் ஐயமில்லை.

அடிக்குறிப்புகள்:

1. ஸ்ரீமாந்.தி.செல்வகேசவராயமுதலியார். பச்சையப்பன் உயர்தரக்கலாசாலை, சென்னை. (மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத்திட்டம் - வ.உ.சி.பாடற்றிரட்டு - பக்கம் - 4)
2. ஸ்ரீ த.வேதியப்பபிள்ளை, கீம்பர்லெ, தென் ஆப்ரிக்கா.(மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம் - வ.உ.சி.பாடற்றிரட்டு - பக்கம் - 4)
3. டாக்டர். அரங்க. இராமலிங்கம். 'வ.உ.சி. கண்ட மெய்ப்பொருள்'. வானதி பதிப்பகம், சென்னை. 2006

துணை நூற்பட்டியல்:

1. மெய்யறம். வ.உ.சிதம்பரம்பிள்ளை. (இரண்டாம் பதிப்பு) 1917. கலாரத்நாகர அச்சியந்தரசாலை. சென்னை.
2. இந்திய வரலாற்றில் வ.உ.சி. பல.முத்துக்குமாரசுவாமி. 2017. கீதம் பப்ளிகேஷன்ஸ், சென்னை - 96
3. சுதேச எழுச்சி. யின் தியாகச் சுடர்கள். டாக்டர்.வே.வெங்கட்ரமன். வ.உ.சி.ஆய்வு வட்டம், தமிழ்நாடு வெளியீடு. 2025
4. வ.உ.சி.யும் மாசில்லாமணிப் பிள்ளையும். திருமதி. பிலோ ஜாண்.வ.உ.சி.ஆய்வு வட்டம், தமிழ்நாடு வெளியீடு. 2025
5. நாட்டுக்கு உழைத்த நல்லவர்கள். ஆர்.சி.சம்பத்& சு.குப்புசாமி.2018. எஸ்.எஸ்.என். புக் சென்டர். மீரா பிரஸ். சென்னை - 05
6. வ.சுப.மாணிக்கனார். திருக்குறள் தெளிவுரை. மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1991
7. பரிமேலழகர் உரை. திருவள்ளுவர் - பரிமேலழகர், திருக்குறள். கவிதா வெளியீடு. 4 ஆம் பதிப்பு: 2013

21

மெய்யறம் காட்டும் அரசியல்

பா. சுரேகா
தமிழ் ஆர்வலர், குரு தியேட்டர், பெத்தானியபுரம், மதுரை.

ஆய்வுச்சுருக்கம்:

அரசியல் சமூகத்தின் அங்கமாகத் திகழ்கின்றது. அரசியல் என்பது அதிகாரத்தையும் அடித்தட்டு மக்களையும் இணைக்கும் கருவியாகும். சமூகத்தின் வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும், மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் அரசியலே மூலதனமாக அமைகின்றது. அரசன் மக்களை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் மற்றும் எவ்வாறு வழிநடத்த வேண்டும் என்பதை அக்கால சங்க இலக்கியங்கள் முதல் இக்கால இலக்கியங்கள் வரை கூறுகின்றன. ஒரு மனிதன் தனக்கான உரிமைகளைப் பெற்று இச்சமூகத்தில் தன்னை நிலைப்படுத்திக் கொள்ள அரசியல் அவசியமாகின்றது. பலர் அரசியல் வழியாக மக்களுக்கு நன்மைகள் செய்து மண்ணுலகை விட்டு நீங்கினாலும் இன்றும் மக்கள் மனதில் நிலைத்திருக்கின்றனர். வ.உ.சி. எழுதிய மெய்யறம் நூல் காட்டும் அரசியலைப் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

திறவுச் சொற்கள்: மன்னன், அமைச்சன், அரண், படைகள், அறம் புரிதல், குடிகளைக் காத்தல்.

முன்னுரை:

உண்மையான அறங்களை விளக்கும் வகையில் எழுதப்பட்டுள்ள நூல் மெய்யறம் ஆகும். மாணவரியல் முதலாக மெய்யியல் ஈறாக ஐந்து இயல்கள் உள்ளன. மாணவரியல் முப்பது அதிகாரங்கள், இல்வாழ்வியல் முப்பது அதிகாரங்கள், அரசியல் ஐம்பது அதிகாரங்கள், அந்தணரியல் பத்து அதிகாரங்கள், மெய்யியல் ஐந்து அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முழுவதுமாக 125 அதிகாரங்கள் உள்ளன. ஒரு அதிகாரத்திற்கு பத்து வரிகளாக மொத்தம் 1250 வரிகள் உள்ளன. இந்நூலிற்கு 'மெய்யறம்' எனத் தொடங்கும் சிறப்புப் பாயிரத்தைத் தந்தவர் ஸ்ரீ சகஜாநந்த சுவாமிகள் ஆவார். இவ்வுலகத்தில் வாழும் மனிதர்களுக்குத் தேவையான அறக் கருத்துகளையும், தெளிந்த சிந்தனையையும், இந்நூல் வழங்குகின்றது. மெய்யறம் காட்டும் அரசியலைப் பற்றி இக்கட்டுரையில் விரிவாக ஆராய்வோம்.

அறம் புரிதல் :

சங்ககாலத்தில் இருந்த குற்றங்களைக் களைவதற்காகவே சங்கம் மருவிய காலத்தில் பல அறநூல்கள் எழுந்தன. அறம் என்பது ஒழுக்க நெறியில் வாழ்வதாகும். ஒரு நாட்டை ஆளும் மன்னன் தன்னிடம் உள்ள குற்றங்களைக் களைந்தும், தன் நாட்டில் வாழும் மக்கள்

அறவழியில் வாழ்வதற்கும் வழிநடத்த வேண்டும். சிலப்பதிகாரத்தில் பாண்டிய மன்னன் தன் அறநெறியிலிருந்து தவறியதால் தான் தன் உயிரையே விட்டான் என்பதன் வழியாக மன்னர்கள் தம் உயிருக்கு மேலாக அறத்தைப் போற்றியுள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது. தான் ஆளும் நாட்டி வளமாக வைத்திருப்பது மன்னனின் கடமையாகும். அந்நாட்டில் வாழும் மக்களுக்கு எது சரி? எது தவறு? என்று ஆராயும் தன்மை உள்ளதா என்பதை அரசன் அறிந்து கொள்ள வேண்டும். மக்களின் துன்பத்திற்குக் காரணமாக உள்ள காரணங்களைக் கண்டறிந்து அதனைக் களைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மன்னன் தன்னுடைய ஆட்சியில் அறநெறி தவறாது வாழ வேண்டும் என்பதை,

'கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகல் மறவரும் என
நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' *(புறம் :55)*

இந்தப் புறப்பாடல் சுட்டிக் காட்டுகின்றது.

அமைச்சாளுதல்:

மன்னனின் கீழ் செயல்படுபவன் அமைச்சன் ஆவான். சங்க காலங்களில் அமைச்சரவையில் புலவர்களும் வீற்றிருந்தனர். ஒரு நாட்டின் வளர்ச்சியில் மன்னன் வைத்துள்ள அக்கறையும் கவனமும் அமைச்சருக்கும் தேவை. நாட்டின் மன்னன் தவறான வழியில் செல்லும்போது, மன்னனை நல்வழிப்படுத்துவது அமைச்சரின் கடமை யாகும். அமைச்சருக்குத் தேவையான முக்கிய பண்புகளை,

'வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு.' *(குறள். 632)*

என்று வள்ளுவர் 'அமைச்சு' அதிகாரத்தில் கூறுகின்றார். மன்னருக்குத் தேவையான நேரங்களிலும், போர் நிகழும் போதும் உற்ற துணையாக நிற்க வேண்டும்.

மன்னன் இட்ட கட்டளைகளை நிறைவேற்றுவதோடு மட்டுமல் லாமல் மன்னன் சொல்லாதவற்றையும் ஊகித்து செயல்படுத்த வேண்டும். அமைச்சர்கள் சரியாகச் செயல்படும்போது அந்நாட்டின் மன்னனின் ஆட்சியானது அறவழியில் அமையும்.

'அரசின் குடிக்கு எலாம் அன்னையாய் நிற்பது' (மெய்யறம், அதி.69, வ.684) அதாவது நாட்டில் வாழும் குடி மக்களுக்கு எல்லாம் அன்னையாய் நின்று வழிநடத்துபவன் அமைச்சன் என்று மெய்யறம் நூலில் வ.உ.சி. அமைச்சனின் தகுதியை கூறுகின்றார்.

அரண் அமைத்தல்:

மெய்யறம் நூலில் 79 ஆவது அதிகாரமாக அரண் அமைத்தல் அமைந்துள்ளது. ஒரு நாட்டிற்கு அரண் போன்ற பாதுகாப்பு அமைப்பு அவசியமாகிறது. அவ்வாறு, அமைக்கப்படும் அரண் மிகவும்

வலிமையானதாகவும் சிறப்பானதாகவும் அமைந்தால் மட்டுமே நாட்டை முழுமையாகக் காக்க முடியும். சிறந்த அரணை உருவாக்குவது என்பது எளிதானது அல்ல. கடுமையான உழைப்பும், அறிவுக்கூர்மையும் தேவைப்படுகின்றது. அரசியலில், பகைவர்களிடமிருந்து தங்களைக் காப்பதற்காக அரண்மனையைச் சுற்றி சுற்றுச் சுவர் அமைப்பார்கள். மேலும், பாதுகாப்பின் காரணத்திற்காக அரண்மனைக்கு உள்ளே அகழிகள் அமைக்கப்பட்டிருக்கும். பழங்காலத்தில் சுற்றுச் சுவரினைக் கடந்து பகைவர்கள் வராதவாறு பல உத்திகளைக் கையாண்டு இருப்பார்கள். மதிலும் அகழியும் ஒரு அரசனுக்குச் செல்வமாக இருப்பதை வ.உ. சிதம்பரனார் இந்நூலின் வழியாக மக்களுக்கு எடுத்துரைக்கின்றார்.

படை:

நாட்டின் எல்லையைப் பாதுகாக்கவும், நாட்டிற்குள் அமைதியை நிலைநாட்டவும், எதிரிகள் நம் நாட்டின் உள்ளே நுழைவதைத் தடுக்கவும் படைகள் தேவைப்படுகின்றன. ஒரு நாட்டை ஆளும் மன்னனுக்கு படைகள் கட்டாயமாகத் தேவைப்படுகின்றன. படையானது மன்னனுக்கு இன்பத்தையும் புகழையும் வழங்கும் கருவியாக அமைகிறது. மன்னர்கள் போரில் வெற்றி அடைவதற்காக, படைகளையும் பயன்படுத்தினர் என்பதை,

‘ஆலும் புரவி அணித்தேர் தானை யொடு
நீலகிரியின் நெடும் புறத்து இறுத்து
ஆடுஇயல் யானையும் தேரும் மாவும்
பீடுகெழு மறவரும் பிறழாக் காப்பில்’ (சிலம்பு, கா.கோ.காதை, வ. 84-87)

சிலப்பதிகாரத்தின் வரிகள் உணர்த்துகின்றன. மன்னனிடம் படைகள் இல்லையென்றால், அதனால், ஏற்படும் விளைவையும் மெய்யறம் நூலின் ‘அரசியல்’ இயலில் உள்ள ‘படை’ அதிகாரம் விளக்குகின்றது. மன்னனிடம் படை இல்லையென்றால், எதிரி நாட்டினரிடம் போரில் தோல்வியடைவார்கள். நாடு, புகழ், இன்பம் ஆகியவற்றை இழப்பார்கள். நோய் மற்றும் பசியினால் மக்கள் துன்பப்படுவார்கள் என்பதனை,

‘பிணியொடும் பசியொடும் பிணக்குற்று அழிவர்’ (மெய்யறம், அதி.86, வ.859) இவ்வரிகள் உறுதி செய்கின்றன.

குடி புரத்தல்:

ஒரு நாட்டின் கீழ் வாழும் மக்களைக் குடிமக்கள் என்று கூறு கிறோம். குடிமக்களின் நலனில் அக்கறை காட்டுவதே அரசின் நோக்கமாகக் கருதப்படுகிறது. குடிமக்கள் துன்பமின்றி வாழ்வதற்கும், நாடு வளர்ச்சியடைவதற்கும் அரசின் பங்கு இன்றியமையாததாகும். ஒரு நாட்டில் உள்ள குடிமக்களின் நிலையை வைத்து அந்நாட்டின் அரசாட்சியின் வலிமையை அறிய முடியும். மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் ஆகிய மூன்றிலும் அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவது அரசின் கடமையாகும்.

ஒவ்வொரு மனிதரும் இவ்வுலகில் இன்புற்று வாழ்வதற்குத் தொழில் அடிப்படையாக அமைகிறது. மக்கள் அனைவரும் கைத்தொழிலைக் கற்றுக் கொள்வதற்கான பயிற்சியையும் அவர்கள் தொழில் தொடங்குவதற்குத் தேவையான உதவியையும் செய்வதன் மூலம் நம் நாட்டின் பொருளாதாரத்திலும் வளர்ச்சியைக் காண முடியும்.

‘குடிப்பசித்து உழலன் மன் குற்றம் என்று அறிக’ (மெய்யறம், அதி.107, வ.1070) என்ற வரியானது உணவின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றது.

முறை செய்தல்:

மன்னன் நீதி தவறாது, செங்கோல் ஆட்சி செலுத்தி, குடிமக்களைக் காத்து, தன்னைத் தேடி வரும் புலவர்களுக்கு உதவிகளைச் செய்து, நாட்டில் வளங்களைப் பெருக்குவதற்குத் தேவையான திட்டங்களை உருவாக்கி, போர் நெறிகளைக் கடைப்பிடித்து நாட்டை ஆள வேண்டும்.

ஒருவன் செய்யும் தவறுக்கு தண்டனை அளிப்பது மட்டுமல்லாமல் மீண்டும் அவன் அக்குற்றத்தைச் செய்யாமல் இருப்பதற்குத் தேவையான நல்லறிவுரைகளையும் நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

குற்றங்களை ஆராயாமல் பாண்டிய மன்னன், கோவலனுக்குக் கொடுத்த மரண தண்டனையானது, பாண்டிய மன்னனின் அழிவிற்குக் காரணமாக இருந்தது. அதேபோன்று, மன்னன் குற்றங்களை ஆராயாமல் ஒருவனுக்குத் தண்டனை வழங்குவது என்பது முறையற்ற செயலாகும். குடிமக்களின் குறைகளை அறியாத மன்னனைக் களைக்கு ஒப்புமைப்படுத்தி, ‘களை அறியாமை நிலங்குடி ஒக்கும், களையோ களையுடை நிலமோ களைவது’ (மெய்யறம், அதி.109, வ.1089-1090) வ.உ.சி. கூறுகின்றார்.

முடிவுரை:

மெய்யறம் நூலில், அரசியல் இயலில், ‘அரசு நலம்’ என்ற அதிகாரம் முதல் ‘அறம் புரிதல்’ அதிகாரம் வரை அரசியலுக்குத் தேவையான கருத்துக்களை வ.உ.சி. அவர்கள் விவரித்து எழுதியுள்ளார். மன்னனின் ஆட்சி முறை எவ்வாறு அமைய வேண்டும், குடிமக்களை பாதுகாக்கும் முறை, போர்களில் வெற்றி அடைவதற்கான வழிகள், அமைச்சனின் கடமை போன்றவற்றை இக்கட்டுரை விவரிக்கின்றது.

தொகுப்புரை:

1. அறநெறி தவறாது ஆட்சி செய்வதே மன்னனின் கடமையாகும்.
2. மன்னனின் கட்டளைகளைக் கேட்பதோடு மட்டுமல்லாமல், அதனை செயல்படுத்தி, குடிமக்களைக் காப்பது அமைச்சரின் கடமையாகும்.
3. படைகளைப் பெருக்குவது வெற்றிக்கான அடிப்படை வழியாகும்.
4. மக்களின் குறைகளைக் கண்டறியாத மன்னன் விவசாய நிலத்தில் உள்ள களைகளுக்கு ஒப்பாகக் கருதப்படுகிறான்.

அடிக்குறிப்புகள்

1. ச.வே.சுப்பிரமணியன் (உ.ஆ.)., சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும் (தொகுதி 3), புறநானூறு, பா.எ.55.
2. பரிமேலழகர் (உ.ஆ.)., திருக்குறள், குறள்.632.
3. ஞா. மாணிக்கவாசகன் (உ.ஆ.)., சிலப்பதிகாரம், ப.எ. 428.

துணைநூற் பட்டியல்:

1. வ.உ.சிதம்பரனார், மெய்யறம், வ.உ.சி. நூலகம், சென்னை-14, முதல் பதிப்பு - 2004.
2. சுப்பிரமணியன் ச.வே., சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும் (தொகுதி 3), மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 600 021, முதல் பதிப்பு - 2010.
3. பரிமேலழகர் (உ.ஆ.)., திருக்குறள், நேசனல் பப்ளிஷர், சென்னை, முதல் பதிப்பு, 2019.
4. மாணிக்கவாசகன் ஞா. (உ.ஆ.)., சிலப்பதிகாரம், உமா பதிப்பகம், சென்னை - 600 001.



1917இல் வ.உ.சி. வெளியிட்ட மெய்யறம் நூலின் இரண்டாம் பதிப்பு

22

வ.உ.சி.யின் மெய்யறம்

து. சுபா
தமிழ்த்துறை, மரியா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, வள்ளியூர்.

முனைவர் மு. மணிமேகலா, உதவிப் பேராசிரியர்.

முன்னுரை:

திருக்குறளின் பங்களிப்பை மெய்ப்பிக்கும் வகையில் அவர் கண்ண ணூர் சிறையில் அடைபட்டிருந்த காலத்தில் அவரின் சிந்தனையில் உதித்த வரிகளின் தொகுப்புதான் மெய்யறம். திருக்குறள் எவ்வாறு மனித வாழ்வினை மேம்படுத்துகிறதோ அது போன்றே மெய்யறமும் மனித வாழ்வினைச் செம்மைப்படுத்துகிறது என்ற கருத்தினையும், அதன் விரிவான கருத்துகளையும் இக்கட்டுரை எடுத்துக் கூறுகிறது.

மெய்யறம்:

தமிழ் இலக்கியங்களுக்குள் வ.உ.சி.யின் மனதை மிகவும் ஈர்த்தது திருக்குறளே ஆகும். மாக்களைப் போல் மனம் போன படி வாழ்க்கை நடத்தும் மக்கள் மனந்திருந்தி நல்வாழ்வு வாழத் துணைபுரிவது திருக்குறளே என்பதுவ.உ.சி.யின் அசைக்க முடியாத நம்பிக்கை. மக்கள் மன நலம் பேணி நல்வாழ்வு பெற வேண்டும் என்பதற்காகக் குறளின் அடிப்படையில் மெய்யறம் என்னும் இந்நூலை இயற்றியுள்ளார். இதனைத் திருக்குறளின் வழிநூல் (வள்ளுவர் மறையின் வழிநூல் மெய்யறம்- பாயிரம்- வாரி-2) என்றே வ.உ.சி. குறிப்பிடுகின்றார். திருக்குறள் இரண்டு அடிகளால் ஆனது. மெய்யறம் ஒரே அடியால் ஆனது. அது 133 அதிகாரங்களைக் கொண்டது. இது 125 அதிகாரங்களைக் கொண்டது. இரண்டுமே ஓர் அதிகாரத்திற்கு 10 பாடல்கள் கொண்டவை. திருக்குறளில் கூறப்பட்டவை சுமார் 82 அதிகாரங்களில் மெய்யறத்திலும் கூறப்பட்டுள்ளன.

மாணவரியல்:

முதல் பகுதியான மாணவரியல் மாணவர்களுக்கானது. அது 30 அதிகாரங்கள் கொண்டது. இந்தப் பகுதியில் வ.உ.சி. இளமைப் பருவமே கல்வி கற்பதற்கு ஏற்ற பருவம் என்று குறிப்பிடுகிறார். இப்பருவத்தில் கற்க வேண்டியவற்றைக் கற்க வேண்டும், அறியக் கூடாதவற்றைத் தவிர்த்து விடவேண்டும் என்றும் கூறுகிறார். மேலும் கடமை, அடக்கம், கல்வி, உடல் நலம் இவற்றின் முக்கியத்துவம் குறித்தும் விளக்குகிறார். அவர் நமது உடல், ஆன்மா, மனம் இவை குறித்தும் கூறியுள்ளார். நமது மனமே நமது செயல்களுக்குக் காரணமாகும். நமது உடலை, அதாவது ஐம்புலன்களைக் கட்டுப்படுத்துவது நமது மனமே ஆகும். ஆன்மா நமது மனத்தை வழி நடத்துகிறது. நமது விதியைத் தீர்மானிப்பது கடவுளல்ல,

நாம்தான். ஏனெனில் நமது செயல்களின் பயனே நமது விதியாகும் என்று உறுதிபடக் கூறுகிறார். நமது நன்மைக்கும் தீமைக்கும் நமது செயல்களே காரணம். அதனால் நல்விதியை விரும்பினால் நல்ல செயல்களைச் செய்ய வேண்டும். மாணவர்கள் இறைச்சி, மது, திருட்டு, புறம் கூறுதல், பொய், இரத்தல், பொறாமை, போதைப் பொருட்கள், பயனில்ச் சொல் போன்றவற்றை விலக்கும்படி வ.உ.சி. கூறுகிறார். மேலும் நட்பு, நன்றி மறவாமை, நடுநிலைமை, அடக்கம், ஒழுக்கம், முயற்சி, ஊக்கம் போன்றவற்றின் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைக்கிறார்.

இல்வாழ்வியல்:

இல்வாழ்வியல் இரண்டாவது பகுதி ஆகும். இதில் வ.உ.சி. இல்லறம் குறித்து விளக்குகிறார். வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பது குறித்து விளக்குகிறார். இதில் வாழ்க்கையை நல்ல முறையில் நடத்திச் செல்வதற்கு அன்பு, பொறுமை, ஈகை முக்கியம் என்று கூறுகிறார். இரண்டாவது பகுதி 'இல்வாழ்வியல்' ஆகும். இதில் 30 அதிகாரங்கள் உள்ளன. இதில் வ.உ.சி. இல்லறம் குறித்து விளக்குகிறார். வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பது குறித்து விளக்குகிறார். பின்னர் வாழ்க்கையை நல்ல முறையில் நடத்திச் செல்வதற்கும் அறிவுரைகள் கூறுகிறார். மறதி, காலம் தாழ்த்துதல், மடி, பேதைமை, வெண்மை போன்றவற்றை நீக்க வேண்டும் என்றும் அதிக துயில், அச்சம், அதிக ஆசை, செருக்கு போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும் என்றும் வ.உ.சி. கூறுகிறார். பெற்றோர், குழந்தைகள், விருந்தினர், முன்னோர் ஆகியோரைப் பேணிப் பாதுகாப்பது நமது கடமை என்று அறிவுறுத்துகிறார். சமுதாய வாழ்க்கை, அன்பு, பொறுமை, ஈகை ஆகியவை எவ்வளவு முக்கியம் என்று கூறுகிறார்.

அரசியல்:

மூன்றாவது பகுதி அரசியல் ஆகும். இதில் 50 அதிகாரங்கள் உள்ளன. இதில் ஒரு மன்னர் எப்படி அரசாள வேண்டும் என்று விளக்குகிறார். நல்ல அரசாங்கத்தின் முக்கியத்துவம், அதற்கு இருக்க வேண்டிய இயல்புகள் பற்றிக் கூறுகிறார். ஓர் அரசன் பரிவுடன் இருக்க வேண்டும், எதையும் ஆலோசித்துச் செய்ய வேண்டும் என்று சொல்கிறார். ஒற்றர்கள், அமைச்சர்கள் ஆகியோரின் முக்கியத்துவம், ஒரு நாட்டின் சிறப்புகள் எவை, நாட்டிற்குப் பாதுகாப்பு எப்படி அளிக்க வேண்டும், தொழில்களின் சிறப்பு, படை எவ்வளவு அவசியம், ஓர் அரசன் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் எவை என்று இந்தப் பகுதியில் தெளிவாகக் கூறுகிறார்.

அந்தணரியல்:

10 அதிகாரங்கள் கொண்ட நான்காவது பகுதி 'அந்தணரியல்' ஆகும். இது துறவறம் பற்றிக் கூறும் பகுதி ஆகும். இதில் துறவிகளின் இயல்பு, அவர்களுக்கு ஒழுக்கம் எவ்வளவு முக்கியம், அவர்களுக்கு இருக்கக் கூடாத குணங்கள்(வெஃகாமை, வெகுளாமை, இன்னா செய்யாமை போன்றவை), அவர்கள் செய்ய வேண்டியவை(தவம், துறவு) ஆகியவற்றை விளக்குகிறார்.

மெய்யியல்:

கடைசிப் பகுதி ‘மெய்யியல்’ ஆகும். இதில் 5 அதிகாரங்கள் உள்ளன. இது மிகவும் நுட்பமானது. ஏனெனில் இது கடவுளைப் புரிந்துகொள்ள முயற்சிக்கும் அத்தியாயம் ஆகும். இதில் உண்மை நிலை(கடவுளை) யை அடைவதற்கான வழிமுறைகளை எடுத்துரைக்கிறார். கடவுள்தான் உண்மை, மற்றவை எல்லாம் உண்மை அல்ல என்பதால் வ.உ.சி. கடவுளை ‘மெய்’ என்றே அழைக்கிறார். கடவுள் என்பது என்ன, கடவுளைப் புரிந்து கொள்வது எப்படி, உணர்வது எப்படி, அந்த நிலைமையை அடைவது எப்படி என்று படிப்படியாக விளக்குகிறார். இந்தப் பகுதி ஆழ்ந்து படிக்க வேண்டிய பகுதி ஆகும்.

மெய்யறத்தின் கருத்துகள்:

ஒவ்வொரு அதிகாரமும் ஒரு குறிப்பிடத்தக்க ஒழுங்குடன் உள்ளது. ஒவ்வொரு அதிகாரத்தின் முதல் வரியில் அதன் தலைப்பை விளக்குகிறார். அடுத்து வரும் வரிகளில் அதன் நன்மை, தீமைகளை எடுத்துச் சொல்கிறார். கடைசி வரியில் அதைப் பின்பற்ற வேண்டுமா தவிர்க்க வேண்டுமா என்று ஆலோசனை கூறுகிறார். எடுத்துக்காட்டாக 29-ஆவது அதிகாரமான ‘ஊக்கமுடைமை’ என்ற அதிகாரத்தை எடுத்துக் கொள்ளலாம்.முதல் வரியில் ஊக்கம் என்பது என்னவென்று கூறுகிறார்.

உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்ற மன உறுதியே ஊக்கம் ஆகும். இரண்டாவது வரி ஊக்கமுடைமையின் அவசியத்தையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் கூறுகிறது. மூன்றாவது வரி ஊக்கமில்லாதவர்களின் நிலையை விளக்குகிறது. நான்காவது, ஐந்தாவது வரிகள் ஊக்கமுடையவர்கள், ஊக்கமில்லாதவர்கள் இவர்களிடையே உள்ள வேற்றுமையை எடுத்துரைக்கின்றன. தொடர்ந்து வரும் வரிகளில் ஊக்கமுடைமையை மேற்கொள்வதற்கான ஆலோசனைகளை வழங்குகிறார்.

ஒவ்வொரு வரியும் எளிமையாகவும் உறுதியான கருத்துடனும் உள்ளது.அது தெளிவாகவும் அழுத்தமாகவும் உள்ளது. எடுத்துக்காட்டாக நாம் 12- ஆவது வரியை எடுத்துக் கொள்வோம். ஒரு வரியில் நான்கு சொற்கள் உள்ளன. ‘விதிசெய் கர்த்தா வினைசெய் உயிரே’. இவ்வரியின் பொருள் செயல்களைச் செய்பவனே அவனது விதியைத் தீர்மானிக்கிறான் என்பது ஆகும். இச்சொற்கள் எளிமையாகவும் படித்தவுடன் பொருள் புரிந்து கொள்ளும்படியும் உள்ளன. வ.உ.சி. செயல்களைச் செய்பவனால் மட்டுமே அவனது விதியைத் தீர்மானிக்க முடியும் என்றும் வேறு யாராலும் அதைச் செய்ய முடியாது என்றும் உறுதியாகக் கூறுகிறார்.

வ.உ.சி. பெண்களும் ஆண்களைப் போலவே கல்வி கற்பதற்கு சம உரிமை உள்ளவர்கள் என்று வலியுறுத்துகிறார். இந்நூலில் இரண்டாவது வரி அவரது இக்கருத்தை விளக்குகிறது. ‘ஆணும் பெண்ணு மதுசெய வுரியர்’. ஏழாவது அதிகாரத்தில் ஆசிரியர்களின் நற்குணங்களைப் பற்றி விளக்குகிறார். இந்த அதிகாரத்தில் இரண்டாவது வரியில் ஆண், பெண்

இருவருமே ஆசிரியராகத் தகுதி உடையவர்கள் என்று கூறுகிறார். வ.உ.சி. பெண்கள் கல்வி கற்பது மட்டுமல்லாமல் ஆசிரியர்களாகவும் ஆகலாம் என்று சிந்திக்கிறார்.

முப்பத்து மூன்றாவது அதிகாரத்தில் அவர் மறுமணம் குறித்துப் பேசுகிறார். அது உண்மையில் மிகவும் புரட்சிகரமான கருத்துதான். ஒரு விதவைப் பெண் எவ்வளவு இளம் வயதினளாக இருந்த போதும் தனிமையில்தான் வாழ வேண்டும் என்று சமூகம் எண்ணியிருந்த காலகட்டத்தில் துணையிழந்தாரை மணப்பது புண்ணியம் என்று எழுதியுள்ளார். முப்பத்து நான்காவது அதிகாரத்தில் முதல் வரி: ‘இருவருளறிவிற் பெரியவ ராள்க’. இரண்டாவது வரி: ‘ஆண்பா லுயர்வெனல் வீண்பேச் சென்க’. வ.உ.சி. அவர் கருத்துகளில் மிகவும் தெளிவாக இருக்கிறார். ஆண்களைப் போலவே பெண்களும் அறிவுடையவர்களாக இருக்க முடியும் என்று அவர் கருதுகிறார். அதனால் ஒரு குடும்பத்தில் ஆணும் பெண்ணும் கலந்தாலோசித்து எல்லா விஷயங்களையும் செய்து மகிழ்ச்சியுடன் வாழ்வது விரும்பத் தகுந்தது என்று கூறுகிறார்.

முடிவுரை:

வாழ்க்கையை நல்ல முறையில் வாழ்வதற்குச் செல்வம் மட்டும் போதுமானதல்ல, மன நிம்மதியும் அவசியம் என்று வ.உ.சி. எண்ணுகிறார். அதை அவர் ஒரு எடுத்துக்காட்டுடன் விளக்குகிறார். செல்வத்தால் கட்டிலை வாங்க இயலும். ஆனால் மன நிம்மதியே நல்ல உறக்கத்தைத் தரும் என்று புரிய வைக்கிறார். நிம்மதியாக வாழ்வதற்கு நாம் எவற்றைச் செய்ய வேண்டும் எவற்றைத் தவிர்க்க வேண்டும் என்று வழிகாட்டுகிறார். நம் உடல் நலத்தை நாம் பேண வேண்டும். ஏனெனில் உடல் நாம் நினைத்ததைச் செய்யும் ஓர் ஒப்பற்ற கருவி ஆகும். நாம் நம் மனதைக் கட்டுப்படுத்த வேண்டும். ஏனெனில் நம் மனம் ஆக்க, காக்க, அழிக்க வல்லது ஆகும். நம் பெற்றோரையும் குழந்தைச் செல்வங்களையும் பேணிக் காக்க வேண்டும். இவ்வாறு நமக்கு வாழும் வழிகளைக் கற்றுக் கொடுக்கிறார்.

துணை நூற்பட்டியல்:

1. சிதம்பரம் பிள்ளை, வ.உ.சி., - மெய்யறம், கலாரத்நாகர அச்சகம்; சென்னை; பதிப்பு ஆண்டு. 1917
2. சிதம்பரம் பிள்ளை, வ.உ. பதிப்பாளர். ஷண்முகவிலாசம் பிரஸ்; அம்பாசமுத்திரம். பதிப்பு ஆண்டு. 1930

23

திருவள்ளுவரின் திருக்குறளும் வ.உ.சி.யின் மெய்யறமும்

சு. விஷால்
தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், மெரினா வளாகம், சென்னை.

ஆய்வு நோக்கம்:

வள்ளுவர் இயற்றிய அறநூல் மக்களிடம் காணப்படும் அறியாமையை நீக்கப் பெரிதும் துணை நிற்கும் என்பதில் வ.உ.சி. அழுத்தமான நம்பிக்கையுடையவர். ஆகவே மெய்யறம் என்ற நூலில் குறளின் பல கருத்துகள் ஒன்றி இருப்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முன்னுரை:

மெய்யறம் என்னும் நூலினைத் திருக்குறளின் வழி நூல் என்று வ.உ.சி. குறிப்பிடுகின்றார். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருள்களை அடைதலே இந்நூல் கூறும் பயன் ஆகும். கல்வி கற்காதவர்களும் கற்கும் நெறியில் பாக்கள் ஓரடியில் இயற்றப்பட்டுள்ளன.

மெய்யறம் தோன்றக் காரணம்:

கண்ணூர் சிறையில் கைதிகள் மறம் விடுத்து அறம் உணர 'மெய்யறம், மெய்யறிவு' ஆகிய இரு நூல்களையும் எழுதினார். வ.உ.சி. பெற்ற சிறை வாழ்க்கையை அவரைச் சிறந்த இலக்கியப் பற்றாளராகவும் நூல் ஆசிரியராகவும் உருவாக்கியது எனலாம். சிறைநாள் வீணாகக் கழிவதை விரும்பாத வ.உ.சி. நூல்கள் எழுதுவதற்கும் சிறந்த கவிதைகளை யாப்பதற்கு அந்த நாட்களைப் பயன்படுத்தினார்.

இரந்து நிற்றலும் பரந்து கெடுதலும்:

'இருந்திடப் படைத்தவன் பரத்தழி கென்ப' *(இரவு விலக்கல், 4)*

இப்பாடல்,

'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்' (குறள் - 1062)

என்னும் குறளில் இரந்து, பரந்து ஆகிய சொற்களை வ.உ.சி. கையாண்டுள்ளார் என்பதைக் காட்டுகிறது.

புரை தீர் நலம்:

'பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் மெனின்' *(குறள் - 292)*

வாய்மை என்னும் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள இக்குறட்பாவில் வந்துள்ள புரைதீர் என்னும் சொல்லை மனதிற் கொண்டு என்பதை வ.உ.சி.,

'புரைதீர் நலந்தரின் பொய்ம்மையும் வாய்மையாம்'
(பொய்மை விலக்கல், 4)

எனப் 'புரைதீர்' என்னும் சொல்லைத் தம் பாடலில் கையாண்டுள்ளார்.

குற்றமே இல்லாத நன்மையைத் தருவது என்றால், பொய்யான சொற்களும் கூட வாய்மையின் இடத்தில் வைத்துச் சிறப்பாகக் கருதத் தகுந்தவை ஆகும்.

பயனில் சொல்லும் பதடியும்:

'பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி யெனல்' *(குறள் - 196)*

என்ற குறளில் பயன்படுத்தியுள்ள 'பதடி' என்ற சொல்,

'பயனில சொல்பவர் பதடி என்றைப்ப' (பயனில் சொல் விலக்கல், 9) வ.உ.சி.யின் பாடலிலும் கையாளப்பட்டுள்ளமையினைக் காணலாம்.

உணர்ந்துரைத்தும் அடங்காமை:

'அறிந்துணர்ந் துறைத்து மடங்கா தொழுகல்'

(பேதமை ஒழித்தல், 4) என்னும்வ.உ.சி.யின் பாடல்

'ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தாளடங்காப்
பேதையின் பேதையார் இல்' *(குறள் 834)*

என்ற குறளில் சொல்லாட்சியினையும் பொருளமைதியினையும் பெற்றுள்ளது.

ஆர்வலரின் கண்ணீர்:

'ஆர்வல ரூறுள்ளி துகண் ணீராம்' *(அன்பு வளர்த்தல், 2)*

என்னும் வ.உ.சி. பாடலில் காணப்படும் 'ஆர்வலர்' என்ற சொல்,

'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புண்கணீர் பூசல் தரும்' *(குறள் - 71)*

என்ற குறட்பாவில் ஆர்வலர் என்னும் சொல் பயின்று வருகிறது.

கண்ணிற் கழகு கண்ணோட்டம்:

'கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப் படும்' *(குறள் - 575)*

என்ற குறட்பாச் சொற்களின் தாக்கத்தைப் பெற்ற வ.உ.சி.,

'கண்ணிற் கழகு கண்ணோட்டம் என்ப' *(கண்ணோட்டம், 4)*

எனக் குறட் சொற்களையே கையாண்டு பாடியுள்ளார்.

உறுபசியும், செறுபகையும்:

'உறுபசி யரும்பிணி செறுபகை யிலாமை' *(நாட்டுச் சிறப்பு, 6)*

உறுபசி, செறுபகை என்னும் சொற்களை வ.உ.சி. பயன் படுத்தியிருப்பது,

'உறுபசியும் ஓவ்வாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு' *(குறள் - 734)*

கூற்றமும் ஆற்றலும்:

'கூற்றையும் மெதிர்த்திடு மாற்றலொடு செல்லல்' *(படையளித்தல், 7)*

என்னும்வ.உ.சி.யின் பாடலில் இடம்பெற்றுள்ள 'கூற்று, ஆற்றல்' என்ற சொற்கள்,

'கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை' *(குறள் - 765)*

என்ற குறட்பாவில் முதல் சொற்கள் ஒன்றி வருவதை காணலாம்.

புணர்ச்சி பழக்கமும் உணர்ச்சி நட்பும்:

'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்' *(குறள் - 785)*

என்னும் குறட்பாவில் வந்துள்ள 'புணர்ச்சி, உணர்ச்சி' ஆகிய சொற்களின் பயனறிந்த வ.உ.சி.யும் அச்சொற்களை,

'புணர்ச்சி பழகுத லுணர்ச்சியா னட்பாம்' *(நட்பு - 5)*

எனத் தம் பாடலினும் பயன்படுத்தியுள்ளார்.

எளிதும் அரிதும்:

'சொல்லாத லெளிது செய்தலோ லரிது' *(அமர்த்திட்டம், 4)*

என்ற பாடலில் வ.உ.சி. பயன்படுத்தியுள்ள 'எளிது, அரிது' என்ற சொற்கள்,

'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்' *(குறள் - 664)*

இவ்வாறு பயின்று வருவதை காணலாம்.

எண்ணமும் திண்மையும்:

'திண்ணிய ரெண்ணிய யெண்ணியாங்கு கைடுவர்' *(அமர்த்திட்பம் - 6)*

என்னும் பாடலில் வ.உ.சி. கையாண்டுள்ள 'திண்ணியார், எண்ணிய' ஆகிய இரு சொற்களும் 'எண்ணியாங்கு' என்ற சொற்றொடரும்,

'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்' *(குறள் - 666)*

என்ற சொற்கள் குறளில் பயின்று வருவதை காணலாம்.

அந்தனரும், செந்தண்மையும்:

'அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்' *(குறள் - 30)*

என்ற குறட்பாவின் சொற்களான 'அந்தணர், அறவோர்' என்பவற்றினையும் சொற்றொடரான செந்தண்மையினையும் மனதிற்

கொண்ட வ.உ.சி.,

'அந்தண ரதத்தொடு செந்தண்மை பூண்டவர்' *(அந்தணரியல்பு - 1)*

என்று அச்சொற்களையும் சொற்றொடரையும் பயன்படுத்தி அந் தணருக்கு இலக்கணம் வரைந்துள்ளார்.

கடாஅ உருவும் கண்ணஞ்சாமையும்:

'கடாஅ வுருவொரு கண்ணஞ்சா தறிவது' *(ஒற்றாளுதல், 2)*

என்றவ.உ.சி.யின் பாடலில் காணப்படும் 'கடாஅஉரு, கண்ணஞ்சாமை' என்ற சொற்றொடர்கள்,

'கடா அ உருவொரு கண்ணஞ்சாது யாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று' *(குறள் –585)*

என்ற குறளின் பகுதியாகி அதே பொருளில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

முடிவுரை:

'மெய்யறம்' தன்மயப்படுத்தி வாழ்ந்தவர் வ.உ.சி. அவர் வள்ளுவத்தை எவ்வளவு ஆழமாக கற்றவர் என்பதையும், வள்ளுவக்கண்ணோடு தம் கலை வாழ்வை எவ்வளவு நுணுக்கமாகக் கற்றார் என்பதையும் அவர் உள்ளத்தில் சுடர் விட்ட உண்மை ஒளி வாக்கினிலே எவ்வாறு ஒளிவிட்டது என்பதையும் மெய்யறத்தில் நாம் காண முடிகிறது.

துணைநூற் பாட்டியல்:

1. வ.உ.சி.யின் வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும் – அறிஞர் அ. சங்கரவள்ளிநாயகம். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிட், 41 பி, சிட்கோ எஸ்டேட், சென்னை – 600 098.
2. மெய்யறம்- வ.உ.சி., ஜி – 1 லாயிட்ஸ் காலனி, இராயப்பேட்டை, சென்னை - 14.
3. தமிழ்ப் பெரியார் வ.உ.சி. - ஆ. அறிவழகன்
4. திருக்குறள் மூலமும் உரையும்- உரையாசிரியர் – பரிமேலழகர், அருணா பப்ளிகேஷன்.

24

மெய்யறம் கண்ட மேன்மையர்

முனைவர் சு. சிவகாமசுந்தரி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ சங்கரா கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) ஏனாத்தூர், காஞ்சிபுரம்.

ஆய்வுச் சுருக்கம்:

ஒவ்வொருவரும் தாம் மேற்கொள்ளும் ஒழுக்கங்களுக்குத் தக்கவாறு உயர்வையும், தாழ்வையும் அடைவர் என்பதும் அறிவுடையோர் பலரும் கொண்ட கொள்கை. அறம், பொருள், வீடு என்னும் மூன்றை யும் உணர்த்தும் பல நூல்களின் பொருள்களையும் தொகுத்துக் கூறு கின்றமையால் இது முப்பொருள் நூல்களின் வழி நூலாகும். அறமும் அறத்துக்கு இன்றியமையாத பொருளும் அறத்தால் எய்தப்படும் வீடும் அம்மூன்று பொருள்களையும் ஈட்டுதற்குரிய நெறிகளும் இந்நூல் நுதலிய பொருள்களாம். அறத்தைச் சரியாகப் புரிதலும், பொருளை நியாயமாக ஈட்டலும் வீட்டை நேராக அடைதலும் அவற்றிற்கு அநுகூலமான நிலைகளை எய்தலும் இந்நூலைக் கேட்போர் பெறும் பயன்களாம். மாணவரியல், இல்வாழ்வியல், அரசியல், அந்தணரியல், மெய்யியல் என்னும் ஐந்து இயல்களாகப் பகுத்துள்ளார். அவ்வாறு பகுத்ததற்குக் காரணம் மானுடப் பிறப்பை அடைந்த ஒவ்வொருவரும் முறையே மாணவராய், இல்வாழ்வாராய், அரசராய், அந்தணராய் மெய்ந்நிலையை அடையலாமென்ற வ.உ.சி.யின் கோட்பாடு மேன்மையானதாகக் கருதப்படுகிறது. மெய்யறம் இயற்றிய வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த சிதம்பரனார் அவர்கள் மெய்யறம் என்று பெயர் வைத்தது முற்றிலும் தகுந்ததாகும்.

முன்னுரை :

கடவுளே ஐம்பொறிகளின் முன்னர் உலகமாகத் தோற்றுதல் தவிர உலகம் என்று வேறு ஒரு பொருள் இல்லை. உலகத்திற்கு ஆதாரமாக வுள்ள பொருள் தவிர கடவுள் என்று வேறு ஒரு பொருள் இல்லை. மெய்யறம் என்ற சொல்லில் இரு பகுதிகள் உள்ளன. முதல் பகுதி மெய், இரண்டாம் பகுதி அறம். மெய் என்றால் உண்மை என்று பொருள். அறம் என்பது தர்மநெறி ஆகும். வ.உ.சி. இந்நூலில் உண்மையான அறத்தைப் பற்றி இளம் வயதினரும் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கி உள்ளார். இந்நூல் மிக எளிய சிறிய வரிகளின் தொகுப்பாகும். இது அனைத்து வயதினருக்கும் ஏற்றது ஆகும். இந்நூல் தெளிந்த சிந்தனை வாழ்க்கைப் பற்றிய அறிவு ஞானம் இவற்றை அளிக்கக்கூடியது ஆகும். இந்நூலில் இருந்து ஒழுக்கம் கலாச்சாரம் வாழும் முறை இவை குறித்து நாம் அறிய முடிகிறது. இளைஞர்கள் நல்வாழ்க்கை வாழ நன்னடத்தையைக் கற்பிக்கிறது. இது அறிவுரைகளைக் கட்டளைகளாகக் கூறுகிறது.

நூலின் அமைப்பு

மெய்யறம் என்னும் இந்நூலில் ஐந்து பகுதிகளும் 125 அதிகாரங்களும் உள்ளன. மொத்தம் 1250 வரிகள் உள்ளன. ஒவ்வொரு வரியும் ஒரு அறிவுரை கூறுவதைப் பற்றி விளக்கமாகக் காணலாம்.

1. மாணவரியல், 2. இல்வாழ்வியல்,
3. அரசியல், 4. அந்தணரியல்,
5. மெய்யியல்

முதல் பகுதியான 'மாணவரியல்' மாணவர்களுக்கானது. அது 30 அதிகாரங்கள் கொண்டது. இந்தப் பகுதியில் வ.உ.சி. இளமைப் பருவமே கல்வி கற்பதற்கு ஏற்ற பருவம் என்று குறிப்பிடுகிறார். இப்பருவத்தில் கற்க வேண்டியவற்றைக் கற்க வேண்டும், அறியக் கூடாதவற்றைத் தவிர்த்து விடவேண்டும் என்றும் கூறுகிறார். மேலும் கடமை, அடக்கம், கல்வி, உடல் நலம் இவற்றின் முக்கியத்துவம் குறித்தும் விளக்குகிறார். அவர் நமது உடல், ஆன்மா, மனம் இவை குறித்தும் கூறியுள்ளார். நமது மனமே நமது செயல்களுக்குக் காரணமாகும். நமது உடலை, அதாவது ஐம்புலன்களைக் கட்டுப்படுத்துவது நமது மனமே ஆகும். ஆன்மா நமது மனத்தை வழி நடத்துகிறது. நமது விதியைத் தீர்மானிப்பது கடவுளல்ல, நாம்தான். ஏனெனில் நமது செயல்களின் பயனே நமது விதியாகும் என்று உறுதிபடக் கூறுகிறார். நமது நன்மைக்கும் தீமைக்கும் நமது செயல்களே காரணம். அதனால் நல்விதியை விரும்பினால் நல்ல செயல்களைச் செய்ய வேண்டும். மாணவர்கள் இறைச்சி, மது, திருட்டு, புறம் கூறுதல், பொய், இரத்தல், பொறாமை, போதைப் பொருட்கள், பயனிலாச் சொல் போன்றவற்றை விலக்கும்படி வ.உ.சி. கூறுகிறார். மேலும் நட்பு, நன்றி மறவாமை, நடுநிலைமை, அடக்கம், ஒழுக்கம், முயற்சி, ஊக்கம் போன்றவற்றின் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைக்கிறார்.

இரண்டாவது பகுதி 'இல்வாழ்வியல்' ஆகும். இதில் 30 அதிகாரங்கள் உள்ளன. இதில் வ.உ.சி. இல்லறம் குறித்து விளக்குகிறார். வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பது குறித்து விளக்குகிறார். பின்னர் வாழ்க்கையை நல்ல முறையில் நடத்திச் செல்வதற்கும் அறிவுரைகள் கூறுகிறார். மறதி, காலம் தாழ்த்துதல், மடி, பேதைமை, வெண்மை போன்றவற்றை நீக்க வேண்டும் என்றும் அதிக துயில், அச்சம், அதிக ஆசை, செருக்கு போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும் என்றும் வ.உ.சி. கூறுகிறார். பெற்றோர், குழந்தைகள், விருந்தினர், முன்னோர் ஆகியோரைப் பேணிப் பாதுகாப்பது நமது கடமை என்று அறிவுறுத்துகிறார். சமுதாய வாழ்க்கை, அன்பு, பொறுமை, ஈகை ஆகியவை எவ்வளவு முக்கியம் என்று கூறுகிறார்.

மூன்றாவது பகுதி அரசியல் ஆகும். இதில் 50 அதிகாரங்கள் உள்ளன. இதில் ஒரு மன்னர் எப்படி அரசாள வேண்டும் என்று விளக்குகிறார். நல்ல அரசாங்கத்தின் முக்கியத்துவம் அதற்கு இருக்க வேண்டிய இயல்புகள் பற்றிக் கூறுகிறார். ஓர் அரசன் பரிவுடன்

இருக்க வேண்டும். எதையும் ஆலோசித்துச் செய்ய வேண்டும் என்று சொல்கிறார். ஒற்றர்கள், அமைச்சர்கள் ஆகியோரின் முக்கியத்துவம் ஒரு நாட்டின் சிறப்புகள் எவை, நாட்டிற்குப் பாதுகாப்பு எப்படி அளிக்க வேண்டும். தொழில்களின் சிறப்பு படை எவ்வளவு அவசியம், ஓர் அரசன் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் எவை என்று இப்பகுதியில் தெளிவாகக் கூறுகிறார்.

நான்காவது பகுதி அந்தணரியல் ஆகும். 10 அதிகாரங்கள் கொண்ட நான்காவது பகுதியாகும். இது துறவறம் பற்றிக் கூறும் பகுதி ஆகும். இதில் துறவிகளின் இயல்பு அவர்களுக்கு ஒழுக்கம் எவ்வளவு முக்கியம் அவர்களுக்கு இருக்கக்கூடாத குணங்கள் (வெஃகாமை, வெகுளாமை, இன்னா செய்யாமை போன்றவை) அவர்கள் செய்ய வேண்டிய தவம், துறவு ஆகியவற்றை விளக்குகிறார்.

ஐந்தாவது பகுதி மெய்யியல் ஆகும். இதில் 5 அதிகாரங்கள் உள்ளன. இது மிகவும் நுட்பமானது. ஏனெனில் இது கடவுளைப் புரிந்து கொள்ள முயற்சிக்கும் அத்தியாயம் ஆகும். இதில் உண்மை நிலையை (கடவுளை) அடைவதற்கான வழிமுறைகளை எடுத்துரைக்கிறார். கடவுள்தான் உண்மை, மற்றவை எல்லாம் உண்மை அல்ல என்பதால் வ.உ.சி. கடவுளை மெய் என்றே அழைக்கிறார். கடவுள் என்பது என்ன கடவுளைப் புரிந்து கொள்வது எப்படி உணர்வது எப்படி அந்த நிலைமையை அடைவது எப்படி என்று படிப்படியாக விளக்குகிறார்.

முடிவுரை:

ஒவ்வொரு அதிகாரமும் ஒரு குறிப்பிடத்தக்க ஒழுங்குடன் உள்ளது. ஒவ்வொரு அதிகாரத்தின் முதல் வரியில் அதன் தலைப்பை விளக்குகிறார். ஒவ்வொரு வரியும் எளிமையாகவும் உறுதியான கருத்துடனும் உள்ளது. அது தெளிவாகவும் அழுத்தமாகவும் உள்ளது. ஒரு வரியில் நான்கு சொற்கள் உள்ளன. 'விதி செய் கர்த்தா வினைசெய் உயிரே' கல்வியின் பொருள் செயல்களைச் செய்பவனே அவனது விதியைத் தீர்மானிக்கிறான் என்பதாகும். இச்சொற்கள் எளிமையாகவும் படித்தவுடன் பொருள் புரிந்துகொள்ளும்படியாகவும் உள்ளன. இவ்வாறு நமக்கு அவர் வாழும் வழிகளைக் கற்றுக் கொடுக்கிறார். நாம் அவற்றைப் பின்பற்றினால் மன நிம்மதியுடன் வாழ இயலும்.

பார்வை நூல்கள்:

1. மெய்யறம் அரும்பதவுரையுடன் - சிதம்பரம் பிள்ளை, வ. உ., ஷண்முகவிலாசம் பிரஸ், அம்பாசமுத்திரம், 1930.
2. மெய்யறிவு - சிதம்பரம் பிள்ளை, வ. உ., எஸ். வி. என். பிரஸ், சென்னை, 1915.
3. வலிமைக்கு மார்க்கம் (ஆலன், ஜேம்ஸ்), சிதம்பரம் பிள்ளை, வ. உ.,எஸ். வி. என். பிரஸ், சென்னை, 1916.
4. சாந்திக்கு மார்க்கம் (ஆலன் ஜேம்ஸ்), சிதம்பரம் பிள்ளை, வ. உ.,வேலாயுதம் பிரிண்டிங் பிரஸ், தூத்துக்குடி, 1934.
5. (https://tamildigitallibrary.in/voc)

25

வெற்றிப் பயணத்திற்கான ஒரு தேடல் - வ.உ.சி.யின் மெய்யறம்

முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி.

ஆய்வுச்சுருக்கம்:

வ.உ.சி. அவர்களின் 'மெய்யறம்' என்னும் நூல் அவர் கண்ணனூர் சிறையில் இருக்கும் பொழுது எழுதிய நூல் ஆகும். தஞ்சாவூரைச் சேர்ந்த இராவ் பகதூர்த் திரு. சீனிவாசப் பிள்ளை என்பவருக்கு இந்நூலைச் சமர்ப்பித்துள்ளார். அவர் விடுதலை பெற்ற பின்னர் அந்நூல் வெளியிடப்பட்டது. 'மெய்யறம்' என்ற சொல்லில் இரு பகுதிகள் உள்ளன. முதல் பகுதி 'மெய்'. இரண்டாம் பகுதி 'அறம்'. 'மெய்' என்றால் உண்மை என்று பொருள். 'அறம்' என்பது தர்ம நெறி ஆகும். வ.உ.சி. இந்நூலில் உண்மையான அறத்தைப் பற்றி இளம் வயதினரும் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கி உள்ளார். இந்நூல் மிக எளிய, சிறிய வரிகளின் தொகுப்பாக அமைகின்றது. ஒரு நாடு முன்னேற வேண்டும் என்றால் அந்நாட்டின் அங்கங்களாகிய மாணவர்கள், இல்வாழ்க்கை வாழ்வோரான குடும்ப உறுப்பினர், அரசர், அந்தணர் ஆகியோர் அவரவர்களுக்கு உரிய கடமைகளைச் செவ்வனே செய்ய வேண்டும் .ஆகவே தான் அந்நூலில் இந்நால்வருடைய கடமைகளைப் பற்றிக் கூறிய பின்னர் அனைத்து மக்களுக்கும் பொதுவானதாகிய மெய்ப்பொருள் பற்றிக் கூறியுள்ளார். வ.உ.சி. இல்லம் அமைக்கின்ற முறையைப் பற்றிக் கூறுவது அவருடைய தனிச்சிறப்பாகும். இந்நூல் தெளிந்த சிந்தனை, வாழ்க்கையைப் பற்றிய அறிவு, ஒழுக்கம், கலாச்சாரம், வாழும் முறை, ஞானம் இவற்றை அளிக்கக் கூடியது ஆகும். இளைஞர்கள் நல்வாழ்க்கை வாழ நன்னடத்தையைக் கற்பிக்கிறது. மெய்யறம் என்னும் இந்நூலில் 5 பகுதிகளும் 125 அதிகாரங்களும் உள்ளன. ஒரு அதிகாரத்தில் பத்து வரிகள் உள்ளன. மொத்தம் 1250 வரிகள் உள்ளன. ஒவ்வொரு வரியும் சமூகத்திற்குத் தேவையான பல நல்ல கருத்துகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. அவற்றைப் பின்பற்றினால் வாழ்வின் இலக்கை அடையலாம் என்பதை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

திறவுச் சொற்கள்: நற்பண்பு, கடமை, இல்வாழ்வு, தொழில், ஆட்சிமுறை.

முன்னுரை

தமிழ் இலக்கியங்களில் வ.உ.சி.யின் மனதை மிகவும் ஈர்த்தது திருக்குறள் ஆகும். மாக்களைப் போல மனம் போன படி வாழ்க்கை நடத்தாது நல்வாழ்வு வாழத் துணைபுரிவது திருக்குறளே ஆகும் என்பது வ.உ.சி யின் அசைக்க முடியாத நம்பிக்கை. குறளின் அடிப்படையில்

'மெய்யறம்' என்னும் நூலை இயற்றியுள்ளார். இதனைத் திருக் குறளின் வழி நூல் என்று வ .உ. சி குறிப்பிடுகின்றார் மாணவரியல் 30 அதிகாரங்கள் கொண்டது. இல்வாழ்வியல் 30 அதிகாரங்கள் கொண் டது. அரசியல் 50 அதிகாரங்கள் கொண்டது . அந்தணர் குறித்து 10 அதிகாரமும், மெய்யியல் பற்றி ஐந்து அதிகாரங்களும் அமைகின்றன. ஒவ்வொரு அதிகாரத்தின் முதல் வரியிலும் அதன் தலைப்பை விளக்குகின்றார். வ.உ.சி. காலத்திலேயே இந்நூல் மூன்று பதிப்புகள் கண்டுள்ளது. முதல் பதிப்பு சென்னையில் ப்ரோக்ரஸிவ் அச்சகத்தில் 1914- ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது. இரண்டாவது பதிப்பு சென்னையில் கலாரத்னாகரா அச்சகத்தில் 1917- ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது. மூன்றாவது பதிப்பு அம்பாசமுத்திரத்தில் சண்முகவிலாஸ் அச்சகத்தில் 1930- ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது. இந்நூலில் அமைந்துள்ள வாழ்க்கைக்குத் தேவையான நற்கருத்துகளை இயம்புவதாக இக்கட்டுரைப் பயணிக்கின்றது.

மாணவர்களின் கடமையை உணர்த்துதல்

ஒரு சமுதாயத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வது இன்றைய இளைஞர்களின் கையில் உள்ளது என்ற தாரக மந்திரத்தை முதல் இயல் பிடித்துக்கொள்கின்றது. மாணவர்களுக்கு ஒழுக்கமும், கல்வியும் ஒருங்கு கைகொள்ளல் வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். தாம் அறிந்ததைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். சொல்லியபடி நடத்தல் வேண்டும். நினைத்தபடி உடல் வளைந்திட வளர்க்க வேண்டும். அவ்வாறு வளர்த்தால் மட்டுமே நமது அறிவை அனுபவத்தில் கொண்டு வர முடியும் என்ற உன்னத நிலைகளை எடுத்துரைக்கின்றார். தீவினை யால் துன்பம் நேரிடும் என்பதை உணர்த்துதல், நல்லவர்களிடம் நட்பு ஏற்படுத்திக் கொள்ளுதல், தாம் அறிந்து கொண்டவற்றை மற்றவர்களுக்கு அறியப்படுத்துதல், சொல்லியபடி நடத்தல், புலாலை விலக்குதல், களவை விலக்குதல், சூதினை விலக்குதல், மயக்கம் வருகின்ற செயல்பாட்டை ஒதுக்குதல், நிகழாததனை நிகழ்ந்தது போலக் கூறும் பொய்மையை விட்டு விடல், ஆண், பெண் இருவரும் சமம் எனல், வாய்மையை உரைத்தல், புறம் பேசாதும், கேட்காதும் இருத்தல், பயனில்லாத சொற்களைச் சொல்லாதிருத்தல்.

'பயனில சொல்பவர் பதடி யென்றறைப

பயனில விலக்கிப் பயனுள சொல்லுக (பா :189-190)

என்று குறிப்பிடுகின்றார்.

'சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க

சொல்லிற் பயனிலாச் சொல்' (குறள்: 200)

பயனுள்ள சொற்களை மட்டுமே கூற வேண்டும் என்ற வள்ளுவரின் வாக்கை இங்கு நினைக்கின்றார் .

இல்வாழ்க்கை:

இவ்வுலகத்திற்கு குடும்ப வாழ்க்கையே அடிப்படை .அனைத்தும் குடும்ப அமைப்பை ஒட்டியே நிகழ்கின்றது. இல்லிருந்து அறம் செய்வது இல்லறம்எனப்பட்டது.நம்வாழ்வுஎண்ணங்களின்பிரதிபலிப்பு.அதனால் தான் பெரியோர்கள் ‘மனம்போல வாழ்வு ‘என்று வாழ்த்துகிறார்கள். வாழ்க்கை என்னும் தமிழ்ச் சொல்லுக்குப் பகுதி வாழ் என்னும் ஏவல் வினையாகும். அது நம்மை வாழ்ந்துபார் என்று ஏவுகின்றது. வாழ்க்கை என்னும் சொல்லின் முதல் எழுத்தும், முடிவெழுத்தும் கூடினால் வாகை எனப் பெயர் பெறுகின்றது. சமுதாயத்தில் நாம் வெற்றி பெற வேண்டும் எனச் சொல்லாமல் சொல்கின்றது. இதனை வ.உ.சி அவர்கள், ‘இல்வாழ்வில்லெனில் இல்லையிவ்வுலகே’ (பா:305) என்கின்றார். கணவன், மனைவி இருவரில் அறிவிற் சிறந்தவர் ஆள வேண்டும். ஈருடல் ஓர் உயிராய் வாழ வேண்டும் என்பதை ‘இருவராத் தோன்றினுமொருவரே யுள்ளின்’ (பா:336) என்ற வரியில் சுட்டுகின்றார். தான் இயற்றுவதையும், உண்பதையும் என்றும் தனக்குத் துணையாக நிற்கின்ற கணவனோடு செய்ய வேண்டும் . கணவன், மனைவிக்கு இடையே ஏற்படும் ஊடலை, நீண்ட நாட்களுக்குக் கொண்டு செல்லக்கூடாது . அது பிரிவை ஏற்படுத்திவிடும். அதனால் ‘ஊடனிமித்த முடனுடனாக்குக’ (பா:347) என்று குறிப்பிடுகின்றார்.

குழந்தைச் செல்வமே செல்வம் என்பதையும், அன்பே இல்லற வாழ்விற்கு அடிப்படை என்பதையும் பதிவிடுகின்றார்.’ கணவனை இழந்தோர்க்கு காட்டுவது இல் ‘(சிலப்பதிகாரம்:20.79) என்று வாழ்ந்த சமூகத்திலே ‘துணையிழந்தாரை மணப்பது புண்ணியம்’ (பா:326) என மறுமணத்திற்கான சீர்திருத்தக் கருத்தைப் பதிவிடுகின்றார். ‘வாழ்க்கை என்பது ஒரு கற்சுரங்கம் போன்றது. அந்தக் கற்சுரங்கத்திலிருந்து நம் ஆளுமையை நாமே வெட்டிச் செதுக்கி நம் வடிவமைப்பை நாமே நிறைவு செய்து கொள்ள வேண்டும்.’ (பொருள் இனிது, ப.93) முனைவர் அமுதன் அவர்கள் கூறுவதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

விருந்தினரைப் பேணல்:

விருந்து என்றால் புதுமை என்று பொருள். புதியவர்களுக்கு உணவு கொடுத்தல் விருந்தெனப்பட்டது. தொல்காப்பியரும் ‘விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே’(நூற்பா.1495) என்று கூறுகின்றார். ‘விருந்து’ என்பதற்கு ‘புதுமை’ எனக் கையாள்கின்றார். இன்றைய சூழலில் தெரிந்தவர்களுக்கும், சுற்றத்தாருக்கும் உணவு அளிப்பது விருந்தாக மாற்றம் பெறுகின்றது. ஆடம்பரமாகச் செலவு செய்து உணவு அளிப்பது விருந்தல்ல. தம்மிடம் இருப்பதை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதே சிறப்பான விருந்து. சங்க காலத்தில் ஊடலைத் தணிக்கும் பொருளாக விருந்து அமைந்திருந்தது.

இன்றும் இல்லங்களில் கணவன், மனைவி சண்டையிட்டுக் கொண்டு பேசாதிருக்கும்போது சுற்றத்தார் வந்தவுடன் அச்சண்டையை

மற்றவர்களிடம் வெளிக்காட்டாது மறந்துவிட்டு இன்முகத்துடன் வரவேற்கின்றோம். அத்தகைய பண்பும், கலாச்சாரமும் இவ்விருந் தோம்பலில் அமைந்துள்ளது. இதனை,

'அல்லிலாயினும் விருந்துவரின் உவக்கும்

முல்லை சான்ற கற்பின்

மெல் இயற் குறுமகள் உறைவின் ஊரே'(நற்றிணை : 142.9-11)

என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன.

இதனை அடியொற்றி வ.உ.சி அவர்களும்,

'விருந்தினர் முன்னர் தெரிந்திலாப் புதியர்

விருந்தினர்ப் பேணுவார் பெருந்தகையோரே'(பா : 521-522)

என்று குறிப்பிடுகின்றார். உணவை மருந்தாக எண்ணுகின்றார். ஒருவருக்குக் கொடுக்கும்போது அவரின் உள்ளத்தை அறிந்து கொடுக்க வேண்டும். உடை, படுக்கை, குடை, இருக்க இடம் கொடுத்து ஒருவரைக் காக்க வேண்டும். அவர்களிடம் இனிய சொற்களை முக மலர்ச்சியுடன் கூற வேண்டும். வீட்டை விட்டு வெளியே செல்லும் போது 'செல்வுழியுடன் சென்றுள் விடப்பிரிக' (பா.530) என்று கூறுகின்றார். விருந்தினர் வெளியே செல்லும்போது அவர்களுடனேயே சென்று வழி அனுப்ப வேண்டும் என்பதையும் அறியமுடிகின்றது. விருந்தினர்களைப் பிரிய மனமின்றி அவர்கள் செல்ல இருக்கின்ற நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர்வரை ஏழு அடி நடந்து சென்று வழியனுப்பிய தமிழர்களின் பண்பாட்டை 'காலின் ஏழ்அடிப் பின் சென்று' (பொருநராற்றுப்படை. : 166) என்ற அடி சுட்டுகின்றது. இல்லறக்கடமைகளில் ஒன்றாக விருந்து இடம்பெற்றுள்ளதை,

'................ தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர்கோடலும் இழந்த என்னை' (சிலப்பதிகாரம்.16:72-73)

எனக் கண்ணகி கூறுவதன் வழி உணரமுடிகின்றது.

பெரியோரைத் துணையாகக் கொள்ளல்:

அறத்தை நன்கு உணர்ந்தவர்களாகவும், தன்னை விட அறிவினிற் சிறந்தவர்களையும், ஆற்றல் மிக்கவர்களையும் துணையாக வைத்துக்கொண்டு எந்த ஒரு வேலையையும் செய்யும்பொழுது அச்செயலானது மிகச் சரியாக நடைபெறும். அனுபவம் வாய்ந்த சான்றோர்களால் நன்மை நடக்குமே தவிரத் தீமை நடைபெறாது. அத்தகைய சான்றோர்களை நாம் அன்போடு வணங்க வேண்டும். எல்லாவற்றையும் அவர்களோடு இணைந்தே செய்ய வேண்டும். அவர்களின் சொற்படியே நடக்க வேண்டும். இதனை

'அவரது துணை கொளலரும் பெருங்காப்பு

அவரை யறிந்து கொண்டதுதின மோம்புக'(பா: 396-397)

என்ற அடி பகர்கின்றது.

'விரிநிற படம் விடருள ஏதேனும்
உருமின் கடுஞ்சினம் சேணின்றும் உட்கும்
அருமை யுடைய அரண் சேர்ந்தும் உய்யார்
பெருமை யுடையார் செறின்' *(நாலடியார் : 164)*

இதற்கு நாலடியாரின் 'பெரியாரைப் பிழையாமை' என்னும் அதிகாரம் வலுச்சேர்ப்பதாக அமைகின்றது. முதலில் பெற்ற தாயையும், தந்தையையும் மதிக்க வேண்டும். அவர்களின் கருத்தை அவமதிக்காமல் ஏற்றுக்கொண்டு செயலாற்ற வேண்டும் அப்பொழுது எடுத்த காரியம் வெற்றியே என்கின்ற கருத்தை'அவரைப்பேணுதலாக்கம் பேணலே' (பா:517) எனச் செப்புகின்றது.

தொழில்:

உலகம் தொழிலால் மட்டுமே இயங்குகின்றது. செய்யும் தொழிலே தெய்வம் ஆகும். செய்வதைத் திருந்தச் செய் என்பார்கள். ஒரு சிறு தொழிலின் தொகுதியே பெரிய தொழிலுக்கு அடிப்படை. எந்த ஒரு செயலையும் மனதில் ஊன்றி ஒரு செயலைச் செய்ய வேண்டும். அழகும், நிறைவும் அமைய ஒரு செயலைச் செய்ய வேண்டும். வரவு, செலவு இவற்றை அறிந்து ஒரு செயலைச் செய்ய வேண்டும். பெரும் பயனைத் தரவில்லை எனில் அச்செயலை விட்டு விட வேண்டும். வறுமையும், இழிவும் ஏற்படுத்தக்கூடிய செயல்களைச் செய்யக்கூடாது. என்ற தொழிலின் முக்கியத்துவத்தை, 'தொழிலிலையெனிலுலயழிவது திண்ணம்' (பா:213) எனக் குறிப்பிடுகின்றார். வாழ்க்கைக்குத் தொழிலே முதன்மை என்பதையும், உயர்வும், தாழ்வும் தொழிலைப் பொறுத்து அமைவதைப் பதிவிடுகின்றார். தொழில் செய்வதற்கு முயற்சி தேவை என்றும், தொழில் செய்யும் இடத்தில் துயில் வந்தால் நடந்து அதனை மாற்றிக் கொள்ள நினைக்க வேண்டும் என்றும் கூறுகின்றார். உழவுத்தொழிலின் முதன்மை, கைத்தொழில், வாணிபம் சார்ந்த பொருட்கள், படைப்பயிற்சி அறிதல், போர்செய்தல், எவ்வகை உருவமும் எடுத்திடப் பழகுதல், புவியிலே கடல், விண்மிசைப் போக அறிதல், எனப்பலவற்றைக் கற்றுக் கொண்டு செயலாற்ற வேண்டும். எதையும் செய்யாமல் இருந்தால் சோம்பல் குடிகொண்டு புத்துணர்ச்சியைக் கெடுத்துவிடும். என்பதைப் பதிவிடுகின்றார்.

நன்றியறிதல்:

நன்றி என்பது பிறருக்கு நல்கிடும் உதவி என்கின்றார். தமக்கு உதவியவர்களின் குடி உயர்வடையச் செய்ய வேண்டும் என முதலில் நினைக்க வேண்டும். தனக்கு உதவி செய்த ஒருவரை எந்தச் சூழ்நிலையிலும் மறக்கக்கூடாது. செய்ததற்குக் கைம்மாறு கருதக்கூடாது என்பதை,

'உதவியிற் சிறந்த துற்றுழியுதவல்
உயர்ந்தது கைம்மாறு கவாதுதவல்' *(பா: 233-234)*

எனக் கூறுகின்றார்.

நடுநிலைமைப்பண்பு:

மனுநீதிச்சோழனைப் பற்றி இன்றும் நாம் நினைவில் கொள்கிறோம் என்றால் அதற்கு அவரின் பண்புகளில் நடுவுநிலைமைப் பண்பு முதன்மைக் காரணமாக அமைகின்றது. அத்தகைய நடுவுநிலைமை ஒன்றே நாம் செழிப்பதற்கு ஆதாரமாக இருக்கின்றது. அது சிறிதாக அசைந்தால் அனைத்தும் அழிந்துவிடும். உயர்ந்த நலம் அனைத்தும் நடுவுநிலைமையால் கைகொடுக்கும் என்பதை,

'நடுவினை விடாரை நாநிலம் விடாது

நடுவிகந்தாருடன் கெடுவது திண்ணம்' (பா:247-248)

எனச் சுட்டுகின்றார். தன்னுயிர் போல மண்ணுயிரை ஒவ்வொருவரும் பேண வேண்டும் என்பதையும் குறிப்பிடுகின்றார்.

'பாடறிந்தொழுகலே பண்பெனமொழிப

பண்பாலுலக முண்டெனும் பொதுமறை

மக்களுட் பண்பிலார் மரமெனப்படுவர்' (பா:701-703)

இவ்வரிகள் கலித்தொகையையும், திருக்குறளையும் நினைவு கூர்கின்றது.

அறிவுடைமையும் ஊக்கமும்:

எவராலும் அழிக்க முடியாத செல்வம் அறிவு. பகைவராலும் திருட இயலாதது. மற்ற செல்வங்கள் எத்தனை இருப்பினும் அதனால் ஒரு பயனும் இல்லை. அறிவு ஒருவருக்கு அற்றங் காக்கும் கருவி. அரியதை உணரக்கூடியது. 'அறிவில்லாதார் யாதுமில்லாதார்' (பா:275) என 28 ஆம் அதிகாரத்தில் இதனை விளக்கிக் கூறுகின்றார். ஊக்கமில்லாத உயிர் அனைத்தும் பிணங்களே ஆகும். மன எழுச்சி அனைத்திற்கும் அடிப்படை என்பதைச் செப்புகின்றார்.

ஆட்சிமுறை:

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நிலத்தை நான்காக வகைப்படுத்துகின்றார். நாட்டின் நல்ல வளத்தைப் பொறுத்து ஆட்சி சிறப்புற அமைகின்றது. ஒழுக்கமும், கல்வியும் நாட்டில் தலைத்தோங்குதல் வேண்டும். நாட்டிற்கு அரண் அமைத்தல்வேண்டும். நன்மை, தீமையை அறிந்து கொண்டு செயலாற்றுதல், வருவாயைப் பெருக்கும் தன்மையை அறிந்து செயலாற்றுதல். உலகத்தின் நடப்பை அறிதல். படைப்பயிற்சி, படைவகை, படைக்கலன், நட்பு, பழமைபோற்றுதல், பகைமை அறிதல், காலம், இடன் அறிதல், தூது, சொல்லாட்சி,புலமையுடைய அவை, சரியான அமைச்சரவை, போர்த்திறன், நீதிநூல் அறிதல் ஒற்றர்களை வைத்துக் கொண்டு முழுமையான செய்தியை அறிதல், இன்பமும், துன்பமும் அளிக்கக்கூடிய விஷயங்களை அறிந்து கொண்டுசெயலாற்றுதல், வெற்றியின் இலக்கு, குடியைக்காத்தல் ஆறில் ஒரு பங்கு வரி செலுத்துதல், சூழ்ச்சி அறிதல், சுற்றம் பேணல், அறம்

சார்ந்து பணியாற்றுதல் வேண்டும் என ஆட்சிமுறை பற்றி தெளிவாக 50 அதிகாரங்களில் எளிய நடையில் விளக்குகின்றார். மேலும்,

'வினைத்திறனனைத்து நினைத்தறிந்தாற்றல்

முறைசெய் தறம் புரிந்திறையென நிற்றல்' *(பா: 609-610)*

என்று கூறும் போது முறையோடு ஆட்சி செய்கின்றவர்கள் தெய்வத்துடன் ஒப்ப மதிக்கப்படுகின்றனர் என்பதை அறிய முடிகின்றது.

மெய்ம்மை:

உடல், உள்ளம், உயிர் என்ற மூன்றின் சேர்க்கை தான் நாம். உடலைப் புறக்கணித்தல் தவறு . ஒருவன் முதலில் தான் யார் என்பதை அறிதல் வேண்டும் என்பதை எடுத்துரைக்கின்றார் இவ்வுலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் கடவுளின் குழந்தைகள் எல்லா உயிர்களின் உடல்களும் கடவுளின் வீடுகள்; எனவே இவ்வுலகில் யாருக்கும் தீங்கு செய்யக்கூடாது என்னும் கருத்தைக் குறிப்பிடுகின்றார் நம் விதியை முடிவு செய்ய வேண்டியவர்கள் நாம்தான் அண்டம் அணுக்களின் சேர்க்கை நிறைந்தது. இறையை மனதிற்குள் தேட வேண்டும் என உயர்ந்த கருத்துக்கள் பலவற்றைக் குறிக்கின்றார்.

முடிவுரை:

வாழ்விற்குத் தேவையான வெற்றியின் திறவுகோலாக மெய்யறம் என்னும் நூல் விளங்குகின்றது. இன்றைய இளைஞர்களுக்குத் தேவையான பல அறக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு பொக்கிஷமாக இருக்கின்றது. இதனை வாழ்வில் பின்பற்றினால் உயர்வடையலாம் என்பதை இக்கட்டுரையின் வழி அறிய முடிகின்றது.

துணைநூற்பட்டியல்:

1. அமுதன், முனைவர்., பொருள் இனிது, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. முதல்பதிப்பு, அக்டோபர், 2002.
2. சுப்பிரமணியன், முனைவர் ச.வே. தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர்ப் பதிப்பகம்,சென்னை. முதல் பதிப்பு,மே1998.
3. பாலசுப்பிரமணியன் முனைவர் கு.வெ. (உ.ஆ) நற்றணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. முதல்பதிப்பு, ஏப்ரல், 2004.
4. புலியூர்க்கேசிகன், (உ.ஆ)சிலப்பதிகாரம், பாரி நிலையம், சென்னை,முதல்பதிப்பு, சூன் 1958.
5. வரதராசனார்., மு (உ.ஆ) திருக்குறள், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதல் பதிப்பு, மே1959.
6. ஸ்ரீசந்திரன்., ஜெ. (உ.ஆ) வர்த்தமானன் பதிப்பகம்,சென்னை,முதல்பதிப்பு, 1989.

26

வ.உ.சி. யின் மெய்யறம், மெய்யறிவு

செ. தனுசு ஈஸ்வரி
ஆய்வாளர், சுதந்திரநகர், வெள்ளாளன்விளை.

ஆய்வு நோக்கம்:

இந்திய விடுதலை வீர வரலாற்றில் தியாகத்தால், தொண்டால் தனது புகழை நிலைநாட்டியவர் பலர். அவருள் தமிழினத்தின் புகழ் விளங்கக் கப்பல் ஓட்டி, சிறை சென்று தமிழர்களின் நெஞ்சங்களில் நிலையாக வாழ்ந்து வருபவர். வ.உ.சி. அம்மாமனிதரின் தியாக வாழ்வும் செந்தமிழ்க் கனிந்த மொழித்தொண்டும் என்றும் வியக்கத்தக்கது, போற்றுதற்குரியது. தியாக வாழ்விற்கு இடையேயும் வ.உ.சிதம்பரம் அவர்கள் அளப்பரிய இலக்கியப் பணிகளை ஆற்றியுள்ளார். அவர் படைத்த கவிதை நூல்களின் மெய்யறம், மெய்யறிவுக் கருத்துக்களைப் பற்றி ஆராய்வதுதான் இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும்.

முன்னுரை:

வீரம் விளைந்த பாண்டிய நாட்டின் வித்தகர்களில் ஒருவராக விளங்கியவர் வ.உ.சி. ஆவார். புறநானூறு கூறும் வீரத்தின் அடையாளமாகவும் தமிழினத்தின் சிங்கமாகவும் பிறந்தவர் வ.உ.சி. நாவுக்கரசரின் ஞானத்திற்குத் தொண்டனாக விளங்கியவர் வ.உ.சி. வடநாட்டு தேசிய போர் முனைக்கு ஒரு திலகர் என்றால் தென்னாட்டுத் திலகராக அறியப்பட்ட வ.உ.சிதம்பரனாரின் படைப்புகளின் கருத்து களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

தமிழ்ப்பணி தொடக்கம்:

வ.உ.சி.யின் அரசியல் வாழ்வும் தமிழ் வாழ்வும் ஒன்றுடன் ஒன்று கலந்தவை ஆகும்.அவருடைய தமிழ் வாழ்வு துவங்க அடித்தளமாக அமைந்தது சுதேசி இயக்கம் (1905-1915). ஆனால் சுதேசி இயக்கம் துவங்குவதற்கு முன்பே அவருடைய தமிழ்ப்பணி தொடங்கி விட்டது.

வ.உ.சி., தனது படைப்புகள் எளிமையாகவும் அனைவருக்கும் புரியும்படியும் அமைய வேண்டும் என விரும்புவார். மக்களின் உணர்வு வெளிப்பட வேண்டும் எனவும், அவை மக்களின் மொழிகளில் அவரது வாழ்வியலைக் கூறுவதாகவும் அமைய வேண்டும் எனவும் வ.உ.சி. விரும்பினார். அந்த நோக்கம்தான் அவருடைய தமிழ்த் தொண்டாக மலர்ந்தது. உரைநடைப்பணி, மொழிபெயர்ப்புப்பணி, பதிப்புப்பணி, படைப்பிலக்கியம் எனப் பல்துறை பணிகள் வ.உ.சி.யின் தமிழ்ப்பணிகளாக விரிந்தன.

‘பிள்ளையின் மேடைச் சொற்பொழிவு முழக்கத்தையும் பாரதியின்

பாட்டையும் கேட்டால் செத்த பிணம் கூட உயிர் பெற்று எழும், புரட்சி ஓங்கும்' (க. த. வ.உ.சி. பக்.47) — 4

வ.உ.சி. படைப்பிலக்கியம்:

வ.உ.சி.யின் படைப்புகள் பல அதில் கவிதை வடிவிலான நூல்கள் நான்கு. அவை, மெய்யறம், மெய்யறிவு, பாடல் திரட்டு, சுயசரிதை. இவற்றின், மெய்யறமும் மெய்யறிவும் அறம் பற்றிப் பேசும் கவிதைத் தொகுப்பாகும். பாடல் திரட்டு என்பவை அவரின் அனுபவம் பற்றி பேசுவனவாக உள்ளது. சுயசரிதை வ.உ.சி.யின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுகின்றது. இவரின் கவிதை வடிவிலான படைப்புகளை இங்கு காண்போம்.

மெய்யறம் (1914):

மெய்யறம் என்பது வ.உ.சி.யின் மூன்றாவது நூலாகும். இவர் 'மனம் போல வாழ்வு, அகமே புறம்' என்ற இரு ஆங்கில மொழிபெயர்ப்புக்கு பின் எழுதிய மூன்றாவது நூல். ஆனால், இவை கவிதை வடிவிலான இவரின் படைப்பில் முதல் நூலாகும். மெய்யறம் என்ற நூல் திருக்குறள் விளக்கும் நீதிக் கருத்துகளை மையமாக வைத்து எழுதப்பெற்ற நூலாகும்.

மெய்யறம் வ.உ.சி. கண்ணனூர் சிறையில் இருக்கும் போது எழுதிய நூல் ஆகும். இந்நூலில் முதல் அதிகாரம் 'மாணவர் கடமையில்' தொடங்கி இறுதி அதிகாரம் 'மெய்நிலை அடைதல்' என்னும் அதிகாரத்தில் முடிகிறது. மொத்தம் 125 அதிகாரங்களும் ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்து வரிகள் முறையே 1250 வரிகள் உள்ளது. மாணவவியல், இவ்வாழ்வியல், அரசியல், அந்தணவியல், மெய்யியல் என இந்நூலில் 5 இயல்கள் உள்ளது. இயலுக்கும் 25 பாடல்கள் என 125 பாடல்கள் உள்ளன. இந்நூலில் பாயிரமும் சிறப்புப் பாயிரமும் உள்ளது

மெய்யறம் பொருளொடு மெய்யருள் சேர்க்கும்
பொய்யறம் புணர்ந்ததாற் புரிந்தனன் மெய்யறம்
பொய்யற மொழிந்திவண் மெய்யற நிலவுக
மெய்யறஞ் செய்துயிர் மெய்ப்பொரு ளாகுக.

(மெய்யறம் பாயிரம் – பக் 6)- 5

நாடாள்வோர் நாட்டை நன்முறையில் ஆள வேண்டும், என்னும் கருத்துகளை வ.உ.சி. 'அரசியல்' என்ற அதிகாரத்தின் கீழ் வைத்துள்ளார்.

'அரசுயிர் கட்டுச் சிரசென நிற்பது'

(மெய்யறம் அரசியல் அரசு நலம் பக் 28)-6

குறிப்பாக நீதி நூல்கள் மீது ஆழ்ந்த பற்றுக் கொண்ட வ.உ.சி. முன்னோர்கள் கூறிய கருத்தை உள்வாங்கிக் கொண்டு தம் கால மக்களுக்கு உரைக்கும் வகையில் மெய்யறத்தைப் படைத்துள்ளார். இந்நூலில் வ.உ.சி.யின் சமூக சிந்தனையும் மனித நேயமும் ஒரு நல்ல ஆட்சியை அமைப்பதற்கான போக்கும் வெளிப்படுகிறது.

மெய்யறிவு (1915):

நீதி நெறி ஒழுக்க பண்புகளை வலியுறுத்தும் நோக்கில் வ.உ.சி. இயற்றிய மற்றொரு செய்யுள் நூல் மெய்யறிவு. இந்நூலில் தாம் கற்றுத் தேர்ந்த மெய்யுணர்வு, அறம் சார்ந்த கருத்துக்களை தனது எழுத்திற்கேற்ப எடுத்துக் காட்டியுள்ளார். இந்த நூல் எவ்வாறு தோன்றியது என்பதை வ.உ.சி. நூலின் பாயிரத்தில் கூறுகின்றார்.

அக்குற்றவாளிகளிற் சிலர் ‘பல பாவங்களையும் தொகுத்துச் சில பாக்களாகச் செய்து கொடுத்தால் அவற்றை நாங்கள் மனப் பாடம் செய்து வைத்து அடிக்கடி நினைத்துக் கொள்வோம்.’ என்று கூறினர். அவர் சொற்படி அன்றிரவு இந்நூலின் ‘மறங்களைதல்’ என்னும் அதிகாரத்திலுள்ள பத்து வெண்பாக்களையும் பாடி மறுநாள் அவர்களுக்குச் சொன்னேன் அவற்றை அவர்கள் மனப் பாடம் செய்த பின்னர் அவர்களது விருப்பப்படியே இந்நூலின் ‘அறம்புரிதல்’ என்னும் அதிகாரத்திலுள்ள பத்து வெண்பாக்களையும் பாடி அவர்களுக்குச் சொன்னேன்.......... பின்னர் முன்னும் பின்னும் சில அதிகாரங்களைச் சேர்த்து, மொத்தம் நூறு வெண்பாக்களாக்கி, அவற்றை ‘மெய்யறிவு ‘என்னும் பெயருள்ள இந்நூலாக உருப்படுத்தினேன். (மெய்யறிவு பாயிரம்) - [7]

நூலின் அமைப்பு:

தன்னையறிதல், விதியியல் அறிதல். உடம்பை வளர்த்தல், மனதையாளுதல், நன்நிலையில் நிற்றல். மறங்களைதல், அறம் புரிதல், தவஞ்செய்தல், மெய்யுணர்தல், மெய்யிலையாடல், என்னும் பத்து அதிகாரங்களையும் வெண்பாக்கள் வீதம் மொத்தம் நூறு வெண்பாக்களையும் உடையது மெய்யறிவு நூலாகும்.

அறம், பொருள், வீடு என்பவற்றைப் பற்றித் தற்காலத்து மாந்தரிற் பலர் கொண்டுள்ள மெய்யறிவைப் போக்குகின்றமையால், இந்நூல் மெய்யறிவு எனப் பெயர் பெற்றது. மெய்யறிவு என்ற நூலின் பெயர்க்காரணத்தை கல்யாணசுந்தர யதீந்திரர் சிறப்புப்பாயிரம் மூலம் விளக்குகின்றார்.

‘ஊதிவிதியென் றாழ்கின்றார் வீணாகத் துன்பில்
விதிவிதிக்கத் தம்மையன்றி வேறு – பதியொருவத
உண்டென்று நம்பி யொருசிலரிங் கன்னாரிற்
கண்டறியேன் பேதையரைக் காண்’ (மெய்யறிவு- விதியறிதல் பக் 10)- 9

என்ற வரிகள் மூலம்’நம் விதியை முடிவு செய்பவர்கள் நாம் தான்’ என்ற உயர்ந்த கருத்தை வ.உ.சி. வெளிப்படுத்துகிறார்.

மெய்யறிவின் நோக்கம்:

அற நெறிகளை மக்களுக்கு உணர்த்தியவர் மட்டும் வ.உ.சி. மட்டுமல்லர், அதன் படி முன்னிறுத்தி வாழ்ந்து காட்டியவர். தம்மைப் போல தம் நூல்களைப் பயில்வோரும் ஒழுக்க நெறியின் கண் நிற்க வேண்டும். என்ற உயரிய நோக்கத்துடனே, எண்ண வெளிப்பாட்டுடனே

இந்நூலை வ.உ.சி. எழுதியுள்ளார். இந்நூலின் மூலம் அவரின் படைப்பாற்றலை நாம் உணரலாம்.

முடிவுரை:

திலகர் போன்ற தலைவர்களின் தாக்கத்தால், வ.உ.சி.யின் எழுத்துக்கள், நேரடிப் போராட்டத்தையும், மக்களிடையே தேசிய உணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தன; அவர் ஒரு வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர் எனப் பல தளங்களில் விடுதலைக்காக உழைத்தார். சிறையில் செக்கிழுத்துச் செந்நீர் சிந்திய அவரின் தியாக வாழ்வைக் கண்ட பாரதி வ.உ.சிதம்பரம் பிள்ளைக்கு ஒரு வாழ்த்துப் பாடியுள்ளார்.

வேளாளன் சிறைபுகுந்தான் தமிழகத்தார்
……… …….. ………. ……
வாளாண்மை நின்துணைவர் பெறுகெனவே
வாழ்த்துதிநீ வாழ்தி! வாழ்தி! *(பாரதியார் கவிதைகள் பக்.90)- 10*

அடிக்குறிப்பு:

1. மா.ரா.அரசு - இந்திய இலக்கியச் சிற்பிகள் (வ.உ.சி.) (பக்கம் எண் -29)
2. என். வி. கலைமணி - கப்பலோட்டிய தமிழன் (வ.உசி.) (பக் எண் 47) 3.வ.உ.சிதம்பரம் பிள்ளை - மெய்யறம் – பாயிரம் (பக்கம் எண் 6)
3. வ.உ.சிதம்பரம் பிள்ளை - மெய்யறம்.- (பக்கம் எண் 28)
4. வ.உ.சிதம்பரம் பிள்ளை - மெய்யறிவு – பாயிரம்
5. வ.உ.சிதம்பரம் பிள்ளை - மெய்யறிவு – சிறப்பு பாயிரம்
6. வ.உ.சிதம்பரம் பிள்ளை - மெய்யறிவு – விதியறிதல் (பக்கம் எண் 10)
7. தொகுப்பாசிரியர் கவிஞர் பத்மதேவன் - பாரதியார் கவிதைகள் (பக்கம் எண் 90)

துணை நூற்பட்டியல்:

1. மா. ரா. அரசு - இந்திய இலக்கியச் சிற்பிகள், இரவீந்திரபவன், புது தில்லி, (சாகித்திய அகாதெமி நூல்) (மின் புத்தகம்) முதல் பதிப்பு, 2005.
2. வ.உ.சிதம்பரம் பிள்ளை - மெய்யறம் – இரண்டாம் பதிப்பு (1917) காலாரத்நாகர அச்சியத்தரசாலை, சென்னை.
3. வ.உ.சிதம்பரம் பிள்ளை - மெய்யறிவு – எஸ்.வி.என். பிரஸ், சென்னை 1929 (மின் புத்தகம்)
4. என். வி. கலைமணி - கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி., முதல் பதிப்பு 2025, சரண் புக்ஸ், 19/9, ராஜா தெரு, தியாகராயர் நகர், சென்னை.
5. தொகுப்பாசிரியர் கவிஞர் பத்மதேவன் - பாரதியார் கவிதை 4/2, சுந்தரம் தெரு, (நடேசன் பூங்கா அருகில்) தியாகராயர் நகர், சென்னை.

27

வ.உ.சிதம்பரத்தின் படைப்புகளில் மொழி வகைகள்

சீதா லட்சுமி
ஆசிய மொழிகள் மற்றும் பண்பாடுகள், தேசியக் கல்விக்கழகம்
நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.

முன்னுரை:

வ.உ.சிதம்பரனார் யார்? எந்த வயதில் எனக்கு அவரைப் பற்றித் தெரியும்? கட்டுரையாளர் தம் பதின்ம வயதில் கப்பலோட்டிய தமிழன் என்று சிறப்பைப் பெற்ற தமிழர் என்று தெரியும். செக்கிழுத்த செம்மல் என்று தெரியும். இவை இரண்டும் பெருமைக்குரிய கூறுகளாக அப்போது அவருக்குத் தெரிந்தன. ஆனால் அவை சார்ந்த ஆழமான கதைகள் அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனால் காந்தியடிகள் போன்று சிலரது வாழ்க்கை வரலாற்றை வரிக்கு வரி படித்துத் தேர்வுகள் எழுதியமையால் தம் வாழ்வில் தமது நண்பர்களுக்கு, அவரவர் மொழிப்புழக்கத்திற்கும் மொழித்தேர்ச்சிக்கும் ஏற்பத் தமிழிலும் ஆங்கிலத்திலும் சத்திய சோதனை புத்தகத்தை வாங்கிப் பரிசளித்திருக்கிறார். அதிலும் தம் வாழ்க்கை, வயது, அனுபவம் ஆகியவற்றுக்கேற்பச் சிறு வயதிலும் பதின்மவயதிலும் புரியாத பல செய்திகள் திருமணம், குழந்தைகள் என்று ஆன பின் புரிய வந்துள்ளன. இதுதான் வாசிப்பின் இரகசியம். இதுபோல் பலரது வாழ்க்கை வரலாறுகளைப் படித்த கட்டுரையாளர் வ.உ.சி. யைப் பற்றி முன்பு கேட்ட இரு செய்திகள் தவிர வேறு ஏதும் அறியாதவராக இருந்தார். அதற்குப்பிறகு படிக்க வேண்டும் என்றால் எங்குபோய் வாசிப்பது என்று தெரியாத நிலையில் இருந்தார். இன்று இருப்பதுபோல் இணைய வசதிகள், அன்று இல்லாத ஒரு நிலையை தாம் உணர முடிவதுடன் அதனால் எவ்வளவு பின்தங்கியும் விட்டார் என்றும் தெரிந்துகொள்ள முடிகிறது.

துணிச்சலான அறிவாளர், வர்த்தகச் சிந்தனையாளர்:

வ.உ.சிதம்பரம், தேசப்போராட்டத்தில் பிரிட்டனுக்கு எதிராக உள் நாட்டில் கப்பல் விடும் நிறுவனத்தைத் தொடங்கியவர் என்று கட்டுரை யாளருக்குப் பின்னாளில் தெரிய வந்தது. ஆம் ஒரு நிறுவனத்தை ஒருவர் தொடங்கிய நிலையைப் பார்க்கும்போது அங்கே துணிச்சலை எடுத்துக்காட்டும் பாங்கு தெளிவாக வெளிச்சமிடுகிறது. அப்படி என்றால் அவருக்கு ஒரு முதலாளித்துவம் இருக்கிறது, ஒரு கப்பல் நிறுவனத்தைத் தொடங்குவது என்ற வியாபார முனைப்பை எடுத்துக்காட்டும் நிலை. ஆம், இது ஒரு தமிழருக்குப் பெருமை தரும் நிகழ்வின் விதையைப் பார்த்த நாள். இவர், தாம் தொடங்கிய சுதேசி நீராவிக் கப்பல் நிறுவனம் இந்த மண்ணில் தினமும் அலையும் கடலைத் தன்னுள் அணைத்துக்கொண்டிருக்கும் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும்

இடையே கடல்வழிப் போக்குவரத்தை மேற்கொள்ள வழி வகுத்தார். மேலும் இந்தக் கடல்வழிப் போக்குவத்தின் வழியே கப்பல் ஓட்டிய தமிழராக அவர் திகழ்ந்தார். அதற்குப் பயனாக அவர் பிரித்தானிய அரசினால் நாட்டுத்துரோகியாகக் குற்றம் சாட்டப்பட்டு இரட்டை ஆயுள் தண்டைனையப் பெற்று சிறையில் பல சவால்களையும் சங்கடங்களையும் சந்தித்திருக்கிறார். அதாவது சொல்லொணாத் துயரங்களையும் அவமானங்களையும் உடல், மன வலிகளையும் உடல் நலக்குறைவையும் நோய்களையும் பெற்றிருக்கிறார். தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே கடல்வழிப் போக்குவரத்தை மேற்கொண்டதனால், அது சார்ந்த சிந்தனை, பேச்சு, செயல்பாடுகளினால். பிரித்தானிய அரசால் தேசத்துரோகியாகக் குற்றம் சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். அவரது வழக்கறிஞர் உரிமமும் பறிக்கப்பட்டது. ஆக, பெரிதாகப் பேச இயலாது என்ற நிலையை அவர் எட்டினார் என்பது கட்டுரையாளரின் கருத்து.

எழுத்தாளர், கல்வியாளர், வழக்கறிஞர், தொழில்முனைவோர் வ.உ.சி.:

சுயநலத்தில் பொதுநலத்தையும் பொதிந்து வைத்திருந்தவ.உ.சி.யின் தந்தை தொலைநோக்கைக் கொண்டவர். எனினும் சிறந்த குற்றவியல் (கிரிமினல்) வழக்கறிஞராக இருந்து பின் கடை வைத்துப் பிழைக்க வேண்டிய நிலையை அடைந்தார் என்று அவரைப் பற்றிப் பேசிய தமிழருவி மணியன் தெரிவிக்கிறார். வ.உ.சிதம்பரம் 1908 இல் சிறை புகுந்தார் குணத்தளவில் ஒன்று தவறு என்று தெரிந்தவுடன் அதனை எடுத்துக்காட்டி உரியவருக்குத் தண்டனை வாங்கித்தந்த உண்மையாளர் இவர். இந்தக் குணம் அவரது வாழ்வில் தொடர்ந்து இடம்பெற்றது. எனினும் எதிராளியிடமிருந்து கிடைத்தது என்னவோ, தோல்விதான் எனலாம்.

மகன் பின்னாளில் தொழில் சவால்களையும் எதிர்ப்புகளையும் சந்திக்க வேண்டி வரும் என்று முன்பே நிலைமையை ஊகித்த தந்தை மகனைத் தூத்துக்குடிக்கு அனுப்பி வழக்கறிஞர் பணி செய்ய வைத்தார். தந்தை சொல்வதைத் தாரக மந்திரமாக கேட்டு வளர்ந்தவ.உ.சி.யின் குணப்போக்கு மிகவும் சிறப்பானது. எனினும் சிறு வயதில் தந்தையின் கட்டுப்பாடுகள், தண்டனைகள், ஏச்சுப் பேச்சுகள் ஆகியவற்றையும் அவர் அந்த வயதுக்கு உரிய பிள்ளையாக இருந்து கேட்டுக்கொண்டதையும் பெற்றுக்கொண்டதையும் உணரும்போது ஒரு சராசரிப் பிள்ளையாகவும் அவர் இருந்ததை அறிய முடிகிறது. அவ்வளவு படித்த அப்பாவும் சராசரித் தந்தையாகவே இந்தக் கட்டுரையாளருக்குத் தெரிந்தார்.

வ.உ.சிதம்பரம், தாம் கொண்ட கொள்கையில் எவ்வகையிலும் சமரசம் காண விரும்பாதவராக இருந்து இவரும் சுப்பிரமணிய சிவாவும் தொடர்ந்து நண்பர்களாக இருந்தனர். பாரதி, திலகர், அரவிந்தகோஷ்

போன்றோருடன் நல்ல தொடர்பை வைத்திருந்த வ.உ.சி. பங்குகள் வழியே ஆசிய நாடுகளில் வசிப்போர்தாம் அவற்றை வாங்க முடியும் என்று பங்குகளை ஆசியர்களுக்குக் கொடுத்து இலாபம் ஈட்டிக் கப்பலோட்டும் நிறுவனத்தைத் தொடங்கிய பாங்கு பாராட்டுக்குரியது. சொந்தக் காலில் உற்ற தொழில்தோழர்களின் உதவியுடன் இவ்வாறு ஒரு நிறுவனத்தை உருவாக்கி வளர்த்தெடுக்க முனைந்ததில் இவரது தொழில்பூர்வ அரசதந்திர உத்தி, வணிகம் சார்ந்த விழுமிய அறிவு, பொருளாதாரம் நோக்கிய அறிவு, அனுபவம் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள முடிகிறது. இல்லை என்றால் பணம் இருந்தாலும் இப்படி ஒரு தொழில்புரட்சியையும் வணிகப்புரட்சியையும் ஒருவர் உருவாக்கிக்காட்ட முடியுமா? கப்பல் தொழில் தொடர்பாக இவர் பம்பாய் சென்றபோது அவரது மகன் உலகநாதன் இறந்தார். அவரது மனைவி நிறைமாதமாக இருந்தபோது இறைவன் மிகு பழியைப் போட்டுவிட்டு வேலையைப் பார்க்கச் சென்றார் என்று அறிய முடிந்தது. இந்த நிலை எதிரிக்கும் வரக்கூடாது என்று நினைக்கும் ஒருவருக்கு வந்துவிட்டது. அதற்காக மனைவி, பிள்ளை என்று ஓடி வராமல் அங்கேயே இருந்து, ஆக வேண்டியவற்றைக் கவனித்த சிதம்பரம் உள்ளுக்குள் வருந்தியவர் எனில் மிகையில்லை. எனினும் என் கடன் பணி செய்து கிடப்பதே என்பதுபோல் தம் இலக்கில் கவனமாக இருந்தார்.

வெள்ளைக்கார மில்லில் வேலை செய்த தமிழர்களுக்கு 12 மணிநேரம் தொடர்ந்து வேலை செய்தவர்களுக்கு உதவும் வகையில் தமிழகத்தில் முதல் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை ஏற்பாடு செய்து வெற்றி பெற்றவர் சிதம்பரனார். எனினும் தொடர்ந்து பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும் என்ற நிலையில் அவர் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கினார். அவர் ஏற்பாடு செய்த தொழிலாளர் வேலை நிறுத்தம், வழியே வ.உ.சி. யை வெள்ளை அரசும் கலெக்டர் விஞ்ச் துரையும் அறிந்துகொண்டனர் என்கிறார் தமிழருவி மணியன்.

'வெள்ளையர் கப்பலைப் புறக்கணித்துச் சுதேசிகள் இதில் ஏறினால் வேலைக்காரன் மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக்கொண்டு லண்டனுக்குப் புறப்பட்டுவிடுவான்' என்று வ.உ.சி. கூறினார். சுப்பிரமணிய சிவா உடனே, 'அது என்ன மூட்டை முடிச்சு அவையும் நம் பொருள்கள்தானே' என்று கூறினார் என்று கருத்துரைக்கும்போது தமிழருவி மணியன் வ.உ.சி. க்கும் அவரது பேச்சுத்திறனுக்கும் தரும் மதிப்பையும் அவரது மொழியாற்றலையும் உணர முடிகிறது. சிதம்பரம், ஆங்கில ஆட்சியை நிந்தித்த குற்றம் உட்பட இவர் உழைத்த உழைப்புக்கு 36 வயதில் இரட்டை ஆயுள் தண்டனையைப் பெற்றார். இந்த நிலையிலும் அவர் பல்வேறு இலக்கியப் பணிகளை மேற்கொண்டிருந்தார் என்பது வியப்பிலும் வியப்பைத் தரும் வலிமிக்க வியப்பாகும்.

வ.உ.சி. யின் பாடற்றிரட்டைப் பார்த்த போது அவர் தேச நிந்தனைக் குற்றத்திற்காக சிறையில் இருந்த போதும் சிறையிலிருந்து வந்த போதும் பாடிய பாடல்கள் இதில் உள்ளன.

அவற்றைப் பற்றிய கட்டுரையாளரின் சில முதல்நிலைக் கருத்துகள் இதோ:

மிகவும் இரங்கத்தக்க மன உணர்வையும் அவர் ஏன் சிறை சென்றார் என்றும் சிந்திக்க வைப்பவை, அவை. தம் நிலையைக் குறித்து அவர் மிக மிக வருந்தியுள்ளார். தம் குடும்பத்துடனும் பிள்ளைகளுடனும் இருக்க இயலா நிலையை எடுத்துக்கூறுகிறார். உடல் நலம், நல்ல வாழ்க்கையை விட்டுவிட்டு இந்தநிலையில் கையறுநிலைப்பாடல்களைப் பாடுகிறாரே என்ற உணர்வை வாசிப்பவர் பெற முடிகிறது

இவ்வளவு வசதியானவர் ஏன் இப்படி ஆனார்? என்று அவ்வப்போது மனத்தில் கேள்வியும் வருத்தமும் ஏற்படுகின்றன.

சுதந்திரம் என்றும் சுதந்திர நாள் என்றும் பேசப்படும் நாளை இன்று உலகில் மக்கள் பல்வேறு நாடுகளில் பல்வேறு வகைகளில் மகிழ்ச்சியாகக் கொண்டாடுகிறார்கள். அன்று பட்ட துன்பங்களை மறந்து இன்று அவ்வந்நாட்டு மக்கள் சுதந்திரமாக வாழ வழிவகுத்த பலரையும் நினைத்துப் போற்றுகிறார்கள். மகிழ்ச்சியாக உறவினர்கள், நண்பர்களுடன் கூடி ஆடி, பாடி மகிழ்வதுடன் விரும்பிய உணவை உண்டு விருந்து படைத்து மகிழ்கிறார்கள். ஆனால், ஒரு காலத்தில் அவ்வந்நாடுகள் அடிமையாக இருந்த நிலை தொடர்ந்து நில்லாது, வாழ வகுத்த தலைவர்களை அறிய முடிகிறது.

‘ஸ்ரீமான் வ.உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் இராஜநிந்தனைக் குற்றத் திற்காகச் சிட்சிக்கப்பட்ட காலத்திற்கு முன்னர் பாடிய தனிப்பாக்களும் அவர்கள் சிட்சிக்கப்பட்டுக் கோயமுத்தூர் சிறையில் வசித்த காலத்திலும் கண்ணனூர் சிறையில் வசித்த காலத்திலும் பாடிய தனிப்பாக்களும் இப்பாடற்திரட்டில் அடங்கியிருக்கின்றன’ என்று நூலின் பதிப்பாசிரியர் எழுதியதை வைத்துப்பார்க்கும்போது மதிப்பிற்குரியோரை அல்லது சக மனிதரை வ.உ.சிதம்பரனார் விளிக்கும் பாங்கை அறிய முடிகிறது.

தம் கவிதைகளில் வ.உ.சிதம்பரனார் மூவகைப் பாக்களையும் பயன்படுத்தி அவற்றை இயற்றியிருப்பதை உணர முடிகிறது. வெண்பா, ஆசிரியப்பா, கட்டளைக் கலித்துறை போன்ற பாவகைகளை எழுதியிருப்பதுடன் மட்டுமின்றிச் சிறந்த இலக்கணவாதியாகவும் இலக்கியவாதியாகவும் திகழவேண்டியவரைத் தமிழ் இழந்துவிட்டதோ என்றும் மனம் சிந்திக்க வைக்கிறது. எனினும் அவர் பணமும் பெருமையும் கிட்டக்கூடிய வழக்கறிஞர் தொழிலில் இருப்பதை எண்ணிப் பூரிக்கவும் மனம் வழி தருகிறது. ஒரு வேளை அவர் இலக்கண, இலக்கியவாதியாகத் தமிழ்த்துறையில் பணிபுரிந்திருந்தால் தேசப்போராட்டத்தில் மிகவும் வீறுகொண்டு சேர்ந்திராமல் தம் உடலையும் குடும்பத்தையும் வாழ்வையும் இந்த அளவுக்கு வருத்தியிருந்திருக்கமாட்டார் என்றும் எண்ணத் தோன்றுகிறது. இந்தச் சிந்தனை கட்டுரையாளருக்கு வந்தாலும் இதனை எழுதும்போது திரு.தமிழருவி மணியன் தெரிவித்த கருத்து முத்தாய்ப்பாகவும் கட்டுரையாளரின் கருத்தை ஆமோதிப்பதுபோலவும் அமைந்துள்ளது. இருந்தும் தேசியப் போராட்ட உணர்வு முடிவில்

இலக்கியத்துடன் போட்டியிட்டு வெற்றிபெற்றதையும் சிதம்பரனார் தம் உடல், உள அளவில் சவால்களை எதிர்நோக்கியதையும் அவரது பாடற்திரட்டில் உய்த்துணர முடிகிறது.

இதற்கிடையில் விடுதலைப்போராட்டத்துக்கு ஓர் இடைவெளி கொடுத்துவிட்டு இலக்கியப்படைப்பில் ஈடுபட்டார். அவர் ஒரு நூலுக்கு உரை எழுதுகிறார் என்றால் அது தொடர்பான பல நூல்களை வாசித்துப் பார்த்துவிட்டுப் பின் தம் கருத்துகளை ஆணித்தரமாக முன்வைக்கும் வகையில் உரை எழுதினார். அவ்வகையில் அவர் சிவஞான போதத்திற்கும் திருக்குறளுக்கும் உரை எழுதினார். வள்ளுவர் முதல் மூன்று அதிகாரங்களை எழுதவில்லை என்றும் கருத்துரைத்தார். அவரது உரை தனித்து நிற்கும் வகையில் இவ்வுரைகளை எழுதியதுடன் திருக்குறளின் அறத்துப்பாலுக்குச் சிறந்த உரையை எழுதியுள்ளார். பொதுவாகப் பலரும் பரிமேலழகர், மு வரதராசனார், ஜி யு போப் போன்றோரின் உரைகளைப் பற்றிக் கேள்விப்பட்டுப் பயன்படுத்திய நிலையில் இவரது உரையைக் கேட்டறிவது இப்போதுதான் என்ற நிலை எழுந்துள்ளது. சில சமயங்களில் உரையை எழுத முனையும்போது பல்வேறு உரைகளைப் படித்துவிட்டு உரைகளைப் பதிப்பிக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளார்.

இங்கு தமிழ்மொழியைப் படித்து அதை வாழ்க்கைத் தொழிலாகக் கொள்ளும் ஒருவர் ஒரு தமிழ்க்கல்வியாளர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை ஒரு வழக்கறிஞர் தம் வாழ்வில் வாழ்ந்து எடுத்துக்காட்டியதைக் கல்வியாளர்கள் உணர்வது, செய்யும் பணிக்குச் சீர்மையும் செம்மையும் பெருமையும் பெருமிதமும் சேர்க்கும் எனில் மிகையில்லை.

இங்கு இக்கட்டுரை சிதம்பரனாரின் படைப்புகளில் இடம் பெற்ற மொழிவகைகளைப் பற்றிப் பேசும் என்றாலும் கட்டுரையின் அளவு நோக்கி அவரது சில படைப்புகளில் சில பகுதிகள் தரவுகளாக எடுத்துக்கொள்ளப்பட்டன. அவரது கடிதங்களும் அவரது பாடல் திரட்டும் அவ்வகையில் பயன்படுத்தப்பட்ட படைப்புகளாகும். வழக்கமாக இந்தப் படைப்புகளில் இடம்பெற்ற அத்தனைச் சொற்களும் வகைப்படுத்தப்பட்டு என்னென்ன மொழி வகைகள் எந்த அளவுக்கு இடம்பெற்றுள்ளன என்று நோக்க வேண்டும்.

வ.உ.சிதம்பரனாரின் உயில் அவரது வாழ்க்கையை முழுமை யாகப் படம்பிடித்துக் காட்டும் சமூகப்பொருளாதார - வாழ்வியல் ஆவணம் எனில் மிகையில்லை. அதில் அவர், யாருக்கு யார் எழுதும் உயில் என்ற பொருளில்,

> *'தூத்துக்குடியிலிருக்கும் மகாஸ்ரீ அ.செ.சு.கந்தசுவாமி ரெட்டியார் அவர்களுக்கு தூத்துக்குடியிலிருக்கும் வ.உ.சிதம்பரம்பிள்ளை எழுதிக்கொடுத்த உயில் சாசன நிருபம்' (திவான், 2993, ப.13)*

என்று எழுதியிருக்கும் பகுதியில், உயிலைப் பெற்றுப் பொறுப்பாக அதில் உள்ளவற்றைச் செயல்படுத்த வேண்டியவர் இன்றியமையா

இடம் பெறுவதை உணரமுடிகிறது. இங்குவ.உ.சி.யின் அப்போதைய வாழ்க்கை நிலையும் இப்படி எழுத ஒரு காரணமாக இருக்கலாம் என்று இக்கட்டுரையாளர் ஊகிக்கிறார்.

அக்காலத்தில் கனம் பொருந்திய பெரியவர்களையும் மதிப்பு மிக்கவர்களையும் நல்ல குணம் கொண்ட பெரியோரையும் வயதில் பெரியோரையும் எனப் பலவகைகளில் ஒருவரை மதித்துப்போற்றும் பாங்கும் சராசரியாக மனிதனை மனிதன் மதிக்கும் பாங்கும் இந்த ஆவணத்தில் வெளிப்படுகிறது. இது வ.உ.சி.க்கும் பொருந்தும் என்றாலும் அவரது பல கடிதங்களிலும் முன்னால் இருப்பவரை வாய்நிறைய மதித்துப்போற்றும் பாங்கும் அவரது வெள்ளந்தி மனமும் தெளிவாக விளங்குகின்றன. அவ்வகையில் இங்கும் மகாஸ்ரீ. அ. செ. சு. கந்தசுவாமி ரெட்டியார் அவர்களுக்கு என்று தொடக்கத்திலிருந்து முடிவுவரை மகாஸ்ரீ என்றும் அவர்களுக்கு என்றும் மதிப்பளித்துப் போற்றும்வகையில் தம் மரியாதைத்தன்மையுடன் கூடிய சொல் பயன்பாட்டை எடுத்துக்காட்டியுள்ளார். மேலும், நிருபம் என்ற நல்லதொரு தமிழ்மொழிச்சொல்லையும் அவர் அறிமுகப்படுத்தி யிருப்பது அவரது மொழிப்பயன்பாட்டுக்கு மற்றோர் எடுத்துக்காட் டாகும். அவரது மொழித்திறமை, மொழியைக் கையாளும் பாங்கு ஆகியவற்றையும் அறிய முடிகிறது.

தமது உயிலில் மரியாதையுடன் ஒருவரை அழைத்து மதிக்கும் பாங்கு:

'அன்பார்ந்த ஐயா, நமஸ்காரம். எனக்கும் எனது குடும்பத்தாருக்கும் கடவுளையும் தங்களையொத்த உண்மை தேசாபிமானிகள் சிலரையும் தவிர இவ்வுலகத்தில் வேறு தஞ்சம் இருக்கிறதாக எனக்குத் தெரியவில்லை. நான், இனிமேல் அதிக காலம் ஜீவித்திருப்பேனென்று திடமாக நினைக்க வழி இல்லை. எனது குடும்ப நிலைமையையும் தாங்கள் முன்னின்று என் குடும்பத்திற்கு செய்ய வேண்டிய காரியங்களையும் இதன் கீழே தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தாங்கள் கீழ்வரும் காரியங்களை செய்து முடித்துக் கொடுத்து என் குடும்பத்தை காப்பாற்றியருளும் படியாக தங்களை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துக் கேட்டுக்கொள்கிறேன்'

என்று தொடங்கும் உயிலில், 'கந்தசாமி ரெட்டியார் ஐயாவை, அன்பார்ந்த ஐயா என்று விளித்து அவரைத் தாம் ஏன் அணுகுகிறார் என்று தம் சுயமரியாதையை விட்டுக் கூறும் வகையில் அவரது உயிலின் தொடக்கம் அமைந்துள்ளது. அதுபோல், 'தங்களை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துக் கேட்டுக்கொள்கிறேன்' என்ற பகுதியும் இதை எழுதுவதற்கு அவர் எந்த அளவுக்கு இரத்தக்கண்ணீர் விட்டிருப்பார் என்றும் உள்ளூர எண்ணி எண்ணிக் குமைந்திருப்பார் என்றும் உணர முடிகிறது. இதை,

'... எனக்கும் எனது மூத்தமகன் ஆறுமுகம் பிள்ளைக்கும் பாக விஸ்திரமாகி பல வருஷங்களாகின்றன. அந்த தஸ்தாவேஜு என் மனைவியிடமிருக்கின்றது. பம்பாய் எம்பெயர் ஆப் இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனியில் ரூபாய் ஆயிரத்துக்கும், ஓரியண்டல் லைவ் அஷ்யூரன்ஸ்

கம்பெனியில் ரூபாய் ஆயிரத்துக்கும் எனது ஆயுளை இன்சூரன்ஸ் செய்திருக்கிறேன். ஒவ்வொரு கம்பெனியிலும் ரூபாய் ஐநூறுக்கு மேல் எனக்கு இலாபம் கிடைக்கக்கூடும். ஆனால் நான் ஒவ்வொரு கம்பெனியிலும் ரூபாய் ஐநூறு கடன் வாங்கி இருக்கிறேன். கடனுக்கும் இலாபத்திற்கும் அனேகமாக சரியாய் போகும். இரண்டு கம்பெனிகளுக்கும் கடைசி பிரிமியமும் வட்டியும் கட்டப்படவில்லை. அது கட்டப்படவேண்டும். (மேற்படி) இரண்டு இன்சூரன்ஸ் தொகையையும் பல வருஷங்களுக்கு முன்னே என் மனைவி பேருக்கு ட்ரான்ஸ்பர் செய்து வைத்திருக்கிறேன். (மேற்படி) இரண்டு இன்சூரன்ஸ் தொகைகள் தவிர என் ....'

(*திவான்*, 1999, *பப*.13,14)

என்று வந்துள்ள பகுதியில், வாசிப்பவருக்குச் சரியாகப் புரியும் வகையில் ஆங்கில ஒலிபெயர்ப்பு, ஆங்கிலத்தில் எழுத்துகளை அடைப்புக்குறிக்குள் தருதல், சமஸ்கிருதச்சொற்கள் ஆகியனவற்றுடன் அழகுதமிழ்ச் சொற்களில் எழுதியுள்ளார். மிகவும் பொறுப்பான, சோகமான, கடப்பாடும் கடமையும் மிக்க ஒரு கல்விமானின் உயிலில் இவற்றையும் நாம் பார்த்து ஒரு நூறு ஆண்டுகாலத்துக்குப் பிறகு அழுவதா பெருமைப்படுவதா இப்படியும் வாழ்ந்திருக்கிறார்களே என்று துடிப்பதா என்று சரியாக உணர்வுகளை இனம் காணமுடியவில்லை. ஆனால் இது உண்மை என்பதுதான் மெத்தப்பெரிய, மேதினி வியக்கும் உண்மை.

ஆங்கிலத்தில் ஒலிபெயர்ப்புகளும் ஆங்கில எழுத்து வடிவங்களும்

தொழில்சார்ந்த நிர்வாகச் சொற்கள் வரும்போது ஆங்கிலத்தில் இடம்பெறும் சொற்களின் ஒலிபெயர்ப்புகள் இடம்பெற்றுள்ளன. சிலவற்றுக்கு உரிய ஆங்கில எழுத்துவடிவங்களும் உள்ளன. மொழி பெயர்ப்பும் உள்ளன. ஆக அவர் தம்முடைய தெள்ளுதமிழ்ச் சுவை சார்ந்த அனுபவத்தையும் அறிவையும் முன்னிலைப்படுத்துவதை விட, வாசிப்பவருக்குப் புரியும் புரிந்துணர்வை முன்னிலைப்படுத்தி யுள்ளார். தவிரவும் அவரது ஒலிபெயர்ப்புகளிலும் தமிழ் வேற்றுமை உருபுகளையும் (எடு. கம்பெனியிலும், இன்ன பிற.,) இலக் கணக்கூறுகளையும் அவற்றில் பொருள்விளங்கும்வகையில் இணைத் திருப்பதால் தமிழ்சார்ந்த ஈடுபாட்டையும் தமிழில் விளக்கமுனையும் பாங்கையும் இங்கே அறிய முடிகிறது. மேலே உள்ள பகுதியில் இடம் பெற்ற பாகவிஸ்திரம் என்ற சொல் இன்று அகராதிகளிலும்கூட அதிகம் பார்க்க இயலாப் பொருள் பொதிந்த சமூகப்பண்பாட்டுச்சொல்லாக இருப்பது சிறப்பிற்குரியது.

வ.உ.சிதம்பரனாரின் உயிலில், என் மைத்துனன்மார் சகோதரியாகிய சோபாக்கியவதி ஆறுமுகத்தம்மாளுக்கு நகைப் பாவத்து வகைக்குக் கொடுக்க வேண்டிய ரூபாய் ஐந்நூறு அவள் இஷ்டப்படி ரொக்கமாகவோ, நகையாகவோ கொடுத்து ரசீது

ஜமீன் அடங்கல் சொத்துக்களில் பரப்பைக் குறிப்பதற்கு, சங்கிலி என்ற அளவும் உள்ளது என்பதுடன் திருநெல்வேலி மட்டுமின்றி

தமிழகத்தின் பல பகுதிகளில் இடம்பெற்றுள்ள நில அளவுகள் ஒழுங்கு செய்யப்பட்டு அனைவருக்கும் கிடைக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும் அறிந்திட இப்பதிவு உதவியாக இருக்கிறது.

தம் கடன்கள், செலவுகள் குறித்த பகுதியில், ஓரிடத்தில்,

'என் மனைவி பேருக்கு ஒரு அடமான தஸ்தாவேஜு' எழுதிக் கொடுத்திருக்கிறாள் .... என் மனைவி அடமானத் தாஸ்தாவேஜை தங்கள் பேருக்கு மெடோபர் வாங்கிக்கொள்க' (திவான், 1999, ப.14)

என்று உயிலில் எழுதித்தந்துள்ளார். இங்கு தஸ்தாவேஜு, மெடோபர் ஆகிய சொற்கள் சொத்து அல்லது கடன் தொடர்பான சொற்களாக இருக்கின்றன. அவரது உயிலைப் படிக்கும்போது படிப்பவர்தம் நெஞ்சு அடைப்பதும் மூச்சுவிடுவதில் விம்முவதும் நன்கு தெரிகிறது.

பாரம்பரிய கிராமத்துப்புழக்கச் சொற்களும் மரியாதை நிமித்தம் இடம்பெறும் சொற்களும் வாழ்வின் பின்னணியை விளக்கும் மொழியும் இங்கே இடம்பெற்று அமைந்துள்ளன. உயிலின் இறுதியில், 'இதன் பிரதி ஒன்று என் மனைவியிடமும் மற்றொன்று என் மைத்துனன் வெங்கிடாசலமிடமும் கொடுக்கப்பட்டுள்ளன.

எல்லாம் வல்ல இறைவன் அருளால் மேற்கண்ட காரியங்கள் எல்லாம் தாங்கள் இனிது செய்து முடித்து அருள்புரிக.

தூத்துக்குடி

வ.உ.சிதம்பரம்பிள்ளை

10.36' (திவான், 1999, ப.19)

என்று ஒரு முறைப்படியான ஆவணத்தை இங்கே எழுதித் தந்துள்ளார் என்பது கட்டுரையாளர் கருத்து. இங்கேவ.உ.சி.யின் இறைநம்பிக்கை மிகவும் சிறப்பாகத் தெளிவாக அமைந்துள்ளதையும் அதனை வெளிப்படுத்தும் சொற்களின் பயன்பாட்டையும் அறிய முடிகிறது.

இங்கு ஒருவரது கடன் சீட்டை மற்றவருக்கு மாற்றுவதை எடுத்துக் கூறும் meetover / maetohvar (Tamil Lexicon) என்ற சொல்லை மெடோவர் சிதம்பரனார் பயன்படுத்துகிறார்.

இனி, வ.உ.சிதம்பரம் குறித்துப் பேசும்போது, அவர் சாதாரண மானவரோ சாமானியமானவரோ இல்லை. அவரது சிந்தனையும் சொல்லும் பேச்சும் எழுத்தும் கூரிய வாளாக வீரம் தருபவை. அவை, இவரை இப்படியே விட்டுவைத்தால் வெட்ட வெட்ட வளரும் விருட்சமாகும் என்று வெள்ளையரை உணர வைத்த வலிமைகள், வீரியங்கள். இவரையும் பாரதியையும் பற்றிக் குறிப்பிடும்போது, 'சிதம்பரம் பிள்ளையின் சொற்பொழிவையும் பாரதியாரின் பாட்டையும் கேட்டால் செத்த உடல் கூட உயிர் பெற்று எழும். புரட்சி ஓங்கும் அடிமைப்பட்ட நாடு ஐந்தே நிமிடங்களில் விடுதலை பெறும் என்று வ.உ.சி.க்கு இரட்டை ஆயுள் தண்டனை அளித்த நீதிபதி ஃபின்ஹே தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார்.' (தினமணி, 2022). இங்கே அந்த

நீதிபதி, சிதம்பரத்தின் மொழித்திறமையை, அதாவது எழுத்து, கவிதைத் திறமைகளைப் பற்றி முழுமையாக அறியவில்லை என்று கட்டுரை யாளருக்குத் தோன்றுகிறது. இல்லையென்றால் அவற்றையும் பற்றிக் குறிப்பிட்டிருப்பார். அந்த அளவுக்குத் திறன் மிக்கவர், சிதம்பரம். மேலும் திறமையாளர்களை அக்காலப் பிரிட்டிஷ் அரசு எப்படி ஒடுக்கியது, ஏன் ஒடுக்கியது என்ற சிந்தனை நம் மூளையையும் மனத்தையும் கூரிய ஆயுதம் கொண்டு அழுத்துவதுபோல் அழுத்துகிறது. இதனால்தான் அவர் சிறையிலிருந்து விடுதலை பெற்று வரும்போது அவரை அழைக்கப் பலரும் வரவில்லையோ என்றும் எண்ண வைக்கிறது.

வ.உ.சிதம்பரனாரின் கடிதங்கள்:

வ.உ.சிதம்பரனார் தம் கைப்படவும் தட்டச்சு இயந்திரத்தில் தட்டச்சிட்ட கடிதங்களும் தற்போது இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவை, அவரது உயில் கூறிய செய்திகளுடன் ஒத்துச் செல்லும் வகையில் தம் உறவு, நட்பு, தொழில், வழக்கு வட்டங்களில் இடம்பெற்ற உரையாடல்கள், வரவு செலவுகள், நூல் அச்சிடல், பதிப்பித்தல் தொடர்பான தகவல்களைக் கொண்டு விளங்குகின்றன. அவற்றில் அவரது தமிழ்மொழி, அதன் வகைகளின் பயன்பாடு குறித்துப் பார்ப்பது பயன் மிக்கதாக அமையும்.

> *‘சுவாமியவர்கள் சமூகத்திற்கு சிதம்பரம் நமஸ்காரம். ஷேமம். ஷேமத்துக்குப் பிரார்த்திக்கிறேன். தங்கள் 4-8-28 கார்டு வரப்பெற்றுப் பார்த்து, வக்கீலுக்கு ரூ 200-ம் அனுப்பி முடிந்த விவரம் தெரிந்து சந்தோஷம் அடைந்தேன். தாங்கள் இந்தச் சமயம் ரூ 500 தயார் செய்தது கடவுள் செயல்தான் என்று சொல்லவேண்டும். - சந்தோஷம் அடைந்தேன்.’*

(சிதம்பரம் பிள்ளை,ப.11) என்ற பகுதியில் பெரியோரை மதித்து விளித்தல், மகிழ்ச்சியை வெளிப்படுத்துதல் என வரும்போது சமஸ்கிருத மொழியின் வாடையும் அங்கே வீசுகிறது. இது அவரவர்க்கு ஏற்பப் பயன்படுத்தப்படும் மரியாதைச் சொற்கள் அவை சார்ந்த பயன்பாடு என்று கூறலாம்.

நமஸ்காரம் என்பது வடமொழியிலிருந்து வந்த சொல். தமிழகத்தில் பல்வேறு சமூகங்கள், புவியியல் பகுதிகளைச் சேர்ந்தோரில் சிலர் மற்றொருவரிடம் பேசும்போது நமஸ்காரம் என்று மரியாதை நிமித்தம் சொல்லித் தம் கடிதத்தை அல்லது உரையாடலைத் தொடங்குவர். அவ்வகையில் இங்கும் வ.உ.சிதம்பரனார் நமஸ்காரம் என்று மரியாதையைத் தெரிவிக்கிறார்.

அவர் நலம் நலமறிய அவா அல்லது நலம் நலமறிய ஆவல் என்று கடிதத்தைச் சிலர் தொடங்கும் மரபையும் அறிந்திருக்கிறார். அங்கே ஷேமம் என்ற பிறமொழிச் சொல்லைப் பயன்படுத்தி நலத்தைத் தெரிவிக்கிறார்.

இச்சொல் ஒரு குறிப்பிட்ட சமுதாய வழக்காகவும் இருப்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

இங்கே (சிதம்பரம் பிள்ளை, ப.12) தன் மாமா கு.ஞானதேசிகம் பிள்ளையவர்களுக்குக் கடிதம் எழுதும்போது மேலே கூறிய செய்திகளை எழுதியிருக்கிறார். கடிதங்களில் உறவினர்க்கானவற்றில் சொத்து, நலம், குழந்தை பிறப்பு, வேறு இரத்த உறவு சார்ந்த செய்திகள் இருப்பதை அறிய முடிகிறது. அவர் உறவையும் நட்பையும் தேசத்தொண்டையும் வழக்கறிஞர் பணியையும் சிறையில் இருந்த காலத்திலும் வெளியே இருந்த காலத்திலும் கவனமாகப் பார்த்துச் செயல்படுத்தி வந்தமை அவரது மொழிப்பயன்பாட்டில் மிகவும் சிரத்தையாகச் சொல்லப் பட்டுள்ளன. அடுத்து வரும் பகுதியும், மாமா ஞானதேசிகம் பிள்ளை யவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் திருமணப்பத்திரிகைகள் அனுப்பும் செய்தியையும் அவற்றை யார் யாருக்குத் தர வேண்டும் என்றும் விவரமாகப் பேசியுள்ளார், வ.உ.சி. (ப.13)

> *‘இத்துடன் புக் போஸ்டில் திருமணப் பத்திரிகை 12 வருகின்றன. சுவாமியவர்களுக்கு 1, மாப்பிள்ளை சிரஞ்சீவி ஞா சிவசுப்பிரமணிய பிள்ளைக்கு 1, மாப்பிள்ளை சிரஞ்சீவி சங்கரம் பிள்ளைக்கு 1, மேலத்தெரு தம்பி ச. சுப்பையா பிள்ளைக்கு 1, மற்றைய நமது பந்துக்களுக்கு, மற்றவை விலாசம் எழுதுவித்து உடனே கொடுக்கக் கலியாணத்துக்கு எல்லோரும் குடும்ப சரிதம் வந்து சேரும்படி செய்யப் பிரார்த்திக்கிறேன். சுவாமியவர்கள் முதலானவர்கள் முன்னர்க்...’*

(சிதம்பரம் பிள்ளை, ப.13) என்ற பகுதியில் புக் போஸ்டில் என்று தமிழ் வேற்றுமை உருபுடன் கூடிய ஆங்கிலச்சொல்லையும் பந்துக்களுக்கு என்று உறவினர்களுக்கு என்ற பொருள் படும்வகையில் பிறமொழிச் சொல்லையும் அவர் பயன்படுத்தியிருக்கிறார். தட்டச்சில் அவர் சிறப்பாக வேகமாகத் தட்டச்சிட்டதால் ஓரிரு எழுத்துகள் அல்லது எழுத்துகளின் சினைப்பகுதிகள் விடுபட்டதை அறிய முடிகிறது. இங்கே அவரது காலத்தில் இடம்பெற்றுள்ள வழமைகள், பண்பாட்டுப் பயன்பாடுகள் குறித்து அறிய முடிகிறது.

மற்றொரு கடிதத்தில்,

> *‘சுவாமியவர்கள் கார்டு வரப்பெற்றேன். நம்முடைய பனஞ்சொத்தைத் தேவஸ்தானத்திற்கு வாங்குகிற விஷயமாகக் குறிப்பிட்ட மனுஷர்களிடம் பேசியிருக்கிறேன். இன்னமும் பேசுகிறேன்.*
>
> *சிரஞ்சீவி வெங்கையாவும் சாமியாரவர்களும் இன்னும் இங்கு வர வில்லை. ஒவ்வொரு டிரெய்னிலும் அவர்கள் வரவை எதிர்பார்த்திருக் கிறோம்’*

இங்கு அஞ்சல் தொடர்பான சொல்லை ஆங்கிலத்தில் கார்டு என்கிறார் அவர் தட்டச்சில் அனுப்பும்போது ஓரிடத்தில் அவசரமாக அடித்திருப்பதை அறிய முடிகிறது. எனினும் கூற வரும் பொருள் தெளிவாகத் தெரிகிறது. அவர் பெரும்பாலும் எழுதும்போது, தம்மைப் பற்றிச் சிந்திக்காமல் வாசிக்கும் மனிதர்களைப் பற்றி அதிகம் சிந்தித் திருக்கிறார். தவிரவும் பேசுவதுபோல் மனுஷர்கள் என்று மனுசன்

என்ற சொல்லை மரியாதையாக எழுதியிருக்கிறார். புகைவண்டி குறித்த செய்தியை டிரெயினிலும் என்று ஆங்கிலத்துடன் கொண்ட தமிழில் எழுதியிருக்கிறார். மற்றோரிடத்தில் திருமணப்பத்திரிகைகளை யார் யாருக்கு அனுப்ப வேண்டும் என்று வரும்போது சமூகத்தில் இயல்பாகப் பயன்படுத்தும் சொற்களைப் பயன்படுத்தித் தம் செய்திகளைத் தெரிவித்திருக்கிறார்.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத் துக்கு அனுப்பிய கடிதத்தில், '.. . 'இன்னிலை' நூல் குறித்துத் தெரிவிக்கும் பகுதியில், பதினெண் கீழ்க்கணக்கு நூல் மூலங்களடங்கிய தங்கள் பதிப்பு நூலுக்கு முன்னுரை எழுதுவதாயிருப்பின் நான், இன்னிலை இரண்டாம் பதிப்பை வெளியிட்ட பின்னர்த் தஞ்சையிலிருந்து திரு. எச். வையாபுரிப் பிள்ளை பி ஏ., பி எல்., அவர்கள் மூலமாக ஒரு கையெழுத்துப் பிரதி கிடைத்திருக்கிறதாகவும், அந்நூலை அனுவயம், பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விசேடவுரைகளுடன் வெளியிட்டிருக்கிறதாக அதில் குறிப்பிடும்படி தயவு செய்யக் கேட்டுக்கொள்கிறேன்' (சிதம்பரம் பிள்ளை, ப. 15) என்று எழுதியுள்ளார். இங்கே குறிப்பிடப்பட்டுள்ள இந்த ஐந்து உரைகளும் எந்த அளவிற்குப் பெருமையும் தம்முள் பல கூறுகளையும் கொண்டுள்ளன என்பதை எடுத்துக்கூறும்போது உரிய இலக்கிய மொழிநடையுடன் கூடிய சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

சிதம்பரம் பிள்ளை, தம் மைத்துனனுக்குக் கடிதம் எழுதும்போது, 'அன்புள்ள மைத்துனா, ஷேமம். ஷேமத்துக்கு எழுது' என்று நலம், நலமறிய ஆவல் என்பதன் உள்பொருளை எடுத்துக்கூறும்போது அதை உரிமையுடன் ஷேமத்துக்கு எழுது (1.6.1935) என்று குறிப் பிட்டுள்ளார். மேலும் அவர், 'உன் கடிதங்களெல்லாம் வந்தன. என் கையில் ரூபா இல்லை. கனம் முதலாளியவர்களிடம் ரூபா கேட்க வெட்கமாயிருக்கிறது. நானும் வெங்கும் சூன் மீ 11 உ மாலையில் அல்லது சூன் மீ 12-உ காலையில் குலசேகரப்பட்டணம் போவதற்கு அங்கு வருவோம். அப்போது ரூபா கொண்டு வருகிறேன்' (சிதம்பரம் பிள்ளை, ப.17). என்ற பகுதியில் ரூபா என்ற சொல்லைத் தரமான பேச்சுத்தமிழில் பயன்படுத்தியிருக்கிறார். அவர் எழுத்துத்தமிழில் தம் கடிதத்தை எழுதினாலும் ரூபாய் என்று எழுதவில்லை. இதை ஒரே கடிதத்தில் இரண்டு இடங்களில் காண முடிகிறது. மேலும் தமிழில் மாதம், நாள் குறித்து எழுதும்போது சுருக்கமான முறையில் எழுதும் பழக்கமும் அவரிடத்தில் இடம்பெற்றுள்ளது. அதாவது, 'சூன் மீ 11 உ மாலையில்' என்று வரும் இடத்தில் சூன் மாதம் 11ஆம் தேதி மாலையில் என்பதை வாசிப்பவர் புரிந்துகொள்ளும்வகையில் எழுதியுள்ளார். இது சமூகநோக்கில் இடம்பெற்று இருந்த மொழி சார்ந்த புரிந்துணர்வை எடுத்துக்காட்டுகிறது.

வ.உ.சிதம்பரம் தமது தமிழ்க்கடிதங்களுடன் உரிய இடங்களில் ஆங்கிலக் கடிதங்களையும் எழுதியுள்ளார். அதிலும் வியாபாரம், நூல் வணிகம் சார்ந்த இடங்களில் ஆங்கிலமொழியைப் பயன்படுத்தியுள்ளார்.

இது நிர்வாகக் காரணங்களுக்காக ஆங்கிலமொழியில் ஆவணம் இருப்பது பயன்மிக்கதாக இருக்கும் என்று உணர்ந்து ஆங்கிலத்தில் எழுதியுள்ளாரோ என்று எண்ணத்தோன்றுகிறது. அங்கே அகமே புறம், மெய்யறம் ஆகிய இரண்டு நூல்கள் தொடர்பாக அவற்றினை விலை குறித்துத் தருவதற்கும் எல்லாத் துறைகளிலும் பலரும் தற்போது ஆர்வத்துடன் இருக்கிறார்கள் என்பதை அறியும்வகையில் தம் கருத்துகளைக் கறாராக எழுதியுள்ளார். மேலும் விலையைக்குறைத்துத் தர முனைந்தாலும் தமது 25 விழுக்காடு கமிஷனை எடுத்துக்கொள்ளப்போவதாக அவர் தெரிவித்துள்ளார் (ப.18). அங்கே அவரது ஆங்கிலத்தின் பழுத்த அனுபவத்தேர்ச்சி, மொழி சார்ந்த ஆளுமை ஆகியன தெளிவாக வெளிப்படுகின்றன.

> *‘. . . . நான் ஒரு வாரத்திற்குள் பணத்தையனுப்புவதாயிருந்த கார்டு வந்து இப்போது இரண்டு வாரகாலமாகியும் பணம் வரவில்லை. நான் எவ்வளவோ ஆத்திரப்பட்டுத் தங்களுக்குக் கடிதங்கள் எழுதியும் ஒரு பிரயோஜனமுமில்லை. இது பார்த்தவுடனே பணம் தயாராய் விட்டதா, இல்லையா என்ற விபரத்துக்குப் பதிலெழுதும்படி பிரார்த்திக்கிறேன். இவ்விதம் நாள் கடத்துவது தங்களுக்கு நியாயமாயிருந்தால் சரி. தங்களுடைய பதிலையும் மணியார்டர் வரவையும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறேன்’ (சிதம்பரம் பிள்ளை, ப.2)*

என்று அம்மான் தி கு ஞானதேசிகம் பிள்ளையவர்களுக்கு எழுதிய கடிதத்தில் தம் மனநிலையையும் ஆத்திரத்தையும் பணம் கிடைக்குமா என்று ஏங்கும் ஆழமான ஏக்கத்தையும் எடுத்துச்சொல்லும்போது வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவதுபோல் முறைசார்ந்த வகையில் எழுத்துத்தமிழைப் பயன்படுத்தியிருக்கிறார். இது அவரது நிலையில் வேறு யார் இருப்பினும் இந்த அளவுக்கு மனநிலையையும் மொழியையும் வெளிப்படுத்தும் திறனை அவர் பெற்றிருப்பாரா என்று கேட்கத் தோன்றுகிறது.

‘சுவாமியவர்கள் சமூகத்திற்கு அடியேன் சிதம்பரம் விண்ணப்பம்’ என்று தொடங்கும் கடிதத்தில், ரெவினியூ, பெட்டிஷனை, இங்கிலீஷில், சப் கலைக்டரவர்களிடம், வாயுதாவை, பீற்றர் பிள்ளையவர்களிடம், தங்கள் நோட்டை வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள்’, என்று எழுதியவர் ஓரிடத்தில்,

> *. . ‘தங்களிடம் ரூ.1500- 0- 0 தற்சமயம் வந்திருப்பதாய்ச் சரியான மனுஷாள் மூலமாய்க் கேள்வியுற்றேன். ஆதலினால் இது பார்த்தவுடனே எனக்கு வேண்டிய ரூபாய் பூராவையும் பீற்றர் பிள்ளையவர்களிடம் செலுத்தி தங்கள் நோட்டை வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள். இந்த தடவையும் தங்கள் பழம் செலுத்தாமலிருந்துவிடக் கூடாது. விகிதமும் நியாயமும் முறையாதிருக்க வேண்டுமென்பது என் கருத்து. தாங்களும் அதைக் கவனிக்க வேண்டும். உடனே பதில் எழுதுங்கள்’ (சிதம்பரம்பிள்ளை, ப.3)*

என்று வருமிடத்தில் அவர் ஆங்கிலச்சொற்களை அதிலும் குறிப்பாகப் பணம், பட்டுவாடா தொடர்பான சொற்களை அவ்வாறே ஒலிபெயர்த்து

எழுதியிருப்பதுடன் வேண்டும் என்ற இடத்தில் தரமான பேச்சுத்தமிழைப் பயன்படுத்தியுள்ளார். முழுமையையும் என்ற பொருளில் வருமிடத்தில் பூராவையும் என்ற தினசரி வாழ்வில் அனைத்துத்தட்டு மக்களும் பயன்படுத்தும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

16.08.03இல் சுவாமியவர்களுக்கு எழுதிய கடிதத்தில்,

‘சுவாமியவர்கள் சமூகத்திற்கு அடியேன் சிதம்பரம் விண்ணப்பம். ஷேமம். ஷேமத்துக்குப் பிரார்த்திக்கிறேன். உங்களுடைய பல வாயுதாக் களை நம்பி இதுவரை மோசம் போனேன். உலகத்தில் இத்தகைய மனுஷா ளுமிருப்பார்களென்று தெரியாதவனாய்ப் போய்விட்டேன். செம்பம்பர் மீ 5 உக்குள் சூட்டுத் தாக்கல் செய்வது பிரமாணம். அதற்கு முன்பணம் அகப்பட்டால் அனுப்புங்கள். வேறு பதில் ஒன்றும் வேண்டுவதில்லை. உங்களுடைய வாயுதாக்களை இனிமேல் நம்பப்போகிறதில்லை. இது பிரமாணம்.’ *(சிதம்பரம் பிள்ளை, ப.4)*

என்ற பகுதியில் விண்ணப்பம் என்று பணிவாகத் தொடங்கி, ‘தங்களுக்கு எனக்குத் தாங்கள் செல்ல வேண்டியிருக்கிற பணம் விஷயமா யெழுதுகிற கடிதம் இதுதான் கடைசி’ என்று இடையில் வருத்தத்தையும் மறைமுகமான கோபத்தையும் எழுத்தில் காட்டுகிறார்.

இங்கே, வாயுதாக்கள் (அரபு, உருது மூலத்திலிருந்து), மனுஷாளு மிருப்பார்கள் பேச்சுத்தமிழ்ச் சொல்), பிரமாணம் (வடமொழிச்சொல்), சூட்டு (ஆங்கிலச்சொல்லின் ஒலிபெயர்ப்பு), பிரமாணம் (வடமொழிச் சொல்) என்று தம் மனநிலையை விளக்கும் வகையில் சொற் கோவையைப் பயன்படுத்தியுள்ளார்.

வ.உ.சிதம்பரம் தம் உடன்பிறப்புக்குக் கடிதம் எழுதும்போது முறைசார்ந்த முறையில் மரியாதை, அன்பு ஆகியவற்றையும் அக்கறையையும் வெளிப்படுத்தும்வகையில் எழுதியிருக்கிறார். இது அவரது தமிழ்மொழிப் புழக்கத்தையும் தேர்ச்சியையும் அதை இடம், பொருள், ஏவல் அறிந்து பயன்படுத்தும் போக்கையும் அறிய முடிகிறது.

உ வே சா அவர்களுக்கு எழுதிய கடிதம்:

- உ. வே. சா. அவர்களுக்கு வ.உ.சி. எழுதிய கடிதத்தில்,

‘அன்பார்ந்த ஐயன்மீர்,

நமஸ்காரம். தங்கள் கடிதமும் உரையும் பெற்றுப் பார்த்து மகிழ்ச்சி யுற்றேன். தங்களுக்கு என் வந்தனத்தை அளிக்கின்றேன். அவ்வுரைகளைத் தாங்கள் எழுதித் தந்ததாக ஒரு குறிப்பெழுதிச் சேர்த்து அச்சிற்குக் கொடுத்துள்ளேன். தங்கள் பூரண ஆரோக்கியத்திற்கும் நீடிய ஆயுளுக்கும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிற வ.உ.சிதம்பரம் பிள்ளை’

என்று எழுதியிருக்கிறார். இங்கும் வாசிப்பவரை நோக்கிய மரியாதையும் மதிப்பும் இங்கே ஆழமாக இடம்பெற்றுள்ளதை உணர முடிகிறது. இது வ.உ.சி.யின் மக்கள்தொடர்புத் திறன், மொழியை இடம், பொருள் நோக்கிப் பயன்படுத்தும் பாங்கு ஆகியவற்றை எடுத்துக்காட்டுகின்றது என்றால் மிகையில்லை.

பாடற்றிரட்டு தரும் கூடுதல் செய்திகள்:

சிதம்பரம் பிள்ளையின் கவிதைத்திறனை வெளிப்படுத்தும் நூல்களில் ஒன்றாக பாடற்றிரட்டு அவரது வாழ்க்கையைப் படமாகக் காட்டும் ஆவணம் எனில் மிகையில்லை.

381 பாடல்களைக் கொண்ட இந்நூலில் கடவுள் தொடர்பாக 100 பாடல்களும் ஒழுக்கம் குறித்த 100 பாடல்களும் மீதமுள்ள 109 பாடல்கள் தம் குடும்பத்தார்க்கும் சுற்றத்தார்க்கும் நண்பர்களுக்கும் எழுதப்பட்டவையாகும். இங்கு தேசத்துரோகத் தண்டனைக்கான சிறைவாசத்துக்கு முன் 97 பாடல்களையும் சிறையில் இருந்த போது பாடிய பாடல்கள் 284 என்றும் நூல் பதிப்பாசிரியர் திவான் தெரிவித்துள்ளார். இங்கே அவர் 350 வெண்பாக்களையும் ஒரு தாலாட்டையும் மூன்று விருத்தப்பாக்களையும் 15 கட்டளைக்கலித்துறைப் பாடல்களையும் 443 ஆடிகள் கொண்ட 11 நிலைமண்டில ஆசிரியப்பாக்களையும் கொண்டுள்ளார். இங்கு அவர் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா பாடல்களில் தம் திறன்களை வெளிப்படுத்தியுள்ளார்.

தமது பாடல்கள் எந்தெந்தத் தொகுப்பினரைப் பற்றி அமைந்துள்ளன, அவற்றை எந்த நேரத்தில் பாடினார், அவர்களுடன் அவர் கொண்ட அன்பு எத்தகையது என்றும் சிறை வாழ்க்கை எவ்வாறு அமைந்திருந்தது என்று எடுத்துக்கூறுகிறார். நெஞ்சை நெகிழவைக்கும் இவரது பாடல்கள் சிறந்த தமிழ்மொழியின் சான்றாக விளங்குகின்றன.

ஈகை பற்றிப்பாடும் பாடல்களில் ஒன்று,

ஈதலினால் வீடு அதனை எய்துவர் என்று ஆன்றோர் முன்
ஓதினரால் அவ்வுரையில் உண்மையுறற்கு ஏது உள
தெற்று என்று சற்று உன்னின் ஈதலினாற் சாருநமைப்
பற்றின்மை அன்புடைமை பார்

என்ற சொற்களைக் கொண்ட பாடல் அதன் இலக்கணப்பின்னணியுடன் அமைந்துள்ளது.

‘ஈதலினால் வீடதனை யெய்துவரென் றான்றோர்மு

னோதினரால் அவ்வுரையி லுண்மையுறற்கு ஏதுவுள

தெற்றென்று சற்றுன்னி னீதலினாற் சாருநமைப்

பற்றின்மை யன்புடைமை பார்’

என்பது அவரது நூலிலுள்ள பாடல்.

தமது முதல் மனைவி சிவலோகமடைந்தபோது பாடிய பாக்களில் ஒன்று வருமாறு

‘மகராசி என்றழைக்கும் வள்ளியம்மாள் உன்னன்
முகராசி என் கண்முன் நிற்க -மிக ராசி
யாய் எனக்கும் என்னவர்க்கு யார்க்கு நடந்துநின்று
போய் அதுவான் என்னோ புகல்’ *(சிதம்பரம் பிள்ளை, ப. 21)*

என்று பாடும்போது மனைவி மகராசியாக மட்டுமின்றி அவரது முகராசியும் இவர் கண்முன் நிற்க அவருக்கும் அவரைச் சார்ந்தோருக்கும் மிகவும் அன்புடன் ராசியாய் நெருக்கமாக இருந்தவர் எப்படி வான் உலகிற்குப் போனார் என்று கையறுநிலையினராகப் பாடும்போது அவர் திருமணம் செய்தும் பிள்ளைகள் பெற்றும் மனைவியுடன் வாழ வேண்டிய வாழ்க்கையை வாழாத ஒரு நிலையை எண்ணி வருந்துவதை உணர முடிகிறது.

முடிவுரை:

கப்பலோட்டிய தமிழனாகவும் செக்கிழுத்த செம்மலாகவும் தமிழ் மக்களின் மனங்களிலும் இன்று உலக அளவிலும் தம் 150ஆம் பிறந்தநாள் நிறைவைக் கொண்டாடும் இலக்கியவாதியும் இலக்கண வாதியும் கவிஞரும் எழுத்தாளரும் உரையாசிரியருமான வழக்கறிஞர் வ.உ.சிதம்பரனார் பற்றிப் பேச வார்த்தை இல்லை என்று கூறுமளவுக்குத் தன் குறைந்த வாழ்நாளில் நிறைந்த செயல்களைச் செய்துள்ளார்கள். இன்று பேசினால் தட்டச்சுச் செய்யும் அளவுக்கு ஏன் தலைப்பைத் தந்தால் கட்டுரையையே எழுதித்தரும் இயந்திரங்கள் இருக்கின்ற இன்றைய காலகட்டத்தில் நம்மால் முடிக்க இயலாப் பல பணிகளை அவர் எப்படி வாழ்வுக்கும் நோய்க்கும் சாவுக்கும் இடையில் செய்தார் என்பது இன்னும் ஒரு பெரும் வினாவும் வியப்பும் வேதனையும் வலியும்தான் எனில் மிகையில்லை. இங்கே வள்ளி நாயகம் (1994) எழுதிய பின்வரும் பத்தியை அவரை நினைவுகூர்ந்து அவருக்கு நன்றி கூறலாம் என்பது கட்டுரையாளரின் கருத்தாகும்.

‘சங்க இலக்கியங்கள் ஐம்பெருங்காப்பியங்கள் புராண இதிகா சங்கள், நீதி நூல்கள், வேதாந்த நூல்கள் ஆகியவற்றில் ஆழ்ந்த அறிவினராய் விளங்கிய காலகட்டத்தில் வ.உ.சி. அரசியல் காரணத் திற்காகச் சிறைப்பட்டார். விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சிறை சென்ற அருந்தலைவர்களிலே வேறெவரும் இத்தகுதிகளைப் பெற்றிருக்க வில்லை. விடுதலைப் போரில் கலந்து சிறை செல்லத் தமிழ்ப் புலவர் களிலே மிகுதியானவர்கள் முன்வரவில்லை. ஒரு சிலரே, அப்பேற் றினைத் தமிழ் மொழிக்குத் தேடித்தந்தனர். அவர்களிலே முதன்மை யானவர் வ.உ.சி. ஆவார்.’ (ப.7).

1. மேற்கோள் நூல் பட்டியல்:

1. அகரமுதலி இணையப்பக்கம்: https://www.xn--vkc6a6bybjo5gn.com/
2. அண்ணாமலை இ., (2009). அணிந்துரை. சீதா லட்சுமி, வனிதாமணி சரவணன்- இல். தரமான பேச்சுத்தமிழும் ஆசிரியவியலும். சிங்கப்பூர்: பசும்பொன் பப்ளிகேஷன்ஸ்.
3. சங்கர் வள்ளிநாயகம் அ., (1994). வ.உ.சி.யும் தமிழும். சென்னை உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.
4. சிதம்பரம் பிள்ளை வ. உ., (1999 இரண்டாம் பதிப்பு). திவான் செ., (பதிப்பாசிரியர்). வ.உ.சி. பாடல்கள். திருநெல்வேலி: வ.உ.சி. இலக்கியப்பேரவை.
5. இணையப்பக்கம் https://tamildigitallibrary.in/voc/01

6. சிதம்பரம் பிள்ளை வ உ., (தேதி இல்லை). (பதிவேற்றப்பட்ட ஆண்டு 2021). வ.உ.சி. தம்பரனாரின் கடிதங்கள். இருக்குமிடம்: கன்னிமாரா நூலகம்.
7. சீதா லட்சுமி, வனிதாமணி சரவணன். (2009). தரமான பேச்சுத்தமிழும் ஆசிரியவியலும். சிங்கப்பூர்: பசும்பொன் பப்ளிகேஷன்ஸ்.
8. தமிழருவி மணியன். சுதந்திர வேள்வி கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம்பிள்ளை பற்றி தமிழருவி மணியன். Thamizharuvi Manian about V.O.C. இணையப்பக்கம் https://www.youtube.com/watch?v=qx9jmYChAP0
9. திவான் செ., வ.உ.சி..யின் உயில். திருநெல்வேலி: சுஹைனா பதிப்பகம்.
10. தினமணி, தாய்மொழியே தலைமைமொழி(சிறப்புக் கட்டுரைகள்). இணையப்பக்கம் .https://www.dinamani.com/editorial-articles
11. தினமணி, (2022). இணையப்பக்கம்: https://www.dinamani.com/weekly-supplements/sunday-kondattam
12. துளிர் ஐ ஏ எஸ் அகாடெமி. வ.உ.சி வாழ்க்கை வரலாறு| தூத்துக்குடி முத்து. இவர் யார் தெரியுமா?|கப்பலோட்டிய தமிழன்| V.O.C|. இணையப்பக்கம் https://www.youtube.com/watch?v=LUovR5_aqhw
13. பரஞ்சோதிப் பாண்டியன், 2024 & கண்ணன் ராமசாமி. முகநூல் பக்கம்: https://www.facebook.com/paranjothi.pandian/posts
14. தமிழ் இணையக் கல்விக்கழகம்..(2021). வ.உ.சி.தம்பரனாரின் கடிதங்கள். கன்னிமாரா நூலகம். இணையப்பக்கம்: https://tamildigitallibrary.in/Articles/
15. வலைத்தமிழ்.காம். உலகத்தாய்மொழி தினம்(சிறப்புக்கட்டுரை). இணையப்பக்கம் 16. https://www.valaitamil.com/world-mother-language
16. Mateos, M. A. (2022). Translating into Spanish the Linguistic Varieties of Japanese Language: Three Cases from the Novel Kisetsu no nai machi by Yamamoto Shūgorō. Clina, 8(2), 55. https://doi.org/10.14201/clina2022825570 Schiffman H F., (1998). Standardization and Restandardization: the case of Spoken Tamil. Language in Society, Vol. 27 (3) 359-385. DOI: https://ccat.sas.upenn.edu/ஸ்ரீharoldfs/public/Standardization.pdf
17. Tamil Lexicon. இணையப்பக்கம்: வ.உ.சி.யின் சிவஞான போத உரை

28

மாணவரியலில் வ.உ.சி.யின் புதிய சிந்தனைகள்

முனைவர் ஆ. விக்டர் பாபு
தமிழ்த் துறை, உதவிப் பேராசிரியர், ம.சு. பல்கலைக்கழகக் கல்லூரி, கோவிந்தபேரி.

ஆய்வுச்சுருக்கம்:

வ.உ.சி.யின் இலக்கியப் பங்களிப்பை ஆய்வு செய்ய வேண்டியதும் அதைப் பதிவு செய்ய வேண்டியதும் இன்றியமையாதது. இக்கட்டுரை வ.உ.சி.யின் மெய்யறம் என்ற நூலில் உள்ள மாணவரியல் என்ற இயலை மட்டும் ஆராய்கிறது. அதன்வழி வ.உ.சி.யின் படைப்பாற்றலையும் தனித்தன்மையையும் சமூகச் சிந்தனைகளையும் கண்டறிந்து பதிவு செய்ய முயல்கிறது.

முன்னுரை:

வ.உ.சி. கண்ணனூர் சிறைச்சாலையில் இருந்தபோது சக கைதி களுக்குக் கூறிய அற உரைகளின் வளர்ச்சி என்று இந்நூலைக் கூறலாம். அறக்கருத்துகளை எளிய மக்களும் புரிந்துகொள்ளும் விதமாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இதை "மடியரும் கேட்க ஓரடியால் யாத்தனன்" என்று இந்நூலில் சிறப்புப் பாயிரமும் சுட்டிக்காட்டுகிறது. இந்நூல் ஐந்து இயல்களையும் 125 அதிகாரங்களையும் 1250 பாக்களையும் (வரிகள்) கொண்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரமும் முதுமொழிக்காஞ்சி போன்று பத்து வெண்செந்துறை அடிகளால் ஆனது. இந்நூலைப் பற்றி தி. செல்வகேசவராய முதலியார் "திட்பம் நுட்பம் சிறந்து இழுமென் மொழியால் விழுமிய பொருள் உரைத்தலால் இந்நூல் தோல் எனும் வனப்பு வாய்ந்தது" என்று குறிப்பிடுகிறார்.

மாணவரியல்:

மெய்யறம் நூலின் ஐந்து இயல்களில் முதல் இயலாக மாணவரியல் அமைந்துள்ளது. இதில் 30 அதிகாரங்கள் காணப்படுகின்றன. பின்வரும் இல்வாழ்வியல், அரசியல், அந்தணரியல், மெய்யியல் ஆகிய இயல்களுக்கு அடிப்படையான இயலாக இந்த மாணவரியல் காணப்படுகிறது. தனிமனித முன்னேற்றமே சமூக முன்னேற்றமாக மாறும். சமூகம் தலை சிறந்ததாக அமைய கல்வி அவசியம். கல்வியைப் பெறும் பருவம் மாணவப் பருவம் எனவே தனி மனிதர் அனைவரும் மாணவ மனநிலையில் இருந்து அனைத்து நற்காரியங்களையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த இயலுக்கு மாணவரியல் என்று பெயரிட்டுள்ளார் எனக்கருதலாம். இதில் காணப்படும் ஒவ்வொரு அதிகாரத் தலைப்புக் கும் முதல் அடியில் தலைப்புக்கான விளக்கத்தையும் பின்பு அந்த தலைப்பு சார்ந்த நீதிக் கருத்துகளையும் வரிசைப்படுத்தி உள்ளார். இவர் கூறும் நீதிக் கருத்துகளில் பிற நூல்களில் உள்ள தாக்கம் தவிர்த்து வ.உ.சி. யின் தனித்தன்மையான கூறுகளை இக்கட்டுரை விளக்க முயல்கிறது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் பெண் கல்வி பற்றிய விழிப்புணர்வு மிகக் குறைவாக இருந்த காலகட்டம். 1914 வாக்கில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் இந்நூலில் பெண் கல்வியின் இன்றியமையாமையை வ.உ.சி. பதிவு செய்துள்ளார். “மாண்பெற முயல்பவர் மாணவர் ஆவர் / ஆணும் பெண்ணும் அது செய்ய உரியர் / இளமைப் பருவம் இயந்ததற்கே / மற்றைய பருவமும் வரை நிலை இலவே” (பாடல் வரிகள்: 2,3,4,5) ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் கல்வி பெறத் தகுதி உடையவர்கள் என்று இவ்வரிகள் விளக்குகின்றன. அதோடு இளமைப் பருவம் மட்டுமல்ல முதுமைப் பருவத்திலும் கல்வி கற்க முடியும் என்று முதியோர் கல்விக்கு முதல் குரல் கொடுத்துள்ளார்.

தொழுதல்:

தாய் தந்தையரை அடுத்து நாம் உண்மையை வணங்க வேண்டும் என்கிறார். உலகப் பொருட்களுக்கெல்லாம் உயிராக, அறிவாக, பகுத்தறிவாக அவ்வுண்மையே காணப்படுகிறது என்றும், உறங்கும் போதும் விழிக்கும் போதும் எப்பொழுதும் உண்மையை மனதில் நினைக்க வேண்டும் என்றும் கூறுகிறார். அதோடு “எம்மதக் கடவுளும் தம்ம தெனக்கொள்ளல் / உலகில் அதனோடு ஓர்ந்து நிற்றல் / அந்தணர் ஆகி அந்நிலை அடைதல் ” (பாடல் வரி: 38) என மத நல்லிணக்கத்தையும், ஒற்றுமையையும் வலியுறுத்தியுள்ளார். சிந்தனையும், செயலும் மெய்யாய் இருந்து அறம் செய்யும் அனைவருமே அந்தணர்கள் என்ற கருத்து உடையவராக வ.உ.சி. இருந்துள்ளார். நான்காவது இயலாகக் காணப்படும் அந்தணரியல் என்ற இயல் தலைப்பை இவ்வாறே புரிந்து கொள்ள முடிகிறது.

தீயினம் விலக்கி நல்லினம் சேர்தல்:

ஒருவருடைய சிந்தனை செயல் போன்றவைகளை வடிவமைப்பது அவர்களைச் சுற்றியுள்ள மனிதர்களும், சூழல்களும் என்பது அறிஞர்கள் கூறும் கருத்து. எனவே பல்வேறு சமூக விரோத செயல்களைச் செய்யும் தீயவர்களிடமிருந்து நாம் விலகி இருக்க வேண்டும் என்கிறார். ஒழுக்கமும் உண்மையும் அறமும் கொண்ட நல்லினத்தோடு சேர்ந்து இருத்தல் நன்மை பயக்கும் என்று எடுத்துரைக்கிறார். இக்கால மாணவர் சமுதாயத்திற்கும் இளைஞர்களுக்கும் இக்கருத்து மிகவும் தேவையான ஒன்றாக உள்ளது.

ஆசிரியர்கள்:

ஆசிரியர்களின் இன்றியமையாமையும் ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டிய பண்புகளையும் சிறப்பாக எடுத்துரைக்கிறார். “அறிவினைத் தருபவராம் ஆசிரியர் / இருபாலரும் தருவதற்குரியர்” (பாடல் வரிகள்: 61,62) பெண் கல்வி இல்லாத பெண் ஆசிரியர்கள் இல்லாத காலகட்டத்தில் எழுதப்பட்ட இந்நூலில் வ.உ.சி. சமூகத்துக்குப் பெண் ஆசிரியர்களும் தேவை என்கின்ற முற்போக்குச் சிந்தனை கொண்டவராக சிந்தித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. ஆண்

பெண் சமத்துவத்தைப் பல இடங்களில் வலியுறுத்திச் செல்வதும் கவனிக்கத்தக்கது. ஆசிரியர்களுக்கும் முதலில் ஒழுக்கம் தேவை என்ற கருத்தையும் வெளிப்படுத்தி உள்ளார். ஆசிரியர்கள் தம் மாணவர்கள் அனைவரையும் சொந்தக் குழந்தைகள் என எண்ணவேண்டும் என்றும், தான் அறிந்த அனைத்தையும் மாணவர்களிடம் சொல்லி அவர்களைச் சிறந்த வல்லுநர்களாக ஆக்க வேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளார்.

உளவியல் அறிஞர்:

தன்னை அறிதல், மனதை ஆளுதல் என்ற இரண்டு அதிகாரங்களிலும் வ.உ.சி. ஒரு சிறந்த உளவியல் அறிஞராக வெளிப்படுகிறார். உடல், மனம், ஆன்மா ஆகியவற்றை நாம் எவ்வாறு கட்டிக் காக்க வேண்டும் என்று தெளிவாக விளக்குகிறார். மனதை அதன்போக்கில் கொண்டு சென்றால் நம்மைத் தீய வழிக்குச் செலுத்தி விடும். மனம் எதை நினைக்கிறதோ அதை உடனடியாக அலசி ஆராய வேண்டும் அதில் அறம் இருந்தால் எடுத்துக்கொள்ள வேண்டும் மறம் இருந்தால் விலகி விட வேண்டும் என்று பெரும் தத்துவங்களை எளிமையாக விளக்கிச் செல்கிறார்.

உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்று உடலை வளர்க்கும் முக்கியத்துவத்தைத் திருமூலர் எடுத்துரைத்ததை வ.உ.சி. விரித்துரைத்துள்ளார். உள்ளம் நினைக்கும் செயல்களைச் செய்வதற்கு உடல் மிக அவசியம். அதை உரம் உடையதாக மாற்ற வேண்டும். உடற்பயிற்சி செய்ய வேண்டும். சிலம்பப் பயிற்சிகளைச் செய்ய வேண்டும். பிணி ஏற்பட்டால் அதற்கு மருந்தை உண்ண வேண்டும் என்று உடலைப் பாதுகாக்கின்ற வழிகளை அடுக்கியுள்ளார்..

கொலை, புலால், களவு, சூது

பிற உயிர்களை வதைத்துக் கொலை செய்வதும், கொலை செய்யத் தூண்டுவதும், கொலைக்கு உதவுவதும் பெரும் பாவம் என்கிறார். மாமிசம் உண்பது வலிமை தரும் என்றால் யானை மாமிசம் உண்ணுகிறதோ என்றும்; சிங்கம் மாமிசம் உண்கிறது என்றால் மனிதருக்கு அத்தகைய வலிமை தேவையற்றது என்றும்: வலிமையை விட அறிவே பெரியது என்றும்; பிற உயிர்களைக் கொல்வதைத் தவிர்க்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கிறார். வள்ளுவர் மற்றும் வள்ளலார் போன்றோரின் வழியில் கருத்துக்கள் கூறப்பட்டிருந்தாலும், மாமிசம் உண்போர்களால் ஏற்றுக்கொள்ள இயலாத கருத்தாயினும் வ.உ.சி.யின் தர்க்க அறிவு இதில் சிறப்பாக வெளிப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

உடையவர் தராமல் எடுத்துக் கொள்வது களவு என்று கூறி, பிறர் பொருளை வஞ்சித்துக் கொள்வதும், வாங்கிய பொருளை மீண்டும் கொடுக்காமல் இருப்பதும், களவுக்கு ஏவுதலும், களவுக்கு உதவுதலும் ஆகிய அனைத்தும் களவு தான் என்கிறார். ஒரு தவறு நடக்கும் பொழுது அதைத் தடுக்கக்கூடிய இடத்தில் இருந்து கொண்டு தடுக்காமல் விடுவதும் களவுதான் என்று களவுக்கு ஒரு புது விதியை வகுத்துள்ளார்.

இரத்தல், மது, பொய்மை:

பிறரிடம் ஒரு பொருளை யாசித்தல் இழிவானது என்றும் அதைவிட இறந்து விடுவது மேலானது என்றும் குறிப்பிடுகிறார். அறிவினை மயக்கும் பொருட்களான கஞ்சா, அபின் முதலானவற்றை விலக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். மது கள் போன்றவற்றைப் பலரும் கூறியிருக்க இந்நூலில் கஞ்சா, அபின் போன்ற நவீன போதைப் பொருட்களை வ.உ.சி. பதிவு செய்துள்ளார். துன்பங்களையும், வலிகளையும், நோய்களையும் போக்குவதற்குப் போதைப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். அது பெருந்தவறு என்று கூறி போதைப்பொருட்கள் நம் அறிவை அழித்து உடலின் வலிமையை அழிக்கும் என்பதைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். எப்போதும் நாம் வாய்மையே பேச வேண்டும் என்பதற்காகவே வாய் என்று பெயர் வந்ததாக, " வாய்மையில் தருவதே வாயென அறிக " (பாடல் வரி : 165) என்று புதிய விளக்கம் தந்துள்ளார்.

புறம்சொல்லல், பொறாமை:

பிறரைப் பற்றிப் புறம் சொல்லுதல், கீழ் மக்களுடைய குணம் என்றும், அது பகையை உருவாக்கும் என்றும், புறம் சொல்லும் வாயால் அறம் சொல்வது வஞ்சமானது என்றும், புறம் சொல்வதைக் கேட்பதும் கீழான செயல் என்றும் புறம் சொல்வதைக் கடிந்து பேசுகிறார். பயனற்ற சொற்களைப் பேசுவதை வ.உ.சி. கடிந்துரைக்கிறார். பயனில்சொல் அறியாமையில் பிறக்கும்; அறியாமையை வளர்க்கும்; அறிவுடையோரின் நட்பைக் குறைக்கும்; அறிவில்லாதவர்களுடைய நட்பைப் பெருக்கும்; பயனுள்ள சொல்லைச் சொல்ல விடாது; பயனுள்ள செயலைச் செய்ய விடாது என்று ஓசை நயத்துடன் எதுகை மோனை இயைபு முரண் தொடைகள் அமைய சிறப்பாக எடுத்துரைத்துள்ளார்.

பிறருடைய வளர்ச்சியில் பொறாமைப் படுவது இழுக்கான செயல் என்றும், அதனால் வறுமையும், பசியும் சிறுமையும் தோன்றும் என்றும், விலங்குகளுக்குக் கூட இல்லாத பொறாமை குணம் ஆறறிவு கொண்ட மனிதர்களிடம் இருப்பது புதுமையாக உள்ளது என்றும் பொறாமை குறித்து வ.உ.சி. விளக்கியுள்ளார்.

எண் எழுத்து, தொழில் , திருந்தச் செய்தல்

எண் என்பது கணிதத்தையும், எழுத்து என்பது இலக்கண இலக்கியங்களையும் குறிக்கும் என்று விளக்கம் தருகிறார். வாழ்வின் உயரங்களைக் கண்டடைய எண் எழுத்து அறிதல் மிக அவசியம் என்றும், தொடர்ந்து பயின்று கொண்டே இருக்க வேண்டும் என்றும் அறிவுரை கூறுகிறார். கல்வி தாய் மொழியில் அமைந்தால் சிறப்பு என்றும் தாய் மொழியில் சிறந்த புலமை பெற்ற பின்பு பிற மொழிகளையும் பயில வேண்டும் என்றும் எடுத்துரைக்கிறார். இதை " எண்ணும் எழுத்தும் இடைவிடாது ஆள்க / அவைதாய் மொழி கொளின் அதை முன்பு அறிக / பின்பு அவை மிக்குள பிற மொழி அறிக" (பாடல் வரிகள்: 207,208,209) எனும் வரிகள் விளக்குகின்றன. இக்காலத்துக்குத் தேவைப்படுகிற

பயிற்றுமொழி பற்றிய சிக்கலுக்கு 110 ஆண்டுகளுக்கு முன்பே தீர்வு கண்டுள்ளார்.

தொழில் அறிதல் என்ற அதிகாரம்வ.உ.சி.யின் புதிய சிந்தனையாக உள்ளது. உழவு, வாணிகம், கைத்தொழில் போன்ற தொழில்களைப் பயில வேண்டும் என்று கூறுகிறார். படைக்கலன் பயில்தல், படைவகுத்துப் போர் செய்யும் திறனறிதல், தரை, வானம், கடல் மூன்றிலும் செல்லும் வாகனங்களை இயக்கும் திறன் பெறுதல் ஆகியன இன்றியமையாதவை என்று அறிவுரை கூறுகிறார்.

திருந்தச் செய்தல் என்ற அதிகாரம் புதுமையாக உள்ளது. கலை பற்றிய விளக்கமாக இவ்வதிகாரம் காணப்படுகிறது. செய்யும் தொழிலில் அழகுற திருத்தமாகச் செய்ய வேண்டும் அதற்கு நம் மனதை அதில் செலுத்தி ஆர்வத்தோடு செய்ய வேண்டும் என்று கூறுகிறார். “சிறு தொழில் எனினும் திருந்தவே செய்க / சிறு தொழில் தொகுதியே பெருந்தொழில் ஆவது / செய்யும் தொழிலிலே சிந்தையை செலுத்துக” வ.உ.சி.க்கு கப்பல் இயக்கிய அனுபவம் இருந்ததால் எந்திரங்களின் உதிரி பாகங்களுக்கு அவசியமான நேர்த்தி பற்றிய அறிவு அவருக்கு மிகுந்திருந்தது என்பதை இவ்வரிகள் உணர்த்துகின்றன.

நன்றி, நடுநிலைமை, அடக்கம்:

நன்றி என்பதற்கு வ.உ.சி. புதிய விளக்கங்களைத் தருகிறார். உறவினர்கள் ஒருவருக்கொருவர் உதவ வேண்டியது கடமையாகும் என்றும், உதவி பெற்றவர் உதவியவர்களுடைய குடும்பம் உயர்வு பெற நினைக்க வேண்டும் என்றும், உதவி செய்தவரின் அறிவுரையை உடனே நிறைவேற்ற வேண்டும் என்றும், உதவியவர் சிறு தவறு செய்தாலும் அதை மறக்க வேண்டும் என்றும் எடுத்துரைக்கிறார்.

நடுநிலைமை வகித்தல் மிகச்சிறந்த பண்பு. நடுநிலைமை தவறினால் அறம் அழிந்து போகும் என்றும் , நடுநிலை வகிப்போர் அனைத்து நலன்களையும் பெறுவார்கள் என்றும் வ.உ.சி. கருதுகிறார். அடக்கமுடைமை பற்றி “அடக்கம் நன்னெறியில் நடக்கச் செய்யும் / அடக்கம் இல்லாமை அதைக் கடக்கச் செய்யும்” என்று எடுத்துரைக்கிறார். வ.உ.சி. ஓசை நயத்தோடு உயரிய சிந்தனைகளைப் பதிவு செய்துள்ளமை கவனிக்கத்தக்கது.

ஒழுக்கம், அறிவு:

அருளும், அறிவும் ஒருங்கே பெற்றவர்கள் ஒழுக்கத்தோடு நடந்து கொள்வார்கள். பெரியோர்களைக் கண்டால் இருக்கையில் இருந்து எழுவதும், பெரியோர்களுக்குப் பின் செல்வதும் ஒழுக்கம் என்கிறார். நினைவு, சொல், செயல் இவைகளை ஒன்றாக்குவது ஒழுக்கத்திற்கு இன்றியமையாதது என்று ஒரு உளவியல் அறிஞர் போல் விளக்கம் தருகிறார். “ தன்னுயிர் போல மண்ணுயிர் பேணல் / பகை செய்தவரோடு நகை செய்து அளாவல் “ (பாடல் வரிகள்: 268,269) என்ற வரிகள் பல்வேறு மத நூல்களின் சாரமாகத் தெரிகிறது.

அறிவுடைமைக்கு வ.உ.சி. தரும் விளக்கம் புதிதாக உள்ளது. கடினமான கருத்தை எளிய சொற்களில் விளக்குவது, பாவம் பழிக்குப் பயந்து ஒழுகுதல், உலகத்தோடு ஒத்து நடத்தல் ஆகியவற்றை அறிவுடைமை என்று குறிப்பிடுகிறார்.

ஊக்கம், முயற்சி:

ஊக்கமுடைமை என்ற அதிகாரத்தில் ஒரு சிறந்த மேலாண்மைத் துறை வல்லுனராகக் காட்சி தருகிறார். உயர்வு பெறுவதற்குத் தேவையான மன எழுச்சியை ஊக்கம் என்கிறார். "உயர்ந்தவை எவையோ அவையெல்லாம் உள்ளுக / அவற்றினுள் ஒன்றை அடைந்திட விரும்புக / அதனை அடையும் ஆறலாம் எண்ணுக / ஒவ்வொன்றிலும் உறும் ஊறு எல்லாம் எண்ணுக / ஊறு ஒழித்து அதை உறும் உபாயமும் கருதுக" (பாடல் வரிகள்: 286 முதல் 290 வரை) தேர்ந்தெடுத்தல், திட்டமிடுதல், ஒழுங்குபடுத்தல், செயல்படுத்துதல் போன்ற நவீன மேலாண்மைச் சிந்தனைகளை வ.உ.சி. எளிமையாக எடுத்துரைத்துள்ளார். அவரது சொந்த வாழ்க்கையிலும் இந்தக் கோட்பாட்டைப் பின்பற்றி பல்வேறு சாதனைகளைச் செய்துள்ளார் என்பது இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

தன்னைவிட மேலான கருத்துக்களைத் திருவள்ளுவர் தனது நூலில் எடுத்துரைத்துள்ளார். மேலதிகமான கருத்துகள் வேண்டுமென்றால் திருக்குறளைப் படித்து தெரிந்து கொள்க என்று கூறி மாணவரியலை நிறைவு செய்துள்ளார்.

முடிவுரை:

வ.உ.சிதம்பரனாரின் மெய்யறம் என்ற நூலில் 30 அதிகாரங்களைக் கொண்ட மாணவரியல் ஆய்வு செய்யப்பட்டது. திருக்குறளை மூல நூலாகக் கொண்டு அதன் கருத்துக்களை எளிமைப்படுத்தி கொடுத்ததோடு தனது சொந்த புதுமையான கருத்துக்களையும், நவீன சிந்தனைகளையும், அறிவியல் கூறுகளையும், உளவியல் கருத்துக்களையும், மேலாண்மைச் சிந்தனைகளையும், சொந்த அனுபவங்களையும், தர்க்க அறிவையும் இனிய எளிய நடையில் சிறந்த சொற்களால் நீதிநூலாகக் கொடுத்துள்ளார்.
மத ஒற்றுமை, பெண்ணுரிமை, தாய்மொழிவழிக்கல்வி, அறச்சிந்தனைகள் ஆகியவற்றை வெளிப்படுத்துவதில் முற்போக்கு சிந்தனை கொண்டவராக வெளிப்படுகிறார். இந்நூலில் மீதமுள்ள நான்கு இயல்களில் உள்ள 95 அதிகாரங்களையும் விரிவான ஆய்வுக்குட்படுத்தினால். வ.உ.சி.யின் தனித்தன்மை மேலும் விளக்கம் பெறும்.

துணைநூற் பட்டியல்:

1. மெய்யறம் - சிதம்பரம் பிள்ளை, வ. உ. பதிப்பாளர். கலாரத்நாகர அச்சகம் : சென்னை. பதிப்பு ஆண்டு. 1917.
2. சுயசரிதை - சிதம்பரம் பிள்ளை, வ. உ. முல்லைப் பதிப்பகம், சென்னை,1946.
3. திருமந்திரம் – திருமூலர், கயிலாயசித்தர் உரை திருவாவடுதுறை ஆதீனம் : திருவாவடுதுறை, 1987.

இணையம்: https://tamildigitallibrary.in/

பகுதி மூன்று: உரை வளம்

29

வ.உ.சிதம்பரனார் சிவஞானபோத உரை

வி. அர்ஜுன்
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி, பேரூர், கோயம்புத்தூர்.

ஆய்வுச் சுருக்கம்:

பாரதத் திருநாடு அரிய பண்பாட்டு, கலைச் செல்வங்களை உலகிற்களித்த நாடு. இந்நாட்டில் அறிஞர் பலர் தோன்றி மொழி, பண்பாடு, கலை, மெய்யியல் எனப் பல நிலைகளிலும் பல உயர் கருத்துகளை வழங்கியுள்ளனர். அவர்களுள் ஒருவராக விளங்குபவர் வ.உ.சிதம்பரனார்.

நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட்டுத் தியாகம் செய்த பெருமக்களுள் குறிப்பிடத்தக்கவரான இவர், தமிழ் இலக்கியத் துறையிலும் சிறப்புறப் பங்களித்தவர். அவ்வகையில் அவர் சிவஞானபோதம் என்னும் சாத்திரநூலுக்குச் செய்துள்ள உரை இலக்கிய வரலாற்றில் நோக்கற்பாலது. அவ்வுரையின் தன்மையை ஆய்ந்துரைப்பதாக 'வ.உ.சிதம்பரனார் சிவஞானபோத உரை' என்னும் இக்கட்டுரை அமைகிறது.

திறவுச்சொற்கள்: வ.உ.சிதம்பரனார், சிவஞானபோதம், உரையாசிரியர், கா.சு. பிள்ளை, சைவசித்தாந்தம்

முகவுரை:

தமிழ்மொழியில் எண்ணரிய இலக்கிய, இலக்கண நூல்கள் படைக்கப்பெற்றுள்ளன. அவற்றை மக்கள் படித்தறிந்து விளங்கிக கொள்வதற்கு உதவியாகப் பல உரைகளும் அவற்றுக்குச் செய்யப் பெற்றுள்ளன. மூலநூல்கள் வழக்கொழியாது வழங்கிவருவதற்கு உரைகள் இன்றியமையாதவையாக விளங்குகின்றன. அவ்வகையில் காலந்தோறும் பல உரையாசிரியர்கள் தோன்றி இலக்கிய, இலக் கணங்களுக்கு உரைசெய்து வருகின்றனர்.

ஒரே நூலுக்குப் பலர் உரை செய்தல் அந்நூலின் பயன்பாட்டையும் பெருமையையும் காட்டுகின்றது. அத்தகைய உரைகளின் வரிசையில் வ.உ.சிதம்பரனார் சிவஞானபோதத்திற்குச் செய்த உரை குறிப்பிடத் தக்கது. அவ்வுரையின் தன்மை குறித்து ஆய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

சிவஞானபோதம்:

மெய்கண்ட சாத்திரம் எனப்பெறும் சைவசமயச் சாத்திர நூல்களுள் தலைமையது சிவஞானபோதம். இதனை இயற்றியவர் மெய்கண்டதேவநாயனார். நூலின் காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டு. இப்பதினான்கு சாத்திரங்களைப் பட்டியலிடும் பழம்பாட்டு 'உயர்போதம்' என்று இந்நூலைச் சுட்டுகிறது. இந்நூல் சைவசித்தாந்த மரபில் போற்றுதற்குரிய பெருஞ்செல்வமாகக் கருதப்படுகிறது.

பன்னிரண்டு சூத்திரங்களில் இறை, உயிர், தளை என்னும் முப்பொருட் தன்மையையும் விளக்கும் நூலாக அமைவது சிவஞானபோதம். சூத்திரங்களை விளக்கும் சான்றுப்பாடல்களாக 81 வெண்பாக்களும் இந்நூலில் உள்ளன.

சிவஞானபோத உரை:

பல பெருமக்கள் சிவஞானபோதத்திற்கு உரை செய்துள்ளனர். அவற்றுள் முதன்மைவாய்ந்தது சிவஞானமுனிவர் செய்த உரையாகும். அது 'சிவஞானமாபாடியம்' என்னும் பெயரால் அறியப்பெறுகிறது. பேருரையாக அமைந்த இவ்வுரை சிவஞானபோதத்துக்குச் செய்யப்பட்ட ஏனைய உரைகளுக்கோர் அடித்தளமாக அமைந்தது. இவ்விரு நூல்களுக்கு உரைசெய்த பெருமக்களுள் ஒருவராக வ.உ. சிதம்பரனாரும் விளங்குகிறார்.

உரைசெய்யக் காரணம்:

வ.உ.சிதம்பரனார் சிவஞானபோதத்துக்குச் செய்த உரையின் முன்வடிவம் தினமணி இதழின் இணைப்பில் வெளியாகி நூல் வடிவில் 'சிவஞானபோத உரை' என்னும் பெயரில் 1935 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. (உரைப்பாயிரம், சிவஞானபோத உரை)

சிவஞானபோதத்துக்கு உரைசெய்ய முன்வந்த காரணத்தை வ.உ. சிதம்பரனார் உரைப்பாயிரத்தில் விளக்கியுள்ளார். சிவஞானபோத உரைகள் கடினத்தன்மை, அளவிற் பெருமை ஆகிய காரணங்களால் மக்களால் பெரும்பாலும் அணுகப்படாமல் இருக்கின்ற நிலை மாறுதற் பொருட்டாகவே சிவஞானபோதத்திற்கு உரைசெய்ய முற்பட்டதாக அவர் குறிப்பிடுகின்றார். இச்செயல் பல ஆண்டுகள் எண்ணக் கிடக்கையிலிருந்து நிறைவேறியதாகவும் அவர் உரையிலிருந்து அறிய முடிகிறது. இவற்றால், சிவஞானபோதம் என்னும் நூலின் பெருமையை அவர் உணர்ந்திருந்ததுடன் அந்நூலின் கருத்துகள் அனைவர்க்கும் சென்று சேர வேண்டும் என்னும் சிந்தனையும் கொண்டிருந்தார் என்பது வெளிப்படுகிறது. மேலும் பிற மதக் கோட்பாடுகள் பற்றியும் அவற்றின் உயர்வுதாழ்வுகள் பற்றியும் இவ்வுரையில் தான் ஒன்றும் பேசவில்லை என்றும் அவர் சொல்கின்றார். (மேலது) இதனால் சைவச் செந்நெறிப் பட்டவராயினும் மதபேதமற்ற ஒருமைப்பாட்டுணர்விலும் ஒருதெய்வக் கொள்கையிலும் தெளிந்தவராக அவர் திகழ்ந்தமை விளங்குகிறது.

‘இறைவனையும் உயிரையும் பற்றிப் பேசும் இவ்வருமையான நூலைத் தமிழ் மக்களெல்லாம் படித்தல் வேண்டும். படிக்க முன்வரல் வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் யான் இவ்வுரையை இயற்றினேன். எனது நோக்கம் நிறைவேற எல்லாம்வல்ல இறைவன் துணை (மேலது) என்பதாக உரைப்பாயிரத்தை நிறைவுசெய்திருப்பது மேற்சொன்ன கருத்துகளை உறுதிசெய்வதாக அமைகிறது.

உரையின் தன்மை:

சிவஞானபோதத்தை அனைவரும் அறியத் தடையாயிருப்பது அதற்குச் செய்யப்பட்ட உரைகளின் கடினத்தன்மையே என்று சிதம்பரனார் குறிப்பிட்டமை முன்னர்க் கூறப்பெற்றது. அவ்விளக்கமே இவர் செய்த உரை எளிமையுடையது என்பதை விளக்குகின்றது. சிதம்பரனார் உரைக்கு முற்படத் தோன்றிய சிவஞானபோத உரைகளுள் எளிமையாகவும் அருமையாகவும் அமைந்த உரை கா.சு. பிள்ளை அவர்களுடையது. அவர் உட்பட்ட ஏனை உரையாசிரியர்கள் சிவஞானபோதச் சூத்திரங்களுக்கு மட்டுமின்றி சான்றுப் பாடல் களுக்கும் உரைசெய்துள்ளனர். ஆனால் சிதம்பரனார் அவ்வெண்பாக் களுக்குத் தனியே உரைசெய்திலர். சூத்திரங்களுக்கு மட்டுமே உரைசெய்துள்ளார்.

உரை அமையும் பான்மை:

விளக்கங்களுக்காக, எளிமையும் கால அணிமையும் கருதி வ.உ.சிதம்பரனார் உரை, கா.சு.பிள்ளை அவர்களுடைய உரையுடன் வேண்டுமிடங்களில் ஒப்புநோக்கப்படுகிறது. கா.சு.பிள்ளை அவர்கள் தம் உரையில் சூத்திரங்களுக்கேற்ப கருத்து, பொருள், உரை, உரைநடை, குறிப்பு, கருத்துக் குறிப்பு எனப் பல நிலைகளில் விளக்கம் செய்துள்ளார். அவ்வாறன்றி, பொருள் என்னும் தலைப்பின்கீழ்ச் சூத்திரப் பொருளையும் அதைத் தொடர்ந்து அகலம் என்னும் தலைப்பின்கீழ் இலக்கணக்குறிப்பு முதலான விளக்கங்களையும் வழங்குவதுடன் கருத்து என்னும் தலைப்பிட்டுச் சூத்திரத்தின் உட்பொருளை ஓரிரு தொடர்களில் விளக்குவதாக அமைகிறது சிதம்பரனார் உரை.

மலைவில்லார் என்னும் சொல்:

சிவஞானபோதத்தின் காப்புப்பாடலில் வரும் மலைவில்லார் என்னும் சொல்லுக்கு முந்தை உரையாசிரியர்கள் மயக்கமற்றவர் அல்லது மலையை வில்லாக உடையவர் என்னும் பொருளை வழங்கி யுள்ளனர்.(காப்பு, சிவஞானபோதம்) கா. சு. பிள்ளை மலைவுதீர்த் தருளிய என்றமையால் அவரும் மயக்கமறுதற் பொருளையே கொண்டார் என்பது தெளிவு. ஆயின், சிதம்பரனார் ‘மலைவில்லார்’ என்பதற்கு ‘உவமையில்லாதவர்‘ என்னும் பொருளை முதன்மையாகக் குறிக்கின்றார். அகலத்தில் முற்கூறிய பொருள்படவும் அச்சொல் அமையும் என்று சுட்டுகின்றார். இவ்வகையில், ‘தானெடுத்து மொழிதல் பிறன்கோட்கூறல்‘ (நன்னூல், சூ.14) என்னும் உத்திகளின் அடிப்படையில் அவர் உரை அமைந்துள்ளது.

கருத்து விளக்கம்:

கா.சு.பிள்ளை அவர்கள் சிவஞானபோதச் சூத்திரங்களின் கருத்தை

1. ஒடுங்குதற்குக் காரணமாயுள்ள முதற்கடவுளையே இவ்வுலகம் தனது தலைவனாக உடையது. (சூ.1)
2. புனருற்பவம் வருமாறுணர்த்துதல் நுதலிற்று. (சூ.2)
3. ஆன்மாப் பிரகாசம் உணர்த்துதல் நுதலிற்று. (சூ.3)

என்பதாக விளக்கிச்செல்கிறார். (மெய்கண்டாரும் சிவஞானபோதமும்) இவ்வாறமையும் தொடர்கள் எளிமையுடையவையே எனினும் சித்தாந்தக் கருத்துகளில் ஓரளவேனும் பயிற்சியும் ஆர்வமும் உடையோர்க்கே தெளிந்து விளங்கும் தன்மையவாயுள்ளன. ஆனால் சிதம்பரனார் உரை அத்தன்மைத்ததன்று.

முதற்சூத்திரம் முதலாகிய பன்னிரு சூத்திரங்களும் கூற முற்படும் உட்கருத்தை சிதம்பரனார் எடுத்துரைக்கும் தன்மை பின்வருமாறு.

1. பொறிக்காட்சிக்குப் புலப்படும் உலகத் தோற்றத்திற்குக் காரணம், அக்காட்சிக்குப் புலப்படாத இறைவன்.
2. இறைவனே அவன், அவள், அதுவாகி அவற்றுடன் என்றும் ஒன்றி நிற்கின்றான்.
3. இலதென்றல் முதலிய செயல்களைச் செய்வதால், உயிர் உடம்பில் உளது.
4. ஜீவாத்மா அந்தக்கரணத்தோடு கூடி ஐந்து அவத்தைகள் உறும்.
5. உயிர் பொறிகளோடு கூடி நிற்பதால் இறைவனை அறியாது.
6. இறைவன் அறிவாகிய உண்மைப்பொருள்.
7. உயிர் உலகத்தோடு சேருங்கால் உலகத்தையும், இறைவனோடு சேருங்கால் இறைவனையும் அறியவல்லது.
8. உயிர்கள் தம் தவத்தால் உலகப்பற்றை விடுத்து இறைவனைச் சிந்திக்கும்.
9. இறைவன் ஞானத்தால் மலம் நீங்கும்; மலம் நீங்கவே உயிர் இறைவனை உணரும்.
10. யான் என்பதை விடுத்தபொழுதே, தான் இறைவனே என்று உயிர் உணரும்; உயிரின் மலங்களும் நீங்கிவிடும்.
11. இறைவன் அருளாலேயே இறைவனை உயிர் அறியும்.
12. சீவன் முத்தன் செயல்கள் தனது ஆணவ மலத்தை ஒழித்தலும், இறைவனது அடியாரோடு கூடியிருத்தலும், அவ்வடியாரையும் ஆலயங்களையும் தொழுதலுமே. (மேற்குறித்த எண்கள் சூத்திர எண்களையே குறிக்கின்றன.)

இக்கருத்துகள் எளிய தொடர்களேயாயினும் சூத்திரத்து உட்பொருளை எளியோர்க்கும் அறிவிப்பனவாக அமைகின்றன. இதன் மூலம், சித்தாந்த நூற்கருத்துகளில் பெரிதும் பழக்கமில்லாதார்க்கும் சிவஞானபோதக் கருத்தை அறிமுகம் செய்தல் இயலுகின்றது. அறிமுகம் செய்யப்பெற்ற ஒன்றை வேண்டுவோர் தேடிக்கண்டறிவர் என்னும் நிலையில் சிவஞானபோதத்தை முழுமையும் கற்கும் ஆர்வம் ஏற்பட வழிசெய்வதாகவும் இவ்வுரை அமைகின்றது என்பது நோக்கத்தக்கது.

அகலம்:

அகலம் என்னும் தலைப்பின் கீழ் சூத்திரத்திலமைந்துள்ள இலக்கணக் குறிப்புகள், சூத்திரத்தின் சொற்கள் பொருள்படுந்தன்மை முதலியவற்றை எடுத்துரைக்கின்றார் வ.உ.சிதம்பரனார். சான்றாக, ‘வறுமையால் இரந்தனன் என்பது வறுமையைப் போக்குவதற்காக இரந்தனன் எனப் பொருள் தருதல்போல், ‘மலத்தால் உளதாம்‘ என்பது ‘மலத்தைப் போக்குவதற்காக உளதாம்‘ எனப் பொருள் தந்து நின்றது‘ என்னும் தொடரை நோக்குதல் தகும். இவ்வாறான தெளிவுகளுடன் அதேவேளை எளிமையாகச் செல்கிறது வ.உ.சிதம்பரனார் உரை.

ஐந்தாம் சூத்திரத்தில் ‘மெய்வாய் கண்மூக் களந்தறிந் தறியா‘ என்னும் தொடருக்கு விளக்கங்கூறுகையில், ‘பொறிகள் அறிவது தத்தம் புலன்களையேயாதலால், புலன்களை என்று விதந்து கூறிற்றலர்‘ என்று கூறுகின்றார். இவ்வாறு வேண்டுமிடத்து விரித்தும் சுருக்கியும் கூறுவாராயினும் மிகைப்படுத்தலோ நீட்டலோ இன்றிய நடையைப் பின்பற்றியுள்ளார் என்பது தெளிவாகிறது.

அகலத்திலேயே சான்றுகளை வழங்கியும் பொருள்கோடல் முறைமை விளக்கியும் உரைசெய்துள்ளமையால் கருத்துக்கிடையே பிற செய்திகள் விரவுதல் இல்லை. இது, கருத்து இன்னதென்று எளிதாக விளங்கிக்கொள்ள உதவுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஈற்றுச் சூத்திரத்தின் ‘அம்மலங் கழீஇ‘ என்னும் தொடருக்கு ‘திருவடிகளை அணையவொட்டாது மறத்தலைச் செய்விக்கும் மும்மல அழுக்கை ஞானநீராற் கழுவி‘ என உரை செய்துள்ளார் கா.சு. பிள்ளை. (சூ.12) அத்தொடருக்கு, ‘இறைவனைச் சேரவொட்டாமல் தடுத்தது ஆணவமலமே யாகலான் அதனை அம்மலம் என்று சுட்டிக் கூறினார்‘ என்று வ.உ.சிதம்பரனார் உரை செய்கின்றார். இது ஏனை உரையாசிரியர்களின் கருத்தினை உள்ளபடியே எடுத்துமொழிதலன்றி, தன் கருத்தைத் தெளிவுறவும் துணிவுறவும் உரைக்கும் அவர்தம் பாங்கை வெளிப்படுத்துகின்றது. ‘பிறிதொடு படாஅன் தன்மதங் கொளல்‘ (நன்னூல்,11) என்னும் தன்மையில் அவரது உரை அமைந்துள்ளதை இது விளக்குகிறது. ‘மாலறநேய மலிந்தவர்வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே‘ என்னும் தொடருக்கான விளக்கத்தில் ‘அம்மயக்கமற்ற அன்பர் எச்சமயத்தவராயினும் அவர் வேடமும், ஆலயங்கள் எச்சமயத்தினருடையவாயினும் அவையும் இறைவனே என்று தொழற்பாலன‘ என எடுத்தாண்டுள்ள தொடர் அவரது சமயபேதம்

கருதாத கொள்கையை விளக்குவதுடன், சமயநூலாக வழங்கப்பெறும் நூலொன்றின் கருத்தைச் சமயப்பொதுமைக் கண்ணோட்டத்தில் பார்க்க வழிசெய்வதாகவும் அமைகின்றது.

நிறைவுரை:

சைவசித்தாந்த சாத்திர நூல்கள் பதினான்கனுள் முதன்மை மிக்கது சிவஞானபோதம். இந்நூலுக்கு வ.உ.சிதம்பரனார் அவர்கள் செய்த உரையின் தன்மை இங்கு எடுத்துரைக்கப்பெற்றது. ஏனை உரையாசிரியர்களோடு முரண்படாமலும் அதேநேரம் தன்னுடைய கருத்தைத் தெளிவுபட விளக்குவதாகவும் இவர் உரை அமைவது இதனால் விளக்கப்பெற்றது. மேலும் எளிமையும் நயமும் உடையது என்பதும் அவ்வாறாயினும் பொருள் விளக்குதலில் சற்றும் குறைவுபடுவதில்லை என்பதும் தெளிவுறச் சுட்டப்பெற்றது. இவற்றின்வழி வ.உ.சிதம்பரனார் உரையாசிரியராக இலக்கிய உலகிற்குச் செய்த பங்களிப்பு விளக்கப்பெற்றது. உரையாசிரியர்கள் வரிசையில் குறிப்பிடத்தக்கவராக வ.உ.சிதம்பரனார் இடம்பெறும் நிலையும் இதனால் எடுத்துரைக்கப்பெற்றது. விடுதலைப்போர் வீரர், வழக்கறிஞர் என்பதற்கப்பாற்பட, தமிழ் இலக்கியத்துக்கும் வ.உ.சிதம்பரனார் சிறப்புறப் பணிசெய்துள்ளமை இதனால் விளங்கும்.

துணைசெய்த நூல்கள்:

1. வ.உ.சி. யின் சிவஞானபோத உரை – செ. திவான் (பதி.) – நஜாத் பதிப்பகம், பாளையங்கோட்டை, மூன்றாம் பதிப்பு (2008)
2. மெய்கண்டாரும் சிவஞானபோதமும் – கா. சுப்பிரமணியபிள்ளை, பூம்புகார் பதிப்பகம், சென்னை , முதற்பதிப்பு (2009)
3. வ.உ.சிதம்பரனார் – மா. ரா. அரசு, சாகித்ய அகாதெமி, புதுதில்லி, இரண்டாம் பதிப்பு (2011).
4. நன்னூல் காண்டிகையுரை எழுத்ததிகாரம் – தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை -018. (1999)
5. தமிழ் இலக்கிய வரலாறு – மது.ச.விமலானந்தம், முல்லை நிலையம், சென்னை -017. (2018)
6. சிவஞானபோதம் – முனைவர் ந. இரா. சென்னியப்பனார் (உரை), மணிவாசகர் அருட்பணி மன்றம், கோயம்புத்தூர் -10, ஐந்தாம் பதிப்பு (2020).

30

திருக்குறள் ‘அறப்பால்‘ விருத்தியுரையில் வ.உ.சி.யின் உரைவிளக்க நெறிகள்

முனைவர் ப. சு. மூவேந்தன்
இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை,
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி அரசு கலைக் கல்லூரி, திருத்தணி.

ஆய்வுச்சுருக்கம்:

திருக்குறள் எளிமையான பாவகையில், சிலவாகிய சொற்களில் அமைந்த சிறப்புக்கு உரியது. எனினும் அதன் கருத்துவளம் கடலைவிடப் பெரியது. இத்தகு சிறப்புமிகு திருக்குறளின் அறத்திறத்தால் மனம் கொண்ட பலரும் தாம் மனம்கொண்டதனைப் பிறர்க்கு உணர்த்த விழைந்ததன் விளைவாகவே உரைகள் உருவாக்கம் பெற்றன. இந்திய மண்ணிற்காகத் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் மன மகிழ்வோடு வழங்கிய வ.உ.சிதம்பரனாருக்கு மனம் கவர்ந்த நூலாகத் திருக்குறள் விளங்கியுள்ளது. திருக்குறள் கூறும் கருத்துரைகளை வாசிப்போடு நின்றுவிடாது, ஆய்வு நோக்கில் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் விருத்தியுரையாகப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். அன்னாரின் ஆழ்ந்த தமிழறிவையும், இலக்கிய, இலக்கண ஆற்றலையும், ஆய்வுத்திறத்தையும் உரைவிளக்கத்தின்வழி வெளிப்படுத்துவதாகத் திருக்குறள் அறப்பால் விருத்தியுரை அமைந்துள்ள திறத்தினை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

திறவுச்சொற்கள்: விருத்தியுரை, முப்பால், அறப்பால், உரைவிளக்கம்.

முன்னுரை:

திருக்குறளின் பொருளமைதி பயில்வார் மனங்களைக் கவர்ந்திழுக்கும் தன்மை கொண்டது. அவ்வகையில் திருக்குறளின் பொருளமைதியில் தம் மனத்தைச் செலுத்தியதோடு நில்லாது, அதில் தான் கொண்ட பொருள் விளக்கங்களை உரையாக, ஆய்வுப் போக்கில் பதிப்பித்து வெளியிட்டதில் வ.உ.சிதம்பரனார் தனித்திறம் பெற்றுத் திகழ்கிறார். அவரது திருக்குறள் அறப்பால் உணர்த்தும் பொருள்விளக்க நெறிகள் இக்கட்டுரையில் எடுத்துரைக்கப் பெறுகின்றன.

திருக்குறள் பெயர்க்கொள்கை:

திருவள்ளுவர் செய்த திருக்குறளுக்குப் பல்வேறு சிறப்புப் பெயர்கள் வழக்கில் உள்ளன. உரையாசிரியர்கள் தத்தம் கொள்கை, கோட்பாட்டின்படி திருக்குறளுக்குப் பெயரிட்டு அழைக்கும் வழக்காறு உள்ளது. அவ்வகையில் வ.உ. சிதம்பரனார், திருக்குறளின் பெயரினை ‘முப்பால்‘ என்ற சொல்லால் குறித்துள்ளார். இவ்வாறு தான் பெயரிட்டு அழைத்த காரணத்தை ‘அஃது அறப்பால், பொருட்பால்,

இன்பப்பால் என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. அம்மூன்று பகுதிகளையுடைய காரணத்தால் அது முப்பால் எனப் பெயர்பெற்றது‘ என்று தெளிவுறுத்துகிறார்.

முப்பால் உரைவிளக்கம்:

திருக்குறளின் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பால்களுக்கும் உரை விளக்கம் வரைந்ததாக நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். தற்போது அறப்பால் விருத்தியுரை மட்டுமே கிடைக்கப் பெறுகிறது.

திருக்குறளின் முதற்பகுதியான அறப்பால் என்பதற்கு, ‘அறத்தைப் பற்றிக் கூறுகின்ற பகுதியாதலின் அறப்பால் என்னும் பெயர்த்தாயிற்று‘ (ப. 13) என்றுரைக்கிறார் வ.உ.சி.

வ.உ.சி. அறப்பாலை இடைப்பாயிரம், பாயிரம், இல்லறவியல், துறவறவியல், வீட்டியல், ஊழியல் என்று ஆறு இயல்களாகப் பகுத்துக் கொண்டுள்ளார். இப்பகுப்பில் இடம்பெற்றுள்ள பாயிரப் பகுதியின் மூன்று அதிகாரங்கள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டவை அல்ல என்றும், அது பிற்சேர்க்கையாக அமைந்திருத்தல் வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார். இதனை, ‘திருக்குறட் சுவடிகளில் பாயிரத்தின் முதல் மூன்று அதிகாரங்களாகக் காணப்படும் கடவுள்வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை என்னும் மூன்று அதிகாரப் பாக்களும் திருவள்ளுவரால் இயற்றப்பட்டவை அல்ல; அவை திருவள்ளுவர் காலத்திற்குப் பிற்காலமும் முந்திய உரையாசிரியர்கள் காலத்திற்கு முற்காலமுமாகிய இடைக்காலத்துப் புலவர் ஒருவரால் பாடிச் சேர்க்கப்பட்டவை என்று யான் கருதுகின்றேன்‘ (ப. 17) என்று விளக்குகின்றார்.

மேலும், ‘இம்மூன்று அதிகாரங்களிலும் காணப்படும் பாக்கள் நூலின் பாக்களைப் போலச் சொற்செறிவும் பொருட்செறிவும் உடையன அல்ல. இப்பாக்களிற் பலவற்றின் பொருள்கள் பல தடைகளுக்கு இடம் கொடுக்கின்றன. மெய்யுணர்தல், துறவு என்னும் அதிகாரங்கள் நூலின்கண் இருக்கின்றமையால், கடவுள்வாழ்த்து, நீத்தார் பெருமை என்னும் அதிகாரங்களைப் பாயிரத்தில் கூற வேண்டியதில்லை. மெய்யுணர்தலில் கடவுளுக்குக் கூறியுள்ள இலக்கணங்களையும், கடவுள் வாழ்த்தில் கடவுளுக்குக் கூறியுள்ள இலக்கணங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இரண்டு அதிகாரங்களையும் இயற்றியவர் ஒருவரல்ல என்பது நன்றாக விளங்கும். அவ்வாறே. துறவின் பாக்களையும், நீத்தார் பெருமையின் பாக்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அவ்விரண்டு அதிகாரங்களையும் இயற்றியவர் ஒருவரல்ல என்பது நன்றாக விளங்கும்‘ (ப. 14) என்று தெளிவுபடுத்துகிறார். இதனால் திருக்குறளின் பாயிரப் பகுதி பிற்சேர்க்கையாக இருப்பதற்கு வாய்ப்பிருப்பதனை ஒருவாறு உணரமுடிகிறது.

இவ்வாறு வ.உ.சி. குறிப்பிடும் கருத்துரையை ஏற்கும் விதமாக க.ப. அறவாணன், ‘வ.உ.சி. இவ்வாறு கூறும் கருத்தினை மறுப்பதற்கு இல்லை‘1 என்று கூறும் கருத்தும் அரண் சேர்க்கிறது. வ.உ.சி.யின்

அறப்பால் இயல் பகுப்புமுறையானது

- இடைப்பாயிரம் (1-3) அதிகாரங்கள், 2. பாயிரம் (1) அதிகாரம்
- இல்லறவியல் (2-21) அதிகாரங்கள், 4. துறவறவியல் (22-30) அதிகாரங்கள்
- வீட்டியல் (31-34) அதிகாரங்கள், 6. ஊழியல் (35) அதிகாரம்

என்ற ஆறு பகுதிகளாக அமைந்திருக்கிறது. இதில் மரபான உரையாசிரியர் பகுப்புமுறையிலிருந்து தனித்து வகுத்துக்கொண்டிருப்பது தெளிவாகிறது.

உரைவிளக்க நெறிகள்:

திருக்குறள் பொருட்செறிவுடையது; கருத்து வளம் மிக்கது; அவற்றோடு பயில்பவரின் கல்வி, அறிவு, செயல், கருத்தியல், காலம், சூழல் என்பதற்கேற்ற வகையிலான பொருள்களைப் புலப்படுத்தவல்லது. இவ்வாறு திருக்குறள் பொருள் உணர்த்திய, உணர்ந்த விதத்தையே உரையாசிரியர்கள் தங்கள் விளக்கங்களாகக் குறித்துள்ளனர் என்பது தெளிவாகும். அவ்வகையில் வ.உ.சி. அறப்பால் விருத்தியுரையில் பின்வரும் நிலைகளில் உரைவிளக்கம் செய்துள்ளமையைக் காணமுடிகிறது.

அதிகாரப் பொருள் விளக்குதல், குறள்விளக்கம் தருதல், பிறர் உரை விளக்கம் காட்டுதல், பாடவேறுபாடு காட்டுதல், இலக்கணவிளக்கம் கூறுதல், இலக்கியமேற்கோள் காட்டுதல், சொற்பொருள் விளக்குதல்

அதிகாரப் பொருள் விளக்குதல்:

திருக்குறள் அதிகாரங்கள் அதில் இடம்பெறும் குறட்பாக்களின் பொருள் நிலையைக் குறிப்பால் உணர்த்துவதாக அமைந்திருக்கும். இவ்வாறு அதிகார விளக்கம் செய்தல் உரைநெறிகளில் சிறப்பிடம் பெற்றுள்ளது. வ.உ.சி. திருக்குறள் அறப்பாலில் உள்ள 9ஆம் அதிகாரமான நடுவுநிலைமை என்னும் அதிகாரம் தவிர்த்த மற்ற அதிகாரங்களுக்கு எளிமையான வகையில் விளக்கம் தந்துள்ளார். சான்றாகச் சில அதிகாரங்களின் விளக்குமுறைகளைக் கொண்டு அதன் சிறப்பினை அறியலாம்.

வான்சிறப்பு - அஃதாவது, மழையினது பெருமை

ஒழுக்கமுடைமை - அஃதாவது, நன்னடக்கை யுடைமை

பொறையுடைமை - அஃதாவது, பொறுமை யுடைமை

கள்ளாமை - அஃதாவது, திருடாமை

புறங்கூறாமை - அஃதாவது, புறத்தில் உரையாமை

வெகுளாமை - அஃதாவது, வெகுளாதிருத்தல்

துறவு - அஃதாவது, அகப்புறப் பற்றுக்களை விடுதல்

இவ்வாறு அதிகார விளக்கம் தருகையில் சொற்பொருள் ஆய்வு செய்து விளக்குதலும், பிற உரையாசிரியர் மேற்கோள் காட்டுதலும்

இடம்பெற்றுள்ளது. 'நடுவுநிலைமை' என்னும் அதிகார விளக்கத்தில், 'நடுவுநிலைமை என்னும் இரண்டு சொற்களால் ஆய தொடர், நடுவு என்பது நடு எனவும். நிலைமை என்பது நிலை எனவும் வழங்கும்.

நடுவுநிலைமை என்பது நடுவாக நிற்றல் எனப் பொருள்படும். அஃதாவது உற்றார், நண்பர், நொதுமலர், பகைவர் என்னும் நான்கு திறத்தினருக்கும் நடுவாக நின்று. அவர்களில் எத்திறத்தார் பக்கமும் கோடாமல். அவ்வத் திறத்தார்க்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்தொழுகுதல்' (ப. 10) என்று சொல்லாய்வு அடிப்படையில் பொருள் விளக்கம் தந்துள்ளார். இப்பகுதியில் அதிகார முறைவைப்பைக் கூறுதலும், அதிகாரத்தை இயைபுபடுத்திக் காட்டுதலும் இடம்பெறவில்லை.

குறள்விளக்கம் தருதல்:

வ.உ.சி.யின் திருக்குறள் விருத்தியுரை அதன் பதவுரையாக அமைந்துள்ளது. அது பொருள், அகலம், கருத்து என்னும் மூன்று நிலைகளில் அமைந்துள்ளது.

இவ்வாறு வகுத்துக் கொண்ட முறையினைக் குறித்து, 'எனது உரையில் பொருள் என்னும் சொல்லோடு தொடங்கிப் பதவுரை எழுதியுள்ளேன். அவ்வுரையில் வருவிக்கப்பட்ட சொற்களை ( ) இவ்அடையாளங்களில் அமைத்துள்ளேன். அகலம் என்னும் சொல்லோடு தொடங்கி இலக்கணக் குறிப்பு, விடை, மேற்கோள், பாடபேதம் முதலியவற்றைக் குறித்துள்ளேன். கருத்து என்னும் சொல்லோடு தொடங்கிக் கருத்தினைக் கூறியுள்ளேன்' (ப. 20) என்று தெளிவுபடுத்துகிறார்.

இதனைச் சில பகுதிகள் கொண்டு அறியலாம்.

பொருள்:

'பொருள்' என்னும் பகுதியில் குறளின் பொருளைப் பதவுரை நோக்கில் நேரிடையாகக் கூறியுள்ளார். இதில், சொற்களை வருவித்துப் பொருள்கூறுவதையும் காணமுடிகிறது.

'கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.' *(குறள். 2)*

என்னும் குறள் கூறும் பொருளைத், 'தூய அறிவினனது நல்ல அடிகளை வணங்கார் என்றால், (மாந்தர் பல நூல்களையும்) கற்றதனால் உண்டாய பயன் யாது? (ஒன்றும் இல்லை)' என்று விளக்கியுள்ளார்.

'மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து' *(குறள். 60)*

என்னும் குறளுக்கான பொருளை, '(தொட்டு) முகர அனிச்சப்பூ வாடும்; (இல்வாழ்வான்) முகம் வேறுபட்டு நோக்க விருந்தினன் வாடுவான்' என்று விளக்குகிறார். இவ்வாறான பொருள் விளக்கநிலை ஒவ்வொரு குறளுக்கும் இடம்பெற்றுள்ளது.

அகலம்:

'அகலம்' என்னும் பகுதியில் குறளில் இடம்பெறும் இலக்கணக் குறிப்பு, வினாவிடை, இலக்கிய - இலக்கண மேற்கோள், பாடவேறுபாடு முதலான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. சான்றாகச் சில பகுதிகள் இங்கு காட்டப்படுகின்றன.

இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. *(குறள். 5)*

என்னும் குறளின் அகலமானது. 'சேர் இரண்டும் வினைத்தொகைகள், இறைவனுக்குப் பொருள் அருளே யாம்; வினை என்பது ஆகுபெயர் அதன் பயனுக்கு ஆயினமையால், இருள் மூன்றாம் வேற்றுமைத்தொகை, தாமத்தர் பாடம் இருளையும் சேரா திறைவன், இருவினைப் பயன் களாவன. பிறப்பு, இறப்புகள், இருவினை நல்வினை, தீவினை என்றும். அவற்றில் நல்வினை பொன்விலங்கையும், தீவினை இரும்பு விலங்கையும் ஒக்குமென்றும் உரைப்பாரும் உளர், நல்வினையே அறமென்றும். அது வீட்டையும் அளிக்குமென்றும் இந்நூலாசிரியரும் பிற பன்னூலாசிரியர்களும் கூறுகின்றமையால், நல்வினையைப் பொன்விலங்கிற்கு ஒப்பிடுவது பொருத்தமன்று' (பக். 23-24) என்று அமைத்துள்ளார்.

கருத்து :

'கருத்து' என்பது திருக்குறளின் திரட்சிப் பொருள் கருத்துரையாக, சுருக்கமாக ஒருவரியில் குறளின் பொருளை எடுத்துரைப்பதாய் அமைந்துள்ளது. இவை தமிழ்ப் பொன்மொழிகள் போன்று அமைந் துள்ளன. சான்றாகச் சில கருத்துரைகள் காட்டப்படுகின்றன.

கடவுளை உணர்ந்தவர்க்குக் கவலை இல்லை - குறள். 7

அன்பு இல்லாதார் பிணத்தை ஒப்பர் - 50

அடக்கமுடையார் வீடு பெறுவர் - 93

கல்வியினும் ஒழுக்கம் மேம்பட்டது - 104

பற்று இல்லார்க்குப் பிறப்பு இல்லை - 319

மெய்ப்பொருளைக் காண்டலே மெய்யறிவு - 328

பிறர் உரை விளக்கம் தருதல்:

இலக்கிய உரை விளக்கக் கொள்கையில் பிற உரையாசிரியரது உரை ஏற்பும், மறுப்பும் உரையாசிரியரின் ஆய்வுச்சிந்தனைக்குக் களம் அமைத்துத் தருகின்றன.

இதனை ச.வே. சுப்பிரமணியன், 'உரையாசிரியர்களின் புலமைத் திறனும் சிந்தனைத்திறனும் திறனாய்வுப் பார்வையுமே உரையில் கருத்து வேறுபாடுகள் ஏற்படக் காரணியாகும். உரையின் அமைப்பும் இத்தகு உரை வேறுபாட்டுக்குக் காரணமாகலாம்' 2 என்ற கூற்றின் வழியாகவும் அறியலாம்.

பிற உரையாசிரியர்கள் உரை மறுப்பும் ஏற்பும்:

வ.உ.சி. தமது உரைவிளக்கத்தில் பரிமேலழகர், காளிங்கர், தாமத்தர், பரிதியார், மணக்குடவர், நச்சர் முதலான மரபுரையாசிரியர்களின் உரைவிளக்கத்தைக் குறிப்பிடுகிறார்.

வ.உ.சி. தன் விருத்தியுரையில், பரிமேலழகர் உரைக்குறிப்புகளைக் குறித்து ‘அறப்பாலில் 75 குறள்களில் என் உரை பரிமேலழகர் உரைக்கு வேறுபடுகின்றது.

12 குறள்களில் என் உரை அவர் உரையை வெளிப்படையாக மறுக்கின்றது. 5 குறள்களில் என் உரை அவர் உரையை வெளிப்படையாக ஆமோதிக்கின்றது.

மீதக் குறள்களில் என் உரையும் அவர் உரையும் ஒத்திருத்தல் கூடும்‘ (ப. 8) என்று தெளிவுபடுத்துகிறார்.

குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது,‘ (குறள். 9)

என்னும் குறள் விளக்கத்தில், ‘குணமென்னும் குன்றேறி நின்றாரது வெகுளியால் வரும் கேட்டை ஒரு கணமேனும் பிறர் தாங்குதல் அரிது என்று உரைப்பாரும் உளர்‘ என்று குறிப்பிடுகின்றார்.

பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவுடைய
மக்கட்பேறல்ல பிற. (குறள். 31)

என்னும் குறள் விளக்கத்தில், ‘அறிவறிந்த என்றதனால். மக்கள் என்பது பெண் ஒழித்து நின்றது‘ என உரைப்பாரும் உளர். அப்பாடத்தைக் கொள்ளினும் அவ்வுரை பொருந்தாது, கல்வியறிவு இருபாலர்க்கும் பொதுவாகலான்‘, என்று பிற உரை மறுத்துத் தன் உரையை நிலைநாட்டுகின்றார். பிற உரையாசிரியர் கருத்துக்களை எடுத்துரைக்கும்போது அவரது பெயர் சுட்டாது அவர்தம் உரையை மறுத்து விளக்கும் நயத்தக்க நாகரிகப் பண்பு வ.உ.சி. யின் உரைநெறியாக அமைந்திருக்கிறது.

பாடவேறுபாடு காட்டுதல்:

உரையாசிரியர்கள் திருக்குறளில் கண்டுள்ள பாடபேதங்கள் பலவாகும். ‘நூலாசிரியன் தன் உணர்ச்சி உந்துதலால் படைத்து மொழிந்த, பொருட்செறிவும் சிறப்புமிக்க சொல்லாட்சியை, அதனை யொத்த பிற சொற்களினின்றும் தனித்துப் பிரித்தறியும் அறிவியல் கலையே பாடவேறு பாட்டு ஆய்வு‘ 3 என்று குறிப்பிடுவார் வெ. பழனியப்பன்.

வ. உ. சி.யின் பாடவேறுபாடுகள்:

பாடவேறுபாடுகளைப் பாடபேதங்கள் என்ற சொல்லால் குறித் துள்ளார் வ.உ.சி. அவரது திருக்குறள் விளக்கவுரையில் 32 இடங்களில் பாடவேறுபாடுகளைக் காணமுடிகின்றது.

பாடவேறுபாடுகளின் அடிப்படையில் பொருள் விளக்குதல்:

பெரும்பாலான பாடவேறுபாடுகள் ஏடுபெயர்த்தெழுதியோரால் நிகழ்ந்தவை என்றே குறிப்பிடுகிறார். (ப. 19) இவ்வாறு இடம்பெறும் பாடவேறுபாடுகள் அடிப்படையில் பொருள்விளக்கியுள்ள திறத்தினையும் காணமுடிகிறது.

மனத்துக்கண் மாசில னாவ தனைத்தறன்
ஆகுல நீர பிற. *(குறள். 23)*

என்னும் குறளில் பரிமேலழகர் முதலானோர் கொண்ட பாடம். மாசிலனாதலனைத்தறன் என்பதாகும்; வ.உ.சி. மாசில னாவ தனைத்தறன் என்று பாடம் கொண்டு, 'மற்றை உரையாசிரியர்கள் நால்வர் பாடம் மனத்துக்கண் மாசில னாதலனைத்தறன்.

அதற்கு அவர்களது உரை, (அறஞ்செய்வான்) தன் மனத்தின்கண் குற்றமுடையன் அல்லன் ஆகுக, அவ்வளவே அறம். (ஒருவன் தன்) மனத்தின்கண் குற்றமுடையன் அல்லன் ஆதல் ஓர் ஒழுக்கம் ஆகுமேயன்றி அறமாகாது. என்னை?

அறம் என்பது ஓர் உயிர்க்கு நன்மை பயக்கும் செயல், அதுபற்றியே ஆசிரியர் அறவினை யோவாதே செல்லும் வாயெல்லாம் செயல். அன்றறிவாம் என்னாது அறம் செய்க, வீழ்நாள் படாமை நன்று ஆற்றின், செயற்பால தோரும் அறனே என்று கூறியுள்ளார்.

அன்றியும். மனத்தின்கண் மாசிலனாதலே அறம் என்று கூறின், பற்றுள்ள முடையார் ஈகை முதலிய அறங்களைச் செய்யாது விடுதற்கு அக்கூற்றை ஒரு மேற்கோளாக எடுத்துக்காட்ட முற்படுவர்.

நன்று புரியாமைக்கு மேற்கோளாக எடுத்துக்காட்ட உதவும் ஒருவகை மனோநிலையை அறம் என்று ஆசிரியர் கூறார். ஆகலான் மாசிலனாதலனைத்தறன் என்பது ஏடு பெயர்த்தெழுதியோனால், அல்லது கால அளவில் சிதைந்து போய்ப் பின்னர் ஊகித்து எழுதப்பட்டவற்றால் நேர்ந்த பிழை எனக்கொள்க' (ப. 43) என்று பொருள்விளக்கம் செய்துள்ளார்.

இவ்வாறு பாடங்கொண்டு பொருள் விளக்கும் நிலையினைக் குறித்து, 'வ.உ.சி. மாசிலனாவ தனைத்தறன் எனப் பாடங்கொண்டு அனைத்தும் என்பதன் முற்றும்மை விகாரத்தால் தொக்கதாகக் கொள்வதால் சிறிது பொருள் வேறுபடுகின்றது. அறத்திற்கு மாசின்மையாகிய பண்பு மட்டும் போதாது, செயலும் வேண்டும் என்னும் கருத்தில் குற்றமில்லாதவனாய்ச் செய்யப்படுவது என்று கூறும் வ.உ.சி. உரை ஏற்புடைத்து' 4 என்று குறிப்பிடுகின்றார் இரா. சாரங்கபாணி.

இலக்கிய மேற்கோள் காட்டுதல்:

அறப்பாலின் 30 குறள்விளக்கங்களில் இலக்கிய மேற்கோள் விளக்கம் இடம்பெற்றுள்ளது. இப்பகுதியில் நாலடியார், பழமொழி, இனியவை நாற்பது, கம்பராமாயணம் முதலானவற்றின் பாடலடிகளை மேற்கோளாகக் காட்டியுள்ளார். சான்றாக,

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல். *(குறள். 33)*

என்னும் குறள் விளக்கத்தில், 'ஆற்றுந் துணையா லறஞ்செய்கை முன்னினிது' என்னும் இனியவை நாற்பதின் வரிகளை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

சிறைகாக்கும் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை. *(குறள். 27)*

என்னும் குறள் விளக்கத்தில். 'பெண்டிரைக் காப்ப திலமென்று, கண்டு மொழிந்தனர் கற்றறிந்தோரே' என்றார் வளையாபதியார் என்றும். 'நிறையான் மிகுகல்லா நேரிழை யாரைச் சிறையா னகப்படுத்த லாகா' என்றார் பழமொழியார்' என்றும் இரு இலக்கிய வரிகளை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

இலக்கண விளக்கம் கூறுதல்:

'உரையாசிரியர்கள் தாம் எடுத்துக்கொண்ட பொருளில் இடம் பெற்றுள்ள சொல்லையும், தொடரையும் தாம் கூறும் கருத்துகளையும் இலக்கண நிலைகளில் வைத்துப் பொருள் காண்பர். அச்சொல்லையும் தொடரையும் இலக்கண நோக்கில் எவ்வாறு வகைப்படுத்தலாம் என்பதை எடுத்துக்காட்டிப் பொருள் விளக்குவர்' 5 என்னும் கூற்றுக்கிசைந்த வ.உ.சி. இலக்கண நோக்கில் பொருள் விளக்கம் தந்துள்ளார். வ.உ.சி. யின் பொருள் விளக்க நிலைகளில் 'அகலம்' என்னும் பகுதியில் இலக்கணக் குறிப்புகளும், இலக்கண விளக்கங்களும் இடம்பெற்றுள்ளன. சான்றாக,

'மங்கலமென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு. *(குறள், 40)*

என்னும் குறள் விளக்கத்தில் ...மங்கலம். மனை என்பன ஆகுபெயர்கள், அவை முறையே மங்கலநாணுக்கும் மனையாளுக்கும் ஆயினமையால், நன்கலம்-தாலி, மங்கலநாண்-தாலிக்கொடி, என்ப. மற்று அசை, பேறு என்பது விகுதி புணர்ந்து கெட்டு முதனிலை திரிந்த தொழிற்பெயர், அதாவது பெறு என்னும் முதனிலையோடு தல் என்னும் விகுதி புணர்ந்து கெட்டுப் பெறு என்னும் முதனிலை பேறு எனத் திரிந்து நின்றது' என்று விளக்கம் தந்துள்ளார்.

சொற்பொருள் விளக்குதல்:

திருக்குறளில் இடம்பெற்றுள்ள துறைச்சொற்களுக்கு விளக்கம் தருகையில் உரையாசிரியர்களிடையில் வேறுபாடு நிலவுகின்றது. உரையாசிரியர்கள் பொருள் வேறுபாடு கொள்வதற்கும் இந்நிலை காரணமாக அமைகின்றது.

திருவள்ளுவர் எந்த பொருளை நோக்கி இச்சொல்லைப் பயன்படுத தினார் என்பதனை உணர்த்தும் நோக்கில் உரையாசிரியர்கள் மாறுபாடு கொண்டு விளக்கம் தந்துள்ளனர். அவ்வகையில், சொற்பொருள் விளக்கு

தலில் வ.உ.சி. மிகச் சுருக்கமாகவே சொல்லுக்குரிய பொருளை விளக்கியுள்ளார்.

ஆதிபகவன் - முதற்கடவுள்; முதற்கடவுள் – ஒரு பெயரோ ஓர் உருவமோ பெறாது நிற்கும் மெய்ப்பொருள்,

அமிழ்தம் - சாவாமையை நல்கும் மருந்து,

நிறைமொழி மாந்தர் - நிறைவுறும் சொற்களைச் சொல்லும் மாந்தர்

மறைமொழி - மறைத்துவைத்துப் போற்றும் மந்திரம்

தென்புலத்தார் - மெய்யறிவுடையார்

புத்தேளிர் வாழுமுலகு- தேவர் வாழும் வானுலகு,

இவ்வாறு வ.உ.சி. திருக்குறள் உரைவிளக்க நெறிகள் அமைந்துள்ளதனைக் காணமுடிகிறது.

முடிவுரை:

பல்வேறு பொருள்களை மிகநுணுக்கமான நிலையில் விளக்கும் திருக்குறள் அதன் உரை விளக்கங்களால் மெருகேற்றப்பட்டு வந்துள்ளது. திருக்குறளுக்கு உள்ள சிறப்பு அதன் உரைவிளக்கங்களுக்கும் இருப்பதனை அறியமுடிகிறது. பன்னூற்புலமையும், இலக்கண அறிவும், பரந்துபட்ட இலக்கியப் பயிற்சியும் மிக்கவர்களால் மட்டுமே உரை விளக்கங்களை ஆய்வுப்போக்கில் உருவாக்க இயலும். அந்த வகையில் திருக்குறள் உரைக்கு வ.உ.சி. செய்துள்ள உரை அவரது தமிழ் அறிவின் எல்லைக்குத் தக்க சான்றாக அமைந்திருப்பது தெளிவாகிறது. உரைவிளக்கம் செய்கையில் பல்வேறு உரைமரபுகளைப் பின்பற்றியும், தனக்கான உரைக்கொள்கை உருவாக்கத்தில் தனித்துநின்றும், திருக்குறளின் பொருள் நயம் சிறிதும் குறைவுபடாமல் பெருமைப்படுத்திப் பார்க்கும் அவரது உரைக் கொள்கை சிறப்புற்று விளங்குவது இதனால் தெளிவாகிறது.

அடிக்குறிப்புகள் :

1. க.ப. அறவாணன், திருவள்ளுவம், ப. 190
2. வெ. பழனியப்பன். திருக்குறளில் பாடவேறுபாடுகள். ப, 1
3. இரா. சாரங்கபாணி. திருக்குறள் உரைவேற்றுமை. அறத்துப்பால். ப 66
4. மு. சந்தானம். பேராசிரியர் உரைத்திறன். ப, 63

துணைநூல்கள்:

1. தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் திருக்குறளும், தேசாபிமானி வ.உ.சிதம்பரம் பிள்ளை விருத்தியுரையும், முதற்பாகம் : அறப்பால், தூத்துக்குடி, 1935
2. அரவிந்தன், மு.வை, உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1996
3. அறவாணன், க.ப., திருவள்ளுவம், தமிழ்க்கோட்டம், சென்னை, 2008
4. சந்தானம், மு., பேராசிரியர் உரைத்திறன், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1990
5. சாரங்கபாணி, இரா., திருக்குறள் உரைவேற்றுமை. அறத்துப்பால், மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 1989

31

வ.உ.சிதம்பரனாரின் இன்னிலை உரைத்திறன்

முனைவர் மு. சங்கர்
உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

ஆய்வுச்சுருக்கம்:

தமிழுக்குத் தொண்டாற்றிய சான்றோர்களுள் குறிப்பிடத்தக்கவர் வ.உ.சிதம்பரனார். இவர் படைப்பாளரராகவும் இலக்கியவாதியாகவும் இருந்துள்ளார். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்ததோடு இலக்கியம், அரசியல், சமூகம் என்று பலவற்றிலும் தமது கவனத்தைச் செலுத்தியுள்ளார். தமிழின் இலக்கியப் பழமையையும் வளமையையும் தமது உரைகளின் மூலமாக வெளிப்படுத்தியுள்ளார். வ.உ.சி.யின் உரைத்திறனுக்குச் சான்றாக இன்னிலை திகழ்கின்றது. இந்நூலுக்கு அவர் எழுதிய உரை விருத்தியுரை ஆகும். இவ்வுரை அன்வயம், பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விசேடவுரை என்ற ஐந்து பகுப்புகளைக் கொண்டது. இப்பகுப்புகளின் மூலமாக வ.உ.சி.யின் உரைத்திறனை அறிந்து கொள்ளலாம் எனும் கருதுகோளை முன்வைத்து இக்கட்டுரை எழுதப்பெறுகின்றது.

திறவுச் சொற்கள் : வ.உ.சி., இன்னிலை, உரைத்திறன், விருத்தியுரை.

தோற்றுவாய்:

வ.உ.சி. இயற்றிய மெய்யறம், மெய்யறிவு, பாடல் திரட்டு, சுயசரிதை ஆகிய நான்கு நூல்களும் கவிதை வடிவில் அமைந்தவை.

1928-இல் தொல்காப்பியத்தை இளம்பூரணர் உரையுடன் பதிப்பித்தார். இன்னிலை, சிவஞான போதம், திருக்குறள் ஆகிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். இக்கட்டுரை அன்னாரின் இன்னிலை உரைத்திறனை ஆய்வதாக அமைகின்றது.

உரை எழுதும் நோக்கத்தை உரைப்பாயிரத்தில் சுட்டல்:

வ.உ.சி. தமது இன்னிலை உரைப்பாயிரத்தில் உரை எழுதும் நோக்கத்தை எழுதியுள்ளார்.

'.......... இந்நூல் இக்காலத்துப் பழக்கமில்லாத பழந்தமிழ்ச் சொற்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. இஃது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் கூறுகின்றது. அறத்தை அறிதல் அருமை. பொருளினை அறிதல் அதனினும் மிக அருமை, இன்பத்தை அறிதல் அதனினும் மிக அருமை, வீட்டினை அறிதல் அவை மூன்றையும் அறிதலினும் மிக அருமை. ஆகவே, அந்நான்கையும் அறிந்த பெரியாரே இந்நூற்கு உரையெழுதத் தக்கவராவர். அத்தகையார் ஒருவர்

இந்நூற்கு உரையெழுதியிருப்பதாகச் சிலர் கூறுகின்றனர். அவ்வுரை இதுகாறும் நம்மவரில் ஒருவருக்கும் கிடைத்ததாகத் தெரியவில்லை. உரையில்லாமலே இந்நூலை அச்சிட்டு வெளிப்படுத்தலாமென்றால், அது பலர்க்குப் பயன்படாததாக முடியும். அதுபற்றி, இந்நூற்கு ஓர் உரையெழுதி அதனுடன் இந்நூலை அச்சிட்டு வெளிப்படுத்தல் நலமென்று நினைத்தேன். இந்நூலிலுள்ள சில செய்யுள்களின் பொருள்கள் எனக்கு விளங்கின. பல செய்யுட்களின் பொருள்கள் எனக்கு விளங்கவில்லை.

பின்னர், இந்நூற் செய்யுள்களில் ஒவ்வொன்றன் பொருளையும் சென்னைப் பச்சையப்பன் கல்லூரிச் சுதேச பாஷை அத்தியக்ஷர் ஸ்ரீமான். தி. செல்வகேசவராய முதலியார் அவர்களோடு ஆராய்ச்சி செய்தேன்......' என்று தொடங்கி '........ இந்நூலை வாசிக்கும் பெரியோர் எனது உரையிலுள்ள குற்றம் குறைகளை எனக்குக் காட்டியருளி 'நன்றியறிதல்' என்னும் நற்குணம் என்னிடத்து உண்டாகும்படி செய்வார்களாக எல்லாம் வல்ல இறைவன் துணை' (1988:28 - 31) என்று எழுதி முடிகின்றார்.

நன்றி மறவாமை:

வ.உ.சி. தமது இன்னிலை உரையில், 'சைவம் வளர்த்தும் தருமம் புரியும் பெத்தாச்சிச் செட்டிப் பெரியார்க்கு உவப்புடன் இன்னிலை உரிமையாக்கினனே (1988:1) என்று எழுதியுள்ளார். இஃது அவரது நன்றி மறவாமையைக் காட்டுகின்றது.

உரை அமைப்பு:

வ.உ.சி.யின் உரையானது பாடல், அன்வயம், பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விசேடவுரை உள்ளிட்ட ஆறு அமைப்புகளைக் கொண்டுள்ளது. பாடல் என்பதில் இன்னிலையின் பாடல் மூலத்தையும் அன்வயம் என்பதில் பாடலில் உள்ள சொற்களை அவற்றின் பொருள் சரியாக அமையுமாறு கொண்டு கூட்டியும் பதவுரை என்பதில் பாடலின் ஒவ்வொரு சொல்லும் தரும் பொருளையும் பொழிப்புரை என்பதில் பாடல் தரும் பொருளைத் தொகுத்துச் சுருக்கமாகவும் கருத்துரை என்பதில் பாடல் தரும் பொருளை முழுமையாக விளக்குவதாகவும் விசேடவுரை என்பதில் பாடலின் நேரடிப் பொருளோடு தொடர்புடைய விரிவான விளக்கத்தையும் மேற்கோள்களையும் ஒப்புமைப் பகுதிகளையும் காட்டுகின்றார்.

ஆராய்ச்சித் திறன்:

இன்னிலையின் ஆசிரியர் பொய்கையாரா? என்ற ஐயத்திற்குப் பதிலுரைப்பதாக இவரது கருத்து அமைந்துள்ளது.

இந்நூலினது ஏட்டுப் பிரதியின் முதல் ஏட்டுத் தொடக்கத்தில் 'மதுரையாசிரியரால் தொகுக்கப்பட்ட இன்னிலை நாற்பத்தைந்து' என்னும் சொற்களும் அம்முதல் ஏட்டின் முடிவில் 'திருமேனிக்கவிராயன்

எழுதியவரும் இன்னிலை நாற்பத்தைந்து நன்றாக' என்னும் சொற்களும், அவ்வேட்டுப் பிரதியின் கடைசி ஏட்டு முடிவில் 'பொய்கையார் பாடிய இன்னிலை முற்றிற்று' என்னும் சொற்களும் எழுதப்பட்டுள்ளன. இந்நூலின் ஏட்டுப் பிரதியை எழுதிய திருமேனி இரத்தினக் கவிராயர வர்கள் செந்தமிழ்ப் புலமையும் சீரிய ஒழுக்கமும் தெய்வபக்தியும் சிறந்து விளங்கியவர்கள். இந்நூலின் ஏட்டுப் பிரதியை அளித்த ஸ்ரீமான் மலையையாப் பிள்ளையவர்கள் அக்கவிராயர்களின் ஏடுகளையெல்லாம் போற்றி வைத்திருக்கும் அவர்களுடைய சந்ததியார்களின் தலைவராய் விளங்கியவர்கள் பொய்கையார் என்பவர் 'இன்னிலை' என்னும் நூலை இயற்றவில்லை என்றாவது, அந்நூலை வேறு யாரேனும் இயற்றினா ரென்றாவது நாம் கேள்விப்படவில்லை. ஆதலால், 'இன்னிலை' என்பது இந்நூலே என்றும், இந்நூலை இயற்றியவர் பொய்கையாரே என்றும் நாம் கொள்ளலாகும்' (1988:17) என்கின்றார். இக்கருத்தின் வழி இன்னிலையின் ஆசிரியர் பொய்கையாரே எனத் தெளியலாம்.

பெயர்க் காரணத்தை விளக்குதல்:

நூலின் பெயர்க் காரணத்தைப் பின்வருமாறு விளக்குகின்றார் வ.உ.சிதம்பரனார்.

இன்னிலை என்பது இனிமையாகிய நிலை எனப் பொருள்படும். அஃது அன்மொழியாய் அந்நிலையை அளிக்கும் இந்நூலுக்குப் பெயராயிற்று (1988:33).

வீட்டுப்பால் இல்லியல், துறவியல் எனும் இரண்டு இயல்களைக் கொண்டது. அவ்வியலுக்கான பொருளைப் பின்வருமாறு வ.உ.சி. கூறுகின்றார். இல்லியல் என்பது இல்லறவியல்பு எனப் பொருள்படும். 'இல்' என்பது ஆகுபெயராய் ஈண்டு இல்லறத்தை உணர்த்தி நின்றது (1988:89) துறவியல் என்பது 'துறவறவியல்பு' எனப் பொருள்படும். துறவு என்பது ஆகுபெயராய் ஈண்டு துறவறத்தை உணர்த்தி நின்றது (1988:104).

இயைபு காட்டல்:

இன்னிலை அறப்பால், பொருட்பால், இன்பப்பால், வீட்டுப்பால் எனும் நான்கு பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இதற்கு உரையெழுதும் வ.உ.சி. இப்பகுதிகள் அடுத்தடுத்து அமைக்கப்பட்டுள்ளதற்கான காரணத்தையும் இயைபையும் சுட்டிக் காட்டுகின்றார்.

அறப்பால் என்பது 'அறத்தைப் பற்றிக் கூறும் பகுதி' எனப் பொருள்படும். பொருள், இன்பம், வீடு என்னும் மூன்றையும் அளிப்பது ஆதலால் அறம் முதற்கண் கூறப்பட்டது (1988:35) என்றும் பொருட்பால் என்பது 'பொருளைப் பற்றிக் கூறும் பகுதி' என்று பொருள்படும். அறத்தையும் இன்பத்தையும் மாத்திரம் தருதலால் பொருட்பால் அறப்பாலின் பின் கூறப்பட்டது (1988:52) என்றும் வீட்டுப்பால் என்பது 'வீட்டைப் பற்றிக் கூறும் பகுதி' எனப் பொருள்படும். இன்பத்தை அனுபவித்து விடுத்த பின்னரே அடையப்படுவது ஆதலால், வீடு முடிவின்கண் கூறப்பட்டது (1988:89) என்றும் கூறுகின்றார்.

இவ்வாறு அறப்பாலுக்குப் பின்னால் பொருட்பாலும் பொருட் பாலுக்குப் பின்னால் இன்பப்பாலையும் இன்பப்பாலுக்குப் பின்னால் வீட்டுப்பாலும் அமைக்கப்பட்டுள்ளதற்கான காரணத்தை விளக்கி யுள்ளார் என்பதைத் தெளியலாம்.

சொல்லும் பொருளும்:

சொற்களின் பொருளைத் தெளிவுபடுத்துவது உரையாசிரியர்களின் பொறுப்பு. அப்பணியை மிக நேர்த்தியாகச் செய்துள்ளார். வ.உ.சி.

மடி – வயிறு (1988:48)

உல்கு பொருள் - சுங்கப் பொருள் (1988:63)

யாணர் - புதிது (1988:78)

காமம் - தலைவனும் தலைவியும் கூடும் கூட்டம் (1988:78)

பரவெளி – சிதாகாயம் (1988:93)

சொற்களை விளக்கும் பாங்கு:

வ.உ.சி. சில சொற்களை விளக்கிச் சொல்கின்றார். உறுபொருள் என்பது கண்ணற்றார் பொருளும் புவிக்கீழ் பொருளும் இறைப் பொருளுமாம் (1988:63). வெறுக்கை என்பது 'செல்வம்' எனவும் 'வெறுக்கத்தக்கது' எனவும் பொருள்படும் (1988:64). உழவர்களுக்கான நால்வகைப் பணியாவன : உழுதலும் எருவிடுதலும் நீர்ப்பாய்ச்சலும் கதிர் காத்தலுமாம் (1988:93). ஐந்நிலத்தார் : தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் (1988:96). ஐம்புலங்கள் : சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் (1988:96). ஐங்குரவர் : அரசன், உபாத்தியாயன், தந்தை, தேசிகன், மூத்தோன் (1988:100), முக்குற்றம் : காமம், வெகுளி, மயக்கம் (1988:101).

இதிகாச கதையைக் கூறல்:

வ.உ.சி. 'அன்று அமரில் சொற்ற அறவுரையை வீழ்ந்த தீக் கழுது' என்ற தொடருக்கு மகாபாரதக் கதையை (கீதை உபதேசம்) விசேடவுரையாகத் தருகின்றார்.

துரியோதனன் முதலியோரும் தருமன் முதலியோரும் யுத்தம் செய்வதற்காகக் குருஷேத்திரத்திலே போய் நின்றனர். அவருள்ளே துரியோதனன் பக்கத்தில் போர் புரிய நின்றவர் யார் யார் என்று அர்ச்சுனன் பார்த்தான். அங்கு நின்றவர் எல்லாம் தன் சுற்றத்தாராகத் தோன்றினர். அது கண்டு அர்ச்சுனன் கண்ணபிரானை நோக்கி, 'அரச நிமித்தம் இங்குள்ள எனது சுற்றத்தாரை யெல்லாம் கொல்லேன்' என்று சொல்லிப் போர் புரிய மறுத்தான். அப்போது கண்ணபிரான், அவனைக் கொண்டு போர் செய்விக்க எண்ணி, அவனுக்குக் கீதையை உபதேசித்தார். அதனைப் பக்கத்தில் நின்று கேட்ட ஒரு பேய் பிரகிருதிக்கும் ஆத்மாவுக்குமுள்ள பேதத்தை உள்ளவாறே உணர்ந்து கொண்டது (1988:36,37).

பாட வேறுபாடு காட்டல்:

உரையாசிரியர்கள் பலர் மூலபாடத்தில் உள்ள வேறுபாட்டைக் கண்டறிந்து உரை எழுதியுள்ளனர். அம்மரபையே வ.உ.சிதம்பரனாரும் பின்பற்றியுள்ளார். அவர் இன்னிலை நூலின் மூல பாடத்தில் உள்ள வேறுபாட்டைக் கண்டறிந்து சுட்டிக்காட்டியுள்ளார்.

அருள் விழைவார் அஃதே (1988:37) - அருள் விழைவார் அத்தே (1988:38)

கழிவிரக்கம் கோடார் - கழிவிரக்கம் கொள்ளார் (1988:41)

ஈர்ம்பெயலாம் - ஈர்ப்பெயலாம் (1988:45)

வீட்டுப்பால் - வீட்டிலக்கப்பால் (1988:89)

பொன்றா உணர்வா – பொன்றா வுணர்வால் (1988:112)

வரனுய்ந்தார் - வரலுய்ந்தார் (1988:112)

உவமையை விளக்குதல்:

உவமைகளின் சிறப்பே, உரையாசிரியர்களின் புலமை மாண்பை வெளிப்படுத்தும் சிறந்த கருவியாய் உள்ளது (2008:165) என்பது மு.வை.அரவிந்தன் கூற்று. இக்கூற்று முற்றிலும் உண்மையானதே. இவ்வுரையிலும் மூல நூலில் உள்ள பல உவமைகள் விளக்கப்பட்டுள்ளன.

‘கண்ணீர் இருபாலும் தோன்றன்ன‘ (இன்.நி.11) எனும் உவமையை விளக்கும் திறம் அப்பாடலைப் புரிந்து கொள்ள ஏதுவாய் அமைந்துள்ளது. ‘கண்களின் பார்வை இரண்டு பக்கங்களிலும் தோன்றினாலும், அவை உண்மையில் ஒரு பக்கத்திலேயே நோக்கும்; மரத்தை அறுக்கின்ற வாள்கள் இரண்டு பக்கங்களிலும் ஒளிர்ந்தாலும், அவை உண்மையில் ஒரு பக்கத்திலேயே அறுக்கும். அதுபோல, செல்வங்கள் மயக்கத்திற்குக் காரணமாகவும் முத்தி நெறியாகிய அறத்திற்குக் காரணமாகவும் தோன்றினாலும், அவை உண்மையில் அறத்தைச் செய்வதற்கே பயன்படும்‘ (1988:53).

‘குருட்டாயன் நீள்கானங் கோடல்‘ (இன்.15) என்ற பாடலில் வரும் உவமையைப் பின்வருமாறு வ.உ.சி.விளக்குகிறார். ‘பெரிய காட்டின்கண் புக்க குருட்டிடையன் தனது ஆட்டை அடையாதவனாயும் தனது மேய்த்தல் தொழிலை இழந்தவனாயும் பல துன்பங்களை யுடையவனாயும் தனித்து வருந்துவது போல, இளம் பருவத்தில் பொருள் வருவாயை அடையாதவன் ஒரு பொருளாக மதிக்கப்படாதவனாயும் அறம் செய்யாதவனாயும் சுற்றத்தை இழந்தவனாயும் துன்பங்களையெல்லாம் பொருந்தி அற்பனாய் வருந்துவன் (1988:60).

தூவி நெருஞ்சிக்காய் நீர்முள்ளி தும்பையலர்
காவியன சேற்கண் குறுந்தொடியா – ராவிக்
கினிய ரிணைசேரா ரீர்ங்கண்மா ஞாலத்
தனிமைக் கவரோர் கரி *(இன்.27)*

என்ற பாடலில் வரும் உவமையைப் பின்வருமாறு விளக்குகிறார் வ.உ.சி. 'அன்னத்தின் தன்மையாவது நீரும் பாலும் கலந்து வைக்கப்பட்ட காலையில் இரண்டையும் பிரித்து நீரை விலக்கிப் பாலை யுண்ணுதல். அதுபோல, இன்பம் துய்க்கும் காலையில் நேரும் புலவியை நீக்கி இன்பத்தைத் துய்த்தலாம். அன்றியும், அன்னத்தின் நடையைப் போன்ற அழகிய நடையை யுடையார் என்று உரைப்பினும் அமையும்' (1988:79).

மேற்கோள் காட்டும் திறன்:

தொல்காப்பியம், இராமாயணம், திருக்குறள், நாலடியார், திரிகடுகம், நான்மணிக்கடிகை, நல்வழி, மூதுரை, நீதி வெண்பா, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி, அறநெறிச்சாரம், நீதிநெறி விளக்கம், குசேலோபாக்கியானம், சாங்கிய சூத்திரம், திருக்கோவையார், இறையனார் அகப்பொருளுரை, திருவாய்மொழி, பிரமோத்தர காண் டம், யாப்பருங்கலக்காரிகை, திருக்குற்றாலப் புராணம், காஞ்சி புராணம், கந்த புராணம், திருவள்ளுவ மாலை, பிரபோத சந்திரோதயம், சசிவர்ணபோதம், தொல்காப்பியவுரை, திருக்குறள் மணக்குடவர் உரை உள்ளிட்ட நூல்களில் இருந்து தமது கருத்துகளை ஒப்பு நோக்குவதற்காக மேற்கோள்களை எடுத்தாண்டுள்ளார் வ.உ.சி.

புலவர்களின் பெயர்களைச் சுட்டல்:

வ.உ.சி. தமது இன்னிலை உரையில், திரிகடுகத்தார், வள்ளுவனார், கம்பநாட்டாழ்வார், நக்கீரனார், இளம்பூரணர், பேராசிரியர், மணக் குடவர், பரிமேலழகர், பேயாழ்வார், பொய்யாமொழியார், யாப்பருங் கல விருத்தியுரைக்காரர் முதலிய புலவர்களின் பெயர்களைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலக்கணக் குறிப்பைத் தரல்:

வ.உ.சி. பொருள் விளக்கம் தருகையில், 'தாம் கூறும் உரை சரியானதே' என்பதை நிறுவ இலக்கணக் குறிப்புகளைத் தகுந்த இடங்களில் தந்துள்ளார்.

வீழ் - காலம் கரந்த பெயரெச்சம் (1988:37)

அன்று – பண்டறி சுட்டு (1988:37)

புயல் என்பதன் யகரம் சகரத்திற்குப் போலியாய் நின்றது (1988:48)

உறுத்தலும் ஆக்கலும் என்பவை எண்ணும்மை தொக்கு நின்றன (1988:49)

தோள் - சினையாகுபெயர் (1988:59)

நாரம் - ஆகுபெயர் (1988:60)

பொருட்டாகான் - பால்வழுவமைதி (1988:60)

ஆங்கு – அசை (1988:60)

ஆல் - அசை (1988:71)

கனங்குழை என்பது அன்மொழித்தொகை (1988:75)

காலத்தால் என்பது வேற்றுமை மயக்கம் (1988:75)

மெல்லியல் என்பது அன்மொழித்தொகை (1988:76)

ஞாலத்து என்பது அத்துச் சாரியை கெட்டு நின்றது (1988:81)

எளிய உரை:

வ.உ.சி. இன்னிலைக்கு விருத்தியுரை எழுதியிருந்தாலும் அவரது கருத்துரை மிகவும் சுருக்கமாகப் பாடலின் பொருளை எளிமையாகத் தெளிவுபடுத்துகின்றது.

தோற்றாரே வெல்வர் துணைமிசைவார் கோட்டியானை
யேற்றுக் கழறொடியார் மிக்காரை யார் வரைவர்
போற்றளி கூடல் கரி

என்ற பாடலுக்குப் பின்வருமாறு கருத்துரை எழுதுகின்றார் வ.உ.சி. ‘காதலர் இருவருள்ளும் தோன்றும் புலவியின்கண்ணே தோற்றவரே மிக்க இன்பம் அடைவர்‘ (1988:85).

நிறைவாக...

வ.உ.சிதம்பரனாரின் உரைத்திறனைப் பின்வருமாறு அடையாளங் காண இயலுகின்றது. அ) உரைப் பாயிரம் எழுதுதல் ஆ) இயல்களின் பெயர்க்காரணத்தைத் தெளிவுபடுத்துதல் இ) இயல் விளக்கத்தைத் தருதல் ஈ) இயல் இயைபு காட்டல் உ) வைப்புமுறையை விளக்கிச் சொல்லுதல் ஊ) மேற்கோள்களைச் சரியான இடங்களில் ஆளுதல் எ) சொற்பொருள் விளக்கம் தரல் ஏ) பாட வேறுபாட்டைக் காணலாம். ஐ) உவமையை விளக்குதல் ஒ) முன்னோர்களைப் போற்றுதல் ஓ) இலக்கணக் குறிப்புகளைச் சுட்டிக் காட்டல். இக்கூறுகளை எல்லாம் மிக நுட்பமாகவும் விரிவாகவும் உரை செய்து, தமது கடமையை நிறைவு செய்துள்ளார் வ.உ.சிதம்பரனார்.

துணை நின்ற நூல்கள்:

1. அரவிந்தன், மு.வை. உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2008 (இரண்டாம் பதிப்பு).
2. வேதியப் பிள்ளை, த. (பதி.), இன்னிலை வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்கள் விருத்தியுரையுடன், அகஸ்தியர் அச்சுக்கூடம், அம்பாசமுத்திரம், 1988 (இரண்டாம் பதிப்பு).

32

வ.உ.சி.யின் திருக்குறள் உரைச் சிறப்புகள்:

வெ. சந்துரு
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
எஸ்.ஆர்.எம். கலை & அறிவியல் கல்லூரி, காட்டாங்குளத்தூர்.

ஆய்வுச்சுருக்கம்:

திருக்குறளுக்கு வ.உ.சி. அவர்கள் எழுதிய உரையின் தன்மை பற்றியும், பிற உரைகளில் இருந்து வேறுபடுகின்ற சிறப்புகள், மணக்குடவர் உரைப் பதிப்பித்தல், பாடவேறுபாடு காணுதல், இயல் பாகுபாடு காட்டுதல், பழைய உரையில் இருந்து வேறுபட்டுப் புதிய உரை எழுதுதல், திருக்குறளுக்கு தன் உரையில் பொருத்தமான இலக்கிய மேற்கோள் காட்டுதல், நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்ப பொருள் தருதல் எனப் பல்வேறு வகையான சிறப்புகள் குறித்தும் அமைவது இந்தக் கட்டுரையின் ஆய்வுச்சுருக்கமாக அமைகின்றது.

திறவுச்சொற்கள்: விவேக சிந்தாமணி, நாலடியார், அறம், பொருள், இன்பம், வீடு, அறநெறி, வீட்டியல், நிலையாமை, இல்லறவியல், துறவரவியல், விருந்தோம்பல்.

முன்னுரை:

திருக்குறள் மீது கொண்ட பற்றின் காரணமாக வ.உ.சி. யின் சிந்தனையில் இளமைக்காலம் முதல் இறக்கும் வரையிலும் திருக்குறள் நிறைந்திருந்தது. இதனை வ.உ.சி. யின் திருக்குறள் உரையின் வாயிலாக அறிந்து கொள்ள முடியும். திருக்குறள் மீது கொண்ட பற்றினை வ.உ.சி. தனது சுயசரிதையில்,

'மாநிலம் கொண்டிட வள்ளியும் உவந்திட திருவள்ளுவரின்
தெய்வமா மறையின் பெருவளக் குறள்சில பேணிப் படித்தேன்'

(வ.உ.சி. சுயசரிதை, ப. 40)

என்று குறிப்பிடுகிறார். திருக்குறளின் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றிற்கும் உரை எழுதி இருப்பினும் அறத்துப்பாலுக்கான விருத்தியுரை மட்டுமே வெளிவந்துள்ளது. வ.உ.சி. யின் திருக்குறள் அறத்துப்பால் விருத்தியுரையின் சிறப்புகளைப் பற்றி இந்தக் கட்டுரை அமைகின்றது.

திருக்குறள் - மணக்குடவர் உரை:

திருக்குறள் மீது மிகுந்த ஈடுபாடு கொண்ட வ.உ.சி. திருக்குறளுக்கான மணக்குடவர் உரையைப் பதிப்பிக்கத் தொடங்கினார். மணக்குடவர் உரையை பதிப்பித்ததைக் குறித்து, 'உசிரெல்லாம் நிறைந்து விளங்கும் செந்தமிழ் நூல்களில் சிறந்தது திருக்குறள் என்று வழங்கும் வள்ளுவர் நூல், தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிமேலழகர், பருதி, திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர் வள்ளுவர் நூற் கெல்லை

உரை எழுதினார். அப்பதின்மர் உரைகளில் தற்காலம் தமிழ்நாட்டில் பயின்று வழங்குவது பரிமேலழகருரை ஒன்றே. அவ்வுரையைச் சிலவருடங்களுக்கு முன்னர் யான் படிக்கத் தொடங்கினேன். அப்பொழுது மற்றைய ஒன்பதின்மர் உரைகளையும் பார்க்க வேண்டுமென்னும் அவா எனக்கு உண்டாயிற்று. அம்முயற்சியின் பயனாக எனக்கு கிடைத்தவை மணக்குடவர் உரைப் பிரதி ஒன்று' (திருவள்ளுவர் திருக்குறள் மணக்குடவருரை - அறத்துப்பால் (பதிப்புரை).பதிப்புரையில் வ.உ.சி. அவர்கள் கூறியிருப்பதன் மூலமாக திருக்குறள் மீது வ.உ.சி. கொண்ட பற்றினை அறிந்துகொள்ள முடிகின்றது. 1917 ஆம் ஆண்டில் இந்நூல் வெளியிடப்பட்டது.

இயல் பாகுபாடு:

அறத்துப்பாலுக்கு உரை வகுக்கும் போது இயல்களைப் பகுப்பதில் பரிமேலழகர் உரையில் இருந்து வ.உ.சி. வேறுபடுகின்றார். அறத்துப் பாலை பாயிரம், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் எனப் பரிமேலழகர் நான்காகப் பகுத்திருக்க வ.உ.சி. அதனைப் பாயிரம், இல்லறவியல், துறவறவியல், வீட்டியல், ஊழியல் என்னும் ஐந்து இயல்களாகப் பகுத்துள்ளார். 'வீடு இல்வாழ்வார், துறந்தார் ஆகிய திறத்தார்க்கும் உரியதாகலானும், அறத்துப்பாலில் 'வீட்டியல்' என ஓர் இயல் உண்டென்று யான் கேட்டிருக்கின்றமையானும், 'நிலையாமை' முதலிய நான்கு அதிகாரங்களும் வீட்டியலிற்குரியவனவாகலானும், அவற்றை 'வீட்டியல்' என்னும் ஓர் இயலாக அமைத்துள்ளார்', (வ.உ.சிதம்பரனார், திருக்குறள் - அறத்துப்பால், விருத்தியுரை, உரைப் பாயிரம், ப.7) என வீட்டியல் என்னும் புதிய இயலைத் தாம் வகுத்தமைக்கு வ.உ.சி. விளக்கம் தருகின்றார். இவ்வாறு இயல் அமைப்பு முறையிலே வ.உ.சி. வேறுபட்டுக் காணப்படுவதை அறிய முடிகின்றது.

பாட வேறுபாடு காணல்:

பலநூற்றாண்டுகளாகச்சுவடிகளில்எழுதிக்கற்றுவந்தகாரணத்தினால் நூல்களில் பாட வேறுபாடுகளும் மிகுதியாகின. அதேபோன்று வ.உ.சி. திருக்குறள் உரையிலும் சில குறள்களுக்கு பாடவேறுபாடு கொண்டு உரை எழுதியுள்ளார்.

'தகுதி யெனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட் டொழுகப் பெறின்' *(குறள்.111)*

பிறர்க்குச் செய்ய வேண்டிய கடமைகளை நடுவாக நின்று செய்யின், அந்நடுவுநிலைமை ஓர் அறமாம் என்னும் கருத்தமைந்த குறளில் 'பகுதியால்' என்னும் சொல்லை 'பகுதியார்' என்று வ.உ.சி. குறிப்பிடுகிறார். உற்றார், நண்பர், நொதுமலர்,பகைவர் ஆகிய நான்கு பகுதியினர் என்னும் பொருள் அமைந்த அச்சொல் முந்தைய உரையாசிரியர்களால் பகுதியால் என்று குறிப்பிடப்படுகிறது.அதற்கு வ.உ.சி. கூறும் பாடவேறுபாடு விளக்கம்,

'வேண்டுவதாய் ஆர் விகுதியை விடுத்து வேண்டாததாய் ஆல் உருபை அல்லது அசையை ஆசிரியர் சேர்க்க மாட்டாராகலானும் பகுதியால் என்பது ஏடுபெயர்த்தெழுதியோனால் நேர்ந்த பிழையெனக் கொள்க' (வ.உ.சி. அறப்பால் விருத்தியுரை. ப. 65-66) என்று பாடவேறுபாட்டினை வ.உ.சி. கூறுகின்றார்.மேலும்,

'பெற்றாற்பெ றிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு' (குறள். 58)

கணவனைப் போற்றிக் கடமையைச் செய்யப்பெற்றால் மகளிர் பெரிய சிறப்பை உடைய மேல் உலக வாழ்வைப் பெறுவர் என்பது இக்குறளின் பொருளாகும். இக்குறளில் இடம்பெறும் 'பெற்றார் பெறிற்' என்னும் வார்த்தைக்கு பாடபேதம் காணும் உரையில் 'பழைய ஓலை ஏடுகளில் உயிர்மெய் எகரமும், உயிர்மெய் ஏகாரமும் உயிர்மெய் எகரமாகவே எழுதப்பட்டிருத்தலையும், ணி கரம் சுழிகள் இல்லாமல் றிகரம் போல எழுதப் பட்டிருத்தலையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆதலான், ஏடு பெயர்த்தெழுதியோன் 'பெற்றார்பே ணிற்பெறுவர்' என்பதிலுள்ள பேகாரத்தைப் பெகரமாகவும், ணிகரத்தை றிகரமாகவும் படித்தெழுதியதால் 'பெற்றார் பெறின்' என்ற பிழைப்பாடம் ஏற்பட்டதெனக் கொள்க'(வ.உ.சிதம்பரனார்பரம்பிள்ளை,திருக்குறள்-அறத்துப்பால்,விருத்தியுரை,உரைப்பாயிரம், ப.134-135) என்று பாடபேதம் காணுவதை இங்கு காண முடிகிறது.மேலும் பல குறட்பாக்களில் வ.உ.சி. யின் உரையில் பாடவேறுபாடு காணப்படுகிறது.

'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று'(குறள்.108)

இக்குறட்பாவில் வருகின்ற 'நன்றி' என்ற சொல்லை 'நன்று' என்று வேறுபடுத்திக் காட்டியிருப்பார். வ.உ.சி. அதற்கு விளக்கம் தருகையில், 'அன்று என்பது ஆகுபெயர், அப்பொழுதிற்கு ஆயினமையால், முந்திய உரையாசிரியர்கள் பாடம் 'நன்றி மறப்பது' நான்காம் சீரில் நன்றல்லது எனக் கூறியிருத்தலான், முதற் சீரில் நன்று என்றே ஆசிரியர் கூறி யிருப்பர்' (வ.உ.சிதம்பரம்பிள்ளை, திருக்குறள்-அறத்துப்பால், விருத்தி யுரை, உரைப்பாயிரம்,ப.163) என்று பாடவேறுபாட்டுடன் பொருள் தருகின்றார்.

புதிய உரை தருதல் :

வ.உ.சி. அவர்கள் திருக்குறள் விருத்தியுரையில் உரை எழுதும் பொழுது சில குறட்பாக்களுக்குப் புதிய விளக்கத்தினையும் தருகின்றார்.

'அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்' (குறள்.71)

என்ற குறளுக்கு பரிமேலழகர் உரையில் 'அன்பினையும் அடைக்கும் தாழ் உளதோ? அன்புடையார் மாட்டு உளதாகிய புல்லிய கண்ணின் நீர்தானே ஆரவாரத்தை தரும்' (மணக்குடவர் உரை ப.31) என்று பொருள் தருகின்றார். வ.உ.சி. யின் திருக்குறள் உரையில் 'அடைத்து வைக்கும்

கதவு அன்பிற்கும் உண்டோ? அன்பு செய்யப்பட்டாரது துன்பம் அக்கதவைப் பிளக்கும் தாக்குதலை உண்டாக்கும்' (வ.உ.சிதம்பரனார், திருக்குறள் - அறத்துப்பால், விருத்தியுரை, உரைப்பாயிரம்) என்று பொருள் கூறுகின்றார். இவ்வாறு பழைய உரையில் இருந்து வேறுபட்டுப் புதிய உரையினைத் தருகின்றார்.

இலக்கிய மேற்கோள்கள் காட்டுதல்:

வ.உ.சி. திருக்குறளுக்கு உரை எழுதும் பொழுது குறள் கருத்து களுடன் ஒன்றிப்போகும் பிற இலக்கியக் கருத்துக்களை மேற்கோளாகக் காட்டியிருத்தல் அவரது நூல் பயிற்சியினையும், உரைத்திறத்தையும் உணர்த்துகின்றது. விருந்தோம்பல் அதிகாரத்தில் இடம்பெறும் 'மோப்பக் குழையும்' என்ற குறளுக்கு விருந்தினை முகந்திருந்து நோக்காது மகிழ்வுடன் ஏற்க வேண்டும் என்னும் குறள் விளக்கத்தைக் கூறி,

'ஒப்புடன் முகம லர்ந்தே யுபசரித்துண்மை பேசி
யுப்பிலாக் கூழிட் டாலு முண்பதே யமிர்த மாகு
முப்பழ மொடுபா லன்ன முகங்கடுத் திடுவா ராயின்
கப்பிய பசியும் போகிக் கடும்பசி யாகுந் தானே.'

என்னும் விவேக சிந்தாமணி பாடலை மேற்கோள் காட்டி, மலர்ந்த முகத்தோடு விருந்தினரை உபசரிக்க வேண்டும்' (வ.உ.சிதம்பரனார், திருக்குறள்-அறத்துப்பால், விருத்தியுரை, உரைப்பாயிரம், ப.154) என்ற கருத்தையும் விளக்குகிறார். மேலும், செய்ந்நன்றியறிதல்' என்னும் அதிகார விளக்கத்தில், 'தினைத்துணை நன்றி செயினும்' என்ற குறளுக்கு, மிகச்சிறிய உதவியாக இருந்தாலும், அதன் பயனை உணர்ந்தவர்கள் அதனைப் பனைமரம் போன்று கருதுவார்கள் என்ற பொருளுக்கு,

'தினையனைத்தே யாயினும் செய்தநன் றுண்டால்
பனையனைத்தா உள்ளுவர் சான்றோர்; - பனையனைத்து
என்றும் செயினும் இலங்கருவி நன்னாட!
நன்றில நன்றறியார் மாட்டு.'

(வ.உ.சிதம்பரம்பிள்ளை,திருக்குறள்-அறத்துப்பால்,விருத்தியுரை, உரைப்பாயிரம்,ப. 161)

என்ற நாலடியார் பாடலை மேற்கோள் காட்டி உரை எழுதுகின்றார். இவ்வாறு உரை எழுதும் தன்மையில் இலக்கிய மேற்கோளைக் காட்டுவதில் இருந்து வ.உ.சி.யின் உரை எழுதும் திறத்தையும், இலக்கியத்தின் மீது அவர் கொண்ட பற்றினையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்பப் பொருள் தருதல் :

வ.உ.சி. திருக்குறளுக்கு உரை எழுதுகையில் பழைய உரைகளைத் தவிர்த்து நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்ற உரையினைத் தருகின்றார்.

'தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று' *(குறள்.236)*

என்ற குறளுக்கு 'தோன்றல் என்பதற்கு பிறத்தல் என்று பொருள் உரைப்பாரும் உளர். பிறத்தலும் பிறவாதிருத்தலும் ஒருவன் விருப்பப்படி நிகழ்வன அல்ல. அவன் முன்வினைப்படியே நிகழ்வன' (வ.உ.சிதம்பரம்பிள்ளை,திருக்குறள்-அறத்துப்பால்,விருத்தியுரை,உரைப் பாயிரம்,ப.225) என்று நிகழ்காலத் தன்மைக்கேற்ப பொருள் தருகின்றார்.

'கெடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும்' *(குறள்.166)*

என்ற குறளுக்கு, 'பிறர் கொடுப்பதைக் கண்டு பொறாமைப்படுபவன் தன் ஆக்கத்திற்கு ஆதாரமாகிய சுற்றத்தையும் தன் உடையையும், உணவையும் இழப்பான் என்று பொருள் கூறுகின்றார். இதன் மூலம் கொடுப்பது அழுக்கறுப்பானுடைய சுற்றம் உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடும் என்று பொருள் கூறும் பிற உரை யாசிரியர்களிடமிருந்து வ.உ.சி. வேறுபடுகின்றார்'. (வ.உ.சிதம் பரனார், திருக்குறள்-அறத்துப்பால், விருத்தியுரை, உரைப்பாயிரம்,ப.192)

முடிவுரை:

அனைவரும் படிப்பதற்கேற்ற நிலையில் எளிமையான உரை எழுத வேண்டும் என எண்ணி திருக்குறளுக்கு விருத்தியுரை எழுதத் தொடங்கினார். திருக்குறள் அறத்துப்பாலிற்கு மட்டும் இவரது விருத்தி யுரை வெளியாகியுள்ளது. இயல் பாகுபாடு, அதிகார வைப்பு, அதிகாரப் பெயர், குறள் வைப்புமுறை ஆகியவற்றில் வ.உ.சி. புதுமை புகுத்தியுள்ளார்.

இயல்பாகுபாட்டில் வீட்டியல் என்னும் புதிய இயலை வ.உ.சி. வகுத்துள்ளார். இயல் பாகுபாட்டில் தொடங்கி இலக்கிய மேற்கோள் காட்டும் திறம் வரையிலும் வ.உ.சி. யின் உரைத்திறத்தையும், திருக்குறள் மீது அவர் கொண்ட பற்றினையும், இலக்கியத்தின் மீது அவர் கொண்ட ஈடுபாட்டினையும் அறிந்து கொள்ள முடிகின்றது. மேற்கண்ட தகவல்கள் அல்லாமல் வ.உ.சி. யின் திருக்குறள் விருத்தியுரையில் எண்ணற்ற தகவல்கள் கிடைக்கின்றன. வ.உ.சி. யின் திருக்குறள் உரையின் சிறப்புகள் சிலவற்றை மட்டும் இக்கட்டுரையின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

பயன்படுத்திய நூல்கள்:

1. அரசு.மா.ரா.- இந்திய இலக்கியச் சிற்பிகள் வ.உ.சிதம்பரனார், சாகித்திய அகாதெமி, புதுதில்லி. 2005.
1. சங்கர வள்ளிநாயகம். அ- வ.உ.சி. வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,சென்னை, 1994.
1. வ.உ.சி.-சுயசரிதை, முல்லைப் பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை, 1946.
1. வ.உ.சிதம்பரம்பிள்ளை-திருவள்ளுவர் திருக்குறள் மணக்குடவருரை அறத்துப்பால், K.R.Press, Madras, 1917.
1. வ.உ.சிதம்பரம்பிள்ளை-திருக்குறள் அறப்பால் விருத்தியுரை, வ.உ.சி. நூலகம்,சென்னை, 2013.

33

சிவஞானபோதம்: வ.உ.சி.யின் உரையும் இலக்கணக் குறிப்பும்.

ச. விக்னேஷ்
(சைவ சித்தாந்தப் புலவர்) முதுகலைத் தமிழாசிரியர்,
பெஸ்ட் இண்டர்நேஷனல் பள்ளி, கடையநல்லூர்.

முன்னுரை:

தமிழகம் தந்த மாமனிதர் வ.உ.சி. பன்முகத் திறமைகள் அவரிடம் மிளிர்ந்தன. கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் என்று இரண்டு தொடர்களைச் சொல்லி அவருடைய ஆளுமையை ஒரு சிமிழுக்குள் அடக்கி விடுவதுதான் இன்று வழக்கத்திலிருந்து வருகிறது. இவை மரியாதைக்குரிய பட்டங்கள்தாம் எனினும் வ.உ.சி. யின் முழுப்பரிமாணத்தையும் ஓரளவு மறைக்கவும் இவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சிவஞான போதம்:

சைவ இலக்கியம் என்ற வகையில் மெய்கண்டார் (கி.பி. 1232) முதல் இடத்தைப் பெறுகிறார். இன்றைய சைவ சித்தாந்த மரபைத் தோற்றுவித்த பெருமை இவரையே சாரும். இவர் இயற்றிய ஒரே நூல் சிவஞான போதம் ஆகும். இவர் நடுநாடாகிய திருமுனைப்பாடி நாட்டில் திருப்பெண்ணாடத்தில் பிறந்தார். கயிலாயத்தில் சிவஞான உபதேசம் பெற்று, பரஞ்சோதி முனிவர் வானவீதியில் சென்றபோது, மெய்கண்டார், குழந்தையாக வீதியில் விளையாடிக் கொண்டிருந்தார். பரஞ்சோதி முனிவர் அக்குழந்தையிடம் வந்து, தான் பெற்ற சிவஞானத்தை அதற்கு உபதேசம் செய்தார். சிவஞானம் பெற்ற மெய்கண்டார் சிவஞானபோதம் என்ற நூலை இயற்றினார். இதுவே தமிழில் வெளிவந்த முதல் சித்தாந்த சாத்திர நூல். மெய்கண்டாரிடம் 49 மாணாக்கர் இருந்ததாகக் கூறுவர். தமக்குப்பின் சிவஞானத்தைப் பரப்பி, சைவ ஆசாரிய பரம்பரையை வளர்த்துவர அருணந்தி சிவாசாரியாரைப் பணித்துவிட்டு மெய்கண்டார் இறைவன் திருவடியடைந்தார். சிவபெருமானைப் பற்றிய ஞானத்தை நமக்குப் போதிக்கும் (உணர்த்தும்) நூல் சிவஞானபோதம் எனப்படும். சிவஞானபோதம் நூற்பாக்களால் ஆகிய 12 சூத்திரங்களும் (40 வரிகள்), பொல்லாப்பிள்ளையார் வணக்கம், அவையடக்கம் என்ற இரு பாடல்களும் கொண்டது. இரண்டு அதிகாரங்கள், நான்கு இயல்கள், பன்னிரண்டு சூத்திரங்கள் என இந்நூல் பகுக்கப்பட்டுள்ளது. சிவஞான போதம் நூலுக்குப் பல உரைகள் தோன்றியுள்ளன. சிவஞான போதத்தைத் தொடர்ந்து இக்காலப் பகுதியில் தோன்றிய பிற சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் சிவஞான சித்தியார், இருபா இருபஃது ஆகும். இவை இரண்டுமே அருணந்தி சிவாசாரியாரால் எழுதப்பட்டதாகும்.

இவர் சிவாசாரியார் மரபில் வந்தவர். இவர் மெய்கண்டாரின் மாணவர் ஆவார்.

சிவஞானபோதமும் உரைகளும்:

இந்நூல் மெய்கண்டாரால் இயற்றப்பெற்றது; பொதுக் காலம் 13ஆம் நூற்றாண்டினது ;பொல்லாப் பிள்ளையார் வணக்கம், அவையடக்கம் நீங்கலாகப் பன்னிரண்டு நூற்பாக்கள் கொண்டது; 40 அடிகளால் ஆகியது; மெய்கண்டார் செய்ததாகக் கருதுமாறு அமைந்த 39 அதிகரணங்கள், 81 வெண்பாக்கள் ஆகியவற்றைக் கொண்டது; மெய்கண்டசாத்திர மரபின் முதனூல்; வ.உ.சி. யும் சித்தாந்த நூல்களில் ஒப்புயர்வற்றது (ப.49) என்று கருதுகிறார். சிவஞானபோதத்திற்குப் பதினேழாம் நூற்றாண்டில் பாண்டிப் பெருமாள் இயற்றிய உரையே பழைமையானது; வேறு சிலவும் உண்டு; பதினெட்டாம் நூற்றாண்டில் எழுந்த சிவஞான முனிவர் உரை புகழ்வாய்ந்தது; இருபதாம் நூற்றாண்டில் - வேதாந்தம், பிரம்ம ஞானம் முதலிய நோக்குடையவை உட்பட - உரைகளாகவும் உரைவிளக்கங்களாகவும் பல நூல்கள் எழுந்தன.

சிவஞான போதச் சிற்றுரையும் வ. உ. சி.யின் உரையும்:

வ.உ.சி.யே தாம் திராவிட மாபாடியம் என்னும் சிவஞான முனிவரின் பேருரையைப் பின்பற்றித் தமது உரையை எழுதவில்லை என்றும், சிற்றுரையையே பயின்று எழுதியதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆகவே சிவஞான முனிவரின் சிற்றுரையில் இருந்து அவர் விலகி நிற்கும் இடங்களை மட்டும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கலாம். சிவஞான போதத்தின் முதற் செய்யுளுக்குச் சிற்றுரையில் 'மங்கல வாழ்த்து' என்றே முனிவர் தலைப்புத் தந்துள்ளார். ஏனெனில் சிவபெருமான் ஒருவனே இறைவன் என்று கொண்டபின் இடையூறு நேராமல் காக்கின்ற விநாயகர் என்ற தெய்வம் தனியாக ஒன்று உண்டு என்று கொண்டால் அது சைவ சித்தாந்தத்தின் ஒரே இறைவன் என்ற அடிப்படைக் கொள்கைக்கு முரண்பட்டதாகிவிடும். மெள்ளப் பல தெய்வம் கூட்டி வளர்த்து வெறும் கதைகள் சேர்த்ததாக முடியும். எனவே அதனை 'மங்கல வாழ்த்து' என்றே சித்தாந்திகள் குறிப்பிட்ட னர். வ.உ.சி.யோ அப்பாடலின் தலைப்பைக் 'காப்பு' என்று குறித்தார். 'பொல்லாத பிள்ளையார் என்னும் பெயரை உடைய கணபதிப் பெருமானை' என்று 'அகல'த்தில் எழுதினார். 'கருத்து' என்ற தலைப்பில் கடவுள் வாழ்த்துக் கூறினார் என்று பொருள் எழுதினார்.

வ. உ. சி.யும் சைவருலகும் :

இந்திய தேசிய இயக்கம், தொழிலாளர் இயக்கம், நீதிக் கட்சி, சுயமரியாதை இயக்கம் எனத் தம் சமகால அரசியல் இயக்கங்கள் எல்லாவற்றுடனும் வ.உ.சி. தொடர்புகொண்டிருந்தவர்தான் எனினும், பொது வாழ்க்கையில் சைவருலகோடு இடையறாத ஈடுபாட்டை அவர் கொண்டவராய் இருந்திருக்கிறார்.

1872-இல் இன்றைய தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரத்தில் பிறந்த வ. உ. சி., 1898-இல் காங்கிரஸ் இயக்கத்தோடு தொடர்பு கொண்டிருந்தார் எனத் தெரிகிறது. ‘எனினும், அவரது ஆரம்பகட்டப் பொதுவாழ்க்கை சைவத்தோடு இணைந்திருந்திருக்கிறது. சைவக் கோலத்தில் பல அன்பர்களோடு சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் ஒன்றும் இந்தக் காலப்பகுதியில் காணக்கிடைக்கின்றது.

1900-இல் ஓட்டப்பிடாரத்திலிருந்து தூத்துக்குடி நகருக்குக் குடி பெயர்ந்த வ. உ. சி., அங்கு சைவ சித்தாந்த சபையுடன் நெருங்கிய உறவு வைத்துக் கொண்டிருந்தார்.

சிவஞானபோதம் - வ. உ. சி. உரை:

வ. உ. சி. ஏனைய உரைகளிற் காணும் பிறமதக் கண்டனங்கள், மூலம் தமிழா? வடமொழியா? என்னும் சர்ச்சை ஆகியன தவிர்த்து, சிவஞான போதத்தின் வழி, சித்தாந்தமும் வேதாந்தமும் ஒன்றே என்னும் சமரச நிலையெய்தி, எளிய நடையில் சிறிய அளவில் இவ்வுரையை எழுதியிருப்பதாக உரைப் பாயிரத்தில் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

வ. உ. சி.யின் சமரச நிலைப்பாடு விடுதலைப் போராட்டக் காலத்தின் விளைவு எனலாம் : மத வேற்றுமையைக் காண்பவர்களும் பேசுபவர் களும் ‘யான்‘, ‘எனது‘ என்னும் மத வெறிபிடித்த மாக்களேயென்றும், நமது நாடு தற்காலம் இருக்கிற ஒற்றுமையற்ற நிலைமையில் மத வேற்றுமைகளையோ, சாதி வேற்றுமைகளையோ, வேறு வேற்றுமைகளையோ காண்பவர்களும் பேசுபவர்களும் தேசத்திற்குத் தீங்கிழைப்பவர்களே என்றும் யான் கருதுகின்றேன். அதனாலும், இவ்வுரையில் யான் பல மதக் கோட்பாடுகளையும், அவற்றின் பொய்யான உயர்வு தாழ்வுகளையும் பற்றி ஒன்றும் பேசவில்லை.

பொருள்கோள்: [அவையே தானேயாய் என்னும் தொடரை]

பொருட் பொருத்தம் பற்றித் ‘தானே அவையேயாய்‘ என்று கொண்டுகூட்டிப் பொருள் உரைக்கப்பட்டது என்கிறார் வ. உ. சி. இரட்டுற மொழிதல் என்னும் உத்தியால், அவையேயாய், வேறுமாய், உடனுமாய் என்று பொருள் கொள்கிறார் சிவஞான முனிவர். ‘இலது என்றல்‘ முதலிய ஐந்து செயல்களால் மாயா இயந்திரதனுவினுள் ஆன்மா உளது என்று கொண்டு கூட்டிப் பொருள் உரைக்கப்பட்டது என்கிறார் வ. உ. சி. [‘உளது‘ என்று தொடங்கி ‘ஆன்மா‘ என முடியும்] ‘இது பூட்டுவிற் பொருள்கோள்‘ என்பர் முனிவர். இது பொருத்தமானது.‘ தம்முதல் குருவுமாய் ‘ என்னும் தொடரைத் தம் முதல் , தம் குருவுமாய் எனக் கொண்டு , தமது இறைவன் தமது குருவுமாகி என்று பொருள் கூறித் ‘ தம் என்பது குருவுடனும் கூட்டி உரைக்கப்பட்டது. என்று குறிப்புத் தருகிறார் வ. உ. சி.

வேற்றுமைத்தொகை:

மலத்துளதாம் என்னும் தொடருக்கு ‘மலங்களால் உளதாகும்‘ எனப்பொருள் கூறி, ‘மலம் என்பது மூன்றாம் வேற்றுமைத்தொகை என்று

குறிப்புத் தருகிறார் வ.உ.சி. இதுவும் முனிவரை வழிமொழிந்ததேயாம். எனினும்வ.உ.சி.இன்னவேற்றுமைஎனச்சுட்டித்தெளிவுபடுத்தியுள்ளார். ‘அவை சந்தித்தது ‘ என்னும் தொடருக்கு (ஆன்மா, அந்தக்கரணமாகிய மனம் முதலியவற்றுள் ஒன்றன்று) அவற்றொடு கூடியது என்று பொருள் கூறி, அவை என்பது மூன்றாம் வேற்றுமைத் தொகை எனக் குறிப்புத் தருகிறார் வ.உ.சி. சற்றே வேறு சொற்களால் இவ்வாறே பொருள் கொண்ட முனிவர், ஒடுவுருபு விகாரத்தாற்றொக்கது; இரண்டாவது விரிப்பினும் அமையும் என மற்றொரு வாய்ப்பும் தருகிறார். எளியவுரை யில் ஒன்றைக் குறித்தால் போதும் என்று வ.உ.சி. கருதியிருக்கலாம்.

வழக்கு: அறிய முடியாத காரணத்தால் வந்ததை மாயையால் வந்தது எனக்கூறுவது வழக்கு , அறிவினைக் கண் என்று கூறுவது வழக்கு. உதாரணம் – அகக்கண் எனச் சிலவற்றுக்கு வழக்கு எனக் குறிப்புத் தந்துள்ளார் வ.உ.சி.

வினைத்தொகை: உணர் உரு = சுட்டி அறியும் சொரூபம் எனப் பொருளுரைத்து, உணர் என்பது வினைத்தொகை என்று குறிப்புத் தருகிறார் வ.உ.சி. உணரும் உரு என்று விரித்துக்கொள்ள வேண்டும்.

முடிவுரை:

‘அவையே தானேயாய், இருவினையின், போக்கு வரவு புரிய ஆணையின் நீக்கமின்றி நிற்கும் அன்றே‘ வ.உ.சி. யின் உரை, சைவ சித்தாந்தத்தைப் புரிந்துகொள்ள விரும்புவோருக்கும், வ.உ.சி.யின் பன்முகப் பங்களிப்பை அறிய விரும்புவோருக்கும் ஒரு முக்கியமான ஆதாரமாகத் திகழ்கிறது. தமிழ் மறுமலர்ச்சி இயக்கக் காலத்திலும், வ.உ.சி.யின் அரசியல் பணிகளுக்கு மத்தியிலும் அவர் ஆன்மிகத்தில் கொண்டிருந்த ஈடுபாட்டைக் காட்டுகிறது.

ஆய்விற்கு துணைநின்ற நூல்கள்:

1. சிவஞான போதம் ஆசிரியர்: சிதம்பரம் பிள்ளை, வ. உ., வ. உ. சி. நூலகம், சென்னை, 2004
2. வ.உ.சி.யின் சிவஞான போத உரை - ஆ.இரா. வேங்கடாசலபதி, வ.உ.சி. சமூக அறிவியல் நிறுவனம், தூத்துக்குடி, 1999.
3. வீர சிதம்பரனார் - இராமய்யா பிள்ளை, நா., கல்வி நூற் பதிப்பகம், மதுரை,
4. https://tamildigitallibrary.in/voc
5. வ.உ.சி., சிவகாமி பப்ளிசிங் ஹவுஸ், 1960.

34

திருக்குறள் இன்பத்துப்பால் உரை: ‘வ.உ.சி.யும் பரிமேலழகரும்‘

ரா. லஷ்மன்
முத்துக்கருப்பன் நினைவு கல்வியியல் கல்லூரி, சில்லாங்குளம், தூத்துக்குடி மாவட்டம்.

ஆய்வுச் சுருக்கம் :

திருக்குறள், உலகப் பொதுமறை, பொய்யாமொழி என பல பெயர்களில் அழைக்கப்படும் ஒரு அறநூல். மக்களை அறவழியில் செல்ல வலியுறுத்தும் ஒரு தெய்வநூல் திருக்குறள். மக்கள் வாழ்க்கை முறையான அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றின் அடிப்படையில் அமைந்த நூல். இந்த நூலுக்கு பல உரையாசிரியர்கள் உரை எழுதியுள்ளனர். அதில் புகழ் பெற்ற உரை ‘பரிமேலழகர் உரை‘ மற்றும் ‘வ.உ.சி. யின் திருக்குறள் மணக்குடவர் உரை‘ இந்த இரண்டு உரைகளிலும் சில கருத்துகள் ஒற்றுமையுடனும் சில கருத்துகளை ஒருவரையொருவர் மறுத்தும் விளக்க உரை கொடுத்துள்ளனர். இவ்விருவருக்கிடையேயான உரை ஒப்பீட்டை இக்கட்டுரையில் காண்போம்.

முன்னுரை:

திருக்குறளுக்கு உரைஇயற்றியவர்கள்பலர்.அதில்முக்கியமானவர்கள் காலிங்கர், மணக்குடவர், பரிமேலழகர், பரிதி, பரிப்பெருமாள், தருமர், நச்சர், தாமத்தர், மல்லர், காரி போன்றோர் திருக்குறளுக்கு உரை இயற்றியுள்ளனர். இதில் ஐவரின் உரையே முழுமையாகக் கிடைத்துள்ளது. மணக்குடவரே முதன்முதலில் திருக்குறளுக்கு உரையெழுதியுள்ளார். பரிமேலழகரின் உரை பிற்காலத்தில் தோன்றியிருந்தாலும் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகின்றது. வ.உ.சி தனது உரை ஆய்வின் போது இந்த பரிமேலழகரின் உரைத் தன்மை கடினமாக இருந்ததால் எளிய உரையாக இருந்த மணக்குடவர் உரையை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டார். பரிமேலழகரின் உரையினை மறுத்து மற்ற உரையிலிருந்து உரை விளக்கங்களை பெற்றுக் கொண்டு தனது திருக்குறள் உரைக்கு விளக்கம் கொடுத்தார். வ.உ.சி., பரிமேலழகர் உரையை மறுத்து திருக்குறளுக்கு உரையெழுதிய காரணத்தையும், இன்பத்துப்பாலில் அக ஒழுக்கத்தைப் பற்றி வ.உ.சி. பரிமேலழகரின் விளக்கத்தை மாற்றி கூறியதை பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

திருக்குறள் - இன்பத்துப்பால் :

இன்பத்துப்பால் என்பது காதல், இன்பம், காமம் ஆகியவற்றை விளக்கும் மூன்றாவது பாலாகும். இதில் களவியல் மற்றும் கற்பியல் என இரண்டு இயல்கள் உள்ளன. களவியல் (தலைவன் தலைவியின் இரகசியக் காதல்) கற்பியல் (களவு வெளிப்பட்டு திருமணம் ஆனபின்

காதல்) திருக்குறளின் இன்பத்துப்பாலில் மொத்தம் 25 அதிகாரங்கள் உள்ளன. இந்த அதிகாரங்களின் அகப்பொருளாக தலைவன் தலைவியின் புணர்ச்சி, ஊடல், பிரிவின் வருத்தம் போன்ற தலைவன் தலைவியின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

மனித வாழ்வின் ஒரு அங்கமான காமத்தையும், அதன் மூலமாக விளையும் இன்பத்தையும், அகவாழ்க்கை முறையையும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது திருக்குறளின் இன்பத்துப்பால் பகுதி.

'நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்' *(1111)*

'அனிச்சப்பூவே, நீ வாழ்வாயாக! உன்னை விட மென்மையானவளாய் எங்களால் விரும்பப்படுபவள் இருக்கிறாள்' என்று தலைவன் தலைவியின் மென்மையை வருணிக்கிறான்.

திருக்குறள் இன்பத்துப்பால் பகுதியில் பரிமேலழகரின் சில பொருள் விளக்கங்களை வ.உ.சி. மறுத்து கூறியுள்ளார். சில குறள்களுக்கு மணக்குடவர் உரையில் பொருள் இல்லாத நிலையில் தனக்கே உரிய தனி அமைப்பில் பொருள் கொடுத்துள்ளார். இவரின் பொருள் அனைத்தும் மக்கள் புழக்கத்தில் வழங்கும் சொற்களால் எளிய நடையில் அமைந்திருந்தது.

பரிமேலழகரும், உரையின் தன்மையும் :

பரிமேலழகர் கி. பி. 13ம் நூற்றாண்டை சேர்ந்தவர். வைணவ சமயத் தைச் சேர்ந்தவர். தமிழ் மொழியில் இலக்கிய, இலக்கணங்களையும், வட மொழியில் இலக்கிய, இலக்கண நூல்களையும் ஐயந்திரிபற முற்றும் தெளிவுறக் கற்றறிந்தவர். இவர் திருக்குறளுக்கு இறுதியாக உரை செய்தவர். ஏனென்றால் இவரின் திருக்குறள் உரையில் இவருக்கு முன்னதாக உரை செய்த உரையாசிரியர்கள் பற்றி விளக்கங்கள் காணப்படுவதால் அவர்கள் காலத்திற்கு பிறகு வாழ்ந்தவர் என அறிஞர்கள் கூறுகின்றனர். இவருடைய குறளுரையில் இலக்கண அமைதியைச் செம்மையுற கூறிச் செல்வார். இவர் சமயவியல், தருக்கவியல், மருத்துவ இயல், பொருளியல், வாழ்வியல், உளவியல் இசையியல் என பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்றவர் என்பதை இவரின் உரை விளக்கங்கள் நமக்கு தெளிவுபடுத்துகின்றது.

இவரின் குறள் உரைகள் அனைத்தும் இலக்கணம், இலக்கியம், பொருள் ஆழம் தோன்ற சிறப்புடையதாக அமைந்திருக்கும். சில குறள்களுக்கு உண்மைப் பொருள் விளக்கத்திற்கு எந்த வகையிலும் பொருந்தாத கருத்துகள் சில கூறியுள்ளார். இவரின் குறள் விளக்கம் முழுமையும் இலக்கண முறைப்படி அமைந்ததால் பாமர மக்கள் அதனை கற்றறிவது மிகவும் கடினம். இருந்தாலும் கூட இவரின் திருக்குறள் உரையே அனைவராலும் போற்றப்படக்கூடிய ஒன்றாக அமைந்துள்ளது. திருக்குறள் அதிகார வைப்பு முறை இவரின் உரை பின்பற்றியே வைக்கப்படுகின்றது. திருக்குறளில் அகப்பொருள் மரபுகளையும்

இலக்கண விதிகளையும் அடிப்படையாகக் கொண்டு தலைவன் தலைவி இடையேயான காமத்துப்பால் (இன்பத்துப்பால்) அதிகாரங்களை நுணுக்கமாக விளக்கியுள்ளார் பரிமேலழகர்.

'இன்பங் கடன்மற்றுக் காம மஃ்தடுங்காற்
றுன்ப மதனிற் பெரிது' *(1166)*

காமம் புணர்வால் இன்பம் செய்யுங்கால் அவ்வின்பம் கடல்போலப் பெரிதாம், இனி அதுதானே பிரிவால் துன்பம் செய்யுங்கால், அத்துன்பம் அக்கடலினும் பெரிதாம்.

மற்று வினை மாற்றின் கண் வந்தது அடுங்கால் என வந்தமையின், மறுதலையெச்சம் வருவிக்கப்பட்டது. பெற்ற இன்பத்தோடு ஒத்துவரின் ஆற்றலாம். இஃ்து அதனது அளவன்று.

இவ்வாறு பரிமேலழகரின் உரைவிளக்கம் முழுவதும் இலக்கண இலக்கிய முறைப்படி பொருள் ஆழத்துடன் அமைந்திருக்கும்.

வ. உ. சி. யும், உரையின் தன்மையும் :

இவர், 1872-ல் பிறந்தார். நம் இந்திய நாட்டிற்காக சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டவர். புகழ் பெற்ற வழக்கறிஞர். முதன் முதலில் இந்தியாவிற்காக கப்பல் நிறுவனத்தையும் தோற்றுவித்தவர். சில காலம் சிறைக் கைதியாகவும் இருந்தார். கடும் தண்டனைகளை அனுபவித்தார். சிறையில் இருக்கும் பொழுது இலக்கியங்கள் மீது கொண்ட ஆர்வத்தினால் சில நூல்களுக்கு உரை எழுதினார். இவர் போராட்ட வீரர் மட்டும் அல்ல சிறந்த எழுத்தாளர், பதிப்பாசிரியர், உரையாளர் என்பதை விளக்கிக் காட்டும் நூலாக அமைந்தது திருக்குறள் மணக்குடவர் உரை. இவர் திருக்குறளில் முதன்மை பதிப்பான மணக்குடவர் உரையை ஆய்வு செய்து நேரடியாக இல்லாமல் திருக்குறள் மணக்குடவருரை என்ற பெயரில் திருக்குறளுக்கு உரை எழுதினார்.

இவர் திருக்குறள் உரை கண்ட பத்தில் எளிமையாக அமைந்த மணக்குடவருரையை பதிப்பித்தார். கடின இலக்கண நடையில் அமைந்த புகழ் பெற்ற பரிமேலழகர் உரையை தவிர்த்து மற்றவர்களின் உரையை ஆய்வு செய்து தனக்கே உரிய தனிப் பாணியிலும் திருக்குறளுக்கு உரை செய்தார் வ.உ.சி. வ.உ.சி. யின் உரை முழுவதும் மக்கள் புழக்கத்தில் உள்ள சொற்களால் இயற்கையோடு இணைந்து காணப்பட்டது. அதனால், மணக்குடவர் உரை முதலில் பதிக்கப்பட்டாலும் வ.உ.சி. யின் திருக்குறள் உரையே முதன்மையானதாக கருதப்பட்டது. மணக்குடவர் உரை இன்பத்துப்பால் பகுதியில் சில குறள்களுக்கு உரை இல்லாத நிலையில் வ.உ.சி. தனது சொந்த உரையை அந்த குறளுக்கு ஏற்ற வகையில் அமைத்து விளக்கம் கொடுத்துள்ளார்.

'மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா
என்னல்லது இல்லை துணை' *(1168)*

இரவே! உலகிலுள்ள எல்லா உயிர்களையும் உறங்கச் செய்து விட்டு

இப்போது என்னையன்றி வேறு துணையின்றித் தனியாக இருக்கிறாயே!

தலைவி, தலைவனுடன் உறவாட முடியாமல் தனித்திருக்கும் இரவில், மற்ற உயிர்களெல்லாம் உறங்கும் போது, இரவும் தன்னைப் போலவே தனிமையாக இருப்பதைக் கண்டு, இரவை நோக்கி இரக்கப்பட்டுச் சொல்வது போல் அமைந்தது. இவ்வாறு இரவின் தனிமை யையும் தலைவியின் ஏக்கத்தையும் இவர் உரை மூலம் எளிமையாக எடுத்துரைக்கிறார்.

வ. உ. சி. மற்றும் பரிமேலழகரின் குறள் ஒப்பீடு :

வ.உ.சி., பரிமேலழகரின் குறள் உரையில் சிலவற்றை மறுத்தும், சிலவற்றை எளிமையாகவும், சிலவற்றை ஏற்றுக் கொண்டும் உரை இயற்றியுள்ளார். குறிப்பாக காமத்துப்பால் பகுதியில் சில இடங்களில் பரிமேலழகரின் உரை முற்றிலுமாக மறுக்கப்பட்டு மற்றவர்களின் உரையை முன் வைத்தார் வ. உ. சி.

ஒற்றுமை :

‘நெஞ்சத்தார் காதலவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து‘‘ *(1128)*

பரிமேலழகர் உரை : காதலர் எம் நெஞ்சினுள்ளார் ஆகலான் உண்ணுங்கால் வெய்தாக உண்டலை அஞ்சா நின்றோம் அவர் அதனாள் வெய்துறலை அறிந்து.

வ. உ. சி. உரை : எம் காதலர் என் நெஞ்சினில் இருக்கிறார். ஆகையால் சூடான பொருளை உண்டால் அவர் வெப்பமுறுதலை எண்ணிச் சூடான உணவை உண்ண அஞ்சுகிறாள் தலைவி.

எளிமை :

‘உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு‘ *(1200)*

பரிமேலழகர் உரை : நின்னொரு உறாதார்க்கு நின்னுறு நேடைல உரைக்கலுற்ற நெஞ்சே, நீ ஆற்றாய் ஆயினும் அரிதாய் அதனையொழிந்து, நினக்குத் துயரம் செய்கின்ற கடலைத் தூர்க்க முயல்வாயாக அஃது எளிது.

வ. உ. சி.உரை : நெஞ்சே! நீ வாழ்க! உன்னிடம் அன்பு இல்லாதவர் களிடம் உனது அளவற்ற துன்பத்தைச் சொல்கிறாய்! அதை விட எளிதாகக் கடலை தூர்க்க முயல், அது உன்னால் முடியும்.

முரண்பாடு :

‘கண்களவு கொள்ளுஞ் சிறு நோக்கங் காமத்திற்
செம்பாக மன்று பெரிது‘ *(1092)*

பரிமேலழகர் உரை : இவள் கண்கள் யான் காணாமல் என்மேல்

நோக்குகின்ற அருகிய நோக்கம். மெய்யுறுபுணர்ச்சியின் ஒத்த பாதியளவு அன்று அதனினும் மிகும்.

வ. உ. சி. உரை:

என்னை கள்ளத்தனமாகப் பார்க்கும் அந்தச் சிறிய பார்வை, காமத்தில் பாதி அளவு இன்பத்தை தருவதல்ல, அதைவிடப் பெரிய பகுதியாகும். இக்குறளில் பரிமேலழகர், தலைமகள் பார்க்கும் கள்ளப் பார்வை காமத்தின் சரிபாதி அல்ல, அதனினும் மிகும். அதாவது உடலுறவின் முழு இன்பத்தை விடவும், அந்த ஆரம்பக் கள்ளப் பார்வையே பெரியது என்று குறளில் பொருள் ஆழத்தை மேம்படுத்தி கூறியுள்ளார். மற்ற உரையாசிரியர்கள் இந்த கருத்தினை, களவுப்பார்வை விரும்பிய பொருளின் பாதியளவு தான் என்று கூறுகின்றனர்.

வ. உ. சி. பரிமேலழகர் உரையை மறுத்தற்கான காரணம் :

பரிமேலழகர் சில குறள் விளக்கங்களில் முரண்பாடான விளக்கத்தைக் கொடுத்துள்ளார். உதாரணமாக : முட்டையிலிருந்து வெளிவரும் உயிரை ‘புள்‘ என கூறியுள்ளார். ‘புள்‘ என்றால் பறவை என்பர். முட்டையிலிருந்து வெளிவரும் உயிர் பார்ப்பு (குஞ்சு) என்பது தான் வழக்கு. அதனை வழக்கு மாறாக கூறியதால் வ.உ.சி. இவரின் உரையை மறுத்தார்.

மேலும் பசலை நோய் என்பதனை, தலைவன் பிரிந்ததால் தலைவியின் நிறம் வாடியது அந்த வாட்டத்தைப் பசலை நோய் உடலைத் தாக்குகிறது என்றார். ஆனால் வ.உ.சி. அதனை மறுத்து, தலைவனின் நினைவால் அவளின் உடலும் உள்ளமும் வாடுகின்றது. இது நோய் அல்ல, தலைவியின் மனநிலை என்று வ.உ.சி. பரிமேலழகரின் உரையை மறுத்துக் கூறுகின்றார்.

பரிமேலழகரின் உரையில் முரண்பாடான பொருத்தமற்ற விளக்கங்களாலும், கடினமான இலக்கண இலக்கிய நடையினாலும் வ.உ.சி. இவரின் உரையை மறுத்து மற்ற உரை நூல்களைக் கொண்டு எளிய நடையில் மக்களிடம் பரவலாகப் புழங்கும் சொற்களையும் அனுபவங்களை இயற்கைச் சூழல்களையும் இணைத்து தனது திருக்குறளுக்கு உரை எழுதினார். இன்பத்துப்பாலில் அகப்பொருள் நுட்பங்களை விளக்கும் போது, இயற்கை மனித உறவுகள் சார்ந்த எளிய எடுத்துக்காட்டுகளைக் கொண்டு, குறளின் உயிர்ப்பை வெளிப்படுத்தினார் வ. உ. சி.

முடிவுரை :

வ. உ. சி. தனது திருக்குறள் உரையை நேரடியாக இல்லாமல் மணக்குடவருரையுடன் சேர்த்து பதிப்பித்தார். மணக்குடவருரை முதலில் தோன்றினாலும் வ. உ. சி. யின் திருக்குறள் மணக்குடவருரையே முதன்மையானதாக உள்ளது. வ.உ.சி. மற்றும் பரிமேலழகர் உரையில் மனிதனின் அக வாழ்க்கையை எடுத்துக்காட்டும் உரையாக அமைந்தது

திருவள்ளுவரின் இன்பத்துப்பால் பகுதி. பரிமேலழகரின் இலக்கண இலக்கிய நடையும் பொருள் ஆழமும் நிறைந்த உரையை அமைத்துள்ளார். வ.உ.சி. குறள் மரபுகளைப் பின்பற்றி காமத்துப்பாலின் நுட்பங்களை எளிய முறையில் விளக்கியுள்ளார். பரிமேலழகர் உரையை விட, வ.உ.சி. யின் திருக்குறள் மணக்குடவருரையே இன்றளவும் ஆய்வுக்குரியதாக உள்ளது.

முக்கிய குறிப்பு : அறத்துப்பால் உரை முதன் முதலில் திருச்செந்தூர் முருகன் கோவிலில் வைத்து அரங்கேற்றம் செய்யப்பட்டது. 1935 வ.உ.சி. இயற்கை மரணம் அடைந்தார். ஆனால் பொருட்பாலும், காமத்துப் பாலும் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு உரை இயற்றப்பட்டிருந்தது. அவர் இறந்த 73 ஆண்டுகளுக்கு பின் 2009ல் மற்ற இரண்டு பால்களும் பதிப்பிக்கப்பட்டன.

துணைநூற் பட்டியல்:

1. வ. உ. சி.பாடல்கள்.,திவான்(தொ. ஆ).,வ. உ. சி.இலக்கியப்பேரவை மதுரை சந்திப்பு மதுரை.,முதல் பதிப்பு 1915., ப. 25.
2. கல்விச் சிந்தனையாளர் மால்கம் ஆதிசேஷையா.,கணியம்.அறக்கட்டளை.,மின்னூல் வெளியீடு., ப. 5.
3. சித்தர்கள் பெரிய ஞானக்கோவை.,வ.சரவணைமுத்துபிள்ளை.,இடைக்காடர் பாடல்கள்.,இரத்தின நாயக்கர் அண்ட் சான்ஸ்.,சென்னை 14.,முதல்பதிப்பு 1954. , ப.229. , மேலது.,ப. 356.
4. வ. உ. சி.பாடல்கள்.,திவான்(தொ. ஆ).,வ. உ. சி.இலக்கியப்பேரவை மதுரை சந்திப்பு மதுரை.,முதல் பதிப்பு 1915., ப. 35.
5. வ. உ. சி.பாடல்கள்.,திவான்(தொ. ஆ).,வ. உ. சி.இலக்கியப்பேரவை மதுரை சந்திப்பு மதுரை.,முதல் பதிப்பு 1915., ப. 35.

35

வ.உ.சி.யின் சிவஞான போதம் உரைவளமும் பதிப்புப் பணியும்

ச. திவ்யா

தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

முனைவர் மு. அன்பரசி,

பி. எஸ்.ஜி. ஆர் கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர்.

ஆய்வுச் சுருக்கம்:

பன்முகத்தன்மை கொண்டவராக வ.உ.சிதம்பரனார் போற்றப்படுகிறார். பதிப்பாசிரியர், கட்டுரையாசிரியர், மொழிபெயர்ப்பாளர், உரையாசிரியர் போன்ற வல்லமை படைத்தவராகவும் விளங்குபவர் வ.உ.சி. என்ற பெயர் கொண்ட வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம் ஆவார். இவர் உரையாசிரியராக இயங்கியதில் சிறப்பு மிக்க உரைகளாக தொல்காப்பியம், திருக்குறள், சிவஞானபோதம் ஆகியவை பெரும் புகழ் பெற்று விளங்கின. வ.உ.சி. அவர்களின் வாழ்க்கையின் பல்வேறு காலகட்டங்களில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளே அவரது இலக்கியப் பணிக்குத் தூண்டுகோலாகவும் துணையாகவும் இருந்திருக்கலாம் என கருதப்படுகிறது. உரையாசிரியராக விளங்கிய இவரின் பின்புலத்தின் அடிப்படையில் வ. உ.சி.யின் சிவஞானபோத உரை வளமும் பதிப்புப் பணியும் என்பதை ஆய்வு தலைப்பாக எடுத்துக் கொண்டு அவரின் உரைவளத்தை ஆராய முற்படுதல்.

திறவுச்சொற்கள் : சிவஞான போத உரை, கையாண்ட ஆளுமைகள், பதிப்புப் பணி

முன்னுரை:

சுதந்திர போராட்டக் களத்தில் மட்டுமல்லாமல் தமிழுலகில் பதிப்பு, கட்டுரை, மொழிபெயர்ப்பு, உரை போன்ற களத்திலும் தனக்கென தனி முத்திரையைப் பதித்துக்கொண்டவர் வ.உ.சி. கல்வி வளர்ச்சிக்கும் தமிழ் வரலாற்றை மேம்படுத்துவதற்கும் இவரின் பங்களிப்பு ஏராளம் வ.உ.சி. யின் வீரம் செறிந்த தியாக வாழ்விற்கு கப்பலும் செக்கும் அவரின் எழுத்துக்களும் இன்றியமையாதவையாகத் திகழ்கின்றன வ.உ.சி.க்கு தமிழ் மற்றும் சைவ உலகில் இருந்த இடம் இன்றும் பெரிதும் அளப்பரியதும்; அறியப்படாததுமாகும். அவரின் சிவஞானபோத உரைவள பணியும் அவற்றின் பதிப்புப் பணியும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

வ.உ.சி. சிவஞானபோதம் உரை வளம்:

மெய்கண்ட சிவஞானமுனிவர் இயற்றிய சிவஞான போதத்திற்கு

பலரும் உரை கண்டனர். சிவஞான போதத்திற்கு வ.உ.சி. ஓர் உரை வெளியிட்டதாகக் கருத்து நிலவியது. இது பலர் அறியப்படாத செய்தியாகும். இந்நூல் கிட்டத்தட்ட 65 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் பதிப்பித்ததாக கருதப்படுகிறது. இவர் தனது வாழ்வின் கடைசி நாட்களில் பழைய அரசியல் நண்பர்களால் கைவிடப்பட்ட போதும் இடையறாது கலங்காமல் தான் பல எதிர்ப்புகளை மீறி தாம் தேர்ந்தெடுத்த பாதையில் பணியாற்றியவர் இவராவார்.

வ.உ.சி. அவர்கள் திராவிட மாபாடியம் என்ற சிவஞான போத நூலின் பேருரையைத் தவிர்த்து சிற்றுரையைக் கையாண்டு எழுதியதாக முதல் செய்யுள் பகுதியை 'மங்கல வாழ்த்து' என்று குறிப்பிட்டு கூறுகிறார். ஆனால், வ.உ.சி. அவர்கள் அப்பாடல் பகுதியைத் தன் உரையில் 'காப்பு' என தலைப்பிட்டு குறிப்பிடுகிறார். வ.உ.சி. தனது சிவஞான போத உரையில் உயர்திணைப் பால் பற்றியும் அஃறிணைப் பால் பற்றியும் உரையில் குறிப்பிட்டு கூறுகிறார். அறிவு சொரூபமான இறைவனே' என்று இறைவனின் சிற்சத்தி என்ற சைவ சித்தாந்தத்தின் கொள்கைக்கு உடன்பட்டும் உரை கண்டிருக்கிறார். மேலும் வ.உ.சி. தன் உரையில் ஜீவாத்மாவை சரீரம் எவ்வாறு பொருந்துகிறது என்பதை அறிய முடியாத ஒன்று என்பதையும் அத்தகைய நிலை ஒரு மாய இயந்திரம் என்றும் தன் உரையில் எழுதுகிறார். மேற்கண்ட சிவஞான முனிவர் இயற்றிய சிவஞான போதத்தில் கூறப்பட்டுள்ள விளங்காத சொற்களையும் சொற்றொடர்களையும் வ.உ.சி. தன் எளிய உரையின் மூலம் விளக்கிக் கூறியிருப்பது வ.உ.சி. பதிப்பின் தனித்தன்மையினை எடுத்து இயம்புகிறது. இவர் தம்முடைய உரையில் சிவஞான போதத்தால் தாம் உணர்ந்து கொள்ளும் மெய்மையினைத் தம் உரையில் அறிவுறுத்தியிருந்தல் என்பது உரையாசிரியர் எவரும் காட்டாத சமுதாய சிந்தனைக்கு நல்ல சான்றாக இவரின் உரை விளங்குகிறது.

சிவஞான போத உரை எழுந்த சூழல் :

சிவஞான போத உரை பாயிரப் பகுதியில் உரை எழுத வேண்டிய சூழ்நிலையைப் பற்றி குறித்து வ.உ.சி. விளக்கியுள்ளார். மேலும் தொல்காப்பியம், திருக்குறள், சிவஞானபோதம் போன்ற நூல்கள் கற்போருக்கு கடுமையான நடையில் அமைந்தமையால் அவற்றை எளிமையாக்கும் நோக்கில் பல ஆண்டுகள் நினைத்து முதலில் திருக்குறளுக்கு உரை கண்டு பிறகு சிவஞான போதத்திற்கு உரை கண்டதாக வ.உ.சி. குறிப்பிடுகிறார். தமிழ் மக்களுக்கு சைவ சித்தாந்தத்தின் சாரத்தை எளிமையாக விளக்குவதே வ.உ.சி. யின் நோக்கமாக இருந்தது.

வ.உ.சி. யின் சிவஞானபோதப் பதிப்புப் பணி:

1934-35 ஆண்டில் சிவஞான போதத்திற்கான உரையின் முன் வடிவை வ.உ.சி. எழுதி அதனை தினமணியில் வெளியிட்டு, அவற்றை தூத்துக்குடி அ.சே.சு. தர்மச் சத்திரத்தில் அரங்கேற்றப்பட்ட போது

இந்நூல் சில எதிர்வினை விவாதங்களை எதிர்கொண்டு இருப்பதை கருத்தில் கொண்டு வ.உ.சி. தனது உரையைச் செம்மையாக்கி நூலாக வெளியிட்டார். இவரின் இத்தகைய முயற்சி கடுஞ்சைவர்களின் எதிர்ப்புக்கு உள்ளானது. இந்நூல் பல்வேறு பதிப்புகளைக் கொண்டதாக கூறப்படுகிறது. அவற்றுள் ஆ. இரா. வேங்கடாசலபதி அவர்களின் பதிப்பானது வ.உ.சி. யின் மூல உரையில் இருந்த அச்சுப் பிழைகளைத் திருத்தி வ.உ.சி. சமூக அறிவியல் நிறுவனம், கோவிலூர் ஆண்டவர் நூலகம் போன்றவற்றின் ஒத்துழைப்புடன் புதிய பதிப்பாக வெளிவந்தது. சிவஞான போதத்திற்கு வ.உ.சி. அளித்த உரையானது பல்வேறு மறு பதிப்புகளாக வெளிவந்து தமிழ் இலக்கியப் பதிப்பு வரலாற்றில் முக்கிய இடத்தை பெற்றுள்ளதாக கருதப்படுகிறது.

முடிவுரை:

இவ்வுலகில் உள்ள உயிர்களின் தோற்றத்திற்கு காரணமாக விளங்கக்கூடிய ஆதி அந்தமாக விளங்கும் இறைவனின், நல்வினை தீவினை ஆகிய இரு வினைகளையும் பகுத்தறிவுடைய உயிர்கள் நீக்கமின்றி நீக்கும் என்பதனையும் இறைவனே அவற்றுடன் ஒன்றி வாழ்கிறான் என்பதையும் எளிமையாக தன்னுடைய உரைகளில் எடுத்துரைக்கிறார் வ.உ.சிதம்பரனார். உயர்திணை, அஃறிணை என்று யாவற்றிலும் யாதுமாய் இறைவனே வலம் வருகிறான் என்பதை வ.உ.சிதம்பரனார் மெய்கண்ட சிவஞான முனிவர் இயற்றிய சிவ ஞான போதத்தில் உள்ள சூத்திரங்களின் கடின நிலையினை எளிமை யாக்கி பாமர மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் ஆழமாகவும் கருத்துக்களை எடுத்தியம்பியிருக்கிறார். எந்நிலையிலும் தமிழ்ப் பற்றானது தலைதோங்கச் செய்யும் என்பதனை அவர் வாழ்வில் உணர்த்தியிருக்கிறார். தமிழ் உலகில் வ.உ.சி. யின் இலக்கியப் பணியில் அவரின் உரை வளம் என்பது ஒரு வியக்கத்தக்க ஒன்றாக திகழ்கிறது. இவ்வுரைகள் இன்றைக்கும் நினைக்கவும் நிலைக்கவும் செய்கிறது. வ.உ.சி. அவர்களின் இலக்கிய பங்களிப்பானது இயற்கை போன்று பார்க்கப் பார்க்க சலிக்காது ஆர்வத்தைத் தூண்டுவதாக அமைக்கப்பட்டு கையாளப்பட்டிருக்கும்.

துணைநூற் பட்டியல் :

1. வ.உ.சி.யின் சிவஞான போத உரை - ஆ.இரா. வேங்கடாசலபதி, வ.உ.சி. சமூக அறிவியல் நிறுவனம், தூத்துக்குடி, 1999.
2. வ.உ.சி.யின் வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும் – டாக்டர் சங்கர வள்ளிநாயகம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், லிட். திருநெல்வேலி, 1989.
3. வ.உ.சி. ஒரு பன்முகப்பார்வை – முனைவர் எஸ். கண்ணன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2005.

36

வ. உ. சி.யின் திருக்குறள் உரையில் பாயிரவியல்

கணேஷ் சுப்ரமணி

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அருள் ஆனந்தர் கல்லூரி, கருமாத்தூர்.

முன்னுரை:

திருக்குறள் இன்றளவும் வாழ்வின் நெறியாளுகைக்கு ஏற்ற நூலாக உலகம் முழுவதும் மதிக்கப்படுகிறது. அத்துடன் காலந்தோறும் புதுப்புது விளக்கங்களை அளிக்கக் கூடிய சொற்செறிவும் பொருட்செறிவும் அதனுள் உண்டு. எனவேதான் ஈராயிரம் ஆண்டுகளைக் கடந்தும் திருக்குறள் ஆய்வுகள் தொடர்கின்றன. திருக்குறள் ஆய்வுப் பொருட்களுள் ஒன்று பாயிரவியல். வள்ளுவரின் கடவுட் கோட்பாட்டைப் புரிந்து கொள்வதற்கு உதவும் பகுதியாக இப்பாயிரவியல் கருதப்பட்டுள்ளது. அதே நேரம் பாயிரவியல் குறித்த முரண்பட்ட கருத்துக்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இது குறித்து வ.உ.சிதம்பரனார் கருத்துகள் தனித்தன்மை வாய்ந்தவை. அதனை ஆய்வதாக இந்தக் கட்டுரை அமைகிறது.

வ. உ. சி.யின் திருக்குறள் உரை:

வ.உ.சி. யின் விடுதலைப் போராட்டப் பணிகள், அரசியல் பணிகள், வணிகப் பணிகள் போன்றவை இன்றளவும் போற்றப்படுகின்றன. இப்பணிகளுக்கிடையே பல்வேறு தமிழ்ப் பணிகளையும் அவர் ஆற்றியிருக்கிறார். தீவிர ஆங்கிலேய எதிர்ப்பால் பெரும்பகுதியைச் சிறையில் கழித்த அவர், அங்கு திருக்குறள் உள்ளிட்ட நூல்களை ஆழமாகப் படித்துள்ளார். சிறையிலிருந்து வெளிவந்த பின்னர் மெல்ல மெல்ல அரசியல் வாழ்வைத் துறந்த அவர் இலக்கியப் பணிகளில் ஈடுபட்டார். அப்போது அவரைப் பெரிதும் ஈர்த்த நூலாகத் திருக்குறள் விளங்கியுள்ளது. அவருடைய எழுத்துப் பணிகளிலும் திருக்குறளின் தாக்கம் தென்படுகிறது. வ.உ.சி. எழுதிய 'மெய்யறிவு' நூலில் இதனைக் காணமுடிகிறது.

'இந்நூலில் அவர் குறிப்பிட்டுள்ள அறத்தின் பெரும்பான்மையான தலைப்புகள் திருக்குறள் அதிகாரங்களை அடியொற்றியனவாக அமைந்துள்ளன. இந்நூலின் அதிகாரங்களான தன்னை அறிதல், விதியியல் அறிதல், மனத்தை ஆளுதல், மறங்களைதல், அறம் புரிதல், தவஞ்செய்தல், மெய்யுணர்தல் ஆகியன முறையே நிலையாமை, ஊழியல், அடக்கமுடைமை, இன்னா செய்யாமை, அறன் வலியுறுத்தல், தவம், மெய்யுணர்தல் ஆகிய திருக்குறள் அதிகாரப் பெயர்களுடன் ஒத்துச் செல்கின்றன'1 என்கிறார் சங்கரவள்ளிநாயகம். குறிப்பாக வள்ளுவரின் அறத்துப்பால் வ.உ.சி.யைப் பெரிதும் ஈர்த்துள்ளது

தெரிகிறது. திருக்குறளுக்கு உரை எழுதும் அரும்பணியில் அவர் இறங்கினார். அக்காலத்தில் அவருக்கு ஐந்து திருக்குறள் உரைகளே படிக்கக் கிடைத்தன.

'இவ் ஐந்து உரைகளிலும் திருக்குறளின் சில அதிகாரப் பெயர் களும் வரிசைகளும், அதிகாரக் குறள்களின் வரிசைகளும் வெவ் வேறாயிருக்கின்றன. இவ்வுரைகளெல்லாம் கற்றற்குப் பெரியனவாகவும், அறிதற்கு அரிய தமிழ்நடையில் எழுதப் பெற்றனவாகவும், பிழைபட்ட மூல பாடங்கள் சிலவற்றைக் கொண்டனவாகவும், சில குறள்களுக்கு நுண்ணிய அறிவுடையார் ஏற்றுக்கொள்ள இயையாத பொருள்களை உரைப்பனவாகவும் காணப்படுகின்றன' 2 என்று தான் உரையெழுதப் புகுந்தமைக்கான காரணத்தை குறிப்பிடும் வ.உ.சி., 'நுண்ணிய அறிவுடையார்' என்று குறிப்பிடுவது பகுத்தறிவாளர்களை என்பது அவருடைய சிந்தனைப் போக்கைக் கொண்டு அறியமுடிகிறது.

திருக்குறளுக்கு வ.உ.சி. எழுதிய உரை மற்ற உரைகளினின்றும் வேறுபட்டது. அவர் காலத்தில் அதிகம் கிடைத்த பரிமேலழகர் உரையைத்தான் அவர் முதலில் படித்துள்ளார். ஆனால் அவ்வுரையில் அவருடைய மனம் நிறைவு கொள்ளவில்லை. அதன் பின்னர் மற்ற உரைகளைத் தேடிப் படிக்கும் அவருக்கு மணக்குடவர் உரைதான் சிறந்ததாகத் தோன்றுகிறது. இதன் பின்னர் திருக்குறளுக்குத் தானே உரை எழுதும் பணியில் இறங்குகிறார். தன்னுடைய உரையில் பல இடங்களில் பரிமேலழகரின் கருத்துகளை மறுக்கிறார்.

'அறப்பாலில் 76 குறள்களில் என் உரை பரிமேலழகர் உரைக்கு வேறுபடுகின்றது; 12 குறள்களில் என் உரை அவர் உரையை வெளிப்படையாக மறுக்கின்றது; 5 குறள்களில் என் உரை அவர் உரையை வெளிப்படையாக ஆமோதிக்கின்றது. மீதக் குறள்களில் என் உரையும் அவர் உரையும் ஒத்திருத்தல் கூடும்'3 என்று தன்னுடைய திருக்குறள் அறப்பால் உரையின் முன்னுரையில் குறிப்பிடுகிறார். பரிமேலழகரின் உரையில் பிழைகள் நிறைந்திருப்பதாகக் கருதும் அவர் பரிமேலழகருக்குப் பின் வந்தவர்கள் அவ்வுரையைப் பெயர்த்தெழுதுவதில் உண்டான பிழைகள் என்று அவற்றைக் குறிப்பிடுகிறார்.

'அப்பாடங்களை யான் கொண்டதற்குரிய காரணம், அப்பரிமேலழகர் பாடங்கள் ஏடு பெயர்த்தெழுதியோரால் நேர்ந்த பிழைப் பாடங்கள் என யான் கருதியதே. யான் கருதியதைப் போலவே, பழம்பெரும் புலவரான மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களும் பல பிழைகள் அக் காரணத்தினால் மூலத்தில் புகுந்துள்ளன என்று கருதியிருக்கிறார்கள்' 4 என்று விளக்குகிறார். பரிமேலழகரின் உரை சைவச் சார்புடையது என்று அறிஞர்களால் மதிப்பிடப்படுகிறது. வ.உ.சி.யும் தீவிர சைவப் பற்றாளராக இருந்த போதிலும் பரிமேலழகரின் உரையில்

சொல்லப்படும் கருத்துகளிலிருந்து அவர் வேறுபடுகிறார். மணக்குடவர் சமண சமயத்தைச் சார்ந்தவராயிருந்த போதிலும் அவருடைய உரையை ஏற்கிறார். இது அவருடைய சார்பற்ற நிலையை உணர்த்துவது மட்டுமன்றி, வள்ளுவரின் உட்கிடக்கைக்கு நெருக்கமான உரையாக மணக்குடவர் உரையை அவர் கருதியிருப்பதையும் உணர்த்துகிறது. வ.உ.சி. யின் திருக்குறள் உரையில் பாயிரவியல் என்றழைக்கப்படும் முதல் நான்கு அதிகாரங்கள் பற்றி பரிமேலழகர் உள்ளிட்ட பல உரைகாரர்களும் சொல்லி வந்த கருத்துகளை அழுத்தமாக மறுக்கிறார்.

திருக்குறட் பாயிரவியல்:

தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய பேராசிரியர், அந்நூலுக்குப் பனம்பாரணர் 'வடவேங்கடம் தென்குமரி' எனத் தொடங்கும் சிறப்புப் பாயிரம் எழுதினார் என்கிறார். இதிலிருந்துதான் உரையாசிரியர்கள் காலத்தில் (பேராசிரியரின் காலம் கி.பி.12ஆம் நூற்றாண்டு) 'பாயிரம்' எனும் சொல்வழக்கு இருந்ததை அறிய முடிகிறது. பாயிரம் என்ற சொல்லுக்குப் பலரும் பலவித விளக்கங்களை அளிக்கின்றனர். தமிழ் உணர்வாளரான தேவநேயப் பாவாணர் பயிர்தல் எனும் சொல்லின் அடியாய்ப் பாயிரம் என்பது தோன்றிற்று என்கிறார். 'பயிர்தல் அழைத்தல்; பயிர்அம் அழைப்பது; அது பாயிரம் ஆயிற்று' என்று தன்னுடைய மரபுரையில் கூறுகிறார். ஆனால் பயிரம் என்பது பாயிரம் என்று மாறுவதற்கு இலக்கண விதிகள் எதுவும் இல்லை.

சில வடமொழி உணர்வாளர்கள் 'பஹிரம்' என்ற வடமொழிச் சொல் 'பாஹிரம்' என்று மாறிப் பின்னர் பாயிரமாயிற்று என்பர். ஆனால் பஹிரம் என்பது பாஹிரம் என்று மாறுவதற்கும், பாஹிரம் என்பது பாயிரம் என்று மாறுவதற்கும் எந்த விதியும் இல்லை. எனவே இந்தக் கூற்றும் பொருந்தாது. சிலர் பாய் இரு அகம் எனும் விகுதிகள் இணைந்து பாயிரமாயிற்று என்பர். வேறு சிலர் பாயிரம் என்பது காரணப் பெயரன்று; வரலாறு எனும் பொருள் தரும் இடுகுறிப் பெயர் என்பர். பாயிரவியல் என்ற பாகுபாடு வள்ளுவர் உண்டாக்கியதல்ல என்பது மட்டும் பெரும்பான்மை அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

திருக்குறளில் பாயிரவியல் என்பது கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலியுறுத்தல் ஆகிய முதல் நான்கு அதிகாரங்களை உள்ளடக்கியது. இந்த வரையறையிலும் சில கருத்து வேறுபாடுகள் உண்டு. குறிப்பாக, இப்பாயிரவியல் திருவள்ளுவர் எழுதியதல்ல என்பதே வ.உ.சிதம்பரனார் அவர்களின் முடிவு.

'திருக்குறட் சுவடிகளில் பாயிரத்தின் முதல் மூன்று அதிகாரங் களாகக் காணப்படும், கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை என்னும் மூன்று அதிகாரப் பாக்களும் திருவள்ளுவரால் இயற்றப் பட்டவையல்லவென்றும், அவை திருவள்ளுவர் காலத்திற்குப் பிற் காலமும் முந்திய உரையாசிரியர்கள் காலத்திற்கு முற்காலமுமாகிய

இடைக் காலத்துப் புலவர் ஒருவரால் பாடிச் சேர்க்கப்பட்டவையென்றும் யான் கருதுகிறேன்'5 என்று தன்னுடைய திருக்குறள் உரையில் வ.உ.சி. குறிப்பிடுகிறார்.

ஆனால் அவர் பாயிரவியலில் உள்ள முதல் மூன்று அதிகாரங்களை மட்டுமே பாயிரவியலாகக் கொண்டு அதனைத் திருக்குறளின் ஒரு பகுதியாக ஏற்க மறுக்கிறார். நான்காம் அதிகாரமான அறன் வலி யுறுத்தலை அறத்துப்பாலின் முதல் அதிகாரமாகக் கொள்கிறார் அவர். பாயிரவியலின் முதல் மூன்று அதிகாரங்களை வள்ளுவர் எழுதியதாக அவர் ஏற்காததற்கு சில காரணங்களைக் கூறுகிறார்.

- முதல் மூன்றதிகாரக் குறள்களில் மற்ற குறள்களில் உள்ள செறிவு இல்லை.
- பொருள் கொள்வதில் பல தடைகள் உள்ளவை; மெய்யுணர்வு, துறவு என்ற அதிகாரங்கள் நூலில் இருப்பதால் கடவுள் வாழ்த்தையும் நீத்தார் பெருமையையும் பாயிரவியலில் தனியே கூறத் தேவையில்லை.
- மெய்யுணர்வு அதிகாரத்தில் காணப்படும் கடவுட்கொள்கைக்கும் கடவுள் வாழ்த்தில் கூறப்படும் கடவுட்கொள்கைக்கும் பொருத்த மில்லை. இரண்டு அதிகாரங்களும் ஒருவரால் எழுதப்பட்டிருக்க வாய்ப்பில்லை.
- வான்சிறப்பு எனும் அதிகாரம் பயனற்றது.

மேற்கண்ட காரணங்களைக் கூறி முதல் மூன்று இயல்கள் வள்ளுவரால் இயற்றப்பட வாய்ப்பில்லை என்றும் அவை பின்னால் வேறு யாராலோ இயற்றப்பட்டு திருக்குறளில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் கூறுகிறார். அதே நேரம் இவ்வதிகாரங்கள் வள்ளுவரால் எழுதப்பட்டனவாகப் பெரும்பான்மையோர் கருதுவதால் அவற்றைத் தன் உரையில் இடைப்பாயிரம் எனும் தனிப் பிரிவில் இடம்பெறச் செய்கிறார். திருக்குறளில் மேற்சொன்ன குறைகள் அவ்வதிகாரங்களில் எங்கெங்கு காணப்படுகின்றன என்பது குறித்து அவர் விளக்காமல் வெறும் முடிபாக மட்டுமே கூறிச் செல்கிறார். என்றாலும், அவரின் நிலைப்பாடு சற்று ஆழமானது. கடவுட்கோட்பாடு குறித்த வள்ளுவரின் கருத்தியலை நுண்ணிய பார்வையில் அணுகுகிறார் வ.உ.சி.

வள்ளுவரின் அறமனிதன்:

தமிழில் கடவுள், இறைவன், தெய்வம் ஆகிய சொற்கள் ஒருபொருட் பன்மொழிச் சொற்கள். மொழிப் பயன்பாட்டில் கடவுள் மற்றும் இறைவன் ஆகிய சொற்கள் உயர்திணைச் சொற்களாகப் பயன்படுத்தப்படுகின்றன (கடவுள் ஏன் கல்லானான், எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்). இவை தமிழ்ச் சொற்கள். தெய்வம் எனும் சொல் அஃறிணைச் சொல்லாகப் பயன்பாட்டில் இருக்கிறது (தெய்வம் வந்தது, தெய்வம் நின்று கொல்லும்). இச்சொல் வடமொழிச் சொல். 'தேவ்' எனும் சொல்லிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட சொல்.

'கடவுள்' எனும் தமிழ்ச் சொல் தொல்காப்பியர் காலத்திலிருந்தே வழக்கில் உள்ளது. சங்க இலக்கியப் பாடல்கள் பலவற்றிலும் இந்தச் சொல் பயின்று வருகிறது. ஆனால் தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்களுக்குப் பின்னர் தோன்றிய திருக்குறளில் கடவுள் எனும் சொல் எங்கும் சுட்டப்படவேயில்லை. பல்வேறு சமயங்கள் கூறும் கடவுள் பற்றிய கருத்துகளைத் தன்னுடைய குறள்களில் சுட்டிக் காட்டும் வள்ளுவர் 'கடவுள்' எனும் சொல்லை மட்டும் தன்னுணர்வோடு தவிர்த்துள்ளார். இறைவன் எனும் சொல்லை நான்கு இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார். அதில் ஓரிடத்தில் அரசன் எனும் பொருளில் அச்சொல் பயிலப்பட்டுள்ளது. இறைவன் என்பதன் வேர்ச்சொல்லான இறை என்னும் சொல் ஆறு இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் ஓரிடத்தில் மட்டுமே இறைவன் எனும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மற்ற இடங்களில் அரசன், தலைவன், இறைத்தல், முன்கை போன்ற பொருட்களில் இச்சொல் ஆளப்பட்டுள்ளது.

கடவுளுக்கு உருவமோ குறியீடுகளோ தந்து தன்னுடைய சமயம் குறித்த தெளிவை வள்ளுவர் அளித்துவிடவில்லை. கடவுள் எனும் சொல்லுக்குப் பதிலாக 'தெய்வம்' எனும் சொல்லை ஐந்து இடங்களில் (குறள் எண்கள்: 43, 50, 55, 619, 702) பயன்படுத்துகிறார். பாயிரவியலில் வாலறிவன், மலர்மிசையேகினான், வேண்டுதல் வேண்டாமையிலான், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமையில்லாதான், அறவாழி அந்தணன், எண்குணத்தான், உலகியற்றியான் போன்ற சொற்கள் கடவுட் தன்மை பொருந்தியனவாக திருக்குறளில் ஆளப்பட்டுள்ளன. இந்தச் சொற்களை எந்தச் சமயத்தின் சாயலுமற்ற ஒருவித பொதுமைத் தன்மையுடனேயே வள்ளுவர் பயன்படுத்தியுள்ளார். தெய்வம் எனும் சொல்லையும் பேராற்றல் மிக்க கடவுட் தன்மை பொருந்திய சொல்லாக அவர் எங்கும் பயன்படுத்தவில்லை. இச்சொல் ஆளப்பட்டுள்ள குறள்களை ஆராய்ந்தால், அறவழியில் நிற்கும் மனிதன் தெய்வ நிலைக்கு உயர முடியும் எனும் மனித மையக் கோட்பாடே தென்படுகிறது.

'தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்' 6

எனும் குறளில் 'தெய்வத்தால் ஆகாத வினையும் உண்டு; அதையும் சாதிக்கக் கூடிய ஆற்றல் மனித உழைப்புக்கு உண்டு' என்கிறார். இதில் தெய்வம் என்பது எல்லாம் வல்ல ஒன்றாகக் குறிக்கப்படவில்லை.

'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்' 7

எனும் குறளில் வாழ்ந்து மறைந்தோர், விருந்தினர், சுற்றத்தார் ஆகியோரின் வரிசையில் தெய்வத்தை வைக்கிறார். அதிலும் வாழ்ந்து மறைந்த முன்னோர்களுக்குப் பின்னரே தெய்வத்தை வரிசைப்படுத்துகிறார். மனிதனினும் மேலான ஒன்றாக அவர் தெய்வத்தைக் கருதவில்லை.

‘ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்‘ 8

எனும் குறளில் மனத்தின் குறிப்பறியும் ஆற்றல் பெற்ற மனிதனைத் தெய்வத்துக்கு இணையானவனாகக் குறிப்பிடுகிறார்.

சமணம், பௌத்தம், உலகாயதம், பூதவாதம், சாங்கியம், சார்வாகம், ஆசீவகம் போன்ற சமயங்களும் எல்லாம் வல்லதான இறை எனும் நம்பிக்கையை ஏற்றவையல்ல. சமணமும் பௌத்தமும் பின்னாளில் இறைக்கோட்பாட்டை ஏற்றுக்கொண்டாலும் தொடக்கத்தில் அவை இறை மறுப்புச் சிந்தனைகளாகவே இருந்தன. இச்சிந்தனைகள் மேலோங்கிய காலகட்டத்தில் வாழ்ந்த வள்ளுவரிடமும் இறைமறுப்பு வாதம் தென்படுகிறது. தெய்வத்தை விட அறவழியில் வாழும் மனிதனை அவர் உயர்வாக மதித்துள்ளார். இருத்தலியவாதியான நீட்சே கடவுளை விட ஆற்றல் மிக்கவனாக ‘அதி மனிதன்‘ எனும் கருத்துருவைத் தந்தார். அவருக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த வள்ளுவர் கடவுளை விட ஆற்றல் மிக்கவனாக ‘அற மனிதன்‘ எனும் கருத்துருவைத் தன் குறட்பாக்களில் உணர்த்துகிறார்.

‘வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்‘ 9

எனும் குறளில் ‘அறவழியில் வாழும் மனிதனே தெய்வம்‘ எனும் வள்ளுவரின் கடவுட்கோட்பாடு தெளிவாகத் தென்படுகிறது. அத்தகைய பேராற்றல் மிக்க அறமனிதனுக்கு முன்னால் பலம் குறைந்த கடவுளைக் குறிப்பதற்கு தெய்வம் எனும் வடமொழிச் சொல்லையே வள்ளுவர் பயன்படுத்துகிறார்.

முழுமுதற்கடவுள் என்னும் கடவுள் கோட்பாடு வள்ளுவரிடம் இருப்பதாகத் தெரியவில்லை. அதே நேரம் அவர் காலத்தில் இயங்கிய சமயங்களின் கடவுளர்களையும் நம்பிக்கைகளையும் தன்னுடைய குறள்களில் எடுத்தாளுகிறார். தாம் சொல்ல வரும் கருத்துகளை மக்களுக்குப் புரியும் வகையில் எடுத்துரைக்கும் நோக்கில் உவமைத் தன்மையுடனும் கருப்பொருள் தன்மையுடனும் பல்வேறு கடவுட் பெயர்களைப் பயன்படுத்துகிறார். இந்திரன் (25), முகடி எனும் மூதேவி (167, 617, 936), திருமகள் (617), தாமரைக்கண்ணான் (1103) போன்ற கடவுட் சொற்கள் பெரும்பாலும் உவமச் சொற்களாகவே திருக்குறளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தேவர் (1073), வானோர் (25, 50, 86, 101, 346, 353) போன்ற சொற்களும் அவ்வாறே பயன்படுத்தப்பட்டுள்ளன.

அறக்கடவுள்:

அறவழியில் நிற்கும் மனிதனைக் கடவுள் நிலைக்கு உயர்த்திச் சொல்வதன் வழியாக வள்ளுவர் அறத்தையே கடவுளாகப் போதிக்கிறார். திருக்குறளில் அறம் (அறன்) எனும் சொல் 47 இடங்களில் பயிலப்பட்டுள்ளது. இச்சொல்லைக் கடவுளுக்கு இணையான ஒன்றாக அல்லது அதற்கும் மேலானதாக பல குறள்களில் வள்ளுவர் பயன்

படுத்துகிறார். அவர் முன்னிறுத்தும் அறம் எனும் கருத்தியலில் பொருள் முதல் வாதத் தன்மை அதிகம் தென்படுகிறது.

இல்லறம் மற்றும் துறவறம் ஆகிய இரண்டு நெறிகள் குறித்தும் அவர் உரைத்தாலும், கருத்து முதல் வாதத் தன்மை கொண்ட துறவறத்தை விட உலகியல் நடைமுறைக்கு நெருக்கமான இல்லறத்திற்கு முதன்மை அளிக்கிறார். கற்பனையான விண்ணுலக வாழ்வை நோக்கமாகக் கொண்ட அறவழியை விட 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதே இறைநிலை அடையும் வழி' என்கிறார். மனத்தளவில் கூட குற்றமில்லாத ஒழுக்க நிலையையே அறம் என்ற சொல்லால் குறிக்கிறார் வள்ளுவர்.

'மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற' 10

எனும் குறளில் அவர் சொல்ல விழைவது இதைத்தான். உலகியல் இன்பங்களைச் சிற்றின்பம் என்றும், இறைநிலை அடைவதைப் பேரின்பம் என்றும் குறிப்பிடுவது மெய்யியல் மரபு. வள்ளுவர் இவ்வகைப்பாட்டுக்குள் செல்லாமல்

'அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில' 11

என்று அறத்தால் வரக்கூடிய இன்பத்தை மட்டுமே இன்பம் என்றுரைக்கிறார். மற்ற இன்பங்கள் என்று அவர் குறிப்பிடுவது தீய வழியில் வரும் இன்பங்கள் என்று பலரும் உரை கூறுகிறார்கள். ஆனால் சமயங்கள் சொல்லக் கூடிய பேரின்பமெனும் இறையின்பத்தையும் 'புறத்த' எனும் சொல்லில் அவர் சுட்டுவதாகக் கொள்ளலாம். தீவினைகளைத் தண்டிக்கும் ஆற்றல் இறைவனுக்கு உண்டு எனும் வைதீகச் சமயவாதிகளின் கருத்தை மறுத்து, அந்த இடத்திலும் அறத்தை வைக்கிறார்.

'என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம்' 12

எனும் குறளில் அன்பில்லாத உயிர்களை அறம் அழிக்கும் எனும் கருத்தை மொழிகிறார். கடவுட் கோட்பாடுக்கு இணையாக இங்கு அறக்கோட்பாட்டை முன்வைக்கிறார்.

திருக்குறளின் முதல் அதிகாரம்:

வள்ளுவரின் கருத்தியலை அவரின் குறட்பாக்கள் வழி ஆய்ந்து நோக்கும் வ.உ.சிதம்பரனார், கடவுளை விட அறத்திற்கே முதன்மை தந்துள்ளதை உணர்த்துகிறார். பாயிரவியலில் கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை போன்ற அதிகாரங்களை வள்ளுவர் எழுதியிருக்க வாய்ப்பில்லை என்பதை இந்த நிலையில் நின்றே அவர் புரிந்துகொள்கிறார். அறமே கடவுள் எனும் கோட்பாட்டின் அடிப்படையில் அறன் வலியுறுத்தல் அதிகாரமே திருக்குறளின் முதல் அதிகாரமாக அவர் உறுதி செய்கிறார்.

நிறைவு:

திருக்குறளில் இடம்பெறும் பாயிரவியல் குறித்த ஆய்வுகள் முடிவின்றி தொடர்வனவாய் உள்ளன. வ.உ.சி. அறத்துப்பாலுக்கு உரையெழுதும் போது பாயிரவியல் குறித்த மரபுவழிப்பட்ட சிந்தனைகளைத் தகர்க் கிறார். அதில் உள்ள முதல் மூன்று அதிகாரங்கள் வள்ளுவர் எழுதி யவையல்ல என்பது அவரின் துணிச்சலான முடிபு. கடவுள் எனும் கருத்தாக்கத்தின் மீது வள்ளுவர் கொண்டுள்ள நம்பிக்கை கேள்விக் குரியது. அறமே கடவுள் என்பதுதான் வள்ளுவரின் கடவுட் கோட்பாடு. இதற்கு ஏராளமான அகச்சான்றுகள் குறட்பாக்களில் தென்படுகின்றன. அறத்தை வலியுறுத்துவதே வள்ளுவரின் முதன்மையான நோக்கமாக இருந்திருக்க முடியும் என்கிற நிலையில் அறன் வலியுறுத்தல் எனும் நான்காவது அதிகாரமே திருக்குறளின் முதல் அதிகாரம் என்பதைக் கருத்தியல் நிலையில் உணரமுடிகிறது. எனவேதான் வ.உ.சி. முதல் மூன்று அதிகாரங்கள் வள்ளுவர் எழுதியவையல்ல என்பதை உறுதியுடன் சொல்கிறார்.

குறிப்புகள்:

அ.சங்கரவள்ளி நாயகம், வ.உ.சி. வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும், 1994, பக்.59., வ.உ.சிதம்பரம் பிள்ளை, திருக்குறள் விருத்தியுரை, முதற்பாகம் – அறத்துப்பால், 1935, பக். 5-6., மேலது, பக். vi., மேலது, பக். vi., மேலது, பக். 2., திருவள்ளுவர், தமிழ் மறை, குறள் எண்: 619, பக். 62., மேலது, குறள் எண்: 43, பக்.5., மேலது, குறள் எண்: 702, பக். 71., மேலது, குறள் எண்: 50, பக். 5., மேலது, குறள் எண்: 34, பக்.4., மேலது, குறள் எண்: 39, பக். 4., மேலது, குறள் எண்: 77, பக். 8.

உதவிய நூல்கள்:

1. தமிழ்மறை (திருக்குறள்), திருவள்ளுவர், தாழி அறக்கட்டளை, புதுச்சேரி, 2012.
2. திருக்குறள் (ஜைன உரை), ப. ஆ.: கே.எம்.வேங்கடராமையா, சரஸ்வதி மஹால், தஞ்சாவூர், 1991.
3. திருக்குறள் உரைக்களஞ்சியம், அறத்துப் பால் பாயிரவியல், ச.தண்டபாணி தேசிகர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1981.
4. திருக்குறள், பரிமேலழகர் உரை.
5. வ.உ.சி. வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும், அ. சங்கரவள்ளி நாயகம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1994.

37

திருக்குறள் உரையாசிரியராக சிதம்பரனார்

மா. சுபலட்சுமி

ம.தி.தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி.

ஆய்வுச்சுருக்கம்:

பரிமேலழகரின் புலமை நோக்கில் இருந்து, சிதம்பரனார் பொதுமக்கள் வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ற வகையில் திருக்குறள் உரையை எவ்வாறு அமைத்துள்ளார் என்பதனையும் அவரது வாழ்க்கைச் சூழலும் சமூக அனுபவங்களும், உரை அமைப்பிலும் கருத்து விளக்கங்கள் மூலம் வெளிப்படுவதையும் இக்கட்டுரையில் காணலாம். சிதம்பரனாரின் உரை அணுகுமுறை, அடையாளங்கள் மற்றும் சமூகத்தோடு உள்ள தொடர்புகளையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

முன்னுரை:

இலக்கண நுணுக்கங்களை முதன்மைப்படுத்தாமல் இந்நூலை பொதுமக்கள் எளிதில் கற்குமாறு இதன் மூலத்தையும் உரையையும் மணக்குடவர் கருத்திற்கு இயைந்தபடி சந்தி பிரித்து அறத்துப்பாலுக்கு மட்டுமே உரை எழுதியுள்ளார் வ.உ.சிதம்பரனாரின் திருக்குறளை மட்டும் மையமாகக் கொண்டு அவரின் உரைச்சிறப்புகள் ஆராயப்படுகின்றன.

உரையாசிரியராக சிதம்பரனாரின் நோக்கும் அணுகுமுறையும் :

சிதம்பரனார் அவரது சுயசரிதையில் ‘‘மாநிலம் கொண்டிட வள்ளியும் உவந்திட திருவள்ளுவரின் தெய்வ மாமறையின் பெருவளக்குறள் சில பேணிப்படித்தேன்‘‘ என்பதன் மூலமாக 20-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே திருக்குறள் பற்று இவருக்கு வளரத் தொடங்கியதை அறியலாம். மணக்குடவர், பரிமேலழகர் போன்ற பலர் திருக்குறளுக்கு உரை எழுதியிருந்தாலும் அவர் காலத்தில் சிறந்த உரையாக பரிமேலழகரின் உரை இருந்தது. சிதம்பரனார் முதன்முதலாக பரிமேலழகர் உரையினைப் படிக்கத் தொடங்கினார். பரிமேலழகரின் உரையில் அதிகமான இலக்கண நுட்பங்கள் இருந்தன. பின்பு மணக்குடவர் உரையைப் படிக்கத் தொடங்கினார். இதற்கு பிறகே மணக்குடவரின் உரையை மையமாக வைத்து இவரது சொந்தக் கருத்துகளைக் கூறுமிடத்தில் [ ] இவ்வித அடைப்புக் குறிகளுக்குள் அமைத்து எளிமையான உரையாக எழுதி 1935-ஆம் ஆண்டு திருச்செந்தூர் முருகன் கோவிலில் அரங்கேற்றினார்.தூத்துக்குடி வேலாயுதம் பிரஸ் இவரது அறத்துப்பால் உரையினை அச்சிட்டது. இதன் பிறகு இ.மு. சுப்பிரமணியபிள்ளை இரண்டு பக்க அளவில் பிழைத்திருத்தம் செய்தார். இவ்வுரை மொத்தமாக 302 பக்கங்களைக் கொண்டு அமைத்திருந்தது.

வ. உ. சி. யின் திருக்குறள் உரை அடையாளம் :

வ.உ.சிதம்பரனார் திருக்குறள் உரை பரிமேலழகரின் உரைக்கு முரண் பாடாக அமைகிறது. அறத்துப்பாலில் 76 திருக்குறளின் உரைகள் பரிமேலழகரின் உரைக்கு வேறுபடுகிறது. 12 திருக்குறளுக்கான உரையை வெளிப்படையாக மறுக்கின்றார். வ. உ. சி. 5 திருக்குறளுக்கான உரையை வெளிப்படையாக ஆமோதிக்கிறார். மீதம் உள்ள கருத்துகள் ஒத்துக் காணப்படுகின்றன. பரிமேலழகரின் உரை பண்டிதர்களுக்குரிய ஆழத்தை வழங்கினாலும் மணக்குடவர் உரை ஒழுக்க விளக்கத்தில் நிற்கிறது. ஆனால் சிதம்பரனாரின் உரை இவ்விரண்டின் நல்ல அம்சங்களையும் ஒருங்கிணைத்து இன்றைய வாசகர்களுக்குப் புரியும் வகையில் திருக்குறளை உயிர்ப்பிக்கிறது.

வ. உ. சி. யின் உரை அமைப்பு :

வ. உ. சி. அவரது உரையில் அவர் சொந்தக் கருத்துகளை அடைப்புக் குறியில் கூறுவது போல 'அகலம்' என்னும் தலைப்பில் இலக் கணக்குறிப்பு, வினா-விடை, மேற்கோள் முதலியவற்றைக் கூறு கின்றார். 'கருத்து' என்னும் தலைப்பில் கருத்தினை எழுதியுள்ளார். வ. உ. சி. படிக்கும் முறையையும் கூறுகிறார். முதன்முறை படிக்கும்போது பொருளையும் கருத்தையும் மட்டும் படிக்குமாறும், இரண்டாம் முறை படிக்கும் போது அகலத்தையும் சேர்த்துப் படிக்குமாறும் கூறுகிறார்.

பரிமேலழகரின் புலமை நோக்கிலிருந்து சிதம்பரனாரின் பொதுமக்கள் நோக்கு:

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'

பரிமேலழகர் இந்தத் திருக்குறளுக்கு உரை எழுதும் பொழுது பல இலக்கணம் கற்ற பண்டிதர்களுக்குப் புரியும் வண்ணம் கூறுகிறார். எடுத்துக்காட்டாக மேற்கூறிய திருக்குறள் தலைமை பற்றி வந்த எடுத்துக்காட்டு உவமையணி, அகரம் மற்றும் ஆதி பகவன் ஏன் தலைமையாக அமைந்துள்ளது, ஆதிபகவன் என்பது இரு பெயரொட்டுப் பண்புத்தொகை இதற்கான இலக்கணம் வடநூல் இலக்கணத்தில் இடம்பெறுகிறது இது போன்று பல்வேறு இலக்கண விதிகளைக் கொண்டு தன் உரையில் தமிழ் இலக்கணம் மட்டுமல்லாமல் வடநூல் இலக்கண முடிபையும் கட்டமைக்கிறார். இவரின் உரை நன்கு இலக்கணம் கற்ற பண்டிதர்களுக்கு மட்டும் புரியும்படி உள்ளது.

வ. உ. சி. உரை கடினமில்லாத எளிய தமிழில் அமைந்துள்ளது. 'எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாகவுடையன; (அது போல) உலகம் முதற் கடவுளை முதலாகவுடைத்து' என்ற கருத்தை நேரடியாகக் கூறுகிறார். பரிமேலழகர் போன்று இலக்கண விவரங்கள் அதிகம் இல்லை. இறைவனை நினைத்து செயலைத் தொடங்கினால் வாழ்க்கைச் செம்மையாகும் என்ற நடைமுறைக் கருத்தை வலியுறுத்துகிறார். சொல், இலக்கணத்தை பின் வைத்து கருத்தை மையமாகக் கொண்டு

திருக்குறளின் 'சாரத்தை' நேரடியாக முன்வைக்கின்றார். மேலும் அதுபோல என்ற சொல்லை அடைப்புக்குறியில் பயன்படுத்துவதன் மூலம் வ.உ.சி. தன் சொந்தக் கருத்தை வலியுறுத்துகிறார். பரிமேலழகரின் உரை தத்துவ ஆழம் கொண்டதாக இருந்தாலும் வ.உ.சிதம்பரனாரின் உரை எளிமை, ஆழம், தெளிவு ஆகிய மூன்றையும் ஒருங்கிணைக்கிறது. வ.உ.சிதம்பரனாரின் உரை திருக்குறள் உரை மரபில் தனித்த இடத்தைப் பெறுகிறது.

வ.உ.சி.யின் வாழ்க்கைச் சூழலுக்கேற்ற உரை அணுகுமுறை :

'தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'

தோன்றிற் புகழோடு தோன்றுக' என்ற வரி, மனிதன் சமூகத்தில் செய்யும் செயல்கள் புகழ் பெறும் வகையில் அமைய வேண்டியதைக் குறிப்பிடுகிறது. மாறாக, புகழற்ற வாழ்வு பயனற்ற பிறப்பாகவே கருதப்பட வேண்டும் என்ற கருத்தை 'அஃதிலார் தோன்றின் தோன்றாமை நன்று' என்ற அடியால் வலியுறுத்துகிறது.

இந்தத் திருக்குறளுக்கு வ.உ.சிதம்பரனார் வழங்கும் உரை, இலக்கண நுணுக்கங்களை முன்னிறுத்தாமல், வாழ்க்கை நடை முறையை மையமாகக் கொண்டதாக அமைகிறது. புகழ் என்பது வெறும் பெயரளவிலான பாராட்டல்ல; பயன் தரும் செயல்களின் விளைவு என்ற வாழ்வியல் உண்மையை அவர் தெளிவுபடுத்துகிறார். வாழ்வியல் அனுபவங்களுடன் இணைந்து, சமகால வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ற அறநெறி விளக்கமாகத் திகழ்கிறது.

முடிவுரை :

எளிய நடை, தெளிவான உரை அமைப்பு மற்றும் சமூக உணர்வு ஆகியவற்றால் சிதம்பரனாரின் உரை தனித்த அடையாளம் பெறுகிறது. வ.உ.சி. இறக்கும் பொழுது இரண்டே வருத்தங்கள் அவருக்கு இருந்தன. சுதந்திர இந்தியாவில் வாழ முடியவில்லை என்பதும் திருக்குறள் உரை முழுவதும் அச்சிட்டு வெளியிட முடியவில்லை என்பதும் ஆகும். வாழும்போது மட்டுமல்லாமல் இறக்கும் போதும் தாய்நாடும் திருக்குறளும் தான் அவர் நினைவில் இருந்தன. எல்லோரும் திருக்குறளைப் படிக்க வேண்டும் என்ற வ.உ.சி. யின் நல்லெண்ணத்தை நாம் நிறைவேற்றுவோம்.

துணை நூல்கள்:

1. திருவள்ளுவர் திருக்குறள் மணக்குடவருரை: அறத்துப்பால் - சிதம்பரம் பிள்ளை, வ. உ., பிரம்பூர், சென்னை, 1935.
2. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், வடிவேலு செட்டியார், கோ., சச்சிதாநந்த அச்சியந்திரசாலை, சென்னை, 1919.

38

வ.உ.சி. உரை எழுதிய சிவஞானபோதம்

முனைவர் இராம. வே. சிவஹரிபிரம்மசங்கர்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ பரமகல்யாணி கல்லூரி, ஆழ்வார்குறிச்சி.

ஆய்வுச்சுருக்கம்:

உலகச்சமயமாகக் கருதப்படும் சைவசமயத்தின் இலக்கியங்களைத் தோத்திர நூல்கள், சாத்திர நூல்கள் என இருவகையாக வகுத்துள்ளனர். இறைவனைப் போற்றிப்பரவும் பன்னிரு திருமுறைகளும் தோத்திர நூல்கள் என்றும் இறை, உயிர், உலகம் ஆகிய மூன்றின் உண்மை யினை எடுத்துரைக்கும் சைவசித்தாந்த நூல்கள் பதினான்கும் சாத்திர நூல்கள் என்று வழங்கப்படுகின்றன. மெய்ப்பொருள் உணர்த்தும் இப்பதினான்கு சாத்திரநூல்களுள் ஒன்றாகத் திகழ்வது சிவஞான போதமாகும். இந்நூலுக்கு வ.உ.சிதம்பரனார் அவர்கள் எழுதியுள்ள உரையின் சிறப்பினை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்க மாக அமைகின்றது.

திறவுச்சொற்கள்: சைவசித்தாந்தம், பதி, பசு, பாசம், மலப்பிணி, வீடுபேறு, மும்மலம்.

முன்னுரை:

சைவசித்தாந்தம் என்பது சிவம் என்ற பெயரால் தென்னாட்டிலும் இறைவன் என்ற பெயரால் உலகெங்கிலும் அழைக்கப்படும் முழுமுதற்கடவுளை மையமாகக் கொண்ட மிகச் சிறந்த தத்துவார்த்தமான சமயக்கோட்பாடாகும். உயிர்களின் வாழ்வின் இறுதி இலக்கை அறிவியல் பூர்வமாக விளக்கும் ஞானநெறியாகும். பதி (இறை), பசு (உயிர்), பாசம் (உலகம்), என்னும் முப்பொருள் உண்மையையும் அதன் இயல்பினையும் பேசுவதே சிவஞானபோதமாகும். பசுவானது பதியினைச் சென்று அடைவதற்குத் தடையாக இருக்கின்ற ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களின் பிணிப்பிலிருந்து விடு பட்டுப் பிறப்பற்ற நிலை பெற்றுப் பதியினை அணுகுவதற்குரிய நெறிகளைப் பகர்வதே சாத்திரநூல்களாகும். இந்நூல்களை இயற்றிய நால்வரையும் சந்தானக் குரவர்கள் என்று அழைப்பர். இவர்களில் சுவேதவனப்பெருமாள் என்னும் மெய்கண்டாரே முதன்மைக் குருவாகத் திகழ்கின்றார். மெய்கண்டார் இயற்றிய சிவஞானபோதமே ஏனைய பதின்மூன்று சாத்திரநூல்களுக்கும் முதன்மை நூலாகும். இந்நூலுக்கு வ.உ.சிதம்பரனார் எழுதிய உரை பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

வ.உ.சி.யின் தமிழ்ப்பணி

'கப்பலோட்டியதமிழன்' என்றும் 'செக்கிழுத்த செம்மல்' என்றும் 'தென்னாட்டுத் திலகர்' என்றும் அனைவராலும் அறியப்பட்ட

வ.உ.சிதம்பரனாருக்குத் தமிழும் தேசியமும் தமது இரு கண்களாகும். எந்த அளவிற்குத் தேசப்பற்றும், விடுதலை உணர்வும் கொண்டிருந் தாரோ, அதே அளவு தாய்மொழியான தமிழ் மீது பற்றும் இலக்கிய உணர்வும் கொண்டிருந்தார். அன்றைய அரசியல் களத்தில் ஒரு சாதனையாளராகவும் தன்னிகரில்லாத் தலைவராகவும் தலைவணங்கி ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்தியத் தலைவராகவும் விளங்கினார்.

வ.உ.சிதம்பரனாருக்கு இளம்பிராயத்திலேயே ஒரு நல்ல இலக்கிய அடித்தளம் அமைந்தது. வ.உ.சி. யின் முன்னோர்கள் தமிழ் மொழியில் ஆர்வம் உள்ளவர்களாக விளங்கியதோடு; கவிஞர்களாகவும் திகழ்ந்தனர். ஓட்டப்பிடாரத்தில் இவருடைய வீட்டிற்கு ‘கவிராயர் வீடு‘ என்ற பெயரும் உண்டு. வ.உ.சி. யைச் ‘செயற்கரிய செய்த பெரியார்‘[1] என்று வருணித்த மு. வரதராசனார், ‘ஒரு நாடு உரிமையோடு விளங்கவேண்டுமானால் முதலாவதாக அதன் பொருளாதாரச் சுரண்டலை தடுக்க வேண்டும்; இரண்டாவதாகத் தாய்மொழியின் வாயிலாக அறிவை வளர்க்க வேண்டும். இந்த இரண்டும் எல்லா நாடுகளுக்கும் பொதுவான உண்மை இதை நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு நன்றாக உணர்ந்து வாழ்க்கையில் காட்டித் தொண்டு செய்தவர் வ.உ.சிதம்பரனார்பரம்பிள்ளை‘[2] எனக் குறிப்பிடுவதில் இருந்து வ.உ.சி.யின் தமிழ்ப்பணியின் மேன்மையை அறிய முடிகின்றது. மொழி பெயர்ப்பாளராக மட்டுமின்றி நூலாசிரியர், உரையாசிரியர், கட்டுரையாளர் எனப்பல பரிமாணங்களிலும் தமிழ் இலக்கியப் பணியினைச் செய்த பெருமை வ.உ.சி. அவர்களையே சாரும். ‘அவர் தம் வாழ்நாளின் இறுதியில் உரை எழுதியது சிவஞானபோதச் சூத்திரங்களுக்காகும்.‘[3] என்பார் தகடூர் டி.எம்.சண்முகவடிவேல் அவர்கள்

உரையின் சிறப்பு:

சைவ சித்தாந்தச் சாத்திரங்களில் முதன்மை நூலாகத் திகழ்வது சுவேதவனப்பெருமாள் என்னும் மெய்கண்டாரால் இயற்றப்பட்ட சிவஞானபோதமாகும். இந்நூலுக்கு முதன் முதலாகச் சிற்றுரையும் பேருரையும்வழங்கியவர்சிவஞானமுனிவர்ஆவார்.இவரதுஉரையானது பல மதக்கோட்பாடுகளையும் அவற்றின் கண்டனங்களையும் காட்டி இருந்தமையால் இவ்வரையினும் எளிய நேரிய உரையினை சிவஞான போத நூலுக்குத் தர எண்ணினார் வ.உ.சி அவர்கள். இதன் விளைவாக நாள் ஒன்றிற்கு இரண்டு மணி வீதம் பன்னிரண்டு நாட்களுக்குச் சிவஞானபோதத்தை ஆராய்ந்து உரை எழுதினார். இதுகுறித்து நாவலர் சோமசுந்தரபாரதி அவர்களுக்கு 12.09.1935ஆம் நாளன்று எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

‘சிவஞானபோதத்திற்கு ஓர் உரை எழுதி ‘தினமணி‘ வருஷ அனுபந்தத்திற்கு அனுப்பியுள்ளேன். சிவஞானசுவாமிகள் உரையைக் கண்டித்தால் சைவர் பலர் மனம் நோகுமென்று கருதி அது செய்யாது விடுத்துள்ளேன். என் உரை சுவாமிகள் உரைக்கு பல இடங்களில் வேறுபட்டும் மாறுபட்டும் உள்ளது அதற்குப் போலிச் சைவர் குழாம் என்னை நிந்தித்தல் கூடும். அந்நிந்தனையை வந்தனையாகவே

கொள்ளும் மனநிலை உடையேன் நான் தற்காலம்'[4] இக்கூற்றானது வ. உ. சி. யின் காலத்தில் வாழ்ந்த மக்களிடையேயான மனப்போக்கையும் அவர்களிடையே இருந்து வந்த சமயப்போராட்டங்களையும் உணர்த்துவதாக அமைகின்றது. சிவஞானபோதம் வ.உ.சி. யின் உரையுடன் 1935 ஆம் ஆண்டு தூத்துக்குடி அய்யனார் பிரஸில் அச்சாகி வெளி வந்தது. அவர் அந்த நூலுக்கு எழுதிய உரைப்பாயிரத்தை பார்க்குங்கால் சமுதாய நலனுக்காக அவர் எவ்வளவு அக்கறையுடன் செயல்பட்டார் என்பது தெரிய வருகின்றது.

'திருவள்ளுவரின் திருக்குறள் சிவஞானபோதம் கைவல்லியநவநீதம் என்னும் நூல்கள் முறையே நீதி நூல்களிலும் சித்தாந்த நூல்களிலும் வேதாந்த நூல்களிலும் ஒப்புயர்வற்றவையென்பது எனது அபிப்பிராயம். இம்மூன்று நூல்களிலும் முந்திய இரண்டின் உரைகளுடைய கடின நடையும் பெரிய அளவும் அவற்றைத் தமிழ்மக்கள் கற்பதற்குக் கையில் எடுக்காதவாறு அச்சுறுத்துகின்றன. அவ்வச்சத்தை நிவர்த்திக்கும் பொருட்டு எளிய நடையிலும் சிறிய அளவிலும் அவற்றிற்கு உரைகள் எழுத வேண்டுமெனப் பல ஆண்டுகளுக்கு முன் நினைத்தேன்.'5 என வ.உ.சி. அவர்கள் கூறியுள்ளமையிலிருந்து, இவ்வுரையில் ஏனைய உரைகளில் காணப்படும் பல மதக்கோட்பாடுகளும் அவற்றின் கண்டனங்களும் இடம்பெறாது என்பது புலனாகின்றது.

ஆகவே மக்கள் பல்வேறு பெயர்களோடும் வடிவுகளோடும் காணப் படினும் அவர்களெல்லாம் மக்கட் சாதியினரேயாவது போல் மதங்கள் பல்வேறு பெயர்களோடும் கொள்கைகளோடும் காணப்படினும் அவைகள் எல்லாம் ஒப்புயர்வற்ற ஒரே இறைவனைப் பற்றியே பேசுகின்றன. என்னும்படியால் தம் உரையில் பல சமயக் கோட்பாடுகளையும் அவற்றின் பொய்யான உயர்வு தாழ்வுகளையும் பற்றி அவர் பேச விளையவில்லை போலும்.

இவ்வுலகத்தின் கண் தோன்றி நிலவுகின்ற சமயங்கள் பல அவற்றுள் கடவுள் இல்லை என்று சொல்லும் சமயம் ஒன்று. அதனை நாத்திக சமயம் என்பர் மற்றைய சமயங்கள் எல்லாம் கடவுள் உண்டு என்று சொல்பவைகளேயாகும். அவற்றை ஆத்திகசமயம் என்பர் நாத்திகர்கள் அண்டங்களின் அமைப்பும் அண்டங்கள் ஒன்றையொன்று ஒழுங்காக சுற்றி வருதலும் ஒவ்வொரு அண்டத்திலும் படைத்தல், காத்தல், அழித்தல் நிகழ்வது இயற்கையின் சக்தியால் என்று கூறுகின்றனர்.

ஆத்திகர்கள் அவைகளெல்லாம் ஒழுங்காக நிகழ்ந்து வருவது கடவுளின் சக்தியால் என்று கூறுகின்றனர் இவ்விரு தரப்பினரும் கூறும் இயற்கை சக்தியும் இறைசக்தியும் ஒன்றே என்பதை உணர்ந்தால் சமய வேற்றுமைகளும் பூசல்களும் கெட்டுவிடும் என்பதைத்தம் உரை வழியே தெரிவிக்கின்றார்.

சமயத்தவர்களெல்லாம் தம்முடைய சமயமே மெய்யான அல்லது மிக உயர்ந்த சமயமென்றும் தம் சமயக்கடவுளே உண்மையானது, சர்வசக்தியும் சர்வஞானமும் சர்வவியாபகமும் வாய்ந்தவரென்று

ஒப்புவதோடு பிற சமயங்களெல்லாம் பொய்யான அல்லது தாழ்ந்த சமயமென்றும் அவைகூறும் கடவுளும் பொய்யானது என்றும் என்று கூறி வேறுபடுகின்றனர்.

ஆனால் சர்வசக்தியும் சர்வஞானமும் சர்வவியாபகமும் உள்ள பொருள் ஒன்று தான் இருக்க முடியுமேயன்றி, ஒன்றிற்கு மேல் இருக்க முடியாது. என்னும் மறுக்கமுடியாத உண்மையினைப் பகர்வதே சிவஞானபோதமாகும். ஒவ்வொரு சமயங்களிலும் கடவுளுக்கு சுட்டப்படுகின்ற பெயரும் வடிவும் அவ்வச்சமயத்தினரின் மொழிக்கும், உள்ளத்திற்கும், கண்களுக்கும், செவிகளுக்கும் இயைந்தவாறு கற்பிக்கப் பட்டவைகளே ஆகும்.

'ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லாற் காயிரந்
திருநாமம் பாடி நாந் தெள்ளேணங் கொட்டாமோ.' 6

எனும் மாணிக்கவாசகரின் அறிவிப்பையே சாத்திரநூல்களும் எடுத் துரைக்கின்றன.

இக்கருத்தினை மக்களனைவரும் உணர்ந்து சமயப் பிணக்குகளற்ற வாழ்வை வாழவேண்டும். எனும் உயரிய நோக்கமே சிவஞான போதத்திற்கு எளிய உரை வகுப்பதற்கு வ.உ.சி. யை உந்தியிருந்ததை அவரின் உரைத்திறத்தின் வழி அறிய முடிகின்றது.

முடிவுரை:

உலகிலுள்ள எச்சமயத்தவராலும் மறக்கப்படாத தத்துவமாகத் திகழும் சைவ சித்தாந்த நெறியினைச் சிறப்பாக எடுத்துரைக்கும் நூல்களான சாத்திரநூல்களுள் அளவில் சிறியதும் கருத்தில் பெரியதுமாக விளங்குகின்ற சிவஞானபோதத்திற்கு தாம் எழுதிய எளிய சிற்றுரை வாயிலாக வ.உ.சி. அவர்களுக்கிருந்த ஆழ்ந்த சித்தாந்த நெறிப்பாடும் சைவசமயத்தின் உண்மை உறுதிப்பாடும் புலனாகின்றன.

பிறப்பும் மலப்பிணிப்பும் நீங்கி உயிர்கள் இறைவனை அடையும் வீடுபேற்று நிலையினையே சித்தாந்த நூல்கள் எடுத்துரைக்கின்றன. சிவஞானபோதத்தின் சூத்திரப்பொருளை தெளிவுற உணர்த்த இயற்றப்பட்டவையே ஏனைய பதின்மூன்று சாத்திரநூல்களுமாகும். அத்தகைய கருத்துச்செறிவு மிக்க நூலுக்கு எளிமையான உரை வகுத்தல் மிக அரியதாகும்.

இருப்பினும் சைவச்சாத்திரங்களே நாடு, கண்டம், மொழி, இனம், சமயம், கடந்து ஓரறிவு முதல் ஆறறிவுடைய அனைத்து உயிர்களின் பேதமற்ற நிலையினை உணர்த்துகின்றன. எனவே பல்வேறு காரணங்களால் வேறுபட்டுக் கிடக்கும் சமூகக்கட்டமைப்பை ஒழுங்குபடுத்துவதற்கும் வேறுபாடற்ற மனித வாழ்வை எடுத்துரைப்பதற்கும் தமக்குக் கிடைத்த சிறந்த அறிவுக்கருவியாகக் கருதியே சிவஞானபோத நூலுக்கு யாவரும் உணருமாறு இனிய எளிய உரையினை வ.உ.சி. அவர்கள் தந்துள்ளார்கள். என்பதை இவ்வாய்வின் மூலம் அறியமுடிகின்றது.

அடிக்குறிப்புகள்:

1. தி.நெ.வள்ளிநாயகம் — தீரர் சிதம்பரனார் (ப.110)
2. தி.நெ.வள்ளிநாயகம் - தீரர்சிதம்பரனார் (ப.116)
3. டி.எம்.சண்முகவடிவேல் - தியாகதீபங்கள் (ப.17)
4. தி.நெ.வள்ளிநாயகம் - தீரர்சிதம்பரனார் (ப.124)
5. தி.நெ.வள்ளிநாயகம் - தீரர்சிதம்பரனார் (ப.150)
6. மாணிக்கவாசகர் - திருவாசகம், (திருத்தெள்ளேணம் - பா.எ.1)

துணைநூற்பட்டியல்:

1. சிவஞான போதம் - சிதம்பரம் பிள்ளை, வ.உ., வ.உ.சி. நூலகம், சென்னை,2004.
2. சிவஞான போதம், சூத்திரமும் உரையும், பாண்டியன் அச்சகம், 1955.
3. திருவாசகம் — மாணிக்கவாசகர், கழக வெளியீடு, திருநெல்வேலி, 1939.
4. வீர சிதம்பரனார், சுப்பிரமணிய ஐயர், எம். எஸ்., ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை,1952.
5. கப்பலோட்டிய தமிழன், சிவஞானம், ம. பொ., இன்ப நிலையம், சென்னை, 1947.
6. தீரர் சிதம்பரனார், தி.நெ. வள்ளிநாயகம், அமுதா நிலையம், சென்னை, 2000.

1935இல் வ.உ.சி. வெளியிட்ட யின் சிவஞான போத உரையின் மறுபதிப்பு (1999)

39

வ. உ. சி.யின் உரைத்திறம்

ரா. விசாலாட்சி
தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

முன்னுரை:

தமிழ்கூறும் நல்லுலகம் விடுதலைப் போராட்ட வீரர் வ.உ.சிதம பரனார் வெள்ளையர்க்கு எதிராகக் கப்பலோட்டினார் என்றும், அதனால் 40 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார் என்றும், சிறையில் செக்கிழுத்தார் என்றும் மட்டுமே அறியும். அவர் வீரம் செறிந்த அரசியல் வித்தகர், ஆன்மிக முத்தர், பதிப்பாசிரியர், இதழாசிரியர், மொழிபெயர்ப்பாளர், தொழிற்சங்கம் நிறுவனர், இந்தியக் கப்பல் நிறுவனச் செயலாளர், வல்லாண்மை சான்ற வழக்குரைஞர் என அவரை வாசித்தவர் மட்டுமே அறிவர்.

மெய்யறம், மெய்யறிவு, பாடல்திரட்டு, தன் வரலாறு ஆகிய அரிய கவிதை நூலாக்கச் செம்மல்; திருக்குறள் மணக்குடவர் உரை, தொல்காப்பியம் இளம்பூரணர் உரை நூல்களைப் பதிப்பித்த பைந்தமிழ்ச் செம்மல். புகழ் வாய்ந்த ஆங்கிலக் கவிஞரான ஜேம்ஸ் ஆலனின் ஆங்கிலக் கவிதைகளை, மனம் போல் வாழ்வு, அகமே புறம், வலிமைக்கு மார்க்கம், சாந்திக்கு மார்க்கம் எனும் சீரிய தலைப்புகளில் மொழிபெயர்த்த அறநெஞ்சினர். மேலும், திருக்குறள், இன்னிலை, சிவஞானபோதத்திற்கு அருமையான விளக்கமான தெளிவான உரைகளை இவர் தமிழுலகிற்குத் தந்துள்ளார். அதேபோன்று, இராமாயணம், நன்னூல், தொல்காப்பியம், திருக்குறள், அகராதி, நிகண்டு, ராமசாமி கவிராயரின் குற்றால புராணம், அவ்வையாரின் நூல்கள், நான்மணிக்கடிகை, நன்னெறி என அனைத்து அற நூல்களையும் குற்றமறக் கற்றுத் தேர்ந்தவர்.

திருக்குறள் உரைவளம்:

திருக்குறளின் மணக்குடவர் உரை இவரைப் பெரிதும் ஈர்த்ததன் காரணமாக இவர் இந்நூலை 1935 இல் பதிப்பித்தார். அதோடு மட்டுமின்றி, பெரும் புலவர்களுக்கே குழப்பம் தோன்றும் குறட்பாக்களில் நடுநிலைமையோடு செம்மையான ஒரு உரையையும் தந்துள்ளார். இவ்வுரையில் செப்பமான உரைநடையும் நுட்பமான மொழித்திறனையும் நம்மால் காணமுடியும். இந்நூலின் அறத்துப்பால் முன்னுரையிலேயே தன்னுடைய உரை எந்தெந்த உரையாசிரியர்களுடன் ஒத்துப் போகிறது என்றும், எந்தெந்த உரையாசிரியர்களுடன் வேறுபடுகிறது என்றும், அவரே இடத்தைச் சுட்டிக்கூறியுள்ளார். அதேபோன்று, திருக்குறளின் மூலநூலில் உள்ள பாட வேறுபாடுகளையும் தெளிவுடன் விவரிக்கிறார். திருக்குறளில் உள்ள அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்ற

மூன்று அதிகாரங்கள் கொண்டது என்ற நிலைப்பாட்டில் இருந்துமாறி, சற்று அதனை பகுத்துக் கூறுகிறார். அதாவது, அறத்துப்பாலில் உள்ள முதல் மூன்று அதிகாரங்கள் திருக்குறளுக்குப் பாயிரம் என்றும், அதன் பிறகு உள்ள இல்லறவியல், துறவறவியல், வீட்டியல், ஊழியல் என்றும், பொருட்பாலில் உள்ள அதிகாரங்களை அவ்வாறு ஏற்றுக்கொண்டும், இன்பத்துப்பாலில் உள்ள அதிகாரங்களை ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று, இருபாற் கூற்று என மூன்று இயல்களாகப் பிரித்துள்ளார்.

அறத்துப்பாலில் முதல் மூன்று இயல்களான கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை ஆகிய மூன்று இயல்களும் வள்ளுவர் பெருமானால் இயற்றப்பட்டது அன்று என்றும், அது இடைச்செருகல்களாக திருவள்ளுவருக்குப் பிறகு இருந்த புலவர்களால் எழுதப்பட்டது என்றும், இவர் கூறி அதற்கான சான்றுகளையும் குறிப்பிட்டுள்ளார். இந்த மூன்று இயல்களில் உள்ள பாக்கள் நூலில் உள்ள பாடலைப் போல செரிவானதாக இல்லை என்ற முதலாவது காரணத்தையும், மெய்யறிதல் துறவு என்று அதிகாரங்கள் நூலில் இருக்கின்ற காரணத்தினால் கடவுள் வாழ்த்து, நீத்தார் பெருமை பாயிரமாக வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று இரண்டாவது சான்றையும் முன்வைக்கிறார். இதுபோன்று இன்னும் பல சான்றுகளையும் இதற்காக முன்வைக்கிறார். மேலும் இம்மூன்று அதிகாரங்களையும் நீக்க மனமில்லாத வ.உ.சி. அவர்கள் இதற்கு ‘இடைப்பாயிரம்‘ என்று பெயரிட்டு நூலில் பதிப்பித்துள்ளார். திருவள்ளுவமாலையை ‘சிறப்புப் பாயிரம்‘ என்று கூறி இந்நூலை செய்துள்ளார். மேலும், முதல்குறிப்பு அகராதியையும், தவறான சொற்கள் மற்றும் சரியான சொற்கள் என மூலபாட வேறுபாடுகளையும் வகைமைப்படுத்தியுள்ளார்.

திருக்குறளின் வெறும் பதத்திற்குப் பொருள் மட்டும் கூறாது அதற்கான விரிவான விளக்கத்தை அகலம் என்றும், அதனுடைய மையக்கருத்தை கருத்து என்றும், எளிமையாக விளக்குகிறார். மேலும், தேவைப்பட்ட இடங்களில் இலக்கணக் குறிப்பு தந்துள்ளார். முந்தைய உரைகளை மேற்கோள் காட்டியும் உரை இயற்றியுள்ளார். மற்ற உரையாசிரியர்களை மறுக்கும் பொழுது மென்மையான சொல்லாடலையே பயன்படுத்தி உள்ளார் என்பது, இன்றைய உரையாசிரியர்கள் கவனிக்க வேண்டிய ஒரு மிகப் பெரிய பண்பாகும். அதேபோன்று, மூலபாடத்தையும் சுட்டி உரை எழுதியுள்ளார் என்பது கூடுதல் சிறப்பாக இவரது உரையில் இருக்கிறது. திருக்குறளில் வரிசை எண்களைக் குறிப்பதற்கு கூட, இவர் தமிழெண் கணக்கு முறையையே பின்பற்றி உள்ளார் என்பது இவரின் தமிழ்ப் பற்றைக் காட்டுகிறது.

‘தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு‘ - (குறள்-98)

என்ற குறளில் ‘நாவினால்‘ என்பது பிற உரையாசிரியர் கொண்ட பாடம். ஆனால், வ.உ.சி.யோ, ‘வாயினால்‘ என்றே சொல்கிறார். இதனை விளக்கும் வ.உ.சி., ‘வாயினால் என்பது எதுகையும் மோனையும் ஒத்துத் தொடையின்பம் தருதல் காண்க‘. அன்றியும், வாய் என்பது ஆசிரியர் தம் நூலில் அடிக்கடி வழங்கும் சொற்களில் ஒன்று. ஆதலால், ‘வாயினால்‘

என்பதே பாடம் எனக் கொள்ளப்பட்டது" என நிறுவுகிறார் வ.உ.சி. 'வாய்'எனும் சொல் திருக்குறளில் 11 இடங்களில் இடம்பெற்றுள்ளது.

'தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்' *(குறள்-171)*

என்னும் குறள் பெயர்த்தெழுதியவர் செய்த பிழைக்குறள் என்கிறார் அவர். 'தீயவே தீய பயத்தலால்' என்றே இருக்க வேண்டும் என்று கூறி அதனை நிறுவுகிறார். தீ நன்மையையும் தீமையையும் பயக்கும். ஆனால், தீயன தீயவே பயக்கும் என்பதே குறளாக இருக்கும் என்று மொழிகிறார்(குறள் 171). இவ்வாறாக, வ.உ.சி. திருக்குறளுக்கு எளிமையான தெளிவான, நுட்பம் மிகுந்த உரையை தந்துள்ளார்.

இன்னிலை உரைவளம்:

இன்னிலை நூலை இயற்றியவர் பொய்கையார் ஆவார். இன்னிலை பற்றி பல கருத்து வேறுபாடுகள் தோன்றினாலும் இந்நூலுக்கு வ.உ.சி. செய்த உரை தமிழுலகிற்கு முக்கியமான படைப்பாக உள்ளது. இன்னிலை 1917 இல் த.வேதியப் பிள்ளையால் பதிப்பிக்கப்பட்டது.முன்னுரை, ஆசிரியர், உரைப்பாயிரம், பதிப்புரை ஆகிய நான்கும் வ.உ.சி. அவர்களே எழுதியுள்ளார். இன்னிலைக்கு கடவுள் வாழ்த்து பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்று வ.உ.சி. குறிப்பிட்டுள்ளார்.இன்னிலை 45 வெண்பாக்களில் அறம், பொருள், இன்பம் எனும் முப்பாலோடு வீட்டுப்பால் எனும் நான்காவது பாலையும் கொண்டுள்ளது. வீட்டுப்பால் இல்லியல், துறவியல், எனும் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு பாடலுக்கும், அநுவயம் என்ற பகுதியில் செய்யுளை எளிமையாகப் படிக்கும் வகையில் பிரித்து எழுதியும், பதவுரையும், பொழிப்புரையும், கருத்துறையும், விசேட உரை என்னும் விருத்தி உரையும் வ.உ.சி. செய்துள்ளார். மேலும், இலக்கணக்குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம் ஆகியவற்றையும் தந்துள்ளார். இன்னிலைக்கு அரும்பத அகராதியையும் இயற்றியுள்ளார். இவ்வுரையில் திருக்குறள் ஏறத்தாழ 50 இடங்களில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், பாரதம், நான்மணிக்கடிகை, பேராசிரியர் உரை, அறநெறிச்சாரம், நாலடி, இராமாயணம், யாப்பருங்கலக்காரிகை, நல்வழி, சீவகசிந்தாமணி, கந்தபுராணம், திருவாய்மொழி, காஞ்சிபுராணம், நீதிநெறி விளக்கம், குசேல பாக்யானம், திருக்கோவை, வளையாபதி, திருக்குற்றாலப்புராணம், இறையனார் அகப்பொருள், சிலப்பதிகாரம், திருவள்ளுவமாலை, பிரமோத்த சந்திரோதயம், தொல்காப்பியம், திரிகடுகம், மூதுரை, பிரமோத்தர காண்டம், காசி காண்டம் என ஏறத்தாழ 26 நூல்கள் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. இன்னிலைக்கு வ.உ.சி. எழுதிய உரை மிகவும் போற்றுத்தக்க வகையிலும் அவருடைய இலக்கிய ஈடுபாடும் அவரின் செறிந்த மொழி நடையையும், செப்பமான உரைநடையையும் கொண்டுள்ளது.

சிவஞானபோத உரை சிறப்பு:

வ.உ.சி. சைவத்தின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அதன் காரணமாகவே, 'தூத்துக்குடி சைவ சித்தாந்தச் சபை' என்ற ஒரு

அமைப்பை தனது இல்லத்திலேயே ஏற்படுத்தினார். அதன் காரணமாக, சிவஞான போதத்திற்கு உரை எழுதும் எண்ணம் தோன்றியது எனலாம்.

சிவஞானபோதம் மெய்கண்டாரால் இயற்றப்பெற்றது. 13ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. பன்னிரண்டு நூற்பாக்கள் கொண்டது. சிவஞானபோதம் 1935-இல் வ.உ.சி. உரையுடன் பதிப்பிக்கப்பட்டது. வ.உ.சி. யின் தமிழ்ப்புலமையினையும், தத்துவப் பயிற்சியினையும், கருத்தியல் நிலைப்பாட்டையும் புலப்படுத்தும் அரிய நூலாக இந்நூல் கருதப்படுகிறது.

வ.உ.சி. ஏனைய உரைகளில் காணும் பிறமதக் கண்டனங்கள், தமிழா? வடமொழியா? என்னும் சர்ச்சை ஆகியன தவிர்த்து , சிவஞான போதத்தின் வழி சித்தாந்தமும் வேதாந்தமும் ஒன்றே என்னும் சமரச நிலையெய்தி, எளிய நடையில் சிறிய அளவில் இவ்வுரையை எழுதி யிருப்பதாக உரைப்பாயிரத்தில் தெளிவுபடுத்தியிருக்கிறார். வ.உ.சி. யின் சமரச நிலைப்பாடு விடுதலைப் போராட்டக் காலத்தின் விளைவு எனலாம். சூத்திரத் தலைப்பு, சூத்திரம் , பொருள், அகலம், கருத்து எனச் சீராக அமைத்து உரை வரைந்த வ.உ.சி. அகலம் என்னும் பகுதியில் இலக்கணக் குறிப்புகளைத் தந்துள்ளார். வ.உ.சி. க்கு முன்னரே பல உரையாசிரியர்கள் சிவஞானபோதத்திற்கு உரை எழுதியிருப்பினும் சிவஞான முனிவரின் உரையையே இவர் ஆதாரமாகக் கொண்டு, இவர் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளார். இதில் பல இடங்களில் சிவஞான முனிவரை ஒத்தும், எதிர்த்தும் இருக்கிறார். எளிமையான மொழி நடையை கையாண்டுள்ள வ.உ.சி.. சைவ நெறியின் அறச்சாரங்களை வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் எளிதில் உணர்ந்து, உள்ளாறும்படி இயற்றியுள்ளார். இவ்வாறாக தன்னுடைய ஒவ்வொரு உரையிலும் தனக்கென ஒரு தனி உத்தியினை உருவாக்கி இலக்கியங்களை எளிமையான மக்களிடம் கொண்டு சென்றதில் முக்கியப் பங்கு வகித்துள்ளார்.

இலக்கியங்களை எழுதுவதோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல் அதனை போதிக்கும் நல்ல ஆசிரியராகவும், சிறந்த தேசியவாதியாகவும், சுதேசி பித்தனாகவும், திலகரின் சீடராகவும், திருக்குறள் அன்பராகவும், உயிர்கொலையை வெறுத்தவராகவும்,இளகிய மனம் கொண்டவராகவும், இன்று நம்மில் பலர் மனதில் மறக்கப்பட்ட இலக்கியவாதியாகவும், தனது இறுதி காலத்தில் சிறிய மளிகைக் கடை விற்பனையாளராகவும் வாழ்ந்து மறைந்தவரே வ.உ.சி. என்று அழைக்கப்பட்ட வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம்.

துணைநூற்பட்டியல்:

1. வ.உ.சி. நூல் திரட்டு – வீ. அரசு, புதுமைப்பித்தன் பதிப்பகம், சென்னை, 2001.
2. திருக்குறளும் தேசாபிமானி வ.உ.சிதம்பரம் பிள்ளை விருத்தியுரையும், வித்தியாநுபாலனயந்திரசாலை, சென்னை 1935.
3. வ.உ.சி. ஒரு பன்முகப்பார்வை – முனைவர் எஸ். கண்ணன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2005.

40

தமிழ் உரை மரபில் வ.உ.சி.: மரபும் புதுமையும்

முதுமுனைவர் ப. திருஞானசம்பந்தம்,
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி), மதுரை.

ஆய்வுச் சுருக்கம்:

பழம்பனுவல்களுக்கான பதிப்பு, உரைசார்ந்த பணிகளை இக் கட்டுரை உரையாடலுக்கு உட்படுத்துகிறது. சிறை வாழ்க்கையிலும் அதற்குப் பிறகான வாழ்க்கையிலும் தமிழ்ப்பணியைத் தம் முழுநேரப் பணியாக வ.உ.சி. மேற்கொண்டிருந்தார். சுவடிகளைத் தேடுவது, ஒப்பிட்டுப் பார்ப்பது; அரும்பதங்களுக்கு மட்டும் தன்னுடைய உரையைத் தருவது எனத் தேர்ந்த ஆய்வாளராகவும் தமிழ்ப் பற்றாளராகவும் தொழிற்பட்டிருக்கிறார். தொல்காப்பிய இளம்பூரணருரை, திருக்குறள் மணக்குடவருரை, சிவஞான போத உரை, திருக்குறள் விருத்தியுரை என இலக்கணம், இலக்கியம், சித்தாந்தம் ஆகிய துறைசார்ந்த பனுவல்களை எளிமைப்படுத்தித் தமிழ்ச் சமூகத்திற்குக் கையளிக்கப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார். அப்பனுவல்களை வ.உ.சி. புரிந்துகொண்ட தன்மையையும் அவற்றை எளிமைப்படுத்தித் தர வேண்டியிருந்த தேவையினையும் இக்கட்டுரை விவரிக்கின்றது.

திறவுச்சொற்கள்: தொல்காப்பியம் - இளம்பூரணர் உரை - திருக்குறள் - மணக்குடவர் உரை - பரிமேலழகர் உரை - விருத்தியுரை- சிவஞான போதம் - சித்தாந்தம், வேதாந்தம்

முன்னுரை

இந்திய தேசிய இயக்கம் என்ற சட்டகம் மட்டுமே அவற்றை வரை யறுத்துவிடப் போதுமானதன்று' (ஆ.இரா. வேங்கடாசலபதி :1999:11) என்ற கருத்து நோக்கத்தக்கது.தற்காலத்தில் வ.உ.சி. குறித்த உரை யாடல் வெவ்வேறு தளங்களில் நிகழ்த்தப்படுகின்றன. அவற்றுள் அவர் செய்த தமிழ்ப்பணிகளும் உரிய கவனத்தைப் பெறத் தொடங்கியுள்ளன. உரை, பதிப்பு குறித்த இக்கட்டுரை முன்வைக்கும் உரையாடல்களைக் கீழ்க்கண்டவாறு தொகுத்துக்கொள்ளலாம்.

- காலனிய ஆதிக்கத்திற்கெதிராக, வணிகம், தொழில் ரீதியிலான போராட்ட வடிவத்தை முன்னெடுத்தவர் வ.உ.சி. புத்தொளிக் கல்விப் பின்புலத்தில் வழக்கறிஞராக உருவான வ.உ.சி. தென்னகத்தில் அறிவார்ந்த சமூகச் செயல்பாடுகளில் தொழிற்பட்டவர்.

- வ.உ.சி. என்ற ஆளுமையின் செயல்பாடுகளை அவரின் சிறைவாழ்க்கைக்கு முந்தைய, பிந்தைய வாழ்வியல் அனுபவங்களின் ஊடாக உரையாடலுக்குட்படுத்த முடியும்.

- வ. உ. சி. யின் எழுத்துப்பணி, பதிப்புச் செயல்பாடுகள். குறிப்பாகத் தொல்காப்பிய இளம்பூரணருரை, திருக்குறள் மணக்குடவருரை, சிவஞான போதம் உரை ஆகியவற்றின் பரவலாக்கத்தில் கொண்டிருந்த கவனம்.

காங்கிரஸ் இயக்கம்

தமிழ்ச்சமூக வரலாற்றில் வ.உ.சி.யின் காங்கிரஸ் இயக்கம் சார்ந்த செயல்பாடுகள் பேசப்படுமளவு, பெரியாரின் வகுப்புவாரி உரிமைகள் போராட்டத்தில் அவர் காட்டிய ஈடுபாடு பேசப்படுவதில்லை. காங் கிரஸின் சென்னை மாகாண சங்கத்தில் இணைந்து செயல்பட்டார். இது வேறு தலைவர்களிடம் காணாத தனிப்பண்பு. தாம் வாழும் சூழலில் உருவாகும் அரசியல் போக்குகளில் இணைந்து செயல்பட்டவராகவும் இவர் இருக்கிறார். இந்திய விடுதலை மக்களுக்கான அரசியல் விடுதலையாக மட்டுமல்லாது பொருளாதார விடுதலையாகவும் இருக்க வேண்டும் என்றார். இதை இவர் உருவாக்கிய சுதேசிக்கப்பல் மூலம் சாத்தியப்படுத்தினார். 1908இல் தூத்துக்குடியில் நடந்த கோரல் மில் தொழிலாளர் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்தினார். மக்களுடைய ஆதரவு இவருக்கு அதிகம். இவரது செயல்பாடுகள் ஆங்கில அரசால் உற்றுநோக்கப்பட்டதன் விளைவாகக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

1908-1912 வரையிலான சிறைவாழ்க்கை என்பது வ.உ.சி.யின் வேறொரு பரிமாணத்தைக் கொண்டது. ஜேம்ஸ் ஆலனின் எழுத்துகள் மீது ஈடுபாடு கொண்ட வ.உ.சி. அவருடைய 'மனம்போல வாழ்வு', 'அகமே புறம்', 'வலிமைக்கு மார்க்கம்', 'மெய்யறிவு' உள்ளிட்ட நூல்களைச் சிறையிலிருந்தே மொழிபெயர்க்கிறார். மேலும் வ. உ. சி. அவர்களுக்குத் திருக்குறள், தொல்காப்பியத்தின் மீது மிகுந்த ஈடுபாடு. தன் வாழ்நாள் முழுவதும் இவ்விரு நூல்களை மரியாதைக்குரிய பொருளாகக் கருதிப் பாராட்டினார். ஆங்கிலத்தில் திருக்குறளின் அறத்துப்பாலைச் சிறையில் இருந்தபோதே மொழிபெயர்த்தார். இது அச்சானதாகத் தெரியவில்லை. துன்பமான சிறை வாழ்க்கையிலும்கூட அரிய மொழிபெயர்ப்பு பணியில் ஈடுபட்டது அவருடைய அறிவார்ந்த செயல்பாட்டைக் காட்டுகின்றது.

சி.வை.தாமோதரம் பிள்ளை, உ.வே.சாமிநாதையர் ஆகியோர் பதிப்புத் துறையில் தீவிரமாகத் தொழிற்பட்டிருந்த காலத்தில் வ.உ.சி. யும் பழந்தமிழ் நூல்களை அச்சிடும் பணியில் முனைப்புக் காட்டினார். இதன் விளைவாகத் திருக்குறள் மணக்குடவருரை, தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணருரை, சிவஞானபோதம் உரை ஆகியவற்றின் மூலம் தனக்கெனத் தனித்த அடையாளத்தை உருவாக்கினார். இம்மூன்று நூல்களின் பதிப்பாக்கங்களிலும் உரையாக்கத்திலும் வ. உ. சி.யின் செயல்பாட்டைப் பின்வருமாறு பகுத்துக் கொள்ளலாம்.

- தனது உயிருக்கு மேலான நூல்களாகத் திருக்குறள், தொல்காப்பியத்தைக் கருதினார். திருக்குறள் மணக்குடவருரை,

தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணருரை ஆகியவற்றை முதன்முதலில் பதிப்பித்துத் தமிழ்ச் சமூகத்திற்குக் கையளித்தார்.

- மேட்டிமை மக்களிடம் மட்டும் ஆதிக்கம் செலுத்திய சாத்திர நூல்களுள் ஒன்றான சிவஞான போதத்திற்கு உரை எழுதி வெகுசன மக்களின் வாசிப்புக்குக் கொண்டு சேர்த்தார்.

வ.உ.சி.யின் இலக்கண உரை:

தொல்காப்பிய எழுத்ததிகாரம், சொல்லதிகாரச் சுவடிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் அச்சாகின. 1920இல் கா.நமச்சிவாய முதலியார் தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் புறத்திணையியல் ஆகிய இரண்டு இயல்களுக்கான உரையை மட்டும் அச்சிட்டு வெளியிட்டிருந்தார். பொருளதிகாரத்தின் இளம்பூரணருரையை முழுமையாக அச்சிட்டவர் வ.உ.சி.தான். சிறைவாசத்தின்போதே தொல்காப்பியம், திருக்குறளுக்கு எளிய உரை எழுதி வெளியிட விரும்பினார். சிறையிலிருந்து வெளிவந்து சென்னையில் வசித்தபோது தாம் எழுதிய தொல்காப்பியத்தின் உரையைச் செப்பம் செய்யத் திருமணம் செல்வக்கேசவராய முதலியாரின் உதவியை நாடினார். அவர் ஏற்கெனவே அச்சான தொல்காப்பியம் இளம்பூரணம் அச்சுப்புத்தகம், சொல்லதிகார ஏட்டுப்பிரதி, பொருளதிகார ஏட்டுப் பிரதி ஆகியவற்றைக் கொடுத்தார். அவற்றைப் படித்தப் பிறகு தொல்காப்பியத்திற்கு உரை வரையும் முயற்சியைக் கைவிட்டு, இளம்பூரணருரை சுவடிகளைப் பதிப்பிக்கலானார்.

1920இல் தொல்காப்பியம் எழுத்ததிகாரம், பொருளதிகாரம் ஆகியவற்றை இளம்பூரணர் உரையுடன் பதிப்பிக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 1921இல் தொல்காப்பியப் பொருளதிகார அகத்திணையியல், புறத்திணையியல் ஆகிய இரண்டு இயல்களைக் கொண்ட முதல் தொகுதி வெளிவந்தது. இதைத் தொடர்ந்து கோவை, கோவில்பட்டி ஆகிய ஊர்களில் வாழ்ந்தபோதும் தொல்காப்பியப் பதிப்புப் பணியைத் தொடர்ந்தார். 1928இல் எழுத்ததிகாரம் இளம் பூரணருரை சுவடியை அச்சிட்டு வெளியிட்டார். தொல்காப்பியப் பொருளதிகார இளம்பூரணருரை சுவடிகளைச் ச.வையாப்புரிப்பிள்ளை, தி.நா.சுப்பிரமணிய அய்யர், த.மு.சொர்ணம்பிள்ளை ஆகியோரிடம் இருந்து பெற்றுப் பயன்படுத்தியதை முன்னுரையில் நன்றியோடு கூறியிருக்கின்றார் வ.உ.சி. எஞ்சிய 7 இயல்களைச் ச.வையாபுரிப் பிள்ளையுடன் இணைத்துப் பதிப்பித்துள்ளார். 1933இல் களவியல், கற்பியல், பொருளியல் எனும் மூன்று இயல்களைக் கொண்ட பகுதியைத் தூத்துக்குடியில் இருந்த காலத்தில் வெளியிட்டார். இதன்பின் 1936இல் மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் எனும் நான்கு இயல்களைக் கொண்ட இளம்பூரணருரையின் இறுதிப் பகுதியை அச்சிட்டு வெளியிட்டார். வ.உ.சி.யின் தொல்காப்பியப் பதிப்புப் பணி குறித்தும் உரை இயல்புகள் குறித்துமான ச.வையாபுரிப்பிள்ளையின் பதிவு இங்குக் கவனத்திற்குரியன.

தொல்காப்பியத்தை இவர் கற்றுக்கொண்டிருந்த சமயம். எந்த நூலை எடுத்தாலும் இவர் முன்பிருந்த நூலாசிரியர்கள் கூறியதனை அலசிப் பார்த்துப் புதிய உரை காணுவதிலே முயன்று வருவார். இலக்கணம் முதலிய விலங்குகளையெல்லாம் இவர் அறவே களைந்து எறிந்துவிடுவார். துணிகரமும், உணர்ச்சி வேகமும், எதனையும் தன்னிலையிலிருந்து நோக்கும் நேர்மையும் இவரது முக்கியமான இயல்புகள். எளிமையாக உரைகள் இருத்தல் வேண்டும் என்ற பெருங்கருத்துக் கொண்டவர். தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் இயற்றிய உரை எளிதாக இருத்தல் கண்டு அதனை அச்சிடும் தொழிலில் இவர் முயன்றார். இதனைத் தெரிந்த நெல்லை அறிஞர் ஒருவர் இவருக்கெனப் பிரதிகள் சிருஷ்டித்துக் கொடுக்க முன்வந்தார். என்னிடம் இளம்பூரணர் உரைப் பிரதி இருப்பதாகத் தெரிந்து எனக்கு வ.உ.சி. 1913-இல் ஒரு கடிதம் எழுதினார். இக்காலம் முதல் வ.உ.சி.யும் நானும் நெருங்கிய இலக்கியத் தோழர்களாய்விட்டோம். தொல்காப்பியம் பற்றி எனக்குப் பல விஷயங்களை எழுதி வந்தார். நானும் இவர்களுக்குப் பல கடிதங்கள் எழுதியுள்ளேன். தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இவர்களால் வெளியிடப்பெற்றது. பொருளதிகாரத்தில் முதல் இரண்டு இயல்களும் இவர்களே பரிசோதனை செய்து வெளியிட்டார்கள். இவ்விஷயத்தில் சென்னையில் இவர்களுக்கு உதவிபுரிந்து வந்தவர்கள் திரு.செல்வக்கேசவராய முதலியார் முதலியவர்கள் நாங்கள் இலக்கியத் தோழர்களாயிருந்தும், பல ஆண்டுகளாக ஏகதேசமாகவேனும் சந்தித்து வந்தோம் என்றுகூட கூற முடியாது. கடிதப் போக்குவரத்திலேயே எங்கள் நட்பு அமைவுற்றது. (1959,:379-380)

வ.உ.சி.யின் பதிப்பு:

வ.உ.சி.யின் தொல்காப்பியப் பதிப்புக்கு இதழாசிரியர் வாவில்லா இராமஸ்வாமி சாஸ்த்ருலு பதிப்பகத்தார் பொருளுதவி, வெளியீட்டிற்கு வேண்டிய உதவிகளைச் செய்துள்ளனர். தொல்காப்பியம் முழுமைக்கு மான இளம்பூரணர் உரைச் சுவடிகளைப் பதிப்பித்து வெளியிட வேண்டும் என்ற பெரு விருப்பம் வ.உ.சி. க்கு இருந்துள்ளது. அவர் கருதியவாறு எழுத்து, பொருள் ஆகிய இரு அதிகாரங்களுக்குரிய இளம்பூரணர் உரைச் சுவடிகளைப் பதிப்பித்து வெளியிடவும் செய்திருக்கிறார். சொல்லதிகாரப் பகுதியை அவர் வாழ்நாளின் இறுதிவரை வெளியிட முடியவில்லை.

அடுத்து, திருக்குறள் மீதும் அளவற்ற மதிப்பு வ.உ.சிக்கு இருந் திருக்கிறது. திருக்குறளின் உரைகளை முழுமையாக வாசித்திருக்கிறார். இளமைக் காலம் முதல் தனது இறப்பு வரை வ.உ.சி.யின் சிந்தனையில் திருக்குறள் இருந்தது. 1908 மார்ச்சு 12 சிறைவாசம் செல்கிறார் வ.உ.சி. சிறையில் இருந்த காலத்தில் தொடர்ந்து திருக்குறளை வாசித்து ஆராய்ச்சி செய்கிறார். 1908 செப்டம்பர்14ஆம் நாள் திருக்குறளில் ஏற்பட்ட ஐயங்களைக் களைய உ.வே.சாமிநாதையருக்குக் கடிதம் எழுதுகிறார். இச்செய்தியைப் பின்னாளில் சென்னைப் பிரஸிடென்ஸி நூற்றாண்டு விழா மலருக்கு எழுதிய கட்டுரையில் உ.வே.சாமிநாதையர்

பதிவு செய்திருக்கின்றார். (1942: 199-201).இதைத் தொடர்ந்து இருவருக்கிடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. உ.வே.சாமி நாதையரின் எண்பதாமாண்டு பிறந்த நாள் விழாவுக்கு வ.உ.சி. எழுதிய வாழ்த்துப்பாவில் 'தூத்துக்குடிவாழ் ஓட்டப் பிடாரம் / சிதம்பரம் என்னும் திருக்குறளன்பனே' என்று குறிப்பிட்டிருப்பதையும் காண முடிகின்றது. திருக்குறளின் பரிமேலழகர் உரையைப் படித்து அதன் கடினத் தன்மையை உணர்ந்ததால் திருக்குறளுக்கு உரை எழுத வேண்டும் என்ற எண்ணம் வ.உ.சி.க்குத் தோன்றியது. இதன் விளைவாகக் கொஞ்சம் எளிமையான திருக்குறள் மணக்குடவருரையை முதன்முதல் 1917இல் பதிப்பித்து வெளியிட்டார். இக்காலகட்டத்தில் இவருக்குப் பெரும் பொருள்பற்றாக்குறையும் இருந்தது. இருப்பினும் தொய்வின்றிப் பதிப்புப் பணியில் ஈடுபட்டார். தமக்குக் கிடைத்த மணக்குடவருரை பிரதியைச் சென்னை அரசு கையெழுத்துப் புத்தகசாலையில் இருந்த பிரதியோடு ஒப்பிட்டுப் பார்த்தார். அதிலிருந்த அதிகாரப் பெயரும் முறையும் பரிமேலழகரைப் பின்பற்றியிருந்தன. சில குறள்களின் மூலமும் உரையும் சிதைந்தும், குறைந்தும் இருந்தன. வ.உ.சி. உ.வே. சாமிநாதையரிடம் இருந்த மணக்குடவருரை பிரதியை வாங்கிப் பார்த்தபோது, அது அரசாங்கப் பிரதியிலிருந்து படியெடுக்கப்பட்டதாக இருந்ததை அறிந்து கொண்டார். தமக்குக் கிடைத்த பிரதி, உ.வே. சா.விடம் இருந்து பெற்ற பிரதியைக் கொண்டு சாமி சகஜானந்தர் உதவியுடன் ஒழுங்குபடுத்தி, பிழைகள் நீங்கிய மணக்குடவருரையை 152 பக்கங்களில் பதிப்பித்து வெளியிட்டார். திருமணம் செல்வக்கேசவராய முதலியார், த.கனகசுந்தரம் பிள்ளை ஆகியோர் இவரது பதிப்பு முயற்சிகளுக்கு உதவினர். மணக்குடவருரைப் பதிப்பில் குறள்களையும் உரையினையும் எளிதில் பொருள் கொள்ளும் நிலையில் சந்தி பிரித்து, பதவுரை தந்துள்ளார். உரையாசிரியர் உரை காட்டாத குறள்களுக்கு உரையெழுதியும், உரையாசிரியர் விடுத்துள்ள அதிகாரங்களுக்கு வைப்பு முறையையும் காட்டியுள்ளார். வ.உ.சி.யின் திருக்குறள் உரைப் பதிப்பு பிறர் காட்டாத பல புதுமைக்கூறுகளைக் கொண்டிருக்கின்றது.

1930-32இல் வெளிவந்த தமிழ்ப்பொழில் இதழில் திருக்குறள் 'பாயிர ஆராய்ச்சி' குறித்த விரிவான கட்டுரையை எழுதினார் (தமிழ்ப்பொழில். துணர்.6,பக்.456-462). தொடர்ந்து இவ்விதழில் திருக்குறள் குறித்து எழுதியுள்ளார். 'பாயிரம் என்பது நூல் முகம். நூலிற்கு முகம் போன்று விளங்குதலால் அது நூல் முகம் எனப்பட்டது. இக்காலத்து வழங்கும் திருக்குறட் சுவடிகளிலெல்லாம் 'கடவுள் வாழ்த்து', 'வான் சிறப்பு' 'நீத்தார் பெருமை', 'அறன் வலியுறுத்தல்' என்னும் நான்கு அதிகாரங்களும் பாயிரமாகக் காணப்படுகின்றன. 'கடவுள் வாழ்த்து' முதலிய மூன்று அதிகாரங்களும் 'உரை கோளாளன்' முதலியோர்களால் கூறப் பெற்ற சிறப்புப்பாயிரம். 'அறன் வலியுறுத்தல்' என்னும் அதிகாரம் ஒன்றே வள்ளுவரால் கூறப்பெற்ற பொதுப்பாயிரம்' என்கிறார் வ.உ.சி. 'துறவறவியலின் கண் 'துறவு' என்ற ஓர் அதிகாரமும் 'மெய்யுணர்தல்' என்ற ஓர் அதிகாரமும் அமைத்துக் கூறிய வள்ளுவர், பாயிரத்தின் கண்

'நீத்தார் பெருமை' என்னும் ஓர் அதிகாரமும் 'கடவுள் வாழ்த்து' என்னும் ஓர் அதிகாரமும் அமைத்துக் கூறுதல் மிகையாம்' என்றும் வலியுறுத்துகிறார். (வ.உ.சி.:1935:3)

1935இல் திருக்குறள் அறத்துப்பால் விருத்தியுரையை எளிய முறையில் எழுதி, திருச்செந்தூர் முருகன் கோயிலில் அரங்கேற்றியுள்ளார். காகிதம், மை, கட்டு நூல் முதலியனவெல்லாம் 'சுதேசியம்' என்று அவ்வுரைப் பதிப்பில் வ.உ.சி. குறிப்பிட்டது அவரது தேச உணர்வை வெளிப்படுத்துகிறது. 302 பக்கம் கொண்ட விருத்தியுரையை 1 ரூபாய் விலையில் அச்சிட்டு, அதற்குதவிய வள்ளல்கள் அ.செ. சு.கந்தசாமி ரெட்டியார், அ.செ.சு.முத்தையா ரெட்டியார் இருவருக்கும் சமர்ப்பித்துள்ளார். 1935லேயே திருக்குறளின் மூன்று பால்களுக்குமான உரையைத் தனித்தனியே 300 பக்கங்களில் ஒரே புத்தகமாக வெளியிட வ.உ.சி. விரும்பினார். ஆனால் அவரின் மறைவுக்குப் பின் 2008ஆம் ஆண்டில் பாரிநிலையம் மூலம் சாத்தியமானது. திருக்குறளின் பொருட்பால், இன்பத்துப்பால் உரைகளைத் திருத்தம் செய்ய வ.உ.சி.க்கு இ.மு.சுப்ரமணியம் பிள்ளை உதவினார். அறத்துப்பாலில் 76 குறள்களில் என் உரை பரிமேலழகர் உரைக்கு வேறுபடுகின்றது. தன்னுடைய திருக்குறள் உரையினைப் பரிமேலழகரின் உரையினோடு ஒப்பிட்டு அவர் கொடுத்திருக்கும் பதிவு குறிப்பிடத்தக்கது. 12 குறள்களில் என் உரை அவர் உரையை வெளிப்படையாக மறுக்கின்றது. 5 குறள்களில் என் உரை அவர் உரையை வெளிப்படையாக ஆமோதிக்கின்றது. மீதக்குறள்களில் என் உரையும் அவர் உரையும் ஒத்திருக்கக் கூடும்... அறத்துப்பாலில் பரிமேலழகர் கொண்டுள்ள மூலபாடங்களுக்கு வேறாக 151 மூல பாடங்களை மணக்குடவரும் மூன்று உரையாசிரியர்களும் கொண்டுள்ளனர். பரிமேலழகரின் மூலபாடங்களுக்கு வேறாக 74 மூலபாடங்களை யான் கொண்டுள்ளேன். இவற்றில் முப்பது முந்தைய உரைகாரர்கள் கொண்டவை, மீதி 40 யானாகக் கொண்டவை (வ.உ.சி.:1935:VI).

திருக்குறளின் முதல் மூன்று அதிகாரங்களைத் (கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை) திருவள்ளுவர் எழுதவில்லை என்கிறார் வ.உ.சி. ஆனால் திருக்குறள் ஆய்வாளர்கள் இக்கருத்தை ஏற்கவில்லை. திருக்குறள் உரைவளப் பதிப்பில் ச.தண்டபாணி தேசிகர் வ.உ.சி.யின் கருத்தை உரிய சான்றுகளால் மறுத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

வ.உ.சி. 1934-35 காலகட்டத்தில் சிவஞானபோதத்திற்கு உரை எழுதி, அதனைத் தினமணி நாளிதழில் வெளியிடுகின்றார். இதற்குப்பின் தூத்துக்குடியில் உள்ள அ.செ.சு.தர்மச் சத்திரத்தில் அரங்கேற்றப்பட்டது. அப்போது அவர் எதிர்கொண்ட எதிர்வினைகளைக் கருத்தில் கொண்டு தனது உரையைச் செப்பனிட்டுள்ளார். இதற்கிடைப்பட்ட காலத்தில் 'ஞான வாசிட்டம்' என்னும் வேதாந்த நூலை முறையாகக் கற்றார். இதனைச் ச.சோம.சுந்தர பாரதிக்கு வ.உ.சி. எழுதிய கடிதத்தில், '12 செப்டம்பர் 1935 ஒவ்வொரு காலையிலும் மணி 7 முதல் 9 வரையிலும்

இவ்விடம் கீழூர் மகா-ள-ள-ஸ்ரீ பிரமானந்த சுவாமிகள் மடத்தின் தற்கால அதிபதி ஸ்ரீ சோமசுந்தர சுவாமிகள் துறவிகளும் இல்லாருமாகி 25 பேர்களுக்கு 'ஞானவாசிட்டம்' சொல்லி வருகிறார்கள். அவ்விருபத்தைந்து பேர்களில் நான் ஒருவன்' (ஆ.இரா.வேங்கடாசலபதி:1984:129)என்று குறிப்பிட்டுள்ளார். வ.உ.சி. தனது வாழ்நாள் முழுவதும் கொண்ட சைவ ஈடுபாட்டின் விளைவே சிவஞான போதத்திற்கான உரை என்றால் அது மிகையன்று. மரபான சித்தாந்த புலமைக்கும் மக்கள் சார்ந்த அரசியல் ஈடுபாட்டிற்கு மிடையேயான ஒரு தவிப்பும் இருந்துள்ளது. கடுஞ்சைவர்களிடம் இருந்து வ.உ.சி. க்கு எதிர்ப்புகள் எழுந்துள்ளன. தீக்கை பெறாதவர் உரை எழுதக்கூடாது என்ற கருத்தியலுக்கு எதிர்வினையாகச் சிவஞான போதத்தின் உரைப் பதிப்பில் உள் அட்டையில் நான்கு வெண்பாக்களை எழுதியுள்ளார். இது அவருடைய முற்போக்கான கருத்துக்கு வலுசேர்க்கிறது. மேலும் 'சிவஞான போதத்திற்கு ஓர் உரை எழுதித் 'தினமணி' வருஷ அனுபந்தத்திற்கு அனுப்பியுள்ளேன். ஸ்ரீ சிவஞான சுவாமிகள் உரையைக் கண்டித்தால், சைவர் பலர் மனம் நோகுமென்று கருதி அது செய்யாது விடுத்துள்ளேன். என் உரை சுவாமிகள் உரைக்குப் பல இடங்களில் வேறுபட்டும் மாறுபட்டும் உள்ளது. இதற்கும் போலிச் சைவர் குழாம் என்னை நிந்தித்தல் கூடும். அந்நிந்தனையை வந்தனையாகவே கொள்ளும் மனநிலை உடையோன் யான்' (ஆ.இரா.வேங்கடாசலபதி: 1984:130) என அவரது சொற்களாலேயே அறிந்துகொள்ள முடிகின்றது. சிவஞான போதத்தின் உரைப் பாயிரத்தில் தமது உரையின் நோக்கு - போக்கு பற்றி,

- திருவள்ளுவர் திருக்குறள், சிவஞான போதம், கைவல்ய நவநீதம் என்னும் நூல்கள் முறையே நீதி நூல்களிலும், சித்தாந்த நூல்களிலும், வேதாந்த நூல்களிலும் ஒப்புயர்வற்றவையென்பது எனது அபிப்பிராயம்.

- எனது சிவஞான போத உரையில் ஏனைய உரைகளில் காணப்படும் பலமதக் கோட்பாடுகளும் அவற்றின் கண்டனங்களும் காணப்படாது. மத வேற்றுமையைக் காண்பவர்களும், பேசுபவர் களும் 'யான்', 'எனது' என்னும் மதவெறி பிடித்த மாக்களே.

- மெய்கண்ட தேவர் இயற்றியதாகச் சொல்லப்படும் பல மதக் கண்டனங்கள் நிறைந்த வார்த்திகப் பொழிப்புரை இடைச்செருகலாகப் பின்வந்தோரால் எழுதிச் சேர்க்கப்பட்டவை. எனவே அவற்றை ஒதுக்க வேண்டும்.

- சிவஞான போத மூலம் பற்றியும், மொழிபெயர்ப்புச் சிக்கல் பற்றியும் தாம் ஆராயவில்லை. நாளொன்றுக்கு இரண்டு மணி வீதம் பன்னிரண்டு நாள்களுள் சிவஞான போதத்தை ஆராய்ச்சி செய்து உரை எழுதினேன். இதன் விளைவாகக் கிடைத்த பலன் சித்தாந்தமும் வேதாந்தமும் ஒன்றே என்ற எனது கொள்கை உறுதியடைந்தது.

- ஒவ்வொரு சூத்திரத்தின் சாரத்தையும் அதனதன் தலைக்குறிப்பாகவும், சூத்திரத்தின் பொருள் அதன் கீழே பொருள் என்ற சொல்லோடும், இலக்கணக் குறிப்பு முதலியவற்றை அகலம் என்ற சொல்லோடும், கருத்துரையைக் கருத்து என்ற சொல்லோடும் தொடங்கி எழுதியுள்ளேன்.

- தமிழகராதி, சிவஞான சுவாமிகளின் சிற்றுரையின் பிண்டப் பொழிப்புரை ஆகியவற்றுடன் எனது சொந்த மெய்ஞானத்தையும் ஆதாரமாகக் கொண்டுள்ளேன். சிவஞானபோத மூலத்தில் பாடபேதங்கண்டு திருத்தம் செய்வதிலும் துணிவு காட்டியுள்ளேன். (கட்டுரைகள்: சிவஞான போதம், ஆறாம் சூத்திர ஆராய்ச்சி , தினமணி. டிசம்பர் 6, 1935, உலகமும் கடவுளும், தினமணி ஜனவரி 17, 1936) என்று விரிவாகவே பதிவுசெய்திருக்கின்றார்.

இவ்வுரையின் பின்னிணைப்பில் ‘சிவஞான போத வரலாறு‘ என்ற பகுதியில் ‘சிவஞான போதமும் ஞானவாசிட்டமும்‘ என்ற உட்தலைப்பின்கீழ்சிவஞானபோதத்தின்பன்னிரண்டுநூற்பாக்களையும் ஞான வாசிட்டத்தின் பாடல்களோடு ஒப்பிட்டுக் காட்டுகின்றார். சி.சு. மணியின் ‘சித்தாந்த மரபும் வ.உ.சி.யின் சிவஞான போத உரையும்‘ என்ற கட்டுரை சிவஞான முனிவரின் சிற்றுரையில் இருந்து வ.உ.சி.யின் உரை வேறுபடும் இடங்களை ஒப்பிட்டுக் காட்டுகின்றது.

சான்றுக்கு ஒன்று : முதற் செய்யுள் : சிவஞான முனிவர் - தலைப்பு : மங்கல வாழ்த்து - சிவன் ஒருவனே கடவுள். வ.உ.சி.- தலைப்பு : காப்பு : அகலத்தில் பொல்லாத பிள்ளையார் - கருத்து : கடவுள் வாழ்த்து.

வ.உ.சி.யின் சிவஞானபோத உரை தமிழ்ச் சைவ சித்தாந்தத்தை விடவும் வடமொழி மாயாவாதத்தையே முன்மைப்படுத்தியது. சங்கரரைப் பின்பற்றியவர்களும் வ.உ.சி. க்குரிய மரியாதையைத் தரவில்லை என்கிறார் சி.சு.மணி (ஆ.இரா.வேங்கடாசலபதி: 1999:33).

இதுபோல் வேதாந்தம், சித்தாந்தம் முதலியவற்றோடு பிற சமயக் கருத்துகளை விளக்கி எழுதத் திட்டமிட்டிருந்ததை வ.உ.சி.யின் மெய்யறம் மொழிபெயர்ப்பு நூலின் முன்னுரை நமக்குக் காட்டுகின்றது. ‘சிவமதம்‘, ‘மனித மதம்‘, ‘முக்தி நெறி‘, ‘விஷ்ணு மதம்‘, ‘புத்த மதம்‘, ‘இஸ்லாம் மதம்‘, ‘கிறிஸ்து மதம்‘, ‘The Universal Scripture‘ என்னும் தலைப்புகளில் இவரது கருத்துகள் வெளிப்பட்டிருப்பின் அவை தமிழுக்குக் கிடைத்த கொடையாக அமைந்திருக்கும்.

முடிவாக...

வ.உ.சி. அவர்களின் சிறைக்குப் பிந்தைய வாழ்வியலில் தமிழ் இலக்கியங்களும் உரைகளும் முக்கியமான இடத்தினைப் பெற்றிருந் தன. உரை பதிப்புகளைப் பொறுத்தவரை மரபான உரைகளை எளிமைப்படுத்துதல், மூலநூல் கருத்துகளை ஆய்வுப்பூர்வமாக அணுகுதல், விவரித்தல் எனப் புதுமைகளையும் செய்துள்ளார். இப்பணிகளைத் தனித்தனி ஆய்வுகளாக மேற்கொள்ளும் அளவிற்கான தரவுகளையும் வ.உ.சி. கையளித்திருக்கிறார் எனில் அது மிகையாகாது.

துணைநின்ற நூல்கள்

1. வ.உ.சிதம்பரம் பிள்ளை, (1917), திருவள்ளுவர் திருக்குறள் மணக்குடவருரை, அறத்துப்பால், சென்னை : கே.ஆர்.பிரஸ்.
2. வ.உ.சிதம்பரம் பிள்ளை (பதிப்பாசிரியர்), (1928), தொல்காப்பியம், இளம்பூரணம், எழுத்ததிகாரம், பதவுரை, அம்பாசமுத்திரம்: அகஸ்தியர் பிரஸ்.
3. வ.உ.சிதம்பரம் பிள்ளை, (1935), திருவள்ளுவர் திருக்குறளும் தேசாபிமானி வ.உ.சிதம்பரம் பிள்ளை விருத்தியுரையும், முதற்பாகம்: சிறப்புப் பாயிரத்துடன் அறத்துப்பால்.
4. வே.சுந்தர ஐயர், (1936), பிரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரவர்கள் சதாபிஷேக வரலாறு, சென்னை: லா ஜர்னல் அச்சுக்கூடம்.
5. உ.வே.சாமிநாதையர்,(1942), என்னுடைய ஞாபகங்கள், நினைவு மஞ்சரி, இரண்டாம் பாகம், சென்னை: கபீர் அச்சுக்கூடம்.
6. எஸ். வையாபுரிப்பிள்ளை, (1959), தமிழ்ச் சுடர் மணிகள், சென்னை: பாரி நிலையம், மூன்றாம் பதிப்பு.
7. ம.பொ.சிவஞானம், (1969) கப்பலோட்டிய தமிழன், சென்னை: இன்பநிலையம், இரண்டாம் பதிப்பு.
8. வ.உ.சி. சுயசரிதை, (1976), சென்னை: பாரிநிலையம், ஆறாம்பதிப்பு.
9. ஆ.இரா.வேங்கடாசலபதி, (1984), வ.உ.சி.கடிதங்கள், சென்னை: சேகர் பதிப்பகம்.
10. தி.லீலாவதி, (1987), தமிழ் தந்த வ.உ.சி., சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிலையம், முதற்பதிப்பு.
11. ஆர்.என்.சம்பத் - பெ.சு.மணி (மூலம்), தமிழாக்கம்: பெ.சு.மணி, (1995), நவ பாரத சிற்பிகள், வ.உ.சிதம்பரம் பிள்ளை, புதுதில்லி: பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்.
12. ஆ.இரா.வேங்கடாசலபதி (பதிப்பாசிரியர்), (1999), வ.உ.சி.யின் சிவஞானபோத உரை, தூத்துக்குடி: வ.உ.சி.சமூக அறிவியல் நிறுவனம், வ.உ.சி. கல்லூரி வளாகம்.
13. செ.திவான், (2001), வ.உ.சி.யும் தொல்காப்பியமும், பாளையங்கோட்டை: சுஹைனா பதிப்பகம்.
14. வ.உ.சிதம்பரம் பிள்ளை, (2004), அரசியல் பெருஞ்சொல் - வ.உ.சி.கண்ட பாரதி - சிவஞானபோதம், சென்னை: வ.உ.சி.நூலகம், முதற்பதிப்பு.
15. செ.திவான், (2015), வ.உ.சி.யும் சைவ சமயமும், பாளையங்கோட்டை: ரெகான் சுலைமான் பதிப்பகம்.
16. பொ.வேல்சாமி, (2019), அச்சில் வராத தொல்காப்பிய இளம்பூரணர் எழுத்ததிகார உரை (கட்டுரை).
17. இரா.வேங்கடேசன், (ஜூன்.2019), உ.வே.சாமிநாதையரும் வ.உ.சிதம்பரம் பிள்ளையும் (கட்டுரை),சென்னை: உங்கள் நூலகம்.
18. பா.ஜெய்கணேஷ், (அக்டோபர்.2022), தமிழ்ப் பதிப்பு வரலாற்றில் வ.உ.சி. அவர்களின் தொல்காப்பியப் பதிப்புகள் (கட்டுரை), சென்னை: புதுமலர்.
19. மரகத மீனாட்சி ராஜா (ஆகஸ்ட்.2016),வ.உ.சி.யின் திருக்குறள் பற்று, சொல்வனம்.
20. வ.உ.சிதம்பரனார் நூற்றாண்டு மலர் (1872-1972), (1972), சென்னை.

41

பரிமேலழகர் – வ.உ.சி.யின் திருக்குறள் (அறத்துப்பால்) உரை

முனைவர் செ. சாந்தி
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி சிவகாசி.

ஆய்வுச் சுருக்கம்:

உரையாசிரியராகத் திருக்குறளுக்கு அவர் செய்த உரை சிறப்பினையுடையது. முன்னைய உரையாசிரியர் உரைத் திறத்தைப் போற்றும் இடங்களில் போற்றி, மறுக்கும் இடங்களில் மறுத்தும், மாற்றம் செய்ய வேண்டிய இடங்களைக் காரணங்களுடன் சுட்டிச் சென்றமை நினைந்து இன்புறத்தக்கது ஆகும். விருத்தியுரையின் சிறப்பினைக் கூறிய விதம், உரைப்பாயிரம், இடைப்பாயிரம் செய்த விதம், அதிகார வைப்பு முறை, அதில் செய்த மாற்றங்கள், மாற்றங்களைக் காரண காரியங்களோடு எடுத்துரைத்த முறை, உரை கூறும் இடங்களில் வேறுபடுதல் முதலானவை இந்த ஆய்வின் வழி அறியக் கிடைக்கின்றன.

முன்னுரை:

வ.உ.சிதம்பரனார் திருக்குறள் முழுமைக்கும் உரை எழுதி இருப்பது தமிழ் கூறும் நல்லுலகம் செய்த மிகப்பெரிய பேறாகும். இருப்பினும், பொருளாதார நெருக்கடி காரணமாக (அறத்துப்பால்) மட்டுமே அச்சில் ஏற்றப்பட்டது வருந்தத்தக்கதே ஆகும்.

திருக்குறளுக்கு உரை எழுதியவர்களுள் காலத்தால் பிந்தியவர் ஆயினும் உரை கூறும் திறத்தால் முன்னவராகக் கருதப்படுபவர் பரிமேலழகர் ஆவார். ஒவ்வொரு அதிகாரத்தின் முன்னதாக அதன் விளக்கமும், முன்னைய அதிகாரத்துடன் இவ்வதிகாரம் கொண்டுள்ள தொடர்பு குறித்தும், பிற நூல்களை மேற்கோள் காட்டும் திறத்தாலும் இவரது உரைச் சிறப்பு போற்றப்படுவதாய் அமைகிறது.

'பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ - நூலிற்
பரித்த வுரையெல்லாம் பரிமேலழகன்
தெரித்த உரையாமோ தெளி' (தொண்டை மண்டல சதகம் - 41)

என்றவாறு திருக்குறளுக்கு உரையெழுதிய உரையாசிரியர்களுள் பரிமேலழகர் உரையே சாலச் சிறந்தது என்பதனைப் படிகாசுப் புலவரின் மேற்கண்ட பாடல் தெளிவுறுத்தும். இத்தகைய சீரிய நூலுக்குச் சிறப்புடன் உரையெழுதிய வ.உ.சிதம்பரனார் உரை கூறும் இடங்களில் சிலவற்றுள் வேறுபடுகிறார், சில இடங்களில் மறுக்கிறார், சிற்சில இடங்களில் ஒத்திருக்கிறார். திருக்குறள் அறப்பால் உரைச்சிறப்பினை ஒப்பீட்டாய்வு நோக்கில் எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது.

திறவுச் சொற்கள்: திருக்குறள் பரிமேலழகர் - வ.உ.சி. உரை ஒப்பீடு, வ.உ.சி. உரைச் சிறப்பு, அறப்பால் உரை.

அறத்துப்பால்:

அறத்துப்பால் என்பது அறத்தைப் பற்றிக் கூறும் பகுதி எனப் பொருள்படும். பொருள், இன்பம், வீடு ஆகிய மூன்றையும் தரவல்லது. ஆகையால், அறம் முதற்கண் கூறப்பட்டது. தமிழ் இலக்கியங்களில் அறநூல்களில் சொல்லப்பட்ட விதிகளைக் கடைப்பிடித்து ஒழுகுதலே மேலான நிலையை அடைதற்குச் சிறந்த நெறி, அறக்கோட்பாடு எனப் போதிக்கப்பட்டது.

விருத்தியுரையின் சிறப்பு:

விருத்தியுரை என்பது ஒரு நூலின் கருத்துகளை விரிவாகவும், ஆழமாகவும் விளக்கும் உரைநடை வடிவமாகும். இதனை நன்னூல்,

‘சூத்திரத்து உட்பொருள் அன்றியும் ஆண்டைக்கு
இன்றி யமையா யாவையும் விளங்கத்
தன் உரை யானும் பிறநூ லானும்
ஐயம் அகல ஐங்காண்டிகை உறுப்போடு
மெய்யினை எஞ்சாது இசைப்பது விருத்தி‘ *(நன்னூல் - 23)*

என்றவாறு விளக்கிக் கூறியுள்ளது. அதன்படியே திருக்குறள் அறப்பாலுக்கு உரை கூற விழையும் வ.உ.சி. ‘பொருள்‘ தலைப்பிலும், ‘அகலம்‘ என்ற தலைப்பிலும் இறுதியில் ‘கருத்து‘ என்ற தலைப்பிலும் ஒவ்வொரு குறளுக்கும் உரை கூறியுள்ள விதம் வியந்து போற்றத்தக்கது ஆகும்

- பொருள் – என்னும் பகுதியில் சொல்லோடு தொடங்கிய பதவுரையும் அவ்வுரையில் வருவிக்கப்பட்ட சொற்களை அடைப்புக்குறி () அடையாளங்களோடும் சுட்டிச் செல்கிறார்.
- அகலம் – என்னும் பகுதியில் இலக்கணக் குறிப்பு, வினா-விடை, மேற்கோள், பாடபேதம் முதலானவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.
- கருத்து – என்னும் பகுதியில் கருத்துகளைச் சுருக்கித் தொகுத்து சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறார்.

உரைப்பாயிரம்:

செப்பு மொழி பதினெட்டுடையாள் என்று பாரதியாரால் புகழப்பட்ட மொழிச் சிறப்பையுடைய இப்பூவுலகில் எழுந்த நூல்கள் பற்பல, அவற்றுள் அழிந்த நூல்கள் பல, அழியாமல் நிற்பவை சில, அவற்றுள் சிறந்தனவும் சீரிய தன்மையுடன் திகழ்வன சிற்சில.

இத்தகைய சிறப்புடைய நூல்களை நம் முன்னோர்கள் மேல்கணக்கு எனவும்கீழ்க்கணக்குஎனவும்பகுத்துத்தொகுத்தனர்.கீழ்க்கணக்குநூல்கள் பதினெட்டு. அவற்றுள் முப்பால் நூலாகத் திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பெற்றது. மக்கள் தேவநிலையை அடைவதற்குரிய நான்கு

உறுதிப்பொருள்களையும் (அறம், பொருள், இன்பம், வீடுபேறு) சாதி, இனம், மதம் கடந்து கைக்கொள்வதற்குரிய நெறிகளைக் கூறி வந்தமையால் 'உலகப் பொதுமறை' என அழைக்கும் சிறப்பினைப் பெற்றுள்ளது என்றவாறு நூலின் சிறப்பை உரைப்பாயிரமாக வ.உ.சி. அறப்பால் பகுதியில் பதிவு செய்துள்ளார்.

அதிகார வைப்பு முறை :

வ.உ.சி. உரைப்பகுதி அறப்பாலானது பாயிரம், இல்லறவியல், துறவறவியல், வீட்டியல், ஊழியல் என்னும் ஐந்து இயல்களாகவும் பொருட்பாலானது அரசியல், அமைச்சியல், அரணியல், பொருளியல், படையியல், நட்பியல், குடியியல் என்னும் ஏழு இயல்களாகவும், இன்பத்துப்பாலானது ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று, இருபாற் கூற்று என்னும் மூன்று இயல்களாகவும் பகுக்கப்பட்டுள்ளது. இந்தப் பதினைந்து இயல்களும் 133 அதிகாரங்களைக் கொண்டு விளங்குவதாகக் கூறியுள்ளார்.

இடைப்பாயிரம் எனப் பெயர் சூட்டியமை:

பாயிரத்தின் முதல் மூன்று அதிகாரங்களாகக் காணப்படும் கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை என்பவை திருவள்ளுவரால் இயற்றப்பட்டவை இல்லை என்பதும், இடைக்காலப் புலவர்களின் இடைச்செருகல் என்றும் வ.உ.சி. அதற்கான காரணங்களைப் பின் வருமாறு சுட்டுகிறார்.

- மூன்று அதிகாரங்களிலும் காணப்படும் பாக்கள் நூலின் பிற பாக்களைப் போலச் சொல், பொருள் செறிவுடன் உடையனவாக இல்லை. இப்பாக்களிற் பலவற்றின் பொருள்கள் பல தடைகளுக்கு இடம் கொடுக்கின்றன. மெய்யுணர்தல், துறவு என்னும் அதிகாரங்கள் நூலின் உள்ளே அதிகாரங்களாக உள்ளே தனியாக இருக்கும்போது கடவுள் வாழ்த்து, நீத்தார் பெருமை என்னும் தலைப்புகளைப் பாயிரத்தில் கூற வேண்டிய அவசியமில்லை.

- கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் கடவுளுக்குக் கூறியுள்ள இலக் கணங்களையும் மெய்யுணர்தலில் கடவுளுக்குக் கூறியுள்ள இலக் கணங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இரண்டு அதிகாரங்களை யும் இயற்றியவர் ஒருவரல்ல என்பது விளங்கும்.

இம்மூன்று அதிகாரங்களும் திருவள்ளுவராலேயே இயற்றப்பட்டன என்பதை மக்கட்பலர் ஏற்றுக்கொண்டதால் அவற்றை நீக்க முற்படாமலும் அதே சமயம் இடைக்காலத்தில் சேர்க்கப்பட்டதை உலக மக்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு அவற்றை 'இடைப்பாயிரம்' என்னும் தலைப்பிட்டு வ.உ.சி. உரை செய்திருக்கிறார் என்பது இங்கு பதிவு செய்யப்பட வேண்டியதாகிறது.

அதிகார வைப்பு முறையில் மாற்றம்:

இல்லறவியலில் காணப்படுகின்ற வெஃகாமை, பயனில் சொல்லாமை, அரண் அதிகாரங்களைத் துறவியலில் சேர்த்தும், துறவியலில்

காணப்படும் வாய்மை, கள்ளாமை ஆகிய இரண்டு அதிகாரங்களையும் இல்லறவியலுள் சேர்த்தும் அதிகார வைப்பு முறையில் சிற்சில மாற்றங்களை நிகழ்த்தியுள்ளார்.

வாய்மை, கள்ளாமை இல்வாழ்வார்க்கு இன்றியமையாதது என்பதால் இல்லறவியலிலும் வெஃகாமை, பயனில் சொல்லாமை இல்வாழ்வான் கடைப்பிடிப்பதற்கு அரியன என்பதாலும் அவைகள் துறவிகளுக்குக் கடைப்பிடிப்பதற்கு எளியன என்பதாலும் அவற்றைத் துறவிகளுக்கு மாற்றம் செய்ததாக வ.உ.சி. குறிப்பிடுகிறார். வீடு இல்வாழ்வான், துறந்தார் இருவருக்கும் உரியதாகலின் வீட்டியல் என்றொரு தனியாக ஓர் இயலை அமைத்திருக்கிறார்.

உரை கூறும் இடங்களில் வேறுபடுதல் :

1. ‘அகர முதல எழுத்தெல்லாம்‘ எனத் தொடங்கும் குறளுக்கு உரை கூறும் வ.உ.சி. அகரம் எழுத்துகளுக்கு எல்லாம் முதன்மையானது போல என்று உரை கூற, பரிமேலழகரோ, தமிழ் எழுத்திற்கே அன்றி வட எழுத்திற்கும் முதலாதல் நோக்கி, ‘எழுத்து எல்லாம்‘ என்றார் என்று உரை கூறுகிறார்.

2. ‘இல்வாழ்வா னென்ப வியல்புடைய மூவர்க்கும்‘ எனத் தொடங்கும் குறளுக்கு உரை கூறும் வ.உ.சி. இயல்புடைய மூவர் – நன்நெறியில் ஒழுகும் தாய், தந்தை, தாரம் ஆகிய மூவரும் எனப் பொருள் கூறுகிறார். பரிமேலழகரோ பிரமசாரி, வானப்பிரத்தன், சந்யாசி என்று உரை கூறுகிறார்.

திண்மையுண் டாகப் பெறின்‘ (குறள் – 54)

என்ற குறளுக்கு, கற்பு என்று சொல்லப்படும் உறுதிப்பாடு உண் டாகப்பெற்றால் பெண்ணைப் போல் (ஒருவன்) பெறும் தகுதியான பேறுகள் யாவை உள? (ஒன்றுமில்லை). பெறப்படுவது பேறு, பெண் பிறப்புத் தெய்வப் பிறப்பாகும். பெறத்தக்க என்பதில் தக்க என்னும் சொல்லுக்கு ‘தகுதியான பேறுகள்’ என்பது பொருள். ‘பெறுத்தக்க‘ என்பதற்கு மிகவும் தகுதியான பேறுகள் என்பதே போதும். மிகவும் தகுதியான பேறுகள் என்பது மிகை. அன்றியும் தகுதி என்னும் சொல் அத்தகைய அடைமொழியை ஏற்காது.‘பெறுமவற்றுள்’ எனவும் மக்கட்பேறு என ஆசிரியர் பின்னால் கூறுவது காண்க. இக்காரணங்களால், பெருந்தக்க என்பது ஒருவன் படித்து மற்றொருவருடன் கேட்டு ஏடு பெயர்த்தெழுதியதால் நேர்ந்த பிழை என்கிறார். இதனைப் பரிமேலழகர் ஏற்காது பிற உரையாசிரியர்களைப் போலவே உரை கூறுகிறார்.

கற்பு நெறியில் பிறழாத பெண்ணை மணந்தவன் மட்டும் பேறு பெற்றவனல்லன். கணவருக்கு உற்ற துணையாக வாழும் பெண்ணை மணந்தவனும் பெரும் பேறு பெற்றவன் என்பதனை, ‘என்னுடைய குற்றங்களை இனங்கண்டு அழிக்கும் அமைச்சரைப் போலிருந்தாள். இத்தகைய அறிவுடையவள் என்னுடைய பெரும் பிழைகளைப் பற்றி யாராவது அவளிடம் கூறினாலும் சரி, இல்லை தானாகக் கண்ணுற்றாலும்

அவை பொய் எனக்கூறும் அறியாமை நிறையக் கொண்டிருந்தாள் என்று வ.உ.சி.யின் தன் வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.' (தமிழ்மணி ந.மு.,வ.உ.சிதம்பரனார் தன்வரலாறு, ப-32)

'புகழ்புரிந்த வில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை' *(குறள் – 59)*

என்ற குறளில், 'புகழ்புரிந் தில்' 'புகழ்புரிந்த வில்' என்பது போல் 'புனழ் புரிந் தில்' என்பது தொடை இன்பம் பயவாமையானும் அப்பாடத்தைக் கொள்ளுங்கால் அகரம் செய்யுள் விகாரத்தால் தொக்கதாகக் கொள்ள வேண்டிய திருத்தலானும், 'புகழ்புரிந்த வில்' என்பதே ஆசிரியர் பாடமெனவும், 'புகழ்புரிந் தில்' என்பது ஒருவன் படித்து மற்றொருவருடன் கேட்டு ஏடு பெயர்த்தெழுதியதால் நேர்ந்த பிழை எனவும் கொள்க என்கிறார். இவை போன்று இன்னும் பல குறள்களை உற்று நோக்கலாம்.

முடிவுரை:

சிறப்புப் பாயிரம், பொதுப்பாயிரம் செய்தது போல் இடைப்பாயிரம் செய்திருப்பது சிறப்புடையது. அதிகார வைப்பு முறை, வைப்பு முறையில் செய்த மாற்றங்கள், மாற்றங்களைக் காரண காரியங்களோடு எடுத்துரைத்த முறை, உரை கூறும் இடங்களில் வேறுபடுதல் முதலானவை உரையாசிரியர்கள் எதிர்காலத்தில் கைக்கொள்ள வேண்டிய எழுத்து நாகரிகத்தை விளக்குவதாக அமைந்துள்ளது. சொல்லுக்குச் சொல் உரை அமைத்தலும், சான்றுகளுடன் நிறுவுதலும் இதன் வழி அறிய முடிகிறது. ஒருவன் படித்து மற்றொருவருடன் கேட்டு ஏடு பெயர்த்தெழுதியதால் நேர்ந்த பிழையைச் சுட்டிக் காட்டிய விதமும் நினைந்து போற்றுதற்குரியது.

துணை நூற்பட்டியல்:

1. முனைவர் குமரவேலன் இரா, (ப. ஆ) திருக்குறள், பாரி நிலையம், மறுபதிப்பு 1949
2. தமிழ்மணி ந.மு.,வ.உ.சிதம்பரனார் தன்வரலாறு, பாரதி புத்தகாலயம், முதல் பதிப்பு-2022.
3. பரிமேலழகர் (உ. ஆ), திருக்குறள், பதிப்பு நிதி வெளியீடு, ஸ்ரீ காசி மடம், திருப்பனந்தாள், 1968.

42

வ.உ.சி.யின் உரையும் பதிப்பும்

முனைவர் ப. ராஜசேகர்
விரிவுரையாளர், தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

ஆய்வுச் சுருக்கம்

வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம் அவர்களின் தமிழ்த்தொண்டு என்பது அவர் ஏற்றிய தமிழ் இலக்கண இலக்கியம் குறித்த ஆய்வு நூல்களே இன்றைக்கு ஆய்வுலகிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்து வருகிறது. இக்கட்டுரை, சிதம்பரனார் அவர்களின் தமிழிலக்கியப் பணிகளில் முக்கியமான ‘உரைநூல்‘ ஆக்கங்களை ஆய்வு செய்கிறது. சிறை வாழ்க்கையைத் தமிழ் வளர்ச்சிக்கான களமாக மாற்றிய வ.உ.சி., திருக்குறள், தொல்காப்பியம் மற்றும் சிவஞான போதம் போன்ற செவ்வியல் நூல்களுக்கு வழங்கிய உரைகளின் தனித்தன்மையை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

திறவுச் சொற்கள்: சிதம்பரனார், இன்னிலை, வாழ்க்கை, திருக்குறள், உரைநடை

முன்னுரை:

இலக்கியத் துறையில் அவர் ஒரு அமைதியான ஆழமான நீரோடை. அவர் வாழ்ந்த காலத்தில் நிலவிய வடமொழி ஆதிக்கத்தையும், கடினமான உரை நடையையும் விடுத்து, தமிழை எளிய மக்களிடம் கொண்டு சேர்க்கும் நோக்கில் உரை நூல்களை எழுதினார் [1].

வ.உ.சி. அவர்கள் சிறந்த மொழிபெயர்ப்பாளராகத் திகழ்ந்தவர். காரணம் அவர் சிறையில் இருந்த காலத்தில் பல்வேறு நூல்களை வாசித்துள்ளார், எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. திருக்குறள், தொல்காப்பியம், இன்னிலை பதிப்பு மிகவும் முக்கியமானது.

தொல்காப்பியப் பதிப்பு மற்றும் உரை:

தொல்காப்பியத்தின் ‘பொருளதிகாரத்திற்கு‘ இளம்பூரணர் எழுதிய உரையை வ.உ.சி. மிக நுணுக்கமாகப் பதிப்பித்தார். ஏட்டுச் சுவடி களில் இருந்த பிழைகளைத் திருத்தி, மிகத் துல்லியமான பதிப்பை வெளியிட்டார் [2]. மூல உரையின் கடினமான பகுதிகளுக்கு வ.உ.சி. எழுதிய விளக்கக் குறிப்புகள், நவீன கால மாணவர்கள் தொல்காப்பி யத்தை எளிதாகப் பயில உதவுகின்றன. சிதம்பரனார் பதிப்பித்த ‘தொல்காப்பியப் பொருளதிகாரம்‘ என்ற நூல் தமிழ்ச் சமூகத்திற்குக் கிடைக்கப்பட்ட முக்கிய நூலாகும்.

இன்னிலை:

பதிப்பாளர் மட்டுமல்லாமல் சிறந்த உரையாசிரியராகவும் சிதம்பரனார் திகழ்ந்துள்ளார். ‘இன்னிலை‘க்கு அவர் எழுதியிருக்கும் உரை கற்றோர்

போற்றும் வகையில் அமைந்திருக்கும். பதினெண் கீழ்க்கணக்கு வரிசையில் 'இன்னிலை'யும் ஒன்று என்பதும், அதை எழுதிய ஆசிரியர் பொய்கையார் என்பதும் தமிழ் கூறும் நல்லுலகிற்கு முதன் முதலில் சிதம்பரனார் மூலமே தெரியவந்தது. 'இன்னிலை' நூலின் முதற்பதிப்பு தில்லையாடி, த.வேதியப் பிள்ளை என்பவரால் பதிப்பிக்கப்பட்டது. 'இன்னிலை' விருத்தியுரையில் ஒவ்வொரு பாட்டுக்கும் அனுவயம், பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விசேடவுரை போன்ற முறைகளில் விளக்கியுள்ளார். ஆசிரியர் காட்டும் ஒப்புமை மேற்கோள்கள் அவரது புலமையினைச் சான்றாக விளங்குகின்றன. மேலும் சசிவர்ண போதம், பிரபோத சந்திரோதயம், பிரமோத்தர காண்டம், சாங்கியம் முதலிய நூல்களிலிருந்து அவர் மேற்கோள் காட்டியுள்ளார்.

திருக்குறள் உரை (அறத்துப்பால்):

வ.உ.சி. அவர்கள் திருக்குறளின் அறத்துப்பாலுக்கு எழுதிய உரை, ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க பணியாகும். பழமைக்கும் புதுமைக்கும் பாலம்: பரிமேலழகர் உரையில் இருந்த சமஸ்கிருதக் கலப்பையும், தத்துவச் சிக்கல்களையும் தவிர்த்து, 'மணக்குடவர்' உரையைத் தழுவி இவர் புதிய விளக்கங்களை அளித்தார் [3]. பகுத்தறிவுப் பார்வை: குறளின் கருத்துகளைச் சாதி, மதச் சார்பின்றி உலகப் பொதுமறையாக நிலைநிறுத்த தன் உரையில் முயன்றார்.

திருக்குறளுக்கு அறத்துப்பாலுக்குச் சிதம்பரனார் செய்திருக்கும் உரைவிளக்கும் மிகச் சிறந்த ஒன்றாகும். அறத்துப்பாலில் நாற்பத்து நான்கு புதிய மூல பாடங்களை அவர் கண்டுபிடித்துள்ளார். ஏறத்தாழ எழுபத்தாறு குறட்பாக்களுக்குப் பரிமேலழகர் உரையினின்று முற்றிலும் வேறுபட்டுப் பொருளுரைக்கிறார். 'பெண்ணிற் பெறுந்தக்க யாவுள', முதலிய தொடர்களுக்கு அவர் உரை கூறும் திறன் ஆழ்ந்து உணரத்தக்கது. மேலும் மற்றவர்களின் கருத்துகளைக் கண்டிக்க வேண்டிய வழி உறுதியோடு கண்டிப்பதையும் இவ்வுரை நூலில் காணலாம்.

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்'

என்ற குறளுக்கு சிதம்பரனார் கீழ்க்கண்டவாறு உரை செய்திருக்கிறார்.

'இன்' என்றமையால் தன் மகனைச் சான்றோனாகத் தான் கண்ட பொழுது உளதாம் உவப்புத்தான் அவனை ஈன்ற பொழுது அடைந்த உவப்பைக் காட்டிலும் பெரிதென்பதும், பெரிது என்றமையால் அதனினும் தன் மகனைச் சான்றோன் எனப் பிறர் கூறக் கேட்ட பொழுது உளதாம் உவப்பு பெரிதென்பதும் பெறப்பட்டன உவகை-உள்ளக் களிப்பு. 'பெண்ணியல் பால் தானாக அறியாமையினால் கேட்ட தாயெனக் கூறினார்' என்று உரைப்பாரும் உளர். 'பெண்ணின் இயல்பு தானாக அறியாமை என்பது அறிவார் கூற்றென அவ்வுரையை மறுக்க' இவ்வாறு உரை எழுதியிருக்கிறார்.

சிவஞான போத உரை:

சைவ சித்தாந்தத்தின் அடிப்படை நூலான ‘சிவஞான போதம்‘ நூலுக்கு வ. உ. சி. எழுதிய உரை, அவரது ஆன்மீகத் தெளிவைப் புலப்படுத்துகிறது. மெய்கண்டாரின் தத்துவங்களைச் சற்றும் சிதையாமல், தெளிவான எளிய தமிழ் நடையில் சாமானிய மக்களும் புரியும் வண்ணம் மாற்றினார் [4]. ‘சிதம்பரனார் பாடல் திரட்டு‘ அவர் கவிஞராகவும் இருந்துள்ளார் என்பதை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. அவருடைய செய்யுள்திறத்துக்குச் சான்றாகக் கீழ்வரும் பகுதியைக் காணலாம்.

மனமெனும் நினைப்பே நமையாக்கியது:

நினைப்பால் நாமும் நிலைமையை உற்றனம்
ஒருவன் நினைப்புக் கருமறம் பற்றிடின்,
எருதுபின் உருளைபோல் வரும் நனி துன்பமே;
ஒருவன் நினைப்புத் திரு அறம் பற்றிடின்
தன்னிழல் போ மன்னும் இன்பமே.

தன் வாழ்க்கை வரலாற்றையும் சிதம்பரனார் செய்யுளாகவே பாடியுள்ளார். தமிழில் எழுந்த முதல் வாழ்க்கை வரலாற்று நூல்– செய்யுளால் அமைந்த முழுமைபெற்ற தன் வரலாற்று நூல் – இதுவே எனலாம்.

தம் மனைவியார் வள்ளியம்மையைப் பற்றி ஆசிரியர் அறிமுகப் படுத்தும் பகுதி இது.

மகராசி என்றும் வள்ளி யம்மையை
நன்மனை அறங்களை நன்கு வளர்த்திட
முன்மனை யாக மொய்ம்பொடு கொண்டேன்.
... ...
... ...
எனதொரு வடிவம் எனக்குறு தொண்டுமே
கனவினும் நனவினும் கொண்டே நின்றனள்
என்னைப் பெற்றோர், என்னொடு பிறந்தோர்
என்னை நட்டோர் யாவரும் தன்னுடை
உயிரெனக் கருதி ஊழியம் புரிந்த
செயிரிலா மனத்தள்; தெய்வமே அனையள்.

ஆற்றொழுக்காகச் செல்லும் சிதம்பரனாரின் செய்யுள் திறத்தை இதன் வாயிலாக அறியமுடிகிறது.

இதழாசிரியர் சிதம்பரனார்:

சிதம்பரனார் இதழாசிரியராகவும் திகழ்ந்திருக்கிறார். ‘விவேக பானு‘ என்ற தமிழ் மாத இதழையும் சில காலம் தொடர்ந்து நடத்தினார்.

‘விவேக பாநு விளங்குற எங்கும்
‘விவேக பாநு‘வை வெளிவரச் செய்தேன்‘

என்று அவரே சுயசரிதையில் பாடியுள்ளார். இவ்விதழின் மூலம் சிதம்பரனார் எழுதிய கட்டுரைகள் பல.

இதன் வாயிலாக சிதம்பரனார் தமிழ் உரைநடையை எவ்வளவு செறிவோடும் வேகத்தோடும் கையாண்டிருக்கிறார் என்பது புலனாகிறது.

சிதம்பரனார் அவர்கள் சிறந்த அறவோராகவும், பதிப்பாசிரியராகவும், மொழிபெயர்ப்பாளராகவும், உரைகாரராகவும், கவிஞராகவும், உரை நடை வல்லாளராகவும் திகழ்ந்தவர் ஆவார்.

வ. உ. சி. யும் தனித் தமிழும்:

நாட்டு விடுதலை இயக்கம் தொடங்கிய காலத்தில் தமிழ் விடுதலை இயக்கமும் தொடங்கிவிட்டது எனலாம். தமிழில் பிறமொழிச் சொற்களைக் கலவாது எழுத வேண்டும் என்ற இயக்கம் இந் நூற்றாண்டின் தொடக்கத்திலே தொடங்கி விட்டது. இதற்கு முன்னின்றவர் சுப்பிரமணிய சிவாவுக்குத் துணை நின்றவர். வ.உ.சி., சிவா தாம் நடத்திவந்த 'ஞானபானு' என்ற இதழில் கூடிய வரையில் பிறமொழிச் சொற்களைக் கலக்காது எழுதினார்.

வ.உ.சி.யும் சிவாவும் ஆங்கிலச் சொற்களைத் தமிழ் மொழியோடு எழுத்திலும் பேச்சிலும் கலப்பதைக் கண்டிக்கவே இந்த இயக்கத்தைத் தொடங்கினர். ஆனால் வடமொழிச் சொற்களைக் கலவாதிருப்பதில் அவர்கள் கருத்துச் செலுத்தவில்லை.

அதற்கு இக்கடிதமே ஓர் எடுத்துக்காட்டாகும். வடமொழிச் சொற்களையும் கலவாது எழுத வேண்டுமென்ற எண்ணம் மட்டும் அவருக்கு இருந்தது என்பதை 'சமஸ்கிருதச் சொற்களின் கலப்பேயில்லாத தனித்தமிழில் மொழி பெயர்த்துக் கொடுக்கத்தக்க திறமையுடையேன்' என்று தம்மைக் குறிப்பிடுவதிலிருந்து தெரிகிறது.

வடமொழிக் கலப்பினால் தமிழுக்கு ஏற்பட்ட பொல்லாங்கினை உணர்ந்த காலத்தே வடமொழிச் சொற்களையும் கலக்கக்கூடாது என்ற இயக்கத்தைத் தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார் தாம் பின்னர் தோற்றுவித்திருக்கிறார்.

தமிழ்—ஆங்கிலம் ஆகிய இரு மொழிப்புலமையும், சங்க இலக்கியங்கள், ஐம்பெருங் காப்பியங்கள், புராண இதிகாசங்கள், நீதி நூல்கள், வேதாந்த நூல்கள் ஆகியவற்றில் ஞானமும் பெற்றுப் பெருஞ்சிறப்புடன் விளங்கிய நிலையில்தான் வ.உ.சி. நாற்பதாண்டுச் சிறைத்தண்டனை பெற்றார்.

விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சிறை சென்ற பெருந் தலைவர்களிலே வேறெவரும் இத் தகுதிகளைப் பெற்றிருக்கவில்லை. திலகர் சகாப்தத்திலும் சரி; காந்தி சகாப்தத்திலும் சரி; விடுதலைப் போரில் கலந்து சிறைசெல்லத் தமிழ்ப் புலவர்களிலே அதிகம் பேர் முன்வரவில்லை. ஒரு சிலரே அந்தப் பேற்றினைத் தமிழ் மொழிக்குத் தேடித் தந்தனர். அவர்களிலே முதல்வர் வ.உ.சிதம்பரனார்.

முடிவுரை:

வ.உ.சிதம்பரனார் ஒரு சிறந்த உரையாசிரியர் மட்டுமல்லாது, ஒரு சிறந்த பதிப்பாசிரியராகவும் திகழ்ந்தார். பழமையான இலக்கியங்கள் காலத்தினால் மறைந்து விடக்கூடாது என்ற அவரது தமிழ்ப்பற்று, அவரது உரைநூல்கள் வாயிலாக இன்றும் நிலைத்து நிற்கிறது.

அடிக்குறிப்புகள்:

1. சிவஞானம், ம.பொ., கப்பலோட்டிய தமிழன், (சென்னை: பூங்கொடி பதிப்பகம், 1994), ப. 182.,
7. செல்வராசு, சிலம்பு நா., வ.உ.சி. பதிப்புப் பணி, (சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 2005), ப. 64.,
8. வ.உ.சிதம்பரனார், திருக்குறள் அறத்துப்பால் - உரை, (சென்னை: வ.உ.சி. நூலகம், மீள்பதிப்பு 2010), பக். 12-15.,
9. இரா. இளங்குமரனார், வ.உ.சி.யின் தமிழ்ப்பணி, (சென்னை: தமிழ் மண் பதிப்பகம், 2004), ப. 110.

துணை நூற்பட்டியல்:

1. அரசு மணிமேகலை, வ.உ.சிதம்பரனாரின் வாழ்வும் இலக்கியப்பணியும், சாரதா பதிப்பகம், சென்னை, 2008.
2. அரசு.மா.ரா., வ.உ.சி. வளர்த்த தமிழ், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2002, சென்னை.
3. அரசு.மா.ரா., வ.உ.சிதம்பரனார், சாகித்திய அகாதெமி, 2005, புதுதில்லி.
4. இளங்குமரனார், இரா., வ.உ.சி.யின் தமிழ்ப்பணி, தமிழ் மண் பதிப்பகம், சென்னை, 2004.
5. சிவஞானம், ம.பொ., கப்பலோட்டிய தமிழன், பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1994.
6. சுப்பிரமணிய ஐயர், எம்.எஸ்., வீர சிதம்பரனார், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 1952, சென்னை.
7. செயராமன்.பூவை சு., விடுதலைச் சிந்தனையாளர் வ.உ.சிதம்பரனாரின் தமிழியல் பண்புகள், 2012, சென்னை.
8. செல்வராசு, சிலம்பு நா., வ.உ.சி. பதிப்புப் பணி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2005.
9. லீலாவதி.தி., தமிழ் தந்த வ.உ.சி., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1984, சென்னை.
10. வ.உ.சி. ஆய்வு மையம், வ.உ.சி. நூற்களஞ்சியம் (தொகுதி 1-4), தமிழ்நாடு அரசு வெளியீடு, 1992.
11. வ.உ.சிதம்பரனார், திருக்குறள் மணக்குடவர் உரை (பதிப்பு), பாரி நிலையம், சென்னை, 1950.



தொல்காப்பியம்.

இளம்பூரணம்.

பொருளதிகாரம்.

அகத்திணையியல், புறத்திணையியல்

வ. உ. சிதம்பரம் பிள்ளை,

பதிப்பாசிரியன்.

வேலாயுதம் பிரிண்டிங் பிரஸ், [illegible].

1928.

1928இல் வ.உ.சி. பதிப்பித்த தொல்காப்பியம்

43

வ.உ.சி பதிப்பித்த தொல்காப்பியம் - அகத்திணையியலில் இளம்பூரணரின் வாழ்வியலுக்கான உரைச் சிறப்பு

மு. கோகுலசாமி
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
எஸ்.ஆர்.எம். அறிவியல் & தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், காட்டாங்குளத்தூர்,

முனைவர் தா. ஜெயந்தி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
எஸ்.ஆர்.எம் அறிவியல் & தொழில்நுட்பக் கல்விநிறுவனம்.

முன்னுரை:

தமிழுக்கு வ.உ.சி.யின் கொடை குறித்தும் வ.உ.சி. யால் தமிழ் பெற்ற கொடை குறித்தும் அறிவதற்கான வழிமுறைகள் மிகவும் குறைவாகவே உள்ளன. அவரின் படைப்புகள், பதிப்புகள், உரைகள், மொழியாக்க நூல்கள், அவரைக் குறித்த பிறரின் நூல்கள் என்பவை அறிய வேண்டிய சிறப்பு நோக்கங்களாகும்.

ஆய்வு நோக்கம்:

வ.உ.சி. அவர்களின் பல்வேறு தமிழாக்கங்களுள் தனிச்சிறப்பு வாய்ந்தது, அவரின் பதிப்பு நூல்களாகும். தொல்காப்பியம் எழுத்ததிகாரம், பொருளதிகாரத்திற்கு இளம்பூரணர் உரைகளையும், திருக்குறள் நூலுக்கு மணக்குடவர் உரையினையும் அவர் பதிப்பித்துள்ளார். அதில், தொல்காப்பியம் பொருளதிகாரம் - அகத்திணையியல் என்னும் ஒரு இயலை மட்டும் முதன்மைக் களனாகக் கொண்டு வ.உ.சி.யின் பதிப்பு வரலாற்றில் இளம்பூரணரின் வாழ்வியலுக்கான உரைச் சிறப்புகளை ஆராய்வதே, இக்கட்டுரையின் நோக்கமாகும். ‘இளம்பூரணத்தை யான் படித்தபோது அதன் உயர்வும், சிறப்பும், எளிய நடையும் தொல்காப்பியத்திற்கு யான் உரை எழுதுவது மிகையென்று நினைக்கச் செய்தன. பின்னர் என் உரையைப் பூர்த்தி செய்யும் எண்ணத்தை விடுத்து, இளம்பூரணத்தை அச்சிட்டு வெளிப்படுத்த எண்ணினேன். முதலில் எழுத்ததிகாரத்தை ஒரு புத்தகமாகவும், பின்னர்ப் பொருளதிகாரத்தின் அகத்திணையியலையும், புறத்திணையியலையும் ஒரு புத்தகமாகவும் அச்சிட்டு வெளிப்படுத்தினேன்’ என்று வ.உ.சிதம்பரனார் எழுதிய கருத்தே இவ்வாய்வு இளம்பூரணத்தை முதன்மை நோக்காகக் கொண்டு அமைவதற்கான காரணமாகும்.

வகுத்தல் சிறப்பு:

தொல்காப்பியர், அகத்திணை மரபில் எழுவகைத் திணையை முதல் நூற்பாவில் எடுத்தோதுகின்றார். அவை கைக்கிளை முல்லை குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் பெருந்திணை என்பதனை,

'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை யென்ப' [1]

என்று குறிப்பிடுகிறார். நடுவண் ஐந்திணையை ஒழுங்குற வகுத்த இளம்பூரணர், 'ஒருவனும் ஒருத்தியும் நுகரும் காமத்திற்குக் குலனும் குணனும் செல்வமும் ஒழுக்கமும் இளமையும் அன்பும் ஒருங்கு உளவழி இன்பம் உளதா மெனவும், கைக்கிளை ஒருதலை வேட்கை யெனவும், பெருந்திணை ஒவ்வாக் கூட்டமாய் இன்பம் பயத்தல் அரிதெனவும் கூறுதலான்' என்று குறிப்பிடுகிறார். அன்பின் ஐந்திணைகளை நடுவண் ஐந்திணைகளாக வைத்த சிறப்பினையும் முதலும் ஈறுமாகக் கைக்கிளை பெருந்திணையைத் தொல்காப்பியர் வைத்துள்ள சிறப்பினையும் இளம்பூரணரின் உளப்பாங்கு வெளிப்படுத்துகிறது.

சிறப்பின் சிறப்பு:

ஒரு தொகுதிக்குள் ஒரு பொருள் மட்டுமே சிறப்பாக இருக்க முடியுமா? எனில், அதனைக்கட்டமைப்பது சற்றே கடினமாகும். ஒரு தொகுதியுள் ஒன்றுக்கும் மேற்பட்ட பொருள்கள் சிறப்பாக அமையலாம். தொல்காப்பியரின் முப்பொருள் பாகுபாட்டில் மூன்று பொருள்கள் உள்ளன. அவற்றை,

'முதல்கரு வுரிப்பொரு ளென்ற மூன்றே
நுவலும் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை' [2]

என்பதன் மூலம், முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூன்றாகும். முதற்பொருள் என்பது நிலம் பொழுது என இரண்டும், கருப்பொருள் என்பது தெய்வம் உள்ளிட்ட பொருள்களும், உரிப்பொருள் என்பது புணர்தல் உள்ளிட்ட ஒழுக்கங்களுமேயாகும். எனினும், இம்முப்பொருள்களுள் எப்பொருள் சிறந்தது என்றால், முப்பொருளும் சிறந்தது என்றும் தனிச்சிறப்பால் ஒன்றனை ஒன்று சார்ந்துள்ளன என்றும் இளம்பூரணர் உரை கூறுகின்றார். 'நுவலுங் காலை முறைசிறந் தனவே' 'முறைசிறத்தலாவது, யாதானும் ஒரு செய்யுட்கண் முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளும் வரின், முதற்பொருளால் திணை யாகுமென்பதூஉம், முதற் பொருளொழிய ஏனையிரண்டும் வரின் கருப்பொருளாகத் திணையாகுமென்பதூஉம், உரிப்பொருள் தானே வரின், அதனால் திணையாகுமென்பதூஉமாம்' என்பதாகும். ஒரு பொருளுக்கு ஒரு சிறந்த காரணம் சொல்லாமல் மூன்று வகையான காரணங்களைச் சொல்வதற்கான காரணம் என்னவெனில், உயர்ந்தோர் என்றால் குலத்தில் உயர்ந்தோரையும், கல்வியான் உயர்ந்தோரையும், செல்வத்தால் உயர்ந்தோரையும் காட்டும். அதுபோல் ஒரு பொருளுக்கு

ஒரு சிறந்த பொருளன்றி பல்வேறு பொருளும் அமையலாம் என்னும் வாழ்வியல் நெறியினை வ.உ.சி பதிப்பித்த இளம்பூரணரின் உரைச் சிறப்பின் மூலம் அறிய முடிகிறது.

நெகிழ்வுச் சிறப்பு:

நெகிழ்வுத்தன்மை என்பது, ஒன்றனுள் ஒன்று கலந்து வந்தாலும், மயங்கி வந்தாலும், அது முறை எனப்படுதலாக கொள்ளுதல் பாற்பட்டதாகும். தொல்காப்பியத்தில், ஒரு திணைக்குரிய பொருள்கள், மற்றொரு திணைக்குரிய பொருள்களாக வந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை,

'திணைமயக் குறுதலுங் கடிநிலை யிலவே
நிலன் ஒருங்கு மயங்குத லில்லென மொழிப
புலனன் குணர்ந்த புலமை யோரே' [3]

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தின் மூலம் அறிய முடிகிறது. திணை மயங்குதல் என்பது புலன் நன்கு உணர்ந்த புலமையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது எனவும், எனினும் உரிப்பொருள் மட்டும் மயங்காது எனவும் விதி வகுக்கப்பட்டுள்ளதை,

'உரிப்பொரு ளல்லன மயங்கவும் பெறுமே' [4]

என்றவாறும் உரை வகுக்கப்பட்டுள்ளது. உரிப்பொருள் அல்லாத கருப்பொருளும் முதற்பொருளும் மயக்கப் பெறும் என்பதை இதன் வழி அறிய முடிகிறது.

'கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையின் தோன்றுங் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே' [5]

பாடல் இயற்றுநர் பெயர் தெரியாத இப்புலவர் பாடலின் பெயரால், நெடு வெண்ணிலவனார் என்று சுட்டப்படுகிறார். இப்பாடல் குறுந்தொகைத் திணை பாடலாகும். எனினும், கருங்கால் வேங்கை என வேனில் காலத்தில் மலரும் பாலைத்திணையின் கருப்பொருள் இங்குச் சுட்டப்பட்டுள்ளது. குறிஞ்சித் திணையாக இருந்தாலும், இங்குப் பாலைத் திணைக்குரிய வேங்கை மயங்கி வந்துள்ளதைப் புலமையோர் ஏற்றுக்கொள்வர். வாழ்வில் பெருங் கொள்கையான, நெகிழ்வுத் தன்மை மனித இனம் உலகில் இருக்கும் வரை தேவைப்படும் பண்பாகும் என்பதனை இளம்பூரணரின் உரை சிறப்பின் வழியாக அறியலாம்.

பெயர் சுட்டாச் சிறப்பு :

அகத்திணையுள் கைக்கிளை பெருந்திணை ஒழிந்த ஐந்திற்கும் உரியவாகிய நிலமும் காலமும் கருப்பொருளாகிய பொருள்களும், மக்களைப் பற்றி வரும் புணர்தலும் பிரிதலும் இருத்தலும் இரங்கலும் ஊடலும் என்று சொல்லப்பட்ட ஐந்து பொருண்மைகளிலும் சுட்டி ஒருவர் பெயர்க் கொள்ளப் பெறார். நாடன், ஊரன், சேர்ப்பன் என்னும் பொதுப்

பெயரால் அன்றி ஒருவர்க்கு உரித்தாகி வரும் பெயர் கொள்ளப் பெறார் என்பதனை,

‘மக்க ளுதலிய வகனைந் திணையுஞ்
சுட்டி யொருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்’ [6]

என்று தொல்காப்பியர் சுட்டியுள்ளார். புறத்திணையில் வேண்டுமானால் பெயர் கூறலாம். எவ்வாறாகப்பட்டினும் அகத்திணையில் மட்டும் வருதல் இல்லை. இளம்பூரணர், ‘ஒருவர்க்குரித்தாகி வரும் பெயர் அகத்திணை கைக்கிளை பெருந்திணையினும் வரப் பெறாது என்பதூஉம், புறத்திணையுள் வரும் என்பதூஉம், ஆண்டும் பாடாண் பாட்டுக் காமம் பொருளாக வரின் அவ்வழி வரூஉம் என்பதூஉம் கூறியவாறு. இதனான் அகப்பொருள் ஒருவரைச் சாராது பொதுப்பட வரும் என்பதூஉம் கொள்க’ என்று உரை கூறிய சிறப்பினை,

‘புறத்திணை மருங்கிற் பொருந்தி னல்ல
தகத்திணை மருங்கி னளவுத லிலவே’ [7]

என்னும் தொல்காப்பிய வரிகளின் மூலம் அறிய முடிகிறது. இதன் மூலம் அன்றைய பெயர் சுட்டா மரபினை இளம்பூரணர் கையாண்டுள்ளார் என்பதனை வ.உ.சி. யின் பதிப்புரையின் மூலம் அறிய முடிகிறது.

அகத்திணை யாப்பியல் சிறப்பு:

அகத்திணைக்கு இன்றியமையாத செய்யுளை வரையறுத்து உணர்த்தும் இடமும் தொல்காப்பியத்தில் உண்டு. அவ்விடத்தில் அவர் இருவகையான வழக்குகளைக் கையாண்டுள்ளார்.

‘நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கு’ [8]

என்று பாடல் சான்ற கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்க் கூறப்படுகின்ற அகப்பொருளை நாடக வழக்கு, உலக வழக்கு என்னும் இருவகை வழக்குகளில் கூறப்படுதலும் உண்டு என்கிறார். சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல் நாடக வழக்கு என்றும், உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்து வருவதெல்லாம் உலகியல் வழக்கம் என்றும் இளம்பூரணர் உரை செப்புகிறது. இவ்வகைப்பட்ட பொருள்களைக் கலிப்பா, பரிபாடல் என்னும் இருவகைப் பாவிலும் கூறுதல் உரிமையுடையதாம் என்று உரைப்புலவர் வரைந்ததை தொல்காப்பியர்,

‘கலியே பரிபாட் டாயிரு பாவினும்
உரிய தாகு மென்மனார் புலவர்’ [9]

என்று செப்புகிறார். அகத்திணை மரபினை கூறும் வழக்குகளையும் அதற்குரிய பாக்களையும் இளம்பூரணரின் உரைச் சிறப்பின் வாயிலாக அறிய முடிகிறது.

முடிவுரை:

வ.உ.சி. அவர்கள் சிறந்த விடுதலை வீரர் என்பதனையும் தாண்டி சிறந்த தமிழறிஞர் என்பதனை அவர் ஆற்றிய அருங்கொடைகள் வாயிலாக அறியலாம். தமிழரின் தொன்மை இலக்கண நூலான தொல்காப்பியத்திற்கு எளிய உரை செய்ய முயன்ற வ.உ.சி அவர்கள் அதற்குப் பின்னர் இளம்பூரணரின் உரையே தனித்தன்மை வாய்ந்ததும் எளிய உரையுமாகும் என்பதனை அறிந்து, அதனை 1920 ஆம் ஆண்டு (இவ்வாண்டு என்பது ஆராய்ச்சிக்குரியது) அகத்திணையியல் புறத்திணையியல் என்னும் இரு இயல்களை மட்டும் பதிப்பித்து வெளியிட்டு, பின்னர் 1936 ஆம் ஆண்டு பொருளதிகாரத்தின் அனைத்து இயல்களையும் வெளியிட்டார்.

தம் வாழ்நாளில் இரு பெரும் தனிச் சிறப்பினையுடைய நூல்களுக்கு வ.உ.சிதம்பரனார் பதிப்புப் பணியை செய்துள்ளார். ஒன்று திருக்குறள்; மற்றொன்று தொல்காப்பியம் ஆகும். இதில் தொல்காப்பியத்திற்கு இவர் நேரடியாகப் பதிப்புரையை எழுதாமல், இளம்பூரணரின் உரை பதிப்பினையே பதிப்புரையாக வெளியிட்டுள்ளார். இதில் அகத் திணையியல் என்னும் ஒரு இயலில் மட்டும் ஏராளமான வாழ்வியலுக் கான உரை சிறப்புகள் காணப்படுகின்றன. வகுத்தல் சிறப்பு, சிறப்பின் சிறப்பு, நெகிழ்வுச் சிறப்பு, பெயர் சுட்டாச் சிறப்பு, அகத்திணை யாப்பியல் சிறப்பு என்னும் ஐந்து உட்தலைப்புகளின் கீழ் இளம்பூரணரின் உயர்ந்த விழுமியங்களைத் தற்காலம் உள்ளிட்ட எக்காலத்திற்கும் உரிய விழுமியங்களாகக் காண முடிகிறது. விடுதலை வீரராகவும் தமிழ்ப் பற்றாளராகவும் ஒருங்கே திகழ்ந்த வ.உ.சிதம்பரனாரின் வாழ்வியல் செய்தி நமக்கு பாடமாகவும் பெரும்பயனாகவும் திகழ்கிறது.

துணைநூற் பட்டியல்:

அ) தொல்காப்பியம் - பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்) - இளம்பூரணம், பதிப்பாசிரியர்: வ.உ.சிதம்பரம் பிள்ளை, வேலாயுதம் பிரிண்டிங் பிரஸ், தூத்துக்குடி.

ஆ) பாலசுப்பிரமணியம் கு.வெ., - குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை - 98. பதிப்பு - 2004.

இ) பன்னாட்டு தமிழ் ஆய்வுக் கருத்தரங்கம், ஆய்வுக் கோவை - வ.உ.சிதம்பரனார் 150, எஸ்.எஸ்.எம் கலை அறிவியல் கல்லூரி, குமாரபாளையம், விஜயா பதிப்பகம், 20, இராஜவீதி, கோவை.

அடிக்குறிப்புகள்:

1. தொல்காப்பியம் - அகத்திணையியல் - நூ.எண் 01
2. மேற்படி 03 3.மேற்படி 14 4.மேற்படி 15
5. குறுந்தொகை 47 6.தொல்காப்பியம் - அகத்திணையியல் நூ.எண் 57
7. மேற்படி 58 8.மேற்படி 56 9. மேற்படி 56

44

வ.உ.சி.யின் பதிப்புப் பணி

முனைவர் இரா. அன்சல்யா
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை,
குயின்ஸ் கலை & அறிவியல் மகளிர் கல்லூரி, புனல்குளம், புதுக்கோட்டை.

ஆய்வுச்சுருக்கம்:

கருதுகோள்கள் செயல்பாட்டினால் சிறப்பதைப் போன்று படைப்புக் களும் பதிப்புப்பணியினால் சிறப்புறுகின்றன. செயற்பாடற்ற கருது கோள்கள் எவ்வாறு பயனின்றி நிற்குமோ அவ்வாறே பதிப்பில்லாத படைப்புப்பணியும் பயனின்றிப் போகும். பதிப்புப்பணியின் இன்றி யமையாமையும் பதிப்பு முயற்சியிலுள்ள இடர்களையும் உ.வே. சாமிநாதய்யர் வரலாற்றின் மூலம் நன்கு அறியலாம். முன்னோர் நெருப்பு, நீர், கறையான் ஆகியவற்றிடமிருந்து பழஞ்சுவடிகளைக் காப்பாற்றிப் பதிப்பித்திராவிடில் இன்று அரிய பல இலக்கண இலக்கியங்கள் கிடைக்காமற் போயிருக்கும் என்பதனை வெளிக் கொணர்ந்து ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

முன்னுரை:

‘நூலைப் பதிப்பித்தல் என்பது ஒருவகைக் கலையே; நூலாசிரியர், உரையாசிரியர், விரிவுரையாசிரியர் ஆகியோருக்குள்ள மதிப்பு பதிப்பாசிரியருக்கும் அளிக்கப்பட வேண்டும். அம்மூவர்க்கும் உள்ள அறிவு பதிப்பாசிரியர்க்கும் இன்றியமையாதது’1 எனப் பதிப்பாசிரியரின் தகுதியை அ. சிதம்பரநாதன் சுட்டுகின்றார். வ.உ.சி. பதிப்பாசிரியராகவும் தமிழ்ப் பணியினை ஆற்றியுள்ளார். இப்பகுதியில் வ.உ.சி. நூல் பதிப் பித்த காலகட்டம், பதிப்பித்துள்ள நூல்கள், பதிப்பித்துள்ள முறைமை, பதிப்பின் சிறப்புக்கூறுகள் ஆகியவை ஆராயப்படுகின்றன.

வ.உ.சி. நூல் பதிப்பித்த காலகட்டம்:

வ.உ.சி, பதிப்புப் பணியினை மேற்கொண்ட காலகட்டத்தில் பழைய நூல்களைப் பதிப்பிக்க முன்வந்தோர்க்குப் பொருட்பற்றாக்குறை இருந்தது. அதனை மீறித் தமிழ் நூல் ஒன்று பதிப்பிக்கப்பட்டு வெளிவரினும் ஆங்கில மொழி ஆட்சி மொழியாக அமைந்திருந்ததால் நூலினை வாங்கிப் பயில்வோர் மிகச் சிலராக இருந்தனர். பயின்ற மிகச் சிலரும் பதிப்பாசிரியர்களைக் குறை கூறி, அவர்களின் ஊக்கத்தினையும் உரனையும் அழிக்கலாயினர். பழங்கால ஏடுகளைக் கண்டுபிடிப்பது மிக அரிய செயலாய் இருந்தது; கிடைத்த ஏடுகளும் செம்மையற்று இருந்தன ; அவ்வேடுகளில் காணப்பட்ட எழுத்துகளின் முறைமை குழப்பத்தைத் தந்தது. இத்தகைய இடர்ப்பாடுகள் நிறைந்த சூழ்நிலையில் வ.உ.சி. பதிப்புப் பணியினை ஆற்ற வேண்டியதிருந்தது.

வ.உ.சி. பதிப்பித்த நூல்கள் - திருக்குறள் பதிப்பு:

பரிமேலழகர் உரைப் பதிப்பு, உரை விளக்கப்பதிப்பு, உரை வேறுபாட்டுப்பதிப்பு, உரைக்கொத்துப்பதிப்பு, ஆராய்ச்சிப்பதிப்பு, தெளிவுரைப்பதிப்பு, மலிவுப் பதிப்பு, கையடக்கப்பதிப்பு, உரையுடன் கையடக்கப்பதிப்ப, பரிசுப்பதிப்பு எனத்திருக்குறள் பதிப்புகள் பல வெளிவந்துள்ளன. இவற்றுள் பரிமேலழகர் உரைப்பதிப்பே மிகுதியாகும். மணக்குடவர் உரைப்பதிப்புகள் மூன்றே இதுகாறும் வெளிவந்துள்ளன. வ.உ.சி.யின் பதிப்பு, காலத்தால் முந்தியதாகும். பொன்னுச்சாமி இம்மூன்றிலும் 1917-இல் வெளிவந்த நாட்டார் 1925 இல் மணக்குடவர் உரையினைப் பதிப்பித்துள்ளார். 1955-இல் மணக்குடவர் உரையினை மலர்நிலையம் பதிப்பித்து வெளியிட்டது. ஒன்பதின்மர் உரைகளைத் தேடும் முயற்சியில் ஈடுபட்ட அவருக்கு மணக்குடவர் உரைப் பிரதி கிடைத்தது. அது வள்ளுவர் கருத்துகளைத் தெள்ளென விளக்குவதாகவும் இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டதாகவும் அவருக்குத் தோன்றியது. எனவே மணக்குடவர் உரையைப் பதிப்பிக்கும் எண்ணம் அவருக்கு எழுந்தது. தமக்குக் கிடைத்த பிரதியைச் சென்னை அரசிற்குட்பட்ட கையெழுத்துப் புத்தகசாலையிலுள்ள மணக்குடவர் உரைப் பிரதியோடு அவர் ஒத்துப்பார்த்தார். அரசாட்சிப் புத்தகசாலைப் பிரதியில் உள்ள அதிகாரப் பெயரும் முறையும் பரிமேலழகர் முறையைப் பின்பற்றியிருந்தனவென்றும் அதில் சில குறள்களின் மூலமும் உரையும் சிதைந்த நிலையிலும் குறைந்த நிலையிலும் இருந்தன என்றும் வ.உ.சி. தமது பதிப்புரையில் குறிப்பிடுகின்றார்.[2]

பதிப்பித்த முறை:

திருக்குறள் பதிப்பில் ஈடுபட்ட வ.உ.சி., உ.வே.சாமிநாதையர்களிடத்திலிருந்த மணக்குடவர் உரைப்பிரதியை ஆழமாகப் பார்த்துள்ளார். அது, மேற்கூறிய அரசாட்சிப் புத்தகப் பிரதியினின்று பிரதியெடுக்கப்பட்டதாகும் என வ.உ.சி. அறிந்தார். தமக்குக் கிடைத்த பிரதியைப் படைத்தல், இருப்பவற்றை ஒழுங்குபடுத்தல், பிழைபட்டனவற்றை நீக்குதல் என்னும் மூன்றையும் புரிந்து மணக்குடவர் உரையை ஒருவாறு முழுமையாக்கிப் பதிப்பித்துள்ளார்.

வ.உ.சி வரலாறும்... பணிகளும்:

மணக்குடவர் உரையைப் பதிப்பித்து வருங்கால் தி, செல்வக் கேசவராயர் முதலியாரும் த. கனகசுந்தரம்பிள்ளையும் அதனைப் பலமுறை பார்த்துச் சீர்படுத்தித் தந்துள்ளதாக வ.உ.சி. கூறுகின்றார்.[3] ‘மணக்குடவரும் பரிமேலழகரும் அதிகார முறையிற் சிறிதும் குறட்பாக்களின் முறையில் பெரிதும் வேறுபட்டிருப்பதோடு பல குறள்களில் வெவ்வேறு பாடங்கள் கொண்டும் பலபல குறள்களுக்கு வெவ்வேறு பொருள்கள் உரைத்துள்ளனர். இவ்வேற்றுமைகளைக் காண்பார் திருக்குறளின் பெருமையையும் அதன் மூலபாடங்கள் வேறுபட்டுள்ள தன்மையையும் நன்கு அறிவதோடு, குறள்களுக்கு

இருவரும் உரைத்துள்ள பொருள்களைச் சீர்தூக்கிப் பார்க்கவும் புதிய பொருள்கள் உரைக்கவும் முயலுவர். அவர் அவ்வாறு செய்ய வேண்டுமென்னும் விருப்பமே, யான் இவ்வுரையை அச்சிடத் துணிந்ததற்கு முக்கிய காரணம்'[4] என மணக்குடவர் உரையினைப் பதிப்பித்த சூழலை வ.உ.சி. விளக்குகின்றார்.

பதிப்பின் சிறப்புக் கூறுகள்

வ.உ.சி. யின் திருக்குறள் பதிப்பின் சிறப்புக்கூறுகளை 1) அருஞ்சொல் விளக்கம் தருதல், 2) சொல் விளக்கம் தருதல், 3) விடுபட்ட பகுதிக்கு விளக்கம் தருதல், 4) விளக்கம் இல்லா இடங்கட்கு விளக்கம் தருதல், 5) உரை ஒப்பீடு, 6)இலக்கணக் குறிப்பு சுட்டுதல், 7) அதிகார வைப்புமுறை என ஏழு வகையாகப் பிரித்துக் காணலாம்.

அருஞ்சொல் விளக்கம் தருதல்

மணக்குடவர் உரையிடைக் காணப்படும் அரிய சொற்களுக்கு வ.உ.சி. பொருள் விளக்கம் செய்துள்ளார். அறத்துப்பால் முதலதிகாரத்தின் நான்காவது குறளிற்கு, 'வீடு பெறலாவது, அவலக் கவலைக்கையாற்றின் நீங்கிப் புண்ணிய பாவமென்னும் இரண்டினையும் சாராமல், சாதலும் பிறத்தலுமில்லாததொரு தன்மையெய்துதல்' என்று மணக் குடவர் உரை விளக்கம் தந்துள்ளார். இவ்விளக்கத்திடைக் காணப்படும் 'அவலம்', 'கையாறு' என்னும் அரிய சொற்களுக்கு, 'அவலம் - கிலேசம்; கையாறு- துன்பம்' பொருள் உரைத்துள்ளார்.

அறத்துப்பால் எட்டாவது அன்புடைமையென்னும் அதிகாரத்தின் அவ்வார்வமுடைமை நட்பென்று சொல்லப்பட்ட ஆராய்தலில்லாத சிறப்பைத் தரும்' என மணக்குடவர் பொருள் உரைக்கின்றார். இவ்வுரையிடைக் காணப்படும் 'ஆர்வம்', உள்நட்பு என்னும் சொற் களுக்கும் 'ஆராய்தலில்லாத' என்னும் சொற்றொடர்க்கும், "(ஆர்வம்- தொடர்பிலார் மாட்டும் செல்லும் குறளுக்கு 'அன்பு ஆர்வமுடைமையைத் தரும்; காதல்; நட்பு - நட்பினர். வேண்டாத) ' என வ.உ.சி. பொருள் விளக்கம் செய்துள்ளார். ஆராய்தல் இல்லாத- ஆராய்தல் நடுவுநிலைமை என்னும் தொடக்கமான, 'சமன் செய்து சீர்தூக்கும் கோல்' என்னும் அதிகாரத்தின் முதல் குறளின் சொற்றொடருக்கு, 'சமன்வரை பண்ணிச் சீரொத்தால் தூக்கிப் பார்க்கும் நிறைகோல்' என மணக்குடவர் பொருள் உரைத்துள்ளார். 'சமன்வரை' என்னும் சொற்றொடரை "(சமன்வரை- நிறுக்கும் கருவியாகிய வெள்ளிக்கோலின் இரண்டு தலைகளும் சமனை (ஒக்க) நிற்குமாறு செய்தற்குத் தூக்கும் கயிறு இடப்படும் வரை' என விளக்கிக் காட்டுகின்றார்.

சொல் வருவித்துப் பொருள் விளக்கம் தருதல்:

மணக்குடவர் உரை தெளிவாகுமாறு தேவைப்படும் சொற்களை அடைப்புக் குறிக்குள் உரையிடை வ.உ.சி. பயன்படுத்தியுள்ளார்: 'கற்றதனால் ஆய பயன் என் - (மேற்கூறிய எழுத்தினானாகிய சொற் களையெல்லாம்) கற்றதனாலாகிய பயன் (வேறு) யாது, வால் அறிவன்

நல் தாள் தொழார் எனின் - விளங்கிய அறிவினையுடையவன் திருவடியைத் தொழாராயின்?' 'இல்லவள் மாண்பானால்- (ஒருவனுக்கு) மனையாள் மாட்சிமையுடையாளானால், இல்லது என் - இல்லாதது யாது? (எல்லாம் உளவாம்). இல்லவள் மாணாக்கடை- (ஒருவனுக்கு) மனையாள் மாட்சிமையில்லாளானால், உள்ளது என்-உள்ளது யாது? (ஒன்றும் இல்லை)'8 எனத் தேவைப்படும் சொற்களை வ.உ.சி. வருவித்துப் பொருள் விளக்கம் செய்கின்றார்.

விடுபட்ட பகுதிக்கு விளக்கம் தருதல்:

மணக்குடவர் விளக்கம் செய்யாத இயலிற்கு வ.உ.சி. விளக்கம் தருகின்றார். அங்ஙனம் விடுபட்ட இயலாகிய துறவற இயலினை, 'துறவறமாவது, இல்லின் கண்ணின்று நீங்கித் தவம் முதலாயின செய்தல் அது கூறிய அதிகாரம் பதிமூன்றிலும் அருளுடைமை முதலாகத் தவமுடைமை ஈறாக இல்லின் கண்ணின்று நீங்கியாரால் செய்யப்படுவன நான்கும், கூடா வொழுக்கம் முதலாகப் பயனில சொல்லாமை ஈறாக அவரால் தவிரப்படுவன ஐந்துமாக ஒன்பது அதிகாரத்தால் கூறி; அதன் பின் துறவிற்கு இன்றியமையாது அறிதற்பாலதாகிய நிலை யாமை ஓர் அதிகாரத்தால் கூறி; அதன்பின் துறவிலட்சணம் ஓர் அதிகாரத்தால் கூறி; துறவினால் எய்தற்பாலதாகிய மெய்யுணர்தல் ஓர் அதிகாரத்தால் கூறி; பிறப்பிற்கு ஏதுவாகிய அவாவினை அறுத்தல் ஓர் அதிகாரத்தால் கூறினாராகக் கொள்ளப்படும்' என வ.உ.சி. விளக்கியுள்ளார்.

விளக்கமில்லா இடங்கட்கு விளக்கம் தருதல்:

உரையாசிரியர் விளக்கம் தராத குறளுக்கு வ.உ.சி. உரை விளக்கம் முழுமையாகத் தந்துள்ளார். அறத்துப்பாலைப் பார்ப்பின் உரை விளக்கம் பெறாத குறள் ஒன்றேயாகும். அழுக்காறாமை என்னும் அதிகாரத்தில் ஐந்தாவது குறளுக்கு உரை ஆசிரியர் வேறாகப் பொருள் கூறாது முன்பு சொன்னதே பொருளெனக் கூறிச் சென்றதால் வ.உ.சி. அக்குறளுக்கு உரை எழுதியுள்ளார்:

'அழுக்காற் றகன்றாரும் இல்லை அஃதில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரும் இல்'

என்னும் குறளுக்கு, '(அழுக்காற்று அகன்றாரும் இல்லை -அழுக் காற்றினான் செல்வமுடையரானாரும் இல்லை; அஃது இல்லார் பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்-அழுக்காறில்லாதராய்ச் செல்வத்தினின்று நீங்கினாரும் இல்லை)'[10] என்று வ.உ.சி. விளக்கிக் காட்டியுள்ளார்.

உரை ஒப்பீடு:

குறள்களுக்கு மணக்குடவர் உரையினைப் பரிமேலழகர் உரையுடன் பொருந்தக்காட்டி, இரு உரைகளின் வேற்றுமைகளையும் வ.உ.சி. விளக்குகின்றார்: 'கொடுப்பதழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும் என்பதில் அழுக்கறுப்பான்' என்ற தொடருக்கு மணக்குடவர் தரும் பொருளினைப் பரிமேலழகர் தரும்

பொருளோடு பொருந்தக் காட்டி அவற்றின் பொருள் வேற்றுமையினை, '(அழுக்கறுப்பான் என்பதனை அழுக்கு எனவும், அறுப்பான் எனவும் பிரித்து, அழுக்கு என்பதற்கு அழுக்காற்றினால் எனவும் அறுப்பான் என்பதற்கு விலக்குவான் எனவும் இவ்வுரை யாசிரியர் உரைத்திருப்பது கவனித்தற்பாலது. அழுக்கறுத்தல் என்பதனை ஒரு சொல் நீர்மைத்தாகக் கொண்டு உரைத்துள்ளார் பரிமேலழகர்)'[11] கின்றார்.

'வாய்மையுடைமை' என்னும் அதிகாரத்தில் இரண்டாவது குறளிடைக் காணப்படும் 'எனைத்தொன்றும்' என்னும் சொற்றொடர்க்கு, ('ஒருமை சுட்டிய பெயர் நிலைக் கிளவி - பன்மைக்காகு மிடனுமாருண்டே' என்னும் தொல்காப்பியச் சூத்திரப்படி எனைத்தொன்றும் என்னும் ஒருமைப் பெயர் எவையும் என்னும் பன்மைப் பெயர்க்கு ஆயிற்று')[12] என வ.உ.சி. இலக்கணக் குறிப்பினை வழங்கியுள்ளார். 'ஒழுக்கமுடைமை' என்னும் அதிகாரத்தின் நான்காவது குறளில் இடம் பெற்றுள்ள 'படுபாக்கு' என்னும் சொற்றொடர்க்கு, 'படுபாக்கு என்பது தொழிற்பெயர் -பாக்கு- விகுதி)'[13] என வ.உ.சி. இலக்கணக் குறிப்புத் தருகின்றார்.

அதிகார வைப்புமுறை:

அதிகார வைப்புமுறையில் மணக்குடவர் விடுத்த அதிகாரங்களின் வைப்புமுறையினை வ.உ.சி. சுட்டியுள்ளார். அவ்வாறு விடுபட்ட அதிகாரங்கள் இருபதிற்கும் வ.உ.சி. அதிகார வைப்புமுறையினைச் சுட்டியுள்ளார்; 'இது விருந்தோம்பலின் கண்ணே இன்றியமையாது வேண்டப்படுவதொன்றாதலின், அதன்பின் கூறப்பட்டது)[14] என வாய்மையுடைமை என்னும் அதிகாரத்திற்கு வ.உ.சி வைப்புமுறை காட்டியுள்ளார்.

வ.உ.சி. பதிப்பும் பிற பதிப்பும்:

மலர் நிலையச் சார்பில் இராஜ. சிவ. சாம்பசிவசர்மா என்பவர் மணக்குடவர் உரையினை 1955-இல் பதிப்பித்துள்ளார். அதிகாரங்களின் வரிசை முறையில் பரிமேலழகரை இவர் பின்பற்றியுள்ளார். வ.உ.சி. பதவுரையாகப் பொருள் வழங்கியிருக்க, சர்மா பதவுரைப் பொருள் தராது குறள்களுக்குப் பொழிப்புரையைத் தந்துள்ளார். வ.உ.சி. போன்று சொந்தக் கருத்துக்களையோ, அரிய சொற்களுக்குப் பொருள் விளக்கத்தினையோ, இலக்கணக் குறிப்பினையோ சர்மா சுட்டிக் காட்டவில்லை. வ.உ.சி. தமது பதிப்பில் பாட வேறுபாடு காட்டாதிருக்க, சர்மா பாடவேறுபாட்டினைக் காட்டியுள்ளார்.

முடிவுரை:

மணக்குடவர் உரையினைப் பதிப்பித்த முதற்பெருமை வ.உ.சி. யைச் சாரும். குறள்களையும் உரையினையும் வ.உ.சி. எளிதில் பொருள் கொள்ளும் நிலையில் சந்தி பிரித்துப் பதிப்பித்துள்ளார். பதவுரை தரப்படாத காலச்சூழலில் வ.உ.சி. தந்து பதிப்பித்துள்ளார். பதவுரை சொற்களை உரையிடையே வ.உ.சி. விளக்கமுறச் செய்துள்ளார். வருவித்துப் பொருளைத் தேவைப்படுமிடங்களில் இலக்கணக்

குறிப்பினை அவர் சுட்டியுள்ளார். உரையாசிரியர் விளக்கம் தராத துறவற இயலினைப் பொருத்தமான முறையில் வ.உ.சி. விளக்கிக் காட்டியுள்ளார். உரையாசிரியர் உரை காட்டாத குறளுக்கு வ.உ.சி. தமது உரையினை வழங்கியுள்ளார். உரையாசிரியர் விடுத்துள்ள அதிகாரங்களுக்கு வைப்பு முறையினை வ.உ.சி. சுட்டிக் காட்டியுள்ளார். வ.உ.சி.யின் பதிப்பு மணக்குடவர் உரையினைப் பதிப்பித்துள்ள பிறர் காட்டாத பல புதுமைக் கூறுகளுடன் அமைந்துள்ளது.

மேற்கோள்கள்:

1. அ.சிதம்பரநாதன், தமிழோசை, ப.126.,
2. வ.உ.சிதம்பரம் பிள்ளை (ப.ஆ.),திருக்குறள்-மணக் குடவர், பதிப்புரை,பக். III, VI.,
3. மேலது, ப. IV.,
4. மேலது பக்.VI-V
5. வ.உ.சிதம்பரம்பிள்ளை (ப. ஆ.), திருக்குறள்-மணக்குடவர், ப. 3.,
6. மேலது,ப. 30.
7. மேலது, ப. 42.,
8. மேலது, பக். 2, 22.,
9. மேலது, ப, 87.,
10. மேலது, ப-107.
11. மேலது, ப.108.,
12. மேலது, ப, 4.35.,
13. மேலது, ப 50.,
14. மேலது, ப.34.

துணை நூற்பட்டியல் :

1. சிதம்பரநாதன், அ.,தமிழோசை, புதுமைப் பிரசுரம், பெண்ணாடம், தென் ஆற்காடு மாவட்டம், 1955, முதற்பதிப்பு.
2. சிலப்பதிகாரம்,த.வை.இ.தமிழ்ச் சங்கவெளியீடு பாகனேரி, 1968, எட்டாம் பதிப்பு.
3. சிவஞான சித்தியார் பர பக்கம், கழக வெளியீடு, சென்னை-1 1972, மறுபதிப்பு.
4. சிவஞான போதம், கழக வெளியீடு, சென்னை-1, 1966, மறுபதிப்பு.
5. சிறுபஞ்சமூலம், கழக வெளியீடு சென்னை-1, 1936, முதற் பதிப்பு.
6. தண்டலையார் சதகம்,கழக வெளியீடு, சென்னை-1, 1966, மூன்றாம் பதிப்பு.
7. திரிகடுகம்,கழக வெளியீடு, சென்னை-1, 1943, இரண்டாம் பதிப்பு.
8. திருக்குறள், கழக வெளியீடு, சென்னை-1, 1977, நாற்பத்திரண்டாவது பதிப்பு.34.

45

வ.உ.சி. யின் தொல். பொருள். இளம். அகத். புறத். பதிப்பு - பதிப்பாண்டுத் தொடக்கம் குறித்த புதிய ஆவணம்

முனைவர் ஆ. மணி,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி, புதுச்சேரி.

உரைக்களம்:

விடுதலைப் போராட்ட வீரரும் தமிழறிஞருமாகிய வ.உ. சிதம்பரனார் (வ.உ.சி.) தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரையின் முதல் பாகமாகிய அகத்திணையியல், புறத்திணையியல் ஆகிய இரு இயல்கள் கொண்ட பதிப்பு ஒன்றினை வெளியிட்டார். அப்பதிப்புக்கு 1921, 1928 எனப் பலவாறாக அறிஞர் பெருமக்களால் பதிப்பாண்டு குறிக்கப்பட்டுள்ளதைத் தமிழாய்வுகளில் காணமுடிகின்றது. பின்னர் பொ. வேல்சாமி (மானுடம் - சமூக அரசியல், பண்பாட்டுக் காலாண்டிதழ், 2021 நவம்பர் - 2022 சனவரி இதழ், பக். 7 - 19) 'தொல்காப்பியம் பொருளதிகார இளம்பூரணர் உரை முழுமையும் முதன்முதலாக அச்சிட்டு வெளிப்படுத்தியவர் வ.உ. சிதம்பரனரே' என்னும் கட்டுரை எழுதினார். அக்கட்டுரையில், செந்தமிழ் இதழ் மதிப்புரையை எடுத்துக்காட்டி, வ.உ.சி.யின் தொல். பொருள். இளம். முதலிரு இயல்கள் 1919இல் வெளிவந்தது எனக் கருத்துரைத்துள்ளார்.

பொ. வேல்சாமியின் கட்டுரை வெளிவந்ததை அறியா நிலையில், இக்கட்டுரையாளர் எழுதிய 'வ.உ. சிதம்பரனார் வெளியிட்ட தொல். பொருள். (அகத். புறத். இயல்கள்) இளம்பூரணர் உரையின் பதிப்பாண்டு எது?' என்னும் கட்டுரை 2024 பிப்ரவரியில் 'தமிழாய்வு தழைக்க: அறியப்பட வேண்டிய புதிய உண்மைகள்' (ஆ. மணி 2024: 129 - 155) என்னும் நூலில் வெளிவந்தது. அக்கட்டுரையில், செந்தமிழ் இதழ் மதிப்புரையை எடுத்துக்காட்டி, வ.உ.சி. யின் பதிப்பு 1919 ஜூலை - ஆகஸ்டுக்கு முன்னர் வெளிவந்திருக்க வேண்டும் என்றும், பதிப்பாண்டு குறிக்கப்படாத அப்பதிப்பில் வ.உ.சி.யின் வாழிடக் குறிப்பினைக் கொண்டும், அப்பதிப்பு 1919இல் தான் வெளிவந்திருக்க வேண்டும் என்றும் கருத்துரைத்துள்ளார். வ.உ.சி. நூல்களும் பதிப்புகளும் ஆய்வுகளும் துணைகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

செந்தமிழ் இதழ் மதிப்புரை:

1919ஆம் ஆண்டு ஜூலை - ஆகஸ்ட் இதழில் (தொகுதி 17, பகுதி 9, சித்தார்த்தி - ஆடி) வ.உ.சி.யின் தொல். பொருள். அகத். புறத். இயல்கள் பதிப்புப் பற்றிய மதிப்புரை, அதன் பத்திராதிபரால் (திரு. நாராயணையங்கார்) எழுதப்பட்டுள்ளது. இதன்மூலம், அப்பதிப்பு 1919ஆம் ஆண்டு ஜூலை - ஆகஸ்டுக்கு முன்னரே வந்துள்ளது

தெளிவாகின்றது. அம்மதிப்புரையில், ‘ஸ்ரீமான் வ.உ.சிதம்பரம் அவர்கள் அகத்திணையியலும் புறத்திணையியலுமாகிய பாகத்தை அச்சிட்டிருக்கிறார்கள். அதன் பிரதியொன் றெனக்கு அளிக்கப்பட்டதை அவகாசம் கிடைத்தபோது இடையிடையே படித்துப் பார்த்தேன். அது படிப்பவர்களுக்கு உரைப்பகுதி நன்கு விளங்கும்படி பத்தி பிரித்து நல்ல காகிதத்திற் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது’ எனப் பத்திராதிபர் (1919: ப.எ.இ.) எழுதியிருப்பது குறிக்கத்தக்கது என்ற இக்கட்டுரையாளரின் முன்னைய கட்டுரைச் செய்தி (ஆ. மணி 2024: 129 - 155) இவண் நினையத்தகும். இதில், வ.உ.சி. பதிப்பு கிடைத்த பின்னரும், அவகாசம் கிடைத்தபோதுதான் பத்திராதிபர் படித்துப் பார்த்துள்ளார் என்பது தெரிய வந்துள்ளது. செந்தமிழ் இதழ் மதிப்புரைச் செய்தி, பொ. வேல்சாமியின் கட்டுரையிலும், கீற்று இணையதளத்தில் வெளிவந்த பா. ஜெய்கணேஷின் கட்டுரையிலும் முன்னரே கூறப்பெற்றுள்ளது. இக்கட்டுரைகளை மேற்சொன்ன கட்டுரையை (வ.உ. சிதம்பரம் பிள்ளை வெளியிட்ட தொல். பொருள். (அகத். புறத். இயல்கள்) இளம்பூரணர் உரையின் பதிப்பாண்டு எது? என்னும் கட்டுரையை) எழுதி வெளியிட்ட (2024 பிப்ரவரி) பின்னரே அறியும் வாய்ப்புகள் அமைந்தன என்பது அறியத்தக்கது. ஒருவர் எழுதும் கட்டுரை அச்சில் வெளிவந்த உடனேயே அனைவராலும் பார்க்கப்படும் / படிக்கப்படும் சூழல் தமிழ்கூறு நல்லுலகில் இருப்பதாகத் தெரியவில்லை. மேலும், இணையத்தில் வந்த பின்னரும் நீங்கள் பார்க்கவில்லை என்பது சரியாகுமா? என நீங்கள் நினைக்கலாம். இணையத்தைப் பயன்படுத்துகின்ற அனைவரும் அதில் உள்ள அனைத்தையும் அறிந்திருப்பர்/படித்திருப்பர் என்பதும் இயலாத ஒன்றே என்பதை அறிஞர் அறிவர் என்பதை உணர்க.

கூடுதல் சான்று:

வ.உ.சி. யின் பதிப்பு தொடர்பாக, இதுகாறும் யாரும் அறியாத மற்றொரு சான்று ஒன்றும் தற்போது கிடைத்துள்ளது. இனி, அதனைக் காண்போம்.

வ.உ.சி. எழுதிய 21.09.1916 என நாளிட்ட கடிதம் ‘கனம் ஐயா அவர்களுக்கு’ எனத் தொடங்குகின்றது. அக்கடிதத்தின் கிடைத்துள்ள பக்கத்தில் பெறுநர் பெயர் வ.உ.சி. யால் குறிக்கப்படவில்லை. எனினும், அது உ. வே. சாமிநாதையருக்கு எழுதிய கடிதம் என்பது கோப்புக் குறிப்பால் தெரியவருகின்றது. அக்கடிதம் உணர்த்துகின்ற சில செய்திகள் தொல். பொருள். இளம். அகத். புறத். இயல்களின் பதிப்பு குறித்த பல உண்மைகளைப் புலப்படுத்துவதால், அக்கடிதத்தை இவண் முழுமையாகத் தருவோம். ‘V. O. Chidambaram Pillay. சிவமயம் பிரம்பூர், சென்னை. 21 - 9 - 1916.

கனம் ஐயா அவர்களே, க்ஷேமம். க்ஷேமத்திற்குப் பிரார்த்திக்கிறேன். தங்கள் கார்டு வரப்பெற்றேன். அச்சுக்கு கொடுப்பதற்காக இப்பொழுது செய்யப்பட்டு வரும் தொல் - இளம் - களவியல் பிரதி முடி[யப்] பெற்றவுடன் அதனோடு இது கொண்டு வருகிற மனிதனைத் தங்களிடம்

அனுப்ப வேண்டுமென்று கருதி இதுகாறும் தாழ்த்தேன். ஆனால், அது இன்னும் முடிவுபெறவில்லை. வருகிற ஞாயிறுக்குள் முடிவு பெறுமென்று நம்புகிறேன். திங்களில் அல்லது செவ்வாயில் அது தங்கள்பால் வந்து சேரும். தாங்கள் பார்த்து, முடிவு பெற்றுள்ள தொல்.இளம் - அகத்திணையியல், புறத்திணையியல்களை இது கொண்டு வருகிற மனிதன் மூலமாக அனுப்பலாம். ‘புறத்திணையியல்’ வேண்டுமென்றால், இன்னும் சில நாள்கள் தங்களிடம் இருக்கலாம். ‘அகத்திணையியல்’ அச்சிற்குக் கொடுக்கக் கருதியுள்ளேனாதலால் அதனை மாத்திரம் தற்போது அனுப்பினால் போதுமானது. ‘களவியலை’த் தங்களுக்கு அனுப்பாமல், தங்களிடம் உள்ளவற்றைப் பெற எனக்கு மனமே இல்லை. தொல்காப்பியத்திற்குக் காகிதம் வாங்கிவிட்டேனாதலாலும், அச்சுயந்திரசாலை அதிபர் அதனை அச்சிடத் தொடங்கச் சித்தமாயிருப்பதாலுமே, அகத்திணையியலைப் பெற்றுவர இ[ந்]த மனிதனை இன்று அனுப்புகின்றேன்.

தங்களிடம் நன்றியறிதலுள்ள,

வ.உ. சிதம்பரம்

குறிப்பு: [ ] - பகர அடைப்புக் குறிகளுக்குள் உள்ளவை எழுத்துச் சிதைந்துள்ள இடங்கள். கட்டுரையாளர் இட்ட எழுத்துக்களைக் குறிக்கும்.

கடிதம் உணர்த்தும் உண்மைகள்:

வ.உ.சி. எழுதிய இக்கடிதம் தொல். பொருள். இளம். அகத்., புறத். பதிப்பு தொடர்பாகப் பின்வரும் உண்மைகளை வெளிப்படுத்துகின்றது. அவை வருமாறு: 1916 செப்டம்பருக்கு முன்னரே தொல்காப்பியப் பொருளதிகார இளம்பூரணர் உரையை அச்சுக்கு உரிய வகையில் வ.உ.சி. தயாரித்து வந்துள்ளார். அம்முயற்சிக்குப் பிறரின் உதவியும் (உ.வே.சாவாக இருக்கலாம். உறுதியாகத் தெரியவில்லை) அவருக்குக் கிடைத்துள்ளது. 1916 செப்டம்பரிலேயே அகத்திணையியல், புறத்திணையியல் ஆகியன முடிக்கப்பட்டு, மற்றொருவராலும் சரிபார்க்கப்பட்டுள்ளன. 21 - 9 - 1916 அன்றைய கிழமை வியாழன் ஆகும். ஞாயிறுக்குள் களவியல் முடியும் என வ.உ.சி. குறிப்பது 24.09.1916 ஆம் நாளாகும். ஆக, 1916 செப்டம்பரிலேயே களவியல் வரையிலான பகுதி வ.உ.சி. யால் முடிக்கப்பட்டுவிட்டது எனக் கருதலாம். மேலும், புறத்திணையியல் வேண்டுமானால், சில நாட்கள் தங்களிடம் இருக்கலாம். இரு இயல்களையும் இணைத்தே அச்சுக்குக் கொடுக்க வேண்டும் என வ.உ.சி. கருதியபோதிலும், முதலில், அகத்திணையியலை மட்டுமாவது அச்சுக்குக் கொடுக்க வேண்டும் எனக் கூறுவதால், அந்த மாதத்திலேயே அகத்திணையியல் அச்சுக்குக் கொடுக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதலாம். மேலும், அச்சிடத் தேவையான காகிதம் (ஏதோ ஒரு நூலுக்கு அல்ல; தொல்காப்பியம் அச்சிட என வ.உ.சி. தெளிவாகக் குறித்துள்ளார்) வாங்கிவிட்டதாலும், அச்சகத்தாரும் தயாராக இருப்பதாக வ.உ.சி.

குறிப்பதாலும், அதிகபட்சம் 1916 அக்டோபருக்குள் அகத்திணையியல் அச்சுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் என்றே சொல்லலாம். எனவே, தொல்காப்பியம் இளம்பூரணர் உரையின் பொருளதிகார முதல் இரு இயல்கள் வ.உ.சி.யால் அச்சுக்குக் கொடுக்கப்பட்டவை 1916 (செப்டம்பர் - அக்டோபர்) என்பது உறுதியாகின்றது (வேறு தரவுகள் கிடைத்தால், இக்கருத்து மாற்றம் பெறவும் கூடும். ஏனெனில், ஆய்வு என்பதே தரவுகளின் வழிப்பட்டதேயன்றி, சொல்வோர் / கருத்து வழிப்பட்டதல்ல என்பது உண்மைதானே).

முடிவுரை:

வ.உ.சி.யின் தொல்.பொருள்.இளம். அகத். புறத். பதிப்பு 1916 அக்டோபருக்குள் அச்சுக்குக் கொடுக்கப்பட்டு, 1919 ஜூலைக்கு முன்னர் வெளிவந்திருக்க வேண்டும் என்பது இதுகாறும் கிடைத்துள்ள தரவுகளால் அறியப்படும் உண்மையாகும். வேறு வகையான தரவுகள் கிடைத்தால், இவ்வுண்மை மாற்றம் பெறக்கூடும் என்பது நினையத்தக்கது.

துணை நூல்கள்:

1. அரசு. மா.ரா. 2002 (முதல் பதிப்பு). வ.உ.சி. வளர்த்த தமிழ். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
2. அரசு. மா.ரா. 2005 (முதல் பதிப்பு). இந்திய இலக்கியச் சிற்பிகள் வ.உ.சி. (வ.உ.சிதம்பரனார்). புதுதில்லி: சாகித்திய அகாதெமி.
3. அருணாசலம். மு. 1971 (முதல் பதிப்பு). தமிழ் இலக்கிய வரலாறு - தமிழ்ப் புலவர் வரலாறு - பதினோராம் நூற்றாண்டு. திருச்சிற்றம்பலம்: காந்தி வித்தியாலயம்.
4. இளமாறன். பா. 2021 (முதல் பதிப்பு). தொல்காப்பியப் பதிப்புரைகள் [1847 முதல் 1948 வரை: தொகுதி - 1]. சென்னை: பரிசல் புத்தக நிலையம்.
5. கண்ணன். எஸ். 2005 (முதல் பதிப்பு). வ.உ.சி. ஒரு பன்முகப்பார்வை. சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
6. சங்கர வள்ளி நாயகம். அ. 1994 (முதல் பதிப்பு). வ.உ.சி.யும் தமிழும். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
7. சண்முகம் பிள்ளை. மு. (க.ஆ.). 1978. 'தொல்காப்பியப் பதிப்புகள்'. தமிழாய்வு தொகுதி - 8. சி. பாலசுப்பிரமணியம் (பதி.ஆ.). சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம்.
8. சிவகாமி. ச. (பதி.ஆ.). 2009 (முதல் பதிப்பு). சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும். சென்னை: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.
9. சுப்பிரமணியன். ச.வே. 1992. தொல்காப்பியப் பதிப்புகள். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
10. தில்லித் தமிழ்ச் சங்கம் (பதி.ஆ.). 1964. சுடர் – வ.உ.சி. மலர் – மலர் - 13. .. .. ..: இமயப் பதிப்பகம்.
11. பழநியப்பன். வெ., உ. பழநி. 1984. தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம் பகுதி 2 [க – ச]. அண்ணாமலைநகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

12. மகாதேவன். கொண்டல் சு. (பதி.ஆ.). 1975 (முதல் பதிப்பு). தமிழ்நூல் விவர அட்டவணை (1916 - 1920) - நான்காம் தொகுதி - முதல் பகுதி. .. .. ..: தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி இயக்கக வெளியீடு.

13. மகாதேவன். கொண்டல் சு. (பதி.ஆ.). 1977 (முதல் பதிப்பு). தமிழ்நூல் விவர அட்டவணை (1916 - 1920) - நான்காம் தொகுதி - மூன்றாம் பகுதி. .. .. ..: தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி இயக்கக வெளியீடு.

14. மகாதேவன். கொண்டல் சு. (பதி.ஆ.). 1977 (முதல் பதிப்பு). தமிழ்நூல் விவர அட்டவணை (1916 - 1920) - நான்காம் தொகுதி - இரண்டாம் பகுதி. .. .. ..: தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி இயக்கக வெளியீடு.

15. மணி. ஆ. 2021. பருந்துப் பார்வையில் உரை ஆய்வுகள் (அறியப்படாத அரிய தரவுகளுடன்). புதுச்சேரி: தமிழன்னை ஆய்வகம்.

16. மணி. ஆ. 2024. தமிழாய்வு தழைக்க: அறியப்பட வேண்டிய புதிய உண்மைகள். புதுச்சேரி: தமிழன்னை ஆய்வகம்.

17. மணி. பெ.சு. (மொ.பெ.அ.). 1995 (முதல் பதிப்பு). நவபாரதச் சிற்பிகள் வ.உ. சிதம்பரம் பிள்ளை. புதுதில்லி: பப்ளிகேஷன்ஸ் டிவிசன்.

18. மதுகேசுவரன். பா. 2008 (முதல் பதிப்பு). தொல்காப்பியப் பதிப்பு வரலாறு. சென்னை: சந்தியா பதிப்பகம்.

19. மதுகேசுவரன். பா. 2010 (முதல் பதிப்பு). தொல்காப்பியப் பதிப்பு ஆவணம். சென்னை: ந. ஆனந்தி. (2008 நூலே மீள்பதிப்பு).

20. லீலாவதி. தி. 1986 (முதல் பதிப்பு). தமிழ் தந்த வ.உ.சி. சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

21. வெங்கடேசன். இரா. 2014 (முதல் பதிப்பு). தமிழ்ப் புலமை மரபில் தொல்காப்பியம். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

22. வேல்சாமி. பொ. (க.ஆ.). 2021 நவம்பர் - 2022 சனவரி. மானுடம் - காலாண்டிதழ்.

23. வையாபுரிப்பிள்ளை. எஸ்., 1959 (மூன்றாம் பதிப்பு). தமிழ்ச்சுடர் மணிகள். சென்னை: பாரி நிலையம்.

46

வ.உ.சி.யின் தொல்காப்பியப் பதிப்புப் பணிகள்

முனைவர் ரா. கோடீஸ்வரி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்கல்லூரி, கரந்தை, தஞ்சாவூர்.

முன்னுரை:

ஒரு படைப்பாக்கம் சமூகத்தில் மதிப்புடன் நிலைபெறுவதற்குக் காரணமான முக்கிய ஆளுமை பதிப்பாசிரியர். பதிப்பின் உயிராக விளங்குபவர் பதிப்பாசிரியர். பதிப்பின் கருத்துகளைத் தெளிவாகவும் தரமாகவும் வெளிப்படுத்துவது இவரின் முதன்மைப்பணி. பதிப்பின் நம்பகத்தன்மை, மொழித் தூய்மை, கருத்துத் தெளிவு ஆகிய அனைத்துக்கும் பதிப்பாசிரியரே பொறுப்பாவார். மொழித் திருத்தமும் கருத்துத் தொகுப்பும் பதிப்பாசிரியரின் முக்கியப் பணியாகும். எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள், கருத்துத் திசைமாற்றங்கள் ஆகியவற்றைச் சீர்செய்து, படைப்பைச் செம்மையுற அமைத்தல் பதிப்பாசிரியரின் திறமையைப் பொறுத்தது. மொழி, கருத்து, உண்மை, ஒழுக்கம் ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்துச் சமூகத்திற்குத் தரமான அறிவை வழங்குவது அவரது உயரிய பணியாகும். பதிப்பாசிரியர் என்பவர் தனது வாழ்வியலின் பல்வேறு இடர்களையும் தாண்டித் தான் மேற்கொண்ட பதிப்புப் பணிகளில் இடைவிடாது கடமையாற்றிச் சமூகத்தில் நன்மதிப்பைப் பெறுகிறார். அவ்வகையில் தொல்காப்பிய பதிப்பாசிரியரான வ.உ.சிதம்பரனாரது வாழ்வியல் சிக்கல்களையும் அவர் மேற்கொண்ட தொல்காப்பியப் பதிப்புப் பணிகளையும் குறித்து ஆராய்வதாகக் கட்டுரை அமைகிறது.

வ.உ.சி. யின் வாழ்வியல்:

வ.உ.சி. தேசியத் தலைவராக விளங்கியவர். 1872 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 5ஆம் நாள் பிறந்தார். ஓட்டப்பிடாரத்தில் வீரப் பெருமாள் அண்ணாவியிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். ஆங்கிலத்தைக் கிருட்டிண அய்யர் என்பாரிடம் பயின்றார். மகாபாரதத்தை அல்லிக்குளம் சுப்பிரமணிய பிள்ளையவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார். திருவிளையாடற் புராணத்தைத் தன் பாட்டியான மீனாட்சி அம்மையாரிடம் கேட்டறிந்தார். பின்னர் இவர் தூத்துக்குடி கிறித்தவ உயர்பள்ளி, இந்து கலாசாலை உயர்பள்ளி ஆகிய பள்ளிகளில் தனது பள்ளிப்படிப்பை முடித்தார். அதன்பின்பு பட்டப் படிப்பைத் தொடர்வதற்காகக் கால்டுவெல் கல்லூரியில் சேர்ந்தார். பட்டப்படிப்பில் நாட்டமில்லாமல் மீண்டும் பிறந்த ஊருக்கே திரும்பி விட்டார். சட்டக்கல்வி பயில விரும்பிய அவரை, தந்தை உலகநாதன் திருச்சிக்கு அனுப்பிப் படிக்க வைத்தார்.

திருச்செந்தூர் சுப்பிரமணியன் என்பவரின் மகள் வள்ளியம்மையை1894இல் திருமணம் செய்து கொண்டார். வள்ளியம்மையார் சிதம்பரனாருடன் ஆறு ஆண்டுகள் மட்டுமே வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்தார். 1900-ஆம் ஆண்டு வள்ளியம்மை காலமான பின்னர், அவரது உறவிலுள்ள மீனாட்சி என்ற பெண்ணை மறுமணம் செய்து கொண்டார்.

இவர் 1895-ஆம் ஆண்டு வழக்கறிஞர் பொறுப்பேற்றார். தனது சொந்த ஊரிலேயே வழக்கறிஞர் பணியினை மேற்கொண்டார். ஏழைகளுக்காக வாதாடினார். இதனால் காவலரிடம் பகைமையையும், அரசிடம் விரோதப்போக்கையும் வளர்த்துக்கொண்டார். கொலைத்தொடர்புடைய (Criminal) வழக்குகளில் தமது அறிவுத் திறத்தை வெளிப்படுத்தி வெற்றிகளைத் தக்க வைத்துக் கொண்டார்.

கர்சன் பிரபு வங்காளத்தை இரு பிரிவுகளாகப் பிரித்ததால் மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அச்சமயத்தில் சுதேசிப் பண்டக சாலை, தருமசங்க நெசவு சாலை ஆகியவற்றை மக்களிடம் தேசிய உணர்ச்சியைத் தூண்டக்கூடிய வகையில் செயல்படுத்தத் தொடங்கினார். ஆர்.வி. ஆலைத் தொழிலாளர்களின் சிக்கல்களில் பங்கேற்று அவர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஒத்துழைப்பை நல்கினார். தன்னுடைய செலவில் பட்டினியால் வாடிய தொழிலாளர்களுக்கு உணவளித்தார். ஒரு நாளைக்கு 12 மணி நேரம் வேலை செய்வதிலிருந்து 9 மணி நேரம் வேலையாகக் குறைக்கப் போராடினார். சூரத் காங்கிரஸ் மாநாடு 1907-இல் நடைபெற்றது. இம்மாநாட்டில் சிதம்பரனார் லோகமானிய பாலகங்காதர திலகருக்குப் பேராதரவாக இருந்தார். தீண்டாமையை ஒழிக்கத் தாமே முன்னோடியாகச் செயல்பட்டார்.

சிதம்பரனார் இலக்கியத் துறையிலும், சமயத் துறையிலும் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார். ‘விவேகபானு’ என்னும் பெயருடைய மாத இதழை நடத்தினார். சைவ சபையில் சமயச் சித்தாந்தச் சொற்பொழிவாற்றினார். இவருக்குச் சொந்த நாட்டுக் கைத்தொழிலில் பற்று ஏற்படக் காரணம் இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமிகளின் சந்திப்பினாலாகும்.

வ.உ.சி. திலகரைத் தலைவராகக் கொண்டு தென்பாண்டி மக்கள் மனத்தில் விடுதலை உணர்வை ஏற்படுத்துவதற்காக வத்தலக்குண்டு நண்பரான சுப்பிரமணிய சிவா என்பவருடன் சேர்ந்து பல அரசியல் மேடைகளில் சொற்பொழிவாற்றினார். இவர்களது சொற்பொழிவுகளுக்கு அரசாங்கம் தடை விதித்தது. இவ்வாறே விபின் சந்திர பாலரின் விடுதலை விழாவைக் கொண்டாடுவதற்கும் தடைவிதித்தது. இத்தடையை மீறி, வ.உ.சி.யும், சிவாவும் அவ்விழாவிற்குச் சென்றனர். இதனால் அவர்கள் இருவரும் 1908-இல் அரசால் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

சிறையிலிருந்த காலத்தில் சேம்சு ஆலனின் நூல்களை, அகமே புறம், மனம் போல் வாழ்வு, வலிமைக்கு மார்க்கம் என்னும் பெயர்களில் மொழியாக்கம் செய்தார். சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின்னர்,

வ.உ.சி. யால் வழக்கறிஞர் பணியைத் தொடர முடியவில்லை. அதற்குரிய அதிகாரத்தை அரசாங்கம் பறிமுதல் செய்துவிட்டது. இதன் காரணமாக, இவர் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டார். ஆங்கில அதிகாரி வாலேசு என்பவர் வழக்கறிஞர் பணியைத் தொடர்வதற்கான அதிகாரத்தை வ.உ.சி.க்குத் திரும்பப் பெற்றுத் தந்தார். இதற்கு நன்றிக்கடன் ஆற்றும் விதத்தில் தன்னுடைய பிள்ளைகள் நான்கு பேருள் ஒருவருக்கு வாலேசுவரன் எனப் பெயரிட்டார். ஆங்கிலேயரின் அதிகாரத்தை மட்டுமே இவர் வெறுத்தாரன்றி ஆங்கிலேயர்களை வெறுக்கவில்லை என்பதற்கு இதுவே சிறந்த சான்றாகும். வழக்கறிஞர் பணி கிடைத்த பின்னர் 1922-ஆம் ஆண்டு முதல் கோவில்பட்டியில் பணியாற்றினார். பின்னர் தூத்துக்குடியில் அப்பணியினைத் தொடர்ந்தார்.

அரசு நிந்தனைக் குற்றத்தின் காரணமாக நாடு கடத்தல் தீர்ப்புப் பெற்று வ.உ.சி. கண்ணனூர்ச் சிறையில் வாழ்ந்தார். இக்காலகட்டத்தில் இம்மை மறுமை பற்றி அவருடன் இருந்த பிற சிறைக்கைதிகளிடம் உபதேசம் செய்தார். இதன் காரணமாக உண்டான நூல் வடிவமே ‘மெய்யறிவு’ என்பதாகும். இந்நூல் வ.உ.சி. அவர்களுக்குப் பாடம் சொல்லிய பாடல்களின் உருவாக்கமாகும். இது ஓர் அறிவுரை நூலாகும். இந்நூலை நண்பர்களின் பொருளுதவியுடன் அச்சுக்குக் கொண்டு வந்தார்.

பதிப்புப் பணியும் உரைப்பணியும்:

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான இன்னிலை, சித்தாந்த நூல்களுள் ஒன்றான சிவஞானபோதம் ஆகியவற்றிற்கு உரை எழுதினார். 1933 ஆம் ஆண்டு தூத்துக்குடியில் கம்பன் கழகத்தை நிறுவினார். 1935 ஆம் ஆண்டு திருக்குறளில் அறத்துப்பாலை மட்டும் பதிப்பித்தார். இப்பதிப்பு இவரது ஆராய்ச்சி உரையுடன் அமைந்ததாகும். இது வ.உ.சி. யின் தமிழ்ப் பற்றை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

தொல்காப்பியப் பதிப்புப்பணி

வ.உ.சி. அவர்களின் தொல்காப்பியப் பதிப்புப் பணி, வெறும் நூல் வெளியீடாக அல்ல; அறிவார்ந்த ஆய்வுப் பணியாக அமைந்தது. பல பழைய பிரதிகளை ஒப்பிட்டு, பொருள் முரண்பாடுகளை ஆராய்ந்து, சரியான பாடங்களைத் தேர்வு செய்வதில் அவர் கவனம் செலுத்தினார். இதன்வழி, தொல்காப்பியத்தின் இலக்கணச் சிறப்புகள் தெளிவாக வெளிப்படச் செய்தார். குறிப்பாக எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களின் கருத்துகள் எளிதில் புரியும் வகையில் அமைய அவரது முயற்சி உதவியது.

மேலும், இவரது பதிப்புப் பணி மூலம் வ.உ.சி. தமிழின் தொன்மை யையும் தனித்துவத்தையும் வலியுறுத்த முயன்றார். வடமொழி ஆதிக்கம் அதிகரித்திருந்த காலத்தில், தமிழுக்கே தனித்த இலக்கண மரபு உண்டு; அது பல ஆயிரம் ஆண்டுகள் பழமையானது என்பதை அவர் தொல்காப்பியத்தின் வழியாக மெய்ப்பிக்க முயன்றார். தொல்காப்பியம் சொல்லதிகாரம் நீங்கலாக எழுத்ததிகாரம், பொருளதிகாரத்தைப் பதிப்பிக்கும் முயற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

1. பொருள் (அகத்திணையியல், புறத்திணையியல்)இளம்பூரணம் பதிப்பு 1921- இல் பதிப்பிக்கப்பெற்றது. இவர் 1921-இல் பொருள் - அகத்திணையியல், புறத்திணையியல் இரண்டிற்கும் இளம்பூரணர் உரையை வெளியிட்டுள்ளார். இப்பதிப்பிற்குப் பதிப்புரை இல்லை. அடிக்குறிப்பு இல்லை. நூல் மட்டுமே உள்ளது. முன்பகுதி, பின்பகுதி இல்லை. ஆயின் முதல் பகுதி 136 பக்கங்கள் உடையதாக காணப்படுகிறது. இரண்டாம் பகுதி 137 - ஆம் பக்கத்தில் தொடங்குகிறது. அதனால் பிற்பகுதி இல்லை என்பது தெளிவு. நூல் முழுவதும் முடிந்த பின்பு, 1935 - இல் சூத்திர முதற்குறிப்பகராதியை முன்பகுதியில் வைத்துள்ளார்.

2. தொல்காப்பியம் - எழுத்து – இளம்பூரணம் பதிப்பை 1928-இல் வேலாயுதம்பிரிண்டிங்பிரஸ்,தூத்துக்குடியில்வ.உ.சி.வெளியிட்டுள்ளார். பதிப்புரை, தொல்காப்பிய எழுத்ததிகாரச் சூத்திர அகராதி, இயலகராதி, நூல் என இந்நிலையில் இப்பதிப்பு அமைந்துள்ளது. பின்னிணைப்புகள் இல்லை. அடிக்குறிப்புகள் இல்லை. 1868-இல் வந்த தொல்-எழுத்து இளம்பூரணத்தையும் இன்னும் சில ஏட்டுப் பிரதிகளை ஒப்பிட்டுப் பார்த்தும் திருத்தி வெளியிட்டுள்ளதாகப் பதிப்புரையில் குறிப்பிடுகிறார். 'பாட வேறுபாடும், உரைவேறுபாடும் சேர்த்துள்ளேன்' என எழுதுகிறார். தனியாகக் குறிப்பிடாமல் மூலத்திலேயே சேர்த்திருப்பார் எனத் தெரிகிறது.

3. தொல்காப்பியம்-பொருள் (களவியல், கற்பியல், பொருளியல்) இளம்பூரணம் பதிப்பு 1933-இல் வாவிள்ள இராமஸ்வாமி சாஸ்திருலு அண்ட் சன்ஸ், சென்னையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. வ.உ.சிதம்பரம் பிள்ளை தொல்-பொருள்-இளம்பூரணம்-களவியல், கற்பியல், பொருளியல் என்ற மூன்றியல்களையும், அதனைத் தொடர்ந்து 1935-இல் மெய்ப் பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் இவற்றையும் வெளி யிட்டுள்ளார்.

1933-இல் வெளியிட்டுள்ள பகுதிகளுக்கு, த.மு.சொர்ணம்பிள்ளை கடிதப் பிரதியும், தி.நா.சுப்பிரமணிய ஐயரிடமிருந்து கிடைத்த கடிதப் பிரதியும், எஸ். வையாபுரிப்பிள்ளை 1912இல் தி.த.கனகசுந்தரம் பிள்ளை ஏட்டுப் பிரதியைப் பார்த்து எழுதிய கைப்பிரதியும் பயன்பட்டன என எழுதுகிறார்; சொர்ணம்பிள்ளை பிரதியில் மிகுதியான பிழைகளும் இடைச்செருகல்களும் இருந்தன எனக் குறிப்பிடுகிறார்; மூன்றாம் கைப் பிரதிதான் உள்ளதில் நல்ல பிரதி எனக் குறிப்பிட்டுள்ளார்.

அடிக்குறிப்பில் நூற்பா பாடவேறுபாடுகள் சிலவும், உரை வேறு பாடுகள், மேற்கோள் பாடல்களில் காணப்பெறும் பாடவேறு பாடுகள், தேவையான இடங்களில் சிறு விளக்கங்கள் போன்றவற்றைத் தந்துள்ளார். பக்க எண்கள் நூற்பா எண்கள் தமிழ் வடிவில் தரப் பெற்றுள்ளன.

4. தொல்காப்பியம் - பொருளதிகாரம் (இறுதி நான்கு இயல்கள்) இளம்பூரணம் பதிப்பு 1935- இல் வாவிள்ள இராமஸ்வாமி சாஸ்திருலு அண்ட் சன்ஸ், சென்னையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. தொல்-பொருள்-

இறுதி நான்கு இயல்களின் பதிப்புரையில் வ.உ.சி. 1910-ஆம் வருடம் தொல்காப்பியத்தைப் படிக்கும் பாக்கியம் தமக்குக் கிடைத்ததாகவும், தாமே உரையெழுதி வெளியிட முயன்றபோதுதான் இளம்பூரணர் உரை கிடைத்ததாகவும், அதுவே மிக எளிமையாக இருந்ததால் தாம் உரை எழுதி வெளியிடுவதை நிறுத்திவிட்டு இளம்பூரணர் உரையைப் பதிப்பிக்க முயன்றதாகவும் கூறுகிறார். அகத்திணையியல், புறத்திணையியல் தவிர 'இவ்வேழு இயல்களுக்கும் பெயரளவில் பதிப்பாசிரியன், உண்மைப் பதிப்பாசிரியர் திரு. வையாபுரிப்பிள்ளையவர்களே, அவர்கள் செய்த நன்றி என்னால் என்றும் உன்னற்பாலது'' என எழுதுகிறார். 'தமிழ்நாடு முழுவதிலும் பொருளதிகார இளம்பூரணருரை முற்று மடங்கிய பிரதி ஒன்றேயுள்ளது. இப்போது அங்கங்கே ஒரு சிலரிடத்துள்ள பிரதிகளனைத்தும் இவ்வேட்டுப் பிரதியைப் பார்த் தெழுதிக்கொண்ட கடிதப்பிரதிகளேயாகும். இக்கடிதப்பிரதிகள் சில வற்றில் ஒரு சிலவிடங்களில் ஏட்டுப் பிரதியிற் காணப்பெறாத விஷயங்கள் ஆதாரமின்றி நுழைத்தெழுதப்பட்டன. அவ்வாறு நுழைத் தெழுதியவற்றையெல்லாம் களைந்து ஏட்டுப்பிரதியிலுள்ள வாறே இப்பதிப்பு எனது நண்பர் வையாபுரிப்பிள்ளையவர்களாற் சித்தம் செய்யப்பட்டுள்ளது' எனவும் குறிப்பிடுகிறார். அடிக்குறிப்பில் நூற்பா பாடவேறுபாடுகளும் மேற்கோள் இலக்கியப்பாடவேறுபாடுகளும், சில தேவையான குறிப்புகளும் தந்துள்ளார். சூத்திர முதற்குறிப்பகராதி முன்பகுதியில் உள்ளது. மேற்கோள் அகராதி (என்னென்ன பாடல்கள் எவ்வெவ்விலக்கியத்திலுள்ளன) என்பதுடன் பாடபேதம் ஒரு பக்கத்தில் தரப்பட்டுள்ளது. இவை அடிக்குறிப்பில் இல்லாத உரைப்பாட பேதங்கள். பிழைதிருத்தம், இரண்டுபக்கங்கள். அநுபந்தம் (5 பக்கங்கள்). சிலவிடுபாடுகள் பிறழ்ந்துள்ள பகுதிகள் ஆகியன தரப்பெற்றுள்ளன. பொதுநிலையில் பொருள் - அகத்திணையியல், புறத்திணையியல் 1921-இல் வெளியிடப்பெற்றாலும் பக்கங்களும் நூற்பா எண்களும் தொடர்ச்சியாகத் தரப்பெற்றுள்ளன.

1921-இல்-பொருள்- அகத்திணையியல், புறத்திணையியல்; 1933-இல் களவியல், கற்பியல், பொருளியல்; 1935-இல் மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல், 1935-இல் வெளியிட்டபோது பொருளதிகாரம் ஒன்பது இயல்களும்- பதிப்பாசிரியர் வ.உ.சிதம்பரம் பிள்ளை எஸ். வையாபுரிப் பிள்ளை என்று உள்ளது. இவரது தொல் காப்பியப் பதிப்புப்பணி குறித்த நீண்டதொரு வரலாற்றை,

“வ.உ.சி. தம் விடாமுயற்சியால் 1910 இல் தொல்காப்பியத்தைப் படிக்கத் தொடங்கி, 1921இல் பொருள் அகத்திணையியல், புறத் திணையியலை வெளியிட்டு, 1928 இல் எழுத்தை வெளியிட்டு, 1933 இல் பொருள். களவு, கற்பு, பொருள். இயல்களை வெளிப்படுத்தி, 1935இல் பொருள் இறுதி நான்கு இயல்களையும் வெளியிட்டுள்ளார். இவற்றை எண்ணிப் பார்க்கும் போது ஏறத்தாழ 1910 முதல் 1935 வரை இருபத்தைந்து ஆண்டுகள் தொல்காப்பியம் பற்றி நினைத்துக் கொண்டிருந்தார் என்பது தெளிவாகிறது. இளம்பூரணர் உரை தவிர

ஏனைய உரைகளை வெளியிடவேண்டுமென்ற உணர்வு அவருக்கு இருந்ததாகத் தெரியவில்லை” என்று ச.வே.சு. தமது நூலில் குறிப் பிட்டுள்ளார்.

வ.உ.சி. தமிழ்மொழியின் மேன்மையை உணர்ந்து அதனை மக்கள் மத்தியில் பரப்பிய தமிழறிஞரும் மொழிப்பற்றாளரும் ஆவார். அவரது தமிழ்ப் பணிகள், தமிழ்மொழியை தேசிய உணர்வோடு இணைத்து வளர்த்த தனித்துவமான பங்களிப்புகளாகும். வ.உ.சி. தமிழ்மொழியைத் தாய்மொழியாக மட்டுமன்றி, தேச விடுதலைக்கான ஊடகமாகவும் கருதினார். ஆங்கிலேய ஆதிக்க காலத்தில் ஆங்கிலம் கல்வி, நிர்வாகம், அரசியல் ஆகிய துறைகளில் மேலோங்கி இருந்தபோது, தமிழின் மதிப்பையும் பயன்பாட்டையும் மீட்டெடுக்க வேண்டிய அவசியத்தை அவர் வலியுறுத்தினார். ‘மக்கள் மொழியிலேயே மக்களை விழிப்புணர்வுடன் எழுப்ப முடியும்’ என்ற அவரது நம்பிக்கை, அவரது தமிழ்ப் பணிகளின் அடித்தளமாக இருந்தது. பதிப்புப் பணி மூலம் வ.உ.சி. தமிழின் தொன்மையையும் தனித்துவத்தையும் வலியுறுத்தினார். வடமொழி ஆதிக்கம் அதிகரித்திருந்த காலத்தில், தமிழுக்கே தனித்த இலக்கண மரபு உண்டு; அது பல ஆயிரம் ஆண்டுகள் பழமையானது என்பதை அவர் தொல்காப்பியத்தின் வழியாக நிரூபிக்க முயன்றார். இதனால், தமிழர்களிடையே மொழிப் பெருமையும் தன்னம்பிக்கையும் வளர்த்தார். வ.உ.சி. அவர்களின் தொல்காப்பியப் பதிப்புப் பணி, அவரது தமிழ்த்தேசிய சிந்தனையுடனும் நெருக்கமாக இணைந்தது. தமிழ்மொழியின் அடிப்படை நூலை சீரிய முறையில் பதிப்பிப்பது, தமிழின் அடையாளத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு போராட்டமாகவே அவர் கருதினார். அரசியல் விடுதலை போலவே, மொழி விடுதலையும் அவசியம் என்ற எண்ணம் அவரது தொல்காப்பியப் பதிப்புப் பணியில் வெளிப்பட்டுள்ளது.

துணைநின்ற நூல்கள்:

1. நா.பாலுசாமி (ப. ஆ.), வாழ்வியற் களஞ்சியம், தொ.8, தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர், 2001.
2. ச.வே.சுப்பிரமணியன் (ப. ஆ.), தொல்காப்பியப் பதிப்புகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1992.
3. பழனியப்பன், வெ., பழனி, உ., தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம். தொகுதி மூன்று. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1989.
4. கிருட்டிணமூர்த்தி,கோ.,தொல்காப்பிய ஆய்வின் வரலாறு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, மு.ப., 1990.
5. புலவர் குழந்தை, தமிழக வரலாற்று வரிசை-8. தமிழக வரலாறு,அமிழ்தம் பதிப்பகம். சென்னை, 2008.
6. இளங்குமரன். இரா., கழக ஆட்சியர் வ.சு.வரலாறு. திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை, 1981.

47

வ.உ.சி.யின் தொல்காப்பியப் பதிப்பு

திரு. சி. செரஞ்சன் (சிறஞ்சன்)
விரிவுரையாளர், தமிழ்த்துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

ஆய்வுச்சுருக்கம்:

தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழர் கல்வி முதலான துறைகளில் பணியாற்றிய ஆளுமைகள் குறித்த ஆய்வுகள் காலத்துக்குக் காலம் பலராலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய ஆய்வுகள் மேற்கூறப்பட்ட துறைகளில் பணியாற்றிய ஆளுமைகளின் வரலாறு 'தனிமனிதவரலாறு' என்றவரையறைக்குள்மட்டுப்படுத்தப்படுவதில்லை. இவற்றைத் தாண்டி இவ்வாறான ஆளுமைகள் பற்றிய ஆய்வுகள் அக்காலத்து மொழி, கல்வி, இலக்கியம், சமூகம் முதலான துறைகளின் வரலாறாகவும் அமைந்து விடுகின்றன. அந்தவகையில் வ.உ.சி தமிழ்ப்புலமை மரபின் முக்கிய ஆளுமைகளுள் ஒருவராக உணரப்படுகின்றார். இவர் சுதந்திரப் போராட்ட வீரர், நூலாசிரியர், பதிப்பாசிரியர், உரையாசிரியர், மொழிபெயர்ப்பாளர், கவிஞர் எனப் பல துறைகளில் பணியாற்றியுள்ளார். இவரது படைப்புகளை நுணுகி நோக்கும் போது தனித்துவமான இரு அம்சங்கள் முனைப்புற்று நிற்பதனை இனங்காணலாம். ஒன்று அவரது ஆராய்ச்சி மனப்பான்மை மற்றையது அவற்றுள் காணப்படும் எளிமைத்தன்மை என்பனவாகும். இவரது தொல்காப்பிய எழுத்ததிகார உரைப்பதிப்பின் சிறப்பம்சங்களை வெளிக்கொண்டு வருவதாகவே இந்த ஆய்வு அமைந்துள்ளது. இந்த ஆய்வானது விவரண மற்றும் பகுப்பாய்வு முறைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திறவுச்சொற்கள்: பதிப்பு, இளம்பூரணர், எழுத்ததிகாரம்

அறிமுகம்:

வ.உ.சி என்ற சுருக்கக் குறியீட்டால் அறியப்பட்ட வ.உ.சிதம்பரம் பிள்ளை வெறும் சுதந்திரப் போராட்ட வீரர் மட்டுமல்ல சிறந்த இலக்கியப் படைப்பாளியுமாவார். தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும் திருக்குறள் முதலிய நீதி இலக்கியங்களையும் கம்பராமாயணம், திருவிளையாடற் புராணம் முதலிய சமய இலக்கியங்களையும் இவர் தமது இளமைக்காலத்திலே ஐயம் திரிபறக் கற்றுள்ளார். இவ்வாறான இலக்கியப் பயிற்சியின் காரணமாக இவர் படைப்பாசிரியராகவும் உரையாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் தமிழ்த் தொண்டு புரிந்து தமிழ் மொழிக்குப் பெருமை சேர்த்துள்ளார். அரசியல் வாழ்வில் அவர் செய்த செயல்களாக ஆங்கிலேயர்களுக்கு

எதிரான எதிர்ப்புப் போராட்டங்களை மேற்கொண்டதையும் அப்போராட் டங்களால் சிறை சென்றதையும் செக்கிழுத்தமையையும் கப்பலோட் டியதையும் மக்கள் அறிந்த அளவிற்கு அவர்தம் அரசியல் வாழ்வின் இடையே செய்த இலக்கியத் தொண்டினை அறியவில்லை. எனினும் நாட்டுத் தொண்டுடன் இலக்கியத் தொண்டும் ஆற்றிப் புகழ்பெற்ற வ.வே. சு ஐயர், பாரதி முதலானவர்களுக்கெல்லாம் வ.உ.சி முன்னோடியாக இருந்திருக்கின்றார் எனக் கருதலாம்.

இவரது இலக்கியப் படைப்புக்களில் ஆழமான கருத்துகள் காணப் படுகின்றன. இவர் உரை எழுதுவதற்கும் பதிப்பிப்பதற்கும் தமிழ் மொழியாக்கம் செய்வதற்கும் எடுத்துக்கொண்ட ஆங்கில நூல்களும் சிறப்பிற்குரியன. இவர் ஆங்கிலேயரின் ஆட்சியையும் அதிகாரத்தையும் எதிர்த்தாரேயன்றி அவர்களது நல்ல இலக்கியங்களைப் போற்றி யுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வ.உ.சி. யின் தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பு:

அச்சு ஊடகத்தை மையமாகக் கொண்டு பதிப்பியல் எனும் தனித் துறையில் இலக்கணச்சுவடிகள் நூலுருவம் பெற்றன. இப்பணி பத்தொன்பதாம் நூற்றாண்டில் தான் தொடங்குகின்றது. தமிழ்க் கல்வி வரலாற்றில் அச்சு நூல்களின் உருவாக்கம் அறிவுத் தேடலில் ஒரு பரிணாமத்தைத் தந்தது. அந்தவகையில் அச்சு இயந்திரம் நிலைபெற்றவுடன் தமிழில் புது நூல்கள் வெளிவந்ததை விட சுவடி நிலையிலிருந்த பழந்தமிழ் இலக்கிய, இலக்கணங்களே அச்சிடப்பட்டன. இதற்கு உறுதுணையாக இருந்தவர்கள் பழந்தமிழில் புலமை மிகுந்த அறிஞர் பெருமக்களேயாவர். இவர்களை மயிலை சீனி வேங்கடசாமி பின்வருமாறு பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

‘ஏட்டுச் சுவடிகளாக இருந்த பழைய தமிழ் நூல்களை முதன் முதலாக அச்சிற் பதிப்பித்தவர்களின் பெயர்கள் இப்போது மறக்கப்பட்டுள்ளன. மறக்கப்பட்ட அவர்களின் பெயரை நான் அறிந்த வரையில் குறிப்பிடுகிறேன். சென்னைக் கல்விச் சங்கத்தின் காரியஸ்தராக இருந்த முத்துசாமிப்பிள்ளை (? - 1840), புதுவை நயனப்ப முதலியார் (1779-1845), சென்னைக் கல்விச் சங்கத்தின் தலைமைத் தமிழ்ப் புலவராக இருந்த தாண்டவராய முதலியார் (? - 1850) இயற்றமிழாசிரியர் முகவை இராமானுசக் கவிராயர் (? - 1852), களத்தூர் வேதகிரி முதலியார், வீர சைவராகிய திருத்தணிகை விசாகப் பெருமாளையர், கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், தில்லையம்பூர் சந்திரசேகரக் கவிராச பண்டிதர், மகாவித்துவான் மயிலை சண்முகம் பிள்ளை, ராவ்பகதூர் சி.வை. தாமோதரம்பிள்ளை முதலியோர். உ.வே. (பின்னர் டாக்டர்) சாமிநாதையர் சென்ற நூற்றாண்டின் இறுதியில் ஏட்டுச் சுவடிகளை அச்சிடத் தொடங்கினார்.’

(மயிலை சீனி வேங்கடசாமி, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், ப.86).

இக்குறிப்பு பத்தொன்பதாம் நூற்றாண்டில் பதிப்புத் துறையில் முன்னோடியாக இருந்தவர்களை வரலாற்று நிலையில் எடுத்துக் கூறுகின்றது.

தமிழாராய்ச்சியின் வளர்ச்சியில் புதிய போக்குகளை உண்டாக்கிய பெருமைக்குரியவர்கள் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்த அறிஞர்கள் எனலாம். இந்த அறிஞர்களின் வரிசையில் வ.உ.சி.யும் குறிப்பிடத்தக்க ஒருவராவார். இவர் திருக்குறள் மணக்குடவர் உரையினையும் தொல்காப்பிய எழுத்ததிகார இளம்பூரணர் உரையையும் பொருளதி காரத்தில் அகத்திணை, புறத்திணை ஆகிய இரண்டு இயல்களையும் 1928 இல் பதிப்பித்துள்ளார். இப்பகுதியில் வ.உ.சி தொல்காப்பியத்தைப் பதிப்பித்த காலகட்டம், பதிப்பித்துள்ள முறைமை, பதிப்பிலுள்ள சிறப்புக் கூறுகள் ஆகியவை குறித்து ஆராயப்படுகின்றன.

வ.உ.சி வாழ்ந்த காலம் ஆங்கில காலனித்துவ காலம். பாரம்பரிய கல்வி முறைமையில் மாற்றம் காணத் தொடங்கிய காலம். நெடுங்காலமாக நிலவி வந்த தமிழ்க் கல்வி மரபு, திண்ணைக் கல்வியிலிருந்து நிறுவன மயப்பட்ட பாடசாலை, கல்லூரி முறைமைக்கு மாறியமை அந்த மாற்றத்தின் முக்கிய அம்சம் எனலாம். இவ்வாறு மாற்றம் பெற்ற கல்வி மரபின் தோற்றக்காலம் முதலாக நவீன காலம் வரையிலும் மிகுந்த செல்வாக்குப் பெற்ற நூலாக விளங்குவது தொல்காப்பியமாகும். இதனால்தான் தொல்காப்பியம் பல பதிப்புகளையும் உரைகளையும் கண்டது. தனது தொல்காப்பிய பதிப்புரையில் வ.உ.சி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

‘இளம்பூரணரே முதல் உரையாசிரியர். அவர் ‘உரையாசிரியர்’ எனவே யாவராலும் வழங்கப்படும் பெருமை வாய்ந்தவர். அவர் மூன்று அதிகார உரைகளுக்குள்ளும் எழுத்ததிகார உரை ‘எழுத்திற்கு இளம்பூரணம்’ என்று யாவராலும் புகழப்பெற்றது. கற்போர் எளிதில் உணருமாறு பொருள்தொடர்பு நோக்கிச் சூத்திரச் சொற்களையும் அவற்றின் பொருட் சொற்களையும் பிரித்தும் நிறுத்திப் படிப்பதற்குரிய அடையாளங்களிட்டும் பதிப்பித்துள்ளேன். ஒவ்வோரிடத்தில் பாடவேறு பாடும் உரைவேறுபாடும் சேர்த்துள்ளேன். எனது சேர்ப்பிற்கு முன்னும் பின்னும் முறையே ஐ ஸ இக்குறிகள் இட்டுள்ளேன்.

இவ்வெழுத்ததிகாரத்தையும் பொருளதிகாரத்தையும் 1920-ஆம் வருடத்தில் அச்சிடத் தொடங்கினேன் பொருளதிகாரம் அகத்திணையியல் புறத்திணையியல்கள் அச்சாகி வெளிவந்துள்ளன. இஃது இப்பொழுது வெளிவருகின்றது. பொருளதிகார ஏனைய உரைகளும் விரைவில் வெளிவரும்.’ (தொல்காப்பியம், இளம்பூரணம், வ.உ.சிதம்பரப்பிள்ளை (ப. ஆ) 1928, ப.2)

தொல்காப்பியம் தோன்றிய காலம் முதலாகத் தமிழ்க் கல்வி மரபின் இலக்கணத்துறையில் அதிகம் பயிலப்பட்டு வந்துள்ள தனை மேற்கூறிய கூற்றினூடாக அவதானிக்க முடிகின்றது. வீர சோழியத்துடன் ஒப்பிடுமிடத்துத் தொல்காப்பியத்தில் காணப்படும்

எளிமை மற்றும் இடைக்கால மொழி வழக்கோடு இயைபுடையதாக அமையப்பெற்றுள்ளதனைக் காணலாம்.

இளம்பூரணரின் உரைப்பகுதி விளக்கமில்லாது அமையப்பெற்ற இடங்களில் உரைவிளக்கக் குறிப்புகளை எழுதி தொல்காப்பியச் சூத்திரங்களை எளிமைப்படுத்தியுள்ளார் எனலாம். வகைமாதிரிக்கு ஒன்றை நோக்குவோம்.

'உச்ச காரமொடு நகாரஞ் சிவணும்' *(தொல். 46)*

என்ற சூத்திரத்தின் கீழே இளம்பூரணரின் பதவுரையையும் உதாரணத்தையும் தருகின்றார்.

இ—ள்:- உச்சகாரமொடு நகாரம் சிவணும் - உகரத்தோடு கூடிய சகாரத்தோடே நகாரம் பொருந்தி அஃது இருமொழிக்கு ஈறானவாறு போலத் தானும் இருமொழிக்கு ஈறாம்.

உ—ம்:- பொருந், வெரிந் எனவரும், என்ற உரைவிளக்கத்திற்கு மேலாக வ.உ.சி பகரக் குறியினுள் மேல்வருமாறு விளக்கமளித்துள்ளார். [உகரத்தோடு கூடிய சகரம் இருமொழிக்கு ஈறானவாறு போல நகரம் இருமொழிக்கு ஈறாம் என்க] இளம்பூரணரின் உரையில் சொல்லப்படாத விளக்கத்தைத் தனது கருத்தால் நிறைவாக்கியுள்ளார் என்றே கூறலாம்.

வ.உ.சி.யின் எழுத்ததிகாரப் பதிப்பில் சூத்திர முதற்குறிப்புகள், இயல் அகராதி, இயல்தோறும் உள்ள சூத்திரங்களின் தொகை ஆகியவற்றைத் தனது பதிப்பில் குறிப்பிட்டுள்ளார். இளம்பூரணர் உரையிலும் சூத்திரங்களிலும் காணப்படும் அரிய சொற்களுக்கு வ.உ.சி பகரக் குறியினுள் பொருள்விளக்கம் செய்துள்ளார்.

எடுத்துக்காட்டாக ஒன்றைப் பார்ப்போம்,

'எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
அக்கி னிறுதிமெய் மிசையொடுங் கெடுமே
குற்றிய லுகர முற்றத் தோன்றாது' *(தொல். 128)*

என்ற நூற்பாவின் பொழிப்புரை, பதவுரையை அடுத்து 'முற்ற' என்ற சொல்லுக்குரிய பொருள் விளக்கத்தினை பகரக் குறியினுள் பின்வருமாறு அமைத்துள்ளார். ['முற்ற' என்பதனால் வன்கணம் அன்றி மற்றக் கணங்கட்கும் கொள்க] இவ்வாறு அரிய சொற்களுக்குப் பகரக் குறியினுள் பொருள்விளக்கம் தருதலால் சூத்திரங்களில் அச் சொற்களின் பொருள்பயில் நிலையினை அறிந்துகொள்ளலாம்.

வ.உ.சி.யின் பதிப்புக்கு முன்னிருந்த பதிப்புகள் எல்லாவற்றிலும் சூத்திரத்திற்கான பொழிப்புரையே தரப்பட்டிருந்தது. சூத்திரத்தின் பொருளைப் பதவுரையாக முதன்முதலில் தந்தவர் என்ற சிறப்பினையும் இவரே பெறுகின்றார். கல்வியறிவில் குறைந்தோரும் தொல்காப்பியத்தைப் பயில வேண்டுமென்பதே வ.உ.சி.யின் பெரு விருப்பமாகும். இதனால்தான் கற்போர் எளிதில் பொருளை விளங்கிக்கொள்ளுமாறு பொருள் தொடர்பு நோக்கிச் சூத்திரச்

சொற்களையும் அவற்றின் பொருட் சொற்களையும் பிரித்து அடையாளங்களும் இட்டுத் தொல்காப்பியத்தைப் பதிப்பித்துள்ளதனைக் கண்டுகொள்ளக் கூடியதாகவுள்ளது.

உசாத்துணை நூல்கள்:

12. சிதம்பரப்பிள்ளை. வ. உ., (1928), தொல்காப்பியம் இளம்பூரணம், அகஸ்தியர் பிரஸ், அம்பாசமுத்திரம்.

13. வேங்கடசாமி. மயிலை. சீனி., (1962), பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழிலக்கியம் (1800 – 1900) சாந்தி நூலகம், சென்னை.

14. சங்கரவள்ளிநாயகம். அ., (1994), வ.உ.சி வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.

15. லீலாவதி. தி., (1986), தமிழ் தந்த வ.உ.சி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவகம், சென்னை.

48

வ.உ.சிதம்பரனாரின் தொல்காப்பியப் பதிப்பும் தொல்காப்பிய உரை முயற்சியும்

க. சதீஸ்குமார்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, கலை-அறிவியல் புலம்,
எஸ்.ஆர்.எம்.பல்கலைக்கழகம், காட்டாங்குளத்தூர்.

முனைவர் பா. ஜெய்கணேஷ்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கலை - அறிவியல் புலம்,
எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம்.

ஆய்வுச்சுருக்கம்:

வ.உ.சிதம்பரனார் ஒரு சுதந்திரப் போராட்டத் தியாகியாக மட்டுமே இன்றைக்கு பெரும்பாலான மக்களிடையே அறியப்படுகின்றார். ஆனால் வ.உ.சிதம்பரனாரை சுதந்திரப் போராட்ட தியாகி என்னும் ஒரு குடுவைக்குள் மட்டும் அடைப்பது பொருந்தாது. ஏனென்றால் இந்திய விடுதலைக்காக அவர் எவ்வளவு தூரம் போராடியுள்ளாரோ அதே அளவுக்கு தமிழ் இலக்கிய மீட்சிக்காகவும் தம்முடைய உரைகளின் மூலமாகவும் பதிப்புகளின் மூலமாகவும் எழுத்துகளின் மூலமாகவும் செயல்பட்டுள்ளார். வ.உ.சிதம்பரனார் பதிப்புத் துறையிலே மிகவும் சிறந்து விளங்கியுள்ளதை அவருடைய முழுமையான வரலாற்றினைப் படித்தவர்களிடையே அறிய முடியும். இந்த ஆய்வினுடைய நோக்கம் வ.உ.சிதம்பரனார் தொல்காப்பியப் பதிப்புகளுக்காக அவர் எடுத்த முயற்சி அதற்காக அவர் உழைத்த உழைப்பை வெளிக்கொண்டு வரவும் மற்றும் அவர் தொல்காப்பியத்திற்கு உரை எழுதினாரா என ஆராய்வதாக அமைகிறது.

முன்னுரை:

தொல்காப்பியத்திற்கு எழுதப்பட்ட உரைகளில் யாரும் கவனம் செலுத்தாத குறிப்பிடத்தக்க உரைகளைப் பதிப்பித்துத் தமிழ்ப்பதிப்பு வரலாற்றிற்கும், இலக்கிய வரலாற்றிற்கும் வளம் சேர்த்தவர் வ.உ.சி அவர்கள். பதிப்பு வரலாறு என்றாலே ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரனார், உ.வே.சாமிநாதர் போன்றோர் நினைவிற்கு வரும்போது வ.உ.சிதம்பரனார் வராததற்கான காரணம் அவருடைய பதிப்புப் பணிகளையாரும் அறியவில்லை என்பதே புலப்படுகிறது. ஆனால் அவர் திருக்குறள், தொல்காப்பியம், சிவஞானபோதம் போன்ற பல இலக்கியங்களைப் பதிப்பித்துள்ளார். குறிப்பாக தொல்காப்பிய எழுத்து சொல் பொருள் அதிகார இயல்களுக்கு இளம்பூரணர் உரையோடு பதிப்பு செய்துள்ளார். அவர் பதிப்பு செய்த நோக்கம் சூழல், தொல்காப்பியத்திற்கு எளிமையாக தாமே உரை எழுத முயன்றது போன்றவற்றினை உள்ளடக்கியதாக இந்த ஆய்வு அமைகிறது.

தேசியப்பணியிலிருந்து தமிழ்ப்பணிக்கு:

தமிழறிஞரும் பேராசிரியருமான வையாபுரிப்பிள்ளை, 'தேசிய விஷயங்களில் உழைத்துவந்தவர் இப்போது தாய்மொழியாகிய தமிழின் பொருட்டு உழைக்க முன்வந்து சென்னையில் தங்கினார்'[1] என்கிறார். சிறைவாழ்க்கை வ.உ.சி. யினை மொழியின் பக்கம் திரும்பும்படியான சூழ்நிலையை உருவாக்கிவிட்டது. இதன் பின்னர் தன் 24 ஆண்டுகளை இலக்கியம், இலக்கணம், சைவம் படிப்புக்காக ஆராய்ச்சிக்காக வ.உ.சி. செலவிட்டார். வையாபுரிப்பிள்ளை அவர்களின் கருத்துப்படி சிறை வாழ்க்கை வ. உ.சிதம்பரனாரை இலக்கியப் பணிக்கு கொண்டு வந்ததை நம்மால் இவ்விடத்திலே புரிந்து கொள்ள முடிகிறது.

பதிப்புத்துறையில் வ.உ.சி:

திருக்குறள் மணக்குடவர் உரையையும், தொல்காப்பிய எழுத்ததிகார, பொருளதிகார இளம்பூரணர் உரையையும் பதிப்பித்து வழங்கியதன் வழி வ.உ.சி. என்னும் பதிப்பாசிரியர் தமிழ்ப்பதிப்பு வரலாற்றின் முகமாகவும் மாறி நிற்கின்றார்.[2] இவ்வாறாக முனைவர் பா.ஜெய்கணேஷ் கீற்று எனும் இணையப் பக்கத்தில் எழுதியுள்ள கருத்தின்படி சில நூல்களுக்கே வ.உ.சி. அவர்கள் உரையெழுதி இருந்தாலும் கூட தமிழ் சமூகம் அன்றைய காலத்தில் கண்டுகொள்ளாத திருக்குறளின் மணக்குடவர் உரையையும் தொல்காப்பிய எழுத்ததிகார பொருளதிகார இளம்பூரணர் உரையினைக் கையில் எடுத்த ஒரே காரணத்திற்காக இவரைப் பதிப்புத் துறை வரலாற்றில் வைக்க வேண்டிய அவசியம் இருப்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. முன்பே பதிப்பிக்கப்பட்ட ஒரு நூலை மீண்டும் மறுஅச்சாகக் கொண்டு வந்து பதிப்பாசிரியர் என்னும் அடையாளம் பெற்றவர் அல்லர் இவர். சிறைக்குப் பிறகான வாழ்விற்கு இடையிலும் பல்வேறு துயரங்களுக்கு மத்தியிலும் தமிழின் சுவடிகளைத் தேடிக் கண்டடைந்து அவற்றை அச்சில் ஏற்றித் தமிழ் வளர்ச்சி வரலாற்றிற்குப் பெருந்துணை புரிந்தவர் இவர் ஒருவரே.

வ.உ.சிதம்பரனாரின் தொல்காப்பியப் பதிப்புகள் :

இளம்பூரணர் உரை – 1919, தொல்காப்பிய எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரை – 1928, தொல்காப்பியப் பொருளதிகாரம் களவியல், கற்பியல், பொருளியல் – இளம்பூரணர் உரை – 1933, தொல்காப்பியப் பொருளதிகாரம் மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் - இளம்பூரணர் உரை – 1935, தொல்காப்பியம் பொருளதிகாரம் ஒன்பது இயல்களும் - இளம்பூரணர் உரை- 1935.

இளம்பூரணர் உரையை முதலில் பதித்தவர் வ.உ.சி:

தொல்காப்பியத்தின் முதல் இரண்டு இயல்களான அகத்திணை யியலுக்கும் புறத்திணையியலுக்கும் முதன்முதலில் இளம்பூரணர் உரையினை வ.உ.சி அவர்கள் பதிப்பு செய்து வெளியிடுகிறார். ஆனால் அவர் பதிப்பு செய்த ஆண்டு எந்தக் குறிப்பிலேயும் இல்லாததால் ஏதோ ஒரு குறிப்பினை அடிப்படையாக வைத்து 1921 ஆம் ஆண்டு என்று கணக்கிடப்படுகிறது.

1920 ஆம் ஆண்டு க.நமச்சிவாயர் அதே இரண்டு இயல்களுக்கு இளம்பூரணர் உரையினைப் பதிப்பு செய்ததை நோக்கும்போது வ.உ.சி இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்படுகிறார். இந்தக் கூற்றினை ஆய்வாளர் பொ.வேல்சாமி அவர்கள் 1918-1919இல் வந்த செந்தமிழ் இதழின் மதிப்புரையை அடிப்படையாகக் கொண்டு மறுக்கின்றார். ஸ்ரீமான் வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்கள் அகத்திணையியலும் புறத்திணையியலுமாகிய பாகத்தை அச்சிட்டிருக்கிறார்கள். அதன்பிரதி ஒன்றெனக்கு அளிக்கப்பட்டதை அவகாசம் கிடைத்தபொழுது இடையிடையே படித்துப் பார்த்தேன். அது படிப்பவர்களுக்கு உரைப்பகுதி நன்கு விளங்கும்படி பத்தி பிரித்து நல்ல காகிதத்திற் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. அச்சில் வெளிவந்ததும் வெளிவராததுமான உதாரணச் செய்யுள் பலவற்றிற்கும் ஆதாரம் காட்டி நன்கு பரிசோதித்துப் பதிக்கப்பட்டு வருவதாய்த் தெரிகிறது. இன்னும் முன்னும் பின்னும் அடுத்தடுத்துத் தொடுத்து ஒரு புத்தகமாம் படி ஏனைப் பகுதிகளையும் அச்சிட்டு வெளியிடக் கருதிய குறிப்பும் காணப்படுகின்றது. (செந்தமிழ்த்தொகுதி, 1918 -1919, ப. 448)[3] என்று அந்த மதிப்புரை அமைகின்றது. செந்தமிழ் இதழில் வெளிவந்த இந்த மதிப்புரையை அடிப்படையாகக் கொண்டே பொ.வேல்சாமி அவர்கள் இந்தப் பதிப்பு 1919 ஆம் ஆண்டே வெளிவந்தது என்று உறுதிப்படுத்துகிறார். ஆய்வாளர் வேல்சாமி அவர்களின் கருத்துப்படி வ.உ.சி. அவர்கள் பதிப்பித்த தொல்காப்பியப் பொருளதிகார இளம்பூரண உரையே முதன்முதலில் பதிப்பிற்கு வந்த உரை என்பதனை நம்மால் அறிய முடிகிறது.

தொல்காப்பியத்திற்கு உரை முயற்சி :

தொல்காப்பியத்தைப் படிக்கும் பாக்கியம் எனக்கு 1910-ஆம் வருடம் கிடைத்தது. அதன் பொருளதிகாரத்தை யான் படித்தபோது, அதில் வேறு எம்மொழி இலக்கணத்திலும் காணப்படாத நிலப்பாகுபாடு, நிலங்களின் மக்கள், ஏனைய உயிர்கள், மரங்கள், செடிகள், மலர்கள், மக்களது ஒழுக்கங்கள், பழக்கவழக்கங்கள் முதலியன கூறப்பட்டிருக்கக் கண்டேன். இவ்வொப்புயர்வற்ற நூலைத் தமிழ் மக்கள் படியாததற்கு ஒரு காரணம் இந்நூலிற்கு ஆன்றோர் இயற்றியுள்ள உரைகளின் கடின நடையென உணர்ந்தேன். இந்நூலைத் தமிழ்மக்கள் யாவரும் கற்கும்படி எளிய நடையில் ஓர் உரை எழுத வேண்டுமென்று நினைத்தேன். உடனே எழுத்ததிகாரத்தின் முதற்சில இயல்களுக்கு உரையும் எழுதினேன்[4]. என்னும் வ.உ.சி.யின் கூற்று தெளிவுபடுத்துகிறது. உரை எழுதத் தொடங்கிய வ.உ.சி. அவர்கள் 1912 ஆம் ஆண்டில் விடுதலையான பிறகு, சென்னை பெரம்பூரில் வசித்த காலத்தில் தாம் எழுதிய தொல்காப்பிய உரையை நிறைவு செய்யும் பொருட்டுச் செல்வக் கேசவராய முதலியார் அவர்களைச் சந்தித்து அவரோடு இணைந்து உரையைச் சரிபார்க்கத் தொடங்குகிறார். அந்தக் காலத்தில் தி.த. கனகசுந்தரம்பிள்ளை அவர்களிடமிருந்து வ.உ.சி. அவர்களுக்குத் தொல்காப்பிய இளம்பூரண எழுத்ததிகார அச்சுப் புத்தகமும், சொல்லதிகார ஏட்டுப்பிரதிகள் சிலவும் பொருளதிகார ஏட்டுப்பிரதி ஒன்றும் கிடைக்கிறது. இளம்பூரணர்

உரையை வாசிக்கத் தொடங்கிய வ.உ.சி. அவர்கள் அவ்வுரையின் சிறப்புணர்ந்து தாம் உரை எழுதுவதைக் கைவிடுகிறார். உரை எழுதும் முடிவைவிட்டு அந்த இளம்பூரணர் உரையைப் பதிப்பித்துவிட வேண்டும் என்னும் உந்துதலைப் பெற்றுத் தொல்காப்பியப் பொருளதிகாரத்தையும் எழுத்ததிகாரத்தையும் பதிப்பிக்கத் தொடங்குகிறார்.

'இளம்பூரணத்தை யான் படித்த போது அதன் உயர்வும், சிறப்பும், எளிய நடையும் தொல்காப்பியத்திற்கு யான் உரை எழுதுவது மிகையென்று நினைக்கச் செய்தன. பின்னர் என் உரையைப் பூர்த்தி செய்யும் எண்ணத்தை விடுத்து, இளம்பூரணத்தை அச்சிட்டு வெளிப்படுத்த எண்ணினேன். முதலில் எழுத்ததிகாரத்தை ஒரு புத்தகமாகவும், பின்னர்ப் பொருளதிகாரத்தின் அகத்திணையியலையும், புறத்திணையியலையும் ஒரு புத்தகமாகவும் அச்சிட்டு வெளிப்படுத்தினேன்'.[5] என்னும் வ.உ.சி. அவர்களின் கூற்று தெளிவுபடுத்துகிறது.

தொல்காப்பியத்தின் சிறப்பை உணர்ந்து அதற்கான உரை எழுத வேண்டும் என்று நினைத்தவர் தொல்காப்பிய இளம்பூரணர் உரையைப் படித்தபிறகு அந்த உரையே சிறந்தது, அதனை எப்படியாவது தமிழ்ச் சமூகத்திற்குப் பதிப்பித்து வழங்கிட வேண்டும் என்று உறுதி பூண்டு பதிப்பித்து வழங்கிய முறை வ.உ.சி. என்னும் தமிழ்ப் பதிப்பாளுமையைத் தனித்து அடையாளப்படுத்துவதற்குக் காரணமாக அமைகின்றது.

முடிவுரை:

வ.உ.சிதம்பரனாரின் தொல்காப்பியப் பதிப்பு பற்றி நமக்குச் சில தகவல்கள் தெரிந்திருந்தாலும் கூட இந்தக் கட்டுரையில் அவர் தொல்காப்பியத்தினை இளம்பூரணர் உரையோடு பதிப்பதற்கான காரணங்கள், சூழல் மற்றும் அவர் பதிப்பித்த பொருளதிகார இளம்பூரணர் உரையே முதல் பதிப்பு என்றும், சிறையில் இருந்த காலத்தில் வ.உ. சி. அவர்களே தொல்காப்பியத்திற்குச் சில இயல்களுக்கு உரை எழுதியுள்ளதையும் அறிய முடிகின்றது.

அடிக்குறிப்புகள்:

1. வ.உ.சி. யும் தமிழ்ப் பணிகளும் - www.hindutamil.in 18.11.2015 அ.கா.பெருமாள்
2. தமிழ் பதிப்பு வரலாற்றில் வ.உ.சி. அவர்களின் தொல்காப்பிய பதிப்புகள்-
3. முனைவர் பா. ஜெய்கணேஷ் 29.05.2023 www.keetru.com
4. செந்தமிழ்த்தொகுதி - (1918-1919) ப-448
5. தொல்காப்பியப் பதிப்புரைகள் - பா.இளமாறன் பக்கம் - 167
6. தொல்காப்பியப் பதிப்புரைகள் - பா.இளமாறன் பக்கம் - 167

துணைநூற்பட்டியல்

1. இளமாறன், பா., தொல்காப்பியப் பதிப்புரைகள், பரிசல் பதிப்பகம், சென்னை, 2021
2. வேல்சாமி, பொ., தொல்காப்பிய பொருளதிகார இளம்பூரணர் உரை முழுமையும் முதன்முதலாக அச்சிட்டு வெளிப்படுத்தியவர் வ.உ.சிதம்பரம் பிள்ளையே!, மானுடம் (சமூக - அரசியல் - பண்பாட்டுக் காலாண்டிதழ்), நவம்பர் - சனவரி 2022.
3. இணையம்: 1. தமிழ் இணையக் கல்விக்கழகம் - tamilvu.org, 2. keetru.in



திரு

ஜேம்ஸ் ஆலன்

வலிமைக்கு மார்க்கம்

திரு

வ. உ. சிதம்பரம் பிள்ளையால்

மொழி பெயர்க்கப்பெற்றது.

MADRAS-1

திரு

வி. இராமஸ்வாமி சாஸ்துருலு அண்ட் ஸன்ஸ்

அவர்களால்

பிரசுரிக்கப்பெற்றது.

பிரதி செய்யும் உரிமை. 1930. விலை [redacted] 1/-

வ.உ.சி. மொழிபெயர்த்து 1930இல் பதிப்பித்த வலிமைக்கு மார்க்கம்

பகுதி ஐந்து: மொழிபெயர்ப்புத் திறன்

49

வ.உ.சி.யின் அகமே புறம் நூல் காட்டும் மெய்ப்பொருளை அடையும் வழி

திருமதி க. சுமித்ரா

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, நவரசம் கலை & அறிவியல் மகளிர் கல்லூரி, அறச்சலூர்.

ஆய்வுச் சுருக்கம்:

நம்முடைய மன எண்ணங்களைத் தூய்மைப்படுத்தி, அதாவது துன்பம் தரும் செயல்களை எண்ணாமல் மற்றவர்களுக்கு எந்தவித தீங்கையும் நினைக்காமல் வாழ்தலே ஒரு மனிதன் மெய்ப்பொருளை அடைவதற்கான வழியாகக் குறிப்பிடுகிறது. நம்முடைய மனதிற்கு கோபம், ஆத்திரத்திற்கு பதிலாக அமைதியையும், பொறுமையையும் பழக்கப்படுத்த வேண்டும். எந்த ஒரு செயலைச் செய்தாலும் அதனை முழுமையாக அறிந்து கொண்ட பின்பே செய்தல் வேண்டும். மெய்ப்பொருளை அடைய விரும்புபவர்கள் மனதினை கட்டுப்படுத்தி அதனால் உண்டாகும் தவறுகள், துன்பங்கள் ஆகியவற்றின் மூலம் தான் கற்றறிந்த நெறிகள் மூலம் நல்ல செயல்களைச் செய்து வருவதில் ஈடுபடுத்த வேண்டும். அதனால் அவர் பெறும் ஞானமே அவருக்கு மெய்ப்பொருளை அடைய வழிவகுக்கும் என்பதே இந்த ஆய்வின் நோக்கமாக உள்ளது.

திறவுச் சொற்கள்: மனம், அகம்,புறம், பழக்கம்,தன்மை,வன்மை, செய்தல், அறிதல், மொழிபெயர்ப்பு, வ.உ.சி, ஜேம்ஸ் ஆலன், கோபம்,பொறுமை.

முன்னுரை:

வ.உ.சிதம்பரனார் இந்திய விடுதலைப் போராட்ட வீரரும் மொழி மேதையும் ஆவார். இவரின் படைப்புகள் நம்மை ஊக்கமூட்டுவதாகவே அமைகின்றன. அவரின் படைப்புகளில் ஒன்றான 'அகமே புறம்' எனும் மொழிபெயர்ப்பு நூல் மனிதனுடைய மனம் குறித்த விரிவான பகுப்பாய்வைக் கொண்டது. நம்முடைய சங்க இலக்கியங்கள் இரண்டு அடிப்படைப் பிரிவுகளைக் கொண்டது. அதில் ஒன்றான நம்முடைய அகம் சார்ந்த கருத்துகளைப் பதிவுசெய்து அதன் மூலம் நாம் மெய்ப்பொருளை அடையும் வழியையும் கூறியுள்ளார். நம் மனதின் உள்ளுணர்வு, பழக்கப்படுத்துதல், மனதின் தன்மை வன்மையினை அறிந்து பின்பு எந்தச் செயலையும் செய்தல் போன்றவற்றைப் பற்றி விவரித்துள்ளார். 'அகமே புறம்' இந்நூலில் அகமே புறம், மனதின் தன்மையும் வன்மையும், பழக்கத்தை உண்டாக்கல், செய்தலும் அறிதலும் ஆகிய நான்கு தலைப்புகளின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள கருத்துகள் இந்த ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

மொழிபெயர்ப்பு நூல்:

ஜேம்ஸ் ஆலன் அவர்கள் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற எழுத்தாளர் ஆவார். ஆலன் அவர்கள் எந்த நேரத்தில் எதனைச் செய்ய வேண்டுமோ அந்த நேரத்தில் முழு மனதோடு அதனைச் செய்து முடிப்பார். நேர மேலாண்மையை கடைப்பிடிப்பவர் ஆவார். ஜேம்ஸ் ஆலன் இயற்றிய 'அகத்திலிருந்து புறம்' என்று பொருள்படும் ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு நூலே இந்த 'அகமே புறம்' எனும் இந்நூல் ஆகும். இதில் அறம்,பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் சுலபமாக அடைவதற்குத் தக்க மார்க்கங்கள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. வ.உ.சி. 'அகமே புறம்' என்னும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார்.

அகமே புறம்:

'அறத்தான் வருவது இன்பம்' *(திருக்குறள்)*

அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். ஒவ்வொரு மனிதனும் அறத்தோடு வாழ்தல் வேண்டும். மனிதனுடைய ஒவ்வொரு செயலும் அவர்களுடைய அகத்தின் வாயிலாகவே நிகழ்கிறது. ஒரு மனிதன் தன்னுடைய வாழ்வு முழுவதும் நிகழும் நிகழ்வுகள் அனைத்தும் மனதின் வழியே நிகழ்கிறது என்பதை அறிவாரானால் அவருக்கு பேரின்ப வீட்டின் வழி திறந்திருக்கும்.

'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்' *(திருக்குறள்)*

ஒருவர் தன்னுடைய மனதில் குற்றமில்லாதவனாக இருப்பதே அறமாகும். ஆதலால் மனிதன் தன்னுடைய நினைப்பையும், செயலையும் நேர்மையாக வைத்து நடத்தல் வேண்டும். தன்னுடைய மனதை ஒருவன் நேர்மையாகவும், தன்னுடைய செயல்களை ஒழுக்க நெறியில் நடத்துவானால் அவன் தளராத ஊக்கம் பெற்று ஞானத்தை அடைவான்.

மனதின் தன்மையும் வன்மையும்:

'அரம்போலும் கூர்மைய ரேனும் மரம் போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்' *(திருக்குறள்)*

மனிதன் ஆறறிவு உடையவன் ஆனால் உயரிய பண்பு இல்லாதவன் ஓரறிவு மரமாகவே கருதப்படுவான். ஆறறிவின் மூலம் நாம் நல்லவை, தீயவை ஆகியவற்றை பிரித்து அறியும் தன்மையை கொண்டுள்ளோம். புறப் பொருட்கள் மேல் நாம் ஆசை வைத்தால் அது நம்மை தீய வழியில் நடக்கச் செய்யும், ஆதலால் நம்முடைய மனதினை புறப்பொருட்கள் மேல் ஆசை கொள்ளாமல் அவற்றை தவிர்த்தல் வேண்டும்.

'ஐயறிவும் தம்மை அடைய ஒழுகுதல்
எழுதுவது எய்தாமை முற்காத்தல்' *(திரிகடுகம்)*

மனிதன் என்பவன் தன்னுடைய புலன்களை அடக்கி அவை தன் விருப்பம் போலப் போகாதிருக்க வாழ்ந்தால், பின்பு வரவுள்ள தீமைகளை முன்கூட்டியே அறிந்து அது வராமல் தற்காத்துக் கொள்ள முடியும்.

தூய்மையான ஞானத்தால் பலப்படுத்தப்பட்ட மனம் எல்லா விதமான ஆசைகளையும் ஒழித்துத் தெளிவையும், சாந்தியையும் அடையும்.

பழக்கத்தை உண்டாக்கல்:

மனிதன் தன்னுடைய மனதினை நல்ல சிந்தனைகளுக்குப் பழக்கப்படுத்த வேண்டும்.

'ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாஞ் செயல்' *(திருக்குறள்)*

நம்மால் முடிந்த வகையில் எல்லாம் நம்முடைய மனதை இடைவிடாது நல்ல செயல்களைச் செய்வதற்கு ஊக்கப்படுத்துதல் வேண்டும். ஆனால் இப்பொழுது வாழும் பெரும்பாலான மக்களுக்கு கோபமும், ஆத்திரமும் இருக்கிறது. ஏனெனில் அவர்களுடைய மனம் அதை மட்டுமே நினைத்துக் கொண்டிருக்கிறது.

'அறம்புரிந் தல்லவை நீக்க லினிதே' *(இனியவை நாற்பது)*

அறத்தைச் செய்து பாவங்களை நீக்குதலே இனிதாகும். நாம் கோபத்தையும், ஆத்திரத்தையும் தவிர்த்து அமைதியையும், பொறுமையையும் மனதிற்கு பழக்கப்படுத்த வேண்டும். இப்படி பழக்கப்படுத்தினால் ஒவ்வொரு மனிதனும் தான் செய்யும் தவறான செயல்களில் இருந்து தப்பிச் செல்வதோடு மட்டுமல்லாது எல்லா விதமான பாவங்களையும் வென்றுவிடலாம்.

செய்தலும் அறிதலும்:

'பெருவகைத் தாயினும் பெட்டவை செய்யர்
திரிபின்றி வாழ்த லினிது' *(இனியவை நாற்பது)*

நாம் கல்வியைக் கற்பதிலோ, கைத்தொழிலைப் பயில்வதிலோ, வாணிகத்தை நடத்துவதாக இருந்தாலோ அதனை முழுமையாகக் கற்றுத் தேர்ந்து அதன் பின்னரே செய்தல் வேண்டும்.

'வாளைமீன் உள்ளல் தலைப்படலும் ஆளல்லான்
செல்வக் குடியுள் பிறத்தலும்' *(திரிகடுகம்)*

நிர்வகிக்கும் திறமை இல்லாத ஒருவன், செல்வக் குடியில் பிறந்திருந்தாலும் அந்தச் செல்வத்தைப் பேணிக் காத்துப் பெருக்குகின்ற திறமை இல்லாமையால் நாளடைவில் பெருஞ்செல்வம் அழிந்து அவன் வறியவனாக நேரிடும். உண்மைப் பொருளை அடைய விரும்புபவர்கள்தான் கற்றுத் தேர்ந்த பின்னரே செயலில் இறங்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் முழுமையாக எல்லா விதமான செயல்களையும் செய்ய முடியும்.அவர்கள் கற்கும் போது செய்த தவறுகளால் தளராமல், அவர்களுடைய துன்பங்கள் மூலம் பலமடைந்து சரியான செயல்களைச் செய்தல் வேண்டும். அது அவர்களுடைய உண்மை நிலையை உணர அவர்களுக்கு துணைபுரிகிறது. அந்த ஞானமே அவர் நன்றாக வாழ வழிவகுக்கிறது.

முடிவுரை:

மனிதன் நன்முறையில் வாழ அறத்தின் வழியே செல்வது சிறந்ததாகும். அத்தகைய அறத்தினை மனிதன் எவ்வாறு பெற்று வீடுபேறு அடைவது என்பதனைப் பற்றி இத்தலைப்புகளின் கீழ் விரிவாக கொடுத்துள்ளார்.

'அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்' *(திருக்குறள்)*

பொறாமை,ஆசை,சினம், கடுஞ்சொல் நான்கிற்கும் இடம் தராமல் வாழ்வதே அறமாகும். இவையாவும் அறவழிக்குப் பொருந்தாதவைகள் ஆகும். இவற்றையெல்லாம் தவிர்த்து பொறுமை, அமைதி போன்ற நல்ல குணங்களுக்கு நமது மனதைச் செலுத்தி நன்முறையில் ஞானத்தை பெறலாம்.நம்முடைய அகம் நினைப்பதையே நம்முடைய புறமும் வெளிப்படுத்தும். எனவே நம்முடைய மனதை தூய்மை செய்து அவற்றை நல்ல செயல்களுக்கு பழக்கப்படுத்தி, நன்மை, தீமைகளை ஆராய்ந்து அறிந்து செய்தால் நாம் நன்முறையில் வாழலாம் என்பதே இக்கட்டுரையின் முடிவாகும்.

பார்வை நூல்கள்:

1. அகமே புறம் - சிதம்பரம் பிள்ளை, வ.உ., புரோகிரஸிவ் பிரஸ். இடம்: சென்னை, 1916.
2. திருக்குறள்: சிறப்புரை விளக்கம் கருத்து அடைவு – க.ப. அறவாணன், தமிழ்க்கோட்டம், சென்னை, 2002.
3. திரிகடுகம் மூலமும் உரையும்—ஞா. மாணிக்கவாசகன், உமா பதிப்பகம், மண்ணடி, 1998.
4. நானாற்பது மூலமும் உரையும்:கார் நாற்பது, களவழி நாற்பது, இன்னா நாற்பது, இனியவை நாற்பது/உரை – ந.மு. வேங்கடசாமி நாட்டார், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்: 1942

50

வ.உ.சி.யின் மொழிபெயர்ப்புச் சூழலும் திறனும்

முனைவர் பா. வைடூரியம்மாள்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி.

முன்னுரை:

விடுதலைப் போராட்டத்தின் வரலாறாக வாழ்ந்து காட்டிய வீரத் தமிழர்கள் பலர் தமிழகத்தில் பிறந்திருந்தாலும் விடுதலை உணர்வுக்குத் தமிழகத்தையே தட்டி எழுப்பிய பெருமை வ.உ.சிதம்பரனாரையே சாரும். இதற்காகக் கொடுமையான தண்டனைகளை ஏற்ற முதல் தமிழரும் இவரே. இதன் காரணமாகவே மக்களால் போற்றப்பட்டவர் இவர். வ.உ.சி. யின் பெயரில் தெரு இல்லாத ஊரோ நகரமோ இல்லை என்று கூறும் அளவிற்கு நாட்டுப் பற்றாளராக, கப்பல் ஓட்டியவராக அறியப்பட்டார். ஆனாலும் தமிழ் மீதும், மொழி மீதும், இலக்கியம் மீதும் தீரா காதல் உடையவர் என்பதை அறிய முடிகிறது. அதீத இலக்கிய ஈடுபாடும் பயிற்சியும், உழைப்பும், மொழியுணர்வும் உடையவர் என்பதை அவரது எழுத்துகள் நிரூபணம் செய்து கொண்டிருக்கின்றன. அவ்வகையில் அவரது மொழிபெயர்ப்பு நூல்களின் சிறப்பையும் மொழிபெயர்ப்புத் திறனையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

திறவுச்சொற்கள்: மொழிபெயர்ப்பு, தமிழ், விடுதலை, இலக்கியம், மொழியுணர்வு

வ.உ.சி.யின் நூல்கள்:

வ.உ.சிதம்பரனார் நாட்டு விடுதலைக்காகத் தன் வாழ்க்கையை, செல்வத்தை, அர்ப்பணித்தது போல் தமிழ் மொழி உணர்விற்காகவும் அரும்பாடுபட்டிருக்கிறார். பல நூல்களை எழுதியிருக்கிறார். அவை, சுயசரிதை, வள்ளியம்மை சரித்திரம், திருக்குறள் விருத்தியுரை, வ.உ.சி. கண்ட பாரதி, திருப்பொய்கையார் இன்னிலை உரை, பாடற்றிரட்டு, மெய்யறம், மெய்யறிவு என்பனவாகும்.

இவை தவிர சில நூல்களைப் பதிப்பித்தும் இருக்கிறார். திருக்குறள் மணக்குடவர் உரை, தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (இளம்பூரணர் உரை) தொல்காப்பியம் பொருளாதிகாரம் (இளம்பூரணர் உரை) ஆகியனவாகும்.

மொழிபெயர்ப்புப் பணிகள்:

வ.உ.சி.யின் மொழிபெயர்ப்புப் பணி சிறைச்சாலையில் தான் தொடங்கியது எனலாம். அவர் ஜேம்ஸ் ஆலனின் நான்கு நூல்களை மொழி பெயர்த்திருக்கிறார்.

- As a Man Thinketh – மனம் போல வாழ்வு
- The Way to Peace – சாந்திக்கு மார்க்கம்

- From Poverty to Power – வலிமைக்கு மார்க்கம்
- Out From the Heart – அகமே புறம்

இந்நான்கு நூல்களை வ.உ.சிதம்பரனார் மொழிபெயர்த்ததற்குப் பல காரணங்கள் அறியப்படுகின்றன.

ஜேம்ஸ் ஆலனும் வ.உ.சி.யின் மொழிபெயர்ப்புத் தூண்டலும்:

இந்திய நாட்டின் மீது அதீத பற்றாளர் வ.உ.சி. நாட்டு விடுதலையை தலையாயக்கொண்டு செயல்பட்டவர். இவரை ராஜகோபாலாச்சாரியார் 'வ.உ.சி முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி'என்ற நூலில் சிறப்பித்துக் கூறியிருக்கிறார். இவரின் வீரம் குறித்து திலகர் 'சிதம்பரம்பிள்ளை தமிழ்நாட்டின் தலைசிறந்த வீரம் நிறைந்த விடுதலைப் போராட்ட வீரர்'[1] என்று உறுதியான கருத்துக் கூறியிருப்பதாக நா.வானமாமலை குறிப்பிடுகிறார். இத்தகு நாட்டுப்பற்று மிக்கவர் எப்படி ஆங்கில எழுத்தாளர் ஜேம்ஸ் ஆலனின் நூல்களை மொழிபெயர்த்தார் எனில் அதற்குப் பெரும்காரணம் இருப்பதைக் காணமுடிகிறது. வ.உ.சி ஆங்கிலேய சுதேசி. அதற்கு எதிராகப் போராடியவர். சுதேசச் சிந்தனையாளர். ஆனாலும் ஜேம்ஸ் ஆலனின் நூல்களை அவரின் கருத்தியல் மீது கொண்ட ஈர்ப்பின் காரணமாக மொழிபெயர்த்ததோடு, ஜேம்ஸ் ஆலனின் வாழ்க்கைச் சுருக்கத்தையும் மொழிபெயர்த்துள்ளார் என்பதையும் அறியமுடிகிறது.

இங்கிலாந்தில் பிறந்த ஜேம்ஸ் ஆலன் ஆங்கிலேயராக இருந்தாலும் புலால் மாமிச உணவுகளை உண்ணாதவர். மது அருந்தாதவர். ஆசியஜோதி என்ற நூலை (The Light of Asia) படித்த பின்னரே அவருக்கு மெய்யுணர்வு வந்ததாகத் தெரிகிறது. இந்திய தேசநூல்கள் மீதும் தத்துவவியல் மீதும் அளவுக்கு அதிகமான ஈர்ப்பு இருந்துள்ளது. கீழ்நாட்டாரே மெய்ஞ்ஞானக் கருவூலம் என்பதை அடிக்கடி ஜேம்ஸ் ஆலன் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. வ.உ.சி இவரைப் பற்றிக் குறிப்பிடும்போது 'அவர் வாக்கின்று வந்த ஒவ்வொரு வார்த்தையிலும் நமது நாட்டு நீதியும் மதக்கோட்பாடும் கலந்திருக்கும்'[2] என்கிறார்.

ஜேம்ஸ் ஆலன் நமது நாட்டு நூல்களின் ஆங்கிலமொழி பெயர்ப்புக்களைப்கற்றுஅவற்றின்பொருள்களைக்கடைப்பிடித்தொழுகி, மெய்ஞ்ஞானியாய் வாழ்ந்து வந்தவர். அக்காலத்தில் தாம்கண்ட உண்மைகளை ஏனையோர்களும் கண்டு, கற்று, ஒழுக்க மேம்பாடு அடைந்து, மெய்ஞ்ஞானிகள் போல் பேரின்பம் பெற்று வாழ வேண்டும் என்ற விருப்பம் உடையவராய் இருந்திருக்கிறார். இதனால் தான் கற்றதை ஆங்கில மொழியில் பல நூல்கள் இயற்றி அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். 1905 ஆம் வருடம் வ.உ.சி இவர் நூல்களைப் படிக்கும் வாய்ப்பைப் பெற அந்நூலின் அருமை பெருமைகளைக் கண்டு ஆச்சரியம் அடைந்து அவற்றையெல்லாம் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். இவைதான் வ.உ.சி.க்கு ஜேம்ஸ் ஆலனின் படைப்புகள் மேல் ஈர்ப்பு ஏற்படக் காரணமாக அமைந்தது என்று கூறலாம்.

மொழிபெயர்ப்பு நூல்கள் எழுந்த சூழல்:

வ.உ.சிதம்பரனார் ஆங்கில நூல்களை மொழிபெயர்ப்பதற்கானச் சூழல் அவர் சிறைவாசகாலத்தில்தான் ஏற்பட்டிருக்கிறது. ஜேம்ஸ் ஆலனின் Out From the Heart என்ற நூலை அகமே புறம் என்று மொழி பெயர்த்தார். இந்நூலைத் ‘தமிழறிந்த ஒவ்வோர் ஆடவரும் பெண்டிரும் சிறுவரும் சிறுமியரும் கற்க வேண்டுமென்பதும் இந்நூல் எஞ்ஞான்றும் நின்று நமது நாட்டில் நிலவவேண்டும் என்பதும் எனது விருப்பம்’(3) என வ.உ.சி இந்நூலுக்கான முதற்பதிப்பின் பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார். ஒழுக்கத்தை மிக உயர்ந்ததாக எடுத்துரைப்பதாக இந்நூல் அமைகிறது.

உயர்தர வாழ்வு என்ற தலைப்பு அடிப்படையில் முழுவதுமே ஒழுக்கத்தை உயர்த்திக் கூறியிருக்கிறார். இதிலிருந்து சீரான ஒழுக்க வாழ்வை வ.உ.சி மிகவும் நேசித்து விரும்பியுள்ளதை அறிய முடிகிறது. 1914 ஆம் வருடத்தில் வெளிவந்த இந்நூலின் முதற்பதிப்பில் ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன. இந்நூலைத் தமிழ்மக்கள் பலரும் விரும்பியதால் இரண்டாம் முறையும் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார் வ.உ.சி. இதில் கூடுதல் இணைப்பாக ஸ்ரீஜேம்ஸ்ஆலனின் சரித்திரத்தைச் சேர்த்துள்ளார்.

சாந்திக்கு மார்க்கம் என்னும் நூல் From Poverty to Power என்ற ‘எளிமையிலிருந்து வலிமைக்கு’என்னும் ஆங்கில நூலின் இரண்டாம் பாகமாகிய ‘The Way of Peace’ என்பதன் மொழிபெயர்ப்பாகும். இந்நூல் முதல் நூலின் சரியான மொழிபெயர்ப்பாக அமைகிறது. முதல்நூலிலுள்ள பாக்களைத் தமிழ்ப்பாக்களாக்கி இந்நூலில் ஆங்காங்கு சேர்த்துள்ளார். சில இடங்களில் தழுவுதல் தன்மை இடம்பெற்றிருப்பதையும் காணமுடிகிறது.

As a Man Thinketh என்ற நூலை வ.உ.சி ‘மனம் போல வாழ்வு’என்று 1909 இல் மொழிபெயர்த்திருக்கிறார். ஏழு உட்தலைப்புகளில் அமைந்த மிகக்குறைந்த பக்கங்களை உடையது இந்நூல். ஜேம்ஸ் ஆலனின் அரிய நூல்களில் ஒன்று The Path of Prosperity.

எளிமையிலிருந்து வலிமைக்கு என்று பொருள்படும் நூல். இதனை வலிமைக்கு மார்க்கம் என மொழிபெயர்த்திருக்கிறார். இந்நூலின் ஐந்தாவது அதிகாரத்தின் தொடக்கத்தில் கூறப்பட்டிருக்கும் கதைத் தமிழர்க்கு தெரியாது என்பதால் அக்கதையைக் கூறிப் பயனில்லை என்பதை உணர்ந்து அதற்குப் பதிலாகப் பாரதக்கதை என்று குறித்துள்ளார்.

தமிழ் வாசகர் எளிதில் உணரும் வகையில் சிற்சில இடங்களில் சில சொற்களைச் சேர்த்தும் சில சொற்களை விடுத்தும் மொழிபெயர்ப்பு செய்திருக்கிறார். முதனூலில் கண்ட விவிலிய நூல் கோட்பாடுகளும் மேற்கோள்களும் ஒத்திருக்கின்ற காரணத்தினால் அவற்றை மாறாமல்

அவ்வாறே மொழிபெயர்த்திருக்கிறார்.

ஜேம்ஸ் ஆலன் கூறிய, ‘Thus said Buddha, and it therefore follows that if a man is happy, it is because he dwell in happy thoughts; if miserable, because he dwells in despondent and debilitating thoughts’ (4) என்ற புத்தரின் கருத்தை வ.உ.சி, ‘புத்தர் நமது நிலைமைகளெல்லாம் நமது நினைப்புகளின் பலன்கள். அவைகளெல்லாம் நமது நினைப்புகளையே ஆதாரமாகக்கொண்டுள்ளன. அவைகளெல்லாம் நமது நினைப்பு களாலேயே செய்யப்பட்டுள்ளன என்று கூறியிருக்கிறார்’(5) என்று மேற்கோள் மாறாமல் அப்படியே மொழிபெயர்த்து இருக்கிறார்.

செய்யுள் மொழிபெயர்ப்பு:

பிறமொழி நூல்களை தமிழில் மொழிபெயர்க்கும் போது ஏராளமான சிக்கல்கள் ஏற்படுவதுண்டு. அதிலும் மிகவும் முக்கியமானது செய்யுள்களை மொழிபெயர்ப்பதாகும். தமது செய்யுள் மொழிபெயர்ப்பு குறித்து வ.உ.சி பின்வருமாறு கூறுகிறார். ‘செய்யுள் மொழி பெயர்ப்பை சற்றேறக் குறையச் சரியான மொழிபெயர்ப்பென்றே சொல்லலாம்.

முதனூலில் மேற்கோளாகக் காட்டியுள்ள சொற்கள் எத்தனை அடிகளைக் கொண்டுள்ளன. அத்தனை அடிகளில் தமிழ்ச் செய்யுள்களை அமைத்துள்ளேன். மற்றைய உரை மேற்கோள்களுக்கு மேற்கோள் அடையாளங்கள் இட்டுள்ளேன்.

ஆயினும் சில இடங்களில் முதனூலாசிரியரது கருத்துக்களை நன்கு விளக்குதற் பொருட்டுச் சிற்சில சொற்களைக் கூட்டியும் குறைத்தும் மொழிபெயர்த்திருக்கிறேன். அன்றியும் ‘கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக’ என்ற படி இந்நூலின் அரிய பொருள்களைத் தமிழுலகம் நன்கு உணர்ந்து கைக்கொண்டொழுகுதல் வேண்டும் என்ற எண்ணமே என் மனதின்கண் முற்பட்டு நின்றமையின் நமது நாட்டில் மிகுதியாக வழங்கும் வடமொழிகளை இதில் மிகுதியாக உபயோகித்திருக்கிறேன்’(6) என்கிறார். இவரின் செய்யுள் மொழிபெயர்ப்பிற்கு ஜேம்ஸ்ஆலனின் கவிதையை இங்கு மேற்கோளாகக் காட்டலாம்.

> ‘Thought in the mind hath made us . What we are
> By thought we wrought and built. If a man’s mind
> Hath evil thought’s pain comes on him as comes
> The wheel the ox behind… If one endure
> In purity of thought, joy follows him
> As his own shadow- sure’ (7)

இக்கவிதையை வ.உ.சி வரிகள் மாறாமல் மொழிபெயர்த்திருக்கிறார். அவை,

> *‘மனமெனும் நினைப்பே நம்மையாக்கியது*
> *நினைப்பால் நாம் நம் நிலைமையை உற்றனம்*
> *ஒருவன் நினைப்புக்குக் கருமறம் பற்றிடின்*

எருது பின் உருளை போல் வரும் நனி துன்பமே
ஒருவன் நினைப்புத் திருஅறம் பற்றிடின்
தன்னிழல் போல மன்னும் இன்பமே' (8)

வ.உ.சி.யின் இக்கவிதை மொழிபெயர்ப்பு வரிக்கு வரி பொருள் மாறாமல் சிறப்பாக அமைந்துள்ளது.

மொழிபெயர்ப்பில் வடமொழிச் சொற்கள்:

வ.உ.சி மொழிபெயர்க்கும் போது சில இடங்களில் நமது நாட்டில் மிகுதியாக வழங்கும் வடமொழிகளை அதிகமாகப் பயன்படுத்தி இருக்கிறார். 'தனது அகத்தின் வாயிலைத் தளராத ஊக்கத்துடன் காத்து வருகிற ஒரு மனிதன் ஞானத்தையும் துக்க நிவிருத்தியையும், சுகப் பிராப்தியையும் அடையாமல் இரான்' (9) என ஒரு கருத்தைக் கூற வரும்போதே பல வடமொழிச் சொற்களை பயன்படுத்தியிருக்கிறார்.

இவை தவிர சிருஷ்டித்து, வஸ்திரம், ஸ்திரமான, கிரகிப்பு, சிரேஷ்டர், அக்ஷரங்கள், பிரயாசை, அப்பியாசம், ஹிருதயம், லௌகிகம், இராஜ்யம், ஸ்தூலம், பலஹீனம் போன்ற வடமொழிச் சொற்களை இவரது மொழி பெயர்ப்பில் அதிகமாகக் காண முடிகிறது.

மொழிபெயர்ப்பில் வழக்குச் சொற்கள்:

இலக்கிய உலகில் கால்பதித்த வ.உ.சி.யின் தமிழ்ப்பணியை 'தேசிய விஷயங்களில் உழைத்து வந்தவர் இப்போது தாய் மொழியாகிய தமிழின் பொருட்டு உழைக்க முன் வந்து சென்னையில் தங்கினார்' (10) என தமிழறிஞரும் பேராசிரியருமான வையாபுரிப்பிள்ளை கூறுகிறார். இதன் பின்னர் தான் 24 ஆண்டுகளை இலக்கணம் இலக்கியம், சைவம் போன்ற படிப்புக்காகவும், ஆராய்ச்சிக்காகவும் செலவிட்டிருக்கிறார்.

ஆங்கில மொழிமூலம் தாம் பெற்ற பாக்கியத்தை மற்றவர்களின் பாக்கியமாகவும் மாற்ற எண்ணியிருக்கிறார். அந்தத் தத்துவச் சிந்தனைகளைத் தமிழிலே மொழி பெயர்த்திருக்கிறார். தூய தமிழ் நடையில் நூல்களை மொழி பெயர்த்தாலும் எளிய நடையையும் பயன்படுத்தி இருக்கிறார். 'ஆவதும் அழிவதும், நினைப்பு, ஆவல், விசாரித்தல், பிரயோசனம், சம்பந்தம்' போன்ற மக்களிடையே வழங்கும் வழக்குச்சொற்களைஅதிகமாகக்கையாண்டிருக்கிறார்.இச்சொற்களுக்கு நிகரான தூய தமிழ்ச்சொற்கள் இருந்தாலும் வாசிப்பவர் எளிதில் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக வழக்குச் சொற்களையே பயன்படுத்தி இருப்பதைக் காணமுடிகிறது.

முடிவுரை:

வ.உ.சிதம்பரனார் விடுதலை வேட்கையோடு இலக்கிய வேட்கை யும் உடையவராக இருந்தவர். தமிழன்பர்கள் பலரோடு இணைந்து திருக்குறள், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய இலக்கிய நூல்கள், தொல்காப்பியம் ஆகியவற்றை ஆழ்ந்து கற்றவர். அரசியல் வாழ்வில் இலக்கியத்தையும் கலந்து பேசியவர். இதன்

தாக்கத்தையே இவரது மொழிபெயர்ப்பு நூல்கள் எடுத்துரைக்கின்றன.

வ.உ.சி.யின் அனைத்து மொழி பெயர்ப்புகளிலுமே எளிய நடையில் கருத்துக்களை வாசகர்களின் புரிதலுக்கு கொண்டு செல்லும் பாங்கினைக் காணமுடிகிறது. மொத்தத்தில் நிறைவானதாகவும், மதிப்புமிக்கதாகவும் அவரது திறமையை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

நுட்பமான பகுதிகளையும் சுவைகுன்றாமல் யதார்த்த நடையில் மொழிபெயர்த்திருக்கிறார். அவை அனைத்துமே அறத்தையே முதன்மைக் கருத்துக்களாகக் கொண்டு அமைந்துள்ளன என்பதையும் அறிய முடிகிறது.

வ.உ.சி மொழிபெயர்த்துள்ள ஜேம்ஸ் ஆலனின் வாழ்வியல் படைப்புகள் தமிழில் தோன்றியுள்ள தன்னம்பிக்கை சுயமுன்னேற்றம் போன்ற நூல்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்கிறது எனலாம்.

துணைநூற் பட்டியல்:

1. அகமே புறம் - சிதம்பரம் பிள்ளை, வ. உ., புரோகிரஸிவ் பிரஸ். இடம்: சென்னை, 1916.
2. வலிமைக்கு மார்க்கம் (ஆலன், ஜேம்ஸ்), சிதம்பரம் பிள்ளை, வ. உ.,எஸ். வி. என். பிரஸ், சென்னை, 1916.
3. மனம் போல வாழ்வு - சிதம்பரம் பிள்ளை, வ.உ., இந்தியா பிரிண்டிங் வொர்க்ஸ்அச்சகம், சென்னை, 1916.
4. வ.உ.சி. முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி – நா. வானமாமலை, மக்கள் வெளியீடு: சென்னை, 1999.
5. James Allen, The Path of Prosperity, Pigeon Books India - New Delhi, 2008.
6. சடங்கில் கரைந்த கலைகள் – அ.கா.பெருமாள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில், 1998.
7. James Allen, As a Man Thinketh, N.L., Fowler, Imperial, 1903.
8. https://tamildigitallibrary.in/voc (வ.உ.சி. நூல்வரிசை)

51

'அகமே புறம்' வ.உ.சி.யின் மொழியாக்கத்தில் தமிழ் உரைநடையின் எளிமையும் செறிவும்

சே. அருண்செல்வகுமார்,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.

முனைவர். நா. ஜானகிராமன்,
தொலைதூர மற்றும் இணையவழிக் கல்வி மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

ஆய்வுச்சுருக்கம்:

வ.உ.சிதம்பரனார் அவர்களின் 'அகமே புறம்' எனும் மொழி யாக்கத்தின் உரைநடைச் சிறப்பை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஜேம்ஸ் ஆலனின் 'Out from the Heart' எனும் ஆங்கில நூலின் தத்துவச் செறிவுக்குச் சிறிதும் குறையாமல், அதே நேரத்தில் தமிழ் வாசகர்கள், குறிப்பாக, பொதுமக்களும், விடுதலைப் போராட்ட வீரர்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில், வ.உ.சி. தனது உரைநடையைப் பயன்படுத்திய முறைமையை ஆராய்வது இக்கட்டுரையின் முதன்மையான நோக்கமாகும். இக்கட்டுரையில் மொழியாக்கச் சொல்லாடல்களை உருவாக்குவதில் அவர் கையாண்ட தொன்மைச் செறிவூட்டல் மற்றும் திருக்குறள் முதலான அறநூல் தொடர்புகளும் ஆய்வு செய்யப்படுகின்றன. வ.உ.சி.யின் உரைநடை, தமிழ் மறுமலர்ச்சிக் காலத்தில் தத்துவச் சிந்தனைகளை மக்களிடத்தில் கொண்டு சென்றதில் ஒரு முன்னோடிப் பங்களிப்பை வழங்கியது. இவை தொடர்பான கருத்துகளை நிறுவுவதே இவ்வாய்வின் நோக்க மாகும்.

திறவுச்சொற்கள்: அகமே புறம், மொழியாக்க உரைநடை, எளிமை, செறிவு, தமிழ் மறுமலர்ச்சி, நிஷ்காமிய கருமம், உரைநடைப் பங்களிப்பு.

முன்னுரை:

வ.உ.சி. இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்களித்து இணை யற்ற தியாகங்களுக்குப் பெயர் பெற்ற தலைவர் ஆவார். மேலும் அவர், சுதேசிக் கப்பலை ஓட்டி வணிக ரீதியாகவும், அரசியலிலும் ஆங்கிலேயரை எதிர்த்தவர். 'தமது குடும்பத்திற்குச் செய்ய வேண்டிய கடமையைவிட தமிழ் நாட்டிற்கும், இந்திய சமுதாயத்திற்கும் செய்ய வேண்டிய சேவையே பெரிதென நினைத்தவர்' என்று வ.உ.சி. யைப் பற்றி ம.பொ.சிவஞானம் குறிப்பிடுகிறார்.1. தியாகச்செம்மலான வ.உ.சி., சிறைச்சாலையில் இருந்தபோது, பல்வேறு தமிழ் நூல்களை இயற்றியும், மொழியாக்கம் செய்தும், தமிழ் இலக்கியத்திற்கும் தத்துவத்திற்கும் அளப்பரிய பங்களிப்பை அளித்துள்ளார். டாக்டர் தி. லீலாவதி அவர்கள்,

'தமிழ்ச் சமுதாய நல வாழ்விற்கு உகந்தவை எங்கிருந்தாலும் அவற்றைக் கொண்டுவந்து சேர்த்துப் புதிய வலுவும் பொலிவும் ஊட்டுதல் வேண்டும் என்ற நோக்கமே வ.உ.சி அவர்களை மொழிபெயர்ப்புத் துறையில் ஈடுபடச் செய்தது' என்று வ.உ.சி.யின் மொழிபெயர்ப்புத் துறையில் ஈடுபாடு கொண்ட சூழலைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.2 சிதம்பரனாரின் தமிழ்ப்பணிகளில் முதன்மையானவற்றில் ஒன்றாக அவருடைய மொழிபெயர்ப்புப் பணி விளங்குகின்றது. மனம்போல வாழ்வு, அகமே புறம், வலிமைக்கு மார்க்கம், சாந்திக்கு மார்க்கம் ஆகியவை வ.உ.சி. யின் மொழியாக்கங்கள் ஆகும். அவரது மொழியாக்கங்களுள் ஒன்றான, 'அகமே புறம்' எனும் நூல் ஜேம்ஸ் ஆலனின் 'Out from the Heart' என்ற நூலின் தமிழாக்கமாகும். வ.உ.சி. ஆங்கிலேய அரசை அவமதித்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு ஆறு ஆண்டுகள் நாடு கடத்தல் தீர்ப்பையேற்றுக் கோயம்புத்தூர் சிறைச்சாலையில் இருந்த காலத்தில் 'அகமே புறம்' நூல் இயற்றப்பட்டதாக அந்நூலுக்குச் சிறப்புப்பாயிரம் எழுதிய சுவாமி வனஜானந்தன் குறிப்பிடுகின்றார்.

வ.உ.சி. ஒரு வழக்கறிஞர், வணிகர், அரசியல் தலைவர், இலக்கியவாதி, மொழிபெயர்ப்பாளர், பதிப்பாசிரியர் என்ற பன்முக ஆளுமை கொண்டவர். அவரது மொழியாக்கப் பணியானது, வெறும் ஓய்வு நேரச் செயல்பாடு அல்ல. மாறாக, அது இந்திய மக்களின் மனதைப் பக்குவப்படுத்தி, அவர்களுக்கு மனவலிமையை அளிப்பதன் மூலம், அரசியல் விடுதலைக்கான அடித்தளத்தை அமைக்கும் ஒரு தத்துவப் பணி ஆகும். இவ்வாய்வுக்கட்டுரை, வ.உ.சி.யின் 'அகமே புறம்' என்ற மொழியாக்கத்தின் உரைநடை வடிவத்தை மையப்படுத்தி ஆராய்கிறது. வ.உ.சி., தத்துவச் செறிவான ஆங்கில மூலக்கருத்துக்களைத் தமிழ்ச் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில், எளிமையும் அதே சமயம் செறிவும் கொண்ட உரைநடையைக் கையாண்டார். பேராசிரியர் வி. செல்வவிநாயகம் அவர்கள் தன்னுடைய தமிழ் உரைநடை வரலாறு எனும் நூலில், 'காந்தியடிகள் முதலானோர் தொடங்கி வைத்த சுதந்திர இயக்கமும் மக்களிடையே பரப்பும் நோக்கமாகப் பத்திரிகைகள் பல தோன்றலாயின. ஆகவே, பொதுமக்கள் விரும்பிப் படித்தற்குரிய புதிய உரைநடை ஒன்று உருவாதல் அவசியமாயிற்று. அந்நடையே மறுமலர்ச்சி நடையாகும்.'3 என்று மறுமலர்ச்சி நடையைப் பற்றிக் குறிப்பிடுகிறார். வ.உ.சிதம்பரனார் அவர்களும் தமிழ் மொழியில் மறுமலர்ச்சி நடையைக் கையாண்டவர்களில் முதன்மையானவராக விளங்குகிறார். தமிழ் மறுமலர்ச்சிக் காலத்தில் உரைநடை வளர்ச்சிக்கு அவர் அளித்த பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகும்.

சொற்றொடரமைப்பின் எளிமை:

ஒருவர் அகவலிமையையும், புறவலிமையையும் ஒருங்கே வளர்த்து மேன்மை நிலையை அடைவதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய நன்னெறிகளாக ஜேம்ஸ் ஆலன் தன்னுடைய நூலில் குறிப்பிட்ட

வற்றை மூலநூலின் அழகு குறையாமல் எளிய நடையில் தொகுத்து ரைத்துள்ளார். வ.உ.சி.யின் சொற்றொடர்கள் படிப்பதற்கு எளிமை யாகவும், நேரடிப் பொருள் தருவனவாகவும் உள்ளன. சான்றாக, ‘ஒரு மனிதன் தனது வாழ்வு முழுவதும் தனது மனத்தினின்றே வருகிறதென்று அறிவானானால், அப்பொழுதே அவனுக்குப் பேரின்ப வீட்டின் வழி திறக்கப்பட்டிருக்கிறது.’ (அகமே புறம், ப.3), ‘எவன் பிறரோடு போராடுதலை விட்டுத் தனது மனத்தைத் திருத்துவதிலும், பலப்படுத்துவதிலும், வளர்ப்பதிலும், தனது சக்திகளைப் பிரயோகிக்கிறானோ அவன் தனது சக்திகளையெல்லாம் ஒருமுகப்படுத்தித் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளுகிறான்.’ (அகமே புறம், ப.9) போன்ற நேரடியான மொழிபெயர்ப்புச் சொற்றொடர்கள், வாசகருக்குப் பொருள்மயக்கம் ஏற்படாத வகையில் தெளிவாக அமைந்துள்ளன. மேலும், பாயிரத்தில், ‘இதனைக் கற்போர் எளிதாகக் கொள்ளுமாறு இதன் முதனூலிலுள்ள ‘உயர்தர வாழ்வு’ என்னும் ஓர் அதிகாரத்தை இதில் நான்கு சிறிய அதிகாரங்களாக அமைத்துள்ளேன்’ என்று அவரே குறிப்பிடுவது, வாசகனின் புரிதலை இலக்காகக் கொண்ட அவரது அணுகுமுறையைத் தெளிவுபடுத்துகிறது.

உரைநடையில் அன்றாட வாழ்வியல் உதாரணங்கள்:

அகத்திலிருந்து வாழ்க்கை வெளிப்பட்டுக் கொண்டிருப்பதைப் பற்றிக் குறிப்பிடும்போது, ‘மரம் எப்பொழுதும் பூமியின், அகத்தி லிருந்தே வெளிப்பட்டுக்கொண்டிருத்தல் போல, வாழ்வும் எப்பொழுதும் மனிதனது அகத்திலிருந்தே வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறது.’(அக மே புறம், ப.2.) என வாழ்க்கையை மரத்தோடு உருவகப்படுத்துகிறார். மேலும், அகத்தில் விதைக்கப்பட்டுள்ள நினைப்புகள் நாளடைவில் சொற்களாகவும்,செயல்களாகவும்,செய்து முடிக்கப்பட்ட செயல்களாகவும் வெளிப்படுவதை, ‘நிலத்துள் புதைபட்டுள்ள வித்துக்கள் நாளடைவில் இலைகளாகவும், மலர்களாகவும், கனிகளாகவும் வெளிப்படுதல் போல’ (அகமே புறம், ப.2.) என்று கூறுகிறார். மனிதன் தன் முயற்சியினால் நல்வினையில் தேர்ச்சியடைவதை, ‘ஒரு சிற்பி அப்பியாசத்தினால் தனது தொழிலில் தேர்ச்சியடைதல்போல’ (அகமே புறம், ப.14) என்கிறார். ஒரு மாணவன் பள்ளியில் தனது பாடங்களை அனைத்துத் தவறுகளும் நீங்கும் வரை தொடர்ந்து முயன்று பொறுமையுடனும் பணிவுடனும் படித்துக்கொண்டு வருவதைப் போல மெய்ப்பொருளை அடைய விரும்புவோர் தங்களது தவறுகளைத் திருத்திக்கொள்ள வேண்டும் (அகமே புறம், ப.22) என்கிறார். குழந்தை தனது பாடத்தைச் சரியாகப் படித்து முடித்தபோது அடையும் அகமகிழ்ச்சியைப்போல ஒழுக்கமான மனிதன் ஒவ்வொரு ஒழுக்கத்தையும் கைக்கொண்டபோது காணமுடியாத பேரின்பத்தை அடைகின்றான் (அகமே புறம், ப.39). ஒழுக்கத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கும் மனிதனின் உவகையை, ‘தனது மலர்கள் நாளுக்கு நாள் திரட்சியடைந்து வருவதைக் காணும் தோட்டக்காரனது உவகையைப் போல’ (அகமே புறம்,

ப.55) என்று உருவகப்படுத்துவது, எளிமையான உவமைகள் மூலம் கருத்துகளை ஆழமாகப் பதியவைக்கும் அவரது உத்திக்குச் சான்று.

தத்துவச் சொல்லாக்கமும் தொன்மைச் செறிவூட்டலும்:

முனைவர் ச.சிவகாமி அவர்கள், ‘மொழிபெயர்ப்பில் ஆசிரியரின் புலமை, கருத்து இவற்றில் கவனம் செலுத்தும் அதேவேளையில் அதனைச் சுவையுடனும் படைக்க வேண்டும். இலக்கிய மொழிபெயர்ப்பாளருக்கு இஃது மிகவும் வேண்டற்பாலது’ என்று மொழிபெயர்ப்பைப் பற்றிக் குறிப்பிடுவார்.4 வ.உ.சி.யின் மொழியாக்க உரைநடையானது, படிப்பதற்கு எளிமையாக இருந்தாலும், அதன் தத்துவச் செறிவு சற்றும் குறையாமல் இலக்கியச்சுவை உடையதாக உள்ளது. இதுவே அவரது மொழியாக்கத்தின் தனிச்சிறப்பு ஆகும். மா.ரா. அரசு அவர்கள், ‘வ.உ.சி.யின் மொழிபெயர்ப்புகளில் மொழிபெயர்ப்பு, மொழியாக்கம், தழுவல்நிலை ஆகிய கூறுகளைக் காணலாம்’ என்று குறிப்பிடுகிறார்.5 ஜேம்ஸ் ஆலன் பயன்படுத்திய ஆங்கிலச் சொற்களுக்கு, வ.உ.சி. பொருத்தமாக விளங்கக்கூடிய இந்தியத் தத்துவச் சொற்களைப் பயன்படுத்துகிறார்.

ஜேம்ஸ் ஆலன் தனது நூலில், ‘Mind is the arbiter of life; it is the creator and shaper of conditions, and the recipient of its own results.’ (Out from the Heart, p.4) என்று மனதைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இதை மொழியாக்கம் செய்த வ.உ.சி., மனதின் மூன்று செயல்பாடுகளை விளக்கும்போது, அது வாழ்வை விதிக்கும் ‘நியந்தா’, நிலைகளைப் படைத்துத் திருத்தும் ‘கர்த்தா’, தனது சொந்தப் பலனை அனுபவிக்கும் ‘போக்தா’ என்ற சமஸ்கிருதச் செறிவூட்டப்பட்ட சொற்களைக் கையாள்கிறார் (அகமே புறம், ப.5). நியந்தா என்ற சொல் ‘கட்டளையிடுபவன்’ என்ற பொருளையும், கர்த்தா என்ற சொல் ‘உருவாக்குபவன்’ என்ற பொருளையும், போக்தா என்ற சொல் ‘நுகர்பவன்’ என்ற பொருளையும் உடையது என்பது குறிப்பிடத்தக்கது. ஜேம்ஸ் ஆலன், பலனை எதிர்பாராத செயலை ஆங்கிலத்தில் ‘Unselfish Performance of Duty’ என்று குறிக்கிறார் (Out from the Heart, p.36). மனதின் பலனை எதிர்பாராத செயல் என்ற கருத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, ‘நிஷ்காமியக் கருமம்’ என்ற பகவத்கீதையின் தத்துவச் சொல்லைப் பயன்படுத்துகிறார் (அகமே புறம், ப.34). வ.உ.சி., கொள்ள வேண்டிய நல்லொழுக்கங்களில் முதலாவதாக நிஷ்காமிய கருமத்தைக் குறிப்பிடுகிறார். Teacher- உபாத்தியாயர், Practice – அப்பியாசம், Indolence – சோம்பல், Self-Indulgence – மீதூண், Slander - புறங்கூறல், Gossip and Idle Conversation – பயனில சொல்லல், Abusive and unkind speech - நிந்தித்தல், Levity or irreverent speech – புன்மொழி பகரல், Captiousness or fault-finding speech – குதர்க்கம் பேசல், Unswerving rectitude – அசையாத நடுவுநிலைமை, Unlimited forgiveness – அளவற்ற பொறுமை, Covetousness - வெஃகல், Condemnation - குற்றஞ்சார்தல், desire - அவா, Self-slavery- தனக்கடிமை, Self-control - தன்னையடக்கல், Self-Conquest - தன்னை வெல்லல் Loose-liver- ஒழுங்கீனமாக வாழ்கின்றவன், Life

Beautiful-உயர்தர வாழ்வு போன்ற ஆங்கிலச் சொற்களுக்கு இணையான பொருள் பொதிந்த சொற்களை அகமே புறம் நூலில் காணலாம். அவர், இந்தச் சொற்களைப் பயன்படுத்துவதன் மூலம், ஆங்கில மூலக்கருத்தை அவர் வெறும் மொழிபெயர்ப்பாக வைக்காமல், இந்துத் தத்துவ மரபுடன் இணைத்து, ஆழமான அறிவுப் பின்புலத்தைக் கொடுக்கிறார்.

அறநூற் தொடர்பும் மேற்கோள் உத்தியும்:

வ.உ.சி. தன்னுடைய உரைநடையின் செறிவுக்கு மேலும் வலுவூட்ட, திருக்குறள், நாலடியார் உள்ளிட்ட தமிழ் அறநூல்களிலிருந்தும், புத்தர், கன்பூஸியஸ் உள்ளிட்டோரின் கருத்துகளை மேற்கோள்களாகப் பயன்படுத்துகிறார். சான்றாக, அவர், பொய்யைப் படைக்கும் திறனும் மெய்யைக் காணும் திறனும் மனத்திற்கு உண்டு என்று கூறி, ''மனத்தானம் மாந்தர்க்குணர்ச்சி'' என்ற குறளை மேற்கோள் காட்டுகிறார் (அகமே புறம், ப. 5). ஒருவனின் உயர்வும், தாழ்வும் அவனது சுயமுயற்சியால் ஏற்படுகிறது என்று கூறிவிட்டு, 'நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை' எனத் தொடங்கும் நாலடியார் பாடலைக் குறிப்பிடுகிறார் (அகமே புறம், ப.6). மனம் எந்த நிலையையும் மாற்றுவதற்கும், எந்த நிலைமையையும் விட்டொழிப்பதற்கும் வலிமை உடையது என்று கூறுவதோடு, அதற்கு அவர், 'கொடுக்க வல்லதுங் கெட்டவர் தங்களை' எனத்தொடங்கும் குறளை மேற்கோள் காட்டுகிறார் (அகமே புறம், ப.7). அகம் தூய்மையாக இருக்கும்பொழுது புறத்திலுள்ள அனைத்து செயல்களும் தூய்மையாக இருக்கின்றன என்று கூறி, 'கற்றதங் கல்வியுங் கடவுட் பூசையு' எனத் தொடங்கும் நாலடியார் பாடலைக் குறிப்பிடுகிறார் (அகமே புறம், ப.9).

மனிதன் தனக்கு வேண்டும் நினைப்புகளைத் தேர்ந்தெடுத்துத் தனது மனத்தை திருத்தும் ஆற்றலை உடையவன். ஆகையால் அவன் தனது வாழ்வையும் திருத்திக் கொள்ளக்கூடும் என்று கூறிவிட்டு, 'ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றி' எனத் தொடங்கும் குறளை மேற்கோள் காட்டுகிறார் (அகமே புறம், ப.10).

ஒருவர் தூக்கத்திலிருந்து எழுந்து சோம்பலாக மீண்டும் படுக்கையில் கிடத்தல் மனத்தின் தூய்மையையும், ஒழுக்கத்தின் உறுதியையும் சுறுசுறுப்பையும் கெடுக்கக்கூடிய பழக்கம் என்று கூறி, 'நெடுநீர் மறவி மடிதுயி னான்கும்' எனத்தொடங்கும் குறளைச் சுட்டிக்காட்டுகிறார் (அகமே புறம், ப.27).

மீதூண் ஆசையையும், மற்ற சிற்றின்ப ஆசைகளையும் அகத்தை விட்டு நீக்கிவிட வேண்டும் என்று எழுதிவிட்டு, 'அற்றாலளவறிந் துண்க' மற்றும் 'அடல்வேண்டு மைந்தன் புலத்தை' ஆகிய குறட்பாக்களை மேற்கோள் காட்டுகிறார் (அகமே புறம், ப.29). ஒருவர் தன்னிடத்தில் உள்ள குற்றங்களைப் பார்க்கக் கடவன் என்று கூறிவிட்டு, 'ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்' என்ற குறளை எடுத்துக்காட்டுகிறார் (அகமே புறம், ப.32).

ஒழுக்கமுடைய மனிதன் பயனற்ற பேச்சைத் தவிர்த்து, தன்னைக் கட்டுப்படுத்தித் திருத்தமாகவும் தெளிவாகவும் பேசுவான் என்றும் அல்லது மௌனமாக இருப்பான் என்றும் கூறி, ‘சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க’ என்ற குறளை மேற்கோள் காட்டுகிறார் (அகமே புறம், ப.41).

பிறரை அற்பமாகவும், அவர்களை வருத்தும்படி பேசாமல் தன்னைக் காத்துக்கொள்பவனின் ஆன்மா இனிமையாலும், கருணையாலும் நிறைவுறும் என்று கூறிவிட்டு, ‘சிறுமையு ணீங்கிய வின்சொல் மறுமையு’ என்ற குறளைச் சான்றாகக் கூறுகிறார்(அகமே புறம், ப.34).

ஒழுக்கத்தின் மேன்மையைப் பற்றி கூறும்போது, ‘ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க’ என்ற குறளைச் சுட்டுகிறார். மேலும், சரியான அறிவு முதிர்ந்தபொழுது பாவமும் தீய கவர்ச்சியும் மறைந்து போகின்றன எனக் கூறி, ‘அறிவற்றங் காக்கும் கருவி’ என்ற குறளை மேற்கோள் காட்டுகிறார் (அகமே புறம், ப.54).

ஒழுங்கு செய்யப்படாத மனம் காமக்குரோதத்தின் பயங்கரமான யுத்தத்தில் பலமிழந்து துணையற்று வீழ்கின்றது என்று கூறி, ‘இழுக்கத்தி னெய்துவ ரெய்தாப் பழி’ என்ற குறளை மேற்கோள் காட்டுகிறார் (அகமே புறம், ப.55). இந்நூலின் முதனூற் பாயிரத்தின் தொடக்கத்தில் வ.உ.சிதம்பரனார், முதனூற் பாயிரத்தில் ஜேம்ஸ் ஆலன் குறிப்பிட்டவாறே சீன நாட்டின் தத்துவஞானியான கன்பூசியஸின் ‘சகல அபிவிருத்திகளுக்கும் சகல அற வளர்ச்சிகளுக்கும் ஒருவன் தன்னைச் சான்றோனாக்குதலே அடிப்படை’ என்ற பொன்மொழியைக் குறிப்பிடுகிறார். ஒருவர் எளிதில் சரியான செயலை விடத் தவறான செயலைச் செய்தல் எளிதென்று கூறிவிட்டு, புத்தரின் ‘தீய வினைகளையும் நமக்குத் துன்பத்தைத் தரும் வினைகளையும் செய்தல் எளிது; நல்ல வினைகளையும் நமக்கு இன்பத்தைத் தரும் வினைகளையும் செய்தல் அரிது’ (அகமே புறம், ப.13) என்ற பொன்மொழியைக் கூறுகிறார். வ.உ.சி.யின் நூலில் இடம்பெற்றுள்ள திருக்குறள், நாலடியார் நூலின் மேற்கோள்கள், மொழியாக்கச் செறிவுக்கு ஒரு வரலாற்று மற்றும் பண்பாட்டு அடித்தளத்தை அளிக்கின்றன. இவை வ.உ.சி.யின் உரைநடைக்குத் தொன்மைச் செறிவைக் கொடுக்கிறது.

வீரிய நடையும் போராளிக்குரிய தொனியும்:

வ.உ.சி.யின் உரைநடையில், ஒரு விடுதலைப் போராட்டத் தலைவரின் வீரியமும், மக்களுக்குத் தன்னம்பிக்கை அளிக்கும் தொனியும் வெளிப்படுகின்றன. இந்த வீரியம், அவரது ‘அகமே புறம்’ என்ற மொழியாக்கத்தை ஒரு தத்துவ நூலில் இருந்து போராட்டத்திற்கான ஒரு செயலூக்க நூலாக மாற்றுகிறது. சான்றாக, ‘நீங்கள் இப்பொழுதே ஆயத்தமாகி ஒழுக்க வழியாக நடந்து நல்ல வாழ்வை அடையுங்கள். உங்களைப் பற்றி நீங்கள் கொண்டுள்ள தப்பு நம்பிக்கையைத் தூரவிட்டு விடுங்கள்’ (அகமே புறம், ப.53) மற்றும் ‘நீங்கள் நூறு தடவை

தவறினும் ஊக்கத்துடன் எழுந்து உங்கள் வழியைத் தொடருங்கள்! நீங்கள் ஆயிரம் தடவை தவறினும் தளர்ச்சி அடையாதீர்கள். சரியான மார்க்கத்தில் பிரவேசித்த பின்னர், அந்த மார்க்கத்தில் நின்று சிறிது தவறினும் வெற்றியடைதல் நிச்சயம்.' (அகமே புறம், ப.56) போன்ற சொற்றொடர்களில் காணப்படும் எழுச்சியான நடை, அன்றைய இந்திய விடுதலைப் போராட்டச் சூழலில், மக்களுக்கு மனவுறுதியை ஊட்டி, தளர்ச்சியடையாமல் இருப்பதற்கான அறிவுறுத்தலாக அமைந்து, உரைநடையின் செறிவுக்கு ஒரு புதிய பரிமாணத்தை அளிக்கின்றது.

முடிவுரை :

வ.உ.சி.யின் 'அகமே புறம்' நூலின் மொழியாக்கமானது, தமிழ் உரைநடையின் வளர்ச்சியில் ஒரு நடுகல்லாகத் திகழ்கிறது. அவர் மொழியாக்கம் செய்யும்போது, 'எளிமை'யைத் தனது அணுகு முறையாகவும், 'செறிவைத்' தனது இலக்காகவும் கொண்டார். பொது மக்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில், வாக்கிய அமைப்பையும், உள்ளடக்கத்தின் பிரிவுகளையும் (உயர்தர வாழ்வு அதிகாரத்தைப் பிரித்தது) எளிமைப்படுத்தினார். அதேசமயம், தத்துவச் செறிவுக்குச் சிறிதும் குறையாமல், 'நிஷ்காமிய கருமம்' போன்ற இந்தியச் சொல் லாடல்கள் மற்றும் திருக்குறள் மேற்கோள்களைப் பயன்படுத்தி, மொழி யாக்கத்திற்குத் தமிழ்த் தொன்மைச் செறிவூட்டலை அளித்தார். வ.உ.சி. யின் உரைநடை, ஒரு தேசத் தலைவரின் தொலைநோக்குச் சிந்தனையின் விளைவாகும். அவர் தமிழ்ப் பண்பாடு மற்றும் மேலைநாட்டுச் சிந்தனைகளை இணைத்து, நவீன தமிழ் உரைநடைக்கு ஒரு திடமான தத்துவ அடிப்படையை அமைத்து, அது எளிமையாகவும் வீரியமாகவும் இருக்க முடியும் என்பதை 'அகமே புறம்' மூலம் நிரூபித்துள்ளார்.

மேற்கோள்கள்:

1. ம.பொ.சிவஞானம், கப்பலோட்டிய தமிழன், ப.32, 2. டாக்டர் தி. லீலாவதி, தமிழ் தந்த வ.உ.சி, ப.80, 3. வி. செல்வவிநாயகம், தமிழ் உரைநடை வரலாறு, ப.119, 4. முனைவர் ச. சிவகாமி, மொழிபெயர்ப்புத்தமிழ், ப.13, 5. மா.ரா. அரசு, வ.உ.சி. (வ.உ.சிதம்பரனார்), ப.53.

துணைநூற்பட்டியல்:

1. அரசு, மா.ரா., 2005, வ.உ.சி.(வ.உ.சிதம்பரனார்), புதுதில்லி: சாகித்திய அகாதெமி
2. சிதம்பரம் பிள்ளை, வ.உ., 1966, அகமே புறம், சென்னை: பாரி நிலையம்.
3. சிவகாமி, முனைவர் ச., 2004, மொழிபெயர்ப்புத்தமிழ், சென்னை: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.
4. சிவஞானம் ம.பொ., 1969, கப்பலோட்டிய தமிழன், சென்னை: இன்பநிலையம்.
5. செல்வவிநாயகம், பேராசிரியர் வி., 2000, தமிழ் உரைநடை வரலாறு, சென்னை: குமரன் புத்தக நிலையம்.
6. லீலாவதி, டாக்டர் தி., 1986, தமிழ் தந்த வ.உ.சி, சென்னை: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.
7. Allen, James., 1912, Out from the Heart, London: L.N.Flower & co.

52

வ.உ.சி.யின் மொழிபெயர்ப்புகள்

ஈஸ்டர் ஜெப கீதா
ஆங்கிலத்துறை,
திருநெல்வேலி தெக்ஷணமாற நாடார் சங்கம் கல்லூரி, தெ. கள்ளிகுளம்.

ஆய்வுச்சுருக்கம்:

ஆங்கில நூல்களில் உள்ள வாழ்க்கைத் தத்துவங்கள், மனவலிமை, ஒழுக்கம் போன்ற கருத்துகளைத் தமிழர்களுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவர் மொழிபெயர்ப்புப் பணியைத் தொடங்கினார். இந்தக் கட்டுரை வ.உ.சிதம்பரம் பிள்ளையின் பிறப்பு முதல் அவரது மொழிபெயர்ப்புப் பணிகள், அவற்றின் காரணங்கள், காலகட்டங்கள், மற்றும் அவர் மொழிபெயர்த்த நூல்கள் வரை விரிவாக ஆராய்கிறது.

திறவுச்சொற்கள்: பிறப்பு, கல்வி, மொழிபெயர்ப்பின் அவசியம், மன உறுதி, மனிதனுடைய சிந்தனைகள், ஆத்ம தியானம்

முன்னுரை:

அந்நிய மொழிகளில் உள்ள சிந்தனைகளையும் இலக்கியங்களையும் தமிழில் மொழிபெயர்த்து பொதுமக்களின் அறிவுத்திறனை வளர்த்த பெருமைக்குரியவர் வ.உ.சி. இவரைப் பற்றியும் இவருடைய மொழி பெயர்ப்புகளைப் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

மொழிபெயர்ப்பின் அவசியத்தை உணர்ந்த தருணம்:

இளமைக் காலத்திலேயே வ.உ.சி. நாட்டுப்பற்று மிக்கவராக இருந்தார். பாலகங்காதர திலகர், அரவிந்தர், லாலா லஜபதி ராய் போன்ற தலைவர்களின் சிந்தனைகள் அவரை ஆழமாகப் பாதித்தன. இவர் அரசியல் போராட்டத்துடன் மட்டும் நிற்காமல், மக்களின் மனநிலையை மாற்ற வேண்டும் என்பதே இவரது குறிக்கோளாக இருந்தது. இதன் விளைவாகவே இவர் எழுத்து மற்றும் மொழிபெயர்ப்பை தனது ஆயுதமாகக் கொண்டார்.

1908-ஆம் ஆண்டு, இவர் ஆங்கில அரசுக்கு எதிராகப் பேசியதற்காக கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார் (1908–1912). சிறையிலிருந்த காலம் இவரது வாழ்க்கையில் மிகக் கடுமையான காலமாக இருந்தாலும், அதுவே இவரது மொழிபெயர்ப்புப் பணிகளுக்கான பொன்னான காலமாகவும் அமைந்தது. உடல் வேதனை, கடின உழைப்பு, அவமதிப்பு ஆகியவற்றின் மத்தியிலும், இவர் தனது அறிவுத் தேடலை நிறுத்தவில்லை. சிறையில் கிடைத்த சில ஆங்கில நூல்களை வாசித்தபோது, அவற்றில் உள்ள மன உறுதி, சுய சிந்தனை,

தன்முன்னேற்றம் போன்ற கருத்துகள் தமிழ்ச் சமூகத்திற்கு அவசியம் என்பதை இவர் உணர்ந்தார். அங்கிருந்தே 'இந்தச் சிந்தனைகள் அனைத்தும் தமிழில் வந்தால் மக்கள் விழிப்புணர்வடைவார்கள்' என்ற எண்ணம் உருவானது.

மொழிபெயர்க்க ஆரம்பித்த காலம்:

வ.உ.சிதம்பரம் பிள்ளை தனது மொழிபெயர்ப்புப் பணிகளை 1910 ஆம் ஆண்டு, திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த கடுமையான சூழ்நிலையில் தொடங்கினார். அந்தச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த காலத்திலேயே அவர் தனது முதல் மொழிபெயர்ப்பு முயற்சியை மேற்கொண்டார். இது ஒரு சாதாரண இலக்கியப் பயிற்சியாக அல்ல, சமூக சிந்தனையை விழிப்பூட்டும் வகையில் ஒரு மறுமலர்ச்சிப் பணியாகவே இவர் இதை மேற்கொண்டார். ஜேம்ஸ் ஆலன் எழுதிய 'As a Man Thinketh' என்ற ஆங்கில நூலே வ.உ.சி. மொழிபெயர்த்த முதல் நூலாகும். மன உறுதியை வளர்க்கும் தன்மை, அடிமை மனநிலையை மாற்றும் ஆழ்ந்த கருத்துகள், எளிமையுடன் கூடிய தத்துவப் பொருள் மற்றும் அவை அனைத்தும் தமிழில் பொதுமக்களுக்கு எளிதாக எடுத்துச் செல்லக்கூடியவை என்ற காரணத்தாலேயே இந்த நூலை இவர் முதலில் தேர்ந்தெடுத்தார். இந்த மொழிபெயர்ப்பின் மூலம் மனிதனின் வாழ்க்கையை அவனது சிந்தனைகளே வழிநடத்துகின்றன என்ற உண்மையை தமிழ்ச் சமூகத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதே இவரது முக்கிய நோக்கமாக இருந்தது.'வ.உ.சி. செய்த மொழிபெயர்ப்புகள் சுதந்திரச் சிந்தனையை மக்கள் மத்தியில் விதைத்தன.' என்று கா. சிவத்தம்பி தனது தமிழ்ச் சமூகமும் இலக்கியமும் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

வ.உ.சி.யின் மொழிபெயர்ப்புகள்:

'மனம் போல் வாழ்வு' (1909), 'அகமே புறம்' (1914), 'வலிமைக்கு மார்க்கம்' (1916) ஆகிய மூன்று நூல்கள் மூலம் வ.உ.சிதம்பரம் பிள்ளை மனிதனின் எண்ணம், மனநிலை மற்றும் உள் வலிமை ஆகியவை வாழ்க்கையை உருவாக்குகின்றன என்ற ஒன்றிணைந்த சிந்தனையை தமிழில் எடுத்துச் சென்றார். இம்மொழிபெயர்ப்புகள் தன்னம்பிக்கை, ஒழுக்கம் மற்றும் மன உறுதியை வளர்க்கும் அறிவுப் பணிகளாக தமிழ்ச் சமூகத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின.

மனம் போல் வாழ்வு (1909):

'*மனமெனும் நினைப்பே நமையாக்கியது*' வ.உ.சி.

ஜேம்ஸ் ஆலன் அவர்கள் எழுதிய As a Man Thinketh என்ற ஆங்கில நூலை வ.உ.சி. 1909 ஆம் ஆண்டு 'மனம் போல் வாழ்வு' என்ற தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்தார். இந்த நூலில் மனிதனுடைய வாழ்க்கை அவனுக்கு ஏற்படும் எண்ணங்களால் தான் வடிவமைக்கப்படுகிறது என்ற அடிப்படை உண்மை விளக்கப்பட்டிருக்கிறது. எண்ணங்கள் விதைகளாக விதைக்கப்பட்டு, அவற்றிலிருந்து செயல்கள் மலர்களாக

மலர்ந்து, இறுதியில் இன்பம் அல்லது துன்பம் என்ற கனிகளாக மாறும் என்ற கருத்தும் உள்ளது. மனிதன் எண்ணுவதுதான் அவன் பேசும் சொற்களாகவும், செய்யும் செயல்களாகவும், தொடர்ந்து பழக்கங்களாகவும் மாறுகின்றன. அந்தப் பழக்கங்களே அவனது ஒழுக்கத்தையும் உருவாக்குகின்றன. ஆகவே, வாழ்க்கையைச் சிறப்பாக அமைக்க விரும்புகிறவன், முதலில் தனது எண்ணங்களைச் சீர்படுத்தி அமைக்க வேண்டும் என்ற கருத்தை இந்த நூல் எடுத்துக்காட்டுகிறது.

அகமே புறம் (1914):

'சுகமும் ஆக்கமும், மகிழ்வும் கவலையும், அணிவும் அச்சமும், விருப்பும் வெறுப்பும், அறிவும் மடனும் அகத்திலன்றி வேறு எங்கும் இல்லை, அவை யாவும் மனநிலைமைகளேயன்றி வேறல்ல' - வ.உ.சி

ஜேம்ஸ் ஆலன் என்பவரின் Out from the Heart என்ற நூலை வ.உ.சி 1914 ஆம் ஆண்டு 'அகமே புறம்' என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இந்நூல் மனிதனுடைய மனத்தின் வலிமையை ஆழமாக எடுத்துக்காட்டுகிறது. மனிதனுடைய மனம் அளவற்ற சக்தியைக் கொண்டது. அதனால் ஒருவனை வாழவைக்க முடியும், அவனையே அழிக்கவும் முடியும். எனவே மனிதன் தனது மனத்தை நல்ல சிந்தனைகளுக்கு பழக்கப்படுத்த வேண்டும் என்றும், அறச் செயல்களையே செய்ய நாட வேண்டும் என்றும் இந்த நூல் எடுத்துரைக்கிறது. சொற்களைக் கட்டுப்படுத்தி, நல்ல மனநிலையில் வாழ்ந்தால் வாழ்க்கையில் இன்பம் கிடைக்கும்; தீய மனநிலையினால் தான் துக்கம் உண்டாகிறது. அறிவுள்ள மனிதன் தீய செயல்களைச் செய்ய மாட்டான் என்பதை மையக் கருத்தாகக் கொண்டு எழுதப்பட்டது.

வலிமைக்கு மார்க்கம் (1916):

ஜேம்ஸ் ஆலன் அவர்கள் எழுதிய From Poverty to Power என்ற நூலின் முதல் பகுதியான The Path of Prosperity என்பதனை வ.உ.சி 1916 ஆம் ஆண்டு 'வலிமைக்கு மார்க்கம்' என்ற தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இந்த நூலில் துன்பங்கள் மனித வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்று என்றும், அவை ஒவ்வொன்றும் ஒரு அனுபவத்தைக் கற்றுத் தருகின்ற நல்ல ஆசிரியர்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

துன்பம் தற்காலிகமானதுதான் ஆனால் அதிலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடம் நிலையானது. வலிமை என்பது வெளியில் காணப்படும் பொருளல்ல; அது மனிதனுடைய உள்ளத்தில் உருவாகும் ஒரு விதமான அனுபவம் ஆகும்.

வாழ்க்கையில் வெற்றி பெற விரும்பும் மனிதன் இன்பத்தையும் துன்பத்தையும் சமநிலையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். தன்னைத் தானே கட்டுப்படுத்தக்கூடியவன் தான் உண்மையில் வலிமை பெற்றவன் என்றும், அத்தகைய மனிதனாலேயே பிறரையும் வழிநடத்த முடியும் என்றும் இந்த நூல் கூறுகிறது.

சாந்திக்கு மார்க்கம் (1934):

‘உன்னால் நீ துன்பம் உறுகின்றாய்; வேறொருவன் தன்னால் அஃதுன்னைச் சார்ந்ததில்லை-மன்னா! நீவாழ்வதும் சாவதுவும் மற்றொருவனல்ல; தாழ்வுயர்விங் கீவோன்நீ தான்’- வ.உ.சி From Poverty to Power என்ற நூலின் இரண்டாம் பகுதியான The Way to Peace என்பதனை வ.உ.சி 1934 ஆம் ஆண்டு ‘சாந்திக்கு மார்க்கம்’ என்ற தலைப்பில் மொழிபெயர்த்திருக்கிறார். இந்த நூல் ஆத்ம தியானத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்குகிறது.

தியானம் என்பது ஒரு கருத்தை அல்லது உண்மையை முழுமையாக அறிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்பதாகும். அன்பு எல்லாவற்றையும் வெல்லக்கூடிய சக்தி கொண்டதாகும் என்றும், அடக்கம் இறைத்தன்மையைப் பெறுவதற்கான அடையாளம் என்றும் இந்நூல் கூறுகிறது. எந்தச் சூழ்நிலையிலும் பொறுமையுடன், இனிமையுடன், அன்புடனும் மன்னிக்கும் இருதயத்துடனும் வாழ்பவனே உண்மையான பொருளை உணர முடியும். சுயநலத்தை விட்டு விடுதல், இறைநம்பிக்கை கொண்டிருத்தல் ஆகியவை ஆன்மிக உயர்வுக்கும் சாந்திக்கும் வழிவகுக்கும் என்பதே இந்நூலின் மையக் கருத்து ஆகும்.

முடிவுரை:

வ.உ.சிதம்பரம் பிள்ளையின் மொழிபெயர்ப்புப் பணிகள், தமிழ் இலக்கிய வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பெற்றிருக்கின்றன. அவர் மொழிபெயர்த்தது நூல்களை மட்டுமல்ல மனிதனுடைய சிந்தனைகளையும், நம்பிக்கைகளையும், மனஉறுதியையும் இவர் தமிழில் மொழிபெயர்ப்புகள் மூலம் சமூகத்திற்கு கொண்டு வந்தவர் ஆவார். கப்பலோட்டிய தமிழன் எனப் புகழப்படும் இவர், உண்மையில் சிந்தனைகளை தமிழில் ஓட்டிய புரட்சியாளர் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இன்றைய தலைமுறையினருக்கும் அவரது மொழிபெயர்ப்புகள் ஒரு பக்கபலமாகவும், வழிகாட்டியாகவும் விளங்கி வருகின்றன.

துணை நூற்பட்டியல்:

1. மனம் போல வாழ்வு - சிதம்பரம் பிள்ளை, வ. உ., இந்தியா பிரிண்டிங் வொர்க்ஸ் அச்சகம், சென்னை, 1916.
2. அகமே புறம் - சிதம்பரம் பிள்ளை, வ. உ., பாரி நிலையம், சென்னை, 1966.
3. சாந்திக்கு மார்க்கம், சிதம்பரம் பிள்ளை, வ. உ., வேலாயுதம் பிரிண்டிங் பிரஸ், தூத்துக்குடி, 1934.
4. பண்டைத் தமிழ்ச் சமூகம் - வரலாற்றுப் புரிதலை நோக்கி... கா. சிவத்தம்பி, மக்கள் வெளியீடு, 2011

53

வ.உ.சி.யின் மொழிபெயர்ப்புத் திறத்தைக் காட்டும் 'அகமே புறம்'

முனைவர் ப. அலிஸ் ராணி
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை, சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி.

ஆய்வுச்சுருக்கம்:

தமிழ் மக்களுக்கு 'கப்பலோட்டிய தமிழன்', 'செக்கிழுத்த செம்மல்' என்ற அடையாளங்களோடு அறிமுகமானவர் வ.உ.சி. ஆனால், இவர் ஒரு சிறந்த இலக்கிய வித்தகர். இவர் படைப்பாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர், மொழிபெயர்ப்பாளர் என பன்முக அடையாளங்களுக்குச் சொந்தக்காரர் ஆவார்.

அவரது இலக்கிய ஆளுமை இலக்கிய வரலாற்றில் முத்திரை பதிக்கக்கூடிய பதிவாகும். இலக்கியப் படைப்பைப் புதிதாக உருவாக்கு வதைக் காட்டிலும் மொழிபெயர்ப்பு செய்தல் என்பது கடினமான பணியாகும்.

மற்றொருவருடைய கருத்தை தன்மயமாக்கிக் கொண்டு தன்னை இழந்து, மீண்டும் மற்றொருவராகவே மாறி கருத்துகளை வெளிப்படுத்த வேண்டும். இது ஒரு கட்டுப்படுத்தப்பட்ட அல்லது ஒரு வரம்புக்கு உட்படுத்தப்பட்ட பணியாகும். இதனை நேர்த்தியாக வ.உ.சி செய் துள்ளார் என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

திறவுச் சொற்கள்: ஒலிபெயர்ப்பு, மொழிபெயர்ப்பு, மொழியாக்கம்

முன்னுரை

வ.உ.சி. ஆன்மாவிற்கு சிறந்த சிந்தனைகளைப் பெற்றுக் கொள்ள பிற மொழிகளில் உள்ள அறநூல்களையும் கற்றுத் தேர்ந்தார். அந்த அறநூல்களை ஆர்வமுடன் கற்றதோடு நின்று விடாமல் அதனை தமிழ் மொழியில் மொழிபெயர்த்தும் தந்துள்ளார். அந்த வகையில் தமிழ் உலகிற்கு அறிமுகமான நூல் 'அகமே புறம்' என்ற நூலாகும்.

வ.உ.சி.யின் இலக்கிய இயக்கம்:

தனிமனித வாழ்க்கை நெறிப்படும் போது சமுதாயம் மேம்படும் என்பது அவரது நம்பிக்கை. இந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் அவர் நண்பர்களோடு இணைந்து விவேகபானு என்ற ஆன்மிக அற இதழை நடத்தினார். இது அவரது ஆன்மிக இலக்கிய ஈடுபாட்டை வெளியுலகத்திற்கு பிரகடனப்படுத்தியது. அவரது ஆரம்ப கால அற இலக்கிய சிந்தனை திருக்குறள் சார்ந்து அமைந்திருந்தது. அடுத்த காலகட்டங்களில் தேசிய விடுதலை போராட்ட களத்தில் தன்னை

முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். இவரது அரசியல் வாழ்வும், தமிழ் வாழ்வும் ஒன்று கலந்து இணைக்கோடுகளாகவே வளர்ந்தன. ஆரம்ப காலத்தில் ஆன்மீக ஈடுபாடும், இடைக்காலத்தில் தேசிய ஈடுபாடும், பிற்காலத்தில் இலக்கிய ஈடுபாடும் இவரது வாழ்க்கையை முப்பரிமாண வாழ்க்கையாக அடையாளம் காட்டி நிற்கின்றது எனலாம்.

சிறைவாசம் அவரை இன்னும் பலப்படுத்தியது. சிறையில் இருக்கும் பொழுது பிற மொழி அற நூல்களை வாசித்தார். அதனை நேசித்தார். அதனை மொழிபெயர்த்தார். ஜேம்ஸ் ஆலன் இயற்றிய 'அகத்தில் இருந்து புறம்' (Out of the Heart) என பொருள்படும் ஆங்கில நூலினை 'அகமேபுறம்' என்ற பெயரில் தமிழ் மொழிபெயர்ப்பு நூலாக்கினார். எந்த ஒரு படைப்பாக இருந்தாலும் மக்களுக்கு புரிய வேண்டும்; மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்துவதாகவும் அமைய வேண்டும்; அது மக்களை சென்றடைய வேண்டும் என்ற இயக்கப் போக்கு வ.உ.சி யின் இயக்க வழி சிந்தனை ஆகும். மொழியில் எளிமை, இலக்கியத்தில் எளிமை, சிந்தனையில் எளிமை என பல இயல்பான இலக்கிய வளர்ச்சி நிலைகளைப் பின்பற்றியுள்ளார்.

'அகமே புறம்'- அறிமுகம்:

'அகமே புறம்' என்ற இந்த நூல் வ.உ.சி. கோயம்புத்தூர் சிறையில் வாழ்ந்த காலத்தில் அவர் மொழிபெயர்த்த நூலாகும். இந்நூல் பாயிரம், சிறப்புப்பாயிரம், காப்பு, அடக்கம், வேண்டல், பொருள் குறிப்பு ,முதல் நூல் செய்யுள், முதல் நூல் பாயிரம் என்ற அமைப்பின் அடிப்படையில் அமைந்துள்ளது. பாயிரத்தில் 'தமிழ் அறிந்த ஒவ்வொரு ஆடவரும், பெண்டிரும், சிறுவரும், சிறுமியரும் கற்க வேண்டும் என்பதும் இந்நூல் நமது நாட்டில் நிலவும் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்பதும் இந்நூல் எஞ்ஞான்றும் நிலை பெற்று நமது நாட்டில் நிலவ வேண்டும் என்பதும் எனது கோரிக்கை' ('அகமே புறம்' - பாயிரம்) என்று வ.உ.சி. பதிவு செய்துள்ளார். மேலும், அற நூல்களை கற்க நிற்போரே இந்நூலை சொல்வதற்கு உரியவர். அறத்தை அனுபவங் களால் விளக்கி சொல்லுதல் வேண்டும் என்ற செய்தியைப் பதிவு செய் துள்ளார். நூலில் உள்ள பொருட்களைக் கசடற கற்று, கை கொண்டு ஒழுகுதல் இதனைக் கற்கும் முறை என்ற குறிப்பினைத் தந்துள்ளார்.

ஜேம்ஸ் ஆலனின் நூல் 'அகத்திலிருந்து புறம்' என்று பொருள்படும் பெயரைக் கொண்டிருப்பினும், வ.உ.சி. தமிழ் வழக்கத்திற்கு ஒத்தவாறு 'அகமே புறம்' என நூலுக்கு பெயரிட்டுள்ளார். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் சுலபமாக அடைவதற்கு தக்க மார்க்கங்களைத் தெளிவாக இந்நூல் கருத்துரைத்துள்ளது. மேலும், இந்நூலில்,

- அகமும் புறமும்
- மனத்தின் தன்மையும் வன்மையும்
- பழக்கத்தை உண்டாக்கல்

- செய்தலும் அறிதலும்
- உயர்தர வாழ்வு
- மனோநிலைமைகளும் அவற்றின் காரியங்களும்
- வேண்டுகோள்

என்ற தலைப்புகளில் கருத்துகள் தரப்பட்டுள்ளன. ஜேம்ஸ் ஆலன் சீன தேசத்து தத்துவ ஞானியாகிய கன்பூசியஸ் கருத்துக்களை உள்வாங்கியவராக அகத்திலிருந்து புறம் என்ற நூலை உருவாக்கி யுள்ளார். இந்நூலின் சாராம்சம் என்னவெனில் அறச் செயல்களைச் செய்பவன் வாழ்க்கை, ஒழுங்கும், இன்பமும், அழகும் வாய்ந்தது என்ற கருத்தை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

தமிழ் மரபைப் போற்றிய வ.உ.சி.:

ஆங்கில மொழி மரபில் கூறப் பெற்றுள்ள சில அறிவுரைகளை, அப்படியே தமிழில் தராமல், அவற்றோடு ஒத்த தமிழ் முதுமொழிகளைப் பயன்படுத்தியுள்ளார். ஒருவரின் தன்னம்பிக்கையையும், சுயமுயற்சி யையும் வலியுறுத்தும் போது நாலடியார்(248) பாடலான 'நன்னிலைக் கண்தன்னை நிறுப்பானும்' (ப.6) என்ற பகுதியை இணைத்துள்ளார்.

அறிவின் வழியே மனத்தை ஆள வேண்டும். அந்த மனத்திற்கு அறம் போதனைப் பொருளாக இருக்க வேண்டும். அந்த அறம் காட்டும் வழியில் உடலும் மனமும் இணைந்து செயல்பட வேண்டும். அதுவே சிறந்த மன ஆளுமையாக இருக்கும் என்பது வ.உ.சி யின் கருத்து. இதனை எடுத்துரைக்கும் வகையிலான பல கருத்துகளை விளக்கும் போது, கெடுக்க வல்லதும், கெட்டவர் தங்களை எடுக்க வல்லதும், மனதை அடக்கத் துணையாவதும் மனமேயாம். மேகங்களை வருவிப்பதும் விரட்டி ஓட்டுவதும் வாயுவின் வேலை ஆவதைப்போல, மோட்சத்தை உண்டு பண்ணுவதும் பந்தத்தை உண்டு பண்ணுவதும் மனதின் வேலையாகும்.'கெடுக்க வல்லதும் கெட்டவர் தங்களை எடுக்க வல்லதும் இம்மனம்' (ப.7) என்ற மனம் பற்றிய பிரபுலிங்கலீலை வரிகளைத் தந்துள்ளார்.

மனமானது ஒரு மனிதனைக் கெடுக்கவும் வல்லது, அதே சமயம் நல்ல மனதைப் பெற்றவர்கள் அதைக் கட்டுப்படுத்தித் தங்களை உயர்த்திக்கொள்ளவும் வல்லது என்பதை உணர்த்துகின்றன. காலம் கடத்துதல் (நெடுநீர்), மறதி, சோம்பல், அளவுக்கு மீறிய தூக்கம் (மடிதுயில்) ஆகிய இந்த நான்கு குணங்களும், அழிவை நாடுவோரின் விருப்பமான படகுகளாகும்; அதாவது, இந்த குணங்கள் ஒருவரைக் கெடுக்கும், அழிக்கும்.

இக்கருத்தினை வலியுறுத்தும் வகையில் திருக்குறள் (605) வரிகளைத் தந்துள்ளார். 'நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும் கெடு நீரார் காமக் கலன்' (ப.27) என்பதாகும். உண்ணும் உணவின் அளவை யும், செரிமானத்தையும் அறிந்து உண்பதே நீண்ட நாள் ஆரோக்கி

யத்துடன் வாழ உதவும் அடிப்படை வழிமுறை. இதனை விளக்க ‘அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு’ (ப.29)என்ற திருக்குறள் (943) வரிகளைத் தந்துள்ளார். மொழியை ஆழமாகப் புரிந்துகொள்ளும் திறன், நுணுக்கமான அர்த்தங்களைப் புரிந்துகொண்டு மாற்றாமல் கடத்தும் நேர்மை, கலாச்சார அறிவுடன் கூடிய பாரபட்சமற்ற தன்மை, மூலத்தின் நோக்கத்தையும் தொனியையும் இழக்காமல், இலக்கு மொழியில் புதிய உரையை கலாச்சார நுணுக்கங்களை உணர்ந்து, பொருத்தமான மாற்றங்களைச் செய்த வ.உ.சி.யின் திறன் சிறப்புக்குரியது எனலாம்.

மொழி நடை:

கிரகித்தல், பிரயாசம், அக்ஷரங்கள், அப்பியாசம், நிஷ்காமிய, அபிவிருத்தி, சரீரம், பிசகான மனோநிலை போன்ற வடமொழிச் சொற்களின் கலப்பு இந்நூலில் காணப்படுகிறது. இது வ.உ.சி. யின் பிற்காலத்திய தனித்தமிழ் என்ற சிந்தனைக்கு அப்பாற்பட்ட மொழிநடையாகும். ‘தமிழில் ஆங்கிலம் கலந்து எழுதுவதை எதிர்த்த வ.உ.சி. வடமொழி கலப்பதைப் பெரும்பிழையாக எண்ணவில்லை.’ (வ.உ.சி. வளர்த்த தமிழ், ப.21). வ.உ.சி. இலக்கியம், மொழி சார்ந்த செய்திகளும் மக்களுக்குப் புரியும் நிலையில், பயன்படும் வகையில் அமைய வேண்டும் என்று கருதியவர். ‘வ.உ.சி. வாழ்ந்த காலச்சூழல் ஈண்டு எண்ணத்தக்கதாகும். வடமொழி, எழுத்திலும் பேச்சிலும் பெருவழக்காக இருந்த காலம் அது. வடசொற்களைக் கலந்து பேசுவதும் எழுதுவதும் பெருமையாகக் கருதப்பட்ட காலம் அது. அந்தக் காலச் சூழலில் வாழ்ந்த வ.உ.சி. யும் வடமொழி கலந்த தமிழ்நடையை ஏற்றுப் பயன்படுத்தியமை சூழ்நிலையின் காரணமாகத் தவிர்க்க இயலாத ஒன்றாகியது. ஆயினும், வடமொழி கலந்து எழுதிய பிறருக்கும் வ.உ.சி.க்கும் வேறுபாடு இருந்தது.’ (வ.உ.சி.வளர்த்த தமிழ், ப.22). வ.உ.சி தமது மொழிபெயர்ப்பு நூல்களில் பல புதிய சொல்லாக்கங்களைத் தந்துள்ளார். தனித்தமிழில் எழுத முடியும், எழுத வேண்டும் என்பதே இவருடைய நம்பிக்கையாகவும் விருப்பமாகவும் இருந்தது என்பதை இவை உணர்த்தவல்லன.

அகவலிமையையும் புறவலிமையையும் ஒருங்கு வளர்த்து மேன்மை யடையதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய நன்னெறிகளாக ஜேம்ஸ் ஆலன் குறிப்பனவற்றை மூல அழகு குன்றாமல் வ.உ.சி. தொகுத்து உரைக்கும் நயத்திற்குப் பின்வரும் பகுதிகள் சான்றுகளாக அமைய வல்லன ‘மனம் தளர்ச்சியின்றி வாழ்க்கை நிலைமையாகிய வஸ்திரத்தை நெய்து கொண்டிருக்கிறது; நினைப்பு நூல்; நல்ல செயல்களும் தீய செயல்களும் பாவும் ஊடும்; ஒழுக்கம் வாழ்வாகிய தறியில் நெய்யப்படும் வஸ்திரம். மனம் தான் நெய்த வஸ்திரத்தால் தன்னை உடுத்திக் கொள்கிறது’.(அகமே புறம், ப.5) இவ்வாறு ஜேம்ஸ் ஆலனின் ஆழ்ந்த கருத்தை,தம் எளிய சொல்லாட்சியால் இயல்பாக விளக்க முடிவது வ.உ.சி.யின் பண்பாகும். The Loose-Liver cannot escape sorrow and Pain.

The undisciplined mind falls, weak and helpless, before the fierce onslaught of passion(Out From The Heart-Four Popular Books, P.79)' 'ஒழுங்கீனமாக வாழ்கின்றவன் துன்பத்திலிருந்தும் துக்கத்திலிருந்தும் தப்ப முடியாது. ஒழுங்கு செய்யப்படாத மனம் காமக்குரோதத்தின் பயங்கரமான யுத்தத்தில் பலமிழந்து துணையற்று வீழ்கின்றது. (அகமே புறம், ப.55) என்று மொழிபெயர்ப்பதோடு நிறைவடையாமல், எளிமையாகப் புரியும் விதத்தில் 'ஆன்றோரும் 'இழுக்கத்தின் எய்துவர் எய்தாப்பழி'. (அகமே புறம், ப.55) என்று கூறியுள்ளார்' என திருக்குறள் (7) வரிகளைத் தந்துள்ளார். நுட்பமான செய்திகளையும் எளிமையாகவும் சுவை குன்றாமலும் எடுத்துரைக்கும் வ.உ.சி.யின் மொழிபெயர்ப்பு நடை சிறப்பிற்குரியது எனலாம்.

முடிவுரை:

அரிய பொருள்களைத் தமிழுலகம் நன்குணர்ந்து கைக்கொண் டொழுகுதல் வேண்டும் என்ற வ.உ.சி.யின் எண்ணமே ஜேம்ஸ் ஆலனின் நூலை மொழிபெயர்ப்புச் செய்ய தூண்டியது எனலாம். 'அகமே புறம்' நூலின் மொழிபெயர்ப்பானது சரியான ஆக்கம், அதாவது முறையான மொழியாக்கம் என்று சொல்லலாம். சொல்வளம், சொல்லாக்கத் திறன், பொருள் வேறுபாடு அறிந்து சொற்களைப் பயன்படுத்தும் திறம், சொற்பொருளை உணர்த்தும் ஆற்றல் ஆகியன வ.உ.சி யின் சொல்லாட்சித் திறன்களுக்குச் சான்றாக நிற்கின்றன. மக்கள் வழக்கில் பயன்படுத்தும் சொற்களையே பயன்படுத்த வேண்டும். அவையே அவர்களின் புரிதலுக்கு மிகவும் பயனுடையதாக அமையும் என்ற எண்ணம் உடையவராகவும் இருந்துள்ளார். மனிதனின் எண்ணங்களே அவனுடைய வாழ்வை வடிவமைக்கிறது என்ற கருத்தை அடிநாதமாகக் கொண்ட நூலாக இது உள்ளது.

பயன்பட்ட நூல்கள்:

1. அகமே புறம், வ.உ.சிதம்பரம்பிள்ளை, பாரிநிலையம், சென்னை 1966 (ஆறாம் பதிப்பு).
2. கப்பலோட்டிய தமிழன், ம. பொ. சிவஞானம் , இன்ப நிலையம் ,சென்னை,1947.
3. வ.உ.சி.யும் முதல் தொழிலாளர் வேலை நிறுத்தமும், ஆ. சிவசுப்பிரமணியன் மக்கள் வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, 1986.
4. தமிழ் தந்த வ.உ.சி., லீலாவதி,தி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை,1986.
5. வ.உ.சி. வளர்த்த தமிழ் அரசு, மா.ரா., (தொகுப்பாசிரியர்) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2002.

54

வ.உ.சி.யின் மொழிபெயர்ப்பு முறையும் உத்திகளும்

முனைவர் தி. சிவக்குமார், இ.த.ப.,
துணை இயக்குநர், செய்தி (ஓய்வு), அகில இந்திய வானொலி நிலையம், புதுச்சேரி.

முன்னுரை:

வ.உ.சிதம்பரனார், ஆங்கில மொழியில் இருந்து ஜேம்ஸ் ஆலனின் மூன்று நூல்களைத் தமிழில் நான்கு நூல்களாக மொழிபெயர்த்துள்ளார். From Poverty to Power என்ற நூலை இரண்டு பாகங்களாகத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவை அளவில் சிறிய நூல்கள். அவை:

- As a man thinketh : 1. **மனம்போல் வாழ்வு**
- Out from the Heart : 2. **அகமே புறம்**
- From Poverty to Power or : 3. **வலிமைக்கு மார்க்கம்**
- The reflections of Prosperity and Peace : 4.**சாந்திக்கு மார்க்கம்**

மேலும், பேரின்ப மார்க்கம், ஊழை வெல்வதற்கு உபாயம் என்ற இரண்டு நூல்களையும் அரைகுறையாக மொழிபெயர்த்துள்ளதாக வ.உ.சி. குறிப்பிடுகின்றார். ஜேம்ஸ் ஆலன் நூல்கள் வள்ளுவர் மறைக்கு ஒப்பப் போற்றத்தக்கவை ஆதலால் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் அந்நூல்களால் நன்மை அடைய வேண்டும் என்பதும், இந்நூலைப்போன்று அரிய பொருள்களை எளிதில் உணர்ந்து, கடைப்பிடித்து ஒழுகத்தக்க விதத்தில் கூறியிருக்க நான் கண்டிலேன் என்பதுவும் நான் அவற்றை மொழிபெயர்த்ததற்குக் காரணம் என்கிறார் வ.உ.சி.

இந்த நான்கு நூல்களின் பாயிரங்களில் (முன்னுரை) வ.உ.சி குறிப்பிட்டுள்ள செய்திகளைத் தொகுத்தும் மொழிபெயர்ப்புகளைப் படித்தும் பார்க்கும் போது அவருடைய மொழிபெயர்ப்பு முறை 'கட்டற்ற மொழிபெயர்ப்பு' (Free Translation) என்ற முடிவுக்கு வரமுடிகிறது. மேலும் தனது மொழிபெயர்ப்பு முதனூலுக்குச் சற்றேறக்குறைய சரியான மொழிபெயர்ப்பென்றே வ.உ.சி. கூறுகிறார். ஆசிரியரது கருத்துகளை நன்கு விளக்குதற்பொருட்டு அவர் இரண்டு உத்திகளைக் கடைப்பிடித்துள்ளார். ஒன்று: சிற்சில சொற்களைக் கூட்டியும் குறைத்தும் மொழிபெயர்த்தல் இரண்டு: பயில்வழங்கும் வடமொழிகளை மிகுதியாகத் தொடுத்தல். இந்த இரண்டு உத்திகளும் முதனூலில் இருந்து விலகல் என்பதால் வ.உ.சி இவ்விரண்டின் பொருட்டும் அறிவுடையார் என்னை மன்னிப்பாராக எனக் கூறியுள்ளார்.

வ.உ.சி இந்த நான்கு நூல்களையும் வாசிப்பவர் இவை தமிழ் நூல்கள் என்றே உணரவேண்டும் எனக் கருதியே மொழிபெயர்த்துள்ளார்.

1900களின் முதற் காலாண்டில் வெளியிடப்பட்ட பல தமிழ்நூல்களைப் போலவே இந்த மொழிபெயர்ப்பு நூல்களுக்கும் முதனூற் பாயிரம், ஜேம்ஸ் ஆலன் சரித்திரச் சுருக்கம் முதனூற் செய்யுள், செய்யுள் வடிவில் காப்பு-ஒழுக்கம்-அறம்-பொருள்-முயற்சி எனப் பல கூறுகளையும் வ.உ.சி. இணைத்துள்ளார். வலிமைக்கு மார்க்கம் என்ற நூலில் பயன்படுத்தியுள்ள சில சொற்களுக்குப் பொருளையும் தந்துள்ளார்.

வ.உ.சி.யின் மொழிபெயர்ப்பு உத்திகளாக:

- சுருக்குதல் – வாக்கியத்தைச் சுருக்குதல்
- விரித்தல் – கூடுதலான சொற்களை, தொடர்களைப் பயன்படுத்தி அர்த்தத்தை விரிவுபடுத்துதல்
- விட்டுவிடுதல் – அர்த்தக்குழப்பம் ஏற்படும் என்றால் அங்கு சொற்களை / தொடரை விட்டுவிடுதல்
- சேர்த்தல் – புரிதலுக்காக புதிய விஷயங்களைச் சேர்த்தல் / திருக்குறள் மற்றும் ஏனைய செய்யுள்களைச் சேர்த்தல்
- மாற்றுதல் – இலக்கு மொழி சூழலுக்கும் கலாச்சாரத்திற்கும் பொருந்தும் வகையில் முதல் நூலின் விஷயங்களை மாற்றுதல்

ஆகிய ஐந்தினையும் குறிப்பிடலாம்.

சொல்தேர்வு:

வ.உ.சி.யின் சொல்தேர்வு முறை முக்கியமானதாகும். ஒரே ஆங்கிலச் சொல்லுக்கு பல தமிழ்ச்சொற்களைச் சூழலுக்கு ஏற்பப் பயன்படுத்தி உள்ளார். சான்றாக:

Peace: சுகப்பிராப்தி, சாந்தி, சமாதானம், அமைதி

Enlightenment: துக்கநிவர்த்தி, அறிவுவிளக்கம், தெளிவு

Pure: சுத்தம், நன்மை, பரிசுத்தம்

வலிமைக்கு மார்க்கம் பாயிரத்தில் நான் இதுவரையில் பார்த்துள்ள இலக்கியங்களில் காணப்படாத 'எஃது' என்பது போன்ற ஒன்றிரண்டு சொற்களைப் புதியன புகுதலாக இதில் உபயோகித்துள்ளேன்,' என்று கூறுகிறார்.

Every soul attracts its own, and nothing can possibly come to it that does not belong to it.

ஒவ்வொரு ஆன்மாவும் தனக்குச் சொந்தமானவற்றைக் கவர்கின்றது; அதற்குச் சொந்தமல்லாத எஃதும் அதனை அணுகாது.

Intellectual என்ற சொல்லுக்கு அறிவாளி என மொழிபெயர்க்கலாம். ஆனால் வ.உ.சி. வாக்கிய அமைப்பை மாற்றி இச்சொல்லை அறிவிலி என மொழிபெயர்த்துள்ளார்.

The intellectual who do not see the necessity for giving up self, frame endless theories about the universe and call them truth.

யான் என்பதனை விடுவதற்குரிய அவசியத்தைக் காணாத அறிவிலி, பிரபஞ்சத்தைப் பற்றி முடிவில்லாத கோட்பாடுகளை உருவாக்கி, அவற்றை மெய்ப்பொருள் என்று சொல்கின்றான்.

Gluttony – மிகையூண், Youth - பாலியம்

Whims – மனோபீஷ்டம் Fancies - மனோராஜ்யம்

Vision – மனோதிருஷ்டி Ideal – மனோசிருஷ்டி

போன்று சுவாரசியமான சொற்கள் மொழிபெயர்ப்பில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதேநேரம் இந்தச் சொல் பொருத்தம் தானா என்ற சந்தேகம் எழும் இடங்கள் சிலவும் உள்ளன. உதாரணமாக

அ. Bullet-**க்கு வெடிகுண்டு என்று பயன்படுத்துதல்:**

To kill a man as speedily as a bullet….

மனிதனை ஒரு வெடிகுண்டு எவ்வளவு துரிதத்தில் கொல்லுமோ, அவ்வளவு துரிதத்தில்…. இங்கு துப்பாக்கிக் குண்டு என்று மொழிபெயர்த்திருக்கலாம்.

ஆ. Music – Painting – Literature இச்சொற்களுக்கு

சங்கீதம் – சித்திரம் – மொழி எனப் பயன்படுத்தியுள்ளார்.

Literature – பாஷையாகுமா என்ற சந்தேகம் எழுகின்றது.

இ. ஆண்மை என்ற சொல்லை சில இடங்களில் வ.உ.சி பயன்படுத்தி உள்ளார். அவை வலிந்து மொழிபெயர்க்கப்பட்டு உள்ளதாகத் தோன்றுகிறது.

Self – control is strength; Right thought is mastering

தன்னடக்கமே வலிமை; சரியான நினைப்பே ஆண்மை; இங்கு mastering என்பதற்கு வல்லமை, தலைமை போன்ற சொற்களைப் பயன்படுத்தி இருக்கலாம்.

By earnest self-examination strive to realize and not merely hold as a theory, that evil is a passing phase ….

நீங்கள் உங்களை ஆண்மையோடு ஆராய்ந்து பார்த்து துன்பமானது கழிந்து போகும் ஒரு நிலைமையென்றும் …

இங்கு ஆண்மை என்ற சொல்லாட்சி தேவையற்றதாகத் தோன்றுகிறது.

- சொல் x எதிர்ச்சொல் என்ற இரட்டைச் சொற்கள் மொழி பெயர்ப்பு பல இடங்களில் பொருள் புலப்பாட்டிற்கு உதவுவதாக உள்ளன.

Happy x Unhappy Deligent x Negligent

சுகிகள் x துக்கிகள் ஊக்கம் x தூக்கம்

Purity x impurity Material x Spritual

ஆன்மசுத்தி x மனத்தீமை ஜடவுலகம் x சித்துலகம்

Bondage : Unrest Freedom : Peace

பந்தம் : அமைதியின்மை மோட்சம் : அமைதி

இச்சொற்கள் ஒரே வாக்கியத்தில் பயின்றுள்ளன. Freedom என்ற சொல்லுக்கு சுவாதீனம் எனப் பயன்படுத்தியுள்ள நிலையில் இங்கு மோட்சம் எனப் பயன்படுத்தக் காரணம் அமைதியின்மையிலிருந்து அமைதி என்பது போல பந்தம் என்ற பாசக்கட்டிலிருந்து விடுபட்டால் மோட்சம் ஆகும்; அதனால் பந்தம் – மோட்சம் இணை சிறப்பாக உள்ளது.

அகமே புறம் நூலில் 'ஆன்ம அபிவிருத்திக்குப் பொதுத்தடை களாகவும் மிகச் சுலபமாக நீக்கத் தக்கவைகளாகவும் இருக்கின்ற பிசகான மனோநிலைமைகளை ஒழிப்பதும் குடும்பத்தையும் சுற்றத் தையும் பற்றிய ஒழுக்கங்களைக் கைக்கொள்வதும் முதற் சாதனங்கள்' என்ற மொழிபெயர்ப்பு உள்ளது. சாதனங்கள் என்ற சொல் Steps என்ற சொல்லின் மொழிபெயர்ப்பாகும்.

First step, easiest step, other steps என்று 'step' சொல்லாட்சி நூல் முழுவதும் உள்ளது. இதற்கு 'சாதனம்' என்ற மொழிபெயர்ப்பு 'கருவி' என்ற நிலையில் உளங்கொள்ளத்தக்கதாகவே உள்ளது.

- dream – காட்சி, vision – மனக்காட்சி என மொழிபெயர்க்கப் பட்டுள்ளது (மனம் போல வாழ்வு) The dreamers are the Saviours of the world மனக்காட்சியாளர் உலகத்தின் இரட்சகர் ஆவார். இங்கு dream என்பதற்குக் 'கனவு'தான் பொருத்தமான சொல்லாகத் தோன்றுகிறது அல்லது 'சொப்பனம்'. கனவு காண்பவர்களே உலகின் இரட்சகர்கள். சாந்திக்கு மார்க்கம் நூலில் dream என்பது சொப்பனம் என்று மொழிபெயர்க்கப்பட்டு உள்ளதை இங்கு கவனத்தில் கொள்ளலாம்.

How is insignificant were money seeking looks in comparison with a serene life – a life dwells in the ocean of Truth, beneath waves, beyond the reach of tempests, in the Eternal calm…

உண்மைக் கடலில் எதற்கும் சலிக்காமல் வாழும் நிதான வாழ்க்கை யோடு வெறும் தனார்ஜிதத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் தனார்ச்சிதம் எவ்வளவு அற்புதமாய்த் தோன்றுகிறது?

இங்கு ''அற்புதம்' என்ற சொல் தவறு; அது 'அற்பம்' என்று இருக்க வேண்டும். அச்சுப்பிழையாகவும் இருக்கலாம்.

சில சொற்கள் நேரடி மொழிபெயர்ப்பாக அகராதி அர்த்தம் போல இருக்கின்றன. எடுத்துக்காட்டு:

Men engage in heated controversies…

மனிதர் சூடான தர்க்கங்களைச் செய்து கொண்டு

வடசொற்கள் (அயற்சொற்கள்):

இந்த மொழிபெயர்ப்பு நூல்கள் மதம், தத்துவம், ஆன்மிகம் தொடர்புடைய கருத்துகளை உள்ளடக்கமாகக் கொண்ட நூல்கள் ஆதலால் வ.உ.சி கூறியுள்ளது போல வடசொற்கள் பயன்பாடு மலிந்துள்ளது.

- நியந்தா – கர்த்தா – போக்தா

Arbiter - Creator - Recipient

- Practice - அப்பியாசம் • necessary – ஆவசியகம்
- realize - பிரத்தியக்ஷம் • fearless – நிர்ப்பயம்
- situation - ஸ்தானம் • corruption - அசுசி
- partiality – பட்சபாதம் • focus – ஏகாக்கிரப்படுத்தல்
- prejudicies - துர்அபிமானங்கள் • Sacrifice – பரித்தியாகம்

நயமான தொடர்கள் / வாக்கியங்கள்:

வ.உ.சி.யின் மொழித்திறன் மெச்சத்தகுந்தது. அவர் புலவராக இருப்பதால் பல இடங்களில் மொழிபெயர்ப்பு கச்சிதமாகச் சுருக்கென்று அமைந்துள்ளது. எடுத்துக்காட்டுகளாக இந்தத் தொடர்களையும் வாக்கியங்களையும் கூறலாம்:

- The body is the servant of the mind.
  மனம் ஆண்டான்; சரீரம் அடிமை

இதைப் பெரும்பாலும் மனதின் அடிமையாக சரீரம் உள்ளது என்றே மொழிபெயர்ப்பார்கள். ஆனால் வ.உ.சி. இங்கு மனம், சரீரம் ஆகிய இரண்டையும் கர்த்தாவாக ஆக்கியுள்ளார்.

Man is Keeper of his heart; the watcher of his mind
மனிதன் தனது அகத்தின் அரசன்; தனது மனதின் காவலன்

To desire is to obtain, to aspire is to achieve.
அவாவுதலே அடைதலாம்; நாடுதலே நிறைவேறுதலாம்.

the outer is but the shadow and effect of the inner
புறம் அகத்தின் நிழல்; அகத்தின் காரியம்

Desire is as insatiable as the Ocean.
அவா சமுத்திரத்தைப் போல அடங்காதது

All outward lights are so many will-o'-the-wisps
புற விளக்குகளெல்லாம் கொள்ளிவாய்ப் பிசாசுகள்

மொழிபெயர்ப்பு உத்திகள்:

மேலே ஏற்கெனவே கூறியுள்ளது போன்று வ.உ.சி.யின் மொழி பெயர்ப்பு உத்திகளை ஒவ்வொன்றாக உதாரணத்துடன் காண்போம்.

- சுருக்குதல் – இங்கு வாக்கியம் அர்த்த அலகு ஆகின்றது. ஆங்கில வாக்கியத்தின் பொருள் நன்கு புலப்படுவதற்காகவும் கவிநயத் திற்காகவும் வ.உ.சி அந்த வாக்கியத்தை இரத்தினச் சுருக்கமாக மொழிபெயர்க்கின்றார்.

- விரித்தல் – ஆங்கில மொழியில் உள்ள உவமை, மரபுத்தொடர், வாக்கியம் ஆகியவற்றை இலக்கு மொழியில் மொழிபெயர்க்கும்போது விரித்துச் சொல்லுதல் வ.உ.சி.யின் உத்தியாக உள்ளது.

- விட்டுவிடுதல் – பொருட்குழப்பம் ஏற்படாதிருக்கும் பொருட்டும் தேவையில்லை என்ற இடங்களிலும் வ.உ.சி. சொற்களை அல்லது தொடரை சில இடங்களில் மொழிபெயர்க்காமல் விட்டுவிடுகின்றார்.

- சேர்த்தல் – பொருள் விளக்கத்திற்காகக் கூடுதலாகச் சொற்களைச் சேர்ப்பது முதல் தமிழ் நூல்களில் இருந்து செய்யுள்களை மேற்கோளாகக் காட்டுவது வரை இந்தச் சேர்த்தலில் அடங்கும்.

- Do not believe the world when it tells you that you must always attend to ‘number one’ first and to others afterwards

  ‘தனக்குப் போய்த் தானம்’ என்று உலகத்தார் சொல்வதை நீங்கள் நம்பாதீர்கள்’

- Self is the only prison that can even bind the Soul Truth is the only angel that can bid the gates unroll

  யான் ஆன்மாவை அடைக்கும் சிறையே
  கதவைத் திறக்கும் காவலன் கடவுளே...

- More Petitionary Prayer without Meditation is a body without a soul

  தியானமற்ற (எனக்கு இன்ன அருள்க என்று கேட்கும்) மனுப் பிரார்த்தனை உயிரற்ற உடம்பு. இங்கு petitionary prayer-க்கு விளக்கம் விரித்துரைக்கப்பட்டு உள்ளது.

- Self control – அது தன்னை (உடம்பையும் நினைப்பையும்) அடக்கியாளுதல்

- That exquisite poise of character which we call serenity is the last lesson of culture, the fruitage of the soul. நாம் சாந்தியென்று சொல்லும் ஒழுக்கமானது கல்வியின் கடைசிப் பாடமாகும். அதுவே வாழ்க்கையின் மலரும் ஆன்மாவின் கனியும் ஆகும்.

  இங்கு fruitage மலரும் கனியும் என விரிகின்றது.

No matter how poor you are there is room for self-sacrifice, for did not the widow put her all into the treasury?

Widow என்பது விதவை. ஆனால் இங்கு கூடுதலான தகவலை வ.உ.சி. மொழிபெயர்ப்பில் சேர்த்து தருகின்றார்:

நீங்கள் எவ்வளவு எளியவர்களாய் இருந்தாலும் பெரிய காரியமில்லை,

உங்கள் சுய நலத்தைப் பரித்தியாகம் செய்வதற்கு இடமுண்டு. ஏனெனில் அன்னவஸ்திரப் பணம் மாத்திரம் வாங்கிக் கொண்டிருக்கின்ற விதவை கூடத் தன் பணம் முழுவதையும் வட்டிக்குக் கொடுக்கிறாள்.

- Hear the Holy Krishna declare them, in Sir Edwin Arnold's beautiful rendering of the 'Bhagavad Gita'.

  அவற்றை ஸ்ரீகிருஷ்ணபகவான் 'பகவத் கீதையில்' பின்வருமாறு கூறுகிறார்.

- Meditation, in the Spiritual sense in which I am now using it, is the secret growth in spiritual life and knowledge

  தியானம் ஆத்மார்த்த வாழ்விற்கும் ஞானத்திற்கும் அடிப்படை

- Out from the Heart நூலில் ஒவ்வொரு சாதனத்துக்கும் விட்டுவிடக்கூடிய தீய ஒழுக்கங்களாக இரண்டு அல்லது மூன்று சொற்கள் தரப்பட்டுள்ளன. ஆனால் வ.உ.சி அவற்றை ஒரே சொல்லாக மொழிபெயர்த்து விடுகின்றார்.

  முதல் சாதனம்: Illness, Laziness or Indolence என்ற சொற்களுக்கு ஒரு சேர மொழிபெயர்ப்பு: சோம்பல்

  4*ஆம் சாதனம்*: Gossip and Idle Conversation பயனில் சொல்லல்

- He is like a shade-giving tree in a thirsty land, or a sheltering rock in a storm

  அவன் பாலைவனத்தில் நிழல்தரும் ஒரு மரத்தை ஒத்தவன் – இதில் sheltering rock in a storm என்ற தொடர் விடப்பட்டுள்ளது.

- அகமே புறம் நூலில் திருக்குறள், நாலடியார், பிரபுலிங்கலீலை, அற நெறிச்சாரம் போன்ற நூல்களில் இருந்து 13க்கும் மேற்பட்ட செய்யுள்களைச் சேர்த்துள்ளார். ஆனால் எடுத்தாளும் செய்யுளின் நூற்பெயரையோ ஆசிரியர் பெயரையோ சுட்டிக்காட்டவில்லை. தனிப்பட செய்யுளுக்கு அர்த்தமும் சொல்வதில்லை. செய்யுளின் முன்னும் பின்னும் உள்ள கருத்துகளின் சாரம்தான் எடுத்தாளப்படும் செய்யுளின் அர்த்தம் என்பது வாசகருக்குப் புரியும்.

  நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
  கெடுநீரார் காமக் கலன் *(திருக்குறள் 605)*

  நின்னை அறப்பெறு கிற்கிலேன் நன்னெஞ்சே!
  பின்னையான் யாரைப் பெறுகிற்பேன் – நின்னை
  அறப்பெறு கிற்பனேல் பெற்றேன்மற் றீண்டே
  துறக்கந் திறப்பதோர் தாள்! *(அறநெறிச்சாரம் 142)*

ஏனைய மூன்று நூல்களிலும்கூட மேற்கோள்களாகத் தமிழ்ச் செய்யுள்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.

- மரபுத்தொடர்கள் ஒன்றிரண்டு ஆங்கிலத்தில் இருந்தால் கூடுதலாக ஒன்றிரண்டை மொழிபெயர்ப்பில் சேர்த்துக் கொள்ளுதல்

Nothing can come from corn but corn

Nothing from nettles but nettles.

ஆங்கிலத்தில் இரண்டு மரபுத்தொடர்கள் இருக்க இவற்றின் மொழிபெயர்ப்பில் மூன்று மரபுத் தொடர்கள் இருக்கின்றன.

- விரை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா?
  எட்டியிலே கட்டுமாம்பழம் உண்ணலாமா?

  தினை விதைப்பவன் தினை அறுப்பதும்
  வினை விதைப்பவன் வினை அறுப்பதும்.

v) மாற்றுதல் – முதனூல் மொழியில் கூறப்பட்டுள்ள கலாச்சாரம் தொடர்பான விடயங்களை மொழிபெயர்ப்பில் தமிழ்க் கலாசாரப்படுத்துதல் மற்றும் சூழலுக்கு ஏற்ப கருத்துகளை மாற்றுதல் ஆகியன இந்தப் பிரிவில் அடங்கும்.

- அகமே புறம் நூலில் இருந்து இந்த உதாரணம் – Mechanic என்ற சொல்லை சிற்பி எனவும் Principles of Mechanics என்பதை சிற்ப தத்துவங்கள் எனவும் மொழிபெயர்த்துள்ளார். இயந்திரக் கைவினைஞர், இயக்கவியல் கோட்பாடுகள் என ஏன் மொழிபெயர்க்கவில்லை? வாசகர்களுக்குப் பரவலாக அறிமுகமான சிற்பி – சிற்பம் என்பதை வ.உ.சி இங்கு எடுத்துக் கொள்கின்றார். முன்னோட்டமாக இதற்கு ஒரு முந்தைய பக்கத்தில் artisan என்ற சொல்லை சிற்பி என்றே மொழிபெயர்த்துள்ளார்.

- முதனூல்களில் உள்ள ஆங்கிலச் செய்யுள்களை தமிழ் இலக்கிய மரபிற்கேற்ப செய்யுள்களாகவே மொழிபெயர்த்துள்ளார்.

வெண்பா, ஆசிரியப்பா யாப்புகளில் மொழிபெயர்ப்பு செய்யுள்கள் அமைந்துள்ளன. சான்றாக வலிமைக்கு மார்க்கம் நூலில் இருந்து எடுத்துக்காட்டு:

It is in loving, not in being loved
The heart is blessed
It is in giving, not in seeking gifts,
We find our quest.

அன்புசெய்த லால்உள்ளம் ஆனந்தம் எய்துமல்லால்,
அன்பு செய்யப்படாமல் அஃதெய்தா – தின்புயிர்கட்
கீதலினால் உண்டல்லால் ஈயப் படுதலினால்
மாதே! இலையணுவும் மற்று.

- வலிமைக்கு மார்க்கம் நூலில் ஜேம்ஸ் ஆலன் தேவதைக் கதைகள் குறித்து கூறுமிடத்தில், அது நம் தேசத்தாருக்கு அறிமுகம் இல்லை எனக்கூறி வ.உ.சி அதை பாரதக் கதையாக மாற்றி விடுகின்றார். இளவரசி, கொடுமைக்கு ஆளாதல், அரக்கன் அவளைத் தூக்கிச் செல்லுதல், இளவரசன் போரிட்டு அரக்கனைக் கொன்று இளவரசியை மீட்டல், திருமணம் போன்ற சாகசக் கதைகளை இளம்பருவம் முதல் கேட்டு வந்துள்ளோம் என்ற இடத்தில் வ.உ.சி பாரதக் கதையைப் பொருத்துகின்றார்.

‘பாரதக் கதையில் துரியோதனன் பாண்டவரைக் கொல்வதற்காகச் செய்த பல வஞ்சகங்களினினும் அவர்கள் தப்பிப் பிழைத்ததை நாம் பாலியர்களாயிருந்த காலத்தில் எவ்வளவு வாஞ்சையோடு வாசித்தோம்…’

எந்த அளவிற்கு தன்வயப்படுத்தல், தமிழ்ப்படுத்தல் இருந்தால், மூல நூலாசிரியரான ஜேம்ஸ் ஆலனை நம்மைச் சேர்ந்தவராக எடுத்துக்கொண்டு இவ்வாறு வ.உ.சி மொழிபெயர்த்திருப்பார்?

According to tradition, there once lived in India…

இதன் மொழிபெயர்ப்பு இந்தியாவில் ஒரு காலத்தில்… என்றுதான் இருக்க வேண்டும். ஆனால் வ.உ.சி. இதனை, ‘நமது தேசத்தில் ஒரு காலத்தில் அநேக தத்துவ ஞானிகள் இருந்ததாகவும்…’

என மொழிபெயர்த்துள்ளார். நமது தேசம் என்று ஜேம்ஸ் ஆலன் கூறுவது போல மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது.

நிறைவுரை:

தானே ஒரு எழுத்தாளராகவும் புலவராகவும் இருப்பதனால் வ.உ.சி. தன் மொழிபெயர்ப்பை இலக்கு மொழியின் (தமிழின்) வாசகர்களை மையமாக மனதில் கொண்டு செய்துள்ளார்.

வாசகர்களுக்குப் புரிய வேண்டும், புரிந்து அவர்கள் இக் கருத்துகளை ஏற்று கடைப்பிடிக்க வேண்டும் என்ற நோக்கில்தான், இம்மொழிபெயர்ப்புகள் செய்யப்பட்டுள்ளன. முன்னரே சுட்டிக் காட்டியது போல இது கட்டற்ற மொழிபெயர்ப்பாகும். தனது சொந்தப் பார்வையையும் உணர்வு நிலைகளையும் மொழிபெயர்ப்பில் வெளிப்படுத்தி உள்ளார்.

மூல மொழிக்கும் இலக்கு மொழிக்கும் கறரான பரிமாற்றம் முக்கியமானது என்று வ.உ.சி. கருதவில்லை. இவரின் மொழிபெயர்ப்பு என்பது உரையாசிரியர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் என்ற இரண்டு நிலைகளையும் உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உதவிய நூல்கள்

1. வ.உ.சிதம்பரம்பிள்ளை, ‘அகமே புறம்’, புரோகிரஸிவ் பிரஸ், சென்னை, 1916 (இரண்டாம் பதிப்பு)
2. வ.உ.சிதம்பரம்பிள்ளை, ‘மெய்யறிவு, மெய்யறம், வலிமைக்கு மார்க்கம், சாந்திக்கு மார்க்கம்’, வ.உ.சி.நூலகம்,சென்னை, 2021
3. வ.உ.சிதம்பரம்பிள்ளை,’மனம்போலவாழ்வு|வ.வ.உ.சி கண்ட பாரதி|அகமே புறம்’, வ.உ.சி.நூலகம்,சென்னை, 2021
4. The Complete Works of James Allen: 1864-1912. Online access from https://share.google/NKqZpMpZ3v1rFGAar

55

மனம் போல வாழ்வு

முனைவர் நா. அமுதா தேவி
உதவிப் பேராசிரியர்,
இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி, கோவை.

ஆய்வுச்சுருக்கம்:

மனித மனம் ஆசைகளாலும் எண்ணங்களாலும் நிறைந்து இருக்கின்றது. பல நேரங்களில் இந்த எண்ணங்கள் ஆக்கப்பூர்வமான வழிகளிலும் சில நேரம் மோசமான பின்விளைவுகளுக்கும் காரணமாக அமைந்துவிடுகின்றன. எப்பொழுதும் நேர்மறையாகச் சிந்திப்பவர்களுக்கு எல்லாக் காலச் சூழலையும் எதிர்கொள்ளக்கூடிய மன தைரியம் உருவாகிவிடுகிறது.

நம்மில் வெகுசிலரே எது வந்தாலும் ஏற்றுக்கொள்ளும் மனநிலையுடன் வாழப்பழகியிருக்கிறார்கள். தன்னைத் தானே சுயசமாதானம் செய்து கொண்டு எது வந்தாலும் ஏற்று வாழப் பழகிக் கொண்டிருக்கிறார்கள். வாழ்வியல் அனுபவங்களை ஏற்றுக்கொண்டு வாழப் பழகியவர்கள் வெகுசிலரே... தன்னைத் தானே பக்குவப்படுத்திக் கொண்ட சிதம்பரனார் ஜேம்ஸ் ஆலன் நூலில் நான் கற்று உணர்ந்த கருத்தினை மனம் போல வாழ்வு என மொழிபெயர்த்துக் கொடுத்துள்ளார். மனம் பக்குவம் அடைய நாம் செய்ய வேண்டிய வழிமுறையாக இதனைக் கருதுதல் வேண்டும். எந்த ஒரு இடத்திலும் ஆங்கில மொழியின் தாக்கம் இல்லாமல் சீரான நடையில் இந்நூல் வடிவமைக்கப் பட்டு இருப்பது எழுத்தில் ஆசிரியருக்கு இருந்த ஆர்வத்தைப் புலப் படுத்துகிறது

திறவுச் சொற்கள்: மனம் - வ.உ.சி - ஜேம்ஸ் ஆலன் - மொழிபெயர்ப்பு - வாழ்க்கை நெறிகள்

முன்னுரை:

மனம் சரியாக இருக்கும் பொழுது நம்முடைய சிந்தனைகளும் செயல்பாடுகளும் வாழ்வியல் ஒழுக்க முறைகளும் சரியான பாதையில் நம்மை வழி நடத்துகிறது என்பதனை வ.உ.சி அவர்கள் மனம் போல வாழ்வு என்ற நூலின் கட்டுரைகளின் வழியாகப் புலப்படுத்தி இருக்கிறார். மனிதன் தன்னம்பிக்கையோடும் நேர்மறைச் சிந்தனையுடனும் இருக்க வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

சூழல்களுக்கு மனிதன் கட்டுப்படாமல் மனிதன் சூழல்களைக் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைக்கும் விதத்தினை ஆய்வதாக இக்கட்டுரையின் பொருண்மை அமைகின்றது.

ஜேம்ஸ் ஆலன் - அனுபவ நூல்:

தான் கற்று உணர்ந்ததை தான் மட்டும் வைத்துக் கொள்ளாமல் அந்த நூலின் சாரத்தைத் தாய் மொழியின் வாயிலாக மூல நூலின் சுவை குன்றாதபடியும், இதுதான் மூலநூல் என்று நம்மை உணர வைக்கும் படியாகவும் கட்டுரைகளின் கருத்துக்கள் மிகத் துல்லிய மாக வடிவமைத்திருக்கிறார் சிதம்பரனார். ஜேம்ஸ் ஆலன் என்பவரின் ஆஸ் எ மேன் திங்கெத் (As a man thinketh) என்ற நூலை மனம் போல வாழ்வு என்று தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். ஆங்கிலேயருக்கு எதிராக வீரமுழக்கம் இட்டு எல்லாவற்றையும் இழந்து அடிமை போல நடத்தப்பட்டு கோவையில் சிறைவாசியாக இருந்த பொழுது அந்த துயரிலும் தன்னுடைய மன ஊக்கத்தைத் தளரவிடாமல் இந்த நூலினை மொழிபெயர்த்திருக்கிறார்.

ஜேம்ஸ் ஆலன் அறிமுகம்:

ஜேம்ஸ் ஆலன் இங்கிலாந்தில் பிறந்தவர்.தன்னுடைய சிந்தனை களால் மாறுபட்ட நிலையில் சூழலை அணுகுவதில் தனித்திறம் பெற்றவர். பிரிட்டிஷ் தத்துவ எழுத்தாளராகப் பலராலும் புகழ்பெற்ற சிறப்பிற்கு உரியவர். இவருடைய நூல்கள் மனவளர்ச்சி, சுயவலிமை ஆகியவற்றைத் தூண்டுவதில் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது. தான் வாழ்ந்த காலத்தில் தன்னுடைய படைப்புகள் பேசப்படாமல் அவர்கள் காலத்திற்குப் பிறகு அவர்களுடைய படைப்புகளைக் கொண்டாடுவதில் காலம் சில நல்ல எழுத்தாளர்களை இழந்து விடுகிறது. அவ்வகையில் தன் மனம் விரும்பும் எழுத்தாளர்களில் ஒருவரான ஜேம்ஸ் ஆலன் அவர்களின் புத்தகத்தை மனம் போல வாழ்வு என மொழிபெயர்த்து தமிழில் அதன் மூலச் சுவை மாறாமல் சிதம்பரனார் நமக்குப் படைத்தது தமிழ் கூறும் நல்லுலகத்திற்குத் தன்னை ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளராகக் காட்டுகிறார்.

நினைப்பும் ஒழுக்கமும்:

மண்ணுள் மறைந்து கிடக்கும் விதை வளர்ந்து பல படிநிலைகளில் பலருக்குப் பயன் தருகிறதோ அதுபோல எச் செயலையும் பிறருக்குச் செய்கின்ற பொழுது மனதாரச் செய்தல் வேண்டும் எதிர்பார்ப்பு இல்லாமல் நல்ல சிந்தனைகளால் மனிதனுடைய மனம் செயல்படும்பொழுது மனிதன் தெய்வ நிலைக்கு உயர்த்தப்படுகிறான்.

நம்முடைய மனதில் உருவாக்கும் கெட்ட சிந்தனைகள் தீய பாதைக்கு வழி வகுத்து விடும் என்ற சிந்தனை மனித ஒழுக்கத்தில் அவருக்கு இருந்த நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. சுரங்கத்தின் ஆழத்தில் நாம் கவனமாகத் தேடும்பொழுது விலை மதிக்க முடியாத பல பொருட்கள் நமக்குக் கிடைப்பது போல மனிதன் தனது ஆழ்மனதில் தனது தேடுதலைத் துவங்கும் பொழுது முதிர்ச்சியான அனுபவங்களும் வாழ்க்கையின் தத்துவ நினைவுகளும் நல்ல சிந்தனைகள் தருவதைச் சுட்டுகின்றார்.

'தட்டுகிறவனுக்கு கதவு திறக்கப்படும்; தேடுகிறவன் சுகம் காண்பான்' (மனம் போல வாழ்வு – பக்20)என்ற உண்மை இந்த செய்தியில் பொருத்தமாக அமைகிறது. மனிதன் பயிற்சி,விடாமுயற்சி இவற்றைத் தொடர்ந்து தன்னுடைய வாழ்க்கையில் பின்பற்றும் பொழுது ஞானம் என்ற நிலைக்குச் செல்ல வழி வகுத்து விடுகிறது.

நினைப்பும் நிலையும்.:

வள்ளுவன் 'எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர் திண்ணியராகப் பெறின் (குறள்666)' எனப்பதிவு செய்திருப்பது போல நம்முடைய எண்ணங்கள் உயர்வாக இருக்கின்ற பொழுது அந்த உயர்வான சிந்தனையே நம்மை உயர்ந்த நிலைக்கு இட்டுச்செல்லும் என்ற விதையை நம்முள் விதைத்திருக்கிறார். தோட்டத்தில் பல்வேறு வகையான பயன் தரக்கூடிய செடிகளை நாம் நட்டு வைப்பதைப் போல நம்முடைய மனதில் பயனற்ற நினைப்புகளையும் குற்ற உணர்வுகளையும் நீக்கிவிட்டுப் பிறருக்குப் பயன்படும் வகையிலும் நம்மைச் செழுமைப்படுத்திக் கொள்ளும் வகையிலும் நல்ல கருத்துக்களை மனதில் நாம் விதைத்துக் கொள்ள வேண்டும்.

வறுமை நிலையில் உள்ள ஒருவன் தன்னுடைய வறுமை நிலையிலிருந்து மீண்டு வரத் தன்னுடைய எஜமானனை ஏமாற்றாமல் நியாயமான முறையில் உழைத்துச் செல்வத்திற்கு அதிபதி ஆகிறான். சரியான வழியில் அவனுக்குக் கிடைக்கின்ற செல்வமே எவ்விதமான குற்ற உணர்ச்சியும் இல்லாமல் உயர்வான நிலைக்கு வழிவகுக்கும் என்பதை உணர்த்துகிறார். வறுமையை ஒழிப்பதற்குத் தகுதியற்ற முறையில் வஞ்சகத்தையும் சோம்பல் உணர்வையும் இழிவான சிந்தனைகளையும் மனதில் கொண்டு வறுமையை புறந்தள்ள வேண்டும் என்று நினைத்திருந்தால் அதனால் கிடைக்கக்கூடிய செல்வம் ஒருபொழுதும் அவனுக்கு ஆரோக்கியத்தையும் மன நிம்மதியையும் கொடுக்காது .

நம்முடைய எண்ணங்களின் விளைவே நம்முடைய நிலையை தீர்மானிப்பதற்கான முக்கிய காரணியாக அமைந்துவிடும் என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. மனம் விசித்திரங்களும் ஆச்சரியங்களும் நிறைந்தது. நல்ல சிந்தனைகள், மகிழ்ச்சி, இன்பம், ஞானம், பரிசுத்தம் என்ற நன்மைகளை நம் ஆன்மாவுக்குள் வடிவமைத்துவிட்டு அந்த சிந்தனையைப் பிறருக்கும் நாம் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு நிமிடமும் ஆச்சரியங்களும் அற்புதங்களும் நிறைந்து இருக்கின்ற இந்த மனித வாழ்க்கையில் மணிக்கு ஒரு முறை நிறம் மாறும் விலங்கினங்களினுடைய இயல்பைப் போல அல்லாமல் எப்பொழுதும் தம்முடைய உருவத்தை உள்ளபடி காட்டும் கண்ணாடியைப் போல நாம் நம்முடைய மனதைப் பரிசுத்தமாக வைத்துக் கொண்டால் நம்முடைய நினைவுகளின் பிரதிபலிப்பே தம்முடைய வாழ்க்கை நிலையை உயர்த்துகிறது.

நினைப்பும் சரீரமும் ஆரோக்கியமும்:

நாம் மகிழ்ச்சியாக இருக்கும் பொழுது நம் உடல் மிகுந்த உற்சாகமாகிறது. நம்முடைய முகம் மேலும் அழகாக மாறிவிடுகிறது. இவ்வுலகில் மகிழ்ச்சியான மனிதனே அழகான மனிதனாகக் காட்சியளிக்கின்றான். நமக்கு வியாதிகள் ஏற்படும் பொழுது நாம் மிகவும் சோர்வுக்கு ஆளாகி இவ்வுலகில் வெறுக்கத்தக்க மனிதர்களில் நாமும் ஒருவராக நம்மை நாமே எண்ணிக்கொண்டு விடுகிறோம். இங்கே மனிதன் எவ்வகையிலும் தனக்கு வரக்கூடிய இன்பத்தையும் துன்பத்தையும் தானே அனுபவிக்க வேண்டிய நிலைமைக்குக் கட்டப்பட்டிருக்கிறான். அதை எவ்வாறு கடந்து வருவது என்பதுதான் மனிதன் இந்த வாழ்க்கையில் எதிர்கொள்ள வேண்டிய முக்கியமான சவாலாக இருக்கிறது.

உலகில் இருக்கிற எல்லாப் பிரச்சினைகளும் வேறு வேறு வடிவங் களில் தம்மை ஆட்கொண்ட பொழுதிலும் நான் நன்றாக இருக்கிறேன் என்ற கூற்றை முன்வைத்து செல்ல வேண்டும். வாழ்க்கை என்ற கேணியை நாம் எப்பொழுதும் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். எனவே நல்ல எண்ணங்களை அதனுள் விதைக்கும் பொழுது அந்த நல்ல எண்ணங்களே ஊற்றாக நம்மைச் சுத்தப்படுத்தி நம்மைச் சுற்றி உள்ளவர்களுக்கும் நன்மை செய்ய ஏதுவாக நம்மை வழிநடத்தும்.

நம் உடலை நாம் நேசிப்பது போல நம்முடைய மனதை நாம் கட்டாயம் பாதுகாக்க வேண்டும். பிறர் மீது கோபம் கொண்டு நம்முடைய முகக்குறியை மாற்றும் பொழுது நம்முடைய ஆரோக்கியத்தின் விலைமதிக்க முடியாத பல அற்புதமான நேரத்தை இழந்து விடுகிறோம். யாரோ செய்கின்ற தவறுகளுக்காக நம்முடைய ஆரோக்கியத்தை நாம் ஒருபொழுதும் இழந்து விடக்கூடாது எனவே காற்றும் வெளிச்சமும் எப்படி இயல்பாக ஒரு இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்குப் பரவுகிறதோ அதுபோல இன்பமான நினைவுகளும் துன்பமான நினைவுகளும் மிக வேகமாக நம்மைச் சுற்றியுள்ளவர்களால் நமக்குப் பரவுகிறது.

அடிப்படையில் மனிதன் தன்னுடைய உடலைச் சீர்படுத்த வேண்டும் என்று உடலை மட்டும் பேணிப் பாதுகாக்காமல் தன்னுடைய சிந்தனைகளோடு சேர்ந்து தன்னுடைய உடல் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்த வேண்டும். மனம் தூய்மையாக இருக்கும் பொழுது உடலும் சீராக அமைந்து விடும் என்ற கருத்தில் வ.உ.சிதம்பரனார் உறுதியாக இருக்கிறார்.

நினைப்பும் காரியமும்:

வாழ்வில் எல்லோருக்கும் லட்சியம் அவசியம். ஒரு மனிதனை ஆபத்து தாக்காது இருக்க வேண்டும் எனறால் அவன் வாழ்க்கையில் நிச்சயம் ஏதாவது ஒரு லட்சியம் உடையவனாக இருத்தல் வேண்டும் எல்லா மனிதர்களுக்குள்ளும் பலம், பலவீனம் என்ற இரண்டு பக்கங்களும்

குடி கொண்டிருக்கும். எது நம்முடைய பலமோ அந்த பலத்தைப் பன்மடங்காகப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

எது நம் பலவீனமோ அந்த பலவீனத்தை நம்முடைய பலம் கொண்டு வெற்றிபெற நாம் முயற்சி செய்தல் வேண்டும். எந்த ஒரு நிலையிலும் நம்முடைய செயலை முழுமையாக நிறைவடைவதற்கு முன்பாக அந்தச் செயலுக்குக் காட்சி வடிவம் கொடுத்து இந்த நிகழ்வு இவ்வாறு முடியும் என்றால் நான் இப்படியாக இருப்பேன் என்று நல்ல முறையில் நம்முடைய சிந்தனைகளை வடிவமைத்து கொள்ளுதல் வேண்டும்.

இதற்கு உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்கின்றார் வள்ளுவர் தோல்வி வேண்டாம் என்று நினைப்பவர்கள் தொடர்ந்து வெற்றிக்காகப் போராடிக் கொண்டே இருக்க வேண்டும் கிடைத்த வெற்றியே போதும் என்று நினைப்பவர்கள் வெற்றியை தக்க வைத்துக் கொள்ளவும் போராடிக் கொண்டே இருக்க வேண்டும்.

நினைப்பும் காரிய சித்தியும்:

மனிதன் தன்னுடைய சமநிலையில் இருந்து பிறழும் பொழுது எல்லா நிலைகளிலும் இருந்து பின்வாங்க நேரிடுகிறது. தனக்கு வரும் துன்பங்கள் எல்லாவற்றிற்கும் அவனே பொறுப்பாளி. மனிதன் இயல்பாகவே இவ்வுலகில் பலமான ஒருவரின் உதவியை நாடிச் செல்வர். ஒருவன் பலம் உடையவனாக இருக்கிறான் என்பதை அவனுடைய தோற்றமும் செயல்களும் சொல்லும் சிந்தனை ஆற்றலும் நமக்கு வெளிப்படுத்துகிறது.

தன்னைத்தானே செழுமைப்படுத்திக் கொள்ளும் ஆற்று நீர் போல நாமும் நாம் நம்மை செழுமைப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் தன் வாழ்க்கையை எப்பொழுதும் பிறர் முடிவுகளுக்குக் கட்டுப்படுத்திடாமல் நம்முடைய நிலையை உயர்த்திட நாம் எப்பொழுதும் சீரிய முடிவுகளை எடுத்திடல் வேண்டும். சிற்றின்பத்தை அடக்கியேதான் நாம் பேரின்பத்தைக் காணுகின்ற வழியை அடைந்திட முடியும்.

எந்த ஒரு செயலும் துன்பமடையாமல் நம்மை வந்து சேராது. எனவே ஒரு செயலை சரிப்படுத்த எவ்வளவு துன்பம் நாம் அடைகிறோமோ அவ்வளவுக்கு நமக்கு வெற்றி கிடைக்கும் என்பது உறுதி. பேராசைக்காரன், அயோக்கியன், பாவம் செய்கிறவன் இவர்களுக்கு இவ்வுலகம் அருள் செய்வதைப் போலப் புண்ணியம் செய்கிறவர்களுக்கும் இந்த உலகம் அருள் செய்து கொண்டு இருக்கின்றது.

தன்னம்பிக்கை, துணிவு, தூய்மை, நடுவுநிலைமை ஆகியவை மனிதனை எப்பொழுதும் உயர்த்துகிறது. சிற்றின்பம், சோம்பல், அசுத்தம், அநீதி, மனமயக்கம் ஆகியவை மனிதனைத் தாழ்த்தி விடுகிறது. வெற்றியின் இடம் சிறிதோ பெரிதோ நம் முயற்சியின் அளவைப் பொறுத்து வெற்றிகளும் தோல்விகளும் நம்மிடமே சாரும். வாழ்வில் இன்பம் பெற வேண்டும் என்றால் நாம் நிச்சயம் துன்பமடைதல் வேண்டும் என்ற மனப்பக்குவத்தை இக்கட்டுரையின் வழியாக ஆசிரியர் விதைத்துச் செல்கிறார்.

மனோ திருஷ்டிகளும் மனோ சிருஷ்டிகளும்:

எண்ணங்கள் உயர்வாக இருக்கும் பொழுது நம் சிந்தனைகள் நம்மை உயர்வான நிலைக்கு மாற்றும் என்ற உயரிய கருத்தோடு நாம் செயல்படல் வேண்டும். கொலம்பஸ் கோப்பர் நிக்கஸ் இருவரும் உலகின் மாறுபட்ட சக்தி வடிவத்தை வேறு வேறு வடிவில் தன் மனதில் புகுத்தி சிந்தனைகளை வளர்த்துக் கொண்டு இருந்தவர்கள்.

புத்தர் தனக்கான புதிய உலகில் பயணிக்கப் பரிபூரணமான அமைதி யான வாழ்வு முறையைத் தேர்ந்தெடுத்தார். ஆலமரத்தின் விதையில் பல்லாயிரம் மரங்கள் ஒழிந்து கிடப்பது போல பறவையின் முட்டைக்குள் இன்னொரு உயிர் வெளிவர காத்துக் கொண்டிருக்கும்.

தோல்வி கிடைத்தால் கடந்து போகும் நாம், ஒருவனுக்கு வெற்றி கிடைத்தால் மட்டும் அது அவனின் அதிர்ஷ்டம் என்று அவனை விமர்சனம் செய்கிறோம்.

அதிர்ஷ்டம் என்று எதுவும் இல்லை. மனிதன் ஒரு காரியத்தைத் திறம்படச் செய்து முடிக்க அவன் எவ்வளவு முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறான் என்பது மிகவும் அவசியமான ஒன்று. சிந்தனைகளை விரிவு செய்து மனதினால் நாம் செய்யும் காரியங்கள் யாவும் வெற்றியில் முடியும் என்று கருதி நம் செயலை நாம் தொடங்க வேண்டும் என்பதனை இக்கட்டுரையின் வாயிலாக சிதம்பரனார் நமக்கு வலியுறுத்துகிறார்.

சாந்தி:

தன் வாழ்வின் அழகிய ஆபரணமாக ஞானத்தைக் கருதுகிறான் மனிதன். அமைதியும் உறுதியும் இருந்தால் நம்மை எல்லோரும் அன்பால் பாராட்டுவார்கள். அமைதியான மனநிலையில் உள்ளவன் பாலைவனத்தில் உள்ள நிழல் தரும் மரம் போன்றவன் எல்லோராலும் அவன் விரும்பப்படுவான். மழை, வெயில் என்ற எந்த நிலை வந்தாலும் சமநிலை உள்ளவர்களின் மனநிலை எவ்வகையிலும் பாதிக்காது. அதுபோல அவர்களிடம் இனிமையான முகமும் நிதானமும் எப்பொழுதும் குடிகொண்டே இருக்கும். வாழ்வில் தடைகள் பல கடந்தால்தான் நாம் வெற்றி பெற முடியும் என்பதை இந்நூலின் வழியாக ஆசிரியர் பல இடங்களில் வலியுறுத்திச் சொல்லி இருக்கிறார்.

வாழ்க்கை எனும் கரையைக் கடக்கப் போராடப் பழகிக் கொள்ளுதல் வேண்டும். தன்னடக்கத்துடன் தனக்குக் கிடைத்திருக்கிற வாழ்க்கையினைச் சிறப்பான முறையில் வாழக்கற்றுக் கொள்ளுதல் வேண்டும். நம்மைப் பல நிலைகளில் பக்குவப்படுத்தி செழுமைப்படுத்திக் கொள்ளும் பொழுது உயர்ந்த நிலைக்கு நம்மால் செல்ல முடியும் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக வழிகாட்டி இருக்கிறார் சிதம்பரனார்

நிறைவுரை:

ஆழ்கடல் எப்பொழுதும் அமைதியும் ஆச்சரியமும் நிறைந்தது அதுபோல மனம் ஆழமான சிந்தனைகளால் அமைதியான நெறிப்

படுத்தலோடு இருக்கும்பொழுது இவ்வுலகில் தன்னைத்தானே உணர்ந்து கொண்டு வெற்றியாளராக வலம் வர இக்கருத்துக்கள் பெரும் உதவி செய்கின்றன.

எப்பொழுதும் பிறர் மீது குற்றங்களையும் குறைகளையும் சுமத்திக் கொண்டே இருக்காமல் அந்தக் குறைகளை நிவர்த்தி செய்து வெற்றி யாளர்களாக நாம் நம்மை அடையாளப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

தேவையற்ற இடங்களில் தேவையில்லாத சொற்களைப் பயன் படுத்தும் பொழுதும் பிறர் மீது தேவையில்லாமல் நாம் கோபம் கொள்ளும் பொழுதும் அவச்சொற்களைப் பேசும் பொழுதும் இயல்பு நிலையில் இருந்து நாம் பல இடங்களில் மாறி விடுகிறோம்.

இன்பமோ துன்பமோ அதை ஏற்று வாழப் பழகிக் கொள்ளுதல் வேண்டும். எத்தனை கொடுமைகளுக்கு இடையில் இவ்வளவு அரிய ஒரு நூலை மொழிபெயர்த்து மனித மனம் அமைதிக்கும் இன்பத்திற்கும் ஆனந்தத்திற்கும் உள்ள வேறுபாடுகளை நுட்பமாக உணர்த்தி அதை வாழ்க்கையில் பின்பற்றுவதால் ஏற்படக்கூடிய இன்பங்களை உயர்ந்த மனிதர்களின் வாழ்க்கை நிகழ்வுகளை உதாரணமாக எடுத்துச் சொல்லி மிக எளிமையான நடை ஓட்டத்தோடு இந்நூலை ஆசிரியர் வடிவமைத்திருக்கிறார்.

முதல் முறை இந்நூலை வாசிக்கும் பொழுது இந்த நூல் மூல நூலாகவே இருந்துவிடக் கூடாதா என்ற ஆசையும் கூட நம் மனத்தில் எழுகிறது. வ.உ.சிதம்பரனார் அவர்களின் அறிவாற்றலுக்கு கிடைத்த பரிசாகவே நாம் இக்கருத்துக்களை எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழ் கூறும் நல் உலகம் இருக்கும் வரையில் இது போன்ற எழுத்துக்களால் இத்தலைவர்கள் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

துணை நூல்கள்:

1. மனம் போல வாழ்வு - சிதம்பரம் பிள்ளை, வ.உ., இந்தியா பிரிண்டிங் வொர்க்ஸ் அச்சகம், சென்னை, 1916.
2. திருக்குறள் - மு வரதராசனர், கழக வெளியீடு, 1958.
3. இந்திய இலக்கியச் சிற்பிகள் – வ.உ. சிதம்பரனார், மா.ரா. அரசு, சாகித்திய அகாதெமி, புது தில்லி, 2023.

56

வ.உ.சி.யின் 'அகமே புறம்' நூலில் மொழிபெயர்ப்பு நுட்பங்களும் எளிமையாக்கமும்

முனைவர் க. பழனிவேல்
உதவிப் பேராசிரியர், தமிழ்ப் படைப்பாக்கத்துறை,
குமரகுரு பன்முகக் கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

முன்னுரை:

என் மனமும் என் உடம்பும் என் சுகமும் என் அறமும்
என் மனையும் என் மகவும் என் பொருளும் – என் மதியும்
குன்றிடினும் யான்குன்றேன் கூற்றுவனே வந்தாலும்
வென்றிடுவேன் காலால் மிதித்து - வ.உ.சி.

எத்தகு ஆற்றலும் மனவுறுதியும் இருந்திருந்தால் வ.உ.சி. இவ்வாறு உரைத்திருப்பார்? அவரது உறுதியும் துணிச்சலும் ஆற்றலும் இன்றைய தலைமுறையினர்க்கு அவர் விட்டுச் சென்ற ஆகச் சிறந்த செல்வங்கள். நாடு, மொழி, மக்கள், அறம், அறிவு ஆகியவற்றின்மீது அவர் கொண்டிருந்த அளவற்ற பற்று நமக்கும் எதிர்காலத்தவருக்கும் வியப்பிற்குரியன. போற்றுதலுக்குரிய வ.உ.சி., 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்', 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும்; கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்ற மகாகவி பாரதியின் வாக்கினைப் போற்றும் வகையில் இங்கிலாந்து நாட்டின் மெய்யியலாளரும் கவிஞருமான ஜேம்ஸ் ஆலனின் Out from the Heart என்ற நூலை அகமே புறம் என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். அவரது மொழிபெயர்ப்பின் நுட்பங்களையும் எளிமையாக்கத்தையும் மற்றும் சிறப்புகளையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரையின் பொருண்மை அமைகின்றது.

ஜேம்ஸ் ஆலனும் வ.உ.சிதம்பரனாரும்

வ.உ.சிதம்பரனாரின் மொழிபெயர்ப்பு நூல்கள் நான்கு. அந்நான்கும் ஜேம்ஸ் ஆலனின் ஆங்கில நூல்களே. அவை,

- 1908 - மனம் போல் வாழ்வு (As a Man Thinketh)
- 1914 - அகமே புறம் (Out from the Heart)
- 1916 - வலிமைக்கு மார்க்கம் (The Path of Prosperity - From Poverty to Power என்ற நூலின் முதல் பகுதி)
- 1939 - சாந்திக்கு மார்க்கம் (The Way of Peace)

1905-இலேயே ஜேம்ஸ் ஆலனுடைய நூல்களை மொழிபெயர்க்க வேண்டும் என்கிற எண்ணம் வ.உ.சி. க்கு இருந்ததாம். ஆனால்

அவ்வெண்ணம் 1908-இல் அவர் சிறையில் இருந்தபோது தான் நிறைவேறியுள்ளது. உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த சங்கர நாயர் என்பவர் நீதிபதி பின்ஹேயின் தீர்ப்பிற்கு இடைக்காலத்தடை விதித்ததால் வ.உ.சி.யால் சிறைக்குள்ளே படிக்கவும் எழுதவும் முடிந்தது.

அவர் ஜேம்ஸ் ஆலனுடைய நூல்களை மட்டுமே மொழிபெயர்த் திருப்பதற்கான காரணம் ஜேம்ஸ் ஆலனின் கருத்தியல்தான். ஜேம்ஸ் ஆலன், இங்கிலாந்தில் 1864-இல் பிறந்தவர். இளம் வயதிலேயே அதிபுத்திசாலியாக இருந்தவர். வாலிப வயதிலேயே தந்தையை இழந்து குடும்பப் பொறுப்பை ஏற்றவர். ஆங்கிலேயராக இருந்தாலும் புலால் மாமிச உணவுகளை உண்பதில்லை மது அருந்துவதில்லை. இது போன்ற பழக்கங்கள் இல்லாதவராக இருந்தார். நமது பாரத தேச நூல்கள் மீதும், மெய்யியல் அதாவது தத்துவவியல் மீதும் அளவுக்கு அதிகமான ஈர்ப்பு இருந்துள்ளது. ‘கீழ்நாட்டரே மெய்ஞ்ஞானக் கருவூலம்’ என்பதாக அடிக்கடி ஜேம்ஸ் ஆலன் கூறுவாராம். வ.உ.சி. இவரைப் பற்றிக் குறிப்பிடும்போது, ‘அவர் வாக்கினின்று வந்த ஒவ்வொரு வார்த்தையிலும் நமது நாட்டு நீதியும் மதக் கோட்பாடும் கலந்திருக்கும்.’ என்கிறார்.1 இவையெல்லாம், வ.உ.சி.க்கு ஜேம்ஸ் ஆலனின் படைப்புகள் மேல் ஈர்ப்பு வர காரணமாக இருந்திருக்கலாம்.

வ.உ.சி.யின் மொழிபெயர்ப்பு நுட்பமும் ஆழமும்

எவ்வகைப் படைப்பாயினும் ஒரு படைப்புப் படைக்கப்படுவதும் ஒரு படைப்பை மற்றொரு மொழியில் மொழிபெயர்ப்பதும் மற்றவர் களுக்காகத்தான். படைப்பைப் படைப்பதால் அல்லது மொழிபெயர்ப் பதால் புகழ் பெறலாம் அல்லது சிறந்த படைப்பாளியாகலாம் என்பது சிறிய நோக்கமே. ஆனால் அது மற்றவர்கள் பயன்படுத்துவதற்காக என்று மற்றவர்களை அல்லது பயன்பாட்டாளர்களைக் கருத்திற்கொண்டு படைக்கப்படும்போது அது சிறந்த படைப்பாகவே அமையும் என்பது காலம் உணர்த்திய உண்மை. இச்சிந்தனை வ.உ.சி. அவர்களுக்கு இருந்துள்ளது. எனவேதான் சாதாரண மொழிபெயர்ப்பு தானே என்று அலட்சியம் கொள்ளாமல், அதனை ஒரு புதிய படைப்பாக, காலத்தை வெல்லும் படைப்பாக எண்ணி மொழிபெயர்த்துள்ளார்.

அகமே புறம் என்ற இந்நூல், ‘மனோ நிலைமையின் வலிமையை விளக்குகிறது. மனித மனம் அளவு கடந்த வலிமை உடையது. மனதால் ஒரு மனிதனை ஆக்கவும் முடியும். அழிக்கவும் முடியும். அதனால் மனிதன் நல்லவற்றைச் சிந்திக்கும்படி மனதைப் பழக்கப்படுத்த வேண்டும். அறச் செயல்களே செய்ய வேண்டும். சொற்களைக் கட்டுப்படுத்த வேண்டும். நல்ல மன நிலையிலிருந்து சுகமும் தீய மன நிலையிலிருந்து துக்கமும் ஏற்படுகின்றன. அறிவுடையவர்களாக இருந்தால் தீய செயல்களைச் செய்யமாட்டார். என்பனவற்றை எடுத்துரைப்பது. இவற்றை மொழிபெயர்க்க வந்த வ.உ.சி. தமிழ் இலக்கிய – இலக்கணங்களில் ஆழ்ந்த புலமை பெற்றவர். எனவே தனது புலமையின் ஆழத்தையும் நுட்பத்தையும் மொழிபெயர்ப்பிலும் வெளிப்படுத்தியுள்ளார். இதற்கு

சான்றாக ஒன்றை எடுத்துக்காட்டலாம்.

On the other hand, he can live loosely and carelessly, neglecting the supreme task of rightfully ordering his life—this is the way of self-delusion and suffering - என்பதற்கு, இதற்கு மாறாக அவன் தனது ஒழுக்கத்தைச் சரியாகத் திருத்துவதாகிய மேலான கடமையைச் செய்யாது எச்சரிக்கையும் திருத்தமுமின்றி வாழக்கூடும். இஃது அறிவு மயக்கத்திற்கும் துன்பம் அடைவிற்கும் மார்க்கம் என்ற மொழிபெயர்ப்பை நோக்கலாம்.

இதில் this is the way of self-delusion and suffering - என்பதற்கு இஃது அறிவு மயக்கத்திற்கும் துன்ப அடைவிற்கும் மார்க்கம் என்று மொழிபெயர்த்துள்ளார். இதனைச் சற்றுக் கூர்ந்து கவனித்தால் அவரது மொழிபெயர்ப்பின் மேன்மையை நன்றாக உள்வாங்க இயலும். self-delusion என்பது சுய ஏமாற்றம் அதாவது தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வது என்று பொருள். இதன்படி நோக்கினால் மேற்குறித்த வரிக்கு 'இதுவே தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதற்கும் துன்பத்திற்கும் வழி' என்றுதான் மொழிபெயர்க்க வேண்டும். ஆனால் இங்குதான் வ.உ.சி.யின் நுட்பமும் மேன்மையும் புலனாகின்றது. சுய ஏமாற்றம் (அ) தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளுதல் என்று மொழிபெயர்க்காமல் ஆழ்ந்த தனது சிந்தனையையும் புலமையையும் வெளிப்படுத்துகிறார். ஒரு மனிதன் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வானா? அப்படி ஏமாற்றினால் எப்போது ஏமாற்றிக்கொள்வான்? என்ற வினாவை முன்வைத்தால் அதற்கு வ.உ.சி.யின் இந்த மொழிபெயர்ப்பு விடை பகர்கிறது. ஒருவன் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ள மாட்டான். அப்படி ஏமாற்றிக் கொள்கிறான் என்றால் அப்போது அவன் மயக்கநிலையில் உள்ளான் என்று பொருள். மயக்கம் என்றால் மயங்கி விழுவது என்பதல்ல. அறிவு மயக்கம் என்று கொள்ளல் வேண்டும். தற்போது வ.உ.சி.யின் இந்த மொழிபெயர்ப்பினை நோக்குக. இஃது அறிவு மயக்கத்திற்கும் துன்ப அடைவிற்கும் மார்க்கம் - என்கிறார். ஒருவன் தன்னை ஏமாற்றிக் கொள்ள விழைகிறான் என்றால் அவனது அறிவு மங்கிவிட்டது (மயக்கமடைந்துவிட்டது) என்பதைத் தெளிவு படுத்துவதோடு, அறிவுமயக்கம் எப்போதும் துன்பத்தையே விளைவிக்கும் என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

கூடுதல் தொடர் கொண்டு எளிமையாக்கல்:

இயல்பாகவே மனிதர்களாலும் அல்லது படைப்புகளாயிருந்தாலும் எளிமையும் இனிமையும் கலந்திருந்தால் அது பயனாளர்களைக் கவர்ந்திழுக்கும். மொழிபெயர்ப்பாளனுக்கு இயல்பான ஆக்கத்திறனும் தன்முனைப்பும் இன்றியமையாதது.

நைடா கூறும் மொழிபெயர்ப்பின் படிநிலைகள் நான்கு.

அவை, 1. மொழிபெயர்ப்பு, 2. பகுப்பாய்வு, 3. மாற்றுதல், 4. செம்மையாக்கம் என்பனவாகும்[2]. இவற்றில் செம்மையாக்கம் என்ற படிநிலையின்படி வ.உ.சி சில கூடுதல் வரிகளைச் சேர்த்து மொழி

பெயர்ப்பினைச் செம்மையாக்கமும் எளிமையும் படுத்தியுள்ளார்.

வ.உ.சி. தனது மொழிபெயர்ப்பின்போது எளிய பொதுமக்களையும் மனத்துள் கொண்டே மொழிபெயர்த்துள்ளார். இதனால் மூலத்தில் இல்லாத போதும் சில வரிகளைக் கூடுதலாக எளிமையாக்கத்திற்காக வேண்டிச் சேர்த்துக் கொண்டார். 'MIND IS THE ARBITER of life. It is the creator and shaper of conditions, and the recipient of its own results. It contains within itself both the power to create illusion and to perceive reality' என்பதற்கு, 'மனம் வாழ்வை விதிக்கும் நியந்தா; நிலைமைகளைச் சிருஷ்டித்துத் திருத்தும் கர்த்தா; தனது சொந்தப் பலன்களை அநுபவிக்கும் போக்தா; பொய்யைச் சிருஷ்டிக்கும் திறனும் மெய்யைக் காணும் திறனும் மனத்திற்கு உண்டு' என்பதுதான் பொருள். இதனை மொழிபெயர்த்ததோடு நின்றிருந்தால் இம்மொழிபெயர்ப்பும் சாதாரண ஒன்றாகப் போயிருக்கும். ஆனால் ஆன்றோரும் 'மனத்தான மாந்தர்க்குணர்ச்சி' என்று கூறியுள்ளார் என்ற ஒரு வரியைக் கூடுதலாகச் சேர்த்து இந்த நான்கு வரிகளின் ஒட்டுமொத்த பொருளையும் அந்த ஒற்றை வரியால் எளிமையாக்கிப் பதிவுசெய்வதுதான் வ.உ.சி. மொழிபெயர்ப்பின் தனிச்சிறப்பே.

மொழிபெயர்ப்பாளரின் தகுதிகள் சுட்டப்படும் பொழுது, 'மொழிபெயர்ப்புப் பணியில் முதற் சிறப்பு மூல நூலாசிரியரின் உள்ளப் பாங்கை வெளிப்படுத்துவதுடன் ஆசிரியனுடைய உணர்ச்சி, துடிப்பு, நோக்கம், போக்கு ஆகியவற்றை நன்கு புரிந்து கொண்டு அவற்றைச் செறிவாக மொழிபெயர்க்கும் கடமை மொழிபெயர்ப்பாளர்க்கு உள்ளது' என்ற கூற்று கவனிக்கத்தக்கது.3 இதனடிப்படையில் மேற்கண்ட மொழிபெயர்ப்பை நோக்கும்போது அது கவிதை நடையில் அமைந்திருப்பதையும் காணலாம். ஆனால் மூலத்தில் இந்நடையில்லை. சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துவதில்தான் மொழிபெயர்ப் பாளனின் வெற்றி அடங்கியிருக்கிறது என்பதை வ.உ.சி.யின் இந்த மொழிபெயர்ப்பு நிறுவியுள்ளது.

சிறந்த மேற்கோள்களின் வழி மேலும் எளிமைப்படுத்துதல்

'மொழிபெயர்ப்பென்பதோவெனின், எடுத்துக்கொண்ட பொருளின் கருத்தும்நுட்பமும்நயமுந்தோன்றுமாறு ஏற்றவாறு கூட்டியுங்குறைத்தும், சுருக்கியும், விரித்தும் பெயர்த்தலாகும். அதிலும், எடுத்துக்கொண்ட பொருளின் அளவிற்கேற்ப அணியும் ஆற்றலும் செறிந்து விளங்க, மொழிப் பெருமை நலிவுறாது, இருமொழிகளின் பெருநலந் தோன்ற, பெயர்த்து மொழிதலே சீரிதாம். இன்னும், இருமொழிக் கண்ணுமுள்ள ஆன்றோர் வாக்குகளின் கருத்தொப்புமை கண்டவிடத்து, அதனை எடுத்துக் காட்டியும், படிப்போர் எளிதில் உணருமாறு பழமொழியும், மேற கோளும் இயையப் பொருத்தியும் மொழிபெயர்த்தல் சிறந்த தொன்றாகும்' [4] என்பதற்கேற்ப மனத்தின் தன்மையும் வன்மையும் என்ற பகுதியில் பொருண்மைக்குத் தக்க இடத்தில்,

‘கற்றதங் கல்வியுங் கடவுட் பூசையு
நற்றவ மியற்றலு நவையி றானமு
மற்றுள வறங்களு மனத்தின் பாலழுக்
கற்றவர்க் கேபய னளிக்கு மென்பரால்’

என்ற மேற்கோளை மூலத்தில் இல்லாதபோதும் ஆன்றோர் கூற்று என்று கூறி வ.உ.சி. பதிவுசெய்துள்ளார்.

இதேபோன்று உயர்தர வாழ்வு என்ற தலைப்பினை ஒன்று முதல் நான்கு பாடங்களாகப் பகுத்துக்கொண்டு மொழிபெயர்த்துள்ளார். இப்பாடங்களில்,

‘சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்’
‘ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பின்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு’
‘சிறுமையு ணீங்கிய வின்சொல் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்’

ஆகிய குறட்பாக்களையும் ஆன்றோர் கூற்று என எடுத்துரைத்துக் கருத்துவளத்தைக் கூட்டியுள்ளார்.

மேலும் இந்நூல் முழுவதிலுமே எளிய நடையில் கருத்துகளை வாசகர்களின் புரிதலுக்குக் கொண்டு செல்லும் பாங்கினைப் பார்க்க முடிகிறது. நுட்பமான பகுதிகளையும் சுவை குன்றாமல் நல்லதொரு யதார்த்த நடையில் கொண்டு செல்வதில் வ.உ.சி. சிறந்த மொழிபெயர்ப்பாளராக வாகை சூடியுள்ளார்.

முடிவுரை:

பிளேட்டோவின் அரசியல் (The Republic) என்னும் நூலினை மொழி பெயர்த்த வெ. சாமிநாத சர்மா, ‘ஒரு மொழிபெயர்ப்பு அறிஞர்களுக்கு மட்டுமல்ல, சாதாரண ஜனங்களுக்கும் புரியக் கூடியதாய் இருக்க வேண்டும்’ என்று கூறியுள்ளார்.5 அந்தவகையில் வ.உ.சிதம்பரனார் மக்களுக்குப் புரிய வேண்டும் என்பதற்கான அக்காலத்திய வழக்குப்படி சிற்சில வடமொழிச் சொற்களையும் தனது மொழிபெயர்ப்பில் கையாண்டுள்ளார். எனவே இதனைப் பெருங்குறையாகக் கொள்ள வேண்டியதில்லை. பன்முக ஆளுமையான வ.உ.சி. மொழிபெயர்ப்பியல் துறையிலும் தனது சுவடுகளைப் பதித்துச் சென்றுள்ளார்.

நிறைவாக…

செந்தமிழ் நாட்டுத் திலகன் சிதம்பரத்தைச்
சிந்தையில் கொள்வோம் தினம்.

என்ற கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் வரிகள் எக்காலத்துக்கும் வ.உ.சி.யின் பெருமைகளை ஒலித்துக் கொண்டேயிருக்கும். அதற்கு வ.உ.சி.யின் நூல்கள் குறிப்பாக மொழிபெயர்ப்பு நூல்கள் துணை நிற்கும்.

அடிக்குறிப்பு :

1. வ.உ.சி.யின் மொழிபெயர்ப்புகளும் உரைகளும் - முனைவர் த. ஆதித்தன், கட்டுரை, இணையவழித் தரவு.
2. மொழிபெயர்ப்பின் முக்கிய விதிகள் மற்றும் இன்றியமையாப் பண்புகள் - முனைவர் த. சமுத்திரராஜ், தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் கட்டுரை, இணையவழித் தரவு, ப. 70
3. மொழிபெயர்ப்பின் முக்கிய விதிகள் மற்றும் இன்றியமையாப் பண்புகள் - முனைவர் த. சமுத்திரராஜ், தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் கட்டுரை, இணையவழித் தரவு, ப. 72
4. மொழிபெயர்ப்பும் சொல்லாக்கமும் – தென்புலோலியூர் மு. கணபதிபிள்ளை, அருள் நிலையம், சென்னை – 17, முதற்பதிப்பு – 1967, பக். 17-18.
5. மொழிபெயர்ப்பும் சொல்லாக்கமும் – தென்புலோலியூர் மு. கணபதிபிள்ளை, ப.15.

துணைநின்றவை

1. சிதம்பரம்பிள்ளை, வ. உ. - அகமே புறம், பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை – 01. ஆறாம் பதிப்பு – 1966.
2. James Allen - Out from the Heart, Ketabb publishers, 1418 River Drive, Suite 35 Cotton hall, CA 9622, London, United States.
3. கணபதிபிள்ளை, தென்புலோலியூர் மு. – மொழிபெயர்ப்பும் சொல்லாக்கமும், அருள் நிலையம், சென்னை – 17, முதற்பதிப்பு – 1967.
4. தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ், தொகுதி – 06, வெளியீடு – 03, ஜூலை – செப்டம்பர் 2024.

இணையவழித் தரவுகள் :

1. https://james-allen.in1woord.nl/?text=out-from-the-heart
2. https://www.vallamai.com/?p=104727

பகுதி ஆறு:
இயக்கச் செயல்பாடுகளும் சமூகப் பணிகளும்

57

வ.உ.சி.யின் போராட்டத்தில் சமூகச் சிக்கலும் அதற்கான தீர்வும்

நா. யாதவ் குமார்
தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

முனைவர் மு. அன்பரசி
உதவி பேராசிரியர், தமிழ்த்துறை
பி.எஸ்.ஜி.ஆர்.கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர்.

ஆய்வுச் சுருக்கம்:

வ.உ.சி இந்தியாவின் ஒரு வியத்தகு விடுதலைப் போராட்ட வீரர். ஆங்கிலேயக் கப்பல்களுக்குப் போட்டியாக முதல் உள்நாட்டு இந்திய கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர். இவர் தொடங்கிய சுதேசி நீராவிக் கப்பல் நிறுவனம் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே கடல்வழிப் போக்குவரத்தை மேற்கொண்டது. பிரித்தானிய அரசால் தேசத்துரோகியாகக் குற்றம் சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். அவரது வழக்கறிஞர் உரிமையும் பறிக்கப்பட்டது. வறுமையில் இருந்து இறுதியாக மரணித்தார். அவரது தியாக வரலாற்றை ஒவ்வொரு தமிழனும் அறிந்து கொள்வது அவசியம். அவர் தமிழகத்தின் மிகப்பெரிய மாணிக்கம் என்பதை படிப்பவர் அறிந்துகொள்வர்.

திறவுச்சொற்கள் : வ.உ.சி சமூகச் சிக்கல் மற்றும் சமூக வளர்ச்சியின் வெளிப்பாடு.

முன்னுரை:

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் வலம் ஏந்திய வீரர் களில் ஒருவர் வ.உ.சிதம்பரநாதர். 'கப்பலோட்டிய தமிழன்' என்று அழைக்கப்பட்ட இவர், பொருளாதார, சமூக, அரசியல் அனைத்துத் துறைகளிலும் இந்தியர்களின் சுயமரியாதையை உயர்த்தியவர். சமூகச் சிக்கல்களை எதிர்கொண்டு, அவற்றை மாற்றியமைக்க முயன்ற அவரது பங்களிப்பைத் தமிழ்ச் சமூக வரலாற்றில் குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரையில், வ.உ.சி.யின் காலகட்டத்தில் நிலவிய சமூகச் சிக்கல்கள், அவற்றை அவர் எவ்வாறு அணுகினார், சமூக விழிப் புணர்வை ஏற்படுத்திய விதங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்கிறது.

வ.உ.சி. வாழ்ந்த காலகட்டத்தின் சமூகப் பின்னணி:

பல நூற்றாண்டுக்கு முன் இந்திய சமூகம் பின்வரும் சிக்கல்களுடன் போராடி வந்தது. ஆங்கிலேயர்களின் பொருளாதாரச் சுரண்டல், இந்திய வணிகம், துறைமுகங்கள் அனைத்திலும் ஆங்கிலேயரின் ஆதிக்கம். ஜாதி மற்றும் சமூக வேறுபாடுகள் கல்வி, தொழில், வர்த்தகம் ஆகிய துறைகளில் உயர்-தாழ் கருத்துகள் ஆழமான தாக்கம் ஏற்படுத்தின. கல்வி வளங்களின் பற்றாக்குறை சொந்த மொழியில் தரமான கல்வி கிடைக்காமல், ஆங்கிலக் கல்வி சிலருக்குச் சுருங்கியது.

வணிக வாய்ப்புகளில் இந்தியர்களின் புறக்கணிக்கப்பட்ட அனுமதிகள், உரிமங்கள் அனைத்தும் ஐரோப்பிய வர்த்தகர்களுக்கே வழங்கப்பட்டது. இந்த பின்னணியில் வ.உ.சி எழுச்சி பெற்றது மிகப் பெரிய சமூக மாற்றத்தை வடிவமைத்தது.

வ.உ.சி.யின் சமூகச் சிக்கலை எதிர்கொண்ட முயற்சிகள்:

வ.உ.சி அனுபவித்த மிகப் பெரிய சமூகச் சிக்கல்

'இந்தியர்கள் தங்கள் சொந்த நாட்டில் வணிகம் செய்ய முடியாத நிலை.' இதற்கு அவர் எடுத்த முக்கியப் படி. சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பனி (SSNC) ஆங்கிலேயரின் கடலோடிக் கப்பல்களை எதிர்த்து இந்தியர்கள் நடத்தும் முதல் கப்பல் சேவை.

இது ஒரு வணிக முயற்சியல்ல; சமூக-அரசியல் புரட்சி பொது மக்கள் சொந்தக் காசோலைகள், பங்குகள் வாங்கி உதவினர். பல சமூகத்தினரையும் ஒருங்கிணைத்து அவர் உருவாக்கிய இந்த கம்பனி, சமூக சுயமரியாதையை எழுப்பியது.

கல்வி மற்றும் சமூக விழிப்புணர்வுக்கான போராட்டம்:

வ.உ.சி. வாழ்நாளில் கல்விக்குப் பெரும் முக்கியத்துவம் கொடுத்தார். தமிழில் சட்டம் படித்த முதல் தலைமுறை வக்கீல்களில் ஒருவர். வழக்கறிஞராக இருந்தபோதே சாதி வேறுபாடு இல்லாமல் ஏழை மக்களுக்கு இலவச வழக்குரைஞர் சேவை செய்தார்.

சமூக விழிப்புணர்வு ஏற்படுத்த பாடல்கள், உரைகள், கட்டுரைகள் எழுதினார். அவர் எழுதிய பாடல்களில் தேசிய உணர்ச்சி , மனிதநேயம், சமூகத் தன்னம்பிக்கை என இணைந்து காணப்படுகின்றன.

சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான நிலைப்பாடு:

சாதி வேறுபாடுகளை வலுவாக எதிர்த்து செயல்பட்டார். கப்பலோட்டிகளில் பல்வேறு சாதிகளின் மக்களை வேலைக்கு எடுத்தனர்.

'சாதியவாதிகள் எவரும் சாதிப்பதில்லை..
சாதித்த எவரும் சாதிவாதியாக இருந்ததில்லை' – *பாரதியார்*

இவ்வரிகள் போல் சாதி பேசுபவர்கள் பொதுக்கூட்டங்களில் 'மனிதன் தான் உயர்ந்தவன்; ஜாதி உயர்ந்ததல்ல' என உரை பேசினார். சமூக நல்லுறவு, ஒற்றுமை, சமத்துவம் ஆகியவற்றுக்காக பாடுபட்டார்.

சமூகப்பணி:

அவரது சமூகப் பணிகள் மற்றும் தேசிய ஆர்வம் ஆங்கிலேயரின் கவனத்தை ஈர்த்தது. 1908ல் அவர் மீது வழக்கு தொடரப்பட்டு ஆயுள் தண்டனையுடன் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் சங்கிலி கட்டி உழைப்பு, உடல் வேதனை, அவமானம் இதெல்லாம் அவர் எதிர்கொண்ட சமூக நீதிக்கான போராட்டமே. வ.உ.சி அனுபவித்த இந்த துன்பங்கள் ஒருவரின் தனிப்பட்ட அவமானம் இந்திய சமூகத்தின் அடக்குமுறையின் ஒரு குறியீடு ஆகும்.

சமூகச் சிக்கல்களில் வ.உ.சி. ஏற்படுத்திய மாற்றங்கள்:

சமூகத் தன்னம்பிக்கை வளர்த்தார். 'இந்தியர்கள் தங்கள் முயற்சியால் எதையும் சாதிக்க முடியும்' என்ற நம்பிக்கையைப் பொதுமக்களில் விதைத்தார். தேசிய பொருளாதாரச் சிந்தனைக்கு அடித்தளம் சுதேசி கப்பல் சேவை மூலம் இந்தியர்களின் தொழில் திறன் உடைமை உணர்வு, பொருளாதார சுயநிலை இவற்றின் அவசியத்தை வெளிப்படுத்தினார். ஒற்றுமையின் முக்கியத்துவம் சாதியைவிட தேசிய ஒற்றுமை மேலானது என்பதைக் காட்டினார். சமூக நீதி போராட்டத்தின் சின்னமாக உயர்ந்தார் அவரது சிறைவாசமும் துன்பங்களும் பின்னர் சமூக இயக்கங்களுக்கு ஊக்கமாக அமைந்தது.

முடிவுரை:

வ.உ.சி ஒரு தனிநபரல்ல; சமூக மாற்றம், தேசிய விழிப்புணர்வு, பொருளாதார சுயநிலை, சமத்துவம் ஆகியவற்றின் சித்தாந்தச் சின்னம். அவர் எதிர்கொண்ட சமூகச் சிக்கல்களை மட்டும் அவர் சமாளிக்கவில்லை,அந்தச் சிக்கல்களைக் கடந்து ஒரு புதிய சமூகப் பாதையை அமைத்தார். அதனால், வ.உ.சி, விடுதலைப் போராட்ட வீரர் மட்டுமல்ல, சமூக மாற்றச் சிந்தனையாளர்.

துணை நூற்பட்டியல்:

1. வ.உ.சி. யின் சுதேசி கப்பலும் தொழிற்சங்க இயக்கமும், ச. தமிழ்ச்செல்வன், பாரதி புத்தகாலயம், 2020.
2. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி., மு.கோபி சரபோஜி, விகடன் பதிப்பகம், 2023.
3. வ.உ.சி. சுயசரிதை, வ.உ.சி. சுப்பிரமணியன், அமராவதி பதிப்பகம், 2022.
4. வ.உ.சி, ப. சரவணன், சுவாசம் பதிப்பகம், 2024.

58

கப்பலோட்டிய தமிழனின் சாதிய எதிர்ப்பும் பெண் உரிமையும்

ச. இராதாகிருஷ்ணன்,
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்),
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

ஆய்வுச்சுருக்கம்:

இந்திய சமூகத்தில் சாதி குறித்த ஒருவரின் கண்ணோட்டம் எவ்வாறு உள்ளது என்பதைப் பொறுத்துத்தான் அவரை மதிப்பீடு செய்ய முடியும். வ.உ.சி அவர்கள், சாதி வேறுபாடுகளைக் கடுமையாக எதிர்ப்பவராக விளங்கினார். சாதிகளை வகைப்படுத்தும் பொழுது பார்ப்பனர் எனவும், பிற சாதிகள் அனைத்தையும் 'தாழ்த்தும் சாதிகள்' எனவும் சுட்டுகிறார். குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கான விடுதலை, பெண்களுக்கான உரிமை மற்றும் கல்வி, சமூக முன்னேற்றத்தை உணர்ச்சி கொப்பளிக்க தம் மொழிநடையில் வெளிப்படுத்துகிறார். அக்கருத்துகளைச் சமூகப் பார்வை நோக்கில் ஆராய்வதே இங்கு கட்டுரையாக மலர்கிறது.

திறவுச்சொற்கள்: வ.உ.சி. - தன்னலமற்ற தியாகம் - சமூகம் – சாதிகள் – தொல்காப்பியம் – திருக்குறள் – உரிமை - மக்களுக்கான விடுதலை – உரைகள் – சமத்துவம் –அன்பு - பெண்களுக்குக் கல்வி - சம உரிமை

தியாகச் செம்மல்களுள் மணிமுடியாக வ.உ.சி.:

தியாகச் செம்மல்களுள் தலைசிறந்து நிற்பவர், பூத உடம்பு அழிந்தாலும், புகழ் உடம்பால் நிலைபெற்றுப் புகழோடும், பெருமை யோடும் என்றும் நிலைபெற்று வாழும் பண்பாளர், நம் தமிழகம் தந்த 'கப்பலோட்டிய தமிழர்' வ.உ.சிதம்பரனார்.

'மேலோர்கள் வெஞ்சிறையில்
வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில்
நோவதுவும் காண்கிலையோ?'[1]

என இவரது தியாக வாழ்வு பற்றி மகாகவி பாரதி மனம் கசிந்து பாடினார்; ஆங்கில அரசால் வ.உ.சி. சிறைப்படுத்தப்பட்ட கொடுமையையும் செக்கிழுத்துச் சோர்ந்த போதும் தணியாத, அயராத அவரது சுதந்திர வேட்கையையும் பாடிப் பரவினார்.

ஒடுக்கப்பட்ட மக்களின் மீதான அன்பு:

இரண்டு கண்களையும் இழந்த ஆதரவற்ற சிவப்பொருள் உணர்ந்த இராமையா தேசிகன் என்ற ஒரு 'குலத்தில் குறைந்தவரையும்' தமது

இல்லத்தில் உணவிட்டுப் பாதுகாத்தவர் வ.உ.சி. பார்வையற்ற அவருக்கு வ.உ.சி. அவர்களின் மனைவியே உணவு ஊட்டி வந்துள்ளார் என்பதை அவரது தன் வரலாற்றில் எழுதி உள்ள கீழ்க்கண்ட வரிகளால் அறியலாம்.

சிவப்பொருள் உணர்ந்த தேசிகன் ஒருவனென்
தவப்பயனால் இலம் தங்கப் பெற்றேன்
ஊனக் கண்ணினை ஒழித்தவன் நின்றதால்
தானக் குறையினை தவிர்த்திட ஊட்டினள்
....
குலத்தில் அன்னோன் குறைந்தவன் என்றென்-
தலத்தில் உள்ளோர் சாற்றினர் குற்றம் ......[2]

எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல், தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த சகஜானந்தர் என்பவரை வ.உ.சி. அவர்கள் சென்னையில் தம் வீட்டிற்குக் கூட்டிச் சென்று உணவு கொடுத்துப் பராமரித்து வந்தார். அவருக்குத் தொல்காப்பியம், திருக்குறள் போன்ற நூல்களைக் கற்பித்ததோடு, சென்னையை விட்டு ஒட்டபிடாரத்திற்குச் சென்ற போதும் சகஜானந்தரை உடன் அழைத்துச் சென்றார். தாம் கலந்து கொண்ட எல்லா நிகழ்ச்சிகளுக்கும் அவரையும் அழைத்துச் சென்றார்.

சாதிய எதிர்ப்பும் மதம் குறித்த கண்ணோட்டமும்:

திலகர் மற்றும் காந்தி போன்றோர் பகவத் கீதைக்கு உரை எழுதிய பொழுதும், வஉசி அவர்கள் சாதிக் கட்டமைப்பை உயர்த்திப் பிடிக்கும் கீதைக்கு ஒருக்காலும் உரை எழுதவில்லை.

மாறாக,

‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் - சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்’

போன்ற சமத்துவ விழுமியங்களை வலியுறுத்தும் வள்ளுவரின் திருக் குறளுக்கு உரை எழுதினார்.அதே போல் 1928-ல் செட்டிநாட்டுக்குச் சென்று ஆற்றிய சொற்பொழிவுகளில் பல்வேறு சீர்திருத்தக் கருத்துக்களை அவர் பதிவு செய்துள்ளார். அவற்றில் சுயமரியாதை இயக்கத்தின் செல்வாக்குத் தெளிவாகக் காணப்படுகிறது.

‘பிறப்பினால் உயர்வு தாழ்வு நமது நாட்டு வழக்கமன்று, ஆரியர் நூல்கள் தமிழ் நூல்களில் கலந்த பின்னரே பிறப்பினால் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற கோட்பாடு வந்தது. தமிழ்நாட்டு நூல்களில் பிறப்பினால் உயர்வு தாழ்வு கூறப்படவில்லை. புறநானூறு போன்ற சங்க இலக்கியங்களில் பிறப்பினால் உயர்வு தாழ்வுகள் உண்டெனக் காணப்படவில்லை’ எனத் தெளிவுபடுத்துகிறார்.

வ.உ.சி அவர்கள் சட்டம் படித்துத் தேறிய பின்னர் 1895ஆம் ஆண்டு முதல் எட்டையபுரத்தில் தொழில் செய்து வந்தார். அதன் பின்னர் 1900ஆம் ஆண்டு முதல் தூத்துக்குடியில் தொழில் புரிந்தார். எட்டையபுரத்தில்

வழக்கறிஞராக அவர் பணியாற்றி வந்தபோது வழக்காடுவதற்கு வந்து போன ஒரு தோழர் மயக்கமுற்றுக் கிடப்பதைப் பார்த்து அவரைத் தேற்றி என்ன ஆனது என்று செய்தியைக் கேட்கிறார். அவர் சொல்கிறார் என் வழக்கு நீண்ட காலமாக நடந்து கொண்டே இருக்கிறது; நானும் வந்து கொண்டே இருக்கிறேன்; முடிந்த பாடில்லை' என்கிறார். அவரிடம் விவரங்களைக் கேட்டறிந்து இனி வராதே என்று கூறி அனுப்புகிறார். வழக்கை நடத்தி வெற்றி பெற்று செய்தியை மட்டுமே அனுப்புகிறார். அதைத் தன்னுடைய 'தன்வரலாறு' கவிதையில் கூட எழுதுகிறார்.

'முடிமனில் என்னுடை முன்னோர் நாள்முதல்,
அடிமை புரியும் அறிவினைக் கொண்ட,
வேத நாயகம் எனும் மேம்படு பள்ளனை,
ஏது மில்லாமலே எண்ணிலா வழக்கில்,
அமிழ்த்தனர் போலீசார்; அனைத்தினும் திருப்பினேன்'[3]

என்று குறிப்பிடுகிறார். ஓர் எளிய மனிதனின் மீது, சமூகத்தின் அடிமட்டத்தில் அமுக்கி வைக்கப்பட்டவர் மீது பரிவைக் காட்டும் ஒரு நிகழ்வு அது. அன்று நிலவிய சாதி ஆதிக்கம், வ.உ.சி. அவர்கள் பிறந்த சாதி ஆகியவற்றோடு பொருத்திப் பார்த்தால்தான் அந்நிகழ்வின் சிறப்பினை அறிய முடியும்.

மேலும், 1920ஆம் ஆண்டு திருநெல்வேலியில் நடைபெற்ற சென்னை மாநில அரசியல் மாநாட்டில் பங்கேற்ற வ.உ.சி. அவர்கள், அரசு வேலை வாய்ப்புகளில் பார்ப்பனர் அல்லாதாருக்குப் போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் எனும் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.அதுமட்டுமின்றி 1927 - ஆம் ஆண்டில் சேலத்தில் நடைபெற்ற மூன்றாவது அரசியல் மாநாட்டில் பார்ப்பனர் அல்லாதோருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்பது குறித்து மிக விரிவாக அவர் உரையாற்றியதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

சாதி குறித்து முற்போக்கான கொள்கையைக் கொண்டிருந்தது போலவே, மதம் குறித்தும் வ.உ.சி. அவர்கள் நல்லிணக்கக் கண்ணோட்டம் உடையவராக இருந்தார். குறிப்பாக மெய்கண்டாரின் சிவஞானபோதத்திற்கு அவர் எழுதிய உரையைக் குறிப்பிட வேண்டும். அதன் உரைப்பாயிரத்தில் வ.உ.சி. அவர்கள், ' இவ்வுரையில் ஏனைய உரைகளில் காணப்படும் பல மதக் கோட்பாடுகளும், அவற்றின் கண்டனங்களும் காணப்படா. அவை காணப்படாமைக்குக் காரணம், மக்கள் பல்வேறு பெயர்களோடும், வடிவுகளோடும் காணப்படினும், அவர்களெல்லாம் மக்கள் சாதியினர் ஆவது போல, மதங்கள் பல்வேறு பெயர்களோடும், கொள்கைகளோடும் காணப்படினும் அவைகளெல்லாம் ஒப்புயர்வற்ற ஒரே இறைவனைப் பற்றியே பேசுகின்றன என்று யான் கருதுகின்றமையே' எனக் குறிப்பிடுகிறார். அதைத் தொடர்ந்து அவர் சுட்டிக்காட்டும் கருத்துக்கள் சமகாலப் பொருத்தப்பாடு மிக்கவையாகும். மத வேற்றுமை காண்பவர்களும், பேசுபவர்களும், 'யான்' 'எனது' என்னும் மதவெறி பிடித்த மாக்களே என்றும், நமது நாடு தற்காலம்

இருக்கிற ஒற்றுமையற்ற நிலைமையில், மத வேற்றுமைகளையோ, சாதி வேற்றுமைகளையோ, வேறு வேற்றுமைகளையோ காண்பவர்களும், பேசுபவர்களும் தேசத்திற்குத் தீங்கிழைப்பவர்களே என்றும் யான் கருதுகின்றேன்' என்ற அவரது கருத்து, மதவெறியால் நாட்டைத் துண்டாட நினைப்பவர்களுக்குச் சரியான பாடமாகும்.

பெண்கள் குறித்த அவரது பார்வை:

வ.உ.சி. அவர்கள் காலம் கடந்து சிந்தித்தவர். பெண்கள் குறித்த அவரது பார்வை இன்றைய பெண்ணியச் சிந்தனைகளுக்கு முன்னோடியாக இருக்கின்றது. மனிதக்குல வரலாற்றில் ஆண் - பெண்ணிற்கு இடையே தோன்றிய பாகுபாடுதான் முதன்மையான பிரிவினையாகும். புராதனப் பொதுவுடைமைச் சமுதாயம் தவிர்த்து, ஏனைய சமுதாயப் படிநிலைகளில் பெண்களுக்கான உரிமைகளும், அவர்களது தலைமைப் பாத்திரமும் மறுக்கப்பட்டே வந்துள்ளது.

குடும்பத்தில் ஆண் பூர்ஷ்வா வர்க்கமாகவும், பெண் பாட்டாளி வர்க்கமாகவும் இருக்கின்றனர்' என்று ஏங்கெல்சு இது பற்றிக் குறிப்பிடுகிறார்.எனவே இத்தகைய பாகுபாட்டைக் களைவதற்காகப் பெண்களுக்கு உரிய கல்வியை அளிப்பதுதான் சரியான அணுகு முறையாக இருக்கும். அவ்வகையில் வ.உ.சி. அவர்களது முன்னெடுப்புகள் போற்றத்தக்கனவாக உள்ளன.

பெண்மையைப் போற்றிய செம்மல்:

பெண்களை மிக உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றியவர் வ.உ.சி. அவர்கள். தனது மனைவி வள்ளியம்மை குறித்து ஓர் இலக்கியப் படைப்பையே முதன் முதலில் வெளியிட்டவர் அவர். விருதுநகர் இராமையா தேசிகர் ஒடுக்கப்பட்ட வகுப்பினர்; துறவி; கண்பார்வை இழந்தவர்; வ.உ.சி. குடும்பமோ சைவ வேளாளர் குடும்பம்; அவருக்கு அவரது மனைவியே உணவூட்டினார் என்பது இந்த நாளிலும் நடக்குமா? உணவூட்டியதோடு நில்லாமல் அவரது மனைவி வள்ளியம்மை எழுப்பிய கேள்வி, வ.உ.சி தன்னளவோடு சாதி கருதாப் பண்பினை நிறுத்திக் கொள்ளாமல், தன் மனைவியாரும் ஏற்கும் பக்குவத்தை உண்டாக்கி வைத்திருந்தார் என்பதை அறியலாம். அவரது மனைவி வள்ளியம்மையின் கூற்றாக பதிவு செய்துள்ளார் வ.உ.சி.

‘எல்லாம் உணர்ந்த என் உயிர்நாத!
எல்லாம் கடவுளாய் இருக்கக் கண்டும்
உருவம் முதலிய ஒன்றினும் பேதம்
மருவுதல் இலாமை மலை போல் கண்டும்
கற்பனையாகக் காணும் குலத்தின்
சொற்பிழை கொளல் எனச் சொல்லியே தூய!
துறந்தவர் தம்மையும் தொடருமோ குலம் இவண்?
இறந்த அம்மொழியினை ஏற்றிடாது ஒழிப்போம்!

எல்லாவற்றிலும் கடவுள் உண்டு என்று கூறுவோர்
ஒடுக்கப்பட்டோரிலும் அவர் இருப்பார் என்பதை அறியாரா?’ [4]

என்றும் மேலும் அவரோ துறவி; துறவிக்குக் குலம் இல்லை என்று வேறு சொல்லி வைத்திருக்கிறார்கள். பிறகு ஏன் குலம் பற்றிய பேச்சு? என்றும் கேள்வி கேட்கும் பக்குவத்தையும் உருவாக்கி வைத்துள்ளார் வ.உ.சி.!

வ.உ.சி. 1910ஆம் ஆண்டு டிசம்பர் முதல் விடுதலையான 1912 டிசம்பர் வரை கண்ணனூர் சிறையில் இருந்தார். அங்குதான் ‘மெய்யறிவு’ ‘மெய்யறம்’ எனும் இரு நூல்களை எழுதினார்.அவற்றுள் ‘மெய்யறம்’ எனும் நூலினை ‘திருக்குறளின் வழி நூல்’ என்றே வ.உ.சி. குறிப்பிட்டுள்ளார். திருக்குறளை ஒட்டி, ஏழு சீருக்குப் பதிலாக நான்கு சீரில், ஒரு வரியில் எழுதுகிறார். அந்நூலின் வழியே வ.உ.சி. அவர்களின் சமூகப் பார்வையையும், எவ்வளவு பக்குவப்பட்டவராக இருந்திருக்கிறார் என்பதையும் அறியமுடியும். அதில் வள்ளுவரின் வாழ்க்கைத் துணைநலம் போல ‘உயிர்த்துணை கொளல்’ என்ற ஓர் அதிகாரம் வைத்துள்ளார். அவ்வதிகாரத்தில் நான்காவது பாடல், ‘துணை இழந்தாரை மணப்பது புண்ணியம்’ விதவை மறுமணத்தைப் பற்றி அதிகம் பேசப்படாத காலத்தில் மெய்யறத்தில் ஒரு குறளாகவே அதை எழுதுகிறார். அடுத்து, ‘விரும்பாதவரை விரும்புதல் பாவம்’ என்றும் எழுதுகிறார்.அடுத்த அதிகாரத் தலைப்பு ‘உயிர்த்துணை ஆளுதல்’. அதில் ‘இருவருள் அறிவிற் பெரியவர் ஆள்க’ என்றொரு குறள். குடும்பத்தில் உள்ளவர்களில் யார் அறிவானவரோ அவர், ஆணோ பெண்ணோ குடும்பத் தலைவராக இருக்கட்டும் என்கிறார். அவ்வதிகாரத்திலேயே ‘ஆண்பால் உயர்வெனல் வீண் பேச்சென்க’ என்பது மற்றொரு குறள்.

பெண்களுக்கு கல்வியும் சம உரிமையும்:

‘நம் நாட்டில் பெண் மக்களைச் சமைக்கும் இயந்திரமாகச் செய்து விட்டனர். மேலும் அவர்களைப் பிள்ளை பெறும் எந்திரமாகவும் அனைவருமே செய்து விட்டோம். நம்மைப் போல் பெண்களுக்கும் சம உரிமை இருத்தல் வேண்டும். எல்லா விஷயங்களிலும் அவர்களை ஆலோசித்துச் செய்தல் அவசியமாகும். ஆனால் அவர்கள் அதற்குத் தகுதியுடையவர்களாக என்று பார்க்கின், இல்லை. ஏன்? அவர்கட்குக் கல்வி இல்லாமையே! எனவே பெண்களுக்குக் கல்வி கற்பிக்கவேண்டியது அவசியமாகும்’ என அவர் 1928 - ல் பரிந்துரைத்தார்.அந்தக் கால கட்டத்தில் கல்வி கற்றிருந்த பெண்களின் விழுக்காடு மிகமிகக் குறைவாக இருந்தது என்பதை அரசின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. எனவே மக்கள் தலைவராக விளங்கிய வ உ சி போன்றவர்கள் பெண்கல்வி குறித்து அந்தக் காலகட்டத்திலேயே விழிப்புணர்வு ஊட்டியது பாராட்டத் தக்கதாகும்.அது மட்டுமல்லாமல், கணவரின் எச்சில் இலையில் மனைவி உண்ணும் வழக்கத்தைக் கடுமையாகக் கண்டித்தார் அவர். ‘எச்சில் இலையை நாய்கள் அன்றோ தின்னும்?’ எனக் குறிப்பிட்டுவிட்டு, ‘எச்சில் இலையில் மனைவி சாப்பிடாவிட்டால், ‘புருசன் இலையில் சாப்பிடாத தேவடியாள்’ என்று சொல்லுகின்றனர். எனக்குக் கல்யாணம்

ஆனது முதல் எனது எச்சில் இலையில் உண்ணக்கூடாது என்று என் மனைவிக்கு உத்தரவிட்டு விட்டேன். பெண்களுக்குச் சம சுதந்திரம் கொடுக்க வேண்டும்' எனத் தனது செயல் மூலம் அவர் சமத்துவத்தை நிலை நாட்டினார்.

தொகுப்புரை:

கப்பலோட்டிய தமிழனின் சாதிய எதிர்ப்பும் பெண் உரிமையும் என்னும் கட்டுரையின் வாயிலாகக் கீழ்க்காணும் ஆய்வு முடிவுகள் பெறப்படுகின்றன. அவையாவன, 'அடிமைத்தனத்தை விடவா சாவு அஞ்சுதற்கு உரியது? மரணத்தைக் கண்டு அஞ்சுபவன்தான் கோழை! நாட்டு விடுதலைக்காக, நாட்டு நன்மைக்காக எவனொருவன் உயிர் துறக்கின்றானோ அவனே இன்ப உலகிற்குச் செல்கின்றான்' என முழங்கியவர் வ.உ.சி. சமுதாயத்தை ஒழுக்கப் பாதையில் இட்டுச் செல்லும் தமது கடமையை மறவாது சிறையிலும் ஞான வேள்வி செய்தார் வ.உ.சி. 'சுயசரிதை' எனும் நூல்,தனிப்பாடல் திரட்டு, தமது முதல் மனைவிக்கு அஞ்சலியாக யாத்த 'வள்ளியம்மை சரித்திரம்' ஆகியன வ.உ.சி.யின் சிறை வாழ்வு தந்த தமிழ்க் கொடைகள் ஆகும். தம் மதப் புகழ் கூறிப் பிறர் மதம் சாடும் பழைய மரபை விடுத்து, வேற்றுமையே பேசும் விகற்ப நிலை விடுத்து சமய ஒற்றுமையும், பொதுமையும் நாடும் புதுநெறிக்கு சிவஞான போதத்தை ஆழ்ந்து படித்து அதற்கும் புதியதொரு உரை எழுதி வித்திட்டார். அந்தக் கால கட்டத்தில் கல்வி கற்றிருந்த பெண்களின் விழுக்காடு மிகமிகக் குறைவாக இருந்தது என்பதை அரசின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. எனவே மக்கள் தலைவராக விளங்கிய வ.உ.சி. பெண்கல்வி குறித்து அந்தக் காலகட்டத்திலேயே விழிப்புணர்வு ஊட்டியது பாராட்டத் தக்கதாகும்.

சான்றெண் விளக்கம்:

6. பாரதியாரின் கவிதைகள், தேசிய கீதங்கள் - சுதந்திரப் பயிர், , ப., 314
7. வ.உ. சிதம்பரனார் அவர்களின் தன் வரலாற்று 'சுயசரிதை', ப., 33
8. மேலது, ப., 55.
9. மேலது, ப., 77.

பார்வை நூல்கள்:

1. பாரதியார் கவிதைகள் (மூலமும் உரையும்) - கவிஞர் பத்மதேவன், கற்பகம் புத்தக ஆலயம்,முதல் பதிப்பு ஜனவரி 2015.
2. வ.உ.சி சுயசரிதை - வ.உ.சிதம்பரம் பிள்ளை, வ.உ.சி நூலகம், முதல் பதிப்பு 2012.
3. வ.உ. சிதம்பரனார் அவர்களின் சிவஞானபோத உரை - பதிப்பு ஆசிரியர் ஆ. இரா. வேங்கடாசலபதி, பாரி நிலையம்,சென்னை, பாரி நிலையம், முதல் பதிப்பு சூலை 1999.
4. மெய்யறம் : அரும்பதவுரையுடன் - வ.உ.சிதம்பரம் பிள்ளை, வ.உ.சி., பதிப்பாளர் கலாரத்நாகர அச்சகம் ,சென்னை. பதிப்பு ஆண்டு. 1917.

59

தென் பிராந்தியத்தில் இந்திய தேசிய இயக்கத்திற்கு வ.உ.சி.யின் பங்களிப்புகள்

முனைவர் சி. சிலுவை சாந்தா பிரின்ஸி
வரலாற்றுத் துறைத் தலைவர்,
மரியா கலை & அறிவியல் மகளிர் கல்லூரி, வள்ளியூர், திருநெல்வேலி.

ஆய்வுச்சுருக்கம்:

இந்திய தேசிய இயக்கத்திற்கு வ.உ.சி. ஆற்றிய பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். வழக்கறிஞர் மற்றும் தொழிற்சங்கத் தலைவராக இருந்தார். பிரிட்டிஷ் கப்பல்களுடன் போட்டியிடும் சுதேசி நீராவி போக்குவரத்து நிறுவனத்துடன் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே முதல் சுதேசிக் கப்பல் சேவையை நிறுவிய பெருமை அவருக்கு உண்டு. அவர் ஒரு இந்திய தேசிய காங்கிரஸ் (INC) உறுப்பினராக இருந்தார், பின்னர் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் தேசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார்; அவரது வழக்கறிஞர் உரிமம் ரத்து செய்யப்பட்டது.

திறவுச்சொற்கள்: வ.உ.சி, கப்பலோட்டிய தமிழன், தீவிரவாதிகள், திருநெல்வேலி மாநாடு, கோரல் மில் ஸ்டிரைக்.

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், இந்திய தேசிய இயக்கம் இந்தியா முழுவதும், குறிப்பாக தமிழ்நாட்டில் வேகமாக வளர்ந்தது.[1] வ.உ.சிதம்பரம் இந்திய தேசிய இயக்கத்தில் முக்கியப் பங்கு வகித்தார்.

வ.உ.சி. யின் பங்கு:

பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராக பன்முகப் பிரச்சாரத்தை திலகர் நடத்தினார். இது பம்பாய் மாகாணம் முழுவதும் தேசபக்தியைப் பரப்பியது. அவர் சூறாவளி சுற்றுப்பயணங்களை நடத்தி பல தேசிய அமைப்புகளுக்கு ஏராளமான பணம் திரட்டினார். சுயராஜ்ஜியத்திற்காக உழைக்கவும், துன்பப்படவும் தயாராக இருக்குமாறு அவர் தனது பார்வையாளர்களை வலியுறுத்தினார். தமிழ்நாட்டின் முக்கியத் தலை வரும் திலகரின் சீடருமான வ.உ.சிதம்பரம், வெளிநாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு வர்த்தகக் கப்பல்கள் இரண்டையும் நிராகரித்தார். அவர் செப்டம்பர் 5, 1872 அன்று திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஓட்டப்பிடாரத்தில் பிறந்தார். அவர் சட்டம் பயின்றார், தனது சொந்த ஊரில் பயிற்சி பெற்றார். அவர் நேர்மையானவர், போலி குற்றச்சாட்டுகளுக்காக நீதிமன்றத்தில் ஒருபோதும் ஆஜராகவில்லை. மக்கள் அவரை மதித்து, அவரை 'வ.உ.சி' என்று அன்பாக அழைத்தனர்.[2]

வ.உ.சிதம்பரத்தின் அவரது எண்ணங்கள், யோசனைகள் மற்றும் செயல்கள் அனைத்தும் இப்போது இந்தியாவின் சுதந்திரத்தைச் சுற்றியே இருந்தன. பிரிட்டிஷ் கப்பல் துறையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் வகையில், வ.உ. சிதம்பரம் மற்றும் அவரது தோழர்கள் ஒரு கப்பலை வாங்கி நமது வர்த்தகத்தை மேம்படுத்த எண்ணினர். 1906 இல் அவர் நிறுவிய கப்பல் நிறுவனம் ‘சுதேசி நீராவிப் போக்குவரத்துக் கழகம்’ என்று அழைக்கப்பட்டது. கப்பலுக்கு பணம் செலுத்த முடியாததால், அவர் தனது நண்பர்களுடன் ஒரு கப்பலை குத்தகைக்கு எடுக்க பம்பாய்க்குச் சென்றார். பாலகங்காதர் திலகரைச் சந்தித்து ஒரு கப்பலை வாங்க உதவி கேட்டார். இறுதியாக, அவர் பிரான்சிலிருந்து ஒரு கப்பலையும் பம்பாயிலிருந்து மற்றொரு கப்பலையும் வாங்கினார். பெயர்கள் ‘எஸ்.எஸ்.லீவ்’ மற்றும் ‘எஸ்.எஸ்.கல்லியோ’. தூத்துக்குடி மற்றும் இலங்கை நல்ல வர்த்தக உறவுகளைப் பேணி வந்தன. [3]

இந்தக் கட்டத்தில், பிரபல தேசியவாதியான பிபின் சந்திர பால் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார். விடுதலையை நினைவுகூரும் வகையில் வ.உ.சி.யும் அவரது நண்பர் சுப்பிரமணிய சிவாவும் ஒரு பெரிய அணிவகுப்பை நடத்தினர். திருநெல்வேலி கலெக்டர் அவர்கள் அவ்வாறு செய்வதைத் தடுத்தார்.

ஆனால் அவர்கள் கட்டளையைப் பின்பற்ற மறுத்து விட்டனர். மேல்முறையீட்டிற்குப் பிறகு ஆங்கிலேயர்கள் இரு தலைவர்களையும் ஏழு ஆண்டுகள் சிறையில் அடைத்தனர். அவர்கள் சிறையில் கொடூரமாக நடத்தப்பட்டனர். அவர்கள் பாறைகளைத் துண்டு துண்டாக உடைக்க வேண்டியிருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, வ.உ.சி. எண்ணெய் ஆலையில் ஒரு காளையைப் போல உழைக்க வேண்டியிருந்தது. (அவர் நாட்டுச் செக்குகளை இழுக்க வேண்டியிருந்தது). நம் நாட்டிற்காக இந்த துஷ்பிரயோகங்களை அவர் சகித்தார். அவருக்கு மிகப்பெரிய துணிச்சல் உண்டு. [4]

சிறையில் இருந்து விடுதலையான பிறகு, அவர் தனது குடும்பத்துடன் சென்னையில் குடியேறினார். நமது நாட்டின் விடுதலையை அவர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். தமிழர்கள் அவரை ‘கப்பலோட்டிய தமிழன்’ என்று அழைக்கிறார்கள். அவர் நவம்பர் 18, 1936 அன்று இறந்தார். அவரது வீர தியாகங்களை நாடு ஒருபோதும் மறக்காது. [5]

திருநெல்வேலி மாநாடு, 1906:

1906 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் நடைபெற்ற பதினான்காவது மதராஸ் மாகாண மாநாடு, தமிழ்நாடு முழுவதிலும் உள்ள முக்கிய பிரமுகர்களை சுதேசியத்தின் குடையின் கீழ் ஒருங்கிணைத்தது. ஜி.சுப்பிரமணிய நாயுடு, சி.கருணாகர மேனன், சேலத்தைச் சேர்ந்த விஜயராகவாச்சாரியார் ஆகியோர் திருநெல்வேலி மாநாட்டில் உரையாற்றினர். திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த வி.சஞ்சீவி ராவ், என். கே. தஞ்சாவூர் ராமசாமி ஐயர், கும்பகோணம் சேதுராயல், வி.சி. வட

ஆற்காட்டைச் சேர்ந்த சேஷாத்ரி மற்றும் என். கிருஷ்ணமாச்சாரி, மதுரையைச் சேர்ந்த ஏ.ராஜாராம் ஐயர் மற்றும் ஜி. சீனிவாச ராவ், செங்கல்பட்டு கோவிந்தசாமி நாயுடு. வ.உ. சிதம்பரம் பிள்ளை, பால் அப்பாசாமி, கே.ஆர். வெங்கட்ராம ஐயர், சிங்கம்பட்டி ஜமீன்தார், குருசாமி ஐயர், என்.ஆர். ராமகிருஷ்ண ஐயர், வேதமூர்த்தி முதலியார் உள்ளிட்ட மாவட்டத் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர். [6]

திருநெல்வேலி மாநாட்டில், ஏற்கனவே இருந்த கட்சிகளுக்கும் புதிய கட்சிகளுக்கும் இடையே பல்வேறு விஷயங்களில் மோதல்கள் எழுந்தன. திருநெல்வேலி மாநாட்டின் நடவடிக்கைகள் சென்னை மகாஜன சபையின் கருத்துகளையும் கவலைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தின. மாநாட்டின் தலைவரால் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட 'நினைவுச் சின்னம்' பழைய பாணியிலான பிச்சைக்கார அரசியலை ஒத்திருந்தது.

'ஆங்கிலக் கல்வி மற்றும் அறிவொளியின் விளைவாகவும், ஆட்சி யாளர்களுக்கும் ஆளப்படுபவர்களுக்கும் இடையில் நாட்டின் அரசாங்கத்தில் மொழிபெயர்ப்பாளர்களாகச் செயல்பட மிகவும் பொருத்தமானவர்களாகவும் இருக்கும் இந்தியர்கள் உயர் நிர்வாகப் பதவிகளுக்கு உயர்த்தப்படுவது, உங்கள் மனுதாரர்களின் தாழ்மையான கருத்தில், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் அடித்தளத்தை ஆழமாக்கும் மற்றும் மக்களின் பொருள் செழிப்பை அதிகரிக்க உதவும்.' [7] பிரதிநிதிகள் பிரிட்டிஷ் நிர்வாகத்துடன் முழுமையான ஒத்துழைப்பை அறிவித்தது மட்டுமல்லாமல், 'புதிய கட்சி' மற்றும் வளர்ந்து வரும் 'சுதேசி' உறுப்பினர்களின் மனநிலையையும் கட்டுப்படுத்தினர். புதிய கட்சியின் உறுப்பினர்கள் நடவடிக்கைகளில் அதிருப்தி அடைந்தனர் மற்றும் ஜி. சுப்பிரமணிய ஐயர் தலைமையில் பாளையங்கோட்டையில் ஒரு இணையான 'சுதேசி மாநாட்டை' ஏற்பாடு செய்தனர். [8] திருநெல்வேலி மாநாட்டில் எட்டப்பட்ட தீர்மானத்தைப் பொருட்படுத்தாமல், சுதேசி யத்திற்கு அதன் சொந்த உத்தியை உருவாக்க புதிய கட்சி தீர்மானித்தது.

1906 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸின் கல்கத்தா அமர்வு நெருங்கி வருவதால், அதன் தீவிர உறுப்பினர்களுக்கும் மெட்ராஸ் மகாஜன சபையின் மற்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான பிளவு அதிகரித்தது. பழைய கட்சியின் உத்தியை எதிர்பார்த்து, பி.சி. பால் மற்றும் திலகர் சென்னையை தளமாகக் கொண்ட தீவிரவாதத் தலைவர்களுக்கு கடிதம் எழுதி, அவர்களின் கைகளை வலுப்படுத்த கல்கத்தா காங்கிரசில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்தனர். கல்கத்தாவில் உள்ள தமிழ்நாடு புதிய இயக்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு பேரில் ஒருவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சுப்பிர மணிய பாரதி.

தமிழ்நாட்டில் புதிய இயக்கத்தின் மிக முக்கியமான தூணாக இருந்த வ.உ.சிதம்பரனாரின் இரண்டு தொகுப்பு அறிக்கைகள், தமிழ்நாடு தேசிய இயக்கத்திற்கு 1906 கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டின் முக்கியத்துவத்தை

நிரூபிக்கின்றன. கல்கத்தா அமர்வுக்கு சில வாரங்களுக்கு முன்பு, அக்டோபர் 1906இல், சுதேசி கொள்கையை வெளிநாட்டு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை புறக்கணிப்பதாக விளக்கக்கூடாது என்று வ.உ.சி பொதுமக்களை எச்சரித்தார். இருப்பினும், 1906 காங்கிரஸ் அமர்வுக்கு மூன்று மாதங்களுக்குப் பிறகு, சித்தாந்தம் மிகவும் வியத்தகு முறையில் மாறியது. சுதேசி இயக்கம் புறக்கணிப்பு இல்லாமல் இருக்க முடியாது என்று வ.உ.சி அறிவித்தார். வெளிநாட்டுப் பொருட்கள் மட்டுமல்ல, வெளிநாட்டு அனைத்தும் புறக்கணிக்கப்பட வேண்டும், மேலும் சுதேசி மற்றும் புறக்கணிப்பு தீவிரமாகப் பின்பற்றப்பட்டால், இயற்கையான விளைவு சுயராஜ்ஜியத்தை உணர்தல் ஆகும். முக்கிய தீவிரத் தலைவர்களில் ஒருவரான பிபின் சந்திர பால், சுப்பிரமணிய பாரதியுடன் சேர்ந்து ஏப்ரல் 30, 1907 அன்று சென்னைக்கு விஜயம் செய்தார். ‘வந்தே மாதரம்’ போன்ற முழக்கங்களுடன் அவர் வரவேற்கப் பட்டார். மாவட்டங்களில் மக்களிடம் உரையாற்ற அவர் திட்டமிடப் பட்டிருந்தாலும், லாலா லஜபதி ராயின் காவலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக அந்த நிகழ்வு ரத்து செய்யப்பட்டது. பிபின் சந்திர பால் வருகையைத் தொடர்ந்து, சென்னை மற்றும் அதன் மாவட்டங்களில் அரசியல் நிலைமை வியத்தகு முறையில் மாறியது.

திருநெல்வேலி சதி வழக்கு:

1911 ஆம் ஆண்டு மணியாச்சியில் திருநெல்வேலி மாவட்ட நீதிபதி ஆஷை வாஞ்சிநாதன் சுட்டுக் கொன்றார். தமிழ் தீவிரவாத தேசியவாதிகளால் நடத்தப்பட்ட ஒரே படுகொலை இதுவாகும். வாஞ்சிநாதன் தற்கொலை செய்து கொண்டார். பதினான்கு பேர் குற்றம் சாட்டப்பட்டனர். முதல் குற்றவாளி நீலகண்ட பிரம்மச்சாரி, அவருக்கு ஏழு ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டது. மற்றொரு குற்றவாளி சங்கர கிருஷ்ணனுக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது, மீதமுள்ளவர்களுக்கு குறைந்த தண்டனை விதிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரும் தூத்துக்குடியைச் சேர்ந்த வ.உ.சிதம்பரம் பிள்ளையின் நெருங்கிய கூட்டாளியுமான மாடசாமி தப்பி ஓடிவிட்டார். இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இருப்பினும், திட்டத்தின் மூளையாக செயல்பட்ட வி. வி. சுப்பிரமணிய ஐயர் பிரதிவாதிகளில் இல்லை.[9]

திருநெல்வேலி மாவட்டத்தில் வ.உ.சி. கைது மற்றும் கலவரம்:

வெள்ளை முதலாளிகளின் விருப்பங்களை மீறி தொழிலாளர் களுக்காகப் போராடி, அவர்களுக்கு அதிக சம்பளம் பெற உதவிய வ.உ.சி., சிவா மற்றும் பத்மநாத ஐயங்கார் போன்ற தலைவர்களைத் தண்டிக்க அரசாங்கம் முடிவு செய்தது. மாவட்ட நீதிபதி உட்பட, அந்தப் பகுதியில் உள்ள ஆங்கிலேயர்கள், கற்பனை செய்யக்கூடிய எல்லா வழிகளிலும் அவர்களைக் கேலி செய்யத் தொடங்கினர். அவர்களை ‘நல்ல நடத்தை’ என்று பிணைப்பதே அவர்களின் குறிக்கோளாக

இருந்தது. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 108 இன் கீழ் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜரானபோது, காவல்துறையினர் அவர்களை அநியாயமாக கைது செய்து, ஆங்கிலேயர்களுக்கு எதிரான சதிக்குற்றச்சாட்டில் சிறையில் அடைத்தனர். இது திருநெல்வேலி பகுதியில் பயங்கரவாதப் போக்கை வளர்ப்பதில் நம்பிக்கை கொண்ட வெறித்தனமான தேசியவாதிகளால் வழிநடத்தப்பட்ட கலவரத்தில் உச்சக்கட்டத்தை அடைந்தது.[10]

ஆஷ் கொலை தமிழ்நாட்டில் ஒரு தனிமைப்படுத்தப்பட்ட பயங்கரவாத சம்பவமாகும். இது மக்கள் பயங்கரவாத செயல்களை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதைக் காட்டுகிறது.[11]

சிறையில் அவரது வாழ்க்கை:

ஜூலை 9, 1908 அன்று, வ.உ.சிதம்பரம் பிள்ளை கோவையில் உள்ள மத்திய சிறைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவர் ஒரு அரசியல் கைதியாக நடத்தப்படவில்லை, மேலும் அவர் தனது தாய்நாட்டை நேசித்ததால் அவர் மோசமாக நடத்தப்பட்டார். காளைகள் அல்லது வேறு எந்த பாரமிழுக்கும் விலங்குகளுக்கும் பதிலாக, நாட்டின் எண்ணெய் வெளியேற்றும் செக்கை இழுத்து எண்ணெய் வித்துக்களை உடைக்கும் பணி அவருக்கு வழங்கப்பட்டது. இதன் காரணமாக, அவர் மனவேதனையிலிருந்து சிறிதளவு சம்பாதித்தார், மேலும் சுதேசி நீராவி போக்குவரத்து நிறுவனம் அவரிடமிருந்து இழப்பீடு கோரியது. 1911 இல் நிறுவனம் கலைக்கப்பட்டது, மேலும் சிதம்பரம் பிள்ளையும் அவரது குடும்பத்தினரும் தங்கள் வருமானம் மற்றும் சொத்துக்கள் அனைத்தையும் இழந்தனர். அவரது உடல் மற்றும் உணர்ச்சி வேதனை இருந்தபோதிலும், சிதம்பரம் கண்ணனூர் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டார், அங்கு அவர் ஜேம்ஸ் ஆலனின் ஆங்கில நாவலான ஆஸ் எ மேன் திங்கெத் தமிழில் மொழிபெயர்த்தார். அவர் ஒரு சிறந்த எழுத்தாளர் மற்றும் திறமையான பேச்சாளர். தனது சுயசரிதையில், வாஞ்சிநாதனை அவர் பெரிதும் பாராட்டினார்.[12]

அக்டோபர் 1905 இல், மும்பை தேசிய கூட்டுறவு சங்கம் அதன் உறுப்பினர்களில் ஒருவரை சுதேசி இயக்கம் குறித்த விரிவுரை களை வழங்க திருநெல்வேலிக்கு அனுப்பியது. 'நிர்வாகிகளை நீதித் துறையிலிருந்து பிரித்தல்' போன்ற கருப்பொருள்களில் அவர் கருத்து தெரிவித்தார். இந்தியர்களுக்கு உயர் மட்ட நியமனங்களில் சமமான விகிதாச்சாரத்திற்கான விருப்பம், அத்துடன் இந்திய இராணுவ செலவைக் குறைத்தல். இந்த விரிவுரைகள் தனிநபர்கள் தேசிய அளவில் விவாதிக்கப்படும் பாடங்களைப் பற்றி மேலும் அறிய வாய்ப்பளித்தன. ஜி. சுப்பிரமணிய ஐயர் சுதேசி ஆண்டு மாநாட்டிற்கு தலைமை தாங்க தூத்துக்குடிக்கு ஆகஸ்ட் 1906 இல் வருகை தந்தபோது மாவட்டத்தில் சுதேசி இயக்கம் ஒரு ஊக்கத்தைப் பெற்றது. 1908 இல் திருநெல்வேலியில் ஐரோப்பிய சர்க்கஸ் குழுவான ஏபெல் சர்க்கஸ் விளையாடியபோது,

உள்ளூர்வாசிகள் அதை முற்றிலும் புறக்கணித்தனர், ஏனெனில் அது வெளிநாட்டு சர்க்கஸ். நாகப்பட்டினம் மற்றும் பிற நகர மக்கள் திருநெல்வேலியின் முன்மாதிரியைப் பின்பற்றி சர்க்கஸைப் புறக்கணித்தனர்.[13]

கோரல் மில் ஸ்டிரைக்:

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், திருநெல்வேலி பகுதியில் அம்பாசமுத்திரம், தூத்துக்குடி மற்றும் கோயில்பட்டி உள்ளிட்ட மூன்று பெரிய நூற்பாலைகளை நிறுவினர். இந்த ஆலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் மோசமான வேலை நிலைமைகளை எதிர்கொண்டனர். பிப்ரவரி 27, 1908 அன்று, தூத்துக்குடி கோரல் மில்ஸில் உள்ள தொழிலாளர்கள் வேலை நேரத்தைக் குறைத்து சம்பள உயர்வு கோரி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

வ.உ.சிதம்பரம் பிள்ளை தொழிலாளர்களின் கோரிக்கையை ஆதரித்தார். வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்களின் பொது பங்களிப்புகளால் நிவாரண மையங்கள் நிறுவப்பட்டன. ஒரு நாள், பாளையங்கோட்டை சாலையில் வாகனம் ஓட்டும்போது, ஹார்வி சகோதரர்கள், மில்களின் உரிமையாளர்களை அணுகி, கற்களை வீசி எறிந்தனர். குறிப்பிடத்தக்க வகையில், கூட்டத்தில் ஒருவர் கூட மில் தொழிலாளி இல்லை. இது வேலைநிறுத்தத்திற்கு மக்கள் அனு தாபத்தை வெளிப்படுத்தியது. தூத்துக்குடி மற்றும் அதைச் சுற்றியுள்ள ஆலைகள் மற்றும் தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்கள், தமிழ்நாடு முழுவதும், கோரல் மில் தொழிலாளர்களுடன் தொடர்ந்து ஒற்றுமையைக் காட்டினர்.[14]

மார்ச் மாத தொடக்கத்தில், பர்மா எண்ணெய் நிறுவன ஊழியர்கள் இருவர் தாக்கப்பட்டதை அடுத்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். நிர்வாக உறுப்பினர் ஒருவர் வீராசாமி நாயுடு மற்றும் ஜியோபாலசாமி நாயுடு ஆகியோரிடம் பேசினார். இரண்டு தொழிலாளர்களையும் தாக்கிய நபரை பணிநீக்கம் செய்யக் கோரி, தொழிலாளர்கள் மாவட்ட நீதிபதியிடம் புகார் அளித்தனர். திருநெல்வேலி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரின் கூற்றுப்படி. பி.பி. ஸ்வீட்டிங்கின் கூற்றுப்படி, இந்த வேகமாக வளர்ந்து வரும் போராட்டத்திற்கு முக்கிய காரணம், பொதுவில் மட்டுமல்ல, பல திரைக்குப் பின்னால் நடந்த முயற்சிகளிலும் தேசத்துரோக பிரசங்கம் ஆகும். அவரது அறிக்கை கூறுகிறது, ‘எனக்குத் தெரிந்தவரை, இந்த விரிவுரைகள் கீழ் வகுப்பினருக்கு ஐரோப்பியர்கள் மற்றும் அரசாங்க ஊழியர்களின் அதிகாரம் மீதான அவர்களின் மரியாதையைக் குறைப்பதாகும். சில மாணவர்கள் விரிவுரைகளில் உள்ளடக்கப்பட்ட தலைப்புகளைப் பற்றி விவாதிக்க அமர்வுகளில் கலந்து கொண்டனர், ஆனால் சிலருக்கு அவர்களைப் பற்றி அதிக அறிவு இருந்தது. அவர்கள் விரிவுரையாளர்களை தைரியமான தேசபக்தர்களாகக் கருதி, அவர்களை மதிக்கிறார்கள், அவர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்ள வழிகாட்டுகிறார்கள் என்று உணர்கிறார்கள்.’15

துணை நின்றவை:

1. பட்டாபி சீதாராமையா.பி, 'இந்திய தேசிய காங்கிரஸின் வரலாறு', தொகுதி. I, மெட்ராஸ், 1935, ப. 162.
2. மணிமேகலை பப்ளிஷர்ஸ், சிதம்பரனார் மாவட்டம், (தமிழ்), சென்னை, 1987, ப.60.
3. நிர்மல். சி.ஜே., பத்தொன்பதாம் நூற்றாண்டு பத்திரிகை மற்றும் இந்திய தேசியவாதத்தின் வளர்ச்சி, மெட்ராஸ், 1979, ப.79.
4. ஆலடி வைத்தி கிருஷ்ணமூர்த்தி, இந்தியாவில் சுதந்திர இயக்கம், 1858-1947, ஹைதராபாத், 1947, ப.30.
5. பாலிகா. பி.எஸ்., மெட்ராஸ் சுதந்திரப் போராட்டம், மெட்ராஸ், 1957, பக்.48-56.
6. ராஜேந்திரன். என், தமிழ்நாட்டில் தேசிய இயக்கங்கள் 1905-1914, சென்னை, 1994, ப.46.
7. G.O. 647 - 648 பொது தேதியிட்ட 4 செப்டம்பர் 1907.
8. 1908 ஜூன் 20, 21 மற்றும் 22 ஆகிய தேதிகளில் திருநெல்வேலியில் நடைபெற்ற XIV மெட்ராஸ் மாகாண மாநாட்டின் பிரதிநிதிகள் சார்பாக அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட நினைவுச்சின்னம்.
9. G.O.No.842-43, பொது (ரகசியமானது), 15 செப்., 1918.
10. G.O.No. 842-43, நீதித்துறை, 18 ஜூன் 1908; அரசாணை எண். 913, நீதித்துறை (கான்ஃபரன்ஸ்), 2 ஜூலை 1908.
11. G.O.No.913, நீதித்துறை (Conf.), 2 ஜூலை 1908; G.O.No.1542, நீதித்துறை (Conf.), 3 அக்டோபர் 1911.
12. G.O.No.1542, நீதித்துறை (கான்ஃப்.), 3 அக்டோபர்.1911; அரசாணை எண். 842-43, நீதித்துறை, 18 ஜூன் 1908; டைம்ஸ் ஆஃப் இந்தியா, மார்ச் 7 மற்றும் ஏப்ரல் 11, 1908.
13. G.O.No.1542 நீதித்துறை (கான்ஃபரன்ஸ்) 3 அக்டோபர்.1911; தி இந்து, 5, 6 மற்றும் 12 மார்ச்.1908.
14. G.O.Nos.842-43, நீதித்துறை, 18 ஜூன் 1908; B.S.Baliga, சென்னை நிர்வாகத்தில் ஆய்வுகள் தொகுதி.1 (மெட்ராஸ், 1960), பக்.5-6.
15. தி இந்து, 6 ஏப்ரல்.1908; அரசாணை எண்.1542, நீதித்துறை (கான்ஃப்.), 3 அக்டோபர்.1911.

60

திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும்

நா. தரணிப்பிரியா
நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, அரச்சலூர், ஈரோடு.

முன்னுரை:

கி.பி. 1908 ஆம் ஆண்டு நடந்தது திருநெல்வேலி எழுச்சி ஆங்கிலேயரின் வார்த்தைகளில் கலகம். இந்த மாபெரும் மக்கள் எழுச்சியை நம் கண் முன்னே படம் பிடித்துக் காட்டுகிறது. சமூக வரலாற்றுச் சூழலில் ஒரு மின்னல் கீற்றுப் போல தெறித்துப் பறந்துபட்ட மக்களின் எதிர்ப்புணர்வை திருநெல்வேலி தூத்துக்குடி எழுச்சி வெளிப்படுத்துகிறது.

ஆசிரியர் ஆ. இரா. வெங்கடாசலபதி முழு நேர வரலாற்று ஆய்வாளர் போல தன்னை மாற்றிக்கொண்டு முதலில் வ.உ.சி. கடிதங்கள் என்ற நூலைத் தொகுத்த வேகத்தில் வ.உ.சி. யின் வரலாற்றையும் முழுமையாக எழுதி முடிக்க வேண்டும் என்ற நோக்கில் 1984 ஆகஸ்ட் மாதத்தில் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திற்குள் நுழைந்தார்.

1987 மார்ச் மாதத்தில் வெளிவந்த இந்த நூல் தனித்தலைவரின் கதையாக அல்லாமல் மொத்த தமிழ்ச் சமூகத்தின் வரலாறாக அமைந்தது வ.உ.சி. திருநெல்வேலி எழுச்சி என்பது ஒரே ஒரு நிகழ்வை பல்வேறு வளமான எழுத்து ஆவணங்களைக் கொண்டு எழுதி இருப்பது வரலாற்றிலேயே வியக்கத்தக்கதாக அறியப்படுகிறது.

எழுச்சி நாள்:

ஆங்கிலேயர்களால் கலகம் என்று வர்ணித்த அந்தநாள் 1908 ஆம் ஆண்டு மார்ச் பன்னிரண்டாம் நாள் முக்கிய போராட்ட வீரர்களான வ. உ. சிதம்பரம்பிள்ளை, சுப்பிரமணிய சிவா, பத்மநாப ஐயங்கார் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். சுதேசி இயக்கம் தொடங்கப்பட்ட காலங்களில் முதன் முதலில் நடைபெற்ற கலகம் என்பது சென்னை மாகாணத்தில் காக்கிநாடாவில் நடந்தது. அதனைத் தொடர்ந்து தமிழகத்தில் நிகழ்ந்த முதல் எழுச்சி திருநெல்வேலி எழுச்சியாகும்.

சுதேசி இயக்கமும் வ.உ.சி.யும்:

1905 ஆம் ஆண்டை தொடர்ந்து எழுந்த சுதேசி இயக்கம் நாடெங்கும் தொடங்கப்பட்டது. 1906 ஆம் ஆண்டு தூத்துக்குடி கொழும்பு துறை முகங்களுக்கிடையே இயங்கிய வாடகை கப்பல் கொண்டு தூத்துக்குடி வணிகர்கள் போக்குவரத்தை தொடங்கினர். இதனை குறித்து முதன் முதலாக வந்த பத்திரிகை செய்தியில் வ.உ.சி. யின் பெயர் வெளி யாகியுள்ளமையால் முதலிருந்தே சுதேசி கப்பல் கம்பெனியுடன் அவரது பங்கு தொடங்கிவிட்டமை தெளிவாகின்றது. 1908 ஜனவரியில் வீரமிக்க

சொற்பொழிவுகளை சிவா ஆற்றினார். இவற்றுள் பல வ.உ.சி. யின் தலைமையில் நிகழ்ந்தன. திருநெல்வேலியில் நடந்த போராட்டத்தின் விளைவாக வ.உ.சி.யும் பிறரும் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து கோரல் ஆலைத் தொழிலாளர் என பலர் அவருக்கு ஆதரவாக வந்தேமாதரம் என்று முழக்கமிட்டனர்.

தொடர்ந்து இரண்டாவது நாள் தச்சநல்லூரில் மக்கள் எழுச்சி ஏற்பட்டது என்று, 'சுதேசமித்திரன்' பத்திரிகை கூறுகிறது. தூத்துக்குடியில் கடைகளை மூடிவிட்டு நெல்லைக்கு விரைந்த வணிகர்கள் நெல்லையில் இருக்கும் வணிகர்களிடம் சிதம்பரம் பிள்ளை சிறையில் இருக்கும் போது நீங்கள் அனைவரும் இப்படி வணிகம் செய்வது தவறு என இடித்துரைத்து எழுச்சியை தொடங்கினார்கள். மேலும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் கூட ஆதரவு தெரிவித்தனர். 1908 மார்ச் 13ஆம் நாள் தொடங்கிய எழுச்சி எப்போது முடிவடைந்தது என்பதை தெளிவாகப் புலப்படவில்லை ஆனால் கடைகளில் அனைத்தும் தொடர்ந்து மூன்று நான்கு நாட்கள் மூடப்பட்டு இருந்தனவென்று புலனாகிறது. எழுச்சியின் போது நடந்த நிகழ்வுகள் பற்றியும் மக்கள் இயங்கிய முறை பற்றியும் பல்வேறு இதழ்கள் குறிப்பிடுகின்றன. .எழுச்சியில் திருநெல்வேலியில் நான்கு பேர் இறந்து போயினர் ஆனால் தூத்துக்குடியில் எவரும் இறக்கவில்லை என்ற செய்தியும் இதழ்கள் வாயிலாக அறிய முடிகிறது.

எழுச்சியின் எதிரொலி:

காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா என்ற 18 வயது நிரம்பிய இளைஞர் எழுச்சி நிகழ்ந்த நகரத்தில் இருந்து கரூர் வந்தார். பின்னர் ஒவ்வொரு நாளும் மாலை சுதேசி சொற்பொழிவு நிகழ்த்தினார். அதில் மார்ச் 17ஆம் நாள் அவர் பேசிய சொற்பொழிவு தான் மேலும் குறிப்பிடத்தக்கதாகும். ஏனென்றால் அன்று அவர் ஆற்றிய சொற்பொழிவில் சுதேசி முயற்சிகள் தூத்துக்குடியில் பயமில்லாமல் தைரியத்துடன் கை கொள்ளப் பட்டுள்ளன. ஆனால், இங்கு கரூரில் உற்சாகமே இல்லை என்ற அவரின் சொற்பொழிவுக்காக அரசாங்கம் அவர் மீது அரசு குற்ற வழக்கு தொடர்ந்தது. தண்டனை வழங்கியது அதனைத் தொடர்ந்து திருவனந்தபுரத்திலும் கலகம் ஏற்பட்டது. எழுச்சி நடந்த போது பல இடங்களை எதிர்த்து சூறையாடியவர்களையும் இன்னும் பலரையும் கைது செய்தது. அதில் திருநெல்வேலியில் 57 பேர் தூத்துக்குடியில் 36 பேர் எழுச்சியில் குற்றம் சாட்டப்பட்டதால் ஏட்டு குருநாதர் ஐயர் என்பவர் தனது பணியில் இருந்து விடுப்பு எடுத்துக்கொண்டு சுதேசி இயக்கக் கப்பல் கம்பெனியில் சரக்கு அலுவலர் பொறுப்பில் ஈடுபட்டார். இதேபோல லோகநாத ஐயர், சங்கரநாராயண ஐயர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். கைதானவர்கள் எவரேனும் மேல்முறையீடு செய்தால் அவர்களை தடுக்க ரீமண்டு நியமிக்கப்பட்டார். 1858 ஆம் ஆண்டு பிரிட்டனின் நேரடி ஆட்சிக்கு இந்தியா வந்தது. அப்போது கைதிகளுக்கான தண்டனை சற்று குறைக்கப்பட்டது.

திருநெல்வேலி எழுச்சியில் தூதுக்குழு:

கே.ஆர்.குருசாமி ஐயரின் தலைமையில் ஐவரைக் கொண்டு தூதுக்குழு ஆளுநரை சந்தித்து தூத்துக்குடியில் அமர்க்கப்பட்ட தண்டக்காவல் படையை பராமரிக்கும் பொருட்டு விதிக்கப்பட்ட வரியை எதிர்த்து மனு அளித்தனர்.1907 ஆம் ஆண்டில் சூரத் காங்கிரஸில் தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்கும் இடையே பெரும் பிளவு ஏற்பட்டு இருந்தது திலகரின் ஆதரவாளரான வ.உ.சி. இம்மாநாட்டில் கலந்து கொண்டமையும் அவருடன் கே.ஆர்.குருசாமி ஐயரும் இதில் பங்கு கொண்டார். ஆளுநர் தூதுக்குழுவின் கோரிக்கைகள் எவற்றுக்கும் செவி சாய்க்கவில்லை.

எழுச்சியால் உண்டான அழிவும் பாதிப்பும்:

திருநெல்வேலி நகரில் துணைப்பதிவாளர் அலுவலகம் தவிர்த்து பொதுக்கூட்டங்கள் அனைத்தும் மக்களின் சினத்துக்கு இலக் காயின. ‘பல்வேறு சேதத்துக்கு உள்ளானவற்றுக்கு; தண்ட தீர்வை தண்டவிலிருந்து பெறப்பட்ட பணத்திலிருந்து இழப்பீடு வழங்கப்பட்டது’, என்ற செய்தியை அரசு ஆவணங்கள் தெளிவுபடுத்துகின்றன. கலகம் நடக்கும் இடத்தில் அமைதி நிலவ வேண்டும் என்று தண்டகாவல் படை நிறுவப்பட்டது. அத்தகைய தண்டகாவல் படைக்கான தொகை யும் மக்கள் மீது திணிக்கப்பட்டது. ஆறு திங்கள் இப்படை செயல் பட்டது. தண்டதீர்விலிருந்து சிலருக்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட்டது. எழுச்சியின் போது சிறப்பாக பணியாற்றியமைக்காக பரிசுகள் வழங்கப்பட்டது. மேலும் கலகம் உண்டானதற்கு வெள்ளை அதிகாரிகளின் ஒடுக்குமுறையே காரணம் என்று பல பத்திரிகைகள் குறிப்பிடுகின்றன.

வ.உ.சி. கைது செய்யப்பட்டதை தொடர்ந்து தான் எழுச்சி நிகழ்ந்ததை பல ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. மேலும் வ.உ.சி. கைது செய்யப்பட்ட அடுத்த நாளே குருநாத ஐயரும் கைது செய்யப்பட்டார். கைதானவர்களுக்கு விசாரணை நடத்தப்பட்டு தண்டனை வழங்கப் பட்டது. இரண்டரை ஆண்டுகள் கோவை சிறையில் கழித்து விட்டு கண்ணனூர் சிறைக்கு மாற்றலாகி வ.உ.சி. வந்தார். எத்தகைய மக்கள் இயக்கமாக இருந்தாலும் உணர்ச்சி மிகுதியினால் சில வன்முறை நிகழ்வுகள் நடைபெறுவது இயற்கை. இயக்கத்தை வழிநடத்திச் செல்வோர் இந்த வன்முறை நிகழ்ச்சிகளுக்கு பொறுப்பேற்காவிட்டாலும் அதற்கு பின்னணியாக இருந்த மக்களின் உணர்வுகளை மதிக்கத் தான் செய்வார்கள். அடிமைத்துயிலில் ஆழ்ந்திருந்த இந்திய திருநாடு விழித்தெழ பாடுபட்ட தமிழ் மண்ணின் முக்கிய தளபதிகளில் வ.உ.சி. முதன்மையானவர். வீரமிகுந்த தீரச் செயல்களால் ஆங்கிலேயர்கள் அஞ்சும்படி படை நடத்தி பேச்சாலும் செயலாலும் வெள்ளையர் கண்களில் விரல்விட்டு ஆட்டியவர்.

இந்திய தேசிய காங்கிரஸ் மகா சிறப்பு சபையில் வ.உ.சிதம்பரத்தின் உட்கட்சிப் போர் முழக்கம் கேட்டு; காங்கிரஸ் மாநாடு திணறியது

நாட்டு விடுதலைக்கு இந்திய மண்ணிலே தியாகத்தை விதைகளாகத் தெளித்து பயிரிட்டு அறிவியல் வித்தகர் வ.உ.சி. மேலும் இரண்டு ஆயுள் தண்டனைகளை பெற்ற வீர நாயகன் யாருமே இந்திய வரலாற்றிலே இல்லை.

'திரைகடலோடி திரவியம் தேடு' என்பதற்கு எடுத்துக்காட்டாக கப்பலோட்டும் கலை தமிழர்களுக்கு உரிய ஒரு பாரம்பரியமிக்கது என்பதற்கு சான்றாக மூவேந்தர்களில் ஒரு பிரிவினரான சோழ சாம்ராஜ்யம் மன்னர்கள் பணம் வாய்ந்த தங்களது கப்பற்படைகள் கடாரம், சாவகம், இலட்சத்தீவுகள், சிங்களம் போன்ற நாடுகளை வென்றார்கள், என்ற வரலாறுகளுக்கு சான்றாக தமிழ்நாட்டின் ஒரு குக் கிராமத்தில் பிறந்த சிதம்பரம் பிள்ளை தன்னந்தனி மனிதனாக நின்று கப்பலோட்டினார்; இந்திய விடுதலைக்காக தனது உடல் பொருள் ஆவி அனைத்தையும் நாட்டுக்கும் நாட்டு மக்களின் வாழ்வுக்கும் தியாகம் செய்வது ஒன்றே தனது பிறப்பின் கடமை என்ற தேசபக்தர் அவர்.

முடிவுரை:

தேசபக்தர்சிதம்பரனார்மற்றும்சிவாஎன்றஇருபெரும்மாமனிதர்களின் செல்வாக்கு மக்களிடையே நாளுக்கு நாள் அதிகமாக நம்பிக்கையை ஏற்படுத்தியது இதனை பார்த்து அஞ்சிய ஆங்கிலேயர் ஆட்சிக்கு ஆபத்தை உண்டாக்கும் என்பதை எண்ணி அந்த மாமனிதர்களை கைது செய்ய முடிவுக்கு வந்தனர். இதனால் தான் கலவரமும் கலகமும் பரவியது.

மேலும் சிதம்பரனார் வெள்ளையரது வாணிபத்தை எதிர்த்து கப்பலோட்டியது ஒரு குற்றம்; அனுமதி இன்றி பொதுக்கூட்டம் நடத்தியது இரண்டாவது குற்றம்; பாமர மக்களை வந்தே மாதரம் என்று முழக்கங்களை எழுப்பவைத்தது மூன்றாவது குற்றம், என்ற மூன்று குற்றங்களையும் செய்தார் என்ற காரணங்களை காட்டி அவருக்கு 40 ஆண்டுகள் தீவாந்தர தண்டனையை விதித்தது பிரிட்டிஷ் அரசு. இப்படிப்பட்ட மாவீரன் விடுதலை வீரர் வ.உ.சி.க்கு 1939 ஆம் ஆண்டில் சென்னை ராயப்பேட்டை காங்கிரஸ் மண்டபத்தில், சிதம்பரம் பிள்ளையின் ஒரு சிலையை அமைத்து விழா எடுத்தார்கள்.

பார்வை நூல்கள்:

1. வ.உ.சி.யும் திருநெல்வேலி எழுச்சியும்- ஆ.இரா. வெங்கடாசலபதி, மக்கள் வெளியீடு, 1987.
2. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் - என்.வி.கலைமணி., சாந்தி நிலையம், 2001
3. சுதேசிமித்ரன் இதழ் தொகுப்பு- கலைஞன் பதிப்பகம் வெளியீடு, 2004
4. தியாகி சுப்ரமணிய சிவா கடிதங்கள் - இரா. சிசுபாலன்., பாவை பப்ளிகேஷன்ஸ், 2012

61

பொருளாதாரப் பார்வையில் வ.உ.சிதம்பரனாரின் சுதேசியக் கப்பல்

முனைவர் பூ. சின்னத்துரை,
பொருளாதார ஆய்வாளர், திருநெல்வேலி மாவட்டம்.

ஆய்வுச்சுருக்கம்:

இன்று நாம் பங்குச் சந்தையைப் பற்றியும் அதன் செயல்பாடுகளையும் விளக்கங்களையும் தெரிந்து செயல்படுகின்றோம், ஆனால் அன்றைய காலக்கட்டத்திலேயே வ.உ.சிதம்பரனார் பங்குச் சந்தை என்பதை நிரூபித்து பல பங்குதாரர்களை உருவாக்கி சுதேசிய ஸ்டீம் நேவிகேஷன் நிறுவனம் என்பதை உருவாக்கி அதன் மூலம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே ஒரு வணிகக் கப்பலை உருவாக்கி பொருளாதார அடிப்படையில் ஆங்கிலேய அரசுக்கு எதிராகச் செயல்பட்டு அதன் மூலம் சுதந்திர வேட்கையை உருவாக்கியவர். சுதேசிக் கப்பலின் பொருளாதாரச் செயல்பாடுகளும் அதை நிறுவுவதற்கு வ.உ.சி. மேற்கொண்ட பொருளாதார முடிவுகளும் அதனை ஆய்வு செய்து பொருளாதாரம் பார்வையில் சுதேசி கப்பலைப் பற்றிய ஒரு சிறிய ஆய்வாக இது அமைகின்றது.

திறவுச்சொற்கள்: சுதேசி கப்பல், தொழிற்சங்கங்கள், சுதந்திரம், பங்குதாரர்கள், வணிகம், நிறுவனம், அமைப்பு, வியாபாரம், பொருளாதாரம், ஆங்கிலேயர்கள், பயணம்.

முன்னுரை:

வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள் உருவாக்கிய கப்பல் நிறுவன மான சுதேசிய கப்பல் என்று அழைக்கப்படும் சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் நிறுவனத்தின் பொருளாதார முன்னேற்றம் எவ்வாறு செயல்பட்டது மற்றும் அதில் உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஆராய்ந்து அந்த நிறுவனத்தின் பங்குதாரர்களின் பங்குகளையும் அந்த நிறுவனம் எவ்வாறு செயல்பட்டது பொருளாதார அடிப்படையில் அதன் முன்னேற்றம் என்ன? அது பின்னடைவை சந்திப்பதற்கான காரணம் என்ன? என்று பல வகையாக ஆராய்வதற்காக இந்தக் கட்டுரை எழுதப்படுகிறது. பொருளாதார வசதி மிக்க மற்றும் ஏழை எளிய மக்களும் பல பங்குதாரர்களைக் கொண்டு இந்த நிறுவனம் உருவாக்கப்பட்டது இதன் சிறப்பாக அமைகிறது.

சுதேசிய கப்பல் உருவாகிய வரலாறு:

தென்னிந்தியாவின் திலகர் என்று போற்றப்பட்ட வ.உ.சி. தலைமையேற்று நடத்திய சுதேசி இயக்கத்தின் எழுச்சி, அது சந்தித்த

ஒடுக்குமுறையின் நுணுக்கமான வரலாறு இது. ஆட்சி அதிகாரமும் கொடுங்கோன்மையும் வல்லமையும் கொண்டிருந்த பிரிட்டிஷாரின் அரசியல் ஆதிக்கம், வர்த்தக ஆதிக்கம் இரண்டையும் நேருக்கு நேராகச் சந்தித்து மோதுவதற்குத் தமிழ்நாட்டின் தென்கோடி ஊரொன்றில், சாதாரண வழக்கறிஞர் ஒருவர் மேற்கொண்ட முயற்சிதான் 'சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் நிறுவனம்'.

தென்னிந்தியாவின் கலாச்சார, வர்த்தக, ஊடகத் தலைநகரமாக இருந்த மெட்ராஸிலிருந்து அல்ல, இன்றைக்கும் அன்றாடத்தின் மந்தகதியில் பெரிய சம்பவங்களின்றி வரலாற்று நிசப்தத்தில் தென்னகத்தின் மூலையிலிருக்கும் இரண்டு சிறுநகரங்களான தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகியவற்றை மையமாகக் கொண்டு மிகச் சாமானிய மக்களும் ஆங்கிலேயரை எதிர்த்த சுதேசி இயக்கத்தின் மாபெரும் நிகழ்வுகளில் ஒன்றுக்குத் தூண்டிய வ.உ.சி.யின் கனவுத் திட்டம், கப்பல்களின் தரம், தொழில்நுட்ப அம்சங்கள் எதுவுமே அறியாத நிலையில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கப்பல் போக்கு வரத்தில் கோலோச்சிக் கொண்டிருந்த 'பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி'யின் லாபநோக்கு மற்றும் வர்த்தக நலன்களுக்கு சில ஆண்டுகள் அச்சுறுத்தலைக் கொடுத்த கப்பல் நிறுவனத்தின் பத்து கிராம் தங்கம் 90 ரூபாய்க்கு விற்ற காலத்தில் தூத்துக்குடியில் சில நூறு ரூபாய்களை மாத வருவாயாகச் சம்பாதிக்கக்கூடிய வழக்கறிஞராக இருந்த வ.உ.சி என்ற பிரமுகரின் இளமையையும் ஆற்றலையும் உறிஞ்சி, துயரங்களையும், அல்லல்களையும், வெளிச்சமே பார்க்க இயலாத இருண்ட பிற்கால வாழ்க்கையையும், சுதேசியக் கப்பலின் பொருளாதார செயல்பாடுகளைப் பற்றியும் அதன் உருவாக்கம் பற்றியும் ஆராய்வோம்.

'சுதேசியம் ஒன்றே சுகம்பல அளிக்கும்
இதேஎன் கடைப்பிடி' என்றனன். அவனுரை
வித்தென விழுந்தது மெல்லிய என்னுளம்
சித்தம் அதனைச் சிதையாது வைத்தது' *(வ.உ.சி. யின் சுயசரிதை)*

வ.உ.சி., சுதேசி இயக்கத்தைத் தலைமையேற்று நடத்தியதால் அடைந்த துயரங்களைப் பார்க்கும்போது 'சுகம்பல அளிக்கும்' என்று உரைக்கப்பட்டது. ஆனால், வ.உ.சி தான் எடுத்துக்கொண்ட பொதுப் பணியால் அவரது லௌகீக வாழ்க்கையின் மைய அச்சே முறிந்து போனாலும், சுதந்திரப் போராட்ட வரலாற்றில் வீரமும் தீரமும் சாகசமும் நேர்மையும் நற்பண்பும் கருணையும் கொண்ட மாவீரராகவே அவரைக் காலம் தன் இதயத்தில் பொறித்திருக்கிறது.

தூத்துக்குடியில் தருமசங்க நெசவுசாலை, தேசியப் பண்டகசாலை ஆகிய அமைப்புகளின் மூலமும் ,கடற்கரையிலும் திருநெல்வேலி தாமிரபரணிக் கரையிலும் நடத்திய பௌர்ணமிக் கூட்டங்களின் மூலமும்

சுதேசி இயக்கப் பணிகளைத் தொடங்கிய வ.உ.சி., 1906-ம் ஆண்டு அக்டோபர் மாதம் ‘சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி’ நிறுவனத்தைப் பதிவு செய்தார்.

சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி:

இந்தக் கம்பெனியானது 1882-ல் இந்தியன் கம்பெனி ஆக்டின்படி 1906-ம் அக்டோபர் 16 யில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. இந்தக் கம்பெனிக்கு மூலதனம் ரூ. 10,00,000, இம்மூலதனம் பங்கு, 1-க்கு ரூ. 25-0-0 வீதம் 40,000 பங்குகளாக இந்தியா, இலங்கை முதலிய ஆசியக் கண்டத்துத் தேசத்தார்களிடமிருந்து சேர்க்கப்படும். மூலதனம் வேண்டும்போது அதிகரிக்கப்படும். பங்காளிகள் அவரவர்கள் பங்குத் தொகை மட்டில் உத்திரவாதிகள்.

கம்பெனியின் முக்கிய அலுவலர்கள்:

தலைவர்கள்:

ஸ்ரீமான். பொ. பாண்டித்துரைச்சாமித் தேவர், பாலவநத்தம் ஜமீன்தார்.

இயக்குநர்கள்:

ஸ்ரீ பி. வெங்கட்டராமாநுஜலு நாயுடுகாரு, பேங்கர், தூத்துக்குடி, சி. விஜயராகவாச்சாரியாரவர்கள் பி.ஏ., வக்கீல், சேலம், ஏ. சுந்தர சாஸ்திரியாரவர்கள், பி.ஏ. பி.யல்., திருநெல்வேலி பாலம்

செயலாளர்கள்:

எஸ். டி. கிருஷ்ண அய்யங்காரவர்கள் பி, ஏ. பி. எல்., தூத்துக்குடி, கௌரவக் காரியதரிசி

வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்கள் தூத்துக்குடி, துணைக்காரிய தரிசி என 31 பேர் இருந்தனர்.

தணிக்கையாளர்கள்:

பி.கே.இராமய்யரவர்கள், பி.ஏ.பி.யல். கௌரவ ஆடிட்டர், திருநெல் வேலி பாலம்.

கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் தற்காலம் தூத்துக்குடி பீச்சு ரோடு 4-ம் நம்பர் கட்டிடத்தில் அமைக்கப்பெற்றுள்ளது.

தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்கு தேயிலைத் தோட்டப் பணியாளர்களையும் சரக்கு, கால்நடைகளையும் ஏற்றிச்செல்லும் வர்த்தகத்தில் ஏகபோகமாக இருந்த ‘பிரிட்டிஷ் இந்தியா நேவி கேஷன்’ நிறுவனம், ஆங்கிலேய அரசோடு சேர்ந்து தூத்துக்குடி வர்த்தகர்களுக்கு விதித்த கெடுபிடிகளும் இனவாத நடவடிக்கைகளும் தென்மாவட்டங்களிலுள்ள வர்த்தகர்களுக்கு ஏற்கெனவே அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தன.

இந்தப் பின்னணியில்தான் தங்கள் தொழில், வர்த்தகத்துக்கென்றும் சுதேசி அரசியலையும் வலுப்படுத்தும் வண்ணம் வ.உ.சி.யின்

எண்ணத்தில் உதித்த திட்டம் இது பங்கு ஒன்றுக்கு 25 ரூபாய் வீதம் 40 ஆயிரம் பங்குகளை விற்று இந்நிறுவனத்திற்கு மூலதனமாக 10 லட்சம் திரட்ட முடிவுசெய்யப்பட்டது. முதல் நிலையில் 12 பேர் இயக்குநர்களாக இடம்பெற்றிருந்தனர்.

அவர்கள் தூத்துக்குடியைச் சேர்ந்த வர்த்தகர்கள் என்று குறிப்பிடப்படுகின்றனர். ஹாஜி ஃபக்கீர் முகம்மது சேட், எஸ். வி. நல்லபெருமாள் பிள்ளை, ஏ. எம். எம். அருணாசலம் பிள்ளை, எஸ். எஸ், வி. கிருஷ்ண பிள்ளை, சி.த. ஆறுமுகம் பிள்ளை, வேலாயுதம் பிள்ளை, ஆதிநாராயணச் செட்டியார், வெங்கடாசலம் செட்டியார், முகைதீன் காதிர்ஷா மரக்காயர், அந்தோணி சவரிமுத்து ரோட்ரிக்ஸ், எம். வி. மாய நாடார், எம். எச். ஏ. ரஹிமான் சேட் ஆகியோர்.

சுதேசிக் கப்பல் நிறுவனத்தின் தலைவராக மதுரை நான்காவது தமிழ்ச் சங்கத்தை நிறுவிய பாண்டித்துரைத் தேவர் விளங்கினார். வ.உ.சி. யின் சுதேசிக் கப்பல் கனவுக்குப் பெரும் நஷ்டத்தையும் பலியையும் சந்தித்தவர் பாண்டித்துரைத் தேவர். ஒன்றரை லட்சம் பணத்தைக் கொடுத்திருக்கிறார். சுதேசி கப்பல் நிறுவனம் வீழ்ந்தவுடனேயே அவரும் மாரடைப்பில் பலியானார். பாரதியின் ‘இந்தியா’ பத்திரிகை அதிபரான மண்டையம் சீனிவாச்சாரியின் குடும்பமும் சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் நிறுவனத்தை நிலைநிறுத்தி, பெரும் வீழ்ச்சியையும் பண நஷ்டத்தையும் சந்தித்தது.

வழக்கறிஞராகக் கொடிகட்டிப் பறந்த சி. விஜயராகவாச்சாரியும் வ.உ.சி. மேல் கொண்ட மதிப்பும் பக்தியும் காரணமாக நிறைய நஷ்டங்களைச் சந்தித்தவர். ராஜாஜி ஆயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறார். பெரியார் தனது சொந்தப் பணமாக 5 ஆயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறார். அத்துடன் தனது முஸ்லிம் வியாபார நண்பர்களிடம் கேட்டு 30 ஆயிரம் ரூபாயை தனது சார்பில் வழங்கியுள்ளார்.

மருத்துவரும் இசையறிஞருமான தஞ்சை ஆபிரகாம் பண்டிதரும் தொடக்க நிலையில் பங்குகளைப் பெற்றவர்களில் ஒருவர். பாரதியும் தனது லட்சிய வேகத்தால் சுதேசி கப்பல் நிறுவனத்துக்காக நேரடி யாகப் பங்குகளைப் பெறுவதில் முன்நின்று கட்டுரைகள் பலவற்றை உணர்ச்சிகரமாக எழுதியுமுள்ளார். பாரதியின் தந்தையும் பஞ்சாலை நிறுவனம் நிறுவி தனது சொத்துகளை இழந்தவர் என்பது குறிப் பிடத்தக்கது. வ.உ.சி. மீது பாரதிக்கு ஏற்பட்ட விசேஷ பிரியத்துக்கு இந்தப் பின்னணியும் காரணமாக இருக்கலாம் என்று கூறுகிறார் நூலாசிரியர். இந்தத் துயர வரலாற்றில் அபூர்வமான இன்னொரு பெயரும் சம்பந்தப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். சுதேசி கப்பல் நிறுவனம் சிரமங்களைச் சந்திக்கத் தொடங்கி, வ.உ.சி.யும் அரச நிந்தனைக் குற்றச்சாட்டில் இரட்டை ஆயுள் பெற்று சிறைக்குச் சென்ற பின்னர், கர்சன் பிரபுவின் வங்கப் பிரிவினை நடவடிக்கையால் அங்கே தூண்டப்பெற்ற சுதேசி இயக்கத்தின் நடவடிக்கைகள் வடமாநிலங்களில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலான கலவரங்களாகவும்

உருமாறியுள்ளது. ஆனால் தென் தமிழ்நாட்டில் வ.உ.சி.யும் சுப்ரமணிய சிவாவும் முன்னெடுத்த சுதேசி இயக்கத்தில் தமிழ்நாடு மட்டுமின்றி கொழும்புவிலிருந்தும், தென்னாப்பிரிக்காவிலிருந்தும் முஸ்லிம் மக்கள் ஆதரவாகவும் பங்காளிகளாகவும் இருந்து செயல்பட்டுள்ளனர்.

வ.உ.சி., வர்த்தகத்துக்காக அல்ல, அரசியல் நடவடிக்கையாகவே சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார் என்ற உண்மையே அவர்களுக்குப் புலப்படவில்லை. சுதேசி கப்பல் நிறுவனத்தின் பொறுப்புகளிலிருந்தெல்லாம் விலகி சிறையில் வருந்திய நிலைமை யிலும் சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் நிறுவனத்தைச் சார்ந்தவர்களும் அதன் பாத்தியதாரர்களும் வ.உ.சி.க்குத் தொடர்ந்து கடித உறவில் இருந்திருக்கின்றனர். வ.உ.சி.யின் மேல் பக்திகொண்டு அவரைத் தண்டனையிலிருந்து விடுவிக்கவும் வழக்கு நடத்தவும் நிதிகளைச் சேகரித்திருக்கின்றனர். வ. உ.சி.யை தங்கள் நிறுவனத்தோடு அடை யாளம் காணக்கூட கூடாது என்று வெளியேற்றிய சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் நிறுவனம் நிலைகுலைந்து போனது.

தூத்துக்குடி செயற்கைத் துறைமுகம் என்பதால் ஆழமற்ற பகுதி யிலிருந்து ஆழமான பகுதியிலிருக்கும் கப்பலுக்குப் பயணிகளைக் கொண்டு சேர்க்கும் மிராண்டா என்றொரு படகையும் கூடுதலாக வாங்கியிருக்கிறது சுதேசி நாவாய் நிறுவனம்.

1907-ம் ஆண்டிலும் 1908-ம் ஆண்டிலும் பிரிட்டிஷ் இந்தியா நிறுவனத்துக்கு 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரையில் நஷ்டத்தை சுதேசிக்கப்பல் நிறுவனம் மாதம் தோறும் ஏற்படுத்தியிருக்கிறது. ஆனாலும் கப்பல் வர்த்தகம் பல்வேறு அடுக்குகளும் ஊடுபாவுகளும் வல்லமையும் சிக்கலான நிர்வாகமும் கொண்டது என்பதால் வ.உ.சி. யாலும் அவரது சகாக்களாலும் தொடரும் நஷ்டங்களைக் குறைக்க இயலவில்லை. எஸ். எஸ். காலியா, எஸ். எஸ். லாவோ இரண்டு கப்பல்களும் வாங்கிய விலைக்கான தரம் கொண்டவை அல்லவோ என்றும் ஆ. இரா. வேங்கடாசலபதி ஐயுறுகிறார்.

கப்பல்களை வாங்க வ.உ.சி. நம்பி அனுப்பிய வேதமூர்த்தி முதலியாருக்கும் கப்பல் பற்றி எதுவும் தெரியவில்லை. கொதிகலன்கள் அடிக்கடி தொந்தரவளிக்கின்றன. கப்பலுக்கான எரிபொருளான நிலக்கரியை வாங்குவதிலும் ஆங்கிலேய மாலுமிகள் ஊழலில் ஈடுபட்டு நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

சுதேசி கப்பல் நிறுவனத்தால் பாதிக்கப்பட்ட பிரிட்டிஷ் இந்தியா நிறுவனம் இலவசமாகவும் கூலி, சரக்குக் கட்டணத்தை அடிமாட்டு விலைக்குக் குறைத்தும் வ.உ.சி. யின் சுதேசிக் கப்பல் நிறுவனத்துக்குத் தொடர்ந்து தொல்லைகள் கொடுத்து வந்திருக்கிறது. சுதேசிக் கப்பல் நிறுவனத்தின் பங்குதாரர்களிடமும் பேசி அவர்கள் நம்பிக்கையைத் தொடர்ந்து சிதைத்துப் பலவீனப்படுத்தும் வேலைகளில் ஆங்கிலேயே ஆட்சியாளர்களும் சுதேசி நிறுவனம் இறுதிமூச்சை விடும்வரை மெட்ராஸ் தொடங்கி தூத்துக்குடி வரை செயல்பட்டுள்ளனர்.

கப்பலில் வீழ்ச்சி:

ஆங்கிலேயர்களின் வணிகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் கம்பெனி பொருளாதார சரிவுகளை சந்தித்தது. வணிகத்திற்காக மட்டும் உருவாக்கப்பட்ட பல நிறுவனங்கள் இதனுடன் போட்டியிடுவதால் சந்தையில் குறைந்த விலையில் வணிகப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கான கட்டணம் மற்ற நிறுவனங்களை விட குறைவானதாக இருந்ததால் பொருளாதார அடிப்படையில் சந்தையில் நிலைத்து நிற்க முடியாமல் சென்று விட்டது.

வ.உ.சி. 10 லட்சம் ரூபாய் முதலீட்டு பங்குகளை திரட்ட முயற்சி செய்தபோதும்அவரால்6லட்சம்முதலீட்டையேதிரட்டமுடிந்ததுஇதனால் வ.உ.சி. எஸ்.எஸ். காலியா, எஸ்.எஸ். லாவோ ஆகிய கப்பலைகளை வாடகை அடிப்படையில் வாங்கி, தூத்துக்குடிக்கும் கொழும்புக் கும் ஓட்டினார் என்பது வரலாற்றில் பதியப்பட்டுள்ளது.

தூத்துக்குடி செயற்கைத் துறைமுகம் என்பதால் ஆழமற்ற பகுதியில் இருந்து ஆழமான பகுதியில் இருக்கும் கப்பலுக்கு பயணிகளைக் கொண்டு சேர்ப்பதற்கு மிரண்டா என்றொரு படகையும் கூடுதலாக வாங்க வேண்டிய நிலை சுதேசிய நிறுவனத்திற்கு ஏற்பட்டது.

பிரிட்டிஷ் நிறுவனத்திற்கு மாதம் 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரை நஷ்டத்தை சுதேசி கப்பல் ஏற்படுத்தியதால் இதனை வீழ்த்துவதற்கு பிரிட்டிஷ் அரசால் பல பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொண்டதும் இக்கப்பலின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகும். கப்பலை இயக்குவதற்கு எரிபொருட்கள் முக்கியமான ஒன்றாக இருக்கிறது. அதை வாங்குவதில் ஆங்கிலேய மாலுமிகள் பல ஊழல்களில் ஈடுபட்டு இக்கப்பலை இயக்க முடியாமல் செய்வதற்காக பல நஷ்டத்தை ஏற்படுத்தினர்.

பிரிட்டிஷ் நிறுவனம் இலவசமாகக் கூலி மற்றும் சரக்குக் கட்டணத்தை மிகவும் குறைந்த விலைக்கு சுதேசியக் கப்பலை விட குறைந்த விலைக்குக் குறைத்து இந்த கப்பலின் பொருளாதார செயல்பாடுகளையும் முடக்குவதற்கானத் திட்டங்களைத் தீட்டினார்.

முடிவுரை:

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் அவர்களை எதிர்த்து ஒரு வணிகக் கப்பலை உருவாக்கி அதன் மூலம் ஆங்கிலேயர்களுக்கு ஒரு பொருளாதார இழப்பீட்டை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்ட இந்த நிறுவனம் பல பங்குகளை இன்று ஒவ்வொரு நாடும் மேற்கொள்ளும் பங்குச்சந்தை என்கின்ற முக்கியமான பொருளாதாரச் செயல்பாட்டினை 120 ஆண்டுகளுக்கு முன்பே வ.உ.சி. பங்கு நிறுவனங்களை உருவாக்கி இந்த சுதேசிய கப்பலை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் வலம் வர செய்து ஒரு பொருளாதார அடிப்படையிலான முன்னேற்றத்திற்கான செயல்பாட்டினை உருவாக்கிய போதும் சுதந்திரத்தின் காரணத்தால் இந்த நிறுவனம் செயலிழந்து போனதையும் நாம் அறிய முடிகிறது

இந்தியாவில் பெரும் பொருளாதார பங்களிப்பை வழங்க வேண்டிய இந்த நிறுவனம் இவ்வாறு செயலிழந்து போகும் என்று அதனை உருவாக்கும் போது வ.உ.சி. சிறிதளவும் எண்ணியிருக்க மாட்டார் என்பதை நாம் இந்த வரலாற்றின் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது. பொருளாதார அடிப்படையில் ஒரு நிறுவனத்தை உருவாக்கும் போது அதற்கான பல கட்டுமானப் பணிகளைச் சரிவர செய்ய வேண்டும் அவ்வாறு செய்யாமல் போனால் இதுபோல பொருளாதார இழப்பீடுகள் ஏற்படும் அதுவே இந்தக் கப்பலின் தாழ்வுக்குக் காரணமாக எனது ஆய்வின் மூலம் நான் தெரிவிக்கிறேன்.

துணைநூற் பட்டியல்:

1. SWADESHI STEAM V.O.Chidambaram pillai and the battle against the British Maritime Empire', (2024)
2. கப்பலோட்டிய தமிழன் - சிவஞானம், ம. பொ., இன்பநிலையம், சென்னை, 1969.
3. கப்பலோட்டிய தமிழன் – வ.உ.சிதம்பரம் – என்.வி. கலைமணி, சாந்தி நிலையம், சென்னை, 2001.
4. வீர சிதம்பரனார் – வித்வான் ராமையா, விவேகானந்த அச்சகம், மதுரை. (https://tamildigitallibrary.in/Articles/)
5. VOC - the Doyen of Swadeshi Shipping - S.Dorairaj, The Hindu 2013. (https://www.rarebooksocietyofindia.org/postDetail.)
6. Contributions of v.o.chidambaram pillai to indian national movement in southern region dr. J. Barnabas jacob (2024).
7. A.R.Venkatachalapathy in the Hindu 26 January 2003. on the Exchange of Letters between V.O. Chidambaram Pillai and M.K.Gandhi

62

வ.உ.சி.யின் சுதேசிக் கப்பல் நிறுவனம்: வரலாற்று ஆய்வு

க. சுஹாசினி
முனைவர் பட்ட ஆய்வாளர், வரலாற்றுத்துறை,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

முனைவர் ரெ. செல்வராசு
இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், வரலாற்றுத்துறை,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

ஆய்வுச் சுருக்கம்:

வ.உ.சி. தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே சுதேசி நீராவிக் கப்பல் நிறுவனத்தை நிறுவி, கடல்வழி வர்த்தகத்தில் பிரிட்டிஷாரின் ஏகபோகத்தை எதிர்த்து, அவர் சுதந்திரமான இந்திய தொழில் முயற்சிகளுக்கும் தேசிய உணர்வுக்கும் ஒரு புதிய திசையை வழங்கினார். இந்த ஆய்வு, வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையில், சிதம்பரனாரின் வாழ்க்கை, அரசியல் பின்னணி, சுதேசிக் கப்பல் நிறுவனத்தின் தோற்றம், அதன் நோக்கங்கள், செயல்பாடுகள், அது எதிர்கொண்ட சவால்கள் மற்றும் அதன் வீழ்ச்சிக்கான காரணங்களை ஆராய்கிறது. மேலும், அவரது தனிப்பட்ட தியாகங்களும் தென்னிந்தியாவில் பொருளாதாரத் தேசியவாதத்தின் வளர்ச்சியும் இந்தக் கட்டுரையின் மையக்கருவாக அமைகின்றன.

திறவுச்சொற்கள்: வ.உ.சி., சுதேசி நீராவிக் கப்பல் நிறுவனம், பொருளாதாரத் தேசியவாதம், தூத்துக்குடி, சுதந்திர இயக்கம்.

அறிமுகம்:

இந்திய தேசிய இயக்கத்தின் வரலாறு அரசியல் போராட்டங்களுடன் மட்டுமல்லாமல், பொருளாதார சுயசார்புக்கான முயற்சிகளுடனும் பின்னிப் பிணைந்துள்ளது. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வங்காளத்தில் தோன்றிய சுதேசி இயக்கம், விரைவில் இந்தியாவின் பல பகுதிகளுக்கும், குறிப்பாக தென்னிந்தியாவுக்கும் பரவியது. பிரிட்டிஷ் பொருளாதார ஆதிக்கத்தை எதிர்ப்பதும், நாட்டின் உள்நாட்டுத் தொழில்கள் மற்றும் வர்த்தகத்தை மேம்படுத்துவதும் இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. இந்தச் சூழலில், வ.உ.சிதம்பரம் பிள்ளை தென்னிந்தியாவில் சுதேசி இயக்கத்தின் ஒரு முக்கிய ஆளுமையாக உருவெடுத்தார். வழக்கறிஞர் தொழிலில் இருந்து அரசியலில் நுழைந்த அவர், பாலகங்காதர திலகர், பிபின் சந்திர பால் மற்றும் லாலா லஜபதி ராய் ஆகியோரின் தீவிர தேசியவாதக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார். தூத்துக்குடி துறைமுகத்திற்கும் கொழும்புக்கும் இடையிலான கடல் வழித்தடம் முழுவதுமாக பிரிட்டிஷ் நிறுவனங்களின் கட்டுப்பாட்டில்

இருந்ததால், இந்திய வணிகர்களும் பொதுமக்களும் பெரும் துன்பத்திற்கு ஆளானார்கள். இந்த நிலையை மாற்றுவதற்காக சுதேசி நீராவிக் கப்பல் நிறுவனம் நிறுவப்பட்டது. பொருளாதாரத் தேசியவாதத்தின் ஒரு செயல்முறை வடிவமாக விளங்கிய சுதேசி நீராவிக் கப்பல் நிறுவனத்தின் வரலாற்று முக்கியத்துவமும், வ.உ.சிதம்பரம் பிள்ளையின் அரசியல் நோக்கங்களும் எவ்வாறு ஒன்றிணைந்தன என்பதை இந்த ஆய்வு ஆராய்கிறது.

வ. உ.சிதம்பரம் பிள்ளை: வாழ்க்கை மற்றும் அரசியல் பின்னணி:

வ.உ.சி. 1872 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஓட்டப்பிடாரம் கிராமத்தில் பிறந்தார். இவர் ஒரு வழக்கறிஞராகப் பணியாற்றியதுடன், ஆரம்ப காலத்திலேயே இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்டார். பால கங்காதர திலகர், பிபின் சந்திர பால், லாலா லஜபதி ராய் போன்ற தீவிர தேசியவாதிகளின் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட இவர், தென்னிந்தியாவில் தீவிர தேசிய உணர்வை வளர்த்த முக்கியத் தலைவர்களில் ஒருவராக விளங்கினார். தூத்துக்குடி துறைமுகம் மற்றும் அங்கிருந்து கொழும்பு செல்லும் கப்பல் போக்குவரத்து முழுவதும் ஆங்கிலேய நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. இந்திய வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் அதிக கட்டணங்களாலும் அவமதிப்புகளாலும் பாதிக்கப்பட்டனர். இதுவே வ.உ.சிதம்பரம் பிள்ளையை ஒரு சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கத் தூண்டியது.

சுதேசி இயக்கத்தின் பரவல்:

தமிழ்நாட்டில் ஜி. சுப்பிரமணிய ஐயர் அனைத்துப் பகுதிகளிலும் சூறாவளிப் பயணம் மேற்கொண்டு, தேசிய இயக்கம் குறித்து மக்களுக்குக் கல்வி புகட்டுவதற்காக துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார். 1906ஆம் ஆண்டில், ஒரு காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது. நிர்வாகம் அந்தக் கூட்டத்தின் மீது கடுமையாக அடக்குமுறையைக் கையாண்டு, மக்களை மிகவும் மோசமாக நடத்தியது. கூட்டத்தில் நிகழ்ந்த அட்டூழியங்களை விவரித்து சுதேசமித்திரன் பத்திரிகை ஒரு புத்தகத்தை வெளியிட்டது. சுப்பிரமணிய ஐயர் அதன் மலிவுப் பதிப்பை நான்கு அணா அதாவது இருபத்தைந்து பைசா விலையில் வெளி யிட்டார் [1].

1921 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தனது ஒத்துழையாமை இயக் கத்தை முன்வைத்தபோது, இந்தியர்கள் ஆங்கிலேயர்களால் வழங்கப் படும் பட்டங்கள், விருதுகள் அல்லது எந்தவொரு அங்கீகாரங்களையும் துறக்க வேண்டும் என்பதை கொள்கையின் ஒரு கோட்பாடாக அறிவித்தார். ஆனால், ஜி. சுப்பிரமணிய ஐயர் இதே கருத்தை 1907 ஆம் ஆண்டிலேயே கூறியிருந்தார். ‘சுப்பிரமணிய ஐயரின் மாற்றம் மிகவும் வேகமாகவும் தீவிரமாகவும் இருந்தது, அதனால் ‘தி இந்து’ பத்திரிகை கூட அவருடன் முரண்பட வேண்டியிருந்தது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழ் உள்ள பட்டங்களையும் கௌரவப் பதவிகளையும் கைவிட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியபோது, சுப்பிரமணிய ஐயர் இந்த

ஆலோசனையை 1907 ஆம் ஆண்டில் ஒரு மாவட்ட அரசியல் மாநாட்டில் முன்வைத்தார் [2].

உரைகள் குறித்த செய்திகளை அந்தப் பத்திரிகை தவறாமல் வெளியிட்டது. இது அரசாங்கத்திற்கு எரிச்சலூட்டியது, மேலும் அது ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர் மீது தேசத்துரோகக் குற்றம் சாட்டி, அவரைக் கைது செய்தது. இருப்பினும், செல்வாக்கு மிக்கவர்களின் தலையீட்டிற்குப் பிறகு, ரூ. 5000/-க்கான தனிநபர் பிணைப் பத்திரம் மற்றும் தலா ரூ. 2500/-க்கான இரண்டு ஜாமீன்களுடன், ஒரு வருடத்திற்கு நன்னடத்தையுடன் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அவர் விடுவிக்கப்பட்டார்.

தேசிய இயக்கத்தில் ஜி. சுப்பிரமணிய ஐயரின் பங்களிப்பு மகத்தானது. அவர் 'மெட்ராஸ் சுதேசி இயக்க நிதி மற்றும் தொழிலாளர் சங்கம்' என்ற ஒரு அறக்கட்டளையை நிறுவினார் [3].

வ.உ.சி.யின் முயற்சி:

இது தூத்துக்குடி மற்றும் சிதம்பரம் பிள்ளையின் தொழில் முனைவோர் குறித்த ஒரு பாடமாக அமைந்தது. பின்னர், ஒரு கப்பலை சொந்தமாக வாங்கும் யோசனையை சிதம்பரம் பிள்ளை முன்வைத்தார், அதன் விளைவாக ஒரு புதிய சுதேசி நிறுவனம் பிறந்தது. நிதி மற்றும் அரசியல் ஆகிய இரு அம்சங்களிலும் இந்த முயற்சியை இரட்டிப்பு நோக்கம் கொண்டதாக மாற்றுவதற்காக, கப்பலை விரைவில் தொடங்குவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. 1906 ஆம் ஆண்டு அக்டோபர் 16 ஆம் தேதி, 1882 ஆம் ஆண்டு இந்திய நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் ஒரு புதிய சுதேசி நீராவி கப்பல் நிறுவனம் பதிவு செய்யப்பட்டது. அந்த நிறுவனம் குறித்த விவரங்கள் பின்வருமாறு: மூலதனம் பத்து லட்சம் ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது, இது தலா ரூ.25/- மதிப்புள்ள 40,000 பங்குகளை வெளியிடுவதன் மூலம் திரட்டப்பட இருந்தது. ஆசிய கண்டத்தைச் சேர்ந்த தனிநபர்கள் பங்குதாரர்களாக ஆகத் தகுதி பெற்றிருந்தனர். பாளவனத்தம் ஜமீன்தாரும் மதுரை தமிழ்ச் சங்கத்தின் தலைவருமான பாண்டித்துரைத் தேவர் அதன் தலைவராகவும், சிதம்பரம் பிள்ளை புதிய நிறுவனத்தின் உதவிச் செயலாளராகவும் ஆனார். இந்நிறுவனத்தில் 15 இயக்குநர்கள் இருந்தனர், மெஸ்ஸர்ஸ் எச்.ஏ.ஆர். ஹாஜி ஃபக்கீர் முகமது சேட் & சன்ஸ் செயலாளராக இருந்தனர். 1906 ஆம் ஆண்டு நவம்பரில் ஒரு திருத்தப்பட்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது, அதில் ஹாஜி ஃபக்கீர் முகமது சேட்டின் பெயர் இடம்பெறவில்லை [4].

நோக்கங்கள்

- தூத்துக்குடியில் இருந்து கொழும்புக்கும், நிறுவனம் அறிவுறுத்தும் பிற இடங்களுக்கும் பயணிகளுக்குக் கவலையற்ற மற்றும் வசதியான

பயணத்தை வழங்கும் கப்பல்களை இயக்குவது மற்றும் சரக்குகள் போக்குவரத்து மூலம் வருமானம் ஈட்டுவது.

- இந்தியர்கள், இலங்கையர்கள் மற்றும் ஆசிய கண்டத்தைச் சேர்ந்த பிற மக்களுக்குக் கடல்வழிப் பயணத் தொழிலில் பயிற்சி அளித்து, அவர்கள் அதன் பலனை அனுபவிக்கச் செய்வது.
- மேற்கூறிய மக்களுக்குக் கப்பல் கட்டும் நுட்பங்களில் பயிற்சி அளிப்பது, மற்றும்
- கப்பல் கட்டும் துறையில் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க நிறுவனங்களைத் தொடங்குவது.
- இதன் மூலம் ஆசிய கண்டத்தைச் சேர்ந்த அனைத்து இன மற்றும் வகுப்பு மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவது.
- வணிகத்தில் தொடர்ச்சியை உறுதிசெய்ய, ஆசிய கண்டத்தின் பல்வேறு இடங்களில் முகவர்களை நியமிப்பது.
- நீராவிப் படகுகள், நீராவிப் பாய்மரப் படகுகள் மற்றும் படகுகளை நிறுத்துவதற்காகக் கடற்கரையில் தளங்களைக் கட்டுவது மற்றும் தேவைப்பட்டால் அவற்றைச் சரிசெய்வது.
- நிறுவன நிர்வாகத்தால் தீர்மானிக்கப்படும் பிற வணிகங்கள் மற்றும் கைத்தொழில்களை மேற்கொள்வது.
- அதன் நோக்கங்களை ஒருமுறை பார்த்தாலே, கடல்வழி வர்த்தகம் மற்றும் கடற்படையின் முழு அளவிலான வளர்ச்சிக்காகவே இது திட்டமிடப்பட்டது என்பது தெரியவரும்.

இயல்பாகவே, பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த விஷயத்தில் சும்மா இருக்க முடியவில்லை, ஏனெனில் இது அவர்களின் ஆதரவின் வேரையே அசைப்பதாக இருந்தது. உண்மையில், இந்தத் திட்டத்தை முன்னெடுத்தவர்களின் நோக்கம் புரட்சிகரமானதாக இருந்தது. 1904-1905 போரில் ஜப்பான் ரஷ்யாவைத் தாக்கி, ஜார் மன்னரைத் தோற்கடித்தபோது, அது ஆசியக் கண்டத்தின் எழுச்சியாகக் கருதப்பட்டு பெரும் உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டது.

சுதேசி கப்பல் நிறுவனத்திற்காக வ.உ.சி. யின் தனிப்பட்ட தியாகங்கள்:

இந்தியாவின் மற்ற பகுதிகளில், குறிப்பாக வங்காளம் மற்றும் தூத்துக்குடியில் இருந்த மற்ற சுதேச கப்பல் நிறுவனங்களுக்கும், தூத்துக்குடி நிறுவனத்திற்கும் இடையிலான ஒரு முக்கிய வேறுபாடு என்னவென்றால், தூத்துக்குடி நிறுவனத்தில் ஏகபோக வெளிநாட்டு அரசாங்கத்துடனான மோதல், ஏகாதிபத்திய எதிர்ப்புப் பொருளாதார உணர்வு மற்றும் தேசியம் ஆகியவை இருந்தன; மற்றவற்றில் வணிக நோக்கம் மட்டுமே இருந்தது. இது ஒன்றே சிதம்பரம்பிள்ளையை ‘கப்பலோட்டிய தமிழன்’ என்ற பட்டத்தைப் பெறவும், பெருமையுடன் தாங்கிக்கொள்ளவும் தகுதி பெறச் செய்தது.

புதிதாக உருவாக்கப்பட்ட நிறுவனத்தை நிஜமாக்குவதற்காக, சிதம்பரம் பிள்ளை கடுமையாகப் போராடினார். அதற்காகப் பணம் திரட்டுவதற்காக இந்தியாவின் அனைத்து இடங்களுக்கும் பயணம் செய்தார். அந்தத் தொடர்பில் அவர் பம்பாயில் இருந்தபோது, அவர் புறப்படும்போது கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்த அவரது மகன் லோகநாதன் இறந்துவிட்டார், மேலும் அவரது மனைவி கடினமான கர்ப்பக்காலத்தில் இருந்தார். இதுபற்றி அவருக்குத் தெரிவிக்கப்பட்டபோது, கடவுள் தமக்குத் துணையாக இருப்பார் என்றும், தான் தேசத்தின் கடமையைச் செய்வேன் என்றும் பிள்ளை பதிலளித்தார்.

ஐரோப்பாவிலிருந்து 2 நீராவிக்கப்பல்களையும் 2 நீராவிப் படகு களையும் வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும், இது தொடர்பாக பிள்ளையின் நண்பர்களான வேதாமூர்த்தி முதலியார் மற்றும் ஃபினோம் டிசான் ஆகியோர் பாரிஸுக்குச் சென்றுள்ளனர் என்றும் அவர் சுதேசமித்திரனுக்கு எழுதினார்.

‘எஸ்.எஸ். காலியோ’ மற்றும் ‘எஸ்.எஸ். லாவோ’ என்ற பெயருடைய இரு கப்பல்களும் மே 1907-ல் வெவ்வேறு தேதிகளில் தூத்துக்குடி துறைமுகத்திற்கு வந்தடைந்தன. இந்தச் சாதனையை முன்னிட்டு, சிதம்பரம் பிள்ளை அனைத்து தேசிய செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகளாலும் மனதாரப் பாராட்டப்பட்டார்.

பாரதி தனது ‘இந்தியா’ பத்திரிகையில் சிதம்பரம் பிள்ளையின் சேவைகளைப் பாராட்டி, ‘வ.உ. சிதம்பரம் பிள்ளையும் அவரது சகாக்களும் தாங்கள் பிறந்த மண்ணுக்குத் தங்கள் கடமையைச் செய்துள்ளனர்’ என்று குறிப்பிட்டிருந்தார் - இது ஒரு சிறந்த அஞ்சலியாகும். சிதம்பரம் பிள்ளையின் தனிப்பட்ட செல்வாக்கு மற்றும் ஆதிக்கத்தின் காரணமாக, அந்த நிறுவனம் தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்குக் கப்பல் சேவையைத் தொடங்கி குறிப்பிடத்தக்க வணிகத்தைச் செய்தது [5]. ஆங்கிலேய நிறுவனம் இலவச சேவையை வழங்கியபோதும் கூட, சுதேச நிறுவனம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டது. அரசாங்கத்தின் உதவியுடன் ஆங்கிலேய நிறுவனம் செய்த சூழ்ச்சிகளை சிதம்பரம் பிள்ளை பொதுக்கூட்டங்களில் அம்பலப்படுத்தினார், மேலும் பொதுமக்களும் அவருக்கு ஆதரவாக நின்றனர் [6].

சுதேசி நிறுவனத்திற்குள் தேசபக்தியின் சிதைவு:

துரதிர்ஷ்டவசமாக, பங்குதாரர்களில் பெரும்பாலானோருக்கு சிதம்பரம் பிள்ளையின் அதே தேசபக்தி இல்லை. எனவே, சிதம்பரம் பிள்ளையின் அரசியல் நடவடிக்கைகளால் ஏற்படும் அற்பத் தவறுகளுக்காக அதிகாரிகள் கொடுக்கும் தொல்லைகளை அவர்கள் விரும்பவில்லை. அவர்களின் நோக்கம் தேசபக்தி அல்ல, பணம் மட்டுமே. பங்குதாரர்களின் அழுத்தத்திற்கு அவர் பணிய வேண்டியிருந்தது. எனவே, அவர் நிறுவனத்தின் உதவிச் செயலாளர் பதவியிலிருந்து விலகி, நிறுவனத்தின் நலன்களைப் பாதுகாப்பதற்காக ஊதியம்

பெறும் முகவராக ஆனார். இறுதியில், அந்தப் பதவியிலிருந்தும் அவர் விலக வேண்டியிருந்தது. நிறுவனத்தின் விவகாரங்களிலிருந்து அவர் முழுமையாக விலகியதால், அந்தச் சுதேச நிறுவனத்தின் மீது ஒரு இருண்ட மேகம் சூழ்ந்தது. தேசிய நிறுவனம் கலைக்கப்பட்டதாலும், அதன் கப்பல்களில் ஒன்றை அதே பிரிட்டிஷ் நிறுவனத்திற்கே விற்றதாலும் சிதம்பரம் மனமுடைந்தாலும், நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு, அதே தூத்துக்குடியில், சிதம்பரத்தின் கனவாக இருந்ததைப் போலவே, தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே ஒரு கப்பலை இயக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தக் கப்பலுக்கு எஸ்.எஸ். வ.உ.சிதம்பரம் என்று பெயரிடப்பட்டது, மேலும் சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் சி. ராஜகோபாலாச்சாரி அந்தக் கப்பலைத் தொடங்கி வைத்தார். இருப்பினும், இந்தக் கப்பலும் நீண்ட காலம் நீடிக்கவில்லை. ஆரம்பத்தில் ஆர்வம் காட்டியது, ஆனால், அதைத் தொடர்ச்சியாகப் பேணாத வணிகர்களிடமே அந்தத் தோல்விக்கான காரணம் இருந்தது. ஆனாலும், சிதம்பரம் செய்த தியாகம் வீண் போகவில்லை. மத்திய அரசு அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. மேலும், எஸ்.எஸ். சிதம்பரம் என்ற பெயருடைய ஒரு பெரிய கப்பல் இப்போது கிழக்குக் கடல்களில் பயணித்து, அந்த தன்னலமற்ற தேசபக்தர் சிதம்பரம் கண்ட கனவின் எல்லையை விரிவுபடுத்தி வருகிறது[7].

முடிவுரை:

வ.உ.சி. யின் வாழ்வும் பணிகளும் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தியாகத்திற்கும் வீரத்திற்கும் ஒரு சிறந்த உதாரணமாகத் திகழ்கின்றன. சுதேசி நீராவிக் கப்பல் நிறுவனம் என்பது வெறும் ஒரு வணிக முயற்சி மட்டுமல்ல, அது ஆங்கிலேயர்களின் பொருளாதார ஏகபோகத்திற்கு எதிரான தேசிய எதிர்ப்பின் சின்னமாகவும் விளங்கியது. அரசாங்கத்தின் நேரடி மற்றும் மறைமுக அடக்குமுறைகள், சில பங்குதாரர்களிடையே தேசபக்தி இல்லாதது மற்றும் பொருளாதார அழுத்தங்கள் ஆகியவற்றால் அந்த நிறுவனத்தால் நிலைத்து நிற்க முடியாமல் போனாலும், அதன் வரலாற்று முக்கியத்துவம் சிறிதும் குறையவில்லை.

சுதந்திர இந்தியாவில் பிற்கால கப்பல் நிறுவனங்கள் மூலம் அவரது கனவு மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது என்பது, அவரது தியாகங்கள் வீண் போகவில்லை என்பதைக் காட்டுகிறது. எனவே, வ.உ.சிதம்பரம் பிள்ளை இந்திய வரலாற்றில் ஒரு அரசியல் போராளியாக மட்டுமல்லாமல், பொருளாதாரத் தேசியவாதத்தின் முன்னோடியாகவும் ஒரு நிரந்தர இடத்தைப் பெற்றுள்ளார்.

மேற்கோள் நூற்பட்டியல்:

1. சுமித் சர்க்கார், நவீன இந்தியா, 1885–1947, புது தில்லி: மேக்மில்லன் இந்தியா, 2001, பக்கங்கள் 42–46.
2. கே.நம்பி ஆரூரன், தமிழ் மறுமலர்ச்சி மற்றும் இந்திய தேசிய இயக்கம், மதுரை: கூடல் பதிப்பகம், 1980, பக்கங்கள் 201–210.

3. எஸ். ஆர். பக்ஷி (பதிப்பாசிரியர்), இந்திய தேசிய இயக்கம் பற்றிய கலைக்களஞ்சியம், தொகுதி புது தில்லி: அன்மோல் பப்ளிகேஷன்ஸ், 1997, பக்கங்கள் 312–316.
4. பி. பட்டாபி சீதாராமையா, இந்திய தேசிய காங்கிரஸின் வரலாறு (1885–1935), சென்னை:
5. எஸ்.சந்த் & கோ., 1935, பக்கங்கள் 98–101 மெட்ராஸ் அரசாங்கம், மெட்ராஸ் மாகாணத்தின் நிர்வாக அறிக்கை, மெட்ராஸ், 1907, பக்கங்கள் 213–215.
6. சுதேசமித்திரன் (தமிழ் நாளிதழ்), சென்னை, சுதேசி இயக்கம் குறித்த செய்திகள், 1906–1907.
7. தி இந்து, சென்னை, அரசியல் மாநாடுகள் மற்றும் சுதேசி சித்தாந்தம் குறித்த அறிக்கைகள், 1906–1908.
8. மெட்ராஸ் அரசாங்கம், நீதித்துறை நடவடிக்கைகள், அரசியல் பிரிவு, 1907.
9. கூட்டுப் பங்கு நிறுவனங்களின் பதிவாளர், சென்னை, சுதேசி நீராவி கப்பல் நிறுவனம் லிமிடெட்டின் நிறுவனப் பதிவு ஆவணங்கள், 1906.
10. சுப்பிரமணிய பாரதி, இந்தியா மற்றும் சுதந்திரம்: தேர்ந்தெடுக்கப்பட்ட எழுத்துக்கள், புது தில்லி: 13, சாகித்ய அகாதெமி, 2006, பக்கங்கள் 52–54.,
11. நம்பி ஆரூரன், தமிழ் மறுமலர்ச்சி, பக். 215–218., சுமித் சர்க்கார், நவீன இந்தியா, பக்கங்கள் 50–52.

துணை நின்றவை:

1. சுதேசமித்திரன் (தமிழ் நாளிதழ்), சென்னை, சுதேசி இயக்கம் குறித்த செய்திகள், 1906–1907.
2. தி இந்து, சென்னை, அரசியல் மாநாடுகள் மற்றும் சுதேசி சித்தாந்தம் குறித்த அறிக்கைகள், 1906–1908.
3. மெட்ராஸ் அரசாங்கம், நீதித்துறை நடவடிக்கைகள், அரசியல் பிரிவு, 1907.
4. கூட்டுப் பங்கு நிறுவனங்களின் பதிவாளர், சென்னை, சுதேசி நீராவி கப்பல் நிறுவனம் லிமிடெட்டின் நிறுவனப் பதிவு ஆவணங்கள், 1906.
5. சுப்பிரமணிய பாரதி, இந்தியா மற்றும் சுதந்திரம்: தேர்ந்தெடுக்கப்பட்ட எழுத்துக்கள், புது தில்லி: சாகித்ய அகாதெமி, 2006, பக்கங்கள் 52–54.
6. நம்பி ஆரூரன், தமிழ் மறுமலர்ச்சி..., பக். 215–218.
7. சுமித் சர்க்கார், நவீன இந்தியா, பக்கங்கள் 50–52.

63

வ.உ.சிதம்பரனாரின் எழுத்துலகத்தில் தமிழ் - தமிழர் - தமிழ்நாடு

முனைவர் சா. ஜோக்கிம் பெலிக்ஸ்
தமிழ்த்துறைத் தலைவர், தூய ஜெரோம் கல்லூரி,
அனந்தநாடார்குடி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

முன்னுரை:

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் (1872–1936) அரசியல் போராளியாக மட்டுமல்லாமல், தமிழ் மொழி, தமிழர் இன அடையாளம் மற்றும் தமிழ்நாட்டின் அரசியல்–பண்பாட்டு சுயமரியாதையை எழுத்தின் வழியாக வலியுறுத்திய சிந்தனையாளராக விளங்குகிறார். அவரது எழுத்துகள் காலனிய ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தைத் தமிழ்ச் சமூகச் சூழலில் புரிந்து கொள்ள உதவும் முதன்மை ஆதாரங்களாக அமைந்துள்ளன. எழுத்து ஒரு போராட்ட ஆயுதம்' என்ற புரிதலுடன் அவர் எழுதியதும், பதிப்பித்ததும், பிரச்சாரம் செய்ததும், தமிழ், தமிழர் மற்றும் தமிழ்நாட்டின் கலாச்சார அரசியலை வடிவமைத்தன. அவரது எழுத்துகளில் மொழி, இன அடையாளம், பண்பாட்டுத் தன்னிறைவு, அரசியல் விழிப்பு, அறிவு சுயநிர்ணயம் ஆகியவை ஒரே நெடுவெளியில் பின்னி நின்றன. வ.உ.சி. யின் எழுத்துலகம் தமிழ், தமிழர், தமிழ்நாடு என்ற மூன்று கருத்துகளையும் ஒருங்கிணைத்து ஒரு கருத்தியல் கட்டமைப்பை உருவாக்குகிறது.

இனம் மற்றும் மொழி அரசியலின் அடையாளம்:

வ.உ.சி. தமிழ் மொழியை வெறும் இலக்கிய வடிவில் மட்டுமல்ல, இனத்தின் சுவாசம், சிந்தனை, சுயமரியாதை ஆகியவற்றின் மையம் என்பது போல் அணுகினார். அவரது தமிழ் மொழிப் பார்வையின் முக்கிய அம்சமான, தமிழ் ஒரு மரபு; மொழி மட்டுமல்ல, அது செயல் மொழி; தமிழ் மக்களின் சுயமரியாதை; நிலைநாட்டும் கருவி; கல்வி; நாட்டுப்பற்று மற்றும் சமூக நெறிக்கான தளமே தமிழ் என்றுரைக்கிறார். தமிழர் தங்கள் தாய் மொழியை விட்டு விலகினால், அது சுதந்திரத்தை விட்டு விலகுவது போன்றதே என்று வ.உ.சி. அவர்கள் தனது உரைத் தொகுப்பில் எடுத்துரைக்கிறார்.

காலனியச் சூழலும் வ.உ.சி. எழுத்தும்:

ஆங்கிலேய ஆட்சி அரசியல் மற்றும் பொருளாதார ஆதிக்கத்துடன் மட்டுமல்லாமல், மொழி மற்றும் அறிவுத் தளங்களிலும் மேலாதிக்கம் செலுத்திய காலகட்டத்தில் வ.உ.சி.யின் எழுத்துகள் தோன்றின. ஆங்கிலம் அறிவின் மொழியாகவும், தமிழ் இரண்டாம் நிலை

மொழியாகவும் பார்க்கப்பட்ட சூழலில், அந்தக் கருத்தை உடைக்கும் முயற்சியாகவே அவரது எழுத்துகள் அமைந்துள்ளன. எழுத்து மக்களை விழித்தெழச் செய்யும் சக்தி கொண்டது என்ற நம்பிக்கையே வ.உ.சி.யை எழுத்தாளராக உருவாக்கியது.

மொழியின் அரசியல் கருவி:

வ.உ.சி.யின் எழுத்துகளில் தமிழ் ஒரு சாதாரண தொடர்பு மொழியாக அல்ல; அரசியல் விழிப்புணர்வை உருவாக்கும் கருவியாக உயர்த்தப்படுகிறது. ஒரு தேசம் தனது மொழியை இழந்தால், தன் அடையாளத்தையும் சுயமரியாதையையும் இழக்கும் என்ற கருத்து அவரது எழுத்துகளில் தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது. தமிழ் மொழி உயர்ந்த சிந்தனைகளை வெளிப்படுத்த இயலாதது என்ற காலனிய கருத்தியலை அவர் முற்றாக மறுத்தார். இதற்குச் சான்றாக, உலகச் சிந்தனையாளர்களின் படைப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்து வழங்கியுள்ளார்.

வ.உ.சி.யின் எழுத்துலகம்:

வ.உ.சி. தமிழ் மொழியின் சுயநிலையும், இனக்குணமும் குறித்து பெருமை கொள்வதோடு மட்டுமல்லாமல்,தமிழின் அறிவியல் திறனையும் வெளிப்படுத்தினார். அவர் ‘தென்றல் சூழ்ந்த தமிழ்நாடு’, ‘சுயமரியாதை’, ‘தன்னம்பிக்கை’ போன்ற கருத்துகளைத் தமிழில் சொற்சுவையுடன் வடித்தார். அவரது ‘மெய்யெழுத்து விளக்கம்’ நூலில் தமிழ் எழுத்து அமைப்பைச் சீர்மையாகப் பதிவு செய்தார்.’தமிழ் ஒரு புனித மொழி; அது நம் இனத்தின் உயிர்’ என்று வ.உ.சி., மொழியும் இனமும் என்ற நூலில் உரைக்கின்றார்.

தமிழர் உணர்வு:

வ.உ.சி. அவர்களின் எழுத்துகளில் தமிழர் பற்றும் தன்னம்பிக்கையும் வெளிப்படையாகக் காணப்படுகின்றன. அவர் எழுதிய ‘தென்னிந்திய சுதந்திரப் போராட்ட வரலாறு’, ‘நாவலர் சரித்திரம்’, ‘சுதந்திர வீரர் வாழ்க்கை வரலாறு’ போன்ற படைப்புகள் தமிழர்களின் போராட்ட வரலாற்றை உயிர்ப்பிக்கின்றன.தமிழரின் வீரமும் அறிவும் இணைந்து எழுந்தால் எவராலும் அடக்க முடியாது என்று எழுத்துகள் தொகுப்பு நூலில் பதிவு செய்திருக்கிறார்.

எழுத்துலகத்தின் வீரியம்:

வ.உ.சி.யின் எழுத்தின் நடை படைப்பாற்றலுக்கும், உரிமை சிந்தனைக்கும் உள்ள இணைப்பாகும். அவர் சிக்கலான அரசியல் கருத்துகளையும் எளிமையான தமிழில் எழுதினார். எளிய, கச்சிதமான சொற்களில் நகைச்சுவை கலந்த விமர்சனமாக சமூக உணர்வு மிக்க உரைநடையாகத் தரமான சிந்தனையாக படைத்தருளினார்.

உழைப்பின் மரபு,தன்னம்பிக்கை மற்றும் தன்னிறைவு:

வ.உ.சி. எழுத்து முழுவதும் ‘தமிழர் யார்?’ என்ற அடையாள அரசியலை உருவாக்கும் முயற்சி காணப்படுகிறது. அவருக்கு தமிழர்

என்பது, உழைப்பைத் தெய்வம் எனக் கருதுபவர்; கபடமில்லா நேர்மையைக் கொண்டவர்; தன்னிறைவு வாழ்க்கை முறையை ஏந்துபவர்; நாட்டுப்பற்று மற்றும் சமூக நெறியில் நிலைநிற்பவர் என்று தமிழரைக் குறித்து உரைக்கிறார்.'உழைப்பு செய்பவன் உயர்ந்தவன்; சோம்பல் செய்பவன் தாழ்ந்தவன்.' என வ.உ.சி. தமிழரை இவ்வகையில் புதிய சமூக அடையாளத்தை உருவாக்கினார்.

சுதந்திர அரசியல் மற்றும் தேசிய உணர்வின் தாயகம்:

வ.உ.சி.யின் எழுத்துகளிலும் உரைகளிலும் தமிழ்நாடு தனியான ஒரு புவியியல் பகுதியாக அல்ல, தேசிய விழிப்பு உருவான இடம் என்ற வகையில் படைக்கப்படுகிறது. அவரது பார்வையில் தமிழ்நாடு, சுதேசி இயக்கத்தின் முன்னணி மையம், கல்வி, தொழில், வர்த்தகத்தில் தன்னிறைவுக்கான தளம், சுதந்திர உணர்வை முதலில் ஏற்றது. கலாச்சார, அரசியல் புரட்சியின் மையப் பகுதி தமிழ்நாடு என படைப்பிலக்கியத்தில் பதிப்பிக்கின்றார். தமிழ்நாடு விழித்தால் இந்தியா விழிக்கும் என வ.உ.சி., தேசியப் பயணத்தைத் தமிழ்நாட்டின் முத்து நகரிலிருந்து உரைக்கிறார்.

மொழிபெயர்ப்பு முயற்சிகளின் அரசியல் பொருள்:

வ.உ.சி. மேற்கொண்ட மொழிபெயர்ப்புகள் இலக்கிய முயற்சிகள் மட்டுமல்ல; அவை அரசியல் செயற்பாடுகளாகவே அமைந்தன. மேற்கத்திய சிந்தனைகள் தமிழில் வெளிப்பட முடியும் என்பதை நிரூபிப்பதன் மூலம், தமிழ் அறிவு மொழியாகத் தகுதியுடையது என்பதை அவர் நிறுவினார். இது ஆங்கில ஆதிக்க மொழி அரசியலுக்கு எதிரான ஒரு அறிவுசார் போராட்டமாகக் கருதலாம்.

தமிழ் நம் உயிர்மொழி:

வ.உ.சி. தமிழ் மொழியைச் சிந்தனையின் கருவியாகவும், சுதந்திரத்தின் ஊக்கமாகவும் கருதினார். அவரது 'மெய்யெழுத்து விளக்கம்' நூல், தமிழ் இலக்கணத்தின் அறிவியல் அடித்தளத்தை உறுதிப்படுத்திய ஒரு முயற்சியாகும். தமிழ் ஓர் உயிர் மொழி; அதில் தத்துவம், அரசியல், சமூக விழிப்புணர்வு அனைத்தும் வெளிப்பட முடியும் என அவரது எழுத்துகள் நவீன தேசிய உணர்வின் விதையைக் தமிழ் வழி விதைத்தன. இதன் மூலம் அவர் தமிழை நவீன அரசியல் உரையாடலின் கருவியாக மாற்றினார். தமிழில் பேசுவது பெருமை; தமிழில் சிந்திப்பது சுதந்திரம் என தமிழுணர்வை விதைத்தார்.

இன அடையாளமும் சுயமரியாதையும்:

வ.உ.சி. எழுத்துகளில் 'தமிழர்' என்பது வெறும் மொழி பேசும் கூட்டமாக அல்ல; வரலாற்றுச் சிறப்பும் பண்பாட்டுத் தொடர்ச்சியும் கொண்ட இனமாகக் காட்சியளிக்கிறது. காலனிய ஆட்சியால் உருவாக்கப்பட்ட தாழ்வு மனப்பான்மை தமிழர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பதாக அவர் கருதினார். ஆகவே, அவரது எழுத்துகள் தமிழர் இனத்தின் சுயமரியாதையை மீட்டெடுக்கும் முயற்சியாக அமைந்துள்ளன.

தொழிலாளர் அரசியல் மற்றும் தமிழர் அடையாளம்:

தூத்துக்குடி தொழிலாளர் போராட்டம் தொடர்பான வ.உ.சி. யின் எழுத்துகள், தமிழர் அடையாளத்தைச் சமூக நீதி மற்றும் பொருளாதார உரிமைகளுடன் இணைக்கின்றன. இங்கு தமிழர் என்பது இன அடையாளம் மட்டுமல்ல; உழைப்பாளர் வர்க்க அடையாளத்தையும் உள்ளடக்கியதாக விளங்குகிறது. இந்த அணுகுமுறை, வ.உ.சி. யை ஆரம்பகால சமூக அரசியல் சிந்தனையாளராகவும் கருதிட வழிவகுக்கிறது.

தமிழ்நாடு : புவியியல் அல்ல, அரசியல் அடையாளம்:

வ.உ.சி. யின் எழுத்துகளில் தமிழ்நாடு ஒரு நிர்வாகப் பிரிவு அல்ல; அது மொழி, இனம், பண்பாடு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த அரசியல் வெளி ஆகும். தமிழ்நாடு பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தின் மையமாக அவரது எழுத்துகளில் காட்சியளிக்கிறது. இதன் மூலம், அவர் தமிழ்நாட்டைச் சுயமரியாதை கொண்ட தேசமாக அடையாளப்படுத்தியுள்ளார்.

சுதேசி இயக்கமும் பொருளாதாரத் தன்னிறைவும்:

சுதேசி நீராவிக் கப்பல் இயக்கம் குறித்த வ.உ.சி.யின் எழுத்துகள், தமிழ்நாட்டின் பொருளாதார சுயாதீனத்தை வலியுறுத்துகின்றன. வெளிநாட்டு வணிக ஆதிக்கத்திற்கு எதிராக உள்ளூர் பொருளாதார முயற்சிகள் வளர வேண்டும் என்ற அவரது கருத்து, பொருளாதார தேசியவாதத்தின் தெளிவான வெளிப்பாடாக அமைந்துள்ளது.

தமிழ் - தமிழர் – தமிழ்நாடு - வ.உ.சி:

வ.உ.சிதம்பரனாரின் எழுத்துகளில் தமிழ், தமிழர், தமிழ்நாடு என்ற மூன்றும் தனித்தனி கருத்துகளாக இல்லாமல், ஒன்றை ஒன்று உறுதிப்படுத்தும் கருத்தியல் அமைப்பாக உருவெடுக்கின்றன. மொழி இன்றி இனம் இல்லை; இனம் இன்றி தேசம் இல்லை; தேசம் இன்றி அரசியல் விடுதலை இல்லை என்ற சிந்தனை அவரது எழுத்துலகத்தின் அடிப்படைத் தத்துவமாக விளங்குகிறது.

நிறைவாக...

வ.உ.சி. யின் எழுத்துலகம் தமிழ் மொழியின் ஆழத்தை மட்டும் பிரதிபலிக்கவில்லை;தமிழரின் அடையாளத்தையும் தமிழ்நாட்டின் அரசியல்விழிப்புணர்ச்சியையும்வடிவமைத்தஒருசிந்தனைக்கட்டமைப்பு எனக் கூறலாம். அவரது எழுத்துலகம் மொழி மரபைப் பாதுகாத்தது; இன உணர்வைவலுப்படுத்தியது;தமிழ்நாட்டின்தேசியஅரசியல்வளர்ச்சிக்குத் தளமாக அமைந்தது. எனவே, வ.உ.சி. இலக்கிய வரலாற்றிலும், அரசியல் வரலாற்றிலும், தேசிய அடையாள கட்டமைப்பிலும் தனி இடம் பெறுகிறார். மொத்தத்தில், வ.உ.சிதம்பரனாரின் எழுத்துலகம் தமிழ் மொழியை அறிவு மற்றும் அரசியல் வெளிப்பாட்டின் ஊடகமாகவும்,

தமிழரைச் சுயமரியாதை கொண்ட இனமாகவும், தமிழ்நாட்டை அரசியல் அடையாளம் கொண்ட தேசமாகவும் உருவாக்கிய ஒருங்கிணைந்த சிந்தனை அமைப்பாக விளங்குகிறது. அவரது எழுத்துகள் காலனிய எதிர்ப்பின் ஆவணங்களாக மட்டுமல்ல; தமிழ்த் தேசிய சிந்தனையின் அடித்தளமாகவும் அமைந்துள்ளன. எனவே, வ.உ.சிதம்பரனார் தமிழ்ச் சமூக அரசியல் வரலாற்றில் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட வேண்டிய முக்கிய சிந்தனையாளர் ஆவார்.

துணைநூற்பட்டியல்:

1. க.பா. சுப்பிரமணியன், வ.உசி வாழ்க்கையும் சிந்தனையும், சென்னை களஞ்சியம், 2003
2. வ.உ. சிதம்பரனார், சிறை வாழ்க்கை நினைவுகள்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1999.
3. வ.உ. சிதம்பரனார், சுதந்திரப் போராட்டக் கட்டுரைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2005.
4. மு. அருணாசலம், வ.உசி. வாழ்க்கையும் பணியும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1997.
5. கா. சிவத்தம்பி, தமிழ் அறிவுத்துறையின் வளர்ச்சி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2000
6. இரா. நெடுஞ்செழியன், தமிழ் தேசிய இயக்க வரலாறு, சிந்தனைப் பதிப்பகம், சென்னை. 1997
7. ராஜகோபாலன், சுதேசி இயக்கமும் தமிழ்நாடும், வானதி பதிப்பகம், சென்னை, 2000.
8. மா.பொ.சி., தமிழர் தேசிய இயக்கம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1997
9. ச.முருகசாமி - தமிழும் தேசியமும், மதுரை: நியூ இந்தியா பப்ளிகேஷன்ஸ், 2002

64

சமூக நீதி: தேசிய விடுதலையின் அடித்தளம் வ.உ.சிதம்பரனாரின் சிந்தனைகளும் எழுத்துகளும்

முனைவர் லிப்டன் ரா. கெ. ராஜதுரை
லெவஞ்சிபுரம், திருநெல்வேலி மாவட்டம்

ஆய்வுச் சுருக்கம்:

வ.உ.சிதம்பரனார் (1872–1936) கப்பலோட்டிய தமிழன் எனப் பெருமையுடன் நினைவுகூரப்படுபவர். இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனித்துவமான ஆளுமையாகத் திகழ்கிறார். அரசியல் சுதந்திரமே விடுதலை எனக் கருதிய தேசியவாதக் கோட்பாடுகளுக்கு மாறாக, சமூக நீதிதான் உண்மையான தேசிய விடுதலையின் நெறியடித்தளம் என்று அவர் வலியுறுத்தினார். இந்த ஆய்வு வ.உ.சிதம்பரனாரின் சிந்தனைகளிலும் எழுத்துகளிலும் வெளிப்படும் சமூக நீதி, தேசிய விடுதலை ஆகிய இரண்டிற்குமிடையேயான உள்ளார்ந்த தொடர்பை விமர்சன நோக்கில் ஆராய்கிறது.

அவரது உரைகள், அரசியல் செயல்பாடுகள், சுதேசி முயற்சிகள், தொழிலாளர் போராட்டங்களில் அவர் கொண்டிருந்த ஈடுபாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளர் உரிமைகள், பொருளாதார சுயநிறைவு மற்றும் சமூக சமத்துவம், பண்பாட்டு மரியாதை ஆகிய கருத்துகள் அவரது தேசியவாதத்தின் மையமாக இருந்ததை இவ்வாய்வு விளக்குகிறது.

சிதம்பரனாரின் தேசியவாதம் மக்களை மையமாகக் கொண்டதும், சமூக சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டதும் ஆகும். காலனிய ஆதிக்கத்தையும், அதே சமயம் சமூகத்திற்குள் நிலவிய சாதி மற்றும் வர்க்க அநீதிகளையும் அவர் ஒருசேர எதிர்த்தார்.

இவ்வாய்வு இன்றைய ஜனநாயகம், சமூக நீதி, தேசக் கட்டமைப்பு தொடர்பான விவாதங்களிலும் அவரது சிந்தனைகள் தொடர்ந்தும் பொருத்தமுடையவை என்பதை நிறுவுகிறது.

திறவுச்சொற்கள்: வ.உ.சிதம்பரனார், சமூக நீதி, தேசிய விடுதலை, காலனிய எதிர்ப்பு, தொழிலாளர் உரிமைகள், தமிழ்த் தேசியம்.

அறிமுகம்:

இந்திய விடுதலைப் போராட்டம், ஆங்கிலேய ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்த அரசியல் போராட்டமாக மட்டும் அல்ல; சமூக நீதி, சமத்துவம், மனித மரியாதை ஆகியவற்றை மறுவிளக்கம் செய்ய முனைந்த ஆழமான சமூக இயக்கமாகவும் விளங்கியது. காலனிய ஆதிக்கம் அரசியல் அதிகாரத்தின் வழியாக மட்டுமல்ல; பொருளாதாரச்

சுரண்டல், சமூகப் பிளவுகள், பண்பாட்டு அவமதிப்பு ஆகியவற்றின் மூலமும் நிலைத்திருந்தது.

இந்தச் சூழலில் அரசியல் சுதந்திரத்தையும் சமூக சீர்திருத்தத்தையும் இணைத்து சிந்தித்த தேசியவாதிகள் இந்திய விடுதலைச் சிந்தனையின் திசையை மாற்றியமைத்தனர். அவர்களில் வ.உ.சிதம்பரனார், சமூக நீதி இல்லாமல் தேசிய விடுதலை அர்த்தமற்றது என்பதை ஆழமாக உணர்ந்த சிந்தனையாளராகத் திகழ்ந்தார்.

காலனிய தமிழ்நாட்டில் பிறந்த சிதம்பரனார், தொழிலாளர்கள், விவசாயிகள், ஒடுக்கப்பட்ட மக்களின் துயர வாழ்க்கையை நேரடியாகக் கண்டவர். சுதேசி இயக்கத்தில் அவரது ஈடுபாடு, தொழிலாளர் போராட்டங்களில் அவர் வகித்த தலைமைத்துவம், உள்ளூர் பொருளாதார நிறுவனங்களை உருவாக்கிய முயற்சிகள் இவை சமூக சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அவரது தேசியவாதத்தை வெளிப்படுத்துகின்றன.

உயர்வர்க்க மையமான தேசியவாதத்துக்கு மாறாக, சாதாரண மக்களின் வாழ்வை மையமாகக் கொண்ட சிந்தனையே அவரது விடுதலைக் கோட்பாடாக இருந்தது.

வ.உ.சிதம்பரனாரின் சிந்தனைகளில் சமூக நீதி:

சிதம்பரனாரின் தேசியவாத சிந்தனையின் மையத்தில் சமூக நீதி திகழ்கிறது. தொழிலாளர்களின் சுரண்டல், உள்ளூர் மக்களின் புறக்கணிப்பு, காலனிய மூலதனவாதம் உருவாக்கிய பொருளாதார சமத்துவமின்மை ஆகியவை அவரை ஆழமாகக் கவலைப்படுத்தின. தூத்துக்குடி தொழிலாளர் போராட்டங்களில் அவர் வகித்த தலைமைத்துவம், தொழிலாளர்களின் மரியாதை மற்றும் உரிமைகள் மீது அவர் கொண்டிருந்த அக்கறையை வெளிப்படுத்துகிறது. அவரின் பார்வையில் சாதி வேற்றுமை மற்றும் பொருளாதார இடைவெளி ஆகியவை உள் காலனியத்துவத்தின் வடிவங்களாகும்; இவை தேசிய ஒற்றுமையைச் சிதைத்து விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்துகின்றன. ஆகவே, சமூக சீர்திருத்தம் தேசிய விடுதலை யின் அடிப்படை நிபந்தனை என அவர் வலியுறுத்தினார்.

தேசிய விடுதலை மற்றும் காலனிய எதிர்ப்பு பார்வை:

சிதம்பரனாரின் தேசிய விடுதலைக் கருத்து அரசியல் சுதந்திரத்தைத் தாண்டியது. பொருளாதார சுயநிறைவு, பண்பாட்டு மரியாதை, மக்களின் நேரடி பங்கேற்பு ஆகியவையே அவரது விடுதலைக் கோட்பாட்டின் அடித்தளங்களாக இருந்தன.

சுதேசி கப்பல் கழகம் ஆங்கிலேயர்களின் பொருளாதார ஆதிக்கத்துக்கு எதிரான ஒரு துணிச்சலான சவாலாக மட்டுமல்ல, இந்தியர்களின் தன்னம்பிக்கையின் வெளிப்பாடாகவும் விளங்கியது. பயம் மற்றும் சார்புத்தன்மை மூலமே காலனிய ஆட்சி நிலைத்திருக்கிறது என

அவர் நம்பினார். தைரியம், தியாகம், கூட்டுச் செயல் ஆகியவையே உண்மையான விடுதலையின் கருவிகள் என அவர் வலியுறுத்தினார்.

தேசிய சுதந்திரத்தின் அடிப்படையாக சமூக நீதி:

சிதம்பரனாரின் சிந்தனையின் மிக முக்கிய அம்சம், சமூக நீதி இல்லாத அரசியல் சுதந்திரம் வெறும் ஆட்சியாளர்களின் மாற்றமே தவிர உண்மையான விடுதலை அல்ல என்பதே.

சமூக சமத்துவம், மனித மரியாதை, தொழிலாளர் உரிமைகள் ஆகியவை இல்லாமல் தேசிய சுதந்திரம் முழுமை பெறாது என அவர் வலியுறுத்தினார்.

இந்த வகையில் அவரது தேசியவாதம் அனைவரையும் உள்ளடக்கிய சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு முன்னேற்றமான விடுதலைக் கோட்பாடாக விளங்குகிறது.

நவீன காலப் பொருத்தம்:

இன்றைய இந்தியாவில் சமூக நீதி, பொருளாதார சமத்துவம், தொழிலாளர் உரிமைகள் தொடர்பான விவாதங்கள் தொடர்ந்து முன்னிலையில் உள்ளன.

அதிகரிக்கும் வர்க்க வேறுபாடுகள் மற்றும் சமூக விலக்கம் சிதம் பரனாரின் சிந்தனைகளை மீண்டும் வாசிக்க வேண்டிய அவசியத்தை உணர்த்துகின்றன. மக்களை மையமாகக் கொண்ட அவரது தேசியவாதம், உள்ளடக்கிய வளர்ச்சிக்கும் சமூக சமத்துவத்திற்கும் ஒரு நெறியியல் வழிகாட்டியாக விளங்குகிறது.

முடிவுரை:

வ.உ.சிதம்பரனார் சமூக நீதி வழியாக தேசியவாதத்தை மறுவிளக்கம் செய்த ஒரு தொலைநோக்கு சிந்தனையாளராகத் திகழ்கிறார். சமூகத்தின் உள் அநீதிகளை அகற்றாமல் தேசிய விடுதலை முழுமை பெறாது என்பதே அவரது சிந்தனைகளின் மையமாகும்.

மனித மரியாதை, சமூகப் பொறுப்பு, மக்களின் அதிகாரமடைதல் ஆகியவற்றை முன்னிலைப்படுத்திய அவரது விடுதலைக் கோட்பாடு, இன்றைய ஜனநாயகச் சிந்தனைகளுக்கும் சமூக இயக்கங்களுக்கும் ஒரு உயிருள்ள மரபாகத் தொடர்கிறது.

சமூக நீதி, சிதம்பரனாரின் தேசியவாதத்தின் மையமாக இருந்தது. சமூக சமத்துவம் அரசியல் விடுதலையின் அடிப்படை நிபந்தனையாக இருந்தது. தொழிலாளர் உரிமைகள், பொருளாதார சுயநிறைவு, காலனிய எதிர்ப்பு ஆகியவை ஒருங்கிணைந்த விடுதலைக் கோட்பாடாக உருவெடுத்தன.

அவரது சிந்தனைகள் இன்றைய ஜனநாயக மற்றும் சமூக சீர்திருத்த விவாதங்களிலும் மிகுந்த பொருத்தம் உடையவை.

மேற்கோள்கள்:

1. சந்திரா, பியன் (1989) இந்தியாவின் விடுதலைப் போராட்டம், பென்குயின் பதிப்பகம்,
2. சு ஹபீப், இர்பான். (1995). இந்திய வரலாற்றுக் கட்டுரைகள் துளிகா பதிப்பகம்.
3. சுப்பிரமணியன், என். (2010), காலளிய தமிழ்நாட்டில் தேசியவாதமும் சமூக சீர்திருத்தமும்,
4. இந்திய வரலாற்று ஆய்வு இதழ், தொகுதி 3.
5. ராஜராமன், ஆர். (2008). தமிழ்த் தேசிய இயக்கமும் வ.உசிதம்பரனாரும். நியூ செஞ்சுரி புத்தக இல்லம், சென்னை.
6. சுந்தரராஜன், க. (2012) காலனிய காலத்தில் தொழிலாளர் இயக்கங்களும் சமூக நீதி சிந்தனையும். சமூக அறிவியல் ஆய்வு இதழ், தொகுதி 18
7. அருணாசலம், 2. (2015). வஉசிதம்பரனாரின் அரசியல் சிந்தனைகள்: ஒரு விமர்சன ஆய்வு, தமிழ் ஆய்விதழ், தொகுதி 22(3).
8. மு. துரைசாமி (2017). சுதேசி இயக்கத்தில் பொருளாதார நேசியவாதம், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
9. சி. வேல்முருகன் (2019) இந்திய தேசிய இயக்கத்தில் சமூக நீதி கருத்தாக்கம். இந்திய சமூக வரலாறு ஆய்வு இதழ், தொகுதி 41.

சிதம்பரனாரின் கைதும் மக்கள் எழுச்சியும்

65

வ.உ.சி.யின் பார்வையில் பாரதி

உ. அசின்
விலங்கியல் துறை, சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

முனைவர் க. உமாராணி,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி.

ஆய்வுச்சுருக்கம்:

இந்திய விடுதலை வரலாற்றில் தமிழகத்தைச் சார்ந்த தேசப் பற்றாளர்களின் பணி போற்றுதற்குரியதாகும். அவ்வகையில் மகாகவி பாரதியாருடனான வ.உ.சி அவர்களின் நட்பும், நல்லுறவும் சிறப்பிற் குரியன. வ.உ.சி அவர்கள் பாரதியாருடன் தனக்கு ஏற்பட்ட அனுப வங்களாகிய மலரும் நினைவுகளை வ.உ.சி கண்ட பாரதி என்ற நூலின் வழி அறியமுடிகின்றது. தேச விடுதலைக்காக தங்கள் வாழ்நாளையே அர்ப்பணித்த தேசப்பற்றாளர்களான பாரதியாரும், வ.உ.சி-யும் அறியப் படுகின்றனர். பாரதிக்கும், வ.உ.சிக்கும் இடையிலான இனிய நினைவுகளை எடுத்துரைக்கின்ற இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ள கருத்துகளை எடுத்துரைக்கின்ற வகையில் இக்கட்டுரை அமைய விருக்கின்றது.

திறவுச்சொற்கள் - பாரதியார், வ.உ.சி., தேச விடுதலை, தேசப்பற்று, இந்திய விடுதலை வரலாறு

முன்னுரை:

இந்திய சுதந்திரப் போராட்டக்களத்தில் தனது பங்களிப்பை நல்கி வரலாற்றின் பக்கங்களில் இடம்பிடித்த வ.உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் ஒரு விடுதலைப்போராட்ட வீரர் மட்டுமல்ல, வழக்கறிஞர், தமிழ் அறிஞர், எழுத்தாளர் எனப் பன்முகப் பரிமாணங்களைக் கொண்ட ஆளுமை ஆவார். மேலும் இவர் 'கப்பலோட்டிய தமிழன்' என்று பெருமையுடன் அழைக்கப்படுகிறார். வ.உ.சி. கண்ட பாரதி என்ற கட்டுரை வ.உ.சி. பாரதியாரைப் பற்றி எழுதிய நூலாகும். இதில் பாரதியாரைப் பற்றி அவரின் எழுத்துகள், அவரது தேசப் பற்றின் ஆழம், தமிழின் மீதான காதல், இவர்களுக்கு இடையே உள்ள நட்பு மற்றும் அவர்களின் இறுதி நாட்களின் நினைவு ஆகியவற்றைப் பற்றி இக்கட்டுரையின் வழிக் காண்போம்.

பாரதிக்கும் வ.உ.சி. க்கும் உள்ள பழக்கம்:

பாரதியின் தந்தையான சின்னசாமி ஐயர் அவர்களும் வ.உ.சி. யின் தந்தையான உலகநாதபிள்ளை அவர்களும் எட்டையபுரம் சமஸ்தானத்தில் உத்தியோகம் செய்து வந்தனர். அப்போது இருவருக்கும்

நட்பாகி வ.உ.சி.யின் சொந்த ஊராகிய ஒட்டபிடாரத்தில் அடிக்கடி சந்திப்பு நிகழ்ந்தது.

அப்போது வ.உ.சி. யின் தந்தையுடன் சின்னசாமி ஐயர் அவர்கள், தனக்கு ஒரு மகன் இருப்பதையும் மேலும் அவர் சிறு வயதில் இருக்கும் போதே தமிழில் வெகு அருமையாக பாடுவார் என்றும், பாரதியார் பாடிய கவிதையைப் புகழ்ந்தும் வ.உ.சி. யிடம் பேசுவார். இதனால் வ.உ.சி. க்கு பாரதியின் மீது ஒரு ஈர்ப்பு உண்டானது. பாரதியைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலும் உண்டானது.

பாரதியோடு முதல் சந்திப்பு:

வ.உ.சி. க்கு பாரதியைப் பார்க்கும் பாக்கியம் சென்னையில் தான் கிடைத்தது. அப்போது பாரதி அவர்கள் 'இந்தியா' என்னும் பெயர் பெற்ற தமிழ்ப்பத்திரிகையின் ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்தார். சுதந்திரப் போராட்டக்காலத்தில் பத்திரிகையாளர் பணி என்பது மிகவும் பொறுப்பும், எதிர்ப்பும் மிகுந்த பணியாகவே இருந்தது. ஆனால் இப்பணியைச் செவ்வனே செய்து வந்தார் மகாகவி பாரதியார். இவ்வளவு சிறப்புமிக்க பாரதியாரை பார்க்கவேண்டும் என்ற ஆர்வத்தில் உடனே கிளம்பி பாரதியார் இருக்கும் இடத்திற்கு சென்றார். பின் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார் வ.உ.சி. இவ்வாறு பாரதியோடு முதல் சந்திப்பு நிகழ்ந்தது.

நவில்தொறும் நூல் நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு (குறள்.783)

என்ற குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தனர் பாரதியும், வ.உ.சி யும் என்றால் மிகையில்லை.

சோழனும், கம்பனும் போல:

பாரதியார் வ.உ.சி. யிடம் என் தந்தையும் உங்கள் தந்தையும் நண்பர்கள், மேலும் அவர்கள் உங்களைப் பற்றி நிறைய விஷயங்களை சொல்லி இருக்கிறார்கள் என்றார். மேலும் பல்வேறு விஷயங்களைப் பற்றி இருவரும் பேசிக்கொண்டு இருந்தனர். அப்போது வ.உ.சி. அவர்கள் தன்னைச் சோழனாகவும், பாரதியாரைக் கம்பனாகவும் நினைத்துக் கொண்டார்.பின்னர் இருவரும் திருவல்லிக்கேணி கடற்கரைக்குச் சென்று அங்கு அரசியல் விஷயங்கள், வங்க மாகாணத்தின் சிங்கச் செயல்கள், சந்திர பாலரின் தேசபக்தி, பிரசங்கங்கள் முதலியவை பற்றி பேசினர். பின்னர் அடிக்கடி இருவரும் வீட்டிற்கும், கடற்கரைக்கும் செல்வது வழக்கமானது. கம்பனும், சோழனுமான இருவரும் மாமனும், மருமகனைப் போன்று ஆனார்கள். தேச விடுதலையைப் பற்றிய தங்கள் சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டனர்.

வ.உ.சி. கேட்ட உடனே பாட்டு:

இத்தாலி நாட்டுத் தேசாபிமானி மாஜினியின் தேச ஊழியர் இத்தாலி சங்கத்தின் அங்கத்தினராக சேர்ந்தார் பாரதி. ஆங்கில பாஷையில் உள்ள

விசுவாசப் பிரமாணச் செய்யுளை வ.உ.சி. யிடம் படித்துக் காட்டினார். அதைக் கேட்ட வ.உ.சி. சொக்கிப் போய் அச்செய்யுளை தமிழில் மொழிபெயர்த்து பாட்டாக பாட வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். வ.உ.சி. கேட்ட உடனே பாரதி அதை மொழிபெயர்த்து தந்தார். பின்னர் இருவருக்கு தேச ஆட்சியை சீக்கிரமாகவே அவர்கள் கைக்கொள்வதற்கு செய்ய வேண்டியதைப் பற்றி திட்டமிட்டனர். நாட்டு விடுதலை ஒன்றே அவர்களின் பேச்சிலும், செயலிலும் வெளிப்பட்டது. அந்நிய ஆட்சியை அகற்றி பாரத தேசம் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டுமென்ற எண்ணமே இருவரது உள்ளத்திலும் மேலோங்கியிருந்தது.

நெல்லையில் பாரதியார்:

வெள்ளையர்களின் அடக்கு முறை இந்தியா முழுவதும் தாண்டவ மாடிக்கொண்டிருந்த வேளையில் பாளையங்கோட்டை மத்திய சிறையில் விசாரணைக் கைதிகளாக இருந்த போது சென்னை நண்பர்களுடன் விளையாடினார்.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். *(குறள்.71)*

என்ற குறளுக்கிணங்க, பின் வ.உ.சி.யைக் கண்டதும் பாரதிக்கு கண்களில் நீர் மல்கியது. இதனையே இருவருக்கும் இடையே உள்ள அற்புதமான உறவு எனலாம். நயத்தக்க பண்பினரான இருவரது நட்புறவும் இவர்கள் சந்திப்பில் வெளிப்பட்டது. வ.உ.சி. தனது தண்டனையை கோவைச் சிறையிலும், கண்ணனூர் சிறையிலும் கழித்து விட்டு 1912 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் விடுதலை அடைந்தார்.

புதுவையில் பாரதியார்:

நெல்லையிலிருந்து பாரதியார் முதலியோர் சென்னை போய்ச் சேர்ந்ததும், பாரதியின் மேல் வழக்குத் தொடரப்பட்ட காரணத்தால் வேறு தேசத்திற்கு செல்ல வ.உ.சி. வேண்டிக்கொண்டார். பின் வ.உ.சி. யின் ஆணைக்கு இணங்கி புதுச்சேரிக்கு சென்றார். வ.உ.சி. யின் தண்டனைக் காலம் முடிந்து சென்னையில் தங்கி இருக்கும் பொழுது வ.உ. சி. க்கு பாரதியாரின் நினைவு ஒன்று மட்டுமே ஏற்பட்டது.

புதுவையில் பாரதி தரிசனம்:

புதுச்சேரிக்கு பாரதியைப் பார்க்க வ.உ.சி. சென்றார். அவருடன் தங்கி உணவு உண்டு, ஆடல் பாடல்களைக் கேட்டும் கண்டும் கழித்தார். ஒத்த அன்புடையவர்களாகத் திகழ்ந்த இருவரும் உற்சாகத்தோடு அளவளாவி மகிழ்ந்தனர்.

கடைசியாக கண்டது:

பின்னர் பல வருடங்களுக்குப் பிறகு பெரம்பலூரில் வசித்து வந்தார் வ.உ.சி. அவர் வீட்டில் ஒரு நாள் பாரதி அவர்கள் உறங்கிக்கொண்டு இருந்தார். அதனை அறிந்த வ.உ.சி. வேகமாக சென்று பாரதியை எழுப்பினார். சேமம் விசாரித்தார். பின் பாரதியின் முகத்தில் ஏதோ

மாற்றம் இருப்பது போல உணர்ந்தார். பழைய உற்சாகத்தையும், முகமலர்ச்சியையும், கண்களில் வீரப் பொலிவையும் கொண்டதால் பேச்சும் புது மாதிரியாகத்தான் இருந்தது.

பாரதியாரின் மாற்றம்:

பாரதி அவர்கள் ஒரு அமிருதாஞ்சன் டப்பாவிலிருந்து லேகியத்தை எடுத்து தனது வாய்க்குள் போட்டுக் கொண்டார். வ.உ.சி. அதைப் பற்றி கேட்டவுடன் சமாளித்துவிட்டார்கள் பாரதி. பிறகு வ.உ.சி. புரிந்துகொண்டார். பாரதியாரின் மாற்றத்திற்கு இதுவே காரணம் என்று, பின் வ.உ.சி. பெரம்பலூருக்குத் திரும்பினார்.

பாரதியின் மறைவும்! மாண்பின் மறைவும்!

கொஞ்ச நாளில் பாரதி மறைந்த செய்தியைக் கேட்டு வ.உ.சி. திடுக்கிட்டுப் போனார். அவர் மனம் மிகுந்த வேதனையடைந்தது. எனினும், பாரதி மறைந்தாலும் அவர் பாடிய பாடல்களும், கதைகளும், கட்டுரைகளும் என்றும் நிலைத்து நிற்கும் என வ.உ.சி. நினைத்துக் கொண்டார். தேச ஒற்றுமைக்காகவும், விடுதலைக்காகவும் பாரதியார் பாடிய பாடல்கள் அனைத்தும் மக்கள் அனைவருக்கும் எழுச்சியையும், மலர்ச்சியையும் ஏற்படுத்தும் என்று வ.உ.சி நம்பினார். பாரதி மறைந்தாலும் அனைவரின் நெஞ்சில் எந்நாளும் புகழுடன் இருப்பார் என அறிந்து கொண்டார். பாரதியின் அமரக்கவிதைகள் போற்றுதற்குரியன என்று உணர்ந்திருந்தார்.

முடிவுரை:

'வ.உ.சி. கண்ட பாரதி' என்ற இந்த நூல், வெறும் வரலாற்றுப் பதிவல்ல; அது இருபெரும் தமிழ் மகான்களின் ஆத்மார்த்தமான நட்பின் சாட்சி. வ.உ.சி.யின் கூற்றுப்படி, பாரதி வெறும் கவிஞன் மட்டுமல்ல, அவர் ஒரு தீர்க்கதரிசி, தேசத்தின் ஆன்மாவைக் கண்ட ஞானி, தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் ஒரு வழிகாட்டி. பாரதியின் எழுத்துகளில் இருந்த புரட்சிகரமான கருத்துகள், சாதி, மத வேறுபாடுகளைக் கடந்து நிற்கும் அவர் சிந்தனைகள், தமிழ்மொழியின் மாண்பை உலகறியச் செய்த விதம், அத்தனையையும் வ.உ.சி. தன் எழுத்துக்களில் ஆழமாகப் பதிவு செய்துள்ளார். தேச விடுதலைக்காக தமது பங்களிப்புகளை நல்கிய இந்த இருபெரும் தேசப்பற்றாளர்களும் தங்கள் தாய்நாட்டிற்காக ஆற்றிய பணிகள் அளப்பரியன. நூற்றாண்டைக் கடந்து வாழும் பாரதியார், வ.உ.சி இருவரது படைப்புகளும் தமிழ்கூறும் நல்லுலகத்தோரால் போற்றிக் கொண்டாடுவதற்குரியதாகவே இருக்கும்.

துணைநூல்கள்:

1. வ.உ.சி கண்ட பாரதி - ஆருத் புக்ஸ், வளசரவாக்கம், சென்னை. 1946.
2. திருக்குறள் தெளிவுரை, அ. மாணிக்கம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 1997.

66

சிறைச்சாலையிலும் சிந்தனைச் சுதந்திரம் – வ.உ.சிதம்பரனார்

முனைவர் கோ. தமிழரசி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்,
தொன் போஸ்கோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கீழஈரால், தூத்துக்குடி மாவட்டம்.

ஆய்வுச்சுருக்கம்:

இந்த ஆய்வுக் கட்டுரை, இந்திய விடுதலைப் போராட்டத்தில் தனித்துவமான இடம் பெற்ற வ.உ. சிதம்பரனாரின் வாழ்க்கையையும், குறிப்பாக சிறை வாழ்க்கையில் அவர் வெளிப்படுத்திய சிந்தனைச் சுதந்திரத்தையும் மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. உடல் சிறைப்பட்டாலும் மனமும் சிந்தனையும் அடைக்கப்பட முடியாது என்பதை வ.உ.சி தனது வாழ்க்கை மூலம் நிரூபித்தார். அரசியல் அடக்குமுறை, காலனிய நீதிமுறை, சிறைச் சித்திரவாதங்கள் ஆகியவற்றை எதிர்கொண்டு, எழுத்து, சிந்தனை, தத்துவம், தேசிய உணர்வு ஆகியவற்றின் மூலம் அவர் வெளிப்படுத்திய சிந்தனைச் சுதந்திரம் இக்கட்டுரையின் முக்கிய ஆய்வுப் பொருளாகும். இவ்வாய்வு, வ.உ.சி ஒரு போராளி மட்டுமல்ல; ஒரு சிந்தனையாளர், எழுத்தாளர், சமூக சீர்திருத்தவாதி என்பதையும் வெளிப்படுத்துகிறது.

முக்கியச் சொற்கள்: வ.உ.சிதம்பரனார், சிறைச்சாலை, சிந்தனைச் சுதந்திரம், தேசியம், காலனிய அடக்குமுறை, எழுத்துச் சுதந்திரம்.

முன்னுரை:

இந்திய விடுதலைப் போராட்டம் என்பது ஆயுதப் போராட்டம் மட்டுமல்ல; சிந்தனைகளின் போராட்டம். அந்தச் சிந்தனைப் போராட்டத்தின் முன்னணியில் நின்றவர் வ.உ. சிதம்பரனார். 'சிறைச்சாலை' என்பது மனிதனின் உடலைக் கட்டுப்படுத்தலாம்; ஆனால் அவனது சிந்தனையை அடக்க முடியாது என்பதை தனது வாழ்க்கை முழுவதும் அவர் நிரூபித்தார். சிறை வாழ்வின் கொடுமைகளுக்கிடையிலும் தேசிய சிந்தனையை, சமூக உணர்வை, மனிதநேயத்தை வளர்த்தவர் வ.உ.சி. இந்த ஆய்வு, அந்தச் சிந்தனைச் சுதந்திரத்தின் பரிமாணங்களை ஆராய்கிறது.

வ.உ.சி. யின் வாழ்க்கைச் சுருக்கம்:

வ.உ.சிதம்பரனார் (1872–1936) தமிழ்நாட்டின் தூத்துக்குடியில் பிறந்தார். வழக்கறிஞராகத் தனது வாழ்க்கையைத் தொடங்கிய அவர், விரைவில் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

சிறைச்சாலை – ஒரு அடக்குமுறை அமைப்பு:

காலனிய ஆட்சியில் சிறைச்சாலைகள் தண்டனை வழங்கும் இடங்களாக மட்டுமல்ல, சிந்தனைகளை அடக்குவதற்கான

கருவிகளாகவும் பயன்படுத்தப்பட்டன. வ.உ.சி தூத்துக்குடி வழக்கில் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார்.

சிறை வாழ்விலும் சிந்தனைச் சுதந்திரம் - உடல் சிறை – மன விடுதலை:

வ.உ.சி சிறையில் இருந்தபோதும், தனது சிந்தனைகளைக் கட்டுப்படுத்த அனுமதிக்கவில்லை. 'உடல் சிறைப்பட்டாலும், சிந்தனைச் சுதந்திரமாக இருக்க வேண்டும்' என்பது அவரது வாழ்க்கைத் தத்துவமாக மாறியது.

சிந்தனைச் சுதந்திரமும் தேசிய உணர்வும்:

வ.உ.சி. சிந்தனைச் சுதந்திரத்தை தனிநபர் உரிமையாக மட்டுமல்ல; தேசிய விடுதலையின் அடிப்படையாகவும் கருதினார். சுய சிந்தனை, சுய மரியாதை, சுய நிர்ணயம் இவையே உண்மையான விடுதலைக்கான அடிப்படைகள் என அவர் வலியுறுத்தினார்.

சமகாலப் பார்வையில் வ.உ.சி:

இன்றைய காலகட்டத்தில் சிந்தனைச் சுதந்திரம் மீண்டும் சவால்களுக்கு உள்ளாகி வருகிறது. வ.உ.சி. யின் வாழ்க்கை, 'அச்சமின்றி சிந்திப்பதே உண்மையான ஜனநாயகம்' என்ற பாடத்தை நமக்குக் கற்பிக்கிறது.

சிறைச்சாலை இலக்கியமும் சிந்தனைச் சுதந்திரமும்:

சிறைச்சாலை இலக்கியம் உலக வரலாற்றில் தனித்த இடம் பெற்றது. சிறை என்பது சிந்தனையை அடக்கும் இடமாக உருவாக்கப் பட்டாலும், பல சமயங்களில் அது சிந்தனை வெடிக்கும் இடமாக மாறியுள்ளது. வ.உ.சிதம்பரனாரின் சிறை வாழ்க்கை, இந்த சிறை இலக்கிய மரபில் ஒரு முக்கிய அத்தியாயமாகும்.

பிரிட்டிஷ் காலனிய ஆட்சியில் சிறைச்சாலைகள், அரசியல் கைதி களின் மனஉறுதியை உடைப்பதற்கான கருவிகளாக செயல்பட்டன; ஆனால், வ.உ.சி போன்ற சிந்தனையாளர்கள், அந்த இடத்தையே ஒரு தியான மண்டபமாகவும், சிந்தனை வளர்க்கும் ஆய்வகமாகவும் மாற்றினர்.

வ.உ.சி சிறையில் அனுபவித்த துன்பங்கள், உடல் உழைப்பு, அவமதிப்பு, தனிமை இவையெல்லாம் அவரது சிந்தனையை குறுக்கவில்லை; மாறாக, மனித வாழ்க்கையின் உண்மை அர்த்தம், அடக்குமுறையின் கொடுமை, சுதந்திரத்தின் அவசியம் ஆகியவற்றை ஆழமாகச் சிந்திக்க வைத்தன. 'சிறை என்பது சுவர்களால் ஆனது; சிந்தனை என்பது வானம் போன்றது' என்ற கருத்து, வ.உ.சி.யின் வாழ்க்கைக்கு மிகவும் பொருந்தும்.

வ.உ.சி.யின் சிந்தனை – தத்துவ அடிப்படை:

வ.உ.சிதம்பரனாரின் சிந்தனை மூன்று முக்கிய தத்துவ அடிப்படை களில் நிலைகொண்டது:

ஆத்ம மரியாதை:

ஒரு மனிதன் சிந்தனைச் சுதந்திரம் பெற, முதலில் அவனுக்கு தன்னம்பிக்கை மற்றும் ஆத்ம மரியாதை இருக்க வேண்டும் என்று வ.உ.சி. நம்பினார். சிறை வாழ்விலும் அவர் தன்னை ஒரு கைதியாக அல்ல; ஒரு போராளியாகவே எண்ணினார்.

தேசிய சிந்தனை:

அவரது சிந்தனை தனிப்பட்ட விடுதலையைத் தாண்டி, சமூக மற்றும் தேசிய விடுதலையை நோக்கியது. 'ஒரு நாட்டின் சுதந்திரம், அதன் மக்களின் சிந்தனைச் சுதந்திரத்தில் தான் தொடங்குகிறது' என்பதே அவரது அடிப்படைக்கோட்பாடு.

மனிதநேயக் கண்ணோட்டம்:

சிறை வாழ்வின் கொடுமைகளையும் அவர் வெறுப்பாக அல்ல; மனித சமுதாயத்தின் குறையாகவே பார்த்தார். தண்டிப்பவர்களையும் மனிதர்களாகவே கருதிய இந்த மனிதநேய சிந்தனை, அவரது மேன்மையை வெளிப்படுத்துகிறது.

இன்றைய சமூகத்தில் வ.உ.சி:

இன்றைய உலகில் சிந்தனைச் சுதந்திரம் பல்வேறு வடிவங்களில் சவால்களை எதிர்கொள்கிறது. கருத்துச் சுதந்திரத்திற்கான கட்டுப் பாடுகள், சமூக ஊடக தணிக்கை, அரசியல் அடக்குமுறை - இந்த சூழலில் வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கை ஒரு காலத்தைக் கடந்த பாடமாக விளங்குகிறது.

முடிவுரை:

வ.உ.சி. ஒரு விடுதலை வீரர் மட்டுமல்ல; ஒரு சிந்தனைப் புரட்சி யாளர். சிறைச்சாலையிலும் அவரது சிந்தனை சுதந்திரமாக இருந்தது. அந்த சுதந்திரமே அவரை காலத்தைக் கடந்த மனிதனாக மாற்றியது. இந்திய ஜனநாயகத்தின் அடித்தளமாக விளங்கும் சிந்தனைச் சுதந்திரத்திற்கு வ.உ.சி. வாழ்க்கை ஒரு நிலைத்த உதாரணமாகத் திகழ்கிறது. வ.உ. சிதம்பரனாரின் சிறை வாழ்க்கை, 'சுதந்திரம் என்பது அரசியல் உரிமை மட்டுமல்ல; அது சிந்தனைநிலை' என்பதை உணர்த்துகிறது. அவரது சிந்தனையின் ஆழத்தையும், இன்றைய தலைமுறைக்கான அதன் அவசியத்தையும் வலியுறுத்துகிறது.

துணைநூற் பட்டியல்:

1. வ.உ.சிதம்பரனார் மெய்யறிவுக் கட்டுரைகள் ஆசிரியர்: சிதம்பரம் பிள்ளை, வ. உ. வெளியீடு : எஸ். வி. என். பிரஸ் இடம்: சென்னை ஆண்டு : 1915.
2. வ.உ.சி. மனிதனும் சிந்தனையும் ஆசிரியர்: ச. ந. கண்ணன் பதிப்பகம்: கிழக்கு பதிப்பகம்,சென்னை பக்கங்கள்: 248 ஆண்டு: 2009.
3. தமிழ் விடுதலைப் போராளிகள் ஆசிரியர் - நாராயணசாமி ஐயர் பதிப்பாளர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் , சென்னை பதிப்பு ஆண்டு – 2004.

67

வ.உ.சி.யின் பாரதி உறவுநிலைகள்: இணைவும் இன்மையும்

முனைவர் ஆ. பூமிச்செல்வம்
இணைப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

ஆய்வுச்சுருக்கம்:

காலனிய கால அரசியல் சூழலில், இந்தியாவின் தென்பகுதியில் தோன்றிய இருபெரும் ஆளுமைகள்தான் வ.உ.சி.யும் பாரதியும். இந்திய தேசிய போராட்ட வரலாற்றில் ஆயுதந்தாங்கிப் போரிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன், பூலித்தேவனால் அவர்கள் பிறந்த பாஞ்சாலங்குறிச்சிக்கும் நெற்கட்டும் செவலுக்கும் எந்த அளவிற்குப் பெயருண்டோ, அதே அளவிற்கான புகழை ஓட்டப்பிடாரத்திற்கும் எட்டையபுரத்திற்கும் ஏற்படுத்தித் தந்த பெருமைக்குரியோர்தான் வ.உ.சி. யும் பாரதியும். தாம் பிறந்த மண்ணாலும் இணைந்திருந்த இயக்கத்தாலும் இவர்கள் எந்த அளவிற்கு இயைபு கொண்டிருந்தனரோ, அவற்றை விட மிக நெருக்கமான உறவு நிலைகளின் பிணைவினைக் கொண்டு விளங்கிய வகையில், காவியத்தில் இடம்பெறத் தக்க தகுதியை இவர்கள் இருவரும் எய்தியவர்களாகக் காணக்கிடைக்கின்றனர் என்கிற விதத்தில், இவர்கள் கொண்டிருந்த உறவு நிலைகளைக் கண்டாய்வதாக இவ்வாய்வின் பொருண்மை அமைவுறுகிறது.

திறவுச்சொற்கள் : சுதேசி, தார்சா, விவேகபானு, நெற்கட்டும் செவல், வெள்ளை யறிக்கை.

தொடக்கமாக...

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றி, இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் செயலூக்கம் பெற்று, நடப்புக் கால கட்டத்திலும் நிலைபேறு பெற்றுள்ள இருபெரும் தமிழக ஆளுமைகள்தான் வ.உ.சி.யும் பாரதியும். இவ்விருவரையும் இணைத்துப் பார்த்தாய வேண்டியதன் காலத்தேவை யாதென வினவின், பிறந்த ஊரால், பிறப்பித்த பெற்றோரால், கொண்ட கொள்கையால், செயல்பட்ட போராட்டக் களத்தால், படைத்தளித்த இலக்கியப் பனுவல்களால் ஒருமித்தும், மொழி ரீதியான கருத்தியலால் வேறுபட்டும் காட்சி பெற்றமையே காரணமெனலாம்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில், கம்பெனி ஆட்சியை மறுத்தெழுந்த இந்திய தேசிய இயக்கப் போராளியருள் மிதவாதியர், தீவிரச் செயல்பாட்டாளர்கள் எனும் இருபெரும் பாகுபாடுகளில், பின்சுட்டிய இயக்கத்துள் தம்மை நெருக்கமாகப் பொருத்திக் கொண்டவர்கள்தான் வ.உ.சி.யும் பாரதியும். தாம் ஏற்றிருந்த கொள்கைக்காக வெறுமனே செயல்படுதலை விடுத்து, தாம்

வாழ்வையே அதற்காக அர்ப்பணித்த வகையில்தான் இவ்விருவரும் பேராளுமையராகப் பாவிக்கப்படுகின்றனர். 1906 வாக்கில், சொந்த ஊர்க்காரர்கள் என்கிற அறிமுகத்தில் தொடங்கிய நட்பு, 1907இல் கருவுற்று, 1912 இல் திடப்பட்டு, 1915இல் சற்று உராய்வுற்று, 1921 தொட்டு 1931 வரையிலுமாகத் தூய்மையடைந்த விதங்களில்தான் இவ்விருவருக்கிடையிலான உணர்வுப்பூர்வமான காவிய நட்பு என்பது உன்னத நிலையை அடைந்திருக்கிறது. இவ்விதப்பட்டோருடைய உணர்வு நிலைகளின் இணைவுகள் பற்றியும், இசைவின்மை குறித்தும் புலப்படுத்த முயலுவதாக இனி வரும் பகுதி அமைகிறது.

பிறப்பு சார்ந்த ஒற்றுமைகள்:

'தமிழ்த்திலகர் என்றும், தென்னாட்டுத் திலகர் என்றும் செய்த தேசச் சேவையின் பொருட்டு, தி.வி.க. முதலான சான்றோரால் அக்காலத்திலேயே போற்றப்பட்டவர் வ.உ.சிதம்பரம்'[1]. 'நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்' என்கிற கொள்கைகளை ஏந்தி, தம் வாழ்நாள் முழுவதும் செயலாற்றியதால் 'மகா கவி'யென்றும், 'தேசிய கவி'யென்றும் போற்றப்பட்டவர் பாரதி. இவ்வித ஆளுமைகளும் அவதரித்த மண் இந்தியாவின் தென்முனையில் அமைந்த திருநெல்வேலி மாகாணம்.

சுதந்திரப் போராட்டம் என்றாலே இந்தியாவின் தென்பகுதியிலுள்ள பாஞ்சாலங்குறிச்சியையே வெகுசனங்கள் அறிவர். அதன் அருகில் இருக்கும் ஓட்டப்பிடாரம், அதற்குச் சற்று எட்டியும் நெருங்கியும் இருக்கும் எட்டையபுரம் என்பனவும் இதன் வரிசையில் இடம்பெறத் தகுதி கொண்டனவேயாம். இவற்றின் புகழுக்கு வ.உ.சி.யும் பாரதியுமே முழுமுதற்காரணமெனின் மறுப்பதற்கில்லை. தம் பிறப்பால் ஒரே பகுதிக்காரர்கள்: வயதால் பத்தாண்டுகள் மட்டுமே இடைவெளி கொண்டோர்: இருவரின் தந்தையரும் எட்டையபுரச் ஜமீன் ஊழியர்கள்; அதனால் இருவர்தம் வீடுகளுக்கும் சென்று வரும் அளவிலான நண்பர்கள், என்றாலும் கூட, தமது பதினான்கு வருட கால நேரடிப் பழக்கத்தில், வ.உ.சி.யும் பாரதியும் ஒருமுறை கூடத் தம் சொந்த ஊர்களில் சந்தித்துக் கொள்கிற வாய்ப்பினைப் பெற்றாரில்லை என்பதுதான் நிதர்சனம்.

கருத்தியல் சார் இணைவுகள்:

இந்திய விடுதலைக்கான போராட்ட நிகழ்வுப் பாடுகளில் தம்மை நீக்கமற இணைத்துக் கொண்டு, தமிழகத்தின் தனித்த அடையாளங்களாகச் செயல்பட்டோராக வ.உ.சி.யும் பாரதியும் காணக்கிடைக்கின்றனர். இவ்விதச் செயல் நிகழ்வுகளில், 'பொருளாதார ஆதிக்கமே பிரிட்டிஷ் ஆட்சியாளரின் அடிப்படை; அதனைத் தகர்த்தால் நாடு தானே விடுதலைபெறும்' [2] என்கிற கொள்கையின் அடிப்படையில், 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன்' கப்பல் கம்பெனி'யைத் தொடங்கி, பொருளாதாரப் போரை முன்னெடுத்த வகையில் வ.உ.சி.யும், அந்நிய ஆட்சியை அகற்றிடப் பத்திரிகையையும் படைப்பிலக்கியங்களையும்

ஆயுதங்களாக ஏந்திப் போராட்ட விதங்களில் பாரதியும் ஒரே கருத்தியல் தளத்தில், ஒருமித்துப் பயணப் பட்டோராகக் காட்சிப்படுகின்றனர். இவ்விதப் பயண வெளியில்தான் இவ்விருவருக்கிடையலான உறவுநிலையானது நெருங்கிய பிணைப்புக் கொண்டதாக ஆகியிருக்கிறது. குறிப்பாக, 1906ஆம் ஆண்டு வாக்கில் சென்னையில், இந்தியா – பத்திரிகை அதிபர் வீட்டில் வ.உ.சி.யே முயன்று சென்று, பாரதியைப் பார்த்த வகையில்தான், ஒரே ஊர்க்காரர்கள், பெற்றோர் வழி உறவு பாராட்டத்தக்கவர்கள், இலக்கிய மோகமும் சுதந்திர தாகமும் மிக்கவர்கள் என்பவை உறுதிப்பட்டிருக்கின்றன. இவ்விதச் சந்திப்பைப் பத்திரிகை அதிபர் திருமலாச்சாரியாரே தொடங்கி வைத்திருக்கிறார். அப்போது, இவர்தான் இந்தியாவின் ஆசிரியர் சுப்பிரமணிய பாரதி என்று அவர் அறிமுகப்படுத்திட, அப்போதிருந்து வ.உ.சி., பாரதியின் உறவு நிலை துளிர்க்கத் தொடங்கியிருக்கிறது. இது பற்றி வ.உ.சி.பகிரும் போது, ‘பாரதி, என் ஊரையும் பேரையும் விசாரித்தார். ஓட்டப்பிடாரம் வக்கீல் உலகநாதபிள்ளை சிதம்பரம் என்றேன். உங்கள் தகப்பனார் என் தகப்பனாரின் அத்தியந்த நண்பர். அவர்களை எனக்கு நன்றாகத் தெரியும். உங்களைப் பற்றியும் கேள்விப் பட்டிருக்கிறேன் என்றார். பின்பு, பாரதியாரும் நானும் சிறிது நேரம் தேசக் காரியங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அப்பேச்சு, அவரைக் கம்பராகவும் என்னைச் சோழனாகவும் நான் நினைக்கும்படிச் செய்தது’3 என்றிருக்கிறார். இதன் வழி, இவர்கள்தம் உறவு நிலையின் தொடக்கமே ஸ்திரத் தன்மை வாய்ந்ததாக இருந்திருக்கிறது என்பது புலனாகிறது.

மேற்சுட்டிய சந்திப்பினையடுத்து, ‘இந்தியா பத்திரிகை’ அலுவலகத்திலும், கடற்கரையிலும் பலமுறை வ.உ.சி.யும் பாரதியும் சந்தித்து, தம் உறவு நிலையைப் பலப்படச் செய்திருக்கின்றனர். அது பற்றி வ.உ.சி. யே சொல்லும் போது,

‘நாங்கள் திருவல்லிக்கேணி கடற்கரைக்குச் சென்றோம். அங்கிருந்து வங்காளத்தின் காரியங்களையும் பெபின் சந்திரபாலர் முதலியோரின் பிரசங்கங்களையும் செயல்களையும் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். என் உள்ளத்தில் மின்மினிப் பூச்சியைப் போல ஒளிவிட்டுக் கொண்டிருந்த தேசாபிமான நெருப்பு, விளக்கு போல் ஒளி விட்டுப் பிரகாசித்தது.... அப்போது ஆசிரியரும் நானும் முறையே கம்பரும் சோழரும் ஆகி, மாமனாரும் மருமகனும் ஆகினோம்’[4] என்றிருக்கிறார்.

வ.உ.சி.யும் பாரதியும் தேசாபிமானம், தேச விடுதலை என்கிற கருத்தியல்களில் ஒன்றுபட்டு, இந்திய தேசிய சுதந்திரப் போராட்டக் களத்தில் சந்தித்துப் பயணப்பட்ட சூழலில்தான் இவர்கள்தம் உறவு நிலை மேலும் இறுகித் திடப்பட்டிருக்கிறது. குறிப்பாக, 1907ஆம் ஆண்டு வாக்கில், சூரத் காங்கிரஸ் மாநாட்டின் தலைவராக லாலா லஜபதிராயைத் தேர்ந்தெடுப்பதில் இவ்விருவருக்கும் பொறுப்புத் தரப்பட்டிருக்கிறது. அவ்வேளையில்தான், இவர்கள் இருவரும் கருத்தியல் ரீதியான பிணைப்பை வெகுவாக எய்தியிருக்கின்றனர்.

இது பற்றி வ.உ.சி. பகிரும் போது, 'நமது பாரதியார், சிறந்த தேசத் தொண்டு புரிந்ததன் காரணமாக தேசம் விட்டுக் கடத்தப்பட்டு, அப்போது விடுதலையாகியிருந்த ஸ்ரீலாலா லஜபதிராயை, அந்த வருடக் காங்கிரஸ் மகாசபைக்குத் தலைவராக்க வேண்டுமென்று நினைத்தார். உடனே நான் சென்னைக்கு வர வேண்டும் என்று, எனக்குத் தந்தியும் கொடுத்தார். நான் சென்னைக்குச் சென்றேன். பாரதியார் முதலிய தேசாபிமானிகளெல்லாம் ஒன்று கூடி ஆலோசித்தோம். லாலா லஜபதிராயையே காங்கிரஸ் மகா சபைக்குத் தலைவராக்க வேண்டுமென்று ஏக மனதாகத் தீர்மானித்தோம். அதற்குரிய வேலைகளைச் செய்யும்படியான பொறுப்பு பாரதிக்கும் எனக்கும் அளிக்கப்பட்டது. அவ்விஷயத்தைக் கொண்டு முடிப்பதற்கு பாரதி மந்திரியும் நான் அரசனும் ஆகினோம்' [5] என்றிருக்கிறார். இக்கூற்று, இவர்களுடைய அரசியல் ரீதியான பிணைப்பின் கனபரிமாணத்தைக் காட்டுவதாகக் காணக் கிடைக்கிறது.

1906இல், தன்னியல்பாகத் தொடங்கிய வ.உ.சி. – பாரதியின் நேரடி உறவுநிலையானது, பல படிநிலைகளைக் கடந்து 1912 வாக்கில் உச்சம் பெற்றிருந்திருக்கிறது. அது, வ.உ.சி.யின் வீட்டு வராண்டாவில், இரவு 10 மணியளவில் தொடங்கி, ஓரிரு நாட்களுக்குள் நிறைவிற்கும் வந்திருக்கிறது. இதனைப் பின்வரும் வ.உ.சி.யின் கூற்று வழி அறியலாம்.

'பல வருடங்களுக்குப் பின்னர் நான் சென்னையைச் சேர்ந்த பெரம்பூரில் வசித்துக் கொண்டிருந்த போது, ஒரு நாள் நான் திரு வல்லிக்கேணி முதலான இடங்களுக்குப் போய் விட்டு, இரவு சுமார் 10 மணிக்கு என் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன். என் வீட்டு தாழ்வாரத்தில் இருவர் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தனர். என் வீட்டுக்குள் சென்று தாழ்வாரத்தில் தூங்கும் இருவர் யார் என்று என் மனைவியிடம் உசாவினேன். உங்கள் மாமனார் பாரதியாரும், அவருடன் வந்த சாமியார் ஒருவரும்தான் என்றாள் என் மனையாள்... மாமா முகத்தில் ஒரு வேறுபாட்டைக் கண்டேன். பழைய உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் கண்டிலேன். பிறகு அவர்களை எழுப்பி உணவிட்ட பின் பார்த்தால், அவர் பேச்சும் கூடப் புதுமாதிரியாய் இருந்தது. அப்போது காரணம் தெரியவில்லை. சில பேசி விட்டுத் துயின்றோம்... மறுநாள் காலையில் அவர்கள் இருவரும் உல்லாசமாகப் பேசும் சத்தம் கேட்டு, நான் கண் விழித்தேன். ஒரு தகர டப்பாவில் இருந்த லேகியத்தில், ஆளுக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு எடுத்து வாயில் போட்டனர். 'அது என்ன என்றேன்'. 'அது மோட்சத்திற்குக் கொண்டு போகும் மருந்து' என்றார் மாமா. 'அடப்பாவிகளா! எலுமிச்சங்காயளவா!' என்றேன். 'உனக்குப் பயந்துதான் இச்சிறிய அளவில் கொள்கிறோம்' என்றனர் மாமா. பின்னர் சில நாட்கள் கழித்து நான் சுதேசமித்திரன் அலுவலகத்திற்குப் போயிருந்த சில சமயங்களில், என் அருமை மாமாவைக் கண்டு பேசியிருக்கிறேன். கடைசியாக, மாமா வானுலகம் சென்றார் என்று கேட்டு, துக்கக் கடலில் ஆழ்ந்து, கரையேறினேன்'[6] என்கிற வ.உ.சி.யின் கூற்று, இவ்விருவருக்கிடையிலான காவிய நட்பின் வெள்ளையறிக்கையாகவே அமைவு பெற்றிருக்கிறது.

படைப்பிலக்கியம் சார்ந்த ஒத்திசைவுகள்:

நவீனத் தமிழ்ப் படைப்பிலக்கியச் சூழலுக்குப் புதுக் கவிதை, சிறுகதை, கட்டுரை, நாவல், மொழி பெயர்ப்பு, சுயசரிதை என அனைத்தையும் தந்து, முன்னோடியாக அமைந்த வகையில், பாரதியைத் தமிழ் கூறும் நல்லுலகம் அறியும்தான். ஆனால் தொழிலதிபர், வழக்குரைஞர், பேச்சாளர், தொழிற்சங்க வாதி, பத்திரிகையாளர், சுதந்திரப் போராட்டக்காரர் என்கிற பன்முகம் கொண்டிருந்த வ.உ.சி.க்குத் தீவிரப் படைப்பிலக்கியக் குணமும் இருந்திருக்கிறது என்பதை அவரின் பலவித படைப்புச் செயல்பாடுகளே அடையாளம் காட்டித் தருகின்றன. குறிப்பாக, இவரின் மெய்யறம், மெய்யறிவு, பாடற் திரட்டு, சுயசரிதை என்பனவும், சிவஞான போத உரை, இந்நிலை, தொல்காப்பியப் பதிப்புகள், மனிதனும் அறிவும் உள்ளிட்ட கட்டுரைத் தொகுப்பு, விவேகபானு, இந்துநேசன் உள்ளிட்ட பத்திரிகைகளின் ஆசிரியர் என்கிற செயல்பாடுகளே உதாரணம். இவ்வாறான படைப்புத் திறன்கள் கொண்ட வ.உ.சி., பாரதிக்கு நிகரானவரா என்கிற ஐயம் எழின், ஆம் எனவும், அதற்கு வ.உ.சி. யின் சுயசரிதைப் படைப்பே சான்றாகும் என்றும் சுட்டலாம்.

சான்றாக, ‘காலா உனை நான் சிறு புல்லென மதிக்கிறேன் – எந்தன் காலருகே வாடா, சற்றே உனை மிதிக்கிறேன்’[7] என்கிற விதமாய் பாரதி பாடிய ‘காலனுக்கு உரைத்தல்’ எனும் அவரின் படைப்புப் பனுவலுக்கு நிகராக, ‘என் மனமும் என் உடம்பும் என் சுகமும் என்னறமும் / என் மனையும் என் மகவும் என் பொருளும் – என் மணமும் – குன்றிடினும் யான் குன்றேன் கூற்றுவனே வந்திடினும் வென்றிடுவேன் காலால் மிதித்து’[8] என்று, ‘சுதேசிய நாவாய் சங்கக் கடனுக்குக் கட்டளை’ வந்த போது, மனம் வெம்பிப் படைத்த பனுவல் அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது. இவ்விதத்தில், பாரதியும் வ.உ.சி.யும் இலக்கியம் சார்ந்த விஷயங்களில் ஒன்றுபட்டிருந்தாலும்கூட, மொழி சார்ந்த கருத்து நிலைகளில் முரண்பட்டிருந்தமை என்பது, அவரவர் சார்ந்திருந்த சுயசார்பு நிலைகளைப் புலப்படுத்துவனவாகவே உள்ளன.

மொழி சார்ந்த இசைவின்மை நிலைமை:

காலனிய கால அரசியல் சூழலில், அது சார்ந்த எதிர்ப்பியக்கங்களில், தங்களை ஒருமித்த அணியில் இயைத்துக் கொண்டிருந்த வ.உ.சி. யும் பாரதியும் தாய்மொழி சார்ந்த கருத்துநிலைகளில் மட்டும் ஏனோ, இருவேறுபட்ட முகாம்களில் தொழிற்பட்டனர் என்பது விநோதமாகவே படுகிறது. குறிப்பாக, ‘வெளிநாட்டு ஊர்களின் பெயர்களையும் மனிதர்களின் பெயர்களையும் நாம் சரியானபடி சொல்ல வேண்டாமா?... நமது நாட்டு ஊர்ப் பெயர்களைக் கூட நாம் விபரீதமாக எழுதும்படி நேரிட்டிருக்கிறது! இதற்கு என்ன விமோசனம்? எல்லா ஐரோப்பிய மொழிகளுமே அந்நிய பாஷைகளிலுள்ள விசேஷ உச்சரிப்புகளுக்கு இணங்கும்படி, சில ‘தனிக்குறிகள்’ செய்து வைத்துக் கொண்டிருக்கின்றன. நாமும் அப்படியே விஷேசக் குறிகள் ஏற்பாடு செய்து கொள்ளுதல் அவசியமாகும். நான் இந்தக் குறையை நீக்கும் பொருட்டாக, மிகவும்

சுலபமாக, ஐந்து நிமிடங்களில் யாரும் கற்றுக் கொள்ளக் கூடிய சில குறிகளைத் தயார் செய்து வைத்திருக்கிறேன். நமது பாஷைக்கு நமது அரிச்சுவடி போதும்; அந்நிய தேசப் பெயர்கள் முதலியவற்றுக்காக மாத்திரமே இப்புதிய முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது...'[9] என்று தமிழில் உள்ள எழுத்துக் குறையை நீக்கும் பொருட்டு, பாரதி 'ஞானபானு பத்திரிகை' வழி கருத்தைத் தெரியப்படுத்திட விழைய, அதற்கு வ.உ.சி. தந்த மறுப்புத்தான் இசைவின்மையாகப்படுகிறது.

குறிப்பாக, பாரதியின் கருத்துப் பகர்விற்கு எதிர்வினையாற்றிட முனைந்த வ.உ.சி., 'சென்ற சில வருடங்களாகச் சில அறிவாளிகள் நம் தமிழ் பாஷையில் சில எழுத்துகள் குறைவாக இருக்கின்றன என்றும், அக்குறையை நிவர்த்தி செய்யத்தக்க பிற பாஷை எழுத்துகளேனும், பிற சில குறிகளேனும் நம் தமிழ் பாஷை எழுத்துக்களோடு சேர்க்கப்பட வேண்டும் என்றும் கூறி வருகின்றனர்.

ஆனால், அவர்களில் ஒருவரும் அவை சேர்க்கப்படுதல் நம் தமிழ் பாஷைக்காவது, அதன் வளர்ச்சிக்காவது இன்றியமையாததென்று காட்டத்தக்க காரணம் ஒன்றையும் இதுகாறும் கூறிலர்'[10] எனப் பேசி, பாரதிக்கு வெளிப்படையாகவே தம் எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார். ஆனால், இதற்குப் பாரதியோ உரிய பல காரணங்களை முன்பே தந்திருப்பினும் கூட, தாய்மொழி மீதான தனது அதீதப் பற்றின் காரணமாக, வ.உ.சி. அதைக் கருத்தில் கொள்ளாமல் போனதென்னவோ அதி விநோதமாகவே படுகிறது.

நிறைவாக...

கருவிலேயே திருவுடையவராக அவதரித்து, உள்ளூர் ஜமீன்தார் முதல் உலகளாவிய அரசியல், கலை - இலக்கியப் போக்குகள் வரை பேசிய பாரதி; உதித்தெழுந்த குடும்பப் பின்புலத்தால் செழுமை கொண்டெழுந்து, தாம் கொண்டிருந்த உயரிய கொள்கை காரணமாக வறியவராகி நசிந்து, மறைந்த வ.உ.சி., என்கிற இவ்விரு ஆளுமையரின் பின்னணியில், உலக – இந்திய – தமிழகத்தின் அரசியல், சமூக, பொருளாதார, மொழி, இலக்கியம் என்கிற அனைத்து வித அசைவியக்கங்களின் மீதும் புத்தொளி பாய்ச்சிப் பார்க்கலாம்தான்.

ஆனாலும், பிறந்த மண்ணால், ஈன்றெடுத்த பெற்றோரால், கொண்டிருந்த கொள்கையால், கூட்டுச் சேர்ந்து செயல்பட்ட செய்கையால், படைத்தளித்த பனுவல்களால், பாடுபட்ட துயர வாழ்வால் இவ்விருவரும் நெருக்கமான ஒத்திசைவுகள் கொண்டவர்கள்தான் என்கிற விதங்களில், இவர்களின் உறவு நிலைகள் யாவும் ஒருங்கிணைத்துப் பார்த்திடத் தகுதி கொண்டவைதான் என்கிற நிலையில் இந்த இருபெரும் ஆளுமைகளைத் தமிழ்ச் சமூகம் கொண்டாடியே ஆக வேண்டும் என்பதற்கு நாம் புற வெளியில் இருந்து காரணங்களைத் தேடிட வேண்டியதில்லை; இவ்விருவர்தம் வாழ்வு பாடுகளிலிருந்தே கூட அவற்றை நாம் வளர்த்தெடுத்துக் கொள்ளலாம்.

சான்றெண் விளக்கக் குறிப்புகள்:

1. ஆ.இரா.வேங்கடாசலபதி, ஆஷ் அடிச்சுவட்டில், ப.151.
2. ஆ.இரா.வேங்கடாசலபதி, வ.உ.சி.யும் பாரதியும், ப.22.
3. ம.ரா.போ.குருசாமி (பதி.ஆ.), சீனி.விசுவநாதன் (தொ. ஆ.), பாரதி பாடல்கள் ஆய்வுப் பதிப்பு, ப.540.
4. வீ.அரசு (பதி.ஆ.), வ.உ.சி.பன்னூல் திரட்டு தொகுதி -1, பக்.174-175.
5. ஆ.இரா.வேங்கடாசலபதி, முந்நூல், பக்.174-175.

துணைநூற் பட்டியல்:

1. அரசு,வீ., (பதி.ஆ.), வ.உ.சி. பன்னூல் திரட்டு தொகுதி -1, தமிழ்நாடு பாடநூல் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை – 96, முதற்பதிப்பு – 2021.
2. குருசாமி,ம.ரா.போ., (பதி.ஆ.), சீனி.விசுவநாதன் (தொ. ஆ), பாரதி பாடல்கள் ஆய்வுப் பதிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். முதல் பதிப்பு – 1987.
3. வேங்கடாசலபதி,ஆ.இரா., ஆஷ் அடிச்சுவட்டில், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில் – 01, நான்காம் பதிப்பு ஆகஸ்டு 2019.
4. வேங்கடாசலபதி,ஆ.இரா., (பதி.ஆ), வ.உ.சி.யும் பாரதியும், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில் -01, மூன்றாம் பதிப்பு டிசம்பர் 2023.

VANDE MATARAM

No 1723 Rs. 25.

THE SWADESHI STEAM NAVIGATION COMPANY, LIMITED

TUTICORIN.

Share Certificate.

CAPITAL Rs. 10,00,000, DIVIDED INTO 40,000 SHARES OF Rs. 25. EACH.

This is to certify that S Nagalingampillay of ... is the Registered proprietor of Share No. 20662 in the SWADESHI STEAM NAVIGATION CO., LTD. subject to the Memorandum and Articles of Association of the Company and that up to date there has been paid in respect of this Share the sum of Rupees Twenty five only.

Given under the Common Seal of the Company.

TUTICORIN. this ... day of ... 1907.

Secretary

Directors.

சுதேசி கப்பல் கம்பெனி வழங்கிய பங்குச் சான்றிதழ்

68

வ.உ.சி. முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி

ர. ச. யுவன்சேகர்
நிலத்தியல் துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.

முனைவர் தெ. சந்திரா
உதவிப் பேராசிரியர், வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி.

ஆய்வுச்சுருக்கம்:

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஆளுமையாக விளங்கும் வ.உ.சிதம்பரனாரின் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார பங்களிப்புகளை முற்போக்குக் கோணத்தில் ஆராய்கிறது. வ.உ.சி. தனிநபராக மட்டுமல்லாது, சமூக மாற்றத்தின் பிரதிநிதியாகவும், இந்திய முற்போக்குச் சிந்தனையின் அடித்தளத்தை அமைத்த முன்னோடியாகவும் விளங்குகிறார் என்பதை ஆராய்கிறது.

திறவுச்சொற்கள்: பொருளாதார தேசியம், மக்கள் மைய அரசியல், வர்க்கப் போராட்டம், சமூக சமத்துவம்.

முன்னுரை:

இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு பல்வேறு அரசியல், சமூக, பொருளாதார இயக்கங்களின் சங்கமமாகும். அவற்றில் சில இயக்கங்கள் அரசியல் சுதந்திரத்தை முன்னிறுத்தின. சில சமூக சீர்திருத்தத்தை வலியுறுத்தின. சில பொருளாதார சுயநிலையை நோக்கமாகக் கொண்டன. இம்மூன்றையும் ஒருங்கிணைத்த ஆளுமைகளில் வ.உ. சிதம்பரனார் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறார். அவரது வாழ்க்கை மற்றும் செயல்பாடுகளை ஆழமாக ஆய்வு செய்தால், அவர் இந்திய முற்போக்கு இயக்கங்களின் முன்னோடியாக விளங்கியதை உணர முடிகிறது.

அரசியல் விழிப்புணர்வும் தேசிய சிந்தனையும்:

வ.உ.சி.யின் அரசியல் சிந்தனை ஆரம்பத்தில் இந்திய தேசிய இயக்கத்தின் தாக்கத்தில் வளர்ந்தது. ஆனால் அவர் அரசியல் சுதந்திரத்தை ஒரு இறுதி இலக்காகக் கருதவில்லை. அரசியல் சுதந்திரம் சமூக மற்றும் பொருளாதார விடுதலையுடன் இணைந்திருக்க வேண்டும் என்பதே அவரது அடிப்படை எண்ணமாக இருந்தது.

வ.உ.சி.யின் தேசிய சிந்தனை மேல் வர்க்க ஆதிக்க தேசியவாதமாக இல்லை. அது உழைக்கும் மக்கள், தொழிலாளர்கள், சிறு வணிகர்கள் ஆகியோரின் வாழ்க்கை நலன்களை மையமாகக் கொண்டதாக இருந்தது. வானமாமலை இதை அதிகார வர்க்கத்தின் மனப்பாங்கையும், அதை எதிர்ப்பதற்குத் தேவையான துணிவையும் வ.உ.சி. மூலம்

சுட்டிக்காட்டினார்.'(1) 'நா. வானமாமலை, வ.உ.சி. யின் அரசியல் செயல்பாடுகளில் காணப்படும் இந்தப் பார்வையை முற்போக்கு அரசியல் விழிப்புணர்வாகக் குறிப்பிடுகிறார்.' (2) ஆங்கிலேய ஆட்சியின் அடிப்படை நோக்கம் இந்திய மக்களின் பொருளாதாரச் சுரண்டலே என்பதை வ.உ.சி. தெளிவாக உணர்ந்திருந்தார். இதன் காரணமாகவே அவரது அரசியல் போராட்டங்கள் மக்கள் வாழ்க்கையுடன் நேரடியாக தொடர்புடையதாக அமைந்தன. வ.உ.சி. அரசியல் போராட்டத்தை சமூக மாற்றத்தின் கருவியாகக் கருதியவர்.

தொழிலாளர் இயக்கங்களில் வ.உ.சி.யின் பங்கு:

வ.உ.சி.யின் முற்போக்கு சிந்தனையின் மிகத் தெளிவான வெளிப்பாடு அவரது தொழிலாளர் போராட்டங்களில் காணப்படுகிறது. தூத்துக்குடி துறைமுகத் தொழிலாளர்கள் எதிர்கொண்ட குறைந்த ஊதியம், நீண்ட வேலை நேரம், மனிதாபிமானமற்ற நடத்தைகள் ஆகியவற்றுக்கு எதிராக அவர் போராடினார்.

இந்தப் போராட்டங்கள் தொழிலாளர்களுக்கு வர்க்க விழிப்புணர்வை உருவாக்கிய முயற்சிகளாகும். வ.உ.சி. தொழிலாளர்களை போராட்டக் கூட்டமாக மட்டுமல்லாது, அரசியல் விழிப்புணர்வுடைய சமூக சக்தியாக மாற்ற முயன்றார். இது இந்திய தொழிலாளர் இயக்கத்தின் ஆரம்ப கட்டமாகும். கூட்டங்கள், உரைகள், பத்திரிகை எழுத்துக்கள், சங்க அமைப்புகள் மூலம் தொழிலாளர்களிடையே அரசியல் கல்வி வழங்கினார். தொழிலாளர்களை ஒழுங்கமைத்து, உரிமைக்காகப் போராடச் செய்தது வ.உ.சி. யின் முற்போக்குத் தன்மையை வெளிப்படுத்துகிறது.

சுதேசிக் கப்பல் இயக்கம் – பொருளாதார தேசியத்தின் வெளிப்பாடு:

சுதேசி கப்பல் இயக்கம், வ.உ.சி.யின் வரலாற்றுப் புகழ் பெற்ற முயற்சியாகும். ஆங்கிலேய கப்பல் நிறுவனங்களின் ஏகபோக ஆதிக்கத்திற்கு எதிராக தொடங்கிய இந்த இயக்கம் ஒரு தேசிய முயற்சியாக மட்டுமே பார்க்கப்படுவது முழுமையான பார்வையல்ல. இது ஆங்கிலேய பொருளாதார ஆதிக்கத்திற்கு எதிரான நேரடி சவாலாகும். மார்க்சியக் கோட்பாட்டில் சொல்லப்படும் Imperialist Capital vs Native Labour என்ற முரணின் பிரதிபலிப்பாகும்.

ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் இந்தியாவின் கடல் வர்த்தகம் ஆங்கிலேய நிறுவனங்களின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்தது. இதன் காரணமாக இந்திய வணிகர்கள் ஒதுக்கப்பட்டனர், அதிக கட்டணங்கள் விதிக்கப்பட்டன, இந்திய தொழிலாளர்கள் கடுமையாகச் சுரண்டப்பட்டனர் என்ற கடுமையான நிலை உருவானது.

ஆங்கிலேய கப்பல் நிறுவனங்கள் இந்திய வர்த்தகத்தை முழுமையாகக் கட்டுப்படுத்திய சூழலில், சுதேசி கப்பல் நிறுவனம் தொடங்கப்பட்டது என்பது பொருளாதார முற்போக்கு சிந்தனையின் வெளிப்பாடாகும். 1906 ஆம் ஆண்டு, வ.உ.சி. தலைமையில் தொடங்கப்பட்ட சுதேசி கப்பல் நிறுவனம் இந்தியர்களால் நடத்தப்பட்ட முதல் பெரிய கடல் வர்த்தக முயற்சிகளில் ஒன்றாகும். மார்க்சிய பார்வையில், சுதேசி கப்பல் இயக்கம் தேசிய மூலதனம் மற்றும் காலனிய மூலதனம்

இடையிலான முரண்பாட்டின் வெளிப்பாடாகும். இந்த இயக்கம் இந்திய வணிகர்களை, தொழிலாளர்களை, தேசிய அரசியல் சக்திகளை ஒரே பொருளாதார போராட்ட மேடையில் இணைத்தது. இது தேசிய உணர்வை பொருளாதார செயலாக மாற்றியது, மூலதனத்தை அரசியல் ஆயுதமாக மாற்றியது, சுரண்டலுக்கு எதிரான நடைமுறை எதிர்ப்பாக அமைந்தது என்பவற்றால் பொருளாதார தேசியத்தின் செயல்வடிவம் ஆக விளங்கியது. இது 'பொருளாதார தேசியத்தின் ஆரம்ப முயற்சி'.

சமூக சமத்துவமும் மனிதநேயச் சிந்தனையும்:

வ.உ.சி. சமூக சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட மனிதநேயச் சிந்தனையாளர். சாதி, மத வேறுபாடுகள் சமூக முன்னேற்றத்திற்கு தடையாக இருப்பதை அவர் உணர்ந்திருந்தார். அவரது எழுத்துகளிலும் பேச்சுகளிலும் மனித மரியாதை, சம உரிமை போன்ற கருத்துகள் வலியுறுத்தப்படுகின்றன.

வ.உ.சி. சிறைவாசத்தில் சந்தித்த அடக்குமுறைகள், அவமதிப்புகள்

அவரின் மனிதநேயத்தை உடைக்கவில்லை. கைதிகளுடன் சமமாக நடந்து கொள்வது, அடிமை போன்ற தண்டனைகளை எதிர்த்தல், மனித மரியாதையை வலியுறுத்தல் இவை, வ.உ.சி. மனிதநேயச் சிந்தனை அரசியல் சூழலால் உருவானது அல்ல; அவர் ஆளுமையின் அடிப்படைக் கூறு. வ.உ.சி. யின் சமூக சமத்துவமும் மனிதநேயச் சிந்தனையும்: பிற்கால சமூக சீர்திருத்த இயக்கங்களுக்கு ஊக்கம், இடதுசாரி, முற்போக்கு அரசியலுக்கான பண்பாட்டு அடித்தளம், உழைக்கும் மக்களை மையமாகக் கொண்ட அரசியல் மரபு என்று வளர்ந்தார். இது வ.உ.சி. யை வெறும் அரசியல் போராளியாக அல்லாது, சமூக சீர்திருத்தகராகவும் நிலைநிறுத்துகிறது. 'நா. வானமாமலை, இந்தச் சிந்தனைகளை முற்போக்கு சமூகக் கோட்பாட்டின் அடையாளங்களாகக் காண்கிறார்.'(3)

மார்க்சிய ஆய்வுப் பார்வையில் வ.உ.சி.:

வ.உ.சி.யை ஒரு தனிநபர் வீரராக சித்தரிப்பதைத் தாண்டி, சமூக வரலாற்றின் ஒரு முக்கிய கட்டமாகப் பார்க்கிறேன். மார்க்சிய வரலாற்றுப் பொருளாதார அணுகுமுறையின் அடிப்படையில், வ.உ.சி.யின் செயல்பாடுகள் வர்க்கப் போராட்டத்தின் ஆரம்ப வெளிப்பாடுகளாக விளங்குகின்றன. வ.உ.சி. நேரடியாக மார்க்சியர் அல்லாதபோதிலும், அவரது செயற்பாடுகளில் காணப்படும்: சுரண்டலுக்கு எதிர்ப்பு, தொழிலாளர் ஒற்றுமை, பொருளாதார சுயநிலை, மக்கள் மைய அரசியல் ஆகிய கூறுகளை 'மார்க்சிய முற்போக்குச் சிந்தனையின் இயற்கையான முன்னோட்டம்' என்று அறியமுடிகிறது. இந்த அணுகுமுறை, வ.உ.சி. யின் பங்களிப்புகளை புதிய கோணத்தில் புரிந்துகொள்ள உதவுகிறது.

முடிவுரை:

வ.உ.சிதம்பரனார் இந்திய விடுதலைப் போராட்டத்தின் ஒரு முக்கிய வீரராக மட்டுமல்ல; இந்திய முற்போக்கு இயக்கங்களின்

முன்னோடியாகவும் திகழ்ந்தவர். தொழிலாளர் உரிமைகள், பொருளாதார சுயநிலை, சமூக சமத்துவம் ஆகிய தளங்களில் அவர் மேற்கொண்ட முயற்சிகள் காலத்தை மிஞ்சியவை. வ.உ.சி. தேசியவாதி, தொழிலாளர் அரசியல் முன்னோடி, பொருளாதார தேசியவாதி, சமூக சமத்துவச் சிந்தனையாளர் எனப் பல பரிமாணங்களைக் கொண்டவராக விளங்குகிறார். இதன் மூலம், தேசிய விடுதலை வெறும் அரசியல் சுதந்திரமாக அல்ல; சமூக மரியாதை மற்றும் பொருளாதார சமத்துவத்துடன் கூடிய விடுதலையாக வ.உ.சி. புரிந்துகொண்டார் என்பது தெளிவாகிறது.

முற்போக்குச் சிந்தனையும் செயலும் ஒன்றிணைந்து, தன்னம்பிக்கையுடன் செயல்பட்ட வ.உ.சி.யின் வாழ்க்கை, தமிழ் மற்றும் இந்திய சமூகத்திற்கு என்றும் உத்வேகம் அளிக்கும் ஒரு வரலாற்றுப் பாடமாகும். எனவே, வ.உ.சி.யை நினைவுகூர்வது ஒரு வரலாற்று வீரரைப் போற்றுவதற்காக மட்டுமல்ல; சமத்துவம், மனித மரியாதை, உழைப்பின் விடுதலை என்ற முற்போக்கு மதிப்புகளை இன்றைய சமூக–அரசியல் சூழலில் மறுசிந்திக்கவும் நடைமுறைப்படுத்தவும் உந்துதலளிக்கும் வகையிலும் உள்ளன.

அடிக்குறிப்புகள்:

1. நா. வானமாமலை, வ.உ.சி. – முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி, சென்னை, (1990) பக்.11
2. நா. வானமாமலை, தமிழ்ச் சமூக வரலாறும் மார்க்சிய அணுகுமுறையும், (1985) பக்.57
3. நா. வானமாமலை, தமிழ்ச் சமூக வரலாறும் மார்க்சிய அணுகுமுறையும், (1985) பக். 76

துணைநூற்பட்டியல்

1. வானமாமலை நா. (1980) வ.உ.சி. – முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
2. சிதம்பரனார், (1946) வ.உ.சி. சுயசரிதை, சென்னை.
3. இராஜமாணிக்கம், (1987) மா. இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு., சென்னை.
4. சுந்தரலிங்கம், (2000) க. தமிழக தேசிய இயக்கங்கள். சென்னை.
5. மார்க்ஸ், கார்ல். வரலாற்றுப் பொருளாதாரக் கோட்பாடு (1947) (தமிழ் மொழிபெயர்ப்பு).

69

வ.உ.சி.யின் சமூக சிந்தனை

அ. அகஷியா
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

முனைவர் ப. திருஞானசம்பந்தம்,
இணைப்பேராசிரியர், தமிழியல் துறை

ஆய்வுச்சுருக்கம்:

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 'கப்பலோட்டிய தமிழன்' என்று அறியப்படும் வ.உ.சிதம்பரனார், ஒரு சிறந்த சமூகப் புரட்சியாளராகவும் திகழ்ந்தார். வ.உ.சி-யின் சமூகச் சிந்தனை என்பது சுயமரியாதை, சுதேசிப் பொருளாதாரம் மற்றும் வர்க்க ஒற்றுமை ஆகிய மூன்றையும் உள்ளடக்கியது. கப்பல் நிறுவனத் தலைவராக உயர்ந்து, சிறையில் செக்கிழுத்ததன் மூலம், ஒரு சமூகத் தலைவராகப் பரிணமித்தார். அவரது சிந்தனைகள் இன்றைய காலத்திற்கும் பொருந்தக்கூடிய பொருளாதாரத் தற்சார்பு மற்றும் சமூக நீதிக்கு வழிகாட்டுகின்றன. வ.உ.சிதம்பரனார் அரசியல் விடுதலையைத் தாண்டிச் சமூகச் சீர்திருத்தத்தை முதன்மையாகக் கருதினார்.

திறவுச்சொற்கள்: செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன், தென்னாட்டுத் திலகர், தொழிலாளர் இயக்கத்தின் தந்தை, சுதேசித் தந்தை

முன்னுரை:

'செக்கிழுத்த செம்மல்' என்றும் போற்றப்படும் வ.உ.சிதம்பரனார், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகச் சுதேசிக் கப்பலை ஓட்டிய வீரத்திற்குப் பின்னால், ஆழமான சமூகச் சிந்தனைகள் மறைந்துள்ளன. வ.உ.சி-யின் சமூகப் பார்வை என்பது வெறும் அந்நியர் வெளியேற்றம் மட்டுமல்ல; தேசிய உணர்வு, சுயமரியாதை, பொருளாதாரம், சமூக சிந்தனை, தொழிலாளர் நலன் சிந்தனை, சாதி மதம் ஒழிப்பு, கல்வி மற்றும் மொழி சிந்தனை, பெண்ணுரிமை போன்றவற்றிற்கும் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்தார் போராட்டம் நடத்தி அதில் வெற்றி பெற்று இந்திய மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும்.

தேசிய உணர்வு மற்றும் சுயமரியாதை:

ஆங்கிலேய ஆட்சியில் மக்கள் பயத்தாலும் வறுமையாலும் அடிமைத்தனத்தில் வாழ்ந்ததை அவர் நேரடியாகக் கண்டார். அதனை மாற்ற வேண்டும் என்பதே அவரது வாழ்க்கை இலக்காக அமைந்தது. வ.உ.சி பார்வையில் தேசிய உணர்வு என்பது நாட்டின் விடுதலையோடு மட்டும் முடிவடைவதில்லை. அது ஒவ்வொரு

மனிதனின் சுயமரியாதையோடும் இணைந்தது. நாடு அடிமையாய் இருந்தால் மக்கள் மரியாதையற்றவர்களாகவே இருப்பார்கள்; நாடு சுதந்திரமடைந்தால் மக்களின் மரியாதையும் உயரும் என்ற உறுதியான நம்பிக்கை அவரிடம் இருந்தது. மக்களின் மனதில் பதிந்திருந்த அடிமை எண்ணங்கள் அகற்ற வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.இந்திய மக்கள் மனநிலையில் முழங்கி தேசிய உணர்வு சுயமரியாதை இழந்து அறியாமை மற்றும் பயத்தில் உறங்கிக் கொண்டிருந்தனர்.தேசத்தில் விழிப்புணர்வு குறைந்திருந்தது இதை உணர்ந்த வ.உ.சிதம்பரம் பிள்ளை இந்தியாவையே 'தூங்குமூஞ்சி நாடு' என்று அழைத்தார். தூங்குமூஞ்சி என்ற இந்தியர்களை இழிவுபடுத்துவதற்காக அல்ல அவர்களை விழித்தெழச் செய்யும் எச்சரிக்கையாகவே பயன்படுத்தப்பட்டது. மக்களிடையே ஒற்றுமையும் துணிச்சலும் இருக்க வேண்டும் என்று அவரது நோக்கம்.

பிறப்பால் யாரும் உயர்ந்தவர்களோ தாழ்ந்தவர்களோ அல்ல. அனைவரும் சமம்.தேசிய ஒற்றுமை இல்லாமல் சமூக முன்னேற்றம் சாத்தியமில்லை.

'அடிமை வாழ்வை மறுப்போம்

அஞ்சும் மனதைத் துறப்போம் தாய்நாடு எழுந்திடவே

தியாகம் செய்வோம் துணிவோடு'[1]

தாய்நாட்டின் சுதந்திரம் மற்றும் முன்னேற்றத்திற்காகத் துணிச்சலுடன் தியாகம் செய்ய வேண்டும்.

பொருளாதார சமூக சிந்தனை:

வ.உ.சி. இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஒரு தேசிய தலைவராக மட்டுமல்லாமல். பொருளாதார சமூக சிந்தனையாளராகவும் திகழ்ந்தார். அவர் கண்ட தேசிய விடுதலை அரசியல் சுதந்திரத்தோடு மட்டும் முடிவடையவில்லை; மக்களின் பொருளாதார முன்னேற்றமும் சமூக மரியாதையும் கிடைத்தால்தான் உண்மையான விடுதலை கிடைக்க வேண்டும். ஆங்கிலேய ஆட்சி இந்தியாவின் செல்வங்களைச் சுரண்டி, இந்தியர்களை வறுமையில் தள்ளியது என்பதை வ.உ.சி தெளிவாக உணர்ந்தார். பொருளாதார அடிமைத்தனமே அரசியல் அடிமைத்தனத்தின் மூலக் காரணம் என்று கருதிய அவர், முதலில் பொருளாதார சுதந்திரம் தேவை என்று வலியுறுத்தினார். இந்தியர்கள் தங்கள் உழைப்பின் பயனை தாங்களே அனுபவிக்க வேண்டும் என்பதே அவரது அடிப்படை எண்ணமாக இருந்தது.சுதேசி கொள்கை அவரது பொருளாதார சிந்தனை அடிப்படையாகும்.

வெளிநாட்டு பொருட்களைப் புறக்கணித்து, நாட்டிற்குள் தொழில்கள் வளர வேண்டும் என்றார். இந்தியர்களால் தொடங்கப்பட்ட சுதேசி கப்பல் இயக்கம், இந்தியர்களுக்கும் பெரிய தொழில்களை நடத்தும் திறன் உண்டு என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டியது. இது இந்திய பொருளாதாரச் சுயமரியாதையின் அடையாளமாக அமைந்தது.

‘கடலிலும் நம் கொடி பறக்க

கப்பல் நம் கையில் ஓடவே

பிறர் ஆதிக்கத்தை சாய்ந்திடவே

பொருளாதாரம் எழுந்திடவே’ [2]

இப்பாடலின் கருத்து கடல் வணிகமும் கப்பல் இயக்கமும். வெளிநாட்டு ஆதிக்கத்தையும் ஒழிக்க வேண்டும்.

தொழிலாளரின் நலன் சிந்தனை:

வ.உ.சி சமூக சிந்தனையின் மையமாக தொழிலாளர்களை வைத்தார். ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் தொழிலாளர்கள் குறைந்த ஊதியம், நீண்ட வேலை நேரம், கடுமையான வேலைப்பளு போன்ற இன்னல்களை அனுபவித்தனர். உழைக்கும் மக்களே நாட்டின் முதுகெலும்பு; அவர்களுக்கு மரியாதையும் உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். தூத்துக்குடி துறைமுகத் தொழிலாளர்களின் குறைந்த ஊதியம், கடுமையான வேலை நேரம் போன்ற பிரச்சனைகளுக்கு எதிராக அவர் போராடினார்..

1908 ஆம் ஆண்டு தூத்துக்குடியில் கோரல் நூற்பாலை தொழிலாளர்களை ஒன்றிணைத்து ஒருமாபெரும் வேலை நிறுத்தத்தை முன்னெடுத்தார். இது தென்னிந்தியாவின் மிக முக்கியமான முதல் தொழிற் சங்கப் போராட்டமாகக் கருதப்படுகிறது. தொழிலாளர்கள் படும் துயரைக் கண்டு மனம் பொறுக்காமல் அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்தவர்.

இந்தப் போராட்டங்கள் பிரிட்டிஷ் அரசுக்கு அச்சத்தை ஏற்படுத்த தொழிலாளர் களைத் தூண்டி விட்டதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டு அவருக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. ‘ சிறையில் அவர் செக்கிழுத்து வாடினாலும் தொழிலாளர் நலனுக்காக அவர் விதைத்த விதை பின்னாளில் பெரிய தொழிற்சங்கம் உருவாக்கப்பட்டது.

‘உழைப்பே வாழ்வின் உயர்வு,

உழைப்பே நாட்டின் உயிர்;

உழைப்பாளி உயர்ந்தாலே

உயர்வடையும் சமுதாயம்.’ [3]

தொழிலாளர் உழைப்பில் தான் நாடு முன்னேற்றமடையும் என்பது வ.உ.சி. கருத்து.

பெண்ணுரிமை:

வ.உ.சிதம்பரனார் பெண்களை சமுதாயத்தின் சமமுள்ள குடி மக்களாகக் கருதிய முன்னோடி சமூகச் சிந்தனையாளர். பெண்கள் கல்வி பெறுதல், சுயமரியாதையுடன் வாழ்தல், பொருளாதார சுதந்திரம் அடைதல் ஆகியவை சமூக முன்னேற்றத்திற்கு அவசியம் என அவர் வலியுறுத்தினார்.

பாரதியார் மற்றும் பெரியார் போலவே வ.உ. சிதம்பரனாரும் பெண்ணை அடிமை நிலையில் இருந்து உயர்த்த வேண்டும் என்று வலியுறுத்தினார். பெண்களுக்கு கல்வி அவசியம், ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை வேண்டும், பெண்கள் சமூக தேசிய பணிகளில் பங்கேற்க வேண்டும்

‘பெண்ணென்று ஒடுக்க வேண்டாம்

பேதை என எண்ண வேண்டாம்

அறிவுடன் நிமிர்ந்த பெண்

அரசுக்கும் துணை நிற்பாள்’[4]

பெண் கல்வி அறிவும் பெறுவதால் இச்சமுதாயமும் குடும்பமும் நலமாக இருக்கும் அவரது கருத்து

சாதி மதம் ஒழிப்பு:

வ.உ.சி. ஒரு தீவிரமான விடுதலைப் போராட்ட வீரர் மட்டுமல்ல சாதி, மதம் வேறுபாடு இல்லாமல் மனிதர்கள் அனைவரும் சமம் கூறினார். அனைத்து மனிதர்களும் ஒரே இரத்தம், ஒரே மனித இனம் என்ற அடிப்படையில் சமமாக வாழ வேண்டும் என்ற மனிதநேயக் கொள்கையை அவர் முன்னிறுத்தினார். சாதி ஒழிப்பு இல்லாமல் சமூக நீதியும் தேச விடுதலையும் முழுமையடையாது என அவர் வலியுறுத்தினார். தூத்துக்குடியில் தொழிலாளர் இயக்கங்களிலும் தேசிய போராட்டங்களிலும் சாதி, மத வேறுபாடுகள் இன்றி அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும் முன்னெடுத்த போராட்டத்தில் ஜாதி மற்றும் மதத் தடைகளை உடைத்து மக்களை ஒன்றிணைத்தற்கு மிகுந்த வரலாற்றுச் சான்றுகளாகும். பிறப்பால் யாரும் உயர்ந்தவர்கள் இல்லை அனைவரும் சமம் கடவுளும் ஒன்றே தான் என்பது அவரது கருத்து.

கல்வி மற்றும் மொழி சிந்தனை:

வ.உ.சி. ஒரு சிறந்த அறிஞரும், தமிழ்ப் பற்றாளரும் ஆவார். ஒரு நாடு முன்னேற்ற வேண்டுமென்றால் அந்த நாடு மக்கள் முறையான கல்வியும் தாய்மொழியும் மேல் பற்று இருக்க வேண்டும். வ.உ.சி அவர்கள் தமிழ் மொழியின் மீது தீராத காதல் கொண்டவர் சிறையில் இருந்தபோது கடுமையான சூழ்நிலையும் தமிழ்ப்பணிகளை தொடர்ந்தார். தாய்மொழி தமிழ் பேசவும் எழுதவும் பெருமைப்பட வேண்டும் என்று கூறினார். தமிழ் பழமையான நூல்கள் இலக்கியம் இலக்கணம் நூல்கள் அழிந்து கற்று உரை எழுதினார்.குறிப்பாக தொல்காப்பியம் இளம்பூரணர் உரை, திருக்குறள் மணக்குடவர் ஆகியவற்றை ஆழ்ந்து கற்று அவற்றை உரையைப் பதிப்பித்தார். வ.உ.சி சிறையில் கோயம்புத்தூர் மற்றும் கண்ணனூர் சிறைகளில் இருந்தபோது எழுதிய நூல்கள் மெய்யறம், மெய்யறிவு, சுயசரிதை நூல்கள் எழுதினார்.

மெய்யறம்: அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு நிலைகளையும் செய்யுள் வடிவில் விளக்குகிறது.

மெய்யறிவு: தத்துவ நூல் மனிதன் தன்னை அறியும் அறிவே மெய்யறிவு என்பதைப் பாடல்கள் வழி விளக்குகிறார்.

சுயசரிதை: தனது வாழ்க்கை வரலாற்றைச் சிறையில் இருந்தபோதே செய்யுள் வடிவில் எழுதத் தொடங்கினார்.

மொழிபெயர்ப்பு நூல்:

வ.உ.சி. உலக அறிவைத் தமிழர்கள் பெற வேண்டும் என்பதற்காக ஜேம்ஸ் ஆலன் என்ற ஆங்கில எழுத்தாளர். மனம் போல வாழ்வு, அகமே புறமே, வலிமைக்கு மார்க்கம் போன்ற நூல்கள் மொழிபெயர்த்தார்.

முடிவுரை:

‘வள்ளல் பாண்டித்துரையோடு வ.உ.சி.யும் இல்லையென்றால் செந்தமிழும் செத்துப்போயிருக்கும்’ என்று போற்றப்படும் அளவிற்குத் தமிழ் மொழியின் மீதும், சமூகத்தின் மீதும் பற்று கொண்டிருந்தார். அத்தகைய மாமனிதரின் சமூகச் சிந்தனைகளை உள்வாங்கி, பாகுபாடற்ற, பொருளாதாரத் தன்னிறைவு கொண்ட சமுதாயத்தைப் படைப்பதே நாம் அவருக்குச் செய்யும் உண்மையான நன்றிக்கடனாகும்.

அடிக்குறிப்பு:

1. வ.உ.சி சுயசரிதை செ. திவான் 68 பாடல் 32 பக்கம்
2. இளசை மணியன் சுயசரிதை பாடல் 80 பாடல் 41 பக்கம்
3. வ.உ.சி பாடல் திரட்டு செ.திவான் 92 பாடல் 48 பக்கம்,
4. பாடல் திரட்டு செ.திவான் பாடல் 142 பாடல் 68 பக்கம்

துணை நூற்பட்டியல்:

1. திரு. இளசை மணியன், வ.உ.சி நூல் திரட்டு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பதிப்பகம் 418 சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை. 2001.
2. மெய்யறிவு - சிதம்பரம் பிள்ளை, வ. உ., எஸ். வி. என். பிரஸ, சென்னை, 1915.
3. மெய்யறம் - சிதம்பரம் பிள்ளை, வ. உ., கலாரத்நாகர அச்சியந்திரசாலை, சென்னை, 1917.
4. வ.உ.சி. நூல் திரட்டு, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை.
5. வ.உசி. வாழ்வும் பணியும் - என்.சம்பத் சாமி தியாகராஜன், பதிப்பகம் பாரதி புத்தகாலயம், இளங்கோ சாலை, தேனாம்பேட்டை, சென்னை. 1997.

70

வ.உ.சி.யும் திருநெல்வேலி எழுச்சிக்கான பின்னணியும் அவலங்களும்

வா. நிதிஷா
தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.

முனைவர் இரா. வசந்தமாலை,
பேராசிரியர், தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம்.

ஆய்வுச் சுருக்கம்:

கப்பலோட்டிய தமிழனாகப் போற்றப்பட்டு தேச விடுதலைக்காக செக்கிழுத்த செம்மலாக விளங்கும் வ.உ.சி. அவர்களின் வீரமிகு வாழ்வையும் தமிழுணர்வையும் போற்றுவோம். தமிழ் தேசத்திற்காகப் போராடிய வ.உ.சி. என்னும் மாபெருந்தகையை மண்ணில் உள்ளவரை மறவாமல் போற்றுவோம். வ.உ.சி. பாமர மக்களின் நலன் கருதியும் வணிகர்களின் நிலையை மேம்படுத்தும் நோக்கில் சுதேசி கப்பல் இயக்கத்தையும் தொழிலாளர்களுக்கான அங்கீகாரத்தை பெற்றுத்தரும் வகையில் பல எழுச்சிகளையும் மேற்கொண்டவர். அத்தகைய எழுச்சிகளில் ஒன்றான வ.உ.சி. யும் திருநெல்வேலி எழுச்சிக்கான பின்னணியும் அவலங்களும் என்ற பொருண்மையில் ஆராய முற்படுதல்.

திறவுச்சொல்: எழுச்சி, அவலங்கள், பின்னணி.

முன்னுரை:

அந்நிய நாட்டு பொருட்களைப் புறக்கணித்து சொந்த நாட்டில் உள்ள பொருட்களை வைத்து சுதேசி கப்பல் என்ற இயக்கத்தை நிறுவி வணிகப் பயன்பாட்டை மேன்மை அடையச் செய்து மக்களுக்குப் பயன்பெற செய்த வள்ளல் வ.உ.சி. ஆவார். சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய நிகழ்வாக விளங்கக்கூடிய திருநெல்வேலி எழுச்சியின் நாயகனாக விளங்கும் வ.உ.சி. யையும் , எழுச்சியில் பங்கேற்ற பாமர மக்களின் அவல நிலையையும் சேதாரங்களையும் அதன் பின்னணியையும் இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.

'நடந்தன எல்லாம் நற்செயல் அல்ல;
கடந்து நிற்கும் கடவுளின் செயலே'

திருநெல்வேலி எழுச்சியில் நிகழ்ந்தவற்றை 'நஞ்செயல் அல்ல; கடந்து நிற்கும் கடவுளின் செயலே,' என்று குறிப்பிட்டதோடு, எழுச்சியால் ஏற்பட்ட இழப்புக்கும் சேதத்துக்கும் மக்களைக் கடிந்து கொள்ளாத தன்மை வ.உ.சி.யின் மக்களைச் சார்ந்து நின்ற போக்கையும், எழுச்சிக்கு ஆதரவு காட்டும் மனப்பாங்கையும் தெளிவுபடுத்துகிறது.

எழுச்சிக்கான காரணம்:

வ.உ.சி. மற்றும் சுப்பிரமணிய சிவா ஆகியோரின் கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்து திருநெல்வேலி மக்கள் ஒன்று திரண்டு ஆங்கிலேய அரசுக்கு எதிராக சாதி மத வேறுபாடு இன்றி எழுந்ததே இவ்வெழுச்சியாகும். ஆங்கிலேய அரசுக்கு எதிராகச் செயல்பட்டு தொழிலாளர்களின் மேன்மைக்கு ஆதரவாகச் செயல்பட்டதாலும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராகக் குரல் கொடுத்ததாலும் ஆங்கிலேய அரசால் கைது செய்யப்பட்டனர். இதனால்தான் திருநெல்வேலி எழுச்சி உண்டாகியதாகக் கருதப்படுகிறது.

திருநெல்வேலி எழுச்சி (1908):

திருநெல்வேலி எழுச்சி என்பது 1908 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி பகுதிகளில் வெடித்த மாபெரும் போராட்டமாகும். இவ்வெழுச்சி நடத்திய சமயத்தில் ஆங்கிலேய அரசு துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பொதுமக்கள் பலர் காயமடைந்து உயிரிழந்தனர். மேலும் பலர் கைது செய்யப்பட்டனர்.

வ.உ.சி., சுப்பிரமணிய சிவா, பத்மநாப ஐயங்கார் ஆகியோர் கைது செய்யப்பட்ட பிறகே வளர்ச்சியானது தொடங்கியதாகக் கருதப்படுகிறது. அரசாங்க ஆவணங்களிலும் பத்திரிகைகளிலும் திருநெல்வேலி கலகம் என்று பெயரிட்டு வெளிவந்தன. இவ்வெழுச்சியைத் தடுப்பதற்காகக் தண்டகாவல் படையை ஏற்படுத்தினர். தமிழகத்தில் நிகழ்ந்த முதல் பேரெழுச்சி திருநெல்வேலி எழுச்சியே ஆகும்.

இவ்வெழுச்சியின் போது மக்களும் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு போராடினர். அதாவது, வ.உ.சி. யும் அவரது நண்பருமான சுப்பிரமணிய சிவாவும் மக்களிடையே விடுதலை உணர்வை தூண்டும் வகையில் உரையாற்றி முழக்கமிட்டதால்

பிரிட்டிஷ் அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டனர். இத்தகைய நிகழ்வினை பொதுமக்களால் பொருட்படுத்த இயலாமல் எதிர்ப்பினைத் தெரிவித்து மக்கள் ஒன்றிணைந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஆங்கிலேய அரசுக்கு எதிராக எழுச்சியை மேற்கொண்டனர். அதாவது அரசியல் காரணங்களால் தமிழகத்தில் எழுந்த முதல் எழுச்சி திருநெல்வேலி எழுச்சியே ஆகும்.

எழுச்சியால் உண்டாகிய அவலங்கள்:

திருநெல்வேலியில் நடந்த எழுச்சியில் துணைப்பதிவாளர் அலுவலகம் தவிர்த்து பொதுக் கட்டடங்கள் அனைத்தும் எழுச்சி கொண்ட மக்களின் சினத்திற்கு ஆளாகின. மேலும் தமிழ் வரலாற்றையும் தமிழக வரலாற்றையும் மெய்ப்பித்து எடுத்தியம்பும் நூல்கள், ஆவணங்கள், கோப்புகள், பதிவேடுகள் ஆகியவையும் சேதமடைந்து தீக்கிரையாயின. மேசைகள், நாற்காலிகள், தட்டிகள்,சாளரங்கள் முதலானவற்றால் தாக்கப் பட்டும் மக்கள் சேதமடைந்தனர்.

இத்தகைய இன்னல்களை ஏற்படுத்திய அவல நிலையை வ.உ.சி. அவர்கள் சிறையில் இருந்தவாறே அறிய விரும்பினார். ஆனால் கலகம் என்கிற எழுச்சி நிலை உண்டாவதற்கு வ.உ.சி. யின் பேச்சின் முழக்கமும் தத்துவக் கருத்துக்களுமே காரணம் என்று அரசாங்கம் நிறுவ முயன்றதாக கருதப்படுகிறது. மேலும் அவர் எழுச்சியை விரும்பவில்லை என்றும் இத்தகைய எழுச்சிக்கு அவர் பொறுப்பு இல்லை என்ற கருத்தும் இருந்தும் மக்கள் நலன் கருதி இத்தகைய அவல நிலை கண்டு எழுச்சியை தவிர்க்க எண்ணினார் என்ற கருத்தும் நிலவுகிறது.

எழுச்சிக்கான பின்னணி :

தமிழ்நாட்டில் முதல் சுதேசிக்கப்பல் முயற்சியில் பல்வேறு இடங் களில் உரைகள் நிகழ்த்திய போது சுதேசிய கம்பெனிக்கும் சுதேசி ஸ்ரீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட் பிரிட்டிஷ் இந்தியா நாவிகேஷன் கம்பெனிக்கும் இடையே பெரும் போட்டியும் வாதமும் ஏற்பட்டன, இதனால், அரசாங்கம் ஆங்கிலேய அரசிற்கு சாதகமாகவும் ஆதரவாகவும் செயல்பட்டதினை கருத்தில் கொண்டு மக்களிடையே சுதேசிய உணர்வை தூண்டும் வகையில் கூட்டங்கள் அமைத்து உரைகளை முழக்கங்களாக நிகழ்த்தியதால் வ.உ.சி., அவரின் நண்பரான சுப்பிர மணிய சிவா மற்றும் பத்மநாத ஐயங்கார் ஆகியோர் மூவரையும் ஆங்கிலேய அரசு கைது செய்து பாளையங்கோட்டை சிறையில் அடைத்தது. பிறகு மக்களின் சினத்தால் எழுச்சி ஏற்பட்டது.

எழுச்சியில் கைதான எழுச்சி கைதிகள் சிறையில் உள்ள அதிகாரி களால் கொடுமையை அனுபவிப்பதை கண்டு வ.உ.சி. வருத்தம் கொண்டார். அதனால் தம்முடைய மைத்துனர் மூலமாக அவர்களுக்கு நியாயம் கிடைக்க எண்ணி அதற்கான முயற்சியை மேற்கொள்ள விழைந்தார். பிறகு விடுதலைக்குப் பின் அவர்களுக்கு விருந்து அளிக்கவும் ஏற்பாடு செய்தார். இத்தகைய செயலானது வ.உ.சி. என்னும் மாமனிதரின் இரக்க குணத்தையும் மனித நேயத்தையும் அன்பும் கருணையும் உடையவராக திகழச் செய்கிறது.

எழுச்சி பற்றி சுதேசி மித்திரன் கருத்து :

வ.உ.சி., சுப்பிரமணிய சிவாவையும் கைது செய்த பிறகு வணிகர்கள் கடைகளை மூடிவிட்டு நெல்லைக்கு வந்த தூத்துக்குடி வணிகர்கள் நெல்லை வீரராகவ புறத்தில் உள்ள கடைக்காரர்களை கடைகளை மூடி விடுமாறு ஆரவாரம் செய்தனர் என்பதை சுதேசி மித்திரன் என்னும் இதழில் இத்தகைய கருத்தும் நிலவுகிறது.

'நம்முடைய தலைவர் மிஸ்டர் சிதம்பரம் பிள்ளை ஜெயிலில் இருக்கும்போது நீங்கள் உங்கள் கடைகளைக் கட்டாமல் வைத்திருக்க யாதொரு நியாயம் இல்லை என்று இடித்துக் காண்பித்து தூண்டினார்கள்' - என்றும் 16.3.1908 நாளில் வெளிவந்த சுதேசமித்திரன் இதழில் இத்தகைய கருத்து கூறப்படுகிறது.

முடிவுரை :

சுதந்திரப் போராட்ட காலத்தில் எழுந்த திருநெல்வேலி எழுச்சியில் வ.உ.சி கைது செய்யப்பட்டதால் ஏற்பட்ட எழுச்சியில் உயிரிழந்த மக்களின் நிலையையும் பொருட்சேதாரங்களையும் வரலாற்றை எடுத்துரைக்கும் நூல்கள், ஆவணங்கள், பதிவேடுகள் ஆகியவை தீயினால் எரிக்கப்பட்டும் சேதமடைந்தன. எந்தவிதமான மக்கள் இயக்கமாக இருந்தாலும் உணர்ச்சியின் மிகுதியால் சில வன்முறைக்கான அவலங்கள் ஏற்படும் என்பது இயல்பான ஒரு செயலாகும். இந்த எழுச்சிக்கு வ.உ.சி. பொறுப்பேற்காவிட்டாலும் அதன் பின்னணியில் உள்ள மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் எழுச்சியில் கைது செய்யப்பட்டோர் நடந்த கொடுமைகளைக் கண்டு இரக்கம் கொண்டும் மனிதநேயம் கொண்டும் மனம் உருகிய நாயகனே. இத்தகைய வீர விதையின் மூலம் எழுந்த திருநெல்வேலி எழுச்சியில் நிகழ்ந்த அவலங்களும் பின்னணியும் இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

துணைநூற் பட்டியல் :

1. வ.உ.சி.யும் திருநெல்வேலி எழுச்சியும் - ஆ. இரா. வெங்கடாசலபதி, காலச்சுவடு பதிப்பகம், 2022.
2. வ. உ. சிதம்பரனார், அரசு, மா. ரா., சாகித்திய அகாதெமி, புது தில்லி, 2005.
3. தியாகச் செம்மல் வ. உ. சிதம்பரனார், வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள், தொடர்புத்துறை, சென்னை. (https://tamildigitallibrary.in/voc/01_books/02)

71

வ.உ.சி.யின் எழுத்துகளும் சமூகமும்

கு. தரணி ரெக்சியா
தமிழ்த்துறை, மரியா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, வள்ளியூர்.

முனைவர் மு. மணிமேகலா,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

முன்னுரை:

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனித்த இடம் பெற்றவர் வ.உ.சிதம்பரனார். 'கப்பலோட்டிய தமிழன்' என்ற புகழ்பெயரால் அறியப் படும் இவர் சுதந்திரப் போராட்ட வீரராக மட்டுமல்லாமல் சிறந்த எழுத்தாளராகவும் சமூக சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தார். அவரது எழுத்துகள் சமூக விழிப்புணர்வையும் தேசிய உணர்வையும் மக்களிடையே ஏற்படுத்தின. இந்திய விடுதலைப் போராட்ட வரலாற் றில் தமிழகம் பல தலைசிறந்த தலைவர்களை உலகிற்கு அளித் துள்ளது. அவ்வகையில் சிறந்த எழுத்தாளரான வ.உ.சி.யின் எழுத்துகள் சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றங்களை இக்கட்டுரையில் காண்போம்.

எழுத்துகளுக்கும் சமூகத்திற்கும் உள்ள தொடர்பு:

வ.உ.சி.யின் எழுத்துகளும் சமூகச் செயல்பாடுகளும் ஒன்றுக் கொன்று துணையாக அமைந்தன. அவர் எழுதிய கருத்துகள், அவர் நடைமுறைப்படுத்திய சமூகச் செயல்களில் பிரதிபலித்தன. அதே போல், சமூக அனுபவங்கள் அவரது எழுத்துகளுக்கு ஆழமும் உண்மைத்தன்மையும் அளித்தன. இதனால் அவரது சிந்தனைகள் மக்களிடம் நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தின.

வ.உ.சி. யின் எழுத்துகளும் சமூகப் பங்களிப்பும்:

தமிழக விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பெற்றவர் வ.உ.சி. அவர் ஒரு சுதந்திரப் போராளி மட்டுமல்ல; சமூக சீர்திருத்தவாதி, எழுத்தாளர், சிந்தனையாளர் எனப் பல்வேறு அடையாளங்களை உடையவர். அவரது எழுத்துகளும் சமூகச் செயல்பாடுகளும் மக்களின் சிந்தனையையும் விழிப்புணர்வையும் ஆழமாக மாற்றியமைத்தன.

வ.உ.சி.யின் எழுத்துகள்:

வ.உ.சி. தனது எழுத்துகளின் மூலம் தேசிய உணர்வையும் சமூகப் பொறுப்பையும் மக்களிடம் ஊட்டினார். அவரது கட்டுரைகள், உரைகள் மற்றும் மொழிபெயர்ப்புகள் அனைத்தும் மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற ஊக்குவிக்கும் வகையில் அமைந்தன. குறிப்பாக, தேசபக்தி, தன்னம்பிக்கை, தியாகம்,

சமூக சமத்துவம் போன்ற கருத்துகளை அவர் தனது எழுத்துகளில் வலியுறுத்தினார். ஆங்கிலேயரின் அடக்குமுறைகளை விமர்சித்த அவர், இந்தியர்களின் ஒற்றுமையின் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

வ.உ.சி. யின் எழுத்துப் பணிகள்:

வ.உ.சி. அவர்கள் பல நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவரது எழுத்துகள் பெரும்பாலும் தேசிய உணர்வு, சுதந்திர வேட்கை, தொழிலாளர் உரிமை, சமூக சமத்துவம் ஆகிய கருத்துகளை மையமாகக் கொண்டிருந்தன. அவர் எழுதிய உரைகள், மொழிபெயர்ப்புகள் மற்றும் கட்டுரைகள் மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுபட ஊக்குவித்தன.

வ.உ.சி. யின் சுதந்திர வேட்கை:

வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தன்னலமற்ற சேவையாற்றிய வீரர். ஆங்கிலேயரின் அடக்குமுறையும், பொருளாதாரச் சுரண்டலையும் அவர் தீவிரமாக எதிர்த்தார். தாய்நாட்டின் சுதந்திரமே மக்களின் முழுமையான விடுதலைக்கு அடிப்படை என அவர் உறுதியாக நம்பினார்.

வ.உ.சி.யின் சுதந்திர வேட்கை அவரது செயல்களில் தெளிவாக வெளிப்பட்டது. ஆங்கிலேயர்களின் கப்பல் போக்குவரத்து ஆதிக் கத்தை முறியடிக்க, சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியை நிறுவினார். இதன் மூலம் இந்தியர்களும் பொருளாதார ரீதியாக தன்னிறைவு அடையலாம் என்பதை அவர் நிரூபித்தார். இது வெறும் வணிக முயற்சியாக இல்லாமல், ஒரு தேசியப் போராட்டமாகவே அமைந்தது.

வ.உ.சி.யின் தொழிலாளர் உரிமை:

வ.உ.சி. அவர்கள் இந்திய சுதந்திரப் போராட்ட வீரராக மட்டுமல் லாமல், தொழிலாளர் உரிமைகளுக்காகப் போராடிய முதன்மையான தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். ஆங்கிலேய ஆட்சிக் காலத் தில் தொழிலாளர்கள் குறைந்த ஊதியம், அதிக வேலை நேரம், மனிதா பிமானமற்ற நடத்தை போன்ற பல சுரண்டல்களுக்கு உள்ளாகினர். இந்நிலையை மாற்ற வ.உ.சி. அவர்கள் முனைந்தார். தொழிலாளர் உரிமைக்காக அவர் நடத்திய போராட்டங்கள் ஆங்கிலேய அரசுக்கு சவாலாக அமைந்தன. இதனால் அவர் சிறை தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார்.

வ.உ.சி.யின் சமூக சீர்திருத்தக் கருத்துகள்:

வ.உ.சி. அவர்கள் இந்திய சுதந்திரப் போராட்ட வீரராக மட்டு மல்லாமல், சமூக சீர்திருத்தக் கருத்துகளை நடைமுறைப்படுத்திய தலைவ ராகவும் திகழ்ந்தார். சமூகத்தில் நிலவிய அடக்குமுறை, அநீதி மற்றும் சமத்துவமின்மையை அவர் கடுமையாக எதிர்த்தார். சமூகத்தில் உள்ள அனைத்து மனிதர்களும் சமம் என்ற எண்ணத்தை அவர் வலியுறுத்தினார். பல்வேறு மூட நம்பிக்கைகளை எதிர்த்தும் வ.உ.சி. அவர்கள் தனது

கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.

‘சிரார்த்தம் என்ற பெயரால் பார்ப்பனர்களுக்கு அளிக்கப்படும் அரிசி, காய்கறி முதலியன பிதுர்களுக்குப் போய் சேரும் என்று கூறுவது பொய்யாகும். இது அப்படி போய் சேர்வது உண்மையானால், பிதுர்கள் தங்கள் பிள்ளைகள் மூலம் வாங்கப் பிரியப்படுவார்களே அன்றி, பிறர் மூலம் வாங்கப் பிரியப்பட மாட்டார்கள். தென்புலத்தார் என்பதற்கு ஏன் பிதுர்கள் என்று பொருள் கூற வேண்டும்? வள்ளுவர் அவ்வாறு கூறினாரா? தென் - அழகிய / குலத்தார் - அறிஞர்கள் அதாவது ஞானிகள் என்றே பொருள்படு கிறது. தென்புலத்தார் கடன் ஆற்ற வேண்டும் என்றால், ஞானிகள் விட்டுப்போன வேலைகளை முடிக்க வேண்டும் என்பதே பொருளாகும்.

மனுநீதி கண்ட சோழனைப் பற்றிக் கூறும் பொழுது, இப்பொழுது இருக்கும் மனுஸ்மிருதியை நடத்திக் காட்டியமைக்காகவே, மனுநீதி கண்ட சோழன் என்று பெயர் வந்தது என்று பொருள்படும்படியே சேக்கிழார் கூறினார் என்று கூறினார்கள். அவர் அப்பொருட்படி கூறியிருப்பாராயின், அவர் மனுஸ்மிருதியைப் படிக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். கன்றுக் குட்டியைக் கொன்றதற்காகக், கொன்ற மனிதனையே கொல்ல வேண்டும் என்று சொல்லப்பட்டு இருப்பதை எடுத்துக்காட்டினால், மனுஸ்மிருதியில் இதுவரையில் நாங்கள் பார்த்துள்ள கொடுமைகளோடு இதனையும் சேர்த்துச் சொல்கிறோம். எந்த நூலானாலும் குற்றம் இருக்குமானால், அதனைத் தள்ளத் தயங்கக் கூடாது. நமக்குக் கடவுள் பகுத்தறிவைக் கொடுத்திருக்கிறார். அதனைக் கொண்டு ஆராய்வோம். கடவுளே எழுதினார் என்று கூறப்படும் நூலினும் பிழை இருக்குமானால், அதனையும் தள்ள வேண்டியது தான் எனத் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார்.

சமூகப் பங்களிப்பு:

வ.உ.சி. சமூகத்தில் நிகழ்த்திய பங்களிப்புகள் மிக முக்கியமானவை. தூத்துக்குடியில் சுதேசி கப்பல் இயக்கம் தொடங்கி, ஆங்கிலேயர்களின் பொருளாதார ஆதிக்கத்திற்கு சவால் விட்டார். இதன் மூலம் இந்தியர்களும் தொழில்துறையில் முன்னேற முடியும் என்ற நம்பிக்கையை மக்களிடையே ஏற்படுத்தினார். மேலும், தொழிலாளர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்த அவர், அவர்களின் வாழ்வாதார நிலை உயர வேண்டும் என்பதில் உறுதியானவர். சமூக நீதி, சமத்துவம் ஆகியவற்றை வலியுறுத்திய அவரது செயல்கள், மக்களின் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்தின.

தேசிய விழிப்புணர்வு மற்றும் எழுத்துகள்:

ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு எதிரான சிந்தனைகளை அவர் தனது எழுத்துகள் மூலம் பரப்பினார். தேசபக்தி, தன்னம்பிக்கை, சுயமரியாதை ஆகியவற்றை வளர்க்கும் வகையில் அவரது படைப்புகள் அமைந்திருந்தன. இதனால் இளைஞர்கள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடத் தூண்டப்பட்டனர்.

மதம் குறித்தும் வ.உ.சி அவர்கள் நல்லிணக்கக் கண்ணோட்டம் உடையவராக இருந்தார். குறிப்பாக மெய்கண்டாரின் சிவஞானபோதத் திற்கு அவர் எழுதிய உரையைக் குறிப்பிட வேண்டும். அதன் உரைப் பாயிரத்தில் வ.உ.சி. அவர்கள், இவ்வுரையில் ஏனைய உரைகளில் காணப்படும் பல மதக் கோட்பாடுகளும், அவற்றின் கண்டனங்களும் காணப்படா; அவை காணப்படாமைக்குக் காரணம், மக்கள் பல்வேறு பெயர்களோடும், வடிவுகளோடும் காணப்படினும், அவர்களெல்லாம் மக்கள் சாதியினர் ஆவது போல, மதங்கள் பல்வேறு பெயர்களோடும், கொள்கைகளோடும் காணப்படினும் அவைகளெல்லாம் ஒப்புயர்வற்ற ஒரே இறைவனைப் பற்றிப் பேசுகின்றன என்று யான் கருதுகின்றமையே எனக் குறிப்பிடுகிறார்.

அதைத் தொடர்ந்து அவர் சுட்டிக்காட்டும் கருத்துகள் சமகாலப் பொருத்தப்பாடு மிக்கவையாகும். மத வேற்றுமை காண்பவர்களும், பேசுபவர்களும், ‘யான்’ ‘எனது’ என்னும் மதவெறி பிடித்த மாக்களே என்றும், நமது நாடு தற்காலம் இருக்கிற ஒற்றுமையற்ற நிலைமை யில், மத வேற்றுமைகளையோ, சாதி வேற்றுமைகளையோ, வேறு வேற்றுமைகளையோ காண்பவர்களும், பேசுபவர்களும் தேசத்திற்குத் தீங்கிழைப்பவர்களே என்றும் யான் கருதுகின்றேன் என்ற அவரது கருத்து, மதவெறியால் நாட்டைத் துண்டாட நினைப்பவர்களுக்குச் சரியான பாடமாகும்.

அது மட்டுமல்ல, இறை நம்பிக்கையும் சைவ சமய சித்தாந்தங்களில் நல்ல புலமையும் கொண்டிருந்த வ.உ.சி. அவர்கள், தனது அரசியல் வாழ்வில் மதத்தைக் கலக்கவில்லை. சமயம் என்பது தனி மனிதனின் தொடர்புடையது என்பதில் அவர் தெளிவாக இருந்து வந்தார். இந்தக் கருத்தில் அவர் காந்தியாருடன் வேறுபட்ட போதும், தமது கருத்தில் உறுதியாக இருந்து வந்துள்ளார். இறுதிவரையிலும் அதில் அவர் சமரசம் செய்து கொள்ளவில்லை.சுதேசாபிமானம், சுதேச ஸ்டீமர் விக்ஞாபனம் ஆகியவையே இதுவரையில் கிடைத்துள்ள வ.உ.சி. அவர்களின் அரசியல் கட்டுரைகள் தனித்தன்மை வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன.

சிறைவாசமும் சமூக தாக்கமும்:

ஆங்கிலேய அரசால் வ.உ.சி. கடுமையாகத் தண்டிக்கப்பட்டார். சிறையில் அவருக்கு கொடுக்கப்பட்ட கொடுமைகள் சமூகத்தில் பெரும் அதிர்வலை ஏற்படுத்தின. இந்தத் துன்பங்களும் தியாகமும் மக்களிடையே அவரின் போராட்டத்தின் உண்மைப் பொருளை வெளிப்படுத்தி, சுதந்திரப் போராட்டத்துக்கு வலுவூட்டின. அவரது சிறைவாசம் தனிப்பட்ட தண்டனை மட்டுமல்ல, அது சமூகத்தை விழிப்படையச் செய்த ஒரு முக்கிய நிகழ்வாக அமைந்தது.

ஆங்கிலேய அரசு வ.உ.சி.க்கு கடும் சிறைத்தண்டனை வழங்கி யது. சிறையில் அவர் மனிதாபிமானமற்ற கொடுமைகளை அனுபவித்

தார். குறிப்பாக, எருதுகளைப் போல செக்கிழுக்கச் செய்தது போன்ற தண்டனைகள் அவரது உடல்நலத்தை கடுமையாக பாதித்தன. இருந்தாலும், அவர் தமது சுதந்திர வேட்கையையும் சமூக நம்பிக்கை யையும் ஒருபோதும் இழக்கவில்லை.

முடிவுரை:

வ.உ.சி.யின் எழுத்துகள் சமூக மாற்றத்திற்கான வலுவான ஆயுதமாக இருந்தன. அவர் தனது எழுத்துகளாலும் செயல்களாலும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தி, மக்களை சுதந்திர பாதையில் முன்னேற்றினார். எனவே, வ.உ.சி. அவர்கள் தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றில் மறக்க முடியாத எழுத்தாளரும் சமூகப் போராளியுமாகத் திகழ்கிறார். வ.உ.சி.யின் எதிர்ப்புகள் தனிப்பட்ட போராட்டமாக இல்லாமல், முழு சமூகத்திற்கான விடுதலைப் போராட்டமாக இருந்தன. அவரது துணிச்சல், தியாகம் மற்றும் சமூக அக்கறை இந்திய சமூகத்தில் நிலையான மாற்றங்களை ஏற்படுத்தின. ஆகவே, வ.உ.சி. சமூக நீதி மற்றும் சுதந்திரத்தின் அடையாளமாக என்றும் நினைவுகூரப்படுவார்.

துணைநூற்பட்டியல்:

1. வ.உ.சி. ஒரு பன்முகப் பார்வை - கண்ணன், எஸ்., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2005
2. நம்நாட்டுத் தலைவர்கள் : வீர சிதம்பரனார் - புலவர் அரசு, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி. 1970.
3. வீர சிதம்பரனார், சுப்பிரமணிய பிள்ளை, இ. மு., சிவகாமி பப்ளிஷிங் ஹௌஸ், சென்னை, 1950.
4. https://www.hindutamil.in/news/opinion/columns/573438-voc-prison-life.html

72

வ.உ.சிதம்பரனாரும் திருநெல்வேலி ம.தி.தா. இந்துக்கல்லூரியும்

முனைவர் இரா. இலக்குவன்
உதவிப் பேராசிரியர், வெ.ப.சு.தமிழியல் ஆய்வுமையம்,
ம.தி.தா.இந்துக்கல்லூரி, திருநெல்வேலி

ஆய்வுச்சுருக்கம்:

வ.உ.சிதம்பரனார் வாழ்க்கை வரலாற்றில் அவரது கல்விப்பருவம், இந்திய விடுதலைப் போராட்டம், அவரைச் சிறையிலிட்டதால் நிகழ்ந்த திருநெல்வேலி எழுச்சி, தமிழ்ப்பணிகள், அவரது மறைவுக்குப் பிறகு, திருநெல்வேலிக் கலகத்தைத் திருநெல்வேலி எழுச்சியாக நெல்லை மாநகராட்சி தீர்மானம் நிறைவேற்றியது என வ.உ.சி. தொடர்புள்ள வரலாற்றில் திருநெல்வேலியில் இயங்கி வரும் 150 ஆவது ஆண்டை நெருங்கிக்கொண்டிருக்கின்ற பழமையான ம.தி.தா.இந்துக்கல்லூரிக்கு நெருங்கிய பிணைப்பு உள்ளது. திருநெல்வேலி இந்துக்கல்லூரி மாணவர்கள், பேராசிரியர்கள், நிர்வாகம் ஆகிய அனைவரும் வ.உ.சி. யின் ஈக வரலாற்றில் மிக இன்றியமையாத இடம் பெறுகின்றனர்.

திறவுச்சொற்கள்: வ.உ.சி., திருநெல்வேலி இந்து கலாசாலை, பி.ஸ்ரீ., எஸ். வையா புரிப்பிள்ளை, பெ.நா.அப்புசாமி, பொ.திரிகூடசுந்தரம், இ.மு.சுப்பிர மணியப்பிள்ளை, திருநெல்வேலி எழுச்சி, பேராசிரியர் லோகநாதய்யர், நெல்லை நகர்மன்றத் தீர்மானம்- திருநெல்வேலிக் கலகம், நெல்லை மாநகராட்சி கண்டிப்பு, அ.லெ.சு. திருநெல்வேலி எழுச்சிப்போராட்டத் தீர்மானம்

முன்னுரை:

வ.உ.சிதம்பரனார் தூத்துக்குடி மாவட்டத்தில் ஓட்டப்பிடாரம் என்ற சிற்றூரில் பிறந்து இந்திய விடுதலைப் போரில் காந்தியடிகளின் வருகைக்கு முன்பே முன்களப் போராளியாக விளங்கியவர் ஆவார்.

1908 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் நாள் வ.உ.சி. திருநெல்வேலியில் கைது செய்யப்பட்டதன் விளைவாக மார்ச் 13 ஆம் நாள் திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் தன்னெழுச்சியாக நடந்த மக்கள் எழுச்சிப் போராட்டம் வ.உ.சி. யை மக்கள் தலைவர் என உலகிற்குக் காட்டியது.

திருநெல்வேலி எழுச்சியில் திருநெல்வேலி இந்துக்கல்லூரியின் பங்கைப் பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி தனது நூலில் விரிவாகப் பதிவு செய்கிறார்.

இவ்வாய்வுக்கட்டுரை திருநெல்வேலி எழுச்சி மட்டுமல்லாது வ.உ.சி. வரலாற்றில் திருநெல்வேலி இந்துக்கல்லூரிக்கும் வ.உ.சிக்கும் உள்ள தொடர்புகளைப் பேசுகிறது.

ம. தி. தா. இந்துக்கல்லூரி:

இந்தியாவில் ஆங்கிலேயர்களின் ஆட்சிமுறை ஏற்பட்ட போது இந்திய சமூக அரசியல் தளங்களில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. திருநெல்வேலியில் ஆங்கிலேய அரசாலும் ஐரோப்பிய மதப்பணியாளர்களாலும் பள்ளிகளும் கல்லூரிகளும் நிறுவப்பட்டன. அக்கல்விக்கூடங்கள் கல்விப்பணியோடு கிறித்துவ மத ஈடுபாட்டையும் ஊட்டி வந்தன. இந்நிலையில் திருநெல்வேலி நகரத்தில் வாழ்ந்த சைவப்பெருமக்கள் பலரால் 1859 ஆம் ஆண்டு திருநெல்வேலி நகரம் (டவுண்) தெற்குப்புதுத்தெருவில் ஆங்கிலோ வெர்னாகுலர் பள்ளி ஒன்று தொடங்கப்பட்டது. பின்னர் நெல்லை சந்திப்பு வீரராகவபுரத்தில் 1861 இல் இந்துகலாசாலை எனப் பெயர் மாற்றம் ஆகி செயல்பட ஆரம்பித்தது. இப்பள்ளி மாணவர்கள் 1967 ஆம் ஆண்டு முதன்முறையாக மெட்ரிகுலேஷன் தேர்வெழுதினார்கள்.

1877 ஆம் ஆண்டு சென்னை கல்வித்துறைத் தலைவராக இருந்த டங்கன் (Dr.Duncan) மனோன்மணியம் என்ற நாடகத்தமிழ் நூலை இயற்றிய பெ.சுந்தரம் பிள்ளையைத் திருநெல்வேலி இந்துகலாசாலையின் தலைமையாசிரியராக நியமித்தார்.அவரது அளப்பரிய முயற்சியால் இப்பள்ளி 1878 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இரண்டாம் நிலைக் கல்லூரியாக (second grade college) உயர்வு பெற்றது . அதாவது தொடக்கக் கல்வி, மேல்நிலை வகுப்புகளோடு மெட்ரிகுலேஷன் என்ற பள்ளி இறுதி வகுப்பையும் எப்.ஏ என்ற இளங்கலைப் பட்டப்படிப்பிற்கு முந்தைய இரண்டாண்டு கால இடைநிலை (Intermediate) வகுப்புகளையும் கொண்ட கல்லூரி இரண்டாம் நிலைக்கல்லூரியாகும். அவ்வாறு உயர்வு பெற்ற கல்லூரியின் முதல் முதல்வராக மனோன்மணியம் சுந்தரனார் பதவியேற்றுக் கல்லூரியை வளமுறச் செய்தார். (2001:17) பின்னர் திருநெல்வேலி இந்துக்கல்லூரி சென்னைப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. மனோன்மணியம் சுந்தரனார் காலத்திற்குப் பிறகு பல சிறந்த முதல்வர்களும் ஆசிரியர்களும் இந்துக்கல்லூரியில் பணியாற்றிக் கல்லூரியின் தரத்தை உயர்த்தினர்.சுந்தரம் சுந்தரனாரை அடுத்து ஆங்கிலேயர்களான ஆர்.எஸ்.ஷெப்பர்டும் எட்வர்டு விங்கிளரும் முதல்வர்களாகப் பணியாற்றினர். இவர்களைத் தொடர்ந்து ஹெர்பர்ட் சாம்பியன் என்ற ஐரோப்பியர் கல்லூரி முதல்வராகப் பணியாற்றினார்.அன்றிருந்த சென்னை மாகாணத்திலேயே முதன்மையான கல்லூரியாகவும் அதிகமான மாணவர்கள் தேர்ச்சி பெற்றுப் பட்டம் பெறும் கல்லூரியாகவும் இந்துக்கல்லூரி விளங்கியது.எனவே திருநெல்வேலி இந்துக்கல்லூரியின் புகழ் அன்றைய சென்னை மாகாணம் முழுமையும் பரவியது.

இடைக்காலத்தில் கல்லூரி வளர்ச்சிக்குத் தடையாக பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் பொருள் உதவி செய்த நன்கொடையாளர்களுக்கு நன்றி பாராட்டும் விதமாக 1936 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் நாளன்று, இந்துக்கல்லூரிக்கு, மதுரை திரவியம்

தாயுமானவர் இந்துக்கல்லூரி' என்று கல்லூரி நிர்வாகம் பெயர் சூட்டியது. திருநெல்வேலி மாவட்டத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மலர்ந்து இருபதாம் நூற்றாண்டு முழுமையும் கல்விப்பணியில் கோலோச்சி இருபத்தோராம் நூற்றாண்டில் சிறப்புறச் செயல்பட்டுவரும் கல்லூரி மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக்கல்லூரி ஆகும்.

வ.உ.சி. – கல்வி கற்ற நிறுவனம்:

இந்தப் பாரம்பரியமும் பழமையும் மிக்க இந்துகலாசாலையில்தான் வ.உ.சிதம்பரனார் பயின்றார். வ.உ.சி தமது சுயசரிதையில்,

செல்வம் மிகுந்த திருநெல்வேலியின்

அருகினிலுள்ள அழகுறும் இந்துப்

பெரியகலாசாலையைப் பேணியடைந்து

சின்னாட் கற்று...

என்று பதிவு செய்கிறார். (1990:13) எனவே அவர் திருநெல்வேலி இந்துகலாசாலையில் பயின்றார் என்று அறிய முடிகிறது. சுயசரிதைப் பதிப்பாசிரியர் வ.உ.சுப்பிரமணியம் இந்து பெரியகலாசாலை என்பதற்கு ஹிந்துகாலேஜைச் சேர்ந்த ஹைஸ்கூல் என்று விளக்கம் தருகிறார். (1990:13) திருநெல்வேலி இந்துகலாசாலையை அழகுடையது என்றும் பெரியது என்று வ.உ.சி. பெருமையாகக் கூறுகிறார்.

வ. உ .சி. யும் இந்துக்கல்லூரி மாணவர்களும்:

வ.உ.சி மீதும் அன்றைய தேச விடுதலைப்போராட்டத்தின் மீதும் பற்று கொண்டவர்களாக திருநெல்வேலி இந்துக்கல்லூரி மாணவர்கள் விளங்கினர். இந்துக்கல்லூரி மாணவர்கள் திருநெல்வேலி எழுச்சியில் பங்குகொண்ட விதத்தை மிகவிரிவாக வரலாற்றாசிரியர் ஆ.இரா. வேங்கடாசலபதி (2022: 41-45) விளக்குகிறார். இந்துக்கல்லூரி மாணவர் களாகிய பி.ஸ்ரீ, எஸ்.வையாபுரிப்பிள்ளை,பொ, திரிகூடசுந்தரம், பெ.நா.அப்புசாமி, இ.மு.சுப்பிரமணியப் பிள்ளை, தி.கோ.அனந்த சுவாமி ஆகியோர் திருநெல்வேலி எழுச்சியை நேரில் கண்டோர் ஆவர். அவர்களில் எஸ்.வையாபுரிப்பிள்ளை பள்ளி மாணவராக திருநெல்வேலி எழுச்சிப்போராட்டத்தில் கலந்து கொண்டவர். தி.கோ. அனந்தசுவாமி தைப்பூச மண்டபத்தில் நடந்த கூட்டத்தைப் பார்த்தவன்; வந்தே மாதர கோஷத்தைக்கேட்டவன் நான் (1964:203) என்று பதிவு செய்கிறார்.

திருநெல்வேலியில் மாணவர் உலகம் இரண்டு பட்டு இருந்தது. வங்காள பிரிவினையை குறித்தும் விபின் சந்திர பாலின் தேசிய பேச்சுக்களைக் குறித்தும் ஆங்கிலத் துரைத்தனத்தைக் குறித்தும் சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியைக் குறித்தும் வாக்குவாதங்களும் சச்சரவுகளும் ஏற்படாத நாளே இல்லை என்று சொல்லலாம் ஆனால் பொதுப்பட மாணவர்களில் பெரும்பாலோர் நாட்டுப்பற்று மிகுந்த மிகுந்தவர்களாகவே இருந்தனர் அவர்களுடைய உள்ளத்தில்

வ.உ.சி. நிரந்தரமான ஒரு ஸ்தானத்தைப் பெற்றுவிட்டார் என்று எஸ்.வையாபுரிப்பிள்ளை அன்றைய காலகட்ட இந்துக்கல்லூரி மாணவர்களின் அரசியல் ஆர்வம் குறித்துப் பதிவு செய்கிறார்.

திருநெல்வேலி எழுச்சி நாளன்று இந்துகலாசாலை மாணவர்களும் போராட்டத்தில் கலந்து கொண்டனர் என்பதை 'இவ்விவரம் நெல்லை நகரில் பரவியதும் பெரும் புரட்சியோ என்ற கருதுமாறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாணவர்கள் பள்ளிக்கூடம் செல்ல மறுத்து ஊர்வலத்தில் பங்கு கொண்டனர் அவ்வாறு சென்றவர்களில் நானும் ஒருவன் எனது உற்ற நண்பர்கள் இருவரும் என்னுடன் வந்தனர் இது நிகழ்ந்தது மார்ச் மாதம் 13ஆம் தேதி' என்று வையாபுரிப்பிள்ளை நான் கண்ட வ.உ.சி என்ற கட்டுரையில் (1951) எடுத்துரைக்கிறார். நெல்லை மாநகரின் மைய இடமான நெல்லை சந்திப்பில் இந்துக்கல்லூரி விளங்கியதால் நகரத்தில் நடக்கின்ற அரசியல் கூட்டங்கள் ,அரசியல் சுவரொட்டிகள் போன்றவை மூலம் இந்துக்கல்லூரி மாணவர்கள் எழுச்சியும் அரசியல் உணர்வும் கொண்டவர்களானார்கள் என்பதை பொ.திரிகூடசுந்தரம் , வ.உ.சி. செய்த உதவி என்ற கட்டுரையில் விளக்குகிறார் (1951)

திருநெல்வேலி எழுச்சிப்போராட்டத்தில் இந்துக்கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டதை, 'திருநெல்வேலி பாலம் என்று சொல்லப்படும் வீரராகவபுரத்தில் பள்ளிப் பிள்ளைகளும் வாலிபர்களும் ஆக ஒரு கூட்டம் கூடி கடைகளை அடைக்கும்படி செய்து திருநெல்வேலி நகரை நோக்கி புறப்பட்டது' என்று இ.மு.சுப்பிரமணியப்பிள்ளை குறிப்பிடுகிறார். (1950:48)

வ.உ.சி. தனது சுயசரிதையில்,

வெள்ளிக் கிழமை வீரரா கவபுரம்

பள்ளிச்சிறுவர் பலத்தொடு கூடி

அடைமின் கடைகளை அன்பர் சிறையுள்

அடைபட நின்றதன் அறிகுறியாக

என்று மொழிந்தனர், என எழுச்சிப் போராட்டத்தில் இந்துகலாசாலை மாணவர்களின் பலமான பங்கைப் பதிவிடுகிறார். (1990:83) பள்ளிச்சிறுவர்கள் பலரும் கூடி வ.உ.சியும் சிவாவும் கைது செய்யப்பட்டதற்கு அறிகுறியாகக் கடைகளை அடைக்குமாறு வற்புறுத்தினர் என்பதும், இதற்குப் பிறகே குருநாத அய்யரும் அவர்களோடு சேர்ந்து குரல் கொடுத்தார் என்பதும் புலனாகிறது (1987: 24) பலத்தொடு கூடிய பள்ளிச்சிறுவர் என்ற வ.உ.சி.யின் கூற்று இந்துக்கல்லூரி மாணவர்களைக் குறிக்கிறது என்பதை வ.உ.சி ஆய்வாளர் ஆ.இரா.வேங்கடாசலபதி உறுதி செய்கிறார். (1987:24)

சிறைவாசத்திற்குப் பிறகு வ.உ.சி கோவில்பட்டியில் வசித்த காலத்திலும் தமிழப் பதிப்புப் பணிகள் ஆற்றிய காலத்திலும் இந்துக்கல்லூரி மாணவர்களான பி.ஸ்ரீ ஆச்சார்யா, எஸ். வையாபுரிப்பிள்ளை, இ.மு. சுப்பிரமணியப் பிள்ளை ஆகியோர் வ.உ.சி.

யுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். இச்செய்திகளை அவர்கள் தங்கள் நூல்களிலும் கட்டுரைகளிலும் பதிவு செய்துள்ளனர். (1951, 1964,1950)

வ.உ.சி. யும் பேராசிரியர்களும்:

வ.உ.சி. மீது கொண்ட பற்றினால் திருநெல்வேலி எழுச்சிப் போராட்டம் இந்துக்கல்லூரிப் பேராசிரியர்களும் பங்கேற்றனர். மாணவர்களைத் தவிர, கே.ஜி.லோகநாதய்யர் என்ற கணக்குப் பேராசிரியர் எழுச்சியை வழிநடத்திச்செல்லும் பணியைச் செய்தார் என்றும் வேறு சில ஆசிரியர்களும் அவருக்கு ஆதரவாக நின்றனர் என்றும் ஆ.இரா. வேங்கடாசலபதி (2022:34) பதிவு செய்கிறார். இவரைக் கைது செய்து இவருக்கு எதிராக சாட்சி சொல்வதற்கு இரு கல்லூரி மாணவர்களை அரசு தரப்பு சாட்சிகளாக ஆக்க முயன்றனர். அம்முயற்சியும் தோல்வியில் முடிந்தது (1987:30)

திருநெல்வேலிக் கலகமா எழுச்சியா? தீர்மானம்:

வெள்ளை ஏகாதிபத்தியம் 12.03.1908 அன்று வ.உ.சியைக் கைது செய்ததைக் கண்டித்து 13.03.1908 அன்று திருநெல்வேலியில் ஏற்பட்ட புரட்சியையும் அதன் தொடர் விளைவுகளையும் கண்டித்து நெல்லை நகர் மன்றம் 23.03.1908 அன்று தீர்மானம் நிறைவேற்றியது.

The Council strongly condemns the disturbances on the 13th instant and greatly regrets the serious losses occasioned thereby. The council humbly begs to assure H.E. the Governor-in-Council that the inhabitants of the municipality have always been most loyal, peaceful and law-abiding and that the disturbances came as a surprise and were caused by an irresponsible mob on a sudden impulse of the moment. This council anxiously and humbly prays that His Excellency the Governor-in-council - maybe graciously pleased to cancel the order imposing an additional police force on this municipality'. (1987:77)

இந்தத் தீர்மானம், 1908 மார்ச் 13 ஆம் தேதி பொறுப்பற்ற கும்பலால் கலகம் நடத்தப்பட்டது என்று குறிப்பிட்டு தண்டக்காவல் படையை நீக்க வேண்டும் என ஆளுநருக்குப் பணிவுடன் வேண்டி கோரிக்கை அனுப்பியது.

இது நடந்து நூறு ஆண்டுகள் கழித்து 2008 ஆம் ஆண்டு நெல்லை மாநகரத்தின் வணக்கத்துக்குரிய மேயராக இருந்தவர் அ. லெ. சுப்பிரமணியன் ஆவார். அவர் ம. தி. தா. இந்துக்கல்லூரியில் 1990 முதல் 2012 வரை செயலராக இருந்து திறம்பட பணியாற்றியவர். கல்லூரிச் செயலர் அ. லெ. சுப்பிரமணியன் அவர்கள் மூன்று முறை திருநெல்வேலித்தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் நெல்லை மாநகராட்சியின் வணக்கத்துக்குரிய மேயராகவும் இருந்து பல பணிகள் செய்துள்ளார். ஏ.எல்.எஸ். நெல்லை மேயராக இருந்த போது 23.03.1908 நெல்லை நகரசபையின் தீர்மானத்தை ரத்து செய்தார். மேலும் கலகம் என்ற சொல்லை நீக்கி அதை ‘முதல் எழுச்சிப் போராட்டம்’ என்று

குறிப்பிட்டு வரலாற்றை நேர்செய்தார். அவர் இத்தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு உந்துதலாக இருந்தது பேராசிரியர் ஆ.இரா. வேங்கடாசலபதி எழுதிய வ.உ.சி.யும் திருநெல்வேலி எழுச்சியும் என்ற நூலாகும். இதை அ.லெ.சுப்பிரமணியன் அவர்கள் பள்ளி 150 ஆவது ஆண்டு நிறைவு மலரில் பதிவு செய்துள்ளார்.

06.2008 **அன்று இயற்றப்பட்ட நெல்லை மாநகராட்சித் தீர்மானம்:**

'தேசியப்போராட்டத்தலைவர்பிபின்.சந்திரபாலர்ஆங்கிலேயஅரசால் கைது செய்யப்பட்டு, பின்பு 09.03.1908ல் விடுதலை செய்யப்பட்டார். இந்நாளை சுயராஜ்ய நாளாகக் கொண்டாட வ.உ.சிதம்பரனார் ஏற்பாடு செய்தார். அக்கூட்டத்திற்கு அனுமதி தர மறுத்ததோடு, தம்முன் நேரில் ஆஜராக அன்றைய நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் விஞ்ச் வ.உ.சிக்கு சமன் அனுப்பினார். ஆனால் ஆட்சியரைச் சந்தித்து அன்று மாலையே வ.உ.சி அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு அருகிலேயே தாமிரபரணி ஆற்றங்கரையில், பிபின் சந்திரபாலர் விடுதலையைக் கொண்டாடும் கூட்டத்தை தடையை மீறி நடத்தினார். ஏற்கனவே வ.உ.சி மீது எரிச்சல் கொண்டிருந்த ஆங்கில ஏகாதிபத்திய அரசு 12.03.1908ல் வ.உ.சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா, பத்மநாப ஐயங்கார் போன்றவர்களை கைது செய்து பாளையங்கோட்டை சிறையில் அடைத்தது.

இச்செய்தியை அறிந்த நெல்லை நகர மக்கள் கிளர்ந்து எழுந்து, 13.03.1908ல் சந்திப்பு இந்துக் கல்லூரி வளாகத்தில் இக்கல்லூரி மாணவர்கள் உட்பட சுமார் 5000 பேர் கூடி, போராட்டத்தில் ஈடுபட்டனர். சந்திப்பு ரயில் நிலையம், அஞ்சல் அலுவலகம், நகராட்சி அலுவலகம் ஆகியவற்றைத் தாக்கி சேதப்படுத்தினர். இப்போராட்டத்தில் நெல்லையில் 57 பேரும், தூத்துக்குடியில் 27 அன்று ஆங்கிலேய ஏகாதிபத்திய அரசு நடத்திய பேரும் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டனர். துப்பாக்கிச் சூட்டில் நெல்லையில் 4 பேர் இறந்தனர்.இதனைக் கண்டித்து அன்றைய நெல்லை மாநகராட்சி 23.03.1908ல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியது.இத்தீர்மானம் நமது மாநகராட்சி வரலாற்றிலும் ஒரு கரும்புள்ளியாக அமைந்துவிட்டது. இத்தீர்மானத்தை ரத்து செய்ய வேண்டுமென்று பத்திரிகைகளும், தியாகிகள் சங்கங்களும், பொதுமக்களும் கோரிக்கை வைத்தனர். அவர்களது கோரிக்கையை ஏற்று, நமது மாநகராட்சி கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

13.03.1908ல் நடந்த போராட்டத்தை கலகம் என்று அன்றைய நகராட்சியும், பிரிட்டிஷ் அரசும் குறிப்பிடுவதை இம்மாமன்றம் ஏற்காமல் மறுத்து அதனை தமிழகத்தில் தாமிரபரணி நதிக்கரையில் நடந்த முதல் எழுச்சிப் போராட்டம் என்றே கருதுகிறது. இப்போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்ற வ.உ.சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா, பத்மநாப ஐயங்கார் போன்ற தமிழக புகழ்மிக்க சுதந்திர போராட்ட வீரர்களுக்குத் தலைவணங்கி இம்மாமன்றம் அவர்களையும் பாராட்டி நன்றி

தெரிவிக்கிறது. மேலும் 13.03.1908ல் கிளர்ச்சியில் ஈடுபட்டுசிறை சென்ற நெல்லையில் கைதான 57 பேர்களுக்கும், தூத்துக்குடியில் கைதான 27 பேர்களுக்கும் இம்மாமன்றம் பாராட்டு தெரிவிக்கிறது.

அன்று நடந்த துப்பாக்கிச் சூட்டில் இறந்த நெல்லையைச் சேர்ந்த 4 பேரின் தியாக வரலாற்றை இம்மாமன்றம் போற்றுகிறது. 'மாநகராட்சி வரலாற்றில் கரும்புள்ளியாக இருக்கின்ற நெல்லை நகராட்சியில் 23.03.1908ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இம்மாமன்றம் ரத்து செய்ய தீர்மானிக்கிறது.' இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை நிறைவேற்றியவர் இருபத்திரண்டு ஆண்டு காலம் ம.தி.தா.இந்துக்கல்லூரி செயலராக இருந்த அ.லெ.சுப்பிரமணியன் ஆவார். மேலும் மேயர் அ.லெ.சு அத்தீர்மானத்தின் நகலை இலண்டன் பிரிவி கவுன்சிலுக்கும் அனுப்பி வைத்து வ.உ.சி. யின் புகழை உயர்த்தினார்.

இந்துக்கல்லூரி வ.உ.சிதம்பரனாருக்குக் கல்வி அளித்த பள்ளிக்கூடமாகவும் அவரது கைதின் விளைவாக நடந்த திருநெல்வேலி எழுச்சிப் போராட்டத்திற்கான களமாகவும் விளங்கியது. அப்போராட்டம் கலகம் என்று நெல்லை நகர மன்றத்தால் கொச்சைப்படுத்தப்பட்ட இழிவை நூறாண்டுகள் கழித்து நீக்கி, வ.உ.சியையும், அவரது போராட்டத்தையும் எழுச்சி என்று தீர்மானம் நிறைவேற்றியவரும் ம.தி.தா.இந்துக்கல்லூரியில் நெடுங்காலம் செயலராக இருந்த அ.லெ. சுப்பிரமணியன் என்பது கல்லூரிக்கும் வ.உ.சிக்கும் உள்ள உறவை மேலும் நெருக்கமாக்குகிறது.

துணைநூற்பட்டியல்

1. வேங்கடாசலபதி,ஆ.இரா., திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் 1908, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2022.
2. மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக்கல்லூரி மேல்நிலைப்பள்ளி நூற்றி ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா மலர் 1861-2011, திருநெல்வேலி, 2011.
3. சுப்பிரமணியப்பிள்ளை, இ.மு., வீர சிதம்பரனார், சிவகாமி பப்ளிஷிங் ஹௌஸ், சென்னை,1950.
4. வ.உ.சிதம்பரம் பிள்ளை மலர், பம்பாய்த் தமிழ்ச் சங்கம், மாதுங்கா, 1951.
5. சுடர் வ.உ.சி மலர், தில்லித் தமிழ்ச்சங்கம், தில்லி, 1964.
6. வேலுச்சாமி,ந., மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை, சாகித்ய அக்காதெமி,சென்னை, 2001.
7. வ.உ.சி., சுயசரிதை, கழக வெளியீடு, 1990.
8. வேங்கடாசலபதி,ஆ.இரா., வ.உ.சி.யும் திருநெல்வேலி எழுச்சியும், மக்கள் வெளியீடு, சென்னை, 1987.

73

ஆங்கிலேயருக்கு எதிராக வ.உ.சி.யும் அவரது போராட்டமும்

அ. முத்து அஸ்வந்த்,
தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

ஆய்வுச்சுருக்கம்:

வ.உ.சி. ஆங்கிலேயருக்கு எதிராகப் பல போராட்டங்கள் முன்னின்று நடத்தியுள்ளார். மேலும் தனது புரட்சிகரமான பேச்சினால் மக்களிடையே சுதந்திர தாகத்தை ஊட்டி அவர்களையும் போராட்டத்தில் ஈடுபடுத்தி உள்ளார். தூத்துக்குடியில் நடத்திய கோரல் மில் போராட்டம் மற்றும் ஆங்கிலேயருக்கு எதிராக கடல் வழி வணிகத்திற்குச் சுதேசி கப்பல் வாங்கிவிட்டதையும் கூறலாம். மேலும் இவை மட்டுமின்றி சுப்பிரமணிய சிவா சுப்பிரமணிய பாரதி ஆகியோருடன் இணைந்து பல போராட்டங்கள் வ.உ.சிதம்பரனார் நடத்தியுள்ளார். அதனைப் பற்றி அறிவது இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

திறவுகோல்: சுதந்திரப் போராட்டத்தில் வ.உ.சி. முன்னிறுத்திய போராட்டம் மற்றும் இயக்கங்களின் வெளிப்பாடு.

முன்னுரை:

வ.உ.சி. தென்னிந்திய விடுதலை இயக்கம் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்களில் முதன்மையானவர். மக்களிடையே சுதந்திரம் என்னும் விதையினை விதைத்து அதனை மரமாக வளர்த்தவர் கப்பலோட்டிய தமிழன் செக்கிழுத்த செம்மல் என்று அழைக்கப்படும் வ.உ.சி. ஆவார்கள். அவர் நடத்திய போராட்டம் மற்றும் இயக்கம் குறித்து இக்கட்டுரையின் வழி ஆய்வு செய்கிறோம்.

சுதேசி நாவாய் சங்கம்:

'ஆங்கிலேயர்களின் அடக்குமுறை மற்றும் வங்கப் பிரிவினைக்கு எதிராக தற்போதைய கல்கத்தா மாநிலத்தில் 1905 ஆம் ஆண்டு ஆகஸ்ட் ஏழாம் நாள் சுதேசி இயக்கம் சுரேந்திரநாத் பானர்ஜி தலைமையில் தொடங்கப்பட்டது. இதில் அந்நியப் பொருள் புறக்கணிப்பு சுதேசி பொருளை பயன்படுத்துவது போன்ற முக்கியத் தீர்மானங்கள் இயற்றப்பட்டது. இதன் விளைவாகத் தமிழகத்தில் வ.உ.சிதம்பரனாரால் 1906 ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் சுதேசி நாவாய் சங்கம் தொடங்கப்பட்டது. சுதேசி என்பது சொந்த நாட்டு உற்பத்தி மற்றும் நாவாய் என்பது கப்பலையும் குறிக்கும் இச்சங்கம் வ. உ சிதம்பரனாரால் தூத்துக்குடியில் தொடங்கப்பட்டது. கடல் வழி வணிகத்தில் ஆங்கிலேயர்களின் கப்பல்களுக்கு எதிராக காலியா, லாவோ ஆகிய

இரண்டு கப்பல்கள் தூத்துக்குடி முதல் கொழும்பு வரை இயக்கப்பட்டது. இந்நிறுவனத்திற்கு முக்கிய பங்காளர்களாகப் பாண்டித்துரைத்தேவர் மற்றும் ஹாஜி முகமது பக்கீர் சேட் இருந்தனர். இவர்களது இச்செயல் ஆங்கிலேயர்களின் பொருளாதாரத்தை பெரிதும் பாதித்தது. அதன் பிறகு ஆங்கில அரசு வ.உ.சி யின் மீது தேசத் துரோகம் என்னும் குற்றத்தினை சாட்டி வ.உ.சி. யைச் சிறையில் அடைத்தது. மேலும், கடுமையான வரி மற்றும் ஆங்கிலேயர்களின் கப்பல்களை இலவசமாக வணிகத்திற்கு இயக்குவது போன்ற செயல்பாட்டினால் சுதேசி நாவாய்ச் சங்கம் 1911 ஆம் ஆண்டு முழுமையாகக் கலைக்கப்பட்டு அக்கப்பல் நிறுவனம் ஆங்கிலேய அரசிற்கு விற்கப்பட்டன.

தொழிற்சங்க இயக்கம்:

சுதேசி இயக்கத்தின் போது தொழிலாளர்களை ஒரு பெரும் சக்தியாக மாற்றியதில் வ.உ.சி. யின் பங்கு அளப்பரியது தொழிலாளர்களுக்கு ஆதரவாகவும் ஆங்கிலேயருக்கு எதிராக 1908 ஆம் ஆண்டு தூத்துக்குடியில் தென்னிந்திய முதல் தொழிற்சங்கப் போராட்டத்திற்கு வித்திட்டார். இதுவே பவள ஆலைப் போராட்டம் எனப்படும். முக்கிய நோக்கமாக தொழிலாளர் நலன் மற்றும் உரிமைகள், வேலை நேரக் குறைப்பு, ஊதிய உயர்வு வார விடுமுறை போன்றவை இதன் முக்கிய நோக்கமாக அவரால் பார்க்கப்படுகிறது. மேலும் இச்சங்கத்திற்கு வ.உ.சி யுடன் சுப்பிரமணிய சிவா இருந்தார். பின்னர் இவர்களது செயல்பாடு மற்றும் சங்கத்தின் விளைவாக ஆங்கிலேய நிர்வாகம் தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்று வேலை நேரக் குறைப்பு ஊதிய உயர்வு மற்றும் வார விடுமுறை பொது விடுமுறை போன்றவற்றினை வழங்கியது. இந்த வெற்றிதான் தென்னிந்திய தொழிலாளர் இயக்கங்கள் வலுப்பெற முதன்மை காரணமாகப் பார்க்கப்படுகிறது.

விபின் சந்திர பால்:

வங்காளத்தை சேர்ந்த புரட்சித் தலைவரான விபின் சந்திர பால் 1907 ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசால் சிறையில் அடைக்கப்பட்டார். (காரணம்) வந்தே மாதரம் இதழில் ஆங்கிலேய அரசுக்கு எதிராக எழுதிய குற்றத்திற்காக அரவிந்த கோஸ் அவருக்கு எதிராகச் சாட்சி சொல்ல மறுத்ததால் நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கூறி விபின் சந்திர பாலுக்கு ஆறு மாத சிறைத் தண்டனை ஆங்கிலேய அரசு வழங்கியது. அதன் பின் தண்டனை முடிந்து மார்ச் 9, 1908 ஆம் ஆண்டு விடுதலையானார். இவரின் விடுதலையை வெகு சிறப்பாக கொண்டாட வ.உ.சி. மற்றும் சுப்பிரமணிய சிவா ஆகிய இருவரும் முடிவு எடுத்தனர் விபின் சந்திர பால் விடுதலை நாளை கொண்டாடுவதற்கு முக்கிய காரணமாக பார்க்கப்படுவது விபின் சந்திர பாலின் புரட்சிகரமான பேச்சு மற்றும் செயல்பாடு ஆகும். இவரது விடுதலை நாளை வ. உ சி, சுதேசி தினமாக அறிவித்தார் மேலும் அந்நாளில் திருநெல்வேலியில் ஊர்வலம் சென்றனர். அதன் பின் 1908 மார்ச் 12 ஆம் நாள் வ.உ.சிதம்பரனார் சுப்பிரமணிய சிவா ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டனர். வ.உ.சி. க்கு இரட்டை ஆயுள் தண்டனை

மற்றும் சுப்பிரமணிய சிவாவிற்கு 10 ஆண்டு கடுமையான தண்டனை ஆங்கிலேய அரசால் வழங்கப்பட்டது.

சிறைவாசம்:

இந்திய சுதந்திரத்தின் போது ஆங்கிலேய அரசுக்கு எதிராக பல போராட்டங்கள் வ உ சி யின் தலைமையில் நடந்தன பலமுறை சிறைக்குச் சென்றுள்ளார். சுதேசி இயக்கம் மற்றும் விபின் சந்திர பால் விடுதலை கொண்டாட்டம் போன்ற நிகழ்வின் காரணமாக வ.உ.சி. க்கு இரட்டை ஆயுள் தண்டனை 40 வருடம் சிறை தண்டனை வழங்கப்பட்டது. பின்னர் மேல்முறையீடு காரணமாக அத்தண்டனை 6 ஆண்டுகளாக குறைக்கப்பட்டன. வ.உ.சி. பாளையங்கோட்டை மத்திய சிறை, கோவை மத்திய சிறை மற்றும் கண்ணனூர் சிறைகளில் அடைக்கப்பட்டார். மத்திய சிறையில் மாடுகளுக்கு பதிலாக வ.உ.சி சங்கிலியால் கட்டப்பட்டு செக்கு இழுத்தார்.

முடிவுரை:

தென்னிந்திய சுதந்திரப் போராட்ட தலைவர்களுள் முக்கியமான தலைவராக திகழ்ந்தவர் தான் பாபு சிதம்பரனார் இவர் முன்னிறுத்திய பல முக்கிய போராட்டம் மற்றும் இயக்கம் காரணமாக ஆங்கிலேயர்களால் சிறையில் அடைக்கப்பட்டு கடுமையான தண்டனைகள் அனுபவித்தவர்; இவரது ஒவ்வொரு போராட்டம் மற்றும் இயக்கம் ஆங்கிலேயர்களுக்கு பெரிதும் சவாலாக இருந்தது. மேலும் மக்களிடையே புரட்சிகரமான பேச்சுக்களின் மூலம் சுதந்திர தாகத்தினை ஊட்டினார் மேலும் மெய்யறிவு மற்றும் பாடல் திரட்டு ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இவ்வாறாக வ. உ சிதம்பரனார் சுதந்திரப் போராட்ட இயக்கம் குறித்து இக்கட்டுரை அமைகிறது.

துணைநூற்பட்டியல்:

1. சுயசரிதை, சிதம்பரம் பிள்ளை, வ.உ., திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, 1990.
2. வ.உ.சி.யின் சுயசரிதை, சிதம்பரம் பிள்ளை, வ.உ., சுகைனா பதிப்பகம், பாளையங்கோட்டை, 1946.
3. வ.உ.சி.யும் சைவசமயமும் - திவான், செ., ரெகான் சுலைமான் பதிப்பகம் : பாளையங்கோட்டை, 2015

74

வ.உ.சி.யும் கோரல் மில் தொழிலாளர் வேலை நிறுத்தமும்

முனைவர் சு. பேச்சிமுத்து
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறைத் தலைவர்,
கீதாஜீவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குறுக்குச்சாலை, தூத்துக்குடி.

ஆய்வுச் சுருக்கம்:

தாம் வாழும் காலத்தின் வளர்ச்சிப் போக்குகளைப் புரிந்து கொண்டு, அதற்கேற்பத் தமது பொது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் தலைவர்கள் வரலாற்றில் அருகிலேயே காணப்படுகிறார்கள். அவர் இந்திய விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவராகவும், சுதேசி இயக்கத்தின் தீவிர ஆதரவாளராகவும் விளங்கினார். அவரது சுதேசி சிந்தனையின் செயல்முறை வெளிப்பட்டுத் தோன்றியது. வ.உ.சி. யின் கோரல் மில் முயற்சி, இந்திய விடுதலைப் போராட்டத்தில் பொருளாதாரச் சுதந்திரம் எவ்வளவு முக்கியம் என்பதையும் அறிய முடிகிறது. அது இந்தியர்களைத் தொழில்துறையில் சுய நிறைவை நோக்கி நகர்த்திய பெருமை வ.உ.சி. யைச் சாரும். இவ்வாய்வுக் கட்டுரை கோரல் மில்லின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தினை மையப்படுத்தி எடுத்தியம்புகிறது.

திறவுகோல் சொற்கள்: கோரல் மில், உள்ளங்கை ரேகை பார்த்து ஒட்டுதல், புரட்சி

கோரல் மில்:

நெல்லை மாவட்டத்தில் பருத்தித் தொழிலில் ஈடுபட்டு இருந்த பிராங் ஹார்வி என்ற வெள்ளையர் பாபநாசம் மலையின் அடிவாரத்தில் ஆலை ஒன்றைத் தொடங்குவதற்கு 1883 ஆம் ஆண்டில் திட்டமிட்டார். பாபநாசம் அருவியின் மேலுள்ள ஆற்று நீரைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்து, அதன் மூலம் ஆலையை இயக்கப் பயன்படுத்துவது என்ற அறிவியல் நோக்கில் அமைந்த அவரது திட்டத்திற்கு ஆங்கில அரசு அனுமதியளித்தது.

1885 இல் ‘திருநெல்வேலி மில்ஸ் கம்பெனி லிமிடெட்’ என்ற நிறுவனத்தை பிராங் ஹார்வி உருவாக்கினார். அதே ஆண்டில் 10000 கதிர்களுடன் தொடங்கிய ஆலை மூன்று வருடங்களுக்குள் 16000 கதிர்களைக் கொண்டதாக மாறியது. இதன் பின்னர் 1888 இல் தூத்துக்குடி நகரில் கடற்கரைச் சாலையில் ‘கோரல் மில்’ என்ற பெயரில் ஆலையொன்று இதே நிர்வாகத்தால் தொடங்கப்பட்டது. இந்த ஆலையானது 1916 ஆம் ஆண்டின் 1100 குதிரை ஆற்றல் வாய்ந்த இயந்திரத்தால் இயக்கப்பட்டது. 1,800 தொழிலாளர்கள் இதில் பணிபுரிந்தனர். 2500 டன் நூல் உற்பத்தி செய்த இத்தொழிலை 15

லட்சம் ரூபாய் மூலதனத்துடன் தொடங்கப்பட்ட கூட்டு நிறுவனமாக அமைந்திருந்தது.

தூத்துக்குடியில் வ.உ.சி.:

தூத்துக்குடியில் கோரல் ஆலை தொடங்கி இரண்டாண்டுகள் கழித்து, 1900 ஆம் ஆண்டில் வ.உ.சி. ஓட்டப்பிடாரத்தில் இருந்து தூத்துக்குடி வந்து குடியேறினார். தொடக்கத்தில் வழக்கறிஞராக மட்டும் பணியாற்றிய வ.உ.சி பின்னர் அன்றைய காங்கிரஸ் இயக்கத்தின் ஓர் அங்கமாகத் தோன்றி சுதேசி இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பல்வேறு சுதேசி நிறுவனங்களைத் தூத்துக்குடியில் நிறுவினார். இம்முயற்சியின் உச்சகட்டமாக, சுதேசிக் கப்பல் நிறுவனம் (சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி) என்ற பெயரில் ஒரு கூட்டு நிறுவனத்தை 1906 அக்டோபர் 16 ஆம் நாள் நிறுவினார். 1907 ஆம் ஆண்டில் காலியா, லாவோ என்ற பெயரில் இரண்டு கப்பல்கள் தூத்துக்குடிக்கும் கொழும்பிற்கும் இடையே பணிகளையும் சரக்குகளையும் சுமந்து செல்ல தொடங்கியன. சுதேசிய முயற்சிகளின் விளைவாக, அன்றைய சென்னை மாநிலத்தில் வெள்ளையர் எதிர்ப்புணர்ச்சி நிலவும் ஒரே இடமாகத் தூத்துக்குடி விளங்கியது.

கோரல் மில் தொழிலாளர் நிலை:

தூத்துக்குடியில் இருந்த கோரல் மில்லிலும் ரீச் ஆய் (அல்லது குறிப்பிட்ட நபர் பெயர்) குறிப்பிட்ட நிலைதான் நிலவியது. குறைந்த ஊதியத்தையளித்து, கடுமையாக வேலையை வாங்குவதில் இவ்வாலை நிர்வாகம் கைதேர்ந்ததாக இருந்தது. இதன் விளைவாக இதன் பங்குதாரர்களுக்கு 60% இலாபப்பங்கு கிடைத்தது. ஆனால் தொழிலாளர்களின் நிலை மிகவும் வருந்தத்தக்கதாய் இருந்தது. பத்து வயது, பன்னிரெண்டு வயதுச் சிறுவர்களும் ஆலையில் தொழிலாளர்களாகப் பணிபுரிந்தனர். வார விடுமுறையென்பது, தொழிலாளர்கள் அறியாத ஒன்றாக இருந்தது.

உணவருந்தச் செல்லப் போதிய இடைவெளி கிடையாது. ஊதியமும் மிகக் குறைவு. உடல்நலக் குறைவாலோ, குடும்ப வேலைகள் நிமித்தமாகவோ, விடுமுறையெடுப்பின் அதற்கு ஊதியம் மறுக்கப்படும். அத்துடன் சில நேரங்களில் விடுமுறை முடிந்து பணிக்குத் திரும்பிய தொழிலாளர்களுக்கு வேலை மறுக்கப்படும். இதனால் ஊதியமில்லாத விடுமுறையில் செல்வதற்கும் கூடத் தொழிலாளர்கள் அஞ்சினார்கள். காலை ஆறு மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை தொழிலாளர்கள் தொடர்ச்சியாக வேலை செய்தனர். ரேகை பார்த்து ஒட்டுதல் என்ற சொல்லால் வேலையின் தொடக்கமும், முடிவும் குறிப்பிடப்பட்டது. உள்ளங்கை ரேகையானது தெளிவாகத் தெரியும் நேரத்தில் வேலை யினைத் தொடங்கி அதனால் பார்க்க முடியாத அளவில் ஒளி மங்கும் நேரத்தில் வேலையை முடிக்க வேண்டும் என்பதே ரேகை பார்த்து ஒட்டுதல்' என்ற சொல்லின் பொருளாகும்.

தொழிலாளர்கள் செய்யும் சிறு தவறுகளுக்குக் கூடத் தண்டனையாகப் பிரம்படி வழங்கப்பட்டது. வெள்ளை அதிகாரிகள் ஆலையினுள் வரும்போது குறுக்கே கடந்து சென்றாலும் அடியும் உதையும் கிடைக்கும். தொழிலாளிகள் வேலை செய்யும் ஆலையின் தளம் தாரினால் (கீல் எண்ணெய்) உருவாக்கப் பட்டிருந்தது. நண்பகல் நேரத்தில் தார் இளகி நிற்கும். கோடை காலத்தில் சொல்லவே வேண்டாம். இத்தளத்தின் மீதிருந்தே காலையிலிருந்து மாலை வரை தொழிலாளர்கள் பணியாற்ற வேண்டியிருந்தது.

வேலை நிறுத்தத்திற்கான தயாரிப்பு:

கோரல் மில் தொழிலாளர்களின் அவல நிலையைக் கண்ணுற்ற வ.உ.சி அதனைப் போக்குவதற்கு முன் வந்தார். சுப்பிரமணிய சிவாவும், பத்மநாப அய்யங்கார் என்பவரும் இம்முயற்சியில் வ.உ.சி. க்கு உறுதுணையாக நின்றனர். வ.உ.சி. யும், சிவாவும் வேலை நிறுத்தம் செய்யும்படி தொழிலாளர்களைத் தூண்டினர். 1908 பிப்ரவரி 23 இல் சிவா தூத்துக்குடி நகரில் ஆற்றிய சொற்பொழிவு குறித்து ஆங்கில அரசின் இரகசியப் போலீஸ் அறிக்கை இவ்வாறு குறிப்பிடுகிறது.

‘ஆண்டுதோறும் இந்தியாவிலிருந்து, இங்கிலாந்துக்கும் செல்லும் பணத்தின் அளவை அவர் குறிப்பிட்டார் .

இதனைத் தவிர்க்க வேலை நிறுத்தம் செய்யும்படி கூலிகளுக்கு அறிவுரை கூறினார். ரூசியப் புரட்சியானது மக்களுக்கு நன்மை யளித்துள்ளது. புரட்சியானது உலகத்திற்கு எப்போதும் நல்லதையே புரியும் என்றும் அவர் குறிப்பிட்டார். வேலையாட்கள் மூன்று நாட்கள் வேலையை நிறுத்தினால் ஐரோப்பிய முதலாளிகள் மிக மோசமாக பாதிக்கப்படுவார்கள்’ என்றும் கூறினார் என்பது குறிப்பிடப்பட்டிருந்தது.

வேலை நிறுத்தம் தொடக்கம்:

கோரல் மில் தொழிலாளர்கள் 1908 பிப்ரவரி 27 இல் வ.உ.சி சிவா ஆகியோரின் தலைமையில் வேலை நிறுத்தத்தைத் தொடங்கினார். வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள்.

- ஊதிய உயர்வு
- வார விடுமுறை
- இதர வசதிகள்

ஆகியனவற்றைத் தங்கள் முக்கிய கோரிக்கைகளை முன் வைத்தனர்.

வேலை நிறுத்தம் தொடங்கியவுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் இருபது போலீஸ்காரர்களையும் இரண்டு அதிகாரிகளையும் திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடிக்கு அனுப்பி வைத்தனர். வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து பொதுக்கூட்டம் நடைபெறும் என்பதை அறிந்த தூத்துக்குடி டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கூட்டங்களைத் தடை செய்து 144 தடை உத்தரவு பிறப்பித்தார். சிவகாசியிலிருந்து மேலும்

30 போலீசாரும் வரவழைக்கப்பட்டனர். மேலும் போலீசார் வருவதற்கு முன்பாக கோரல் ஆலையின் மீது கற்கள் வீசப்பட்டதுடன் ஆலையின் தண்ணீர்ப் பம்புகள் பழுதாக்கப்பட்டன.

வேலை நிறுத்தத்தின் தொடர்ச்சி:

தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் கோரல் மில் நிர்வாகத்தினரிடம் எவ்வித மாறுதலையும் ஏற்படுத்தவில்லை. தொழிலாளர்கள் மனவுறுதியிழந்து விரைவில் வேலைக்கு திரும்பி விடுவதென்று நிர்வாகம் கருதியது. ஆங்கில அரசும் வேலைநிறுத்தத்தை முறியடிப்பதில் ஆலை நிர்வாகத்திற்கு உறுதுணையாக நின்றது. ஆனால் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டிருந்த தொழிலாளர்கள் மனவுறுதியுடன் நின்றனர்.

சுதேசமித்திரன், இந்து நாளேடுகளில் வெளியான செய்திகள் நிர்வாகத்தின் சூழ்ச்சிகளையும் தொழிலாளர்களின் மன உறுதியையும் நமக்கு புலப்படுத்துகின்றன.

வ.உ.சியும் வேலை நிறுத்தமும்:

இந்தியா முழுவதும் அன்னாரது கவனத்தையும் ஈர்த்த கோரல் மில் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை வெறும் ஊதிய உயர்வுப் போராட்டமாக மட்டும் வ.உ.சி கருதவில்லை. இந்திய விடுதலை இயக்கத்தில் ஒரு திருப்பு மையமாக அமைந்த சுதேசி இயக்கத்துடன் தொழிலாளி வர்க்கத்தை இணைக்கும் நோக்குடன் வ.உ.சி செயல்பட்டார். தூத்துக்குடியில் பொதுக்கூட்டம் நடத்தினார். இதன் விளைவாக போராட்ட உணர்வு தீவிரமானதுடன் பொதுமக்கள் ஆதரவுடன் எழுச்சியுரையாற்றினார்.

ஜார் தூதுவரின் அறிக்கை:

வேலை நிறுத்தம் செய்த ஆயிரம் தொழிலாளர்கள் நாள்தோறும் வந்தே மாதரம் முழக்கமிட்டுக் கொண்டு தூத்துக்குடி நகர் வீதிகளில் ஊர்வலமாக வந்தனர் என்று ருஷ்ய (அல்லது உருசிய) ஜார் மன்னின் இந்தியத் தூதுவராகப் பம்பாயில் பணியாற்றிய செக்கின் என்பவர் ஜாருக்கு அனுப்பிய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் இவ்வறிக்கையில் இது திறம்பட நடத்தப்படும் வேலை நிறுத்தமாகும். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு உணவு படைக்க வேலை நிறுத்தத்தை நடத்தும் தலைவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களின் எழுச்சி:

நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த விஞ்ச் என்பவன் வேலை நிறுத்தத்தை நிறுத்தும்படி வ.உ.சி.யை எச்சரித்தார். ஆனால் வ.உ.சி அதற்கு அஞ்சவில்லை. வ.உ.சி சுப்பிரமணிய சிவா ஆகியோரின் சொற்பொழிவுகளால் ஈர்க்கப்பட்ட தூத்துக்குடி வியாபாரிகள் ஆங்கிலேயர்களுக்கு உணவுப் பொருட்களை விற்க மறுத்தார்கள். இலங்கையிலிருந்து ஆங்கிலேயர்களுக்கு உணவுப் பொருட்கள்

வரவழைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. வெள்ளையர்களுக்கு வேலை செய்ய இந்திய வேலையாட்கள் மறுத்தனர். தெருக்களில் ஆங்கிலேயர்களைக் கண்டால் வந்தே மாதரம் என்று கூறும்படி மக்கள் கூட்டம் கட்டாயப்படுத்தியது.

வெற்றி பெற்ற வேலைநிறுத்தம்:

இறுதியில் வேலை நிறுத்தம் வெற்றி பெற்றது. மார்ச் மாதம் ஆறாம் நாளன்று ஆலையின் தலைமை எழுத்தாளரான சுப்பிரமணியபிள்ளை என்பவர் வ.உ.சியைக் சந்தித்து, தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள ஆலையின் மேலாளர் ஆயத்தமாக உள்ளதாகத் தெரிவித்தார். வ.உ.சி ஐம்பது தொழிலாளர்களுடன் சென்று ஆலையின் மேலாளரைச் சந்தித்தார். அன்று மாலை சுப்பிரமணியபிள்ளை மீண்டும் வ.உ.சியைச் சந்தித்து, ஊதியத்தை அதிகரிக்கவும் வேலை நேரத்தைக் குறைக்கவும், ஞாயிற்றுக்கிழமை விடுமுறை அளிக்கவும், ஆலை நிர்வாகம் ஒப்புக் கொண்டதாகத் தெரிவித்தார்.

வ.உ.சி. தமது சுய சரிதையில்,

‘அவரவர் சம்பளத் தரைப்பங் கதிகமா
அவரவர்க்கது முதல் அளிப்பதாகவும்
ஞாயிறும் மற்ற நாட்களில் வெளியே
போயிருந் தருந்தற்குப் போதிய நேரமும்
விடுதியாக விடுவதாகவும்
நடுவில் அவசரம் நண்ணுறின் லீவு
கூலியின்றிக் கொடுப்பதாகவும்’

தாம் சுப்பிரமணியபிள்ளையிடம் நிபந்தனை வைத்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

தூத்துக்குடியில் வெற்றி:

புரட்சிகரப் பயங்கரவாத இயக்கத்தைச் சார்ந்த அரவிந்தர் தமது வந்தே மாதரம் இதழில் தூத்துக்குடி வெற்றி என்ற தலைப்பில் ஒரு நீண்ட தலையங்கமே எழுதினார். வ.உ.சி நிகழ்த்திய வேலை நிறுத்தம் குறித்த ஒரு விமர்சன உரையாக அது அமைந்துள்ளது. எனவே அதனை முழுமையாக மேற்கோள் காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

ஓர் அமைதியான போராட்டம் வெற்றியடைய வேண்டுமெனில் ஒற்றுமை தளரா உழைப்பு முயற்சி தெள்ளத் தெளிவான செயல்திறன் ஆகியன அப்போராட்டத்தின் ஆதார சக்திகளாக அமைய வேண்டும். தூத்துக்குடி மில் தொழிலாளர் போராட்டத்தில் இவை அனைத்தும் இருந்ததால் போராட்டம் மாபெரும் வெற்றியில் முடிந்தது.

தொழிலாளர்கோரிக்கைகள்அனைத்தும்ஏற்கப்பட்டு,நிபந்தனையற்ற சரணாகதி என்ற அவமானத்திற்கு ஆங்கில முதலாளித்துவம் ஆளாயிற்று எனலாம்.

முடிவுரை:

கோரல் மில் தொழிலாளர்கள் நிகழ்த்திய வேலை நிறுத்தத்தின் வெற்றி மிகப்பெரிய சாதனையாகும். அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளான ஞாயிறு விடுமுறை, தேவைப்படும் பொழுது ஊதியமில்லா விடுமுறை என்பன இன்று நமக்கு வியப்பை அளிக்கலாம். ஆனால் அன்றையச் சூழலில் இவை மிகப் பெரிய சலுகையாகவே இருந்தன. ஒன்பது நாட்கள் தொடர்ச்சியாக வேலை நிறுத்தம் செய்ததன் வாயிலாக 50 சதவீத ஊதிய உயர்வை அவர்கள் பெற்றதும் ஒரு பெரும் சாதனைதான்.

துணை நூற் பட்டியல்:

1. சிவசுப்பிரமணியன் ஆ வ.உ.சியும் முதல் தொழிலாளர் வேலை நிமித்தமும், மக்கள் வெளியீடு, முதற்பதிப்பு – 1986, சென்னை – 600009.
2. சிவசுப்பிரமணியன். ஆ வ.உ.சி வாழ்வும் பணியும் சுதர்சன் புக்ஸ் முதற்பதிப்பு 2001, மக்கள் வெளியீடு, சென்னை – 600 002.
3. வ.உ.சிதம்பரனார் சுயசரிதை தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மூன்றாம் பதிப்பு 1990, சென்னை – 600 006.
4. வேங்கடசாமி . இரா திருநெல்வேலி எழுச்சியும் பாரதியும், காலச்சுவடு பதிப்பகம், முதற்பதிப்பு 1908, சென்னை – 600 021.
5. பேரா. அழகேசன் சு கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி சுயசரிதை, முதற்பதிப்பு 2017 காவ்யா பதிப்பகம், சென்னை – 600 024.

75

வ.உ.சிதம்பரனாரின் சமுதாயப் பணி

சி. சக்திவேல்
உதவிப் பேராசிரியர், விவேகானந்தா கலை & அறிவியல் கல்லூரி, சங்ககரி

முன்னுரை:

இந்திய சுதந்திர போராட்ட வீரரும் தமிழ் தேசியவாதியுமான வ.உ.சி. அவர்களின் வாழ்க்கை மற்றும் பணிகளைப் பற்றி அறிந்து கொள்வது மிகவும் முக்கியமானது. அவரது வாழ்க்கை மற்றும் பணிகள் தமிழ் மொழி மற்றும் தமிழ் கலாச்சாரத்தின் மீதான அவரது அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது. இக்கட்டுரையில் வ.உ.சி. அவர்களின் வாழ்க்கை, வரலாறு, சமுதாய பணிகள், சுதந்திர போராட்டத்தில் அவரது பங்கு ஆகியவற்றை விரிவாக ஆராயப்படுகிறது.

தொடங்கப்பட்ட தேசிய நிறுவனங்கள்:

வ.உ.சி. தூத்துக்குடியிலும் திருநெல்வேலியிலும் மக்கள் செல்வாக்கு மிகுந்த தலைவராக விளங்கினார். அவர் ஆளுமை மிக்க மனிதர். அவர் ‘சுதேசி பிரச்சார சபை’ ‘தர்ம சங்க நெசவு சாலை’, ‘தூத்துக்குடி கைத்தொழில் சங்கம்’, ‘சுதேசிய பண்டக சாலை’, ‘வேளாண் சங்கம்’ போன்றவற்றை ஏற்படுத்தினார்.

கப்பல் நிறுவனம் சுதேசிய நாவாய்ச் சங்கம்:

ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வணிகம் செய்யவே வந்தனர். ஆனால், இந்திய ஆட்சியைக் கைப்பற்றி இந்திய நாட்டின் செல்வங்களைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தனர். வ.உ.சி.யை இது கடுமையாகப் பாதித்தது. அவர் தனது எதிர்ப்பைத் தெரிவிக்க ஆங்கிலேயர்களின் வணிகத்தையே முதலில் எதிர்த்தார். ‘பிரிட்டிசு இந்திய சுடீம் நேவிகேசன் கம்பெனி’, இந்தியா, இலங்கை இடையே கப்பல்களை இயக்கிக்கொண்டு இருந்தது. அது ஆங்கிலேயர்களின் வணிகத்துக்கே முக்கியத்துவம் கொடுத்தது. ஆதலால் வ.உ.சி. இந்தியர்களுக்காக ஒரு கப்பல் நிறுவனம் தொடங்கினார்.

வ.உ.சி. 1906-ஆம் ஆண்டு அக்டோபர் 16-ஆம் நாள் ‘சுதேசி நாவாய்ச் சங்கம்’ என்ற கப்பல் நிறுவனத்தைப் பதிவு செய்தார். (அதன் தலைவர் மதுரை தமிழ்ச்சங்கத் தலைவர் வள்ளல் பாண்டித்துரைதேவர்; சட்ட ஆலோசகர் சேலம் சி.விஜயராகவாச்சாரியார்). நிறுவனத்தின் மூலதனம் ரூ.1000000. ரூ.25 மதிப்புள்ள 40,000 பங்குகள் கொண்டது. அந்நியர்கள் அனைவரும் இதில் பங்குதாரர்கள் ஆகலாம். 4 வக்கீல்களும் 13 வங்கியரும் இருந்தனர். கப்பல் நிறுவனத்தைப் பதிவு செய்தவுடன் புதிய பங்குதாரர்களைச் சேர்க்கும் முயற்சியில் வ.உ.சி. இறங்கினார். ஆனால் நிறுவனத்திற்குச் சொந்தமாகக் கப்பல் இல்லை. ‘சாலேன் சுடீமர்சு

கம்பெனி'யிடமிருந்து கப்பல்களை வாடகைக்கு எடுக்க வேண்டியதாக இருந்தது. 'பிரிட்டிசு இந்திய சுடீம் நேவிகேசன் கம்பெனி' இந்தப் புதிய போட்டியை விரும்பாததால் அது 'சாலேன் சுடீமர்சு கம்பெனி' யை அச்சுறுத்தியது. அதனால் இது கப்பல்களை வாடகைக்குக் கொடுக்கும் ஒப்பந்தத்தை ரத்து செய்தது. இந்திய கப்பல் நிறுவனத்திற்கென்று சொந்தமாகக் கப்பல் இல்லாததால் இந்திய வணிகர்கள் திகைத்துப் போயினர். ஆனால் வ.உ.சி. அஞ்சவில்லை. உடனடியாகக் கொழும்பு சென்று ஒரு கப்பல் வாடகைக்கு எடுத்து வந்து கப்பல் போக்குவரத்து தொடர்ந்து நடக்கும்படி செய்தார்.

சொந்தக் கப்பல்கள் வாங்க முடிவு செய்தார். தூத்துக்குடி வணிகர்கள் உதவி செய்தனர். புதிய பங்குதாரர்களைச் சேர்க்க மும்பை, கொல்கத்தா ஆகிய இடங்களுக்குச் சென்றார். அங்குள்ள வணிகர்கள் அவரது பேச்சாற்றலால் கவரப்பட்டு கப்பல் நிறுவனத்தின் பங்குதாரர்கள் ஆனார்கள். வ.உ.சி. வட இந்தியாவைவிட்டுக் கிளம்பும் போது 'திரும்பினால் கப்பலுடன் திரும்புவேன் இல்லையெனில் கடலில் விழுந்து மாண்டுபோவேன்' என்று சூளுரைத்துச் சென்றார். வ.உ.சி. தனது சபதத்தை நிறைவேற்றினார். 'எசு.எசு. காலியோ' என்ற கப்பலுடன் திரும்பினார். இந்தியர்கள் அனைவரும் பெருமகிழ்ச்சி அடைந்தனர். கப்பல் 42 முதல் வகுப்பு இருக்கைகள் 24 இரண்டாம் வகுப்பு இருக்கைகள் மற்றும் 1300 சாதாரண இருக்கைகள் இவற்றைக் கொண்டிருந்தது. மேலும் 4000 சாக்கு மூட்டைகளை ஏற்றிச் செல்ல இயலும். திரு. எசு வேதமூர்த்தி பிரான்சு தேசம் சென்று 'எசு. எசு. லாவோ' என்ற கப்பலை வாங்கி வந்தார். நீராவி இயந்திரம் பொருத்தப்பட்ட இரு படகுகளும் வாங்கினார்.

இந்திய செய்தித்தாள்கள் அனைத்தும் இது குறித்து கட்டுரைகள் வெளியிட்டு வ.உ.சி. அவர்களைப் பாராட்டின. கப்பல் நிறுவனம் மெதுவாக வளர்ந்தது. மக்கள் சுதேசிக் கப்பலிலேயே பயணம் செய்தனர். பிரிட்டிசு கப்பல் நிறுவனம் இலவசமாக அழைத்துச் செல்வதாகக் கூறியது. பிரிட்டிசு கப்பல் நிறுவனத்தின் தந்திரம் குறித்து வ.உ.சி. மக்களிடையே விளக்கினார். சுதேசி கப்பல் நிறுவனத்தை அழித்த பிறகு அவர்கள் தங்கள் கட்டணத்தை விருப்பம் போல் ஏற்றிவிடுவார்கள். அப்போது இந்தியர்களால் ஒன்றும் செய்ய இயலாமல் போகும். அதனால் இந்தியர்கள் இலவசப் பயணத்தை மறுத்துவிட்டனர். உடனே வ.உ.சி.க்குக் கையூட்டு கொடுக்க முயற்சி செய்தனர். சுதேசி கப்பல் நிறுவனத்தை விட்டு விலகினால் ரூ.1,00,000 கொடுப்பதாகக் கூறினர். வ.உ.சி. மறுத்துவிட்டார்.

அரசியல் பணி - தூத்துக்குடி நூற்பாலை நிறுத்தம்:

தூத்துக்குடியில் கோரல் நூற்பாலை என்று ஒரு தொழிற்சாலை இருந்தது. அங்கே தொழிலாளர்களுக்குக் கூலி மிகக் குறைவு. ஆனால், அவர்கள் நாள் முழுவதும் இடைவேளை இல்லாமல் பன்னிரண்டு மணி நேரத்திற்கு அதிகமாகக் கடினமாக உழைக்க வேண்டும். அவர்களுக்கு

விடுமுறை கிடையாது. தொழிலாளர்கள் ஏதேனும் தவறு செய்தால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

தொழிலாளர்களின் அவல நிலையைப் பார்த்து வ.உ.சி. மிகவும் வருந்தினார். நூற்பாலை தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யும்படி தூண்டினார். வ.உ.சி.யும் சுப்ரமணிய சிவாவும் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு அளித்தனர். 1908-ஆம் ஆண்டு பிப்ரவரி 23-ஆம் நாள் வ.உ.சி. தூத்துக்குடியில் சொற்பொழிவு ஆற்றினார். 1908-ஆம் ஆண்டு பிப்ரவரி 27-ஆம் நாள் நூற்பாலை தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். வ.உ.சி.யும் சுப்ரமணிய சிவாவும் வேலை நிறுத்தத்திற்குத் தலைமை தாங்கினர். அவர்களது கோரிக்கைகள் பின்வருமாறு: 1. கூலி உயர்வு 2. வாரத்தில் ஒரு நாள் விடுமுறை 3. மற்ற விடுமுறை நாட்கள்

மாவட்ட ஆட்சியர் திருநெல்வேலியில் இருந்து இரண்டு அதிகாரி களையும் சிவகாசியில் இருந்து 30 காவலர்களையும் தூத்துக்குடிக்கு அனுப்பி வைத்தார். குற்றவியல் நடுவர் பொதுக்கூட்டங்களைத் தடை செய்தார். மறுநாள் மாவட்ட ஆட்சியர் திரு.விஞ்ச் தூத்துக்குடிக்கு வந்தார். தன்னைச் சந்திக்கும்படி வ.உ.சி.க்குச் சொல்லி அனுப்பினார். அந்தச் சந்திப்புக்குப் பிறகு வ.உ.சி. தொழிலாளர்களிடையே பேசினார். இந்தப் பொதுக்கூட்டம் ஒரு தனியாரின் இடத்தில் நடைபெற்றது. நூற்பாலை நிருவாகத்தின் கொடூரமான நடவடிக்கைகளே இந்த வேலை நிறுத்தத்திற்குக் காரணம் என்று மாவட்ட ஆட்சியரிடம் தான் கூறியதாகத் தொழிலாளர்களிடம் கூறினார். வ.உ.சி. தொழிலாளர்களுக்குப் பொது மக்களின் துணையுடனும் தனது சொந்தச் சொத்துக்களின் மூலமாகவும் உதவினார். இதன் காரணமாக அவர் தனது சொந்தச் சொத்தில் பெரும் பகுதியை இழந்தார்.

நூற்பாலை நிர்வாகம், தொழிலாளர்கள் நம்பிக்கை இழந்து விரைவில் வேலைக்குத் திரும்பிவிடுவார்கள் என்று நினைத்தது. ஆங்கில அரசு நூற்பாலை நிர்வாகத்திற்கு உறுதுணையாக இருந்தது. ஆனால் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்தது. நூற்பாலை நிர்வாகத்தின் பாடு திண்டாட்டமாகிவிட்டது. சிலரை அச்சுறுத்தியது. சிலரை வேலையைவிட்டு நீக்கியது. சிலருக்கு ஆசை காட்டியது. எல்லாம் வீணானது. வேலை நிறுத்தம் இந்திய நாட்டில் உள்ள அனைவரின் கவனத்தை ஈர்த்தது. வ.உ.சி. பொதுமக்களிடையே தினமும் தொழிலாளர்களின் நிலை குறித்துப் பேசினார். அதனால் பொதுமக்கள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவளித்தனர். வேலை நிறுத்தம் மேலும் மேலும் தீவிரமடைந்தது. மாவட்ட துணை ஆட்சியர் வ.உ.சி. யை அச்சுறுத்தினார். ஆனால் வ.உ.சி. அந்த அச்சுறுத்தலைப் பொருட்படுத்தாமல் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்தினார்.

நிர்வாகம் அவர்கள் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளச் சம்மதித்தது. 1908-ஆம் ஆண்டு மார்ச் 6-ஆம் நாள் திரு. சுப்ரமண்ய பிள்ளை, நூற்பாலை நிர்வாக அலுவலர், வ.உ.சி.யைச் சந்தித்தார். வ.உ.சி.

தொழிலாளர்கள் 50 பேருடன் நூற்பாலை நிர்வாக இயக்குநரைச் சந்தித்தார். அவர்கள் கூலியை உயர்த்தவும் வேலை நேரத்தைக் குறைக்கவும் ஞாயிற்றுக்கிழமையன்று வார விடுமுறை அளிக்கவும் சம்மதித்தனர். 9 நாள் வேலை நிறுத்தத்திற்குப் பிறகு தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர். வேலை நிறுத்தம் பெரும் வெற்றி பெற்றது. அது தொழிற்சங்கங்கள் இல்லாத ஒரு காலம். இந்தியாவில் முதல் தொழிற்சங்கமே 1920-ஆம் ஆண்டுதான் தொடங்கப்பட்டது. சோவியத் புரட்சி 1917-ஆம் ஆண்டு நடைபெற்றது. வ.உ.சி. 1908-ஆம் ஆண்டே தொழிற்சங்கங்கள் இல்லாமல் தொழிலாளர்களை வேலை நிறுத்தத்தில் பங்கு பெறச் செய்து அவர்களை வழி நடத்தி வேலை நிறுத்தத்தைப் பெரும் வெற்றி பெறச் செய்தார். வ.உ.சி. எல்லோருக்கும் முன்னோடியாக வழிகாட்டியாகத் திகழ்ந்தவர். இந்த வேலை நிறுத்தத்தின் பயனாக மற்ற ஆங்கில நிறுவனங்களின் தொழிலாளர்களும் பயன் பெற்றனர். அவர்கள் கூலியை அதிகரித்ததுடன் கொடூரமாக நடத்துவதையும் நிறுத்தினர். சிரீ அரவிந்தர் இந்த வேலை நிறுத்தம் சிறப்பான முறையில் நடத்தப்பட்டது என்று பாராட்டி வந்தே மாதரம் என்ற இதழில் எழுதினார்.

வ.உ.சி. வெளிநாட்டுப் பொருட்களைப் புறக்கணித்தார். மக்களும் புறக்கணித்தார்கள். அந்தக் காலகட்டத்தில் வின்ச் தான் மாவட்ட ஆட்சியர். ஆனால் மக்கள் வ.உ.சி. யின் சொற்களைக் கட்டளையாக ஏற்றனர். மக்கள் வ.உ.சி.யை அவ்வளவு மதித்தனர். அவருக்குப் பின்னால் தொழிலாளர்கள் அனைவரும் இருந்தனர். சுதந்திரப் போராட்ட உணர்ச்சி மக்களிடையே கொழுந்துவிட்டு எரிந்தது. வ.உ.சி. சொல்லும் எதையும் செய்ய மக்கள் தயாராக இருந்தார்கள். வ.உ.சி. காலத்திற்கு முன்பு படித்தவர்கள் மட்டுமே சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

வங்கத்தின் சுதந்திரப் போராட்டத் தலைவரான பிபின் சந்திர பால் 1908-ஆம் ஆண்டு மார்ச் 9-ஆம் நாள் விடுதலையாகவிருந்தார். வ.உ.சி. அதை ஒரு விழாவாகக் கொண்டாட எண்ணினார். அந்த விழா நடந்தால் வ.உ.சி. மக்களிடையே பேசுவார். அதை ஆங்கில அரசு விரும்பவில்லை. அதனால் வ.உ.சி.யைக் கைது செய்ய முடிவு செய்தனர். ஆனால் அவரைத் தூத்துக்குடியில் கைது செய்தால் மக்களிடையே கொந்தளிப்பு ஏற்படும். அதனால் வ.உ.சி.யைத் திருநெல்வேலி வந்து தன்னைச் சந்திக்கும்படி மாவட்ட ஆட்சியர் ஓர் ஆணை அனுப்பினார். வ.உ.சி. அந்த ஆணையை ஏற்றுத் திருநெல்வேலி செல்லத் தயாரானார். அவர் கைது செய்யப்படுவார் என்று அனைவருக்கும் தெரியும். அதனால் எல்லோரும் அவரைச் செல்ல வேண்டாம் என்று தடுத்தனர். ஆனால் வ.உ.சி. அனைவரையும் சமாதானப்படுத்தி திருநெல்வேலிக்கு அவரது உயிர் நண்பர் சுப்ரமண்ய சிவாவுடன் சென்றார்.

இருவரும் மாவட்ட ஆட்சியரைச் சந்திக்கச் சென்ற போது இருவரையும் திருநெல்வேலியைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என்றும் பொதுக்கூட்டங்களில் பேசக்கூடாது என்றும் கூறினார். வ.உ.சி.

அவரது நிபந்தனைகளை ஏற்க மறுத்துவிட்டார். அதனால் வ.உ.சி.யும் சிவாவும் 1908-ஆம் ஆண்டு மார்ச் 12-ஆம் நாள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டதன் விளைவுகள்:

வ.உ.சி. கைதுசெய்யப்பட்டதைஅறிந்தவுடன்மக்கள்கொந்தளித்தனர். திருநெல்வேலியில் கடைகள் அடைக்கப்பட்டன. போக்குவரத்து நிறுத்தப்பட்டது. பள்ளிகளும் கல்லூரிகளும் சேதப்படுத்தப்பட்டன. மண்ணெண்ணெய்க் கிடங்கு தீவைக்கப்பட்டது. இரண்டு நாட்கள் இந்த நிலை நீடித்தது. அஞ்சல் நிலையமும் தீவைக்கப்பட்டது. காவல் நிலையமும் நகராட்சி அலுவலகமும் தாக்கப்பட்டது. தூத்துக்குடியில் வ.உ.சி. கைது செய்யப்பட்டதை அறிந்தவுடன் மக்கள் இரவு முழுவதும் தூங்கவில்லை. கடைகள் மூடப்பட்டன. கோரல் நூற்பாலை மற்றும் 'பெசுட் அண்ட் கம்பெனி' தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். நகராட்சி ஊழியர்கள், முடி திருத்துபவர்கள், துணி வெளுப்பவர்கள், குதிரை வண்டி ஓட்டுபவர்கள் போன்றோரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதுவே இந்தியாவில் முதல் அரசியல் வேலை நிறுத்தம்.1908-ஆம் ஆண்டு மார்ச் 14-ஆம் நாள் முதல் மார்ச் 19-ஆம் நாள் வரை நடைபெற்றது. பொதுமக்களும் அதில் கலந்து கொண்டனர். பொதுக் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடைபெற்றன. காவல்துறையினர் துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் பலியானார்கள். இந்த நிகழ்வை திருநெல்வேலி எழுச்சி என்று கூறுகிறார்கள்.

நீதிமன்றத் தீர்ப்பும் சிறைத் தண்டனையும்:

காவல் துறையினர் வ.உ.சி. க்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

- *வ.உ.சி. ஆங்கில அரசுக்கு எதிராக சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். (பிரிவு 123-அ)*
- *வ.உ.சி. சுப்ரமண்ய சிவாவிற்கு அடைக்கலம் கொடுத்தார்.(பிரிவு 153-அ)*

வழக்கு நேர்மையாக நடைபெறாததால் வ.உ.சி. அதில் பங்கேற்க மறுத்துவிட்டார். இரண்டு மாதங்கள் நடந்த இந்த வழக்கு விவரங்களை இந்தியா முழுவதும் மக்கள் உன்னிப்பாகக் கவனித்து வந்தனர்.

நீதிபதி திரு. பின்கே தீர்ப்பு வழங்கினார். தீர்ப்பு விவரம் பின்வருமாறு:

- *ஆங்கில அரசுக்கு எதிராகச் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடும்படி மக்களைத் தூண்டிவிட்டதற்காக 20 ஆண்டு தீவாந்திரத் தண்டனை.*
- *சிவாவுக்கு ஆதரவு அளித்ததற்காக மற்றுமொரு 20 ஆண்டு தீவாந்திரத் தண்டனை.*
- *சிவாவுக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனை.*

40 ஆண்டு தீவாந்திரத் தண்டனை! யாருக்கும் கொடுக்கப்படாத கொடுமையான தண்டனை. ஆங்கில அரசுக்கு வ.உ.சி.யிடத்தில் அளவு கடந்த பயம். இந்தக் கொடுமையான தண்டனைக்கு அந்த பயமே

காரணம். அவரைச் சிறையில் அடைத்தால்தான் அவர்களால் தொடர்ந்து இந்தியாவில் ஆட்சி செய்ய முடியும். வ.உ.சி.க்கு அப்பொழுது 36 வயது தான்.

இந்தக் கொடிய தீர்ப்பைக் கேட்டு இந்திய மக்கள் அனைவரும் அதிர்ச்சி அடைந்தனர். வங்காளி, ‘அமிர்த பசார்’, ‘சுதேசமித்திரன்’ ‘இந்தியா’, ‘சுவராச்சியா’ மற்றும் பல செய்தித்தாள்கள் இத்தீர்ப்பைக் கண்டித்தன. ஆங்கில இதழான ‘சுடேட்சு மேன்’ இத்தீர்ப்பு நியாயமற்றது என்றும் வ.உ.சி.யின் தியாகம் போற்றத்தக்கது என்றும் குறிப்பிட்டது. லார்டு மார்லி, இந்தியாவுக்கான ஆங்கில அமைச்சர், இக்கொடூரமான தண்டனையை ஏற்றுக் கொள்ள இயலாது என லார்டு மன்றோவுக்கு எழுதினார். அந்தத் தீர்ப்பினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. மேல் முறையீடு செய்ததில் 10 ஆண்டு தீவாந்திரத் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. அந்தமான் அனுப்ப இயலாது என்பதால் கோவைச் சிறையில் அடைக்கப்பட்டார் . அவரது நண்பர்கள் லண்டனில் உள்ள மன்னர் அவையில் (பிரிவியூ கௌன்சிலில்) முறையீடு செய்ததில் 6 ஆண்டு கடுங்காவல் தண்டனையாகக் குறைந்தது.

சிறைத்தண்டனை:

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாருக்குத் சிறைத்தண்டனைத் தரக் காரணமாக இருந்ததால் ஆட்சியர் ஆசு என்பாரை வாஞ்சி சுட்டுக் கொன்றதாகத் குறிப்பிடப்பட்டுள்ளது. வ.உ.சி. முதலில் கோயம்புத்தூர் சிறையிலும் பின்னர் கண்ணனூர் சிறையிலும் அடைக்கப்பட்டார். சிறையில் கல்லும் மண்ணும் இருக்கும் கூழைக் குடிக்க வேண்டியிருந்தது. சிறை ஆடைகள் முரடானவை. தலையை மொட்டையடித்து கை, கால்களில் விலங்கிட்டிருப்பர்.

செக்கிழுத்த செம்மல்:

சிறையில் வ.உ.சி. கடுமையான வேலைகளைச் செய்தார். சணல் நூற்றார். அப்பொழுது அவரது உள்ளங்கைகளில் இருந்து ரத்தம் கசிந்தது. கல் உடைத்தார். மாடுகள் இழுக்கும் செக்கினை இழுத்தார். அந்தப் புகழ் பெற்ற வழக்கறிஞர் ஒரு மாடு போல உழைத்தார். அவரது எடை மிகவும் குறைந்தது. மருத்துவர் சிறையதிகாரியை எச்சரித்தார். உடனே அரிசி உணவு வழங்கப்பட்டது. பின்னர் சென்னை உயர் நீதிமன்றம் அவர் சொந்த உணவை உண்ணலாம் என்று கூறியது. வ.உ.சி. இழுத்த செக்கு சென்னை காந்தி மண்டபத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

சிறை இயக்குநர் ஒரு நாள் வ.உ.சி. யிடம் சிறை அலுவலராகப் பணியேற்றுக் கொண்டால் தண்டனைக் காலம் குறையும் என்றும் இன்னும் பல நன்மைகள் கிட்டும் என்றும் கூறினார். வ.உ.சி. அப்பதவியை மறுத்துவிட்டார். வ.உ.சி. கேரளாவில் உள்ள கண்ணனூர் சிறைக்கு மாற்றப்பட்டார். அங்கே சிறைக்கைதிகளுக்கு ஒரு வித்தியாசமான தண்டனை கொடுக்கப்பட்டது. அவர்கள் கம்பளியால் போர்த்தப்பட்டு அடிக்கப்பட்டார்கள். வ.உ.சி.யை அச்சுறுத்த சிறை

அதிகாரி ஒரு கொடூரமான சிறைக்கைதியை வ.உ.சி.யின் அறைக்கு வெளியே தூங்கும்படி செய்தார். வழக்கமாக அவன்தான் எல்லோரையும் அடிப்பான். ஆனால் ஆச்சரியப்படத்தக்க வகையில் அவன் வ.உ.சி.யின் சீடனாகிவிட்டான்.

வ.உ.சி. சிறையிலிருந்த போது சுதேசி கப்பல் நிறுவனம் மூழ்கிப் போனது. அவரில்லாமல் மற்றவர்களால் நிறுவனத்தை நடத்த இயலவில்லை. அவர்கள் கப்பலை விற்றுவிட்டனர். அதுவும் 'எசு. எசு.காலியோ' என்ற கப்பலை ஆங்கில கப்பல் நிறுவனத்திற்கே விற்றுவிட்டார்கள். அது வ.உ.சி.யை மிகவும் பாதித்தது. அந்தக் கப்பலை வாங்க வ.உ.சி.என்ன பாடுபட்டார்?

1912-ஆம் ஆண்டு டிசம்பர் 24-ஆம் நாள் வ.உ.சி. விடுதலை அடைந்தார். அப்பொழுது அரசியல் சூழ்நிலை முற்றிலும் மாறி இருந்தது. சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை இயக்கம் போன்றவற்றை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவரது கொள்கையைத் தொடர்ந்தால் அது சுதந்திரப் போராட்டத்திற்கு இடையூறாகிவிடும். ஒரு தனிக்கட்சி ஆரம்பிக்கும் அளவு செல்வாக்கும் புகழும் இருந்த போதும் அவர் அப்படிச் செய்யவில்லை. அதன் மூலம் அவரது நாட்டுப்பற்றையும் மேன்மையான குணத்தையும் அறிந்து கொள்ளலாம்

முடிவுரை:

வ.உ.சி. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் செயலால், சிந்தனையை நிரூபித்த தலைவர். பொருளாதார விடுதலையின் முன்னோடி என்பதில் ஐயமில்லை. அவரது வாழ்க்கை இன்றைய தலைமுறைக்கு தன்னம்பிக்கை, தியாகம், தேசப்பற்று என்ற மூன்று உயரிய பண்புகளைக் கற்றுத்தருகிறது.

துணை நின்றவை:

1. ச. முத்தமிழ் செல்வன், வ.உ.சிதம்பரனார் வாழ்க்கையும் பணிகளும், பாரதி பதிப்பகம், சென்னை, 1997
2. புலவர் குழந்தை, சுதந்திரப் போராட்டத்தில் தமிழர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1994.
3. B. Natarajan, V.O. Chidambaram Pillai The Titan of Freedom, Chennai.,2016
4. R. Sundararajan, History of Indian National Movement, Orient Longman. 1998
5. ந. சுப்பிரமணியன், தமிழக சுதந்திரப் போராட்ட வரலாறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2012.

76

வ.உ.சி.யின் அரசியல் பங்களிப்பு

முனைவர் மு. பவானி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரி, நாகம்பட்டி.

ஆய்வுச்சுருக்கம்:

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் அரசியல் செயல் பாடுகளோடு மட்டுமல்லாது, சமூக சீர்திருத்தம், தொழிலாளர் உரிமை, மொழி உணர்வு, தேசிய பொருளாதார சிந்தனை ஆகிய பல தளங்களில் ஆழமான தாக்கத்தினை ஏற்படுத்தியவர் அவர். அரசியல் போராட்டங்களால் பல துன்பங்களை அனுபவித்த போதும் தன் கொள்கைகளில் உறுதியுடன் நின்ற வ.உ.சி தமிழ்ச் சமூகத் திற்கு தன்னம்பிக்கை, சுயமரியாதை, தேசபக்தி ஆகியவற்றை விழுமியங் களாக விதைத்தார். இவ்வாய்வுக்கட்டுரையில் வ.உ.சி.யின் அரசியல் வாழ்வினைப் பற்றி மதிப்பீடு செய்யப்படுகிறது.

திறவுச்சொற்கள்: சூரத் மாநாடு, அஞ்சாமைச் சிறைவாசகம், பெண் விடுதலை.

இந்தியத் தேசியம்:

இந்தியத் தேசியம் என்பது பன்முகத் தன்மை கொண்டது. மதம், மொழி, பண்பாடு ஆகியன இந்தியத் தேசியத்தை நிர்ணயிக்கவில்லை. இதன் புவியியல் அமைப்புதான் இந்தியத் தேசியத்தை உருவாக்கியுள்ளது. ஆயினும் தேசியவாதிகள் பலர் இதை வசதியாக மறந்துவிட்டு இந்தியத் தேசியம் ஒற்றைத்தன்மை உடையதென உறுதிப்படக் கூறத் தொடங்கினர். ஆனால் வ.உ.சி தமிழ்த் தேசியத்தில் காலூன்றிக் கொண்டுதான் இந்தியத் தேசியத்தைப் பார்த்தார். தீவிரவாதத் தேசியம் பேசிய திலகர் அரவிந்தர் ஆகியோர் தங்களுடைய இறுதிக் காலத்தில் ஆன்மிகத்தில் அடைக்கலம் புகுந்தனர் இந்திய விடுதலை இயக்கத் தலைவர்களின் தேசிய அடையாளமாக பகவத்கீதை இடம் பெற்றது. திலகர், காந்தி, வினோபாவே என ஒவ்வொருவரும் உரை எழுதினார்கள். ஆனால் வ.உ.சி. தமிழனின் அடையாளமாக திருக்குறளுக்கு உரை எழுதினார். இறை நம்பிக்கையும் சைவ சமய சித்தாந்தங்களில் நல்ல புலமையும் கொண்டிருந்த வ.உ.சி. தனது அரசியல் வாழ்வில் அதைக் கலக்கவில்லை.

தலைமைப் பொறுப்பு

1927 ஆம் ஆண்டில் சேலத்தில் நடந்த சென்னை மாகாண அரசியல் மாநாட்டிற்கு வ.உ.சி. தலைமை வகித்துள்ளார். தமது தலைமை உரையை ஒரு குறுநூலாக அச்சிட்டு வெளியிட்டுள்ளார். இந்நூலில் இடம் பெற்றுள்ள செய்திகள் வ.உ.சியின் சமூக சீர்திருத்த உணர்வை

வெளிப்படுத்துகின்றன. 1907 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சூரத்தில் நடந்த இந்தியத் தேசியக் காங்கிரஸ் மாநாட்டிற்கு பாரதியுடன் இணைந்து பேராளர்களை அழைத்துச் சென்றவர். வ.உ.சி அம்மாநாட்டில் திலகருக்கு ஆதரவாகச் செயல்பட்டார். காங்கிரஸ் உருவாக்கிய சுதேசிய இயக்கத்தை முன் நின்று நடத்தியவர்.

அதிகாரத்திற்குத் துணை நிற்காமை:

சிறையில் கான்விக்ட்டா வார்டராகப் பதவி அளிக்க முன்வந்தும் வ.உ.சி அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இக்கட்டான சிறை வாழ்வில் அப்பதவியின் வாயிலாகப் பெறும் அற்பச் சலுகையை வ.உ.சி ஏற்றுக்கொள்ளவில்லை.எச்சில்பிழைப்புக்காய்இத்தகையஈனச்செயலை மேற்கொள்ள அவர் மறுத்துவிட்டார். இதுபோல் சிறையதிகாரிகளிடமும் கூட முடிந்த அளவு எதிர்த்து நின்றதால்தான் அவருடைய தண்டனைக் கழிவில் 37 நாள்களை அவர் இழக்க நேரிட்டது. ஏனெனில் சிறைக் கைதிகளின் உரிமைகளை நசுக்குவதில் சிறையதிகாரிகளுக்கு உதவுவதற்காகவே அப்பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மனித நேயம்:

பாளைச் சிறையில் கைதிகளை அடிக்க வேண்டாமென்று கான்விக்ட் வார்டர்களைத் தடுத்தது, கண்ணனூர்ச் சிறையில் கடுங்குற்ற வாளிகளையும் வெறுத்தொதுக்காமல் அவர்களிடம் அன்பாகப் பழகிய துடன் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி நூல் இயற்றியது ஆகியவை அவரது மனிதநேய உணர்வுக்குச் சான்றாக அமைகின்றன. மேலும் வெறும் இரக்க உணர்வு என்ற நிலையில் மட்டும் அவரது மனிதநேயம் நின்றுவிடவில்லை. கண்ணனூர்ச் சிறையின் தனியறையில் இருந்த கைதி ஒருவனின் நலனுக்காக அவர் தமது தண்டனைக் கழிவில் மூன்று நாள்களை இழந்தது நாம் அறிந்ததே ஆகும். விடுதலையான பின்னரும் 1920 இல் சிறை விசாரணைக் குழுவிடம் சிறைக் கொடுமைகள் குறித்துச் சாட்சியமளித்துள்ளார்.

அஞ்சாமை:

வ.உ.சியைச் சிறையில் சந்தித்தமை குறித்து பாரதி எழுதியுள்ள குறிப்பும் கோவைச் சிறையில் நிகழ்ந்த காலத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளிகளின் சார்பில் சிறை நிர்வாகத்தை எதிர்த்தும் சாட்சி யமளித்ததும் ஜெயிலர் கண்காணிப்பாளர் குறித்துச் சிறை இன்ஸ் பெக்டர் ஜெனரலிடம் புகார் அளித்ததும் அவரது அஞ்சாமைக்குச் சான்று பகர்கின்றன. ஆஷ்துரை சுட்டுக் கொல்லப்பட்ட செய்தியைக் கண்ணனூர்ச் சிறையில் இருந்த வ.உ.சியிடம் சிறையின் துணை மருத்துவர் கூறியபோது வ.உ.சி கூறிய பதிலுரையைத் தமது சுய சரிதையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

சிறையின் ஜூனியர் சப்அஸிஸ் டெண்டு

சர்ஜன் நின்று சௌக்கியம் உசாவி

‘கலெக்டர் ஆஷுவைத் தெரியுமா?’ என்றான்.
‘நன்றாகத் தெரியும்’ என்றேன். ‘எப்படி?’
என்றான். ‘யான் இவண் ஏகியதற்கும்
தூத்துக் குடியில் தோன்றிய ‘சுதேசிக்
கப்பல் கம்பெனி’ செத்தொழிந் ததற்கும்
அவன்கா ரண’மென் றறைந்தேன். ‘ஒருவன்
அவனை நேற்று மணியாச்சி ஜங்ஷனில்
சுட்டுக் கொன்று தன்னையும் சுட்டுச்
செத்தான்’ என்றான். ‘நல்லதோர் செய்தி
நவின்றாய் நீ நலம் பெறுவாய்’ என்றேன்.

ஆங்கில அரசுக்கு அவர் எழுதிய மனு ஒன்றின் இறுதியில் மேன்மை தங்கிய தங்களின் மனுதாரர் வேண்டுவது என்னவெனில் தாங்கள் அவரை 8 ஆம் தேதி விடுவிக்க உடனடி ஆணை பிறப்பிப்பதாகும். இவ்வேண்டுதல் நிராகரிக்கப்படுமானல், சட்ட விரோதமாகச் சிறைக் குள் அடைக்கப்பட்ட காலத்திற்கு ஈடாக ஒரு பெரிய தொகையை இழப்பீடாகக் கேட்கும் தர்மசங்கடமான நிலைமை ஏற்படும் என்று அறிவிக்கிறார். என்று எழுதியுள்ளதும் அவரது நுட்பமான வாதத்தன்மை மட்டுமின்றி அவரது உள்ளத்துறுதியையும் புலப்படுத்துகிறது.

நன்றி மறவாத் தன்மை:

சிறையில் தமக்குக் கடிதங்களையும் உணவுப்பொருள்களையும் இரகசியமாகக் கொண்டு வந்த இராமையாக் கவுண்டர்ப் பிடிபட்டு வேலையிழந்தபோது அவர் குறிப்பிடத்தக்கத் தொகையினை வழங்கி யுள்ளார். தம் மீதுள்ள அன்பினால் ஜெயிலரைக் குத்திய மூன்று கைதிகளின் மீதத் தொடரப்பட்ட வழக்கில் கைதிகளின் சார்பில் வாதாட வழக்கறிஞர் ஏற்பாடு செய்துள்ளார். கோவைச் சிறைவாழ்வின் போது மிகவும் உதவிபுரிந்த சி.கே.சுப்பிரமணிய முதலியாரின் நினைவாகச் சிறையிலிருந்து விடுதலையான பின்னர், பிறந்த மைந்தர்களில் ஒருவருக்குச் சுப்பிரமணியன் என்று பெயரிட்டுத் தமது நன்றியுணர்வை வெளிப்படுத்தியுள்ளார். தென்னாப்பிரிக்காவில் வாழும் தமிழர் வேதியப்பிள்ளை என்பவருக்கு நன்றிச் செலுத்தும் முகமாகத் தமது மகளுக்கு வேதவல்லி என்ற பெயரிட்டார். மீண்டும் வழக்கறிஞர்த் தொழில் புரிய அனுமதி பெற்றுத் தந்த வாலஸ் என்ற வெள்ளை நீதிபதியின் பெயரைத் தமிழ் மரபுகேற்ப மாற்றித் தன் கடைசி மகனுக்கு வாலேசுவரன் என்று பெயரிட்டார்.

புரட்சி இயக்கம்:

காங்கிரஸ் இயக்கத்தில் காந்தியத் தலைமை 1920இல் தோன்றிய பின்னரே பொதுமக்களின் போராட்டங்களும் போராளிகள் பின்பற்ற

வேண்டிய சில நெறிமுறைகளும் வகுக்கப்பட்டன. சாத்வீகம், உண்மை, சட்ட திட்டங்களுக்கு மதிப்பளித்தும், கட்டுப்படல் போன்ற கோட்பாடுகளைக் கடைபிடிக்க வேண்டுமென்று போராளிகள் வலியுறுத்தப் பட்டனர்.

மனுப்போடும் அமைப்பாக இருந்த காங்கிரஸ் இயக்கத்தை, சுதேசி இயக்கத்தை நோக்கித் திரும்பிய தீவிரவாதிகள், போராட்டத்தை மட்டுமே கணக்கிலெடுத்தார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் எதிரிகளான வெள்ளையர்களை எதிர்த்து நிகழ்த்தும் போராட்டத்தில், நியாயம், அநியாயம் என்ற வாதத்திற்கே இடமில்லை வன்முறையினை அவர்கள் துறந்தவர்கள் அல்லர். தனி மனித அரசியல் படுகொலைகளைக் கூட அவர்கள் மறைமுகமாக ஆதரித்தனர். நாண்டு என்ற பிளேக் கமிஷரைச் சார்கார்ச் சகோதரர்கள் கொன்ற போது திலகர் அதனை வரவேற்ற தலையங்கம் எழுதியதுடன் அவர்களைத் தூக்கிலிட்ட போது அனுதாபமும் காட்டினார். அபிநவபாரச் சமிதி என்ற பயங்கரவாத புரட்சி இயக்கத்தைத் தோன்றுவித்த சவார்க்கர், திலகரின் சீடராவார். வங்கத்தில் அனுசிலன் சமிதி, மானிக்போலா பூங்காக் கழகம் போன்ற பயங்கரவாத புரட்சி இயக்கங்களுக்கு விபின் சந்திரப் பாலரின் ஆதரவு இருந்தது. நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க மறுத்ததன் விளைவாகவே விபின் சந்திரபாலர் 1907இல் தண்டிக்கப்பட்டார், நீதி நிர்வாகத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென்ற காந்தியின் கருத்துக்கு இது நேர் எதிரானது.

எனவே வ.உ.சி யின் காலத்தில் இருந்த அரசியல் சூழலில் இத்தகைய வழிமுறைகள் தவறாகவோ குற்றமாகவோ கருதப்படவில்லை. தங்களை அடக்கியாளும் ஆங்கில அரசை எதிர்க்கவும் அதன் கொடுமைகளிலிருந்து தப்பிக்கவும் மேற்கொள்ளும் எந்த வழிமுறையும் நியாயமானது என்ற நிலையில்தான் வ.உ.சியின் செயல்பாடுகளும் அமைந்தன.

வணிகர்கள், மத்தியதர வர்க்க அறிவாளிகள், வளர்த்து வரும் இந்திய முதலாளிகள் ஆகியோரே இந்திய விடுதலை இயக்கத்தில் நீண்டகாலம் தலைமை வசித்து வந்தனர். குறிப்பாகக் குட்டி முதலாளித்துவ மனப்பான்மைக் கொண்ட பகுதியினரிடமிருந்தே பெரும்பாலான தலைவர்கள் தோன்றினர். அரசியல் மற்றும் நிர்வாகத் துறைகளில் இப்பகுதியிலிருந்து வந்தவர்களே ஆதிக்கம் செலுத்தினர்.

எடுத்துக்காட்டாக 1911 இல் நிகழ்ந்த ஆஷ் கொலையில் குற்றஞ் சாட்டப்பட்ட பதினான்கு பேர்களில் 7 பேர் பிராமணச் சாதியினர் 6 பேர் பிள்ளை சாதியினர் இவ்வழக்கைப் புலனாய்வு செய்த வெள்ளை யரல்லாத அதிகாரிகளும் இவ்விரு சாதிகளைச் சேர்ந்தவர்களே ஆங்கிலக் கல்வியைப் பெறுவதிலும் மருத்துவர், வழக்கறிஞர் போன்ற தொழில்களை மேற்கொள்ளுவதிலும் உயர்ப் பதவிகளைப் பெறுவதிலும் இச்சாதியினர் தொடர்ச்சியாக வசித்து வந்த சமூக உயர்நிலையும் பொருளாதார மேம்பாடும் உறுதுணையாக அமைந்தன இதன் அடிப்படை யில் அடிமைத் தன்மையை உணரும் வாய்ப்பும் இவர்களுக்கே இருந்தது.

வ.உ.சி. யும் இத்தகைய சமூக மேலாதிக்கம் செலுத்தி வந்த சைவ வேளாளர் வகுப்பிலிருந்து வந்த ஒரு மத்தியதரவர்க்க அறிவாளிதான்.

எனவே அவரால் உணவு - அதனைச் சமைக்குமிடம் - பரிமாறுபவர் குறித்த தமது மத்திய தரவர்க்க மனப்பான்மையினைத் துறந்துவிட முடியவில்லை. சிறையில் தமது எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தவும் இதனைப் பயன்படுத்திக் கொண்டார் இந்நிகழ்சிகளை மட்டும் எடுத்துக்கொண்டு அவரைச் சாதி மனப்பான்மையுடையவராகக் கருதிவிடக்கூடாது. சுயசரிதையில்,

'ஜாதியே தாங்கள் பாரேன் எனினும்

தனியே சமைத்த புனித உணவைத்

கொள்ளயான் விரும்பி'

என்று வ.உ.சி குறிப்பட்டுள்ளார்

வ.உ.சி. யின் சொற்பொழிவு:

1928ஆம் ஆண்டில் காரைக்குடியில் ஆற்றிய சொற்பொழிவு உறையில், நம் நாட்டில் பெண் மக்களைச் சமைக்கும் யந்திரமாகச் செய்து விட்டனர். பிள்ளை பெறும் யந்திரமாக அனைவருமே செய்துவிட்டோம். நம்மைப் போல் பெண்களுக்கும் சம உரிமை இருத்தல் வேண்டும். எல்லா விஷயங்களிலும் அவர்களை ஆலோசித்துச் செய்தல் அவசியமாகும். ஆனால் அவர்கள் அதற்குத் தகுதியுடையவர்களா என்று பார்க்கின் இல்லை. ஏன், அவர்கட்கு கல்வி கற்பிக்க வேண்டுவது அவசியமாகும். எச்சில் இலையில் சாப்பிடும் வழக்கம் எங்கள் சாதியில் உண்டு இங்கு உண்டோ என்னமோ தெரியவில்லை (உண்டு உண்டு என்று ஜனங்கள் கூறினர்)பிராமணவீட்டிலும்இருக்கிறதா?இருக்கிறதுஎன்றனர்.நாகரீகம் இல்லாதவர் என்பவரிடத்தில் கூட இக்கொடுமையில்லை அயலூருக்கு விருந்துக்குப் போயிருந்தாலும் ஆயிரம் பேர் சாப்பிட்ட இலைகளில் என் இலையைத் தேடிப் பார்த்து அதிலேயே என் மனைவி சாப்பிட வேண்டும் அதில் மண் விழுந்திருக்கும் இன்னொருவருடைய இலையில் அப்பங்கள் விழுந்திருக்கலாம். அவைகளைக் கவனிப்பதில்லை எச்சில் இலையை நாய்களன்றோ தின்னும் முருங்கைக்காயைக் கடித்து மென்று தின்றுவிட்டுத் துப்பியிருப்பேன் (சிரிப்பு) அதில் உண்ணவேண்டும்.

அப்படியில்லாவிட்டால் புருஷன் மேல் பற்றில்லாதவளென்று கூறப்படுகிறது எச்சில் இலையில் சாப்பிடாவிட்டால் புருஷன் இலையில் சாப்பிடாத என்று சொல்லுகின்றனர். எனக்குக் கல்யாணம் ஆனது முதல் எச்சில் இல்லை உண்ணக் கூடாது என்று என் மனைவிக்கு உத்தரவிட்டுவிட்டேன். பெண்கட்கும் சமசுதந்திரம் கொடுக்க வேண்டும். ஆனால் கல்வியில்லாத இக்காலத்தில் தீர்மானிக்கும் உரிமைப் புருஷனிடம் இருக்க வேண்டும் உரிமைப் பெறப் பெண்கள் போராடுதல் வேண்டும்.

முடிவுரை:

வ.உ.சிதம்பரனாரின் அரசியல் சிந்தனையும் செயற்பாடுகளும் இந்திய விடுதலை இயக்கத்தின் தொடக்க காலத்தில் தமிழ்ச் சமூகத்திற்கு

ஒரு புதிய அரசியல் விழிப்புணர்வை அளித்தன. அரசியல் என்பது அதிகாரத்தைப் பெறும் வழிமுறை அல்ல. அது தேசச் சுயமரியாதையை மீட்டெடுக்கும் போராட்டமாக அமைந்தது. வ.உ.சியின் அரசியலில் தனித்த ஒரு அடையாளத்தை உருவாக்கியது ஆங்கில அரசின் செயல்பாடுகளின் காரணமாகச் சிறைவாசம், சமூகப் புறக்கணிப்பு பொருளாதார இழப்பு போன்ற கடுமையான விளைவுகளைச் சந்தித்த போதும் அவர் எனது அரசியல் கொள்ளைகளில் எவ்விதச் சமரசமும் செய்யவில்லை. அவரது அரசியல் அணுகுமுறை இன்றைய ஜனநாயகச் சூழலிலும் சமூகப் பொறுப்புள்ள அரசியலுக்கான வழிக்காட்டியாகத் திகழ்கிறது.

துணை நூற்பட்டியல்:

1. சிவசுப்பிரமணியன்.ஆ., வ.உ.சி. வாழ்வும் பணியும், சுதர்சன் புக்ஸ் முதற்பதிப்பு மக்கள் வெளியீடு, சென்னை, 2002.
2. வ.உ.சிதம்பரனார் சுயசரிதை, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியீடு சென்னை, 1990.
3. அரசு மா.ரா (தொ.ஆ) வ.உ. சி கட்டுரைகள் பாரி நிலையம் முதற்பதிப்பு, சென்னை, 1989.
4. வேங்கடசாமி. இரா., திருநெல்வேலி எழுச்சியும் பாரதியும், காலச்சுவடு பதிப்பகம், 1908,
5. மரகத மீனாட்சி ராஜா, கப்பலோட்டிய இந்தியர் வ.உ.சிதம்பரம்பிள்ளை, பாரி நிலையம் முதற்பதிப்பு, சென்னை, 2004.

77

கப்பலோட்டிய திறமும் வீழ்ச்சியும்

முனைவர் ம. தனலட்சுமி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்
ஏஏஏ பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி ஆமத்தூர், சிவகாசி.

ஆய்வுச் சுருக்கம்:

வ.உ.சி. பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக தமிழகத்தில் கப்பல் விடுவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள், அவர் இழந்தவைகள், இரு கப்பல்கள் வாங்கிய சாதனை, கப்பல்களின் பங்குகள், பங்குதாரர்கள், கப்பல்களின் அமைப்பு, நோக்கங்கள் அதன் செயல்பாடுகள், அவற்றை முறியடிக்க ஆங்கிலேயர் செய்த சூழ்ச்சிகள், வ.உ.சி பெற்ற சிறை தண்டனை, இறுதியில் ஆங்கிலேயர்களிடமே அக்கப்பல்களை விற்ற பங்குதாரர்கள், வ.உ.சியின் வேதனை, அரசின் அங்கீகாரம் ஆகியவை இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

திறவுச்சொற்கள்: கடல் வணிகம், ஸ்டீம், குத்தகை,சொந்தக்கப்பல், பங்குகள், பங்குத்தொகை, வழக்குகள், சிறைப்பிடிப்பு, தண்டனை, நெருக்கடி, கப்பலை விற்றல், அரசின் அங்கீகாரம்.

அறிமுகவுரை:

செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன் என்றெல்லாம் போற்றப்பெற்ற வ.உ.சி. அவர்கள், ஆங்கிலேயர் இந்திய வணிகத்தை முடக்கப் பார்த்ததைக் கண்டு சினங்கொண்டு பலருடைய ஆதரவினைத் திரட்டி சொந்தமாக ஒரு கப்பல் கம்பெனியை நிறுவி இரு கப்பல்களைக் கடல் வணிகத்திற்குக் கொண்டு வந்தார். இதனால் ஆங்கிலக் கப்பல் கம்பெனிக்கு 95 லட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டது.

இதனால் ஆத்திரம் அடைந்த ஆங்கிலேயர் வ.உ.சியை சிறையில் அடைத்து செக்கிழுக்க வைத்தனர். வ.உ.சி மட்டுமல்ல கிட்டத்தட்ட இந்தியா முழுவதும் 20 கப்பல்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக கடலில் விடப்பட்டன. தமிழகத்திலும் வ.உ.சிக்கு முன்பே அவரின் நண்பர் சி.வ.நல்லபெருமாள் ஒரு கப்பலை இயக்கினார். தங்களுக்கு எதிரான அனைத்து கப்பல்களையும் ஒரே யுக்தியைப் பயன்படுத்தி ஆங்கிலேயர்கள் அழித்தனர். இவற்றையெல்லாம் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

கப்பல் வாங்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றக் காரணம்:

ஆங்கிலேயர் காலத்தில் தூத்துக்குடிக்கும், கொழும்பிற்கும் இடையே கடல்வழி வாணிபம் நடந்து வந்தது. இதற்கு ஆங்கிலேய வணிகர்களின் பிரிட்டிஷ் இந்தியன் ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியின் கப்பல்கள்

பயன்படுத்தப்பட்டு வந்தன.[1] தூத்துக்குடியும், கொழும்பும் ஒரே காலனி ஆதிக்கத்தில் இருந்ததால் கட்டுப்பாடு எதுவும் இல்லாமல் கப்பல் போக்குவரத்தும் வணிகமும் இலாபகரமாக நடைபெற்று வந்தன. கப்பல்களில் சரக்குகளை ஏற்றுவதில் ஆங்கிலேய நிறுவனங்களுக்கே முன்னுரிமை அளித்து இந்திய வணிகர்களைக் கேவலமாக நடத்தியது. வாணிபம் செய்ய இந்தியா வந்த ஆங்கிலேயர் சிறிது சிறிதாக இந்தியர்களை வணிகம் செய்ய விடாமல் தடுத்தனர். ஆங்கிலேயர்களின் பொருளாதாரச் சுரண்டலை ஒழிக்க இந்தியர்களும் தங்கள் வணிகத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை வ.உ.சியைப் போலவே பலரும் நன்கு உணர்ந்தனர்.

இந்தியாவில் பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான கப்பல்கள்:

பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகளுக்கு எதிராக இந்தியச் சுதேசிகள் கப்பல் ஓட்டுவதற்கான முயற்சிகள் முதன்முறையாக வங்காளத்தில் எடுக்கப்பட்டன. ஜியோதிந்தரநாத் தாகூர் என்பவர் 1884இல் ஐந்து கப்பல்களை வாங்கினார். இந்தக் கப்பல்கள் பயணிகளையும், சரக்கு களையும் ஏற்றிச் சென்றன.

வங்காளத்தில் 1905-இல் ‘பெங்கால் ஸ்டீம் நேவிகேசன் கம்பெனி’ நிறுவனத்தின் கப்பல்கள் சிட்டகாங், அக்யாப், நங்கூன் நகரங்களிடையே பயணிகளை ஏற்றிச் சென்றன. 1906 ல் பங்குதாரருக்கு ஏழரை விழுக்காடு பங்குத் தொகை தரும் அளவிற்கு வெற்றிகரமாகச் செயல்பட்டது.

1884 முதல் 1930 வரையில் இந்தியாவின் பல பகுதிகளில் இருபதுக்கும் குறையாமல் இந்தியக் கப்பல் கம்பெனிகள் தோன்றின. சுமாராக பத்துகோடி ரூபாய் மூலதனத்தைக் கொண்ட இந்தக் கம்பெனிகள் பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகளின் ஈவிரக்கமற்ற கடுமையான போட்டிகள் காரணமாக தோல்வியுற்றன.

தமிழகத்தில் கப்பல் வாங்க முயற்சி:

தூத்துக்குடிக்கும், கொழும்பிற்கும் இடையே கடல் வழி வாணிபத்தை பி.ஐ.எஸ்.என் கம்பெனி என்னும் பிரிட்டிஷ் கம்பெனி ஏகபோகமாக நடத்தி வந்தது. இதனைத் தடுப்பதற்காக தூத்துக்குடியில் வ.உ.சியின் நண்பர் சிவபுரம் மிட்டாதார் சி.வ.நல்லபெருமாள் பிள்ளை அவர்கள் ஒரு முயற்சி செய்திருக்கிறார். ‘சிவ கம்பெனி’ என்ற பெயரில் ஒரு கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார். இது தான் வ.உ.சி கப்பலோட்டுவதற்கு முன்னோடியாக அமைந்தது.

தமிழர்களால் தொடங்கப்பட்ட சிவ கம்பெனி வந்து விட்டது என்ற தைரியத்தில் பல தமிழ் வணிகர்கள் ஆங்கிலேயக் கப்பல் கம்பெனியைப் பகைத்துக் கொண்டு சிவ கம்பெனியில் பயணம் செய்து சரக்குகளையும் அனுப்பத் தொடங்கினார்கள்.[2] ஆனால் அம் முயற்சி ஆங்கிலேய அடக்குமுறையால் முறியடிக்கப்பட்டது. எனவே வ.உ.சி மற்றொரு முயற்சியைக் மேற்கொண்டார்.

குத்தகைக் கப்பல்:

ஆங்கிலேயக் கப்பல் கம்பெனியின் ஆணவத்தை அடக்கும் முயற்சியாக கொழும்புவில் இருக்கும் கப்பல் கம்பெனியிடம் பேசி முன்னர் இருந்ததை விட பெரிய 'இப்ஸாலிக்' என்னும் கப்பலைக் குத்தகைக்கு எடுத்து தூத்துக்குடிக்குக் கொண்டு வந்தார். அதைக்கண்டு தமிழ் வணிகர்கள் மகிழ்ச்சியும் நிம்மதியும் அடைந்தார்கள்.

சுதேசிக் கப்பல் கம்பெனி:

தூத்துக்குடி வணிகர்களின் உதவியுடன் 1906ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ஆம் தேதி புதிய கப்பல் கம்பெனியைத் தொடங்கினார். அதை 'சுதேசிக் கப்பல் கம்பெனி' என்ற பெயரில் பதிவு செய்தார். மும்பையில் டாஜ்பாய் என்பவரிடமிருந்து 'சூசான்'3 என்னும் கப்பலைக் குத்தகைக்கு எடுத்து தூத்துக்குடிக்குக் கொண்டுவந்து ஓட்டத் தொடங்கினார். ஆனால் ஆங்கிலேயர்கள் பல வகைகளில் தொடர்ந்து மிரட்டியதால் பயந்து சுதேசி கப்பல் கம்பெனிக்குக் குத்தகைக்குக் கொடுத்திருந்த கப்பலைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்.

சொந்தக்கப்பல் முடிவு:

டாஜ்பாய் குத்தகைக்குக் கொடுத்த கப்பலைத் திரும்ப வாங்கிக் கொள்வார் என வ.உ.சி எதிர்பார்க்கவில்லை. சொந்தக் கப்பல் இருந்தால் தான் இடையூறு இல்லாமல் வணிகம் செய்து ஆங்கிலேயரை விரட்ட முடியும் என்பதை உணர்ந்தார். எனவே சொந்தமாக ஒரு புதிய கப்பலை வாங்கி விடுவது என்று தீர்மானித்த அவர், அதற்காகப் பணம் திரட்டத் தொடங்கினார்.

மூலதன திரட்டு:

கப்பல் வாங்குவதற்கான மூலதனத்தைத் திரட்டுவதற்காக வ.உ.சி அவர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார். பம்பாய் கல்கத்தா முதலிய பல இடங்களுக்குச் சென்றார். ஆனால் பணம் திரட்டும் முயற்சிக்கு எதிர்பார்த்த ஆதரவு கிட்டவில்லை. ஆனால் வ.உ.சி எதற்கும் மனம் கலங்காமல் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார். அவற்றில் ஒன்று 1906 ஏப்ரலில் கொழும்பு சென்று அங்குள்ள வர்த்தகர்களைச் சந்தித்து நிதிகளைத் திரட்டினார்.

சுதேசிக் கப்பல் பங்குகள்:

சுதேசக் கப்பல் கம்பெனியின் மூலதனம் ரூபாய் 10,00,000. இது பங்கு ஒன்றுக்கு ரூபாய் 25 வீதம் 40,000 பங்குகளாக4 இந்தியர், இலங்கையர் முதலிய ஆசியக் கண்டத்தாரிடமிருந்து பெறப்படும் என புதிய சுதேசிக் கம்பெனி அறிக்கை வெளியிட்டது.

பங்குதாரர்கள்:

சென்னையில் இருந்த ஸ்ரீநிவாசாச்சாரியாரும் தென்னாப்பிரிக்கா வில் வாழ்ந்து வந்த எஸ். வேதமூர்த்தி முதலியாரும் கணிசமான

தொகையைச் சுதேசிக் கப்பல் கம்பெனிக்கு அனுப்பி வைத்தார்கள். பாலவநத்தம் ஜமீன்தாரும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தலைவருமான பாண்டித்துரைத் தேவர், புதிய சுதேசிக் கப்பல் கம்பெனியின் தலைவராகப் பொறுப்பேற்றார்.

வ.உ.சி. யின் தியாகம்:

மூலதன திரட்டிற்காக அவர் பம்பாய் செல்லும்போது ' நான் மீண்டும் தமிழகம் திரும்பும் போது கப்பலுடன் திரும்புவேன். இல்லையேல் அங்கே வங்கக் கடலில் வீழ்ந்து மாள்வேன்'6 என்று சபதம் செய்து சென்றார். வ.உ.சி மூல தன திரட்டில் இருக்கும் போது அவருடைய மகன் உலகநாதன் நோய்வாய்ப்பட்டிருந்தார் . மனைவியோ நிறைமாத கர்ப்பிணி. இந்தச் சூழலில் ஊருக்குத் திரும்புமாறு உறவினர்கள் வற்புறுத்த 'இறைவன் துணைநிற்பார்' என்று ஆறுதல் அளித்து எழுதினார்.தேசமே அவர் முன் நின்றது. .

கப்பல்கள் வாங்கியது:

'எஸ். எஸ். காலியோ, எஸ். எஸ். லாவோ' என்னும் பெயர்கள் கொண்ட இரு ஸ்டீமர்கள் வெவ்வேறு தேதிகளில் 1907 மே மாதத்தில் தூத்துக்குடிக்கு வந்தன. இதனைக் குறித்து இந்தியா பத்திரிகையில் ஆசிரியராக இருந்த பாரதியார்' வெகு காலமாக புத்திரப்பேறின்றி ஏக காலத்தில் இரண்டு புத்திரர்களைப் பெற்றால் எத்தனை அளவற்ற ஆனந்தமடைவாளோ அத்தனை அளவற்ற ஆனந்தத்தை நமது பொது மாதாவாகிய பாரத தேவியும் இவ்விரண்டு கப்பல்களையும் பெற்றமைக்காக அடைவாளென்பது திண்ணமே. ஸ்ரீ வ.உ.சிதம்பரம் பிள்ளையும் அவருடன் நின்று உதவிய மற்ற நண்பர்களும் தாம் பிறந்து வளர்ந்த தாய்நாட்டிற்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து விட்டார்கள்' [7]என்று பாராட்டி எழுதினார்.

ஆங்கிலேயரின் பதிலடி:

சுதேசி கப்பல் கம்பெனி வந்தவுடன் ஆங்கிலேயக் கப்பல் கம்பெனி சரக்குக் கட்டணத்தையும் பயணிகள் கட்டணத்தையும் 5 ரூபாயிலிருந்து முக்கால் ரூபாயாகக் குறைத்தது. தங்கள் கப்பலில் பயணம் செய்யும் பயணிகளுக்கு இந்திய இரயில்களிலும், இலங்கை இரயில்களிலும் கட்டணச் சலுகை வழங்கியது. சுதேசி கப்பல் கம்பெனியை எப்படியாவது மூட வைத்து விட வேண்டும் என்று தீர்மானித்த ஆங்கிலக் கப்பல் கம்பெனி அதிரடியாக ஒரு சலுகையை அறிவித்தது. தங்கள் கப்பலில் இலங்கை வரை செல்பவர்களுக்குக் கட்டணமே கிடையாது என்றும் அத்துடன் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு குடை இலவசமாக வழங்கப்படும் என்றும் தெரிவித்தது.

பங்குதாரர்களின் நெருக்கடி:

வ.உ.சி. அரசியலில் ஈடுபடுவது பங்குதாரர்களில் பலருக்குப் பிடிக்கவில்லை. இதனால் கப்பல் வர்த்தகம் பாதிக்கப்படும் என்று

அவர்கள் கருதி வ.உ.சி. யை சுதேசிக் கப்பல் கம்பெனியிலிருந்து விலகிவிடும்படி கேட்டுக்கொண்டார்கள்.அதைக் கேட்டு வ.உ.சி முதலில் வெகுண்டெழுந்தாலும் பல நெருங்கிய நண்பர்களின் வேண்டுகோளை ஏற்று துணைச் செயலாளர் பதவியிலிருந்து விலகி சம்பளம் வாங்கும் ஒரு பிரதிநிதியாக அதன்பின் செயல்படத் தொடங்கினார்.பின்பு ஆங்கிலேயர்களால் கப்பலுக்கு விளைந்த 15 லட்சம் நட்டத்திற்கு வ.உ.சி. யை பொறுப்பேற்கக் கூறி நெருக்கடி கொடுத்தனர். இதனைக் கண்டு அஞ்சாமல்

'எண்ணரிய துன்பங்கள் எய்தியுள வெம்சிறையை
நண்ணிடினும் யான் அஞ்சேன் நாவாயின் எண்ணறியா
தென்னொதென் தாள்நிதியை ஈயா தெனைக் கொடுக்கச்
சொன்னாலும் யான்அஞ்சேன் சோர்ந்து' [8]

என்று பாடினார்.

ஆங்கிலேயர்கள் தந்த நெருக்கடி:

சுதேசி கப்பல் கம்பெனியிலிருந்து விலகினால் ஒரு லட்சம் ரூபாய் தருவதாக ஆசை காட்டினர்.வ.உ.சி மறுத்து விட்டார். ஆங்கிலேயக் கப்பல் கம்பெனி முதலாளிகளுடன் இந்திய அதிகாரிகளும் சேர்ந்து கொண்டு சுதேசிக் கப்பலைக் கவிழ்க்க பல வித நடவடிக்கைகளை மேற்கொண்டது. சப் மாஜிஸ்திரேட் ஈ.எச் வாலேஸ் என்பவர் இந்திய அதிகாரிகள் யாரும் சுதேசி கப்பலில் பயணம் செய்யக்கூடாது என்று ஓர் சுற்றறிக்கை அனுப்பினார்.

கோர்ட் வழக்கு:

சுதேசி கப்பல் ஆங்கிலேயக் கம்பெனி கப்பல் மீது மோத முயன்றதாகப் பொய்ப் புகார் அளிக்கப்பட்டது. இதனால் ஆங்கிலேயக் கம்பெனி கப்பல்கள் புறப்பட்டுச் சென்ற பின்னரே சுதேசி கப்பல்கள் புறப்பட வேண்டும் என்று சப் மாஜிஸ்திரேட் ஈ.எச் வாலேஸ் உத்தரவிட்டார். ஆனால் சுதேசி கப்பல் நிர்வாகம் சப் மாஜிஸ்திரேட் உத்தரவை எதிர்த்து மாவட்ட மாஜிஸ்திரேட்டிடம் அப்பீல் செய்தது.

மாஜிஸ்ரேட் வாதத்தை ஏற்றுக் கொண்டு சுதேசிக்கப்பல்கள் எந்த நேரத்திலும் புறப்படலாம் என்று உத்தரவிட்டார். இதன்பிறகு சுதேசக் கப்பல் வணிகம் நன்கு நடைபெற்றது. ஆங்கிலேயக் கப்பல் கம்பெனியான பி.ஐ.எஸ்.என் கப்பல் நிறுவனத்திற்கு மாதம் ஒன்றுக்கு முப்பதாயிரம் முதல் நாற்பதாயிரம் ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டது. இதற்கு வஉசி தான் காரணம் என்று கருதி வ.உ.சி. யை சுதேசக் கப்பல் கம்பெனியிலிருந்து வெளியேற்ற திட்டம் தீட்டினர்.

வ.உ.சி. சிறையில் அடைப்பு:

அரசுக்கு எதிராக மக்களைத் தூண்டல் (IPC123A) சிவாவுக்கு அடைக்கலம் அளித்தல் (IPC153A) திருநெல்வேலி கலெக்டர் விஞ்சின் உத்தரவு மீறல், தேசத்துரோக சொற்பொழிவு என வ.உ.சி மேல்

குற்றச்சாற்றப்பட்டு 1908 மார்ச் 12 அன்று கைது செய்யப்பட்டார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மார்ச் 13 அன்று திருநெல்வேலி கலகம் உருவாகி, நகராட்சி அலுவலகம், தபால் அலுவலகம், போலீஸ் நிலையம் ஆகியவற்றுக்கு தீவைக்கப்பட்டது. போலீஸ் தாக்குதலில் கோயில் பூசாரி, சிறுவன் உள்ளிட்ட நான்கு பேர் இறந்தனர். 53 பேர் கைது செய்யப்பட்டு 37 நபர்களுக்கு தண்டனை வழங்கப் பட்டது. இதற்காக விசாரணை நடத்தப்பட்டு வ.உ.சிக்கு இரட்டை ஆயுள் தண்டனை (40 ஆண்டுகள்) வழங்கப்பட்டது.

சுதேசக் கப்பலின் தள்ளாட்டம்:

வ.உ.சி கைது செய்யப்பட்ட பின் கப்பல் கம்பெனி திறமையாக நிர்வகிக்கப்படவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கம் சுதேசக் கப்பல் பங்கு தாரர்களை மிரட்டி பங்குகளை வாங்கியது. பங்குகளை விற்கா தவர்கள் பொய்க் குற்றச்சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டனர். கப்பல் கம்பெனி பல்வேறு பொருளாதாரச் சரிவுகளைச் சந்தித்தது. இதனைத் தாக்குப்பிடிக்க முடியாமல் ஒன்றன் பின் ஒன்றாக இரு கப்பல்களும் பிரிட்டிஷ் கம்பெனியிடமே விற்கப்பட்டன. 1908 இல் காலியா கப்பலும், 1909இல் லாவோ கப்பலும், 1910இல் கப்பல் கம்பெனியின் இதர சொத்துகள் விற்கப்பட்டன.

வ.உ.சி. யின் வருத்தம்:

மகனது இறப்பின் போது கூட அருகில் இல்லாமல் கப்பல் வாங்குவதற்கான நிதி சேகரிப்பில் இருந்த வ.உ.சி. யின் தியாகம் வீணாயிற்று. சுதேசக்கப்பல் ஆங்கிலேயக் கப்பல் நிறுவனத்திற்கு விற்கப்பட்டதை சிறையில் இருந்த வ.உ.சி. பல நாட்கள் ஊன் உறக்கமின்றி வருந்தினார். செய்தி கேள்விப்பட்ட மகாகவி பாரதி சிதம்பரம், மானம் பெரிது! ஒரு சில ஓட்டைக் காசுகளுக்காக எதிரியிடமே அக்கப்பலை விற்று விட்டார்களே, பாவிகள்! அதை விட அதைச் சுக்கல் சுக்கலாக நொறுக்கி வங்காள விரிகுடாக்கடலில் மிதக்கவிட்டாலாவது என் 40 ஆண்டுகாலம் இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பெற்ற வ.உ.சி மேல் முறையீடு செய்தவுடன் நான்கு ஆண்டுகளில் விடுதலை செய்யப்பட்டார்.இதற்கு மேல் முறையீடு காரணமாக சொல்லப் பட்டாலும், வ.உ.சி. கைது செய்யப்பட்டதன் உண்மைக் காரணம் ஆங்கிலக்கப்பலுக்கு எதிராய்க் கப்பலோட்டியது. கப்பல் கம்பெனியை வாங்கியவுடன் மேல்முறையீட்டைக் காரணம் காட்டி அவரை விடுதலை செய்து விட்டது.

அரசின் அங்கீகாரங்கள்:

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, இந்திய அரசின் சார்பில் தூத்துக்குடிக்கும், கொழும்பிற்கும் இடையில் ஒரு கப்பல் விடப்பட்டது. இதற்கு ‘எஸ்.எஸ். வி.ஓ சிதம்பரம்’ என்று பெயரிடப்பட்டது. தூத்துக்குடி துறைமுகம் என்ற பெயரில் இயங்கி வந்த துறைமுகம் கி.பி. 2022 முதல் ‘வ.உ.சிதம்பரனார் துறைமுகம்’ என்று வ.உ.சி.க்கு மரியாதை

செய்யும் பொருட்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டது. வ.உ.சி. யின் பிறந்த நாள் விழாக்கள் அரசு விழாக்களாகக் கொண்டாடப்படுகின்றன.

தொகுப்புரை:

இந்தியா முழுவதும் பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக இருபதுக்கும் மேற்பட்ட கப்பல்கள் இந்தியர்களால் பயன்படுத்தப்பட்டன. தமிழகத்தில் வ.உ.சி. க்கு முன்பே அவரின் நண்பர் சி.வ.நல்லபெருமாள் பிள்ளை என்பவர் பிரிட்டிஷிற்கு எதிராகக் கப்பல் ஓட்டினார்.

நாடு முழுவதும் பயணம் செய்து கப்பல் வாங்க நிதி திரட்டினார். 10,00,000 லட்சம் ரூபாய்க்கு ஒரு பங்கு 25 ரூபாய் வீதம் 40,000 பங்குகள் வெளியிடப்பட்டன. 12,500 பங்குகள் மட்டுமே வ.உ.சி. வாங்கினார். ‘எஸ். எஸ் காலியோ, எஸ். எஸ். லாவோ என்னும் இரு நீராவிக் கப்பல்கள் 1907 மே மாதத்தில் தூத்துக்குடிக்கு வந்தன.

பயணிகளுக்கு பல்வேறு கட்டணச் சலுகைகளையும், பல இலவசங் களையும் ஆங்கிலக்கப்பல் வழங்கியது. சுதேசக் கப்பல் கம்பெனியில் துணைச் செயலாளராக இருந்த வ.உ.சி, பதவியிலிருந்து விலகி அக்கம்பெனியிலேயே ஏஜெண்டாகப் பணியாற்றினார். பிரிட்டிஷ் பல்வேறு நெருக்கடிகளை வ.உ.சிக்குக் கொடுத்துச் சிறைக்கு அனுப்பியது. சுதேசக்கப்பல் மீது பல்வேறு வழக்குகள் தொடுக்கப்பட்டு, பங்குதாரர்கள் மிரட்டப்பட்டனர். பிரிட்டிஷ்கப்பலுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட சுதேசக்கப்பல் இறுதியில் அவர்களிடமே விற்கப்பட்டது.

சான்றெண் விளக்கம்:

1. கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி, ப.67
2. நவ பாரதச் சிற்பிகள் ப.96
3. கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி, ப.71
4. நவ பாரதச் சிற்பிகள் ப.98
5. மேலது.ப.99
6. கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி, ப.76
7. வ.உசி இயற்றிய பாடற்திரட்டு, ப.77
8. வஉசி கண்ட பாரதி ப.57

பயன்பட்டவை:

1. நவ பாரதச் சிற்பிகள் வ. உ.சிதம்பரம்பிள்ளை : மூலம் : சம்பத்,என் - மணி, பெ.சு தமிழாக்கம்: மணி பெ.சு. பப்ளிகேஷன்ஸ் டிவிஷன், செய்தி ஒலிபரப்பு அமைச்சகம் இந்திய அரசு, முதல் பதிப்பு: 1995.
2. கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் : சேஷய்யா,ஏ.கே காமாட்சியம்மன் பதிப்பகம், 25சி, தாமல்வார் தெரு, பெரிய காஞ்சிபுரம். முதற்பதிப்பு : டிசம்பர் 2013.
3. வ.உ.சி. கண்ட பாரதி, சிதம்பரம்பிள்ளை, வ. உ., மெட்ராஸ் பிரிமியர் கம்பெனி,

மெட்ராஸ்.

4. வ.உசி சிதம்பரம்பிள்ளையரவர்கள் இயற்றிய பாடற்றிரட்டு, இந்தியா பிரிண்டிங் வொர்க்ஸ், சென்னை.

5. வலைதளங்கள்: Google,Chatgpt,Perplexity,Wikipedia,Tamil Virtual Academy,Tamil Digital Library

பின்னிணைப்புகள்:

தி சுதேசி ஸ்டீம் நேவிகேசன் கம்பெனியின் பங்கு

'எஸ். எஸ் காலியோ' கப்பல்

சுதேசக் கப்பல் கம்பெனியின் முக்கியப் பங்குதாரர்கள்

பங்குதாரர்	பங்கு எண்	மதிப்பு	விழுக்காடு
ஹாஜி முகமது ரவுத்தர் சைத்	8,000	2,00,000	20%
பாண்டிதுரை தேவர்	2,000	50,000	10%
வ.உ.சிதம்பரம் பிள்ளை	500	12,500	5%

சுதேசக் கப்பல் கம்பெனி விற்கப்பட்ட விவரம்:

எஸ்.எஸ். காலியா: 1907 பிரான்ஸிலிருந்து 6 லட்சத்திற்கு வாங்கப்பட்டது; 1911ல் BISNக்கு சுமார் 3.5 லட்சத்திற்கு விற்கப்பட்டது.

எஸ். எஸ். லாவோ: 4 லட்சத்திற்கு வாங்கப்பட்டது; BISN-க்கு 2.5 லட்சம்க்கு விற்கப்பட்டது. மொத்த இழப்பு: 10 லட்சம் மூலதனத்திற்கு மாற்றாக 6 லட்சம் மட்டுமே கிடைத்தது (40 %இழப்பு).

பகுதி ஏழு: படைப்பாளுமை

78

வ. உ. சி. யின் தமிழ்ப்பணி

முனைவர் மெ. சிவசங்கரி
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர், இதயா மகளிர் கல்லூரி,
கும்பகோணம்.

ஆய்வுச்சுருக்கம்:

இலக்கியங்கள் அனைத்தும் காலம் காட்டும் கண்ணாடியாகவே உள்ளன. இலக்கியம் மக்கள் வாழ்க்கையின் இன்பம், துன்பம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. அவ்வகையில் தமிழ் இலக்கியங்கள் காலம்தோறும் வளரும் தன்மை யுடையவை. காலம் தோறும் மாற்றமடையும் தன்மைகளைக் கொண்ட தாகவும் நிலைத்தத் தன்மைகளைக் கொண்டதாகவும் உள்ளன. அவ் வகையில் சுதந்திரப் போராட்ட வீரராகவும், இலக்கியப் படைப் பாளியாகவும், தன்னிகரில்லாத் தலைவராகவும், திருவள்ளுவரின் வழியில் நின்றவராகவும் புகழ் பெற்று வாழ்ந்து, இன்றளவும் நம் மனங்களில் நீங்காத இடம் பிடித்தவராகிய வ.உ.சி. அவர்களின் தமிழ்ப்பணி குறித்ததாக இக்கட்டுரை அமைகிறது.

முன்னுரை:

வ.உ.சி. அவர்கள் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் அறிஞர் ஆவார். திருக்குறள் மீது பெரும் பற்றுக் கொண்டவர். சைவ நெறியைக் கொள்கையாகக் கொண்டவர். வெள்ளையன் வெளியேற வேண்டும், நாடு விடுதலை அடைய வேண்டும், சுதேசி இயக்கம் ஏற்பட வேண்டும் என்ற பல்வேறு சிந்தனைகளைக் கொண்டு வாழ்ந்தவர். செப்டம்பர் 5, 1872-இல் திருநெல்வேலி மாவட்டம், ஓட்டப்பிடாரத்தில் பிறந்தார். இந்திய விடுதலை இயக்கத் தலைவராகவும், உள்நாட்டு இந்தியக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவராகவும், தமிழ் இலக்கியப் படைப்பாளியாகவும், பதிப்பாசிரியராகவும், மொழிபெயர்ப்பாளராகவும் திகழ்ந்தவர்.

''திருவள்ளுவன் என்னும் தெய்வீக வாசன் அருளிய
என்றென்றும் அன்பை ஒரு நற்பொருள் என்ன கொண்டு
பொருள் உண்மை கண்டு பெருமை''.

என்று வள்ளுவரின் நெறியை தன் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர் வ. உ. சிதம்பரனார் அவர்கள். தேசியத் திருவிளக்கு, தென்தமிழ்நாடு தந்த தவப் புதல்வர்,செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார் அவர்கள் அரசியல் தலைவராகவும், அறிஞர்

பெருமகனாகவும், விடுதலைப் போராட்ட வீரராகவும் புகழ் வாழ்வு வாழ்ந்த புனிதர்.

வரலாறுகளின் வழிகாட்டி, தொண்டுக்குப் பிறந்த தூயவர், எப்போதும் வாழ்பவர், தென்னாட்டுத் திலகர், தமிழ்ப் பெரியார், வ உ சி, சிறந்த கலைஞர் சிதம்பரனார் தமிழின் வடிவம் என்றெல்லாம் பலவராக பல பெயர்களில் அழைக்கப்படுகிறார்.

வ.உ.சி.யின் படைப்புகள் மற்றும் பதிப்பு நூல்கள்: இலக்கணம், இலக்கியம், மொழிபெயர்ப்பு, தத்துவம் ஆகிய பல துறைகளில் வ.உ.சி. யின் ஆற்றல் வியப்புக்குரியதாக உள்ளது. இந்த உலகம் கருத்துக்களால் ஆளப்படுகிறது. இந்தக் கருத்துக்களால் சிந்தனையாளர் சிரஞ்சீவி ஆகிறான். வீர வாழ்க்கையால் மரணத்தை வென்று சிதம்பரனார் புத்தக எழுத்துகளால் தமிழ் உள்ளவரை வாழும் தகுதியும் பெற்றார்.

தம்முடைய வாழ்வின் இறுதி நாட்களில் அன்றாடம் தம்முடைய வீட்டில் இலக்கியச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்து தமிழ்த் தொண்டு ஆற்றியவர். மெய்யறம், மெய்யறிவு, பாடல் திரட்டு, என் சுயசரிதை, இன்னிலை உரை, திருக்குறள் உரை, திருக்குறள் மணக்குடவர் உரைப் பதிப்பு, மனம் போல வாழ்வு, அகமே புறம், திருப்பொய்கையார் இன்னிலை, தொல்காப்பியம் இளம்பூரணர் பதிப்பகம் வலிமைக்கு மார்க்கம், சாந்திக்கு மார்க்கம், சிவஞான போத உரை, முதலான பல நூல்களை எழுதியும், பதிப்பித்தும் உள்ளார்.

திருக்குறள் மணக்குடவர் உரை பதிப்பு:

''திருவள்ளுவரின் திருக்குறளைக் கற்கும் ஒவ்வொருவரும் தத்தமக்குக் கிடைக்கும் முறைகளைத் துணையாகக் கற்றுக் கொண்டு குறள்களின் பொருள்களை தாமே ஆராய வேண்டும் என்பது என் விருப்பம்''. அவர் தமது இந்த விருப்பத்தின் முதற்படியாகத் தமக்குக் கிடைத்த மணக்குடவர் உரை பதிப்பிக்கும் முயற்சியில் 1917 இல் இறங்கினார். இந்த முயற்சியில் அவருடைய உழைப்பு மகத்தானது. ஓர் இலக்கிய வழக்கறிஞராக இருந்து எதையும் காரண காரியத்தோடு ஆராய்ந்து முடிவுகள் வெளியிடும் சிதம்பரனாரின் ஆராய்ச்சி மனப்பான்மையை அதிகாரங்களுக்கு அவர் தரும் விளக்கங்களில் காணலாம்.

மனம் போல வாழ்வு:

இது சிறையிலே பிறந்த செந்தமிழ்ப் பனுவல். ஜேம்ஸ் ஆலன் எழுதிய நூலின் மொழிபெயர்ப்பாகிய இந்நூல் வாழ்வியல் தத்துவ நூல்களின் மொழிபெயர்ப்பில் ஒரு சாதனைக் கல்.

'என் நிலைமை நீ அடைய எண்ணுவையோ நின்னுள்ளும்
அந்நிலைமை நீ அடைவாய் அப்பொழுதே''

என்று, தொய்ந்த நெஞ்சைத் தூக்கி நிறுத்தி நம்பிக்கை வழங்கும் நல்ல கருத்துகள் அமைந்த பெட்டகம் இந்நூல்.

அகமே புறம்:

1916-ஆம் ஆண்டில் வெளியான இந்நூல் ஜேம்ஸ் ஆலனின் சிந்தனைக் கோவைகளைத் தமிழில் அளிப்பது. நூலின் தொடக்கத்தில் சிதம்பரனாரின் அறத்தை வலியுறுத்தும் ஒரு பாடல் அறத்தை வைத்தே அடிப்படை வேறுபாடுகளை விளக்குகிற ஆற்றல் படைத்ததாக உள்ளது. அப்பாடல்,

'அறத்தைக் காண அறிவே மரமாம்
அறத்தைப் பிழைத்த அறிவை மிருகம்
அறத்தை புரியும் அறிவே மனிதன்
அறத்தைக் காக்கும் அறிவே கடவுள்''

என்பதாக அமைகிறது.

மெய்யறம்:

1917 இல் வெளியிடப்பட்ட இந்நூல் மாணவரியல், இல்வாழ்வியல், அரசியல், அந்தணரியல், மெய்யியல் என ஐந்து இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. எந்த மனிதனும் இந்த ஐந்து நிலைகளை அடையலாம் என்பதை விளக்க எழுந்த இந்நூல் ஒரு ஆன்மீகப் புரட்சி நூல்.

'ஆண்பால் உயர்வெனல்
வீண்பேச் சென்க''

போன்ற பெண்ணுரிமை வரிகளைச் சிதம்பரனாரின் சீர்திருத்த வேட்கையை உணர்த்தும் ஒப்பற்ற வைரவரிகளாக இந்நூலில் காணலாம்.

திருப்பொய்கையார் இன்னிலை:

இன்னிலை என்னும் நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. அம்பாசமுத்திரம் அகத்தியர் அச்சுக்கூடத்தில் 1930 ஆம் ஆண்டு சிதம்பரனாரின் சீரிய உரையுடன் இந்நூல் தில்லையாடி தா. வேதியப் பிள்ளை அவர்களால் பதிப்பிக்கப்பட்டது. மூலத்தை விட உரை கடினமானது என்று நினைக்கும் வண்ணம் உரை எழுதும் புலவோர்க்கு நடுவே தெளிந்த தமிழில் இனிய முறையில் உரை எழுதும் திறம் படைத்தவர் சிதம்பரனார் என்பது இந்நூல் விளக்குகிறது.

தொல்காப்பியம் இளம்பூரணர் பதிப்பு:

மொழிக்கு இலக்கணம் வேண்டாம் என்று முழங்கும் முற்போக்குப் புலவர் வாழும் இந்நாளில் வீரர் சிதம்பரனார் வித்தகப் புலவர் சிதம்பரனாராய், மொழிக்கும் வாழ்க்கைக்கும் இலக்கணம் கண்ட தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரப் பதவுரைகளை வெளியிட்டார். உயர்திணை, அஃறிணை என்னும் தமிழ் இலக்கணப் பாகுபாடு, ஆரியம் முதலியவற்றில் இல்லை.

நிலத்தின் பாகுபாடுகளையும் அவற்றின் உரிப்பொருள், கருப் பொருள்களையும் அவற்றின் மக்களது ஒழுக்கங்களையும் கூறுவது தமிழ் இலக்கணம் ஒன்றே ஆகும். இந்நூலில் எழுத்ததிகாரச் சொல்லதிகாரச் சூத்திரங்களைக் கற்போர், நன்னூல் ஆகியவற்றைக் கற்பர் என்பது திண்ணம். இவ்வாறு நுனித்தறிந்து தீட்டும் சிதம்பரனாரின் நுழைப்புலத்துக்கு இந்நூலின் பதிப்புரை இணையற்ற சான்றாக விளங்குகிறது.

வலிமைக்கு மார்க்கம்:

இந்த மொழிபெயர்ப்பு நூல் 1930 இல் ஒரு ரூபாய் விலையில் வீ. ராமசாமி சாஸ்துருலு அண்ட் ஸன்ஸ் என்னும் நிலையத்தாரால் வெளியிடப்பட்டது. ஜேம்ஸ் ஆலனின் மூலக்கருத்துக்களைச் சிதையாமல் மொழிபெயர்க்கும் திறனை இந் நூலிலும் காணலாம்.

சாந்திக்கு மார்க்கம்:

சிதம்பரனார் சான்றோர் மட்டுமல்ல சான்றோர்களை உருவாக்குகிற சான்றோர். ஆகவே சான்றாண்மைக்கு நிலைக்களனாகிய தத்துவங்களைக் கட்டுரை வடிவில் தருகிறார். கட்டுரையின் சாரத்தைக் கலைநயத்தோடு கவிதையில் வடித்துப் பொன் மலருக்கு நறுமணம் தருகிறார். இந்நூல் 1934 ஆம் ஆண்டு வ உ சி அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

சிவஞான போத உரை:

தமிழ்த் தத்துவச் சிந்தனையின் வெளிப்பாடு, உலகத் தத்துவச் சிந்தனையின் உயர்ந்த சிகரம் சைவ சித்தாந்தம். இதன் ஒப்பற்ற சாத்திரம் சிவஞானபோதம். வ. உ. சி எழுதிய ஒப்பற்ற உரையுடன் 1935 இல் பதிப்பிக்கப்பட்டது. சமய ஒற்றுமைக்கு மட்டுமில்லாமல் ஆத்திகர் நாத்திகர் ஒற்றுமைக்கும் இந்நூல் பாலம் அமைக்கிறது.

நாத்திகரது இயற்கையைத் தான் ஆத்திகர் கடவுள் என்று கூறுகின்றாரென்று நாத்திகரும், ஆத்திகரது கடவுளைத்தான் நாத்திகர் இயற்கை என்று கூறுகின்றாரென்று ஆத்திகரும் கொள்வரேல் இவ்விரண்டுக்கும் வேற்றுமை இல்லை. இது சிதம்பரனாரின் சீரிய கருத்து.

மெய்யறிவு:

சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றியவர் மணிமேகலை. இந்த 20 ஆம் நூற்றாண்டில் அந்தத் திருப்பணியைச் செய்தவர் சிதம்பரனார். கண்ணனூர்ச் சிறையில் குற்றவாளிகளுக்கு அறம் உரைக்கவும் அறிவுணர்த்தவும் இந்நூல் எழுந்தது

‘விதி விதி என்று வீணாக துன்பத்தில்
வீழ்கிறார் விதியை விதிக்கும்

தலைவன் தானே தான் விதியை
விதிக்கும் தலைவன் வேறு இல்லை''

என்பன போன்ற முற்போக்குக் கருத்துக்களைச் செய்யுள் வடிவில் இந்நூலில் காணலாம் . பேனாவின் முனையை மூளையின் நாக்கென் பார்கள். மூளையின் கூர்மை எழுத்திலே தெரியும். சிதம்பரனாரின் செந்தமிழ் நூல்களில் அவரது மூளையின் கூர்மையையும் தெரியும். அவரது இதயத்தின் அகலமும் தெரியும். தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு அவர் விட்டுச் சென்றிருக்கின்ற அரிய பரிசுகள் அற்புதப் படைப்புகள் அவருடைய நூல்களாகும்.

முடிவுரை:

பல வகையான இலக்கிய நூல்களைச் சிதம்பரம் பிள்ளை அவர்கள் எழுதியிருந்தாலும் உயிர்களிடத்தில் அன்பு என்பதில் அவர் கொண்டுள்ள ஈடுபாடு அவரது எழுத்துக்களில் வெளிப்படுகிறது. ஒருவேளை அவர் மேலும் சில காலம் வாழ்ந்திருப்பின் ராமலிங்க அடிகளாரின் சன்மார்க்க நெறிப்படி இணைந்திருப்பாரோ என்ற கருத்துக்களை முன் வைக்க முடிகிறது. அவரது எழுத்துக்களில் வெளிப்படும் அவரது தன்மை இலக்கிய உலகில் அவர் தனியிடம் பிடித்து, தமிழுக்குத் தொண்டுகள் செய்து தமிழில் பல இலக்கியங்களைப் படைத்துள்ளார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. சிதம்பரம் பிள்ளை அவர்கள் பல்வேறு இலக்கியங்களைப் படைத்ததோடு, பதிப்பாசிரியராகவும் இருந்து தமிழுக்குத் தொண்டுகள் பல செய்துள்ளார் என்பதில் தமிழுலகம் பெருமை கொள்கிறது.

துணை நூற் பட்டியல்:

- வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு – முனைவர் பாக்கிய மேரி பூவேந்தன் பதிப்பகம், சென்னை. 1987
- செம்மாப்புத் தமிழர் சிதம்பரச் செம்மல் –துரை மதிவாணன், பூஞ்சோலைப் பதிப்பகம், புதுக்கோட்டை. 2002.

79

வ.உ.சி.யின் வாழ்வும் இலக்கியப் பணியும்

முனைவர் இரா. வனிதாமணி
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை,
குயீன்ஸ் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,
புனல்குளம், புதுக்கோட்டை

ஆய்வுச்சுருக்கம்:

'அயர்தல் என்றும் அணுகாதெனை உயர்தல் ஒன்றே ஒன்றும்' விடாதீர் சுதேசியம் எனும் தாரக மந்திரத்தினைக் கொண்டிருக்கும் வ. உ. சி அவர்களின் வாழ்க்கையானது மிகவும் போற்றுதலுக்குரியதாகும். அவ்வகையிலே, வ.உ.சி.யின் வாழ்வும், இலக்கியப் பணிகளும் மிகவும் சிறப்புடையவையாக அமைகின்றன. ஆதலால், வ.உ.சி. யின் இலக்கிய வாழ்வும் இலக்கியப் பணிகளையும் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது.

திறவுச்சொற்கள்: வ.உ.சி., வாழ்க்கை, பிறப்பு, கல்வி, இலக்கியம், இலக்கணம், தமிழ் நூல்கள், தொழில், திருமணம், அரசியல், சிறை வாழ்க்கை,

முன்னுரை:

ஒரு தனிமனிதனின் வாழ்க்கை வரலாறும் ஒரு வகையில் ஒரு நாட்டின் அல்லது சமுதாயத்தின் வரலாறு போன்றதாகும். பொதுவாக வரலாற்றை விட வாழ்க்கை வரலாற்று இலக்கியம் பன்மடங்கு உயர்ந்ததாகும்.'ஒரு தனிமனிதனின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை அவை நடந்த வரிசைப்படி அடைவுப்படக் கோர்த்து அவற்றின் மூலம் அந்த தன் ஒருவனின் குணசித்திரம் முழுமைப்ப் பெற்று தோன்றுமாறு கலையழகுடன் வரையப்படுவதே வாழ்க்கை வரலாறு [(1)] ஆகின்றது. வாழ்க்கை வரலாறு களில் விளக்கப்படும் நிகழ்ச்சிகளும் உணர்ச்சிகளும் வாழ்விற்கு வழி காட்டுவதால் அவற்றிற்கிணையான இலக்கியம் வேறிருக்க முடியாது என்பது சாலினி இளந்திரையனின் கருத்தாகும் [(2)].

வாழ்க்கை வரலாறு இலக்கியம்:

வாழ்க்கை வரலாறு என்னும் இலக்கிய வகை, பத்தொன்பதாம் நூற்றாண்டில், தமிழில் முழுமையான அமைப்போடு வெளிவரத் தொடங்கியிருந்தாலும், இந்த இலக்கியத்திற்கான கருவும் அதன் சிறு வளர்ச்சிக் கூறுகளும், பழைய இலக்கியங்கள் கல்வெட்டுகள் முதலிய வற்றிலே இடம் பெற்றுள்ளன [(3)]. தொல்காப்பியப் புறத்திணை இயலில் அமைந்துள்ள நடுகல், மன்னைக் காஞ்சி ஆகியன வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தின் சில பண்புகளைக் கொண்டவையாக உள்ளன [(4)]. சங்க இலக்கியங்களுள் ஒன்றாகக் கருதப்படும் புறநானூற்றில் அதியாமானைப் பற்றி ஔவையார் பாடியவையாக உள்ள பாடல்களை வரிசைப்படுத்தி

அமைக்கும்பொழுது அவனைப் பற்றிய ஒரு முழுமையான வரலாறே நமக்குக் கிடைத்து விடுகிறது[(5)].

சிலம்பிலுள்ள வரந்தருக் காதையில் தெய்வமுற்ற தேவந்தியியன் வாயிலாகக் தம் வரலாற்றின் சுருக்கமொன்றை இளங்கோவடிகள் தருகின்றார் 6, இளமையில் முதியவர் உளங்கொள்ளுமாறு வழக்கிற்கு முடிவு செய்த கரிகால்வளவன், முல்லைக்குத் தேரீந்த பாரி, மயிலுக்குப் போர்வை தந்த பேகன், பகைவர் மூட்டிய நெருப்பிலிருந்து உயிர் தப்பிய கரிகால்வளவனின் ஆட்சிக்குத் துணை நின்ற அவன் மாமன் இரும்பிடர்த் தலையார், வறுமைக் காலத்திலும் பாணனுக்குப் பொன்னைச் சமைத்து உணவாக நல்கிய பாரி மகள் ஆகியோர் பற்றிய குறிப்புகளைப் பழமொழி நானூற்றில் காணலாம்[7] .

கி.பி.7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பரும் திருஞானசம்பந்தரும் தம்தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளுள் சிலவற்றை தங்களின் தேவாரப் பதிகங்களில் குறிப்பிடுகின்றனர். கி.பி.9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வரான சுந்தரரின் பாடல்கள் பலவற்றில் அவருடைய நிகழ்ச்சிகள் நேரிடையாகப் பாடப்பட்டுள்ளன[(8)] மெய்கீர்த்தியும் வாழ்க்கை வரலாற்று இலக்கியத் துறையில் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும்.

‘வீரராசேந்திரனின் மெய்கீர்த்தி அவன் செய்த போர் நிகழ்ச்சிகளை மிக விரிவாகவும் தெளிவாகவும் விவரிக்கின்றது. தோற்றவன் அறைக் கூவியது. வீரராசேந்திரன் அதை மகிழ்வோடு எதிர் ஏற்றது. அவன் குறித்த நாள்வரை போர்களத்திலேயே காத்திருந்தது. சாளுக்கிய ஆகவமல்லன் வாராமையால் மேற்சென்று அவன் அழித்து அவன் நாட்டை மற்றொருவனுக்கு வழங்கித் தனது பேரரசு எல்லையை விரிவுபடுத்தியது என்னும் நிகழ்ச்சிகள் விவரிக்கப்பட்டுள்ள முறையிலும் இந்த மெய்க்கீர்த்திப் பகுதி அவனுடைய வாழ்க்கை வரலாற்று நூலின் ஒரு பகுதியோ என்று எண்ணும்படி அமைந்துள்ளது[(9)].

சிற்றிலக்கியங்களில் அடக்கிக் காட்டப்படும் வரலாற்று வஞ்சி, பரணி, உலா, பிள்ளைத்தமிழ் முதலியன வாழ்க்கை வரலாற்றுப் பண்பு களைக் கொண்டிருக்கின்றன. கலிங்கத்துப்பரணியின் பண்புகளைக் கொண்டிருக்கின்றன. கலிங்கத்துப்பரணியின் இராசபாரம்பரியப் பகுதி முதற் குலோத்துங்கச் சோழன் பிறந்து வளர்ந்து உயர்ந்து, சிறந்தமை பற்றி கூறுகின்றது [(10)]. சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம் சிவனடியார்களின் வரலாற்றுத் தொகுப்பேயாகும் [(11)].

இந்த நெடிய வரலாற்றினைத் தாண்டித்தான் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கிச் சுமார் ஒரு நூறு ஆண்டுகளாக முழுமையான வாழ்க்கை வரலாற்று இலக்கியம் உருவாகியுள்ளது. இந்தப் பெரிய மாறுதலுக்கு நாட்டு விடுதலையை ஒட்டி எழுந்த தமிழ் உணர்ச்சி ஒரு காரணமாகலாம் [(12)]. இங்ஙனம் தமிழ்த் தேசிய உணர்ச்சி பெருகிய காலக்கட்டத்தில் வ.உ.சி. யின் வாழ்க்கை வரலாற்று நூல்களும் வெளிவரத் தொடங்கின.

இலக்கியப் பயிற்சியும் படைப்புத் திறனும்:

வ.உ.சி. ஓய்வுப் பொழுதில் தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களை பிறர் துணையின்றி பயின்றார்.தத்துவ நூல், இலக்கிய நூல் ஆகியவற்றைக் கருத்தூன்றி எண்ணியதாகவும், அவற்றிற்குப் புலவரும் உரையாத அரும்பொருள்களைத் தாமே கண்டு உரைத்தாகவும், தன் வரலாற்றில் விளக்குகின்றார்[16]. அதற்கும் புதுப் பொருள் காணும் இவ்வுணர்வே, புத்தறம், புதுச்செய்திகள் ஆகியவற்றை அவர் எழுதிய நூல்களில் சுட்டுவதற்கு அவருக்கு ஊக்கம் தந்துள்ளது. திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரைத்துள்ள பொருள்களோடு வேறுபட்டு புதுப்பொருள் காணும் எண்ணத்தினையும், அவர்க்குத் தந்துள்ளது. கைவல்லியம், விசாரசாகரம் முதலிய தத்துவ நூல்களில் அவருக்கு இருந்த ஆர்வமே தத்துவ அறிஞரான சேம்சுஆலன் நூல்களை மொழிபெயர்ப்பதற்கும், சித்தாந்த நூலானசிவஞான போதத்திற்கு உரை எழுதுவதற்கும் அவரைத் தூண்டியது.

வ.உ.சி. யின் தமிழ் நூல் பயிற்சியே 1908 – ல் மதுரைத் தமிழ்ச் சங்கத் தின் பொறுப்பாளர்களில் ஒருவரான உயர்த்த துணைபுரிந்தது. இத் தமிழ்சங்க உறவே, பின்னாளில், வ.உ.சி. யை பெருங்கவிஞராக ஆக்கியது எனலாம். திருக்குறளை அடிக்கடி பயின்றும், பயிற்றுவித்தும், தமிழ்ப் பணி செய்துள்ளார்[17]. அவ்வாறு பயிலும் போதும், பயிற்றுவிக்கும் பொழுதும், திருக்குறளுக்கான பல உரைகளைக் கண்டு ஆய்வு செய்ததில் மணக்குடவர் உரையே தமிழ் மரபுரையாக அவருக்கு தோன்றியது. ஆகவே, மணக்குடவர் உரையினை பதிப்பிக்கும் விருப்பம் உண்டாயிற்று. சோழவந்தான் அரசஞ் சண்முகநாதரிடம் தொல்காப்பியத்தை முறைமையாகக் கற்ற பொழுது[18] தொல்காப்பிய உரைகளுள் இளம்பூரணர் உரை வ.உ.சி. யை பெரிதும் கவர்ந்ததால் அவ்வுரையினை பதிப்பித்தலில் விருப்பம் கொண்டார்.

சிறை செல்வதற்கு முன்பே, இவர் கவிபாடும் திறமை பெற்றிருந்த தால் தம் மூத்த மனைவி வள்ளியம்மை இறந்தமை குறித்துப் பாடிய பாடல்களும், நல்லொழுக்கம் அறங்கள் ஆகியவை பற்றிய பாடல்களும், மெய்ப்பொருளாம் இறைவன் தொடர்பாக பாடிய பாடல்களும், உறவினர் நண்பர்களுக்கு கடித வடிவில் பாடிய பாடல்களும், அவரது நூலாகிய பாடற்றிரட்டில் இடம் பெற்றுள்ளன. சிறை செல்வதற்கு முன்பு, அவர் இயற்றிய பாடல்கள் எல்லாம் சிறை மீண்ட பிறகு நூலாக வெளி வந்தன.[(19)]

எனவே, அவர் கவிஞராகப் பல பாடல்கள் இயற்றியதற்கும், உரையாசிரியராகப் பல நூல்களுக்கு உரை எழுதியதற்கும், பதிப்பா சிரியராகப் பல நூல்களைப் பதிப்பித்தமைக்கும் மொழிபெயர்ப்பாளராகச் சில நூல்களை மொழிப் பெயர்த்தமைக்கும், வ.உ.சி.யின் இலக்கிய

பல்துறை அறிவே, காரணமாக அமைகிறது. இக்காலக் கட்டத்தில் பலர் பெற்றிருக்க கூடிய இலக்கிய அறிவிற்கு வித்திட்டவர் வ.உ.சி. யே ஆவார்.

அரசியலில் மிகுதியான ஈடுபாடு (1905 – 1908):

வ.உ.சி. யின் அரசியல் வாழ்வில் 1905 முதல் 1908 வரையிலான நான்கு ஆண்டுகளும் துடிப்புள்ள ஆண்டுகளாகும்.இவ்வாண்டுகளில் முளை விட்ட இவரது அரசியல் ஈடுபாடு இவ்வாண்டுகளுக்குள்ளேயே முதிர்ந்து, முடிந்து விட்டது எனக் கூறலாம். இதற்கு பின் இவர் முழுநேர இலக்கிய அறிஞராக மாறினார்.

அரசியலில் ஈடுபாடு:

1906–ல் தூத்துக்குடியில் 'சுதேசிக் கப்பல் குழு' இவரது துணையால் அமைக்கப்பட்டது. 1907–ல் சூரத் காங்கிரசு கூட்டத்தில் அவர் ஆற்றிய தொண்டு குறிப்பிடத்தக்கது. 1908–ல் நெல்லையில் 'தேசாபிமான சங்கம்' அமைய இவர் காரணமாயிருந்தார். அதே ஆண்டில் தூத்துக்குடி, கோரல் ஆலைத் தொழிலாளர்கள் நடத்திய வேலை நிறுத்தத்திற்கு இவர் ஆதரவு தந்து, தொழிலாளர்களின் தேவைகள் நிறைவேறத் துணை புரிந்தார். 1908 பிப்ரவரி 3 முதல் மார்ச் 9 வரை சுப்பிரமணிய சிவாவுடன் இணைந்து, இவர் ஆற்றிய தொடர் சொற்பொழிவுகள் தமிழக அரசியலில் புதுத் திருப்பத்தினை ஏற்படுத்தின. 1908–ல் அரசாங்கத் தடையினை மீறி பிபீன் சந்திரப்பாலின் விடுதலையைப் பாராட்டிப் பேசியமைக்காக இவ்வாண்டில் (மார்ச் 12) அரசாங்கத்தினர் இவரைக் கைது செய்தனர். இக்காலக் கட்டத்தில், அரசியல் ஈடுபாடு வ. உ. சிக்கு மிகுதியானதால் இலக்கியத் துறையில் கருத்தூன்றி இருந்ததாலும், இலக்கிய பணியாற்ற இவருக்கு வாய்ப்பில்லாமல் போயிற்று எனக் கருதலாம்.

சிறை வாழ்க்கை (1908 – 1912):

வ.உ.சி. பெற்ற சிறை வாழ்க்கையே இவரைச் சிறந்த இலக்கியப் பற்றாளராகவும், நூலாசிரியராகவும், உருவாக்கியது.இவர்க்கெதிராக வழக்கினைத் தொடுத்த அரசாங்கத்தார் இவர்க்கு நாற்பதாண்டுகள் சிறைத்தண்டனை வழங்கினர். பின்னர், மேல் முறையீட்டில் நாற்பதாண்டு தண்டனையை ஆறாண்டுத் தண்டனையாகக் குறைத்தனர். முதலில் விசாரிக்கப்படும் வரை கோவைச் சிறையிலும் விசாரணை முடிந்தபின் கண்ணனூர்ச் சிறையிலும் வ.உ.சி. தமது சிறை நாளைக் கழித்தார்.

சிறையில் தமிழ்ப்பணி:

சிறை நாள் வீணாகக் கழிவதை விரும்பாத வ.உ.சி. சீரிய நூல்கள் எழுதுவதற்கும் சிறந்த கவிதைகளை யாப்பதற்கும் அந்நாட்களைப் பயன்படுத்தினார். பாலகங்காதர திலகர், மாண்டலே சிறையில் இருந்த போது 'கீதை இரகசியம்' என்னும் பெரு நூலினை எழுதி வந்தார். நேருவோ, சிறையில் இருந்த போது தமது வரலாற்றினை எழுதினார். ஆமது நகரக் கோட்டை காவலில் இருந்த போது இந்தியாவை உணர்ந்து

அறிந்து' என்னும் நூலினை எழுதினார்.[20] வ. உ. சி யும் தாம் எழுதிய தன் வரலாற்றின் முதற்பாகத்தினைச் சிறையிலிருந்தே எழுதியதாக இவர் மைந்தர் 'தன் வரலாறு' நூலின் பதிப்புரையில் குறிப்பிடு கின்றார்.[21] வ. உ. சி சிறைக் கொடுமையினை அனுபவித்த குடும் பத்தினரும், நண்பர்களுக்கும் ஏற்ற வகையில் தரமான கவிதைகளையே பாடியுள்ளார். சேம்சு ஆலன் நூல்களை [22] 'மனம் போல வாழ்வு', 'அகமே புறம்', 'வலிமைக்கு மார்க்கம்', 'சாந்திக்கு மார்க்கம்' என்ற தலைப்புகளில் மொழிபெயர்ப்பினைத் தொடங்கினார். அவற்றுள் 'மனம் போல வாழ்வு' என்னும் நூலினைச் சிறையில் எழுதி முடித்தார்.[23] கண்ணனூர்ச் சிறையில் கைதிகள் மறம் விடுத்து அறம் உணர, 'மெய்யறிவு' 'மெய்யறம்' ஆகிய இரு நூல்களையும் வ. உ. சி எழுதினார்.[24]

விடுதலையும் சென்னை வாழ்க்கையும் (1912 – 1919):

சிறைத் தண்டனைப் பெற்ற வ.உ.சி 1912 டிசம்பர் 12 இல் விடுதலைப் பெற்றார்.சிறையிலிருந்து வெளிவந்தவ.உ.சியின்அரசியல்தொண்டினை நாடு ஏற்றிப் போற்றவில்லை. இவர் சிறையிலிருந்து விடுதலைப் பெற்று சொந்த ஊர்ச் செல்லாமல் குடும்பத்துடன் சென்னையில் குடியேறினார். அரசியலுக்காக இவர் ஆற்றிய பணிகள் மக்களால் மதிக்கப்படாமல் போகவே, அரசியல் துறவினை மெதுவாகக் மேற்கொண்டார். இருப்பினும் 1919 – இல் திலகரின் வேண்டுகோளினை ஏற்று பம்பாய் சென்று அவரைச் சந்தித்து செர்மனியின் உதவியுடன் இந்தியாவில் புரட்சி நடத்துவது குறித்து உரையாடினார்.1 919 –இல் சென்னை வந்த காந்தியடிகளை வரவேற்றுப் பேசியுள்ளார். அவ்வாண்டில் சென்னை வந்த திலகரையும் சந்தித்து, கருத்து பரிமாற்றம் செய்தார்.

விடுதலைக்குப் பின் தமிழ்ப்பணி

அரசியல் துறவுணர்வு இவரது இலக்கிய ஈடுபாட்டினையும், தொண்டினையும் மிகுதிப்படுத்தியது. சிறை விடுதலைக்குப் பின் வ. உ. சி ஒரு புது மனிதராக மாறிவிட்டார் என வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகின்றார்.[25] சென்னையில் வாழ்ந்த போது, திரு. வி.கல்யாணசுந்தர முதலியார், செல்வகேசவராய முதலியார், ஆகிய தமிழறிஞரின் நட்பு வ. உ. சி க்கு கிடைத்தது. ஆதலால் இவர் தமிழில் சிறந்த நூல்களை வெளியிடத் தொடங்கினார்.[26] தொல்காப்பியம், திருக்குறள், ஆகியவற்றின் பதிப்புப் பணியையும் தொடர்ந்தார். இவர் சென்னையில் இருந்தபோது, 'அகமே புறம்', 'வலிமைக்கு மார்க்கம்' ஆகிய மொழிபெயர்ப்பு நூல்களும், 'மெய்யறிவு' எனும் அற நூல்களும் வெளியாயின.சிறை செல்லும் முன்பும், சிறையிலிருந்த பொழுதும், இவர் பாடிய தனிப்பாடல்கள் 'பாடற்றிரட்டு' என்னும் நூலாக 1915 ஆம் ஆண்டில் வெளிவந்தன. வ. உ. சி எழுதிய மெய்யறமும் , உரை எழுதிய இன்னிலையும், பதிப்பித்த திருக்குறள் மணக்குடவர் உரையும், 1917 ஆம் ஆண்டில் தமிழ் உலகிற்கு அறிமுகம் ஆயின.

அரசியல் உலகு வ.உ.சி.யை புறக்கணிக்க தொடங்கியது.ஆகவே தமிழ் வளர்ச்சிப் பணிகளை முழு நேரப் பணியாகக் கொண்டார். திரு. சிதம்பர பிள்ளையின் தமிழ்க் காதலையும், ஆராய்ச்சித் திறனையும் கூடி லேசாக மதிப்பிடுவது சரியன்று. சிறையிலிருந்து விடுதலைப் பெற்றப் பின், இவர் வறுமைக்கு ஆளானார்.தமிழ்நாடு இவருக்கும், இவரது முயற்சிக்கும், ஆதரவு தரவில்லை. இருந்தும் தமிழ்க் காதலிலே, தமிழ் ஆராய்ச்சியிலே தமது துயரங்களை மறக்க முயன்றார்.[27] என பி. ஸ்ரீ . குறிப்பிடுகின்றார்.

கோவை வாழ்க்கை (1919 – 1922):

சென்னையில் தொடர்ந்து வாழ முடியாமல் நண்பர்களின் வேண்டுகோளினை ஏற்றுக் கோவையில் வாழத் தொடங்கினார். கோவையில் வாழ்ந்த போது அரசியல் துறவினை முழுமையாக மேற்கொண்டார்.

அரசியல் துறவு:

1920- இல் கல்கத்தாவில் கூடிய காங்கிரசு கூட்டத்தில் மிதவாதிகளின் செல்வாக்கினைப் பெற்றதால், தீவிரவாதியான வ. உ. சி தான் சார்ந்திருந்த காங்கிரசு இயக்கத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டார். கோவையில் வாழ்ந்த காலத்தில் அவரது எழுத்துப் பணி தொடர்ந்தது. இருப்பினும், அவர் எழுதியவற்றுள் எதுவும் நூலாக வெளிவரவில்லை.

கோவில்பட்டி வாழ்க்கை (1922- 1932):

வழக்குரைக்கும் உரிமையினை இழந்திருந்த வ. உ. சி அவ் வுரிமையினை மீண்டும் பெற்று, 1922-இல் கோவில்பட்டியில் குடியேறி வழக்கறிஞர் தொழிலை நடத்தினார்.[28] ஏழாண்டுகள் வரை தம்மை எவ்வித அரசியல் பணிகளுக்கும் உட்படுத்திக் கொள்ளாத வ.உ.சி. 1927 – இல் மீண்டும் காங்கிரசு இயக்கத்தில் உறுப்பினராகி, அவ்வாண்டில் சேலத்தில் நிகழ்ந்த, மாவட்ட அரசியல் மாநாட்டினைத் தலைமை யேற்றுச் சிறப்பித்தார்.

பதிப்புப் பணி:

தொல்காப்பிய எழுத்ததிகாரத்திற்கும், பொருளதிகாரத்தின் அகத் திணை, புறத்திணை, ஆகிய இரண்டு இயல்களுக்கும் உரிய இளம்பூரணர் உரையினை 1918 – இல் வ. உ. சி பதிப்பித்து வெளியிட்டார்.

தூத்துக்குடி வாழ்க்கை (1932 – 1936):

1932 – இல் ஆட்சித் துணைத் தலைவரின் தலைமையிடம் கோவில் பட்டியிலிருந்து தூத்துக்குடிக்கு மாற்றப்பட்டதால், வ.உ.சி.யும் தூத்துக்குடியில் குடியேறி உடல்நலிவிற்கிடையில் வழக்கறிஞர் தொழிலை இயலும்பொழுதெல்லாம் அங்கு ஆற்றி வந்தார். 1933 – ஆம் ஆண்டு அரிஜனக் கொள்கைகளைத் தமிழ்நாட்டில் பரப்பி வந்த காந்தியடிகளைக் காரைக்குடியில் வரவேற்பதற்கான நிகழ்ந்த கூட்டத்திற்கு வ.உ.சி. தலைமை தாங்கினார்.

உரையாசிரியர் பணி:

1934 – ஆம் ஆண்டு திருச்செந்தூரில் அரங்கேற்றம் செய்யப்பட்ட வ.உ.சி.யின் 'திருக்குறள் அறத்துப்பால் விருத்தியுரை'1935 –இல் நூலாக வெளிவந்தது. சிவஞான போதம் எனும் சைவ சித்தாந்த நூலிற்கு இவர் எழுதிய உரையும் இவ்வாண்டிலேயே நூலாக்கம் பெற்றன.(29) இவ்வாறு அரசியல் துறையில் தொடங்கி, இலக்கியத் துறையில் முழுமை பெற்ற வ.உ.சி. 1936 - நவம்பர் 18 – இல் இறைவனடிச் சேர்ந்தார்.

முடிவுரை:

இளமையிலேயே வ.உ.சி. தமிழ்மொழியின் சிறந்த இலக்கிய, இலக்கணங்களில், பயிற்சியும், தேர்ச்சியும், பெற்றிருந்தாலும், அவர் வாழ்ந்த காலகட்டத்தில் அரசியல் நுழைவு செல்வாக்கு பெற்றிருந் தமையால், இலக்கிய உணர்வு அவர் உள்ளத்தில் மறைந்திருந்து அவரின் நாட்டம் தலைதூக்கி நின்றது. அரசியல் துறையில் கொண்ட ஈடுபாடு நான்கு ஆண்டுகளே உயிர்ப்பு பெற்றிருந்தது. ஏறத்தாழ இருபத்தெட்டாண்டுகள் (1908- 1936) வெளிப்படையாகவும், வ.உ.சி. ஆற்றிய தமிழ்ப்பணிகள் இவ்வுலகில் விஞ்சி நிற்கின்றன.

அடிக்குறிப்புகள்:

- வ. உ. சிதம்பரம்பிள்ளை, சுயசரிதை, பக் –15
- சாலினி இளந்திரையன், வாழ்க்கை வரலாற்று இலக்கியம், பக்- 16.
- மேலது, பக் – 11.
- தொல்காப்பியம், இளம்பூரணர், பக் -1005,1024.
- புறநானூறு பக் – 87-95, 97-101.
- சிலப்பதிகாரம், வரந்தரு காதை, 173-182.
- பழமொழி நானூறு, பக் -74, 239, 381.
- சாலின் இளந்திரையன், வாழ்க்கை வரலாற்று இலக்கியம், பக்-130,131.
- தி.வை.சதாசிவப் பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, பக்- 99.
- கலிங்கத்துப்பரணி, தாழிசை, பக் – 232-256.
- அ.ச. ஞானசம்பந்தன், தேசிய இலக்கியம், பக் -56.
- சாலின் இளந்திரையன், வாழ்க்கை வரலாற்று இலக்கியம், பக்-180.
- வ. உ. சிதம்பரம்பிள்ளை, சுயசரிதை, பக் – 7.
- மேலது, பக் – 18.
- மேலது, பக் – 24, 32.
- மேலது, பக் – 34.
- கெ. அனந்தராமய்யங்கார், தமிழில் தோய்ந்த உள்ளம்,வ. உ. சிதம்பரம்பிள்ளை நூற்றாண்டு மலர், பக் -26.
- வ. உ. சிதம்பரம்பிள்ளை, சுயசரிதை, பக் – 40.
- வ. உ. சிதம்பரம்பிள்ளை, பாடற்றிரட்டு பாயிரம், பக் – 11
- எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர்,வீரசிதம்பரனார், பக- 71.

- வ. உ. சிதம்பரம்பிள்ளை, சுயசரிதை, முகவுரை, பக் — 22
- வ. உ. சிதம்பரம்பிள்ளை, பாடற்றிரட்டு பாயிரம், பக் — 12
- வ. உ. சிதம்பரம்பிள்ளை, சுயசரிதை, பக் — 119.
- மேலது, பக் — 146.
- எஸ். வையாபுரிப்பிள்ளை, சிறைவாழ்க்கைக்குப் பின் வ. உ. சிதம்பரம்பிள்ளை நூற்றாண்டு மலர், பக் — 20.
- இ. மு. சுப்பிரமணிய பிள்ளை , வீரர் வ. உ. சிதம்பரம் பிள்ளை நெல்லைத் தமிழ்ப் புலவர்கள், பக் -69.
- பி.ஸ்ரீ.வ.உ.சி. யின் நினைவுகள், வ. உ. சிதம்பரம்பிள்ளை நூற்றாண்டு மலர், பக் 15.
- ம.பொ.சிவஞானம், கப்பலோட்டிய தமிழன், பக்- 93,94.
- இ. மு. சுப்பிரமணிய பிள்ளை , வீரர் வ. உ. சிதம்பரம் பிள்ளை நெல்லைத் தமிழ்ப் புலவர்கள், பக் — 80,87.

துணைநூற்பட்டியல்:

- அனந்தராமய்யங்கார், தமிழில் தோய்ந்த உள்ளம், வ. உ. சிதம்பரம் பிள்ளை நூற்றாண்டு மலர், தூத்துக்குடி,1972.
- கலிங்கத்துப்பரணி, அருணா பப்ளிகேஸன்ஸ், சென்னை-17, முதற்பதிப்பு 1958.
- சதாசிவ பண்டாரத்தார், தி.வை. பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு, 1874.
- சாலினி இளந்திரையன், வாழ்க்கை வரலாற்று இலக்கியம், தமிழ் புத்தகாலயம்,576, பைக்கிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5, முதற்பதிப்பு,1974.
- சாமிநாத ஐயர்,உ.வே. என்சரிதம்,கபீர் அச்சுக்கூடம்,சென்னை,முதற்பதிப்பு,1950.
- சிவஞானம்,ம.பொ. கப்பலோட்டிய தமிழன், இன்பநிலையம், சென்னை,ஐந்தாம் பதிப்பு, 1949.
- சிலப்பதிகாரம்,த.வை.தமிழ்ச்சங்க வெளியீடு,பாகனேரி, எட்டாம் பதிப்பு,1968.
- சுப்பிரமணிய ஐயர்,எம்.எஸ். வீர சிதம்பரனார், பதிப்புக்கழகம், பவழக்காரத் தெரு, சென்னை — 1,முதற்பதிப்பு,1952.
- சுப்பிரமணிய பிள்ளை, இ.மு. வீரர் வ. உ. சிதம்பரம் பிள்ளை, நெல்லைத் தமிழ்ப் புலவர்கள் கழக வெளியீடு, சென்னை-1, இரண்டாம் பதிப்பு , 1953.
- ஞானசம்பந்தன், அ.ச. தேசிய இலக்கியம், சேகர் பதிப்பகம், 30 போஸ்ட் ஆபிஸ் தெரு,சென்னை-1, முதற்பதிப்பு, 1966.
- தொல்காப்பிய மூலம்,பி.நா.சிதம்பர முதலியார் அன்கோ,மதுரை,முதற்பதிப்பு,1972.
- பழமொழி நானூறு, கழக வெளியீடு, சென்னை-1, ஐந்தாம் பதிப்பு,1967.
- புறநானூறு, கழக வெளியீடு, சென்னை-1, ஐந்தாம் பதிப்பு, 1964.
- பி.ஸ்ரீ.வ.உ.சி.சில நினைவுகள், வ. உ. சிதம்பரம் பிள்ளை நூற்றாண்டு மலர், தூத்துக்குடி,1972.
- வ. உ. சிதம்பரம்பிள்ளை, பாடற்றிரட்டு பாயிரம், வ. உ. சிதம்பரம் பிள்ளை நூற்றாண்டு மலர், தூத்துக்குடி,1972.

80

தமிழ் இலக்கிய உலகில் வ.உ.சி.யின் பங்களிப்பு

நி. அமிருதீன் (ஹசனி)
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சி.

முனைவர் மு. முஹம்மது ரஃபீக்
உதவிப் பேராசிரியர் (அரபு மற்றும் இஸ்லாமியத் துறை),
பி.எஸ்.ஏ. கிரசன்ட் பல்கலைக்கழகம், வண்டலூர், சென்னை.

ஆய்வுச்சுருக்கம்:

இந்தியச் சுதந்திரப் போராட்டத்தின் விடுதலை வீரர், செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்கள் தமிழ் மொழியில் மிகச்சிறந்த புலமையைப் பெற்றிருந்தார். அவ்வகையில் தமிழ் இலக்கிய உலகில் வ.உ.சி. யின் பங்களிப்பை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தமிழ் மொழியின் மீது அளவிலாப் பற்று கொண்ட வ.உ.சி. அவர்கள் கவிதை வடிவில் மெய்யறம், மெய்யறிவு, பாடல் திரட்டு, சுயசரிதை ஆகிய நூல்களை எழுதியுள்ளார். மேலும், இன்னிலை, சிவஞான போதம், திருக்குறள் ஆகிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். திருக்குறள், தொல்காப்பியம் ஆகிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். கடவுளும் பக்தியும், கடவுள் ஒருவரே, மனிதனும் அறிவும், மனமும் உடம்பும், வினையும் விதியும், விதி அல்லது ஊழ் ஆகிய தலைப்புகளில் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். ஆங்கிலப் புலமை கொண்டதால் ஜேம்ஸ் ஆலன் எழுதிய சில நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தார்.

மனம் போல் வாழ்வு, அகமே புறம், வலிமைக்கு மார்க்கம், சாந்திக்கு மார்க்கம் என்றும் பெயர்சூட்டி வெளியிட்டார். அரசியல் சொற்பொழிவாளராக, தன்னுடைய மேடைப் பேச்சுக்களை 'எனது அரசியல் பெருஞ்சொல்' என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார். விவேகபானு, இந்து நேசன், தி நேஷனல் போன்ற நிறுவனங்களிலும் செய்தித்தாள் ஆசிரியராகப் பணியாற்றினார். இந்த ஆய்வுக் கட்டுரை வாயிலாக வ.உ.சிதம்பரனார் அவர்கள் தமிழ் இலக்கிய உலகிற்கு ஆற்றிய பெரும் பங்கினை அறிய முடிகின்றது.

திறவுச்சொற்கள்: வ.உ.சி., சிதம்பரனார், தமிழ், நூல், இலக்கியம், தமிழறிஞர்.

முன்னுரை:

மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றி இன்றும் இளமையாய் இருப்பதுநம்தாய்மொழியாம்தமிழேயாம்.இச்சிறப்புமிகுதமிழ்மொழியில் பல ஆராய்ச்சிகள் விரிவும் ஆழமும் அகலமும் கொண்டு வளர்ந்து வரும் இந்நாட்களில் தமிழுக்குத் தொண்டாற்றிப் பங்களித்த சான்றோர்களின்

புலமைத்திறத்தினையும் அவர்தம் எழுதிய நூல்களையும் எடுத்துரைக்க வேண்டிய தேவை மிகுந்துள்ளது. கப்பலோட்டிய தமிழன் என்றவுடன் நினைவுக்கு வருபவர் வ.உ.சிதம்பரனார். சுதந்திரப் போராட்ட வீரர், தொழிற்சங்கவாதி, பஞ்சாலை சங்கத் தலைவர், தேசியவாதி, செக்கிழுத்த செம்மல், காந்தியவாதி என்றவாறு பல பெயர்களால் அழைக்கப்படுபவர். ஆயினும், வ.உ.சி. அவர்கள் மிகச் சிறந்த எழுத்தாளர், கவிஞர், பதிப்பாளர் என்ற செய்தியை பலர் அறிந்ததில்லை. காரணம் அவரின் தமிழ்ப் பணியை விட சுதந்திரப் பணி மிக வீறு கொண்டு இருந்ததால் மக்கள் அதனையே கவனிக்கத் தலைப்பட்டனர். வ.உ.சி. யின் அரசியல் தொண்டுகள் நாட்டு மக்களால் நினைவுகூரப்படுகின்ற அளவிற்கு அவர்தம் செந்தமிழ்ப் பணிகள் மக்களால் அறிய முடியாமல் உள்ளது. காரணம் அவரிடம் செந்தமிழ்ப் பணியையும் மீறி அவர்தம் நாட்டுப் பணி ஒளி மிகுந்ததாய் உள்ளது எனலாம்1என்று சி. பாலசுப்பிரமணியம் கூறுகிறார்.

மதுரைத் தமிழ் சங்கம்:

மதுரைத் தமிழ்ச் சங்க உறுப்பினராக 1905-இல் வ. உ. சி நியமிக்கப்பட்டார். 12-05-1905 - இல் பாண்டித்துரைத் தேவர் வ.உ.சி. க்கு எழுதிய கடிதத்தில் ‘தாங்கள் இச்சங்கத்தில் கல்வி அங்கத் தினருள் ஒருவராய் அமர்ந்து செந்தமிழ் பாஷா அபிவிருத்திக்கு வேண்டுவனவற்றைப் புரிவதற்கு மனமுவந்து வரவிடுத்து சம்மதப் பத்திரிகையைக் கண்ணுற்று பெரு மகிழ்வு எய்தினேன். இவ்வாறு அன்பு கூர்ந்து முன் வந்து வாக்குதவிய தங்கட்கு அனேக வந்தனம் அளிக்கின்றோம்’. என்று குறிப்பிடப்பட்டிருந்த செய்தி கவனிக்கத்தக்கது.

வ.உ.சி. நூல்கள்:

வ.உ.சி. இயற்றிய நான்கு நூல்களுமே கவிதைகளால் ஆனவைதான். அவை குறித்து விரிவாக ஆராயலாம்.மெய்யறம் - நூற்று இருபத்தைந்து அதிகாரங்களை உடைய இந்நூல் 1914 இல் வெளியானது. ஒவ்வொரு அதிகாரமும் 10 பாடல்களைக் கொண்டது. ஒரு பாடல் என்பது ஒரு வரி மட்டுமே உடையது. மெய்யறம் 5 பகுதிகளை உடையது. மெய்யறிவு - வ.உ.சி. கண்ணனூர் சிறையில் இருக்கும் போது மற்ற கைதிகளுக்கு நீதி, நெறிகளை விளக்குவார். அக்கைதிகள் இந்த அறிவுரைகள் செய்யுள் வடிவில் இருந்தால் மனனம் செய்ய எளிதாக இருக்கும் என்று வ.உ.சி. யிடம் கூறினார்கள். அவ்வாறு 1915 இல் இயற்றப்பட்ட செய்யுள்களே மெய்யறிவு என்ற நூலாகும். நம் மனத்தில் தீய எண்ணங்களை விலக்கி நல்ல எண்ணங்களை ஏற்படுத்துவது எப்படி, உண்மை நிலையை என்ன செய்ய வேண்டும் என்று விளக்குகிறார்.

பாடல் திரட்டு - இந்நூல் பல சூழ்நிலைகளில் வ.உ.சி. எழுதிய பாடல்களின் தொகுப்பாகும். இஃது அவரது தலைசிறந்த படைப்பாகும். 1915 ஆம் ஆண்டு இந்நூல் வெளியானது. சுயசரிதை - இஃது இரு பகுதிகளை உடையது. முதல் பகுதி 1916-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

அதில் அவர் தனது குழந்தைப் பருவம், ஆசிரியர்கள், குடும்பம், சட்டக்கல்வி இவற்றைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இரண்டாவது பகுதி 1930-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதில் சிறை வாழ்க்கை, சிறையில் ஏற்பட்ட கலவரம், விடுதலை இவை குறித்து விளக்குகிறார். அவர் இறந்து 10 ஆண்டுகளுக்குப் பிறகு 1946- ஆம் ஆண்டு இரண்டு பகுதிகளும் சேர்ந்து ஒரே நூலாக வெளி வந்தது.

உரை எழுதிய நூல்கள்:

இரத்தினக் கவிராயர் எழுதிய இன்னிலை என்ற நூலுக்கு 1917 இல்வ.உ.சி.விளக்க உரை எழுதினார். அந்த நூலைப் படிக்கும் போது அவரது இலக்கணப் புலமையை நாம் அறிந்து கொள்ளலாம். சிவஞான போதம் ஒரு பக்தி நூலாகும். வ.உ.சி. இந்நூலுக்கு மிகச் சிறந்த விளக்க உரை எழுதியுள்ளார். இந்நூல் 1935 இல் வெளியானது. பழந்தமிழ் இலக்கியங்களான திருக்குறள், தொல்காப்பியம் இவற்றின் மீது வ.உ.சி. க்கு அளவு கடந்த பற்று உண்டு. 1935 இல்அவர் திருக்குறளுக்கு உரை எழுதினார். அவரது உரை அவரது ஆழ்ந்த இலக்கண அறிவை வெளிப்படுத்துகிறது. அவர் பொருள் கூறும் விதம், பல் வேறு உரைகளை ஒப்பிடும் விதம், அவர் தரும் இலக்கணக் குறிப்புகள் இவற்றின் மூலம் அவர் எவ்வளவு பெரிய மேதை என நாம் அறியலாம்.

வ.உ.சி. யால் பதிப்பிக்கப்பட்ட நூல்கள்:

பதிப்புப் பணிகளில் வ.உ.சி. மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். அவரின் பதிப்புப் பணிக்கான பின்புலத்தை பின்வருமாறு சாலை இளந்திரையன் சுட்டிக் காட்டுவார். இளமையிலும் சிறை வாசத்தின் போதும் அவர் கற்ற நூல்கள் இப்போது அவரது கவனத்தை ஈர்த்தன. தம்மை வளர்த்து இலட்சிய நெறிக்கு உயர்த்திய அந்த நூல்கள் காலத்துருவேறி உருமாறிக் கிடப்பதைக் கண்டு அவர் நெஞ்சம் பதைத்தது. அவைகளில் படிந்த அழுக்குகளை அகற்ற வேண்டும் என்று முடிவு செய்தார். தொல்காப்பியம், திருக்குறள் முதலிய தமிழரின் பெட்டகங்களைத் துலக்கிக் கொடுக்க வேண்டியது அக்காலத்து வேண்டிய பணி என்று அவர் நெஞ்சம் கருதிற்று.3 திருக்குறள் (மணக்குடவர் உரையுடன்) தொல்காப்பியம் (இளம்பூரனார் உரையுடன்) ஆகியவற்றை அறத்துப்பால் எழுத் ததிகாரம், பொருளதிகாரம் உள்ளிட்ட ஏழு நூல்களாகப் பதிப்பித்தார். மேலும் பதிப்புப் பணி என்பது சாதாரணப் பணியல்ல. நூல் ஆசிரியர், உரை ஆசிரியர், விரிவுரை ஆசிரியர் ஆகியோருக்கு உள்ள மதிப்பு பதிப்பாசிரியருக்கும் அளித்தல் வேண்டும் என்பது ஒப்புக் கொள்ளக்கூடிய ஒன்றே. மூவருக்கும் உள்ள அறிவு பதிப்பாசிரியருக்கும் இன்றியமையாதது[4] என்பார் டாக்டர் அ. சிதம்பரநாத செட்டியார். பேராசிரியர் வையாபுரிபிள்ளையிடம் இளம்பூரணர் உரைப்பிரதி இருப்பதை அறிந்து, அவருக்கு 1913-இல் வ.உ.சி. கடிதம் எழுதினார். இதிலிருந்து இருவரும் இலக்கியத் தோழர்களானார்கள். தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் களவியல், கற்பியல், பொருளியல் அதிகாரங்களை 1933 ஆம் ஆண்டும், 1935-ஆம் ஆண்டில் முதல் இரண்டு அதிகாரங்களைத் தவிர்த்து மற்ற ஏழு அதிகாரங்களையும் பதிப்பித்துள்ளார்.

வ.உ.சி. யின் அரசியல் சொற்பொழிவு:

வ.உ.சி. தலை சிறந்த மேடைப் பேச்சாளர்.சேலத்தில் நடந்த மூன்றாவது காங்கரசு மாநாட்டில் அவர் நிகழ்த்திய தலைமையுரை 'எனது அரசியல் பெருஞ்சொல்' என்ற தலைப்பில் நூலாக வெளி வந்துள்ளது.

பத்திரிகை ஆசிரியராக வ.உ.சி.:

வ.உ.சி. 1900 – இல் சுவாமி வள்ளிநாயகம் என்பவருடன் இணைந்து 'விவேகபானு' என்னும் இதழினைப் பிரசுரித்தார். வ.உ.சி.யின் முதல் அரசியல் கட்டுரை 'சுதேசாபிமானம்' என்ற தலைப்பில் மதுரை விவேகபானுவில் 1906 பிப்ரவரியில் வெளிவந்தது.இந்து நேசன், தி நேசனல் போன்ற பத்திரிகைகளுக்கும் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இலங்கையிலிருந்து வெளிவந்த வீரகேசரி நாளிதழில் வ.உ.சி. '14, மே 1933 முதல் 14, அக்டோபர் 1934 வரை சுமார் எழுபது வாரங்கள் 'பாரத ஜோதி ஸ்ரீ திலக மகரிஷி' என்ற தலைப்பில் தொடர் கட்டுரை எழுதினார். வ. உ. சி பல்வேறு செய்திகளைப் பற்றி வெவ்வேறு பத்திரிகைகளில் நிறைய கட்டுரைகள் எழுதியுள்ளார். அவற்றுள் சில கடவுளும் பக்தியும், கடவுள் ஒருவரே, மனிதனும் அறிவும், மனமும் உடம்பும் என்பனவாகும். 17-01-1936-இல் தினமணியில் வெளியான 'உலகமும் கடவுளும்' என்பதே வ.உ.சி. யின் கடைசிக் கட்டுரை.

மொழி பெயர்ப்பாளராக வ.உ.சி.:

வ.உ.சி. நான்கு நூல்களை மொழிபெயர்த்துள்ளார். அவையனைத்தும் ஜேம்ஸ் ஆலன் என்பவரால் எழுதப்பட்டது. மொழிபெயர்ப்புப் பணி அவ்வளவு எளிதானதல்ல. எளிதாகப் புரிந்து கொள்வதற்காக சில வார்த்தைகளைச்சேர்த்தும்சிலவார்த்தைகளைச்தவிர்த்தும்மொழிபெயர்த் துள்ளதாக வ.உ.சி.கூறுகிறார். வ.உ.சி.யின் மொழிபெயர்ப்பு நிறைவான தாகவும் மதிப்பு மிக்கதாகவும் அவரது திறமையை வெளிப்படுத்து வதாகவும் அமைந்துள்ளது. அவை அனைத்துமே அறத்திற்கு முக்கியத் துவம் கொடுக்கக் கூடிய நூல்களாகும்.

ஜேம்ஸ் ஆலனின் 'As a man Thinketh' என்ற நூலை வ.உ.சி. 'மனம் போல் வாழ்வு' என்று 1909 இல் மொழி பெயர்த்தார். மனிதர்களின் எண்ணங்களே அவர்களது வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றன. எண்ணங்களே விதைகள். செயல்களே மலர்கள். இன்பங்களும் துன்பங்களும் கனிகள். எண்ணங்களே சொற்களாகவும் செயல்களாகவும் பழக்கமாகவும் மாறுகின்றன. பழக்கமே ஒரு மனிதனின் ஒழுக்கமாக மாறுகிறது.[5]

'Out from the heart' என்ற நூலை வ.உ.சி. 'அகமே புறம்' என்று 1914 இல் மொழி பெயர்த்தார்.'From Poverty to Power'என்ற நூலின் முதல் பகுதி 'The Path of Prosperity' ஆகும். அதனை வ.உ.சி. 'வலிமைக்கு மார்க்கம்' என்று 1916 இல் மொழி பெயர்த்தார்.'From Poverty to Power'என்ற நூலின் இரண்டாம் பகுதி 'The way to peace' ஆகும். அதனை வ.உ.சி. 'சாந்திக்கு மார்க்கம்' என்று 1934 இல் மொழி பெயர்த்தார். மூல நூல்களைப்

போலவே இந்த மொழிபெயர்ப்பு நூல்களைப் படிப்பவர்களும் வ.உ.சி. யின் அருமையை உணர்ந்து கொள்ளலாம்.

அறநெறிப்பாடல்கள், மரபுவழிபட்ட கருத்துக்கள், ஈகை, அன்பு உண்மை, கொலையின் கொடுமைகள், இறைநெறிப்பாடல்கள், கடவுளின் உண்மைத் தன்மை, கடவுளின் சிறப்புக்கள், கடவுளின் இயல்புகள், உயிரின் இயல்புகள், இறைக் கொள்கை, பக்திமுறை, பரந்துபட்ட எண்ணப்போக்கு, நன்றி பாராட்டும் இயல்பு, நெருக்கடி அனுபவங்கள், இரங்கற்பாடல்கள், புலம்பற்பாடல்கள், வாழ்த்துப் பாடல்கள், பல்சுவை நறுக்குகள், ஈற்றடி கொடுக்கப் பாடிய பாடல்கள், தன்னாற்றலை வெளிப்படுத்தும் பாடல்கள் போன்றவை வ. உ. சி யின் கவி பாடும் கலைத்திறனைக் காட்டுகின்றன

முடிவுரை:

அரசியல் உலகில் அஞ்சா நெஞ்சர் வ.உ.சி. 18-11-1936 அன்று இயற்கை எய்தினார்.தமிழ் இலக்கிய இலக்கணப் புலமை பெற்ற வ. உ. சி படைப்பாசிரியராகவும், உரையாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும், மொழி பெயர்ப்பாசிரியராகவும் பணியாற்றித் தமிழ் மொழிக்குப் பெருந்தொண்டாற்றியிருக்கிறார். பண்டையத் தமிழ் மரபுக் கவிஞராகவே வ. உ. சி விளங்கினார். வ. உ. சி யின் கவிதைத் திறனை அவருடைய பாடற்றிரட்டு எனும் தனிப்பாடல்களின் இரு பாகங்களிலும், அவரது சுயசரிதையிலும், மெய்யறம் எனும் நூலிலும் நாம் காண முடிகிறது. இந்த ஆய்வுக் கட்டுரை வாயிலாக வ. உ. சிதம்பரனார் தமிழ் இலக்கிய உலகிற்கு ஆற்றிய பங்கினை தெளிவாக அறிய முடிகின்றது.

சான்றெண் விளக்கம்:

1. டாக்டர் தி லீலாவதி, தமிழ் தந்த வ.உ.சி., ப. 26.
2. இந்து நாளிதழ் 22-09-2001
3. சாலை இளந்திரையன், புகழ் மணக்கும் வாழ்க்கை சுடர் வ.உ.சி. மலர், ப. 24
4. டாக்டர் ஆ. சிதம்பரநாதனார், தமிழோசை, ப.126
5. வ.உ.சி. நூல் திரட்டு. ப. 615.

துணைநூற்பட்டியல்:

- தமிழ் தந்த வ. உ. சி, டாக்டர் தி லீலாவதி, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை -13 (1986).
- புகழ் மணக்கும் வாழ்க்கை கட்டுரை, சாலை இளந்திரையன் சுடர் வ.உ.சி. மலர் – 13,தில்லி தமிழ்ச்சங்கம் வெளியீடு, தில்லி. (1964).
- தமிழோசை, டாக்டர் ஆ. சிதம்பரநாதனார், புதுமைப்பிரசுரம் பெண்ணாடம் (1955).
- வ.உ.சி. நூல் திரட்டு , (தொகு) வீ. அரசு , சந்தியா பதிப்பகம் 177/103, முதல் தளம், அம்பல்ஸ் கட்டிடம், லாயிட்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600014.

81

வ.உ.சி.யின் பன்முக ஆளுமைத்திறன்

சு. தெய்வரத்தினா
தமிழ்த்துறை, உதவிப் பேராசிரியர், துணை முதல்வர்,
தொன் போஸ்கோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கீழ ஈரால், தூத்துக்குடி,

ஆய்வுச்சுருக்கம்:

இந்திய விடுதலைப் போராட்டத்தின் முன்னணி தலைவர்களுள் ஒருவரான வ.உ.சிதம்பரனாரின் பன்முக ஆளுமைத் திறன்களை விரிவாக ஆராய்கின்றது. அவரது இலக்கியப் பங்களிப்புகள், சமூகப் பொறுப்பு மற்றும் நெறிமுறை மதிப்புகள், தலைமைத் திறன், பேச் சாற்றல். நிர்வாகத்திறன், தேசப்பற்று, சமூகப் பொறுப்பு இக் கட்டுரையில் விவரிக்கப்படுகின்றன. ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து அவர் மேற்கொண்ட செயல்பாடுகள் அவரது தைரியத்தையும் மன உறுதியையும் வெளிப்படுத்துகின்றன.

முன்னுரை:

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் வ.உ.சிதம்பரனார் ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளார். 'கப்பலோட்டிய தமிழன்' என்று போற்றப்படும் அவர், ஒரு சுதந்திரப் போராட்ட வீரர் மட்டுமல்லாமல் திறமையான தலைவர், சிறந்த பேச்சாளர், எழுத்தாளர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார்.

வ.உ.சி.யின் செயல்பாடுகளாக நேர்மை, ஒழுக்கம், ஆற்றல், தமிழ்ப்புலமை, மக்கள் செல்வாக்கு, தொழிலாளர் உரிமைகளில் அர்ப்பணிப்பு மற்றும் தேசபக்தி ஆகியவற்றாலும் உணர்வுப்பூர்வமான ஆற்றலுடன் பயணித்தார். அவர் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கி, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குச் சவால் விடுத்து, மக்கள் மனதில் விடுதலை உணர்வைத் தூண்டினார். ஆதலால், அவரது பல்துறை ஆளுமையை மாணவர்கள் புரிந்து கொள்ள உதவும் நோக்கத்துடன் எழுதப்பட்டுள்ளது.

இலக்கியப் பங்களிப்புகள்:

வ.உ.சி. எழுத்துக்கள் அறிவுத் தெளிவையும், தேசப்பற்றையும் வளர்க்கும் வகையில் அமைந்திருந்தன. இலக்கியத்தின் மூலம் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த முயன்றார். தன் பாதி வாழ்க்கையை ஆறுதலுடைய இலக்கியப்பணி நோக்கிச் சென்ற பாதையை வகுத்துக் கொண்டார். இதனை ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள்,

'செக்கிழுத்த துயரத்தை மாற்றியது என்
செந்தமிழன்றோ

கைத்தோல் உரிய கடும்பணி புரிந்த போது

என் கண்ணீரை மாற்றியது கன்னித்

தமிழன்றோ

தொல்காப்பியத்தைப் படித்து படித்து

தொல்லையெல்லாம் மறந்தேன்

இன்னிலையைக் கற்று என் இன்னல்களை

எல்லாம் வென்றேன்.' (1)

கடுமையான மன உளைச்சல், வறுமை, ஆங்கிலேயர் அரசின் தொடர் கண்காணிப்புக்கிடையே தனது இலக்கியப் பணிகளை மேற்கொண்டவர் வ. உ. சிதம்பரம் பிள்ளை என்கிறார். அவர் படைத்த 'பாடற்றிரட்டு' ஆகச் சிறந்த கருணை வகை இலக்கிய வகையில் அடங்கும் எனும் நோக்கில் ரெங்கையா முருகன் நாடும், இலக்கியமும் மூச்சென வாழ்ந்த வ.உ.சி. கட்டுரையில் நவின்றுள்ளார்.

இரட்டை ஆயுள் தண்டனை, உயிர்த்துணையை விட்டுப்பிரிதல், தன்னுடைய சுயப் பங்குதாரரர்களைக் கொண்டே கப்பல் கம்பெனியை முடக்கி நசுக்கி சீரழித்தல், அடிமேல் அடி, உடலாலும் உள்ளத்தாலும் கை நோவ, கால் நோவ கல்லுடைத்து, செக்கிழுத்த வகையிலும் மனஉளைச்சல் ஆகியவை இடையூறு ஏற்படுத்துவதாக இருப்பினும், வ. உ. சிதம்பரம்பிள்ளையின் நெஞ்சுரம் நம்மை வியக்க வைக்கும் பேராற்றல் உறுதியை வெளிப்படுத்தும் வெண்பாவில் 'எமனைக் கூட எட்டி உதைப்பேன்' என்ற தொனியில் வெளிப்படும் பாடல் இதோ,

'என் மனமும் என்னுடம்பும் என்சுகமும்

என்னறமும்

என்மனையும் என்மகவும் என்பொருளும் -

என் மணமுங்

குன்றிடினும் யான் குன்றேன் கூற்றுவனே

வந்திடினும்

வென்றிடுவேன் காலால் மிதித்து'

மேற்கண்ட வெண்பா சமயக்குரவர் நால்வருள் மூத்தவரான திருநாவுக்கரசர் பல்லவ மன்னனுக்கு எதிராக 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்' (2) என்ற தேவார வரியோடும், திருமூலரின் 'ஆராலும் என்னை அமட்ட ஒண்ணாது' (3) என்ற திருமந்திரத்தோடும், 'காலா உனை நானும் சிறுபுல்லென மதிக்கிறேன்' (4) எனும் பாரதியின் வரிகளோடு ஒப்பத்தக்கதாக அமைந்துள்ளது.

வ.உ.சி. சத்தியத்தின் பாதையைத் தேர்ந்தெடுத்தவனின் புலம்பலாக வெளிப்படுத்திய வெண்பா,

'எல்லாரும் கைவிட்டார் ஏந்திழையும் துன்புற்றாள்

வல்லாறும் வல்லுநரும் - செல்லா

திவன்பேச் சினிெயன்றெனை இகழ்ந்தார்

என் மெய்த்தவத்தவன் பூமிநாதன் தடத்து’

என்ற வரி சத்தியத்தின் ஆளுமையை வ.உ.சி. தனது நண்பரான சிவராமன் அவர்களுக்கு எழுதியுள்ள இக்கடிதத்தின் வாயிலாக நம் நெஞ்சை உருக்குவதாக அமைந்துள்ளது என்கிறார் ரெங்கையா முருகன்.

சமூகப்பொறுப்பு மற்றும் நெறிமுறை மதிப்புகள்:

வ. உ. சி சமூக முன்னேற்றத்தில் ஆழ்ந்த அக்கறை கொண்டவர். சாதி, மத வேறுபாடுகளுக்கு அப்பால் மக்களை ஒன்றிணைக்க முயன்றார். சமூக ஒற்றுமை மற்றும் தேசிய ஒற்றுமை அவரது வாழ்க்கையின் முக்கிய நோக்கமாக இருந்தது. கொடுத்து கொடுத்து சிவந்த கரங்கள், கோரல் மில் போராட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு அன்னமிட்டு, அனைத்து அமைப்பினரையும் ஒருங்கிணைத்து வெற்றி அடையச் செய்த வ.உ.சி. யின் மற்றொரு புலம்பலாய்,

‘வந்தகவி ஞர்க்கெல்லாம் மாரிெயனப் பல்பொருளும்

தந்த சிதம்பரன் தாழ்ந்தின்று – சந்தமில் வெண்

பாச் சொல்லிப் பிச்சைக்குப் பாரெல்லாம் ஓடுகின்றான்

நாச் சொல்லும் தோலும் நலிந்து’

சிறைக்குப் போகும் முன்பு வ.உ.சி. யின் செல்வாக்கான நிலை வேறு சிறையை விட்டு வெளிவந்த பிறகு வறுமை என்னும் கொடும்பேய் அவரது நாச்சொல்லை நலிய வைக்கும் அளவுக்கு அவல நிலையை வெளிப்படுத்தும் இந்த புலம்பல் வெண்பாவானது, நம் மனதைக் கலங்கடிக்கும் வகையில் அமைந்துள்ளது என்பதனையும் கட்டுரையில் ரெங்கையா முருகன் நவின்றுள்ளார். சமூக அநீதி, அடிமைத்தனம், மூடநம்பிக்கைகள் ஆகியவற்றிற்கு எதிராகவும், சமத்துவம், கல்வி, மனித மரியாதை ஆகியவற்றையும், சமூக முன்னேற்றம் இல்லாமல் தேசிய முன்னேற்றம் இல்லை என்ற கொள்கையையும் கடைப்பிடித்தார் வ.உ.சி.

மன உறுதி மற்றும் தைரியம்:

வ. உ. சிதம்பரம் பிள்ளை கடுமையான சிறைவாசம் அனுபவித்தார். சிறையில் அவருக்குக் கொடுக்கப்பட்ட கொடுமைகள், அவரது உடலை மட்டுமல்லாமல் மனதையும் சோதித்தன. ஆனால், அவர் தனது கொள்கைகளை ஒருபோதும் கைவிடவில்லை. மேலும், வ.உ.சி. யின் சுயசரிதையில் வின்செல் என்னும் சிறை அதிகாரி வ.உ.சி. யிடம் பக்குவமாக நடந்து கொள்ளுங்கள் என்ற அறிவுரை கூறிக் கொண்டே இருப்பாராம். வ. உ. சிதம்பரம் பிள்ளை ஒரு நாள் வெகுண்டெழுந்து முட்டாள் இத்துடன் எனக்கு அறிவுரை கூறுவதை விட்டுவிடு என்ற தொனியில்,

‘நீயோ புத்தி நிகழ்த்துகின்றவன்?

வாயை மூடடா மதியிலி. உனக்கும்

உன்னப்பனுக்கும் உன் சூப்பிரடெண்டு

உன்னையாள் கவர்னர் மன்னா தியர்க்கும்

புத்திகள் கூறும் பெற்றிமை யுடையேன்'

என்ற வரிகளால் வ.உ.சி. யின் அடிபணியாத ஆளுமை நெஞ்சுரம் வெளிப்படுகிறது. இந்நிகழ்வு அவரது மன உறுதியையும், தைரியத்தையும் வெளிப்படுத்தும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

நாமக்கல் கவிஞர்

'எல்லாரும் தேசபக்தர் இந்த நாளில்;

எத்தனையோ சிறைவாசம் இனிதாய்க் காண்போர்;

கல்லான மனத்தவர்க்கும் கண்ணீர்

கொட்டக் கனல்பட்ட

வெண்ணெயெனக் கரைவார் இன்றும்'(5)

நற்கவிதையினை வ.உ.சி. க்குப் படைத்த விதம் அருமை. வ.உ.சி. அவர்கள், சிறையில் இருக்கும் போது, வள்ளுவரின் வழி ' உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன் புண்அது உணர்வார்ப் பெறின்' (6) எனும் குறளும், ' கொல்லான் புலாலை மறுத்தானைக் கைக்கூப்பி எல்லா உயிரும் தொழும்'(7) எனும் குறளும் போன்று 'புலால் விலக்கல்' எனும் அறத்தை மேற்கொண்டிருந்தார், அப்பொழுது,

'ஜாதிபேதங்கள் பாரேன் எனினும்

தனியே சமைத்த புனித உணவைக்

கொள்ள யான் விரும்பிக் கொண்டு வந்தவன்பால்

'விள்ளடா உன்னூர்; விளம்படா உன்குலம்' என்றேன்'

என்ற கூற்றும், தேவகோட்டை மாணவர் சங்க ஆண்டு விழாவில் வ.உ.சி. சொற்பொழிவில், ஆற்றிய பாங்கில் சைவ சமயம் உயர்ந்ததென்பது உண்மைதான். ஆனால் ,சமயத்தில் உள்ள தெய்வத்தின் பேரால் பலி நிகழ்த்தல் கொடுமையாகும். அதனை நிறுத்த இச்சங்கத்தாரும் ஏனையோரும் முயற்சித்தல் இன்றியமையாததாகும். எங்கள் ஊரில் வட உலகம்மன் என்று ஓர் அம்மன் இருக்கிறது. அதற்கு ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியிடுவதைக் கண்டு தடுக்கும்போது பல தடைகள் வந்தாலும், இறுதியில் உயிர்ப்பலி நிறுத்தப்பட்டது. இதன் மூலம் அன்பர்கள் பலியிடும் வழக்கத்தை ஒழித்து உண்மைச் சிகாமணிகளாக இருக்குமாறு வேண்டிய பாங்கு சிறப்பிற்குரியதாகும்.

தலைமைத் திறன்:

வ.உ.சிதம்பரனாரின் முக்கியமான ஆளுமைத்திறன்களில் தலைமைத் திறன் முதன்மையானதாகும். அவர் மக்களை ஒன்றிணைத்து ஒரு குறிக்கோளுக்காகச் செயல்பட வைக்கும் ஆற்றல் கொண்டவராகவும், தூத்துக்குடியில் கப்பல் தொழிலாளர்களை அணிதிரட்டி, முதல்

தொழிற்சங்கத்தை அமைத்து, அவர்களுக்கு நியாயம் கிடைக்கப் போராடியவராகவும் திகழ்ந்தார். சுதேசியக் கப்பல் நிறுவனத்தை நிறுவியதன் மூலம், ஆங்கிலேயர்களின் கப்பல் ஆதிக்கத்தை எதிர்த்து இந்தியர்களும் தொழில்துறையில் முன்னேற முடியும் என்பதை அவர் நிரூபித்தார். இது அவரது துணிச்சல், நிர்வாகத்திறன் மற்றும் தீர்மானிக்கும் ஆற்றலை வெளிப்படுத்தும் விதமாகவும் அமைந்திருந்தது சிறப்பே. தனது உறுதியான நோக்கங்களால் மக்களைத் திரட்டி, சுதேசிக் கப்பல் நிறுவனத்தின் செயலாளர் போன்ற பொறுப்புகளை ஏற்று, தலைவராகவும் செயல்பட்டார். ஆதலால், பிரித்தானியரின் ஏகபோகத்தை எதிர்த்து, இந்தியர்களுக்கான முதல் சுதேசி கப்பல் நிறுவனத்தை (சுதேசி நாவாய் சங்கம்) 1906இல் நிறுவினார். இது ஒரு மகத்தான தொலைநோக்குச் சிந்தனை மற்றும் 'கப்பலோட்டிய தமிழன்' என்ற பெருமையைப் பெற்று தந்ததும் தலைமைத்திறனின் சிறப்பாகவும் அமைந்திருப்பதும் பெருமையே.

பேச்சாற்றல் மற்றும் தொடர்புத்திறன்:

வ.உ.சி. உரைகள் மக்களின் மனங்களில் தேசப்பற்றை விதைத்தன. எளிய மொழியில் உணர்ச்சிப்பூர்வமாக பேசிய அவர் இளைஞர்களையும் பொதுமக்களையும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட ஊக்குவித்தார். அவரது எழுத்துக்களும், உரைகளும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, சுயமரியாதை மற்றும் தன்னம்பிக்கை உணர்வினையும் வளர்த்தெடுக்கும் வகையில் மக்களை நெறிப்படுத்தினார்.

நிர்வாகத்திறன் மற்றும் தொழில்முனைவு:

சுதேசிக் கப்பல் நிறுவனம் வ.உ.சி. யின் நிர்வாகத்திறனை வெளிப் படுத்தும் முக்கிய சாதனையாகும். கடும் நிதி நெருக்கடிகளும், ஆங்கி லேயர்களின் அடக்குமுறைகளும் இருந்தபோதிலும், அவர் தனது முயற்சியைக் கைவிடவில்லை. இந்த செயல், அவரது திட்டமிடல் திறன், பொறுப்புணர்வு மற்றும் விடாமுயற்சியை வெளிப்படுத்துகிறது. வ.உ.சி. தனது திருக்குறள் வழி நூலான மெய்யறம் நூலில் தொழில் அறிதல், பொருட்சிறப்பு, உழவு, வாணிகம், கைத்தொழில், படைவகை, படையமைத்தல், படைக்கலம் போன்ற பல அதிகாரங்கள் வழியாக தற்சார்பு கொள்கைச் சிந்தனையை ஆத்திச்சூடி வடிவில் வெளிப்படுத்தியுள்ளார். வணிகத்திற்காக வந்த ஆங்கிலேய கூட்டு நிறுவனத்தை மிகத்துல்லியமாக, ஆங்கிலேய முதலாளிகளுக்கு எதிராக கோரல் மில் வேலை நிறுத்தம், ஆங்கிலேய கப்பல் கம்பெனிக்கு எதிராக சுதேசி கப்பல் நிறுவனம், ஆங்கிலேய அதிகாரிகளுக்கு எதிராக சென்னை ஜன சங்கம் ஆகிய மும்முனைப் போராட்டம் வழியாக இம்மூன்றினையும் எதிர் கொண்டவர். நிர்வாகத்திறமை மற்றும் அறிவுக்கூர்மைக்குச் சிறப்புச் சேர்க்கும் வகையில் தர்ம நெசவு சாலை, சுதேச பண்டக சாலை ஆகியவற்றை நிறுவி தொழில்முனைவுக்கும் வித்திட்டார். நீதிபதி பின்ஹே தனது தீர்ப்பில், நலிந்து கொண்டிருந்த தொழில் துறைகளை மீட்டுருவாக்குவதன் மூலம் சுயராஜ்ஜியத்திற்கான பாதையை

அடையமுடியும் என்று வழிகாட்டியவர் வ.உ.சி. என்று கூறியுள்ளார்.

முடிவுரை:

வ.உ.சி. அவர்களின் அரசியல் வாழ்க்கை உயர்ந்த ஒழுக்கமும், நேர்மையும் நிறைந்ததாக இருந்தது. தேசபக்தி, அயராத உழைப்பு, தமிழ் இலக்கியப் புலமை மற்றும் மக்கள் நலனில் அக்கறை கொண்ட தலைமைப் பண்பு ஆகியவற்றின் கலவையாகவும், வலிமை மிக்க பேச்சாற்றலாலும், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் புலமை பெற்று, சிறந்த எழுத்தாளராகவும், திகழ்ந்த விதமும், கட்டுரையின் வழி, இன்றைய இளைஞர்களுக்கு வ.உ.சி. யின் பன்முக ஆளுமைத்திறன் தமிழ்ச்சமூகத்திற்கு ஒரு வழிகாட்டியாக விளங்குகிறது. வ.உ.சி. ஒரு மனிதர் அல்ல; ஒரு யுகம் என்பதனைப் பறை சாற்றும் விதமாக அமைந்துள்ளது.

அடிக்குறிப்புகள்:

- திருநாவுக்கரசர் - மறுமாற்றத் திருத்தாண்டகம் பா.எ: 1 முதல்வரி
- ரா.பி.சேதுப்பிள்ளை – தமிழின் பெருமை ப.எ:34 - 35
- திருமந்திரம் -பா.எ:1927
- பாரதியார் கவிதைகள் - பா.எ. 1 ப.எ:272
- புலவர்.செஞ்சொற்கொண்டல் சொ.சிங்காரவேலன்,எம்.ஏ.,டிப்.லிங்.,) - கப்பலோட்டிய தமிழர் வாழ்வும் போக்கும் கட்டுரை- ப.எ: 8
- திருக்குறள் பரிமேலழகர் உரை - கு.எ:257 ப.எ: 117
- மேலது – கு.எ:260 ப.எ:117
- திருநாவுக்கரசர் தேவாரம்- திருக்குறுந்தொகை பதிகம் - பா.எ:8 பா.வரி:7

துணைநூற் பட்டியல்:

- கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. நூற்றாண்டு விழா மலர் - திங்கள் வெளியீடு, 1972.
- செஞ்சொற்கொண்டல் சொ.சிங்காரவேலன்,எம்.ஏ.,டிப்.லிங்.,) - கப்பலோட்டிய தமிழர் வாழ்வும் போக்கும் கட்டுரை
- திருக்குறள் பரிமேலழகர் உரை- புலியூர்க்கேசிகன், பூம்புகார் பதிப்பகம், சென்னை. பதிப்பு: மே 2018.
- பாரதியார் கவிதைகள் - ச.மெய்யப்பன் - பூம்புகார் பதிப்பகம்
- ரா.பி.சேதுப்பிள்ளை – தமிழின் பெருமை – அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு.
- ரெங்கையா முருகன் - நாடும், இலக்கியமும் மூச்சென வாழ்ந்த வ.உ.சி., https://aramonline.in/19063/v-o-chidambaram-153-birthday/
- வ. உ. சிதம்பரம் பிள்ளை, – மெய்யறம்., வ.உ.சி. நூலகம்., சென்னை. 2004., முதல் பதிப்பு.

82

வ.உ.சி.யைப் போற்றிய தமிழறிஞர்கள்

முனைவர் சே. முனியசாமி
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை.

ஆய்வுச்சுருக்கம்:

வ.உ.சி. யைப் பற்றி ஆய்வுநூல்கள் பல்வேறு பரிணாமங்களில் காணப்படினும் அவ்வாய்வுகளால் இவரை அடக்க முடியாது. மாறுபட்ட கோணங்களில் வ. உ. சியைப் பற்றிய ஆய்வு விரிவடைய வேண்டுமென்பது காலத்தின் கட்டாயம். இவ்வாய்வுக் கட்டுரையானது பெருங்கடலான வ.உ.சி.யின் வாழ்வியலைக் கடற்கரையில் பாதங்களை நனைக்கும் முயற்சியாகும். வ. உ. சி யைப் போற்றிய தமிழறிஞர்களின் பாடல்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமையும்.

திறவுச்சொல்: செக்கிழுத்த செம்மல், தீவிர தேசியவாதி, சிதம்பரப் பதிகம், தென்னகத்துத் திலகர்

முன்னுரை:

எவருக்கும் அஞ்சாமை, நேர்மை, செய்நன்றி மறவாமை, எளிமை, செயல், இறையன்பு, தேசப்பற்று, மொழிப்பற்று, முறையான இல்வாழ்க்கை, இன்முகம், இன்சொல், விருந்தினரை உபசரித்தல், ஏழைக்கு இரங்கல், தன்னம்பிக்கை முதலிய பல்வேறு பண்பு நலன்களைப் பெற்று சிறந்தவர் வ.உ.சி. இவரது சுதந்திரப் போராட்டத்தின் பங்களிப்பையும், மொழிக்குப் பணியாற்றிய சேவையும் நன்கு அறிந்த தமிழறிஞர்கள் இவரை மனதாரப் பாடியும் போற்றியும் உள்ளனர்.

தமிழில் குறிப்பிடத்தக்கத் தமிழறிஞர்கள் பலர் உள்ளனர். அவற்றில் மு.ரா.அருணாச்சலக் கவிராயர், சுத்தானந்தபாரதி, கவிமணி, சாலை இளந்திரையன், இரா.இளங்குமரனார், தேவநேயப் பாவாணர் ஆகியோர் வ.உ.சி. யைப் போற்றிப் பாடிய நிலையினையும் வ.உ.சி. குறித்த சிந்தனைகள் பற்றியும் கீழே காணலாம்.

மு. ரா. அருணாச்சலக்கவிராயர்:

கல்வியில் நிரம்ப அறிவு கொண்ட வ.உ.சி. யைப் பக்தி, ஞானம், அறிவு, கல்வி ஆகியவற்றில் பேரறிவு கொண்டவர் எனப் போற்றுகிறார். இவரைக் கற்பகமரம் எனவும் வர்ணித்துள்ளார். இதனை,

‘கற்பகமே கேட்டதெலாங் கண்டவர்க்குக்
கொடுக்குமெனக் கற்றோர் சொற்ற
ரற்பகலா வஃதெங்க ளிருப்பதென
வற்பகலா தலைந்து தேடி’

எனும் பாடல் அடிகள் மூலம் அறியலாம். (வ. உ. சிதம்பரனார் நூற்றாண்டு விழா மலர், ப.32) மு.ரா.அருணாச்சலக்கவிராயர் வ. உ. சியைக் 'குணமிகுந்த நாவலோன்' எனப் பாராட்டிப் புகழ்வதை அறிய முடிகிறது. இக்கூற்றானது வ.உ.சி. யின் பரந்த அறிவை வெளிக்கொணர்கிறது எனலாம்.

கவியோகி சுத்தானந்த பாரதியார்

வ.உ.சி. யை பலமுறை நேரில் கண்டு சந்தித்துப் பேசிய இவரை மனதாரப் பாராட்டுகின்றார் கவியோகி சுத்தானந்த பாரதியார். 'எனது சிலம்பம் வாள் வீச்சுகளை அவர் 'சவாசு பாண்டியா' என்று போற்றியுள்ளார். அவர் நெட்டான வீரத்திருவாளர்; முறுக்கு மீசையழகர், திருக்குறளை மூச்சுப்போல ஒப்பித்துப் பேசுவார். விடுதலை மேடையில் வீரரின் இடி முழக்கம் எங்களுக்குப் புத்துணர்ச்சி தருவது வழக்கம்' என வ.உ.சி. யின் செயல்பாட்டினை அழகுபட எடுத்துரைக்கின்றார். தேசத்திற்காக அவர் பட்ட பாடுகளை தம் பாடல்களில் அழகாக எடுத்துரைத்த கவியோகி சுத்தானந்த பாரதியார், விடுதலைப் போராளியாக அவரின் தியாகத்தையும் சிறை வேதனைகளையும், துன்பங்கள் அனைத்தையும் பெற்றுத் தந்த சுதந்திரத்தின் மதிப்பையும் உணர்த்துகிறது. அதுமட்டுமின்றி அவரது வாழ்வே தேசப்பற்று, வீரியம், நம்பிக்கை ஆகியவற்றை நமக்கு ஊட்டுகிறது. இதனை,

'சிதம்பரம் சிதம்பரம் என்றே -வீரஞ்
சிலிர்த்திடப் பாடுவோம் சேர்ந்திங்கு நன்றே
சுதந்தரக் கப்பலில் ஏறிப்- புவித்
துறைகளை யெல்லாம் துருவி யளப்போம்'

எனும் அடிகளின் மூலம் அறியலாம். (வ. உ. சிதம்பரனார் நூற்றாண்டு விழா மலர், ப.35) கவியோகி சுத்தானந்த பாரதியார் வ. உ. சியை நேரில் கண்டவர் என்பதால், வ.உ.சி. யின் பாராட்டும் தன்மையும், தமிழறிஞர்களையும், மொழிப் பற்றாளர்களையும் தன்பக்கம் இணைத்துக் கொள்ளும் வழக்கமுடையவர் என்பதை அறியலாம்.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை:

தேசபக்தி, நன்றி, உணர்வு, பொறுப்பு ஆகிய நான்கிலும் வெளிப்பட்டவர். வ. உ. சியை 'அவர் அன்று சிறை சென்றதால்தான் நாம் இன்று சுதந்திரமாக வாழ்கிறோம்' எனும் உண்மை நிலையினை முன்வைக்கின்றார் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை. இதனை யாராலும் மறுக்க முடியாது. மறக்கவும் முடியாது. இதற்குச் சான்றாக கீழ்க்கண்ட பாடல் அடிகள் எடுத்து விளக்கும்.

'கைநோவக் கால்நோவக் கல்லுடைத்துச் செக்கிழுத்து
மெய்சோர்ந்தும் ஊக்கம் விடாதுநின்ற -ஐயன்
சிதம்பரம் அன்றுசிறை சென்றிலனேல், இன்று
சுதந்திரம் காண்பாயோ? சொல்'

(வ. உ. சிதம்பரனார் நூற்றாண்டு விழா மலர், ப.35). சிறையில் இருப்பது மட்டுமின்றி. கல்லுடைத்துச் செக்கிழுத்தல் என்பது கடுமையான பணி. உடல்சோர்வுகளின் ஊடே உட்படுத்தப்பட்டுள்ளார். ஆங்கிலேயர் வ.உ.சி. யின் மன உறுதியை உடைக்க நினைத்தாலும், மனம் தளராது உறுதி கொண்ட நெஞ்சமுடையவராய் இறுதிவரை சிறை தண்டனை பெற்றுள்ளார். தன் சுதந்திரம் தன் விடுதலை எனும் சிந்தையைக் கைக்கொண்டிருந்தால் பாரதம் விடுதலை பெற்றிருக்காது. பொதுவுடைமைச் சிந்தையுடையவராய்த் திகழ்ந்தமையை அவரது தியாக உணர்வு வெளிப்படுத்துகின்றது.

சாலை இளந்திரையன்:

வ.உ.சி. யின் வாழ்வியலை உற்று நோக்கிய சாலை இளந்திரையன் அவரின் தியாகம், வீரம், அகிம்சை, துன்ப அனுபவம், சுதேசி சிந்தனை ஆகியவற்றை தனது பாடலில் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். பாலகங்காதர திலகரைப் போலவே தென்னகத்தில் தீவிர தேசியவாதியாக விளங்கியதால் ‘தெக்கணத்துத் திலகரெனப் புகழும் பெற்றார்’ எனக் குறிப்பிடுகின்றார். சிங்கம் போல வலிமைமிக்க ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து, அச்சமின்றி போராடிய வ.உ.சி. யின் வீரத்தைப் புகழ்கின்றார். இதனை,

‘செக்கிழுத்தார்; சிறைசென்றார்; தியாகம் செய்தார்;
சிங்கமெனும் ஆங்கிலேயர் பிடரி தன்னைச்
சிக்கெனவே பிடித்தாட்டும் விதமாய் எட்டும் விதமாய்ப் போட்டிச்
சிறுகப்பல் கடல்தூரத்துக் குடியில் விட்டார்;
தெக்கணத்துத் திலகரெனப் புகழும் பெற்றுத்
தேசீயக் கனல்எரிய விறகாய் ஆனார்;
தக்கவர்க்குத் தக்கவாறு நினைவுச் சின்னம்
தமிழரசு சமைத்திடுநாள் திருநாள் அன்றோ?’

எனும் பாடல் அடிகள் விளக்கி நிற்கும். (வ. உ. சிதம்பரனார் நூற்றாண்டு விழா மலர், ப.35). வ. உ. சி வாழ்ந்த போது அவர் பட்ட அனுபவங்களை நம்மால் கண்கூடாகப் பார்க்க முடியாவிட்டாலும் மேற்சுட்டிய பாடலில் அவரின் வலிகளை நம்மால் உணர முடிகிறது. ஆங்கிலேயரின் படைபலத்தைக் கண்டு அஞ்சியிருப்பின், சுதேசிக் கப்பலை இயற்றியிருக்க முடியாது. எனவே வ.உ.சி. துணிச்சல் மிக்கவராகவும், தேசியம் எனும் தீக்கொளுந்து விட்டு எரிய முற்பட்டுள்ளார் என்பதையும் அறியலாம்.

இரா. இளங்குமரன்

அகிம்சையின் பாதையில் ஓயாது போராடி வெற்றி கண்டவர் வ.உ.சி. அவரது சிறைப் போராட்டம் மற்றும் அவருடைய போராடும் பெருங்குணம் ஆகிய இரண்டும் நம் நாட்டின் விடுதலைக்கு வித்தாக அமைந்தது.

மக்களை எழுப்பும் வீர அழைப்பு, அன்னியர் ஆட்சியை ஏற்றுக்கொள்ளக் கூடாது, அடிமைத்தனத்திற்கு இடமில்லை, தாய்ப்பாலிலேயே ஊட்டப்பட்ட வீர உணர்வு, உரிமையே உயிர், அடிமை வாழ்வு இழிவு, தமிழரின் பழைய செல்வச் சிறப்பு, பொருளாதார அடிமைத்தனம், தமிழரின் பழைய செல்வச் சிறப்பு, வ. உ. சிதம்பரம் பிள்ளையின் வீர வாழ்வு முதலிய சிந்தனைகளை தன் பாடல் வாயிலாகப் பாடியுள்ளார். வ. உ. சி சுதந்திர போராட்ட வீரராக மட்டும் செயல்படவில்லை. இந்திய நாட்டு மக்களைத் தட்டி எழுப்பும் மானத் தமிழனாகவும் செயல்பட்டுள்ளார். மக்களின் மன நிலத்தில் சொல் எனும் ஏரை ஓட்டி, உணர்ச்சி எனும் விதையை விதைத்து, தேச உணர்வை வளர்த்ததால் மக்கள் மனதில் சுதந்திரத் தீ பற்றி எரிந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. இதனை,

‘செக்கிலே உழன்ற செம்மல் வ. உ.
சிதம்பரம் போலொரு சீரிய வீரர்
சொல்லெனும் நல்லேர் பூட்டிக் கேட்போர்
உளநிலத் தோங்கும் வளமிகு வித்தினால்
உணர்ச்சிப் பயிரை உலகுய வளர்த்திடும்
தன்மையைத் தெளிந்த வன்மையி னாலே
சொல்லேர் உழவராம் நல்லவோர் பட்டம்
நல்கினார் உழவராம் வள்ளுவச் சான்றோர்
‘வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை’ யென ஆய்ந்தே’

எனும் பாடலடிகள் விளக்கி நிற்கும். (வ. உ. சிதம்பரனார் நூற்றாண்டு விழா மலர், ப.35). வ.உ.சி. யின் விடுதலைப் போராட்டமானது அவருக்குப் பின்னால் வருகின்ற தலைமுறையினருக்குத் தேசப்பற்றை வலுவாக எடுத்துரைத்துள்ளது.

தேவநேயப் பாவாணர்:

‘தமிழ்மொழி ஞாயிறு’ என அழைக்கப்படும் தேவநேயப் பாவாணர் வ.உ.சி. யைப் பற்றி ‘சீரிய கொள்கைச் சிதம்பரப் பதிகம்’ எனும் தலைப்பில் பதிகம் ஒன்றைப் பாடியுள்ளார். இப்பதிகத்தில் வ. உ. சி யை தேச வீரர், தொழிலாளர் தலைவர், அறவழிப் போராளி, சமத்துவ குடும்ப மனிதன், தமிழறிஞர் எனப் பன்முகம் கொண்டவராகப் பாடியுள்ளார். இப்பதிகத்தில் பத்து பாடல்களில் கீழ்க்கண்ட பொருண்மைகளில் பாடியுள்ளார். காலத்தால் தாமதமான நன்றியுணர்வு, தொழிலாளர் நலக் கொள்கை, ஆங்கிலேயரின் சலுகைகளை மறுத்த நேர்மை, குடும்ப வாழ்வில் சமத்துவம், பிறப்பினால் உயர்வு இல்லை, அதிகாரத்தைக் கண்டிக்கும் துணிவு, சிறை வேதனைகளும் தாழ்வு வாழ்க்கையும், வன்முறையை மறுத்த கொள்கை, மொழி வெறுப்பற்ற மனிதநேயம், தமிழ்த் தொண்டு எனப் பத்து பாடல்களில் பதிகமாக மாலை சூட்டியுள்ளார். தேவநேயப்

பாவாணரின் பதிகத்தை ஆராய்கையில், வ. உ. சி யின் ஒட்டுமொத்த வாழ்வியலை மிகக் கூர்மையாக கவனத்தில் கொண்டு இயற்றியுள்ளார் என்பதைத் தெள்ளத் தெளிவாக விளங்க முடியும்.

'தொல்காப் பியப்பகுதித் தொல்லுரையும் ஒண்குறனின்
மல்கா வுரையொன்றும் மாண்டமிழ்க்கே - அல்காத
இன்னிலைப் புத்துரையும் ஏனைப் பதிப்புகளும்
துன்னிய வ.உ.சி. தொண்டு' -(சிதம்பரப் பதிகம்:10)

எனும் பாடலில், வ. உ. சி தமிழ் மொழிக்கு தமிழ்த் தொண்டாற்றிய நிலைகளான தொல்காப்பிய உரை, திருக்குறள் உரை, இன்னிலை, பதிப்புப் பணிகள் போன்றவற்றைச் செய்துள்ளார் என்பதை வர்ணித்துள்ளார்.

முடிவுரை:

மேற்சுட்டிய அறுவர் போற்றிய கூற்றுகளிலிருந்து குணமிகுந்த நாவலோன், விடுதலைப் போராளி, நாட்டிற்காக எல்லா தண்டனைகளையும்ஏற்றவர்,தீவிரதேசியவாதி,போராடும்பெருங்குணம் கொண்டவர், அறவழிப் போராளி எனப் பன்முகம் கொண்டவராக வ. உ. சி திகழ்ந்துள்ளார் என்பதனை இவ்வாய்வின் மூலம் அறியலாம். ஒரு தனிமனிதனை ஒட்டுமொத்த சமூகமும் போற்றுகின்றதெனில் தொடர்ச்சியாக அவருடைய தியாகத்தை இளம் தலைமுறையினரும் அறிந்து கொள்ளுதல் அவசியம். வ.உ.சி. சமூகக் கட்டுக்குள் கட்டுப்படாப் போராளியாக வ.உ.சி. வலம் வர வேண்டுமென்பதும் காலத்தின் கட்டாயம். அப்போதுதான் அவரது தேசப்பற்று மெய்ப்படும்.

துணைநூற்பட்டியல்:

1. கண்ணன். எஸ்., வ.உ.சி. ஒரு பன்முகப் பார்வை, 2005, உலகத்தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.
2. சம்பத்.ஆர்.என்., நவ பாரதச் சிற்பிகள் வ. உ. சிதம்பரம் பிள்ளை, மணி.பெ.சு (மொ.ஆ), பப்ளிகேஷன்ஸ் டிவிஷன், செய்தி ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய அரசு, புது தில்லி.
3. கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார் நூற்றாண்டு விழா மலர், செந்தமிழ்ச்செல்வி, செப்டம்பர்,1972.
4. வ. உ. சிதம்பரனார் நூற்றாண்டு மலர், 1872-1972, சென்னை.

83

வ.உ.சி.யின் இலக்கியப் பணி

முனைவர் ஜா. ஜூலி பிரதிபா,
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, லேடி டோக் பெருமாட்டிக் கல்லூரி, மதுரை.

ஆய்வுச்சுருக்கம்:

வ.உ.சி. யின் இலக்கியப் பணி, இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்துடன் இணைந்தது, தமிழ் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் வித்திட்டது எனலாம். தொழிற்சங்கங்களை உருவாக்கிய முன்னோடி, திருக்குறள் வழியில் வாழ்ந்த பெரியவர். இவரது படைப்புகள் வழிதமிழ் மொழியின்பெருமையைநிலைநாட்டி,மொழியின்வளர்ச்சிக்குத்தன்னால் இயன்ற மட்டும் உறுதுணையாகவும் இருந்தார். பன்முக ஆளுமைத்திறம் படைத்த வ.உ.சி.யி ன் இலக்கியப் பணி பல்வேறு தளங்களில் விரிந்தது. சிறந்த நாட்டுப்பற்று மிக்க இவர், தம் சிறைவாழ்வினை, இலக்கியப் பணி உருவாக்கத்திற்குப் பயன்படுத்திக் கொண்டார். அத்தகைய தகைசால் சான்றோர் வ. உ. சிதம்பரனாரின் இலக்கியப் பணி குறித்து ஆய்வதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும்.

முன்னுரை:

‘ஒருநாடு உரிமையோடு விளங்க வேண்டுமென்றால் முதலில் அதன் பொருளாதாரச் சுரண்டலைத் தடுக்க வேண்டும், இரண்டாவதாகத் தாய்மொழியின் வாயிலாக அறிவை வளர்க்கவேண்டும். இந்த இரண்டும் எல்லா நாடுகளுக்கும் பொதுவான உண்மை. இதனை நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே நன்றாக உணர்ந்து வாழ்க்கை யில் வாழ்ந்துகாட்டித் தொண்டு செய்தவர் வ.உ.சி.’[1] என்று டாக்டர் மு.வரதராசன் சொன்னது போல் நாடு, மொழி இரண் டிற்கும் பெருந்தொண்டாற்றிய பெருமகன். அவ்வகையில், வ.உ.சி. யின் இலக்கியப்பணி என்னும் தலைப்பில் இவ்வாய்வு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இலக்கியப் பணி:

சிதம்பரனார் விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்ட போதிலும் இலக் கியப்பணி ஆற்றுவதிலும் முழுமுனைப்போடு இருந்ததைக் காணலாம். நூல்கள் படைப்புகள், மொழி பெயர்ப்புகள், பதிப்புப்பணி, உரைகள், நூல், கடிதங்கள், மேடைச் சொற்பொழிவுகள், போன்றவற்றின் வழி இலக்கியப் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில், சிதம்பரம் பிள்ளையவர்கள் தம் வாழ்நாளில் எட்டு நூல்கள், நான்கு மொழி பெயர்ப்பு, மூன்று பதிப்பு, மூன்று உரைகள் என மொத்தம் பதினெட்டு நூல்களை இயற்றியுள்ளார். அவை யாவன: வ. உ. சிதம்பரம் பிள்ளை சுயசரிதம் (1946), திருக்குறள் மணக்குடவர்

உரைபதிப்பு(1917), மனம்போல் வாழ்வு(மொழிபெயர்ப்பு தத்துவ நூல்) (1908), அகமே புறம் (தத்துவம்) (1914), மெய்யறம் (ஆன்மீகப் புரட்சி நூல்) (1914), திருப்பொய்கையார் இன்னிலை (பதினெண் கீழ்க்கணக்கு உரைநூல்) (1917), தொல்காப்பியம் இளம்பூரணர் (பொருளதிகாரம்) உரைபதிப்பு(1928), வலிமைக்கு மார்க்கம் (மொழிபெயர்ப்பு நூல்) (1916), சாந்திக்கு மார்க்கம் (தத்துவம்) (1934), சிவஞானபோத உரை (சைவசித்தாந்த உரைநூல்) (1935), மெய்யறிவு (அறநூல்) (1929), தனிப்பாடல் திரட்டு (1915), திருக்குறள் - அறத்துப்பால் வ.உ.சி. உரை (1917), வ.உ.சி. கண்ட பாரதி (1936), ஈ.வெ. இராமசாமிக்கும் திரு. வி. க. வுக்கும் மடல்கள், வள்ளியம்மை சரித்திரம் இவைதவிர, இவரின் இலக்கியப் பணிகள், சுதேசி இயக்கம், தொல்காப்பியம் பொருளதிகாரம், ஆன்மிகம், கடிதம், மேடைப்பொழிவுகள், இதழ் எனப் பல்வேறு தளங்களில் பரந்து விரிவடைந்தன.

மொழிபெயர்ப்பு ஆசிரியர்:

தேசத்தொண்டு காரணமாகச் சிறைக்கோட்டம் புகுந்த சிதம்பரம் பிள்ளை, சிறைக் கோட்டத்தில் ஓய்ந்த நேரங்களில், தாம் இளமை முதலே ஆர்வம் கொண்டிருந்த தமிழ்த் தொண்டில் சித்தம் செலுத்தி வந்தார். ஆங்கில நாட்டு ஞானியான ஜேம்ஸ் ஆலன் என்பார் இயற்றிய சில அரிய நூல்களை ‘மனம் போல வாழ்வு’, ‘அகமே புறம்’, ‘வலிமைக்குமார்க்கம்’ என்ற பெயர்களுடன் மொழிபெயர்த்தார். வேறுசில தமிழ் நூல்களையும் இயற்றினார். இவற்றுள் ‘மனம் போல வாழ்வு’ பிள்ளையவர்கள் சிறையில் இருந்த பொழுதே, இந்தப் புத்தகத்தின் முதற்பக்கத்தில் காகிதம், அச்சு, மை அனைத்தும் சுதேசியம் என்ற குறிப்புடன் வெளியாயிற்று. மற்ற நூல்களைப் பிள்ளையவர்கள் சிறை யிலிருந்து வெளிவந்த பின்னர் வெளியிட்டார். உலகப் பொதுமறையான திருக்குறளை நன்றாக ஆராய்ச்சி செய்வதற்கு உரிய தருணம் அவருக்குச் சிறைக்கோட்டத்தில் கிடைத்தது. திருக்குறள் மீது சிதம்பரனாருக்கு இருந்த ஆர்வம் சொல்லும் தரத்தன்று. ‘திருக்குறள் மக்கள் அடைவதற்குரிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களையும் அவற்றை அடையும் நெறி களையும், ஞாயிறு போல விளக்குகின்ற ஓர் அருமையான நூல். அதன் ஒப்புயர்வற்ற பெருமை, அதனை ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் சமய நூலென்றும் அதன் ஆசிரியரைத் தத்தம் சமயத்தவரென்றும் கூறிவருகின்ற தொன்றாலேயே நன்கு விளங்கும்’2 என்ற திருக்குறள் உரைப்பாயிரத்தின் வழித் திருக்குறளை அனைத்து சமயத்தவரும் கற்றுத் தெளிதல் வேண்டும் என்ற உயரிய கருத்தினை முன்வைப்பதைக் காணலாம். ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளையும் பாயிரத்தோடு படியாத ஆண்மகனோ, பெண்மகளோ தமிழ்நாட்டில் இருத்தல் ஆகாதென்றும், தமிழ் வேதமான திருக்குறளைப்படியாத தமிழ்மக்கள் தமிழ் மக்கள் ஆகார் என்றும் பிள்ளையவர்கள் அழுத்தமாகக் கூறுவதும் வழக்கம். இதன்வழித் தமிழின் மீதும், இலக்கியத்தின் மீதும் இருந்த ஈடுபாட்டினை இவர் ஆற்றிய தமிழ்த்தொண்டுகளின் வழி அறியலாம்.

பேச்சுத்திறம்:

வ.உ.சி. எழுதுவதைப் போலவே பேச்சுத்திறனிலும் கைதேர்ந்தவர். அவரின் பேச்சுத்திறனுக்குச் சான்றிதழ், 'வ.உ.சி. சிறைவாழ்க்கையை மேற்கொள்ளக் காரணமாக இருந்த பின்ஹே என்னும் நீதிபதியின் தீர்ப்பு, அரச நிந்தனைக்கு இருபது ஆண்டுகள், சிவாவுக்கு உடந்தையாக இருந்தமைக்கு இருபது ஆண்டுகள் எனவும் அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக வ.உ.சி. அனுபவிக்க வேண்டுமெனவும் கூறியிருந்தது, சிதம்பரம்பிள்ளையின் பிரசங்கத்தையும் பாரதியாரின் பாட்டையும் கேட்டால்செத்தபிணம்உயிர்பெற்றுஎழும்,புரட்சிஓங்கும்.அடிமைப்பட்ட நாடு ஐந்தே நிமிடங்களில் விடுதலை பெறும்'3 இவை1908ஆம் ஆண்டு சிதம்பரனாருக்கு இரட்டை ஆயுள் தண்டனை அளித்த தீர்ப்பில் நீதிபதி பின்ஹே எழுதியுள்ள வரிகளே. வ.உ.சி.யின் விடுதலை வேட்கைக்கும் வேகத்துக்கும் இதனைவிடச் சிறந்த அங்கீகாரத்தை வேறு எவரும் தந்து விட முடியாது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சுயசரிதை:

சிதம்பரனாரின் 'சுயசரிதை' மற்றவரின் தன்வரலாறு நூல்களில் இருந்து வேறுபட்டது. 'வ.உ.சி. சுயசரிதை' என்ற நூல் அவர் சிறையில் இருக்கும்பொழுது, லோகோ பகாரி இதழாசிரியர் பரலி. சு. நெல்லையப்பர் கேட்டுக் கொண்டதற்கு ஏற்ப எழுதப்பட்டது. வ.உ.சி. பற்றிய புரிதலுக்குச் சிறந்த ஆவணமாக இந்நூல் அமைகிறது.

'மாயிரு ஞாலம் வழங்கும் கொல்லம்
ஆயிரத்து நாற்பத் தெட்டாம் ஆண்டினில்
அளகையம் பதியினில் ஆவணி அத்தத்தில்
வளமுள என்மனை மாண்புறப் பிறந்தேன்'4

எனத்தனது பிறப்பு பற்றி சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார். வ.உ.சி. க்குத் தந்தை உலகநாதர் கல்வியில் மிகவும் உறுதுணையாக இருந்தார். அதனை,

'சிந்தையைத் திருப்பித்திருச்சிக்கேகி
நடுவினைத் திறக்கும் நன்னிலைக் கல்வியைக்
கடிதினிற் கல்லெனக் கட்டளையிட்டனன்'

(சுயசரிதை ப.16) என்கிறார்.

அரசு வழக்கறிஞர் வ. உ. சியிடம் சிறை வாழ்க்கை எத்தன்மையதாக உள்ளது? என்று வினவும் போது,

'சில நாள் நீயவண் சென்றமர்ந்திருந்தால்
நலமெலாம் காண்பாய் நன்றா'யென்றேன்' - (சுயசரிதை ப.126)

என மறுமொழி நல்குவதைக் காணலாம். வ.உ.சி. அரசியல் தலைவர், இலக்கியக் கலைஞர், நாட்டுத்தொண்டு, இலக்கியத் தொண்டு புரிந்த வ. வே. சு. ஐயர், பாரதிக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

மெய்யறிவு:

வ.உ.சி. கண்ணனூர் சிறைச்சாலையில் இருந்த காலத்தில் அங்கிருந்த குற்றவாளிகளுக்கு அறிவுரை கூறிவருவதுண்டு. இவ்வாறு அறிவுரை கூறுவதைப் பாக்களாக எழுதித் தந்தால் மனப்பாடம் செய்வதற்கு எளிதாக இருக்கும் என்று அந்த கைதிகள் தெரிவித்தனர். அவருடனிருந்த குற்றவாளிகள் திருந்தும் பொருட்டு, அவர் வழங்கிய அறவுரைகள் அனைத்தையும் தொகுத்து எழுத வேண்டுமென்ற உந்துதலால் எழுதப்படவில்லை. மாறாக எழுத வேண்டிய கட்டாயச்சூழல் என்னவெனில், முழுமையாகப் பிறர்மீது கொண்ட அக்கறையால் மட்டுமே எழுதப்பட்டது. சமுதாயத்தில் அனைத்து நிலைகளிலும் உள்ள மக்களும் உணரும்பொருட்டு படைக்கப்பட்டது. இதன் மையப்பொருள் உடலியற் கருத்துகள், மருத்துவக்கருத்துகள், சமுதாய அறங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு வ. உ. சி உருவாக்கியது 'மெய்யறிவு' எனும் நூல். இந்நூல் தி. செல்வகேசவராய முதலியாரின் முன்னிலையில் பழைய மரபுப்படி அரங்கேற்றம் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. 'அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தம் நான்கில், இன்பம் தவிர மற்ற மூன்றையும் உணர்த்தி நின்ற நூல்களின் சாரம் என்று கொள்ளத்தக்கது என்று வ.உ.சி. இந்நூல் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். நூறு வெண்பாக்கள் உள்ள இந்நூலை எழுதிய பின் பிறிதொருவர் இதற்கு உரை எழுதியுள்ளார். அவர்தம் பெயரை வெளிப்படுத்த விரும்பவில்லை'5 என்று வ. உ. சி குறிப்பிட்டுள்ளார்.

மெய்யறம்:

'மெய்யறம்' எனும் நூலைத் திருக்குறளின் வழிநூல் என வ.உ.சி. கூறுவதைக் காணலாம். தஞ்சை இராவ்பதூர் சீனிவாசப்பிள்ளைக்கு இந்நூலைக் காணிக்கையாக்கினார். இதைத் திருக்குறளை அடிப் படையாக வைத்து இயற்றியுள்ளார். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப்பொருள்களை அடைதலே இந்நூல் கூறும் பயன். சான்று பகர்கின்ற இடங்களில் திருக்குறளில் இடம்பெறும் சொல், தொடர்களைக் கையாள்வதை மரபாகக் கொண்டிருப்பதைக் காணலாம். சான்றாக,

'பயனில சொல்பவர் பதடியென் றறைப' *(பொய்ம்மை விலக்கல்: 4)*

'பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்' *(குறள்: 196)*

'புரைதீர் நலந்தரின் பொய்ம்மையும் வாய்மையாம்'
(பயனில் சொல் விலக்கல்:9)

'பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனில்'
(குறள்: 292)

மேற்கண்ட சான்றின்வழித் திருக்குறளின் மீது அவருக்கு இருந்த பற்றினையும் ஈடுபாட்டினையும் அறிய முடிகின்றது.

தனிப்பாடல் திரட்டு:

சிதம்பரனார் 1915ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பாடல் திரட்டில் 380 பாக்கள் உடையது. இவற்றுள் நூறுபாக்கள் கடவுளைப் பற்றியும், மற்றொரு நூறுபாக்கள் ஒழுக்கம் பற்றியும், நூற்றெண்பது பாக்கள் சுற்றத்தார், நண்பர்கள் உறவுமுறைத் தொடர்பில் அமைந்தோர்க்கு எழுதப்பட்டவை. தனிப்பாடல்களில் முந்நூற்றைம்பது வெண்பாக்களும், ஒரு தாலாட்டும், மூன்று விருத்தங்களும், பதினைந்து கட்டளைக் கலித்துறைகளும், நானூற்று நாற்பத்து மூன்றுவரிகள் கொண்ட பதினொரு நிலைமண்டில ஆசிரியப் பாக்களும் அடங்கி உள்ளன. வ.உ.சி. இயற்றிய பாடல்களை அறநெறிப் பாடல்கள், இறைநெறிப் பாடல்கள், தன்னிலை விளக்கப்பாடல்கள், வாழ்த்துப்பாடல்கள், பல்சுவை நறுக்குகள், தன்னாற்றலை வெளிப்படுத்துபவை எனப் பகுக்கலாம். வறியார்க் கொன்றீ வதே ஈகை என்பதைக் குறிப்பிடும் பாடலை, ‘இல்லார்க் கிரங்கி யுடனீவது தானீகை’(பா.தி. ப.3) என்ற வரியின்வழி ஈகைக்கு விளக்கம் தருவதைக் காணலாம்.

கடிதங்கள் வழி இலக்கியப்பணி:

வ.உ.சி. தனது குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் எனப்பலருக்குக் கவிதை வடிவில் பல கடிதங்களை இலக்கியச்சுவையுடன் எழுதியுள்ளார். அன்பார்ந்த நண்பர் அவர்களே! அன்பார்ந்த தம்பியவர்களே! எனக் கடிதத்தைத் தொடங்குவதைக் காணலாம். தனது தாய்க்குக் கடிதம் எழுதும்போது,

‘தாயே பரமாயி தாங்கி எனைப்பெற்று வளர்த்தாயே நினக்கென்ன யான் செய்தேன் -நோயே எனைச்சுமந்த நாள் தொடங்கி ஈந்தேனே அல்லால் நினைச்சுமந்து போற்றிலேனே நின்று’ (பா.தி.ப.38) என்று தனது தாய்க்கு எழுதிய கடிதத்தில் வல்லவனாகத் தாம்வாழ முடியாததால் ‘சான்றோன்’ என்னும் சொற்கேட்டுத் தாயை உவக்க வைக்க இயலவில்லை என மிகவும் வருந்தி எழுதுவதைக் காணலாம். ‘கோனாட்சி நீக்கிக் குடியாட்சி ஏற்படுத்தித் தானாட்சி செய்வலெனச் சாற்றி யோன் - மீனாட்சி என்றழைக்க உள்மகிழும் ஏந்திழையே உற்றனையோ இன்றழைக்கக் காணா இடர்’ (பா.தி. ப.41) என்று தமது சிறைப்பிரிவிற்காக வருந்தும் துணைவிக்காகக் கடிதம் வழியாகப் பிரிவுத்துயரத்தினை வேதனையுடன் வெளிப் படுத்தி வருந்துகின்றார்.

இயக்கங்களின் வழி இலக்கியப்பணி:

வ.உ.சி. யின் தமிழ்ப்பற்று, அரசியல் ஈடுபாடு, எழுத்துத்திறம் போன்ற பன்முகத் தன்மையைப் பாராட்டும் வகையில், ‘சிதம்பரம் பிள்ளையைப் போன்ற ஒரு தேசபக்தர் தியாகமூர்த்தி திலகர் பிரானுடைய பிரதம சிஷ்யர்களுள் ஒருவர், அன்னை பாரத தேவியின் விடுதலைக்காக மிகவும் கொடுமைகள் நிறைந்த சிறைவாசம் செய்து அருந்தவமாற்றிய அண்ணல், ஆழ்ந்த தமிழ் ஆராய்ச்சியுள்ள அறிஞர், அப்படி என்னைப் புகழ்ந்து தம் கவிகளைக் காட்டிலும் என் கவிகளில் உண்மைக் கவித்திறமிருப்பதாகச் சொன்னபோது, நான் ஆனந்த பரவசம் அடைந்து விட்டது அதிசயம்

அல்ல. அப்போது என் வயது முப்பத்து மூன்று, பிள்ளையவர்களுடைய வயது நாற்பத்தெட்டு வயதிலும் கல்வியறிவிலும், அனுபவத்திலும், தேசபக்தியிலும், தியாகத்திலும், என்னைக்காட்டிலும் எவ்வளவோ பெரியவரான, அவர் தம்முடைய கவியைக் காட்டிலும் என்னுடைய கவி உண்மைக் கவித்திறம் உள்ளது என்று சொன்னது அவருடைய சான்றாண்மைக்கு அறிகுறி என்று இன்றளவும் நான் எண்ணியெண்ணி இன்புற்று வருகிறேன்'6 என நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை வ.உ.சி.யின் தியாகம், நாட்டுப்பற்று, அரசியல் ஈடுபாடு போன்றவற்றைப் புகழ்ந்து கூறுவதைக் காணமுடிகிறது. பாமர மக்களை ஒருங்கு இணைத்து அவர்களைச் சிந்திக்கப் பழக்கியவர் வ.உ.சி. 'பொதுமக்கள் கருத்து' என்ற ஒன்றை அரசியல் சார்ந்த நிலையில் உருவாக்குதல் என்னும் அரிய சாதனையை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிகழ்த்திக் காட்டியவர். அதற்கு மேடைப்பேச்சை அவர் ஒரு கருவியாக்கிக் கொண்டார்.

வ.உ.சி.யின் அரசியல்வாழ்வும் தமிழ்வாழ்வும் ஒன்று கலந்து இணைகோடுகளாக வளரக் களம் அமைத்தது சுதேசி இயக்கம் (1905-1915). சுதேசி இயக்கத்திற்கு முன்பே, வ.உ.சி. யின் தமிழ்ப்பணி தொடங்கிவிட்டது. 'விவேகபாநு' (குற்றாலம்) என்னும் இதழில் ஆன்மிகக் கட்டுரைகள் வரத் தொடங்கிவிட்டன. என்றாலும், வ.உ.சி.யின் படைப்புகள் எளியோர்க்கும் புரியும் தன்மை யனவாய் மென்மையடைய சுதேசி இயக்கம் வழி வகுத்தது. எதுவாயினும் அது மக்களைச் சென்றடைய வேண்டும், மக்களுக்குப் புரியவேண்டும், மக்களின் உணர்வுகளை வெளிப் படுத்துவதாகவும் அமையவேண்டும் என்பன போன்ற மக்கள் இயக்கப்போக்கு, மொழி, இலக்கியம் சார்ந்த நிலையிலும் கிளைத்து வளர, சுதேசி இயக்கம் வழி வகுத்தது. மொழி யில் எளிமை, இலக்கியத்தில் எளிமை என்று அனைத்தும் மக்களை நோக்கித் திரும்ப வேண்டும் என்ற சிந்தனை பின்னாளில், தனியொரு இயக்கமாக மலர்ந்தது.

மேடைப் பேச்சின் வலிமை:

தூத்துக்குடியிலும் திருநெல்வேலியிலும் அந்நாளில் ஏற்பட்ட ஆங்கில எதிர்ப்பு உணர்விற்கு அடிப்படை வ.உ.சி.யின் சொற்பொழிவுகளே என்ற எண்ணம் நீதிபதி பின்ஹேயின் மனத்தில் ஆழப் பதிந்திருந்ததன் வெளிப்பாடே இரட்டை ஆயுள் தீர்ப்பு விவரம்: 'சாமானிய மக்களைச் சிந்திக்கப் பயிற்றுவித்து அரசியல் விழிப்பு பெறச்செய்த வ.உ.சி. யின் தன்னிகரற்ற வெற்றிதான் பின்ஹேயின் பார்வையில் மாபெரும் குற்றமாகத் தென்பட்டது. இரட்டை ஆயுள்தண்டனை வழங்க முதன்மைக் காரணமாக அமைந்தது. மக்களைத் திரட்டி, குறிப்பாகப் பாமர மக்களை ஒன்று சேர்த்து அவர்களுக்கு அரசியலைப் புரியவைத்தவர் வ. உ. சிதம்பரனார்.

அரசியல் வழியாகச் சிந்திக்கவும் செயல்படவும் பாமர மக்களைப் பயிற்றுவித்தார். 'முரசம் போன்ற தம் பேச்சால், சொற்பெருக்கால்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டில், சிறப்பாகத் திருநெல்வேலி மாவட்டத்தில் அரசியல் எழுச்சியை ஏற்படுத்திய பெருமை வ.உ.சி.யின் தனிஉடைமை' (சுத்தானந்த பாரதியார் -'சோதனையும் சாதனையும்' இரண்டாவது பாகம், ப.45) என்ற சுத்தானந்த பாரதியாரின் கூற்றின் வழியாக, வ.உ.சி. யின் முழக்கம் அனைவரையும் வீறுகொண்டு செயல்படத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது என்பதை மெய்ப் பிக்கிறது. மேலும்,1908 மார்ச்சு திங்களில் தூத்துக்குடியில் நிலவிய மக்கள் எழுச்சியினை இச்செய்தி படம்பிடித்துக் காட்டுகின்றது.

ஆன்மிக வழி இலக்கியப்பணி:

வ.உ.சி. வேதாந்தத்தில் மிகுந்த ஈடுபாடும் பயிற்சியும் பெற்றவர். வேதாந்தத்தை விளக்கும் 'கைவல்யம்', 'விசாரசாகரம்' எனும் இருபெரும் தத்துவநூல்களைக் கசடறக் கற்றுத்தேர்ந்தவர். 'ஞானவாசிட்டம்' எனும் வேதாந்தத் தத்துவநூலை மதுரைஸ்ரீபிரமானந் த சுவாமிகள். மடத்தின் தலைவர் ஸ்ரீசோமசுந்தர சுவாமிகளிடம் கற்றவர். தூத்துக்குடியில் தெய்வப்பேரவையில் இளம் வயதில் சேர்ந்து சமயப் பிரச்சாரம் செய்தவர். தூத்துக்குடி, மேலூர் பகுதியில், திருஞான சம்பந்தர் மடாலயத்தில் சைவசித்தாந்த சபையொன்றைச் சிவகுருநாத பிள்ளை போன்ற நண்பர்களின் துணையோடு நிறுவியவர். கைவல்யம் கற்பிக்க அங்கு வகுப்புகளை நடத்தியவர்.

இன்னிலை உரை:

பொய்கையார் எழுதிய இன்னிலை என்ற நூலுக்கு வ. உ. சிதம்பரனார் எழுதியுள்ள விருத்தியுரையுடன் தில்லையாடி த. வேதியப்பிள்ளையால் 1915 ஆம் ஆண்டு பதிப்பிக்கப் பட்டு வெளிவந்துள்ளது. இன்னிலை என்பது இனிமையாகிய நிலை எனப்பொருள்படும். இன்னிலை உரை நான்கு பகுப்புகளை உடையது. அறப்பால், பொருட்பால், இன்பப் பால், வீட்டுப்பால் (இல்லியல், துறவியல்) ஐவகைப் பகுப்பில் உரை வகுத்துச் சென்று உள்ளார்.

அநுவயம்: பாடலுக்குப் பொருள்கொள்ளும் முறையை விளக்கும் நிலையில் சொற்களைப் பிரித்துக் காட்டி எளிமையாக்கல்.

பதவுரை: பாடற் பதங்களின் பொருளை விளக்கல்.

பொழிப்புரை: செய்திகளைத் தொகுத்துப் பொழிப்புரை யாக்கல்.

கருத்துரை: சுருங்கிய வடிவில் பாடலின் திரண்ட கருத்தினை விளக்கல்.

விசேடவுரை: தம் உரைத்திறம் வெளிப்படுத்தும் இடமாக, இலக்கண, இலக்கிய மேற்கோள், கதை கூறல், செய்யுள் பொருள்களுக்குத் தரும் விரிந்த விளக்கம், என ஐவகைப்பகுப்பில் உரை வகுத்து விளக்கம் அளிப்பதைக் காணலாம். இது வ.உ.சி. சிறந்த உரையாசிரியர் எனக் காட்டுகிறது. நூலில் பாடவேறுபாடுகள் இடம்பெறும் போது, அவற்றையும் தக்கமுறையில் வ.உ.சி. சுட்டிச் செல்வதையும் இந்நூலில்

காணலாம். மேலும், பொருள் விளக்கம்பெற இயலாதவற்றைப் பச்சையப்பன் கல்லூரி தி.செல்வகேசவராய முதலியார் அவர்களிடம் ஆராய்ச்சி கண்ணோட்டத்தில் கற்றல், சில பாடல்களின் பொருள் விளங்காமையின்போது, அவற்றைத்தானே அகராதிகளின் துணைக் கொண்டு ஊகித்தறிதல், பின்னர் அப்பாடல்களுக்குத் தாமே உரை எழுதுதல்; முதலியார் அவற்றை பிழைதிருத்தம் செய்துதருதல், சென்னைக் கிறிஸ்டியன் கல்லூரி கனகசுந்தரம் பிள்ளையிடம் காட்டுதல், பிறகு யாதொன்றும் செய்யாமல் அச்சகத்திற்கு அனுப்புதல், அச்சிற்குக் கொடுத்தல், அச்சிற்குப் பின்பும் மீண்டும் சீர்திருத்திப் பலமுறை அழகுபடுத்தித் தருதல், என மிகுந்த ஆர்வமுடன் கற்றுக்கொள்ளும் படிநிலைவளர்ச்சி, இவரின் அளவு கடந்த ஈடுபாட்டினைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

முடிவுரை:

இலக்கியத்தின் மீது அளவற்ற காதல் கொண்ட காரணத்தால், தமிழ் நூல்களை எளிய உரை வடிவில் தர முற்படலானார். வ.உ.சி. யின் நூல்கள் மிகுதியும் அறக்கருத்தினையே முன்மொழிவதைக் காணலாம். அறத்தினைப் பின்பற்றி வாழ்க்கை வாழ முற்படும் போது, அது அறிவுடைய வாழ்வாக அமைகின்றது என்ற மையக்கருத்தை அடி யொற்றியே படைக்கப்பட்டுள்ளன. வ.உ.சி. படைப்பு, மொழியாக்கம், பதிப்பு, உரை, சொற்பொழிவு எனப் பல்வேறு தளங்களில் பரந்து, விரிந்து தமிழ் இலக்கிய உலகிற்குச் சிறந்த பணியாற்றிப் பெரு நலனை விளைவித்துள்ளார். பன்முக ஆளுமைத் திறம் கொண்ட வ.உ.சி. யின் இலக்கியப் பணி, தமிழ் உலகிற்கு ஈடு இணையற்ற, ஒப்பற்ற அறப்பணியாகும். வ.உ.சி. நாட்டு விடுதலைக்காகப் போராடியதோடு, மக்களிடையே தமிழ் மொழியைப் பயன்படுத்தி, சமூக மாற்றத்தையும் தேசிய உணர்வையும் வளர்க்கப் பாடுபட்ட ஓர் உன்னத இலக்கியவாதி எனில் அது மிகையன்று.

அடிக்குறிப்புகள்:

- https://thamaraicity.blogspot.com/2013/09/blog-post.html
- அரசு,வீ., வ.உ.சி. நூல் திரட்டு (பதின்மூன்று நூல்கள்), ப.826
- சங்கர வள்ளிநாயகம், அ., வ. உ. சி வாழ்வும் இலக்கியப்பணிகளும், பக்.17-18
- திவான்,செ.(ப. ஆ.,), வ.உ.சி. யின் சுயசரிதை, ப.15
- அரசு,வீ., வ.உ.சி. நூல் திரட்டு (பதின்மூன்று நூல்கள்), ப.251
- வ. உ. சிதம்பரனார் நூற்றாண்டு விழா மலர் (க.தொ.) இராமலிங்கம் பிள்ளை,வெ., நான் கண்ட வ.உ.சி. ப.31
- சிவசுப்பிரமணியன், ஆ., வ.உ.சி.யும் முதல் தொழிலாளர் வேலை நிறுத்தமும்: 1908, ப.101.

துணைநூற்பட்டியல்:

1. அரசு,வீ.,(தொ. ஆ.)- வ.உ.சி. நூல் திரட்டு (பதிமூன்று நூல்கள்).

2. சங்கர வள்ளிநாயகம்,அ., - வ.உ.சி. வாழ்வும் இலக்கியப் பணிகளும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ். 1994.
3. சிவசுப்பிரமணியன், ஆ., - வ.உ.சி. யும் முதல் தொழிலாளர் வேலைநிறுத்தமும், 1982.
4. திவான், செ., (ப. ஆ.) - வ.உ.சி. யின் சுயசரிதை, சுகைனா பதிப்பகம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி, 1946, முதற் பதிப்பு.
5. வ. உ. சிதம்பரனார் நூற்றாண்டு விழா மலர்:1972(க.தொ.), தமிழக அரசின். வெளியீடு, தூத்துக்குடி, 1972, முதற்பதிப்பு.

84

வ.உ.சிதம்பரனாரின் இலக்கியப் பணிகள்

முனைவர் இரா. இந்துபாலா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்.

ஆய்வுச்சுருக்கம்:

வ.உ.சி. தனது வழக்குரைஞர் பணியுடன் மிகுந்த நாட்டுப்பற்று கொண்டு அரசியலில் துடிப்பாக செயல்பட்டார். 1906 இல், சுதேசி கப்பல் கம்பெனியைத் துவங்கினார். சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று சிறைக்குச் சென்றார், அங்கு செக்கு இழுத்தார். பல இன்னல்களையும் துன்பங்களையும் அனுபவித்த வ.உ.சி. தேசப்பற்றுடன், மொழிப்பற்றும் கொண்டு படைப்பாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர் போன்ற நிறைய இலக்கியப் பணிகளை ஆற்றியுள்ளார்.

இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி 2-1-1968இல் சென்னை கடற்கரையில் நிறுவப்பட்ட திருவள்ளுவர், ஔவையார், கம்பர் போன்ற பத்துத் தமிழ் அறிஞர்களின் சிலைகளில் வ.உ.சி. யின் சிலையும் ஒன்று. இச்சிலை, அவர் ஆற்றியுள்ள தமிழ்ப்பணிக்கு தமிழக அரசும், அறிஞர் குழுவும் செய்த மரியாதைகளுள் முக்கியமான சான்றாகும். அவற்றைக் குறித்து ஆராய்ந்து எழுதுவதாக இக்கட்டுரை அமைகிறது.

திறவுச்சொற்கள்: செக்கிழுத்த செம்மல், சிவஞானபோத உரை, இன்னிலை, அறத்துப்பால், மெய்யறிவு, மெய்யறம், விவேகபானு, ஜேம்ஸ் ஆலன்

முன்னுரை:

ஆங்கிலேயரிடம் நாம் அடிமைப்பட்டிருந்த காலத்தில் தொடர்ந்து கல்வி கற்று, வழக்கறிஞராக தனது பணியைத் துவங்கினார், தேசப்பற்றுடன், நாட்டு விடுதலைக்காகப் போராடத் துவங்கி, பல போராட்டங்களில் ஈடுபட்டு, இன்னல்களை அனுபவித்தார். அத்துடன் தமிழ் மொழியின் மீது பற்றுக் கொண்டு பதிப்புப் பணி, படைப்புப் பணி என பலவிதங்களில் பணியாற்றியுள்ளார், அவற்றைக் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

மொழிப்பற்று ஏற்படக் காரணம்:

இளமையிலேயே ஔவையின் பாடல்கள் மற்றும் நீதி நூல்கள் கற்றறிந்தார். வீட்டில் இவரது தாத்தாவும் பாட்டியும் புராண, இதிகாச கதைகளையும் சொல்லிக் கொடுத்தனர். இவரது முன்னோர்கள் தமிழ் மொழியில் ஆர்வமுடையவர்களாக விளங்கினர். கவிஞர்களாகவும் விளங்கினர். இவர்களுடைய வீட்டிற்கு ‘ கவிராயர் வீடு’ என்ற பெயரும் உண்டு. இவருடைய பாட்டனார் வள்ளிநாயகம் பிள்ளை, வ.உ.சி. யை தினமும் பாரத வாசகம் படிக்கப்பட்ட இடத்திற்கு அழைத்துச்செல்வாராம்

என்று வ.உ.சி. யின் சுயசரிதையில், பக்கம் 20 இல் குறிப்பிட்டுள்ளார். இவருக்கு ஆரம்பப் பாடம் சொல்லிக் கொடுத்தவர் வீரப்பெருமாள் அண்ணாவியார் ஆவார், அவரிடம் அரிச்சுவடி, நன்னெறி, மூதுரை போன்ற ஒழுக்க நூல்களை நன்கு கற்றுத் தேர்ந்தார்.

ஓட்டப்பிடாரத்தில் தன்னுடைய மகன், ஆங்கில வழிக் கல்வி கற்றுத் தேர்வதற்காக தானே சொந்தமாக ஒரு நடுநிலைப் பள்ளியைக் கட்டினார் உலகநாத பிள்ளை. அதனால் அந்த ஊரில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் சிறந்த கல்வி கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. வளர்ந்து திருமணம் முடிந்தபிறகும் கூட முதல் மனைவியான வள்ளியம்மை' வள்ளுவர் குறளை வளனுறப் படித்துக் கொள்ளும் விதத்தில் கூறுவள் உரையுடன்' என்று கூறுகிறார்.

ஆங்கிலத்தில் புலமை:

வழக்கறிஞரான உலகநாத பிள்ளை தனது மகனும் தலைசிறந்த வழக்கறிஞராக வேண்டும் என கனவு கண்டார். அதை செயல்படுத்த தனது மகனுக்காக ஓட்டப்பிடாரத்தில் ஒரு நடுநிலைப்பள்ளியைக் கட்டினார். அத்தோடு மட்டுமல்லாமல் தான் கட்டிய பள்ளியில் ஆங்கிலம் கற்பிப்பதற்காக, எட்டையாபுரத்தில் இருந்து ‘ அறம் வளர்த்த நாதபிள்ளை’ என்பவரை வரவழைத்தார், வ. உ. சி அவர்தம் சுயசரிதையில் கிருட்டிணன் என்பவரிடம் ஆங்கிலம் கற்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தூத்துக்குடி செயின்ட் பிரான்சிஸ் சேவியர் பள்ளியில் உயர்நிலைக் கல்வியைக் கற்றுத்தேர்கிறார். அப்போது தான் ஆங்கிலத்தை விட தமிழ் மொழியே சிறந்தது என்னும் முடிவிற்கு வருகிறார்.

உரையாசிரியர் பணிகள்:

திருக்குறள், சிவஞானபோதம், இன்னிலை ஆகிய மூன்றிற்கும் வ. உ. சி உரை எழுதியுள்ளார். அவரது உரையை மதிப்பீடு செய்த அறிஞர்கள் தகுதியான உரையாசிரியர்களின் வரிசையில் வைத்துள்ளதை அறிய முடிகிறது.ஒரு நாளுக்கு இரண்டு மணி நேரம் வீதம், பன்னிரண்டு நாட்களில் சிவஞானபோதம் நூலுக்கு உரை எழுதி முடித்தார். அந்த நூலுக்கு எழுதப்பட்ட பிற உரைகளில் இருந்து இவரது உரை, எளிய மற்றும் நேரிய உரையாக அமைந்திருந்தது. இன்னிலைக்கு உரை எழுதும் போது, ஒவ்வொரு பாடலுக்கும் அநுவயம், பதவுரை, பொழிப்புரை,கருத்துரை, விசேடவுரை என்னும் ஐந்து விதமான உரைகளை வகுத்துத் தந்துள்ளார் வ.உ.சி.

1917 இல் இன்னிலை என்ற பதினெண் கீழ்க்கணக்கு நூலுக்கு விரிவான உரை எழுதி வெளியிட்டார். 1934ஆம் ஆண்டில் திருச்செந்தூரில் முருகப் பெருமான் முன்பு திருக்குறள் அறத்துப் பாலுக்கு இவர் எழுதிய உரை, புலவர்கள், அறிஞர்கள் முன்பு வெளியிடப்பட்டது. இந்த நூல் பதிப்பில் திருக்குறள் குறித்த தமது ஆய்வுச் சிந்தனைகளையும் இணைத்து வெளியிட்டார்.

வ.உ.சி. யைப் பொறுத்தவரையில், ‘அறன் வலியுறுத்தல் எனும் அதிகாரமே பாயிரம் ஆக இருந்திருக்க வேண்டும் என்றும், கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை ஆகிய இடைச்செருகல்கள்’ என்றும் எழுதுகிறார் ஆனாலும் அவர்தம் கருத்தை நிரூபிக்கவில்லை (வ.உ.சி.வரலாறும் பணிகளும் பக்கம் 187). திருவள்ளுவ மாலையில் பாடல்களைப் பாடியவர்கள் திருவள்ளுவர் காலத்திற்குப் பிற்பட்ட காலத்தவர். அவர்களே திருக்குறளில் இடைச்செருகல்களாக பல வற்றை இணைத்திருக்கலாம் என்று வ. உ. சி எழுதுகிறார். (வ.உ.சி. வரலாறும், பணிகளும் பக்கம் 187) 1935 ஆம் ஆண்டு முதல் அவரது உடல்நலம் குன்றியது. இருந்தபோதிலும் அவரது இலக்கிய பணியை அவர் கைவிடவில்லை. சிவஞானபோதத்திற்கு அவர் எழுதிய உரை அச்சமயத்தில் தான் வெளியிடப்பட்டது.

வ.உ.சி.யின் திருக்குறள் சிந்தனைகள்:

திருக்குறள் மணக்குடவர் உரையை பதிப்பிக்கும் பொழுது, பொருள் விளக்கம் தருதல், பொழிப்புரையைப் பதவுரையாக்கி எளிமைப்படுத்தி தந்து பாடவேறுபாடுகளை அடைப்புக்குறிகளில் காட்டி,.அத்தோடு உரையாசிரியரின் மேற்கோள் பாடல்களை முழுமையாக்குதல் போன்ற பதிப்பு செய்தலின் உட்கூறுகளைத் திறம்படச் செய்துள்ளார். அறத்துப் பாலில் 76 குறள்களுக்கு பரிமேலழகரின் உரையை மறுத்து வேறு உரை எழுதினார். 74 பாட வேறுபாடுகளைக் காட்டி அவை ஏடு பெயர்த்தெழுதுவோர் தவறுகள் என்றும் நிறுவினார்.

அவர் 1910 ஆம் ஆண்டு கோவைச் சிறையில் தம்மைச் சந்திக்க வந்த இருவரிடம், ‘தமிழர்கள் எல்லோரும் திருக்குறளை உரையுடன் அறிந்து பாராயணம் செய்தல் வேண்டும்.1330 குறளையும் பொருளுடன் உணராத தமிழர் முற்றும் துறந்த முனிவரேயாயினும் என்னைப்பெற்ற தந்தையேயாயினும் யான் பெற்ற மக்களேயாயினும் யான் அவரைப் பூர்த்தியாக மதிப்பதுமில்லை நேசிப்பதுமில்லை’ என்று கூறினார். இக்கூற்று 1910இல் கர்மயோகி என்ற பத்திரிகையில் மார்ச் இதழில் வெளியாகியுள்ளது.

கலைச்சொல்லாக்கப் பணி :

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்ச்சொல்லாக்கம் குறித்து பாரதி,வ.வே.சு ஐயர், இராஜாஜி போன்றோர் தத்தம் பாணி யில் சிந்திக்கத் தொடங்கினர். வ. உ. சி வேற்று மொழிக்கலப்பில்லாமல் தனித் தமிழ்ப் பாணியில் சிந்திக்கத் தொடங்கினார். வேற்றுமொழி கலப்பற்ற முறையில்,’ தனித்தமிழில் மொழிபெயர்த்துக் கொடுக்கத் தக்க திறமையுடையேன்’ என்று வ.உ.சி.ஒப்புக் கொள்கிறார். (வ.உ.சி. வளர்த்த தமிழ்.பக் 58).அவரது சொல்லாக்கத் திறமையை ‘வலிமைக்கு மார்க்கம்’ என்ற நூலின் வாயிலாக அறியலாம். ஆன்மா- பேரறிவு (யான், எனது என்று கருதாது உலக நன்மையைக் கருதுவது. ஜீவன் – சிற்றறிவு (யான், எனது என கருதத் தனது நன்மையே

கருதுவது) என வ. உ. சி பொருத்தமாகவும், புதுமையாகவும் புதிய சொற்களை உருவாக்கினார்.மேலும் தமிழ்ச்சொற்களைப் பயன்படுத் தும் போதும் அவற்றிற்கிடையேயான நுணுக்கமான வேறுபாடுகளை நன்கு உணர்த்தும் ஆற்றல் பெற்றிருந்தார் என்பதை, துன்பம் - பொறி யால் வரும் வருத்தம். இன்பம் - பொறிக் களிப்பு, சுகம் - மனக் களிப்பு போன்ற சொற்பொருள்கள் வாயிலாக அறியலாம். தமிழில் வர்க்க எழுத்துக்கள் இல்லை என்ற பாரதியாரின் மனக்குறையை இவர் ஆதரிக்கவில்லை.

சிறையில் இலக்கியப் பணி:

சிறையில் நிறைய சித்திரவதைகளை அனுபவித்த பிறகு, இவரது வாசிக்கும் வழக்கத்திற்கு மீண்டும் வாய்ப்பு கிடைத்தது. உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் இவருக்கு தினமும் காலையும் மாலையும் நூல்கள் வாசிக்க, சிறையின் உயர் அதிகாரி அனுமதி வழங்கினார். அதன் பயனாகச் சிதம்பரனார் சில ஆங்கில நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார்.அகமே புறம், வலிமைக்கு மார்க்கம், மனம் போல வாழ்வு, மெய்யறிவு, மெய்யறம் போன்ற அற நூல்களையும் சிறையில் இருக்கும் போது எழுதினார். மேலும் சிறையில் இருக்கும் போது, தன்னுடைய வாழ்க்கையை அனைவரும் அறிய வேண்டும் என எண்ணி, கவிதை வடிவில் தன்னுடைய சுயசரிதையைக் கவிதை வடிவில் எழுதினார்.

பதிப்பாசிரியராக இலக்கியப் பணி:

வ.உ.சி. அவர்கள் 1912 முதல் 1919 வரை சென்னையிலேயே தங்கி இருந்தார். சுதேசமித்திரன் உதவி ஆசிரியரான, மகாகவி பாரதியாரை யும், திரு.வி.க., திருமணம் செல்வக் கேசவராய முதலியார் ஆகியோர் நட்பைப் பெறுகிறார்.அந்த காலகட்டத்தில் மெய்யறம், இன்னிலை, பாடல் திரட்டு, மெய்யறிவு, மனம் போல் வாழ்வு ஆகிய நூல்களையும், திருக்குறள் அறத்துப்பால் மணக்குடவர் உரையின் திருந்திய பதிப் பினையும் வெளியிட்டார். அத்தோடு சுதேசமித்திரனுக்கு அவ்வப் போது கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டார்.

1928 இல் இளம்பூரனார் உரையுடன் கூடிய தொல்காப்பியத்தை அகத் திணையியல், புறத்திணையியல் மற்றும் எழுத்ததிகாரம் போன்றவற்றைப் பதிப்பித்து வெளியிட்டார். வையாபுரிப்பிள்ளையுடன் இணைந்து தொல்காப்பியம் பொருளதிகாரம்(களவியல் முதல் செய்யுளியல் ஈறாக) வெளியிட்டார்.

படைப்பாசிரியராக வ.உ.சி. யின் பணிகள்:

வ.உ.சி. அவர்கள் சிறைக்கு செல்வதற்கு முன்பும், சிறையில் இருந்த காலகட்டத்திலும் இவர் 380 பாடல்கள் எழுதியுள்ளார். அவற்றை தனிப்பாடல் திரட்டு என்னும் பெயரில் 1915 ஆம் ஆண்டு வெளியிடுகிறார். இவற்றில் 100 பாடல்கள் ஒழுக்கம் பற்றியும். 100 பாடல்கள் கடவுளைப் பற்றியும், எஞ்சிய 180 பாடல்கள் சுற்றத்தார்,

நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் எனத் தனித் தனியே எழுதியுள்ளார். இப்பாடல் தொகுப்பில் 350 வெண்பாக்கள், 1 தாலாட்டுப் பாடல், 3 விருத்தப்பாடல்கள், 15 கட்டளைக் கலித்துறைப் பாடல்கள், 11 நிலைமண்டில ஆசிரியப் பாக்கள் ஆகியன அடங்கியுள்ளன. இறைவனைப் பற்றி இவர் பாடியுள்ள பாடல்களில் நாட்டு நலனே முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளன.இவை தவிர மெய்யறம், மெய்யறிவு, சுயசரிதை, எனது அரசியல் பெருஞ்சொல், வ.உ.சி. கண்ட பாரதி போன்ற நூல்களையும் படைத்துள்ளார்.

வ.உ.சி. யின் மொழிப்பெயர்ப்புப் பணி:

இங்கிலாந்து தத்துவ மேதை ஜேம்ஸ் ஆலனின் நூல்களை மொழிபெயர்த்துள்ளார். இவை 1909 முதல் 1934 வரையிலும் வெளிவந்தது. அவையாவன, அகமே புறம்(Out from the heart), மனம்போல் வாழ்வு(As a man Thinketh), வலிமைக்கு மார்க்கம்(The Path of Prosperity), சாந்திக்கு மார்க்கம்(The Way of Peace)

வ.உ.சி. நடத்திய பத்திரிகைகள்:

இவர் விவேகபானு, இந்து நேசன், தமிழ் நேஷனல், என்னும் பத்திரிகைகளை தமது சொந்தச் செலவில் நடத்தி வந்தார். இவை தவிர வ.உ.சி. சுதேசி இயக்க காலத்தில் ‘தூத்துக்குடியிலிருந்து’ என்ற பத்திரிகையில் ஆசிரியராகப் பணியாற்றினார். மேலும், பாரதியாரின் ‘சுதேசமித்திரன்’, சுப்பிரமணிய சிவாவின் ‘ ஞானபானு’ , சிவநேசன் போன்ற பல்வேறு பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

வ.உ.சி. யின் அச்சில் வராத நூல்கள்:

வ.உ.சி. தம் கை பட எழுதிய நூல்கள் பற்பல. அவை அச்சில் வருமுன்பு அவர் இவ்வுலகை விட்டு நீங்கி விட்டார். அச்சில் வராத அவரது நூல்களாவன, அழகும் ஆரோக்கியமும், ஆயுளை நீடிக்கும் ஆறு, ஊழை வெல்ல உபாயம், சிவமதம், விஷ்ணுமதம், புத்தமதம், இஸ்லாம் மதம், கிறிஸ்துமதம், மனித மதம், முக்திநெறி, திருக்குறள் மணக்குடவர் உரை,(பொருள்),திருக்குறள் மணக்குடவர் உரை (இன்பம்), திலக மகரிஷி(இலங்கையிலிருந்து வெளிவரும் வீரகேசரி நாளிதழின் ஞாயிறு மலரில் ஒன்றரை ஆண்டுகளாக எழுதிய தொடர் கட்டுரை, The United Scripture .இந்த தகவல்கள் வ.உ.சி. நூற்றாண்டு மலரிலிருந்து பெறப்பட்டவை ஆகும்.

முடிவுரை:

வ.உ.சி. நாட்டுப்பற்றுடன் மொழிப்பற்றும் கொண்டு திகழ்ந்தார். படைப்பாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர்,பத்திரிகையின் ஆசிரியர், விழிப்புணர்வு சிந்தனைகளைத் தூவும் கட்டுரைகள் என அனைத்து துறைகளிலும் தமிழ்த்தொண்டு ஆற்றியுள்ளார் என்பதை அவர் எழுதியுள்ள நூல்கள், அவரைப் பற்றிய நூல்கள் வாயிலாக நாம் அறிந்து கொள்கிறோம்.

துணை நின்ற நூல்கள்:

- இந்திய விடுதலைப் போரில் வ.உ.சி. என்.திரவியம், மணிவாசகர் பதிப்பகம்,முதல் பதிப்பு, ஜூன், 2005.
- இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி. செ. திவான், சுஹைனா பதிப்பகம், 2003.
- வ.உ.சி. ஒரு பன்முகப் பார்வை, முனைவர் எஸ்.கண்ணன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.முதல் பதிப்பு, 2005.

மேல் வரிசை : இடமிருந்து வலமாக : எட்டயபுரம் சோமசுந்தர பாரதி, திருமயம் சத்தியமூர்த்தி அய்யர், சென்னை குருசாமி முதலியார், மாயூரம் வேதநாயகம் பிள்ளை.
மத்திய வரிசை: சேலம் வரதராஜ நாயுடு, வ.உ.சிதம்பரம் பிள்ளை, பஹானிசிங்.
கீழ் வரிசை : விருதுநகர் முத்துசாமி ஆசாரி, மண்டையம் சீனிவாச அய்யங்கார், காமராஜர்

85

பன்முக நோக்கில் வ.உ.சிதம்பரனார்

முனைவர் சு. சத்தியா
தமிழ்த்துறைத்தலைவர், பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர்.

முன்னுரை:

இந்திய விடுதலைப் போராட்டம் பல்வேறு கருத்தியல், சமூக மற்றும் அரசியல் இயக்கங்களின் சங்கமமாக உருவெடுத்தது. அதில் தமிழ்நாடு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டிலிருந்து எழுந்த தேசியத் தலைவர்களில் வ.உ.சிதம்பரனார் தனித்துவமானவராக, ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்து நேரடியாகப் போராடியதோடு மட்டுமல்லாமல், மக்களின் பொருளாதார சுதந்திரம், தொழிலாளர் உரிமை, சமூக சமத்துவம் ஆகியவற்றிற்காகவும் அவர் குரல் கொடுத்தார். பெரும்பாலும் வ.உ.சி. 'கப்பலோட்டிய தமிழன்' என்ற அடையாளத்தோடு மட்டுமே நினைவுகூரப்படுகிறார். ஆனால் அந்த ஒரே அடையாளத்திற்குள் அவரது முழுமையான ஆளுமை அடங்கி விடுவதில்லை. அவருடைய வாழ்க்கை ஒரு பன்முகப் போராட்ட வரலாறாகும்.

வ.உ.சி. – வாழ்க்கை வரலாற்றுப் பின்னணி:

வ.உ.சி. 1872 ஆம் ஆண்டு செப்டம்பர் 5-ஆம் நாள் தூத்துக்குடி மாவட்டத்தில் பிறந்தார். இளமை காலத்திலேயே கல்வியிலும் சிந்தனையிலும் சிறந்து விளங்கினார். வழக்கறிஞராகத் தொழில் புரிந்தாலும், நாட்டின் அரசியல் சூழ்நிலை அவரை தேசிய இயக்கத்தின் பக்கம் இழுத்தது. பாலகங்காதர திலகர் போன்ற தலைவர்களின் சிந்தனைகள் அவரை தீவிர தேசியவாதியாக மாற்றின.

வ.உ.சி. யின் படிப்பு ஆளுமை:

வ.உ.சி. ஒரு அரசியல் போராளியாக மட்டுமல்லாமல், உயர்ந்த கல்வியறிவும் அறிவுசார் ஆளுமையும் கொண்ட சிந்தனையாளராக விளங்கினார். அவரது படிப்பு ஆளுமை அவரது அரசியல், சமூக மற்றும் இலக்கியச் செயல்பாடுகளுக்கான அடித்தளமாக அமைந்தது. கல்வி என்பது வேலைவாய்ப்பிற்கான கருவி மட்டுமல்ல; மனிதனை சிந்திக்கவும் சமூகத்தை மாற்றவும் வல்ல சக்தி என்ற புரிதல் அவரிடத்தில் தெளிவாக இருந்தது.

சட்டக் கல்வியும் தர்க்க சிந்தனையும்:

வ.உ.சி. சட்டக் கல்வி பயின்றவர் என்பதால், அவரது சிந்தனைகளில் தர்க்கமும் தெளிவும் காணப்பட்டது. வழக்கறிஞராக அவர் பெற்ற அனுபவம், அரசியல் உரைகளிலும் எழுத்துகளிலும் சட்டபூர்வமான

வலிமையை அளித்தது. ஆங்கிலேய சட்ட அமைப்பின் குறைகளை அவர் சட்ட மொழியிலேயே விமர்சிக்க முடிந்தது என்பது அவரது கல்வி ஆளுமையின் சிறப்பாகும்.

சுயக்கல்வி மரபு:

அதிகாரபூர்வ கல்வியை விடவும் சுயக்கல்விக்கு வ.உ.சி. அதிக முக்கியத்துவம் அளித்தார். சிறை வாழ்க்கையில் கூட அவர் வாசிப்பையும் சிந்தனையையும் கைவிடவில்லை. வரலாறு, தத்துவம், அரசியல், ஆன்மிகம் போன்ற பல துறைகளில் நூல்களைப் படித்து, அவற்றை சமூக விடுதலைக்கான கருவிகளாக மாற்றினார். அவரது கல்வி முறையானது தொடர்ச்சியான சுயமுன்னேற்றத்தின் எடுத்துக்காட்டாகும்.

தமிழ் கல்வியும் மொழி உணர்வும்:

வ.உ.சி. தமிழ் மொழியை வெறும் தொடர்பு மொழியாக அல்லாமல், ஒரு பண்பாட்டு மற்றும் தேசிய அடையாளமாகக் கருதினார். கம்பராமாயணம், திருக்குறள், நாலடியார் போன்ற செவ்வியல் நூல்களில் அவர் கொண்ட புலமை, அவரது படிப்பு ஆளுமையின் உயரத்தை வெளிப்படுத்துகிறது. தமிழ் இலக்கியத்தின் மூலமாக தேசிய உணர்வை வளர்த்தல் வேண்டும் என்பது அவரது கல்விசார் நோக்கமாக இருந்தது.

கல்வியும் சமூக விழிப்புணர்வும்:

வ.உ.சி. கல்வியை தனிப்பட்ட முன்னேற்றத்திற்கான கருவியாக மட்டுமே பார்க்கவில்லை. கல்வி சமூக மாற்றத்திற்கான அடிப்படை என்ற நம்பிக்கை அவரிடம் இருந்தது. கல்வியறிவு இல்லாமல் மக்கள் தங்கள் உரிமைகளை உணர முடியாது என்பதை அவர் தெளிவாக உணர்ந்திருந்தார். அதனால் தான் தனது உரைகளிலும் எழுத்துகளிலும் கல்வி விழிப்புணர்வை தொடர்ந்து வலியுறுத்தினார்.

கல்வி ஆளுமை – அரசியல் போராட்டத்தின் ஆதாரம்:

வ.உ.சி. யின் படிப்பு ஆளுமை அவரது அரசியல் போராட்டங்களுக்கு வலிமையான அடித்தளமாக அமைந்தது. ஆங்கிலேயர்களின் பொருளாதார, அரசியல் ஆதிக்கத்தை அவர் உணர்ச்சிப்பூர்வமாக மட்டுமல்லாமல் அறிவுசார் கோணத்திலும் விமர்சித்தார். இதனால் அவரது போராட்டங்கள் நீண்ட கால தாக்கத்தை ஏற்படுத்தின.

வ.உ.சி.யும் திருக்குறளும்:

திருக்குறள் தமிழ் இலக்கியத்தின் உச்சமாகவும், உலகளாவிய மனிதநேயக் கோட்பாடுகளின் தொகுப்பாகவும் விளங்குகிறது. அறம், பொருள், இன்பம் என மூன்று பெரும் பிரிவுகளின் வழியாக மனித வாழ்க்கைக்கான முழுமையான வழிகாட்டுதலை வழங்கும் நூலாக திருக்குறள் திகழ்கிறது. இத்தகைய சிறப்புமிக்க நூல், பல தேசியத் தலைவர்களின் சிந்தனைகளை வடிவமைத்துள்ளது. அவ்வரிசையில் வ. உ. சிதம்பரனாரின் அறிவியல், அரசியல் மற்றும் சமூக சிந்தனைகளில்

திருக்குறள் பெற்ற இடம் மிக முக்கியமானதாகும். வ.உ.சி. தனது உரைகளிலும் எழுத்துகளிலும் திருக்குறளின் கருத்துகளை அடிக்கடி மேற்கோள் காட்டினார். திருக்குறளை அவர் ஒரு ஆன்மிக நூலாக மட்டும் அல்லாமல், சமூக ஒழுக்கத்திற்கும் அரசியல் நேர்மைக்கும் வழிகாட்டும் நூலாகக் கருதினார். அறம் என்பது தனிநபருக்கான ஒழுக்கம் மட்டுமல்ல; சமூகத்திற்கான அடிப்படைச் சட்டமாகும் என்ற புரிதல் அவரிடத்தில் திருக்குறள் வழியாக உருவானது.

அறநெறியும் வ.உ.சி.யின் வாழ்க்கையும்

திருக்குறளில் வலியுறுத்தப்படும் அறநெறி, வ.உ.சி. யின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் பொதுவாழ்விலும் தெளிவாகக் காணப்படுகிறது. நேர்மை, தியாகம், பொறுப்பு, சுயநலம் அற்ற செயல் ஆகியவை அவரது வாழ்க்கையின் அடையாளங்களாக இருந்தன. ஆங்கிலேய ஆட்சியின் அநீதிகளை எதிர்த்து போராடிய போது கூட, அவர் வன்முறையை விட அறவழியை முன்னிறுத்தினார்.

அரசியல் சிந்தனையில் திருக்குறள்:

திருக்குறளின் பொருட்பால் அதிகாரங்களில் இடம்பெறும் அரசியல், நிர்வாக மற்றும் ஆட்சிநெறி கருத்துகள் வ.உ.சி. யின் அரசியல் சிந்தனையை ஆழமாகப் பாதித்தன. நல்லாட்சி, மக்கள் நலன், அரசரின் கடமை ஆகியவை குறளின் வழிகாட்டுதல்களாக அமைந்தன. வ.உ.சி. ஆங்கிலேய அரசை விமர்சித்தபோது, திருக்குறளில் கூறப்படும் அறநெறி அரசாட்சியையே அளவுகோலாகக் கொண்டார்.

பொருளாதார சிந்தனையும் திருக்குறளும்:

திருக்குறள் பொருளாதாரத்தை அறத்துடன் இணைத்துப் பார்க்கிறது. வ.உ.சி. யும் அதே பார்வையிலேயே பொருளாதார சுதந்திரத்தை வலியுறுத்தினார். சுதேசி இயக்கம், கப்பல் நிறுவனம், தொழிலாளர் நலப் போராட்டங்கள் ஆகியவை திருக்குறளில் கூறப்படும் உழைப்பின் மேன்மை, சுயநிறைவு போன்ற கருத்துகளின் நடைமுறை வடிவமாகக் கருதப்படுகின்றன.

தொழிலாளர் நலனும் குறள் சிந்தனையும்:

திருக்குறளில் மனித மரியாதை, உழைப்பின் பெருமை குறித்து பல இடங்களில் பேசப்படுகிறது. தொழிலாளர்களை இயந்திரங்களாக அல்ல, மனிதர்களாக மதிக்க வேண்டும் என்ற சிந்தனை வ.உ.சி. யின் தொழிலாளர் போராட்டங்களில் வெளிப்பட்டது. இது குறள் சிந்தனையின் சமூகப் பயன்பாட்டை வெளிப்படுத்துகிறது.

அரசியல் போராளியாக வ.உ.சி.:

வ.உ.சி. இந்திய தேசிய காங்கிரசில் தீவிரவாதப் பிரிவைச் சேர்ந்தவராக இருந்தார். மிதவாத அரசியலால் சுதந்திரம் கிடைக்காது என்று அவர் உறுதியாக நம்பினார். மக்களை நேரடியாகப்

போராட்டத்தில் ஈடுபடுத்த வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார். ஆங்கிலேய அரசுக்கு எதிரான அவரது உரைகள் மக்களிடையே பெரும் எழுச்சியை ஏற்படுத்தின. இதன் காரணமாக அவர் மீது பல வழக்குகள் தொடரப்பட்டன. அரசியல் சுதந்திரம் என்பது தனி மனித சுதந்திரத்தின் அடிப்படை சிந்தனை அவருடைய அரசியல் பார்வையின் மையமாக இருந்தது.

சுதேசி இயக்கமும் கப்பலோட்டிய தமிழனும்:

ஆங்கிலேயர்களின் கப்பல் ஆதிக்கத்தை எதிர்த்து 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி' நிறுவியதே வ.உ.சி. யின் மிக முக்கியமான சாதனையாகும். இது இந்திய பொருளாதார சுதந்திரத்தின் அடையாளமாக அமைந்தது. வெளிநாட்டு ஆதிக்கத்திற்கு எதிராக இந்தியர்கள் சொந்தமாக தொழில் நடத்த முடியும் என்பதை அவர் நிரூபித்தார்.

தொழிலாளர் உரிமைப் போராளியாக வ.உ.சி.:

தூத்துக்குடி கோரல் மில் தொழிலாளர்களின் போராட்டம் இந்திய தொழிலாளர் இயக்க வரலாற்றில் முக்கியமானதாகும். தொழிலாளர்களின் வேலை நேரம், ஊதியம், மனித மரியாதை ஆகியவற்றுக்காக வ.உ.சி. போராடினார். தொழிலாளர் வர்க்கம் ஒடுக்கப்படுவது நாட்டின் முன்னேற்றத்திற்கு தடையாகும் என்பதை அவர் உணர்த்தினார்.

சமூக சீர்திருத்தவாதியாக வ.உ.சி.

சாதி வேறுபாடு, மூடநம்பிக்கை, சமூக அநீதி ஆகியவற்றுக்கு எதிராக வ.உ.சி. கடுமையாக விமர்சித்தார். சமூக சமத்துவம் இல்லாமல் அரசியல் சுதந்திரம் அர்த்தமற்றது என்ற கருத்தை அவர் வலியுறுத்தினார்.

சிறை வாழ்க்கையும் தியாகமும்

வ.உ.சி. கடுமையான சிறைத் தண்டனை அனுபவித்தார். சிறையில் அவர் அனுபவித்த துன்பங்கள் அவரது உடலையும் மனதையும் பாதித்தன. இருப்பினும் அவரது சிந்தனைகளையும் உறுதியையும் அது சிதைக்கவில்லை. தியாகம் இல்லாமல் சுதந்திரம் கிடைக்காது என்பதை அவரது வாழ்க்கை எடுத்துக்காட்டுகிறது.

விடுதலைக்குப் பிந்தைய புறக்கணிப்பு

விடுதலைக்கு பின் வ.உ.சி. உரிய அங்கீகாரம் பெறவில்லை. வறுமை யிலும் நோயிலும் அவர் இறுதிக் காலத்தை கழித்தார். இது இந்திய சமூகத்தின் ஒரு பெரிய வரலாற்று முரண்பாடாகும்.

இன்றைய சூழலில் வ.உ.சி.யின் சிந்தனைகள்

இன்றைய இந்தியாவில் தொழிலாளர் உரிமை, பொருளாதார சுயநிறைவு, தேசிய உணர்வு போன்ற துறைகளில் வ.உ.சி. யின் சிந்தனைகள் மிகுந்த பொருத்தமுடையவை.

முடிவுரை

வ.உ.சிதம்பரனார் இந்திய வரலாற்றின் மறைக்கப்பட்ட மகத்தான ஆளுமை. அவரது வாழ்க்கை தியாகத்தின், தன்னம்பிக்கையின் மற்றும் தேசப்பற்றின் அடையாளமாக விளங்குகிறது. பன்முக நோக்கில் வ. உ. சியை ஆய்வு செய்வது இன்றைய தலைமுறைக்கு வரலாற்று விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

துணை நூல் பட்டியல்:

- வ.உ.சிதம்பரனார் – சுயசரிதை பதிப்பகம் : தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை பதிப்பு ஆண்டு : 2006.
- நா. வானமாமலை – இந்திய விடுதலைப் போராட்டமும் தமிழரும் பதிப்பகம் : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை பதிப்பு ஆண்டு : 1998.
- க. நெடுஞ்செழியன் – தமிழ் நாட்டின் விடுதலைப் போராட்ட வரலாறு பதிப்பகம் : தமிழ்க்கோட்டம் பதிப்பகம், சென்னை பதிப்பு ஆண்டு : 2001.
- மு. அருணாசலம் – தமிழ் இலக்கியத்தில் தேசிய உணர்வு பதிப்பகம் : பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை பதிப்பு ஆண்டு : 1995.
- எஸ். ராமகிருஷ்ணன் (தொகுப்பு) – சுதேசி இயக்கமும் தமிழ் சமூகமும் பதிப்பகம் : காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில் பதிப்பு ஆண்டு : 2010.
- புலவர் குழந்தை – வ.உ.சி. ஒரு போராளி பதிப்பகம் : பாரதி புத்தகாலயம், சென்னை பதிப்பு ஆண்டு : 1987 7. இரா. சீனிவாசன் – இந்திய தேசிய இயக்க வரலாறு பதிப்பகம் : சுரா புக் ஹவுஸ், சென்னை பதிப்பு ஆண்டு : 2004.
- அ. ச. ஞானசம்பந்தன் – தமிழ் இலக்கிய வரலாறு (நவீன காலம்) பதிப்பகம் : உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை பதிப்பு ஆண்டு : 1999.
- தமிழ் ஆய்விதழ் – தேசிய இயக்க சிறப்பு மலர் பதிப்பகம் : தமிழ் ஆய்வுச் சங்கம், சென்னை பதிப்பு ஆண்டு : 2008 10. செம்மொழி இதழ் – விடுதலைப் போராட்டக் கட்டுரைகள் பதிப்பகம்: மத்திய செம்மொழி தமிழ் நிறுவனம், சென்னை பதிப்பு ஆண்டு : 2012.

86

தேச வளர்ச்சியில் வ.உ.சி.யின் பன்முகச்சிந்தனை

முனைவர் வெ. அர. தாரணி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
கே.பி.ஆர்.கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரி
கோயம்புத்தூர்.

ஆய்வுச்சுருக்கம்:

வ.உ.சிதம்பரம அவர்களின் படைப்பும் செயலும். தனி மனித ஒழுக்கம் மற்றும் சமூகம், மற்றும் மொழி என ஒட்டு மொத்த தேச நலன்களைக் கருத்தில் கொண்டு தன் வாழ்க்கையை அர்ப்பணித்த தலைவர்கள் ஓரிருவர் அல்ல. அவர்கள் தம் எண்ணங்களை உலகத்தோடு ஒருங்கிணைந்த வாழ்க்கையை வாழும் பொருட்டு அவர்கள் வாழ்ந்தும், மக்கள் வாழ்வதற்கும் வழிகாட்டியாக இருந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருக்குறளை வழி நூலாகக் கொண்டு தன் அறச்சிந்தனையை இந்நூலில் கூறியிருக்கிறார். மேலும், மக்கள் நலமே முதல் நலம் எனும் நோக்கில் தன் ஒவ்வொரு படைப்புகளையும் வடிவமைத்திருக்கிறார்.

முன்னுரை:

'ஒரு மொழி வழங்குவது ஒரு தனி நாடு'[1] இது பெரியவர் வ. உ. சிதம்பரனார் மெய்யறம் எனும் நூலில் நாடு எனும் அதிகாரத்தில் எழுதியது. நாடு என்பதென்ன என அவர் விவரிக்கும் வரிகளில் இச்சிந்தனை அவரிடமிருந்து வருகிறது. திணைக் கோட்பாட்டின் படி நான்கு நிலம் கொண்டு ஒரு மொழி பேசும் மக்களைக் கொண்டது ஒரு நாடு எனும் கருத்தை அவர் எழுத்தில் காண முடிகிறது. மொழி வழித் தேசியத்தின் முதன்மைக் கூறாக மொழியைக் காணலாமே ஒழிய அதை மட்டுமே முழுமையானதாகக் காண முடியாது. எனினும் மொழி வழித் தேசியம் எனும் கருத்தாக்கமே பிறந்திடாத காலத்தில் வ.உ.சி யிடம் இச்சிந்தனை வெளிப்பட்டிருப்பது வரலாற்று வியப்பேயாகும். அவ்வகையில் தேசநலன் கருத்தில் கொண்டு மொழி, ஆன்மிகம், அரசியல் மற்றும் பொருளாதாரம் குறித்தான வ.உ.சி. கூறிய அடிப் படைச் செய்திகளைக் கூறுவனதாக இக்கட்டுரை அமைகிறது.

தேச வளர்ச்சியில் மொழியின் கட்டமைப்பு:

மொழியைப் போன்றே பொருளியல் மேம்பாடும் மொழி வழித் தேசியத்தின் முதன்மை அலகாகும். பொருளாதார விடுதலைப் போரை முன்னெடுத்த பெரியவர் வ.உ.சி. யின் அரசியலில் மொழி வழித் தேசியத்திற்கான கூறுகளையும் பொருளியல் மேம்பாட்டிற்கான செயல்

திட்டங்களையும் காண முடிகிறது. மொழியையும் பொருளையும் உள்ளிணைத்த வ.உ.சி. யின் அரசியல் செயல்பாட்டை இக்கட்டுரை உரசிப் பார்க்கிறது. ஒரு தேசத்தின் கட்டுமானத்தில் மொழி முதன்மைப் பங்கு வகிக்கிறது. எனினும் மொழியானது மேல் கட்டுமானத்தில் காணப்படுகிற அரசு, நியாயமன்றம் (நீதிமன்றம்), காவல், கலை, இலக்கியங்களோடு மட்டுமே தொடர்புடையதாகப் பொருள் கொள்ளப் படுகிறது.

தொல் குடிகளின் வளர்ச்சிப் போக்கு:

பன்னெடுங்காலமாக மக்கள் திரள் பரிணாம வளர்ச்சியில் மொழி எனும் தொடர்பாடல் கருவியை உற்பத்தி செய்து அதனூடாக இயற்கை வளங்களைப் பயன்படுத்தினர். அதன்பொழுது விளைந்த அனுபவங்களை அறிவாகத் தொகுத்துப் பொருள்களை உருவாக்கிப் பண்டங்களாக்கி வணிகம் செய்து சமூகங்களைத் தோற்றுவித்தனர். அவ்வாறு தோன்றிய சமூகங்களில் முதலாளித்துவ பாட்டாளி வர்க்கங்கள் தோன்றின. ஆனாலும் மொழி எனும் கருவியானது அனைத்து வர்க்கங்களுக்குள்ளும் பொதுவாக விளங்கியது. 'எல்லா இடங்களிலும் கணங்களின் மொழியிலிருந்து பழங்குடிகளின் மொழியாகவும், பழங்குடிகளின் மொழியிலிருந்து தேசிய இனங்களின் மொழியாகவும், தேசிய இனங்களின் மொழியிலிருந்து தேசிய மொழிகளாகவும் மாறிய இந்த வளர்ச்சிப் போக்கின் எல்லா கட்டங்களிலும், ஒரு சமூகத்தில் உள்ள மக்களிடையே தொடர்பு ஏற்படுத்துகின்ற சாதனம் என்ற வகையில் மொழியானது, அந்த சமூகத்தின் ஒரே பொதுவான மொழியாகவே விளங்கி வந்திருக்கிறது.'[2] 'ஒரு தேசம் என்பது, ஒரு பொதுவான மொழி, ஆட்சிப் பகுதி, பொருளாதார வாழ்வு மற்றும் மன இயல்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று ரீதியாக உருவாகிய நிலையான மக்கள் சமூகமாகும்.'[3]

தமிழ்த்தேசியமும் இலக்கியச் சிந்தனையும்:

தமிழ்த்தேசியத்தின் உருவாக்கத்தில் திருக்குறள் மிக முதன்மையான பங்கு வகித்தது. சமஸ்கிருத வேத நூல்கள், காப்பியங்கள், இதிகாசங்கள் கொண்டு வைதீகப் பண்பாட்டை நிறுவ முயற்சி நடந்த வேளையில் திருக்குறள் எனும் ஒற்றை நூலைக் கொண்டு தமிழ்ப் பண்பாட்டைக் கட்டமைத்தனர். எத்தனை ஆரிய நூல்கள் கொண்டு வந்தாலும் திருக் குறள் எனும் ஒற்றை நூலிற்கு அவை ஈடாகுமா ? அவ்வாறேனும் நூல்கள் இருக்கின்றனவா எனக் கேட்கிறார் வ.உ.சி. ஆரியம் எதிர் செந்தமிழ் என்கிற பண்பாட்டுப் போரில் இந்த கேள்விக் கணைகளைத் தொடுக்கிறார்.

'ஆரியமே ஏற்றமெனும் அன்பருயர் வள்ளுவரின்
ஓரியலே கற்றாலும் ஓதாராங் ஈரடியில்
நாற்பொருளும் வள்ளுவர்போல் நன்குரைக்கும் நூல்
கேற்படநாம் கண்டதுண்டோ இன்று' *(வ. உ. சி பாடற்றிரட்டு)*

'ஒரு தேசிய இனமாகத் தம்மை அடையாளம் காணும் முயற்சியில்

தமிழர்கள் இறங்கியபோது வடமொழி வேதங்களை உயர்த்திப் பிடித்த பிராமணியத்திற்கு எதிராகத் திருக்குறளைத் தமிழ் வேதம் எனக் கருதினர்'[4] என்று தொ. பரமசிவன் தமிழ்த் தேசியக் கட்டுமானத்தில் திருக்குறள் பங்கு பெற்றதைக் கூறுகிறார்.

சுதேசிக் கப்பலும் வ. உ.சி. யும்:

வெள்ளிப்பனி மலை மீது உலவுவோம் அடி மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம் என்ற பாரதியின் கவிதை வரிகளைக் கடலில் கலம் செலுத்தி உயிரூட்டியவர் வ.உ.சி. கப்பல் என்பது தமிழர்களுக்குப் புதியது அன்று. கிறித்துவிற்கு முன்பிருந்தே கீழைக் கடலில் கலம் செலுத்தி அரேபிய, ஐரோப்பிய தேயங்களில் வணிகம் செய்திருக்கின்றனர். 'கிறிஸ்தவ சகாப்தத்தின் துவக்க காலங்களில் மேற்கொள்ளப்பட்ட கடல் கடந்த நீண்டதூர வர்த்தகத்தில் சோழமண்டலக் கடற்கரை மற்றும் வங்காளப்பகுதிகளைஉள்ளடக்கியஇந்தியாவின்கிழக்குக்கடற்கரையின் கடல்சார்ந்த பகுதிகள் ஆர்வமூட்டக்கூடிய வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தன என்று தாலமி குறிப்பிட்டிருக்கிறார்'[5] 'இந்திய துணைக் கண்டத்தின் கிழக்குப் பகுதியுடன் ரோமருக்கு இருந்த வணிகம் மூன்றாம் நூற்றாண்டில் குறைந்தாலும், தமிழரின் கடற்கரை செயல்பாடுகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை'[6]

கடல் வழி வணிகத்தில் தமிழர்கள்:

'முற்காலத்தில் இருந்த கடற்கொள்ளைக்காரர்களைக் கருவறுத் தவர்கள். தமிழ்நாட்டுத் துறைமுகங்கள் வசதியும் பாதுகாப்பும் அமைந்து உலக வணிகர்களின் நன்மதிப்பைப் பெற்றவை'[7] தமிழ் முடியரசுகளின் வீழ்ச்சியுடன் படையெடுப்பாளர்களின் கையில் கடலாதிக்கம் சென்ற பிறகு தமிழர் கடலுரிமை இழந்து நின்றனர். பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி பிற கம்பெனிகளை வீழ்த்தி கடலாதிக்கத்தைப் பெற்று அதனூடாகப் பிரிட்டிசு இந்தியாவைத் தோற்றுவித்தது. கடலை இழந்ததால் வணிகத்தை இழந்து நாட்டை இழந்த சூழலை வ. உ. சி உணர்ந்தார். எனவே தான் மீண்டும் 'தமிழ்க்கப்பல்' செலுத்தி அதன் மூலம் வணிகத்தைக் கைப்பற்றித் தன்னாட்சி அடைய முடியும் என்று 'சுதேசி நாவாய் சங்கம்' தோற்றுவித்தார். எனினும் அம்முயற்சி முழுமையடையவில்லை. கிழக் காசியக் கடல் முழுதும் கப்பல் செலுத்தி வணிகத்தைக் கைப்பற்ற கனவு கண்டார். கப்பல் கட்டும் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தவும் விழைந்திருக்கிறார். 'நீரிற் செல்பல நாவா யாக்கல்' [8] என்று மெய்யறம் நூலில் அரசியல் பிரிவில் கைத்தொழில் அதிகாரத்தில் எழுதுகிறார்.

தேசிய இயக்கமும் விடுதலை உணர்வும்

'அரசாங்கம் எந்தக் காலத்திலாவது தொழிலாளர்களுக்குச் சாதகமாக இருந்ததா? இதுவரை அரசு, ஆங்கிலேய முதலாளிகளுக்கே சாதகமாக இருந்தது. நிலைமை இதுவாக இருந்தால் நாடு ஒரு பொழுதும் முன்னேற இயலாது. ஒருமுறை தொடங்கப்பட்ட கிளர்ச்சி எக்காரணம் கொண்டும்

தடுக்கப்பட இயலாது'9 என்று கேட்கிறார். ஆலை முதலாளிகள் பக்கச் சார்பாகச் சுதேசியம் பேசி வந்தனர். இன்றைய சூழலில் தொழிலாளர் ஆற்றலெல்லாம் தொழிற்சங்கவாதங்களாகச் சுருங்கி நிற்பதைக் காணும் பொழுது வ.உ.சி.யின் தொழிலாளர் - தேசிய இயக்கம் - விடுதலை உறவு எவ்வளவு முதன்மையானது எனப் புரிகிறது. 'தொழிலாளர்களை வர்க்க ரீதியாகத் திரட்டுதல் என்பது அவர்களை வர்க்க உணர்வு பெற்றவர்களாக ஆக்குதல் என்பதாகும். வர்க்க உணர்வை மூடியுள்ள பல கருத்து மாயைகளைக் களைதலாகும்'10 என்று கோ.கேசவன் கூறுகிறார்.

முடிவுரை:

உலகமயமாக்கல் தருவித்த ஏகபோகமயமாக்கலை (Monoploy) எதிர்த்துக் 'கூட்டுறவுத் தொழில் முனைதல்' எனும் கருவியைக் கையில் ஏந்த வேண்டியுள்ளது எந்த மொழி வழித் தேசியமாயினும் பொருளியல் மேம்பாடு குறித்து சிந்திக்காது போனால், அது ஊர் போய்ச் சேராது. புறவயமாகப் பொருளியல் மேம்பாட்டையும் அகவயமாக மொழிவழித் தேசத்திற்கான கட்டுமானத்தையும் நிகழ்த்திய வ.உ.சி. யின் அரசியல் மீது புத்தாய்வுகள் நிகழ வேண்டும். தமிழ் மொழியுணர்வோடு அனைத்து மக்களின் பொருளியல் மேம்பாடு குறித்துச் சிந்தித்துச் செயல்பட்ட வ.உ.சி. யின் செயல்பாடுகளைப் படிப்பினைகளாகக் கொள்வது தமிழ்த் தேசியத்திற்குக் காலத்தின் கட்டாயமாகும்.

துணை நின்றவை:

1. மெய்யறம் - சிதம்பரம் பிள்ளை, வ. உ., கலாரத்நாகர அச்சியந்திரசாலை, சென்னை, 1917.
2. மார்க்சியமும் மொழியியல் தேசிய இளப் பிரச்சனைகளும், ப-34, ஷே.வி. ஸ்டாலின், தொகுப்பாசிரியர் மகாராசன், யாப்பு வெளியீடு, 2022.
3. மேலது ப-94
4. வழித்தடங்கள், ப-60, தொ.பரமசிவன், கலப்பை பதிப்பகம், 2022.
5. தமிழகக் கடல்சார் பொருளாதாரமும் போர்ச்சுக்கீசிய காலனியமயமாக்கமும், ப-47, எஸ். ஜெயசீல ஸ்டீபன், தமிழில் க.ஐயப்பன், NCBH, 2020.
6. சோழமண்டலக் கடற்கரையும் அதன் உள்நாடும், ப-13, எஸ்.ஜெயசீல ஸ்டீபன், தமிழில் ரகு அந்தோணி, NCBH, 2019.
7. நம் நாட்டுக் கப்பற்கலை, ப-59, சாத்தன்குளம் அ. இராகவன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், 2022.
8. மெய்யறம், வ. உ. சிதம்பரம் பிள்ளை, 1917.
9. மார்க்சியம், ப-244, கோ.கேசவன், கோ.கேசவன் அறக்கட்டளை வெளியீடு, 2022
10. மார்க்சியம், ப-391, கோ.கேசவன், கோ.கேசவன் அறக்கட்டளை வெளியீடு, 2022

87

வ.உ.சி.யின் தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப்புப் பணி

முனைவர் ச. அனிதா சோபியா மார்கிரேட்
உதவிப் பேராசிரியர், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

ஆய்வுச்சுருக்கம்:

தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கான இளம்பூரணர் உரைப்பதிப்பு ரா.இராகவையங்காரிடமிருந்தே தொடங்குகின்றது. சி.வை.தா. காலத்தில் முழுவதும் கிடைக்கவில்லை என்று நம்பப்பட்ட இளம்பூரணர் உரை தமிழறிஞர்களின் தொடர் முயற்சியால் உழைப்பால் மெல்ல மெல்லத் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டது. வ.உ.சி. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் மற்றும் இளம்பூரணரின் பொருளதிகாரத்தைப் பதிப் பித்தார். திருக்குறள், இன்னிலை, சிவஞானபோதம் போன்ற நூல் களைப் பதிப்பித்திருந்தாலும், வ.உ.சி.யின் தொல்காப்பியப் பதிப்பு மிகவும் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. அந்த வகையில் அவரின் பொருளதிகார பதிப்பித்தலில் அவர் கையாண்ட முறைகள் பற்றி இக்கட்டுரை மூலம் ஆராயப்படுகிறது.

திறவுச்சொற்கள்: பதிப்பாளுமைகள், தொல்காப்பியப் பதிப்புப் பின்புலம், பதிப்புகள்

முன்னுரை:

வ.உ.சிதம்பரனார் பதிப்பித்த தொல்காப்பியம் - பொருளதிகாரம் (இளம்பூரணம்) மிகச்சிறந்த இலக்கியப் பணியாகும். அவர் இளம் பூரணரின் உரையுடன், அகத்திணையியல் மற்றும் புறத்திணையியல் உள்ளிட்ட பொருளதிகாரப் பகுதிகளை மிகவும் நுட்பமாகப் பதிப்பித தார். இவருடைய பதிப்பு, 1920-களின் முற்பகுதியில், துல்லியமான உரை மற்றும் பதிப்பு நுட்பங்களுடன் வெளிவந்தது. வ.உ.சி. அவர்களின் பதிப்புப் பணி 1812 ஆம் ஆண்டு தமிழ்ப் பேரிலக்கியங்களில் ஒன்றான திருக்குறள் அச்சில் நிலைபெறுகிறது. திருக்குறளைத் தொடர்ந்து தமிழின் அனைத்து வகையான நூல்களும் அச்சில் ஏறத்தொடங்கின.

பதிப்பாளுமைகள்:

பதிப்பாசிரியர்கள் என்னும் தனித்துறை சார்ந்த ஆளுமைகள் இக்காலகட்டத்தில் உருவாகினர். சுவடிகளில் அழிந்து போகக் கிடந்த நூல்களையெல்லாம் மீட்டு அச்சில் ஏற்றினர். பதிப்புகளில் பல நிலைப்பட்ட பதிப்புகளை உருவாக்கத் தொடங்கினர். கல்வி வளர்ச்சிக்கும் தமிழ் வரலாற்றை மறுகட்டமைப்பு செய்வதற்கும் இப்பதிப்பாசிரியர்கள் வழங்கிய கொடை ஏராளம். ஆறுமுக நாவலர், சி.வை.தா., உ.வே.சா., எஸ்.வையாபுரிப் பிள்ளை என்னும் பதிப்பாளுமைகளை நீண்ட நெடுங்காலமாக முன்வைத்த தமிழ்ச் சமூகம் இத்துறையில் நெடுங்காலமாகக் கவனம் பெறாமல் இருந்த

பதிப்பாசிரியர் வ.உ.சி. அவர்களையும் சமீபகாலமாகக் கவனப்படுத்தத் தொடங்கியது. நான்கு நூல்களை மட்டுமே வ.உ.சி. பதிப்பித்திருந்த போதிலும் தமிழ்ச் சமூகம் கவனத்தில் கொள்ளாத தொல்காப்பியம், திருக்குறள் ஆகியவற்றின் உரைகளை வ.உ.சி. மீட்டெடுத்துத் தந்த பின்புலமே இத்தகு அடையாளப்படுத்தலுக்கும் காரணமாக அமைந்தது. திருக்குறள் மணக்குடவர் உரையையும், தொல்காப்பிய எழுத்ததிகார, பொருளதிகார இளம்பூரணர் உரையையும் பதிப்பித்து வழங்கியதன் வழி வ.உ.சி. என்னும் பதிப்பாசிரியர் தமிழ்ப்பதிப்பு வரலாற்றின் முகமாகவும் மாறி நிற்கின்றார்.

தொல்காப்பியப் பதிப்பிற்கான பின்புலம்:

“தொல்காப்பியத்தைப் படிக்கும் பாக்கியம் எனக்கு 1910-ம் வருடம் கிடைத்தது. அதன் பொருளதிகாரத்தை யான் படித்தபோது. அதில் வேறு எம்மொழி இலக்கணத்திலும் காணப்படாத நிலப்பாகுபாடு நிலங்களின் மக்கள், ஏனைய உயிர்கள், மரங்கள், செடிகள், மலர்கள் மக்களது ஒழுக்கங்கள், பழக்க வழக்கங்கள் முதலியன கூறப்பட்டிருக்கக் கண்டேன். இவ்வொப்புயர்வற்ற நூலைத் தமிழ்மக்கள் படியாததற்கு ஒரு காரணம் இந்நூலிற்கு ஆன்றோர் இயற்றியுள்ள உரைகளின் கடின நடையென்று உணர்ந்தேன். இந்நூலைத் தமிழ் மக்கள் யாவரும் கற்கும்படி எளிய நடையில் ஓர் உரை எழுதவேண்டுமென்று நினைத்தேன்; உடனே எழுத்ததிகாரத்தின் முதற்சில இயல்களுக்கு உரையும் எழுதினேன்.

பின்னர், யான் சென்னை பிரம்பூரில் வசித்தகாலத்தில் என் உரையைப் பூர்த்தி செய்யக் கருதி முன் எழுதியிருந்த எழுத்ததிகார இயல்களின் உரையைத் திரு. தி. செல்வக்கேசவராய முதலியார் (எம்.ஏ.) அவர்களும் யானும் சரிபார்த்தோம். அப்போது தொல்காப்பிய இளம்பூரண எழுத்ததிகார அச்சுப்புத்தகமும், சொல்லதிகார ஏட்டுப்பிரதிகள் சிலவும் பொருளதிகார ஏட்டுப்பிரதியொன்றும் திரு. த. கனகசுந்தரம்பிள்ளை (பி.ஏ..) அவர்களிடமிருந்து கிடைத்தன. இளம்பூரணத்தை யான் படித்த போது அதன் உயர்வும், சிறப்பும், எளிய நடையும் தொல்காப்பி யத்திற்கு யான் உரை எழுதுவது மிகையென்று நினைக்கச் செய்தன. பின்னர் என் உரையைப் பூர்த்தி செய்யும் எண்ணத்தை விடுத்து, இளம்பூரணத்தை அச்சிட்டு வெளிப்படுத்த எண்ணினேன். முதலில் எழுத்ததிகாரத்தை ஒரு புத்தகமாகவும், பின்னர்ப் பொருளதிகாரத்தின் அகத்திணையியலையும், புறத்திணையியலையும் ஒரு புத்தகமாகவும் அச்சிட்டு வெளிப்படுத்தினேன். அச்சமயம் யான் சென்னையைவிட்டுக் கோயமுத்தூர் முதலிய வெளியூர்களுக்குச் சென்று அவ்வூர்களில் வசிக்க நேர்ந்தது. அதனால் இளம்பூரணப் பொருளதிகாரத்தின் பிந்திய இயல்களை அச்சிட்டு முடிக்க இயலாமற் போய்விட்டது.” என்று வ.உ.சி. பதிப்புரையில் கூறி உள்ளார்.

கண்ணனூர் சிறையில் இருக்கும் போது இளம்பூரணரின் தொல்காப்பிய உரையைப் பதிப்பிக்க நினைத்தார். அதன் விளைவாக முதலில், அகத்திணையியல், புறத்திணையியலை வெளியிட்டார்.

அவற்றில் வெளியான ஆண்டு குறித்த விவரமும் பதிப்பும் இடம் பெறவில்லை. இதனைத் தொடர்ந்து 1933ஆம் ஆண்டு களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய மூன்று இயல்களுக்கான இளம்பூரணர் உரையை ஒரு நூலாக வெளியிட்டார். இந்தப் பதிப்பில்தான் இளம்பூரணர் உரைக்கான ஏட்டுச்சுவடிகள் கிடைத்த விவரத்தினைப் பதிவு செய்கிறார். தி.த. கனகசுந்தரம் பிள்ளை அவர்களின் ஏட்டுச்சுவடியைப் பார்த்து எழுதப்பட்டதன் வடிவமே மூன்று இடங்களில் கிடைத்ததையும் அதில் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் பிரதியே சிறந்தது என்றும் குறிப்பிடுகிறார். ஆனால் இந்தப் பதிப்பு உருவாக்கத்திலேயே வையாபுரிப்பிள்ளை இணைந்து செயல்பட்டுள்ளார்.

அகத்திணையியல், புறத்திணையியல் பதிப்பு:

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் எழுத்ததிகாரம் மற்றும் சொல்லதிகாரத்திற்கு இளம்பூரணர் உரைச் சுவடி, அச்சுப் பதிப்புகளாக வெளிவந்துவிட்டன. 1920-ல் கா.நமச்சிவாய முதலியார் இளம்பூரணர் உரையில் பொருளதிகார அகத்திணையியல், புறத் திணையியல் பகுதிகளை மட்டுமே அச்சிட்டு வெளியிட்டிருந்தார். பொருளதிகார இளம்பூரணர் உரையை முழுவதுமாக முதன் முதலாகப் பதிப்பித்து வெளியிட்டவர் வ.உ.சி. தான். வ.உ.சிதம்பரனார் பதிப்பித்த தொல்காப்பியம் இளம்பூரணம் பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்) 1919-ல் வெளியிடப்பட்டது. கோவை சிறையில் இருந்தபோது, அதற்கான பணியை மேற்கொண்டார்.

சென்னை எழும்பூரில் வசித்த காலத்தில் தான் எழுதிய உரையைப் பூர்த்தி செய்யக்கருதி தி. செல்வகேசவராய முதலியாரிடம் எடுத்துச் சென்று சரிபார்த்துள்ளார். இவரின் ஆலோசனையும் த.கனகசுந்தரம் பிள்ளையிடமிருந்து கிடைத்த தொல்காப்பிய இளம்பூரண அச்சுப் புத்தகமும் சொல்லதிகார ஏட்டுப் பிரதியும், பொருளதிகார ஏட்டுப் பிரதி சிலவும் வ.உ.சி. அவர்களுக்குத் தொல்காப்பியம் பற்றிய தெளிவைத் தந்திருக்கின்றன. அவர்களிடமிருந்து பெற்ற சுவடிகளையெல்லாம் படித்துப் பார்த்த வ.உ.சி., இளம்பூரணரின் எளிய உரையைக் கண்டு வியந்துள்ளார். தாம் எழுதியுள்ள உரையைக் காட்டிலும், இவரின் உரை எளிமையாக உள்ளதே என்று கண்டு தெளிந்து உரை எழுதும் நோக்கத்தைக் கைவிட்டுள்ளார். பின்னர் தொல்காப்பியம் இளம்பூரணர் உரைச் சுவடியைப் பதிப்பிக்கும் பணியை அவர் தொடங்கியுள்ளார்.

களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல்,
உவமையியல், செய்யுளியல், மரபியல் பதிப்பு:

1933-இல் களவியல், கற்பியல், பொருளியல் எனும் மூன்று இயல்களைச் சேர்த்து ஒரு தொகுதியாக அச்சிட்டு வெளியிட்டுள்ளார். சென்னை வாவிள்ள இராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்ட் சன்ஸ் மூலம் வெளியிடப்பட்டது. 1935 - இல் மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் எனும் நான்கு இயல்களைச் சேர்த்து ஒரு

தொகுதியாகவும் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். இவற்றில் முகவுரையும் பதிப்புரையும் இடம்பெற்றுள்ளன.

வ.உ.சி.யின் தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப்புகள்:

1935 இல் பொருளதிகாரத்தின் ஒன்பது இயல்களைச் சேர்த்து ஒரு தொகுதியாகவும் வெளியிட்டுள்ளார். இவற்றில் முகவுரை, பதிப்புரைகள், சூத்திரக் குறிப்புகள், முன் உள்ளவற்றை அப்படியே பயன்படுத்தி உள்ளார். இப்பதிப்பிற்கு வையாபுரிப்பிள்ளை உதவி செய்துள்ளார். கோவில்பட்டியில் வ.உ.சி. இருந்த காலத்தில், வையாபுரிப் பிள்ளை உள்ளிட்டோரின் உதவியுடன் 1928-இல் இளம்பூரணர் உரைச் சுவடிகளை அச்சிட்டு வெளியிட்டார், இது தமிழ்ப் பதிப்பு வரலாற்றில் முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது.

தொல்காப்பியப் பொருளதிகாரம் அகத்திணையியல், புறத்திணை யியல் இளம்பூரணர் உரை - 1919 .

தொல்காப்பியப் பொருளதிகாரம் களவியல், கற்பியல், பொருளியல் இளம்பூரணர் உரை - 1933 .

தொல்காப்பியப் பொருளதிகாரம் மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் - இளம்பூரணர் உரை - 1935.

தொல்காப்பியம் பொருளதிகாரம் ஒன்பது இயல்களும் - இளம்பூரணர் உரை- 1935.

முடிவுரை:

இளம்பூரணர் உரையை அடிப்படையாகக் கொண்டு, பல்வேறு ஏட்டுப் பிரதிகளை ஒப்பிட்டு அவர் வெளியிட்ட பதிப்பு, ஒரு நவீன ஆய்வுப் பதிப்பிற்கு முன்னுதாரணமாகத் திகழ்வதுடன் இன்றைய ஆய்வாளர்களுக்குத் துணை நிற்கிறது. கடினமான இலக்கண விதிகளையும் நுட்பமான கருத்துகளையும் பாமரரும் புரியும் வண்ணம் செம்மைப்படுத்தியதில் வ.உ.சி.யின் தனித்துவம் விளங்குகிறது. வ.உ.சி. யின் இந்தப் பதிப்பு முயற்சி இல்லையெனில், பொருளதிகாரத்தின் பல நுட்பமான விளக்கங்கள் காலப்போக்கில் மறைந்திருக்கக்கூடும். அரசியல் களத்தில் அவர் காட்டிய வேகம், தமிழ் இலக்கணப் பதிப்புத் துறையில் விவேகமாகத் திகழ்ந்தது.

துணை நின்றவை:

1. அரசு.மா.ரா, வ.உ. சிதம்பரனார் , சாகித்திய அகாதெமி —முதல் பதிப்பு- 2005
2. அறவாணன்.க.ப., வ.உ.சி. யின் இலக்கணப் பதிப்புப்பணி , செந்தமிழ்ச் செல்வி- செப்டம்பர் -1972
3. வ.உ.சி. பதிப்பித்த தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரை, பதிப்பாசிரியர் அ.சதீஷ், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை, 2022.
4. https://tamildigitallibrary.in/voc

88

வ.உ.சி.யின் நண்பர் மு.ரா.கந்தசாமிக் கவிராயர் (1869 – 1918)

க. கந்தசாமி பாண்டியன்,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஆறுமுகம் பிள்ளை சீதை அம்மாள் கல்லூரி, திருப்பத்தூர்.

ஆய்வுச்சுருக்கம்:

தமிழகம் பல தமிழறிஞர்களை மறந்துவிட்டது. பலரை மறைத்து விட்டது. அப்படி தமிழகம் மறந்த தமிழ் ஆளுமைதான் மு.ரா.க. என்று அழைக்கப்படும் மு. ரா. கந்தசாமிக் கவிராயர். இவர் வ.உ.சி., பாரதி, சுப்பிரமணிய சிவா, பாண்டித்துரைத் தேவர், உ.வே.சா, சோழ வந்தான் அரசஞ்சண்முகனார், பண்டிதமணி கதிரேசஞ்செட்டியார் போன்றோருடன் நெருங்கிய நண்பராக இருந்தவர். இவர் வ.உ.சி. யின் உற்ற நண்பர். இருவரின் நட்பின் ஆழத்தினை விளக்கும் வண்ணம் இக்கட்டுரை அமைகின்றது.

முன்னுரை:

இந்தியாவின் தனித்துவ ஆளுமை வ.உ.சி. வ.உ.சி.யின் தொடக்க காலம் முதல் இறுதிக் காலம் வரை அவருடன் நண்பர்களாக இருந்தவர்கள் மிகச் சிலரே. தொடக்க கால நண்பர்கள் பலர் அவர் சிறை சென்ற பின்னர்த் தங்கள் நட்பினை முடித்துக்கொண்டனர். ஆனால், வ.உ.சி. யுடன் தனது இறுதிக்காலம் வரை உற்ற நண்பராகவும் உறுதுணையாகவும் இருந்தவர் மு. ரா. கந்தசாமிக் கவிராயர். பதிப்பாசிரியர், இதழாசிரியர், ஆசு கவி, உரையாசிரியர், சொற்பொழிவாளர், சுதேசிய வீரர், பள்ளி ஆசிரியர், மொழிபெயர்ப்பாளர் எனப் பன்முகம் கொண்ட ஆளுமையே மு.ரா.கந்தசாமிக் கவிராயர்.

இருவருக்குமான குடும்ப நட்பு:

மு.ரா.க. வின் பரம்பரையே புலவர் பரம்பரையாகும். இவரது பரம்பரையினர் சேற்றூர் சமஸ்தானத்தின் சமஸ்தானப்புலவராய் இருந்தவர்கள். ஒரே நேரத்தில் இவரது குடும்பத்தினர் எழுவர் தமிழகம் அறிந்த புலவர்களாக இருந்தனர். இதனை,

‘திருவளருந் தென்பாண்டிச் சேயிழைக்கூர் பலவுறுப்பாத் திகழ்ப வற்றுள்
ஒருமுதன்மை யுற்றதனால் முகவூரென் றுலகமெலா முரைக்கு மூரர்
இருவிணிடை யேழிருடி யினமீன்க ளுடங்கிலங்க லென்ன மண்ணிற்
பெருகுபுக ழெழுபுலவ ரொருகுடியி லொருங்குமிகப் பிறங்கி னாரால்’ 1

என்று வெ.ப.சுப்பிரமணிய முதலியார் தனது சாற்றுகவியில் பதிவு செய்துள்ளார். மு.ரா.க.வின் பெரிய தந்தை மு.கந்தசாமிக் கவிராயர். அவரது மகன்கள் பழனிக்குமார தம்பிரான், மீனாட்சிசுந்தரக் கவிராயர்.

மு.ரா.க.வின் தந்தை மு.ராமசாமிக் கவிராயர். மேலும் இவரது உடன் பிறந்தவர்களான மு.ரா.அருணாசலக் கவிராயர், மு.ரா.சுப்பிரமணியக் கவிராயர் (இவர்கள் இருவரும் நான்காம் தமிழ்ச்சங்க நூற் பரிசோதகர்களாகவும் உரையாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் இருந்தவர்கள்) ஆகியோர் ஆவர். இதில் பழநிக்குமார தம்பிரான் திருவாவடுதுறை ஆதீன வித்வானாகவும் தம்பிரானாகவும் இருந்தவர். மீனாட்சி சுந்தரம் கவிராயர் எட்டையபுரம் சமஸ்தான வித்வானாக இருந்தவர்.

இதில் இவரது தந்தை முகவூர் இராமசாமிக் கவிராயர் ஆகச் சிறந்த புலவர் ஆவார். இவர் வ.உ.சி.யுடன் நெருங்கிய பழக்கம் உடையவர். வ.உ.சி.யின் பாடற்றிரட்டில் இவர் குறித்து வ.உ.சி. எழுதிய பாடல்கள் 2 இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது ஆகும். வ.உ.சி.யுடன் மட்டுமல்ல இவர் பாண்டித்துரைத் தேவருடனும் நட்பு கொண்டிருந்தார்.

மாண்பு நிறைந்த நண்பர்கள் வரிசையில் மு. ரா. க.:

வ.உ.சி. தனது சுயசரிதையில் தனக்கு அணுக்கமான, உணர்ச்சியால் நட்ட நண்பர்களைப் பட்டியலிடுகிறார். இது வள்ளிநாயகம் தொடங்கி திலகன், அரவிந்தன், பாரதி என்று நீண்டுசெல்கிறது. அவ்வரிசையில் மு.ரா.க.வும் இடம்பெறுகிறார். இதனை,

‘...... *மற்றையோர்*
திருநெல் வேலிச் சிதம்பரம் பிள்ளை
கந்த சாமிக் கவிராயர் ஐயர்’ [3]

என்ற வ.உ.சி.யின் சுயசரிதை அடிகள் விளக்குகின்றன.

வ.உ.சி.யும் விவேகபாநுவும் மு.ரா.க.வின் வித்யாபாநுவும்

சுதேசியம் வளர்ப்பதற்காக வ.உ.சி. கைக்கொண்ட முதல் ஆயுதம் விவேகபாநு என்னும் இதழே ஆகும். இவ்விதழ் 1900 ஆம் ஆண்டு முதல் ஆறுமாதம் ஸ்ரீகணபதியானந்த சுவாமிகளாலும் பின்னர் வள்ளிநாயக சுவாமியைப் பத்திராதிபராகவும் கொண்டு வெளிவந்தது. பின்னர் 1902 முதல் 1909 வரை இதன் ஆசிரியராகவும் பத்திராதிபராகவும் மு.ரா.க. இருந்து வந்தார். இவ்விதழின் தொடக்கம் பற்றி,

‘*விவேக பாநு விளங்குற எங்கும்*
விவேக பாநு வை வெளிவரச் செய்தேன்’ [4]

வ.உ.சி. தனது சுயசரிதையில் பதிவுசெய்துள்ளார். ஒவ்வொரு மாதமும் விவேகபாநுவின் வளர்ச்சிக்காக ஒவ்வொரு மாதமும் தொடர்ச்சியாகப் பத்து ரூபாயை வ.உ.சி. வழங்கியிருக்கிறார். வ.உ.சி.யின் முதல் ஆன்மீகக் கட்டுரையான ‘கடவுளும் பக்தியும்’ என்னும் கட்டுரையும் (முதல் கட்ட விவேகபாநு – 1901) முதல் அரசியல் கட்டுரையான ‘சுதேசாபிமானம்’ என்ற கட்டுரையும் (இரண்டாம் கட்ட விவேகபாநு 1902 - 1909) இவ்விதழில்தான் வெளிவந்தன. அதேபோல் பக்கிங்ம் சந்திரரின் ‘வந்தே மாதரம்’ பாடல் குறித்த தமிழில் வெளியான முதல் கட்டுரையினை

(1906, நவம்பர்) வெளியிட்ட பெருமை மு.ரா.க.விற்குரியது. அதேபோல் அதனை தமிழில் முதன்முதலில் மொழிபெயர்த்த பெருமை பாரதியைச் சாரும். பாரதி தனது முதல் மொழிபெயர்ப்பில் மனநிறைவு கொள்ளாமல் இரண்டாம் முறையும் (ஐந்து ஆண்டுகளுக்குப் பின்) மொழிபெயர்த்தார். மேலும் வ.உ.சி. யின் நூல்களுக்கான விளம்பரமும் அவரது நூல்களின் விமர்சனமும் தொடர்ந்து வெளிவந்தன. 1909 ஆம் ஆண்டிற்குப் பிறகு மு.ரா.க. வித்தியாபாநு என்ற இதழினைத் தொடங்கி நடத்தினார். அவ்விதழிலும் வ.உ.சி. யின் நூல்கள் குறித்த விமர்சனம் இடம்பெற்றது. மெய்யறம், அகமேபுறம் ஆகிய நூல்களுக்கான விமர்சனங்களை வ.உ.சி. பாடற்றிரட்டின் முன்பகுதியில் இணைத்து வ.உ.சி. வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

விவேகபாநு 1906 ஆகஸ்ட் மாத இதழில் தான் வ.உ.சி. சுதேசிக் கப்பல் கம்பெனி குறித்த வரவு செலவு பற்றிய அறிவிப்பை ‘சுதேச ஸ்டீமர் விஞ்ஞாபனம்’ [5] என்னும் தலைப்பில் வ.உ.சி. வெளியிட்டார்.

மேலும் மு.ரா.க. 1908 ஆம் ஆண்டு ஓர் அறிவிப்பினை வெளியிட்டார். அவ்வறிவிப்பில் ‘1907 இல் தூத்துக்குடி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி விஷயமாகவும் என் சொந்த வேலைகள் சிலவற்றைக் கருதியும் யான் மதுரையில் இல்லாமல் சேலம், கோயமுத்தூர், பாலக்காடு, கள்ளிக்கோட்டை முதலிய அயலிடங்களில் யாத்திரை செய்து கொண்டிருந்தமையால் ....’ [6] என்று தான் ஆசிரியர் பொறுப்பில் இல்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறார். இதிலிருந்து வ.உ.சி.யின் கப்பல் கம்பெனிக்கு பங்குதாரர்கள் சேர்ப்பதற்கு மு.ரா.க.வும் பெரும் முயற்சி எடுத்துள்ளதை அறியமுடிகின்றது. மேலும் விவேகபாநுவிலும் வித்தியாபாநுவிலும் சுதேசியம் தொடர்பான கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டுவந்தார். குறிப்பாக 1906 ஆம் ஆண்டு வெளியான வந்தே மாதரம் (மு.ரா.கந்தசாமிக் கவிராயர்), சுதேசிய முயற்சி (சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர்), சுதேசாபிமானம் (வ.உ.சி) போன்ற கட்டுரைகளைக் கூறலாம்.

திருநெல்வேலி எழுச்சியும் மு. ரா. க. வும்:

திருநெல்வேலி எழுச்சியினால் வ.உ.சி. யும் சுப்பிரமணிய சிவாவும் பத்மநாப ஐங்காரும் 1908 மார்ச் 12 ஆம் நாள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இவ்வழக்கில் நூற்றைம்பத்தாறு சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். நூற்றுக்கும் மேற்பட்ட தடயங்கள் முன்வைக்கப் பட்டன’ [7] இதில் கைதிகளுக்குச் சாதகமாகச் சாட்சி சொன்னவர்கள் பட்டியலில் மு. ரா. க. வும் இடம்பெற்று வ.உ.சி. க்கு ஆதரவாகச் சாட்சியம் வழங்கியுள்ளார். இதனை ஆ. இரா. வேங்கடாசலபதி ‘எழுச்சியில் பங்கு வகித்தவரும், வ.உ.சி. யின் நண்பருமான வழக்குரைஞர் சாது கணபதி பந்துலு, சுதேசிக் கப்பல் கம்பெனியின் செயலாளராகப் பணியாற்றிய எஸ்.டி. கிருஷ்ணய்யங்கார், வ.உ.சி.யின் ஆதரவுடன் வெளிவந்த ‘விவேகபாநு’ எனும் இதழின் ஆசிரியராக விளங்கிய பெரும்புலவர் சேற்றூர் மு.ரா.கந்தசாமிக் கவிராயர் ஆகியோர் எழுச்சிக் கைதிகளுக்கு

ஆதரவாகச் சாட்சியம் அளித்தது குறிப்பிடத்தக்கதாகும்' [8] என்று பதிவு செய்துள்ளார்.

மேலும், திருநெல்வேலி எழுச்சியின் போது கைதானோர்களுக்கு உதவுவதற்கென 'திருநெல்வேலி கஷ்ட நிவர்த்தி நிதி' ஒன்றும் வசூலிக்கப்பெற்றது. இதற்கான அறிவிப்பினை சுதேசமித்திரன் நாளிதழ் 'தமிழ்நாட்டு மஹாஜனங்களுக்கு ஒரு பிரார்த்தனை' 9 என்னும் தலைப்பில் வெளியிட்டது. இவ்வறிவிப்பில் முதல் பெயர் மு.ரா.க.வின் பெயர். எனவே வ.உ.சி. க்கு மட்டுமல்ல பிற கைதிகளுக்கும் மு.ரா.க. உதவி செய்துள்ளதை அறியமுடிகின்றது.

முடிவுரை:

வ.உ.சி.யின் எண்ணங்களுக்கு இதழ்களின் வழியாக வடிவம் கொடுத்தவர் மு.ரா.க. வரலாற்று ஆய்வறிஞர் சலபதி அவர்களுடன் நேரடி உரையாடலின்போது 'வ.உ.சி.யின் தொடக்க கால நண்பர்கள் பலர் அவர் சிறைக்குச் சென்றுவிட்டு வந்த பின்பு அவருடன் இருந்த தொடர்பினை முடித்துக்கொண்டனர். ஆனால் தனது வாழ்நாள் இறுதி வரை வ.உ.சி.க்கு உற்ற நண்பராக இருந்த மிகச் சிலரில் மு.ரா.கந்தசாமிக் கவிராயரும் ஒருவர்' என்று குறிப்பிட்டார். இதனை, 'M.R.Kandaswami Kavirayar, a leading scholar associated with the Madurai Tamil Sangam and editor of the scholarly Tamil monthly, Vivekabhanu, and a friend of VOC' 10என்று தனது நூலிலும் ஆ.இரா.வேங்கடாசலபதி பதிவு செய்துள்ளார்.

சான்றெண் விளக்கம்

1. பரங்கிரிப் பிரபந்தத் திரட்டும் குறிப்புரையும், மு.ரா.அருணாசலக் கவிராயர், மீனலோசனி அச்சியந்திர சாலை, மதுரை, 1927
2. வ.உ.சி. பாடற்றிரட்டு., பக்., 12 – 13
3. வ. உ. சி சுயசரிதை, ப. 25
4. மேலது., ப. 26
5. விவேகபாநு, வால்யூம் 5, ப. 294
6. இந்திய விடுதலைக்கு முந்தைய இதழ்கள், தொகுதி 2, ப., 93
7. திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் 1908, ஆ.இரா.வேங்கடாசலபதி, ப. 75
8. மேலது., ப. 79
9. மேலது., பிற்சேர்க்கை 5
10. Swadeshi Steam, V.O.Chidambaram Pillai and the Battle against the British Maritime Empire, A.R.Venkatachalapathy, p. 109

பயன்கொண்ட நூல்கள்

1. இ.சுந்தரமூர்த்தி, ம.ரா.அரசு (ப. ஆ.,) இந்திய விடுதலைக்கு முந்தைய இதழ்கள், தொகுதி 2, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை – 113, பதிப்பு, 1999.

2. வ.உ.சி. சுயசரிதை, வ.உ.சி.நூலகம், சென்னை – 4, பதிப்பு, 2012
3. வ.உ.சி. பாடற்றிரட்டு, இந்தியா பிரிண்டிங் வொர்க்ஸ், சென்னை, பதிப்பு, 1915
4. ஆ.இரா.வேங்கடாசலபதி, திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் 1908, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், பதிப்பு 2022
5. A.R.Venkatachalapathy, Swadeshi Steam, V.O.Chidambaram Pillai and the Battle against the British Maritime Empire, Penguin Random House India Pvt. Ltd., Gurugram, Haryana, 2023.

சுதேசிக் கப்பல் வருகை : பாரதியின்
'இந்தியா' பத்திரிகையில் வெளியான கருத்துப்படம்

89

வ.உ.சி.யின் மேடைச் சொற்பொழிவு

முனைவர் க. குமரகுருபரன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை.

முன்னுரை:

சுதந்திரம் அக்கால இந்தியாவின் ஒட்டுமொத்த கனவாக இருந்தது. வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம் பிள்ளை எனும் பெயரைக் கொண்ட வ. உ. சி 1872 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதியில் பிறந்தார். அவர் 1936 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் தேதியில் மறைந்தார். அவரின் மறைவிற்குப் பிறகு அவர் கண்ட கனவு நினைவாக மாறியது. இந்தியா விடுதலையானது அவரின் மறைவிற்குப் பிறகு 11 ஆண்டுகள் கடந்து. 1906 ஆம் ஆண்டுக் காலக்கட்டத்தில் நாடு முழுவதும் அறியப்பட்ட தலைவராக இருந்தவர் வ. உ. சி ஆவார். பிற்காலத்தில் இந்தியத் தலைவர்களாக காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு, வல்லபாய் படேல், அம்பேத்கர் போன்றவர்கள் அறியப்பட்டனர்.

மேடைச் சொற்பொழிவின் தொடக்கமும் வ.உ.சி.யும்:

இன்று அனைத்து அரசியல் தலைவர்களாலும் மேற்கொள்ளப் படும் மிகவும் இயல்பான ஒன்று மேடைச் சொற்பொழிவு. வ.உ.சி. யின் அரசியல் வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் அரிதான ஒன்றாக அமைந்திருந்தது. சொற்பொழிவுக் கலையைத் தமிழ்நாட்டில் தொடங் கியவர் ஜி.சுப்பிரமணிய ஐயர் ஆவார்.

1883ஆம் ஆண்டு ஜி.சுப்பிரமணிய ஐயர் ரிப்பன் பிரபுவால் உருவாக்கப்பட்ட ‘ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபன திட்டம்’ என்ற ஒரு கூட்டமைப்பின் முக்கியத்துவத்தினை இந்தியர்களுக்கு புகட்டும் நோக்கத்தில் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டார். அதுவே தமிழகத்தைப் பொறுத்தவரையில் அரசியல் அடிப்படையில் அமைந்த முதல் சுற்றுப்பயணம் மற்றும் சொற்பொழிவு ஆகும்.

ஜி.சுப்பிரமணிய ஐயர் வைத்த புள்ளியை வார்த்தெடுத்த பெருமை வ.உ.சி. அவர்களைச் சாரும். அரசியல் சொற்பொழிவை ஒரு கலை யாக வளர்த்துப் பாமர மக்களையும் அரசியல் விழிப்புணர்வு கொள்ளச் செய்தார். விடுதலை இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றிக்காட்டிப் புதிய வரலாறு படைத்தவர் வ.உ.சி. மேடைத் தமிழ் சொற்பொழிவு வரலாற்றில் நீக்க முடியாத இடத்தினைத் தக்கவைத்தவர். அவரின் சொற்பொழிவுகளின் வழியாக தமிழகம் பெற்ற தவப்பயனை விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

தம் பேச்சாற்றலால் ஆற்றல் மிக்க சொற்பொழிவுகளால் வ.உ.சி. மக்களை இயக்கினார் என்பதை வரலாறு பல நிலைகளில் பதிவு செய்துள்ளது. வ. உ. சி அவர்களின் வீரம் செறிந்த, சொற்பொழிவுகளை நேரில் கேட்டு நாட்டுணர்வு பெற்றனர். சொற்பொழிவுகளின் தாக்கத்தால் அன்றைய திருநெல்வேலி மாவட்டத்தில் குறிப்பாக தூத்துக்குடியில் மக்கள் எழுச்சியை நேரில் கண்டவர்களும் அரவிந்தர் போன்ற இந்திய தலைவர்களும் பல்வேறு கருத்துக்களை தெரிவித்துள்ளனர். அன்றைய ஆங்கில நாளிதழ்களும் இவற்றைப் பதிவு செய்துள்ளன.

வ.உ.சி.யின் மேடைச் சொற்பொழிவு குறித்து எஸ். வையாபுரிப் பிள்ளை '1907 ஆம் ஆண்டு, ஒரு நாள் நான் கற்று வந்த இந்து கலாசாலையில் மாணாக்கரிடையே ஒரு பரபரப்பு உண்டாகியிருந்தது. அன்று மாலை சுமார் 5:30 மணிக்கு தூத்துக்குடியில் இருந்து தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை திருநெல்வேலிக்கு வந்து கீழரத வீதியில் அம்மன் சன்னதிக்கு எதிரே பேசப் போகிறார் என்று ஒரு வதந்தி. குறித்த நேரத்திற்கு முன்பே ஜனங்கள் பெருந்திரளாக கூடியிருந்தார்கள். நானும் கலாசாலையில் இருந்து நேரே போய் சேர்ந்தேன். குறித்த நேரம் கடந்துவிட்டது. ஆனால், ஜனங்கள் காத்துக்கொண்டிருந்தார்களேயல் லாமல் கலைந்து போகவில்லை. சுமார் ஆறு மணிக்கு மேல் வ. உ. சி வந்து சேர்ந்தார்.

அவரைப் பார்த்தவுடன் முதலாவது இவர் என்ன பேச முடியும் என்று தான் நினைத்தேன். ஆனால், அவர் தொடங்கிய சிறிது நேரத்திற்கு எல்லாம் விஷயங்களைத் தெளிவாக எடுத்துச் சொன்ன முறை என்னை வசீகரித்தது. அந்நிய அரசாங்கத்தினர் நாம் சிறிதும் முன்னேற ஒட்டாதபடி வாணிகம் முதலியன புரிந்து, நம் நாட்டு செல்வத்தை சுரண்டிக் கொண்டு போவதைக் குறித்து விஸ்தாரமாகப் பேசினார். ஒவ்வொருவனும் தேசாபிமான முடையவனாக இருத்தல் வேண்டும் என்று வற்புறுத்தினார். இதைப் பற்றி பேசும் பொழுது அவர் தம்மையே மறந்து பரவசமாய் நின்று கேட்போர் உள்ளத்தை நேரடியாய்த் தாக்கினார் என்று சொல்ல வேண்டும். சுமார் ஒரு மணி நேரம் பேசியிருப்பார், கேட்ட மக்கள் அனைவரும் மிக்க குதூகலமுற்றனர்'. என்று தன் அனுபவத்தை எஸ். வையாபுரிப் பிள்ளை குறிப்பிடுகிறார்.

சுதேசி இயக்கமும் வ.உ.சி. மேடைப் பேச்சும்:

'பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு' என்ற பாரதியார் பாடல் அப்போது பத்திரிகைகளிலும் அரசியல் மேடைகளிலும் பிரபல மாக எதிரொலித்துக் கொண்டிருந்த நேரம். ஒவ்வொரு துறையிலும் வெள்ளையர்களது பொருளாதாரச் சுரண்டல்களினால் இந்தியா அல்லல் படுவதையும் அந்தத் தொல்லை மிக அல்லல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையும் வ.உ.சி. அவர்கள் கண்கூடாக கண்டார். இந்தியா சுதந்திரம் பெற வேண்டும், அந்நிய ஆட்சி அறுத்தெறியப்பட வேண்டும், பல்துறைகளிலும் பாரதம் முன்னேற வேண்டும், மக்கள் வாழ்க்கைத் தரம் வளம் பெற வேண்டும் என்று போராடிக் கொண்டிருக்கும் இந்திய

தேசிய காங்கிரஸ் மகாசபையில் வ.உ.சி. அவர்கள் இணைகின்றார். இந்திய விடுதலைக்காக தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் நாட்டுக்கும், நாட்டு மக்களது வாழ்வுக்கும் தியாகம் செய்வது ஒன்றே தனது பிறப்பின் கடமை என்ற வாத பிரதிவாத தேச பக்தர் போர்க் கோலத்தோடு திருநெல்வேலி மாவட்டம் முழுவதுமாக வளம் வந்தார் வ.உ.சி. அவர்கள்.

அங்கு அவருக்காக அமைக்கப்பட்ட ஒவ்வொரு மேடைகளிலும் ஏறி இந்திய விடுதலைப் போராட்ட முக்கியத்துவத்தைப் பற்றி முழங்கினார். ஆங்கிலேயரின் ஆணவ ஆர்ப்பாட்ட ஆட்சி நமக்குத் தேவையா? என்று கேட்டார்! மக்கள் சொற்பொழிவு நடக்கும் ஒரு மக்களாட்சி தான் நமக்குத் தேவை என்பதற்கான காரண காரியங்களை மக்களிடையே தன் எளிய நடையின் வழியாக எடுத்து இயம்பினார்.

வடநாட்டில் காங்கிரஸ் மகாசபையில் மிதவாதிகளும், தீவிர வாதிகளும் இணைந்து பணியாற்றுவதில் அவர்களுக்குள்ளே சுதந்திரம், நாட்டு விடுதலை ஒன்றை உயிர்மூச்சாக இருந்தது. இத்தருணத்தில் 1907 ஆம் ஆண்டு சூரத் நகரில் தேசிய மகாசபை கூட்டம் ஒன்று கூடியது. அந்த மகாசபை கூட்டத்திற்கு வ.உ.சி. அவர்கள் சென்று கலந்து கொண்டார்.

காங்கிரஸ் மகாசபை பிரதிநிதிகள் தங்கி இருந்த விடுதியில் லாலா லஜபதிராய், அரவிந்தர், லோகமான்ய பால கங்காதர திலகர், விபின் சந்திரர், கோபாலகிருஷ்ண கோகலே, பண்டித மோதிலால் நேரு, சித்தரஞ்சன் தாஸ், ராஷ் பிகாரி கோஷ் போன்ற பெரும் தலைவர்கள் அங்கு கூடியிருந்தனர்.

அந்த மாபெரும் அவையில் அரவிந்தர் மற்றவர்களை பார்த்து என் பிள்ளை அவர்கள் எங்கே? என்று குரல் கொடுத்தார். அங்கே கூடியிருந்த வடநாட்டு தலைவர்கள் எல்லாம் திகைத்து உட்கார்ந்திருந்தார்கள். உடனே அரவிந்தர் எழுந்து அவர் தாம் தமிழ்நாட்டில் புகழ்பெற்ற தேச பக்தர் தூத்துக்குடி வக்கீல் சிதம்பரம் பிள்ளை என்றார். தமிழ்நாட்டில் தீவிரவாதக் கொள்கைக்கு மக்கள் ஆதரவு திரட்டிடும் பொறுப்பை சிதம்பரம் பிள்ளையிடம் திலகர் ஒப்படைத்தார்.

தென்னாட்டிலேயே சிறந்த வீரர் சிதம்பரம் பிள்ளை ஒருவர்தான் என்று திலகர் முன்மொழிந்தார். 1908 ஆம் ஆண்டு மக்களை தேசாபிமானிகளாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தேச அபிமானி சங்கம் என்ற ஒன்றை நிறுவினர். இச்சங்கத்தின் முக்கிய நோக்கத்தினை நெல்லை மாவட்ட பட்டி தொட்டிகளிலே எல்லாம் அடிக்கடி பொதுக்கூட்டங்களைக் கூட்டி பிரிட்டிஷ் ஆட்சியின் கேடுகளை பொதுமக்கள் உணர்ந்து உயிரற்றெழும் வகையில் பேசியும் வந்தார். வ.உ.சி. அவர்களின் பேச்சை கேட்க பெருந்திரளாக மக்கள் கூடினர். திரண்ட மக்களிடையே சுதேசி பற்று, வெளிநாட்டு சாமான்கள் விலக்கு, தேசிய கல்வி, மனித உரிமைகள், விடுதலையின் விளக்கங்கள், அடிமை ஒழிப்புகள் என்பன அவரது பேச்சின் வழி உணர்ச்சியின் உச்ச கட்டத்தைத் தொட்டது.

தேசாபிமானி சங்கம் சுப்பிரமணிய சிவா இணைப்பிற்குப் பிறகு சுதேசி இயக்கமாக மாறத் தொடங்கியது. சுதேசி இயக்கம் இந்திய நாட்டின் முக்கிய பொருளாதார முன்னேற்றத்தினை முன்னெடுத்துச் சென்றது. வணிகம் என்றதும் ஆங்கிலேயர் வசம் இருந்த அக்காலகட்டத்தில் சுதேசி இயக்கம் கப்பல் நிறுவனமாக உருபெற்றதும் வ.உ.சி. அவர்களால் மட்டுமே சாத்தியமானது. சுப்பிரமணிய சிவா சுதேசி கப்பல் நிறுவனப் பணிகளை முடித்துக் கொண்டு நாள்தோறும் பல்வேறு இடங்களில் தன் சொற்பொழிவுகளை நிகழ்த்தி மக்களிடம் அதன் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பார். சுப்பிரமணிய சிவாவும் வ உ சி அவர்களும் இணைந்து பேசிய பொதுக்கூட்டங்கள் ஆயிரக்கணக்கான மக்களின் வருகையை ஈர்த்தன.

கோரல்மில் வேலை நிறுத்தமும் வ.உ.சி. யும்

தூத்துக்குடி நகரில் தற்போது ஆர்வி பஞ்சாலை என்று அழைக்கப் படும் பஞ்சாலைக்கு அப்போது கோரல் மில் என்று பெயர். அதில் பணியாற்றும் தொழிலாளர்கள் தங்களுக்கு கூலியை உயர்த்த வேண்டும் என்று வெள்ளைக்கார முதலாளிகளிடம் வேண்டினர். அதற்கு அந்த முதலாளிகள் ஒப்புக்கொள்ள மறுத்து விட்டார்கள்.

இதைக் கண்டு மனம் கொதித்த ஊழியர்கள் அனைவரும் ஒற்றுமையாகக் கட்டுப்பாட்டுடன் வேலை நிறுத்தம் செய்தார்கள். வேலை நிறுத்தத்தால் அவர்களது குடும்பங்கள் பல பட்டினியாகக் கிடந்தன.

வ.உ.சி. அவர்கள் வெள்ளையர்களின் தொழிலாளர் விரோத போக்கைக் கண்டித்து சில வழக்குரைஞர்களின் உதவியால் பணம் திரட்டி பட்டினி கிடக்கும் தொழிலாளர் குடும்பத்திற்குப் பேருதவி புரிந்தார். வேலை நிறுத்தம் நடந்த எல்லா நாட்களிலும் தூத்துக்குடி நகரில் வெள்ளையர்களின் தொழிலாளர் துரோகத்தைக் கண்டித்து பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன.

பொதுக் கூட்டத்தில் வ. உ. சி அவர்கள் மனிதநேயமற்ற தன்மை யில் ஈடுபடும் ஆங்கிலேயர்களின் நிலையை சாடுவதுடன் தொழி லாளர்களுக்கு உத்வேகம் கொடுக்கும் வகையில் சிறப்பான முறையில் சொற்பொழிவை நிகழ்த்தினார். தொழிலாளர்களது கோரிக்கைகள் பெறும் வரை முதலாளிகளுக்கு பணியக் கூடாது என்று வ.உ.சி. அவர்களின் பேச்சு தொழிலாளர்களுக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் கொடுத்தது. வேலை நிறுத்தத்தைத் தொடங்கியதே வ. உ. சி அவர்கள்தான் என்று அவர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்தன.

நீதிபதி அவர்கள் நேரடியாகவே அழைத்து எச்சரித்தார். மில் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் மதுரை பஞ்சாலை தொழி லாளர்களின் வேலைநிறுத்தம் வரை தொடர்ந்தது. பின்பு வேறு வழியே இல்லை என்ற நிலை ஏற்படும் பொழுது ஆங்கிலேயர்கள் தொழிலாளர்களின் கூலியை சற்று உயர்த்தித் தர ஒப்புக்கொண்டனர்.

முடிவுரை:

வ.உ.சி. அவர்களின் பேச்சும் தேசிய ஊழியமும் மக்கள் மனதில் நாட்டுப்பற்றைப் பொங்கச் செய்தது. தூத்துக்குடியில் சுதேசி கிளர்ச்சி அரசியல் புரட்சியாக மாறியது. தமிழர்கள் எவரும் கையில் ஆயுதங்களை எடுத்துச் செல்லக்கூடாது என்று தடை விதித்தனர். இதை அறிந்த சிதம்பரனார் 'வேல் பிடித்த வீரர் தமிழர்கள்' இப்போது கோல் பிடிக்க கூட உரிமை இல்லையா? என்று வினவினார்.

துணைநூற் பட்டியல்:

1. ம.ரா. அரசு, வ. உ. சி வளர்த்த தமிழ், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2002.
2. என்.வி.கலைமணி, கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி, சாந்தி நிலையம், சென்னை, 2017.
3. விமலானந்தம், மது,ச.பேராசிரியர், தமிழ் இலக்கிய வரலாறு, அபிராமி பதிப்பகம், சென்னை, 2022.

90

தமிழ் இலக்கியத்திற்கு வ.உ.சி.யின் பங்களிப்பு

முனைவர் நா. தனலட்சுமி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர்
வைணவக் கல்லூரி, குரோம்பேட்டை, சென்னை.

ஆய்வுச் சுருக்கம்:

வ.உ.சி. தமிழ் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார். தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்து வந்தார். இவர் சங்க இலக்கிய இலக்கணங்களில் வல்லவர். உண்மை உரை காணும் திறம் பெற்றவர். தமிழில் சொற்சுவை, பொருட்சுவை கனிந்த பாக்கள் பல இயற்றி உள்ளார். வ.உ.சி. அவர்கள் தமிழ் நூல்கள் பலவற்றை தமிழ் மக்களுக்கு உதவுமாறு பதிப்பித்துள்ளார். வ.உ.சி. அவர்கள் பதிப்பாளராக மட்டுமல்லாமல் சிறந்த உரையாசிரியராகவும் திகழ்ந்துள்ளார். இன்னிலைக்கு அவர் எழுதியிருக்கும் முறை கற்றோர் போற்றும் சிறப்புடையதாகும்.

திறவுச் சொற்கள்: மெய்யறம், இன்னிலை, அகமே புறம், புன்கணீர், சிவஞானபோதம்..

முன்னுரை

ஆங்கிலேயர்களின் அடக்குமுறையை எதிர்த்துப் போராடினார். அவர்களின் கொடுமையான சட்டங்களைப் பற்றி மக்களிடையே வீரவுணர்வை ஏற்படுத்த உரையாற்றினார். இவர் விடுதலைப் போராட்ட வீரர் மட்டுமல்ல ஒரு சிறந்த வழக்கறிஞர், கவிநயம் மிக்க எழுத்தாளர், பதிப்பாசிரியர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர். வ.உ.சி. யின் இலக்கியப் பணிகளை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

இலக்கியம்:

வ.உ.சி. 24 ஆண்டுகளை இலக்கியம், இலக்கணம், சைவம் ஆகிய வற்றைக் கற்பதிலும் பதிப்பிப்பதிலும் செலவிட்டார். வ.உ.சி. அவர்கள் வேதாந்தத்தில் மிகுந்த ஈடுபாடும் பயிற்சியும் கொண்டவர்.

வேதாந்தத்தை விளக்கும் ‘கைவல்யம்’, ‘விசார சாகரம்’ எனும் இரு பெரும் தத்துவ நூல்களைக் கசடறக் கற்றுத் தேர்ந்தவர். கைவல்யம் என்பது ‘கைவல்ய நவநீதம்’ ஆகும்.

தமிழின் இலக்கியப் பழமையையும் வளமையையும் பதிப்புத் துறையின் மூலம் எடுத்துக்காட்டி ஆங்கிலேயரினும் தமிழர் மேம்பட்டவர் என்ற உணர்வைத் தமிழருக்கு ஊட்டினார்.

1915 ஆம் ஆண்டு தனிப்பாடல் திரட்டு வெளியிடப்பட்டது இதில் 380 பாடல்கள் உள்ளன இவற்றில் நூறு பாடல்கள் கடவுளைப் பற்றியன நூறு பாடல்கள் ஒழுக்கம் பற்றி உரைப்பன எஞ்சிய 180 பாடல்கள் சுற்றத்தார்க்கும் நண்பர்களுக்கும் உறவுமுறை தொடர்பில் அமைந்திருக்கும் எழுதப்பட்டவை இவை அனைத்தும் சிறைக்குச் செல்வதற்கு முன்பும் சிறையில் இருந்த காலத்தும் பாடப்பட்டவை இப்பாடல் தொகுப்பில் 350 வெண்பாக்கள் ஒரு தாலாட்டுப் பாடல் மூன்று விருத்த பாடல்கள் 15 கட்டளை கலித்துறைப் பாடல்கள் 11 நிலைமண்டல ஆசிரியப்பாக்கள் ஆகிய அடங்கும்.

தொல்காப்பியம்:

வ.உ.சி. 1910-ல் சிறையில் இருந்தபடி தொல்காப்பியத்தைக் கற்கத் தொடங்கினார். அதுவரை வெளிவந்த உரைகளின் கடுமையை உணர்ந்தார். தாமே எளிய உரை காண வேண்டும் என்று எழுதவும் தொடங்கினார். ஆனால் விடுதலைக்குப் பின்னர் 1868 இல் கன்னியப்ப முதலியாரால் வெளியிடப்பட்ட தொல்காப்பியம், எழுத்து, இளம்பூரணம் காண நேர்ந்தது. அதன் எளிமையையும் தெளிவையும் கண்டு உரை எழுதுவதை நிறுத்திவிட்டார். ஆனால் இளம்பூரணத்தை முழுமையாகப் பதிப்பிக்கும் பணியைத் தொடங்கினார். வ.உ.சி. எழுத்து மற்றும் பொருளாதிகாரம் முழுவதுமாகப் பதிப்பித்தார். ஆனால், சொல்லதிகாரத்தை ஏனோ பதிப்பிக்கவில்லை. ஆயினும் அவரது பதிப்புப் போக்குகள் பாராட்டத்தக்கனவாக அமைகின்றன. பல ஆய்வாளர்களும் வ.உ.சி. யின் பதிப்பு நுட்பம் பற்றிய மதிப்பீட்டை முன்வைத்துள்ளனர்.

வ.உ.சி. தனது பதிப்புக் கொள்கையை எழுத்ததிகாரப் பதிப்பு முன்னுரையில், 'கற்போர் எளிதில் உணருமாறு பொருட்டொடர்பு நோக்கிச் சூத்திரச் சொற்களையும் அவற்றின் பொருட்சொற்களையும் பிரித்தும் நிறுத்திப் படித்தற்குரிய அடையாளங்களிட்டும் பதிப்பித் துள்ளேன். ஒவ்வோரிடத்தில் பாடவேறுபாடும், உரைவேறுபாடும் சேர்த்துள்ளேன். எனது சேர்ப்பிற்கு முன்னும் பின்னும் முறையே [ ] இக்குறிகள் இட்டுள்ளேன்' என்று குறித்துள்ளார். 'இளம்பூரணரே முதல் உரையாசிரியர். அவர் 'உரையாசிரியர்' எனவே யாவராலும் வழங்கப்படும் பெருமை வாய்ந்தவர். அவர் மூன்று அதிகார உரைகளுள்ளும் எழுத்ததிகாரவுரை 'எழுத்திற்கு இளம்பூரணம்' என்று யாவராலும் புகழப் பெற்றது' என்று வ.உ.சி. பதிப்புரையில் குறிப்பிட்டு இளம்பூரணர் பெற்ற சிறப்பைப் பாராட்டும் திறன் அவரது புலமைக்குச் சான்றாக அமைகிறது.

இவர் எஸ். வையாபுரிப்பிள்ளையின் பங்கை மனதாரப் பாராட்டும் பாங்குடையவர். 'ஏழு இயல்களுக்கும் பெயரளவில் பதிப்பாசிரியர் யான். உண்மையில் பதிப்பாசிரியர் திரு. வையாபுரிப் பிள்ளையவர்களே.

அவர்கள் செய்த நன்றி என்னால் என்றும் உன்னற் பாலது' என்று வெளிப்படையாகக் கூறுகின்றார்.

இளம்பூரணத்தில் வ.உ.சி.க்கு அளவற்ற ஈடுபாடு. ஆதலால் இளம்பூரணம் முழுவதையும் பதிப்பித்து வெளியிட வேண்டும் என்று துடித்தார். குறிப்பாக எழுத்ததிகாரத்தை வெளியிட்டவுடன் சொல்லதிகாரத்தை வெளியிட்டிருக்க வேண்டும். சொல்லை வெளியிட வேண்டும் என்பதும் இவர் தம் திட்டங்களில் ஒன்று. சொல்லதிகாரமும் பொருளதிகாரத்தின் பிந்திய இயல்களும் விரைவில் அச்சிடப்பட்டு வெளியிடப்படும். 1928ல் வ. உ. சி எழுதிய வாசகம் இது. ஆனால் பொருளதிகாரத்தை முதலில் வெளியிட விரும்பினார். காரணம் தொல்பொருள் இளம்பூரணம் தொடக்கத்தில் இல்லை என்று கருதப்பட்டு வந்தது. இளம்பூரணர் எழுத்து சொல்லதிகாரங்களுக்கு மட்டுமே உரை வழங்கியவர் என நம்பப்பட்டது. இந்நம்பிக்கை 1858 ல் வெளியான திரு. எசு. சாமுவேல் பிள்ளை தொல்காப்பிய நன்னூல் பதிப்புரையில் குறிக்கப்பட்டுள்ளது.

திருக்குறள் பதிப்பு:

திருக்குறளை நேரிய பொருளோடும், பிழைகள் இன்றியும் தமிழ் மக்கள் எளிதில் கற்கும்படியாக அதற்கு ஓர் உரை இயற்றப் பல ஆண்டுகளுக்கு முன் நினைத்தேன்' என உரை எழுத வேண்டும் என அவர் எண்ணியதற்கான காரணத்தைக் குறிப்பிடுகிறார்.

திருக்குறளுக்கு உரை விளக்கம் கண்டார். திருக்குறள், சிவஞானபோதம், இன்னிலை போன்ற நூல்களுக்கு எழுதிய உரைகள் மூலம் வ.உ.சி.யின் ஆழ்ந்த புலமையை இனங்கண்டு கொள்ளலாம். இதைவிட, மொழி பற்றிய அறிவியல் கண்ணோட்டமும் வாய்க்கப் பெற்றிருந்தார்.

பாட மாறுபாடு:

வ.உ.சி. தான் செய்துள்ள பாட மாறுபாடுகளைப் பற்றிக் குறிப் பிடுகையில், 'அறப்பாலில் 76 குறள்களில் என் உரை பரிமேலழகர் உரைக்கு வேறுபடுகின்றது: 12 குறள்களில் என் உரை அவர் உரையை வெளிப்படையாக மறுக்கின்றது. 5 குறள்களில் என் உரை அவர் உரையை வெளிப்படையாக ஆமோதிக்கின்றது. மீதக் குறள்களில் என் உரையும் அவர் உரையும் ஒத்திருத்தல் கூடும். அறப்பாலில், பரிமேலழகர் கொண்டுள்ள மூலப்பாடங்களுக்கு வேறாக 151 மூல பாடங்களை மணக்குடவரும் மற்றும் மூன்று உரையாசிரியர்களும் கொண்டுள்ளார்கள். பரிமேலழகர் கொண்டுள்ள மூல பாடங்களுக்கு வேறாக 74 மூல பாடங்களை யான் கொண்டுள்ளேன். அவற்றில் 30 பாடங்கள் முந்திய உரையாசிரியர்கள் கொண்டுள்ள பாடங்கள், மீதம் 4 பாடங்கள் தான் யானாகக் கொண்டுள்ள பாடங்கள்' என்றே குறிப்பிடுகிறார்.

வ.உ.சி. யின் குறள் பற்று சிலசமயங்களில் வெறியாகவும் மாறி உரை மாறுபாடுகள் கண்டு தகும் உரை வகுக்கும் அளவில் நின்று விடாது, குறளையே திருத்தும் நிலைக்கும் சென்று விடும் என்பதை அறியலாம்.

'மக்கள் அடைதற்குரிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களையும், அவற்றை அடையும் நெறிகளையும் ஞாயிறு போல விளக்குகின்ற ஓர் அருமையான நூல்' என்கிறார்.

மணக்குடவர் உரை தெள்ளிய தமிழில் எளிய நடையில் அமைந்துள்ளது. பொழிப்புரையும் சில இடங்களில் விளக்கமும் உள்ளன. தமிழ்ப்பண்பாடு தழுவி எழுதப்பட்ட தெளிந்த உரை என்று இவரது உரையைப் போற்றுவர். இவர் பிற உரையாசிரியர்களைப் போல வட நூற்கருத்தைத் தம் உரையில் புகுத்துவது இல்லை. புதிய பாடங்களைக் கொண்டு சொற்களைப் பிரிக்கும் முறையில் புதுமை கையாண்டு சிறப்பாக உரை எழுதிச் செல்வது இவரது பண்பாகும் என்பர் மு.வை. அரவிந்தன்.

சிறப்புகள்:

சங்கரவள்ளி நாயகம் 'வ.உ.சி வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும்' என்ற நூலில். அவர் அருஞ்சொல் விளக்கம் தருதல், சொல் வருவித்து விளக்கம் தருதல், விடுபட்ட பகுதிகளுக்கு விளக்கம் தருதல், விளக்கம் இல்லா இடங்கட்கு விளக்கம் தருதல், உரை ஒப்பீடு, இலக்கணக் குறிப்பு சுட்டுதல், அதிகார வைப்பு முறை என ஏழுவகை யாகப் பிரித்து விரிவான விளக்கம் தருகிறார்.

வ.உ.சி. திருக்குறள் மணக்குடவர் உரைப் பதிப்பில் குறள்களையும் உரையினையும் எளிதில் பொருள் கொள்ளும் நிலையில் சந்தி பிரித்துப் பதிப்பித்துள்ளார். பதவுரை தந்துள்ளார். துறவற இயலைப் பொருத்தமான முறையில் விளக்கியுள்ளார். உரையாசிரியர் உரை காட்டாத குறள்களுக்கு தமது உரையினை வழங்கியுள்ளார். உரையாசிரியர் விடுத்துள்ள அதிகாரங்களுக்கு வைப்பு முறையினையும் சுட்டிக்காட்டியுள்ளார். வ. உ. சி பதிப்பித்த திருக்குறள் மணக்குடவர் உரைப் பிறர் காட்டாத பல புதுமைக் கூறுகளுடன் அமைந்துள்ளது என்பார் சங்கர வள்ளி நாயகம்.

பழைய உரை மறுத்துப் புத்துரை தருதல்

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும் (குறள். 71)

என்ற குறளை, அடைக்கும் தாழ் அன்பிற்கு உண்டோ?(அகத்தினின்றும் வெளிப்படாமல்) அடைத்து வைக்கும் (வலிய) கதவு அன்பிற்கும் உண்டோ? ஆர்வலர் புன்கண் ஈர் பூசல் தரும்- அன்பு செய்யப்பட்டாரது துன்பம் (அக்கதவை) பிளக்கும் தாக்குதலை உண்டாக்கும் என்று பதம்

பிரித்துப் பொருள் உரைப்பர். ‘புன்கணீர்’ என்பதைப் ‘புன்கண் ஈர்’ என்று பிரித்துப் பொருள் கண்டிருப்பது நோக்கத் தக்கது.

அகல உரையில், இதனை விளக்கும் வகையில் ஆர்வலர் ‘புன்கணீர் பூசல் தரும்’ என்பதற்கு ‘தம்மால் அன்பு செய்யப்பட்டவரது துன்பங்கண்டுழி’ என்று சொற்களை வருவித்து ‘அன்புடையார்(கண் பொழிகின்ற) புல்லிய கண்ணீரே (உள் நின்ற அன்பினை எல்லோரும் அறியத் தூற்றும்)’ என்று உரைப்பாரும் உளர். அவர் ‘ஆர்வலர்’ என்பதற்கு ‘அன்பு செய்யப்பட்டார்’ என்பதே பொருள் என்பதை அறியார்.

அன்றியும் ‘துன்பம்’ என்னும் பொருள் தரும் ‘புன்கண்’ என்ற சொல்லைப் புன், கண் எனப் பிரித்தும், அடைக்கும் தாழ் உண்டோ? என்ற வினாவிற்கு விடையில்லாதும் பொருள் உரைத்து இடர்ப்பட்டனர் என உரை வகுத்துச் செல்லுகையில் அறிவுப்பூர்வமாகவும், தருக்க நெறியாகவும் காண்கையில் அவர் விளக்கம் சரியாக அமைந்துள்ளது போன்ற உணர்வைப் படிப்பார்க்குத் தோற்றுவிக்கிறது.

நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்பப் பொருள் கூறுதல்:

‘தோன்றிற் புகழோடு தோன்றுக’ என்ற குறட்பாவிற்குப் ‘புகழ் இல்லையெனில் பிறவாமல் சாவதே மேல்’ என்று அறிவிற்குப் பொருத்தமில்லா உரைகண்ட நாளில் வ.உ.சி.’எத்தொழிலில் ஈடு படுவோரும் அதனால் புகழ் வரும்படியாகத் திறம்படத் தொழிலாற்ற வேண்டும்.

இல்லையெனில் அதில் ஈடுபடாமலே இருத்தலே சிறந்தது’ என்று கருத்துத் தெரிவிப்பார். வாழ்க்கைக்கு ஏற்ற வண்ணம் அறக்கருத்துகளைத் புரிந்து கொள்ளுதல், நடைமுறை வாழ்வில் அவற்றைக் கடைப்பிடித்தற்கு வகை செய்யும் என்ற உண்மையை உணர்ந்தவர் வ.உ.சி.

வ.உ.சி. பொருள் வரவை எதிர்பார்த்து திருக்குறள் பணியினைச் செய்யவில்லை என்பது புலனாகிறது. பொருள் இழப்பை எதிர் நோக்கியே தமிழ்த் தொண்டாற்றியுள்ளார் எனத் தெரிகிறது. மேலும் ‘பதிப்புப் பணியில் சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே. சாமிநாதையர் என்ற பதிப்பாளர் வரிசையில் வ. உ. சிதம்பரனாரையும் இணைத்து வைத்துப் போற்றும் கடப்பாடு நமக்கு உண்டு’ என்கிறார்.(தமிழ் தந்த வ. உ. சி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்)

மெய்யறம்:

மெய்யறம் திருக்குறளை - திருக்குறள் விளக்கும் நீதிக்கருத்துகளை மையமாக வைத்து எழுதப்பட்ட நூலாகும். தமிழ் இலக்கியங்களுக்குள் வ.உ.சி. யின் மனதை மிகவும் ஈர்த்தது திருக்குறளே ஆகும். மக்களை மனம் போனபடி வாழ்க்கை நடத்தும் மக்கள் மனந்திருந்தி நல்வாழ்வு வாழத் துணைபுரிவது திருக்குறளே என்பது வ.உ.சி. யின் அசைக்க முடியாத நம்பிக்கை. மக்கள் மன நலம் பேணி நல்வாழ்வு பெற வேண்டும் என்பதற்காகக் குறளின் அடிப்படையில் மெய்யறம் என்னும் இந்நூலை

இயற்றியுள்ளார். இதனைத் திருக்குறளின் வழிநூல் (வள்ளுவர் மறையின் வழிநூல் மெய்யறம்- பாயிரம்- வாரி-2) என்றே வ. உ.சி. குறிப்பிடுகின்றார். திருக்குறள் இரண்டு அடிகளால் ஆனது.

மெய்யறம் ஒரே அடியால் ஆனது. அது 133 அதிகாரங்களைக் கொண்டது. இது 125 அதிகாரங்களைக் கொண்டது. இரண்டுமே ஓர் அதிகாரத்திற்கு 10 பாடல்கள் கொண்டவை. திருக்குறளில் கூறப்பட்டவை சுமார் 82 அதிகாரங்களில் மெய்யறத்திலும் கூறப்பட்டுள்ளன.

‘---

அவர்பெயர் விளங்கிட வறிந்தமைந் தொழுகுக
இல்வாழ் வரசிற் கியைந்தவ ராகுக’ (மெய். 3)

தாயும் தந்தையும் நம் முதல் தெய்வம். அவரைத் தவிர பெரியவர் யாருமில்லை பெற்றோரை முப்பொழுதும் தொழ வேண்டும். அவர் பணியெல்லாம் அன்போடு செய்ய வேண்டும். அவர் உரை எல்லாம் அறிந்த உள்ளம் உவகை கொள்ள வேண்டும். அவர் பொருள் செய்த பொருளைக் காத்து துணை புரிய வேண்டும். அவர் நட்பெல்லாம் அவர் போற்றி பாதுகாக்க வேண்டும் அவர் பகை எல்லாம் தள்ளி அவர் போல் தள்ள வேண்டும். அவர் பெயர் விளங்கிட அறிந்தமைந்து ஒழுக வேண்டும். இல்வாழ்வில் இயைந்தவராக வேண்டும் என்று மாணவர்களுக்கு அறிவுரை பகர்கிறார்.

மொழி பெயர்ப்பு:

‘மனம் போல் வாழ்வு’, ‘அகமே புறம்’, ‘வலிமைக்கு மார்க்கம்’, ‘சாந்திக்கு மார்க்கம்’ என்ற நூல்களை வ.உ.சி. மொழி பெயர்த்திருக்கிறார். வ.உ.சி. யை ஜேம்ஸ் ஆலன் (1864-19) பெரிதும் கவர்ந்திருக்கிறார். ஆலன் கீழைநாட்டுத் தத்துவங்களில் ஈடுபாடு கொண்டிருந்தவர். வ.உ.சி. மொழிபெயர்த்த ஜேம்ஸ் ஆலனின் மனம் போல் வாழ்வு 13 பதிப்புகளைக் கண்டிருக்கிறது. வ.உ.சி. வாழ்ந்த போதே இப்பதிப்புகள் வெளிவந்தன. ‘வலிமைக்கு மார்க்கம்’ நூல் 9 பதிப்புகளும் ‘அகமே புறம்’ 6 பதிப்புகளும் வெளி வந்துள்ளன.

சைவசமயம்:

வ.உ.சி. சைவ சமயக் கருத்துகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். அவர் சிறையிலிருந்து வெளிவந்த பின் சென்னையிலும் (1913-1920) கோயம்புத்தூரிலும் (1920-24) யோக வாசிஷ்டத்தை முறையாக கற்றார். அவருடைய சீர்திருத்த எண்ணங்கள் வேதாந்தத்தோடு சித்தாந்தத்தை சேர்த்து காண வைத்தன. 1935-ல் வ.உ.சி. சிவஞானபோதத்திற்கு பொது மக்களுக்கு புரியும்படியான உரையை எழுதினார். 1999-ல் இதன் இரண்டாம் பதிப்பை ஆ. இரா. வேங்கடாசலபதி முன்னுரை, பின்னிணைப்புகள், படங்களுடன் வெளியிட்டார். இப்பதிப்பில் வ.உ.சி. சைவ சித்தாந்தம் தொடர்பாக எழுதி வெளிவராத ஒரு கட்டுரையும் உள்ளது.

பதிப்பாளர்:

தொல்காப்பியம் – இளம்பூரணத்தை வ.உ.சி.அவர்கள் பதிப் பித்தார் என்பதை வையாபுரிப்பிள்ளை குறிப்பிட்டார். தொல் காப்பியம் பொருளதிகாரத்தின் முதல் இரண்டு இயல்களை வ.உ.சி. வெளியிடும்போது செல்வக் கேசவராய முதலியார் உதவினார். வ.உ.சி. யும் வையாபுரிப்பிள்ளையும் இணைந்து பொருள் முழுவதையும் பதிப்பித்தனர். திருக்குறள் பரிமேலழகர் உரையில் சில இடங்களில் பிழை உள்ளது என்ற கருத்துடையவர் வ.உ.சி. அவருக்குப் பிடித்த உரையாசிரியர் மணக்குடவர். இந்த உரை தமிழ்ப் பண்பாடு கருதி எழுதப்பட்டது என்று கருதினார். 1918-ல் வ.உ.சி.யின் மணக்குடவர் உரை வெளிவர தென்னாப்பிரிக்கத் தமிழர்கள் உதவினர்.

திருநெல்வேலியைச் சேர்ந்த சொர்ணம் பிள்ளை ‘இன்னிலை’ என்ற பேரில் ஒரு நூலின் ஏட்டை வ.உ.சி.யிடம் கொடுத்து இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று எனக் கூறி வ.உ.சி.யிடம் பணம் பெற்றார். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் இன்னிலையையும் சேர்த்து பதிப்பித்தார் வ.உ.சி. இப்பதிப்பு போலியானது, தவறானது என மயிலை சீனி வேங்கடசாமி, மு. அருணாசலம் ஆகியோர் எழுதிய பின்பு வ.உ.சி.யின் பதிப்பு தவறானது என்று தெரிந்தது. 1931-ல் அனந்தராம ஐயர் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று ‘கைந்நிலை’ என பதிப்பித்தார். இதை வையாபுரிப்பிள்ளையும் கு. அருணாசலக் கவுண்டரும் பதிவு செய்துள்ளனர். அகமே புறம்,

அகமே புறமே அனைத்துமே யாகி
அகமே விளங்கும் அறிவே - ‘அகமே

புற’மென சொல்லப் புகுந்தஇந் நூலைத்
திறமெனச் சொல்லச் செய்யும் (அகமே புறம்-காப்பு)

மனிதன் தனது அகத்தின் அரசன். தனது மனத்தின் காவலன், தனது வாழ்க்கையாகிய கோட்படையின் தனிக்காப்பாளன். அவன் அந்த முறைமையில் ஊக்க மேனும் தூக்கமேனும் கொண்டிருக்கக்கூடும். அவன் தனது அகத்தை மேலும் மேலும் எச்சரிக்கையுடனும் வைத்துக் கொண்டிருக்கக்கூடும்.அவன் தனது மனதை அதிக பிரயாசையோடு பாதுகாத்துச் சுத்தப்படுத்திக் கொள்ளக்கூடும். அவன் நியாயமற்ற நினைப்புகளை நினையாது, தன்னை காத்துக்கொள்ளக் கூடும். இஃது அறிவு விளக்கத்திற்கும் இன்ப பேற்றிற்கும் வழி. இதற்கு மாறாக அவன் தனது ஒழுக்கத்தை சரியாக திருத்துவதாகிய மேலான கடமையை செய்யாது எச்சரிக்கையும் திருத்தம் இன்றி வாழ கூடும். இது அறிவு மயங்குவதற்கும் துன்பம் அடைவதற்கும் வழி.

முடிவுரை:

இலக்கியங்களை படைப்பதோடு அவருடைய பணியை வ. உ.சி. அவர்கள் நிறுத்திக் கொள்ளவில்லை இலக்கியங்களைப் பிறருக்கு போதிக்கும் நல்ல ஆசிரியராகவும் விளங்கினார். பதிப்பை நேர்த்தி

யாகவும், வாசிப்போருக்குப் பயனுடையதாகவும் மாற்றித் தர வேண்டும் என்ற நோக்கில் வ.உ.சி. அவர்கள் உருவாக்கிய இப்பதிப்புகள் தமிழின் பெரும் ஆவணங்கள். தி.த.கனகசுந்தரம் பிள்ளையிடமிருந்து கிடைத்த அந்த ஒற்றைச் சுவடியை வ.உ.சி. அவர்கள் நூலாக்கம் செய்யாமல் விட்டிருந்தால் தமிழின் தொன்மை இலக்கண நூலான தொல்காப்பியத்தின் முதல் உரையாகச் சொல்லப்படுகின்ற இளம்பூரணரின் தொல்காப்பியப் பொருளதிகார உரையினைத் தமிழ்ச்சமூகம் காணாமலே போயிருக்கும். இத்தகைய இலக்கியப் பதிப்பு பணிகளை செய்த வ. உ. சிதம்பரனாரை தமிழ்ச் சமூகம் கண்டு கொள்ளாமல் இருப்பது வேதனைக்குரியது. இலக்கிய உலகிற்கு அவர் செய்த தொண்டு அளப்பரியதாகும். தமிழ்க் கூறும் நல்லுலகம் அவரின் தமிழ்ப்பணியை ஏற்றுக்கொண்டு இளம் தலைமுறைக்கு வரலாற்றை எடுத்துரைக்க வேண்டும்.

துணைநூற் பட்டியல்:

1. வ. உ. சிதம்பரம் பிள்ளை, தொல்காப்பியம் இளம்பூரணம், வேலாயுதம் பிரிண்டிங் பிரஸ், தூத்துக்குடி, 1928.
2. வ. உ. சிதம்பரனார் நூற்றாண்டு விழா மலர், செந்தமிழ்ச்செல்வி.
3. வ.உ.சி. ஒரு பன்முகப் பார்வை, எஸ் கண்ணன், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 2005.
4. மா. பொ. சிவஞானம், கப்பலோட்டிய தமிழன், இன்பநிலையம், சென்னை, 1947.
5. வ. உ. சிதம்பரம் பிள்ளை, மெய்யறம், வ உ சி நூலகம், சென்னை, 2004.
6. வ. உ. சிதம்பரம் பிள்ளை, அகம் புறம், அகஸ்தியர் பிரஸ், அம்பாசமுத்திரம், 1926.
7. மு. வை. அரவிந்தன், உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1963
8. சங்கர வள்ளிநாயகம், வ.உ.சி. வரலாறும் பணிகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1998.

91

தமிழ்க் கவிதைகளில் வ.உ.சிதம்பரனார்

த. சுடலைமுத்து
தமிழ்த்துறை, ம. தி. தா. இந்துக்கல்லூரி, திருநெல்வேலி.

ஆய்வுச் சுருக்கம்:

நம் இந்தியத் திருநாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட நமது தேசத் தலைவர்கள், அவர்களின் வாழ்க்கையை அவர்களுக்காக மட்டுமே வாழாமல் நமக்காக அர்ப்பணித்ததால் தான் நாம் இன்று சுதந்திரத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. இப்படிப்பட்ட தலைவர்களுள் ஒருவரான சிதம்பரனார் அவர்களின் அர்ப்பணிப்பை கவிதைகளாகப் பல கவிஞர்கள் எழுதியுள்ளனர். அவர்களுள் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் மற்றும் கவிஞர் சுரதா ஆகிய கவிஞர்கள் எவ்வாறு வ. உ. சிதம்பரனார் பற்றி அவர்களுடைய கவிதைகளில் குறிப்பிட்டுள்ளனர் என்பதைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச் சொற்கள்: கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார், கவிஞர் சுரதா, கவித்திறன், உப்பில்லாக் கூழுண்டான், கப்பலோட்டிய தமிழன்.

முன்னுரை:

வ.உ.சி. இந்திய விடுதலைப் போராட்ட வீரர் என்று நம் அனைவரின் மனதிலும் பதிந்திருக்கிறது. வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர், தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றவர் மற்றும் பிரிட்டிஷ் கப்பல்களுக்குப் போட்டியாக முதல் உள்நாட்டு இந்தியக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர். இவ்வாறு மேலே கூறப்பட்டுள்ளவாறு பன்முகத்தன்மை கொண்டு விளங்கியவர். இவரின் பன்முகத்தன்மையைக் கண்டு தமிழ்க் கவிஞர்கள் பலர் இவரைப் பற்றிய கவிதைகளை எழுதி உள்ளனர். தன்னுடைய இன்னுயிரையும் தியாகம் செய்து நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் வாழ்ந்து மறைந்தவர். இவரின் அர்ப்பணிப்பைக் கவிஞர்கள் தங்களுடைய கவிதைகளில் எவ்வாறு குறிப்பிட்டுள்ளனர் என்பது பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கவிதைகளில் வ.உ.சி.:

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் கவிதைகள், குழந்தைப் பாடல்கள், பக்திப் பாடல்கள், இலக்கிய மொழிபெயர்ப்புகள், வரலாற்றுப் பாடல்கள் என பலத் துறைகளில் பங்களிப்பினை அளித்துள்ளார். தமிழில், முதன்முதலில் குழந்தைகளுக்காகத் தொடர்ச்சியான பாடல்களை எழுதியவர். இவரது படைப்புகளில் ஆசிய ஜோதி, மலரும் மாலையும், நாஞ்சில் நாட்டு மர்மம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

மேலும், வ.உ.சி. பற்றி 'அஞ்சலி' என்னும் தலைப்பில் ஒரு கவிதையினை எழுதியுள்ளார்.

யாடடிக் கடுங்காவல் தண்டனையில்
உப்பிலாக் கூழுண்டுடல் மெலிந்தோன் - ஒப்பிலாச்
செந்தமிழ்ச் செல்வன் சிதம்பரனை அன்போடு
சிந்தனைசெய் நெஞ்சே தினம்.
மஞ்சிலா வான மதியின் ஒளிபோல
விஞ்சிநீ டூழி விளங்குகவே - வன்சிறையில்
செக்கிழுத்த வீரன் சிதம்பரம் மெய்ப்புகழ்
மக்களிடை ஓங்கி வளர்ந்து. - *(வ. உ. சிமலர் - 1951:10)*

வ.உ.சி. விடுதலைப் போராட்ட செல்வாக்கு மக்களிடையே நாளுக்கு நாள் அதிகமாகப் பரவி ஆங்கிலேயர் ஆட்சிக்கு ஆபத்தை உருவாக்குகிறது என்ற அச்சத்தால், அவரைக் கைது செய்ய வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவெடுத்தது. ஒரு நாள் வ.உ.சி. திருநெல்வேலிக்கு வந்திருக்கும் வேளையில், திருநெல்வேலி ஆட்சித் தலைவர் வின்ச் துரை, வ.உ.சி. விடுதலைப் போராட்டத்தை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மேலும், அவ்வாறு நிறுத்தவில்லையெனில், உங்களை கைது செய்வோம் என்றும் எச்சரித்துள்ளார். பிரிட்டிஷ் அதிகாரியின் குரலுக்குக் கொஞ்சம் கூட பயமில்லாமல் மறுப்பு தெரிவித்தார். கோபம் கொண்ட பிரிட்டிஷ் அதிகாரி வ.உ.சி. யிடம் நீங்கள் கப்பல் ஓட்டியது முதல் குற்றம்; அனுமதி இல்லாமல் கூட்டம் கூட்டியது இரண்டாவது குற்றம்; பாமர மக்களை வந்தே மாதரம் என்று கோஷம் போடுமாறு தூண்டிவிட்டது மூன்றாவது குற்றம்; என்று கூறி மூன்று குற்றங்களையும் அவர் மீது சுமத்தினார். ('கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.'-2001:37)

இதற்காக, கைது செய்யப்பட்டு வ.உ.சி. கடுங்காவல் தண்டனை பெற்றார். சிறையிலே உப்பில்லாக் கூழினை குடித்து உடல் மெலிந்து சோர்வுற்றுப் போனார். மேலும், சிறையிலே செக்கினாலும் இழுக்கப்பட்டார். மக்களுக்காகத் தன் வாழ்வினை அர்ப்பணித்ததைப் பற்றி கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை மிகவும் அழகாக எடுத்துரைத்துள்ளார்.

யோகி:

கவியோகி மற்றும் மகரிஷி என்றும் போற்றப்படும் இவர். பாரத சக்தி, இந்திய சரித்திர கும்மி போன்ற பல காவியங்கள், இசைப் பாடல்கள், நாடகங்கள், உரைநடை நூல்கள் போன்றவற்றை இயற்றியுள்ளார். மேலும், ஸ்ரீ அரவிந்தரின் சீடராகவும் இருந்து 'சமயோகம்' என்ற யோக முறையையும் நிறுவியவர். தமிழில் மட்டுமல்லாமல் பிற மொழிகளிலும் பல நூல்களை மொழிப்பெயர்த்துள்ளார். மேலும், இவரின் கவிதைகளில் வ. உ. சிதம்பரனாரின் சுதந்திரப் போராட்டம் மற்றும் அவருடைய

வாழ்க்கையினைப் பற்றியும் ‘வீரச் சிதம்பரம் பிள்ளை’ என்ற தலைப்பில் கவிதையினை எழுதியுள்ளார்.

வீரச் சிதம்பரம் பிள்ளை - தமிழ்
வித்தகன் முத்தமிழ் நாட்டில்
பாரத பக்திக் கனலைத் - தூண்டி
பாய்ந்து பணிசெய்ய வந்தான்
தீரன் இவனைப்போ லுண்டோ? - தமிழ்ச்
சிங்கம் திலகர் வலக்கை;
சோர்வின்றி நாட்டுக் கொடியை - பல
தொல்லையைத் தாங்கிப் பிடித்தான். *(வ. உ. சிமலர் - 1951:17)*

ஆங்கிலேயரின் அடக்கு முறையை எதிர்த்து நின்று, தமிழ் மொழியால் மக்களை ஒன்று திரட்டியவர் வீரச் சிதம்பரம் பிள்ளை ஆவார். ‘தன்னாட்சி எனது பிறப்புரிமை அதனை நான் பெற்றே தீருவேன்’ என்னும் புகழ்பெற்ற கூற்றுக்கு சொந்தக்காரரும், முதன் முதலில் மக்களிடையே சுதந்திரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியவருமான பால கங்காதர திலகருக்கு உறுதுணையாக இருந்து, இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காகப் பல இன்னல்களையும் தாங்கி நின்றவர் வ.உ.சி.

பேச்செல்லாம் வீர முழக்கம் - அவன்
பேருரு வீரம் பிழம்பாம்!
மூச்செல்லாம் வீரக் கனலாம் - அவன்
முன்நின்ற காரியம் வெல்லும்;
மாண்பாஞ் சுதேச விரதம் - கொள்ள
மக்கள் உணர்வை எழுப்பி
ஓய்ச்சலில் லாமல் உழைத்தான் - தேசம்
ஓங்கிடக் கப்பல் விடுத்தான்! - *(வ. உ. சிமலர் - 1951:17)*

மேடைப் பேச்சின் மூலம் இந்திய நாட்டின் விடுதலை வேட்கையினை மக்களிடையே வீர முழக்கமிட்டுப் பரப்பியவர் வ. உ. சிதம்பரனார் ஆவார். பேச்சிலே தெளிவும், துணிவும் கொண்டு மக்களின் உள்ளத்தில் இடம் பிடித்த மாபெரும் தலைவர்களுள் வ. உ. சிதம்பரனாரும் ஒருவர். தனியொரு மனிதனாக வெள்ளைக்காரனை எதிர்த்துக் கப்பலோட்டிய பெருமை இவரையே சாரும். இந்தத் தமிழன் ஏன் கப்பலோட்டினார்? எதற்காகக் கப்பல் ஓட்டினார் என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டியவர்களாக நாம் உள்ளோம்.

வெள்ளைக்காரன் தமிழர்களுடைய செல்வத்தை எல்லாம் சுரண்டுவது கண்டு மனம் பொறுக்காத சிதம்பரனார், வெள்ளைக் கொள்ளையனை எதிர்த்துக் கப்பலோட்டினார். ஒரு தமிழனால் வெள்ளையனை எதிர்க்க முடியுமா? என்று சிதம்பரனாரைக் கேலி செய்தார்கள்! மலையை மடு எதிர்க்க இயலுமா? முயலுக்கு ஏன் வீண் வேலை முள்ளம்பன்றியுடன்

மோத! என்று வ.உ.சிதம்பரனாரை ஒரு சிலர் எகத்தாளமிட்டனர். ('கப்பலோட்டிய தமிழன்' - 1949:46)

வேறு சிலர், சிறு உளிதான் மலையைப் பிளக்கும் ஆயுதம்! சிதம்பரம் அஞ்சாதே, துணிந்து செய்! என்றும் எங்களின் உதவிகளை முடிந்தவரை செய்கின்றோம் என்றும் அவரது மனதுக்கு உரம் போட்டார்கள்.

கவிஞர் சுரதா கவிதைகளில் வ. உ. சி:

'இராசகோபாலன்' கவிஞர் பாரதிதாசனின் மேல் கொண்ட பற்றின் காரணமாக, பாரதிதாசன் இயற்பெயராகிய 'சுப்புரத்தினம்' என்பதன் அடிப்படையில் தன் பெயரைச் சுப்புரத்தினதாசன் என்று மாற்றிக் கொண்டார். தன் மாற்றுப் பெயரின் சுருக்கமாக 'சுரதா' என்னும் பெயரில் பல மரபுக் கவிதைத் தொகுப்புகள் தந்தவர். செய்யுள் மரபு மாறாமல் எழுதி வந்த இவர், உவமைகள் தருவதில் தனிப் புகழ் ஈட்டியவர். இதனால், இவரை 'உவமைக் கவிஞர்' என்று சிறப்பித்துக் கூறுவர்.

தேன்மழை, துறைமுகம், சிரிப்பின் நிழல், சிக்கனம், சுவரும் சுண்ணாம்பும், எச்சில் இரவு, உதட்டில் உதடு, புகழ் மாலை, மங்கையர்க்கரசி போன்றவை இவரின் முக்கியப் படைப்புகள் ஆகும். மேலும், இவர் தன்னுடைய படைப்புகளில் ஒன்றான அரசியல் அரிச்சந்திரன் என்ற தலைப்பில் வ. உ. சிதம்பரனார் பற்றிப் பாடியுள்ளார்.

வடக்கே ஓர் திலகர்; தெற்கே
வ. உ. சிஇல்லை என்றால்,
விடுதலை பெறாத வாறு
மிதவாதி தடுத்தி ருப்பான்,
படிக்கட்டு தன்னில் குந்திப்
பழங்கதைப் பேசும் நாட்டில்,
கொடுப்பதை வாங்கும் பிச்சைக்
கொள்கைதான் வளர்ந்திருக்கும்! – (வ. உ. சிமலர் – 1951:20)

வட இந்தியாவில் பால கங்காதர திலகரும், தென்னிந்தியாவில் வ. உ. சிதம்பரனாரும் இல்லையெனில், இந்தியா விடுதலையினைப் பெற்றிருக்க முடியாது என்றும்; பழங்கதைகளைப் பேசிக் கொடுப்பதை வாங்கும் பிச்சைக்காரத் தன்மைதான், இந்திய நாட்டின் மக்களிடையே வளர்ந்திருக்கும் என்றும் கவிஞர் சுரதா இக்கவிதையில் குறிப்பிடுகிறார். ('வீர சிதம்பரனார்' - 1954:71)

இன்றுள்ள தலைவர் எல்லாம்
ஏதேதோ செய்து செய்து
குன்றுபோல் செல்வம் சேர்த்து
குவிப்பதாய் சொல்கின் றார்கள்
அன்றைய தலைவர் பிள்ளை

ஆதலால் பணமோ காசோ

ஒன்றுமே சேர்க்கவில்லை!

உயர்ந்தவன் புகழ்தான் சேர்ப்பான்! – *(வ.உ. சி மலர்-1951:21)*

தற்போதைய அரசியல் தலைவர்கள் எல்லாம் ஊழல் செய்து செல்வத்தைச்சேர்த்து வைக்கின்றனர். ஆனால், அன்றைய காலத்திலேயே நேர்மையும், துணிவும் கொண்டு தமக்காக மட்டும் வாழாமல் பிறருக்காக வாழ்ந்து புகழிழை அடைந்தவர் வ. உ. சிதம்பரனார் என்று கவிஞர் இக்கவிதையின் மூலம் குறிப்பிடுகிறார்.

முடிவுரை:

நாட்டு விடுதலைக்காக இந்திய மண்ணிலே, தியாகத்தை விதைகளாகத் தெளித்து பயிரிட்ட அறிவியல் வித்தகர் வ. உ. சிதம்பரனார். இவரைப் போல, வேறு யாராவது நாற்பது ஆண்டுகள் சிறை தண்டனை பெற்றதுண்டா? அதாவது இரண்டு ஆயுள் தண்டனைகளைப் பெற்ற வீரநாயகன் யாரும் இந்திய வரலாற்றில் இல்லை. இன்றுவரை உலக சுதந்திர வரலாற்றிலேயே நெல்சன் மண்டேலா ஒருவரைத் தவிர வ. உ. சிதம்பரனாருடன் வேறு யாரையும் ஒப்பிட்டுப் பார்க்க இயலாது. நாட்டுக்காக வாழ்ந்த இந்த தேச பக்தனை நினைத்து, நாமும் அவரைப் போல நாட்டுப்பற்றை வளர்த்து நாட்டுக்காக வாழ்ந்து காட்டுவோம்!

துணைநூற் பட்டியல்:

- கலைமணி, என்.வி - 'கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம்', சாந்தி நிலையம், சென்னை - 600 001,2001-முதல் பதிப்பு.
- சுப்பிரமணிய ஐயர், எம். எஸ் - 'வீர சிதம்பரனார்', ஆசிரியர் நூல் பதிப்புக் கழகம், சென்னை - 600 001, 1954-இரண்டாம் பதிப்பு.
- சிவஞானம் ம. பொ, 'கப்பலோட்டிய தமிழன்', இன்ப நிலையம், சென்னை 600 001, 1949-ஐந்தாம் பதிப்பு.
- வ. உ. சிதம்பரம் பிள்ளை மலர்: கட்டுரைகள் தொகுதி, பம்பாய் தமிழ்ச் சங்கம், மாதுங்கா - 1951.

92

வ.உ.சி.யின் படைப்பாக்கம்

ச. கங்காதரன்
தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

ஆய்வுச் சுருக்கம்:

இந்த ஆய்வு, இந்திய விடுதலைப் போராட்ட வீரராக அறியப்படும் வ.உ.சி. யின் அரசியல் அடையாளத்தைக் கடந்த அவரது ஆழமான தமிழ்ப்பணியை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. அரசியல் போராட்டங்களில் அவர் காட்டிய தியாகமும் துணிச்சலும் போல், இலக்கியம், இலக்கணம், அறநூல்கள், தத்துவம், மொழிபெயர்ப்பு, உரையியல், பதிப்புத்துறை ஆகிய பல்வேறு தளங்களில் அவர் ஆற்றிய பணிகள் தமிழ் அறிவுலகில் தனித்த இடத்தைப் பெற்றுள்ளன என்பதைக் காட்டுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

திருக்குறளின் அறத்துப்பாலுக்குப் புதுமை நோக்குடைய உரை வழங்கியமை, உரை மரபில் ஒரு முக்கியமான மாறுதலாக இவ்வாய்வில் சுட்டிக்காட்டப்படுகிறது. மேலும், ஜேம்ஸ் ஆலனின் தத்துவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்ததன் மூலம், மேலைநாட்டு சிந்தனைகளைத் தமிழ்ச் சமூகத்திற்கு எளிய மொழியில் கொண்டு வந்த அவரது பங்களிப்பும் ஆராயப்படுகிறது.

முகவுரை:

வ.உ.சி. (1880–1952) தமிழ் மொழி, பண்பாடு, தேசிய விடுதலை ஆகிய மூன்றையும் ஒரே தளத்தில் இணைத்த ஆகச்சிறந்த ஆளுமை. அவர் சுதந்திரப் போராட்ட வீரராக மட்டுமல்லாமல், தமிழின் தூய்மைக்காக அஞ்சாது போராடிய மொழிப்போராளியாகவும் திகழ்ந் தார். காலனிய ஆட்சிக் காலத்தில் ஆங்கில மொழி ஆதிக்கம் கல்வி, நிர்வாகம், இதழியல் என அனைத்துத் துறைகளிலும் ஊடுருவியிருந்த சூழலில், தமிழ் தனது அடையாளத்தை இழக்கக் கூடாது என்ற உறுதியுடன் அவர் செயல்பட்டார். மொழி என்பது ஒரு சமூகத்தின் ஆன்மா என்று உணர்ந்திருந்தார். இக்கட்டுரை, வ.உ.சி. யின் மொழிப் பணிகளையும், அவரது சிந்தனையின் தாக்கத்தையும் விரிவாக ஆராய்கிறது

வ.உ.சி. யின் வரலாற்றுப் பின்னணி:

19-ஆம் நூற்றாண்டின் இறுதியும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கமும் தமிழ்ச்சமூகத்திற்கு மாற்றங்களின் காலமாக அமைந்தது. ஆங்கிலக் கல்வி ஒருபுறம் அறிவுத் திறனை வளர்த்தாலும், மறுபுறம் மொழி அடிமைத்தனத்தை உருவாக்கியது. இந்நிலையில், மொழி என்பது ஒரு சமூகத்தின் உயிர் என்பதை உணர்ந்த வ.உ.சி., தமிழின் தனித்த சொல்

வளத்தையும் இலக்கண மரபையும் பாதுகாப்பதே தேசிய கடமை எனக் கருதினார்.

இளமைக்கால இலக்கியத் தாக்கங்கள்:

இளமைக் காலத்தில் வ.உ.சி. தனது பாட்டனாருடன் மகாபாரதக் கதைகள் சொல்லப்படும் இடங்களுக்குச் சென்று கேட்டதாலும், பாட்டியிடமிருந்து திருவிளையாடல், கம்பராமாயணம், அரிச்சந்திர புராணம் போன்ற கதைகளைக் கேட்டறிந்ததாலும், சிறுவயதிலேயே இலக்கிய ஈடுபாடு உருவானது. மேலும், கைவல்ய நவநீதம், விசாரசாகரம் போன்ற தத்துவ நூல்களைப் பயின்றிருந்தது, பிற்காலத்தில் அவரை ஆன்மிக, தத்துவ, இலக்கியச் சிந்தனைகளில் ஈடுபடத் தூண்டியது. இளமைக்காலத்தில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினராக இருந்த அவர், பின்னாளில் அதன் புரவலராகவும் செயல்பட்டார்.

சிறைக்குப் பிந்தைய இலக்கிய ஈடுபாடு:

சிறைவாழ்க்கைக்குப் பின்னர் 1912 டிசம்பர் முதல் அரசியலிலிருந்து விலகிய வ.உ.சி., தம்மை முழுமையாக இலக்கியப் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டார். படைத்தல், உரையெழுதல், பதிப்பித்தல், மொழிபெயர்த்தல் ஆகிய துறைகளில் அவர் மேற்கொண்ட பணிகள் தமிழ் உள்ளவரை நினைவுகூரத்தக்கவையாகும். தமிழில் செய்யுள் வடிவில் எழுதப்பட்ட முதல் தன்வரலாற்று நூல் என்ற பெருமையைப் பெற்ற ‘சுயசரிதை’ நூல், அவரது கவித்திறனையும் இலக்கிய நுண்ணறிவையும் வெளிப்படுத்துகிறது. உவமைகள், உருவகங்கள், முரண் தொடைகள், சிலேடைகள் போன்ற அலங்காரங்கள் பொருத்தமான இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளமை, அவர் தரமான கவிஞர் என்பதைக் காட்டுகிறது.

மனம் போல வாழ்வு:

ஜேம்ஸ் ஆலன் எழுதிய ‘Self Help’ நூலை ‘மனம் போல வாழ்வு’ என மொழிபெயர்த்த வ.உ.சி., தமிழில் தன்னம்பிக்கை இலக்கியத்திற்கு அடித்தளம் அமைத்தார். இந்நூலை ‘தேசத்திற்கு உழைப்பவர்க்குச் சமர்ப்பணம்’ என அர்ப்பணித்தது அவரது தேசபக்தியையும் அஞ்சாமையையும் வெளிப்படுத்துகிறது. அவர் நூலை ‘தேசத்திற்கு உழைப்பவர்க்குச் சமர்ப்பணம்’ என்று அர்ப்பணித்தார். காலனிய ஆட்சியின் கடுமையான கண்காணிப்புக்கு மத்தியில் இவ்வாறு வெளிப்படையாக தேசபக்தியை அறிவித்தது அவரது அஞ்சாமையின் வெளிப்பாடாகப் பார்க்கப்படுகிறது. இந்நூலில் அவர் பிறமொழிச் சொற்களைத் தவிர்த்து, தமிழின் உள்ளார்ந்த சொற்களைப் பயன்படுத்தினார். இது மொழிபெயர்ப்பின் புதிய மரபை உருவாக்கியது. தமிழில் தன்னம்பிக்கை இலக்கியம் உருவாக இந்த நூல் ஒரு முன்னோடியாக அமைந்தது.

அகமே புறம்:

அகமே புறம்' என்ற பெயருடன் ஸ்ரீமான் பிள்ளையவர்கள் எழுதி வெளியிட்டுள்ள இந்நூல், ஆலன் என்ற பண்டிதரின் ஆங்கில நூலொன் றிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதாகும். ஆயினும், இது வெறும் மொழிபெயர்ப்பு என்ற உணர்வு வாசகனுக்கு எங்கும் தோன்றுவதில்லை. பிள்ளையவர்கள் இந்நூலுக்கு பரிபூரணமான தமிழ் மணத்தை ஊட்டியுள்ளனர். பிற நாட்டுப் பொன்னில் நமது முத்திரையைப் பதித்து, அதனை நமது சொத்தாக மாற்றியதுபோல் இம்மொழிபெயர்ப்பு விளங்குகிறது.

இந்நூல் மொழிபெயர்ப்பென்று பிள்ளையவர்கள் குறிப்பிடாவிட்டால், இதனைத் திருக்குறளின் சில அதிகாரங்களுக்கு வழங்கப்பட்ட விரிவுரையாகவே நாம் கருதியிருப்போம். அந்த அளவிற்கு தமிழ்ச் சிந்தனை, ஒழுக்கக் கோட்பாடு, பண்பாட்டு நெறி ஆகியவை இந்நூலில் இயல்பாகக் கலந்துள்ளன. நோய், கீழ்மை, மிடிமை முதலிய தளைகளிலிருந்து இப்பிறப்பிலேயே, இன்றே, இப்பொழுதே விடுபட்டு நலம் பெற விரும்புவோர் இந்நூலின் உபதேசங்களை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும். உடலுறுதி, அறிவு, ஆக்கம், தெளிவு, வீடு ஆகிய இன்பநிலைகளை அடைய விரும்புவோருக்கு ஸ்ரீமான் பிள்ளையவர்கள் இந்நூல் வழியாக ஓர் உறுதியான துணையாக விளங்குகின்றார். இவ்வகையில், 'அகமே புறம்' நூல் தனிமனித முன்னேற்றத்தையும் சமூக நலனையும் இணைக்கும் ஒரு அரிய தமிழ் நூலாகத் திகழ்கிறது.

'சுதேசமித்திரன்' – 'ஞானபானு' கருத்துப் போர்:

தனித்தமிழ் நடை குறித்து 'சுதேசமித்திரன்' இதழுடன் வ.உ.சி. கடுமையான கருத்துப் போரில் ஈடுபட்டார். 1915ம் ஆண்டு புரட்டாசி 16 அன்று 'பாரத புத்திரன்' என்ற பெயரில் 'தமிழ்ப்பாஷையும் சுதேசமித்திரனும்' என்ற தலைப்பில் வந்த கடிதம், தனித்தமிழ் நடையை விமர்சித்தது. அக்கடிதத்தில், நவீன காலச் செயல்கள் மற்றும் பொருள்களுக்கு தமிழில் சொற்கள் இல்லை என்பதால் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற வாதம் முன்வைக்கப்பட்டது. இதற்கு வ.உ.சி. 29-10-1915 அன்று 'ஞானபானு' இதழில் விரிவான மறுப்பு எழுதினார்.

வ.உ.சி.யின் தர்க்க ரீதியான மறுப்பு:

வ.உ.சி. தனது மறுப்பில், தமிழில் சொற்கள் இல்லையென்றாலும், புதிய சொற்கள் அல்லது தொடர்மொழிகளை உருவாக்க முடியும் என்றார். மேலும், ஆரம்பத்தில் விளக்கத்துடன் பயன்படுத்தினால், காலப்போக்கில் அவை பொதுமக்களிடையே இயல்பாகப் புரிந்துகொள்ளப்படும் என்றார். 'மகாமந்திர சபை (பார்லிமென்ட்), மாகாணபதி (கவர்னர்), மந்திராலயம் (காபினெட்)' போன்ற சொற்களைப் பயன்படுத்துவதால் மக்களுக்கு குழப்பம் ஏற்படும் என்ற வாதத்தையும் அவர் மறுத்தார். சில

காலம் தொடர்ந்து பயன்படுத்தினால், தமிழ்ச் சொற்களே மக்களிடையே நிலைபெறும் என்பது அவரது உறுதியான கருத்து. இம்மறுப்பு, தமிழின் சொல் உருவாக்கத் திறன் மீதான அவரது ஆழ்ந்த நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

அறநூல்கள் மற்றும் உரைப்பணி:

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான பொய்கையார் இயற்றிய 'இன்னிலை' நூலை வ.உ.சி. பதிப்பித்து வெளியிட்டார். அறநூல்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட அவர், 'மெய்யறிவு', 'மெய்யறம்' போன்ற நூல்களை இயற்றினார். இந்நூல்களில் பழைய அறநெறிகளை நினைவுபடுத்துவதோடு, தம் காலத் தேவைக்கேற்ற புதிய அறங்களையும் இணைத்துள்ளார்.

1917 ஆம் ஆண்டு வெளிவந்த இன்னிலை நூலுக்கான அவரது உரையில், முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை மேற்கோள் காட்டி யுள்ளமை, அவரது பல்நூல் பயிற்சியையும் இலக்கண நுண்ணறிவையும் வெளிப்படுத்துகிறது. அறங்களை எளிமைப்படுத்தி விளக்கும் அவரது நடை, கருத்துகளைப் புதுமையான கோணத்தில் அணுகும் இயல்பைக் காட்டுகிறது.

இதழியல் பணி:

'ஞானபானு' இதழில் எழுதிய கட்டுரைகள் மூலம் வ.உ.சி. தமிழின் தூய்மையை வலியுறுத்தினார். ஆங்கிலச் சொற்களின் தேவையற்ற கலப்பை அவர் எதிர்த்தார். இதழியல் வழியாக பொதுமக்களிடையே மொழி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதே அவரது நோக்கம்.

திருக்குறளும் வ.உ.சி.யும்:

சென்னையில் வாழ்ந்த காலத்தில் திரு.வி.கல்யாணசுந்தரனார், செல்வகேசவராய முதலியார் போன்ற தமிழறிஞர்களின் நட்பு, வ.உ.சி. யை திருக்குறள் மற்றும் தொல்காப்பிய உரைப்பணிகளில் ஈடுபடத் தூண்டியது. திருக்குறளுக்கு மணக்குடவர் எழுதிய உரையை அவர் பதிப்பித்தார். பொருள் விளக்கம், பொழிப்புரையைப் பதவுரையாக்குதல், பாடவேறுபாடுகளை அடைப்புக்குறிகளில் காட்டுதல், மேற்கோள் பாடல்களை முழுமைப்படுத்துதல் போன்ற பதிப்புச் சிறப்புகள் அவரது தனித்தன்மையை வெளிப்படுத்துகின்றன. பரிமேலழகர் உரையிலிருந்து மாறுபட்டு, அறத்துப்பாலுக்குப் புதுமை நோக்குடைய உரையொன்றைத் தந்து, அதை 1934 ஆம் ஆண்டு திருச்செந்தூரில் வெளியிட்டார். அறத்துப்பாலில் 76 குறள்களுக்கு பரிமேலழகர் உரையை மறுத்து வேறு உரை எழுதியதோடு, 74 பாடவேறுபாடுகளை எழுத்துப்பிழைகள் என நிறுவினார். 1910 ஆம் ஆண்டு கோவைச் சிறையில், திருக்குறளின் முக்கியத்துவம் குறித்து வ.உ.சி. கூறிய கருத்து கர்மயோகி இதழில் வெளியானது. இது திருக்குறளைப் பரப்புவதில் அவர் கொண்டிருந்த தீவிரத்தை வெளிப்படுத்துகிறது.

தொல்காப்பியம் மற்றும் சைவ சித்தாந்தம்

பொருளதிகாரத்தின் மீது அவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. இளம்பூரணர் உரையுடன் எழுத்து, சொல், பொருள் அதிகாரங்களை அவர் பதிப்பித்தார். நெறிபிறழாத சைவரான வ.உ.சி., சிவஞானபோதம் நூலுக்கு உரையெழுதி 1935 இல் வெளியிட்டார். தாம் உணர்ந்த தத்துவத்தை எளிய முறையில் மக்களுக்கு எடுத்துரைத்திருப்பது, அவரது உரைப்பணியின் தனித்துவமாகும்.

தனித்தமிழ் இயக்கம்:

ஆங்கிலச் சொற்களின் ஆதிக்கத்தை எதிர்த்து, தமிழில் புதிய சொற்களை உருவாக்க வேண்டும் என்ற வ.உ.சி. யின் வாதம், பின்னாளில் தனித்தமிழ் இயக்கமாக வளர்ந்தது. மொழி விடுதலையும் அரசியல் விடுதலையும் ஒன்றாகக் கருதினார். வ.உ.சி. ஆங்கிலச் சொற்களை முழுமையாக எதிர்த்தார். ஆனால், சமஸ்கிருதச் சொற்கள் குறித்த அவரது நிலைப்பாடு முழுமையான எதிர்ப்பாக இல்லை. இதுவே அவரது பணியின் ஆய்வுச் சான்றாகக் கருதப்படுகிறது.

முடிவுரை:

வ.உ.சி. யின் படைப்பும் பணியும் தமிழின் துணிச்சலின் சின்னமாக விளங்குகின்றன. மொழி, பண்பாடு, சுயமரியாதை ஆகியவற்றைப் பாதுகாக்க அவர் ஆற்றிய பணி, இன்றைய தலைமுறைக்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளது. வ.உ.சி. யின் இலக்கியப் பணிகள், அரசியல்வாழ்க்கையிலிருந்துதனித்துவமாகஇருந்தாலும்,அறநெறி,சமூக சிந்தனை, மனித மேம்பாடு என்ற ஒரே நோக்கையே அடிப்படையாகக் கொண்டவை. தம் காலத்து தமிழரும், வருங்காலத் தலைமுறையும் அறநெறியோடு கூடிய வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதே அவரது தமிழ்ப்பணியின் மையக் கருத்தாக விளங்குகிறது.

துணை நூல் பட்டியல்:

- பாரதி கண்ட வ.உ.சி., வ.உ.சி., ஆரூத் புக்ஸ், 2002.
- செந்தமிழ்ச்செல்வி நூற்றாண்டு இதழ்.
- சுதந்திரப் போராட்டத்தில் வ.உ.சி.
- 'விடுதலைச் சிந்தனையாளர் வ. உ. சிதம்பரனார் — புலவர் பூவை.சு.செயராமன் (உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வெளியீடு).
- 'வீர சிதம்பரனார்' — நா இராமய்யா பிள்ளை (கல்வி நூற்பதிப்பகம்).
- 'கப்பலோட்டிய தமிழன்' — மா.பொ. சிவஞானம்., இன்ப நிலையம், 1949.
- 'v.o.chidambaram pillai' — R.A.Padmanabhan., NBT, 1977.
- The great patriot (v.o.c.pilai) - M.P sivagnanam).

பகுதி எட்டு: தத்துவத் தேடல்

93

வ.உ.சிதம்பரனாரின் இளைஞர்களுக்கான மெய்யியல் முகம்

இரா. நரசிம்மன்
தத்துவ, பண்பாட்டு மற்றும் சமயத்துறை, பூம்புகார் கல்லூரி (தன்னாட்சி) , மேலையூர்.

முனைவர் இரா. இந்திரா,
துறைத்தலைவர் மற்றும் துணைப்பேராசிரியர்.

ஆய்வுச்சுருக்கம்:

தியாகச்செம்மல் வ.உ.சி. (1872-1936) அவர்கள் ஒரு சிறந்த, சுதந்திரப் போராட்ட வீரர், சுதேசிக் கப்பல் ஓட்டிய முதல் தமிழர், செக்கிழுத்த செம்மல் எனும் பன்முகத் தன்மை பெற்றிருந்தார் என்றும் தனது நாட்டுப்பணிக்குப் பரிசாக அவர் அடைந்த இன்னல்களும் நாம் கண்ணீரோடு அறிவோம். அவர் மற்ற இலக்கிய, எழுத்து மற்றும் தத்துவப் பணிகளையும் இறுதி வரை செம்மையாக செய்துவந்தார், இதற்கு அவருடைய தத்துவ ஞான அறிவும் (மெய்யியல்) ஒரு காரணம். அவரின் தத்துவச்செல்வங்கள் எக்காலத்திற்கும் பொருந்தும். இன்றைய இளைஞர்களுக்கு பொருந்தும் ஒரு சில தத்துவத்துளிகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

திறவுச்சொற்கள் : வ.உ.சி., தியாகம், தத்துவம் (மெய்யியல்), நூல்கள், பாடல்கள், இளைஞர், மாணவர், மெய்யறம், இல்வாழ்க்கை, தொழில், தியானம்.

முன்னுரை:

தியாகச்செம்மல் வ.உ.சி. (1872-1936) அவர்கள் ஓர் சிறந்த வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர், சுதந்திரப் போராட்ட வீரர், சுதேசிக் கப்பலோட்டிய முதல் தமிழர், செக்கிழுத்த செம்மல் எனும் பன்முகத் தன்மை பெற்றிருந்தார் என்றுதான் இந்த உலகம் அறிந்த ஒன்று. தனது நாட்டுப்பணிக்குப் பரிசாக கிடைத்த தண்டனைகளும் இன்னலும் நமக்கு கண்ணீரை வரவழைக்கும் அளவிற்கு அளவிடமுடியாதது. எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு அனைத்துப் பணிகளையும் இறுதி வரை சிறப்பாகச் செய்துவந்தார், இதற்கு அவருடைய தத்துவ ஞான அறிவும் (மெய்யியல்) ஒரு காரணம். அவரின் இந்த ஒரு முகத்தை ஒரு சில அறிஞர்களைத் தவிர மற்றவர் அறிந்திலர். அவர் பல நூல்களையும் இயற்றியுள்ளார். அவற்றில் தத்துவ நூல்களும் காணக் கிடைக்கின்றன. அவருடைய கருத்துக்கள் எல்லாக் காலத்தினர்க்கும் ஏற்றவிதத்தில் உள்ளதற்கான காரணம் ஒவ்வொன்றையும் அவர் வாழ்வில் அனுபவித்து எழுதியதால்தான்.

அவற்றில் இன்றைய சூழலில் தக்க நோக்கமின்றி உழலும் இளைய சமுதாயத்தினருக்கு ஏற்றவாறு உள்ள சில முக்கியமான தத்துவ (மெய்யியல்) கருத்துக்களை சிலவற்றைக் காண்போம்.

வ.உ.சி. அவர்களின் சமகாலத்திய தத்துவத் தொண்டுகள்:

இராமகிருட்டிண மடத்தைச் சேர்ந்த இராமகிருட்டிணானந்தர், திலகர் (குருவாகக் கொண்டார்), பாரதியார், அரவிந்தர், சுவாமி வள்ளிநாயகம், சுப்பிரமணிய சிவா, வ.வே.சு ஐயர், ஸஹஜானந்தர், லாலா லஜபதி ராய் ஆகிய ஞானிகளுடன் இருந்த தொடர்பு வ.உ.சி.யின் மன உலகில் தாக்கத்தை ஏற்படுத்தின. கைவல்லிய நவநீதம், ஞானவாசிட்டம், சிவஞானபோதம், திருக்குறள், திருமந்திரம், நல்லாப்பிள்ளை பாரதம், பகவத்கீதை, திருவிளையாடல் புராணம், இராமாயணம், ஜேம்ஸ் ஆலனின் ஆன்மீக நூல்களான அகமே புறம், மனம் போல வாழ்வு ஆகிய நூல்களின்வழி இறையியல் குறித்தும் மெய்ஞ்ஞானம் குறித்தும் ஆழமான அறிவைப் பெற்றிருந்தார். சைவமரபினராகப் பிறந்தவருக்கு, சைவ சித்தாந்தத்தின் பாதிப்பு இருந்திருக்கிறது. சைவ சித்தாந்தச் சபைகளில் வ.உ.சி. பேசிய உரைகள், சைவ சித்தாந்த நூலான 'சிவஞான போதத்திற்கு' உரை எழுதியதையும் இதற்குச் சான்றாகும்.

வ.உ.சி. இயற்றிய முக்கிய தத்துவ நூல்கள்:

திருப்பொய்கையார் இன்னிலை, தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் திருக்குறளும், சிவஞான போதம், மெய்யறிவு, மெய்யறம், தொல்காப்பியம் இளம்பூரணம், அகமே புறம், சாந்திக்கு மார்க்கம், ஜேம்ஸ் ஆலனின் வலிமைக்கு மார்க்கம் (மொழியாக்கம்), மனம் போல் வாழ்வு என்பன. தான் கூறிய தத்துவங்களின்படி வாழ்ந்தும் காட்டினார்

இன்றைய இளைஞர்களின் நிலைமை :

இன்றைய இளைஞர்கள் எண்ம மின்னணுவியல் எனப்படும் (டிஜிட்டல் மயமான) உலகில், பல சவால்களையும் வாய்ப்புகளையும் எதிர்கொள்கிறார்கள். அவர்கள் கைத்தொலைபேசி மற்றும் சமூக ஊடக மோகம், வேகமான வாகன மற்றும் உணவுக் கலாச்சாரம், நுகர்வுக் கலாச்சாரம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஊடக வெளிச்சம் பரவியிருக்கும் இந்நாளில் இந்த நிலைமை பெரிதுபடுத்தப்படுகிறது. பல பெற்றோர்கள் இன்று இளைஞர்களின் கலாச்சார சீரழிவு, தேவையற்ற பேச்சு மற்றும் கூடாநட்பு, கடினஉழைப்பு, துணிவுடன் கூடிய தொழில் மற்றும் சமுதாய முன்னேற்ற முயற்சி ஆகியவற்றில் ஈடுபாடின்மை, அநீதிகளை மௌனமாகக் கடந்து செல்வது போன்றவை. பல நன்முயற்சிகள் நடந்தாலும் மக்களுக்கு தெரியவராமல் கிடக்கின்றன அதே சமயம், அவர்கள் அறிவு, திறமை, மற்றும் சமூகத்தில் நேர்மறை மாற்றங்களை கொண்டுவரக்கூடிய ஆற்றல் ஆகியவற்றையும் கொண்டுள்ளனர். ஆனால் அவர்களின் அறிவும், திறமையும், பணம் சம்பாதித்தலும், படிப்பும் பெற்றோர்களை விட அதிகமிருப்பதால் பெற்றோர்களால் அவர்களைக் குறை கூற முடிவதில்லை. சில

குடும்பங்களில் பெற்றோர்க்கு இளைஞர்களின் குறைகளே தெரிவதில்லை. அவர்கள் பணம் சம்பாதிப்பதும், சமூகத்தில் அங்கீகாரம் பெறுவதும் கொடுக்கும் மகிழ்ச்சியில் பல பெற்றோர்கள் மயங்கிக் கிடக்கின்றனர். இதற்கு காரணம் சான்றோர்களின் அனுபவங்களையும் நூல்களையும் கல்லாமை என்பதே.

வ.உ.சி. இளைஞர்களுக்கு கூறும் தத்துவ அறிவுரைகள்:

ஒரு நாடு முன்னேற வேண்டும் என்றால் அந்நாட்டின் அங்கங்களாகிய மாணவர், இல்லறத்தார், அரசர். அந்தணர் ஆகியோர் தத்தம் கடமைகளைச் செவ்வனே செய்யவேண்டும்.எனவே மேற்கூறிய பிரிவினரின் கடமைகளைப் பற்றி விளக்கி பின்னர் அனைத்து மக்களுக்கும் மெய்ப்பொருள் தத்துவத்தை விளக்குகிறார். இவற்றில் இளைஞர்கள் எனப்படுபவர் மாணவர் மற்றும் இல்லறத்தார் பிரிவில் பெரும்பான்மையாக இருக்கின்றனர். எனவே இவர்கள் சம்பந்தப்பட்ட வ.உ.சி.தம்பரனாரின் தத்துவக்கூற்றுகளைக் காண்போம்.

மாணவரின் கடமைகள்:

தனது நூலான மெய்யறத்தில் - மாணவரியல் பகுதியில் முதல் அதிகாரத்தில் மாணவர் கடமை என்று பத்து பாடல்களை இயற்றியுள்ளார். முதல் பாடல் ‘மாண்பெற முயல்பவர் மாணவராவர்.’ என்பதிலிருந்து கடைசி பாடலான ‘இறைவன் நிலையினை எய்திட முயலல்’ என்பது வரை அவர் கூறுவதாவது ‘மாணவர் (ஆணும் பெண்ணும் இருபாலரும்) கல்வி பெற உரிமை இருப்பதால் சிறப்புநிலை அடைய பெருமுயற்சி செய்யவேண்டும், இளமை சிறந்த கல்விப் பருவமாக இருந்தாலும் கல்விக்கு வயது வரம்பு கிடையாது, நல்லொழுக்க விதிகளைக் கடைப் பிடிப்பதுடன் பெற்றோரையும் இறையையும் தொழுதல் வேண்டும். தீயோர் நட்பை விலக்கி நெறி சார்ந்தோருடன் நட்பு பாராட்டவேண்டும். நல்ல ஆசிரியரிடம் ஒழுக்கத்தையும் கல்வியையும் கற்று இறைநிலை அடையும் மெய்ஞானத்தையும் அடைய முயலுதல் வேண்டும்’

தீயினம் விலக்கல்:

வ.உ.சி. மேற்கூறிய மெய்யறத்தில் - மாணவரியல் பகுதியில் ஐந்தாவது அதிகாரமான ‘தீயினம் விலக்கல்’ என்பதில் தீயோரின் நட்பை கடுமையாகச் சாடுகிறார், முதல் பாடலான ‘தீதெலாந் தருவது தீயினத் தொடர்பே’ என்பது தொடங்கி கடைசி பாடலான ‘தீயின மெல்லா நோயென விலக்குக’ வரை பொருளானது: ‘தீயோரின் நட்பு தீமையை மட்டும் தரும். தீயோர் என்பர் - நல்லோர்க்கு கொடுமை செய்பவர், பிறர் பொருள் களவாடுபவர், இல்துணையன்றி பிறரோடும் உறவு கொள்பவர், போதைப்பொருட்களை உட்கொள்ளும் மூடர்கள், குற்றம் வளர்க்கும் பொய்யுரைப்பவர், அறத்தையும் பொருளையும் அழிக்கும் கீழ்மக்கள், தனது செயல்களுக்கு எல்லாம் இறைவனைக்காரணம் காட்டி நிற்பவர். இப்படிப்பட்ட தீயோரை நோய் எனக்கொண்டு முற்றிலும் விலக்கவேண்டும்.

தொழில் அறிதல்:

வ.உ.சி. அதே மெய்யறம் நூலில்-மாணவரியல் பகுதியில் இருபத்தி ரண்டாம் அதிகாரமான 'தொழில் அறிதல்' தொழிற்கல்வியை முன்னிலைப் படுத்துகிறார். முதல் பாடலான 'மெய்யுறுப் புக்கொடு செய்வது தொழிலே.' என்பதிலிருந்து பத்தாவது பாடலான 'உழவுவா ணி கங்கைத் தொழில்சில வறிக.' வரை அவர் வலியுறுத்துவது: 'தொழில் என்பது உடல் உழைப்போடு கூடியது, உழைப்பும் தொழிலும் உலகை அழியாமல் காக்கின்றன. வறுமைக்குக் காரணம் தொழிலின்மையே. உயர்ந்த தொழிற்கல்வி கற்பது அனைவரின் கடமை. படைக்கலன்களை இயங்குவதையும், போர்முறைகளையும் பூமி, கடல், வான்பயணங்களையும் அனைவருக்கும் கற்பிக்கவேண்டும். உருமாற்றக்கலை, உழவுத்தொழில், வாணிகம், கைத்தொழில் முதலிய வற்றைத் தவறாமல் கற்றல் வேண்டும்.

இல்வாழ்க்கையியல்:

வ.உ.சி. அவர்கள் தனது மெய்யறம் நூலில் - இல்வாழ்வியல் பகுதியில் முப்பத்து மூன்றாம் அதிகாரமான 'உயிர்த்துணை கொள்ளல்' என்ற பத்துப்பாடல்களில் இன்றைய பல இல்லறப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்கிறார். முதல் பாடலான 'உயிர்த்துணை தன்னுயிர்க் குதவெதிர்பாற்றுணை' இருந்து கடைசிப்பாடலான 'வரவினுள் வாழ்தலே மடிதுயி லிலாமையே' வரை அவர் கூறும் கருத்துக்களாவன;

'இல்லறத்தில் வாழ்பவன் தனது நல்ல வாழ்க்கைப் பாதையில் செல்லத் துணை நிற்பவள் மனைவிதான். மனைவி என்பவள் வெறும் துணை மட்டுமல்ல, அவளே அவனது வாழ்வின் ஆதாரமாகவும், நல்வழியில் உறுதுணையாகவும் இருப்பாள் மனைவிக்குரிய கடமைகளையும், கணவனுக்கு அவள் ஆற்றும் பங்கையும், அவளது முக்கியத்துவத்தையும், இல்லறத்தின் புனிதத்தையும் இந்த விளக்கம் உணர்த்துகிறது. துணையிழந் தாரை மணப்பது புண்ணியம்' என்பதன் மூலம் துணை இழந்தாரை மணப்பது புண்ணியம்' என்று வ.உ.சி. அவர்கள் எழுதி உள்ளார். இதனால் இவர் விதவைகளை திருமணம் செய்யலாம் என்ற கொள்கையைப் பின்பற்றுபவர் என்று தெரிகிறது. இத்திருமணத்தைப் புண்ணியம் என்றும் கூறியிருக்கின்றார். மற்றும் 'விரும்பாதவரை விரும்புதல் பாவம்' என்றும் அழுத்தமாகக்கூறியுள்ளார். சகதோழரே எதிர்த்தாலும், மகளிருக்கு ஆதரவான தன் நிலைபாட்டில் வ.உ.சி. அவர்கள் உறுதியாக நின்றார்.

மன அமைதியும் தியான மார்க்கமும் :

இன்றைய சமுதாயம் குறிப்பாக இளைய சமூகம் சூழ்நிலை அழுத்தம் காரணமாக தியானம் போன்ற பல மார்க்கங்களை நாடுகின்றனர். வ.உ.சி. அவர்கள் தனது 'சாந்தி மார்க்கம்' என்ற நூலில் தியானம் மற்றும் மன அமைதி வழிகளை விரிவாக விளக்கியுள்ளார். அதில் ஒரு துளியாவது: 'சோம்பலான வீண் எண்ணங்களுக்கும் தியானத்திற்கும் உள்ள

வேற்றுமையைத் துவக்கத்தில் அறிந்துகொள்ளவேண்டும். தியானத்தில் கனவு நிலையும், அறிவிற்கு எட்டாததும் ஒன்றும் இல்லை. கலப்பும் களங்கமுமற்ற மெய்ப்பொருளைத்தவிர உள்ளத்தின்கண் ஓட்டவிடாமல் செய்வதாகிய தேடுதலும் ஆராய்தலுமான முயற்சியே தியானம் எனப்படும். இவ்வாறு தியானம் செய்து வந்தால் துர் எண்ணங்கள் வளர்க்க மாட்டீர்கள். உங்கள் தீவினை மதில்கள் முழுவதுமாக உடையும்பொழுது மெய்ப்பொருட்காட்சி உங்களுக்குக்கிடைக்கும். மனது நிச்சலமான முழு அமைதி பெறும். மனம் முழு மௌனத்துடன் அடங்கியிருக்கும்.' தியானத்தின் மகிமையை எளிமையாக வ.உ.சி. அவர்கள் விளக்கியுள்ளார்.

முடிவுரை:

வ.உ.சி. கூறிய தத்துவக்கோட்பாடுகள் எண்ணற்றவை. நாம் தற்கால இளைய சமூகத்தினருக்கு உரிய சிலவற்றைக் கண்டோம். வாழ்வியலில் கடைப்பிடித்து நூல் படைத்த மகான்களின் வ.உ.சி. அவர்கள் தலையானவர். எனவே நாமும் அவற்றை எல்லாம் பயின்று சாலக் கடைப்பிடித்து வாழ்ந்து நம்மையும் நம் நாட்டையும் சிறக்கச்செய்வதே நாம் அவருக்கு செலுத்தும் சிறந்த அஞ்சலியாகும்.

துணை நின்றவை:

1. வ.உ.சி. அவர்கள் இயற்றிய நூல்கள் – 1. மெய்யறம், 2. சாந்திக்கு மார்க்கம், 3. மனம் போல் வாழ்வு, 4. சுய சரிதை, 5. வ.உ.சி. கட்டுரைகள் (https://tamildigitallibrary.in/voc)
2. பேராசிரியர் நா.வானமாமலை - வ.உ.சி. முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி- 1980 மக்கள் வெளியீடு - மக்கள் அச்சகம், சென்னை.
3. உமாமகேஸ்வரி - முனைவர் - தூய வளவனார் கல்லூரி -வ உ சிதம்பரம் பிள்ளை காத்த சுதந்திரம் - கட்டுரை. வலைநயம் மே 2022 இதழ்
4. முனைவர் கண்ணன் - வ.உ.சி. ஒரு பன்முகப் பார்வை -2005 - உலக தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை 2005
5. வ.உ.சி. பற்றிய பல கட்டுரைகள் - தினமணி, சொல்வனம், ஈகரை, இலக்கியம் (lit-eraturte.blogspot) - முதலியவற்றின் வலைத்தளங்கள்.

94

வள்ளலார் நெறியில் மெய்யறம்

சொ. தங்கத்துரை
முனைவர் பட்ட ஆய்வாளர், வெ.ப.சு.தமிழியல் ஆய்வு மையம்,
ம.தி.தா.இந்துக்கல்லூரி, திருநெல்வேலி.

முனைவர் இரா. இலக்குவன்,
உதவிப்பேராசிரியர், வெ.ப.சு.தமிழியல் ஆய்வு மையம், ம.தி.தா.இந்துக்கல்லூரி.

ஆய்வுச்சுருக்கம்:

வள்ளலார் ஆன்மீக வழியில் அறநெறிகளை மக்களுக்குப் புகட்டி அதன்வழியே வாழ்ந்து காட்டினார். வ.உ.சிதம்பரனார் பொது வாழ்க்கையில் அறநெறிகளைப் பின்பற்றி வாழ்ந்தார். இரண்டு பேரும் நீதி நூல்கள் படைத்துள்ளனர். வள்ளலாரின் திருவருட்பாவும், வ.உ.சி. யின் மெய்யறமும் நன்னெறிகளை எடுத்துரைக்கின்றன. வள்ளலார் மற்றும் வ.உ.சி. ஆகியோர் திருக்குறளை முழுமையாகக் கற்று அதன்படியே வாழ்ந்தனர். இருவரின் உள்ளத்தில் சான்றாண்மையை விதைத்தது திருக்குறள் நூல் ஆகும். ஜீவகாருண்ய நெறியும், மெய்யற நெறியும் கொலை விலக்கல், புலால் மறுப்பு,பெண்கல்வி ஆகியவற்றைப் போதிக்கின்றன. இதனை விரிவாக ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

திறவுச்சொற்கள்: வள்ளலார், திருவருட்பா, திருக்குறள், மெய்யறம், புலால் மறுப்பு, கொலை விலக்கல், பெண்கல்வி.

முன்னுரை:

வையத்தில் தோன்றிய கபடு, சூது, பொய், களவு, வஞ்சனை, சினம், காமம், வெகுளி, பழிவாங்குதல், பொய்சாட்சிப் புகலுதல், பசிப்பிணி, பஞ்சம் ஆகிய துர்க்குணங்களும் தீமைகளும் மறையவும், அன்பு, பண்பு, புகழ், அருள், நீதிநெறி, கொல்லாமை, சகோதரத்துவம் ஆகிய நன்னெறிகள் தழைத்து ஓங்கவும் வாழையடி வாழை என அருளாளர்கள் இந்தத் தமிழ் மண்ணிலே தோன்றிக் கொண்டே இருக்கின்றார்கள். அந்த மரபில் வந்தவர்கள் தாம் வள்ளலாரும், வ.உ.சி.யும். இருவரும் புகட்டிய நன்னெறிகள் மனித மனதில் அமைதியையும், வாழ்வில் மகிழ்ச்சியையும் உலகில் செம்மையையும் விளைவிக்கக் கூடியதாகும். ஆகையால், வள்ளலாரின் திருவருட்பா, வ.உ.சி.யின் மெய்யறம் முதலிய இரண்டு நூல்களில் இடம்பெறும் இறை நெறி, மனித நெறி, உணவுநெறி, பொது நெறிகளை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

திருவருட்பா:

திருவருட்பா ஆறு திருமுறைகள், ஆறு பகுதிகள், 399 பதிகங்கள், 5818

பாடல்கள் உள்ளன. இதில் அருட்சோதி அகவல் ஒரு மலை போன்றது. அதன் ஒவ்வொரு அடியும் அதன் படிகளைப் போன்றவை. இவையே திருவருட்பாவின் அமைப்பாகும். இறைவனை முன்னிறுத்தி 5818 பாடல்களைப் பாடிய ஒரே புலவன், ஒரே துறவி, ஒரே ஞானி, வள்ளலார் ஆவார்.

‘தமிழ் நூல்களில் ஐந்து நூல்கள் தன் பெயரையே தமக்குச் சிறப்பாகப் பெற்றுத் திகழ்கின்றன.

- மந்திரங்கள் பல. திரு சேர்ந்த மந்திரம் ஒன்றே ஒன்று. அது, திருமந்திரம்.
- வாசகங்கள் பல. நானும் நீங்களும் பேசுவதெல்லாம் வாசகம் தான். ஆனால், திரு சேர்ந்த வாசகம் ஒன்றே ஒன்று. அது திருவாசகம்.
- கோவை பல. தஞ்சை வாணன் கோவை, திரு வெங்கைக் கோவை, திருவாரூர்க் கோவை என்பவை. ஆனால், திருச்சேர்ந்த கோவை ஒன்றே ஒன்று. அது திருக்கோவை.
- குறள்களும் பல. அவை ஔவைக் குறள் முதலியன. ஆனால் திரு சேர்ந்த குறள் ஒன்றே ஒன்று. அது திருக்குறள்.
- அருட்பாக்களும் பல. அருளாளர்கள் பாடிய பாக்கள் அனைத்தும் அருட்பாக்களே. ஆனால் திரு சேர்ந்த அருட்பா ஒன்றே ஒன்று. அது திருவருட்பா.’ (1980:28,29)

மெய்யறம்:

மெய்யறம் என்ற சொல்லில் இரு பகுதிகள் உள்ளன. முதல் பகுதி ‘மெய்’. இரண்டாம் பகுதி ‘அறம்’. ‘மெய்’ என்றால் உண்மை என்று பொருள். ‘அறம்’ என்பது தர்ம நெறி ஆகும். வ.உ.சி.யின் இந்நூல் உண்மையான அறத்தைப் பற்றி இளம் வயதினரும் புரிந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

மெய்யறம் என்னும் இந்நூல் மாணவரியல், இல்வாழ்வியல், அரசியல், அந்தணரவியல், மெய்யியல் என்னும் ஐந்து இயல்களைக் கொண்டுள்ளது. மொத்தம் 125 அதிகாரங்கள் உள்ளன. ஒரு அதிகாரத்திற்குப் பத்து வரிகள் உள்ளன. மொத்தம் 1250 வரிகள் உள்ளன. இவையே மெய்யறத்தின் அமைப்பாகும்.

வள்ளலாரின் நெறிகள்:

‘சன்மார்க்க சங்கத்தின் கொள்கைகளை அடிகளார் பட்டியல் தொகுத்து வெளியிட்டதாகத் தெரியவில்லை. ஆயினும், அவருடைய பாடல்களிலே, வசன உபதேசங்களிலே, அவர் தம்முடைய சீடர்களுக்கு எழுதிய கடிதங்களிலே, சன்மார்க்க சங்கத்தின் கொள்கைகள் பரவலாகக் காணப்படுகின்றன. அவை பின்வருவன:

- உயிர்குலம் அனைத்துக்கும் தெய்வம் ஒன்றே என்று நம்புதல்.
- அந்தத் தெய்வத்தை விக்கிரக வடிவில் அல்லாமல் ஒளி வடிவிலே வழிபடுவதே சிறந்ததென உணர்தல்.

- சாதி-சமய-வருண பேதங்களை அறவே விடுத்து, மொழி வழிப்பட்ட இனங்கள்-நாடுகளிடையே ஒற்றுமைகண்டு, ஆன்மநேய ஒருமைப்பாட்டினை உருவாக்கல்.
- உலகம் முழுவதையும் ஒன்றுபடுத்தும் ஆன்மநேய ஒருமைப்பாட்டினுக்கேயன்றி, இந்திய நாட்டின், மொழிவழி இனங்களிடையே சகோதர உணர்வை வளர்த்து, அவற்றிடையே உணர்ச்சிபூர்வமான ஒருமைப்பாடு காணல்.
- உடைமையாளர் - வறுமையாளர் (பணக்காரர் - ஏழை) என்ற பொருளாதார ஏற்றத் தாழ்வைத் தொலைத்து, எல்லோரும் வயிறார உண்டு, உடம்பார உடுத்து வாழும் சமதர்ம சமுதாயத்தைப் படைத்தல்.
- ஆண் - பெண் என்ற பால் வேற்றுமையின்றி மக்கள் எல்லோருக்குமே கல்வி அளித்தல் - குறிப்பாக, ஞானமார்க்கக் கல்வியைப் பெண்களுக்கும் அளித்தல்.
- மரணமிலாப் பெருவாழ்வு வாழும் பேற்றினைப் பெறுவதற்கான வழி வகைகளை மக்களுக்கு அவரவர் தாய்மொழியின் வாயிலாகவே – குறிப்பாக, தமிழருக்குத் தமிழின் வாயிலாகவே பயிற்றுவித்தல்.
- புலால் உண்ணுதல், தெய்வத்திற்கு உயிர்ப்பலி தருதல் ஆகிய தீய பழக்க – வழக்கங்களை அடியோடு ஒழித்தல்.
- உயிர்கள் அனைத்தையும் சமமாகக் கருதி, அவற்றிடையே இரக்க உணர்வும் தயையும் காட்டத்தக்க ஜீவகாருண்ய ஒழுக்கத்தை மக்களுக்குப் போதித்தல்.
- கருணையிலாத் துன்மார்க்கர் அரசியல் நடத்துவதை உலகெங்கணுமிருந்து ஒழித்து, அருள்நெறி வழிபட்ட சுத்த சன்மார்க்கர் ஆட்சி தோன்றச் செய்தல்.' (2024:143,144)

நெறிமுறைகள்:

'மக்களின் நடத்தை முறைகளையும், செயற்பாடுகளையும், முறைப் படுத்தக்கூடிய விதிகளே நெறிமுறைகள் எனப்படும். இவை விழுமியங்களிலிருந்து மாறுபட்டவை. விழுமியங்கள் பெரும்பாலும் கருத்தியல் வடிவம் பெற்றவை. நெறிமுறைகளோ இவற்றைத்தான் செய்ய வேண்டும். இவற்றைச் செய்யக்கூடாது. இவை சரி, இவை தவறு, இவை நல்லவை, இவை கெட்டவை என உறுதிபடக் கூறும் அல்லது நெறிப்படுத்தும் தன்மை பெற்றவை.' (1990:160) ஆகையால் வள்ளலார் கூறிய நெறிகளை வ.உ.சி எழுதிய மெய்யறத்தோடு பொருத்திக் காணலாம்.

வள்ளலார் நெறியில் மெய்யறம்:

'இறைநெறி இறைவன் ஒருவனே'

இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் அத்தனைப் பேருக்கும் பொதுவாக இறைவன் ஒருவன்தான் உள்ளான் என்று உணராது பலபல

தெய்வங்களை வணங்கின்றனர். இதனை வள்ளலார் 'கடவுள் ஒருவரே' என்ற தலைப்பின்கீழ், பல பாடல்களின் வரிசையில் வருவதால், அது கடவுள் ஒருவரே என்பதையும், பிற தெய்வ வழிபாடு கூடாது என்பதையும் வலியுறுத்துகிறது. இதனையே வ.உ.சி.

'மெய்யுல கெல்லாஞ் செய்முதற் கடவுள்' (மெய்யறம் 31)

உலகத்தை எல்லாம் உருவாக்கக் கூடிய முதன்மையானக் கடவுள் உண்மையே என்கிறார்.

மனித நெறி ஜீவகாருண்யம்:

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்
பசியினாலிளைத்தே வீடுதோறிரந்து பசியறாது அயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின்றோரென்
நேர்உறக் கண்டுளம் துடித்தேன்
ஈடின் மானிகளாய் கோழைகளாய் நெஞ்
கிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்.'

என்று ஜீவகாருண்யத்தைப் படிப்படியாகச் சுட்டிக் காட்டுகிறார் பிள்ளைப்பெரு விண்ணப்பத்தில் வள்ளலார்.

வாடிய பயிரை என்று துவங்குவதால், எல்லா உயிர்களுக்கும் பசிபோக்க நம்மால் முடியுமானால், முடிந்த வகையில் எல்லாம் அந்தந்த உயிர்க்குப் பசிபோக்கி உயிர்காத்தல் வேண்டும்.

வ.உ.சி. 'அருள் புரிதல்' என்ற அதிகாரத்தில் பிற உயிர்களுக்கு இரக்கப்பட வேண்டும் என்று கூறுகிறார். அவை,

அருள்பல வுயிர்க்கு மன்புபா ராட்டல். (மெய்யறம் 1191)
எவ்வகை யுயிர்க்கு மின்னா செயற்க. (மெய்யறம் 1193)

உயிர்க்கொலை:

அருட்பிரகாச வள்ளலார், தெய்வங்களுக்கு உயிர்ப்பலி கொடுப் பதையும் வெறுத்தார். தெய்வங்களின் பேரால் உயிர்களைக் கொல்லும் வழக்கம் சங்ககாலம் தொட்டே தமிழர்களிடையே இருந்து வருகிறது.

உயிர்க்கொலையை வெறுத்து, ஊனுணவை மறுத்துப் பாடிய வள்ளுவர் கூட பலியிடும் வழக்கத்தைக் கண்டித்தாரல்லர். தெய்வங் களுக்கு உயிர்ப்பலி கொடுக்கும் கொடுமையை முதன்முதலாக ஒளிவு மறைவின்றி கண்டித்த பெருமை வள்ளலாருக்கே உரியதாகும்

'நலிதரு சிறிய தெய்வமென்றையோ
நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றிருக் குடங்கள்
பலிக்கடா முதலிய உயிரைப்

பொலிவுறக் கொண்டே போகவுங் கண்டே

புத்திநொந் துளநடுக்குற்றேன்

கலியுறு சிறிய தெய்வவெங் கோயில்

கண்டகா லத்திலும் பயந்தேன்' (2024:318)

என்று அடிகள் பாடியுள்ள பாடல், உயிர்ப்பலியின்பால் அவருக்கு இருந்த வெறுப்பை விளக்குவதாகும்.

வ.உ.சி.யும் மெய்யறத்தில், பதினொன்றாவது அதிகாரத்தில் 'கொலை விலக்கல்' குறித்து பேசுகிறார். அவை

'கொலையுயிர் தனையத னிலையினின் றொழித்தல்.' (மெய்யறம்.101)

கொலை என்பது உயிரினை உடலில் இருந்து நீக்குதல் ஆகும்.

'கொலைபா தகங்களுட்டலையாய தென்ப. மெய்யறம்' (மெய்யறம் 106)

கொலை, பாவங்களில் மிகக் கொடியது ஆகும்.

'கொலைபுரி வார்க்கிங் கிலைபதி யருளே.' (மெய்யறம் 109)

கொலை செய்பவர்களுக்கு இறைவன் அருள் கிட்டாது என்று கூறுகிறார்.

உணவு நெறி - புலால் மறுத்தல்:

வள்ளலார் உணர்த்திய நெறிகளுள் எந்நெறி உயர்ந்தது என நாம் ஒப்பிடவோ அளவிடவோ இயலாது. அத்தகைய வாழ்வியல் நெறிகளுள் புலால் மறுத்தலும் ஒன்றாகும்.

திருக்குறளில் 'புலால் மறுத்தல்' என்னும் அதிகாரத்துள் புலாலுணவை மறுத்தும் வெறுத்தும் பாடுகின்றார் திருவள்ளுவர்.

'அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்

உயிர்செகுத்து உண்ணாமை நன்று.'

என்னும் குறட்பாவில், வேள்வியில் உயிர்க்கொலை புரிந்து அந்தணர்கள் புலாலுண்டதைக் கண்டிக்கின்றார். திருவள்ளுவருக்குப் பிறகு புலாலுணவை வன்மையாகக் கண்டித்த பெருமை வள்ளலாருக்கே உரியதாகும்.

'துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொலத்

தொடங்கிய போதெலாம் பயந்தேன்

கண்ணினால் ஐயோ பிறஉயிர் பதைக்க

கண்டகா லத்திலும் பதைத்தேன்...' (2024:315)

என்னும் பாடலுள், உயிர்க்கொலை புரிந்து ஊனுண்ணும் கொடிய வழக்கத்தைக் கண்டிக்கிறார்.

வ.உ.சி.யும் மெய்யறத்தில் பன்னிரண்டாவது அதிகாரத்தில் 'புலால் விலக்கல்; குறித்து பேசுகிறார். அவை

'புலால்புழு வரித்தபுண் ணலால்வே றியாதோ?' (மெய்யறம்.111)

புலால் என்பது புழுவால் அரிக்கப்பட்ட புண் ஆகும்.

‘புண்ணைத் தொடாதவர் புலாலையுட் கொள்வதென்?’ (மெய்யறம்.112)

புண்ணைத் தொடாதவர் புலாலை எப்படி உண்கிறார்?

‘ஆவைகொன் றுண்பார்க் கருளுண் டாமோ? (மெய்யறம்.119)’

அவற்றைக் கொன்று உண்பவர்களுக்கு இறையருள் கிட்டாது.

பொது நெறி: பெண் கல்வி:

பெண்களுக்கும் ஆண்களுக்குச் சமமாகக் கல்வி அறிவு தர வேண்டும் என்கிறார் வள்ளலார். இதனையே வ.உ.சி.

‘ஆணும் பெண்ணும் அதுசெய வுரியர்.’ (மெய்யறம்.02)

‘இருபா லாருந் தருவதற் குரியவர்.’ (மெய்யறம்.62)

ஆண்களும் பெண்களும் கல்வி கற்கும் உரிமையை உடையவர்கள் என்றும் ஆண், பெண் இருவருமே ஆசிரியராகத் தகுதி உடையவர்கள் என்றும் பதிவு செய்துள்ளார். அந்தக் காலக்கட்டத்தில் பெண்கள் கல்வி கற்பதே சாத்தியக் குறைவான விஷயம். ஆனால் வ.உ.சி. பெண்கள் கல்வி கற்பது மட்டுமல்லாமல் ஆசிரியர்களாகவும் ஆகலாம் என்று சிந்தித்துள்ளார்.

மூடப்பழக்கங்களை எதிர்த்தல்:

யாராவது இறந்து போனால் செய்கின்ற தேவையற்ற ஈமச் சடங்குகளையும் எதிர்த்தார். மனைவி இறந்து போனால் கணவன் மறுமணம் செய்யக்கூடாது என்றவர், ஒருபடி மேலே போய் கணவன் இறந்தால் மனைவி தாலியைக் கழற்ற வேண்டாம் என்றார் வள்ளலார்.

வள்ளலார் கூறிய இக்கருத்தை வ.உ.சி. இல்வாழ்வியலில் ‘உயிர்த் துணை கொள்ளல்’ என்னும் அதிகாரத்தில் (மெய்யறம்:33) ‘துணை யிழந்தாரை மணப்பது புண்ணியம்’ (மெய்யறம்:326) என்று குறிப் பிடுகிறார். அவர் மறுமணம் குறித்துப் பேசுகிறார். அது உண்மையில் மிகவும் புரட்சிகரமான கருத்தாக அமைகின்றது. ஒரு விதவைப் பெண் எவ்வளவு இளம் வயதினராக இருந்த போதும் தனிமையில்தான் வாழ வேண்டும் என்று சமூகம் எண்ணியிருந்த காலக்கட்டத்தில் துணையிழந்தாரை மணப்பது புண்ணியம் என்று எழுதியுள்ளார். ‘உடன்கட்டை ஏறுதல், குழந்தை மணம்’ ஆகிய கருத்துக்கள் பரவலாக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த அக்காலக்கட்டத்தில் வ.உ.சி.யின் இச்சீர்த்திருத்த நோக்கு எதிர்ப்பையும் எதிர் கொள்ள வேண்டியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கச் செய்தியாகும்.

திருக்குறள் - வள்ளலாரும், வ.உ.சி.யும்:

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - எனப் பாரதி பாடினார். வள்ளுவரின் குறள் உலக மக்கள் முழுமைக்கும் ஏற்புடையதாகவும் வாழ்க்கைக்கு வழிகாட்டுவதாகவும் அமைந்துள்ளது. அந்த வகையில் வள்ளலாரும் வ.உ.சி.யும் திருக்குறள்

மீது மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளனர். சிறந்த வாழ்வியல் நெறியில் மக்கள் தழைத்தோங்க திருக்குறள் வகுப்பினை நடத்தி மிகப் பெரிய சமுதாயத் தொண்டாற்றினார் வள்ளலார்.

திருக்குறளில் அவருக்கு ஆழ்ந்த ஈடுபாடு உண்டு என்பதனை வ.உ.சி. தனது சுயசரிதையில்

'மாநிலம் கொண்டிட வள்ளியும் உவந்திட

திருவள்ளுவரின் தெய்வமாமறையின்

பெருவளக் குறள் சில பேணிப் படித்தேன்' (2001:13)

என்று கூறியுள்ள வரிகளால் திருக்குறள் மீது வ.உ.சி. கொண்டிருந்த ஈடுபாட்டினைத் தெளிவாக நாம் அறிய முடிகிறது.

முடிவுரை:

வள்ளலார் நெறியில் அறம் என்பது கருணைமையமுடைய ஆன்மநிலை ஆகும். அதனை வ.உ.சி. 'மெய்யறம்' நூலில் மெய்யுணர்விலிருந்து வெளிப்படும் அறச்செயல் என விளக்குகிறார். வள்ளலாரைப் போல வ.உ.சி.யும் புலால் உண்ணுதலை கண்டிக்கிறார். வள்ளலாரைப் போல ஆண் பெண் அனைவரும் சமம். பெண்கள் கல்வி கற்க வேண்டும். உயிர்களிடம் அன்பு காட்ட வேண்டும். உயிர்களை இறைவன் பெயரில் பலியிடுதல் கூடாது. மூடப்பழக்கங்களை எதிர்க்க வேண்டும். இறைவன் ஒருவனே என்று எண்ணுதல் வேண்டும் முதலியவற்றைக் கூறுகிறார். வள்ளலார் திருக்குறள் வகுப்பு எடுத்ததைப் போல வ.உ.சி.யும் திருக்குறள் மீது ஈடுபாடு கொண்டு திருக்குறளின் அறத்துப்பாலுக்கு உரை வழங்கினார். திருக்குறள் ஈடுபாடு, ஒழுக்க நெறிகள், எனப் பல்வேறு வாழ்வியல் நெறிகளை வள்ளலார் கருத்துக்களும் வ.உ.சி. கருத்துக்களும் உணர்த்துகின்றன என்பதை இக்கட்டுரையின் மூலம் தெளிய முடிகிறது. மெய்யறம் என்ற வ.உ.சி.யினுடைய நூல் வள்ளலாரினுடைய பாதிப்பு இருக்கிறது என்பதை இக்கட்டுரை உறுதிசெய்கிறது.

துணைநூற்பட்டியல்:

1. சிதம்பரம் பிள்ளை.வ.உ., மெய்யறம், வ.உ.சி. நூலகம், பதிப்பாளர் மற்றும் நூல் விற்பனையாளர்கள், சென்னை.
2. சிவஞானம்.ம.பொ வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, சென்னை: நூல் ஆயுதம் பப்ளிக்கேஷன்ஸ், 2024.
3. திவான்.செ.,வ.உ.சி.யும் திருக்குறளும், சுவைஹனா பதிப்பகம், முதற்பதிப்பு, பாளையங்கோட்டை, 2001.
4. பக்தவத்சல பாரதி பண்பாட்டு மானிடவியல், சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம், 1990.
5. விசுவநாதம்.கி.ஆ.பெ வள்ளலாரும் அருட்பாவும், சென்னை: பாரி நிலையம், 1980.

95

அரண் குறித்த வ.உ.சி.யின் சிந்தனைகள்

கோ. பத்மாவதி

தமிழ் ஆர்வலர், 95, வசந்தம் நகர் முதல் தெரு, மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம்.

ஆய்வுச்சுருக்கம்:

தமிழகம் வாழ்விலும், வளத்திலும், அறிவிலும், ஆண்மையிலும் தமிழினத்தை மிஞ்சிய இனம் வேறு இல்லை. போர் விரும்பத்தகாத ஒன்று; வேண்டாததும்கூட என்றாலும், போர் நிகழாத நாடும், போர் நிகழாத காலமும், போர் புரியாத உயிரினமும் இல்லை. உலகம் தோன்றிய நாள் தொட்டு போர் தொடர்ந்தே வருகிறது.

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் என்பது சுரண்டலைத் தடுத்தலிலும், தாய்மொழியின் வாயிலாக அறிவை வளர்ப்பதிலும் மட்டுமே அடங்கியுள்ளது என்பதை தெள்ளத் தெளிவாக வ.உ. சிதம்பரனார் உணர்ந்திருந்தார். அதனால் தான் நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் தனது இரு கண்களாகக் கொண்டிருந்தார்.

நாட்டிற்கும், ஆட்சித்தலைவருக்கும் அழிவு வராமல் பாதுகாத்துக் கொள்ளும் அமைப்பு அரண் எனப்படுகின்றது. அரண் என்பது நாட்டைப் பாதுகாக்கும் ஒரு பாதுகாப்பு வளையம் ஆகும். நமக்குச் சொந்தமாக நாடு இருந்தால் மட்டுமே பாதுகாப்பாகவும், இன்பமாகவும் வாழ முடியும் என்பதை வ.உ.சிதம்பரனார் அனுபவித்து மெய்யறத்தில் தெளிவாகப் பதிவு செய்துள்ளார். அரணுயிர் பொருள்களை யளிக்குமோர் காப்பு. (மெய்யறம் 771)

அதாவது அரண் என்பது உயிர்களையும் பொருள்களையும் காக்கக் கூடிய ஒரு வேலி என்று வ.உ.சிதம்பரனார் கூறியுள்ளார். மதில்சுவர், அகழி, காடு, மலை போன்றவை அரணாக இருந்த நிலையிலிருந்து மாறி வான் எல்லையிலும் இன்று அரண் உண்டாக்கி நாட்டைப் பாதுகாக்கும் நிலையில் இன்று நாம் முன்னேறியிருக்கிறோம்.

திறவுச்சொற்கள்: படைக்கருவிகள், மறத்திலும் அறம், அகழ், மதில், இராணுவம்

முன்னுரை:

வீரத்தின் வித்தினைப் பாடுபொருளாகக் கொண்ட நூலாகிய புறநானூறானது போரின்றி உலகோர் அனைவரும் ஒன்றுபட்டு வாழ வேண்டிய தேவையினை வற்புறுத்துகின்றது. மறத்திலும் அறம் போற்றியவர்கள் நம் தமிழர்கள். நேருக்கு நேர் நின்று வாள், வில், ஈட்டி போன்றவற்றைக் கொண்டு போரிடுதலே போர் நெறியாக அக்காலத்தில் இருந்தது. புறமுதுகில் குத்துவதும், புறமுதுகு காட்டி ஓடுவோர்களை மன்னிக்காது துரத்திக் கொல்வதும், பலமற்ற ஒருவனைப் பலசாலி

ஒருவன் களத்தில் நில்லாது கள்ளத்தனமாகக் கொல்ல நினைப்பதும், கொல்வதும் போர்க் குற்றங்களாகக் கருதப்பட்டன. பகலில் போரிட்டு இரவில் போரிடாமையைத் தமிழர்கள் போர் அறமாகப் போற்றினர். போர் நெறியானது அறவழி அடிப்படையில் இருந்தது என்பதைப் புறநானூற்றுச் செய்யுள்கள் தெளிவாக்குகின்றன.

கப்பலோட்டிய தமிழனாகப் போற்றப்படும் வ உ சிதம்பரனார் அவர்கள் தமிழ்மொழியின் மீது கொண்டிருந்த பற்றால் திருக்குறளுக்கு உரை மற்றும் நீதி நூல்கள் பலவற்றுக்கு உரை எழுதினார். ஜேம்ஸ் ஆலன் அவர்கள் எழுதிய மனம்போல் வாழ்வு என்ற நூலை மொழிபெயர்த்து அளித்துள்ளார்.ஒரு குறிப்பிட்ட நாட்டினரோ, மொழியினரோ, சமயத்தினரோ, வகுப்பினரோ தமக்கு மட்டுமே உரியது என்று உரிமை கொண்டாட முடியாத வகையில் உலகப் பொதுமறையாக பெருமக்கள் பலராலும் பாராட்டிப் போற்றக் கூடிய சிறப்புடைய திருக்குறளின் கருத்துகளை வழிமொழிந்து வ.உ.சி. அவர்கள் மெய்யறம் என்ற நூலை இயற்றியுள்ளார்.

அரண் வகைகள்:

அரண் புறவரண், அகவரண் என இரு வகைப்படும் என்பதை அரண்புற வரணக வரணென விரண்டு (மெய்யறம்.773) பாடலடியில் குறிப்பிட்டுள்ளார்.புறவரண் அயல் நாடுகளால் பாதிக்கப்படாத வகையில் பாதுகாப்பது என்றும், நாட்டினைச் சுற்றியுள்ள கடலும், பகைவரைக் கொல்லக் கூடிய கருவிகள் கொண்டுள்ள நிலமும், நிலத்தையடுத்துள்ள மலைத்தொடரும், மரங்கள் நிறைந்த காடும் புறவரண் என்று மெய்யறம் 776 முதல் 779 வரை உள்ள பாடலடிகளில் கூறியுள்ளார்.

இப்பகுதியில் குறிப்பிடும் இந்நான்கும் நாட்டினுள் அமைந்தால் அது அகவரண் என்றும் அரசாங்கம், உயிரினங்கள், செல்வம் ஆகியவற்றைப் பாதுகாப்பது அகவரண் என்பதை அகவர ணரசுயி ரரும்பொருள் காப்பது (மெய்யறம்.775) என்று குறிப்பிட்டுள்ளார்.

புறவரண்களைச் சிறப்பாக அமைப்பதோடு மட்டுமல்லாமல் அக வரண்களையும் சிறப்பாக அமைத்தல் வேண்டும் என்று மெய்யறம் 786-ஆவது அடியில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவற்று ளகழ்மதி லரசில மாக்குக (மெய்யறம்.787) அதாவது அவற்றுள் அகழ், மதில் மற்றும் அரண்மனை ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு மன்னனுக்கு முக்கியமாக அமைய வேண்டிய அரண் எவ்வாறு அமைந்து இருக்க வேண்டும் என்பதனை வரையறை செய்து விளக்கி யுள்ளார் வ.உ.சிதம்பரனார் அவர்கள்.

ஆகாய விமானமோ, ஏவுகணையோ, பயன்படுத்தாத காலகட்டத் தில் வாழ்ந்த அரசர்கள், தரை மூலமே தம் படைகளைச் செலுத்தினர். எனவே கோட்டையானது பகைவர் எளிதில் நுழையாதவாறு அமைந்து இருக்க வேண்டும்.

அதைச் சுற்றி ஆழமான நீருள்ள அகழியோ, மலைகளோ, மரம் அடர்ந்த காடுகளோ சூழ்ந்திருக்க வேண்டும். ஆழமான அகழியை எளிதில் நீந்தித் தாண்ட முடியாது.விரைவாக மலைகளில் ஏறி இறங்க முடியாது. காடுகளையும் எளிதில் கடக்க முடியாது.

எனவே, பகைவர்கள், கோட்டையை எளிதில் அடைய முடியாதவாறு தடைகள் வேண்டும். அந்தத் தடைகளே, அகழியும், மலையும், காடும் ஆகும். உட்புற அரண்களை அரசர் நாள்தோறும் கண்காணிக்க வேண்டும் என்பதை அகவரண் களையர சனுதினங் காண்க (மெய்யறம்.800) வ.உ.சி. தமது படைப்பில் தெளிவாக வலியுறுத்தியுள்ளார்.

அரண் நடவடிக்கைகள்:

ஒரு நாட்டு மன்னனின் ஆட்சித் திறமை என்பது அந்நாட்டின் செங்கோல் கலையாமல் ஆட்சி செய்யக் கூடிய மன்னனின் கையில் உள்ளது. தன் அரண்மனையைச் சுற்றி உரிய பாதுகாப்புகளையும், இடிக்க முடியாத சுவர்களையும் ஏற்படுத்த வேண்டும். நெல்லும் நீரும் மட்டுமே தம் மக்கள் உயிர் வாழத் தேவை என்று அரசன் கருதாமல் மக்களை இடர்களிலிருந்து காப்பவனே சிறந்த மன்னன் ஆவான். மிகப்பெரிய ஆட்சி அமைப்பைக் கொண்டு இருந்தாலும் பகை நாட்டவரின் பலத்தையும், பலவீனத்தையும் நன்கு அறிந்து எதிரியின் பலத்தை அழித்தால் மட்டுமே ஒரு அரசன் அரணைச் சிறப்பாகச் செயல்படுத்த இயலும். அரணமைத்தல் அதிகாரத்தில் நம் நாட்டின் விடுதலைக்காகச் செக்கிழுத்த செம்மல் அரண் எவ்வாறு அமைக்க வேண்டும் என்பதை மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

அரணை நன்கு அமைப்பது என்பது மிகவும் அரிய, பெரிய செயல் ஆகும். ஆகவே திறமை உடையவர்களால் மட்டுமே அமைக்கப்பட வேண்டும் என்பதை அரணெலா முரியரா லமைத்திடல் வேண்டும் (மெய்யறம்.784) குறிப்பிட்டுள்ளார். எவ்வளவு பெருமைகளை உடைய அரணாக இருந்தாலும், உள்ளே இருந்து செயல்படும் வீரர்கள் திறமையற்றவர்களாக இருந்தால் அந்த அரணால் பயன் இல்லை. வெளிப்புற வழிகளையும் சுரங்க வழிகளையும் திறமையுடன் பொருத்த வேண்டும் என்றும், அவை நினைத்த உடன் மூடவும் திறக்கவும் வேண்டும் என்றும் மெய்யறம் 788, 789 பாடலடிகளில் அந்நியர் படையெடுப்பிலிருந்து நம் நாட்டைப் பாதுகாப்பதற்கான சிறந்த வழியைக் கூறியுள்ளார். மேலும் வாய்ப்புகள் உள்ள இடத்தில் எல்லாம் கொல்லக் கூடிய கருவிகளை அமைக்க வேண்டும் என்பதை நெறியுள இடனெல்லாம் பொறிகளை நிரப்புக (மெய்யறம்.790)

படைக்கருவிகளின் முக்கியத்துவம்:

அழிக்கக் கூடிய படைக்கருவிகளைத் தொடர்ந்து உற்பத்தி செய்தல் வேண்டும் என்பதை உடைபடைக் கலமெலாந் தடைவரா தியற்றுக (மெய்யறம்.797) என்று உரைத்துள்ளார். இராணுவத் தளவாடப் பொருட்களை உற்பத்தி செய்வதும், சிறந்த படைக்கப்பல்களை நீரில்

நிறுத்த வேண்டும் என்பதை ‘நீரி லரும்படை நெடுங்கல நிறுத்துக’ (மெய்யறம்.792) என்னும் பாடலடிகளால் வ.உ.சி. குறிப்பிட்டுள்ளார்.

படை வீரர்களின் தேவைகளை நிறைவேற்றுதல்:

அரசரின் தலையாய கடமைகளுள் மிகவும் முக்கியமானது படை வீரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது ஆகும். அரணின் உட்புறத்தில் தேவையான உணவுப் பொருட்களை விளைவிக்க வேண்டும் என்பதை அரணுட் புறனெலா மாம்விளை வாக்குக (மெய்யறம். 796) என்ற வரிகளின் வாயிலாக மற்ற நாடுகளை உணவுப் பொருள்களுக்காக நம்பியிருக்கக் கூடாது என்று கூறியுள்ளார். அந்தந்தப் படை வீரர்கள் வசிப்பதற்கு ஏற்ற இல்லங்களை அரசர்கள் உருவாக்க வேண்டும் என்றும் வ.உ.சிதம்பரனார் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய மத்திய மற்றும் மாநில அரசுகள் முப்படை வீரர்களுக்குப் பல்வேறு சலுகைகளை வழங்குகின்றன, இதில் கல்வி உதவித்தொகை, சுயதொழில் கடன்கள், மருத்துவ உதவிகள், வீட்டுவசதி, வரிச் சலுகைகள், போர்க்கால உதவித்தொகை, ஈமச்சடங்கு நிதி, மற்றும் ‘காக்கும் கரங்கள்’ போன்ற சிறப்புத் திட்டங்கள் அடங்கும்; இவை அவர்களின் குடும்பங்களின் நலனுக்காகவும், மறுவாழ்விற்காகவும் வழங்கப்படுகின்றன.

மறத்திலும் அறம் போற்றியவர்கள் தமிழர்கள்:

சங்ககாலத் தமிழர்கள் போர்நெறிக்கு இலக்கணம் வகுத்துப் போர் முறையிலும் அறம் வளர்த்த புகழுக்குரியவர்கள் ஆவர். தன் துன்பம் பார்க்கும் போது பிறர் துன்பத்தையும் தன் துன்பம் போல் கருதி எதிரி நாட்டு மக்களையும், அரசர்களையும் நடத்திய தமிழர்களின் மரபு போற்றத்தக்கதாகும். சங்ககாலத்தில் போரிடும் நாடுகள் நேருக்கு நேர் நின்று அறநெறிப்படி போர் செய்தன. ஆனால் இக்காலத்தில் போர்நெறி இன்றி ஆகாயத்திலும், தரையிலும், கடலிலும் வரைமுறையின்றி மறைந்து இருந்து தாக்குகின்றனர். இக்காலத்தில் நடக்கும் போர் அறம் திறம்பிய போராக உள்ளது.

விண்ணை இடிக்கும் தலைஇம யம்எனும்

வெற்பை யிடிக்கும் திறலுடையார் - சமர்

பண்ணிக் கலிங்கத் திருள்கெடுத் ததமிழ்ப்

பார்த்திபர் நின்ற தமிழ்நாடு

என்று தமிழரது வீரத்தை மகாகவி பாரதியார் பாடியுள்ளார். தமிழர்கள் என்றும் படைக்கு முந்துவர். இன்று நம் நாட்டில் பல்லாயிரக்கணக்கான வீரர்கள் இராணுவத்தில் சேர்ந்து பாலைவனங்களிலும், காடுகளிலும், மலைகளிலும் வீரப்போர் புரிந்து நாட்டைக் காப்பதோடு தமிழ்நாட்டின் பழம்பெருமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றனர். மறத்திலும் அறம் போற்றியவர்கள் தமிழர்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. நம் தமிழகத்தில் போர்வீரர்கள் தங்கள் உயிரைத் துச்சமென எண்ணி

வீரமரணம் அடைந்தோருக்கு நடுகல் அமைத்துக் கடவுளாக வழிபட்டனர்.

முடிவுரை:

அரண் என்பது ஒரு நாட்டின் முதுகெலும்பு போன்றது. அது எதிரியிடமிருந்து மக்களைக் காப்பதுடன், நாட்டின் வலிமையைப் பறைசாற்றும் அடையாளமாகவும் திகழ்கிறது. தெய்வப்புலவர் திருவள்ளுவர் ‘படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண்’ (குறள். 381) எனத் தொடங்கும் குறட்பாவில் வலிமையான இராணுவம், நாட்டுப்பற்று மிக்க மக்கள், அளவற்ற செல்வம், நாட்டின் நலனைக் கருதிச் செயல்படும் அமைச்சர்கள், துன்பத்தில் உதவும் அண்டை நாடுகளின் நட்பு, அழிக்க முடியாத காவல் அரண் ஆகிய ஆறு அங்கங்களையும் உடைய அரசன் அரசர்களில் சிங்கத்தைப் போன்றவன் என்று கூறியுள்ளார். பகைவர் மீது படையெடுத்துச் செல்வதற்கும், பகைவரால் தாக்கப்படும் போது தற்காத்துக் கொள்வதற்கும் உதவக் கூடிய அரண் சிறப்பாக ஒரு நாட்டில் அமைந்தால் மட்டுமே நாட்டு மக்கள் மகிழ்ச்சியாக வாழ முடியும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இன்று நாட்டின் பாதுகாப்புக்கு இராணுவ நிலைகள், எல்லைப் பாதுகாப்பு போன்றவை அரணாக விளங்குகின்றன. இந்திய இராணுவம் (நிலப்படை), இந்தியக் கடற்படை, மற்றும் இந்திய விமானப்படை ஆகிய அனைத்தும் சிறப்பாகச் செயல்படுவதால் மட்டுமே நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் பாதுகாப்பாகவும், இன்பமாகவும் வாழ முடிகின்றது. வ.உ.சிதம்பரனார் சிறையில் இருந்த போது எழுதிய ‘மெய்யறம்’ என்ற நூலைப் பள்ளிப் பாடப்புத்தகத்தில் சேர்த்தால் எதிர்கால இந்தியா வளம் பெறும்.

துணைநூல் பட்டியல்:

1. திருக்குறள், திருவள்ளுவர், மூலமும் உரையும், 2001, ராதா முரளி (உரையாசிரியர்), கிரி டிரேடிங் ஏஜென்ஸி பிரைவேட் லிட்., 372/1, மாங்காடு பட்டூர் கூட்டு ரோடு, மாங்காடு, சென்னை-600 122.
2. மெய்யறம், வ.உ.சி.தம்பரம்பிள்ளை, வ.உ.சி.நூலகம், பதிப்பாளர் மற்றும் நூல் விற்பனையாளர்கள், ஜி-1, லாயிட்ஸ் காலணி, இராயப்பேட்டை, சென்னை - 600 014.
3. வ.உ.சி. வளர்த்த தமிழ், மா.ரா.அரசு, 2002, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சி.பி.டி. கேம்பஸ், சென்னை - 600 113.

96

திருக்குறளும், மெய்யறமும் உணர்த்தும் வாழ்வியல் அறங்கள்

சு. கோபாலகிருஷ்ணன்,
முதுகலைத் தமிழாசிரியர், அரசினர் மேல்நிலைப் பள்ளி, கருவாக்குறிச்சி, மன்னார்குடி.

ஆய்வுச் சுருக்கம்:

நாடு, மொழி, இனம், சமயம் ஆகியவற்றைக் கடந்து பொது நிலையில் அமைந்து, பல உரைகளைப் பெற்று உயர்ந்து நிற்கும் உலகம் போற்றும் உயரிய நூல் திருக்குறள் ஆகும். உலகப்பொதுமறையான திருக்குறளுக்கு வ.உ.சி. எழுதிய உரை அவரது ஆழ்ந்த இலக்கண அறிவை வெளிப்படுத்துகிறது. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அதன் நெறிமுறைகளை உலக அளவில் கொண்டு சென்றார். தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தைத் தமிழ் பேசும் சமூகத்திற்கு அப்பாற் பட்டவர்களுக்குக் கொண்டு சென்று உலக அரங்கில் திருக்குறளின் மதிப்பை உயர்த்துவதற்கும் மொழிபெயர்ப்பாளராக வ.உ.சி. உதவி செய்தார்.

திறவுச் சொற்கள்: ஒழுக்கம், அடக்கம், அளவினை உடைமை, வாய்மை, நட்பு

முன்னுரை:

விடுதலையின் மீது மிகப் பெருமளவு வேட்கை கொண்டு மக்களின் உள்ளத்தில் நீங்காத இடம் பிடித்த வ.உ.சிதம்பரனார் தமிழின் மீது சொல்லொணாப் பற்று கொண்டிருந்தார். பாமர மக்களுக்கும் நாட்டு நடப்புகளைப் புரிய வைக்கும் எளிய நடையிலான மேடைப் பேச்சுக் கலையால் நாட்டு மக்களிடையே விடுதலைப் போராட்ட உணர்வை விதைத்தார்.

இந்திய சுதந்திரப் போராட்ட வீரர், வழக்கறிஞர் மற்றும் கப்பலோட்டிய தமிழருமான வ.உ.சி.தம்பரம் பிள்ளை ஒரு மிகச் சிறந்த எழுத்தாளர் என்பதை வ.உ.சி. கண்ணனூர்ச் சிறையில் இருக்கும் பொழுது எழுதிய நூலான 'மெய்யறம்' என்ற நூல் சாட்சி ஆகும். 'மெய்யறம்' என்பது வ.உ. சிதம்பரம்பிள்ளை தனது ஒழுக்கம், உண்மை, அறம், தேசப்பற்று, ஆன்மீகம் ஆகியவற்றை ஒன்றிணைத்து எழுதிய நூல். இது நமக்கு உண்மை உணர்வு மற்றும் தர்ம வாழ்வு ஆகியவற்றைக் கற்றுத் தருகிறது. திருக்குறளும், மெய்யறமும் உணர்த்தும் வாழ்வியல் அறங்கள் ஓர் ஒப்பீடு குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

மெய்யறம்:

வ.உ.சி. இயற்றிய மெய்யறம் 125 அதிகாரங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரமும் பத்து பாடல்களைக் கொண்டுள்ளது. ஒரு பாடல்

என்பது ஒரு வரி மட்டுமே உடையது. ‘மெய்யறம்’ திருக்குறள் விளக்கும் நீதிக் கருத்துகளை மையமாக வைத்து எழுதப்பட்ட நூலாகும். இதில் ஐந்து பகுதிகள் உள்ளன. முதல் பகுதி மாணவர்களுக்கும், இரண்டாவது பகுதி இல்லறத்தாருக்கும், மூன்றாம் பகுதி ஒரு அரசன் எவ்வாறு இருக்க வேண்டும் என்றும், நான்காவது பகுதி நன்னெறி குறித்தும், கடைசி பகுதியில் உண்மையை அடைவது எப்படி என்றும் வ.உ.சி. விளக்குகிறார். அவர் விடுதலை பெற்ற பின்னர் அந்த நூல் வெளியிடப்பட்டது. மெய்யறம் என்னும் நூலில் ஒரு மனிதன் தன்னை அறிந்துகொள்வது எப்படி, தனது விதியைத் தீர்மானிப்பது எப்படி என்றும் வ.உ.சிதம்பரனார் விளக்குகிறார். மேலும், ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது, மனதை ஆள்வது, மனதில் தீய எண்ணங்களை விலக்கி நல்ல எண்ணங்களை உண்டாக்குவது எப்படி என்றும் விளக்குகிறார். வ.உ.சிதம்பரனார். டாக்டர் அரங்க.இராமலிங்கம் அவர்கள் ‘வ.உ.சி. கண்ட மெய்ப்பொருள்’ என்னும் நூலில் மெய்யறம் குறித்துக் கீழ்க்காணுமாறு கூறியுள்ளார்.

இந்நூலைத் திருக்குறள் பாடல்களின் பிழிவு என்று கூடக் கூறலாம். வள்ளுவர் ஏழு சீர்களில் ஒன்றே முக்கால் அடியில் குறளை இயற்றினார். ஆனால் வ.உ.சி. அவர்கள் ஒரே அடியில் பாடலைப் பாடியுள்ளார். மெய்யறத்தின் கருத்துகளைப் பார்க்கும் போது ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், திரிகடுகம், கலித்தொகை, தொல்காப்பியம், நன்னூல், புறப்பொருள்வெண்பாமாலை, தண்டலையார்சதகம் ஆகிய நூல்களின் கருத்துகளோடு ஒன்றிப்போவதைக் காண முடிகின்றது. (1)

திருக்குறளும் மெய்யறமும்:

தெய்வப்புலவர் திருவள்ளுவர் தமது குறட்பாக்களில் குறிப்பிட்டுள்ள அனைவருக்குமான அறங்களை மாணவரியலில் வ.உ.சி. அவர்கள் மாணவர்கள் இறைச்சி, மது, திருட்டு, புறம்கூறுதல், பொய், இரத்தல், பொறாமை, போதைப் பொருட்கள், பயனில சொல்லாமை போன்றவற்றை விலக்கும்படி மெய்யறத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும் நட்பு, ஒழுக்கம், நன்றி மறவாமை, நடுவுநிலைமை, அடக்கம், முயற்சி ஊக்கம் போன்றவற்றின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்துள்ளார்.

ஒழுக்கம் உயர்வைத் தரும்:

அறிவார்ந்த, பண்பார்ந்த சமூகத்தை உருவாக்கும் மனிதன் ஒழுக்கத்தோடு அற வாழ்க்கையை மேற்கொள்பவனாக இருத்தல் வேண்டும். கல்வி என்பது அறிவை மட்டும் வளர்ப்பதற்கு பயிற்சி அளிக்கக் கூடாது. உன்னதமான மனிதப் பண்புகளைப் பயிற்றுவிப்பதாகவும், ஒழுக்கம், வாய்மை போன்ற உயரிய பண்புகளை உருவாக்குவதாகவும் இருக்க வேண்டும்.

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. *(குறள் 137)*

அதாவது ஒருவர் ஒழுக்கத்தைப் பேணிப் பின்பற்றினால் அவர் மேன்மையை அடைவார். பெருமை கைகூடும். அதுவே ஒழுக்கத்தைப் பின்பற்றாமல் தீய செயல்களைச் செய்தால் அவர் இழிவுநிலையை அடைவார். கீழ்மக்கள் என்று கருதப்படுவார். ஒழுக்கத்தைப் பின்பற்றாத காரணத்திற்காக நீங்காத பழியையும் பெறுவார். 'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்' (குறள்.138) என்னும் குறட்பாவானது நல்லொழுக்கம் நல்ல வாழ்க்கைக்குக் காரணமாக இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். திருவள்ளுவரின் கருத்துகளை வலியுறுத்தும் விதமாக வ.உ.சி. அவர்கள் தமது மெய்யறத்தில் மாணவர்களின் கடமைகளுள் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளார். ஒழுக்கமுங் கல்வியு மொருங்குகைக் கொள்ளல் (மெய்யறம்.9) அதாவது ஒரே சமயத்தில் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்துக் கல்வியும் கற்க வேண்டும் என்று கப்பலோட்டிய தமிழர் கூறியுள்ளார். ஒழுக்கமுடையவர்களின் பண்புகளாகப் பெரியவர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பது (மெய்யறம்.263) என்றும், தன்னை நேசிப்பது போல் மற்றவர்களை நேசிப்பது ((மெய்யறம்.268) என்றும், பகைவர்களுடன் அன்புடனும், மகிழ்ச்சியுடனும் பழகுவார்கள் ((மெய்யறம்.269) என்றும் குறிப்பிட்டுள்ளார். நினைவுஞ் சொல்லும் வினையுமொன்றாக்கல். (மெய்யறம்.265) அதாவது ஒழுக்கமுடையவர்களது எண்ணம், சொல், செயல் இம்மூன்றும் ஒன்றாக விளங்கும் என்று வ.உ.சி. மெய்யறத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தால் வாழ்வில் உயர்ந்த நிலையை அடைய முடியும் என்பதைத் தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் எடுத்துரைக்கின்றன. திருவள்ளுவர் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக எண்ணவேண்டும் என்ற கருத்தை வ.உ.சி. அவர்கள் வழிமொழிந்துள்ளார். திருவள்ளுவரும், வ.உ.சி.யும் ஒழுக்கமுடைமை என்னும் அதிகாரத்தில் நல் ஒழுக்கத்தினால் கிட்டும் நன்மைகளை எடுத்துரைத்துள்ளனர்.

அடக்கம் அமரருள் உய்க்கும்:

அடக்கம் என்பது உங்களை நீங்களே தாழ்த்திக் கொள்வது அல்ல. உங்கள் பலம், பலவீனங்களை அறிந்து எதார்த்தமான கண்ணோட்டத்துடன் இருப்பதாகும். 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்னும் குறட்பாவின் வாயிலாக வள்ளுவப்பெருந்தகை அடக்கம் ஒருவனைத் தேவர் உலகில் (உயர்ந்த நிலையில்) வைக்கும் என்றும், அடங்காத தன்மை இருள் மிகுந்த நரகத்தில் (துன்பமயமான நிலையில்) தள்ளிவிடும் என்று கூறியுள்ளார். அடக்க மனம்புலத் தணுகா தடக்கல் (மெய்யறம்.251) அதாவது அடக்கம் என்பது மனத்தை ஐம்புலன்களில் இருந்தும் காத்தல் என்றும், அறிவினர்க் கென்று மடங்கி யொழுகல் (மெய்யறம்.252) அதாவது அடக்கம் என்பது அறிஞர்களுக்கு எப்பொழுதும் அடங்கி நடத்தல் ஆகும். அடக்கநன் னெறியி னடக்கச் செய்யும் (மெய்யறம். 253) அதாவது அடக்கம் நல்லொழுக்க நெறியில் நடக்கச் செய்யும். பலவகையான செல்வங்களையும் தரக்கூடிய அடக்கத்தை உடையவர் வீடுபேற்றை அடைவார் என்று வ.உ.சி.

அவர்கள் மெய்யறம் என்ற நூலில் தெளிவுபடுத்தியுள்ளார்.

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்:

உயர்ந்த எண்ணங்கள் நம்மை உயர்த்துவதோடு மட்டுமல்லாமல் நம்மைச் சார்ந்தவர்களையும், சுற்றியிருப்பவர்களையும் உயர்வடையச் செய்யும். ஊக்கமுடைமை அதிகாரத்தில்'உள்ளுவதெல்லாம்' எனத் தொடங்கும் 6ஆவது குறட்பாவில் நம் எண்ணங்கள் அனைத்தும் உயர்வானதாக இருக்க வேண்டும். அவ்வெண்ணம் கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதைக் கைவிடக் கூடாது என்று திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். உயர்ந்தவை எவையோ அவையெலாம் உள்ளுக. (மெய்யறம். 286) அதாவது உயர்ந்தவை அனைத்தையும் அடைய எண்ண வேண்டும். அவற்றினு ளொன்றை யடைந்திட விரும்புக(மெய்யறம்.287) அதாவதுஅவற்றினுள் ஒன்றை அடைய விரும்புதல் வேண்டும். நம்முடைய உயர்ந்த எண்ணங்களை அடைய வழிகளை ஆராய்ந்து, அதில் வரக்கூடிய இடையூறுகளை ஆராய்ந்து அந்த இடையூறுகளை நீக்கி நமது குறிக்கோளை அடைய உதவும் வழிகளைக் கண்டறிய வேண்டும் என்று வ.உ.சி. அவர்கள் மெய்யறத்தில் 288,289,290 ஆகிய வரிகளில் பதிவு செய்துள்ளார்.

முயற்சி திருவினை ஆக்கும்:

முயற்சி முடிவை நோக்கியதாக இருக்க வேண்டும். இந்த உலகத்தில் இயலாமல் தோற்றவர்களை விட முயலாமல் தோற்றவர்களே அதிகம். 'தெய்வத்தான் ஆகாதெனினும்' (குறள்.619) என்னும் குறட்பாவில் ஊழின் காரணமாக ஒரு செயல் முடியாமல் போனாலும் அவன் மேற்கொண்ட முயற்சியானது உடம்பு வருந்திய வருத்தத்திற்கு கூலியைத் தரும் என்று திருவள்ளுவர் உணர்த்தியுள்ளார். தெய்வப்புலவர் திருவள்ளுவரின் கருத்தை அடியொற்றி வ.உ.சி. எழுதிய மெய்யறத்தில் முயற்சி ஊழையும் முதுகிடச் செய்யும்.(மெய்யறம்.293) அதாவது முயற்சி, வெற்றிக்குத் தடையாக இருக்கும் விதியையும் தோல்வியடையச் செய்யும். மேலும் முயற்சி யுடையார் மூவுலகாள்வார். (மெய்யறம்.294) அதாவது விடாமுயற்சி உடையவர்கள் மூவுலகத்தையும் வென்றுவிடுவார்கள். பலவகைப் பெருமைகளைக் கொடுக்கும் இயல்புடைய முயற்சி குறித்துத் திருக்குறளின் ஆள்வினையுடைமை அதிகாரத்தை வழிமொழிந்து பலவகைக் கருத்துகளை முயற்சியுடைமை என்னும் அதிகாரத்தில் வ.உ.சி. பதிவு செய்துள்ளார்.

வாய்மை புகழ்நிலையை அளிக்கும்:

சமூக ஒருங்கிணைவில் அனைத்துச் செயல்களும் நம்பிக்கையின் அடிப்படையில் நிகழ்கின்றன. ஒருவரையொருவர் நம்புவதற்கு அனைவரிடமும் வாய்மையும், பொய் கூறா நல்லியல்புகளும் அமைந்திருத்தல் வேண்டும். பிறருக்குச் சிறிதும் தீமை தராத சொற்களைக் கூறுதல் வாய்மை எனத் திருவள்ளுவர் 291வது குறட்பாவில் குறிப்பிட்டுள்ளார். 'பொய்மையும் வாய்மையிடத்த' (குறள்.292) எனத்

தொடங்கும் அடுத்த குறட்பாவில் குற்றமற்ற நன்மையைத் தருமானால் பொய்யான சொற்களும் வாய்மை எனத் தகுதி பெறும் என்று வாய்மைக்கு இலக்கணம் வகுத்துள்ளார். இதே கருத்தை வ.உ.சி. அவர்கள் புரைதீர் நலந்தரின் பொய்ம்மையும் வாய்மையாம். (மெய்யறம்.164) அதாவது குற்றமில்லாத நன்மையைத் தரும் எனில் பொய்யும் உண்மைக்குச் சமம் ஆகும் என்று மெய்யறத்தில் பதிவு செய்துள்ளார். மேலும் தீமையைத் தருமெனின் வாய்மையும் பொய்ம்மையாம். (மெய்யறம்.163) அதாவது தீய விளைவைத் தரும் எனில் உண்மை என்பது பொய்க்குச் சமம் ஆகும்.

‘பொய்யாமை அன்ன புகழில்லை’ (குறள்.296) ஒருவனுக்குப் பொய் சொல்லாமல் வாழ்தலை விட சிறந்த புகழ்நிலை வேறெதுவும் இல்லை என்ற குறட்பாவினை அடியொற்றி பொய்ம்மை யொரீஇயவர் புகழ்வீ டடைவர். (மெய்யறம்.170) என்பதன் வாயிலாகப் பொய்யினை நீக்கியவர்கள் புகழுக்கு உரிய இடமான சொர்க்கத்தை அடைந்து இன்பம் அடைவார்கள் என்று வ.உ.சி. கூறியுள்ளார்.

நன்றி மறப்பது நன்றன்று:

ஒருவர் செய்த உதவியைப் பெற்றுக் கொண்டவர், அதைத் தம் வாழ்நாளில் ஒருபோதும் மறவாதிருக்க வேண்டும் என்ற உயரிய பண்பாட்டைச் செய்நன்றியறிதல் என்னும் அதிகாரத்தில் குறட்பாக்கள் வாயிலாக வள்ளுவப் பெருந்தகை உணர்த்தியுள்ளார். ‘பயன்தூக்கார் செய்த உதவி’ என்னும் குறட்பாவானது உதவி செய்தால் இந்த பயன் கிடைக்கும் என்று எதிர்பார்க்காமல் ஒருவன் செய்த உதவியின் பயனை ஆராய்ந்தால் அது கடலைவிடப் பெரியது என்று திருவள்ளுவர் உணர்த்தியுள்ளார்.

வ.உ.சி. அவர்கள் உயர்ந்தது கைம்மாறுகவாது உதவல் (மெய்யறம்.235) அதாவது உதவியில் உயர்ந்தது பதிலுக்கு எதையும் எதிர்பார்க்காமல் செய்யப்படும் உதவி ஆகும் என்று தமது மெய்யறத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் உதவியோர் மிகைசெயி னுடனதை மறத்தல் (மெய்யறம். 239) என்பதன் வாயிலாக உதவி செய்தவர்கள் ஏதேனும் குற்றங்களைச் செய்தால் உடனடியாக அதை மறந்துவிடுதல் வேண்டும் என்று ‘கொன்றன்ன இன்னா செயினும்’ என்னும் குறட்பாவின் கருத்தைப் பின்பற்றி எழுதியுள்ளார். செய்நன்றி உணர்வு மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் மிகவும் இன்றியமையாத பண்பு என்பதால் சான்றோர் பெருமக்கள் அனைவரும் தங்கள் இலக்கியங்களில் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

நலம் தரும் நட்பு:

தமிழர் தம் வாழ்வில் ‘நட்பு’ என்பது வாழ்வியல் அறமாகப் போற்றப்பட்டதை இலக்கியங்களின் வாயிலாக அறிய முடிகின்றது. மானிடத்தின் உயரிய பண்பான நட்பு குறித்து நட்பு, நட்பாராய்தல், பழைமை, தீநட்பு, கூடாநட்பு, சிற்றினம் சேராமை போன்ற அதிகாரங்

களின் வாயிலாகத் தெளிவுறத் திருவள்ளுவர் விளக்கம் அளித்துள்ளார். வ.உ.சி. அவர்கள் தீயினம் விலக்கல், நல்லினம் சேர்தல் ஆகிய அதிகாரங்களின் வாயிலாக மானுட வாழ்வில் ஒருவனது தீமையைக் குறைக்கவும், அவனை நேசிக்கவும், அவனோடு சரியான முறையில் நட்பு பாராட்டவும், முறையற்ற நட்பையும், கூடாநட்பையும் கண்டுணர்ந்து கொண்டு செயல்படவும் மனித குலத்திற்கு வழிகாட்டியுள்ளார். தீயினம் விலக்கி நல்லினஞ்சேர்தல் (மெய்யறம்.7) அதாவது தீயவர்களின் நட்பைத் தவிர்த்து நல்லவர்களுடன் சேரவேண்டும் என்று மாணவர்களின் கடமையாக கப்பலோட்டிய தமிழர் குறிப்பிட்டுள்ளார்.

அறிவுடைமை:

அழிவு வராமல் காக்கக் கூடிய அறிவானது மனத்தைச் சென்ற இடத்தில் செல்ல விடாமல் தீமையானதிலிருந்து நீக்கிக் காத்து நன்மையானதில் செலவிடுவது (குறள்.422) என்றும், தான் சொல்லுவனவற்றை எளிமையாகப் புரியுமாறு சொல்லி, தான் பிறரிடம் கேட்பனவற்றின் நுட்பமான பொருளையும் ஆராய்ந்து அறிதல் (குறள்.424) என்றும், உலகத்தில் உயர்ந்தவர்களை நட்பாக்கிக் கொள்வது சிறந்த அறிவாகும் என்று வள்ளுவப்பெருந்தகை கூறியுள்ளார்.

அழிவிலிருந்து பாதுகாக்கும் தன்மையுடைய அறிவானது அறிவிற்கறிகுறி யாவன செய்தல் (மெய்யறம்.276) அதாவது அறிவு டைமை என்பது நன்மை பயக்கும் செயல்களைச் செய்தல் ஆகும். மேலும் எளியவாச் செலவுரைத் தரியவை உணர்தல் (மெய்யறம்.277) என்பதன் வாயிலாக அறிவு என்பது கேட்போர் உள்ளத்தில் பதியும்படி எளிமையாகச் சொல்வதும் மற்றவர்கள் கூறும் எளிதில் அறியமுடியாத பொருளைப் புரிந்து கொள்வதும் ஆகும் என்று வ.உ.சி. கூறியுள்ளார். உலகினோ டென்று மொத்து நடத்தல் (மெய்யறம்.279) அதாவது அறிவுடைமை என்பது உலகில் உயர்ந்தவர்கள் எப்படி வாழ்கிறார்களோ அதுபோல அவர்களைப் பின்பற்றி வாழ்வது ஆகும்.

எதிர்காலத்தில் நிகழப்போவதை முன்பே அறிபவர் அறிவுடையார் என்னும் கருத்தைத் திருவள்ளுவர் 427 மற்றும் 429ஆவது குறட்பாக்களில் பதிவு செய்துள்ளார். திருவள்ளுவரின் இக்கருத்தை வ.உ.சி., எதிரதாக் காத்தெவ் வின்பமு மடைதல் (மெய்யறம். 280) அதாவது பின் வரப்போவதை முன்பே அறிந்து, தன்னைக் காத்து எல்லா விதமான இன்பமும் அனுபவித்தல் அறிவுடைமை ஆகும் என்று மெய்யறத்தில் கூறியுள்ளார்.

முடிவுரை:

வ.உ.சி. அவர்கள் மாணவரியலில் 11. கொலை விலக்கல், 12. புலால் விலக்கல், 13. களவு விலக்கல், 14. சூது விலக்கல், 15. இரவு விலக்கல், 16. மயக்குவ விலக்கல், 17. பொய்ம்மை விலக்கல், 18. புறஞ்சொல்லல் விலக்கல், 19. பயனில் சொல் விலக்கல் போன்றவற்றை மாணவர்கள் நீக்கினால் வாழ்வில் வெற்றி பெற வழியாகத் திருக்குறளின் அடியொற்றி

மிகச் சிறப்பாக இயற்றியுள்ளார். மெய்யறத்தின் ஐந்து பகுதிகளும் மனித வாழ்வைச் செம்மையுறச் செய்யும் அருமருந்து என்றால் மிகையாகாது. எதிர்காலத் தூண்களாகிய மாணவர்கள் மெய்யறம் பயில்வது பல அற இலக்கியங்கள் பயின்றதற்குச் சமம் ஆகும். அதனால் தான் கோவை வ.உ.சி. மைதானத்தில் ரூ.40 லட்சத்தில் வ.உ.சி.தம்பரனாருக்கு 7 அடி உயரத்தில் வெண்கல முழு உருவச் சிலை அமைக்கப்பட்ட சிலைத் திறப்பு விழாவில் அவரது பேத்தி மரகத மீனாட்சிராஜா அவர்கள் 'வ.உ.சிதம்பரனார் சிறையில் இருந்த போது எழுதிய 'மெய்யறம்' என்ற நூலைப் பள்ளி பாடப்புத்தகத்தில் சேர்க்க வேண்டும்' என்று தமிழக அரசை வலியுறுத்தியுள்ளார். (2)

திருக்குறளை அடியொற்றிக் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் எழுதிய மெய்யறம் என்னும் நூலில் மனித வாழ்வை வளப்படுத்தும் வாழ்வியல் அறங்கள் கடலளவு நிறைந்துள்ளன. நான் அளித்துள்ள கட்டுரை கையளவே ஆகும்.

துணைநூற் பட்டியல்:

1. மெய்யறம் தினமணி செய்தி, https://www.dailythanthi.com/News/State/the-book-meiyaram
2. மெய்யறம், வ.உ.சி.தம்பரம்பிள்ளை, வ.உ.சி.நூலகம், பதிப்பாளர் மற்றும் நூல் விற்பனையாளர்கள், ஜி-1, லாயிட்ஸ் காலணி, இராயப்பேட்டை, சென்னை - 600 014.
3. வ.உ.சி. வளர்த்த தமிழ், மா.ரா.அரசு, 2002, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சி.பி.டி. கேம்பஸ், சென்னை - 600 113.
4. ராதா முரளி, திருக்குறள் மூலமும் உரையும், 13ஆம் மறுபதிப்பு, 2018, கிரி டிரேடிங் ஏஜென்ஸி பிரைவேட் லிமிடெட், சென்னை - 600 122.

97

தமிழர் அறவியலும் வ.உ.சிதம்பரனார் மெய்யறிவும்

சி. விஜய்,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை.

முன்னுரை:

இருபதாம் நூற்றாண்டில் உலகளவிலும், இந்தியாவிலும், தமிழகத்திலும் மனித வாழ்க்கையிலும் ஏற்பட்ட மாற்றங்களுக்கும் மெய்யியலுக்குமான தொடர்பு குறித்த ஆய்வுகள் இந்தியப் பண்பாட்டின் உயரிய விழுமியங்களாகத் தமிழர் அறக் கோட்பாடுகளை முன்னிறுத்துகின்றன. மெய்யியல் என்பது, 'Philosophy' என்னும் ஆங்கிலச் சொல் 'பிலாஸ்' 'சோபியா' என்னும் இரு கிரேக்கச் சொற்களாலானது. இதன் தமிழாக்கம் 'பேரறிவுக் காதல்' என்பதாகும். 'ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள ஆளப்படும் கரணங்கள் நான்கும் சிந்தையே ஆக' (பெரியபுராணம் பாடல்: 252) என்ற பெரியபுராணச் சொற்றொடரில் பேரறிவு என்னும் சொல் ஏறத்தாழ இதே பொருளைத் தாங்கி வந்துள்ளது. Philosophy எனும் சொல் தத்துவம் என்று தமிழில் மொழியாக்கம் செய்யப்படுகிறது.

தமிழர் அறவியல்:

மனிதன் தன்னையும் தன்னைச் சூழவுள்ள உலகத்தையும் புரிந்துகொள்ளுதலும் மேம்படுத்துவதுமான முயற்சிகளால் புறவுலகு குறித்த முடிவுகளை எட்டுகிறான். மெய்யியல் என்பது மனிதப் புரிதல்கள் மற்றும் அறிவுச் செயல்பாட்டின் உயரிய நிலையாகும். நெறிகள் அறிவுச் செயல்பாட்டின் கூறாக அணுகப்பட்ட உண்மைப் பொருளாய் மெய்யியல் அறியப்படுகிறது. பண்பட்ட எந்த ஒரு மக்களினமும் தனக்கான வாழ்வொழுக்கங்களை வடிவமைத்துக் கொள்ளும். அறம் எனப்படுவது வாழ்வியல் நெறிகளின் தொகுப்பு ஆகும். மெய்யியலின் நிகழ்தகவாக அமைகின்ற ஒழுக்கங்களைத் தமிழ் மொழி அறம் என்றழைக்கிறது.

மனித வாழ்வு கால மாற்றங்களுக்கு உட்பட்டு மாறுதலுக்கு உள்ளாகின்றதன்மையது. மனிதவாழ்வறங்களைமையமிட்டஅறவியலும் அதன்பாலான மெய்யறிவும் மாறுதலுக்கு உள்ளாதல் இயல்பானதே. பிற இனக்குழுக்களின் ஆளுகையும் பிற பண்பாட்டுக் கலப்புகளும் ஒரு மக்கள் குழுவின் அறவியலில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்துவதுண்டு. தமிழர் பண்பாட்டு வரலாறும் அத்தன்மையிலானதே. வேற்றரசர் ஆளுகைகளின் கீழ் தமிழர் நிலம் கீழடங்கியிருந்த காலங்களில் தமிழர்தம் உயரிய அறங்களை இழந்தனர். மாறாக, தமிழர் வாழ்வியலுக்கு சற்றும் பொருத்தமற்ற வழக்குகள் வாழ்வியலில் புகுந்தன. காலப்போக்கில் தமிழரும் அவற்றை ஏற்பாராயினர். ஆயினும் தமிழறிஞர் பெருமக்கள்

காலந்தோறும் அறங்கள் குறித்த வழிகாட்டுதல்களை மக்களுக்கு தமது இலக்கியங்கள் வழியாக எடுத்துரைத்து வந்துள்ளனர். ‘மனத்துக்கண் மாசிலன் ஆதல்...’ (குறள் 34) ‘அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்.’ (குறள் 35) என திருவள்ளுவரும், ‘அறமெனப்படுவது… மன்னுயிர்க்கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் இல்லது கண்டதில்...’ (மணிபல்லவம் அடைந்த காதை, பாடல்: 228) என மணிமேகலையும் கைக்கொள் அறங்களை வலியுறுத்தி நின்றன. அதேவேளையில், காலத்துக்கு ஒவ்வாத கள்ளுண்ணாமை உள்ளிட்ட வாழ்வியல்பு நடைமுறைகளை கைநெகிழவும் வலியுறுத்தி நின்றமையும் காண்க. ‘மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும் கயக்கறு மாக்கள் கடிந்தனர்… உண்மையின் நல்லறஞ் செய்தோர் நல்லுலகு அடைதலும் அல்லறஞ் செய்தோர் அருநரகு அடைதலும் உண்டென உணர்தலின்…’ (ஆதிரை பிச்சையிட்ட காதை, பாடல்: 84) ‘இளமையும் நில்லா யாக்கையும் நில்லா வளவிய வான்பெரும் செல்வமும் நில்லா புத்தேள் உலகம் புதல்வரும் தாரார் மிக்க அறமே விழுத்துணையாவது.’ (சிறைசெய் காதை, பாடல்: 228) என மணிமேகலை உணர்த்துதலும் காலமாற்றத்தையும் அறவியல் மாறுபாடுகளையும் குறிப்பனவாகும். இவ்வகை இலக்கிய முன்வைப்புகளினூடாக பயன்படும் மரபுகளையும் பயன்படா மரபுகளையும் நாம் காலந்தோறும் இனங்காண முடிந்துள்ளது. அவ்வகையில், தமிழ்ப் பண்பாட்டு அறங்களை கைக்கொள் அறங்கள், கைநெகிழ் அறங்கள் என இரு வகையினதாய் கொள்ளலாம்.

இருபதாம் நூற்றாண்டு காலனிய ஆளுகைக்குள் நகரங்கள், தொழில், வணிகம், மொழி, அரசியல், பண்பாடு, கலை, இலக்கியம் முதலிய பல்வேறு கூறுகளிலும் மேலைத்தாக்கங்கள் நிறைந்ததாக மனிதவாழ்வு அமைந்தது. காலனிய ஆதிக்கக் காலத்தில் தமிழர் அறங்களை தமிழறிஞரான வ.உ.சி.தம்பரனாரின் மெய்யறிவு எனும் படைப்பு வழியாக காலத்தின் தேவையை ஒட்டிய தமிழர் அறங்களை வலியுறுத்துகிறார். கைக்கொள் அறங்களை வலியுறுத்துகின்ற அளவுக்கு கைநெகிழ் அறங்களை வஉசி அவர்கள் குறிப்பிடவில்லை.

வ.உ.சிதம்பரனார் முன்வைக்கும் அறவியல்:

ஒரு பண்பட்ட சமூகமானது மொழி, இனம், நிலப்பரப்பு, பொருளியல், அரசியல், வரலாறு என பன்முகப்பட்டது. தன்னையும் சூழலையும் புரிந்து கொள்ளாமலும் காலத்துக்கேற்ப மாற்றியமைக்காமலும் ஒரு மக்கள் குழுவால் அம்மண்ணில் நிலைத்திருக்க முடியாது. அகச்சூழலை மாற்றும் போதே மனிதன் புறச்சூழலையும் தன்வயப்படுத்தி மாற்றிக் கொள்கிறான். காலனியத்தின் கொடுங்கோன்மை முறைகளால் மாறிவரும் தமிழர் வாழ்வியலில் அகச்சூழலை மாற்றிக் கொள்வதன் மூலமும் தமிழர் தம் அறவாழ்வையும் புறச்சூழலையும் மாற்றியமைத்திடவும், மேம்படுத் திடவும் முடியும் என்பதை முன்கணித்துக்கொண்ட வ.உ.சி. மெய்யறிவு எனும் நூலின் வழியாக அதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

வடக்கிந்தியச் சிந்தனை மரபின் மெய்யியல், பெரும்பான்மையாக மனிதன் தன் வாழ்விற்கான அர்த்தத்தைத் தேடும் முறையில்தான்

தன்னோடு தொடர்புடையதாகவே இருந்தன. இறைவன், ஆன்மா, மேலுலகம், பாவம், புண்ணியம், நன்மை, தீமை, வினை, விதி, முற்பிறப்பு, பிற்பிறப்பு, தற்காலிகம், நிரந்தரம், நடப்பியல், கற்பனை என்பவற்றை உள்ளடக்கிய அறங்களையும் கருதுகோள்களையும் கொண்டிருந்தன. அவை எக்காலத்தும் மாறாதவை எனும் மாறாநிலை வாதங்களுடனான அறங்களாகவும் அறிவு நடப்பியலுக்கு விலகியும் அமைந்திருந்தன. தமிழர் அறங்கள் வாழ்க்கை நடப்புச் சாத்தியங்களை மையமிட்டவை. ஆயினும், தமிழர் ஆன்மத் தேடலுக்கு அப்பாற்பட்டவரில்லை. தமிழரின் அறங்கள் மனிதரை மையமிட்டதாக ஆன்மத் தேடலை அணுகின. அகத்தை புறவயப்பட்ட நிலையில் தேடும் தமிழர்களின் தேடல் இன்றளவும் தொடர்கிறது. 'அகமும், புறமும் ஒன்றோடொன்று உறவுடையதாகவும் ஊடுருவியதாகவும் இருப்பவையே' என்கிறார் உளவியலாளர் சிக்மண்ட் பிராய்டு. நாட்டு விடுதலைக்காக களமிறங்கிட ஒருங்கிணைந்த விடுதலை முனைப்பு தேவை என்பதையும், தமிழரின் அகத் தேடல்களில் சுதந்திர உணர்வு மங்கிடக் கூடாது என்பதையும் விளக்கும் முகமாக நூலாக்கம் நடைபெற்றதை முன்னுரையில் வ.உ.சி. குறிப்பிடுகிறார். தமிழரின் உயரிய அறங்களையும் பண்பாட்டுச் செழுமையையும் மீளாக்கம் செய்வதன் வழியாக விடுதலை உணர்வினைப் பெற்றிட முடியும் என்கிற நோக்குடன் தமிழர் அறங்களே மெய்யறிவாக 1. தன்னையறிதல், 2. விதியியல் அறிதல், 3. உடம்பை வளர்த்தல், 4. மனத்தையாள்தல், 5. தன்னிலையில் நிற்றல், 6. மறங்களைதல், 7. அறம் புரிதல், 8. தவஞ்செய்தல், 9. மெய்யுணர்தல், 10. மெய்ந்நிலையடைதல் எனப் பன்முகத் தன்மையோடு விரிகின்றன.

அறத்திற்கு செயற்களமாவது வாழ்வென்றால் வாழ்வின் அடிப்படை யாவது தன் அகம் ஆகும். தன் அகத்தினை உணர்ந்து அதனை நெறிப் படுத்துதலே ஆன்மீகத்தின் நெறியமைப்புமாகும். உலகின் ஒப்பற்ற அறநெறிகள் யாவும் தன்னை அறிதலை முதன்மைப்படுத்துகின்றன. சிறப்பு கருதியே வ.உ.சி.யும் தன்னை அறிதலுக்கு தம் நூல் நிரலில் முதலிடம் அளித்துள்ளார். 'தன்னையறிதல் தலைப்படுத்தும் கல்வியென முன்னையவர் நன்குமொழிந்திருந்தும் என்னைகொல் தன்னையறியாது சார்ந்தபல கண்டறியப் பின்னையவ நுன்னல் பிடித்து.' (மெய்யறிவு, பக்:1) உலகத்துப் பொருள்களின் இயல்புகளை அறியும் முன் ஒருவன் தன்னியல்புகளை ஆய்ந்தறிந்து கொள்ளல் வேண்டுமெனும் அறிவுறுத்தலோடு தொடங்கும் வ.உ.சி., மனிதன் தன் மனத்தைத் தீயநெறிகளிலிருந்து விடுவித்து, அறநெறியில் இணைத்து, இங்கு அறத்தைச் செய்து, அறிவுறலாம் என வழிகாட்டுகிறார்.

தன்னுணர்தலின் தொடர்ச்சியாக தன் சுற்றமும் சுற்றத்து வரைவுகளும் அறிதல் நிகழ்ந்திட வேண்டும். சுற்றத்தின் இயல்புகளை நன்குணரும் ஒருவரால் நிகழ்காலத்தை மதிப்பீடு செய்யவும் எதிர்காலத்தை வடிவமைக்கவும் முடியும். நல்லறத்தின்பால் நின்று சுற்றத்துடன் பொருந்துதலும், கெடு வாய்ப்புகளை உள்ளடக்கியதும் காலத்திற்கு ஒவ்வாததுமான மரபுகளைக் களைய முயலுதலும் பண்பட்ட சமூகத்தின்

கூறாகும். அவ்வினைக்கு அடிப்படையாவது சுற்றமும் சுற்றத்து விதியும் அறிதலாகும். இதனைக் கருதி விதியறிதல் விளம்பியுள்ளார் வ.உ.சிதம்பரனார். 'ஊழ்ப்படியா மென்னி யர்ந்தோர்பான் மோக்கமொடு கீழ்ப்படியு மேற்படியுங் கேட்டலெவன்?' (மெய்யறிவு, பக்:12) என வினவும் வ.உ.சி., விதிப்படியே யாவும் நடக்குமென்றால் நரகம், சுவர்க்கம் இவற்றைப்பற்றியும் இவற்றின் ஏதுக்களைப்பற்றியும் விசாரணை செய்யவேண்டியது இல்லை. புண்ணிய பாவங்களைச் செய்யவேண்டியதும் இல்லையென புரட்சிகரமாகவும் முற்போக்குத் தன்மையுடனும் வாதிடுகிறார்.

'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்', 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்கிற தமிழ் இலக்கிய முன்மொழிவுகளின் தொடர்ச்சியாகவே உயிர்க்கு வித்தாகவும், செயலுக்கு இடமாகவும் விளங்கும் உடம்பைப் பேணுதல் குறித்த விளக்கமாக 'உடம்பை வளர்த்தல்' எனும் பகுதியை அமைக்கிறார். 'வைகறையில் கண்விழித்து மாசொழித்து மெய்யறங்கள் கைவருதற்குஈசனருள் கணிப்பின் மையல் அறுத்தற்காநூன காய்ந்திளைய மெய்யிற் செறுத்தற்கா நற்சிலம்பம் செய்.' (மெய்யறிவு, பக்:26) அதிகாலை விழித்தலும், கழிவு கழித்து, இறையருள் வேண்டலும், அளவாய் உண்டலுமாய் வ.உ.சி. தரும் அறிவுறுத்தல்கள் எக்காலத்தும் மக்களுக்குப் பொருத்தமுடைய ஒழுக்கமாகும். இப்பகுதியில் வ.உ.சி. உடல்வளம் பேணல் குறித்து விளக்கியுள்ள அனைத்தும் இக்காலத்து இளந்தலைமுறைக்கு பயனுடையதாக உள்ளன.

மனித மனம் இயல்பிலேயே மயக்கமுடையது. சூழலுக்கேற்ப மாறும் தன்மையுடையது. கட்டுப்படுத்தக் கூடியது தான் என்றாலும் கட்டற்றச் சுதந்திரத்தைக் கோருவது. பலமும் பலவீனமும் கொண்ட மனித மனத்தை ஆளுகை செய்திட புறக் காரணிகளால் ஏற்படுத்தப்படும் அகத்தூண்டலையே நாம் கடவுள் செயல்பாடாக எண்ணுகிறோம். இத்தன்மையினை முழுதுமறிந்த அறிவினராய் வ.உ.சி. மனத்தை ஆள்தல் குறித்து அறிவுறுத்துகிறார். 'பொறிவாயில் ஐந்தும் புகலரிய தீய செறிவாயில் இவ்வைந்தில் சென்றிங்கு அறிவாய் மறனெல்லாம் ஈட்டி வலனெல்லாம் போக்கி அறனெல்லாம் தேய்க்கும் அகம்.' (மெய்யறிவு, பக்:36) என்று சுட்டிக்காட்டும் வ.உ.சி., மனத்தை ஒருவன் ஆளுகை செய்யாவிடில், கட்டுப்படுத்தாவிடில் அவன் தன்னுடைய ஏனைய அறங்களையும் இழக்க நேரிடுமென எச்சரிக்கிறார்.

தன்னை அறிந்து, சுற்றம் அறிந்த ஒருவன் மனத்தைக் கட்டுக்குள் நிறுத்தி தன்னிலையில் தன்னை நிலை நிறுத்துதலின் முக்கியத்துவத்தை விளக்குகிறார். 'மனந்தான் உனக்கு வசப்பட்டு அடங்கும் தினந்தான் உனக்கு நலன் சேர்நாள். தனம்தான் தன்னரசு தானென்று எங்கு நிற்பான் திறந்தான் நிலவும் உனைச்சேர்ந்து.' (மெய்யறிவு, பக்:41) மனம் தன்வசப்பட்டு தனக்கு அடங்கும் நாளே நன்மைகள் சேரும் நாளாகும். எல்லா செல்வங்களும், தருமங்களும், அரசுகளும், கடவுளது ஆற்றலும் கிடைக்கப்பெற மனத்தை ஆளுகை செய்வது இன்றியமையாததாகும் என்பதை வலியுறுத்துகிறார்.

அறத்தின் கேடாக அமையும் வன்முறை எண்ணங்களைக் களைத லும், மனிதப் பண்பினை வலியுறுத்துதலும் வ.உ.சி. எழுத்தின் மையப் புள்ளிகளாக உள்ளன. அடிப்படையில் வ.உ.சி. ஒரு சைவப்பற்றாளர் என்பதாலும், காந்தியின் அகிம்சை அறநெறியில் நாட்டமுடையவராய் மனம் செலுத்தியவராகையால் மறம் களைதல் என்பது சற்றே தீவிரமாக வலியுறுத்தப்பட்டுள்ளதை உணர முடிகிறது. எவ்வகை முன்வைப்புகளும் வழிகாட்டுதலும் அறத்தை இலக்காகக் கருதியே அமைக்கப்பட்டுள்ள இந்நூலாக்கத்தின் இறுதிப் பகுதிகள் அறம் புரிதல், துயர்மிகு வாழ்வின் தொடர்பறுக்க தவஞ்செய்தல், ஆழ்ந்த கல்வியும், தெளிந்த ஞானமும் பெற்று மெய்யுணர்தல், மெய்யுணர்ந்த மனித மனத்தை நல்லறங்களின் வினைப்பயனாய் மெய்ந்நிலை அடையச் செய்தல் என வாழ்வின் இலக்குகளை அறங்களோடும் மெய்யியலோடும் இணைத்துள்ளார் சிதம்பரனார்.

முடிவுரை:

வ.உ.சி.தம்பரனாரின் மெய்யறிவு நூலின் வழியாக நிகழ்த்தப் பெற்றுள்ள தமிழர் அறவியல் குறித்த உரையாடல்களின் வழியாக ஊடுபாய்கையில் பல்வேறு வ.உ.சி. குறித்த புதிய கருத்துருக்கள் காணக்கிடைக்கின்றன. வ.உ.சி. படைப்புகள் மெய்யறிவு என்பது வாழ்க்கைச் சிக்கல்களை சமூகச் சிக்கல்களின் ஒருபாகமாக நிற்கின்ற மையை உறுதி செய்கின்றன. தமிழர் மெய்யறிவு அறங்களால் கட்ட மைக்கப்பட்டவை என்பதையும், அவை நடப்புகளுக்கும் சாத்தியங் களுக்கும் உட்பட்டவை என்பதையும் உறுதிப்படுத்துகின்றன. இந்திய மெய்யியல் மரபில் தமிழ் மெய்யியல் தனித்து அறியப்படுதலுக்கான உட்காரணிகளாக அறவியல் கோட்பாடுகளும், காலத்துக்கேற்ற மறுபரிசீலனையுமே ஆகும். அகக் காரணிகளுடன் இணைத்தறியப்படும் சமூக உளவியலும் தமிழர் அறவியலின் முக்கியப் பகுதியாகும். நாட்டு விடுதலைக்கு தீவிரமாக களத்தில் நின்ற வ.உ.சி. இலக்கியப் புலத்திலும் வீச்சுமிக்க பங்களிப்பினைச் செய்துள்ளதுடன், தன்னை ஒரு பொதுமை விரும்பியாகவும், முற்போக்குச் சிந்தனையாளராகவும் நிலைநிறுத்தியுள்ளார். சமூகப்பணி ஆற்றுவோருக்கான ஒழுக்க வாழ்வுக் கான கையேடாக மெய்யறிவு நூலையும், முன்மாதிரியாக கப்பலோட்டிய தமிழர், இலக்கியக் கோமான் வ.உ.சி.தம்பரனாரையும் நம் தலைமுறை கொண்டிலங்க இந்நூல் பெருவழித் திறப்பினை அளித்துள்ளது.

துணைநின்றவை:

1. வ.உ.சி.தம்பரம் பிள்ளை, மெய்யறிவு, முதற்பதிப்பு 1926, எஸ்.வி.என் பிரஸ், சென்னை. https://tamildigitallibrary.in/voc/01_books/01%20Books%20of%20VOC/01%20Written/TVA_ANT_0019.pdf
2. ராகுல் சாங்கிருத்தியாயன், இந்தியத் தத்துவ இயல், 1989, என்.சி.பி.எச், சென்னை.

98

வ.உ.சி. யின் படைப்புகளில் அறம்

முனைவர் இரா. மூர்த்தி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

ஆய்வுச்சுருக்கம்:

மனிதன் மெய்யறிவு, கலையுணர்வு மிக்க அறத்தையுடையவன். இல்லறமாண்போடு வசிப்பவன். ஒழுக்க நெறியில் நின்று நடப்பதுடன், அது சிதைவுறாமல், பழிநேரிடாமலிருக்கச் சமுதாயத்தைச் சார்ந்து வாழ்பவன். அதனால் தனக்குத்தானே வாழ்வில் அறத்தை உருவாக்கிக் கொண்டு வாழ்ந்து வருகின்றவன். இது தமிழனுடைய மொழி, இனம், பண்பாடு, விடுதலை ஆகியனவற்றின் ஆக்கமாகும்; அத்தகைய மாண்பு வ.உ.சி. யின் சிந்தனையோட்டத்திலும் பரவிக் கிடந்ததைத் தமிழ்கூறும் நல்லுலகம் அறிந்த ஒன்று. அதன் அறம் சார்ந்த வெளிப்பாடே இக்கட்டுரையின் மையமாகும்.

திறவுச் சொற்கள்: அறநெறி – புலனடக்கம் – துஞ்சிடோம் – சமூகப்பிணைப்பு – மெய்யறிவு - அறத்தின் மாண்பு.

முன்னுரை:

மனிதனை சமுதாயத்தில் அறவியலானாக உருவாக்குவதற்காக மனிதனுக்குள்ளே ஏற்படுத்தப்பட்ட செயல்திட்ட நடைமுறையாகும். இந்நடைமுறையில் தொடர்ந்து பயணிக்கப்படும்போது வாழ்வானது பெருமையடைகிறது. அறமும் பொதுமைத் தளத்தில் நின்று வேறுபாடு இல்லாத வாழ்வாகத் திகழ்கிறது. அத்தகைய வாழ்வை அறமும், அன்பும் கலந்து அதிகாரத்திற்கு எதிராகக் கலகம் செய்து ஆன்மநெறியோடு தமிழறத்தை புகட்டிச் சென்றவர் வ.உ.சிதம்பரனார். இதற்கு உந்துதலாக இருப்பது ஒழுக்கமாகும்.

ஒழுக்கம் என்பது ஒரு நெறியை இடையறாது கடைப்பிடித்தலாகும். ‘இடையறாது நீர் ஒழுகுவதை ஒழுக்கு என்று கூறுவதைப்போல வாழ்க்கையில் உயர்ந்தவையெனக் கருதப்படும் நெறிமுறைகளை எக்காலத்தும், எவ்விடத்தும் இடையறாது மேற்கொண்டு ஒழுகுவதே ஒழுக்கமென்று’ மு.வரதராசனார் கூறுவது திண்ணமாகும். இத்தகைய ஒழுக்கத்தையும் அதற்கு அடிநாதமாக விளங்கும் கல்வி, அறத்தின் மாண்பு, விடுதலையறம், இல்லறம், எனப் பொதுமைப்படுத்தி வாழ்ந்த வ.உ.சி. யின் வாழ்வோடு கலந்த அறப்பணி அமைந்துள்ளது. அதனைப் பற்றி ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

அறம் - அறத்தின் விதி – பொது விளக்கம்

மனித வாழ்வின் தலையாய கடமையாகத் திகழ்வது அறமாகும். வள்ளுவரோ 'மனத்துக்கண் மாசிலனாதல் அறம்' என்கிறார். தொல்காப்பியம், சங்கப்பாடல்கள் அறத்திற்கான வழியை வகுக்கும்போது,

'அந்நிலை மருங்கின் அறமுத லாகிய

மும்முதற் பொருட்கும் உரிய வென்ப' (தொல்.பொருள்.செல்.411)

என்றும்,

'அறனும் பொருளு மின்பமும் மூன்றும்

ஆற்றும் பெருமநின் செல்வம்' (புறம்.28.15 - 18)

என்றும் முப்பொருட்களை மட்டும் கொண்டு செல்வத்தோடு அதனை நிறைவு செய்கிறது. ஆனால், வ.உ.சி. மனிதனுக்கு அடித்தளமாகத் திகழும் அறமாவது, 'அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் பயனே' (மெய்யறம். பாயிரம்.5) என்று கூறுகிறார். அறத்தை மெய்யறம் - பொய் யறம் என்று வகுப்பதோடு அதற்கான விதியையும் வகுத்துச் செல்கிறார்.

'மெய்யறம் பொருளோடு மெய்யருள் சேர்க்கும்

பொய்யறம் புணர்ந்ததாற் புரிந்தனன்' (மெய்யறம்.பாயிரம். ப.6)

மெய்யறமும் பொய்யறமும் வினையின் விளைவே விதியே வந்துறும் என்கிறார். அவ்வாறு வரும்போது நன்மை - தீமை என்று இருவழிகளில் அவை பயணிக்கும். தீவினையானது தீய வழிகளில் சேர்பவருக்குத் துன்பமாகவும், நல்வினையானது நல்ல வழியில் சேர்ப்பவருக்கு இன்பமாகவும் நாளும் வரும் என்று அறத்தின் பயனை வகுத்துள்ளதை அறியமுடிகிறது.

மரணமில்லாதது அறம்:

மனிதன் என்பவன் தனியானவன் அல்லன். அவன் சமூகமென்னும் கடலின் ஒரு துளி. அவனுக்குள்ளே சமூகம் சமூகத்திற்குள்ளே அவன் என்று மெய்யறமாகத் திகழ்ந்தவர் வ.உ.சி.தம்பரனார். அதே நேரத்தில் ஆங்கிலேய அதிகாரத்தினை துடைத்தெறிய வேண்டும் என்று எதிர்வினை வாழ்வையும் வாழ்ந்து கடந்தவர். ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் தூத்துக்குடியில் சுதேசி நீராவிக் கப்பல் நிறுவனம் ஒன்றைத் தொடங்கி, அதில் காலியா மற்றும் லாவோ எனும் இரு கப்பல்களை விலைக்கு வாங்கி அவற்றை தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே ஓட்டிச்சென்றவர். இச்செயல்பாடு ஆங்கிலேயர்களின் அதிகாரத்திற்கு எதிராக இருப்பினும் தமிழுலகில் மரணத்தைக் கடந்த தமிழர்களுக்குப் பெரும் அறமாகக் கருதப்படுகிறது. இது விடுதலைக்கான எதிர்வினையாக இருந்தாலும் தனியொருவரின் நிமிர்ந்த அறப்பண்பானது மேலோங்கி நிற்கிறது.

சங்ககாலத்தில் அரசர்கள், குறுநில மன்னர்கள் ஈகை, கொடை என்ற இரு அறங்களை வாழ்வியலில் செயல்படுத்தி வந்தனர். மன்னர்கள்,

'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்

அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்' (புறம். 55)

என்று அடையாளப்படுத்தப்பட்டனர் என்று புறநானூறு கூறுகிறது. இங்கு அறத்தின் வெளிப்பாட்டுத் தன்மை மக்களுக்கு அரசனது ஆட்சிச்சிறப்பானது செங்கோல், வெண்கொற்றக்குடை இரண்டும் நிமிர்ந்த தன்மையில் இருக்கவேண்டியதாக இருந்துள்ளதைச் சுட்டுகிறது.

மணிமேகலை அறத்தின் மாண்பைச் சுட்டும்போது உணவு வழங்குதலில் முதன்மைப்படுத்திக் காட்டுகிறது. இதனை,

'அறமெனப் படுவது யாதுஎனக் கேட்பின்

மறவா திதுகேள் மண் உயிர்க் கெல்லாம்

உண்டியும் உடையும் உறையும் அல்லது

கண்டது இல்' (மணி.25 - 228 - 231)

என்ற வரிகள் மூலம் கூறுகிறது. இவ்விரு கருத்தியலைக் காணும்போது உணவு, உடை, இருப்பிடம் இம்மூன்றும் மனித வாழ்வின் முதன்மை அறமாகத் திகழ்கிறது என்று இலக்கியங்கள் முன்வைக்கிறது. ஆனால் அரசன், குறுநில மன்னன் இவர்களுக்கு நிகராகத் தனிமனிதனுக்கு வழங்கப்பட்ட அறங்களையும் கடந்து ஒரு தனிப்பட்ட மனிதரின் வாழ்வானது சமூகப்பிணைப்பில் திளைத்து நாட்டிற்கான பொது அறமாக விடுதலையறமாகத் தொடங்கி வைத்தவர் வ.உ.சி.தம்பரனார் ஆவார். இச்செயலானது, வணிகநோக்கமின்றி விடுதலை நோக்கமாக இருப்பதைப் பார்க்கமுடிகிறது. அறம்செய்யும் வணிகன் தாம் செய்யும் அறமானது, 'இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்' (புறம்.134) எனும் பயனை நோக்கி செய்யக் கூடாததைப் போன்று தமது வாழ்நாளில் மறுமைப் பயனை எதிர்பார்த்து வாழாமல் வாழ்ந்து காட்டியவர். மறுமைப் பயனை அடைய வேண்டிய வாழ்வுதனில் வாழும் மக்களுக்கு மத்தியில் தமிழின விடுதலைக்காக வாழ்ந்து கழித்தவர். இதனை,

'சொந்த நாட்டில் அடிமை செய்தே

துஞ்சிடோம் - இனி அஞ்சிடோம்

எந்த நாட்டினும் இந்த அநீதிகள் ஏற்குமோ?

தெய்வம் பாா ் க்குமோ? (தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை மறுமொழி)

என்று சிறைவாழ்க்கைப் பயணத்தை அறமாக வாழ்ந்து காட்டியவர். இருப்பினும், வ.உ.சி. அவர்கள் தமிழ்ச்சமூகமானது இனம், சமயம் என்ற வேறுபாடுகள் இன்றி அன்புடையவர்களாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். இதனை,

'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே

அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே'

எனத் தாயுமானவர் கூறுவதைப்போன்று வேறுபாடின்றி எல்லோரும் இனிதுடன் வாழ விரும்பினார். வாழ்வில் உடல், உயிர் அழிந்தாலும்

மனிதனால் உருவாக்கிய சாகாத கல்வி, கலையறிவு உணர்வு இவை மறைவதில்லை. தொடர்ந்து பயணித்துக் கொண்டே இருக்கிறது என்று வாழ்ந்து காட்டிச் சென்றவர்.

ஒழுக்க அறம்:

மனிதன் தன்னுடைய வாழ்வில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதற்குக் காலம், இடம், சூழல், சமுதாயம் ஆகிய நான்கும் தேவையாகிறது. இந்நான்கும் நன்னடக்கத்தின் வழியாக ஏற்படக்கூடியது. இதனை வ.உ.சி. 'அடக்க மனம் புலன் அணுகா தடக்கல்' (மெ.அதி.26-1) என்கிறார். மனம், புலனடக்கம் இவை இரண்டும் ஒரு மனிதன் முதன்மையாகக் கொண்டால் நன்னெறி அடையக் கடவான். இல்லறத்தானுக்கு மிகவும் இருக்க வேண்டிய ஒழுக்கத்தோடு கூடிய அறம் என்று ஆசிரியர் கூறுவது சாலச்சிறந்தது.

வள்ளுவர் அறம், பொருள், இன்பம் எனப் பகுத்துச் செயல்படுத்திக் காட்டியுள்ளதுடன், வாழ்வியல் நெறிகளுக்கு மூலாதாரமாக ஒழுக்க நெறி உள்ளது என்கிறார். ஒழுக்கம் ஒருவனை உயர்ந்த பண்புக்கு, புகழுக்குக் கொண்டு சேர்க்கக் கூடியது. அது உயிராகவும் கொள்ளப்படும்.

'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்' *(குறள்.133)*

வ.உ.சி. அவர்கள் 'ஒழுக்க மென்ப துயர்ந்தோர் நடையே' (மெய்.அதி.27.261) என்கிறார். உயர்ந்தோர் என்றுரைக்கும்போது அருள் அறிவு நிரம்பப்பெற்றவர்களே ஆவார் என்கிறார். ஒருவன் தனது வாழ்வில் ஒழுக்கத்தைப் பின்பற்றும்போது அறம் பெருகும். இறைபேறு ஏற்படும். இழுக்கு நிகழாத வண்ணமிருக்கும். அவர்களது நடை பாவனையாவது 'பெரியோர்க் கடங்கி யொழுகல்' (மெய்.அதி.27.263) என்று திகழும். இதனால், உயர்ந்த மேன்மை நிலையை அடைய முடியும். 'ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை' (குறள்.137). ஒழுக்கம் உயிரோடு, உடலோடு கலக்கும் தருவாயில் அறம் செயல் படுத்த விரும்பும்.

இத்தகைய அறமானது 'ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்' (குறள்.133) என்று சிறந்த குடிப்பிறப்பிற்கும், தனிமனித வாழ்வுக்கும், சமுதாயத்திற்கும் அடையாளமாக நின்று திகழும். மனிதன் ஒழுக்கத்தை செயல்படுத்தும்போது பல்வேறு இழுக்கமும் ஏற்படக்கூடும். இதனை வள்ளுவர், 'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்' (குறள்.138) என்கிறார். நல்லொழுக்கம், தீயொழுக்கம் என்ற இரண்டு நெறிகளும் காலம், இடம், சூழல் ஆகிய மூன்று நிலைகளில் மாறிமாறி ஏற்படக்கூடும். அதற்கேற்ப செயல்படுவதே மனித வாழ்வுக்கான முறையாகும். நல்லொழுக்கம் மனதில் ஏற்பட வேண்டுமாயின் பொறாமை இல்லாத வாழ்வு அமைய வேண்டும். 'பகைசெய் தவரொடு நகைசெய் தளாவல்' (மெய்.அதி.27.269) இருக்க வேண்டும் அதுவே சாலக்கூடும். ஆகவே மனித வாழ்வு செம்மையாக அமைய ஒழுக்க நெறி அவசியமானதாகும்.

மனித அறம்:

மனிதன் தான் செய்யும் வேலைக்குப் பிரதிபலன் எதிர்பார்த்தல் கூடாது. இச்செயல் பகுத்தறிவோடு வாழும் இல்லறத்தானுக்கும் பொருந்தும்.

'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது' *(குறள்.45)*

ஒருவன் பயனை முன்னிறுத்தி எந்த செயலையும் செய்யக் கூடாது. அவ்வாறு செய்தால் மனிதனுக்குள் ஏற்றதாழ்வுகளை ஏற்படுத்த விளையும். இதனை, வ.உசி தனது இல்வாழ்வியல் என்னும் அதிகாரத்தின் வாயிலாக முன்வைக்கும்போது

'இல்வாழ் வென்பதோ ரில்லினல் வாழ்தல்

எதிர ் பாற் றுணையுடன் வதிதன் மிகநலம்' *(மெய்.அதி.31.301-302)*

என்று இல்லத்தோடு வாழ்ந்து நிறைவு செய்வதே மிகுநலமுடையதாக இருக்கும் என்கிறார். மேலும், இல்லத்தினோடு வாழ்பவன் பிறருக்கு கடன் படாமல் வாழவேண்டும். நிதமும் வேளாண்மை செய்து இயற்படக் களிக்கவேண்டும் என்றுரைக்கிறார்.

இவையிரண்டும் முறைப்படுத்தாத இல்லறத்தனது வாழ்வு, சமுதாயத்தில் முரண்பாடுகளை ஏற்படுத்தும். தொழிலில் பாகுபாடு காட்ட முற்படும். ஆதலால், பிறப்பு, அன்பு, அறம், இல்வாழ்க்கை இவையனைத்தும் எல்லா உயிர்களுக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். அதுவே மகத்துவமானது. வள்ளுவர் இதனை,

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமை யான்' *(குறள்.972)*

என்கிறார். பிறப்பினால் அனைவரும் சமம், அதில் பிரிவு ஏதும் இல்லை, இப்போக்கு செய்கின்ற தொழிலில் கூட வேற்றுமையின்றி திகழ வேண்டும் என்று துணிகிறார்.

வ.உ.சி. அவர்கள் வள்ளுவரையொற்றியே,

'தானறிந் தவையெலாந் தன்றுணைக் குணர ் த்துக

தனதுநன் னெறிதுணை சார ் ந்திடச் செய்க' *(மெய்.அதி.34.337-338)*

என்று இணைந்து வாழும் வாழ்க்கை வாழச் செய்க என்கிறார். ஆகவே, மனிதனுக்கான பகுத்தறிவுப் பயனை எதிர் நோக்காமல் சமநிலையோடு இருக்க வேண்டும். அவ்வாறு வாழும்போது இல்லறமானது சிறக்கும்.

இல்லறம்:

அறத்தின் வழிப்பட்டதே இல்வாழ்க்கையாகும். மனிதனது இல்வாழ்க்கைத் தத்துவம் திருமணத்தில் தொடங்குகிறது. அதைக் கடைப்பிடித்து நெறி தவறாது வாழ்ந்தால் அதுவே அன்பும், அறனும் உடைய சிறப்பான இல்லற வாழ்வாகும். வள்ளுவர்,

‘அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்

பிறன்பழிப்ப தில்லாயின் நன்று’ *(குறள்.49)*

என்கிறார். இல்வாழ்க்கை சிறப்புடன் அமைய வேண்டுமாயின் ஒருவருக்கொருவர் ஒத்துப்போகும் உள்ளக்கிளர்ச்சி நிலை, பிறர் பழிப்பில்லாமல் வாழும் வாழ்க்கை முறை குடும்பத்தில் இருக்க வேண்டும். முக்கியமாகக் கடன்படாத வாழ்வு அமைய வேண்டும். வேளாண்மை முக்கிய தொழிலாகக் கொள்ள வேண்டும். ஆக்கமுங் கேடும் அமையக் கூடாது. கணவனை இழந்த பெண்ணை மணப்பது புண்ணியமாகும். விரும்பாதவரை விரும்புதல் கூடாது. இவையனைத்தும் அறத்தின் வயப்பட்டவையாகும் என்று வ.உ.சி. கருத்துச் சிதறல் புரட்சிக்கான பகுத்தறிவாகத் திகழ்வதைப் பார்க்கமுடிகிறது.

மேலும் இல்லறத்தான் பரத்தையை விலக்கி வாழவேண்டும். அவளில்லாத நாடு அழிவுறா நாடாக இருக்கும். ஆகையால் இல்லறத்தான் வீரத்தை புரியும் மனிதனாக இருக்க வேண்டும். மேலும், துறவு வாழ்க்கை வாழ்பவர்களுக்கும், வறுமையில் துவல்பவருக்கும், உறவினர்களுக்கும் துணையானவனாகத் திகழ வேண்டும். அவ்வாறு செயல்படுபவன் வானுயரத்தில் தெய்வமாக வைத்து வணங்கப்படுவான். வள்ளுவர்,

‘வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்’ (குறள் 50)

என்றும்,

‘புவிநலங் குன்றிற் பொதுப்பொருள் வழங்குக

மறமன் நிலங்கொளத் திறஞ்செய வழங்குக’ *(மெய்.அதி.108.1079 -1080)*

என்று வ.உ.சி.யும் குறிப்பிடுகின்றனர். இப்புவியில் இறுதியாக மிஞ்சுவது பொதுமையே, அப்பொதுமை அனைவருக்கும் பொதுப் பொருளாக இருந்து பயன்படவேண்டும் அதுவே நல்லறமாகக் காலத்திற்கும் போற்றத்தகும்.

முடிவுரை:

மனிதன் தனது வாழ்வைச் செம்மைப்படுத்த பல்வேறு திட்ட நெறிமுறைகளைக் கடைப்பிடித்தான். அவ்வாறு கடைப்பிடித்ததன் விளைவாக ஒழுக்கம், அறம், இல்லறம், பகுத்தறிவு, ஆகியவற்றை அடைந்தான். ஒழுக்கம் அவனை உயர்ந்த பண்புக்கு, புகழுக்கு கொண்டு சேர்த்தது. அறத்தை வலியுறுத்தியதால் உயிர்களுக்கெல்லாம் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைக் கொடுக்கமுடிந்தது. இல்லறமும் அறத்தின் வழிப்பட்டதாக அமைந்தது.

வாழும் வாழ்வில் பொதுப்படையாக இருந்து அனைவருக்கும் கொடுத்துதவப் பொதுப்பொருளை உருவாக்கி வாழும்போது சமூகத்தில் மதிக்கப்படக்கூடிய மனிதனாக வாழமுடியும். அவ்வாறு அறம்பட வாழ்ந்த வ.உ.சி. யின் வாழ்வை போன்று ஒவ்வொரு மனிதனும் நெறிமுறைகளை வகுத்து வாழ்வது திண்ணமாகும்.

துணை நின்ற நூல்கள்:

1. வரதராசனார், மு, திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1977. ப.20.
2. இறையனார், திருக்குறள் ஆராய்ச்சி, தமிழகம் பதிப்பகம், உறையூர், திருச்சி, முதல் பதிப்பு – 1949.
3. பரிமேலழகர் (உ. ஆ) திருக்குறள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1975.
4. சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, பாரி நிலையம், சென்னை, எட்டாம் பதிப்பு, 1987.
5. வ.உ.சி.தம்பரம்பிள்ளை, மெய்யறம், வ.உ.சி. நூலகம், சென்னை – 14, முதற்பதிப்பு – 2004.

99

வ.உ.சி.யும் வள்ளுவரும் போற்றிய அன்புடைமை

முனைவர் க. உமாராணி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, சீதாலட்சுமி ராமஸ்வாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

ஆய்வுச்சுருக்கம்:

திருக்குறளின் அன்புடைமை அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள குறட்பாக்கள் அன்பின் வலிமையையும், சிறப்பினையும் எடுத்துரைக்கின்றன. வள்ளுவர் ஒவ்வொரு குறட்பாவிலும் அன்பின் மேன்மையையும் மானிடர்கள் அன்பின் வழி வாழ்கின்ற வாழ்க்கையில் பெறக்கூடிய இன்பத்தையும் எடுத்துரைக்கின்றார். வள்ளுவரின் நெறியில் வ.உ.சி.தம்பரனாரும் தனது அன்பு என்ற தலைப்பிலான பாடல்களில் அன்பின் தன்மையைப் பற்றியும், மனிதர்கள் தங்களைப் போலவே மற்ற பிற உயிர்களையும் எண்ண வேண்டுமென்பதைப் பற்றியும், அன்பு கொண்டு வாழும் வாழ்க்கையில் ஏற்படுகின்ற உயர்வினைப் பற்றியும் எடுத்துரைத்து அன்பினை வலியுறுத்துகின்றார். அன்பினைப் பாடுகின்ற வள்ளுவத்தின் வழியும், அன்பினைக் கொண்டாடுகின்ற வ.உ.சி.-யின் பாடல்கள் வழியும் ஒப்பீட்டாய்ந்து உரைக்கின்ற வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

திறவுச்சொற்கள் - திருக்குறள், திருவள்ளுவர், அன்புடைமை, வ.உ.சிதம்பரனார், பாடல்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

முன்னுரை:

அற இலக்கியக் களஞ்சியமாக விளங்கும் திருக்குறள் தமிழரின் வாழ்வியல் பண்பாட்டு அடையாளமாகத் திகழ்ந்து வருகின்றது. இத்தகைய மரபில் வந்துதித்த சுதந்திரப் போராட்டத் தியாகியும் இந்திய நாட்டின் சுதந்திரப் போராட்டக் களத்தில் கப்பலோட்டிய தமிழனாகவும், செக்கிழுத்த செம்மலாகவும் போற்றப்பட்ட வ.உ.சி.தம்பரனாரின் படைப்புகளும் தமிழ் இலக்கியக் களத்திற்கு வலுசேர்க்கின்ற வகையில் படைக்கப்பட்டுள்ளன. வள்ளுவ நெறியில் அன்புடைமை குறித்த சிதம்பரனாரின் பாடல்கள் ஒவ்வொன்றும் அன்பின் இன்றியமையாமையினையும், பெருமையினையும் எடுத்துரைக்கின்ற வகையில் அமைந்துள்ளன. அவ்வகையில் வ.உ.சி.-யும் வள்ளுவரும் போற்றிய அன்புடைமைக் கருத்துக்களை இக்கட்டுரையில் காண்போம்.

வ.உ.சி. யும் வள்ளுவரும்:

மானிடப்பிறவி பெறுதற்கரிய பிறவியாகும். சிரிக்கத் தெரிந்த விலங்கு மனிதனே ஆவான். தான் வாழுகின்ற வாழ்க்கையில் ஒரு மனிதன் தன்னைப் போன்ற சக மனிதனிடம் போட்டி, பொறாமை, வஞ்சகம், சூழ்ச்சி ஆகிய குணங்களோடு தான் அதிகமாக உறவாடுகிறான்.

அன்பு, பாசம், கருணை, இரக்கம், மனிதநேயம் போன்ற பண்புநலன்கள் யாவும் அருகிக்கொண்டே வருகின்றன. தான் வாழ்வதற்காகப் பிறரைத் துன்புறுத்துகின்ற மிருகக் குணம் கொண்ட மனிதர்கள் வாழ்கின்ற சமுதாயத்தில் முன்னோர்கள் கூறிச் சென்ற அறக்கருத்துக்களை ஒவ்வொரு நாளும் இலக்கியங்கள் வலியுறுத்திக் கொண்டே வருகின்றன. அவ்வகையில் சுதந்திரப் போராட்டக் களத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவரும், தேச நன்மைக்காக பல துன்பங்களைத் தாங்கிக்கொண்டவருமான வ.உ.சி.தம்பரனாரின் எண்ணத்தில் உதித்த அன்பு என்ற தலைப்பிலான பாடல்கள் ஒவ்வொன்றும் வள்ளுவரின் அடிச்சுவட்டில் எழுதப்பட்டவையாகவே அமைந்திருப்பது சிறப்பிற்குரியதாகும்.

எவரையும் தன்னுயிர் என்றெண்ணுதல்

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்

புண்கணீர் பூசல் தரும். -(குறள்.71)

என்ற வள்ளுவரின் குறட்பாவானது, உள்ளத்தில் இருக்கும் அன்பைத் தாழ்ப்பாள் போட்டு அடைத்து வைக்க முடியாது அன்புக்குரியவரின் துன்பம் காணுமிடத்து, கண்ணீர்த்துளி வாயிலாக அது வெளிப்பட்டுவிடும் என்கிறது. இத்தகைய அன்புணர்வோடு எல்லோரையும் தன்னுயிர் போல எண்ணி வாழ்தலே சிறப்பானது. அவ்வாறின்றி தனது தாய், தந்தை, தன் பெண்டு, தன் பிள்ளைகள், சொத்துக்கள் என்று இவற்றின் மீது மட்டும் அன்பு செலுத்துதல் அன்பில்லை என்பதனை

எவரையும் தன்னுயிர் என்றெண்ணி நள்ளல் அன்பன்றிச்

சாவரையும் நேசிக்கும் தாய்தந்தை - மேவரிய

பெண்டு பிள்ளைகள் பேணும் பொருள் தம்மை மட்டும்

கண்டு நள்ளல் அன்பன்று காண். (வ.உ.சி. பாடல்கள்)

என்று வ.உ.சி. கூறிய இக்கருத்தையே பின்னாளில் புரட்சிக்கவி பாரதிதாசனும்,

தன் பெண்டு தன் பிள்ளை சோறு வீடு சம்பாத்தியம் இவையுண்டு

தானுண்டேன்போன் சின்னதொரு கடுகு போல் உள்ளங் கொண்டோன்!

(பாரதிதாசன் பாடல்கள்)

என்று கூறுகிறார். எனவே தன்னுடைய குடும்பம், தன் மனையாள், தன் பிள்ளைகள் இவர்களிடம் மட்டுமே அன்பு காட்டுதல் சிறந்த அன்பு ஆகாது. ஆதலால் தான் எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல எண்ணி வாழ வேண்டும் என்று வ.உ.சி. வலியுறுத்துகிறார். மேலும்,

யாவரையும் தன்னுயிரென்று ஆதரித்தல் அன்பாகும்

தேவரையும் ஞானியையும் சீலகுண - மூவரையும்

ஆதரித்தல் பத்தியாம் அன்னை தந்தை ஆதியரை
ஆதரித்தல் பாசமே ஆம். (வ.உ.சி. பாடல்கள்)

என்று கூறுகிறார். அதாவது, உலகில் யாவரையும் தன்னுயிர் என்று பாசம் காட்டுவதோடு தேவர், ஞானியர், மும்மூர்த்திகள், அன்னை, தந்தை, முன்னோர் என்று எல்லாரிடத்திலும் பாசம் காட்டுதலே சிறந்த அறமாகும் என்றும் வ.உ.சி. குறிப்பிடுகின்றார். அடுத்த பாடலிலும் இக்கருத்தையே வலியுறுத்துகின்றார்.

எவருமே தன்னுயிரென்று எண்ணி அன்பு செய்ய அவர்
தூவுடைய தன்னுயிராய் தோய்ந்து நிற்பர் - பூவிலுள
யாவருமே சின்மய மென்று இன்புறுவனாதலினால்
எவரையும் உன்னுயிரென்று எண். (வ.உ.சி. பாடல்கள்)

என்ற வ.உ.சி. -யின் சிந்தனையோடு வள்ளல் பெருமான் இராமலிங்க அடிகளார் கூறிய,

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே... (திருவருட்பா.)

என்று பாடல் வரிகள் பொருத்தமுடையதாக இருக்கின்றன. பயிர்கள் துன்புறுவதைக் கூட பொறுக்க முடியாத தூய உள்ளம், அன்புள்ளம் அடிகளாருடையது. வள்ளலாரின் ஜீவகாருண்ய ஒழுக்கத்தைப் போற்றும் வ.உ.சி. அவர்களின் இச்சிந்தனை மானுடர்களுக்கு நல்ல படிப்பினையாகும். பிறரிடம் பாசம் காட்ட வேண்டுமென்பதை வள்ளுவரும்,

அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. (குறள்.74)

என்ற குறட்பாவில் வள்ளுவர் எடுத்துரைக்கின்றார். அன்பு பிறரிடம் பற்றுள்ளம் கொள்ளச் செய்யும் அந்த உள்ளம், நட்பு எனும் பெருஞ் சிறப்பை உருவாக்கும் என்கிறார்.மேலும்,

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. (குறள்.72)

என்ற குறட்பாவின் வழி அன்பு இல்லாதவர், எல்லாம் தமக்கே என உரிமை கொண்டாடுவர்; அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும் பிறருக்கென எண்ணிடுவர் என்று பிறரிடம் அன்பு காட்டுவதன் மேன்மையை வள்ளுவமும் எடுத்துரைக்கின்றது.

அன்பும் வாழ்வும்:

உலகில் அனைத்து உயிர்களின் இயக்கத்திற்கு அன்பே அடிப்படையாக உள்ளது. வாழ்வில் இன்பமாய் வாழ்வதற்கு அன்பே ஆதாரமாகும். இதனை,

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு. (குறள்.75)

என்கிறது வள்ளுவம். உலகில் இன்புற்று வாழ்கின்றவர்க்கு வாய்க்கும் சிறப்பு, அவர் அன்புள்ளம் கொண்டவராக விளங்குவதன் பயனே என்று கூறலாம் என்ற வள்ளுவரின் நெறியில் அறவோரை ஆதரித்து அன்பு செலுத்துதலே வாழ்வின் அறமாகும் என்று வாழ்வில் அன்பின் மேன்மையை வ.உ.சி. எடுத்துரைக்கின்றார்.இதனைப் பின்வரும் பாடல்

ஆதரித்தல் நன்றே அறவோரை ஆதரித்தல்

தீது இழைக்கும் பாவிகளைத் தீதேயாம் - தீதிழைக்கும்

பாவிகளை எந்நாளும் பல்விதத்திற் தண்டித்தும்

ஆவி களைந்தும் வாழ்தல் அன்பு. *(வ.உ.சி. பாடல்கள்)*

வழி அறியமுடிகின்றது. மேலும், அறம், பொருள், இன்பம் என்ற நிலைகளுக்குப் பிறகு வாழ்வில் வீடுபேற்றிற்கு அருந்துணையாவது அன்பே என்பதனை

பாசமதில் பத்தியத்தில் பண்புமிக்கது அன்பறிக

பாசமது மேன்மேலும் பந்தநல்கும் - ஆசுகஞ் சேர்

பத்தியதோ அன்பில் ஒரு பாகம் தான் ஆதலினால்

முத்தி பெற அன்பே முதல். *(வ.உ.சி. பாடல்கள்)*

என்ற பாடலில் வ.உ.சி. வலியுறுத்துகின்றார். அன்பைப் பாராட்டி வாழுகின்ற போது இவ்வுலகில் துன்பம் என்று ஒன்றுமில்லை என்பதனை,

எவருமே தன்னுயிரென்று எண்ணி அன்பு பாராட்டின்

யாவருமே தன்னுயிரே ஆயிடுவர் - மேவருந்தன்

பக்கமதில் அன்னியத்தைப் பாரா அன்பின் இவ்வுலகிற்

துக்கமது உண்டோ சொல்லாய். *(வ.உ.சி. பாடல்கள்)*

என்ற வ.உ.சி.- யின் பாடல் கூறுகின்றது.

பற்றுக பற்றற்றான் பற்றினை

தன்னைப் பற்றியே எண்ணாமல்
பிறர்க்காக வாழும் உள்ளமே நல்லுள்ளமாகும்.

பழந்தமிழ்ச் சமூகத்திலேயே இப்பண்பு போற்றப்பட்டுள்ளது.

தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே... *(புறம்.182)*

என்று புறநானூறு குறிப்பிடுகின்றது. இக்கருத்தையே தனது பாடலில்,

அன்னியத்தை ஆருயிரென்று ஆதரிக்க சீவனெனும்

தன்னில் உள்ள பற்றொழியும் சாற்றினனான் - தன்னினுள்ள

பற்றொழிய நெஞ்சத்துப் பாச மல நீங்கும் உண்மை

முற்று விளங்கும் பின் முனைத்து. *(வ.உ.சி. பாடல்கள்)*

என்று கூறுகின்றார் வ.உ.சி.

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு

என்புதோல் போர்த்த உடம்பு. *(குறள்.80)*

என்று வள்ளுவரும், அன்பு நெஞ்சத்தின் வழியில் இயங்குவதே உயிருள்ள உடலாகும்; இல்லையேல், அது எலும்பைத் தோல் போர்த்திய வெறும் உடலேயாகும் என்கிறார். ஆதலால் மானுட வாழ்வில் தன்னைப் பெரிதென்று எண்ணாமல் பிறரின் நலன் நாடும் நல்ல மனப்பான்மையே பேரின்பத்தை உணரச்செய்யும் அருமருந்தாகும் என்பதை உணர வேண்டும். இத்தகைய அறப்பண்பு இல்லாதவன் படுகின்ற துன்பத்தை,

என்பிலதனை வெயில் போல காயுமே

அன்பில தனை அறம். *(குறள்.77)*

என்று அறம் எதுவென அறிந்தும் அதனைக் கடைப்பிடிக்காதவரை, அவரது மனச்சாட்சியே வாட்டி வதைக்கும்; அது வெயிலின் வெம்மை புழுவை வாட்டுவதுபோல இருக்கும் என்றும் வள்ளுவம் உரைக்கிறது.

முக்தியடையும் வழி:

மானுட பிறவியில் இன்ப, துன்பங்களைச் சமமாக எண்ணி வாழுகின்ற போது இம்மை உலகிற்குப் பின்னர் செல்லவிருக்கின்ற மறுமை உலகில் நற்கதி அடைவதற்குத் துணையாய் வருவது அன்பு நெறிப்பட்ட வாழ்க்கையே ஆகும். இதனை வலியுறுத்துகின்ற வகையில்,

துக்கமுற்று நீக்கிச் சுகமுறுதல் முக்தியென்றும்

துக்கமற்ற தன்மை சுகமென்றும் - தக்கமறை

கண்டோர் உரைத்துள்ளார் காண அதை அன்பன்றி

உண்டோ பிறிது நெறி ஒன்று. *(வ.உ.சி. பாடல்கள்)*

என்று வ.உ.சி. கூறுகின்றார். மேலும், மெய்யான வடிவம் என்பது பரம்பொருள் வடிவமான சச்சிதானந்தமே என்றும், நிலைத்த வடிவமும் அதுவே என்றும் கூறும் வ.உ.சி. அவர்கள் மனிதர்கள் தங்கள் வாழ்வில் படுகின்ற துன்பங்களெல்லாம் கானல் நீர்த் தோற்றம் போன்றதே என்பதை உணர்ந்து இதுவும் கடந்து போகும் என்ற சிந்தனையோடு வாழ வேண்டும் என்பதை

தன்னுடைய மெய்ச்சொருபம் சச்சிதானந்தமென்று

மன்னியம் போல் தோன்றுமெலாம் அஃதென்றும் - தன்னையுறும்

துக்கமெலாம் கானலின் நீர்த்தோற்றமென்றும் கண்டுணர்ந்து

துக்கமற்று வாழ்வான் சுகித்து. *(வ.உ.சி. பாடல்கள்)*

என்ற பாடல்வரிகளின் வாயிலாக எடுத்துக்காட்டுகின்றார்.

உயிரைக்காட்டிலும் மேலானது:

அரிய இம்மானுடப் பிறவியில் உயிரை விட மேன்மையானது அன்பே என்றும், அன்பன்றி உடலும், உடலுக்குள் இருக்கின்ற உயிரும் செயல்படாது. ஆகையால் அன்பே உயர்வானதாகும் என்ற வ.உ.சி. யின்

கருத்தினை,

அன்பாவது யாவர்க்கும் ஆருயிரின் மிக்கதுவாம்

இன்பா அதன் சொருப மெஞ்ஞான்று - அன்பென்பது

அன்றி உடல் என்னா அது போலவே அன்பும்

அன்றி உயிரென்னா அறி. (வ.உ.சி. பாடல்கள்)

என்ற பாடல் உணர்த்துகிறது. எனவே உடலும், உயிரும் சிறப்பாய் செயல்படுவதற்கு அன்பே அருந்துணையாகும் என்பதையும், அன்பினால் தான் உலக இயக்கம் நடைபெறுகின்றது என்பதையும் உணர முடிகின்றது.

நிறைவுரை:

இவ்வாறாக தேசப்பற்றாளர், எழுத்தாளர், சமூகச் சிந்தனையாளர் வ.உ.சி. அவர்களின் பாடல்களில் அன்பு என்ற தலைப்பிலான பாடல்கள் பத்தும் அன்புடைமைச் சிந்தனைகளை ஆழமாக வலியுறுத்துகின்றன. வள்ளுவரின் நெறியில் அன்புடைமைக் கருத்துக்களை உள்வாங்கி தனது பாடல்களில் அழகுற வெளிப்படுத்தியுள்ள வ.உ.சி.-யின் கவித்துவம் ஏற்றிப் போற்றுதற்குரியது. ஒவ்வொரு பாடலிலும் எடுத்தாளப்பட்டுள்ள கருத்துகள் யாவும் மனித குலம் மாண்புற, மனிதநேயமும், அன்பும், கருணையும் செழித்தோங்க வழிகாட்டுகின்ற வகையில் அமைந்துள்ளன. இந்திய விடுதலைப் போராட்டத்தில் போராளியாகவே பார்க்கப்பட்ட வ.உ.சி. அவர்களின் படைப்புகள் யாவும் தமிழ் ஆய்வுத் தளங்களில் சிறப்பாக செயல்பட்டு எதிர்கால தலைமுறையினருக்குப் பயன்படுகின்ற வகையில் வெளிப்படுகின்ற போது உலகம் முழுவதும் பரவியிருக்கும் தமிழ் கூறும் நல்லுலகம் பெருமிதம் கொள்ளும்.

துணைநூல்கள்:

1. திருக்குறள் மூலமும் உரையும், கழக வெளியீடு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை., 1924.
2. திருவருட்பா மூலமும் உரையும் இரண்டாம் திருமுறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்., 1983.
3. புறநானூறு மூலமும் உரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை
4. பாரதிதாசன் கவிதைகள், கதிர் பதிப்பகம், சென்னை.
5. வ.உ.சி. பாடல்கள், வ.உ.சி. இலக்கியப் பேரவை, திருநெல்வேலி., 1999.

100

வ.உ.சி. கட்டுரைகளில் ஆத்திகச் சிந்தனைகளும் முற்போக்குக் கருத்தியல்களும்

முனைவர் ரா. சுபா
உதவிப் பேராசிரியர், ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட்
மகளிர் வைணவக் கல்லூரி, குரோம்பேட்டை.

ஆய்வுச்சுருக்கம்:

தமிழ்நாட்டின் விடுதலைப் போராட்ட வீரராக அறியப்படும் வ.உ. சிதம்பரானார் நல்ல இலக்கியப் படைப்பாளராகவும் பதிப்பாளராகவும், எழுத்தாளராகவும் இருந்து பல படைப்புகளைச் செய்துள்ளார். அத்தகைய அவரின் படைப்புகள் பலவற்றுள் அவரின் கட்டுரைகளை ஆய்ந்தறிவதாக இக்கட்டுரை அமைகிறது. மேலும் இக்கட்டுரையில் வ.உ.சி. அவர்கள் தன் கட்டுரை நூலில் கூறப்பட்டுள்ள பல தகவல் களுள் ஆத்திகச் சிந்தனைகளும் முற்போக்குக் கருத்தியல்களை எடுத் துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக உள்ளது. இக்கட்டுரையானது விதி, ஊழ், மறுபிறவி, கடவுள் எனப் பலவிதப் பொருண்மைகளை அவரது பார்வையின் அடிப்படையில் எடுத்து விளக்குவதாக உள்ளது.

திறவுச்சொற்கள்: கடவுள் கொள்கை, விதி, ஊழ்வினை, மறுபிறவி, ஆத்திகம், முற்போக்கு, உபதேசம்

முன்னுரை:

தமிழ்நாட்டு அளவில் சுதந்திரப் போராட்ட வீரராகவே பெரும் பாலும் அறியப்படுபவர் வ.உ.சி. ஆவார். இவர் வெறும் கப்பலோட்டிய தமிழர் மட்டுமன்று. சுதந்திரத்திற்காகப் போராடிச் சிறையில் செக் கிழுத்தவர் மட்டுமன்று. மாறாக சிறந்த கவிஞராகவும், எழுத்தாள ராகவும், கட்டுரைகளைப் பதிப்பிக்கும் பதிப்பாளராகவும் விளங்கி யவர் வ.உ.சிதம்பரனார். அத்தகைய சிறப்புடைய வ.உ.சி. கட்டுரை களில் ஆத்திகச் சிந்தனைகளும் முற்போக்குக் கருத்தியல்களும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

வ.உ.சி. யின் கடவுள் கொள்கை:

கடவுள் எங்கிருக்கின்றார்? எங்கேயிருப்பின் அவரை எங்களுக்குக் காட்டுங்கள். இல்லாத பொருளை நம்பி வீணாய் துக்கத்திற்கு ஆளாகிறீர்களே என்று உபதேசிக்கவும் ஆரம்பிக்கின்றனர். அஞ்ஞானம் என்னும் அகங்காரத்தால் மூடப்பட்ட அத்தகைய மாந்தர்கள் சற்று ஊன்றி ஆலோசிப்பவராகில் பொருட்களைக் காண்பது கண்ணினுடைய தொழிலன்றோ? அக்கண்ணும் இரவு இருட்டில் என் செய்யும் ஒரு யானையின் சரீரமே யாயினும் அது பார்க்கச் சக்தியற்றதாயிருக்கிறது.

சூரியனுடைய அல்லது அக்னியினுடைய ஒளி தோன்றினால் மாத்திரம் பொருள்களைக் காணும் சக்தி உண்டாகின்றது. அதுபோன்றே இறைவனைக் காணவேண்டுமென்றால் புறக்கண்ணைக் காட்டிலும் பக்தி உணர்வுடன் காணும் அகக் கண்ணில்தான் இறைவன் காட்சியளிப்பார் என்று வ.உ.சி. தெளிவுபடுத்துவதை, ‘மனிதனுக்கு இரண்டு கண்கள் உள. அவற்றுள் ஒன்று புறத்தும் மற்றொன்று அகத்தும் உள்ளனவாம். புறக்கண் ஏறக்குறைய எல்லா மாந்தரிடத்துமுளது. அகக் கண்ணோ யாவரிடத்தும் இருப்பினும் அநேகரிடத்துத் திறக்கப்படாது உறங்குகின்றது. கடவுளானவர் நித்தியராய் எங்கும் வியாபித்திருக்கின்றவராயினும் ஞானக்கண் என்று சொல்லப்படும் இவ்வகக்கண் திறக்கப்படுகிறவரை மாந்தர் அவரை யுணரும் வலியற்றவராயிருக்கிறனர். ஆதலின் தாம் குருடராயிருப்பதை மறந்து ஒருவரும் கடவுள் இல்லையென்று சொல்லலாகாது. தக்க ஆசிரியரைப் பின்பற்றி அவ்வுண்மைப் பொருளையடைய எல்லாரும் முயலக்கடவர்’(வ.உ.சி. கட்டுரைகள், பக்.1-2)

விதி அல்லது ஊழ் பற்றிய வ.உ.சி.யின் கருத்தியல்:

மனிதர்களில் பெரும்பாலானோர் கடவுள் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கின்றனர். ஆனால் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களின் மத்தியிலும் இருப்பதான ஒரு சிந்தனை விதி மற்றும் ஊழ்வினை என்ற சிந்தனையாகக் கருதலாம். அதாவது ஒருவன் தனக்கு நல்லது நடந்தாலும் தீயவை நடந்தாலும் நடந்தவை எல்லாம் விதியின் காரணமாகவே நடந்ததாக எண்ணுவார்கள். அவ்வாறான சிந்தனையின் காரணமாகவே எது நடந்தாலும் எல்லாம் தலைவிதி அதை யாராலும் மாற்றமுடியாது என்ற அவநம்பிக்கை மனிதன் செல்கிறான். அதனால் நல்லது செய்யவோ தீமையைத் தடுக்கவோ இல்லாமல் எந்த செயலும் நம்மால் உண்டாகவும் முடியாது நடக்க இருப்பதை தடுக்கவும் முடியாது என்ற சிந்தனையில் வாழ்கிறான். இந்த சிந்தனை விதியினால் ஏற்படுவது.

சிலர் முன்ஜென்மத்தில் நாம் செய்த தீவினை இந்த ஜென்மத்தில் துயரமாக மாறுவதில் பலரும் கருதினாலும் வரும் ஜென்மத்தில் நல்லது நடக்க வேண்டும் என்று கருதி நல்லவற்றை யாரும் செய்வதாகத் தெரியவில்லை. இதனை,

‘விதிவிதி என்று சொல்லி இந்தச் சென்மம் முழுவதும் துஷ்கிருத்தியங்களே செய்து கொண்டிருந்தால் அடுத்த ஜென்மத்தில்தான் நல்ல விதியேது ? இவையெல்லாம் நன்றாய் ஆலோசித்து இந்தச் சென்மத்தில் சரீரம் அனுபவிக்கிற சகல சுகதுக்கங்களும் விதிவழி வருகின்றனவென்று அறிந்து அவைகளைப் பற்றி மனதில் கிஞ்சிற்றேனும் சுகதுக்கம் பாராட்டாமல் மனித ஜென்மம் எடுத்ததின் பிரயோஜனத்தை அடைய முயலுவதில் எல்லாரும் மிகுந்த சிரத்தை யெடுப்பார்களாக.

முந்தின ஜென்மங்களில் நாம் செய்த கர்மமே இப்போது விதியாகி நமக்குண்டாகிற சுகதுக்கத்திற்குக் காரணமாயிருக்கின்ற தென்பது

நமக்குப் பிரத்தியஷமாதலின் இப்போது சன்மார்க்கத்தில் சிறிதேனும் பழகுவமேல் அதுவும் பின்னிட்டு பலன் கொடுக்குமென்பதில் என்ன ஆட்சேபம்? ஆதலால் ஒவ்வொருவரும் இனிமேலாகிலும் நல்லவிதியைச் சம்பாதிக்க இப்பொழுதே முயல்வாராக. அருமையான ஜென்மம் கிடைத்திருக்கின்றது. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும்' (வ.உ.சி. கட்டுரைகள், பக்.20- 21) என்ற அடிகள் ஊழ்வினை பற்றி தெரிந்த நிலையில் ஒருவன் நல்லவை செய்து நல்லவிதியினை சம்பாதிக்க வேண்டும் என்று வ.உ.சி. கட்டுரையின் வழி அறியமுடிகின்றது.

உலக உயிர்களில் மனித பிறவியே உயர்ந்தது:

பஞ்ச பூதச் சேர்க்கையாய்க் காணப்படும் இவ்வுலகத்தின் தோன்றிய உயிர்களைப் பற்றி பார்ப்போமாயின் அவையாவும் தேவர், மனிதர், மிருகம், பறவை, ஊர்வன், நீர்வாழ்வன, தாவரம் என்று சொல்லப்படும் ஏழுவகைப் பிரிவுகளுள் அடங்கும் என்பது நாம் அறிந்த ஒன்று. இத்தகைய என்னற்ற உயிர்களுள் உயர்வானது மனிதப் பிறவியே என்பதை, ‘அரிது அரிது மானிடராதலரிது’ என்ற ஔவையாரின் கூற்றினைப் போலவே மனிதப் பிறவியே உயர்வானது என்று வ.உ.சி.யும் கூறுவதை,

‘ஆகாயம், வாயு, அக்னி, அப்பு என்னும் லோகங்களாயிருக்கின்ற சித்தலோகம், கந்தர்வலோகம், தேவலோகம், பிதிர்லோகம் என்பவைகளில் வசிக்கும், சித்தர், கந்தர்வம், சூரின் முதலி தேவர்கள், சந்திரன் முதலி பிதிர்க்கள், அயிராவதம் முதலிய மிருகங்கள், கருடன் முதலி பக்ஷிகள், கற்பக விருட்ஷம் முதலிய தருக்கள் இவர்களையொழித்து இப்பூலோகத்தின்கண் வாழும் அறுவகை உயிர்களையும் ஆராய்வோமாயின் யாவற்றிலும் மனிதனே உத்தமஜாதியென அறிவோம்’ (வ.உ.சி. கட்டுரைகள், ப.1) என்ற அடிகளின்படி உலக உயிர்களில் மனித பிறவியே என்று கூறுவதை அறியமுடிகின்றது.

எதற்கும் திருப்தி அடையாத மனநிலை:

மனிதனின் மனம் எந்த நிலையிலும் திருப்தி அடைவதாக இல்லை. அதாவது ஒரு செயல் நடக்காதவரை ஒருசெயல் நடைபெறவில்லை என வருத்தப்படும். நாமே வருந்திய செயல் ஒருவேளை நல்லபடியாக நடந்துவிட்டால் அந்நிலையில்கூட மனம் நாம் நினைத்தவை நடந்துவிட்டது என்று எண்ணி மனம் நிம்மதி அடைவதில்லை. மாறாக நாம் நினைத்த நிம்மதி இந்த செயலில் இல்லை என்பதை அறிந்து அடுத்த செயல் ஒன்று நடக்கவில்லையே வருத்தப்படும் நிலையில்தான் மனத்தின் செயல்பாடு அமைகிறது. இதனை,

‘நமது குடும்பத்திற்கு மாதம் 20 ரூபாய் வேண்டியிருக்கின்றதே, இப்படி? நமக்கு 15 ரூபாய்தானே வருகின்றது. இன்னும் 5 ரூபாய் அதிகமாக வருமானால் சுகமாகக் காலட்சேபம் செய்யலாமே. அது எப்படி கிடைக்குமோ என்று நினைக்கிறான். கடவுள் கிருபையால் அவன் எண்ணப்படி நிறைவேறுகிறதென்று வைத்துக்கொள்வோம். அவன் அதில் திருப்தி அடைவதுண்டோ ஒருகாலும் இல்லை. அவனே

லட்சாதிபதியானானென்று வைத்துப் பார்ப்போம். அப்போதேனும் அவன் சுகமாயிருப்பதுண்டோ கிடையாது.

பின்னென்ன நினைக்கிறான். ஆ! ஆ! 70000 ரூபாய் பெறுமான கிராமம் சகாயமான விலைக்கு வந்திருக்கிறதே 50000 ரூபாய்தானே விலை சொல்லுகிறான். இது நல்ல தருமணமாச்சுதே கையில் பணமில்லையே என வருத்தப்படுகின்றான். இதுபோலவே உலகத்தில் அடையக் கூடிய சகல – சாதாரண ஜனங்கள் சொல்லுகின்றபடி சுகசாதனங்களையும் ஒருவன் அடைவானேயாயினும் அவனுக்குத் திருப்தியுண்டாவதில்லை.' (வ.உ.சி. கட்டுரைகள், பக்.15-16) என்ற அடிகள் ஒரு மனிதனின் மனம் எந்த நிலையிலும் எந்த செயலிலும் திருப்தி அடைவதில்லை என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

மூடநம்பிக்கைக்குக் காரணங்கள்:

மூட நம்பிக்கைகள் என்பது ஒவ்வொரு காலங்களில் எழுந்த ஒருவித சிந்தனை. அதாவது அறிவு முழுமையாக வளராத காலங்களில் எழுந்த ஒரு சிக்கலை எவ்வாறு போக்குவது என்று அறியாமல் ஒருவித காரணங்களை ஏற்படுத்தி அதனை வழிவழியே பின்பற்றி வந்திருப்பார்கள். அவ்வாறான சிந்தனைகள் மூட நம்பிக்கை என்று கூறலாம். சான்றாக, பஞ்சம், வறட்சி ஏற்படுவதற்கு மழைப்பொழியாமை என்று அறியாமல் மனிதன் அக்காலத்தில் இறைவனுக்கு நரபலி, இரத்தப் படையல் போன்றவற்றைச் செய்தான். இதுபோன்ற செயல்களுக்கு அறியாமையே முதற்காரணமாகக் கூறலாம். இதனையே,

'அறியாமையே மூடபக்திக்கும், பிடிவாதத்திற்கும் மதோன்மத்தத்திற் கும் காரணமாயிருக்கின்றது' (வ.உ.சி. கட்டுரைகள், ப.32) என்ற அடிகள் அறியாமையே மூடநம்பிக்கைக்குக் காரணமாக அமைவதை அறியமுடிகின்றது.

மதச்சண்டைக்குத் தீர்வு:

எல்லா மதக் கடவுள்களும் அக்கடவுள்கள் போதிக்கின்ற கருத்தியல் களும் அன்பையும் அமைதியைச் சொல்கின்ற நிலையில் காணப் பட்டாலும் கடவுளை வணங்குகின்ற பக்தனின் அதீத பக்தியே மதச்சண்டைக்குக் காரணமாக அமைகிறது. அதாவது தான் வணங்கும் கடவுளே உண்மையான கடவுள் என்ற சிந்தனையே காரணமாகக் கருதலாம். இதனாலே மதச் சண்டைகள் உண்டாகின்றன. இச்சிக்கல்கள் இல்லாமல் இருப்பதற்கு அறியாமையும் மூடபக்தியும் பிடிவாதமும் ஒருவகையான காரணம் என்பதை,

'சகல மதஸ்தரின் கடவுளும் ஒரே தன்மைகளையுடையவராய் அதாவது ஒருவராகவே இருக்க, அவரெல்லோரும் அறியாமையினாலும், மூட பக்தியினாலும், பிடிவாதத்தினாலும், மதோன்மத்தத்தினாலும் தமது கண்கள் மறைக்கப்பட்டிருத்தலின், ஒருவருக்கொருவர் நமது கடவுள், நுமது கடவுள் என சண்டையிட்டலறுகின்றனர். ஒவ்வொரு மதஸ்தரும் ஒரே கடவுளைத்தான் வணங்குகிறாரென அவர் அறிகின்றிலர், தமது

மதத்திற்குரிய கடவுளே உண்மையானவரென்றும், புற மதஸ்தருடைய கடவுள் உண்மையல்லாதவரென்றும் அவர் நினைக்கின்றனர். அவ்வெண்ணந்தான் இவ்வளவு விபரீதங்களையும் விளைவிக்கின்றது' (வ.உ.சி. கட்டுரைகள், பக்.31-32) என்ற அடிகள் கடவுள் அனைவருக்கும் பொதுவானவர் என்ற சிந்தனை பெரும்பாலானோர் மனங்களில் எழாமல் உள்ளதன் காரணமாகவே நாட்டில் மதச் சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பதை ஆய்ந்தறியலாம்.

முடிவுரை:

'வ.உ.சி. கட்டுரைகளில் ஆத்திக சிந்தனைகளும் முற்போக்கு கருத்தியல்களும்' என்ற இக்கட்டுரையானது, வ.உ.சி.யின் கடவுள் கொள்கை, விதி அல்லது ஊழ் பற்றிய வ.உ.சி.யின் கருத்தியல், உலக உயிர்களில் மனித பிறவியே உயர்ந்தது என்றும் அத்தகைய மனிதனின் மனம் எதற்கும் திருப்தி அடையாத மனநிலை கொண்டது என்றும் அறியமுடிகின்றது. அதனைப் போன்றே வ.உ.சி. கட்டுரைகளில் உள்ள அறியாமையே மூடநம்பிக்கைகள் எழுவதற்குக் காரணங்களாக அமைகின்றன. பல்வேறு கருத்துகளை இக்கட்டுரையின்வழி அறியமுடிகின்றது.

துணைநூற்பட்டியல்:

1. மா.ரா. அரசு, (தொ. ஆ), வ.உ.சி. கட்டுரைகள், பாரிநிலையம், சென்னை.108., 1989.
2. வ.உ.சி. சுப்பிரமணியம் – சுயசரிதை வ.உ.சி., முதல் பதிப்பு – 1946. முல்லைப் பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை.
3. மா.ரா. அரசு, (தொ. ஆ), இந்திய இலக்கியச் சிற்பிகள், வ.உ.சிதம்பரனார், முதல் பதிப்பு – 2005. சாகித்ய அகாதெமி, புதுதில்லி – 110001.

101

வ.உ.சிதம்பரனாரின் வாழ்வில் திருக்குறளின் தாக்கம்

முனைவர் மு. மணிமேகலா
உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை
மரியா கலை & அறிவியல் மகளிர் கல்லூரி, வள்ளியூர்.

ஆய்வுச் சுருக்கம்:

திருக்குறளைப் பாடாத புலவன் இல்லை. எழுதாத கவிஞன் இல்லை என்று கூறுமளவிற்கு இரண்டடி வெண்பா மனித சமுதாயத்திற்குள் பல்வேறு மாற்றங்களையும் தாக்கங்களையும் ஏற்படுத்தியுள்ளது என்று கூறலாம். அவ்வகையில் இக்கட்டுரையானது செக்கிழுத்த செம்மல் என்றழைக்கப்படும் சிதம்பரனாரின் வாழ்வில் தாக்கத்தையும், திருக்குறள் குறித்த ஆய்வுச் சிந்தனையையும் ஏற்படுத்தியுள்ளது என்ற கருத்தினை மெய்ப்பிக்கும் வகையில் அமைய உள்ளது.

திறவுச்சொற்கள்: வ.உ.சி.யும் திருவள்ளுவரும், வ.உ.சி.யின் பார்வையில் திருக்குறள், சொற்பொழிவுகள், அறப்பால் விருத்தியுரை, பிடித்த அதிகாரங்கள்.

முன்னுரை:

திருவள்ளுவரையும் திருக்குறளையும் பாராட்டாத புலவர்கள் இன்று வரை கிடையாது. தமிழின் தலைசிறந்த படைப்பு மற்றும் உலகப் பொதுமறை திருக்குறள் ஆகும். அந்தச் சிறப்பினால் தான் திருக்குறள் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கப்பலோட்டிய தமிழர் செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் திருக்குறள் மீது மிகுந்த ஈடுபாடு உடையவர். இளமையில் இருந்து இறக்கும் தருவாயிலும் வ.உ.சி.யின் சிந்தனையில் திருக்குறள் நிறைந்திருந்தது என்பதை வ.உ.சி. தனது சுய சரிதையில்,

'மாநிலம் கொண்டிட வள்ளியும் உவந்திட
திருவள்ளுவரின் தெய்வ மாமறையின்
பெருவளக் குறள் சில பேணிப் படித்தேன்'

என்ற வரிகளின் மூலம் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே வ.உ.சி.யின் திருக்குறள் பற்றை அறியமுடிகிறது. இக்கட்டுரை அவர் திருக்குறள் மேல் வைத்திருந்த காதலையும், அவர் திருக்குறளை மெருகேற்றிய விதத்தினையும் எடுத்துக் கூறும் வகையில் அமைந்துள்ளது.

வ.உ.சி.யும் திருவள்ளுவரும்:

திருவள்ளுவரை வ.உ.சி. மிகவும் நேசித்தார். நேர்மையுடனும் ஒழுக்கத்துடனும் மக்கள் வாழ்வதற்கான முறைகளைச் சொன்னவர் என்பது திருவள்ளுவர் குறித்த அவரது மதிப்பீடாகும். திருவள்ளுவரை

அவர் தெய்வப்புலவன் என்றல்லாமல் தெய்வமே என்றே குறிப்பிடுகிறார். இருப்பினும் திருவள்ளுவரது கருத்துகளை அப்படியே ஏற்பதற்கும் சில வரையறைகளை அவர் முன்வைக்கிறார். 'திருவள்ளுவர் ஒரு கவி. ஒப்பற்ற அறிஞர். நானும் அவரைக் கடவுள் என்றே போற்றுகிறேன். அவர் நூலில் வாள் என்றும், வில் என்றும் வேல் என்றும் இருக்கிறதே யன்றித் துப்பாக்கியென்றாவது பீரங்கியென்றாவது இல்லை. இப்பொழுது யுத்தத்திற்குச் சாதனங்களாகத் துப்பாக்கியும் பீரங்கியுமேயிருக்கின்றன. யுத்தத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் நேரிடின் என்ன செய்வது? வள்ளுவர் துப்பாக்கியைப் பற்றியும் பீரங்கியைப் பற்றியும் ஒன்றும் சொல்லவில்லை. எனவே அச்சாதனங்களைக் கொண்டு போர் புரியமாட்டேன். வள்ளுவருக்கு என்ன புத்தியில்லையா? அவரைக் காட்டிலும் நாம் என்ன மேதாவிகளாகிவிட்டோமா? என்று இப்பொழுது ஒருவன் கூறிக் கொண்டிருப்பானானால் அது எவ்வளவு மூடத்தனம் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்'1 என்பது வ.உ.சி. யின் சொற்கள்.

திருக்குறளை அப்படியே கடைப்பிடித்து வாழ எண்ணுவது அறியாமை. காலமாறுதல்களை உணர்ந்து அதற்கேற்ப வாழ்வதே அறிவார்ந்த செயல் என வ.உ.சி. கருதினார் என நாம் எண்ணுவதற்கு இது ஒரு சான்றாக உள்ளது. இது ஒரு முற்போக்கான கருத்துதான் என்பதை தமிழறிஞர்கள் ஒப்புக்கொள்வார்கள் என நம்பலாம். வ.உ.சி. யின் நேசத்திற்கு உகந்த நூற்களில் முதலிடம் திருக்குறளுக்கு உண்டு. அதை மிகவும் நேசித்தார். மக்களுக்குப் பயன் தரக்கூடிய கருத்துகள் திருக்குறளில் உள்ளதாக அவர் நம்பினார். வ.உ.சி. யின் இந்த நம்பிக்கை மிகவும் ஆழமானது. 'அது மக்கள் அடைதற்குரிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களையும், அவற்றை அடையும் நெறிகளையும் ஞாயிறு போல விளக்குகின்ற ஓர் அருமையான நூல்'2 என்கிறார்.

அவரறிந்த அரசியல் பார்வையின்படி நாட்டு மக்களுக்கான அரசியல் வேலைகளில் அவர் உண்மையான அர்ப்பணிப்புடன் ஈடுபட்டிருந்தார். எனவே, மக்களுக்குப் பயன்படக்கூடிய அவசியமான நூல் என அவர் கருதிய திருக்குறளின் மீது நேசம் இருந்ததில் வியப்பு எதுவும் இருப்பதற்கில்லை.

பல உரைகள் இருந்தபோதிலும் வ.உ.சி.யும் திருக்குறளுக்கு உரை எழுதினார். இது எப்படி நடந்தது? திருக்குறளைப் புரிந்து கொள்வதில் சில பிரச்சினைகள் இருப்பதாக அவர் கருதினார். புரிந்து கொள்வதில் எளிமை வேண்டும் என்பதை மட்டும் அவர் பிரச்சினையாக எண்ணவில்லை. தவறில்லாமல் புரிந்து கொள்ள வேண்டும் என்பதையும் அவர் முக்கியப் பிரச்சினையாக எண்ணியிருந்தார் 'திருக்குறளை நேரிய பொருளோடும், பிழைகள் இன்றியும் தமிழ் மக்கள் எளிதில் கற்கும்படியாக அதற்கு ஓர் உரை இயற்றப் பல ஆண்டுகளுக்கு முன் நினைத்தேன்'3 என உரை எழுத வேண்டும் என அவர் எண்ணியதற்கான காரணத்தைக் குறிப்பிடுகிறார்.

சிதம்பரனாரின் பார்வையில் திருக்குறள்:

சிதம்பரனார் திருக்குறளை பின்வரும் பிரிவுகளாக பகுத்துப் பிரித்தார். பதிப்பித்தது, உரை இயற்றியது, வழிநூல் இயற்றியது, மொழி பெயர்த்தது, மாறுபட்டது எனத் திருக்குறள் குறித்த வ.உ.சி.யின். செயற்பாடுகளை ஐந்தாகப் பிரிக்கலாம். வ.உ.சி.க்கு முன்புவரை திருக்குறளுக்கு உரை எழுதியிருந்தவர்கள் 1. தருமர், 2. மணக்குடவர், 3. தாமத்தர், 4. நச்சர், 5. பரிமேலழகர், 6. பருதி 7. திருமலையர், 8. மல்லர் கவிப் பெருமாள், 9. காளிங்கர் ஆகிய பதின்மர் ஆவர். (பதின்மர் என்றால் ஒன்பது பேர் என்று பொருள்.)

திருக்குறளை வ.உ.சி. வாசிக்கத் தொடங்கியது பற்றி அவர் குறிப்பிடும்போது, ‘அப்பதின்மர் உரைகளில் தற்காலம் தமிழ்நாட்டில் பயின்று வழங்குவது பரிமேலழகருரை ஒன்றே. அவ்வுரையைச் சில வருடங்களுக்கு முன்னர் யான் படிக்கத் தொடங்கினேன்.’ [4] என அப்போது எளிதினில் கிடைத்த உரையான பரிமேலழகரின் உரையினை வாசித்ததாகக் குறிப்பிடுகிறார்.

வ.உ.சி. யின் திருக்குறள் பதிப்பின் சிறப்புக் கூறுகள்:

வ.உ.சி.யின் திருக்குறள் பதிப்பின் சிறப்புக் கூறுகளாக கீழ் வருவனவற்றை சங்கர வள்ளி நாயகம் ‘வ.உ.சி. வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும்’ என்ற நூலில் கூறுகிறார். அவர் அருஞ்சொல் விளக்கம் தருதல், சொல் வருவித்து விளக்கம் தருதல், விடுபட்ட பகுதிகளுக்கு விளக்கம் தருதல், விளக்கம் இல்லா இடங்கட்கு விளக்கம் தருதல், உரை ஒப்பீடு, இலக்கணக் குறிப்பு சுட்டுதல், அதிகார வைப்பு முறை என ஏழுவகையாகப் பிரித்து விரிவான விளக்கம் தருகிறார்.

வ.உ.சி. திருக்குறள் மணக்குடவர் உரைப் பதிப்பில் குறள்களையும் உரையினையும் எளிதில் பொருள் கொள்ளும் நிலையில் சந்தி பிரித்துப் பதிப்பித்துள்ளார். பதவுரை தந்துள்ளார். துறவற இயலினைப் பொருத்தமான முறையில் விளக்கியுள்ளார். உரையாசிரியர் உரை காட்டாத குறள்களுக்கு தமது உரையினை வழங்கியுள்ளார். உரையாசிரியர் விடுத்துள்ள அதிகாரங்களுக்கு வைப்பு முறையினையும் சுட்டிக்காட்டியுள்ளார். வ.உ.சி. பதிப்பித்த திருக்குறள் மணக்குடவர் உரை பிறர் காட்டாத பல புதுமைக் கூறுகளுடன் அமைந்துள்ளது என்பார் சங்கர வள்ளிநாயகம்.

திருக்குறள் சொற்பொழிவுகள்:

திருக்குறளில் பெரிதும் ஈடுபாடு கொண்ட வ.உ.சி., திருக்குறள் குறித்த சொற்பொழிவுகளையும் தலைமை உரைகளையும் நிகழ்த்தி வந்தார். ‘1928- ஆம் ஆண்டு தென்காசியில் திருவள்ளுவர் கழகம் நடத்திய முதல் ஆண்டுவிழாவில் தலைமையேற்றுச் சிறப்பித்தவர் தேசபக்தர் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி.தம்பரம்பிள்ளை ஆவார்.’ [5] (பொற்குவியல் தென்காசி 1978.பக்.12) ‘1935 மே மாதத்தில் சாத்தூரில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் நிகழ்ச்சிக்கு வ.உ.சி. தலைமையேற்றுள்ளார்’ [6]

(திருவள்ளுவர் நினைவு மலர், திருவள்ளுவர் திருநாட்கழகம், பவளக்காரத் தெரு, சென்னை. 1936, பக்-136)

திருக்குறள் பாயிர ஆராய்ச்சி:

1929-30களில் வெளிவந்த 'தமிழ்ப்பொழில்' என்னும் இதழில் துணர் 5, மலர் 6, 9, 10 களில் வ.உ.சி., திருவள்ளுவர் திருக்குறள் 'பாயிர ஆராய்ச்சி' குறித்து விரிவான கட்டுரை எழுதியுள்ளார். 1930 - 32 களில் வெளிவந்த 'தமிழ்ப்பொழில்' இதழில் துணர் 6 -இல் பக்கம் 456 முதல் 462 வரை தனது திருக்குறள் 'பாயிர ஆராய்ச்சி' குறித்து தொடர்ந்து எழுதியுள்ளார். இந்த இதழில் திருக்குறள் குறித்த ஆய்வுக்கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதியுள்ளார் என்று அறியலாம். பாயிரம் என்பது நூல்முகம். நூற்கு முகம் போன்று விளங்குதலால் அது நூலுக்கு முகம் எனப்பட்டது. இக்காலத்து வழங்கும் திருக்குறள் சுவடிகளிலெல்லாம் 'கடவுள் வாழ்த்து', 'வான் சிறப்பு' 'நீத்தார் பெருமை', 'அறன் வலியுறுத்தல்' என்னும் நான்கு அதிகாரங்களும் பாயிரமாகக் காணப்படுகின்றன. 'கடவுள் வாழ்த்து' முதலிய மூன்று அதிகாரங்களும் 'உரை கோளாளன்' முதலியோர்களால் கூறப்பெற்ற சிறப்புப்பாயிரம். 'அறன் வலியுறுத்தல்' என்னும் அதிகாரம் ஒன்றே வள்ளுவரால் கூறப்பெற்ற பொதுப்பாயிரம் என்று துவங்கி வ.உ.சி. அந்தக் கட்டுரையில் விரிவாக ஆதாரங்களுடன் எழுதிக் கொண்டே செல்வார்.

துறவறவியலின்கண் 'துறவு' என்ற ஓர் அதிகாரமும் 'மெய்யுணர்தல்' என்ற ஓர் அதிகாரமும் அமைத்துக் கூறிய வள்ளுவர், பாயிரத்தின்கண் 'நீத்தார் பெருமை' என்னும் ஓர் அதிகாரமும் 'கடவுள் வாழ்த்து' என்னும் ஓர் அதிகாரமும் அமைத்துக் கூறுதல் மிகையாம் என்றும் வலியுறுத்துவார் வ.உ.சி. 'வ.உ.சி. கட்டுரைத் தொகுப்பு' என்ற நூலில் 'வ.உ.சி. திருவள்ளுவர் திருக்குறள் பாயிர ஆராய்ச்சி' என்ற கட்டுரையில் இதனை முழுமையாகக் காணலாம்.

வ.உ.சி. யின் திருக்குறள் அறப்பால் விருத்தியுரை:

திருக்குறளின் மீது மிக ஈடுபாடு கொண்டிருந்த வ.உ.சி., அதுவரை எழுதப்பட்ட உரைகள் கடினமாக இருந்ததை உணர்ந்து அனைவரும் படிப்பதற்கேற்ற நிலையில் எளிமையான உரையினை எழுதி 1935-இல் திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் அரங்கேற்றினார். 'காகிதம், மை, கட்டு நூல் முதலியனவெல்லாம் சுதேசியம்' என்ற அறிவிப்புடன் திருக்குறள் அறத்துப்பால் உரையினை வ.உ.சி. வெளியிட்டார். தூத்துக்குடி வேலாயுதம் பிரிண்டிங் பிரஸில் அச்சிடப்பட்ட வ.உ.சி. யின் அறப்பால் விருத்தியுரை 300 பக்கங்களைக் கொண்டது. நூல் அச்சிட்டு முடித்தவுடன் இ. மு. சுப்ரமணிய பிள்ளையின் பார்வைக்கு அதனை அனுப்பி வைத்தார். அவர் நூலில் பிழைதிருத்தம் என இரண்டு பக்கங்கள் அளவில் குறித்து அனுப்பி அதுவும் அச்சாகியுள்ளது. ஆக 302 பக்கங்களைக் கொண்ட அந்த விருத்தியுரை ஒரு ரூபாய் விலையில் அப்போது வெளியிடப்பட்டது.

தர்ம சாஸ்திரம்:

‘1933-ஆம் ஆண்டு தொடங்கிய தூத்துக்குடி கம்பன் கழகத்தின் மூலஸ்தாபகர்களில் ஒருவர் என்றும் கம்பன் பற்றிய ஆராய்ச்சிகள் நிகழ்ந்த ஏறக்குறைய 150 கூட்டங்களுக்கும் வ.உ.சி. வந்து கலந்து கொண்டார் என்றும் தமிழறிஞர் ஏ.சி. பால் நாடார் குறிப்பிடுகின்றார்.’7 (தென்னாட்டுத் திலகர், வ.உ.சி.மலர், பம்பாய் தமிழ் சங்கம், பக்-60)

‘வள்ளுவரையும் கம்பனையும் தமிழர் அனைவரும் கற்க வேண்டுமென்று வ.உ.சி. அந்த நாளில் அடிக்கடி நண்பர்களிடம் கூறுவதுண்டு. அது தர்ம சாஸ்திரம், இது சகோதர தர்ம சாஸ்திரம் அதன் விளக்கம் இது என்று கூறுவார் என்று பி. ஸ்ரீ. வ.உ.சி. யின் இரு பெரும் இலக்கிய ஈடுபாட்டினைச் சுட்டிக்காட்டுகிறார்.’8 (தென்னாட்டுத் திலகர், வ.உ.சி. மலர் பம்பாய் தமிழ் சங்கம், பக்-60)

வ.உ.சி. க்குப் பிடித்த அதிகாரங்கள்:

வ.உ.சி. க்குப் பிடித்த அதிகாரங்கள் ஊழ், செய்ந்நன்றி அறிதல் என்பர். ‘ஊழையும் உட்பக்கம் காண்பார் என்ற குறளையும், எந்நன்றி கொன்றார்க்கும் என்ற குறளையும் எல்லாக் கூட்டங்களிலும் தவறாது சொல்லிக் காட்டுவார்’ 9 என்று பரலி சு. சண்முகசுந்தரம் குறிக்கின்றார். (தமிழ் தந்த வ.உ.சி. என்ற நூலில் தி. லீலாவதி)

மெய்யறம்:

மெய்யறம் திருக்குறளை - திருக்குறள் விளக்கும் நீதிக்கருத்துகளை-மையமாக வைத்து எழுதப்பட்ட நூலாகும். தமிழ் இலக்கியங்களுக்குள் வ. உ.சி.யின் மனதை மிகவும் ஈர்த்தது திருக்குறளே ஆகும். மாக்களைப் போல் மனம் போனபடி வாழ்க்கை நடத்தும் மக்கள் மனந்திருந்தி நல்வாழ்வு வாழத் துணைபுரிவது திருக்குறளே என்பது வ.உ.சி.-யின் அசைக்க முடியாத நம்பிக்கை. மக்கள் மன நலம் பேணி நல்வாழ்வு பெற வேண்டும் என்பதற்காகக் குறளின் அடிப்படையில் மெய்யறம் என்னும் இந்நூலை இயற்றியுள்ளார். இதனைத் திருக்குறளின் வழிநூல் (வள்ளுவர் மறையின் வழிநூல் மெய்யறம்- பாயிரம்- வாரி-2) என்றே வ. உ.சி. குறிப்பிடுகின்றார். திருக்குறள் இரண்டு அடிகளால் ஆனது. மெய்யறம் ஒரே அடியால் ஆனது. அது 133 அதிகாரங்களைக் கொண்டது. இது 125 அதிகாரங்களைக் கொண்டது. இரண்டுமே ஓர் அதிகாரத்திற்கு 10 பாடல்கள் கொண்டவை. திருக்குறளில் கூறப்பட்டவை சுமார் 82 அதிகாரங்களில் மெய்யறத்திலும் கூறப்பட்டுள்ளன.

முடிவுரை:

வ.உ.சி. யினை ஒரு அப்பாவியான அகிம்சா தேசபக்தராகத் தமிழருலகம் அறிந்திருப்பதை விடவும் குறைவாகவே அவரை ஒரு தமிழ்ப் பணியாளராக அறிந்து வைத்துள்ளது. ‘ஜேம்ஸ் ஆலன்’ என்பவரின் சில சிறு ஆங்கில நூல்களைத் தமிழுக்கு அவர் மொழி பெயர்த்துள்ளதைக் கொண்டுதான் அவரது இலக்கிய மற்றும் தமிழ்ப்

பணிகள் மதிப்பிடப்படுகின்றன. இதில் வ.உ.சி. யின் திருக்குறள் குறித்த செயல்கள் விரிவான ஆய்விற்குரியவை. ஆனால் அவ்வாறான ஆய்வுகள் இதுவரை நடைபெறவில்லை என்பதே உண்மை. சமூகப் போராளியாக மட்டுமல்லாமல் இலக்கியத்தின் மீது காதல் கொண்டு பல இலக்கியங்களை எழுதியதோடு நிறுத்திவிடாமல் திருக்குறளோடு ஒன்றி வாழ்ந்துள்ளார் என்பதை இக்கட்டுரை தெளிவுபடுத்தி நிற்கிறது.

துணைநூற் பட்டியல் :

1. வ.உ.சிதம்பரனார், வ.சி. யின் சுய சரிதை ப.60, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியீடு சென்னை, 1990.
2. சங்கரவள்ளி நாயகம், வ.உ.சி. வாழ்க்கை வரலாறும், இலக்கியப் பணிகளும், ப.45, பரிசல் வெளியீடு, 2022.
3. திருவள்ளுவர் தினைவு மலர், திருவள்ளுவர் திருநாட்கழகம், பவளக்காரத் தெரு, 1936, ப.136
4. தென்னாட்டுத் திலகர், வ.உசி. மலர், பம்பாய் தமிழ் சங்கம், ப-60
5. தி. லீலாவதி, தமிழ் தந்த வ.உ.சி. ப-45, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1986.

102

வ.உ.சிதம்பரனாரும் திருக்குறளும்

முனைவர் தாமரை
தலைவர், திருச்சிராப்பள்ளிச் செம்மொழி மன்றம், திருச்சி.

ஆய்வுச்சுருக்கம்:

'நாட்டுக்குழைத்தே நலிந்தவனாய்த் தானிருந்தாலும் தன்

வீட்டுக்குழைக்காது தமிழுக்குள் தானமிழ்ந்தவனாய்' - வாழ்ந்தவர் வ.உ.சி.

விடுதலைப்போரில் அந்நிய எதிர்ப்பைக் கொள்கையோடும் கோட்பாட்டோடும் முன்னெடுத்து, 'வீரனாய்க் களம் கண்டு ஆங்கிலக் கலம் மறுத்த தமிழ்க்களம்' சிதம்பரனார்.

சிறைக்கண்டு, செந்நீரால் முழுக்குண்டு, மாடாய் உழைத்து, ஓடாய்த் தேய்ந்து மனத்திலும் உடலிலும் அரசியல் புண்பட்ட ஈகையர் சிதம்பரனார். அவரது சுதேசிக் கப்பல்கள் ஆங்கிலேயருக்குத் தந்த பேரிடிகள் சிதம்பரனாரின் வாழ்க்கையில் எதிரொலித்தன. அதனால் விளைந்த சிறையே சிதம்பரனாரின் தமிழ்க் கூடலாயிற்று சங்கம் கண்ட தமிழ், சிங்கம் கொண்ட செந்தமிழானது!

தமிழ்ப்பணிகளில் சிதம்பரனாரின் குறள் பணிகள் அவருக்கு மகுடம் சூட்டின. திருக்குறள் ஆய்வு, உரைப்பணி, பதிப்புப்பணி, மற்றும் சொற்பொழிவுகள் அவரைத் 'திருக்குறள் பித்தன்' எனக் காட்டின. திருக்குறள் பணிகள் தமிழிலக்கிய வரலாற்றிலும், திருக்குறள் வளர்ச்சி வரலாற்றிலும் அவருக்கொரு நிலைத்த இடத்தைத் தந்துள்ளன. நாட்டையும் மொழியையும் காத்த மாபெரும் வீரராய் அவர் புகழ் மண்டினி எங்கும் நிலைத்திருப்பதை இக் கட்டுரை நிறுவுகின்றது.

திறவுச்சொற்கள்: திருக்குறள், உரை, மணக்குடவர், தமிழ் மரபு, பதிப்பு. பாயிர ஆராய்ச்சி, பாடபேதம், புத்துரை,

முன்னுரை:

'விடுதலை வேள்வியில் வெள்ளையரின் கொட்டமடக்கக் கடற் பரப்பில் சுதேசிக் கப்பல் விட்டுக் கலங்கடித்த தீரன் வ.உ.சிதம்பரனார். ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு அடங்கிடாது ஆர்ப்பரித்துப் பொருளாதாரப் போர்க்களம் கண்ட புரட்சித் தமிழ்ப்புதல்வன்!

செக்கிழுத்த சிறைச்சாலையை அறச் சாலையாக்க, தமிழ் படித்த புலவன்! விடுதலைப்போராட்டத்தின் கடற்போர் தந்த விழுப்புண்ணாற்ற விருப்பத்தோடு திருக்குறளின் குரலுக்குச் செவி சாய்த்த வளவன் வ.உ.சிதம்பரனார்!

வ.உ.சி. அவர்களின் திருக்குறள் பணிகளில் மணக்குடவர் உரைப் பதிப்பும், திருக்குறளுக்கு உரை கண்டமை மற்றும் அவரது குறள் ஆய்வு குறித்தும் இக்கட்டுரை ஆய்கின்றது.

திருக்குறளும் வ.உ.சி. யும்:

'மாநிலம் கொண்டிட வள்ளியும் உவந்திட

திருவள்ளுவரின் தெய்வ மாமறையின்

பெருவளக் குறள் சில பேணிப் படித்தேன்'

என்றவாறு வ.உ.சி.யின் சுய சரிதையில் இடம்பெற்றுள்ள வரிகளின் வழியே வ.உ.சி. யின் திருக்குறள் ஆர்வத்தை நாம் அறியலாம்.

விடுதலை நாவாய் குறளின் நாவான திறம்:

ஆங்கிலேய ஆட்சியாளர்கள், தேசபக்த செம்மல் வ.உ.சி. மீது தேச துரோக வழக்குத் தொடுத்து சிறையில் அடைத்தனர். அவ்வேளையில் தேசியக் கவி பாரதியார் 'கர்மயோகி' என்னும் மாத இதழை நடத்தி வந்தார். அவ்விதழில் சௌமிய வருடம் பங்குனி மாதம் (மார்ச், 1910) -இல் அவர் குறித்து வெளியிடப்பட்ட செய்தி பின்வருவதாகும்.

சில தினங்களுக்கு முன்பு கோயம்பத்தூர் சென்ட்ரல் ஜெயிலில் இருக்கும் ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளையை அவருடைய மனைவி, மக்களும் அவரது ஆப்தராகிய ஸ்ரீ வள்ளி நாயக சாமியாரும் வேறொரு நண்பரும் பார்வை இடச் சென்றார்கள். அந்த சந்திப்பில் நடந்த சம்பாஷணையினிடையே ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையவர்களின் வாக்கிலிருந்து உதித்த சில வசனங்கள் .... 'தமிழர்களெல்லாம் வள்ளுவர் குறளை உரையுடன் அறிந்து பாராயணம் செய்தல் வேண்டும். 1330 குறளையும் பொருளுடன் உணர்ந்திலாத தமிழர் முற்றும் துறந்த முனிவரே யாயினும், என்னைப் பெற்ற தந்தையேயாயினும் யான் அவரைப் பூர்த்தியாக மதிப்பதுமில்லை; நேசிப்பதுமில்லை' என்பதாகும்.

இது 1910-ஆம் ஆண்டு கோவைச் சிறையில் தன்னைச் சந்திக்க வந்தவர்களிடம் வ.உ.சி. கூறியது. இக்கூற்று வ.உ.சி. திருக்குறள் மீது கொண்டிருந்த மாபெரும் மதிப்பை நமக்கு உணர்த்துகின்றது.

மணக்குடவர் உரைபதிப்பு உருவான வரலாறு:

விடுதலைக்குப் பின் திருக்குறளுக்கு உரை செய்திட்ட பரிமேலழகர் தவிர எஞ்சிய ஒன்பதின்மர் உரைகளைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டார் வ.உ.சி. அவருக்கு மணக்குடவர் உரைப் பிரதி கிடைத்தது. தமக்குக் கிடைத்த பிரதியைச் சென்னை அரசிற்கு உட்பட்ட கையெழுத்துப் புத்தகசாலையில் உள்ள மணக்குடவர் உரைப் பிரதியோடு ஒப்பிட்டுப் பார்த்தார் வ.உ.சி. அரசாங்கப் புத்தகசாலையில் உள்ள மணக்குடவர் உரைப் பிரதியில் அதிகாரப் பெயரும் முறையும் பரிமேலழகர் முறையைப் பின்பற்றியிருந்தனவென்றும், அதில் சில குறள்களின் மூலமும் உரையும் சிதைந்த நிலையிலும், குறைந்த நிலையிலும் இருந்தன' என்றும் வ.உ.சி. திருக்குறள் மணக்குடவர் பதிப்புரையில் கூறியுள்ளார்.

திருக்குறள்பதிப்பு முயற்சியில் ஈடுபட்ட வ.உ.சி. அவர்கள் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர் அவர்களிடத்தில் இருந்த மணக்குடவர் உரைப் பிரதியைத் தருவித்துப் பார்த்தார். அந்தப் பிரதி முற்கூறிய அரசாங்கத்தின் புத்தகப்பிரதியிலிருந்து பிரதியெடுக்கப்பட்டது என்பதையும் அறிந்தார். தமக்குக் கிடைத்த மணக்குடவர் உரைப்பிரதியையும், உ.வே.சா. அவர்களிடம் பெற்ற பிரதியையும் வைத்துக்கொண்டு சாமி சகஜானந்தர் உதவியுடன் இருப்பவற்றை ஒழுங்குபடுத்தியும் பிழைபட்டனவற்றை நீக்கியும் மணக்குடவர் உரையை முழுமையாகப் பதிப்பித்துள்ளார்.

மணக்குடவர் உரையினைப் பதிப்பித்தமைக்கு முக்கியக் காரணம்:

‘மணக்குடவரும் பரிமேலழகரும் அதிகார முறையிற் சிறிதும், பாக்களின் முறையில் பெரிதும் வேறுபட்டிருப்பதோடு, பல குறள்களில் வெவ்வேறு பாடங்கள் கொண்டு பலப்பல குறள்களுக்கு வெவ்வேறு பொருள்கள் உரைத்துள்ளனர். இவ்வேற்றுமைகளைக் காண்பார் திருக்குறளின் பெருமையையும், அதன் மூல பாடங்கள் வேறுபட்டுள்ள தன்மையையும் நன்கு அறிவதோடு குறள்களுக்குப் புதிய பொருள்கள் உரைக்கவும் முயல்வர். அவர் அவ்வாறு செய்ய வேண்டுமென்னும் விருப்பமே யான் இவ்வுரையை அச்சிடத் துணிந்ததற்கு முக்கியக் காரணம்’ என்று வ.உ.சி. திருக்குறள் மணக்குடவர் உரையினைப் பதிப்பித்த சூழலை அவ்வுரையின் முன்னுரையில் விளக்குகின்றார்.

வ.உ.சி. யின் திருக்குறள் பதிப்பின் சிறப்புக் கூறுகள்:

வ.உ.சி. யின் திருக்குறள் பதிப்பின் சிறப்புக் கூறுகளாகக் கீழ்வருவனவற்றைச் சங்கர வள்ளி நாயகம் ‘வ.உ.சி. வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும்’ என்ற நூலில் கூறுகிறார். அவர் அருஞ்சொல் விளக்கம் தருதல், சொல் வருவித்து விளக்கம் தருதல், விடுபட்ட பகுதிகளுக்கு விளக்கம் தருதல், விளக்கம் இல்லா இடங்கட்கு விளக்கம் தருதல், உரை ஒப்பீடு, இலக்கணக் குறிப்பு சுட்டுதல், அதிகாரவைப்பு முறை என ஏழுவகையாகப் பிரித்து விரிவான விளக்கம் தருகிறார்.

வ.உ.சி. திருக்குறள் மணக்குடவர் உரைப் பதிப்பில் குறள்களையும் உரையினையும் எளிதில் பொருள் கொள்ளும் நிலையில் சந்தி பிரித்துப் பதிப்பித்துள்ளார். பதவுரை தந்துள்ளார். துறவற இயலைப் பொருத்தமான முறையில் விளக்கியுள்ளார். உரையாசிரியர் உரை காட்டாத குறள்களுக்குத் தமது உரையினை வழங்கியுள்ளார். உரையாசிரியர் விடுத்துள்ள அதிகாரங்களுக்கு வைப்பு முறையினையும் சுட்டிக் காட்டியுள்ளார் வ.உ.சி. பதிப்பித்த திருக்குறள் மணக்குடவர் உரைப் பிறர் காட்டாத பல புதுமைக் கூறுகளுடன் அமைந்துள்ளது என்பார் சங்கரவள்ளி நாயகம்.

திருக்குறள் சொற்பொழிவுகள்:

திருக்குறளில் பெரிதும் ஈடுபாடு கொண்ட வ.உ.சி., திருக்குறள் குறித்த சொற்பொழிவுகளையும், தலைமை உரைகளையும் நிகழ்த்தி வந்தார்.

1928- ஆம் ஆண்டு தென்காசியில் திருவள்ளுவர் கழகம் நடத்திய முதல் ஆண்டுவிழாவில் தலைமை ஏற்றுச் சிறப்பித்தவர் தேசபக்தர் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி.தம்பரம் பிள்ளை ஆவார்.[1]

1935 மே மாதத்தில் சாத்தூரில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் நிகழ்ச்சிக்கு வ.உ.சி. தலைமை ஏற்றுள்ளார்.[2]

திருக்குறள் 'பாயிர ஆராய்ச்சி':

1929-30களில் வெளிவந்த 'தமிழ்ப்பொழில்' என்னும் இதழில் துணர் 5, மலர் 6,9,10 களில் வ.உ.சி., திருவள்ளுவர் திருக்குறள் 'பாயிர ஆராய்ச்சி' குறித்து விரிவான கட்டுரை எழுதியுள்ளார்.

1930-32களில் வெளிவந்த 'தமிழ்ப்பொழில்' இதழில் துணர் 6 -இல் பக்கம் 456 முதல் 462 வரை தனது திருக்குறள் 'பாயிர ஆராய்ச்சி' குறித்து தொடர்ந்து எழுதியுள்ளார். இந்த இதழில் திருக்குறள் குறித்த ஆய்வுக்கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதியுள்ளார் என்று அறியலாம்.

பாயிரம் என்பது நூல்முகம். நூற்கு முகம் போன்று விளங்குதலால் அது நூல்முகம் எனப்பட்டது. இக்காலத்து 'கடவுள் வாழ்த்து', 'வான் சிறப்பு' 'நீத்தார் பெருமை', 'அறன் வலியுறுத்தல்' என்னும் நான்கு அதிகாரங்களும் திருக்குறளுக்குப் பாயிரமாகக் காணப்படுகின்றன.

'கடவுள் வாழ்த்து' முதலிய மூன்று அதிகாரங்களும் 'உரை கோளாளன்' முதலியோர்களால் கூறப் பெற்ற சிறப்புப்பாயிரம். 'அறன் வலியுறுத்தல்' என்னும் அதிகாரம் ஒன்றே வள்ளுவரால் கூறப்பெற்ற பொதுப்பாயிரம் என்று வ.உ.சி. அந்தக் கட்டுரையில் விரிவாக ஆதாரங்களுடன் எழுதிக் கொண்டே செல்வார்.

துறவறவியலின் கண் 'துறவு' என்ற ஓர் அதிகாரமும் 'மெய்யுணர்தல்' என்ற ஓர் அதிகாரமும் அமைத்துக் கூறிய வள்ளுவர், பாயிரத்தின் கண் 'நீத்தார் பெருமை' என்னும் ஓர் அதிகாரமும் 'கடவுள் வாழ்த்து' என்னும் ஓர் அதிகாரமும் அமைத்துக் கூறுதல் மிகையாம் என்றும் வலியுறுத்துவார் வ.உ.சி.

'வ.உ.சி. கட்டுரைத் தொகுப்பு' என்ற நூலில் 'வ.உ.சி. திருவள்ளுவர் திருக்குறள் பாயிர ஆராய்ச்சி' என்ற கட்டுரையில் இதனை முழுமையாகக் காணலாம்.

வ.உ.சி. யின் திருக்குறள் அறப்பால் விருத்தியுரை:

திருக்குறளின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த வ.உ.சி., அதுவரை எழுதப்பட்ட உரைகள் அனைத்தும் கடினமாக இருந்ததை உணர்ந்து, அனைவரும் படிப்பதற்கேற்ற நிலையில் எளிமையான உரையினை எழுதி 1935-இல் திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் அரங்கேற்றினார்.

'காகிதம், மை, கட்டு நூல் முதலியனவெல்லாம் சுதேசியம்' என்ற அறிவிப்புடன் திருக்குறள் அறத்துப்பால் உரையினை வ.உ.சி. வெளியிட்டார்.[3]

திருக்குறள் அறப்பால் முன்னுரை:

முன்னுரையில் வ.உ.சி. அறப்பால், பொருட்பால், இன்பப்பால் ஆகிய மூன்று பால்களின் உரைகளையும் மூலத்துடன் அச்சிட்டு அவற்றை ஒரே புத்தகமாக வெளியிட வேண்டுமென்று நினைத்ததாகக் குறிப்பிடுகிறார். (1935-இல் வ.உ.சி. வெளியிட நினைத்தது 2008-ஆம் ஆண்டு பாரி நிலையத்தாரால் வெளியிடப்பட்டது)

வ.உ.சி. 'அறப்பாலில் 76 குறள்களில் என் உரை பரிமேலழகர் உரைக்கு வேறுபடுகின்றது.

12 குறள்களில் என் உரை அவர் உரையை வெளிப்படையாக மறுக்கின்றது.

5 குறள்களில் என் உரை அவர் உரையை வெளிப்படையாக ஆமோதிக்கின்றது.

மீதக்குறள்களில் என் உரையும் அவர் உரையும் ஒத்திருக்கக் கூடும்.' [4] என்று கூறுகிறார்.

வ.உ.சி. உரை:

'பொருள் என்னும் தலைப்பில் பதவுரை எழுதியுள்ளேன். அவ்வுரையில் பொருள் புரிந்து கொள்வதற்காக வருவிக்கப்பட்ட சொற்களை () இவ்வடையாளங்களுக்குள் எழுதியுள்ளேன்.

அகலம் என்னும் தலைப்பில் இலக்கணக்குறிப்பு, வினா விடை, மேற்கோள், பாடபேதம் முதலியவற்றை எழுதியுள்ளேன்.கருத்து என்னும் தலைப்பில் கருத்தினை எழுதியுள்ளேன்.'

- என வ.உ.சி. தாம் உரை எழுதியுள்ள விதத்தை அவரே விளக்குகிறார்.

அறப்பால் விருத்தியுரைச் சிறப்புகள்:

பாட பேதம் காணல்:

'பெற்றாற் பெறிற் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு'. *(குறள்.28)*

'இக்குறளில் 'பெறிற் பெறுவர்' என்பது 'பேணிற் பெறுவர்' என்று பாடமாய் இருந்திருக்கலாம். ஓலைச் சுவடியில் இருந்து மாற்றி எழுதும் போது 'பேணிற் பெறுவர்' என்ற வார்த்தை 'பெறிற்' என்று எழுதப் பட்டிருக்கலாம் என்றும் 'பேணில்' என்ற பாடத்தை வைத்துப் படித்தால் பொருள் மிக எளிதாய் விளங்கும் என்றும் உரையாசிரியர் 'பெறிற் பெறுவர்' என்ற வார்த்தையை வைத்துக் கொண்டு சுற்றி வளைத்துப் பொருள் சொல்லுகிறார்கள் என்று வ.உ.சி. அவர்கள் கூறினார்'

எனப் பிள்ளையவர்களிடம் நேரில் பாடம் கேட்ட தி.கா.அறம் வளர்த்த நாதன் தமது 'வ.உ.சி.யின் திருக்குறள் பரப்பும் தொண்டு' என்ற நூலில் கூறியுள்ளார், மேலும் மிகத் துணிந்து பாட பேதம் காணும் வ.உ.சி.யின் திறத்தைப் பாராட்டுகின்றார்.

பழைய உரை மறுத்துப் புத்துரை தருதல்:

'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்

புன்கணீர் பூசல் தரும்' *(குறள்.41)*

என்ற குறளுக்கு, அடைக்கும் தாழ் அன்பிற்கு உண்டோ?(அகத்தினின்றும் வெளிப்படாமல்) அடைத்து வைக்கும் (வலிய) கதவு அன்பிற்கும் உண்டோ? ஆர்வலர் புன்கண் ஈர் பூசல் தரும்- அன்பு செய்யப்பட்டாரது துன்பம் (அக்கதவை) பிளக்கும் தாக்குதலை உண்டாக்கும் என்று பதம் பிரித்து வ.உ.சி. பொருள் உரைப்பர். 'புன்கணீர்' என்பதைப் 'புன்கண் ஈர்' என்று பிரித்துப் பொருள் கண்டிருப்பது நோக்கத் தக்கது.

அகல உரையில், இதனை விளக்கும் போது ஆர்வலர் 'புன்கணீர் பூசல் தரும்' என்பதற்கு 'தம்மால் அன்பு செய்யப்பட்டவரது துன்பங்கண்டுழி' என்று சொற்களை வருவித்து 'அன்புடையார்(கண் பொழிகின்ற) புல்லிய கண்ணீரே (உள் நின்ற அன்பினை எல்லோரும் அறியத் தூற்றும்)' என்று உரைப்பாரும் உளர். அவர் 'ஆர்வலர்' என்பதற்கு 'அன்பு செய்யப்பட்டார்' என்பதே பொருள் என்பதை அறியார். அன்றியும் 'துன்பம்' என்னும் பொருள் தரும் 'புன்கண்' என்ற சொல்லைப் புன், கண் எனப் பிரித்தும், அடைக்கும் தாழ் உண்டோ? என்ற வினாவிற்கு விடையில்லாதும் பொருள் உரைத்து இடர்ப்பட்டனர் என உரை வகுத்துச் செல்லுகின்றார்.5

நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்பப் பொருள் கூறுதல்:

'தோன்றிற் புகழோடு தோன்றுக' என்ற குறட்பாவிற்குப் 'புகழ் இல்லையெனில் பிறவாமல் சாவதே மேல்' என்று உரைகண்ட நாளில் வ.உ.சி.'எத்தொழிலில் ஈடுபடுவோரும் அதனால் புகழ் வரும்படியாகத் திறம்படத் தொழிலாற்ற வேண்டும். இல்லையெனில் அதில் ஈடுபடாமலே இருத்தலே சிறந்தது' என்று கருத்துத் தெரிவிப்பார். வாழ்க்கைக்கு ஏற்ற வண்ணம் அறக்கருத்துகளைத் புரிந்து கொள்ளுதல், நடைமுறை வாழ்வில் அவற்றைக் கடைபிடித்தற்கு வகை செய்யும் என்ற உண்மையை உணர்ந்தவர் வ.உ.சி.

பரிமேலழகர் உரை மறுத்தல்: வ.உ.சி. யின் பெண்மை போற்றல்:

'ஈன்ற பொழுதின்' என்ற குறட்பாவிற்குப் "பெண்ணியல்பால் தானாக அறியாமையின் கேட்ட தாயெனக் கூறினார்' என்று உரைப்பாரும் உளர்.

'பெண்ணின் இயல்பு தானாக அறியாமை' என்பது அறிவிலார் கூற்றென அவ்வுரையை மறுக்க' [6] எனக் கடுமையாக (பரிமேலழகரை) சாடுகிறார் வ.உ.சி. இக்கடுமை வ.உ.சி. பெண்கள்பால் கொண்ட பெருமதிப்பைக் காட்டுவதாகும்.

மேற்கண்ட சான்றுகள் நாம் வ.உ.சி. யை சிறந்த உரையாசிரியராக இனம் கண்டு பாராட்ட வழிவகுக்கின்றன.

ஆய்வாளர் வ.உ.சி.:

குறள் மக்களிடையே பரவலான செல்வாக்குப் பெறாத காலங்களில் குறளைப் பரப்பியும், உரை விளக்கம் தந்தும், புது விளக்கம்(Interpretation),

மறு விளக்கம் (Re interpretation) என்ற இரு வகை ஆய்வு நெறிகளைப் பின்பற்றிப் புத்துரையும் மறு உரையும் கண்டு, தமிழ் இலக்கிய நலன்களைப் போற்றிக் காத்த வ.உ.சி. யின் தொண்டு, குறிப்பாகக் குறள் தொண்டு, தமிழ் ஆய்வு வரலாற்றில் மிகப் பாராட்டிப் போற்றத்தக்கதாம் என்று தமது 'தமிழ் தந்த வ.உ.சி.' என்ற நூலில் முனைவர் தி. லீலாவதி குறிப்பிட்டுள்ளார்.

வ.உ.சி. க்குப் பிடித்த அதிகாரங்கள்:

வ.உ.சி. க்குப் பிடித்த அதிகாரங்கள் ஊழ், செய்ந்நன்றி அறிதல் என்பர். 'ஊழையும் உட்பக்கம் காண்பார்' என்ற குறளையும், 'எந்நன்றி கொன்றார்க்கும்' என்ற குறளையும் எல்லாக் கூட்டங்களிலும் தவறாது சொல்லிக் காட்டுவார் என்று பரலி சு. சண்முகசுந்தரம் குறிக்கின்றார்.

முடிவுரை:

'மஞ்சிலா வான மதியின் ஒளிபோல
விஞ்சிநீ டூழி விளங்குகவே – வன்சிறையில்
செக்கிழுத்த வீரன் சிதம்பரன் மெய்ப்புகழ்
மக்களிடை ஓங்கி வளர்ந்து'

என்ற கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையின் வாழ்த்தென நம் மனத்தில் வாழும் வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம் பிள்ளை எனும் பெயரைக் கொண்ட வ.உ.சிதம்பரனார் 1872ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ஆம் தேதி பிறந்தார். 1936ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் தேதி மறைந்தார். சுமார் 64 ஆண்டுகள் அவர் வாழ்ந்திருக்கும் இவ்வுலகவாழ்க்கையில்,

அ) தாய் நாட்டின் மானம் காக்க விடுதலைப்போரிலும்

ஆ) தாய்மொழி காக்க தமிழ்மரபின் படி திருக்குறள் உரை தந்து தமிழிலக்கிய உலகிலும் - உடல், பொருள் ஆவியைத் தந்து பாடாண் திணைக்குப் பாடுபொருளானார்! வரலாறாய் வாழும் வாழ்வினரானார்.

'நாடும் மொழியும் நமதிருக்கண்கள்' – என்ற பாரதியின் வாக்கிற்கு வாழ்வானார் என இக் கட்டுரை நிறுவுகின்றது. எனவே அவரது புகழ் பாடுதல் நம் கடனன்றோ?

ஏனெனில் நன்றி மறப்பது நன்றன்று! நாட்டுக்குழைத்த நல்லவராம் செக்கிழுத்த செம்மலை நன்றியோடு போற்றுவோம்!

அடிக்குறிப்புகள்:

- பொற்குவியல், தென்காசி 1978.பக்.12, 02. திருவள்ளுவர் நினைவு மலர், திருவள்ளுவர் திருநாட்கழகம், பவளக்காரத் தெரு, சென்னை. 1936, பக்-136, 03. திருவள்ளுவநாயனாரும் திருக்குறளும் தேசாபிமானி வ.உ.சி.தம்பரம் பிள்ளை விருத்தியுரையும் (அறப்பால்) முன்னுரை, 04. மேலது, 05. மேலது பக்.143, 06. மேலது, பக்.141-142

துணைநூற்பட்டியல்:

1. தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் திருக்குறளும் தேசாபிமானி வ.உ. சிதம்பரம்பிள்ளை விருத்தியுரையும், 1935.
2. அறம் வளர்த்த நாதன், தி.கா. 'வ.உ.சி.யின் திருக்குறள் பரப்பும் தொண்டு (https://solvanam.com/2016)
3. தென்னாட்டுத் திலகர், வ.உ.சி.மலர், பம்பாய் தமிழ் சங்கம்,
4. வ.உ.சி., சுயசரிதை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1990
5. லீலாவதி, தி. முனைவர், தமிழ் தந்த வ.உ.சி., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதல்பதிப்பு 1986

குறிப்பு: இக்கட்டுரையில் குறட்பா எண்கள் வ.உ.சி.யின் விருத்தியுரை முறைவைப்பின் படி குறிப்பிடப்பட்டுள்ளன.

103

வ.உ.சி. படைப்புலகும் கருத்துலகும்: அகாலனிய நோக்குநிலையை முன்வைத்து...

முனைவர் ம. கருணாநிதி
தமிழ் உதவிப் பேராசிரியர், தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்.

கட்டுரைச்சுருக்கம்:

காலனியாதிக்கம் தமிழ்நாட்டிற்குள் உள்நுழைந்தபோது பலரிட மிருந்து எதிர்ப்புக்குரல்கள் ஒலிக்கத்தொடங்கின. கலை, இலக்கிய வடிவங்களில் தம் எதிர்ப்புணர்வைத் தெரிவித்தார்கள். காலனிய ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களில் அறிவுப்பூர்வமாகவும், உணர்வுப்பூர்வ மாகவும் செயல்பட்டவர் வ.உ.சி. ஆவார். எழுத்தாக்கங்களிலும், பேச்சிலும், களப் போராட்டத்தின் வழியாகவும் இந்திய விடுதலையைத் தமிழ்நாட்டில் முன்னெடுத்தவர்களில் முக்கியமானவராவார்.

வ.உ.சி. தம் படைப்புகளின் வழியாகச் சுதேசியச் சிந்தனையை விரிவுபடுத்தினார். வ.உ.சி.யின் படைப்புகள் கட்டமைக்கும் கருத் துலகும், வ.உ.சியைப் பற்றிப் பிற படைப்பாளுமைகள் கட்டமைத்த, கருத்துலகை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது. குறிப்பாக, காலனிய ஆதிக்கவுணர்வுகளிலிருந்து அக, புறச்சூழலிலிருந்தும் விடுபட காலனிய காலத்திலேயே காலனியத்தை வ.உ.சி. எதிர்த்திருக்கிறார். காலனியம் தோற்றம் பெற்று இருபதாம் நூற்றாண்டு கடந்த சூழலிலும் காலனிய மனநிலை நம் எல்லோருக்குள்ளும் ஊடுருவி எல்லாத் தளங்களிலும் வேற்றுமையையும், சமனின்மையும் போதிக்கிற நிலை இன்றும் நிலவுகிறது. காலனிய எதிர்ப்பு, காலனிய நீக்கம், காலனிய முதலாளியத்திற்கு எதிர்த்தல் என்கிற குணநிலையைக் கொண்டதாக வ.உ.சி. படைப்புலகும் கருத்துலகும் அகாலனிய நோக்குநிலையை மையங்கொண்டுள்ளது.

அகாலனியம் எனும் சொற்பயன்பாடு காலனியத்திற்கு எதிர் அர்த்தத்தைத் தருகிறது. இந்தியாவில் மேற்குலக ஆட்சிமுறை நடந்துமுடிந்த காலத்தில் பின் காலனியம் எனும் சிந்தனைமுறை பின் நவீனத்துவத்தின் நீட்சியாகத் தோற்றம் பெறுகிறது. இந்தியாவில் காலனியம் தோற்றம் பெறத்தொடங்கிய காலத்திலிலேயே அதைக் கடுமையாக எதிர்த்த காரணத்தால் காலனியத்திற்கு எதிர்நிலைச் சொல்லாக அகாலனியம் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

திறவுச்சொற்கள்: முன்னுரை, காலனியம், அகாலனிய நோக்கு நிலை, காலனிய நீக்கம், சுதேசியம், வ.உ.சி. படைப்புலகும் கருத்துலகும், நிறைவுரை, துணை நூற்பட்டியல்.

முன்னுரை:

இந்திய விடுதலைக்கு முன் தமிழ்ப் படைப்பாளர்கள் களத்தி லும் எழுத்திலும் காலனிய எதிர்நிலைப்பாட்டை துணிவோடு தெரிவித் திருக்கிறார்கள். மேற்குலகிலிருந்து வருகை தந்த போர்ச்சுகீசியர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள், டேனிஷ்காரர்கள் ஆகியோர் பல்வேறு குழுக்களாக இந்தியாவெங்கிலும் கிழக்கு இந்தியக் கம்பெனிகளை உருவாக்கி, வர்த்தகத்தை விரிவுபடுத்தினார்கள். காலனிய முதலாளியம் சார்ந்த வர்த்தகத்தைப் பெரிதும் விரிவுபடுத்துவதற்காகத் தமிழ்நாடு, இந்தியாவில் ஆட்சி செய்த மன்னர்களிடம் உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டு, காலனிய முதலாளித்துவத்தைப் பெருக்கினார்கள். காலனிய முதலாளியம் மேற்குலகில் செல்வாக்குப் பெற்றதோடு அதிகார மையமாகவும், ஆதிக்கக் குணநிலையைத் தன்னகத்தே கொண்டு செயல்படத் தொடங்கின.

இச்சூழலில் நவீனப் பொருளாதாரம், நவீன வாழ்வியல் முறை, நவீன முதலாளியம், நவீனம் என்கிற சிந்தனைப்போக்கு சமூகத் தின் பொதுப்புத்தியில் உறையத் தொடங்கியது. கல்வி, இலக்கியம், தத்துவம், தொழில், விவசாயம், ஏனைய உற்பத்தி முறைகள், உற் பத்திக்கருவிகள் மற்றும் நவீனப் புழங்கு பொருள்கள் எனக் காலனியம் ஏகாதிபத்தியத் தரகு முதலாளியத்திற்கு வலிகோலியது. அனைத்துத் தளங்களிலும் மேற்குலகின் காலனிய மனநிலையே காலனிய ஆதிக்கத்திற்கு இட்டுச் சென்றது.

காலனிய ஆட்சியிலான முதலாளித்துவத்தால் தமிழ், இந்தியச்சூழலில் வழங்கிவந்த உற்பத்தி முறை, மரபுசார் வேளாண் தொழில்நுட்பம், வேளாண் உற்பத்தி, வணிகம், தற்சார்பை மையப்படுத்திய உற்பத்தி முறை இவ்வாறான அனைத்துத் தளங்களில் பல மாற்றங்களை காலனிய ஆட்சி முன்வைத்துள்ளது.

காலனியம், அ காலனிய நோக்குநிலை:

மொழிவாரியான மாநிலங்களைக் கொண்ட இந்தியா எனும் ஒன்றி யத்திற்குள் காலனியம் அகற்றப்பட வேண்டும் என்று அனைத்து மாநிலங் களிலும் உள்ள சிந்தனையாளர்கள், படைப்பாளர்கள், களப்போராளிகள், மிதவாதம், தீவிரவாதம் எனும் இவ்விரு கொள்கைத் தளத்தில் செயல்பட முற்பட்டார்கள். காலனியாளர்களை அகற்ற வேண்டும்; காலனிய முதலாளித்துவத்தை ஒழிக்க வேண்டும்; காலனியப் பண்பாட்டு அடையாளங்களை நீக்கவேண்டும்; காலனியத்திற்கு மாற்றாகப் பன்மைப் பண்பாட்டையும், பன்மைத்துவ அடையாளத்தையும் இந்திய விடுதலையை மையப்படுத்திப் போராட்டத்தை நடத்தினார்கள்.

இவ்வாறான காலனிய எதிர் நிலைப்பாட்டையே வ.உ.சிதம்பரனார் முன்வைத்தார். இந்தியச் சூழலில் காலனியத்திற்கு எதிரான குரல்கள் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்தன. காலனிய முதலாளித்துவத்தை எதிர்க்க வேண்டும். நம் மக்களுக்கான, நம் நாட்டிற்கான சுதேசியச் செயல்

பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்கிற சிந்தனைப் பின்புலத் திலேயே வ.உ.சி. யின் கள, எழுத்துச் செயல்பாட்டில் காலனியத்திற்கு எதிரான இயங்கியல் தன்மை அமையப்பெற்றுள்ளது. வ.உ.சியின் படைப்புலகும், கருத்துலகும் சுதேசியத்தை இணைக்கும் சுதந்திரக் கோடுகளாகப் பயணிக்கின்றன.

மேற்கல்லாத நாடுகளின் வரலாற்றுப் பாதையில் காலனிய எதிர்ப்பு, தேசியம், இன உணர்வு சார்ந்த இயக்கங்களும், நிறவெறி எதிர்ப்பு இயக்கங்களுக்கும் முக்கிய பாத்திரம் இருக்கும் என மார்க்ஸ் கருதினார். ரஷ்யா, இந்தியா, அயர்லாந்து போன்ற நாடுகளில் கிராமப்புற விவசாயிகளின் கூட்டு அடையாள வடிவங்கள் முதலாளிய எதிர்ப்பின் வேர்களாக முடியும். (ந.முத்துமோகன்: 2021, பக்.48-49) காலனிய ஆட்சியின் மையத்துவமான வாழ்க்கை ஆங்கிலேயக் காலனிய ஆட்சியைப் பலவீனப்படுத்தும் அம்சங்களாக சுதேசிய முதலாளியம் வ.உ.சி. படைப்பாக்கங்களின் வழியாகக் கட்டமைக்கப்பட்டிருப்பதைப் பார்க்க முடிகிறது.

காலனிய முதலாளியத்திற்கு எதிராக தன் களச்செயல்பாட்டை வ.உ.சி. தொடங்கி வைத்தார். அதன் விளைவாக சிறை சென்றார்; செக்கிழுத்தார்; ஆங்கிலேய காலனிய ஆதிக்கத்தால் துன்புறுத்தப் பட்டவர்களில் வ.உ.சிதம்பரம், சுப்பிரமணிய சிவா எனப் பலர் ஆவார்கள். வ.உ.சி. சுதேசியக் கப்பல் கம்பெனி வழியாகச் சுதேசிய முதலாளியம் என்கிற கூட்டு முதலாளித்துவம் இந்தியாவில் நிலவ வேண்டும் என நினைத்தார். இச்சிந்தனையை தம் படைப்புகளிலும் கருத்துப் பிரச்சாரத்திலும் விரிவுபடுத்தினார்.

காலனிய நீக்கம்:

சுதேசியம் சார்ந்த அரசியல் செயல்பாடு மொழி, சமயம், மரபுசார் அறிவு, மரபுசார் மருத்துவம், பாரம்பரிய கலை, பண்பாட்டு மரபுகள், பண்பாட்டு விழுமியங்கள், தேசிய அடையாள எழுச்சி, சமூகப் பொருளாதாரப் பண்பாட்டுத் தளங்களில் அ-காலனிய நடவடிக்கைகள் யாவும் காலனியத்திற்கு எதிர் நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு கட்டி எழுப்பப்பட்டது.

ஆங்கிலேய காலனியத்துவம் அனைத்துச் செயல்பாடுகளையும் இந்தியச் சூழலில் எவ்வாறு கட்டமைக்கப்பட்டதோ அதற்கு எதிர்மையாக அ-காலனியச் செயல்பாடுகளும், நடவடிக்கைகளும், கட்டமைப்புகளும் இந்திய விடுதலையை மையப்படுத்தியதே கட்டமைக்கப்பட்டது. அத்தோடு சுதேசியத்தை முதன்மைப்படுத்தி, காலனிய நீக்கத்திற்கான பணிகளையும் செய்தது என்றே சொல்ல வேண்டும். ‘மனித குல வேற்றுமை மனத்திலும் கொள்ளேன்./ ஆண்மையும் விடுத்தேன்; அடிமையானேன்.’ (வ.உ.சியின் சுயசரிதை, ப.33)

காலனிய நீக்கம் என்பது சுதேசிய மையமாக்கலை அடிப்படையாகக் கொண்டதாகவும், ஆங்கிலேய காலனிய ஆதிக்கத்திற்கு எதிர் நிலைப் பாட்டை உருவாக்கக் கூடியதாகவும் அமையக் கூடியதாகும். காலனிய

நீக்கத்தில் செயல்படும் எதிர் நிலைப்பாடே முதல்கட்டமாகும். முதல் கட்ட வேலைத்திட்டத்திலேயே காலனியாளர்களால் தாக்குதல் நிகழ்கின்றது. காலனிய நீக்குதலைப் பற்றிப் பேசுபவர்களின் மேல் வன்முறைத் தாக்குதலும் நிகழ்ந்ததுண்டு. இத்தாக்குதல் இன்றைய சூழலிலும் நீள்கிறதுதான் காலக்கொடுமையாகும்.

19ஆம் நூற்றாண்டு அளவில் சுதேசியம் பேசுபவர்களையும் சுதேசியப் பொருள்களுக்கு எதிரான தடை உத்தரவையும் காலனிய ஆட்சியாளர்கள் விதித்தார்கள். காலனிய ஆதிக்கத்திற்கு ஆளான மொழிவாரியான மாநிலங்களில் காலனிய நடவடிக்கை வன்முறையாக மாறி, மொழி ரீதியான களப்போராளிகளைத் தாக்குதலை நடத்தினார்கள். இந்தத் தாக்குதலின் உச்சத்தில் உடலளவிலும் மனதளவிலும் வலிகளோடு சிறையில் அடைக்கப்பட்டு உள்ளார்கள்.

காலனிய ஆதிக்கத்தால் சிறையிலேயே தம் உயிரை ஈகை செய்தவர்கள் பலர். இதில் வத்தலக்குண்டில் வாழ்ந்த சுப்ரமணிய சிவா வ.உ.சி. யின் நெருங்கிய நண்பராக இருந்தவர். இருவரும் சிறை சென்று செக்கிழுத்தார்கள். வ.உ.சி. அவர்கள் சிறைச்சாலையில் செக்கிழுத்துச் செம்மலானார். காலனிய நீக்கத்திற்குச் சுதேசியம் குறித்த சிந்தனையின் பங்கு முக்கியத்துவம் நிறைந்ததாக இருந்தது. அந்தவகையில் வ.உ.சி. யின் படைப்புலகமும் கருத்துலகமும் சுதேசியக் கருத்தியல் சார்ந்த எழுத்துச்செயல்பாடுகளாக அமையப்பெற்றுள்ளன.

சுதேசியம்:

'சுதேசியம் வளர்த்ததைச் சொல்வேன்.' *(வ.உ.சியின் சுயசரிதை, ப.37)*

'சுதேசியக் கைத்தொழில் வளர்க்கவும் கைத்தொழில் கொள்ளவும்/ எத்தைகைய முயற்சி இயற்றினன்' *(மேலது, ப.40)*

'சுதேசியம் ஒன்றே சுகம்பல அளிக்கும் / இதே என் கடைப்பிடி என்றனன்' *(மேலது, ப.40).*

காலனிய முதலாளித்துவத்தை எதிர்ப்பதற்குச் சுதேசியத்தை முன்வைத்துப் போராடினார்கள். அதில் வ.உ.சி. யின் படைப்புலகும் கருத்துலகும் முக்கிய பங்கு வகித்தது. சுதேசியப் பொருட்களை வாங்க வேண்டும். சுதேசிய உற்பத்தி முறையை ஊக்குவிக்க வேண்டும் என்கிற சிந்தனை காலனியத்திற்கு எதிராக இந்திய விடுதலைக்கான முன்னெடுப்பாக இருந்தது.

சுதேசியத் தொழில்நுட்பத்தில் பெரும்பான்மை குறிப்பாக பருத்தி விளைவிப்பது பருத்தி ஆடை தயாரிப்பது, பருத்தி ஆடைகளை அணிய வேண்டும் எனப் பிரச்சாரம் செய்வது என்பதான கருத்துப் பிரச்சாரம் மக்கள் மத்தியில் காலனிய முதலாளித்துவத்திற்கு எதிராக முன்வைத்தார்கள்.

ஆங்கிலேயக் காலனிய முதலாளியம் நவீனத் தொழில்நுட்பத்தில் ஆடை உற்பத்தி மற்றும் ஆடை தயாரிப்பு மிகப்பெரிய ஆலைகளைப் பல்வேறு நகரங்களில் நிறுவினார்.

குறிப்பாக, மதுரை, திருநெல்வேலி போன்ற பெருநகரங்களில் தொழிற் சாலைகள் நிறுவப்பட்டு, சுதேசியத் தொழில்நுட்பத்திற்கு எதிர் நிலைப் பாட்டை உருவாக்கினார்கள்.

இச்சூழலில் தான் மகாகவி பாரதியின் தந்தை சுதேசியத் தொழிலில் ஈடுபட்டு, பருத்தி ஆடைகள் நெய்யும் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளதைப் பாரதி தன் சுயசரிதையில் பதிவு செய்கிறார். மெஜ்ரா கோட்ஸ் போன்ற மிகப்பெரிய ஆடை தயாரிப்புப் பஞ்சாலைகள் ஆங்கிலேய காலனிய ஆதிக்கத்தில் கொண்டு வந்ததால் பாரதியாரின் தந்தை சின்னச்சாமி போன்றவர்களின் பருத்தி ஆடை தயாரிப்பு தொழில்நுட்பம் நலிவடைந்து போனது என்பதை பாரதியின் சுயசரிதை வழி அறியமுடிகிறது. இந்திய விடுதலைக்காக ஆயத்தமானவர்கள் காங்கிரஸ் அமைப்பின் வழியாகப் பல்வேறு முன்னெடுப்புகளைச் சுதேசியம் எனும் ஒருபுள்ளியில் இயங்கினாலும் காங்கிரஸை விட்டு வெளியேறியும் காலனியத்தை எதிர்ப்பதோடு வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஆதரித்திருக்கிறார். காலனியத்திற்கு எதிராக அகாலனித்துவத்தை மையப்படுத்திய கூட்டு ணர்வுடனான சுதேசியத்தை வ.உ.சி. பின்பற்றினார்.

வ.உ.சி. படைப்புலகும் கருத்துலகும்:

வ.உ.சி. இலக்கியங்கள் பல படைத்தவர், இலக்கண இலக்கிய உரைநூல்களையும் எழுதியுள்ளார். உரைநடை இலக்கியங்களைப் படைத்துள்ளார். மொழிபெயர்ப்புப் படைப்புகளையும் தந்துள்ளார். வ.உசி.யைப் பற்றிய கருத்துலகப் படைப்புகளும் வெளிவந்துள்ளன. நாட்டில் கொழுந்து விட்டெரிந்த சுதேசிய இயக்கத் தீயில் சுயநலக் குளிர் காய நினைத்தார்கள். ஆனால் கம்பெனியைத் தோற்றுவித்த சிதம்பரனாரின் எண்ணமோ வேறுவிதமாக இருந்தது. அவர் கம்பெனியைத் துவக்கியது தமக்குப் பொருள் சேர்ப்பதற்கோ புகழ் சேர்ப்பதற்கோ அல்ல. இந்தியாவின் செல்வத்தைச் சுரண்டிக் கொண்டிருக்கும் வெள்ளையர்கள் கூட்டத்தை இந்தியக் கண்டத்தை விட்டு விரட்டுவதற்காகவேயாகும்.' (மேலது நூல்:1947, ப.37).

'பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு போகவோ: நாங்கள் சாகவோ/ அழுது கொண்டிருப்போமோ ஆண்பிள்ளைகள் நாங்கள் அல்லமோ உயிர் வெல்லமோ' (ம.பொ.சிவஞானம்:1947, ப.37) என வ.உ.சி. கூறியதாகப் பாரதியார் பாடியுள்ளார் என்பதை அறியமுடிகிறது. சுதேசியக் கப்பல் கம்பெனியின் மூலம் சுதந்திரப் போருக்குத் துணை புரிந்தார். எனவே, காலனிய ஏகாதிபத்தியம் சிதம்பரனார் தாக்குதல் நடத்திய போதும். அவர் அஞ்சவில்லை. இதன்வழியாகக் காலனியத்திற்கு எதிரான அகாலனிய நோக்குநிலையை அவதானிக்க முடிகிறது.

'சுதேசிக் கப்பல் கம்பெனி நாளுக்குநாள் உரம் பெற்று வந்தது. இந்தியாவின் வடக்கே வங்கப் போர்முனையில் ஆங்கில சாம்ராஜ்யத் தின் ஆட்சி ஆட்டங் கண்டுவிட்டதென்றால், தெற்கே தமிழகப்

போர்முனையில் ஆங்கிலேயரின் கப்பல் வாணிபச் சுரண்டலுக்கு முடிவு கட்டிவிட்டார் சிதம்பரனார். ஆகவே சாம்ராஜ்யமென்னும் நச்சு மரமானது இந்திய மண்ணில் வேருடன் விழுந்து விடுமோ என்று அதிகாரவர்க்கம் அச்சங் கொண்டது. '(கப்பலோட்டிய தமிழன், பக்.29, 30)

'மேற்றிசை யாரின் வெங்களற் காற்று / நாற்றிசை சென்றென் னகரினுட் புகுந்து/ செடியின் வேரெனத் திகழ்ந்த' (வ.உ.சியின் சுயசரிதை, ப.44) மேற்குலகின் ஆதிக்கவுணர்வை வ.உ.சி. அம்பலப்படுத்துகிறார்.

இன்றைய சூழலில் காலனிய சூழ்ச்சிவலையமைப்பானது தரகுப் பொருளாதார, தரகு முதலாளியம் ரீதியான சுரண்டலுக்கே பயன் படுத்தப்பட்டுவருகிறது. குறிப்பாக உற்பத்திப்பொருள்கள், மூலப் பொருட்கள், உபரியின் பயன்கள் யாவும் காலனிய முதலாளிகளின் லாபத்திற்கே இட்டுச்செல்கினறன. சுயாட்சிக்கான பண்புகளை உள்ளடக்கிய சுதேசியக் குணநிலை ஆங்கிலேயக் காலனியத்திற்கு எதிரான நிலைப்பாடுகளாக அமைந்தன. வங்கத்தில் ஆங்கிலேயக் காலனிய எதிர்ப்புக்குரல் எழுப்பப்பெற்றதைத் தம் படைப்புகளில் வ.உ.சி. புகழ்ந்துரைக்கிறார்.

அகாலனியச் செயல் திட்டமாகக் கிராமப்புற சுய நிர்வாகத்திறன் தம்மொழி ரீதியான அடையாளங்களைப் பேணல், தமிழ் மொழி இலக்கியங்கள் காட்டும் அற விழுமியங்களை முன்மொழிதல், சுயாதீன தொழில் வளம், மக்களின் ஒற்றுமை, தமிழ்நாட்டின் சுயாதீன பண்பு பிரிட்டிஷ் காலனியத்திற்கு எதிரான சீரிய கொள்கைத் திறமை மிக்க பேச்சு இவை வ.உ.சி.யின் கருத்துலக மையமாக இருந்துள்ளதை அறிய முடிகிறது.

நிறைவுரை:

சுதேசியம் என்கிற கருத்துநிலை வ.உ.சி. படைப்புகளின் வழி யாக அகாலனிய நோக்குநிலையை அவதானிக்க முடிகிறது. வ.உ.சிதம்பரனாரின் படைப்புலகும் கருத்துலகும் பிரிட்டிஷ் காலனிய அறத்தைக் கேள்விக்குள்ளாக்கியது. வ.உ.சி தமிழ் நிலத்தில் காலனியம் ஒழிக்கப்பட வேண்டுமெனப் போராடினார். அகமே புறம் எனும் படைப்பாக்கம் ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராக அனைவரும் தோழமையாக ஒன்றிணைய வேண்டுமென்பதைக் காட்டுகிறது.

தமிழ்நாட்டில் காலனியத்தை நீக்கவேண்டும் எனத் தமிழரின் மெய்யறத்தைப் படைப்புகளின் வழியாக முன்மொழிந்தார்.

காலனிய வர்த்தகத் தொழில் வளர்ச்சி கடல் வழியாகவும், நிலவெளி வழியாகவும் விரிவுபடுத்திய பிரிட்டிஷாரின் நடவடிக்கைகளுக்கு எதிர் நிலைப்பாடுகளை முன்னெடுத்த மூலவர் வ.உ.சி ஆவார்.

இதில் தூத்துக்குடியை மையப்படுத்தி கடல் வழிச் சுதேசியக் கப்பல் வாணிபத் தொழிலைத் தொடங்கியதில் தடைக்கற் களாகப் பல எதிர்ப்பலைகள் இருந்தபோதும் எதிர்ப்புகளை வ.உ.சி.

முறியடித்துள்ளார். காலனியச் சூழலிலேயே காலனிய எதிர்ப்பை உருவாக்கச் சுதேசியம் என்கிற கோட்பாட்டை முன்வைத்துச் செயல்பட்டுள்ளார். வ.உ.சியின் படைப்புகளின் வழியான கருத்துலகம் யாவும் ஆங்கிலேய காலனியத்திற்கு எதிரானதான - விடுதலைக்கானதாக - சமத்துவத்திற்கான - தமிழின அடையாளத்திற்கான - சுதேசியத் திற்கானதாக அமையப்பெற்றுள்ளது

துணை நூற்பட்டியல்

1. வ.உ.சி., அகமே புறம், 1928, அகஸ்தியர் பிரஸ், அம்பாசமுத்திரம்.
2. வ.உ.சி., பாடற்றிரட்டு, 1915, இந்தியா பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை.
3. வ.உ.சி., மெய்யறம், 2004, வ.உ.சி.நூலகம், சென்னை.
4. ம.பொ.சிவஞானம் , கப்பலோட்டிய தமிழன், 1947, இன்ப நிலையம், சென்னை.
5. வ.உ.சி. சுயசரிதை, 1990, கழக வெளியீடு, சென்னை.
6. ந.முத்துமோகன், படைப்பின் அற்புதங்கள், 2021, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு, சென்னை.

வ.உ.சி.யின் 'மெய்யறம்' மற்றும் ஜேம்ஸ் ஆலனின் தத்துவங்கள்

ந. கோபாலகிருஷ்ணன்
இயந்திரவியல் துறை, பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி, திருநெல்வேலி.

ஆய்வுச்சுருக்கம்:

இந்தியாவின் விடுதலைப் போராட்ட வீரரும் சமூக சீர்திருத்த வாதியுமான வ.உ.சிதம்பரனார் (1872-1936) அவர்களின் மெய்யறம் (1914) மற்றும் மேனாட்டுத் தனிப்பட்ட முன்னேற்ற இலக்கியப் பிரிவின் முக்கிய எழுத்தாளரான ஜேம்ஸ் ஆலன் (1864-1912) அவர்களின் As a Man Thinketh (1903) ஆகிய நூல்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. இருவரும் மனித மேம்பாடு, ஒழுக்க வாழ்வு, மனத்தின் சக்தி, செயலின் முக்கியத்துவம் ஆகிய கருத்துகளில் கவனம் செலுத்துகின்றனர். வ.உ.சி. ஒரு கலப்பு, சமூக-அரசியல்-அறநெறிச் சூழலில் தனிமனிதத்தை வைத்து விவாதிக்கிறார்; ஜேம்ஸ் ஆலன் தனிமனித மனத்தின் ஆளுமையையும் சுய-உருவாக்கத்தையும் மையமாகக் கொள்கிறார். இந்த ஆய்வு, இரு தத்துவங்களுக்கிடையேயான ஒற்றுமைகள், வேறுபாடுகள் மற்றும் ஒன்றையொன்று நிறைவு செய்யும் தன்மைகளைக் கண்டறிந்து, மனித வாழ்வின் அடிப்படைப் பிரச்சினைகளில் எவ்வாறு ஒருமுகப்படுகின்றன என்பதை விளக்குகிறது. மேலும், இத்தகைய தத்துவங்கள் தற்காலத்தில் தனிமனித மேம்பாடு மற்றும் சமூக மாற்றத்திற்கு என்ன பொருத்தம் கொண்டவை என்பதையும் ஆராய்கிறது. இந்த ஆய்வுக் கட்டுரை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த இரு மெய்யியலாளர்களின் சிந்தனைகளைப் பகுப்பாய்வு செய்கிறது.

திறவுச்சொற்கள்: வ.உ.சி., மெய்யறம், ஜேம்ஸ் ஆலன், ஒப்பீட்டு மெய்யியல், சிந்தனையின் சக்தி, சமூகப் பொறுப்பு, தனிமனித மேம்பாடு.

முன்னுரை:

இந்தியா பிரிட்டிஷ் காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பெறும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது; மேற்குலகில் தொழில்மயமாக்கல் மற்றும் நகரமயமாக்கலால் ஏற்பட்ட புதிய சவால்களை எதிர் கொண்டிருந்தது. இத்தகைய சூழலில், 'வாழ்வது எப்படி?' என்ற அடிப்படைக் கேள்விக்கு விடை காண முயன்ற இரு சிந்தனையாளர்கள் வ.உ.சி.யும் ஜேம்ஸ் ஆலனும் ஆவர். வ.உ.சி. மெய்யறம் மூலம் இந்திய சூழலில், குறிப்பாக இளைஞர்களுக்கு, ஒரு புதிய வாழ்வியல் நெறிமுறையை வழங்க முயன்றார். ஜேம்ஸ் ஆலன் தனது எளிமையான ஆனால் ஆழமான நூல்கள் மூலம், மனிதனின் நிலை அவனது சொந்த சிந்தனைகளால் ஏற்படுவதாக வாதிட்டார்.

வ.உ.சி.யின் 'மெய்யறம்' :

1910-களில் வ.உ.சி. ஆங்கிலேய அரசுக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்ட காரணத்தால், அவர் கைது செய்யப்பட்டு கோயம்புத்தூர் மற்றும் கண்ணனூர் சிறைகளில் கடும் சிறைத் தண்டனை அனுபவித்தார். சிறைவாசம் அவரின் உடலுக்கு வேதனையாக இருந்தாலும், அதுவே அவரது சிந்தனைக்கு ஆன்மீகச் சீராக்கத்தையும் அறநெறி ஆழத்தையும் அளித்தது. சிறையில் அவர் பகவத் கீதா, திருக்குறள், மனுநீதிசாத்திரம், மேற்கத்திய மெய்யியல் நூல்கள் போன்றவற்றை ஆழமாகக் கற்றார். தனது சிறைவாசக் காலத்தில் ஜேம்ஸ் ஆலனின் தத்துவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். 1909 ஆம் ஆண்டு As a Man Thinketh நூலை 'மனம்போல வாழ்வு' என்றும், 1916 ஆம் ஆண்டு The Path of Prosperity நூலை 'வலிமைக்கு மார்க்கம்' என்றும் தமிழாக்கம் செய்து, மனிதனின் எண்ணமே அவன் வாழ்க்கையை உருவாக்கும் என்ற தத்துவத்தைத் தமிழருக்கு எளிமையாகக் கொண்டு வந்தார். இந்த அறிவுச் சேர்க்கையின் விளைவாக உருவானதே மெய்யறம். மெய்யறம் என்பது 125 செய்யுட்கள் மற்றும் ஐந்து அதிகாரங்கள் கொண்ட நன்னெறி வழிகாட்டி, இதில் சுய அறம், குடும்ப அறம், சமூக அறம், தேச அறம், உலக அறம் ஆகியவை மனிதன் தனிமனிதத்திலிருந்து உலக மனிதராக வளர வேண்டிய ஒழுக்கப் பாதையைச் சுருக்கமாக எடுத்துரைக்கின்றன.

மெய்யறத்தின் வரையறை:

'மெய்யறம்' என்பது 'மெய்ம்மையான அறம்' அல்லது 'உண்மையான ஒழுக்க நெறி' எனப் பொருள்படும். இது வெறும் புறநடை முறைகள் அல்ல; மாறாக உள் மனத் தூய்மை மற்றும் வெளிப்புற நடத்தையின் நேர்மை ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாகும்.'தன்னலம் பேணாத் தன்மை வாய்ந்தே / பன்னலம் சேர்பவனே மெய்யறத்தான்' [1]

சமூகத் தொடர்பு தனிமனிதம்:

தனிப்பட்ட மேம்பாடு சமூக மீட்பிலிருந்து பிரிக்க முடியாது. ஒருவரின் தனிப்பட்ட ஒழுக்கம் (சுய அறம்) குடும்பம், சமூகம் மற்றும் தேசம் ஆகியவற்றுக்கான கடமைகளுடன் (பர அறம்) இணைந்திருக்க வேண்டும்.

கடமையின் முதன்மை:

'மெய்யறத்தின்' மையக் கருத்து கடமை ஆகும். தன்னலமின்றி ஒருவரது அனைத்துக் கடமைகளையும் (தனிப்பட்ட, குடும்ப, சமூக, தேசிய) நிறைவேற்றுவதே உண்மையான வாழ்வின் நோக்கம்.

மனத்தின் சுத்திகரிப்பு:

மனத்தின் சுத்திகரிப்பை வ.உ.சி. முதன்மையாக வலியுறுத்துகிறார். தீய எண்ணங்களை வேரறுப்பதும், நல்ல எண்ணங்களை வளர்ப்பதும் மெய்யறத்தின் அடிப்படைப் பயிற்சி.

சமூக நீதிக்கான அடித்தளம்:

தனிப்பட்ட ஒழுக்கம் சமூக நீதிக்கான போராட்டத்திற்கான மூலதனம். இந்தப் போராட்டம் அகிம்சை மற்றும் நேர்மையான வழிமுறைகளின் பாணியில் நடத்தப்பட வேண்டும்.

சாராம்சம்:

மெய்யறம் ஒரு குறிப்பிட்ட வரலாற்று மற்றும் சமூக இலக்கை நோக்கி, சமூகத் தொடர்பு தனிமனிதத்தை (socially-embedded individual) உருவாக்குகிறது.

ஜேம்ஸ் ஆலனின் தத்துவம்:

ஜேம்ஸ் ஆலனின் தத்துவ நூல்கள் As a Man Thinketh மற்றும் The Path of Prosperity ஆகியன 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்தில் உருவானவை. ஜேம்ஸ் ஆலன் இங்கிலாந்தின் டெவன் மாகாணத்தில் உள்ள இல்ஃப்ரகோம் என்ற அமைதியான கடற்கரை நகரில் தியானம் மற்றும் தனிமை வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த காலத்தில் இந்த நூல்களை எழுதினார். The Path of Prosperity முதலில் 1901 ஆம் ஆண்டு வெளியான From Poverty to Power என்ற பெரிய நூலின் ஒரு பகுதியாக எழுதப்பட்டு, பின்னர் 1907-இல் தனி நூலாக வெளியிடப்பட்டது. As a Man Thinketh நூல் 1903 ஆம் ஆண்டு வெளிவந்தது; ‘மனிதன் உள்ளத்தில் என்ன யோசிக்கிறானோ அதுவே அவன்’[2] என்ற பைபிள் வசனத்தால் தூண்டப்பட்டு, மனிதனின் எண்ணங்களே அவன் வாழ்க்கை, குணம், வெற்றி ஆகியவற்றை உருவாக்குகின்றன என்ற மையக் கருத்துடன் எழுதப்பட்டது. இந்த இரண்டு நூல்களும் மனவளர்ச்சி, சுயக்கட்டுப்பாடு, உள் மாற்றம் ஆகியவற்றின் மூலம் மனிதன் தனது வாழ்க்கையை மாற்றிக்கொள்ள முடியும் என்பதைக் கூறுகின்றன.

சிந்தனையின் முதன்மை:

‘ஒரு மனிதன் எப்படி நினைக்கிறானோ, அப்படியே அவன்; அவன் தன் சிந்தனையின் தொகுப்புதான்’ [3]

மனமே கட்டிடக்கல்:

மனிதன் தனது மனத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டிருக்கிறான். வாழ்க்கை, பண்பு மற்றும் சூழ்நிலைகள் மன ஆளுமையின் வெளிப்பாடுகள்.

செயல்:

செயல் சிந்தனையின் தவிர்க்க முடியாத விளைவாகும். ‘சிந்தனையின் விதை விதைக்கப்பட்டு, செயலில் அறுவடை செய்யப்படுகிறது; செயலில் விதைக்கப்பட்டு, பண்பில் அறுவடை செய்யப்படுகிறது’ [4]

முழுமையான தனிப்பட்ட பொறுப்பு:

சூழ்நிலைகள் மனிதனை உருவாக்குவதில்லை; அவை அவனைத்

தனக்குத் தானே வெளிப்படுத்துகின்றன [5]. துன்பமும் வெற்றியும் உள்ளேயிருந்து வெளிப்படும்.

அமைதி மற்றும் உள் ஆளுமையின் இலட்சியம்:

தூய்மையான, அமைதியான மனநிலையை அடைவதற்காக உயர்ந்த எண்ணங்களில் நிலைத்திருக்க வேண்டும்.

சாராம்சம்:

ஆலனின் தத்துவம் உள்-மையப்படுத்தப்பட்டது. இது ஒரு சிந்தனையால் கட்டப்பட்ட தனிமனிதன் (thought-constructed individual) மாதிரியை வழங்குகிறது.

மனித மேம்பாட்டின் ஒருங்கிணைந்த மாதிரி – உள்-பயணம் மற்றும் வெளிப்பயணம்: (Integrated Model of Human Development: Inner Journey and Outer Journey)

ஜேம்ஸ் ஆலன் – உள்-பயணம்:

மனத்தைக் கட்டுப்படுத்தும், சிந்தனைகளைத் தூய்மைப்படுத்தும், உள் சக்தியைப் பெருக்கும் உளவியல் மற்றும் தத்துவ கருவிகள். இது சுயத்தைக் கண்டறிதலும் கட்டுப்படுத்தலுமாகும்.

வ.உ.சி. – வெளிப்பயணம்:

கட்டுப்படுத்தப்பட்ட மன சக்தியை சமூக நலன், நீதி மற்றும் பொது நலத்திற்காக இயக்கும் சமூக-அறநெறி வழிகாட்டி. ஒருவன் ஆலனின் உள்-ஆளுமை பயிற்சியைக் கடைப்பிடித்து மனத்தைக் கட்டுப்படுத்தினாலும், வ.உ.சி. யின் சமூகப் பங்களிப்பை ஏற்காமல் இருந்தால், மன சக்தி முழுமையடையாது.

முடிவுரை:

வ.உ.சி.யின் ‘மெய்யறம்’ மற்றும் ஜேம்ஸ் ஆலனின் தத்துவங்கள் ஆகிய இரண்டும், மனித வாழ்வை மேம்படுத்துவதற்கான ஆழமான, நடைமுறை மற்றும் நித்திய ஞானத்தின் களஞ்சியங்களாகும். சிந்தனையின் சக்தி, பண்பின் முக்கியத்துவம் மற்றும் சுய-உருவாக்கத்தின் சாத்தியம் ஆகியவற்றில் அவை இணைகின்றன. வ.உ.சி. சமூகப் பொறுப்புடன் கூடிய தனிமனிதம் என்பதை வலியுறுத்துகிறார், அதேநேரம் ஜேம்ஸ் ஆலன் சிந்தனையின் மூலம் உருவாக்கப்பட்ட தனிமனிதம் என்பதை வலியுறுத்துகிறார். வேறுவிதமாகக் கூறினால், வ.உ.சி. ‘உன்னை உருவாக்கு, அதனால் நீ உலகத்தை மேம்படுத்த முடியும்’ [6] என்று கூறுகிறார். ஆலன், ‘உன்னை உருவாக்கு, மேலும் உலகம் தானாகவே மேம்படும்’ [7] என்று நம்புகிறார். இந்த இரண்டு பார்வைகளும் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல; அவை நிறைவாக்குபவை. ஒரு முழுமையான மற்றும் சமநிலையான மனித மேம்பாட்டிற்கு, ஆலன் வழங்கும் உள்-மன ஆழத்தின் (Inner Journey) தேவையும், வ.உ.சி. வலியுறுத்தும் சமூக ஈடுபாட்டின் (Outer Journey) தேவையும் இருக்கிறது.

தற்காலத்தின் சிக்கலான சவால்களை எதிர்கொள்ள, நமக்கு உள்-ஆளுமையின் (ஆலனின் பங்களிப்பு) ஞானமும், சமூக-பொறுப்பான செயல்பாட்டின் (வ.உ.சி.யின் பங்களிப்பு) வழிகாட்டுதலும் தேவை.

அடிக்குறிப்புகள்:

1. வ.உ.சி.தம்பரம் பிள்ளை. மெய்யறம். பாரதி பதிப்பகம், 2012.பக். 15.
2. நீதிமொழிகள் 23:7
3. ஆலன், ஜேம்ஸ். As a Man Thinketh, லண்டன், 1903. அதிகாரம் – 1.
4. ஆலன், ஜேம்ஸ். As a Man Thinketh லண்டன், 1903. அதிகாரம் – 1.
5. ஆலன், ஜேம்ஸ், As a Man Thinketh லண்டன், 1903. அதிகாரம் – 2.
6. வ.உ.சி.தம்பரம் பிள்ளை. மெய்யறம்.
7. ஆலன், ஜேம்ஸ். As a Man Thinketh, லண்டன், 1903. அதிகாரம் – 1.

துணை நூற்பட்டியல்:

1. வ.உ.சி.தம்பரம் பிள்ளை. மெய்யறம் (1917).
2. Allen, James. As a Man Thinketh. London: James Allen Publishing, (1903).
3. வ.உ.சிதம்பரனார், மெய்யறம்,பாரதி பதிப்பகம், (2012).
4. வ.உ.சிதம்பரனார், மனம்போல வாழ்வு, (1909).
5. வ.உ.சிதம்பரனார், வலிமைக்கு மார்க்கம், (1916).
6. Allen, James. From Poverty to Power. Arc Manor, (2008).
7. ராஜா, கே., வ.உ.சி. வாழ்க்கையும் சிந்தனையும், (2005).
8. இராசேந்திரன், இளசை. வ.உ.சி. யின் மெய்யியல் சிந்தனைகள். வெ

தமிழக வரலாற்றில் வ.உ.சிதம்பரனார் என்ற ஆளுமை, அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராகக் 'கப்பலோட்டிய தமிழர்' என்று போற்றப்படும் விடுதலைப் போராட்ட வீரராக அறியப்படுகிறார். ஆனால், அவர் ஒரு விவேகமான தமிழறிஞரும், நுட்பமான பதிப்பாசிரியரும் ஆவார். அவரின் பன்முகத்தன்மையை வெளிப்படுத்தும் பெரும் முயற்சி இந்த 'வ.உ.சி.யின் படைப்பும் பதிப்பும்' என்னும் ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு.

வ.உ.சி. அவர்கள், சிறைவாசம் அனுபவித்த காலத்தில், உடல் வருந்தச் செக்கிழுத்த போதும் அவரது சிந்தனை தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களைச் செழுமைப்படுத்துவதிலேயே இருந்தது. "கை வருந்த மெய் வருந்தச் செய்த பணிகளெல்லாம் என் தாய்மொழித் தமிழுக்காக" என்ற உயரிய நோக்கம் அவரிடம் இருந்தது. இந்நூல் வ.உ.சி.யின் ஆளுமையை, வாழ்வும் வரலாறும், இலக்கிய ஆக்கம், படைப்பாளுமை, உரைவளம், பதிப்பு, மொழிபெயர்ப்பு, சமூகப்பணிகள், தத்துவத் தேடல் ஆகிய எட்டு முக்கியத் தளங்களில் விரிவாகப் பேசுகிறது.

திருமிகு க. இளம்பகவத், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்
தூத்துக்குடி மாவட்டம்.

வெளியீடு

தமிழ்த்துறை

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரி

நாகம்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்

ஆய்வு நிதி நல்கை

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரகம், வெளியீட்டுப் பிரிவு

ISBN: 978-93-5619-548-6